உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

காஞ்சிப்புராணம்.

திருக்கைலாயபரம்பரைத்திருவாவடுதுறையாதீனத்து

மஹாசந்நிதானம்

ஸ்ரீ@ஸ்ரீ-அம்பலவாணதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணவகரும்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்புலவரும்

மெய்கண்டசித்தாந்தஞானசாத்திரப்பிரசாரகருமாகிய

வண்ணக்களஞ்சியம்

காஞ்சி - நாகலிங்கமுதலியாரவர்களால்

பலபிரதிருபங்களைக்கொண்டுபரிசோதித்து

பெரியமேட்டு - வேங்கடாசலஞ்செட்டியாரவர்கள்

குமாரர்

ஆதிமூலஞ்செட்டியாரால்

சென்னை:

கலாரத்நாகரவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

சாதாரண ௵-வைகாசி ௴

Registered Copy-right

1910.

D. U. V. S. IYER LIBRARY
MADRAS-90
22746

இப்புத்தகத்திலடங்கியவை.

க. முகவுரை ... ... *

தமிழ்மொழி வரலாறு ... ... *

புராண வரலாறு ... ... *

புராணாதிகாரிகள் ... ... *

செய்ந்நன்றி கூறுதல் ... ... *

உ. சிறப்புப்பாயிரம் ... ... *

மெய்கண்ட சந்தானச் சிறப்பு ... ... *

சோதனாசாரியர் சிறப்பு ... ... *

பதிப்பாசிரியர் சிறப்பு ... ... *

ங. நூலாசிரியர் வரலாறு ... ... *

மெய்கண்ட சந்தான விளக்கம் ... *

சிவஞான யோகிகள் சரித்திரம் ... *

மெய்கண்ட சந்தான காலம் ... ... *

ச. தேவாரம் ... ... *

திருவேகம்பம் ... ... *

கச்சிமேற்றளி ... ... *

ஓணகாந்தன்றளி ... ... *

அநேகதங்காவதம் ... ... *

கச்சிநெறிக்காரைக்காடு ... ... *

ரு. திருவாசகம் ... ... *

திருப்பொற்சுண்ணம் ... ... *

சா. திருப்புகழ் ... ... *

குமரகோட்டம் ... ... *

கௌரிகோட்டம் ... ... *

கச்சிக்கச்சாலை ... ... *

எ. படலவகராதி ... ... *

அ. காஞ்சிப்புராணம் ... ... *

முதற்காண்டம் ... ... *

இரண்டாங்காண்டம் ... ... *

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90
22746

பிரகடனம்.

திருமுறைத்திரட்டு. இதனுள் சைவம் பன்னிரு திருமுறையும் அடங்கும். உயர்ந்த காலிகோகட்டடம்.	க	௮	0
சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த தேவாரம். பல அரிய குறிப்புகளுடன் உயர்ந்த காலிகோகட்டடம்.	க	௮	0
சிவஞானபோதம் மூலமும் சிற்றுரையும். திராவிடமாபாடிய குறிப்புடன் உயர்ந்த காலிகோகட்டடம்.	க	0	0
ஒருபாவுண்மையுப்பதேசம் மூலமும் சிதம்பரமுனிவர் விருத்தியுரையும். சாதாரணகட்டடம்.	0	௪	0
காஞ்சிப்புராணம். இதனுள் இரண்டுகாண்டமும் அடங்கும் உயர்ந்த காலிகோகட்டடம்.	௨	௮	0

இங்ஙனம்,

பெரியமெட்டு - ஆதிமூலஞ்செட்டியார்

செந்தமிழ்ப்புத்தகசாலை,

சென்னை.

சிவமயம்.

முகவுரை.

வழிபடுகடவுள்வணக்கம்.

[illegible] ।
[illegible] ॥
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

இதுவுமது.

நதிகாட்டுஞ் செஞ்சடையு நடங்காட்டுந் திருவடியு நஞ்சை யுண்டு
துதிகாட்டுங் கருமிடறுந் துணைகாட்டு மொருசிவையுந் துரிசே யில்லா
விதிகாட்டுங் கனிவாயும் விடைகாட்டும் பரசிவனார் விதியி னேத்தப்
பதிகாட்டும் பிரணவத்தின் பயன்காட்டுந் தணிகைவரைப் பகவன் வாழி. *

அநாதிமலமுத்தராய் பஞ்சமந்திர சரீரியாய் அஷ்டகுண சம்பன்னராய் சகள நிஷ்கள நிஷ்கள சகள சொரூபியா யுள்ள சதாசிவ நாயனாராலே பிரதம மஹாசிருஷ்டி ஆரம்பத்திலே அநாதிமல பெத்தராகிய ஆன்மாக்கள் விதிவிலக் கறிந்து கடைத்தேறும் பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய வேதவேதாந்தங்களிலே பரமாகாசமென்றும் பிரம்புரமென்றும் ஜோதிசுவர்க்கமென்றும் சுவர்க்கமென்றும் ஆங்காங்கு,

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥

என்று பிரதிபாதிக்கப்பட்டதாயும், "தேவர்கோ வறியாத தேவ தேவன் செழும் பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை - மூவர்கோ னாய்நின்ற

---

* திருவூறற்புராணம், கடவுள்வாழ்த்து, செய்யுள் - ௧௫.

முதல்வன்" * விரும்பத்தக்க நித்திய நைமித்திக காமிகம் என்னும் மூன்றனுள் நித்தியார்ச்சனைப் பயன் ஒன்றனையே தரவல்ல மற்றைய கண்டங்களைப் போலாது அம்மூன்றருச்சனைப் பயனையும் ஒருங்கே கொடுக்க வல்ல, கீழ்க்கடல் மேற்கடல் குமரி இமயம் என்னும் நாற்பாங்கெல்லைக் குட்பட்ட பரதகண்டத்தில் சிறந்ததாயும், மங்கல நகரமாகிய அயோத்தியாமுதலிய சப்த புரிகளுள் ஒன்றாய் வைத்துப் போற்றப்பட்டதாயும், "நகரேஷு காஞ்சி" என்று காளிதாசமகாகவியால் எடுத்தாளப்பட்டதாயும், திருக்கைலாயதுல்லியம் புவனசாரம் மும்மூர்த்திவாசம் விஷ்ணுபுரம் இலயசித்து கலிசித்து சகலசித்தி தபோமயம் பிரமபுரம் ஆதிபீடம் கன்னிகாப்பு சிவபுரம் என்று மஹாருஷிகளால் துதிக்கப்பட்டதாயும், பல்லூழி காலத்தினும் ஓங்கிவிளங்கிவருவதாயும் உள்ளது காஞ்சி மஹாக்ஷேத்திரமேயாம். இதனை, "இப்படி யாவருமேத்திய திறனால் - ஒப்பன போல வுரைத்திட லொப்போ - அப்பதி யேயத னுக்கிணை யன்றிச் - செப்பரி தாற்பிற சீர்கெழு காஞ்சி." † எனவும், "வானோக்கி நிற்கு முலகென்னவு மன்னவன்செங் கோனோக்கி நிற்குங் குடியென்னவுங் கோதிலும்பர் ஆனோர்க்கு நாக ருலகோர்க்கு மவனியோர்க்கும் - ஏனோர்க்கு நாடு நகராகி யிருந்ததவ்வூர்." ‡ எனவும் போற்றிப் போந்தார் கந்தபுராண வாசிரியராகிய கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள்.

இத்தெய்வத் திருப்பதி, கிழக்கில் பெருந்தகவியாரது அமிர்த குளத்தினின்றும் பெருகிய க்ஷீரநதி சங்கமமாகிய கடற்கரையையும் தெற்கில் பிநாகத்தினால் வெளிப்பட்ட கங்கையாகிய தக்ஷிண பிநாகினியையும் மேற்கில் அமிர்த சஞ்சீவி கலந்த சிலாஹ்ருத நதியையும் வடக்கில் விரஜாநதி சம்பந்தமுடைய சுவாமி புஷ்கரணியையும் முதலாவரணமாகவும், கிழக்கில் பரசிவாநுக்கிரகம் பெற்று வாழ்ந்திருந்த மஹாபலிச்சக்கிரவர்த்தி புரத்தையும் தெற்கில் உக்கிரசேனன் பெருந்தவம் பிடித்துப் பெற்ற பெண்கொடி பேராற்கண்ட தேவகி புரத்தையும் மேற்கில் அரம்பையின் வேண்டுகோளின்படி பிரமனெடுத்த விரிஞ்சி புரத்தையும் வடக்கில் உலகநாசம் பெறத்தோன்றிய நாகத்தை எல்லாம் வல்ல சித்தராட்டிய நாகலா புரத்தையும் இரண்டாமாவரணமாகவும், கிழக்கில் திருவேணி சங்கமமென்னும் திருமுக்கூடலையும் தெற்கில் வியாக்கிர புரமென்னும் திருப்புலி வனத்தையும் மேற்கில் க்ஷீராப்தி நகரமென்னும் திருப்பாற்கடலையும் வடக்கில் நந்திகங்கா புரமென்னும் தக்கோலத்தையும் மூன்றாமாவரணமாகவும் உடையது.

இதனுண்ணகரமானது பரசிவம் பராசத்தி குடிலாசத்தி இம்மூன்றின் சொரூபமாயும், நிஷ்கள சகள சகளநிஷ்கள சொரூபமாயும், சோமாஸ்கந்த சொரூபமாயும், சத்தி பின்னாபின்ன சொரூபமாயும் விளங்குவதாம். அஃது ஆகம வசனங்களிலே,

---

* திருவாசகம், திருச்சதகம், சுட்டறுத்தல், செய்யுள் - ௩௦.

† திருநகரப்படலம், செய்யுள் - ௯. ‡ ஷை படலம், செய்யுள் - ௯௨.

[illegible]
[illegible]

என்று விதந்தோதப்பட்டதாம். இதனால் இந்த க்ஷேத்திரம் முத்திக்ஷேத்திரமெனவும், புத்திக்ஷேத்திரமெனவும், புத்திமுத்திக்ஷேத்திரமெனவும், மூர்த்தி தலம் தீர்த்தம் பர்வதம் வனம் முதலிய பல விம்பிதம் அமைந்த சைவக்ஷேத்திரமெனவும் கூறப்படும்.

இங்கே மாவிருக்ஷவடியில் "ஆரு மெய்தற் கரிது பெரிதுமே - ஆற்ற லெய்தற் கரிது பெரிதுமே - தேவ ரும்மறி யாது திகைப்பரே - சித்த ரும்மறி யாது திகைப்பரே - கார்நி றத்த மணர்க்கொரு கம்பமே - கடவு ணீயிடங் கொண்டது கம்பமே." * என்று திருக்கடைக் காப்பால் போற்றப்பட்டதாய், ஜோதிலிங்க சொரூபமாய் வேண்டுவார் வேண்டுவதை வெறுப்பக் கொடுக்க எழுந்தருளிய பரசிவம்,

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

என்று தோத்திரிக்கப்பட்ட ஏகாம்பரநாத சுவாமியாம்.

இனி, பிலாகாச சொரூபியாய் "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்." † எனவும் "சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்." ‡ எனவும், "வாரிருங்குழன் மைவா ணெடுங்கண் மலைமகண் மதுவிம்மு கொன்றைத் - தாரிருந் தடமார்பு நீங்காத் தையலா ளுலகுய்ய வைத்த - காரிரும் பொழிற் கச்சி மூதூர் காமக் கோட்டம்." ¶ எனவும் திராவிடசுருதி ஆணையிட்டருளியபடி எழுந்தருளிய பராசத்தி,

[illegible]
[illegible]

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருவியமகம், செய்யுள் - ௧௦.
† சிவஞானசித்தியார்சுபக்கம், இரண்டாஞ் சூத்திரம், செய்யுள் - ௭௫.
‡ சிவஞானசித்தியார்சுபக்கம், முதற்சூத்திரம், செய்யுள் - ௬௨.
¶ சுந்தரமூர்த்திநாயனார், திருவோணகாந்தன்றளி, செய்யுள் - ௬.

விஶ்வகாரணநேத்ராட்யா ஶ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீ ।
ஸுவர்ணாபரணோபேதா ஸம்ஹர்த்ரீ காமாக்ஷீம் தாம் ஹ்ருதி பஜ ॥

ஸ்வர்ணாம்பரதராம் துஷ்டாம் ஶங்கஸ்ரக்ஸ்ரஜம் விபூஷிதாம் ।
காஞ்சீநிவாஸிநீம் வந்தே காமாக்ஷீம் காமிதார்த்ததாம் ॥

என்று தோத்திரிக்கப்பட்ட காமாக்ஷியம்மையாம்.

இச் சகதாம்பிகை நாதபிந்து சம்யுதம் பரமம் விம்யாமம் எனவும், ஆகாசசரீரம் பிரஹ்மம் எனவும் சம்புசரீரம் எனவும், பிரத்தியக்ஷம் மோக்ஷதம்பரம் எனவும், தேவசின்னபஃ எனவும், ஜகத்காம கலாகாரம் எனவும், குண்டலிநீபதம் எனவும், ஆதிபௌதிக மர்மாங்கம் எனவும், காமநகரம் எனவும், திவ்வியம் எனவும், அகக்நம் எனவும், சர்வ சித்தி தம் தபஸ்தானம் எனவும், சூக்ஷ்மம் பிலம் எனவும், பூயோனி எனவும், காமகோடி எனவும், காமகோஷ்டம் எனவும் வேதாகம புராண விதி காசங்களால் ஆங்காங்கு,

ஜகத்தாரகதாகாரம் நாதபிந்துஸமுத்பவம் ।
பத்மபத்மஸ்த காமாக்ஷீ ஶ்ரீமஹாபீடவாஸிநீ ॥
மாயத்ரிகோணாகாரம் நாதபிந்துஸமுத்பவம் ।
பரப்ரஹ்மஸ்வரூபஞ்ச திவ்யம் பீடம் ப்ரதிஷ்டிதம் ॥

என்று விதந்தோதும் பிலாகாச சொரூபமானபடியால் அதனிடமிருந்து சகளீகரித்துப் பரசிவத்தை அதிஷ்டிக்க, குடிலா சொரூபமான ஸ்கந்த கௌமார கோலம் குடிலாசத்தி சொரூபமாய் மத்தியில் அநுக்கிரகார்த்தம் தோன்றி நின்றது; அதுவே சோமாஸ்கந்த சொரூபமாம். இது நிஷ்களசகள சொரூபமாயுள்ளது இப் * பரஞ்சோதி,

ஷடாநநம் குங்குமரக்தவர்ணம்
மஹாமதிம் திவ்யமயூரவாஹநம் ।

ருத்ரஸ்ய ஸூநும் ஸுரஸைந்யநாதம்
குஹம் ஸதாஹம் ஶரணம் ப்ரபத்யே ॥

தாதாய யோகாய யதிப்ரியாய
வேதாய ஸாராய தபோதயாய ।

ஹஜாய வேஷாய ப்ரவிநாஶநாய
பக்தார்த்திவ்யாபாரஹராய ஹ்ருத்ய ॥

விஶ்வேஶ்வரம் ஸகலவேதநுதம் ஶக்திபாணிம் ।
ஸ்கந்தம் ஸுராவனரதம் ஸகலேஶ்வரம் தம் பஜே ॥

என்று தோத்திரிக்கப்பட்ட குமரகோட்டக்கடவுளாம்.

---

* இவ்விஷயம் கூறும் வடமொழி காஞ்சிமஹாத்ம்யத்தில் சுப்பிரமணியக் கடவுளைப் பரஞ்சோதி என்றே பேசப்பட்டுள்ளது.

இதனால் பரசிவம் பரசிவை பரஞ்சோதி இம்மூன்றும் அருட்பெருஞ்சோதி வடிவமெனவும், இமமூர்த்திகளைத் தனித்தனி தியானித்துப் பூஜிப்பது நிஷ்களசொரூப பூஜையெனவும், ஒன்று படுத்தித் தியானித்துப் பூஜிப்பது சகளசொரூப பூஜையெனவும் வேதாகமங்கள் விளங்க எடுத்துக்கூறும். இது கொண்டன்றே இம்மஹாக்ஷேத்திரம் சகளநிஷ்கள சொரூபமான க்ஷேத்திரமெனவும், ஏகிபாவ க்ஷேத்திரமெனவும் ஆன்றோர்களால் அநுட்டானத்தில் வைத்து மிகப் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது.

மேற்கூறிப் போந்த ஒப்பற்ற மாட்சிமையை ஆட்சியாகக்கொண்ட இத்தெய்வ மஹாக்ஷேத்திரத்திலே,

ஶிவஶ்ரீஜலதீ ஸூக்ஷ்மம் வேதஶாஸ்த்ரமஹோஜ்வலம் ।
ஶ்ரீகண்டநயாயாஸம்ஸாரம் தந்நிஶ்ரேயஸம் ॥

என்றெடுத்துக்கூறும் மாவிருக்ஷத்தின் கீழ் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற ஏகாம்பரம் முதலிய சிவாலயங்களில் சத்தி மூர்த்தமும் சத்தி ஆலயமும் கிடையா? ஆனால், நித்தியபடி நடைபெறும் ஆன்மார்த்த பரார்த்த பூஜா காலங்களிலும் தியான காலங்களிலும் சொரூப சத்தியாக அநுஷ்டிக்கப்பட்டு ஜல மூர்த்தமாய்ப் பூஜிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறாகவே குமர கோட்டம் கந்தப்பார் என்னும் சுப்பிரமணியர் ஆலயத்திலும் ஸ்ரீவல்லியம்பாள், தேவசேனம்பாள் என்கிற இருமூர்த்தங்களும் ஜல மூர்த்தமாகவே அமைத்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றன. இதனுண்மை, "பயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையே யன்றி - வாயன்மை தெளிந்து சைவ சித்தாந்த வழிதேறி அதீத வாழ்வில் - போயன்பி அஞ்செழுத்துந் திருநீறும் கண்டிகையும் பொருளாக் கொண்ட - நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு" * பெற்றவர்க்கே விளங்கக் கிடக்கும்.

இனி, முற்கூறிய முதலாவரணத் துட்பட்ட பூமியிலே எண்ணிறந்த சிவாலயாதி பல தேவாலயங்கள் உள்ளன. ஆனால் அத்தனையும் காண்டற் கரியனவாம். அவற்றுள் காண்டற்குரியனவாய் விளங்குவன அறுபத்தாறாயிரம். இவற்றுள் சிவாலயம் பதினாறாயிரம், சத்தியாலயம் ஐயாயிரம், கணேசராலயம் ஐஞ்ஞூறு, கந்தராலயம் ஐஞ்ஞூறு, விஷ்ணு ஆலயம் பன்னீராயிரம், சூரியனாலயம் ஐஞ்ஞூறு, பிரமனாலயம் பதினாயிரத்தெழுநூறு, துர்க்கையாலயம் ஆயிரம், வைரவராலயம் ஆயிரம், சாத்தனாலயம் ஆயிரம், புத்தனாலயம் எண்ணாயிரம், அருகனாலயம் ஒன்பதினாயிரத் தெழுநூறு, அநந்தனாலயம் நூறாம். இக்காலத்தில் சூரியன் பிரமன் புத்தன் அருகன் அநந்தன் முதலாயினோருக்கு ஆலயங்கள் உண்டென்பதற்குச் சிற்சில இடங்களிலே பற்பல குறிகள் காணப்படுகின்றன.

---

* இந்நூல், கடவுள்வாழ்த்து, செய்யுள் - கசு.

பிரசித்தமா யுள்ளன சிவாலயங்களும் சத்தியாலயங்களும் கணபதியால யங்களும் கந்தனாலயங்களும் சாத்தனாலயங்களும் விஷ்ணு ஆலயங்களுமே யாம். இரண்டொரு பௌத்தராலயங்களும் நல்ல நிலைமையில் காணக் கிடப்பதுண்டு; அதுவே திருப்பருத்திக்குன்று முதலியன வாகும்.

இம்மஹாபுரியினுள் மகிமாதிசயம் தங்கிய நித்திய தீர்த்தம் வார தீர்த்தம் பக்ஷ தீர்த்தம் மாச தீர்த்தம் வருஷ தீர்த்தம்,

[illegible]
[illegible]

என்று துதிக்கப்பட்ட சர்வதீர்த்தம்,

[illegible]
[illegible]

என்று போற்றப்பட்ட வேகவதி தீர்த்தம் முதலிய பலவுளவாம். அத்தீர்த்த விசேஷத்தினை, "ஈண்டு தீவினை யாவையு நீக்கி யின்பமே தரும் புண்ணிய தீர்த்தம் - வேண்டி னார்தமக் கிட்ட சித்தியதாய் விளங்கு தீர்த்தநன் மங்கல தீர்த்தம் - நீண்ட காப்புடைத் தீர்த்த மூன்றுலகி னிகழ்ந்த சாறுவ தீர்த்தமு முதலா - ஆண்டு நீடிய தீர்த்த மெண்ணிலவு மமர நாட்டவ ராடித லொழியார்." * என்று பெரியபுராணம் போற்றிப் புகழ்ந்து மகிழும்.

இக்காஞ்சி மஹாக்ஷேத்திர பிரபாவம் வடமொழியில ஸ்காந்த புராணம் சநத்குமார சம்ஹிதை காளிகா கண்டத்தில் தீர்த்தமான் மியத்தில் கூறப்பட்டுள்ள ஐம்பத்தைந்து அத்தியாயமாகிய பஞ்சாசத் என்கிற நூலினும், சிவபுராணம் பிரமாண்ட புராணம் முதலிய பல புராணங்களி னின்றும் திரட்டப்பட்டுள்ள நூறு அத்தியாயமாகிய சதாத் தியாயம் என்கிற நூலினும், மார்க்கண்டேயபுராணம் வித்தியா கண்டத் தில் பேசப்பட்டுள்ள பதினன்கு அத்தியாயமாகிய காமாக்ஷிவிலாசம் என்கிற நூலினும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனுள் பஞ்சாசத் என்கிற நூல் சிவமூர்த்தங்களுடைய கௌரவ பிரபாவங்களையும், சதாத்தியாயம் என்கிற நூல் தலம் தீர்த்தம் என்கிற இரண்டின் கௌரவ பிரபாவங்களை யும், காமாக்ஷிவிலாசம் என்கிற நூல் மஹாதேவியினுடைய கௌரவ பிரபாவங்களையும் எடுத்துக்கூறும்.

இம்மூன்றனுள் பஞ்சாசத் என்கிற நூலைத் திருக்கைலாய பரம்ப ரைத் திருவாவடுதுறை ஆதீனத்துத் திராவிட மஹாபாஷ்ய கர்த்தரா கிய சிவஞானயோகிகள் தென்மொழியிலே காஞ்சிப்புராணம் முதற்கா ண்டம் என்னும் பெயரினால் செய்தருளினர். சதாத்தியாயம் என்கிற நூலை மேற்படி சிவஞானயோகிகள் மாணுக்கருள்ளே சிறந்த கச்சியப்ப முனிவரர் காஞ்சிப்புராணம் இரண்டாங்காண்டம் என்னும் பெயரினால்

* திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராணம்; செய்யுள் - எஅ.

தமிழிலே செய்தருளினர். காமாக்ஷிவிலாசம் என்கிறநூல் தமிழிலே செய்யுள் ரூபமாகக் காணப்படவில்லை. இதனை ஸ்ரீ கோளகிமட நிவாச பஞ்சாக்ஷர சிவாசாரியார் மரபில் வந்தவரும், உபயவேதாந்த பிரவர்த்தகாசாரியரும், சிவாகம ஞானநிஷ்டாபரரும், திருவேகம்பநாதர் பூஜகரும், எனது ஞானசாரியரும் ஆகிய ஸ்ரீமது முத்துகச்சபேச்வர சிவாசாரிய சுவாமிகள் கட்டளையின்படி காமகோட்டபுராணம் என்னும் பெயரினால் பாடிக்கொண்டு வருகின்றேன்; சீக்கிரமே முகிந்து அச்சுவாகனமேறி வெளிவரக்கூடும்.

இஃதன்றித் தென்மொழியில் கலித்துறைக் காஞ்சிப்புராணம் என ஒன்றும், பண்டைய காஞ்சிப்புராணம் என ஒன்றும் காணப்படுகின்றன. இவ்விரண்டும் சொற்சுவை, பொருட்சுவைகளில் தனக்குத்தானே ஒப்பானவை. முறையே இதனாசிரியர் பிள்ளையார்பாளையம் ஆளவந்ததேசிகராதீனத்துச் சிதம்பர தேசிகரென்றும், வாலியூர் பிரதாபமுதலியாரென்றும் கூறுகின்றனர். இப்புராணம் இரண்டனுள்ளும் கூறப்பட்டுள்ள சரித்திரம் வேறு என்று மயங்கவேண்டாம்; முதலிரண்டு காண்டம் அடங்கிய காஞ்சிப்புராணத்துள் கூறப்பட்ட சரித்திரங்களேயாம்.

இவ்விரண்டு புராணத்தையும் தக்கோலம் ஐயா செல்லப்ப நாகமணி முதலியார் அவர்கள் குமாரராகிய இராமசாமிமுதலியார், இராமகிருஷ்ண முதலியார் என்னும் வித்துவஜன பரிபாலகர் வேண்டுகோளின்படி அவர்கள் செலவில் பல கையெழுத்துப் பிரதிகள் கொண்டு செவ்வையாகப் பரிசோதித்து அரும்பதவுரையுடன் அச்சிடலுமென்று மிக முயன்று வருகின்றேன்; ஆனால், காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் மஹாவித்துவான் ஸ்ரீ நமச்சிவாயமுதலியார் அவர்கள் மாணக்கர் பலர்கூடி பாடங்கேட்டபடி எழுதிவைத்துள்ள * தணிகைப்புராணக்குறிப்புரை என்னும் அரியபெரிய நூலை முந்தி வெளியிடுவது நலமெனப் பலர் தூண்டுகின்றனர். அவ்வாறு செய்வது உசிதமென்றே நினைக்கின்றேன்; திருவருள்கூட்டி முடிக்கவேண்டும். இது நிற்க,

இக்காஞ்சிப்புராணத்தைப் பலதேசப் பிரதிரூபங்கள் கொண்டு நன்றாகப் பரிசோதித்துச் செவ்வனே அச்சிட்டு வெளியிடவேண்டுமென்றென்னிடமெழுந்த பேராசை பிடர் பிடித்துத் தள்ள அதன் வயப்பட்டு அவ்வாறு செய்யத் தொடங்கினேன்; நடைபெற்று வருங்காலத்தில் இடையிடையே உண்டான கஷ்ட நஷ்டங்கள் மிகப் பலவாம். அவ்வக்காலங்களில் அடியேன் மனந்தளராமல், ஊக்கத்துடன் எடுத்த வேலையை இனிது முடிக்கும்படி உடனிருந்து வேண்டியபடி சகாயம்

* இம்முயற்சி சைவசமயாபிமானமும், தமிழ் சம்ஸ்கிருத பாஷாபிமானமும், கல்வி கேள்விகளும், அவற்றின் பயனாகிய அறிவும், அதன் பயனாகிய சிவாலய தரும பரிபாலனமும் ஒருங்குடைய ஸ்ரீமான் காஞ்சிபுரம் மு-சுப்பராய முதலியார் அவர்கள் பேருதவியால் முற்றுப்பெறலாம்.

செய்து முற்றுப்பெறச் செய்த எனது போதகாசிரியரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து மஹாவித்துவானும், சித்தாந்த சரபமும் ஆகிய அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பெருந் தகைமைக்கு மனப்பூர்வமாக வந்தனஞ் செய்கின்றேன்.

இந்நூலோடு சேர்த் தச்சிடுதற்பொருட்டு எழுதப்பட்ட அரும்பத வுரையையும், ஆங்காங்கு மிக முயன்று தேடிப்பிடித்த, சிலாசாசனக் குறிப்புரையையும், ஒவ்வொரு பாடலைச் செய்யுளின் பின்றொடர்ந்தெழுதிய வசனவுரையும் காலநீட்டித்தலையும் பர்ரமதிகப் படுதலையும் நோக்கி இப்பொழு தச்சிடாமல் நிறுத்தப்பட்டன; பிறகு பிழைதிருத்தத்துடன் தனியே அச்சிட்டு வெளியிடக்கூடும்.

இப்புராணத்தை முற்றுப்பெறச்செய்த எல்லாம் வல்ல இறைவன், ஊரொடு பேரும் ஒன்றும் இல்லான்-ஊரொடு பேரும் உண்டென வந்து-பூவடு வண்டுறை பொன்னிநாட் டகத்து-ஆவடு துறையில் அமர்ந்தினி தருளும்-மகாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகள் ஆஞ்ஞையின் 'கீழ் நடைபெற்று வரும் உரையோடு கூடிய சித்தாந்த ஞானசாத்திரம் பதினான்கும் அடங்கிய மெய்கண்டசாத்திரம், பண்டார சாத்திரம், திருமுறைத்திரட்டு முதலியவற்றையும் இங்ஙனம் முடித்துத் தருவனென்று நினைக்கின்றேன்.

இப்பதிப்பில் ஆங்காங்குக் காணப்படும் பிழை...... அவற்றின் திருத்தங்களையும் தயைசெய்து விவேகிகள் குறித்தனுப்பினால் அவர்கள் பெயருடன் அவற்றைப் பின்னரச்சிட்டுப் பலர்க்கும் பயன்படும்படி செய்வேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

யாப்பருங்கலவிருத்திமேற்கோள்.

"வையக மெல்லாங் கழனியா—வையகத்துச்
செய்யகமே நாற்றிசையிற் றேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு—வான்கரும்பின்
சாறே யந்நாட்டுத் தலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புரமெல்லாங்—கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்."

சென்னை : 11—2—12.

இங்ஙனம்,
காஞ்சி - நாகலிங்கன்.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்

திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலைக்கும்,
காவிரிப்பூம் பட்டினத்து மேலையூர் அறுபத்துமூவர் வித்தியாசாலைக்கும்,
சென்னைச் சைவ வித்தியாநுபாலன யந்திரசாலைக்கும்
அதிபதியாகிய
யாழ்ப்பாணத்து வண்ணைநகர்

ஸ்ரீமத். சுவாமிநாதபண்டிதரவர்கள்

இயற்றியது.

திருவினை புரியும் பெருமைசா லுயிர்க்குங்
கருவினை புரியுங் கருமைசா லுயிர்க்கு
மிருவினைக் கேற்ப வியற்றுநிக் கிரகமும்
புரியநுக் கிரகமும் பரிவுட னியற்ற
றன்னருட் டொழிலென மன்னுயிர்த் தொகையுண
ஞாயிறுந் திங்களு மாயிருஞ் சுடரு
மோய்வின் றோரிடத் தொருங்குறீஇ யுதித்துச்
செம்மையாய் மிளிர்ந்து திசைதொறுந் திசைதொறும்
வெம்மையுந் தண்மையும் வீற்றுவீற் றுய்க்குமா
பால மேற்கொண் டாலக் கீழான்
ஞாலமேல் வாழ்குநர் சால வியப்ப
விருளறு மாயை யெனுமொரு பீடத்
தருளுடன் குருவா யமர்ந்துவீற் றிருந்த
தென்முகக் கடவு டன்னருட் டிறத்தாற்
பன்முகச் சமயப் பான்மையை மறுக்கு
மான போத மன்னிய நற்சிவ
ஞான போத நவிலரு நூலினை
நந்தியெம் பெருமான் புந்தியிற் கொள்ளச்
சுந்தர மாகமுன் சொற்றன னக்கச்
சைவா கமங்க டம்மின் முரணுவ
செய்யா வென்பது தேற்றியந் நந்தி

உ

யெய்யாமை யகற்றி யினிதருள் பூத்துப்
பொய்யா வுளத்துக் கையாத் தவச்சனற்
குமார மாமுனி கொண்டிடக் கொளுவ
வமார ருகு மமாரனை வென்ற
சத்திய ஞான தரிசனி பெற்றுச்
சுத்திய மாப்பரஞ் சோதி முனிக்கு
வைத்தருள் கூர வித்தக முனிவனு
மத்தலை யகன்று மெய்த்தவந் தவக்கூர்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
கைகண் டறியக் கழறிட வன்பா
லவன ருணந்திக் களித்திட வவன்பா
னவமிகு மறைஞா னப்பனை னவனு
முவனுமை யுமாபதி யொப்பில் சிவனுந்
தவமிகு ஞானஞ் சார்ந்துவந் தருள்புரி
கயிலைமா மரபின் மயிலைப் புறங்கா
ணயிலை நோக்கிய வங்கனை யாரை
வென்று ஞான மிளிர்வா ளகவுறை
நின்று கழியா நின்மல நமச்சி
வாய னென்னு மறுவில் ஞான
குரவனை யடியாக் கொண்டிடு துறைசை
யுரவா தீனத் தோங்குபே ரெழிலான்
வேண்டா தீதலின் மாண்டகு மாமுகில்
வேண்டிய துதவலிற் காண்டகு கற்பக
மெண்ணிய தருதலிற் கண்ணுசிந் தாமணி
புண்ணியம் பூசுங் கண்ணிய மேரு
கற்றவ ருசாவுங் கல்விக் களஞ்சிய
முற்றவர்த் தாங்கு மொருபெரும் வங்கம்
நாவியும் பூவியு நலத்தகப் புல்லி
யாவியிற் போற்றுங் காவி யுடையோ
னும்பர்த் தலத்தும் பம்பிடு சீர்த்தி
யம்பல வாண வருட்குரு ராய
னகத்தியன் வரத்தா லன்றவ தரித்துச்
சகத்தியல் கடந்த மகத்துவ முடையோன்
விற்பனக் குரிசி லுற்பவர் தொடங்கி
யற்புத னடியரைச் சிற்பர னுக
வொழியாப் பவக்கட லோட்டந் தொளிப்ப
வழிபா டுஞற்றி வரம்பெறு சீலன்
பாடிய மாதிய பற்பல வுரைகள்
பாடிய நூல்கள் பற்பல் வுகுத்தோ
னவஞா னமகலு ம்ரனரு ளாலே

தவஞா னம்பெறு சிவஞான முனிவனும்
மற்றவன் மாணவர் பற்பல ருள்ளும்
பொற்புறு வித்தக கற்றொளி மிக்கோன்
பலப்பல நூல்கள் பண்ணிய விபுத
னுலப்பிலா மதியின னோங்கருள் வசத்த
னுச்சிமேற் புலவர் வைச்சிடு சீர்த்தியான்
கச்சி யப்பனுங் கவின்பெறு முனிவனுஞ்
சொற்றிடு வளப்பெலா மற்றதின் விரவக்
கற்றிடு ஞானநூற் கருத்தெலாம் பொலிய
வியற்றிமுன் வைத்த வினையிலா னூலாய்
காஞ்சிமான் மியத்தைக் கசடற வச்சில்
வாஞ்சையிற் றருகெனை வழங்கின னாகச்
சான்றோ ருடைத்தென வான்றோர் புகழ்தரு
தொண்டைநன் னாட்டிற் கெண்டகு சிரமாய்
மண்டல மதித்த விண்டொடர் மாடச்
சென்னைமா நகரிற் சொன்னமா வதிவோன்
சொன்னயம் பொருணயந் துறுமிய தருக்க
நன்னயு விலக்கண நால்வகைப் பௌத்த
மாதிய மதங்க ளவற்றின் மறுப்பு
நீதியிற் றடைவிட் டிரம்புத லுற்ற
போதமுன் னாகப் புகல்பதி னன்கு
மோதியி னோதி வாதிக ளோங்க
மாப்ர சங்க மாமழை பொழியு
மாப்த சிகாமணி யன்பர்தங் கண்மணி
மறுவின் மதிபுனை திறலின் மிகுமர
னறுபா னன்கா மாட வியற்றிய
மதுரைமா நகரில் வயங்கிடு சங்கப்
புலவரு ளொருவனாப் போற்றுமா வித்துவா
னையுறு சென்னை மெய்கண்ட சபைக்குஞ்
சிவனடி யார்தந் தவமிகு சபைக்கு
மதிபதி யாக வதிதரு வள்ள
லழுக்கா றுதிய விழுப்பமில் குணங்க
ளிழுக்கா வியன்ற வொழுக்கா றுடையோன்
றன்னயங் கருதாச் சால்போ டியார்க்கு
நன்னயம் புணர்க்கு நலத்தகு குன்றஞ்
சைவவான் பயிர்க்கோர் தெய்வவான் மேக
முப்வகை நாடு மெய்வகை யடியரைச்
சிவனெனப் பாவனை சிந்தையி னிறீஇப்
பவவினை பாற்றி யவமகன் றொளிர்வோன்

சூத னொலிமாலை யாதிய வேண்டினர்
மாதுய ரகல வழங்கிடு முரவோ
னட்டாவ தானங் கட்டவும் வல்லோ
னெட்டா மூர்த்தி யிணையடிக் கன்பன்
கத்தார் மதங்களாழ் பொய்த்தசீ யங்கொலுஞ்
சித்தாந்த சரபமாத் திகழ்ந்திடு திறலோன்
பூவையுங் கிள்ளையும் பொலிந்தினி துறையுங்
காவையுந் தடத்தையுங் காட்டிடும் பூவைக்
கலியாண சுந்தரக் கவிஞன் றன்பா
னலியா வண்ண நன்குறக் கற்ற
மாணவர் குழாத்துண் மாட்சிமிக் குடையோ
னுணவ மில்லா வமைகுண சீலன்
வண்ணக் களஞ்சியம் வண்ணக் களஞ்சிய
மெண்ணக் களஞ்சிய மெண்ணக் களஞ்சிய
மென்னப் பகர்ந்துற வுன்ன வபய
னன்னர்க் கொடுத்து நயக்குறு மின்பன்
மெய்கண்ட சாத்திரம் விழுத்தக வச்சிற்
பொய்கண் டடாவணம் போற்றித் தந்தோன்
விதிக்குரி மாந்தர் வியந்திடப் பின்னு
மதிப்புறு நூல்பல வாய்ப்பவச் சிட்டோன்
செம்மையிற் கம்பைத் தீரத் துமையா
மம்மை யருந்தவ மாற்றிய காஞ்சி
நாக லிங்க நற்கவி ராயன்
மாகர லிகித வழுக்களைக் களைஇப்
பெரிய மெட்டிற் பிறங்கிடு வைசிய
ரரிய குழாத்துட் டெரிய நின்ற
வேங்க டாசல விழுத்தகு வைசிய
னேங்கப் பெற்ற வுத்தம குமர
னாதி மூலனென் றறைதரு வைசிய
னேதிய கருத்து மேதக முற்றுற
வச்சினில் வயக்கி யளித்தான்
மெச்சிட யாரு மேதினி தனிலே.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயபரம்பரைத்திருவாவடுதுறையாதீனத்துத்

திராவிடமகாபாஷ்யகர்த்தராகிய

சிவஞானயோகிகள்வரலாறு.

கயிலாயபரம்பரையிற்சிவஞானபோதநெறிகாட்டும்வெண்ணெய்
பயில்வாய்மைமெய்கண்டான்சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபாநுவாகிக்
குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ்குருநமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன்றிருமரபுநீடூழிதழைகமாதோ.

திருக்கைலாயமலையிலே, அருள்வடிவாகிய கல்லாலமரநிழலிலே, தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீகண்ட பரமசிவன்பால், ஆகமங்களை யெல்லாம் கேட்டருளிய நந்தியம்பெருமான் ஸ்ரீகண்டமுதல்வரை வணங்கி நின்று, காமிகமுதலிய சைவாகமங்களின் ஞானபாதப் பொருளின் இகலறுத்து அவற்றின் பொருளுண்மை போதித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அம்முதல்வர் நன்றேவினாயினாய் அவ்வுண்மை ரௌரவாகமத்துட் பன்னிரு சூத்திரத்தாற் கூறப்பட்டது சிவஞானபோதமென்பதோர்படலம், அதுகேட்டவர்க்கு எல்லா ஆகமப்பொருள்களும் மாறுகோளின்றி இனிதுவிளங்குமெனக்கூறி, அச்சிவஞானபோதத்தை நந்தியம்பெருமானுக்கு அருளிச் செய்தார். நந்தியம்பெருமானும் அதுகேட்டதுணையானே எல்லா ஐயமுநீங்கி, மெய்ப்பொருள் தெளிந்து, பின் அதனைத் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சநற்குமார முனிவருக்கு அருளிச்செய்தார். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சத்தியஞானதரிசனிகளுக்கு அருளிச் செய்தார். அவர்தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த பரஞ்சோதி முனிவருக்கு அருளிச்செய்தார்.

பின்பு நடுநாட்டிலே, திருப்பெண்ணாகடத்திலே, பரம்பரைச் சைவவேளாள குலதிலகரும், சிவபத்தி அடியார் பத்திகளினும் கல்வி செல்வங்களினுஞ் சிறந்தவரும், அச்சுதர் களப்பாளர் என்னும் பெயருடையவரும் ஆகிய ஒருவர் இருந்தார். அவர் நெடுங்காலம் பிள்ளைப்

பேறின்மையால், அதற்கு உரிய அரிய விரதாதிகளையெல்லாம், ஆதிசைவரும், சகலாகமபண்டிதரும் ஆகிய தம்முடைய குலாசாரியர் முகமாக உணர்ந்து அநுட்டித்துவந்தனர்; வந்தும் சித்திபெறாது வருந்தி, பின்னும் சகலாகம பண்டிதரிடத்தில் விண்ணப்பஞ் செய்தனர்; அதனை உணர்ந்த சகலாகமபண்டிதர் உற்றுநோக்கி அறிவித்தபடி, அச்சுதர் களப்பாளர் தமிழ்வேதமாகிய தேவாரத்திலே, விதிப்படி அருச்சித்து வணங்கிக் கயிறுசாத்தினர்; சாத்தியவழி, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளிய "கண்காட்டு நுதலானும்" என்னுந் திருவெண்காட்டுத் திருப்பதிகத்திலே, அருட்சத்தியாகிய உமாதேவியார் திருநாமசம்பந்தமான "பேயடையா பிரிவெய்தும்" என்னுந் திருப்பாடல் உதயமாயிற்று; அதிலே "வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையார் பிள்ளையினோடு உள்ளினினை வாயினவே வரம்பெறுவர் ஒன்றும் ஐயுறவேண்டா" என்னும் பொருளைச் சகலாகமபண்டிதர் நோக்கி நோக்கி, மிகமகிழ்ந்து கொண்டாடி அச்சுதர் களப்பாளர்க்கு உரைத்தனர்.

அதன்பின் அச்சுதர் களப்பாளர் ஆசிரியரிடத்தே விடைபெற்றுக் கொண்டு, திருவெண்காடு என்னுந் திருப்பதியைத் தம்முடைய மனைவியாரோடு அடைந்து, திருக்கோயிலின்கண்ணே, 'சோமசூரியாக்கினி என்னும் முச்சுடர்களின் திருநாமம்பெற்ற முக்குளத்திலே, விதிப்படி ஸ்நாநம்பண்ணி, சிவபிரானையும் உமாதேவியாரையும் தரிசித்து வழிபடுவாராயினர். அங்ஙனம் வழிபடுநாளிலே, ஒருநாள் அவருக்குச் சொப்பனத்திலே, சிவபிரான்தோன்றி, "உனக்கு இப்பிறவியிலே, பிள்ளைப்பேறு அரியதாயினும், சர்வாபீஷ்டமும் தரத்தக்கதாய், நமக்கு மிக்க பிரீதியுடையதாயுள்ள தேவாரத்தைப் பரமப் பிரமாணமாகக் கொண்டு நீ ஒழுகுகின்றமையால், அத்தேவாரத்தைப்பாடிச் சைவஸ்தாபனஞ்செய்த திருஞானசம்பந்தப்பிள்ளை என்றே கொள்ளும்படி நமது திருவருளினாலே, இன்னும் தமிழ்நாடு உய்யும்வண்ணம், அத்தேவாரத்தின் மெய்ப்பொருளை உள்ளடக்கிய சைவசித்தாந்த சாத்திரத்தை வெளிப்படுத்திச் சைவஸ்தாபனஞ் செய்யத்தக்கவனாக; உன்னிடத்தில் ஒருபுத்திரன் அவதரிப்பான்" என்று சொல்லி மறைந்தருளினார்; உடனே விழித்தெழுந்த அச்சுதர் களப்பாளர் பெருமகிழ்ச்சிகொண்டு மனைவியாருக்குத் தெரிவித்து, அவரோடு தாமும் பேரன்புடன் சுவேதாரணியரையும், பிரமவித்தியா நாயகியாரையும் வழிபட்டு வசித்தார்; அங்ஙனம் வசிக்குநாளிலே, தம்முடைய மனைவியாரது அருமைத்திருவயிற்றிலே, கருப்பம் உண்டாகி, ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார். பின்பு தந்தையார் அப்பிள்ளையாருக்கு உரிய பருவத்திலே சுவேதவனப்பெருமாள் என்னுந் திருநாமம் சாத்தினர்.

அதன் பின்பு சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய அப்பிள்ளையார், திருவெண்ணெய் நல்லூர் என்னுந் திருப்பதி

யிலே தம்முடைய நன்மாமனார்வீட்டிலே வளருவாராயினார். வளர்ந்து, இரண்டு பிராயத்திற்குளே மெய்யுணர்வின் முற்றுப்பே றுடையாராய், எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, பரஞ்சோதிமுனிவர் திருக்கைலாய மலையினின்று நீங்கி, திருவெண்ணெய்நல்லூரை அடைந்து, அம்மெய்யுணர் வுடையாரைச் சந்தித்து, சிவஞானபோதத்தை நல்கி, இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்துய்தற்பொருட்டு, மொழிபெயர்த்துப் பொழிப்பும் உரைக்கவென்றருளிப் பொழிப் புரைக்குமாறும் சத்தியஞான தரிசனிகள்பால், தாங்கேட்டவாறே வகுத்தருளிச்செய்து, பொய்ச்சமயங்களின் நெறி இது இது என்று கண்டு கழிப்பித்து, மெய்ச்சமயமாகிய சைவத்தின் உண்மை உணர்ந்து, அதனை ஸ்தாபனஞ்செய்யும் காரணத்திற்கும், தம்முடைய ஆசிரியர் சத்தியஞான தரிசனிகள் திருநாமத்திற்கும் இணங்க, அம்மெய்யுணர் வுடையாருக்கு மெய்கண்டதேவர் எனத் திருநாமம் சாத்தி நீங்கினார்.

பின்பு மெய்கண்டதேவர் அத்திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கின்ற சுயம்புமூர்த்தியாகிய பொல்லா விநாயகக்கடவுள் சந்நிதியில் சிவஞானபோதத்தைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடி, சிவபிரான் திருவருளும், ஆசிரியர் பரஞ்சோதிமுனிவர் கருத்தும்நோக்கி, தமிழ்நாடு உய்யும்வண்ணம், அவ்வடமொழிச் சிவஞான போதத்தைத் தமிழில் வார்த்திகப் பொழிப்பாக மொழிபெயர்த்து, பல அற்புதங்களை விளக்கி, சைவஸ்தாபனஞ்செய்து, தம்முடைய மாணக்கர் நாற்பத்தொன்பதின்மருள்ளும் சிறந்தவரும், திருத்துறையூரிலே அவதரித்தருளிய ஆதிசைவரும், சகலாகமபண்டிதரென்னுங் காரணப்பெயருடையவருமாகிய அருணந்தி சிவாசாரியருக்கு அளித்தருளினார்.

அருணந்தி சிவாசாரியர் முதனூலாகிய சிவஞானபோதத்திற்கு வழிநூலாகச் சிவஞானசித்தியாரும், இருபாவிருபதும் ஆகிய இரண்டு சைவசித்தாந்தசாத்திரங்களை அருளிச்செய்து, அவைகளையும் சிவஞானபோதத்தையும் திருப்பெண்ணுகடத்திலே பிராமணகுலத்திலே அவதரித்தருளிய மறைஞானசம்பந்தசிவாசாரியருக்கு உபதேசித்தருளினார்.

மெய்கண்டதேவர் மாணக்கருள்ளே திருவதிகை மனவாசகங்கடந்தார் உண்மைவிளக்கமென்னுஞ் சைவசித்தாந்த சாத்திரத்தை இயற்றியருளினார்.

மேற்கூறிய மறைஞானசம்பந்த சிவாசாரியர் சிதம்பரத்தைச்சார்ந்த திருக்களாஞ்சேரியில், சிருங்காரவனத்தில், பிரமபுரீசுரர் சந்நிதியில் எழுந்தருளி யிருந்துகொண்டு, தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியருக்கு உபதேசித்தருளினார்.

உமாபதிசிவாசாரியர் சிதம்பரத்தைச்சார்ந்த கொற்றவன்குடியிலே எழுந்தருளியிருந்துகொண்டு, வடமொழியிலே பௌஷ்கராகமத்துக்கு

வியாக்கியானத்தையும், தமிழிலே புடைநூலாகிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் எட்டுச் சைவசித்தாந்த சாத்திரங்களையும், கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார்நாயனார் புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை, சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா முதலியவற்றையும் செய்தருளினார். சங்கற்பநிராகரணம் செய்தருளியகாலம் சாலிவாகன சகாப்தம். கஉஙரு.

உமாபதிசிவாசாரியர் அருணமச்சிவாயதேசிகர் முதலிய மாணாக்கர்களுக்கு உபதேசித்தருளினார். அன்றியும் சபாநாயகர் விடுத்தருளிய,

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை."

என்னுந் திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு, பெற்றான் சாம்பானுக்கு உடனே முத்தி கொடுத்தருளினார். பின்பு அப்பெற்றான் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோரும் காண அத்தனுண்மையை வெளிப்படுத்தி அவர்கள் ஐயத்தை ஒழிந்தற்பொருட்டுத் தம்முடைய ஆன்மார்த்தபூஜை கொண்டருளிய சிவபிரான் ஆடியருளிய தீர்த்தத்தினால் வளர்ந்து பரிபக்குவமடைந்துள்ள முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தருளினார்.

சிதம்பரமான்மியத்தின் வழித்தாக அருளிச் செய்யப்பட்ட கோயிற்புராணம் அரங்கேற்றப்படாது பேடகத்துள் இருந்தபொழுது, சபாநாயகர் தில்லைவாழந்தணர்களுக்குச் சொப்பனத்திலே தோன்றி "நாம் கொற்றவன்குடி உமாபதியுடைய பேடகத்துள் இருக்கின்றோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதனைத் தில்லைவாழந்தணர்கள் உமாபதி சிவாசாரியருக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர் கோயிற்புராணத்தைச் சபாநாயகர் சந்நிதியில் விரைவில் அரங்கேற்றியருளினார்.

திருக்கடவூரிலே அவதரித்தருளிய உய்யவந்ததேவ நாயனார் பெரும்பற்றப்புலியூரில் எழுந்தருளியிருந்தபொழுது, தம்முடைய ஆசாரியராகிய திருவியலூர் ஆளவந்ததேவநாயனார் தமக்கருளிச்செய்த திருவுந்தியாரென்னுஞ் சைவசித்தாந்த சாத்திரத்தை விரித்துத், தம்மையடைந்த ஒரதிபரிபக்குவர்பொருட்டு ஒருசைவசித்தாந்த சாத்திரத்தை அருளிச்செய்து, அதன் பெருமையை உலகத்துள்ளாரும் உணர்ந்துய்யுமாறு திருவுளங்கொண்டு, திருவம்பலத்திற்சென்று வணங்கி, திருக்களிற்றுப்படியிலே அந்நூலை வைக்குமளவில், அத்திருக்களிற்றுக்கை நிமிர்ந்து அதனை வாங்கிப் பரமகருணாநிதியாகிய நடராஜரது திருவடி

யிலே கொடுத்தமையால், அத்திருப்படைவீட்டிலுள்ள எழுநூறு திருமடத்துமுதலிகளும் தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் மாகேசுரர் நாற்பத்தெண்ணாயிரவரும் திருக்கோயிற்றிருத்தொண்டுசெய்யுந் திருப்பேர் ஏழாயிரத்துத் தொளாயிரவரும் பிறரும் சந்நிதியிலே கூடிநின்று வியப்புற்று, அந்நூற்குத் திருக்களிற்றுப்படியாரெனத் திருநாமஞ் சாத்தினார்கள். ஆகலான் மேற்கூறிய திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இரண்டும், மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதம் ஒன்றும், அருணந்திசிவாசாரியர் அருளிச்செய்த சிவஞானசித்தியார், இருபாவிருபது ஆகிய இரண்டும், மனவாசகங்கடந்தார் அருளிச்செய்த உண்மைவிளக்கம் ஒன்றும், உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த சிவப்பிரகாசமுதலிய எட்டும் ஆகப் பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களும் மெய்கண்டசாத்திரம் என அடிப்பட்ட சான்றோரால் வழங்கப்பட்டு வருகின்றன.

"உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று."

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் திருப்பாட்டே யுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

மேற்கூறிய உமாபதி சிவாசாரியரிடத்தே அநுக்கிரகம்பெற்ற அருணமச்சிவாயதேசிகர் நவகோடிசித்தவாசபுரமென்னுந் திருநாமமுடைய திருவாவடுதுறையிலே சித்தமூர்த்தியாக எழுந்தருளியிருந்த சித்தர் சிவப்பிரகாசதேசிகருக்கு உபதேசித்தருளினர்.

சித்தர்சிவப்பிரகாச தேசிகர் திருமூவலூரிலே பரம்பரைச்சைவ வேளாளர்குலத்திலே திருவவதாரஞ்செய்து, பிரமசரியநிலையிலே துறவறத்தினராய்ச் சத்திநிபாதத் துத்தமராய், எழுந்தருளியிருந்த நமச்சிவாய மூர்த்திகளுக்கு உபதேசித்தருளினர்.

நமச்சிவாயமூர்த்திகள் தம்முடைய ஆசாரியர் ஆஞ்ஞாபித்தருளியபடி திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்து கொண்டு, சிவப்பிரகாச தேசிகருக்கு ஞானவதிமுறைப்படி சிவதருமணியென்னும் நைட்டிகதீக்ஷைசெய்து, அபிஷேகம்பண்ணிச் சைவசித்தாந்த சாத்திரத்தை உபதேசித்தருளினர். சிவப்பிரகாசதேசிகர் வைணவர்களாலே சிதம்பராலய பூஜைக்கு முட்டுப்பாடுவந்தவழி, ஞானதேசிகராகிய நமச்சிவாய மூர்த்திகள்பால் ஆஞ்ஞைபெற்றுக்கொண்டு சென்று, தம்மைவழிபடும் வண்ணம் அக்காலத்துள்ள அரசரை வசப்படுத்திச் சிதம்பராலயபூஜை சிறப்புற நடாத்துவித்துப் பின்பு வீட்டையிலே வீற்றிருந்தருளினர்.

பின்பு பஞ்சாக்கரதேசிகமூர்த்திகள் திருவாவடுதுறையிலே திருவவதாரஞ்செய்து, தீவிரதரபக்குவராய் எழுந்தருளியிருந்த மறைஞானதேசிகருக்கு அபிஷேகஞ்செய்து உபதேசித்தருளினார். மறைஞானதேசிகர் சைவசித்தாந்தசாத்திரோபதேசம் கேட்டதுணையானே, சிந்தித்துத் தெளிந்து, தைலதாரைபோல இடையறாது நிட்டையிலே வீற்றிருந்தருளினார்.

பின்பு நமச்சிவாயதேசிகோத்தமர் ஆதீனபரம்பரையாகச் சித்தாந்தோபதேசம் விளங்கிவரும்வண்ணம் திருவுளங்கொண்டு, அம்பலவாணதேசிகருக்கும், தக்ஷிணாமூர்த்திதேசிகருக்கும் அபிஷேகஞ்செய்து சைவசித்தாந்த சாஸ்திரத்தை உபதேசித்தருளினார்.

தக்ஷிணாமூர்த்திதேசிகர் மெய்கண்டசாத்திரத்தின் கருத்தை உள்ளடக்கிய தசகாரியம், உபதேசப்பஃறொடை யென்னும் இரண்டு ஞானநூல்களைச் செய்தருளிச் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்தபடியே பரிபூரணதசை அடைந்தார்.

அம்பலவாணதேசிகர் தசகாரியம், சன்மார்க்கசித்தியார், சிவாச்சிரமத்தெளிவு, சித்தாந்தப்பஃறொடை, சித்தாந்தசிகாமணி, உபாயநிட்டைவெண்பா, உபதேசவெண்பா, நிட்டைவிளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை எனப் பத்தியரூபமாகப் பத்துஞானநூல்களையும், பூப்பிள்ளை என்னுந் திருப்பெயருடைய ஒருபரிபக்குவர்பொருட்டு, உயிரட்டவணை யென்னும் பூப்பிள்ளை அட்டவணை எனவும் பெயர்பெற்ற கத்தியரூபமாகிய ஒருஞானநூலையும் செய்தருளினார்.

அன்றியும் அம்பலவாணதேசிகர் தம்மையடைந்த வைணவப்பிராமணரும் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பரிபக்குவருமாகிய உலகுடையநாயனார் என்பவருக்குச் சைவசந்நியாசங்கொடுத்து, நைட்டிகநிருவாணதீக்ஷைசெய்து, மெய்கண்டசாத்திரங்களையும், தாம் இயற்றியருளிய தசகாரியமுதலிய நூல்களையும் உபதேசித்தருளினார். உலகுடையநாயனார் தம்முடைய ஞானாசாரியர்மீது சைவசித்தாந்தசாத்திரக் கருத்தை யுள்ளடக்கிய தோத்திரரூபமாக,

"மலமெனுந் தடத்திற் கருமசேதகத்தின் மாயையாங் கிழங்கிலங்குரித்து
 மன்னுமூ வெட்டாந் தத்துவ நாள மலரிதழ் வித்தையேழ் வித்தை
நலமிகு மீசன் சதாசிவ மிரண்டு கண்ணுகே சரங்களாஞ் சத்தி
 நற்பொகுட்டாகு நாதமே விந்து நயந்தகண் ணமென விரவி
இலகுமென் னுடலப் பதுமமீ டிகைநீ யிருந்தரு ளாசன மெனுமல்
 எனதுபுக்கிலதா வெண்ணினேன் றெளிய வியலருட் பார்வைதந் தனையே
அலகிலா வுயிர்கண் மலநடைக் கிலையா யருணடைக் குண்மையாய் நின்ற
 ஆவடு துறைசை யம்பல வாண வடியவர்க் கருளுமா நிதியே."

என்றற் றொடக்கத்துப் பத்துத் திருவிருத்தங்களைப் பாடியருளினார்.

பின்னும் அம்பலவாண தேசிகரிடத்தே சிவதீக்ஷை பெற்றுச் சித்தாந்த சைவோபதேசங் கேட்டருளிய சிவபுரம் பெரியபிள்ளை என்பவர் தம்முடைய ஆசாரியர்மீது,

"அந்தமலத் தத்துவித மானபணி யாலகற்றி
வந்தமலத் தத்துவிதம் வைத்தாயே—பெந்தாய்
திருவா வடுதுறைவாழ் தேசிகா பொய்யின்
மருவாத வம்பல வாணா."

என்றற் றொடக்கத்துப் பத்துத் திருவெண்பாக்களைப் பாடியருளினார்.

பிரமசரிய நிலையிலே துறவறத்தினராய்த், திருவாவடுதுறையின்கண் எழுந்தருளி யிருந்துகொண்டு, ஆதீன பரம்பரையாகச் சித்தாந்தோபதேசம் நிகழ்ந்துவரும் வண்ணம் திருவுளங்கொண்டு, மாணாக்கர்களுக்கு அபிஷேகஞ்செய்து, உபதேசித்தருளிய ஞானாசாரியராகிய நமச்சிவாய மூர்த்திகள் ஆதீனத்துக்குப் பிரதம பரமாசாரியரும், உபதேச பரம்பரை அங்குரித்தற்கு அருகமாய் அப்பிரதமாசாரியர் காலத்தில் இருந்தருளிய அம்பலவாணதேசிகர் துவிதீயாசாரியருமானதால், இந்த ஞானாதீனத்துக்கு வந்தருளும் ஆசாரியர்கள் நைட்டிக துரியாச்சிரமிகளா யிருத்தலும், பெரியபட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் பொழுது, அடியவர் முதலாயினோருக்கு அனுப்பியருளும் திருமுகங்களில் "நமசிவாயம்" எனவும், சின்னப்பட்டத்தில் எழுந்தருளி யிருக்கும்பொழுது "அம்பலவாணர் துணை" எனவும் திருக்குறிக்கச் சாத்திடுதலும், சாம்பிரதாயமாகப் பண்டைக்காலந் தொடங்கி இன்றுகாறும் நிகழ்ந்து வருகின்றன.

அம்பலவாண தேசிகர் உருத்திரகோடி தேசிகருக்கும், அவர் வேலப்ப தேசிகருக்கும், அவர் குமாரசுவாமி தேசிகருக்கும், அவர் பிற் குமாரசுவாமி தேசிகருக்கும், அவர் மாசிலாமணி தேசிகருக்கும் அபிஷேகஞ்செய்து, சைவசித்தாந்த சாத்திரத்தை உபதேசித்தருளினார்.

மாசிலாமணி தேசிகர் திருவாவடுதுறையிலே மாகேசுவரபூசை சிறப்புறநடாத்தி மடாலயத்தில் எழுந்தருளியிருக்குங் காலத்திலே, ஒருநாள் இரவிலே பேயும் உறங்கும் அர்த்தயாமத்திலே, தஞ்சைநகரத்து மன்னவர் பஞ்சமவேடம் பூண்டுசென்று, அம்மடாலயத்தின் புறத்தே தூரத்தேநின்று "ஓசாமீ அடியேனைப் பசிவருத்துகின்றதே" என்று பேரொலியிட்டு அழைத்தபொழுது, ஒடுக்கத்திலே சிவத்தியானத்தோடு அறிதுயிலமர்ந்த மாசிலாமணிதேசிகர் ஓலமிட்டு அழைப்பவன் நீசன் என்றும் பசியால்வருந்தி அழைக்கின்றான் என்றும், உணர்ந்து மடைப்பள்ளியிற் புகுந்து, ஒரு பாத்திரத்தில் அன்னமும் கறிமுதலியவும் எடுத்துவைத்துத் தலைவாயிற்கதவைத் திறந்து புறத்தே வந்து, தூரத்தே அப்பாத்திரத்தை வைத்துப் பசிநீங்கப் புசிக்கும்படி அருமையாகச்சொல்லி, மடாலயத்துள்ளே புகுந்து, விடிந்தபின்னர்த்

தவசிப் பிள்ளைகளை அழைப்பித்து, இராத்திரி மடைப்பள்ளி திறந்து கிடந்தமையால், சுவானம் உள்ளே பிரவேசித்துவிட்டது; ஆகையால் மடைப்பள்ளியிலுள்ள அமுதுமுதலியவற்றை வெளிப்படுத்தி முற்றுஞ் சுத்திசெய்து, புண்ணியாகவாசனம் செய்வித்தபின்பு பாகஞ்செய்யத் தொடங்கும்படி கட்டளையிட்டருளினார். அரசர் அப்பாத்திரத்தைச் சேமித்துவைத்து, தருமபுர ஆதீனஞ்சார்ந்து பேரொலியிட்டும் பிக்ஷை கேட்டவழி, பண்டாரக்கட்டிலே திருவடிச் சிந்தனையோடு சயனித்திருந்த பண்டாரசந்நிதிகள் "பிக்ஷைகேட்பவன் பஞ்சமன்போலும்" என்று திருவுளங்கொண்டு "மடாலயத்திலே நீசனுக்குப் பிக்ஷையிட மாட்டார்கள்" என்று சொல்லிப் போக்கிவிட்டார்கள். இங்ஙனம் இரவிலே நிகழ்ந்த செய்திகளை அரசர் தஞ்சைநகரஞ் சேர்ந்து அரசிருக்கை மண்டபத்தில் வீற்றிருந்து சமஸ்தரும் அறியச்செய்தனர்.

பின்பு ஒரு விசேட புண்ணியகாலம் வந்தபொழுது, மாசிலாமணி தேசிகர் காவேரிசங்கம ஸ்நாநத்துக்கு எழுந்தருளினார். அப்போது தஞ்சைநகரவேந்தரும் போந்து, காவேரி சங்கமஸ்நாநஞ்செய்து திருவெண்காடு சேர்ந்தனர். மாசிலாமணி தேசிகரும் திருத்தொண்டர் திருக்கூட்டத்துடன் ஸ்நாநஞ் செய்துகொண்டு அச்சுவேதாரணியத்துக்கு வந்தருளினார். பின்னர் ஞானதேசிகரும் அரசரும் கலந்து வசிக்குங் காலத்திலே, அரசர் ஒரு மண்டலங்காறும் பிராமணபோஜனம் பெரிதுஞ் சிறப்புறச்செய்வித்து அவ்வுயர்ச்சி அனைவர்க்கும் புலப்படும் வண்ணம் அவ்வுச்சிட்டத்தை உவர்க்கூபத்திலே போடச்செய்து, முடிவிலே தூர்வை எடுப்பித்தபின்பு அக்கிணற்றுநீரிலே புழுக்களும் உவரும் நீங்காமலிருந்தன. இதனையுணர்ந்த ஞானதேசிகர் ஒருமண்டலங்காறும் அரசர்முகமாக மாகேசுரபூசை சிறப்புற நடாத்தித் தம் மடாலயத்துள்ள உவர்க்கூபத்திலே அடியவர் பரிகலத்தைப் போடச் செய்து, இறுதியிலே அரசரையும் அழைத்து வைத்துக்கொண்டு அக்கிணற்றைத் தூர்வையெடுப்பித்தபொழுது, அதிலுள்ள உவர்நீங்கிக் கங்காஜலம்போல நறுநீர்சுரந்து பெருகியது. அரசர் "அக்கிணற்றுக்குப் பரிகலக்கிணறு" என்று நாமம் இட்டு அம்மடாலயத்துக்குச் சருவமானியநிலமும் விட்டனர். அப்பரிகலக்கிணறும், சருவமானிய நிலமும் இப்போதும் விளக்கமாயுள்ளன. ஞானதேசிகர் அம்மடாலயத்திலே நெடுங்காலம் அமர்ந்து நிட்டையில் இருந்தருளினார்.

பின்னும் அக்காலத்திலே ஆதீன சிஷ்யவர்க்கங்களிலே கல்வியினும் செல்வத்தினும் அதிகாரத்தினும் சிறந்து திருநெல்வேலியிலிருந்த மயிலேறும் பெருமாள் பிள்ளை யிடத்தே தமிழிலே தொல்காப்பிய முதலிய இலக்கண இலக்கியங்களை உணர்ந்தவரும், செப்பறைப்பதியிலிருந்த சிவப்பிராமணராகிய கனகசபாபதி சிவாசாரியரிடத்தே வடமொழியை உணர்ந்தவரும், ஆதீன ஞானதேசிகரிடத்தே சமயாபிஷேகமும் ஈசான தேசிகரென்னுஞ் சிறப்புத் திருநாமமும் சைவசித்தாந்த

சாத்திரோபதேசமும் பெற்றுத் திருநெல்வேலியில் ஆதீனத்தைச் சார்ந்த ஈசான மடாலயத்தில் இருந்தவருமாகிய சுவாமிநாத தேசிகர் அரிய இலக்கண விதிகளைத் திரட்டி இலக்கணக்கொத்தென்னும் நூலையும் தசகாரியமாகிய ஞானநூலையும் இயற்றியருளினார். அன்றியும் நன்னூலுக்கு விருத்தியுரைசெய்த சங்கரநமச்சிவாயப் புலவர் முதலாகிய மாணாக்கர்களுக்குக் கல்விகற்பித்தருளினார்.

மாசிலாமணி தேசிகர் இராமலிங்க தேசிகருக்கும், அவர் வேலப்ப தேசிகருக்கும், அவர் பின் வேலப்ப தேசிகரெனப் பெயர்பெற்ற இருவருக்கும் அபிஷேகஞ்செய்து சைவசித்தாந்த சாத்திரத்தை உபதேசித்தருளினார்.

பெரியபட்டத்தில் எழுந்தருளியிருந்த பின்வேலப்பதேசிகர் திருப்பறியலூர்ப்புராணத்தை மொழிபெயர்த்தருளினார்.

சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த பின்வேலப்பதேசிகர் பஞ்சாக்கரப்பஃறொடை யென்னும் ஞானநூலைச் செய்தருளினார்.

பின்னும் வாதுளாகமப்படி ஞானபூஜாவிதி மொழிபெயர்ப்பு, மரபட்டவணை, அநாதியட்டவணை, அனுபோகவெண்பா, வருணசிவாசாரியர்பத்ததிப்படி கிரியாபூஜாவிதி மொழிபெயர்ப்பு, முதலாயின அம்மரபில் அனுக்கிரகம்பெற்ற ஆன்றோராற் செய்தருளப்பெற்று வழங்குகின்றன.

அம்பலவாண தேசிகர் அருளிச்செய்த தசகாரியமுதலாயின பத்தும், தக்ஷிணாமூர்த்தி தேசிகர் அருளிச்செய்த தசகாரிய முதலாயின இரண்டும், சுவாமிநாத தேசிகர் அருளிச்செய்த தசகாரியம் ஒன்றும், பின்வேலப்ப தேசிகர் அருளிச்செய்த பஞ்சாக்கரப்பஃறொடை ஒன்றும் ஆகப் பதினான்கு ஞானநூல்களும் பண்டாரசாத்திரம் என ஆன்றோரால் வழங்கப்பட்டு வருகின்றன.

அவ் வேலப்ப தேசிகராகிய ஞானாசாரியர் காலத்திலே, பாண்டிவளநாட்டிலே, பொதியமலைச் சாரலிலே, பாவநாசமென்னுந் திருப்பதியைச்சார்ந்த விக்கிரமசிங்க புரத்திலே, அகத்திய மகாமுனிவரிடத்தே எழுதலைமுறையளவும் பிறைமதிபோல முறையே வளர்ந்து அருட்புலமை நிரம்பும் வண்ணம் வரம்பெற்ற பரம்பரைச் சைவவேளாளர்குலத்திலே, சிவபத்தி அடியார்பத்தியிற் சிறந்தவராய்க் கல்விச் செல்வம்போலப் பொருட்செல்வமும் ஒருங்குடையராய் இருந்த ஆனந்தக்கூத்தர் என்பவருக்கு, அவர்மனைவியாராகிய கற்பினிற்சிறந்த மயிலம்மையார் திருவயிற்றிலே ஏழாவது தலைமுறையாகத் தமிழ் நாடுசெய்த தவத்தானே ஒருவர் திருவவதாரஞ்செய்து, முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத் திருநாமம்பெற்று, ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினார்.

பின்பு முக்களாலிங்கர் ஐந்து பிராயத்திலே, பிதாமாதாக்களாலே வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்றுப் பாடசாலையில் அமர்ந்தனர். அங்ஙனம் அமரும்பொழுது, திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து சிவஸ்தல யாத்திரையாகப் புறப்பட்ட சில முனிவர்கள் விக்கிரமசிங்கபுரத்துத் திருவீதியிலே சென்றார்கள். பாடசாலையினின்றும் புறப்பட்ட முக்களாலிங்கர் அம்முனிவர்களைச் சந்தித்துத் தரிசித்து வணங்கி "சுவாமிகள் அடியேன் கிருகத்துக்கு எழுந்தருளித் திருவமுதுசெய்து பின்பு சென்றருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, அம்முனிவர்கள் ஆண்டின் இளையரும் அறிவின் முதியருமாகிய முக்களாலிங்கர் வழிபாட்டுக்கு இரங்கி, விருப்பத்தோடு உடன்பட்டனர். உடன்பட்ட முனிவர்கள் முக்களாலிங்கர் பிறகே கிருகத்துக்குப்போய், முக்களாலிங்கர் அருமைக் கருத்தை யுணர்ந்து அருந்ததியினுஞ் சிறந்த மயிலம்மையார் உபசரிக்கத் திருவமுதுசெய்து சென்றருளினார்கள். முக்களாலிங்கர் தமது கருத்தின்படி அடியார்களை உபசரித்த தாயாரைப்பற்றி,

"அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
யானந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
மானந் தவாத மயில்."

என்னுஞ் செய்யுளை யியற்றி யருளினார். புறத்தேபோயிருந்த ஆனந்தக் கூத்தர் வீட்டிற்குவந்து, நிகழ்ந்த அற்புதச்செய்திகளைக் கேள்வியுற்றுப், பேரின்பக்கடலிலே முழுகினார்.

உடனே ஆனந்தக்கூத்தர் புத்திரராகிய முக்களா லிங்கரோடு ஆதீன முனிவர்களிடத்தேபோய் வணங்கியவழிச் சத்திநிபாதமுடைய புத்திரர் பிறவிப் பெருந்துன்பக் கடலினின்றுங் கரையேறக் கருதி, அம்முனிவர்களோடு தாஞ் செல்லவேண்டு மென்னுங் குறிப்பினை யுணர்ந்தப் புத்திரரைப் பிரியச் சிறிதும் மனமில்லாதிருந்தும் தந்தையார் ஒருவாறிசைந்து வீட்டிற்குத் திரும்பிவிட்டார்.

தந்தையார் நீங்கியபின்பு, முக்களாலிங்கர் ஆதீனத்து முனிவர்களோடு வழிக்கொண்டு, மார்க்கங்களிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, சோணாட்டிலுள்ள திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து, ஆதீன பரமமுதற் குரவராகிய நமச்சிவாய மூர்த்திகளைத் தரிசித்துத் திருவருணோக்கம் பெற்றுக்கொண்டு, அப்பொழுது சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானாசாரியராகிய பின் வேலப்பதேசிகரை ஒடுக்கத்திலேபோய்த் தரிசித்துப் பேரன்போடு வணங்கினர்.

வணங்கியவர் ஞானதேசிகரிடத்தே சைவசந்நியாசமும், சிவதீக்ஷையும் சிவஞானயோகிகளென்னுந் தீக்ஷாநாமமும் பெற்று, மெய்கண்ட

சாத்திர பண்டார சாத்திரங்களைக் கேட்டருளினார். சிவஞானயோகிகள் அகத்தியமகாமுனிவர் வரத்தால் அவதரித்தருளியவராகலின், எளிதிலே வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும் முற்றொருங்குணர்ந்து, மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையராய் அமர்ந்தருளினார். வேலப்பதேசிகர் சிவஞான யோகிகளுக்கு உபதேசித்தருளிய ஞானாசாரியரென்பது,

"எவ்வெவகோட் படுபொருளு மஞ்செழுத்தி னடக்கியவற் றியல்பு காட்டி, மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை போதமுறை விளங்கத் தேற்றி யவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச் சிவபோகத் தழுத்தி நாயேன், செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்."

எனக் காஞ்சிப் புராணத்துட் கூறியவாற்றால் விளங்கும்.

சிவஞானயோகிகள், ஜமதக்கினி மகாமுனிவருடைய புத்திரரும், அகத்திய மகாமுனிவருடைய முதன்மாணாக்கரும், இடைச்சங்கப்புலவர் ஐம்பத் தொன்பதின்மருள் ஒருவருமாகிய திரணதூமாக்கினியென்னுந் தொல்காப்பிய முனிவர் அருளிச்செய்த இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு, உரையாசிரியராகிய இளம்பூரணர்செய்த உரையாகிய இளம்பூரணமும், சேனாவரையர்செய்த உரையாகிய சேனாவரையமும், நச்சினார்க்கினியர்செய்த உரையாகிய நச்சினார்க்கினியமும், எனப்படு மூன்றுரைகளினுமுள்ள ஆசங்கைகளை நீக்கித் தெளிவிக்கும்பொருட்டு, அத் தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும், முதற்சூத்திரத்திற்கும் சூத்திரவிருத்தியென்பெயர்பெற்ற பாஷ்யமும், வடமொழித் தருக்க சங்கிரக அன்னம்பட்டீயங்களின் மொழிபெயர்ப்பும், நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயப் புலவர்செய்த புத்துரையாகிய விருத்தியுரைத் திருத்தமும் செய்தருளினார். இவை மூன்றும் திராவிடமகாபாஷ்யத்திற்கு அங்கங்கள் எனப்படும்.

அன்றியும் சர்வாத்மசம்பு சிவாசாரியர் அருளிச்செய்த சத்தியரூப சித்தாந்தப் பிரகாசிகையை அவ்வாறே மொழிபெயர்த்தருளினார்.

அன்றியும் மெய்கண்டதேவர் மொழிபெயர்த்தருளிய வார்த்திகப் பொழிப்பாகிய சிவஞான போதத்திற்கு ஆசிரியர் அமைத்தருளிய மெய்ப்பொருள் விளங்கும்வண்ணம் திராவிடமகாபாஷ்யம் எனப் பெயர்பெற்ற விருத்தியுரையும், இலகு வியாக்கியானமாகிய சிற்றுரையும், அருணந்தி சிவாசாரியார் அருளிச்செய்த சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குப் பொழிப்புரையும் செய்தருளினார்.

அன்றியும் காஞ்சிப்புராணத்தின் முதற்காண்ட மொழிபெயர்ப்பும், சிவாக்கிய சோழமகாராஜா காலத்திலே கஞ்சனூரிலே அவதரித்தருளிய ஆசாரியசரணராகிய ஸ்ரீ அரதத்த சிவாசாரியர் வைணவமத கண்

டனஞ்செய்து சைவமதஸ் தாபனஞ் செய்யும்பொருட்டு, நெருப்பிலே பழுக்கக்காய்ச்சிய இருப்பு முக்காலியிலே, எழுந்தருளியிருந்து, சிவபெருமானே பரம்பொருளென இருபத்திரண்டு ஏதுக்களாலே நாட்டியருளிய சுலோகபஞ்சகத்தின் மொழிபெயர்ப்பும், ஸ்ரீ அப்பயதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ விவேகமூல சுலோகங்களின் மொழிபெயர்ப்பும் செய்தருளினர்.

அன்றியும் பெரும்பாலும் உண்மை நாயன்மார் சரித்முதலியவற்றைத் தழுவிப் பூருவார்த்தமும், அதற்கு எடுத்துக் காட்டாகத் திருவள்ளுவ நாயனார் திருக்குறள் உத்தரார்த்தமுமாகக் கொண்டு குளத்தூர்ச் சோமேசர்மீது முதுமொழிவெண்பா, யமகரூபமான திருவேகம்பரந்தாதி, திருக்ரூபமான வடதிருமுல்லைவாயிலந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, இளைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, கச்சி ஆனந்தருத்திரேசர்பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம், மார்கழிமதித் திருவாதிரை யுற்சவத்திலே தேவார முதலிய திருமுறைகள் திருக்காப்பிடப்பட்டுத் திருவெம்பாவையென்னும் திருவாசகத் திருப்பதிகம் ஒன்றுமே ஆன்மார்த்த பரார்த்த சிவபூஜா காலங்களில் ஓதப்பெற்றுவருஞ் சாம்பிரதாயத்தால் நித்த நியம மந்திரமாகத் திருத்தொண்டர் திருநாமத்தை ஓதியுய்ய வேண்டுவோர் கருத்துத் தடையுறுவண்ணந் திருத்தொண்டர் திருநாமக்கோவை, ஆதிபரமாசாரியராகிய நமச்சிவாய மூர்த்திகண்மீது மாலை முதலிய பிரபந்தங்களைச் செய்தருளினர்.

அன்றியும் மரபட்டவணை எனப் பெயர்பெற்ற திருவாவடுதுறை ஆதீன சாம்பிரதாயக் கட்டளையைத் தருமபுர ஆதீனத்தார் மறுத்தெழுதியதற்கு மறுப்பின்மறுப்பு என ஒன்று செய்தருளினர்.

அன்றியும் காஞ்சிபுரத்தில் யாத்திரையாக வந்தருளிய திருவண்ணுமலை ஆதீனத்துப் பண்டார சந்நிதிகள் சிவஞான சித்தியாரில் "என்னையிப் பவத்திற்சேரா வகையெடுத்து" என்னுஞ் செய்யுளில் "எடுத்து" என்னுஞ் சொல்லுக்குப் பொருள் என்னை என்று, தம்மாதீனத்து ஞானப்பிரகாச முநிவர் இயற்றிய சிவசமவாத உரையின் உயர்வு தொனிக்கும் வண்ணம், சிவஞான யோகிகளிடத்தே வினவுவித்த பொழுது, "எடுத்து" என்னுஞ் சொல்லுக்குச் சிவசமவாதவுரை மறுப்பு என ஒன்றும், அதன்மேற் பிரதிகண்டனம் உண்டாயவழி மேன்மறுத்த மறுப்பு குதர்க்கவுரையாளராற் போழ்பட்டவாறு "எடுத்து" என்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம் என ஒன்றும், சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாச முநிவர் இயற்றியவுரை முற்றும் போலியுரை என விளக்கச் சிவசமவாதவுரை மறுப்பு என ஒன்றும் சிவஞான யோகிகள் செய்தருளினர்.

அன்றியும் கம்பராமாயணகாவியம் ஒன்றுமே தமிழிற் சிறந்திருப்பதெனச் செருக்கொடு கழறிய காஞ்சிபுரத்து வைணவர்கள் வாயை அடைக்கக்கருதி அக்கம்பராமாயணத்து நாந்தியாகிய "நாடிய பொருள் கைகூடும்" என்னுஞ் செய்யுள் முற்றும் குற்றமே எனச் சங்கை செய்தவழி, அவ்வைணவர்கள் அச்சங்கைக்கு உத்தரஞ்சொல்ல இயலாமல் வருந்தித் தெரியாது பிதற்றினேம் எனச் சொல்லி வணங்கித் துதித்தவழி, சிவஞான யோகிகள் மகிழ்ந்து உத்தரங்கூறி, அவ்வைணவர்களை உவப்பித்தருளினர்; அச்சங்கை யுத்தரங்களை வரைந்த நூலுக்கு "கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி" என்று பெயர் வழங்கி வருகின்றது.

அன்றியும் திருவாரூர் வைத்தியநாத நாவலர் இயற்றிய இலக்கண விளக்கத்தில், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் முதலியவற்றிலுள்ள வழுக்களை வெளியிடக்கருதி இலக்கண விளக்கச் சூறாவளி என ஒன்று செய்தருளினர்.

திருநாவுக்கரசு நாயனர் கடலினின்றும் கரையேறிய திருப்பாதிரிப்புலியூர்ச் சிவாலயத்தின்கண்ணே, சில வித்துவான்களும் பிரபுக்களுங் கூடிய சபையில் நூறு பொன்னைக் கிழியாகக் கட்டிவைத்து "கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ" என்று ஈற்றடி யெடுத்துக் கொடுத்துச் செய்யுளைப் பூர்த்தி செய்பவர் இப் பொற்கிழியை யெடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னர்கள். அப்பொழுது யாத்திரையாக வந்தருளிய சிவஞான யோகிகள் ஆலயத்திற்கு எழுந்தருளுங்கால் அங்கு நிகழ்ந்த செய்தியை யுணர்ந்து, ஒரு ஏழைப்பிராமணனை நோக்கி அப்பொற்கிழியை யெடுத்துக் கொள்ளும்படி கட்டளையிட்டு,

"வரையேற விட்டமுதஞ் சேர்ந்தனிட வருந்தினைவல் வினமென்றுலு
முரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கிலென்னு
நரையேற விட்டமுத னளவனுக் கொண்டுநறும் புலிசை மேவுங்
கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ."

என்று செய்யுளைப் பேசுவதுபோலப் பூர்த்திசெய் தருளினர்.

இங்ஙனம் உலோகோபகாரமாகப் பலவுரைகளையும், பலநூல்களையும், பலகண்டனங்களையுஞ் செய்து, பலநன்மாணுக்கர்களுக்குப் போதித்து, வடமொழியினுந் தென்மொழி சிறந்ததென்னும்படி அபிவிருத்திசெய்து, தவமே திருவுருக் கொண்டாற்போலும் விளங்கிச் சிவப்பேற்றிற்குக் காரணமாகிய நிட்டையில் வீற்றிருந்தருளிய திராவிடமகாபாஷ்ய கர்த்தராகிய சிவஞான யோகிகள் திருவாவடுதுறையிலே விசுவாவசு வருஷம் சித்திரைமாதம் ஆயிலிய நக்ஷத்திரத்திலே சிவபரிபூரணதசை அடைந்தனர்.

"மன்னும் விசுவா வசுவருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னும்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்."

சிவஞான யோகிகளுக்கு மாணாக்கர்கள் இலக்கணம் சிதம்பரநாத முனிவர், காஞ்சிபுரம் சிதம்பரமுனிவர், திருத்தணிகைக் கச்சியப்பமுனிவர், காஞ்சிபுரம் முத்துக்குமாரசுவாமிதேசிகர், தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர், காஞ்சிபுரம் சரவணதேசிகர், இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை, திருமுக்கூடல் சந்திரசேகர முதலியார், கடம்பர்கோயில் ஸ்தானீகர் கலியாணசுந்தர வாத்தியார், காவாந்தண்டலம் அடைக்கலங்காத்தமுதலியார் முதலிய பன்னிருவர் உளர்.

அவருள்ளே இலக்கணம் சிதம்பரநாதமுனிவர் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணத்தை மொழிபெயர்த்தருளினர்.

காஞ்சிபுரம் சிதம்பரமுனிவர் சுப்பிரமணியர் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ், காஞ்சி காமாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் முதலியவற்றை இயற்றியருளினர்.

திருத்தணிகைக் கச்சியப்பமுனிவர் திருவானைக்காப்புராணம், பூவாளூர்ப்புராணம், பேரூர்ப்புராணம், திருத்தணிகைப்புராணம், விநாயக புராணம், காஞ்சிப்புராணத்து இரண்டாங்காண்ட மொழிபெயர்ப்புகளையும், சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ், யம்கவந்தாதி, கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடுதூது, பதிற்றுப்பத்தந்தாதி, தணிகையாற்றுப்படை, பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கரதேசிகரந்தாதி முதலியவற்றையும் இயற்றியருளினர்; தம்மாணாக்கரிற் சிறந்த கந்தப்பையர்க்குண்டான குன்மநோயை மாற்றுதற்பொருட்டுத் தணிகையாற்றுப்படை பாடியருளினது; பின்னும் பேரூரில் வசித்தபோது அரசம்பலவாணர்மீது ஒரு பிரபந்தம்பாடி மழை வருஷிக்கவும், பட்டீசர்மீது பலபதிகங்கள்பாடிப் பலருக்குக் குட்டநோய் முதலியவற்றைப் போக்கியுமருளினர்.

காஞ்சிபுரம் முத்துக்குமாரசுவாமி தேசிகர் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், திருவேகம்பர் வெண்பாவந்தாதி பதிற்றுப்பத்தந்தாதி முதலியவற்றை இயற்றியருளினர்.

தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர் துறைசைக்கோவை, கலைசைக்கோவை, கலைசைச் சிலேடைவெண்பா, சிதம்பரேசர் வண்ணம், திருக்குற்றாலச் சித்திரசபைத் திருவிருத்தம், பழநிமுருகக்கடவுள் பஞ்சரத்நமாலை, சுப்பிரமணியர் திருவிருத்தம், திருத்தணிகைத்திருவிருத்தம், திருச்சிற்றம்பல தேசிகர்மீது சிந்து, பஞ்சரத்நமாலை, அம்பலவாண தேசிகர்மீது ஆனந்தக்களிப்பு, சிவஞானயோகிகள்மீது கீர்த்தனை, செய்யுள் முதலியவற்றை இயற்றியருளினர். சுப்பிரமணியர் திருவிருத்தமும், திருத்தணிகைத் திருவிருத்தமும், முறையே குட்டரோகியும், அந்தகனுமாகிய இருவர்பொருட்டுச் செய்து கொடுத்தவளவில், அவைகளை அவ்விருவரும் முருகக்கடவுள் சந்நிதியில் ஓதிக், குட்டரோகமும், அந்தகத்தன்மையு நீங்கி உய்ந்தனர்.

காஞ்சிபுரம் சரவணதேசிகர் ஒருபாவொருபஃதுண்மை யுபதேசம், வீட்டுநெறியுண்மை, பஞ்சாக்கரவநுபூதி, உபதேசசித்தாந்தவிளக்கம், ஒருபாவொருபஃது, முத்திமுடிவு, ஆனந்த ருத்திரேசர்பதிகம், சிவஞான யோகிகள் தோத்திரம் முதலியவற்றை இயற்றியருளினர்.

இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை திருக்கழுக்குன்றக்கோவை, பர்வதவர்த்தனிமாலை முதலியவற்றை இயற்றியருளினர்.

திருமுக்கூடல் சந்திரசேகரமுதலியார் கடம்பர்கோயில் புராணம், மாலை, கலம்பகம் முதலியவற்றை இயற்றியருளினார்.

காவாந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார் மாகறலந்தாதி, இளையநாயனார்வேலூர் வெண்பாவந்தாதி, கடம்பர்கோயில் பதிற்றுப் பத்தந்தாதி முதலியவற்றை இயற்றியருளினார்.

மேற்கூறிய பின் வேலப்பதேசிகர் திருச்சிற்றம்பல தேசிகருக்கு அபிஷேகஞ்செய்து சைவசித்தாந்த சாஸ்திரத்தை உபதேசித் தருளினார்; பின்பு வடமொழிப் பயிற்சியின் வல்லுநராய்ச் சிவாகமங்களில் இரண்டிலக்ஷம் கிரந்தம்வரையுணர்ந்த உத்தமோத்தம குரவராகிய திருச்சிற்றம்பல தேசிகர் சிவக்ஷேத்திர யாத்திரையாகத் திருக்கூட்டத்துடன் செல்லும்பொழுது, மார்க்கத்திலுள்ள இராமநாதபுரத்தில் வசித்தவழி, அந்நகரத்தில் அமர்ந்த சேதுபதி யென்னும் மன்னவர்க்கு அமைச்சர் முதலாயினார் ஞானாசாரியர் எழுந்தருளி யிருத்தலைத் தெரிவித்தனர்; "அப்போது மழையில்லாது ஜனங்கள் வருந்துங்காலமாயிருந்தமையால், மழை வருஷிக்கும்படி உங்கள் குருமூர்த்திகள் செய்விப்பார்களா" என்று அரசர் வினவியதற்கு அமைச்சர் "அங்ஙனம் அநுக்கிரகஞ் செய்வார்கள்" என்று தெரிவித்து, அரசரை அழைத்துக் கொண்டுபோய் ஞானாசாரியர் திருவடிகளில் வணங்கச்செய்து அரசர் கருத்தையும் விண்ணப்பம் பண்ணினார்; அதற்கு "அவ்வண்ணமே திருநடராஜர் திருவருள்செய்வார்" என்று ஞானாசாரியர் திருவாய் மலர்ந்து, திருநடராஜர்பூஜை சிறப்புறச்செய்து அச்சந்நிதானத்திலே திருவடித் தியானத்தோடு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக்கொண் டிருந்தனர்; உடனே மேகங்கள் மழைபொழிந்து நாடுகளை வளப்படுத்தின: சேதுபதி பெரிது மகிழ்ந்து திருவாவடுதுறை ஆதீனத்துக்கே அடிமையாகிச் சருவமானியக் கிராமங்கள் விட்டுத் தம்மரசாட்சிக்குரிய அம்முகவை நகரத்தில் மடாலயஞ் சிறப்புறக் கட்டுவித்து ஆதீன பரமாசாரியராகிய ஸ்ரீபஞ்சாக்கரதேசிகர் குருபூஜை வருடந்தோறும் முன்னை நாளிலும் சிறப்பாக எந்நாளும் நடந்து வரும்படி அநுமதி செய்தனர்: அவ்வாறே இந்நாள் வரையும் நடந்து வருகின்றன.

சிற்றம்பலதேசிகர் அம்பலவாண தேசிகருக்கும், அவர் சுப்பிரமணிய தேசிகருக்கும், அவர் அம்பலவாண தேசிகருக்கும், அவர் சுப்பிரமணிய தேசிகருக்கும் அபிஷேகஞ்செய்து சைவசித்தாந்த சாஸ்திரத்தை உபதேசித்தருளியபின்பு, சுப்பிரமணிய தேசிகரிடத்தே அபிஷேகமும் சைவசித்தாந்தோபதேசமும்பெற்று, வடமொழி தென்மொழிகளிற் பாரங்கதராய், வைதிக சைவத்திருமுறை யாராய்ச்சி மிக்குடையராய், சுத்தாத்துவித சித்தாந்த மெய்கண்ட ஞானசாத்திரங்களில் வல்லுநராய், சிவஞான தான வள்ளற் பெருந்தகையராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாணதேசிகமூர்த்திகள் கட்டளையிட் டருளியபடி இவ்வரலாறு பதிப்பிக்கப் பெற்றது.

மெய்கண்டதேவர்திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருக்கைலாயபரம்பரை ஆசாரியர்கள் பரிபூரணதசை அடைந்ததலமும் திருநக்ஷத்திரமும்வருமாறு.

ஆசாரியர்கள்.	பரிபூரணமான ஸ்தலம்.	மாசம்.	நக்ஷத்திரம்.
மெய்கண்டதேவர்	திருவெண்ணெய் நல்லூர்	ஐப்பசி	சுவாதி
அருணந்திசிவாசாரியர்	திருத்துறையூர்	புரட்டாசி	பூரம்
மறைஞானசம்பந்தசிவாசாரியர்	திருக்களாஞ்சேரி	ஆவணி	உத்திரம்
உமாபதிசிவாசாரியர்	கொற்றவன்குடி	சித்திரை	அஸ்தம்
அருணமச்சிவாயதேசிகர்	ஷை	மார்கழி	திருவாதிரை
௧. நமச்சிவாயதேசிகர்	திருவாவடுதுறை	தை	அசுவதி
துவிதீய. சிவப்பிரகாசதேசிகர்	பட்டீச்சுரத்துக் கடுத்தவடதளி	ஆனி	பரணி
௨. மறைஞானதேசிகர்	திருவாவடுதுறை	தை	சுவாதி
௩. அம்பலவாணதேசிகர்	ஷை	சித்திரை	அவிட்டம்
துவிதீய. தக்ஷிணாமூர்த்திதேசிகர்	ஷை	மாசி	சித்திரை
௪. உருத்திரகோடிதேசிகர்	மதுரை	கார்த்திகை	அநுஷம்
௫. வேலப்பதேசிகர்	திருப்பூவணம்	ஷை	உத்திராடம்
௬. குமாரசுவாமிதேசிகர்	சுசீந்திரம்	ஷை	ஷை
௭. பிற்குமாரசுவாமிதேசிகர்	ஷை	ஆவணி	உத்திரட்டாதி
துவிதீய. முத்தம்பலவாணதேசிகர்	திருக்குற்றாலம்	மாசி	சித்திரை
௮. மாசிலாமணிதேசிகர்	திருவெண்காடு	சித்திரை	உரோகிணி
துவிதீய. சிவக்கொழுந்துதேசிகர்	திருவாவடுதுறை	மார்கழி	மூலம்
திரிதீய. சுவாமிநாததேசிகர்	திருவண்ணாமலை	கார்த்திகை	உத்திரம்
௯. இராமலிங்கதேசிகர்	திருவாவடுதுறை	ஷை	அநுஷம்
௧0. வேலப்பதேசிகர்	சங்கரநாயனார் கோயில்	புரட்டாசி	மூலம்
௧௧. பின்வேலப்பதேசிகர்	திருப்பெருந்துறை	வைகாசி	பூரட்டாதி
துவிதீய. வேலப்பதேசிகர்	பேரூர்	ஆனி	பரணி
௧௨. திருச்சிற்றம்பலதேசிகர்	திருவாவடுதுறை	ஷை	ஷை
௧௩. அம்பலவாணதேசிகர்	ஷை	மார்கழி	கேட்டை
௧௪. சுப்பிரமணியதேசிகர்	ஷை	கார்த்திகை	கார்த்திகை
துவிதீய. கனகசபாபதிதேசிகர்	தனிகை	தை	ஷை
ஷை. சுப்பிரமணியதேசிகர்	திருவாவடுதுறை	மாசி	அவிட்டம்
௧௫. அம்பலவாணதேசிகர்	ஷை	ஆனி	பூரம்
௧௬. சுப்பிரமணியதேசிகர்	ஷை	மார்கழி	சுவாதி
துவிதீய நமச்சிவாயதேசிகர்	தனிகை	தை	கார்த்திகை

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருமுறைத்திரட்டு

ஸ்ரீ தேவாரம்

௧. திருவேகம்பம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

௧. பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்பொடிப்பூசுமார்பின்விரிநூலொருபால்பொருந்தக்
கந்தமல்குகுழலியோடுங்கடிபொழிற்கச்சிதன்னுள்
அந்தமில்குணத்தாரவர்போற்றவணங்கினொடாடல்புரி
எந்தைமேவியவேகம்பந்தொழுதேத்தவிடர்கெடுமே. ௧

வரந்திகழுமவுணர்மாநகர்மூன்றுடன்மாய்ந்தவியச்
சரந்துரந்தெரிசெய்ததாழ்சடைச்சங்கரன்மேயவிடம்
குருந்தமல்லிகைகோங்குமாதவிநல்லகுராமரவம்
திருந்துபைம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. ௨

வண்ணவெண்பொடிப்பூசுமார்பின்வரியரவம்புனைந்து
பெண்ணமர்ந்தெரியாடல்பேணியபிஞ்ஞகன்மேயவிடம்
விண்ணமர்நெடுமாடமோங்கிவிளங்கியகச்சிதன்னுள்
திண்ணமாம்பொழில்சூழ்ந்தவேகம்பஞ்சேரவிடர்கெடுமே. ௩

தோலுநூலுந்துதைந்தவரைமார்பிற்சுடலைவெண்ணீறணிந்து
காலன்மாள்வுறக்காலாற்காய்ந்தகடவுள்கருதுமிடம்
மாலைவெண்மதிதோயுமாமதிற்கச்சிமாநகருள்
ஏலநாறியசோலைசூழேகம்பமேத்தவிடர்கெடுமே. ௪

தோடணிமலர்க்கொன்றைசேர்சடைத்தூமதியம்புனைந்து
பாடனன்மறையாகப்பல்கணப்பேய்களவைசூழ
வாடல்வெண்டலையோடனலேந்திமகிழ்ந்துடனாடல்புரி
சேடர்சேர்கலிக்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே.

சாகம்பொன்வரையாகத்தானவர்மும்மதில்சாயவெய்து
ஆகம்பெண்ணொருபாகமாகவரவொடுநூலணிந்து
மாகந்தோய்மணிமாடமாமதிற்கச்சிமாநகருள்
ஏகம்பத்துறையீசன்சேவடியேத்தவிடர்கெடுமே.

வாணிலாமதிபுல்குசெஞ்சடைவாளரவம்மணிந்து
நாணிடத்தினில்வாழ்க்கைபேணிநகுதலையிற்பலிதேர்ந்
தேணிலாவரக்கன்றனீண்முடிபத்துமிறுத்தவனூர்
சேணுலாம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. ௮

பிரமனுந்திருமாலுங்கைத்தொழப்பேரழலாயபெம்மான்
அரவஞ்சேர்சடையந்தண்ணனணங்கினொடமருமிடம்
கரவில்வண்கையினார்கள்வாழ்கலிக்கச்சிமாநகருள்
மரவஞ்சூழ்பொழிலேகம்பந்தொழவல்வினைமாய்ந்தறுமே. ௯

குண்டுபட்டமணாயவரொடுங்கூறைதம்மெய்போர்க்கும்
மிண்டர்கட்டியகட்டுரையவைகொண்டுவிரும்பேன்மின்
விண்டவர்புரமூன்றும்வெங்கணையொன்றினாலவியக்
கண்டவன்கலிக்கச்சியேகம்பங்காணவிடர்கெடுமே. ௧௦

ஏரினார்பொழில்சூழ்ந்தகச்சியேகம்பமேயவனைக்
காரினார்மணிமாடமோங்குகழுமலநன்னகருள்
பாரினார்தமிழ்ஞானசம்பந்தன்பரவியபத்தும்வல்லார்
சீரினார்புகழோங்கிவிண்ணவரோடுஞ்சேர்பவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

௨. பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறையானைமாசிலாப்புன்சடைமல்குவெண்
பிறையானைப்பெண்ணொடாணாகியபெம்மானை
இறையானையேர்கொள்கச்சித்திருவேகம்பத்
துறைவானையல்லதுள்காதெனதுள்ளமே. ௧

நொச்சியேவன்னிகொன்றைமதிகூவிளம்
உச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பமேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமினும்மேல்வினைநையுமே. ௨

பாராருமுழவமொந்தைகுழல்யாழொலி
சீராலேபாடலாடல்சிதைவில்லதோர்
ஏரார்பூங்கச்சியேகம்பனையெம்மானைச்
சேராதாரின்பமாயந்நெறிசேராரே. ௩

குன்றேய்க்குநெடுவெண்மாடக்கொடிகூடிப்போய்
மின்றேய்க்குமுகில்கடோயும்வியன்கச்சியுள்
மன்றேய்க்குமல்குசீரான்மலியேகம்பம்
சென்றேய்க்குஞ்சிந்தையார்மேல்வினைசேராவே. ௪

சடையானைத்தலைகையேந்திப்பலிதருவார்தம்
கடையேபோய்மூன்றுங்கொண்டான்கலிக்கச்சியுள்
புடையேபொன்மலருங்கம்பைக்கரையேகம்பம்
உடையானையல்லதுள்காதெனதுள்ளமே. ௫

மழுவாளோடெழில்கொள்சூலப்படைவல்லார்தம்
கெழுவாளோரிமையாருச்சியுமையாள்கங்கை
வழுவாமேமல்குசீரால்வளரேகம்பம்
தொழுவாரேவிழுமியார்மேல்வினைதுன்னாவே. ௬

விண்ணுளார்மறைகள்வேதம்விரித்தோதுவார்
கண்ணுளார்கழலின்வெல்வார்கரிகாலனை
நண்ணுவாரெழில்கொள்கச்சிநகரேகம்பத்
தண்ணலாராடுகின்றவலங்காரமே. ௭

தூயானைத்தூயவாயம்மறையோதிய
வாயானைவாளரக்கன்வலிவாட்டிய
தீயானைத்தீதில்கச்சித்திருவேகம்பம்
மேயானைமேவுவாரென்றலைமேலாரே. ௮

நாகம்பூணேறதேறனறுங்கொன்றைத்தார்
பாகம்பெண்பலியுமேற்பர்மறைபாடுவர்
ஏகம்பமேவியாடுமிறையிருவர்க்கும்
மாகம்பமறியும்வண்ணத்தவனல்லனே. ௯

போதியார்பிண்டியாரென்றிவர்பொய்ந்நூலை
வாதியாவம்மினம்மாவெனுங்கச்சியுள்
ஆதியார்மேவியாடுந்திருவேகம்பம்
நீதியாற்றொழுமினும்மேல்வினைநில்லாவே. ௧௦

அந்தண்பூங்கச்சியேகம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கலிக்கோவையால்
சந்தமேபாடவல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

௩. திருவிருக்குக்குறள். பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித்
திருவேகம்பத்
தொருவாவென்ன
மருவாவினையே. ௧

மதியார்கச்சி
நதியேகம்பம்
விதியாலேத்தப்
பதியாவாரே. ௨

கலியார்கச்சி
மலியேகம்பம்
பலியாற்போற்ற
நலியாவினையே. ௩

வரமார்கச்சிப்
புரமேகம்பம்
பரவாவேத்த
விரவாவினையே. ௪

படமார்கச்சி
இடமேகம்பத்
துடையாயென்ன
அடையாவினையே. ௫

நலமார்கச்சி
நிலவேகம்பம்
குலவாவேத்தக்
கலவாவினையே.

கரியின்னுரியன்
திருவேகம்பன்
பெரியபுரமூன்
றெரிசெய்தானே. ௭

இலங்கையரசைத்
துலங்கவூன்றும்
நலங்கொள்கம்பன்
இலங்குசரணே. ௮

மறையோனரியும்
அறியாவனலன்
நெறியேகம்பம்
குறியாற்றொழுமே. ௯

பரியாத்தேரர்
நெறியில்கச்சிச்
செறிகொள்கம்பம்
குறுகுவோமே. ௧௦

கொச்சைவேந்தன் - கச்சிக்கம்பம்
மெச்சுஞ்சொல்லை - நச்சும்புகழே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

---

௩. திருவியமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனே பாவைதன்னுருமேலொருபாகனே
தூயவானவர்வேதத்துவனியே சோதிமாலெரிவேதத்துவனியே
ஆயுநன்பொருணுண்பொருளாதியே யாலநீழலரும்பொருளாதியே
காயவின்மதன்பட்டதுகம்பமே கண்ணுதற்பரமற்கிடங்கம்பமே.

சடையணிந்ததும்வெண்டலைமாலையே தம்முடம்பிலும்வெண்டலைமாலையே
படையிலங்கையிற்சூலமதென்பதே பரந்திலங்கையிற்சூலமதென்பதே
புடைபரப்பனபூதகணங்களே போற்றிசைப்பனபூதகணங்களே
கடைகடோறுமிரப்பதுமிச்சையே கம்பமேவியிருப்பதுமிச்சையே. ௨

வெள்ளெருக்கொடுதும்பைமிலைச்சியே வேறுமுன்செலத்தும்பைமிலைச்சியே
அள்ளிநீறதுபூசுவதாகமே யானமாசுணமூசுவதாகமே
புள்ளியாடையுடுப்பதுகத்துமே போனவூழியுடுப்பதுகத்துமே
கள்ளுலாமலர்க்கம்பமிருப்பதே காஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. ௩

முற்றலாமையணிந்தமுதல்வரே மூரியாமையணிந்தமுதல்வரே
பற்றிவாளரவாட்டும்பரிசரே பாலுநெய்யுகந்தாட்டும்பரிசரே
வற்றலோடுகலம்பலிதேர்வதே வானினோடுகலம்பலிதேர்வதே
கற்றிலாமனங்கம்பமிருப்பதே காஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. ௪

வேடனாகிவிசயற்கருளியே வேலைநஞ்சமிசையற்கருளியே
ஆடுபாம்பரையார்த்ததுடையதே யஞ்சுபூதமுமார்த்ததுடையதே
கோடுவான்மதிக்கண்ணியழகிதே குற்றமின்மதிக்கண்ணியழகிதே
காடுவாழ்பதியாவதுமும்மதே கம்பமாபதியாவதுமும்மதே. ௫

இரும்புகைக்கொடிதங்கழல்கையதே யிமயமாமகடங்கழல்கையதே
அரும்புமொய்த்தமலர்ப்பொறைதாங்கியே யாழியான்றன்மலர்ப்பொறைதாங்கியே
பெரும்பகனடமாடுதல்செய்துமே பேதைமார்மனம்வாடுதல்செய்துமே
கரும்புமொய்த்தெழுகம்பமிருப்பதே காஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. ௬

முதிரமங்கைதவஞ்செய்தகாலமேமுன்புமங்கைதவஞ்செய்தகாலமே
வெதிர்களோடகில்சந்தமுருட்டியேவேழமோடகில்சந்தமுருட்டியே
அதிரவாறுவரத்தழுவத்தொடேயானையாடுவரத்தழுவத்தொடே
கதிர்கொள்பூண்முலைக்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே.

பண்டரக்கனெடுத்தபலத்தையேபாய்ந்தரக்கனெடுத்தபலத்தையே
கொண்டரக்கியதுங்கால்விரலையேகோளரக்கியதுங்கால்விரலையே
உண்டுழன்றதுமுண்டத்தலையிலேயுடுபதிக்கிடமுண்டத்தலையிலே
கண்டநஞ்சமடக்கினைகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. ௮

தூணியானசுடர்விடுசோதியேசுத்தமானசுடர்விடுசோதியே
பேணியோடுபிரமப்பறவையேபித்தனைபிரமப்பறவையே
சேணினோடுகீழூழிதிரிந்துமேசித்தமோடுகீழூழிதிரிந்துமே
காணநின்றனருற்றதுகம்பமேகடவுணீயிடமுற்றதுகம்பமே. ௯

ஓருடம்பினையீருருவாகவேயுன்பொருட்டிறமீருருவாகவே
ஆருமெய்தற்கரிதுபெரிதுமேயாற்றவெய்தற்கரிதுபெரிதுமே
தேரரும்மரியாதுதிசைப்பரேசித்தமும்மறியாதுதிசைப்பரே
கார்நிறத்தழுணர்க்கொருகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. ௧௦

கந்தமார்பொழில்சூழ்தருகம்பமேகாதல்செய்பவர்தீர்த்திடுகம்பமே
புந்திசெய்துவிரும்பிப்புகலியேபூசுரன்றன்விரும்பிப்புகலியே
அந்தமில்பொருளாயினகொண்டுமேயண்ணலின்பொருளாயினகொண்டுமே
பர் "னின்னியல்பாடியபத்துமேபாடவல்லவராயினபத்துமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

௪. பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
அரவாடச்சடைதாழவங்கையினிலனலேந்தி
இரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. ௧

தேனோக்குங்கிளிமழலையுமைகேள்வன்செழும்பவளம்
தானோக்குந்திருமேனிதழலுருவாஞ்சங்கரனை
வானோக்கும்வளர்மதிசேர்சடையானைவானோர்க்கும்
ஏனோர்க்கும்பெருமானையென்மனத்தேவைத்தேனே ௨

கைப்போதுமலர்தூவிக்காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத்தொழநின்றமுதல்வனை
அப்போதுமலர்தூவியைம்புலனுமகத்தடக்கி
எப்போதுமினியானையென்மனத்தேவைத்தேனே. ௩

அண்டமாயாதியாயருமறையோடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கொர்பெய்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தாமலர்தூவிச்சொன்மாலைபுனைகின்ற
இண்டைசேர்சடையானையென்மனத்தேவைத்தேனே.

ஆறேறுசடையானையாயிரம்பேரம்மானைப்
பாறேறுபடுதலையிற்பலிகொள்ளும்பரம்பரனை
நீறேறுதிருமேனிநின்மலனைநெடுந்தூவி
ஏறேறும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. ௫

தேசனைத்தேசங்கடொழநின்றதிருமாலால்
பூசனைப்பூசனைகளுகப்பானைப்பூவின்கண்
வாசனைமலைநிலநீர்தீவளியாகாசமாம்
ஈசனையெம்மானையென்மனத்தேவைத்தேனே. ௬

நல்லானைநல்லானநான்மறையோடாறங்கம்
வல்லானைவல்லார்கண்மனத்துறையுமைந்தனைச்
சொல்லானைச்சொல்லார்ந்தபொருளானைத்துகளேதும்
இல்லானையெம்மானையென்மனத்தேவைத்தேனே. ௭

விரித்தானைநால்வர்க்குவெவ்வேறுவேதங்கள்
புரித்தானைப்பதஞ்சந்திப்பொருளுருவாம்புண்ணியனைத்
தரித்தானைக்கங்கைநீர்தாழ்சடைமேன்மதின்மூன்றும்
எரித்தானையெம்மானையென்மனத்தேவைத்தேனே. ௮

ஆகம்பத்தரவணையானயனறிதற்கரியானைப்
பாகம்பெண்ணாண்பாகமாய்நின்றபசுபதியை
மாகம்பமறையோதுமிறையானைமதிற்கச்சி
ஏகம்பமேயானையென்மனத்தேவைத்தேனே. ௯

அடுத்தானையுரித்தானையருச்சுனற்குப்பாசுபதம்
கொடுத்தானைக்குலவரையேசிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச்சுனைமல்குகயிலாயம்
எடுத்தானைத்தடுத்தானையென்மனத்தேவைத்தேனே. ௰

திருச்சிற்றம்பலம்.

௪. திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநகரமூன்றுமெரியுணவெருவநோக்கும்
அம்பனையமுதையாற்றையணிபொழிற்கச்சியுள்ளே
கம்பனைக்கதிர்வெண்டிங்கட்செஞ்சடைக்கடவுடன்னைச்
செம்பொனைப்பவளத்தூணைச்சிந்தியாவெழுகின்றேனே. ௧

ஒருமுழமுள்ளகுட்டமொன்பதுதுளையுடைத்தாய்
அரைமுழமதனகலமதனில்வாழ்முதலையைந்து
பெருமுழைவாய்தல்பற்றிக்கிடந்துநான்பிதற்றுகின்றேன்
கருமுகிறவழுமாடக்கச்சியேகம்பனீரே. ௨

மலையினார்மகளோர்பாகமைந்தனார்மழுவொன்றேந்திச்
சிலையினான்மதில்கண்மூன்றுந்தீயெழச்செற்றசெல்வர்
இலையினார்சூலமேந்தியேகம்பமேவினாரைத்
தலையினால்வணங்கவல்லார்தலைவர்க்குந்தலைவர்தாமே. ௩

பூத்தபொற்கொன்றைமாலைபுரிசடைக்கணிந்தசெல்வர்
தீர்த்தமாங்கங்கையாளைத்திருமுடிதிகழவைத்து
ஏத்துவாரேத்தநின்றவேகம்பமேவினாரை
வாழ்த்துமாறறியமாட்டேன்மால்கொடுமயங்கினேனே. ௪

மையினார்மலர்நெடுங்கண்மங்கையோர்பங்கராகிக்
கையிலோர்கபாலமேந்திக்கடைதொறும்பலிகொள்வார்தாம்
எய்வதோரேனமோட்டியேகம்பமேவினாரைக்
கையினாற்றொழவல்லார்க்குக்கடுவினைகளையலாமே. ௫

தருவினைமருவுங்கங்கைதங்கியசடையனெங்கள்
அருவினையகலநல்குமண்ணலையமரர்போற்றும்
திருவினைத்திருவேகம்பஞ்செப்பிடவுறையவல்ல
உருவினைவுருகியாங்கேயுள்ளத்தாலுகக்கின்றேனே. ௬

கொண்டதோர்கோலமாகிக்கோலக்காவுடையகூத்தன்
உண்டதோர்நஞ்சமாகிலுலகெலாமுய்யவுண்டான்
எண்டிசையோருமேத்தநின்றவேகம்பன்றன்னைக்
கண்டுநானடிமைசெய்வான்கருதியேதிரிகின்றேனே. ௭

பட்டுடையரவினோடுபனிமதியதனைச்சூடிக்
கட்டுடையுரிவைமூடிக்கண்டவரஞ்சவம்ம
இட்டுடைக்கச்சிதன்னுளேகம்பமேவினான்றன்
நட்டுடையாடல்காணஞாலந்தானுய்ந்தவாறே. ௮

பொன்றிகழ்கொன்றைமாலைபொருந்தியநெடுந்தண்மார்பர்
நன்றியிற்புகுந்தெனுள்ளமெள்ளவேநவிலநின்று
குன்றியிலடுத்தமேனிக்குவளையங்கண்டரெம்மை
இன்றுயில்போதுகண்டாரினியரேகம்பனாரே. ௯

துருத்தியார்பழனத்துள்ளார்தொண்டர்கள்பலருமேத்த
அருத்தியாலன்புசெய்வாரவரவர்க்கருள்கள்செய்தே
எருத்தினையிசையவேறியேகம்பமேவினார்க்கு
வருத்திநின்றடிமைசெய்வார்வல்வினைமாயுமன்றே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

---

௪. திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஓதுவித்தாய்முன்னறவுரைகாட்டியமணரொடே
காதுவித்தாய்கட்டநோய்பிணிதீர்த்தாய்கலந்தருளிப்
போதுவித்தாய்நின்பணிபிழைக்கிற்புளியம்வளாரால்
மோதுவிப்பாயுகப்பாய்முனிவாய்கச்சியேகம்பனே.

எத்தைக்கொண்டெத்தகையேழையமணொடிசைவித்தெனை
கொத்தைக்குமூங்கர்வழிகாட்டுவித்தென்னைக்கோகுசெய்தாய்
முத்திற்றிரளும்பளிங்கினிற்சோதியுமொப்பவளத்
தொத்தினையேய்க்கும்படியாய்பொழிற்கச்சியேகம்பனே. ௨

மெய்யம்புகோத்தவிசையனொடன்றொருவேடுவனாய்ப்
பொய்யம்பெய்தாவமருளிச்செய்தாய்புரமூன்றெரியக்
கையம்பெய்தாய்நின்கழலடிபோற்றாக்கயவர்நெஞ்சில்
குய்யம்பெய்தாய்கொடிமாமதில்சூழ்கச்சியேகம்பனே. ௩

குறிக்கொண்டிருந்துசெந்தாமரையாயிரம்வைகல்வைகல்
மறிப்படவிண்டைபுனைகின்றமாலைநிறையழிப்பான்
கறைக்கண்டநீயொருபூக்குறைவித்துக்கண்சூல்விப்பதே
பிறைத்துண்டவார்சடையாய்பெருங்காஞ்சியெம்பிஞ்ஞகனே. ௪

உரைக்குங்கழிந்திங்குணர்வரியானுள்குவார்வினையைக்
கரைக்குமெனக்கைதொழுவதல்லாற்கதிரோர்களெல்லாம்
விரைக்கொண்மலரவன்மாலெண்வசுக்களேகாதசர்கள்
இரைக்குமமிர்தர்க்கறியவொண்ணானெங்களேகம்பனே. ௫

கருவுற்றநாண்முதலாகவுன்பாதமேகாண்பதற்கு
உருகிற்றெனுள்ளமுநானுங்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூராதிருவாலவாயாதிருவாரூரா
ஒருபற்றிலாமையுங்கண்டிரங்காய்கச்சியேகம்பனே. ௬

அரியயனிந்திரன்சந்திராதித்தரமரரெல்லாம்
உரியநின்கொற்றைக்கடைத்தலையாருணங்காக்கிடந்தார்
புரிதருபுன்சடைப்போகமுனிவர்புலம்புகின்றார்
எரிதருசெஞ்சடையேகம்பவென்னோதிருக்குறிப்பே. ௭

பாம்பரைச்சேர்த்திப்படருஞ்சடைமுடிப்பால்வண்ணனே
கூம்பலைச்செய்தகரதலத்தன்பர்கள்கூடிப்பன்னாள்
சாம்பரைப்பூசித்தரையிற்புரண்டுநின்றாள்சரணென்
றேம்பலிப்பார்கட்கிரங்குகண்டாய்கச்சியேகம்பனே. ௮

என்றுகொண்டாயென்னையெம்பெருமானினியல்லமென்னில்
சான்றுகண்டாயிவ்வுலகமெல்லாந்தனியேனென்றென்னை
ஊன்றிநின்றாரைவர்க்கொற்றிவைத்தாய்பின்னையொற்றியெல்லாம்
சோன்றுகொண்டாய்கச்சியேகம்பமேயசுடர்வண்ணனே. ௯

உந்திநின்றாருன்றனோலக்கச்சூளைகள்வாய்தல்பற்றித்
துன்றிநின்றார்தொல்லைவானவரீட்டம்பணியறிவான்
வந்துநின்றாரயனுந்திருமாலுமதிற்கச்சியாய்
இந்தநின்றோமினியெங்ஙனமோவந்திறைஞ்சுவதே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

ரு. திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்டுசெய்தபழவினையின்பயன்
கண்டுங்கண்டுங்களித்திகாணெஞ்சமே
வண்டுலாமலர்ச்செஞ்சடையேகம்பன்
தொண்டனாய்த்திரியாய்துயர்தீரவே. க

நச்சிநாளுநயந்தடியார்தொழ
இச்சையாலுமைநங்கைவழிபடக்
கொச்சையார்குறுகார்செறுதீம்பொழிற்
கச்சியேகம்பமேழை தொழுமினே. உ

ஊனிலாவியியங்கியுலகெலாம்
தானுலாவியதன்மையராகிலும்
வானுலாவியபாணிபிறங்கவெம்
கானிலாடுவர்கச்சியேகம்பரே. ௩

இமையாமுக்கணரென்னெஞ்சத்துள்ளவர்
தமையாரும்மறிவொண்ணாத்தகைமையர்
இமையோரேத்தவிருந்தவனேகம்பன்
நமையாளும்மவனைத்தொழுமின்களே. ௪

மருந்தினோடுநற்சுற்றமுமக்களும்
பொருந்திநின்றெனக்காயவெம்புண்ணியன்
கருந்தடங்கண்ணினாளுமைகைதொழ
இருந்தவன்கச்சியேகம்பத்தெந்தையே. ரு

பொருளினோடுநற்சுற்றமும்பற்றிலர்க்
கருளுநன்மைதந்தாயவரும்பொருள்
சுருள்கொள்செஞ்சடையான்கச்சியேகம்பம்
இருள்கெடச்சென்றுகைதொழுதேத்துமே. ௬

மூக்குவாய்செவிகண்ணுடலாகிவந்
தாக்குமைவர்தமாப்பையவிழ்த்தருள்
நோக்குவானைமைநோய்வினைவாராமே
காக்குநாயகன்கச்சியேகம்பனே. ௭

பண்ணிலோசைபழத்தினிலின்சுவை
பெண்ணொடாணென்றுபேசற்கரியவன்
வண்ணமில்லிவடிவுவேறாயவன்
கண்ணிலுண்மணிகச்சியேகம்பனே. ௮

திருவினாயக[illegible]ம்மலர்மேலயன்
வெருவநீண்டவிளங்கொளிச்சோதியான்
ஒருவனாயுணர்வாயுணர்வல்லதோர்
கருவனாயகன்கச்சியேகம்பனே. ௯

இடுகுநுண்ணிடையேந்திளமென்முலை
வடிவின்மாதர்திறமனம்வையன்மின்
பொடிகொண்மேனியன்பூம்பொழிற்கச்சியுள்
அடிகளெம்மையருந்துயர்தீர்ப்பரே. க0

இலங்கைவேந்தனிராவணன்சென்றுதன்
விலங்கலையெடுக்கவ்விரலூன்றலும்
கலங்கிக்கச்சியேகம்பவோவென்றலும்
நலங்கொள்செலவளித்தானெங்கணாதனே. கக

திருச்சிற்றம்பலம்.

ரு. திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூமேலானும்பூமகள்கேள்வனும்
நாமேதேவரெனாமைநடுக்குறத்
தீமேவும்முருவாதிருவேகம்பா
ஆமோவல்லற்படவடியோங்களே. க

அருந்திறலமரரயன்மாலொடு
திருந்தநின்றுவழிபடத்தேவியோ
டிருந்தவன்னெழிலார்கச்சியேகம்பம்
பொருந்தச்சென்றுபுடைப்பட்டெழுதுமே. உ

கறைகொள்கண்டத்தெண்டோளிறைமுக்கணன்
மறைகொணாவினன்வானவர்க்காதியான்
உறையும்பூம்பொழில்சூழ்கச்சியேகம்பம்
முறைமையாற்சென்றுமுந்தித்தொழுதுமே. ங

பொறிப்புலன்களைப்போக்கறுத்துள்ளத்தை
நெறிப்படுத்துநினைந்தவர்சிந்தையுள்
அறிப்புறும்மமுதாயவனேகம்பம்
குறிப்பினாற்சென்றுகூடித்தொழுதுமே. ச

சிந்தையுட்சிவமாய்நின்றசெம்மையோ
டந்தியாயனலாய்ப்புனல்வானமாய்ப்
புந்தியாய்ப்புகுந்துள்ளநிறைந்தவெம்
எந்தையேகம்பமேத்தித்தொழுமினே. ரு

சாக்கியத்தொடுமற்றுஞ்சமண்படும்
பாக்கியமிலார்பாடுசெலாதுறப்
பூக்கொள்சேவடியான்கச்சியேகம்பம்
நாக்கொடேத்திநயந்துதொழுதுமே. சா

மூப்பினோடுமுனிவுறுத்தெந்தமை
ஆர்ப்பதன்முன்னணியமரர்க்கிறை
காப்பதாயகடிபொழிலேகம்பம்
சேர்ப்பதாகநாஞ்சென்றடைந்துய்துமே. எ

ஆலுமாமயிற்சாயனல்லாரொடும்
சாலநீயுறுமாறவிர்நெஞ்சமே
நீலமாமிடற்றண்ணலேகம்பனார்
கோலமாமலர்ப்பாதமேகும்பிடே. ௮

பொய்யனைத்தையும்விட்டவர்புந்தியுள்
மெய்யனைச்சுடர்வெண்மழுவேந்திய
கையனைக்கச்சியேகம்பமேவிய
ஐயனைத்தொழுவார்க்கில்லையல்லலே. ௯

அரக்கன்றன்வலியுன்னிக்கயிலையை
நெருக்கிச்சென்றெடுத்தான்முடிதோணெரித்
திரக்கவின்னிசைகேட்டவனேகம்பம்
தருக்கதாகநாஞ்சார்ந்துதொழுதுமே. ௧0

திருச்சிற்றம்பலம்.

௬. திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றுவன்காண்கூற்றுவனைக்குமைத்தகோன்காண்
குவலையன்காண்குவலயத்தினீரானான்காண்
காற்றவன்காண்கனலவன்காண்கலிக்குமின்காண்
கனபவளச்செம்மேனிகலந்தவெள்ளை
நீற்றவன்காணிலாவூருஞ்சென்னியான்கா
ணிறையார்ந்தபுனற்கங்கைநிமிர்சடைமேல்
ஏற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௧

பரந்தவன்காண்பல்லுயிர்களாகியெங்கும்
பணிந்தெழுவார்பாவமும்வினையும்போகத்
துரந்தவன்காண்டுமேலரங்கண்ணியான்காண்
டோற்றநிலையிறுதிப்பொருளாய்வந்த
மருந்தவன்காண்வையங்கள்பொறைதீர்ப்பான்காண்
மலர்தூவிநினைந்தெழுவாருள்ளநீங்கா
திருந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௨

நீற்றவன்காணீராகித்தீயானான்கா
ணிறைமழுவுந்தமருகமுமெரியுங்கையில்
தோற்றவன்காண்டோற்றக்கேடில்லாதான்காண்
டுணையிலிகாண்டுணையென்றுதொழுவாருள்ளம்
போற்றவன்காண்புகழ்கடைமைப்படைத்தான்றான்காண்
பொறியரவும்விரிசடைமேற்புனலுங்கங்கை
ஏற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௩

தாயவன்காணுலகுக்குத்தன்னொப்பில்லாத்
தத்துவன்காண்மலைமங்கைபங்காவென்பார்
வாயவன்காண்வரும்பிறவிநோய்தீர்ப்பான்காண்
வானவர்க்குந்தானவர்க்குமண்ணுளோர்க்கும்

சேயவன்காணினைவார்க்குச்சித்தமாகத்
திருவடியேயுள்கிநினைந்தெழுவாருள்ளாம்
ஏயவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௪

அடுத்தானையுரித்தான்காண். ௫

அழித்தவன்காணெயின்மூன்றுமயில்வாயம்பா
லையாறுமிடைமருதுமாள்வான்றான்காண்
பழித்தவன்காணடையாரையடைவார்தங்கள்
பற்றவன்காண்புற்றரவநாணினான்காண்
சுழித்தவன்காண்முடிக்கங்கையடியேபோற்றுந்
தூயமாமுனிவர்க்காப்பார்மேனிற்க
இழித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௬

அசைந்தவன்காணடமாடிப்பாடல்பேணி
யழல்வண்ணத்தில்லடியுமுடியுந்தேடப்
பசைந்தவன்காண்பேய்க்கணங்கள்பரவியேத்தும்
பான்மையன்காண்பரவிநினைந்தெழுவார்தம்பால்
கசிந்தவன்காண்கரியினுரிபோர்த்தான்றான்காண்
கடல்விடமுண்டமரர்க்கமுதமீய
இசைந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௭

முடித்தவன்காண்வன்கூற்றைச்சீற்றத்தீயால்
வலியார்தம்புரமூன்றும்வேவச்சாபம்
பிடித்தவன்காண்பிஞ்ஞகனும்வேடத்தான்காண்
பிணைபல்வெறிகமழ்கொன்றையரவுசென்னி
முடித்தவன்காண்மூவிலைநல்வேலினான்காண்
முழங்கியுருமெனத்தோன்றுமழையாய்மின்னி
இடித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௮

வருந்தான்காண்மனமுருகிநினையாதார்க்கு
வஞ்சகன்காணஞ்செழுத்துநினைவார்க்கென்றும்
மருந்தவன்காண்வான்பிணிகடீரும்வண்ணம்
வானகமுமண்ணகமுமற்றுமாகிப்
பரந்தவன்காண்படர்சடையெட்டுடையான்றான்காண்
பங்கயத்தோன்றன்சிரத்தையேந்தியூரூர்
இரந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௯

வெம்மானவுழுவையதளுரிபோர்த்தான்காண்
வேதத்தின்பொருளான்காணென்றியம்பி
விம்மாநின்றழுவார்கட்களிப்பான்றான்காண்
விடையேறித்திரிவான்காணடஞ்செய்பூதத்

தம்மான்காணகலிடங்கடாங்கினான்கா
ணற்புதன்காண்சொற்பதமுங்கடந்துநின்ற
எம்மான்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௧0

அறுத்தான்காணயன்சிரத்தையமரர்வேண்ட
வாழ்கடலினஞ்சுண்டங்கணிநீர்க்கங்கை
செறுத்தான்காண்டேவர்க்குந்தேவன்றான்காண்
டிசையனைத்துந்தொழுதேத்தக்கலைமான்கையில்
பொறுத்தான்காண்புகலிடத்தைநலியவந்து
பொருகயிலையெடுத்தவன்றன்முடிதோளைஞ்
சிறுத்தான்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

திருச்சிற்றம்பலம்.

௬. திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உரித்தவன்காணுரக்களிற்றையுமையாளொல்க
வோங்காரத்தொருவன்காணுணர்மெய்ஞ்ஞானம்
விரித்தவன்காண்விரித்தநால்வேதத்தான்காண்
வியனுலகிற்பல்லுயிரைவிதியினாலே
தெரித்தவன்காண்சில்லுருவாய்த்தோன்றியெங்குந்
திரண்டவன்காண்டிரிபுரத்தைவேவவில்லால்
எரித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

நேசன்காணேசர்க்குநேசந்தன்பா
லில்லாதநெஞ்சத்துநீசர்தம்மைக்
கூசன்காண்கூசாதார்நெஞ்சுதஞ்சே
குடிகொண்டகுழகன்காணழகார்கொன்றை
வாசன்காண்மலைமங்கைபங்கன்றான்காண்
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தும்
ஈசன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௨

பொறையவன்காண்பூமியேழ்தாங்கியோங்கும்
புண்ணியன்காணண்ணியபுண்டரீகப்போதின்
மறையவன்காண்மறையவனைப்பயந்தோன்றான்காண்
வார்சடைமாசுணமணிந்துவளரும்பிள்ளைப்
பிறையவன்காண்பிறைதிகழுமெயிற்றுப்பேழ்வாய்ப்
பேயோடங்கிடுகாட்டிலெல்லியாடும்
இறையவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

பாரவன்காண்விசும்பவன்காண்பவ்வந்தான்காண்
பனிவரைகளிரவினொடுபகலாய்நின்ற
சீரவன்காண்டிசையவன்காண்டிசைகளெட்டுஞ்
செறிந்தவன்காண்சிறந்தடியார்சிந்தைசெய்யும்
பேரவன்காண்பேராயிரங்களேத்தும்
பெரியவன்காணரியவன்காண்பெற்றமூர்ந்த
ஏரவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே ௪

பெருந்தவத்தெம்பிஞ்ஞகன்காண்பிறைசூடிகாண்
பேதையேன்வாதையுறுபிணியைத்தீர்க்கும்
மருந்தவன்காண்மந்திரங்களாயினான்காண்
வானவர்கடாம்வணங்குமாதேவன்காண
அருந்தவத்தாளாயிழையாளுமையாள்பாக
மமர்ந்தவன்காணமரர்கடாமர்ச்சித்தேத்த
இருந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௫

ஆய்ந்தவன்காணருமறையோடங்கமாறு
மணிந்தவன்காணுடரவோடென்புமாமை
காய்ந்தவன்காண்கண்ணழலாற்காமனாகங்
கனன்றெழுந்தகாலனுடல்பொடியாய்வீழப்
பாய்ந்தவன்காண்பண்டுபலசருகாற்பந்தர்
பயின்றநூற்சிலந்திக்குப்பாராள்செல்வம்
ஈந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௬

உமையவளையொருபாகஞ்சேர்த்தினான்கா
ணுகந்தொலிநீர்க்கங்கைசடையொழுக்கினான்காண்
இமையவடகயிலைச்செல்வன்றான்கா
ணில்பலிக்குச்சென்றுழலுநல்கூர்ந்தான்காண்
சமையமவையாறினுக்குந்தலைவன்றான்காண்
டத்துவன்காணுத்தமன்காண்டானேயாய
இமையவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௭

தொண்டுபடுதொண்டர்துயர்தீர்ப்பான்றான்காண்
மேலர்ச்சேவடியிணையென்சோதியான்காண்
உண்டுபடுவிடங்கண்டத்தொடுக்கினான்கா
ணொலிகடலிலமுதமரர்க்குதவினான்காண்
வண்டுபடுமலர்க்கொன்றைமாலையான்காண்
வாண்மதியாய்நாண்மீனுமாயினான்காண்
எண்டிசையுமெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௮

முந்தைகாண்மூவரினும்முதலானான்காண்
மூவிலைவேன்மூர்த்திகாண்முருகவேட்குத்
தந்தைகாண்டண்கடமாமுகத்தினார்க்குத்
தாதைகாண்டாழ்ந்தடியேவணங்குவார்க்குச்

சிந்தைகாண்சிந்தாதசித்தத்தார்க்குச்
சிவனவன்காண்செங்கண்மால்விடையொன்றேறும்
எந்தைகாணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. ௯

பொன்னிசையும்புரிசடையெம்புனிதன்றான்காண்
பூதகணநாதன்காண்புலித்தோலாடை
தன்னிசையவைத்தவெழிலரவினான்காண்
சங்கவெண்குழைக்காதிற்சதிரன்றான்காண்
மின்னிசையும்வெள்ளெயிற்றோன்வெகுண்டுவெற்பை
யெடுக்கலுமடர்ப்பமீண்டவன்றன்வாயில்
இன்னிசைகேட்டிலங்கொளிவாளீந்தோன்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

௭. பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்தும்
சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை
ஏலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

உற்றவர்க்குதவும்பெருமானையூர்வதொன்றுடையானும்பர்கோனைப்
பற்றினார்க்கென்றும்பற்றவன்றன்னைப்பாவிப்பார்மனம்பாவிக்கொண்டானை
அற்றமில்புகழாளுமைநங்கையாதரித்துவழிபடப்பெற்ற
கற்றைவார்சடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

திரியுமுப்புரந்தீப்பிழம்பாகச்செங்கண்மால்விடைமேற்றிகழ்வானைக்
கரியினீருரிபோர்த்துகந்தானைக்காமனைக்கனலாவிழித்தானை
வரிகொள்வெள்வளையாளுமைநங்கைமருவியேத்திவழிபடப்பெற்ற
பெரியகம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

குண்டலந்திகழ்காதுடையானைக்கூற்றுதைத்தகொடுந்தொழிலானை
வண்டலம்புமலர்க்கொன்றையினானைவாளராமதிசேர்சடையானைக்
கெண்டையந்தடங்கண்ணுமைநங்கைகெழுமியேத்திவழிபடப்பெற்ற
கண்டநஞ்சுடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

வெல்லும்வெண்மழுவொன்றுடையானைவேலைநஞ்சுண்டவித்தகன்றன்னை
அல்லறீர்த்தருள்செயவல்லானையருமறையவையங்கம்வல்லானை
எல்லையில்புகழாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
நல்லகம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

திங்கடங்கியசடையுடையானைத்தேவதேவனைச்செழுங்கடல்வளரும்
சங்கவெண்குழைக்காதுடையானைச்சாமவேதம்பெரிதுகப்பானை
மங்கைநங்கைமலைமகள்கண்டுமருவியேத்திவழிபடப்பெற்ற
கங்கையாளனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

விண்ணவர்தொழுதேத்தநின்றானைவேதந்தான்விரித்தோதவல்லானை
நண்ணினார்க்கென்றுநல்லவன்றன்னைநாளுநாமுகக்கின்றபிரானை
எண்ணிற்றொல்புகழாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
கண்ணுமூன்றுடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

சிந்தித்தென்றுநினைந்தெழுவார்கள்சிந்தையிற்றிகழுஞ்சிவன்றன்னைப்
பந்தித்தவினைப்பற்றறுப்பானைப்பாலொடானைஞ்சுமாட்டுகந்தானை
யந்தமில்புகழாளுமைநங்கையாதரித்துவழிபடப்பெற்ற
கந்தவார்சடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

வரங்கள்பெற்றுழல்வாளரக்கர்தம்வாலியபுரமூன்றெரித்தானை
நிரம்பியதக்கன்றன்பெருவேள்விநிரந்தரஞ்செய்தநிட்கண்டகனைப்
பரந்ததொல்புகழாளுமைநங்கைபரவியேத்திவழிபடப்பெற்ற
கரங்களெட்டுடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

எள்கலின்றியிமையவர்கோனையீசனைவழிபாடுசெய்வாள்போல்
உள்ளத்துள்கியுகந்துமைநங்கைவழிபடச்சென்றுநின்றவாகண்டு
வெள்ளங்காட்டிவெருட்டிடவஞ்சிவெருவியோடித்தழுவவெளிப்பட்ட
கள்ளக்கம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

பெற்றமேறுகந்தேறவல்லானைப்பெரியவெம்பெருமானென்றெப்போதும்
கற்றவர்பரவப்படுவானைக்காணக்கண்ணடியேன்பெற்றதென்று
கொற்றவன்கம்பன்கூத்தனெம்மானைக்குளிர்பொழிற்றிருநாவலாரூரன்
நற்றமிழிவையீரைந்தும்வல்லார்நன்னெறியுலகெய்துவர்தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

௨. திருமேற்றளி

திருநாவுக்கரசுநாயனார்.

௪. திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மறையதுபாடிப்பிச்சைக்கென்றகந்திரிந்துவாழ்வார்
பிறையதுசடைமுடிமேற்பெய்வளையாடனோடும்
கறையதுகண்டங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
இறையவர்பாடலாடலிலங்குமேற்றளியனாரே. ௧

மாலனமாயன்றன்னைமகிழ்ந்தனர்விருத்தராகும்
பாலனார்பசுபதியார்பால்வெள்ளைநீறுபூசிக்
காலனைக்காலாற்செற்றார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏலநற்கடம்பன்றந்தையிலங்குமேற்றளியனாரே. ௨

விண்ணிடைவிண்ணவர்கள்விரும்பிவந்திறைஞ்சிவாழ்த்தப்
பண்ணிடைச்சுவையின்மிக்ககின்னரம்பாடல்கேட்பார்
கண்ணிடைமணியினொப்பார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எண்ணிடையெழுத்துமானாரிலங்குமேற்றளியனாரே. ௩

சோமனையரவினோடுசூழ்தரக்கங்கைசூடும்
வாமனைவானவர்கள்வலங்கொடுவந்துபோற்றக்
காமனைக்காய்ந்தகண்ணார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏமநின்றாடுமெந்தையிலங்குமேற்றளியனாரே. ௪

ஊனவனுயிரினோடுமுலகங்களூழியாகித்
தானவர்தனமுமாகித்தனஞ்செயனோடெதிர்ந்த
கானவர்காளகண்டர்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏனமக்கோடுபூண்டாரிலங்குமேற்றளியனாரே. ௫

மாயனாய்மாலனாகிமலரவனாகிமண்ணாய்த்
தேயமாய்த்திசையெட்டாகித்தீர்த்தமாய்த்திரிதங்கின்ற
காயமாய்க்காயத்துள்ளார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏயமென்றோளிபாகரிலங்குமேற்றளியனாரே. ௬

மண்ணினையுண்டமாயன்றன்னையோர்பாகங்கொண்டார்
பண்ணினைப்பாடியாடும்பத்தர்கள்சித்தங்கொண்டார்
கண்ணினைமூன்றுங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எண்ணினையெண்ணவைத்தாரிலங்குமேற்றளியனாரே. ௭

செல்வியைப்பாகங்கொண்டார்சேந்தனைமகனாக்கொண்டார்
மல்லிகைக்கண்ணியோடுமாமலர்க்கொன்றைசூடிக்
கல்வியைக்கரையிலாதகாஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எல்லியைவிளங்கநின்றாரிலங்குமேற்றளியனாரே. ௮

வேறிணையின்றியென்றும்விளங்கொளிமருங்கினாளைக்
கூறியல்பாகம்வைத்தார்கோளராமதியும்வைத்தார்
ஆறினைச்சடையுள்வைத்தாரணிபொழிற்கச்சிதன்னுள்
ஏறினையேறுமெந்தையிலங்குமேற்றளியனாரே. ௯

தென்னவன்மலையெடுக்கச்சேயிழைநடுக்கங்கண்டு
மன்னவன்விரலாலூன்றமணிமுடிநெரியவாயால்
கன்னலின்கீதம்பாடக்கேட்டவர்காஞ்சிதன்னுள்
இன்னவர்க்கருளிச்செய்தாரிலங்குமேற்றளியனாரே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

எ. பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நொந்தாவொண்சுடரேநுனையேநினைந்திருந்தேன்
வந்தாய்போயறியாய்மனமேபுகுந்துநின்ற
சிந்தாயெந்தைபிரான்றிருமேற்றளியுறையும்
எந்தாயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே.

ஆட்டான்பட்டமையாலடியார்க்குத்தொண்டுபட்டுக்
கேட்டேன்கேட்பதெல்லாம்பிறவாவகைகேட்டொழிந்தேன்
சேட்டார்மாளிகைசூழ்திருமேற்றளியுறையும்
மாட்டேயுன்னையல்லான்மகிழ்ந்தேத்தமாட்டேனே. ௨

மோறுந்தோறொருகானினையாதிருந்தாலும்
வேறுவந்தென்னுள்ளம்புகவல்லமெய்ப்பொருளே
சேறார்தண்கழனித்திருமேற்றளியுறையும்
ஏறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. ௩

உற்றார்சுற்றமெனுமதுவிட்டுநுன்னடைந்தேன்
எற்றாலென்குறைவென்னிடரைத்துறந்தொழிந்தேன்
செற்றாய்மும்மதிலுந்திருமேற்றளியுறையும்
பற்றேநுன்னையல்லாற்பணிந்தேத்தமாட்டேனே. ௪

எம்மானெம்மனையென்றவரிட்டிறந்தொழிந்தார்
மெய்ம்மாலாயினதீர்த்தருள்செய்யுமெய்ப்பொருளே
கைம்மாவீருரியாய்கனமேற்றளியுறையும்
பெம்மானுன்னையல்லாற்பெரிதேத்தமாட்டேனே. ௫

நானேலுன்னடியேநினைந்தேனினைதலுமே
ஊனேரிவ்வுடலம்புகுந்தாயென்னொண்சுடரே
தேனேயின்னமுதேதிருமேற்றளியுறையும்
கோனேயுன்னையல்லாற்குளிர்ந்தேத்தமாட்டேனே. ௬

கையார்வெஞ்சிலைநாணதன்மேற்சரங்கோத்தே
எய்தாய்மும்மதிலும்மெரியுண்ணவெம்பெருமான்
செய்யார்பைங்கமலத்திருமேற்றளியுறையும்
ஐயாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. ௭

விரையார்கொன்றையினாய்விமலாவினியுன்னையல்லால்
உரையேனாவதனாலுடலில்லுயிருள்ளளவும்
திரையார்தண்கழனித்திருமேற்றளியுறையும்
அரையாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே ௮

நிலையாய்நின்னடியேநினைந்தேனினைதலுமே
தலைவாநின்னினையப்பணித்தாய்சலமொழிந்தேன்
சிலையார்மாமதில்சூழ்திருமேற்றளியுறையும்
மலையேயுன்னையல்லான்மகிழ்ந்தேத்தமாட்டேனே. ௯

பாரூர்பல்வனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை
ஆரூரன்னடியானடித்தொண்டனாரூரன்சொன்ன
சீரூர்பாடல்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

௩. திருவோணகாந்தன்றளி

சுந்தரமூர்த்திநாயனார்.

௭. பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தல்பூசனைசெய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லால்
ஐவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேற்கு
உய்யுமாறென்றளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே. ௧

திங்கடங்குசடையின்மேலோர்திரைகள்வந்துபுரளவீசும்
கங்கையாளேல்வாய்திறவாள்கணபதியேல்வயிறுதாரி
அங்கைவேலோன்குமரன்பிள்ளைதேவியார்கோற்றட்டியாளார்
உங்களுக்காட்செய்யமாட்டோமோணகாந்தன்றளியுளீரே. ௨

பெற்றபோழ்தும்பெறாதபோழ்தும்பேணியுங்கழலேத்துவார்கள்
மற்றோர்பற்றிலரென்றிரங்கிமதியுடையவர்செய்கைசெய்வீர்
அற்றபோழ்துமலர்ந்தபோழ்துமாபற்காலத்தடிகேளும்மை
ஒற்றிவைத்திங்குண்ணலாமோவோணகாந்தன்றளியுளீரே. ௩

வல்லதெல்லாஞ்சொல்லியும்மைவாழ்த்தினாலும்வாய்திறந்தொன்
றில்லையென்னீருண்டுமென்னீரெம்மையாள்வானிருப்பதென்னீர்
பல்லையுக்கபடுதலையிற்பகலெலாம்போய்ப்பலிதிரிந்திங்
கொல்லைவாழ்க்கையொழியமாட்டீரோணகாந்தன்றளியுளீரே. ௪

கூடிக்கூடித்தொண்டர்தங்கள்கொண்டபாணிகுறைபடாமே
ஆடிப்பாடியழுதுநெக்கங்கன்புடையவர்க்கின்பமோரீர்
தேடித்தேடித்திரிந்தெய்த்தாலுஞ்சித்தமென்பால்வைக்கமாட்டீர்
ஓடிப்போகீர்பற்றுந்தாரீரோணகாந்தன்றளியுளீரே. ௫

வாரிருங்குழல்வாணெடுங்கண்மலைமகண்மதுவிம்முகொன்றைத்
தாரிருந்தடமார்புநீங்காத்தையலாளுலகுய்யவைத்த
காரிரும்பொழிற்கச்சிமூதூர்க்காமக்கோட்டமுண்டாகநீர்போய்
ஊரிடும்பிச்சைகொள்வதென்னேயோணகாந்தன்றளியுளீரே. ௬

பொய்ம்மையாலேபோதுபோக்கிப்புறத்துமில்லையகத்துமில்லை
மெய்ம்மைசொல்லியாளமாட்டீர்மேலைநாளொன்றிடவுங்கில்லீர்
எம்மைபெற்றாலேதும்வேண்டீரேதுந்தாரீரேதுமோரீர்
உம்மையன்றேயெம்பெருமானோணகாந்தன்றளியுளீரே. ௭

வலையம்வைத்தகூற்றமீவான்வந்துநின்றவார்த்தைகேட்டுச்
சிலையமைத்தசிந்தையாலேதிருவடிதொழுதுய்யினல்லால்
கலையமைத்தகாமச்செற்றக்குரோதலோபமதவருடை
உலையயைத்திங்கொன்றமாட்டேனோணகாந்தன்றளியுளீரே. ௮

வாரமாகித்திருவடிக்குப்பணிசெய்தொண்டர்பெறுவதென்னே
ஆரம்பாம்புவாழ்வதாரூரொற்றியூரேலும்மதன்று
தாரமாகக்கங்கையாளைச்சடையில்வைத்தவடிகேளுந்தம்
ஊருங்காடுமுடையுந்தோலேயோணகாந்தன்றளியுளீரே. ௯

ஓவணமேலெருதோன்றேறுமோணகாந்தன்றளியுளார்தாம்
ஆவணஞ்செய்தாளுங்கொண்டுவரைதுகிலொடுபட்டுவீக்கிக்
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்பறையுந்தாஞ்செய்தபாவந்தானே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

௪. திருவனேகதங்காவதம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

௭. பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தேனெய்புரிந்துழல்செஞ்சடையெம்பெருமானதிடந்திகழைங்கணையக்
கோனையெரித்தெரியாடியிடங்குலவானதிடங்குறையாமறையாம்
மானையிடத்ததொர்கையனிடம்மதமாறுபடப்பொழியும்மலைமேல்
யானையுரித்தபிரானதிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே.

கூறுநடைக்குழிகட்பகுவாயனபேயுகந்தாட நின்றோரியிட
வேறுபடக்குடகத்திலையம்பலவாணனின்றாட்டல்விரும்புமிடம்
ஏறுவிடைக்கொடியெம்பெருமானிமையோர்பெருமானுமையாள்கணவன்
ஆறுசடைக்குடையப்பனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௨

கொடிகளிடைக்குயில்கூவுமிடம்மயிலாலுமிடம்மழுவாளுடைய
கடிகொள்புனற்சடைகொண்டநுதற்கறைக்கண்டனிடம்பிறைத்துண்டமுடிச்
செடிகொள்வினைப்பகைதீருமிடந்திருவாகுமிடந்திருமார்பகலத்
தடிகளிடம்மழல்வண்ணனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௩

கொங்குநுழைத்தனவண்டறைகொன்றையுங்கங்கையுந்திங்களுஞ்சூடுசடை
மங்குலுழைமலைமங்கையைநங்கையைப்பங்கினிற்றங்கவுவந்தருள்செய்
சங்குகுழைச்செவிகொண்டருவித்திரள்பாயவியர்த்தழல்போலுடைத்தம்
அங்கைமழுத்திகழ்கையனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௪

பைத்தபடத்தலையாடரவம்பயில்கின்றவிடம்பயிலப்புகுவார்
சித்தமொருநெறிவைத்தவிடந்திகழ்கின்றவிடந்திருவானடிக்கே
வைத்தமனத்தவர்பத்தர்மனங்கொளவைத்தவிடம்மழுவாளுடைய
அத்தனிடம்மழல்வண்ணனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௫

தண்டமுடைத்தருமன்றமரென்றமரைச்செயும்வன்றுயர்தீர்க்குமிடம்
பிண்டமுடைப்பிறவித்தலைநின்றுநினைப்பவராக்கையைநீக்குமிடம்
கண்டமுடைக்கருநஞ்சைநுகர்ந்தபிரானதிடங்கடலேழுகடந்
தண்டமுடைப்பெருமானதிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௬

கட்டுமயக்கமறுத்தவர்கைதொழுதேத்துமிடங்கதிரோனொளியால்
விட்டுமிடம்விடையூர்தியிடங்குயிற்பேடைதன்சேவலொடாடுமிடம்
மட்டுமயங்கியவிழ்ந்தமலரொருமாதவியோடுமணம்புணரும்
அட்டபுயங்கபிரானதிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௭

புல்லியிடந்தொழுதுய்துமென்னாதவர்தம்புரமூன்றும்பொடிப்படுத்த
வில்லியிடம்விரவாதுயிருண்ணும்வெங்காலனைக்கால்கொடுவீந்தவியக்
கொல்லியிடங்குளிர்மாதவிமவ்வல்குராவகுளங்குருக்கத்திபுன்னை
அல்லியிடைப்பெடைவண்டுறங்குங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௮

சங்கையவர்புணர்தற்கரியான்றளவேனகையாடவிராமிகுசீர்
மங்கையவண்மகிழச்சுடுகாட்டிடைநட்டநின்றாடியசங்கரனெம்
அங்கையனல்லனலேந்துமவன்கனல்சேரொளியன்னதொர்பேரகலத்
தங்கையவன்னுறைகின்றவிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௯

வீடுபெறப்பலவூழ்கணின்றுநினைக்குமிடம்வினைதீருமிடம்
பீடுபெறப்பெரியோரதிடங்கொண்டுமேவினர்தங்களைக்காக்குமிடம்
பாடுமிடத்தடியான்புகழூரனுரைத்தவிம்மாலைகள்பத்தும்வல்லார்
கூடுமிடஞ்சிவலோகனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

௫. திருநெறிக்காரைக்காடு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

௩. பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வாரணவுமுலைமங்கைபங்கினராயங்கையினில்
போரணவுமழுவொன்றங்கேந்திவெண்பொடியணிவர்
காரணவுமணிமாடங்கடைநவின்றகலிக்கச்சி
நீரணவுமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே. ௧

காரூருமணிமிடற்றார்கரிகாடருடைதலைகொண்
டூரூரன்பலிக்குழல்வாருழைமானினுரியதளர்
தேரூருநெடுவீதிச்செழுங்கச்சிமாநகர்வாய்
நீரூருமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே. ௨

கூறணிந்தார்கொடியிடையைக்குளிர்சடைமேலிளம்பிறையோ
டாறணிந்தாராடரவம்பூண்டுகந்தாரான்வெள்ளை
ஏறணிந்தார்கொடியதன்மேலென்பணிந்தார்வரைமார்பில்
நீறணிந்தார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே ௩

பிறைநவின்றசெஞ்சடைகள்பின்றாழப்பூதங்கள்
மறைநவின்றபாடலோடாடலராய்மழுவேந்திச்
சிறைநவின்றவண்டினங்கடங்கனிவாய்த்தேன்கதுவும்
நிறைநவின்றகலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே ௪

அன்றாலின்கீழிருந்தங்கறம்புரிந்தவருளாளர்
குன்றாதவெஞ்சிலையிற்கோளரவநாண்கொளுவி
ஒன்றாதார்புரமூன்றுமோங்கெரியில்வெந்தவிய
நின்றாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. ௫

பன்மலர்கள்கொண்டடிக்கீழ்வானோர்கள்பணிந்திறைஞ்ச
நன்மையிலாவல்லவுணர்நகர்மூன்றுமொருநொடியில்
வின்மலையினாண்கொளுவிவெங்கணையாலெய்தழித்த
நின்மலனார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. ௬

புற்றிடைவாளரவினொடுபுனைகொன்றைமதமத்தம்
எற்றொழியாவலைபுனலோடிளமதியமேந்துசடைப்
பெற்றுடையாரொருபாகம்பெண்ணுடையார்கண்ணமரும்
நெற்றியினார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. ௭

ஏழ்கடல்சூழ்தென்னிலங்கைக்கோமானையெழில்வரைவாய்த்
தாழ்விரலாலூன்றியதோர்தன்மையினார்நன்மையினார்
ஆழ்கிடங்குஞ்சூழ்வயலுமதில்புல்கியழகமரும்
நீண்மறுகிற்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. ௮

ஊண்டானுமொலிகடனஞ்சுடைதலையிற்பலிகொள்வர்
மாண்டார்தமெலும்பணிவர்வரியரவோடெழிலாமை
பூண்டாருமோரிருவரறியாமைப்பொங்கெரியாய்
நீண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே, ௯

குண்டாடிச்சமண்படுவார்கூறைதனைமெய்போர்த்து
மிண்டாடித்திரிதருவாருரைப்பனகண்மெய்யல்ல
வண்டாருங்குழலாளைவரையாகத்தொருபாகம்
கண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. ௧௦

கண்ணாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டுறையும்
பெண்ணாருந்திருமேனிப்பெருமானதடிவாழ்த்தித்
தண்ணாரும்பொழிற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
பண்ணாருந்தமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

௮. திருவாசகம்.

மாணிக்கவாசகநாயனார்.

கீர்த்தித்திருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைமூதூராடியதிருவடி

ஏகம்பத்தினியல்பாயிருந்து
பாகம்பெண்ணோடாயினபரிசும்

ஒலிதருகைலையுயர்கிழவோனே.

போற்றித்திருவகவல்.

நான்முகன்முதலாவானவர்தொழுதெழ

ஏகம்பத்துறையெந்தாய்போற்றி
பாகம்பெண்ணுருவானாய்போற்றி

போற்றிபோற்றிசயசயபோற்றி.

திருப்பொற்சுண்ணம்.

காசணிமின்களுலக்கையெல்லாங்காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்கணின்றுநிலாவுகவென்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
பாசவினையைப்பறித்துநின்றுபாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. ௧

அறுகெடுப்பாரயனும்மரியுமன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லாநம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோம்
செறிவுடைமும்மதிலெய்தவில்லிதிருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

திருப்பூவல் ௯.

படமாகவென்னுள்ளேதன்னிணைப்போதவையளித்திங்
கிடமாகக்கொண்டிருந்தேகம்பமேயபிரான்
தடமார்மதிற்றில்லையம்பலமேதானிடமா
நடமாடுமாபாடிப்பூவல்லிகொய்யாமோ. ௪௬

திருவுந்தியார்.

ஈரம்புகண்டிலமேகம்பர்தங்கையில்
ஓரம்பேமுப்புரமுந்தீபற
ஒன்றும்பெருமிகையுந்தீபற. ௨

திருச்சிற்றம்பலம்.

---

௬. திருவிசைப்பா.

புருடோத்தநம்பிநாயனார்.

திருச்சிற்றம்பலம்.

எழுந்தருளாயெங்கள்வீதியூடே
யேதமின்முனிவரொடெழுந்தஞானக்
கொழுந்ததுவாகியகூத்தனேநின்
குழையணிகாதினின்மாத்திரையும்
செழுந்தடமலர்புரைகண்கண்மூன்றுஞ்
செங்கனிவாயுமென்சிந்தைவௌவ
அழுந்துமென்னாருயிர்க்கென்செய்கேனோ
வரும்புனலலமருஞ்சடையினானே.

சேந்தநாயனார் திருப்பல்லாண்டு.

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

௧௦. திருமந்திரம்.

திருமூலதேவநாயனார்.

திருச்சிற்றம்பலம்.

அரகரவென்னவரியதொன்றில்லை
அரகரவென்னவறிகிலர்மாந்தர்
அரகரவென்னவமரருமாவர்
அரகரவென்னவரும்பிறப்பன்றே.

சிவசிவவென்கிலர்தீவினையாளர்
சிவசிவவென்னிடத்தீவினைமாளும்
சிவசிவவென்றிடத்தேவருமாவர்
சிவசிவவென்னச்சிவகதிதானே.

திருச்சிற்றம்பலம்.

௧௧. திருப்பிரபந்தமாலை.

ஐயடிகள்காடவர்கோனாயனார்.

க்ஷேத்திரத்திருவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

வன்னெஞ்சேயுன்னையிரந்துமுரைக்கின்றேன்
கன்னஞ்செய்வாயாகிற்காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத்தானையுரித்தானைவண்கச்சி
ஏகம்பத்தானையிறைஞ்சு.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்தடிகணாயனார்.

திருவேகம்பமுடையார்திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றொண்டுவந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப்புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
இத்தொண்டனென்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே. ௧

ஏகம்பனேயென்னையாள்பவனேயிமையோர்க்கிரங்கிப்
போகம்பன்னாளுங்கொடுக்கின்றநாயகபொங்குமைவாய்
நாகம்பொன்னாரமெனப்பொலிவுற்றுநன்னீறணியும்
ஆகம்பொன்மாமலையொப்பவனேயென்பஞ்தரித்தே. ௨

தரித்தேன்மனத்துன்றிகழ்தருநாமந்தடம்பொழில்வாய்
வரித்தேன்முரல்கச்சியேகம்பனேயென்றன்வல்வினையை
அரித்தேனுனைப்பணியாதவரேழைமைகண்டவரைச்
சிரித்தேனுனக்கடியாரடிப்பூணத்தெளிந்தனனே. ௩

தெளிதருகின்றதுசென்றன்மனநின்றிருவடிவிங்
தளிதருநின்னருட்கையமினியிலையந்திச்செக்கர்
ஒளிதருமேனியெம்மேகம்பனேயென்றுகந்தவர்தாள்
தளிதருதூளியென்றன்றலைமேல்வைத்ததன்மைபெற்றே. ௪

பெற்றுகந்தேனென்றுமர்ச்சனைசெய்யப்பெருகுநின்சீர்
கற்றுகந்தேனென்கருத்தினிதாக்கச்சியேகம்பத்தின்
பற்றுகந்தேறுமுகந்தவனேபடநாகக்கச்சின்
சுற்றுகந்தேர்விடைமேல்வருவாய்நின்றுணையடியே. ௫

அடிநின்றசூழலகோசரமாலுக்கயற்கலரின்
முடிநின்றசூழ்முடிகாண்பரிதாயிற்றுக்கார்முகிலின்
இடிநின்றசூழ்குரலேறுடையேகம்பயாமெங்ஙனே
வடிநின்றசூலப்படையுடையாயைவணங்குவதே. ௬

வணக்கந்தலைநின்றிருவடிக்கேசெய்யுமையல்கொண்டோர்
இணக்கன்றிமற்றோரிணக்கறிவோமல்லம்வல்லரவின்
குணக்குன்றவில்லிகுளிர்க்கச்சியேகம்பங்கூடினல்லாற்
கணக்கன்றுமற்றொருதேவரைப்பாடுங்கவிநலமே. ௭

நலந்தரநானென்றுசொல்லுவன்கேண்மினல்லீர்களன்பு
கலந்தரனூர்கச்சியேகம்பங்கண்டுகனற்றிகிரி
சலந்தரனாகமொழிக்கவைத்தாய்தக்கன்வேள்வியெல்லாம்
நிரந்தரமாகச்செய்தாயென்றுபூசித்துநின்மின்களே. ௮

மின்களென்றார்சடைகொண்டலென்றார்கண்டமேனிவண்ணம்
பொன்களென்றார்வெளிப்பாடுதம்பொன்னடிபூண்டுகொண்ட
என்களென்றாலும்பிரிந்தறியார்கச்சியேகம்பத்தான்
தன்களென்றாருலகெல்லாநிலைபெற்றதன்மைகளே. ௯

தன்மையிற்குன்றாத்தவத்தோரிமையவர்தாம்வணங்கும்
வன்மையிற்குன்றாமதிற்கச்சியேகம்பர்வண்கையிலைப்
பொன்மயிற்சாயலுஞ்சேயரிக்கண்ணும்புரிகுழலும்
மென்மயிற்சாயுமருங்குலுங்காதல்விளைத்தனவே. ௧௦

தனமிட்டுமைதழுவத்தழும்புற்றவர்தம்மடியார்
மனம்விட்டகலாமதிற்கச்சியேகம்பர்வான்கயிலைச்
சினம்விட்டகலாக்களிறுவினவியொர்சேயனையார்
புனம்விட்டகலார்பகலாம்பொழுதுநம்பூங்கொடியே. ௧௧

பூங்கொத்திருந்தழையார்பொழிர்கச்சியேகம்பர்பொற்பார்
கோங்கத்திருக்தகுடுமிக்கயிலையெம்பொன்னொருத்தி
பாங்கொத்திருந்தனையாரணங்கேபடர்கல்லருவி
யாங்கத்திருந்திழையாடிவந்தாற்கண்டடிவருத்தே. ௧௨

வருத்தந்தருமெய்யுங்கையிற்றழையும்வன்மாவினவும்
கருத்தந்தரிக்குநடக்கவின்றையகழனினையத்
திருத்தந்தருளுந்திகழ்கச்சியேகம்பர்சீர்க்கயிலைத்
துருத்தந்திருப்பதன்றிப்புனங்காக்குந்தொழிலெமக்கே. ௧௩

எம்மையுமெம்மைப்பணிகொள்ளுங்கம்பரெழிற்கயிலை
யும்மையுமானிடமிப்புனத்தேவிட்டேவந்தமைந்தர்
தம்மையுமானையுஞ்சிந்தையுநோக்கங்கவர்வவென்றே
அம்மையுமம்மலர்க்கண்ணும்பெரியீரருளுமினே. ௧௪

அருளைத்தருகம்பர்ம்பொற்கயிலையுளெம்மையரம்
பிருளைக்கரிமறிக்கும்மிவ்வரையருகுறுத்தியெய்ய
வெருளக்கலைகணைதன்னொடும்போயினவில்லிமைக்கும்
அருளைத்தருசொல்லியெங்கோவிலையுண்டிவ்வையகத்தே. ௧௫

வையார்மழுப்படையேகம்பரீங்கோய்மலைப்புனத்துள்
ஐயார்வருகலையேனங்கரிதொடர்வேட்டையெல்லாம்
பொய்யாளவையர்மனத்தவெம்பூங்கொடிகொங்கைபொருப்
பையாரரவிடையாயிற்றுலந்துபரிணமித்தே. ௧௬

பருமுத்துதிர்த்திடுஞ்சீர்மத்தயானைநுதல்பகுந்திட்
டொருமொத்ததிண்குறச்சியந்திரிநெறியோங்குவையாய்ப்
பொருமுத்தலைவேற்படைக்கம்பர்பூங்கயிலைப்புனத்துள்
தருமுத்தனநகைதன்னசையால்வெற்பசார்வரிதே. ௧௭

அரிதன்றிருக்கண்ணிடமிரம்பாயிரம்போதணிய
அரிதன்றிருவடிக்கர்ச்சித்தகண்ணுக்கருளுகம்பர்
அரிதன்றிருக்கங்குலியாலழிந்தகயிலையல்லிங்
கரிதென்றிருப்பதெம்பால்வெற்பவெம்மையர்க்கஞ்சுதுமே. ௧௮

அஞ்சரத்தான்பொடியாய்விழத்தீவிழித்தன்புசெய்வோர்
நெஞ்சரத்தாழ்வுகந்தோர்க்கச்சியேகம்பர்நீள்கயிலைக்
குஞ்சரத்தாழ்வரைவீழநுங்கொம்புய்யக்கும்பமுழும்
வெஞ்சரத்தாரனவோவல்லவோவிவ்வியன்முரசே. ௧௯

சேய்தந்தைகம்மையுமைகணவன்றிருவேகம்பத்தான்
தாய்தந்தையாயுயிர்காப்போன்கயிலைத்தயங்கிருள்வாய்
வேய்தந்ததோளிநம்மூசலொடும்விரைவேங்கைதன்னைப்
பாய்தந்துபூசலுண்டாங்கொண்டதோகைபுகவுவந்தே. ௨0

வந்தும்மணம்பெறிற்பொன்னனையீர்மன்னுமேகம்பர்தம்
உந்துமருவிக்கயிலைமலையுயர்தேனிழிச்சித்
தந்துமலர்கொய்துந்தண்டினைமேயுங்கிளிகடிந்துஞ்
சிந்தும்புகர்மலைக்கச்சுமிச்சாரற்றிரிதவனே. ௨௧

திரியப்புரமெய்தவேகம்பனார்திகழுங்கயிலைக்
கிரியக்குறவர்பருவத்திடுதாளம்வினையோம்
விரியச்சுருண்முதலானுமிடைந்தோம்விரைவிரைந்து
பிரியக்கதிர்முத்தினீர்பெற்றதென்னங்கப்பேசுமினே. ௨௨

பேசுகயாவருமைக்கணியாரென்றுபித்தரெங்கும்
பூசுகையார்திருநீற்றெழிலேகம்பர்பொற்கயிலைத்
தேசுகையார்சிலைவெற்பன்பிரியும்பரிசிலராக்
கூசுகையாதுமில்லாக்குலவேங்கைப்பெயர்நம்மையே. ௨௩

பெயராநலத்தெழிலேகம்பனார்பிறைதோய்கயிலைப்
பெயராதிருக்கப்பெறுகிளிகாள்புனமேபிரிவின்
துயரால்வருத்திமனமுமிங்கோடித்தொழுதுசென்ற
தயராதுறையும்வெற்பற்கடியேற்கும்விடைதமினே. ௨௪

நம்மைப்பிறவிக்கடல்கடப்பிப்பவர்நாம்வணங்கு
மும்மைத்திருக்கண்முகத்தெழிலேகம்பர்மொய்கயிலை
அம்மைக்கருங்கண்ணிதன்னொடின்பந்தருந்தண்புனமே
எம்மைக்கவலைசெயச்சொல்லியோவல்லியெய்தியதே. ௨௫

இயங்குந்திரிபுரமெய்தவேகம்பரெழிற்கயிலைத்
தயங்குமலர்ப்பொழில்காடையலாடருவித்தடங்காண்
முயங்குமணியறைகாண்மொழியீரொழியாதுநெஞ்சம்
மயங்கும்பரிசுபொன்னார்சென்றசூழல்வகுத்தெமக்கே. ௨௬

வகுப்பாரிவர்போன்மணத்துக்குநாண்மணந்தன்னொடின்ப
மிகுப்பார்களாருயிரொன்றாமிருவரைவிள்ளக்கள்வாய்
நெகுப்பான்மலர்கொண்டுநின்றார்கிடக்கநிலாவுகம்பர்
தொகுப்பான்மணிசிந்தருவிக்கயிலையிச்சூழ்புனத்தே. ௨௭

புனங்குழையாதென்றுமென்றினைகொய்ததும்போகலுற்ற
கனங்குழையாடற்பிரியநமக்குறுங்கையறவால்
மனங்குழையாவருங்கண்கனிபண்பலபாடுந்தொண்டர்
இனங்குழையாத்தொழுமேகம்பரிக்கயிலாயத்துள்ளே. ௨௮

உள்ளம்பெரியரல்லாச்சிறுமானிடருற்றசெல்வங்
கள்ளம்பெரியசிறுமனத்தார்க்கன்றிக்கங்கையென்னும்
வெள்ளம்பெரியசடைத்திருவேகம்பர்விண்ணரணந்
தள்ளம்பெரிகொண்டமைத்தாரடியவர்சார்வதன்றே. ௨௯

அன்றும்பகையடர்க்கும்பரிமாவுமதவருவிக்
குன்றும்பதாதியுந்தேருங்குலவிக்குடைநிழற்கீழ்
நின்றும்பொலியினுங்கம்பர்நன்னீறுநுதற்கிலரேல்
என்றுமரசுமுரசும்பொலியாவிருநிலத்தே. ௩0

நிலத்திமையோரிற்றலையாப்பிறந்துமறையொடங்கம்
வலத்திமைப்போதும்பிரியாரெரிவளர்த்தாலும்வெற்பன்
குலத்துமையோர்பங்கர்கச்சியுளேகம்பங்கூடித்தொழும்
நலத்தமையாதவர்வேட்டுவர்தம்மினடுப்படையே. ௩௧

படையாலுயிர்கொன்றுதின்றுபசுக்களைப்போலச்செல்லும்
நடையாலறிவின்றிநாண்சிறிதின்றிநகுங்குலத்திற்
கடையாப்பிறக்கினுங்கச்சியுளேகம்பத்தெங்களையாள
உடையான்கழற்கன்பரேலவர்யாவர்க்குமுத்தமரே. ௩௨

உத்துங்கயானையுரியார்விரலாலரக்கன்சென்னி
பத்துங்கையானவிருபதுஞ்சோர்தரவைத்திலையை
ஒத்துங்கையாலவன்பாடக்கயிலையுள்ளோர்நற்கைவாள்
எத்துங்கையானென்றுகந்தளித்தார்கச்சியேகம்பரே. ௩௩

அம்பரங்காலனனீர்நிலந்திங்களருக்கனனு
வம்பரங்கொள்வதொர்வேழத்துரியவன்றன்னுருவாம்
எம்பரன்கச்சியுளேகம்பத்தானிடையாதடைவான்
நம்பரன்றன்னடியாரறிவார்க்குநறுந்துணையே. ௩௪

துணைத்தாமரையடியும்பவளத்திரணன்குறங்கும்
பணைத்தோளகலமுங்கண்டத்துநீலமுமண்டத்துமின்
பிணைத்தாலனசடையுந்திருமுக்கணும்பெண்ணொர்பக்கத்
தணைத்தாரெழிற்கம்பரெங்கள்பிரானார்க்கழகியவே. ௩௫

அழகறிவிற்பெரிதாகியவேகம்பரத்தர்கொற்றம்
பழகறிவிற்பெரியோர்தமைப்பற்றலர்பற்றுமன்பின்
குழகறிவேற்பினுளொன்றறியாரறியாமைதெய்வங்
கிழகெறியப்பட்டுலந்தாருலகிற்கிடந்தனரே. ௩௬

கிடக்குமொருபாலிரைக்கின்றபாம்பொருபான்மதியந்
தொடக்குண்டிலங்குமலங்குந்திரைக்கங்கைசூடுங்கொன்றை
வடக்குண்டுகட்டத்தலைமாலைவாளான்மலைந்தவெம்போர்
கடக்கும்விடைத்திருவேகம்பர்கற்றைச்சடைமுடியே. ௩௭

கற்றைப்பவளச்சடைவலம்பூக்கமழ்கொன்றையந்தார்
முற்றுற்றிலாமதியின்கொழுந்தேகம்பர்மொய்குழலாம்
மற்றைத்திசையின்மணிப்பொற்கொழுந்தத்தரங்கப்புனீர்
தெற்றிப்பொலிகின்றசூட்டழகாகித்திகழ்தருமே. ௩௮

தருமருட்டன்மைவலப்பாற்கமலக்கணெற்றியின்மேல்
திருமலர்க்கண்பிளவின்றிகழுந்தழல்செல்வக்கம்பர்
கருமலர்க்கண்ணிடப்பாலதுநீலங்கனிமதத்து
வருநுதற்பொட்டணங்குக்குயர்ந்தோங்குமலர்க்குழலே. ௩௯

மலர்ந்தபடத்துச்சியைந்திணுஞ்செஞ்சுடர்மாமணிவிட்
டலர்ந்தமணிக்குண்டலம்வலக்காதினிலாடிவரும்
நலந்திருநீள்வயிரம்வெயிற்பாயுநகுமணிகள்
கலந்தசெம்பொன்மகரக்குழையேகம்பர்காதிடமே. ௪0

காதலைக்கும்வலத்தோள்பவளக்குன்றமங்குயர்ந்து
போதலைக்கும்பணிப்பொன்மலைநீற்றின்பொலியகலந்
தாதலைக்குங்குழல்சேர்பணைத்தோணறுஞ்சாந்தணிந்து
சூதலைக்கும்முலைமார்பிடமேகம்பர்சுந்தரமே. ௪௧

தரம்பொற்பழியுமுலகட்டியெய்த்துத்தாந்தளரா
உரம்பொற்புடையதிருவயிறும்வலமும்பர்மும்மைப்
புரம்பொற்பழித்தகம்பர்க்குத்தாத்திடப்பூண்முலையு
நிரம்பப்பொருதுதளரிளவஞ்சியுநேருடைத்தே. ௪௨

உடைப்புலியாடையின்மேலுரகக்கச்சுவீக்கிமுஞ்சி
வடத்தொருகோவணந்தோன்றுமரைவலமற்றையல்குல்
தொடக்குறுகாஞ்சித்தொடுத்தவரசிலைதூநுண்டுகில்
அடற்பொலியேறுடையேகம்பமேயவடிகளுக்கே. ௪௩

அடிவலப்பாலதுசெந்தாமரையொத்தெதிர்கழல்சூழ்ந்
திடிகுரற்கூற்றினெருக்கிறவைத்ததிளந்தளிரின்
அடியிடப்பாலதுபஞ்சுறவஞ்சுஞ்சிலம்பணிந்த
வடிவுடைத்தார்கச்சியேகம்பமேயவர்தருக்கே. ௪௪

தருக்கவற்றான்மிக்கமுப்புரமெய்தயனறலையை
நெருக்கவற்றோடமழுவாள்விசைந்ததுநெற்கனென்றும்
பருக்கவற்றாங்கச்சியேகம்பரத்தர்தம்பாம்புகளின்
திருக்கவற்றாலிட்டருஞ்ஞங்கடகத்திருக்கரமே. ௪௫

கரத்தத்தமருகத்தோசைகடுத்தண்டமீபிளப்ப
வரத்தத்தபாதநெரித்திட்டவனிதலநெரியத்
தரத்தத்திசைகளுக்கப்புறம்போர்ப்பச்சடைவிரித்து
வரத்தைத்தருகம்பராடுவரெல்லியுமாநடமே. ௪௬

நடனம்பிரானுகந்துய்யக்கொண்டானென்றுநன்மறையோர்
உடன்வந்துமூவாயிரவரிரைஞ்சிநிறைந்தவன்பின்
கடனன்றிமற்றறியாத்தில்லையம்பலங்காளத்தியாம்
இடமெம்பிரான்கச்சியேகம்பமேயாற்கினியனவே. ௪௭

இனியவரின்னாரவரையொப்பார்பிறரென்னவொண்ணாத்
தனியவர்தையலுடனாமுருவரறம்பணித்த
முனியவரென்றுமுகந்தமுக்கண்ணவர்தண்டியன்புக்
கினியவர்காய்மழுவாட்படையார்கச்சியேகம்பரே ௪௮

பரவித்தனைநினையக்கச்சியேகம்பர்பண்ணுமையல்
வரவித்தனையுள்ளதெங்கறிந்தேன்முன்னவர்மகனார்
புரவித்தனையூடிக்கக்கொடிதாய்விடியாவிரவில்
அரவித்தனையுங்கொண்டார்மடவார்முன்றிலாட்டிடவே. ௪௯

இடவஞ்சுறுக்கெனப்பாயுமஞ்சென்னிநகுதலைகண்
டிடவஞ்சுவர்மடவாரிரிகின்றனரேகம்பத்தீர்
படவஞ்சுவாயதுநாகமிரைக்குமதனுக்குமுற்
படவஞ்சுவரெங்ஙனேபலிவந்திடும்பாங்குகளே. ௫0

பாங்குடைக்கோட்புலியின்னதள்கொண்டிர்நும்பாரிடங்கள்
தாங்குடைகொள்ளப்பலிகொள்ளவந்தீர்தடங்கமலம்
பூங்குடைகொள்ளப்புனற்கச்சியேகம்பங்கோயில்கொண்டீர்
ஈங்கிடைகொள்ளக்கலைகொள்ளவந்தீரிடைக்குமின்றே. ௫௧

இடைக்குமின்றோற்குமிணைமுலையாய்முதியார்கடஞ்சொற்
கடைக்கணன்றாங்கச்சியேகம்பரையங்கொளக்கடவும்
விடைக்குமுன்றோற்றநில்லேனின்றினியிந்தமொய்குழலார்
கிடைக்குமுன்றோற்றநெஞ்சங்கிதுவோதங்கிறித்துவமே. ௫௨

கிறிபலபேசிச்சதிராநடந்துவிடங்குபடக்
குறிபலபாடிக்குளிர்கச்சியேகம்பரையங்கொள்ள
நெறிபலவார்குழலார்மெலிவுற்றநெடுந்தெருவில்
செறிபலவெள்வளைபோயினதாயர்கடேடுவரே. ௫௩

தேடுற்றில கள்ளநேர்க்கந்தெரிந்தில சொற்கண்முடி
கூடுற்றில குழல்கொங்கையொடித்தில கூறுமிவண்
மாடுற்றில மணியின்மடவல்குலுமற்றிவள்பால்
நாடுற்றில வெழிலேகம்பனூர்க்குள்ளநல்கிடத்தே. ௫௪

நல்கும்புகழ்க்கடவூர்நன்மறையவனுய்யநண்ணிக்
கொல்கின்றகூற்றைக்குமைத்தவெங்கூற்றங்குளிர்திரைகள்
மல்குந்திருமறைக்காட்டமிர்தென்றுமலைமகடான்
புல்கும்பொழிற்கச்சியேகம்பமேவியபொன்மலையே. ௫௫

மலயத்தகத்தியனர்ச்சிக்கமன்னிவடகயிலை
நிலயத்தமரர்தொழவிருந்தானெடுமேருவென்னுஞ்
சிலையத்தன்பைம்பொன்மதிற்றிருவேகம்பத்தான்றிகழ்நீர்
அலையத்தடம்பொன்னிசூழ்திருவையாற்றருமணியே. ௫௬

மணியாரருவித்தடவிமயங்கிடக்கொல்லிகல்லின்
திணியாரருவியினூர்த்தசிராமலைபைவனங்கள்
அணியாரருவிகவர்கிளியோப்புமின்சாரல்விந்தம்
பணிவாரருவினைதீர்க்குமேகம்பர்பருப்பதமே. ௫௭

பருப்பதங்கார்தவழ்மந்தரமிந்திரநீலம்வெள்ளை
மருப்பதங்கார்கருங்குன்றியங்கும்பரங்குன்றம்வில்லார்
நெருப்பதங்காகுதிநாறுமகேந்திரமென்றிவற்றில்
இருப்பதங்காவுகந்தான்கச்சியேகம்பத்தெம்மிறையே. ௫௮

இறைத்தார்புரமெய்தவில்லிமைநல்லிமவான்மகட்கு
மறைத்தார்கருங்குன்றம்வெண்குன்றஞ்செங்குன்றமன்னம்குன்ற
நிறைத்தார்நெடுங்குன்றநீள்கழுக்குன்றமென்றிவினைகள்
குறைத்தார்முதுகுன்றமேகம்பர்குன்றென்றுகூறுமினே. ௫௯

கூறுமின்றொண்டர்குற்றாலநெய்த்தானந்துருத்தியம்பேர்
தேறுமின்வேள்விக்குடிதிருத்தோணிபுரம்பழனம்
மாறுமின்போற்சடைவைத்தவனூரிடைமருதென்
றேறுமினீரெம்பிரான்கச்சியேகம்பமுன்னினைந்தே. ௬௦

நினைவார்க்கருளும்பிரான்றிருச்சோற்றுத்துறைநியமம்
புனைவார்சடையோன்புகலூர்புறம்பயம்பூவணநீர்
பனைவார்பொழிற்றிருவெண்காடுபாச்சிலதிகையென்றும்
நினைவார்தருநெஞ்சினீர்கச்சியேகம்பநண்ணுமினே. ௬௧

நண்ணிப்பரவுந்திருவாவடுதுறைநல்லநல்லூர்
மண்ணிற்பொலிகடம்பூர்கடம்பந்துறைமன்னுபுன்கூர்
எண்ணற்கரியபாராய்த்துறையேர்கொளெதிர்கொள்பாடி
கண்ணிப்பிறைச்சடையோன்கச்சியேகம்பங்காண்மின்சென்றே. ௬௨

சென்றேறிவிண்ணுறுமண்ணுமலைதிகழ்வல்லமென்பூ
இன்றேறல்பாய்திருமாற்பேறுபாசூரெழிலழுந்தூர்
வன்றேரவன்றிருவிற்பெரும்பேறுமதிலொற்றியூர்
நின்றேர்தருகச்சியேகம்பமேயார்நிலாவியவே. ௬௩

நிலாவுபுகழ்த் திருவோத்தூர் திருவாமாத்தூர் நிறைநீர்
சுலாவுசடையோன் புலிவலம் வில்வலங் கொச்சை தொண்டர்
குலாவுந் திருப்பனங்காடு நன்மாகறல் கூற்றம் வந்தால்
அலாவென்றடியார்க் கருள்புரியேகம்ப ராலயமே. ௬௪

ஆலயங்கார் கருகாவைகச்சூர் திருக்காரிகரை
வேலையங் கேறு திருவான்மியூர் திருவூறல் மிக்க
சோலையங்கார் திருப்போந்தைமுக்கோணந் தொடர்சடைச்
மாலையன் வாழ் திருவாலங்காடேகம்பம் வாழ்த்துமினே. ௬௫

வாழப்பெரி தெமக்கின்னருள் செய்யுமலர்க்கழலோர்
தாழச்சடைத் திருவேகம்பர் தம்மைத் தொழாதவர் போய்
வாழப்பரற் சுரமாற்றுதளிரடி பூங்குழலெம்
ஏழைக்கிடையிறுக் குங்குயபாரமியக் குறினே. ௬௬

உறுகின்றவெவ் வழலக்கடமிக் கொடிக்குன் பின்வரப்
பெறுகின்ற வன்மையினாலே பேரருளேகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழிற் கச்சியைச் சூழ்ந்திளைபோர்
குறுகின்ற பூங்குவளைக் குறுந்தண்பணையென்று மொரிகே. ௬௭

கொள்ளுங்கடுங்கதிரிற் கள்ளித்தீச் சிலவேயுலர்ந்து
விள்ளும் வெடிபடும் பாலையென் பாவைவிடலையின்னே
தெள்ளும்புனற் கச்சியுட் டிருவேகம்பர் சேவடியை
உள்ளும் மதுமறந்தா ரெனப்போவதுரைப்பரிதே. ௬௮

பரிப்பருந் திண்மைப் படையது கானரெனிற் சிறகு
விரிப்பருந் துக்கிரையாக்கும் வெய்யோனஞ்சலஞ்சனுடேமேல்
தரிப்பருந் திண்கங்குகையார் திருவேகம்பமன்னபொன்னே
வரிப்பருந் திண்சிலையேயுமாரா யின்மறைகுவனே. ௬௯

வனவரித் திண்புலியின்னதளேகம்பமன்னருளே
யெனவருபொன்னனங்கென்னனங்கிற் கென்னெழிற்கழங்கும்
தனவரிப் பந்துங்கொடுத்தெனைப் புல்லியுமிற்பிரிந்தே
இனவரிக் கல்லதர் செல்வதெங்கேயொல்குமேனழைநெஞ்சே. ௭௰

நெஞ்சார்தரவின் பஞ்செய்கழலேகம்பர் கச்சியன்னாள்
பஞ்சாரடி வைத்தபாங்கிவையாங் கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வெழியத்தன் பின்செலமுன் செலவெடுவெடேன்ற
அஞ்சாவடு திறற்காளை தன்போக்கி வையந்தத்திலே. ௭௧

இலவவெங் கானுனை யல்லாற்றொழுஞ் சரணேகம்பனார்
நிலவுஞ் சுடரொளி வெய்யவனே தண்மலர்மிதித்துச்
செலவும் பருக்கைகுளிரத் தளிரடி செல்சுரத்துன்
நிலவுங்கதிர் தணிவித்தருள் செய்யுன்னுறுதுணைக்கே. ௭௨

துணையொத்த கோவையும் போலெழிற் பேதையுந் தோன்றலுமுன்
னிணையொத்த கொங்கையொடேயொத்தீ காதலொடே கினரே
யணையத்தரே ரொத்த காளையைக் கண்டனமற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவடன்னொடும் பேசரினே.

மின்னலிக்கும்வணக்கத்திடையாளையுமீளியையும்
றென்னலிப்பாக்கைவந்தெய்தினிரேலெம்மனையிற்கண்டீர்
பின்னரிப்போக்கருங்குன்றுகடந்தவரின்றுகம்பர்
மன்னரிதேர்ந்துதொழுங்கச்சிநாட்டிடைவைகுவரே. எச

உவரச்சொல்வேடுடைக்காடுகந்தாடியவேகம்பனூர்
அவரக்கன்போனவிமானத்தையாயிரமுண்மைசுற்றுந்
துவரச்சிகரச்சிவாலயஞ்சூலந்துலங்குவிண்மேற்
கவரக்கொடிதிளைக்குங்கச்சிகாணினுங்கார்மயிலே. எரு

கார்மிக்ககண்டத்தெழிற்றிருவேகம்பர்கச்சியின்வாய்
ஏர்மிக்கசேற்றெழுதினென்னடுவோரொலிபொன்மலைபோற்
போர்மிக்கசெந்நெல்குவிப்போரொலிகருப்பாலையொலி
நீர்மிக்கமாக்கடலின்றெனிலேயொக்குநேரிழையே. எச

நேர்த்தமையாமைவிறற்கொடுவேடர்நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமையாவிமைதீர்ந்தகண்பொன்னேபசட்டுரிவை
போர்த்தமையாலுமைநோக்கருங்கம்பர்கச்சிப்பொழிலுள்
சேர்த்தமையாலிமைப்போதணிசிதஞ்சிறந்தனவே. எஎ

சிறைவண்டுபாடுங்கமலக்கிடங்கிவைசெம்பழுக்காய்
நிறைகொண்டபாளைக்கமுகின்பொழிலவைதீங்கனியின்
பொறைகொண்டவாழைப்பொதும்புவைபுன்சடையேகம்பனூர்
நறைகொண்டபூங்கச்சிநாடெங்குமிவ்வண்ணநன்னுதலே. எஅ

நன்னுதலார்கருங்கண்ணுஞ்செவ்வாயுமிவ்வாறெனப்போய்
மன்னிதழார்திருநீலமுமாம்பலும்பூப்பவளை
என்னவெலாமொப்புக்காதென்றுவீழ்ந்திடுமேகம்பனூர்
பொன்னுதலார்விழியார்கச்சிநாட்டுளிப்பொய்கையுளே. எகூ

உள்வார்குளிரநெருங்கிக்கடுங்கிடங்கிட்டநன்னீர்
வள்வாளைகளொடுசெங்கயன்மேய்கின்றவெங்களையாட்
கொள்வார்பிறவிகொடாதவேகம்பர்குளிர்குவளை
கள்வார்தருகச்சிநாட்டெழிலேரிகளப்பரப்பே. அ0

பரப்பார்விசும்பிற்படிந்தகருமுகிலன்னநன்னீர்
தரப்பாசிகண்மிகுபண்பொடுசேம்படர்தண்பணைவாய்ச்
சுரப்பாரெருமைமலர்தின்னத்துன்னுசுராவொருத்தல்
பொரப்பார்பொலிநுதலாய்செல்வக்கம்பர்தம்பூங்கச்சியே. அக

கச்சார்முலைமலைமங்கைகண்ணாரவொண்ணன்கரமும்
வைச்சார்மகிழ்திருவேகம்பர்தேவிமகிழவிண்ணோர்
விச்சாதரர்தொழுகின்றவிமானமுந்தன்மமரு
அச்சாலையும்பரப்பாங்கணிமாடங்களோங்கினவே. அஉ

ஓங்கினவூரகமுள்ளகமும்பருருகிடமாம்
பாங்கினினின்றதரியுறைபாடகந்தெவ்விரிய
வாங்கினவாட்கண்ணிமற்றவர்மைத்துனிவான்கவிகள்
தாங்கினநாட்டிருந்தாளதுதன்மனையாயிழையே. அங

இழையாரரவணியேகம்பர்நெற்றிவிழியின்வந்த
பிழையாவருணம்பிராட்டியதின்னபிறங்கலுன்னும்
நுழையாவருதிரிசூலத்தனைக்கரும்பொன்கடுக்கைத்
தழையார்பொழிலுதும்பொன்னேநமக்குத்தளர்வில்லையே. ௮௪

தளராமிகுவெள்ளங்கண்டுமையோடித்தழைத்தழுவக்
கிளையார்வளைக்கைவடுப்படுமீங்கோர்கிறிபடுத்தார்
வளமாப்பொழிற்றிருவேகம்பமற்றிதுவந்திறைஞ்சி
யுளராவதுபடைத்தோமடவாயிவ்வுலகத்துள்ளே. ௮௫

உலவியமின்வடம்வீசியுருமதிர்வுண்முழங்கி
வல்வியமதம்பாய்முகில்யானைகள்வானில்வந்தால்
சுலவியவார்குழல்பின்னரென்பாரிரெனநினைந்து
நிலவியவேகம்பர்கோயிற்றொடியுன்னாநீர்மையனே. ௮௬

நீரென்னிலும்மழையகண்முகில்காணெஞ்சுமஞ்சலையென்
றூரென்னிலுந்தமராயுரைப்பாரமராபதிக்கு
பேரென்னிலுந்தருங்கச்சியுமேகம்பர்நீண்மதில்வாய்ச்
சேரென்னிலுங்குழல்வாட்கண்ணிதானென்பர்தேர்வரவே. ௮௭

வரங்கொண்டிமையோர்நலங்கொள்ளுமேகம்பர்கச்சியன்னாய்
பரங்கொங்கைதாவன்றினீர்முத்தமன்பர்தந்தேரின்முன்னே
தரங்கொண்டுபூக்கொண்டுகொன்றைபொன்னாகத்தண்காந்தள்கொத்தின்
கரங்கொண்டுமெய்ப்பாற்சுண்ணமேந்தவும்போந்தனகார்முகிலே. ௮௮

கார்முகமாரவண்ணக்கொண்டகம்பர்கழற்றொழுது
போர்முகமாப்பகைவெல்லச்சென்றார்நினையார்புனரி
நீர்முகமாகவிருண்டுசோந்ததுநேரிழைநாம்
ஆர்முகமாகவினைக்கடனீந்துதும்வெய்துயிர்ப்பே. ௮௯

உயிராயினவன்பர்தேர்வரக்கேட்டுமுன்வாட்டமுற்ற
பயிரார்புயல்பெற்றதென்னநம்பல்வளைபான்மைகளாய்
தயிரார்பானெய்யொடுமாடியவேகம்பர்தம்மருள்போல்
கயிராவளையழுந்தக்கச்சிறுத்தனகார்மயிலே. ௯௰

கார்விடைவண்ணத்தனன்றேழ்தழுவினுமின்றுதனிப்
போர்விடைப்பெற்றெதிர்மாண்டாரெனவண்டர்போதவிட்டார்
தார்விடையேகம்பர்கச்சிப்புறவிடைத்தம்பொனன்பூண்
மார்விடைவைகல்பெறுவார்தழுவமழவிடையே. ௯௧

விடைபாய்கொடுமையெண்ணாதுமேலாங்கன்னிவேற்கருங்கண்
கடைபாய்மனத்திளங்காளையர்புல்லெ[illegible]கம்பர்கச்சி
மடைபாய்வயிலிளமுல்லையின்மான்கன்றோடான்கன்றினம்
கடைபாய்தொறும்பதிமன்றிற்கடல்போற்கலந்தெழுமே. ௯௨

எழுமலர்த்தண்பொழிலேகம்பர்கச்சியிருங்கடல்வாய்க்
கொழுமணப்புன்னைத்துணர்மணற்குன்றிற்பரதர்கொம்பே
செழுமலர்ச்சேலல்லவாளல்லவேலல்லநீலமல்ல
முழுமலர்க்கூரம்பினேரிரண்டாலுமுகத்தனவே. ௯௩

முகம்பாகம்பண்டமும்பாகமென்றோதியமூதுரையை
யுகம்பார்த்திரேலென்னலமுயரேகம்பர்கச்சிமுன்னீர்
அகம்பாகவார்வினைவில்லையென்னின்பவளச்செவ்வாய்
நகம்பாற்பொழிற்பெற்றநாமுற்றவர்கொள்கநன்மயலே. ௯௪

மயக்கத்தநல்லிருட்கொல்லுஞ்சுறவொடெறிமகரம்
இயக்கத்திடுசுழியோதங்கழிகிளரக்கழித்தார்
துயக்கத்தவர்க்கருளார்கம்பர்கச்சிக்கடலர்பொன்னான்
முயக்கத்தகல்வுபொருள்கொண்கநீவருமூர்க்கழுக்கமே. ௯௫

மேயிரைவைகக்குருகுணராமதுவுண்டுபுன்னை
மீயிரைவண்டோதமர்புக்கடியவிரிகடல்வாய்ப்
பாயிரைநாகங்கொண்டோன்றொழுங்கம்பர்கச்சிப்பன்னீர்
தூயிரைகானன்மற்றாரறிவார்நந்துறைவர்பொய்யே. ௯௬

பொய்வருநெஞ்சினர்வஞ்சனையாரையும்போதவிடா
மெய்வரும்பேரருளேகம்பர்கச்சிவிரையினவாய்க்
கைவரும்புள்ளொடுசங்கினமார்ப்பநஞ்சேர்ப்பர்திண்டோர்
அவ்வருதாமங்களினம்வந்தார்ப்பவலைக்கின்றதே. ௯௭

இன்றுசெய்வோமிதனிற்றிருவேகம்பர்க்கெத்தனையும்
நன்றுசெய்வோம்பணிநாளையென்றுள்ளிநெஞ்சேயுடலில்
சென்றுசெயாரைவிடுந்துணைநாளும்விடாதடிமை
நின்றுசெய்வாரவர்தங்களின்மேனெறிகாட்டுவரே ௯௮

காட்டிவைத்தார்தம்மையாங்கடிப்பூப்பெய்யக்காதல்வெள்ளம்
ஈட்டிவைத்தார்தொழுமேகம்பரேதுமிலாதவெம்மைப்
பூட்டிவைத்தார்தமக்கன்பதுபெற்றுப்பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத்தார்பரவித்தொழுதாமவர்பாதங்களே. ௯௯

பாதம்பரவியோர்பித்துப்பிதற்றிலும்பல்பணியும்
ஏதம்புகுதாவகையருளேகம்பரேத்தெனவே
போதம்பொருளாற்பொலியாதபுன்சொற்பனுவல்களும்
வேதம்பொலியும்பொருளாமெனக்கொள்வர்மெய்த்தொண்டரே.

திருச்சிற்றம்பலம்.

கச்சித் திருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

எத்தனையூரெத்தனைவீடெத்தனைதாய்பெற்றவர்கள்
எத்தனைபேரிட்டழைக்கவேனென்றே—னித்தம்
எனக்குக்களையாற்றயேகம்பாகம்பா
உனக்குத்திருவிளையாட்டோ.

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானுடத் துதித்து
மலைகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்

விள்ளொளி மாக்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுறுங் கல்லு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்செனவுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுட லொடுங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
உகிராற் கீற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்
நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியிங் கியற்றும்
அங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றூய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்
தக்க தலையோட் டின்முளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரண்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சா ணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக் காமுக னாய்நா னென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் றிருவரு ளில்லார்.

துங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடைவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ் சொரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ் சொரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க வினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமுங்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏகநாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமாலை.

திருச்சிற்றம்பலம்.

அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்லம்
துறந்தானவனிற்சதகோடியுள்ளத்துறவுடையோன்
மறந்தானறக்கற்றறிவோடிருந்திருவாதனையற்
றிறந்தான்பெருமையையென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. க

கட்டியணைத்திடும்பெண்டிருமக்களுங்காலத்தச்சன்
வெட்டிமுறிக்குமரம்போற்சரீரத்தைவீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கியழுவார்மயானங்குறுகியப்பால்
எட்டியடிவைப்பரோவிறைவாகச்சியேகம்பனே. உ

கைப்பிடிநாயகன்றூங்கையிலேயவன்கையையெடுத்
தப்புறந்தன்னிலசையாமன்முன்வைத்தயல்வளவில்
ஒப்புடன்சென்றுதுயினீத்துப்பின்வந்துறங்குவளை
எப்படிநானம்புவேனிறைவாகச்சியேகம்பனே. ங

நன்னாரிற்பூட்டியசூத்திரப்பாவைநன்னார்தப்பினால்
தன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்தன்மையைப்போல்
உன்னாலியானுந்திரிவதல்லான்மற்றுனைப்பிரிந்தால்
என்னாலிங்காவதுண்டோவிறைவாகச்சியேகம்பனே. ச

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமுஞானமுமே
அல்லாதுவேறுநிலையுளதோவகமும்பொருளும்
இல்லாளுஞ்சுற்றமுமைந்தரும்வாழ்வுமெழிலுடம்பும்
எல்லாம்வெளிமயக்கேயிறைவாகச்சியேகம்பனே. ரு

பொல்லாதவனெறிநில்லாதவனைம்புலன்கடமை
வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெய்யடியவர்பால்
செல்லாதவனுண்மைசொல்லாதவனின்றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணிலேன்பிறந்தேன்கச்சியேகம்பனே. ௬

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவில்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. ௭

அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்தால்
சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பல்கால்விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தாயிறைவாகச்சியேகம்பனே. ௮

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. ௯

மாயநட்போரையுமாயாமலமெனுமாதரையும்
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாம்
தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்பின்றாயைமற
தேயுமதேநிட்டையென்றானெழிற்கச்சியேகம்பனே. ௧௦

வரிக்கோலவேல்விழியாரனுராகமயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொலேன்றமியேனுடல்
நரிக்கோகழுகுபருந்தினுக்கோவெய்யநாய்தனுக்கோ
எரிக்கோவிரையெதுக்கோவிறைவாகச்சியேகம்பனே. ௧௧

காதென்றுமூக்கென்றுகண்ணென்றுகாட்டியென்கண்ணெதிரே
மாதென்றுசொல்லிவருமாயைதன்னைமறலிவிட்ட
தூதென்றெண்ணாமற்சுகமென்றுநாடுமித்தூர்ப்புத்தியை
ஏதென்றெடுத்துரைப்பேனிறைவாகச்சியேகம்பனே. ௧௨

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளும்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங்கச்சியேகம்பனே. ௧௩

சீறும்வினையதுபெண்ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினால்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சியேகம்பனே. ௧௪

பொருளுடையோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்தும்
தெருளுடையோரைமுகத்தினுந்தேர்ந்துதெளிவதுபோல்
அருளுடையோரைத்தவத்திற்குணத்திலருளிலன்பில்
இருளறுசொல்லினுங்காணத்தகுங்கச்சியேகம்பனே. ௧௫

பருத்திப்பொதியினைப்போலேவயிறுபருக்கத்தங்கள்
துருத்திக்கறுசுவைபோடுகின்றார்துறந்தோர்தமக்கு
வருத்தியமுதிடமாட்டாரவரையிம்மாநிலத்தில்
இருத்திக்கொண்டேனிருந்தாயிறைவாகச்சியேகம்பனே. ௧௬

பொல்லாவிருளகற்றுங்கதிர்கூகையின்புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடுமாறொக்குமேயறிவோருளத்தில்
வல்லாரறிவாரறியார்தமக்குமயக்கங்கண்டாய்
எல்லாம்விழிமயக்கேயிறைவாகச்சியேகம்பனே. ௧௭

வாதுக்குச்சண்டைக்குப்போவார்வருவார்வழக்குரைப்பார்
தீதுக்குதவியுஞ்செய்திடுவார்தினந்தேடியொன்று
மாதுக்களித்துமயங்கிடுவார்விதிமாளுமட்டும்
ஏதுக்கிவர்பிறந்தாரிறைவாகச்சியேகம்பனே. ௧௮

ஓயாமற்பொய்சொல்வர்நல்லோரைநிந்திப்பருற்றுப்பெற்ற
தாயாரைவைவர்சதியாயிரஞ்செய்வர்சாத்திரங்கள்
ஆயார்பிறர்க்குபகாரஞ்செய்யார்தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்னபோயென்னகாண்கச்சியேகம்பனே. ௧௯

அப்பென்றும்வெண்மையதாயினுமாங்கந்நிலத்தியல்பாய்த்
தப்பின்றியேகுணவேற்றுமைதான்பலசார்தலினால்
செப்பிலபக்குவபக்குவமாயுள்ளசீவனிலும்
இப்படியேநிற்பனெந்தைபிரான்கச்சியேகம்பனே. ௨0

நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியும்
தாயார்வயிற்றினரராய்ப்பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன
ஈயாமனிதரையேன்படைத்தாய்கச்சியேகம்பனே. ௨௧

ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம்பற்றுமையாபுரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந்தாளுடையாய்குன்றவில்லுடையாய்
ஏற்றுக்கொடியுடையாயிறைவாகச்சியேகம்பனே. ௨௨

பெண்ணாகிவந்தொருமாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
எண்ணாதுனைமறந்தேனிறைவாகச்சியேகம்பனே. ௨௩

நாவாரவேண்டும்விதஞ்சொல்லுவர்நானினைப்பிரிந்தால்
சாவேனென்றேயிருந்தொக்கவுண்பார்கள்கைதான்வறண்டால்
போய்வாருமென்றுநடுத்தலைக்கேகுட்டும்பூவையருக்
கீவார்தலைவிதியோவிறைவாகச்சியேகம்பனே. ௨௪

கல்லார்சிவகதைநல்லோர்தமக்குக்கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார்குருசொன்னபடி
நில்லாரறத்தைநிலையார்நின்னாமநினைவிற்சற்றும்
இல்லாரிருந்தென்னிறந்தென்புகல்கச்சியேகம்பனே. ௨௫

வானமுகத்தின்சுவையறியாதவர்வண்கனியின்
தானமுதத்தின்சுவையெண்ணல்போலத்தனித்தனியே
தேனமுகத்தின்றெளிவாயஞானஞ்சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவைநன்றல்லவோகச்சியேகம்பனே. ௨௬

ஊற்றைச்சரீரத்தையாபாசக்கொட்டிலையூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியைச்சோறிடுந்தோற்பையைப்பேசரிய
காற்றிற்பொதிந்தநிலையற்றபாண்டத்தைக்காதல்செய்தே
ஏற்றுத்திரிந்துவிட்டேனிறைவாகச்சியேகம்பனே. ௨௭

சொல்லால்வருங்குற்றஞ்சிந்தனையால்வருந்தோடஞ்செய்து
பொல்லாததீவினைப்பார்வையிற்பாவங்கள்புண்ணியநூல்
அல்லாதகேள்வியைக்கேட்டிடுந்தீங்குகளாயவுமற்
றெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. ௨௮

முட்டற்றமஞ்சளையெண்ணெயிற்கூட்டிமுகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப்பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில்வெளிமயக்கேசெயும்பாவையர்மேல்
இட்டத்தைநீதவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே. ௨௯

பிறந்துமண்மீதிற்பிணியேகுடிகொண்டுபேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின்மேன்மயலாகிப்புன்மாதருக்குள்
பறந்துழன்றேதடுமாறிப்பொன்றேடியப்பாவையர்க்கீந்
திறந்திடவோபணித்தாயிறைவாகச்சியேகம்பனே ௩0

பூதங்களற்றுப்பொறியற்றுச்சாரைம்புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப்பேராசைதானற்றுப்பின்முனற்றுக்
காதங்கரணங்களுமற்றவானந்தக்காட்சியிலே
ஏதங்களைந்திருப்பேனிறைவாகச்சியேகம்பனே. ௩௧

நல்லாயெனக்குமனுவொன்றுதந்தருண்ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதியல்பூசைசெயம்
சொல்லார்நற்கோயினியமம்பலவகைத்தோத்திரமும்
எல்லாமுடிந்தபின்கொல்லுகண்டாய்கச்சியேகம்பனே. ௩௨

சடக்கடத்துக்கிரைதேடிப்பலவுயிர்தன்னைக்கொன்று
விடக்கடித்துக்கொண்டிறுமாந்திருந்துமிகமெலிந்து
படக்கடித்தின்றுழல்வார்கடமைக்கரம்பற்றிநமன்
இடக்கடிக்கும்பொழுதேதுசெய்வார்கச்சியேகம்பனே. ௩௩

நாறுமுடலைநரிப்பொதிசோற்றினைநான்றினமும்
சோறுங்கறியுநிரப்பியபாண்டத்தைத்தோகையர்தம்
கூறுமலமுமிரத்தமுஞ்சோருங்குழியில்விழா
தேறும்படியருள்வாயிறைவாகச்சியேகம்பனே. ௩௪

சொக்கிட்டரமனைப்புக்குட்டிருடியதுட்டர்வந்து
திக்குற்றமன்னரைக்கேட்பதுபோற்சிவனிந்தைசெய்து
மிக்குக்குருலிங்கசங்கமநிந்தித்துவீடிச்சிக்கும்
எக்குப்பெருத்தவர்க்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே.

விருந்தாகவந்தவர்தங்களுக்கன்னமிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெறவாழ்வார்நின்னுமைத்தைப்போற்றிநித்தம்
அருந்தாமுலைப்பங்கரென்னுதபாதகரம்புவியுள்
இருந்தாவதேதுகண்டாயிறைவாகச்சியேகம்பனே. ௩௬

எல்லாமறிந்துபடித்தேயிருந்தெமக்குள்ளபடி
வல்லானறிந்துளனென்றுணராதுமதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறுசூழ்விதியின்படிதுக்கித்துப்பின்
எல்லாஞ்சிவன்செயலேயென்பர்காண்கச்சியேகம்பனே. ௩௭

பொன்னைநினைந்துவெகுவாகத்தேடுவர்பூவையன்னாள்
தன்னைநினைந்துவெகுவாயுருகுவர்தாரணியில்
உன்னைநினைந்திங்குனைப்பூசியாதவுலுத்தரெல்லாம்
என்னையிருந்துகண்டாயிறைவாகச்சியேகம்பனே. ௩௮

கடுஞ்சொல்லின்வம்பரையீனரைக்குண்டரைக்காமுகரைக்
கொடும்பவமேசெயுநிர்மூடர்தம்மைக்குவலயத்துள்
நெடும்பனைபோலவளர்ந்துநல்லோர்தநெறியறியா
இடும்பரையேன்வகுத்தாயிறைவாகச்சியேகம்பனே. ௩௯

கொன்றேனனேகமுயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்று
தின்றேனதன்றியுந்தீங்குசெய்தேனதுதீர்கவென்றே
நின்றேனின்சந்நிதிக்கேயதனுக்குற்றநீபொறுப்பாய்
என்றேயுனைநம்பினேனிறைவாகச்சியேகம்பனே. ௪0

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பத்திருவிருத்தம்.

அன்னையெத்தனையெத்தனையன்னையோ
வப்பனெத்தனையெத்தனையப்பனோ
பின்னையெத்தனையெத்தனைபெண்டிரோ
பிள்ளையெத்தனையெத்தனைபிள்ளையோ
முன்னையெத்தனையெத்தனைசன்மமோ
மூடனாயடியேனுமறிந்திலேன்
இன்னமெத்தனையெத்தனைசன்மமோ
வென்செய்வேன்கச்சியேகம்பநாதனே.

திருச்சிற்றம்பலம்.

---

௧௨. திருத்தொண்டர்புராணம்.

சேக்கிழார் நாயனார்.

விடையின்மேலவர்மலைமகள்வேண்டவிரும்புபூசனைமேவிவீற்றிருந்தே
இடையறுவறமாக்கும்வித்தாகவிகபரத்திருநாழிநெல்லளித்துக்
கடையராகியுமுயர்ந்தவராகியுங்காஞ்சிவாழ்பவர்தாஞ்செய்தீவினைத்
தடைபடாதுமெய்ந்நெறியுடைவதற்காந்தவங்களாகவுமுவந்தருள்செய்தார்.

திருச்சிற்றம்பலம்.

உ

குகமயம்.

முருகக்கடவுடுணை

ஸ்ரீமத்-அருணகிரிநாதசுவாமிகள்

செய்தருளிய

திருப்புகழ்.

குழிப்பு.

௧. தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன—தனதானா.

முத்தைத்தரு பத்தித் திருநகை
யத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருப்ர   எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு   மடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
வொற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி   லிரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயன் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது   மொருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு   கழுதாடத்

திக்குப்பரி யட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக   எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென   முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல   பெருமாளே.

குமரகோட்டம்.

௨. தத்தத்தத் தத்தத்தத்—தனதானா.

கருப்பற்றிப் பருத்தோங்கத் தரைக்குற்றிட் டுருப்பெற்றுக்
கருத்திற்கட் பொருட்பட்டுப் பயில்காலங்
கணக்கிட்டுப் பிணக்கிட்டுக் கதித்திட்டுக் கொதித்திட்டுக்
கயிற்றிட்டுப் பிடித்திட்டுச் சமனாவி

பெருக்கப்புத் தியிற்பட்டுப் புடைத்துக்கக் கிளைப்பிற்பொய்ப்
பிணத்தைச்சுட் டகத்திற்புக் கனைவோரும்
பிறத்தற்சுற் றமுற்றுற்றிட் டழைத்துத்தொக் கறக்கத்துப்
பிறப்புப்பற் றறச்செச்சைக் கழலாராய்

பொருப்புக்கர்ப் புரக்கச்சுத் தளப்பொற்புத் தினைப்பச்சைப்
புனக்கொச்சைக் குறத்தத்தைக் கினியோனே
புரத்தைச்சுட் டெரித்துப்பற் றலர்க்குப்பொற் பதத்துய்ப்பைப்
புணர்த்தப்பித் தனைக்கற்பித் தருள்வோனே

செருக்க்குக் கரைக்குத்திச் செருப்புக்குப் பிடித்தெற்றிச்
சினத்திட்டுச் சிதைத்திட்டுப் பொரும்வீரா
திருத்தத்திற் புகழ்ச்சுத்தத் தமிழ்ச்செப்புத் த்ரயச்சித்ரத்
திருக்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே.

௩. தனத்தத்தத் தனத்தத்தத்—தனதானா.

இதத்துப்பும் றிதழ்த்துப்பற் றிருட்பொக்கக் கருத்திட்டத்
தியக்கத்திற் றியக்குற்றுச் சுழலாதே
வெலுப்புச்சுக் கிலக்கத்தத் தடித்தொக்குக் கட்த்தைப்பெற்
றெடுத்துப்பற் றடுத்தற்பத் துழலாதே

சுதத்தத்தச் சதத்தத்தப் பதத்தார்க்குற் றவற்றைச்சொற்
றுவக்கிற்பட் டவத்தைப்பட் டயராதே
துணைச்செப்பத் தலர்க்கொத்துற் பலச்செச்சைத் தொடைப்பத்திக்
கடப்பப்பொற் கழற்செப்பித் தொழுவேனோ

கொதித்துக்குத் திரக்கொக்கைச் சதித்துப்பற் றிகைக்குட்பொற்
குலத்தைக்குத் திரத்தைக்குத் தியவேலா
குறத்தத்தைக் கறத்தத்திக் குமுத்தத்தத் தமொக்கிக்குக்
குலத்துக்குக் குடக்கொற்றக் கொடியோனே

கதச்சுத்தச் சுதச்சித்ரக் களிற்றுக்கொற் றவற்குக்கற்
பகச்சொர்க்கப் புரப்பொற்பைப் புரிவோனே
கடுக்கைக்கட் செவிக்கற்றைச் சடைப்பக்கக் கொடிக்கற்புக்
கடற்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே.

௪. தனத்தத்தத் தனத்தத்தத்—தனதானா.

எனக்குச்சற் றுனக்குச்சற் றெனக்கத்தத் தவர்க்கிச்சைப்
பொருப்பொற்றட் டிடிக்கைக்குக் குடின்மாய
மனக்கட்டைக் கிடைப்பட்டிட் டனற்சுட்டிட் டடக்கைக்குப்
பிறக்கைக்குத் தலத்திற்புக் கிடியாமுன்

தினைக்குட்சித் திரக்கொச்சைக் குறத்தத்தைத் தனத்தைப்பொற்
பெறச்செச்சைப் புயத்தொப்பித் தணிவோனே
செருக்கிச்சற் றுறுக்கிச்சொற் பிரட்டத்துட் டரைத்தப்பித்
திரட்டப்பிக் கழற்செப்பத் திராரூராய்

பனைக்கைக்கொக் கனைத்தட்டுப் படக்குத்திப் பிடச்சற்பப்
பணத்துட்கக் கடற்றுட்கப் பொரும்வேலா
பரப்பற்றுச் சுருக்கற்றுப் பதைப்பற்றுத் திகைப்பற்றுப்
பலிப்பப்பத் தருக்கொப்பித் தருள்வாழ்வே

கனிக்குத்திக் கனைத்துச்சுற் றிடப்பச்சைக் கனப்பட்சிக்
கிடைப்புக்குக் களிப்புக்குத் திரிவோனே
கலிக்கொப்பிற் சலிப்பற்றுக் கதிக்கொத்திட் டெழிற்சத்திக்
கடற்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே.

௫. தனத்தத்தத் தனத்தத்தத்—தனதான.

இறைச்சிப்பற் றிரத்தத்திட் டிசைக்கொக்கப் பரப்பப்பட்
டெலுப்புக்கட் டளைச்சுற்றிச் சுவர்கோலி
யெடுத்துச்செப் பெனக்கட்டிப் புதுக்குப்புத் தகத்திற்புக்
கெனக்குச்சற் றுனக்குச்சற் றெனுமாசைச்

சிறைக்கொத்திப் பிறப்பிற்பட் டுறக்கச்சொப் பனத்துற்றுத்
திகைக்கப்பட் டவத்தைப்பட் டுழலாதுன்
றிருப்பத்மத் திறத்தைப்பற் றுகைக்குச்சித் திரத்தைச்சொற்
றிதக்கொற்றப் புகழ்ச்செப்பித் திரிவேனோ

பிறைச்செக்கர்ப் புரைக்கொத்துச் சடைப்பச்சைக் கொடிக்கிச்சைப்
பிறக்குற்றத் திருப்பக்கச் சிவநாதர்
பெருக்கப்புத் தடக்கைக்கற் பகத்தொப்பைக் கணத்துக்குப்
பிரச்சித்தக் கொடிக்குக்டக் கொடியோனே

பறைக்கொட்டிக் களைச்சுற்றக் குறட்செக்கட் கணத்திறகுப்
பலிக்குப்பச் சுடர்க்குத்திப் பகிர்வேலா
பணைப்பத்திக் கணத்துத்திப் படுக்கைக்கச் சபத்திச்சைப்
படுக்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே.

௬. தனத்தத்தத் தனத்தத்தத்—தனதான.

கடத்தைப்பற் றெனப்பற்றிக் கருத்துற்றுக் களித்திட்டுக்
கயற்கட்பொற் பிணைச்சித்ரத் தனமாதர்
கலைக்குட்பட் டறக்கத்திச் சலித்துக்கட் டளைச்சொற்பொய்த்
திரைக்குட்பட் டறச்செத்திட் டுயிர்போனால்

எடுத்துக்கொட் டிடக்கட்டைப் படத்தெட்டத் தணற்றட்டக்
கொளுத்திச்சுற் றவர்பற்றற் றவர்போமு
னிணக்கிப்பத் திமைச்செச்சைப் பதத்தைப்பற் றுகைக்குச்சொற்
றமிழ்க்கொற்றப் புகழ்ச்செப்பித் திரிவேனோ

அடைத்திட்டுப் புடைத்துப்பொற் பதச்சொர்க்கத் தனைச்சுற்றிட்
டலைப்புப்பற் றெனச்சொற்றிட் டறுசூரை
யடித்துச்செற் றிடித்துப்பொட் டெழப்பொர்ப்புப் படக்குத்திட்
டலைத்துச்சுற் றலைத்தெற்றுக் கடன்மாயப்

புடைத்திட்டுப் படிக்குட்செற் றடப்புக்குக் கதத்துக்கக்
கயிற்கொக்கைப் படக்குத்திப் பொருவோனே
புனத்திற்பொற் குறத்திக்குப் புணர்க்கொத்தப் பசப்பெத்திப்
புணர்க்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே.

௭. தன்த்தத் தனத்தத்—தனதான.

கறுக்கப்பற் றுவர்ப்பிட்டுச் சிரித்துச்சற் றுறுக்கிக்கட்
பிறக்கிட்டுப் படக்கற்பித் திளைஞோர்தங்
கழுத்தைச்சிக் கெனக்கட்டித் தனச்செப்புப் படக்குத்திட்
டுருக்கிக்கற் பழிக்கப்பொற் பெழுகாதல்

புறப்பட்டுக் களிக்கக்கற் புரத்தைப்பிட் டரக்கிப்பொற்
பணிக்கட்டிற் புறத்துற்றுப் புணர்மாதர்
பொருத்தத்தைத் தவிர்த்துச்சற் றிரட்சித்துப் புரப்பப்பொற்
பதத்தைப்பெற் றிருக்கைக்குப் பெறுவேனோ

திறற்கொக்கைப் படக்குத்திச் செருக்கிக்கொக் கரித்துச்சக்
கரிக்குப்புத் திரற்குற்றுத் தளைபூணச்
சினத்துப்பொற் பொருப்பைப்பொட் டெழுத்தித்திக் கரித்துப்புத்
திரத்தத்திற் சிரித்துற்றுப் பலபேய்கள்

பறிக்கப்பச் சிறைச்சிக்கட் கறிக்குப்பச் சிரச்சிக்குப்
பரப்பொய்க்கட் டறப்புக்குப் பொருதோனே
பணிச்செச்சைத் தொடைச்சித்ரப் புயுத்துக்ரப் படைச்சத்திப்
படைக்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே.

---

௮. தத்தத் தத்தத்—தன்தான.

அற்றைக் கற்றைக் கொப்பித் தொப்பித் தத்தத் தத்தத் தருவோர்தா
டர்ச்சித் திச்சித் தக்கத் தக்கத் தொக்குத் திக்குக் குடில்பேணி
செற்றைப் புற்சொற் கற்றுக் கற்றுச் செத்துச் செத்துப் பிறவாதே
செப்பச் செப்பப் பச்சைப் பச்சைச் செச்சைச் செச்சைக் கழலூராய்
துற்றுப் பிற்புக் குற்றக் கொக்கைத் துட்கத் திட்கப் பொரும்வேலா
சுத்தப் பத்திச் சித்ரச் சொர்க்கச் சொர்க்கத் தத்தைக் கினியோனே
கற்றைப் பொற்றைப் பற்றக் குத்திக் கத்தக் கத்தக் களைவோனே
கற்புச் சத்திப் பொற்புச் சத்திக் கச்சிச் சொக்கப் பெருமாளே.

௯. தத்தத் தத்தத்—தனதான.

சுத்தச் சித்தத் தொற்பத் தர்க்குச் சுத்தப் பட்டிட் டமுறாதே
தொக்கப் பொக்கச் சிற்கட் சிக்குட் சொற்குற் றத்துத் துறைநாடி
பித்தத் தைப்பற் றித்தைத் தற்றுற் றொத்துக் கித்திப் பிணிமாதர்
பெட்டிற் கட்டுத் தட்டுப் பட்டுப் பிற்பட் டிட்டுத் தளர்வேனோ
அத்தத் தத்திக் கத்தற் கெய்த்தத் தத்திக் கத்துப் பலமீவா
யர்ச்சித் துப்பொற் செக்கொச் சைத்தத் தைக்குச் செச்சைத் தொடைசூழ்வாய்
கத்தத் தித்தத் தத்திற் கொக்கைக் கைத்தச் சத்திப் படையேவுங்
கற்புச் சத்திப் பொற்புச் சத்திக் கச்சிச் சொக்கப் பெருமாளே.

க0. தத்தத் தத்தத் தத்தத் தத்தத் தத்தத் தனனத்—தனதானா.

தத்தித் தத்திச் சட்டப் பட்டுச் சத்தப் படுமைக் கடலாலே
சர்ப்பத் தத்திற் பட்டுக் கெட்டுத் தட்டுப் படுமப் பிறையாலே
சித்தத் துக்குப் பித்துற் றுச்சச் சித்ரக் கொடியுற் றழியாதே
செப்பக் கொற்றச் சிற்பப் பத்திச் செச்சைத் தொடையைத் தரவேணும்
கொத்துத் திக்குப் பத்துட் புக்குக் குத்திக் கிரியைப் பொரும்வேலா
கொச்சைப் பொச்சைப் பொற்பூம் பச்சைக் கொச்சைக் குறவிக் கினியோனே
சுத்தப் பத்தத் தர்க்குச் சித்தத் துக்கத் தையொழித் திடும்வீரா
சொக்கத் துக்கொப் புற்றக் கச்சிச் சொக்கப் பதியிற் பெருமாளே.

கக. தத்தத்தத் தத்தத்—தனதானா.

பொக்குப்பைக் கத்தத் தொக்குப்பைக் குத்துப்
பொய்த்தெத்துத் தத்துக் குடில்பேணிப்
பொச்சைப்பிச் சற்பக் கொச்சைச்சொற் கற்றுப்
பொற்சித்ரக் கச்சுக் கிரியார்தோய்

துக்கத்துக் கத்திற் சிக்குப்பட் டிட்டுத்
துக்கித்துக் கெய்த்துச் சுழலாதே
சுத்தச்சித் தத்துப் பத்திப்பத் தர்க்கொத்
துச்சற்றர்ச் சிக்கப் பெறுவேனோ

திக்குத்திக் கற்றுப் பைத்தத்தத் திக்குச்
செற்பத்தரக் கொக்கைப் பொரும்வேலா
செப்பச்சொர்க் கத்துச் செப்பொற்றத் தைக்குச்
செச்சைக்கொத் தொப்பித் தணிவேனோ

கக்கக்கைத் தக்கக் கக்கட்கக் கக்கிக்
கடகத்தத் தர்க்குப் பெரியோனே
கற்றைப்பொற் றெத்தப் பெற்றப்பொற் சிற்பக்
கச்சிக்குட் சொக்கப் பெருமாளே.

கஉ. தத்தத்தத் தத்தத்—தனதானா.

அயிலப்புக் கயலப்புத் தலைமெச்சுற் பலநச்சுக்
கணூரத்தைக் கனவெற்புத் தனமேக
மளகக்கொத் தெனவொப்பிப் புளுகிச்சொற் பலகற்பித்
திளக்கிக்கற் புளநெக்கித் தடுமாறித்

துயில்விட்டுச் செயல்விட்டுத் துயர்வுற்றுக் கயற்வுற்றுத்
தொடியர்க்கிப் படியெய்த்துச் சுழலாதே
சுருதிப்பொற் பொள்செக்கர்க் குரவிட்டுத் தமர்பற்றித்
தொழுசெச்சைக் கழல்பூற்றிப் பணிவேனோ

புயலத்தைக் குயிறத்தைக் கிளைபுக்குத் துளைபச்சைப்
புனமுத்தைப் புணர்சித்ரப் புயவீரா
புரவிக்கொட் பிரதற்தற்றத் திருடிக்கிப் படிமட்கப்
புகல்பொற்குக் குடவெற்றிக் கொடியோனே

கயிலச்சுத் தரதத்துச் சயில்த்துத் தரஙிற்கக்
கரணிச்சித் தருள்கச்சிப் பதியோனே
கடலிற்கொக் கடல்கெட்டுக் கரமுட்கத் தரமுட்கப்
பொருசத்திக் கரசொக்கப் பெருமாளே.

கங. தனந்தத்தத் தனந்தத்தத்—தனதானு.

தனஞ்சற்றுக் குலுங்கப்பொற்
கலன்கட்பட் டிலங்கப்பொற்
சதங்கைக்கற் சிலம்பொத்திக் கையில்வீணை

ததும்பக்கைக் குழந்தைச்சொற்
பரிந்தற்புக் கிதங்கப்பொற்
சரஞ்சுற்றிட் டிணங்கக்கட் சரவேலால்

திளம்பித்திட் டிணங்கிச்சேர்ப்
கரங்கட்டிப் புணர்ந்திட்டுத்
திளங்தெட்டிக் கடன்பற்றிக் கொளுமாதர்

சிலம்பத்திற் றிரிந்துற்றிட்
டவம்புக்கக் குணஞ்செற்றுச்
சிவம்பெற்றுத் தவம்பற்றக் கழருராய்

தனந்தத்தத் தனந்தத்தத்
தடுண்டுட்டுட் டிடிண்டிட்டிட்
டடண்டட்டட் டிமிண்டுட்டுட் டியருளங்

தகுந்தொத்தித் திமிந்தித்தித்
நவண்டைக்குட் கயர்ந்துக்கத்
நகண்டத்தர்க் குடன்பட்டுற் றசுராளைச்

சினந்தத்திக் கொளுந்தக்கைச்
சரங்தொட்டுச் சதம்பொர்ப்பைச்
சிரந்தத்தப் பிளந்துட்கக் கிரிதூளாச்

செகந்துக்குச் சுபம்பெற்றுத்
துலங்கப்பொர்க் களம்புக்குச்
செயம்பற்றிக் கொளுஞ்சொக்கப் பெருமாளே.

கச. தத்தத் தனதத்—தனதானு.

சத்தப் படுமைக் கடலாலே தட்டுப் படுமைப் பிறையாலே
சித்ரக் கொடியுற் றழியாதே செச்சைத் தொடையைத் தரவேணும்
குத்திக் கிரியைப் பொரும்வேலா கொச்சைக் குறவிக் கினியோனே
துக்கத் தையொழித் திடும்வீரா சொக்கப் பதியிற் பெருமாளே.

கரு. தத்தத தத்தத்—தனதானு.

முட்டுப் பட்டுக் கதிதோறும் முற்றச் சுற்றிப் பலநாளும்
தட்டுப் பட்டுச் சுழல்வேனைச் சற்றுப் பற்றக் கருதாதோ
வட்டப் புட்பத் தலமீதே வைக்கத் தக்கத் திருப்பாதா
கட்டத் தற்றத் தருள்வோனே கச்சிச்சொக்கப் பெருமாளே.

கசு. தந்த தாத்தன தன்ன தனந்தன தத்தத் தத்தத்—தனதான.

வம்ப ருச்சில கன்ன மிடுஞ்சம யத்துக் கத்துத் திரையாளர்
வன்க லாத்திர டன்னை யகன்றும னத்திற் பற்றற் றருளாலே
தம்ப ராக்கற நின்னை யுணர்ந்துரு கிப்பொற் பத்மக் கழல்சேர்வார்
தங்கு ழாத்தினி லென்னையு மன்பொடு வைக்கச் சற்றுக் கருதாதோ
வெம்ப ராக்ரம மின்ன யில்கொண்டொரு வெற்புப் பொட்டுப் படமாசூர்
வென்ற பார்த்திப பன்னிரு திண்புய வெட்சித் சித்ரத் திருமார்பா
கம்ப ராய்ப்பணி மன்னு புயம்பெறு கைக்குக் கற்புத் தவறாதே
கம்பை யாற்றினி லன்னை தவம்புரி கச்சிச் சொக்கப் பெருமாளே.

கஎ. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதான.

அதிமதங் கக்கப் பக்கமு கக்குஞ்
சரதனந் தைக்கச் சிக்கென நெக்கங்
கனைநருஞ் செச்சைப் பொற்புய னத்தன் குறவாண
ரடவியந் தத்தைக் கெய்த்துரு கிச்சென்
றடிபணிந் திட்டப் பட்டும யற்கொண்
டயர்பவன் சத்திக் கைத்தல னித்தன் குமரேசன்
துதிசெயுஞ் சுத்தப் பத்தியர் துக்கங்
களைபவன் பச்சைப் பட்சிந டத்துந்
துணைவனென் றர்ச்சித் திச்சைத ணித்துன் புகழ்பாடி
சுருதியின் கொத்துப் பத்தியு முற்றுந்
துரியமுந் தப்பித் தத்வம னைத்துந்
தொலையுமந் தத்துக் கப்புற நிற்கும் படிபாராய்
கதிபொருந் தக்கற் பித்துந டத்துங்
கனறலம் புக்குச் சக்ரமெ டுக்குங்
கடவுளும் பத்மத் தச்சனு முட்கும் படிமோதி
கதிரவன் பற்குற் றிக்குயி லைத்திண்
சிறகரிந் தெட்டுத் திக்கர்வ குக்குந்
கடகமுந் தட்டுப் பட்டொழி யக்கொன் றபிராமி
பதிவிர்தம் பற்றப் பெற்றம கப்பெண்
பரிவொழிந் தக்கிக் குட்படு தக்கன்
பரிபவம் பட்டுக் கெட்டொழி யத்தன் செவிபோயப்
பனவிபங் கப்பட் டப்படி வெட்கும்
படிமுனிந் தற்றைக் கொற்றம்வி ளைக்கும்
பரமர்வந் திக்கக் கச்சியு றைக்கும் பெருமாளே.

கஅ. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதான.

கனகதம் பத்தைச் செச்சையை மெச்சுங்
கடகசங் கத்துப் பொற்புய வெற்பன்
கடலுள்வஞ் சித்துப் புக்கதொர் கொக்கும் பொடியாகக்
கறுவுசெஞ் சத்திப் பத்மக ரத்தன்
குமரனென் றர்ச்சித் தப்படி செப்புங்
கவிபொழிந் தத்தைக் கற்றற வுற்றும் புவியோர்போய்

குனகியுங் கைக்குக் கற்பக மொப்பென்
றனகனென் றிச்சைப் பட்டத ளிக்குங்
குமுணனென் றொப்பிட் டித்தனை பட்டிங் கிரவான
குருடுகொண் டத்தச் சத்தம னைத்துந்
திருடியுஞ், சொற்குத் தக்கதொ டுத்துங்
குலவியுங் கத்திப் பட்டக லக்கந் தெளியாதோ
சனகனன் புற்றுப் பெற்றம டப்பெண்
டனிபெருங் கற்புச் சக்ரந டத்துந்
தகையிலங் கைச்சுற் றத்தைமு ழுத்துஞ் சுடவேவெஞ்
சமரசண் டக்கொற் றத்தவ ரக்கன்
கதிர்விடும் பத்துக் கொத்துமு டிக்குந்
தனியொரம் பைத்தொட் டுச்சுரர் விக்னங் களைவோனும்
தினகரன் சொர்க்கத் துக்கிறை, சுக்ரன்
சசிதரன் றிக்குக் கத்தர கத்யன்
திசைமுகன் செப்பப் பட்டவ சிட்டன் றிரள்வேதஞ்
செகதலஞ் சுத்தப் பத்தியர் சித்தஞ்
செயலொழிந் தற்றுப் பெற்றவர் மற்றுஞ்
சிவனும்வந் திக்கக் கச்சியு ணிற்கும் பெருமாளே.

கசூ. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதான.

செடியுடம் பத்தித் தெற்றியி ரத்தஞ்
செறிநரம் பிட்டுக் கட்டிய சட்டஞ்
சிறைதிரண் டொக்கத் தொக்கவி னைப்பந் தவிகாரந்
திமிர்தருங் கத்தத் துத்திரை யெற்றுஞ்
சினனபங் கத்துத் துக்கக டற்கண்
டிருகுரும் பைப்பட் டுச்சுழ றெப்பங் கரணுதி
குடிபுகும் பொக்கப் புகலிலி றப்பின்
குடிலம்வெந் தொக்குக் கொட்டின்ம லத்தின்
குகைசுமந் தெட்டுத் திக்கிலு முற்றுந் தடுமாறுங்
குவலயங் கற்றுக் கத்தியி ளைக்குஞ்
சமயசங் கத்தைத் தப்பியி ருக்குங்
குணமடைந் துட்பட் டொக்க விருக்கும் படிபாராய்
படிதருங் கற்புக் கற்பக மூக்கண்
கொடிபசுஞ் சித்ரக் குத்தர முத்தம்
பணிநிதம் பத்துச் சத்தி யுகக்குங் குமரேசா
பரவசங் கெட்டெட் டக்கர நித்தம்
பரவுமன் பர்க்குச் சித்திய ளிக்கும்
பரமர்வந் திக்கத் தக்கப தத்தன் குருநாதா
தொடியிடும் பத்மக் கைக்குமி டைக்குஞ்
சுருள்படும் பத்திப் பட்டகு ழற்குந்
துகிர்கடைந் தொப்பித் திட்டவி தழ்க்குங் குறமானின்
சுடர்படுங் கச்சுக் கட்டுமு லைக்குந்
துவளுநெஞ் சத்தச் சுத்தவி ருக்குஞ்
சுரரும்வந் திக்கக் கச்சியு ணிற்கும் பெருமாளே.

உ0. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதானு.

கனக்ரவுஞ் சத்திற் சத்தியை விட்டன்
றசுரர்தண் டத்தைச் செற்றவி தழ்ப்பங்
கயனைமுன் குட்டிக் கைத்தளை யிட்டும் பரையாளுங்
கடவுளன் புற்றுக் கற்றவர் சுற்றுஞ்
பெரியதும் பிக்கைக் கற்பக முற்றங்
கரதலம் பற்றப் பெற்றவொ ருத்தன் சகதாதை
புனவிளந் தத்தைக் கிச்சையு ரைக்கும்
புரவலன் பத்தர்க் குத்துணை நிற்கும்
புதியவன் செச்சைப் புட்பம ணக்கும் பலபாரப்
புயனெனுஞ் சொற்கற் றுப்பிற கற்கும்
பசையொழிந் தத்தத் திக்கென நிற்கும்
பொருளொடாறும் பொத்தப் பட்டதொ ரத்தம் பெறுவேனே
அனல்விடுஞ் செக்கட் டிக்கய மெட்டும்
பொரவரிந் திட்டெட் டிற்பகு திக்கொம்
பணிதருஞ் சித்ரத் தொற்றையு றத்தன் றிடமாக
வடியொடும் பற்றிப் பொற்கயி லைக்குன்
றதுபிடுங் கப்புக் கப்பொழு தக்குன்
றணிபுயம் பத்துப் பத்துநெ ரிப்புண் டவனீடுந்
தனதொரம் குட்டத் தெட்பல டுக்குஞ்
சரியலன் கொற்றத் துக்ரவ ரக்கன்
றசமுகன் கைக்குக் கட்கம ளிக்கும் பெரியோனுந்
தலைவியும் பக்கத் தொக்கவி ருக்குஞ்
சயிலமுந் தெற்குச் சற்குரு வெற்புந்
தணியலும் பெற்றுக் கச்சியு ணிற்கும் பெருமாளே.

உக. தனனதந் தத்தத் தத்தன தத்தன—தனதானு.

தெரியலஞ் செச்சைக் கொத்துமு டிக்கும்
பரிதிகந் தத்தைச் சுற்ற நடத்துஞ்
சிறைவிடுஞ் சொர்க்கத் துச்சுர ரைக்கங் கையில்வாழுஞ்
சிறுவனென் றிச்சைப் பட்டுப ஜிக்கும்
படிபெரும் பத்திச் சித்ரக வித்வஞ்
சிறிதுமின் றிச்சித் தப்பரி சுத்தம் பிறவாதே
பரிகரஞ் சுற்றத் தக்கப்ரபுத்வம்
பதறியங் கட்டப் பட்டனர் தத்வம்
பலவையுங் கற்றுத் தர்க்கம் தத்வம் பழியாதே
பரபதம் பற்றப் பெற்றவெ வர்க்கும்
பரவசம் பற்றிப் பற்றற நிற்கும்
பரவ்ரதம் பற்றப் பெற்றிலன் மற்றென் றுயர்போமோ
சரியுடன் றத்திப் பத்திமு டிச்செம்
பணதரங் கைக்குக் கட்டிய நெட்டன்
றனிசிவன் பக்கத் தற்புதை பற்பந் திரிசூலந்

தரிகரும் பொக்கத் தக்கமொ ழிச்சுந்
தரியரும் பிக்கப் பித்தத னத்தந்
தரிசுரும் பிக்குப் பத்ரையெ வர்க்குந் தெரியாத

பெரியபண் டத்தைச் சத்திய பித்தன்
பிரிதியுண் டற்புப் ப்ச்சையெ றிக்கும்
ப்ரபையுடன் டிற்கைப் பத்மம டப்பெண் கொடிவாழ்வே

பிரமரண் டத்தைத் தொட்டதொர் வெற்பும்
பிளவிடுஞ் சத்திக் கைத்தல நித்தம்
பெருமிதம் பெற்றுக் கச்சியு ணிற்கும் பெருமாளே.

உஉ. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதான.

புனமடந் தைக்குத் தக்கபு யத்தன்
குமரனென் றெத்திப் பத்தர்து திக்கும்
பொருளெனெஞ் சத்துக் கற்பனை முற்றும் பிறிதேதும்

புகலுமெண் பத்தெட் டெட்டிய றத்வஞ்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொதுவையென் றுரைக்கத் தக்கதொ ரத்தந் தனைநாளும்

சினமுடன் றர்க்கித் துச்சிலு கிக்கொண்
டறுவருங் கைக்குத் திட்டொரு வர்க்குந்
தெரிவருஞ் சத்யத் தைத்தெரி சித்துன் செயல்பாடித்

திசைதொறுங் கற்பிக் கைக்கினி யற்பந்
திருவுளம் பற்றிச் செச்சைம ணக்குஞ்
சிறுசதங் கைப்பொற் பத்மமெ னக்கென் றருள்வாயே

கனபெருந் தொப்பைக் கெட்பொரி யப்பங்
கனிகிழங் கிக்குச் சர்க்கரை முக்கண்
கடலைகண் டப்பிப் பிட்டொடு முக்குந் திருவாயன்

கவளதுங் கக்கைக் கற்பக முக்கண்
டிகழுநங் கொற்றத் தொற்றைம ருப்பன்
கரிமுகன் சித்ரப் பொற்புகர் வெற்பன் றனையீனும்

பனவியொன் றெட்டுச் சக்ரத லப்பெண்
கவுரிசெம் பொற்பட் டுத்தரி யப்பெண்
பழயவண் டத்தைப் பெற்றம டப்பெண் பணிவாரைப்

பவதரங் கத்தைத் தப்பவி றுத்தும்
பவதிகம் பர்க்குப் புக்கவள் பக்கம்
பயில்வரம் பெற்றுக் கச்சியு ணிற்கும் பெருமாளே.

உங. தனனதந் தத்தத் தத்தன தந்தம்—தனதான.

கனிதருங் கொக்குக் கட்செவி வெற்பும்
பழநியுந் தெற்குச் சற்குரு வெற்புங்
கதிரையுஞ் சொற்குட் பட்டதி ருச்செந் திலும்வேலுங்

கனவிலுஞ் செப்பத் தப்புமெ னச்சங்
கடவுடம் புக்குத் தக்கவ னைத்துங்
களவுகொண் டிட்டுக் கற்பனை யிற்கண் சுழல்வேனை

புனிதமனம் மமக்குக் கைத்தல ரத்னம்
பழுட்கங் கைக்குற் றப்புது முத்தம்
புவியிலன் றைக்கற் றெய்ப்பவர் வைப்பென் றுருகாவெப்

பொழுதும்வந் திக்கைக் கற்றவெ னைப்பின்
பிழையுடன் பட்டுப் பத்தருள் வைக்கும்
பொறையையென் செப்பிச் செப்புவ் தொப்பொன் றுளதோதான்

அனனியம் பெற்றற் றற்றொரு பற்றுந்
தெளிதருஞ் சித்தர்க் குத்தெளி சிற்கோந்
தமலைதென் கச்சிப் பிச்சிம லர்க்கோந் தளபாரை

யறவிருண் பச்சைப் பொற்கொடி கற்கண்
டமுதினுந் தித்திக் கப்படு சொற்கோம்
பகில வண்டத்துற் பத்திசெய் முத்தின் பொலமேரு

தனிவடம் பொற்புப் பெற்றமு லைக்குன்
றிணைசுமந் தெய்க்கப் பட்டரு சுப்பின்
தருணிசங் கும்றுத் தத்துதி ரைக்கம் பையினூடே

தவமுயன் றப்பொற் றப்படி கைக்கொண்
டறமிரண் டெட்டெட் டெட்டும்வ ளர்க்கும்
தலைவிபங் கர்க்குச் சத்யமு ரைக்கும் பெருமாளே.

உச. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதான.

செறிதருஞ் செப்பத் துற்பல வெற்பும்
பிறிதுமங் கத்தைக் குற்றவி ருப்புஞ்
சிகரிதுண் டிக்கக் கற்றத னிச்செஞ் சுடர்வேலுந்

திரள்புயங் கொத்துப் பட்டவ னைத்துந்
தெளியநெஞ் சத்துப் புற்றும யக்கந்
திகழ்ப்ரபஞ் சத்தைப் புற்புத மொக்கும் படிநாடும்

அறிவறிந் தத்தற் கற்றது செப்புங்
கடவுளன் பத்தர்க் கச்சம றுத்தன்
பருள்பவன் பொற்புக் கச்சியு ணிற்கும் பெருமாளென்

றவிழுமன் புற்றுக் கற்றும னத்தின்
செயலொழிந் தெட்டப் பட்டத னைச்சென்
றடைதரும் பக்வத் தைத்தமி யெற்கென் றருள்வாயே

குறியவன் செப்பப் புட்டவெ வர்க்கும்
பெரியவன் கற்பிக் கப்படு சுக்ரன்
குலைகுலைந் துட்கச் சத்யமி முற்றுஞ் சிறுபாலன்

குதலையின் சொற்குத் தர்க்கமு ரைக்குங்
கனகனங் கத்திற் குத்திநி ணஞ்செங்
குடர்பிடுங் கித்திக் குற்றமு கச்சிங் கமுகாரி

பொறிவிடுந் துத்திக் கட்செவி யிற்கண்
டுயில்கொளுஞ் சக்ரக் கைக்கிரி சுத்தம்
புயலெனும் பொற்புப் பெற்றநி றத்தன் சகதாதை

புனிதசங் கத்துக் கைத்தல நிர்த்தன்
பழையசங் கத்தைப் பெற்றம டப்பெண்
புகலுகொண் டற்குச் சித்திய ளிக்கும் பெருமாளே.

௭௫. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதானா.

கறையிலங் குக்ரச் சத்தித ரிக்குஞ்
சரவணன் சித்தத் துக்குளொ ளிக்குங்
கரவடன் கொற்றக் குக்குட வத்தன் தனிவீரக்

கழலிடும் பத்மக் கட்செவி வெற்பன்
பழநிமன் கச்சிக் கொற்றவன் மற்றுங்
கடகவஞ் சிக்குக் கர்த்தனெ னச்செந் தமிழ்பாடிக்

குறையிலன் புற்றுக் குற்றம றுக்கும்
பொறைகணந் தற்பப் புத்தியை விட்டென்
குணமடங் கக்கெட் டுக்குண மற்றென் றிலதான

குணமடைந் தெப்பற் றுக்களு மற்றுங்
குறியொடுஞ் சுத்தப் பத்தரி ருக்குங்
குருபதஞ் சித்திக் கைக்கருள் சற்றுங் கிடையாதோ

பிறைகரந் தைக்கொத் துப்பணி மத்தந்
தலையெலும் பப்புக் கொக்கிற கக்கம்
பிரமனன் றெட்டற் கற்றதி ருக்கொன் றையும்வேணிப்

பிறவுநின் றெக்கத் தொக்கு மணக்குஞ்
சரணியம் பத்மக் கைக்கொடி முக்கண்
பெறுகரும் பத்தக் கத்தரு ணற்பங் கயவாவி

திறற்கொளுஞ் சித்ரக் குத்துமு லைக்கொம்
பறியுமந் தத்தைக் கைக்கக மொய்க்குந்
த்ரிபுரைசெம் பட்டுக் கட்டுநு சுப்பின் றிருவான

தெரிவையந் துர்க்கிச் சத்தியெ வர்க்குந்
தெரிவருஞ் சுத்தப் பச்சைநி றப்பெண்
சிறுவதொண் டர்க்குச் சித்திய ளிக்கும் பெருமாளே.

௭௬. தனனதந் தத்தத் தத்தன தத்தந்—தனதான.

அரியயன் புட்பிக் கக்குழு மிக்கொண்
டமரர்வந் திக்கத் தட்டுரு வச்சென்
றவுணரங் கத்தைக் குத்திமு றித்தங் கொருகோடி

வலகைநின் றொத்தித் தித்திய றுத்தும்
பலவியங் கொட்டச் சக்கடி கற்றந்
தறியுடன் பற்றிக் குச்சரி மெச்சும் படிபாடி

பரிமுகங் கக்கச் செக்கண்வி ழித்தும்
பரிவுகொண் டெட்டுத் திக்கையு டைத்தும்
படுகளம் புக்குத் தொக்குந டிக்கும் படிமோதிப்

படைபொருஞ் சத்திப் பத்மநி லைத்துஞ்
சரவணன் கச்சிப் பொற்பனெ னப்பின்
பரவியுஞ் சித்தத் துக்குவ ரத்தொண் டடைவேனோ

பெரியதண் செச்சைக் கச்சணி வெற்புஞ்
சிறியவஞ் சிக்கொத் தெய்த்தநு சுப்பும்
ப்ரிதியொழிந் தொக்கக் கைக்கிளை துத்தங் குரலாதி

பிரிவில்கண் டிக்கப் பட்டவு ருட்டுங்
கமுகமுஞ் சிற்பச் சித்ரமு ருக்கும்,
பிரதியண் டத்தைப் பெற்றருள் சிற்றுந் தியுநீலக்

கரியகொண் டற்கொப் பித்தக துப்புந்
றிலதமுஞ் செப்பொற் பட்டமு முத்தின்
கனவடங் கட்டப் பட்டக ழுத்துந் திருவான

கருணையுஞ் சுத்தப் பச்சைவ னப்புங்
கருதுமன் பர்க்குச் சித்திய ளிக்குங்
கவுரியம் பைக்குப் புத்ரவெ வர்க்கும் பெருமாளே.

௨௭. தனனதந் தத்தத் தத்தன தத்தன—தனதான.

தசைதுறுந் தொக்குக் கட்டளை சட்டஞ்
சரியவெண் கொக்குக் கொக்க நரைத்தந்
தலையுடம் பெய்த்தெற் புத்தனை நெக்கிந் த்ரியமாறித்

தடிகொடுந் திக்குத் தப்பந டக்குந்
தளர்வுறுஞ் சுத்தப் பித்தவி ருத்தன்
தகைபெறும் பற்கொத் துக்கள னைத்துங் கழலாநின்

றசலருஞ் செச்செச் செச்செயெ னச்சந்
ததிகளுஞ் சிச்சிச் சிச்சியெ னத்தங்
கரிவையுந் துத்துத் துத்துவெ னக்கண் டெமியாமற்

றவருநிந் திக்கத் தக்கபி றப்பிங்
கலமலஞ் செச்சைச் சித்ரம ணித்தண்
டையரவிந் தத்திற் புக்கடை தற்கென் றருள்வாயே

குசைமுடிந் தொக்கப் பக்கரை யிட்டெண்
டிசையினுந் தத்தப் புத்தியை நத்துங்
குரகதங் கட்டிக் கிட்டிந டத்துங் கதிர்நேமிக்

குரதலம் புக்கொற் றைக்கணை யிட்டெண்
டிரிபுரஞ் சுட்டுக் கொட்டைப ரப்புங்
குரிசில்வந் திக்கக் கச்சியு ணிற்குங் கதிர்வேலா

திசைமுகன் றட்டுப் பட்டெழ வற்குஞ்
சிகரியுங் குத்துப் பட்டுவி ழத்தெண்
டிரையலங் கத்துப் புக்குல விச்சென் றெதிரேறிச்

சிரமதுங் கப்பொற் கட்டிகை யிட்டன்
றவுணர்நெஞ் சிற்குத் திக்கறை கட்கஞ்
சிதறிநின் றெட்டிப் பொட்டெழ வெட்டும் பெருமாளே.

௨௮. தனனதந் தத்தத் தத்தன தத்தன—தனதான.

புரைபடுஞ் செற்றக் குற்றம னத்தன்
றவமிலன் சுத்தச் சத்தியவ சத்தியன்
புகலிலன் சுற்றச் செத்தையு ணிற்குந் துரிசாளன்

பொறையிலன் கொத்துத் தத்வவி கற்பஞ்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொருளுடன் பற்றுச் சற்றுமில் வெற்றன் — கொடியேனின்

கரையறுஞ் சித்ரச் சொற்புகழ் கற்குங்
கலையிலன் கட்டைப் புத்தியன் மட்டன்
கதியிலன் செச்சைப் பொற்புய வெற்புங் — கதிர்வேலுங்

கதிரையுஞ் சக்ரப் பொற்றையு மூற்றும்
பதிகளும் பொற்புக் கச்சியு முற்றுங்
கனவிலுஞ் சித்தத் திற்கரு திக்கொண் — டடைவேனோ

குரைதருஞ் சுற்றுச் சத்தச முத்ரங்
கதறிவெங் துட்கக் கட்புர துட்டன்
குலமடங் கக்கெட் டொட்டொழி யச்சென் — றுருநேமிக்

குவடொதுங் கச்சொர்க் கத்தரி டக்கங்
கெடநடுங் கத்திக் கிற்கிரி வர்க்கங்
குலிசதுங் கக்கைக் கொற்வ னத்தங் — குடியேறத்

தரைவிசும் பைச்சிட் டித்தவி ருக்கன்
சதுர்முகன் சிட்சைப் பட்டொழி யச்சந்
ததமும்வந் திக்கப் பெற்றவர் தத்தம் — பகையோடத்

தகையதண் டைப்பொற் சித்ரவி சித்ரந்
தருசதங் கைக்கொத் தொத்துமு ழக்குஞ்
சரணகஞ் சத்திற் பொற்கழல் கட்டும் — பெருமாளே.

உசூ. தனதத்தத் தானத் தான்ன—தந்ததான.

மகுடக்கொப் பாடக் காதினி னுதலிற் பொட் டேரக் கோதிய
மயிரிற்சுற் றோலைப் பூவொடு — வண்டுபாட
வகைமுத்துச் சோரச் சேர்நகை யிதழிச்சொற் சாதிப் பாரியன்
மதனச்சொற் பாடுக் கோகில — ரம்பைமாதர்

படிகச்சொற் கூறிப் போர்மயன் முகவிச்சைப் பேசிச் சீரிடை
பவளப்பட் டாடைத் தோளிரு — கொங்கைமேலாப்
பணமெத்தப் பேசித் தூதிடு மிதயச்சுத் தீனச் சோலிகள்
பலரெச்சிற் காசைக் காரிகள் — சந்தமாமோ

தகுடத்தத் தானத் தானன திகுடத்தித் தீதித் தோதிமி
தடுடட்டுட் டாடப் பேரிகை — சங்குவீணை
தடமிட்டுப் பாவக் கார்கிரி பொடிபட்டுப் போகச் சூரர்க
ட்லையிற்றிட் டாடப் பேர்ப்புரி — கின்றவேலா

திகிரிப்பொற் பாணிப் பாலனை மறைகற்புத் தேளப் பூமனை
சினமுற்றுச் சேடிற் சாடிய — கந்தவேளே
திணையுற்றுக் காவற் காரியை மணமுற்றுத் தேவப் பூவொடு
திகழ்கச்சித் தேவக் கோன்மகிழ் — தம்பிரானே.

௩0. தத்த தத்தனன தத்த தத்தனன—தந்ததானா.

சித்தி ரத்திலு மிருத்த பொற்பவள
மொத்த மெத்த வழகுற்ற குத்துமுலை
சிற்ப சிற்பமயி ரொத்த சிற்றிடைய வஞ்சிமாதர்

சித்த மத்தனையு முற்ற எப்பகடன்
மொய்த்த சிற்றுமண லுக்கு மெட்டியது
சிக்கு மைக்குழல்கள் கஸ்து ரிப்பரிம ளங்கள்வீச

பத்தி ரத்திலு மிருத்த கட்கயல்கள்
வித்து ருத்தநுவ லொத்த நெற்றிவனை
பற்க ளொப்பளிரெ னச்சி ரித்துமயல் விஞ்சைபேசி

பசை ரத்நமயி லைப்பொ லத்தெருவி
லத்தி யொத்தமத மொத்து நிற்பர்வலை
பட்டு ழைத்துகுறி யுற்ற வத்தியென மங்குவேனோ

தத்த னத்தனத னத்த னத்தனன
திந்தி மித்திமிதி மித்தி மித்திமித
தக்கு டிக்குடிடி டிக்கு டிக்குடென சங்குபேரி

சத்த முற்றுகட றிக்கு லக்கிரிக
ணைக்கு விட்டுமுகி லுக்கு சர்ப்பமுடி
சக்கு முக்கிவிட கட்க துட்டகர ரங்கமாள

வெற்றி யுற்றகதிர் பத்தி ரத்தையரு
ளிச்சு ரர்க்கதிப திப்ப தத்தையுறு
வித்த ளித்துமதி பெற்ற தத்தைமண முன்றவேலா

வெட்கி டப்பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லைத்துநட லைச்செ ருக்கையழி
வித்த நத்தர்புகழ் கச்சி யுற்றுமகிழ் தம்பிரானே.

௩க. தத்தத் தத்தத் தனனத்—தனதானா.

கொக்குக் கொக்கத் தலையிற் பற்றுச் சிக்கத் தளகக்
கொத்துற் றுக்குப் பிணியுற் றவனுகிக்
குக்கிக் கக்கிக் கடையிற் பற்றத் துற்றுங் கழலக்
கொத்தைச் சொற்கற் றுலகிற் பலபாஷை

திக்கித் திக்கிக் குளறிச் செப்பித் தப்பிக் கெடு பொய்ச்
செற்றைச் சட்டைக் குடிலைச் சுமைபேணும்
சிக்கற் றுட்குக் கருணைச் சுத்தச் சித்தித் தமிழைத்
திட்டத் துக்குப் புகலப் பெறுவேனோ

அக்கிட் டிக்கிட் டமருக் கொட்டிக் கிட்டிட் டெதிரிட்
டத்ரத் தெற்றிக் கடுகப் பொருசூர
னச்சுக் கெட்டுப் படைவிட் டச்சப் பட்டுக் கடலுட்
புக்குப் பட்டுத் துருமத் தடைவாகத்

தக்குத் திக்குத் தறுகட் டொக்குத் தொக்குற் றதுகட்
கைக்கொட் டிட்டிட் டுடல்சிற் கணமாடிச்
சத்திக் குத்தித் துடியிற் சத்திக் கைக்கைச் சமர்செய்ச்
சத்திக் கச்சிக் குமரப் பெருமாளே.

கூஉ. தனன தானன தத்தன தனதன தான தத்தத்—தனதானு.

கரும மானபி றப்பற வொருகதி காணு தெய்த்துத் தடுமாறுங்
கலக காரண துற்குண சமயிக ளுனைவர்க்கக் கலைநூலின்
வரும நெகவி கற்பவி பரிதம னோபா வத்துக் கரிதாய
மவுன பூரித சத்திய வடிவினை மாயா மற்குப் புகல்வாயே
தரும வீம வருச்சுன நகுலச காதே வர்க்குப் புகலாகிச்
சமர பூமியில் விக்ரம வளைகொடு நாளோர் பத்தெட டினிலாளும்
குரும கீதல முட்பட வுளமது கோடா மற்க்ஷத் த்ரியர்மாளக்
குலவு தேர்கட வச்சுதன் மருககு மாரா கச்சிப் பெருமாளே.

கூகூ. தத்தத் தனதன—தனதானு.

கச்சிட் டணிமுலை தைச்சிட் டுருவிய
மச்சக் கொடிமதன் மலராலும்
கச்சைக் கலைமதி நச்சுக் கடலிடை
வச்சப் படவெழு மதனாலும்

பிச்சுற் றிவளுள மெச்சுத் தளர்வது
சொச்சத் தரமல வினிதான
பிச்சிப் புதுமலர் வைச்சுச் சொருகிய
செச்சைத் தொடையது தரவேணும்

பச்சைத் திருவுமை யிச்சித் தருளிய
கச்சிப் பதிதனி லுறைவோனே
பற்றிப் பணிபவர் குற்றப் பகைகெட
வுற்றுப் பொரவல கதிர்வேலா

இச்சித் தழகிய கொச்சைக் குறமகண்
மெச்சித் தழுவிய திருமார்பா
வெட்டிக் குலகிரி முட்டப் பொடிபட
வெட்டித் துணிசெய்த பெருமாளே.

கூச. தத்தா தத்தா தத்தா தத்தா தத்தா தத்தத்—தனதானு.

கொத்தா பற்கா லற்றே சப்பாழ் குப்பா யத்திற் செயன்மாறிக்
கொக்கா கிக்கூ னிக்கோ ளுற்றே கொட்டா விக்குப் புறவாசி
தித்தா நிற்றூர் செத்தார் கெட்டேன் அஆ உஉ எனவேகேள்
செற்றே சுட்டே விட்டே நிப்போ மப்போ துத்துக் கமறுதோ
நித்தா வித்தா ரத்தோ கைக்கே நிற்பாய் கச்சிக் குமரேசா
நிட்டூ ரச்சூர் கெட்டோ டப்போர் கெட்டோ தத்திற் பொருதோனே
முத்தா ரத்தோ ளிற்கோ டற்பூ முட்டா திட்டத் தணிவோனே
முற்று நித்தா வத்தா சுத்தா முத்தா முத்திப் பெருமாளே.

ஙடு. தானத் தத்தத் தத்தன தத்தத்—தனதான.

கோவைச் சுத்தத் துப்பத ரத்துக் கொடியார்தங்
கோலக் கச்சுக் கட்டிய முத்தத் தனமேவித்
பாவத் துக்குத் தக்கவை பற்றித் திரியாதே
பாடப் பத்திச் சித்த மெனக்குத் தரவேணும்
மாவைக் குத்திக் கைத்தற வெற்றிப் பொரும்வேலா
மாணிக் கச்சொர்க் கத்தொரு தத்தைக் கினியோனே
சேவற் பொற்கைக் கொற்றவ கச்சிப் பதியோனே
தேவச் சொர்க்கச் சக்கர வர்த்திப் பெருமாளே.

ஙசு. தத்தனன தந்த—தனதான.

நச்சரவ மென்று நச்சரவ மென்று
நச்சுமிழ்க ளங்க மதியாலும்
நத்தொடுமு ழங்க னத்தொடுமு ழங்கு
நத்திரைவ ழங்கு கடலாலும்

இச்சையுணர் வின்றி யிச்சையென வந்த
விச்சிறுமி நொந்து மெலியாதே
வெத்தனையு நெஞ்சி லெத்தன முயங்கி
வித்தனையி லஞ்ச லெனவேணும்

பச்சைமயில் கொண்டு பச்சைமற மங்கை
பச்சைமலை யெங்கு முறைவோனே
பத்தியுட னின்று பத்திசெயு மன்பர்
பத்திர மணிந்த கழலோனே

கச்சிவர் குரும்பை கச்சவர் விரும்பு
கச்சியில மர்ந்த கதிர்வேலா
கற்பகவ னங்கொள் கற்பகவி சும்பர்
கைத்தளைக ளைந்த பெருமாளே.

ஙஎ. தனன தத்தன—தனதான

படிறொ ழுக்கமு மடம னத்துள
படிப ரித்துட னுடிபேசும்
பகடி கட்குள மகிழ மெய்ப்பொருள்
பலகொ டுத்தற வுயிர்வாடா

மிடியெ னப்பெரு வடவை சுட்டிட
விதன முற்றிட மிகவாழும்
விரகு கெட்டரு நரகு விட்டிரு
வினைய றப்பத மருள்வாயே

கொடியி டைக்குற வடிவி யைப்புணர்
குமர கச்சியி லமர்வோனே
குரவு செச்சைவெண் முளரி புத்தலர்
குவளை முற்றணி திருமார்பா
பொடிப டப்பட நெடிய விற்கொடு
புரமெ ரித்தவர் குருநாதா
பொருதி ரைக்கட னிருத ரைப்படை
பொருது முக்கிய பெருமானே.

௩௮. தத்தத் — தனதானா.

அற்றைக் கிரைதேடி வத்தத் திலுமாசை
பற்றித் தவியாத பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் துளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் பெருமானே.

௩௯. தனதன தனந்தன — தனதானா.

கமலரு சோகாம்பர முடிநடு வேய்பூங்கணை
கலகமர் வாய்தோய்ந்தம ளியின்மீதே
களையற மீதூர்ந்தெழு மதனவி டாய்போம்படி
கனவிய வாரேந்தின விளநீர்தோய்ந்
தெமதுயிர் நீலாஞ்சன மதர்விழி யால்வாங்கிய
விவளுடன் மால்கூர்ந்திடு மநுபோக
மினிவிட வேதாந்தப ரமசுக வீடாம்பொரு
ளுதவிய பாதாம்புய மருள்வாயே
அமகர வாசாம்பர வதுகர வேகாம்பர
வதுலன நீலாம்பர மறியாத
வங்கர நாளாங்கிதர் தமையுமை யாள்சேர்ந்தரு
ளறமுறு சீகாஞ்சியி லுறைவோனே
விமலகி ராதாங்கனை தனகிரி தோய்காங்கெய
வெடிபடு தேவேந்திர னகர்வாழ
விரிகட னீமூண்டிட நிசிசரர் வேர்மாண்டிட
வினையற வேல்வாங்கிய பெருமானே.

௪௦. தனதன தத்தத் தாந்த தானன — தனதானா.

கலகலெ னப்பொற் சேர்ந்த நூபுர
பரிபுர மொத்தித் தாந்த னமெனக்
கரமல ரச்சிற் றுந்தொ மாடிய பொறியார்பைங்

கடிதட முற்றுக் காந்த ளாமென
விடைபிடி பட்டுச் சேர்ந்த வாலிலை
கனதன பொற்பிட் டோங்கு மார்பொடு வடமாடச்

சலசல சச்சச் சேங்கை பூண்வளை
பரிமள பச்சைச் சேர்ந்து லரவிய
சலசமு கத்துச் சார்ந்த வாள்விழி சுழலாடத்

தரளந கைப்பித் தாம்ப லாரிதழ்
குலமுகி லொத்திட் டாய்ந்த வோதியர்
சரசமு ரைத்துச் சேர்ந்த தூவைய ருறவாமோ

திலதமு கப்பொற் காந்தி மாதுமை
யெனையருள் வைத்திட் டாண்ட நாயகி
சிவனுரு வத்திற் சேர்ந்த பார்வதி சிவகாமி

திரிபுவ னத்தைக் காண்ட நாயகி
குமரிசு கத்தைப் பூண்ட காரணி
சிவைசுடர் சத்திச் சாம்ப வியுமை யருள்பாலா

அலகையி ரத்தத் தோங்கி மூழ்கிட
நரிகழு குப்பிச் சேர்ந்து வாயிட
வசுரகு லத்தைக் காய்ந்த வேல்கர முடையோனே

வமரர்ம கட்குப் போந்த மால்கொளும்
விபுதகு றத்திக் காண்ட வாதின
மழகு சிறக்கக் காஞ்சி மேவிய பெருமாளே.

---

௪௧. தனனதாத் தத்த தந்த—தனதான.

அறிவிலாப் பித்த ருன்ற னடிதொழாக் கெட்ட வஞ்ச
ரசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத
வவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக் கிப்பு கழ்ந்து
வவரைவாழ்த் தித்தி ரிந்து பொருடேடி

சிறிதுகூட் டிக்கொ ணர்ந்து தெருவுலாத் தித்தி ரிந்து
தெரிவைமாற் குச்சொ ரிந்து வவமேயான்
திரியுமார்க் கத்து நிந்தை யதனைமாற் றிப்ப ரிந்து
தெளியமோட் சத்தை யென்று வருள்வாயே

இறைவர்மாற் றற்ற செம்பொன் வடிவம் வேற்றுப் பிரிந்து
விடபமேற் கச்சி வந்த வுமையாட
னிருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக் கிக்கு ழைந்த
விறைவர்கேட் கத்த குஞ்சொ லுடையோனே

குறவர்கூட் டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று
குருவியோட் டித்தி ரிந்த தவமானைக்
குணமதாக் கிச்சிறந்த வடிவுகாட் டிப்பு ணர்ந்த
குமரகோட் டத்த மர்ந்த பெருமாளே.

கச்சபாலயம்.

௪௨. தான தத்தனத் தான தானனத்—தனதானா.

சீசி முப்புரக் காடு நீறெழுச் சாடி நித்திரைக் கோசம் வேரறச்
சீவன் முத்தியிற் கூட வேகளித் தநுபூதி
சேர வற்புதக் கோல மாமெனச் சூரி யப்புவிக் கேறி யாடுகச்
சீலம் வைத்தருட் டேற்றி யேயிருக் கறியாமற்

பாசம் விட்டுவிட் டோடி போனதுப் போது மிப்படிக் காகிலேனினிப்
பாழ்வ ழிக்கடைக் காம லேபிடித் தடியேனைப்
பார டைக்கலக் கோல மாமெனத் தாப ரித்துநித் தார மீதெனப்
பாத பத்மநற் போதை யேதரித் தருள்வாயே

தேசி ருட்டறிட் ரே கோதுடைச் சூரை வெட்டியெட் டாசையேழ்புவித்
தேவர் முத்தர்கட் கேத மேதவிர்த் தருள்வோனே
சீர்ப டைத்தழற் சூல மான்மழுப் பாணி வித்துருப் பாத னோர்புறச்
சீர்தி கழ்ப்புகழ்ப் பாவை யீனபொற் குருநாதா

காசி முத்தமிழ்க் கூட லேழ்மலைக் கோவபத்தியிற் கான நான்மறைக்
காடு பொற்கிரிக் காழி யாரூர்பொற் புலிவேளூர்
காள வத்தியப் பால்சி ராமலைத் தேச முற்றுமுப் பூசை மேவிநற்
காம கச்சிக்கச் சாலை மேவுபொற் பெருமாளே.

---

௪௩. தத்தத்தத் தானன தானன—தனதானா.

மக்கட்குக் கூறரி தானது
கற்றெட்டத் தான்முடி யாதது
மற்றொப்புக் கியாதுமொவ் வாதது மனதாலே

மட்டிட்டுத் தேடவொ ணாதது
தத்வத்திற் கோவைப டாதது
மத்தப்பொற் போதுபு னைந்தி மதிசூடும்

முக்கட்பொற் பாளரு சாவிய
வர்த்தக்குப் போதக மானது
முத்திக்குக் காரண மானது பெறலாகா

முட்டர்க்கெட் டாதது நான்மறை
யெட்டிற்றெட் டாதெனு வேவரு
முற்பட்டப் பாலையி லாவது புரிவாயே

செக்கட்சக் ராயுத மாதுலன்
மெச்சப்புற் போதுப டாவிய
திக்குப்பொற் பூதர மேழுதல் வெகுருபஞ்

சிட்டித்துப் பூதப சாசுகள்
கைக்கொட்டிட் டாடம கோததி
செற்றுக்ரச் சூரனை மார்பக முதுசோரி

கக்கக்கைத் தாமரை வேல்விடு
செக்கைக்கர்ப் பூரபு யாசல
கச்சுற்றப் பாரப யோதர முலையாண்முற்

கற்புத்தப் பாதுல கேழையு
மொக்கப்பெற் றுள்வினை யாடிய
கச்சிக்கச் சாலையுண் மேவிய பெருமாளே.

காமகோட்டம்.

சச. தனதன தத்தத் தனந்த தந்தன—தந்ததானு.

சலமலம் விட்டத் தடம்பெ ருங்குடில்
சகலவி னைக்கொத் திருந்தி டும்படி
சதிரவு றுப்புச் சமைந்து வந்தொரு தந்தைதாயுந்

தரவரு பொய்க்குட் கிடந்த கந்தலி
லுறையுமு யிர்ப்பைச் சமன்று ரந்தொரு
தனியிலி ழுக்கப் படுந்த ரங்கமும் வந்திடாமுன்

பலவுரு வத்தைப் பொருந்தி யன்றுயர்
படியுநெ ளிக்கப் படர்ந்த வன்கண
படமயில் புக்குத் துரந்து கொண்டிகல் வென்றிவேலா

பரிமள மிக்கச் சிவந்த நின்கழல்
பழுதற நற்சொற் றெரிந்து வன்பொடு
பகர்வதி னிச்சற் றுகந்து தந்திட வந்திடாயோ

சிலையுமெ னப்பொற் சிலம்பை முன்கொடு
சிவமய மற்றுத் திடங்கு லைந்தவர்
திரிபுர மத்தைச் சுடுந்தி னந்தரி திண்கையாளி

திருமகள் கச்சுப் பொருந்தி டுந்தன
தெரிவையி ரக்கத் துடன்பிறந்தவ,
டிசைகளி லொக்கப் படர்ந்தி டம்பொரு கின்றஞானக்

கலைகளணைக்கொத் தடர்ந்து வம்பலர்
நதிகொள கத்திற் பயந்து கம்பர் மெய்
கருகவி டத்திற் கலந்தி ருந்தவள் கஞ்சபாதங்

கருணைமி குத்துக் கசிந்து ளங்கொடு
கருதும வர்க்குப் பதங்க டந்தருள்
கவுரிதி ருக்கொட் டமர்ந்த விந்திரர் தம்பிரானே.

சரு. தனதன தத்தத் தனந்த தந்தன—தந்ததானா.

தலைவலை யத்துத் தரம்பெ றும்பல
புலவர்ம திக்கச் சிகண்டி குன்றெறி
தருமயில் செச்சைப் புயங்க யங்குற வஞ்சியோடு

தமனிய முத்துச் சதங்கை கிண்கிணி
தழுவிய செக்கச் சிவந்த பங்கய
சரணமும் வைத்துப் பெரும்ப்ர பந்தம்வி ளம்புகாளப்

புலவனெ னத்தத் துவந்த ரந்தெரி
தலைவனெ னத்தக் கறஞ்செ யுங்குண
புருஷனெ னப்பொற் பதந்த ருஞ்சன னம்பெறுதோ

பொறையனெ னப்பொய்ப் ப்ரபஞ்ச மஞ்சிய
துறவனெ னத்திக் கியம்பு கின்றது
புதுமைய லச்சிற் பரம்பொ ருந்துகை தந்திடாதோ

குலசயி லத்துப் பிறந்த பெண்கொடி
யுல்கடை யப்பெற் றவுந்தி யந்தணி
குறவற முப்பத் திரண்ட றம்புரி கின்றபேதை

குணதரி சக்ரப் ப்ரசண்ட சங்கரி
கணபண ரத்நப் புயங்க கங்கணி
குவடுகு னித்துப் புரஞ்சு டுஞ்சின வஞ்சிநீலி

கலபவி சித்ரச் சிகண்டி சுந்தரி
கடியவி டத்தைப் பொதிந்த கந்தரி
கருணைவி ழிக்கற் பகந்தி கம்பரி யெங்களாயி

கருதிய பத்தர்க் கிரங்கு மம்பிகை
சுருதிது திக்கப் படுந்த்ரி யம்பகி
கவுரிதி ருக்கொட் டமர்ந்த விந்திரர் தம்பிரானே.

படலவகராதி.

பெயர்.	பக்கம்.
அந்தகேசப்படலம் ...	௪௪௭
அந்தர்வேதிப்படலம் ...	௩௬௭
அபிராமீச்சரப்படலம் ...	௯௩
அமரீசப்படலம் ...	௧௯௦
அரிசாபபயந்தீர்த்ததானப்படலம்	௯௦
அனந்தபற்பநாபேசப்படலம்	௨௦௪
அனேகதங்காவதப்படலம் ..	௧௧௪
ஆதிபிநீசப்படலம் ...	௮௪
இட்டசித்தீச்சரப்படலம் ...	௯௨
இரணீசப்படலம் ...	௧௪௩
இருபத்தண்டளிப்படலம் ...	௪௬௫
இரேணுகேச்சரப்படலம் ...	௧௭௩
இறவாத்தானப்படலம் ...	௧௮௨
ஒழுக்கப்படலம் ...	௨௭௪
கச்சபேசப்படலம் ...	௯௫
கச்சிமயானப்படலம் ...	௦௫
கடவுள்வாழ்த்து ...	௧
கடவுள்வாழ்த்து ...	௨௯௫
கண்ணீசப்படலம் ...	௧௯௪
கயிலாயப்படலம் ...	௧௧௫
கழுவாய்ப்படலம் ...	௩௨௪
காயாரோகணப்படலம் ...	௮௭
குமரகோட்டப்படலம் ...	௧௯௬
சகோதரதீர்த்தப்படலம் ...	௯௬
சத்ததானப்படலம் ...	௮௦
சலந்தரீசப்படலம் ...	௧௬௨
சறுவதீர்த்தப்படலம் ...	௧௭௭
சனற்குமாரப்படலம் ...	௩௯
சார்ந்தாசயப்படலம் ...	௭௫
சித்தீசப்படலம் ...	௮௯
சிவபுண்ணியப்படலம் ...	௨௮௧
சிவாத்தானப்படலம் ...	௬௩
சுரகரீசப்படலம் ...	௯௮
தக்கீசப்படலம் ...	௧௩௩
தலவிசேடப்படலம் ...	௪௫
தழுவக்குழைந்தபடலம் ...	௨௨௦
தான்றோன்றீச்சரப்படலம் ...	௧௦௯
திருக்கண்புதைத்தபடலம் ...	௨௯௬
திருநகரப்படலம் ...	௧௯
திருநகரேற்றுப்படலம் ...	௩௭௫
திருநாட்டுப்படலம் ...	௫
திருநெறிக்காரைக்காட்டுப்படலம்	௪௮
திருமணப்படலம் ...	௨௬௩
திருமாற்பேற்றுப்படலம் ...	௧௬௫
திருமேற்றளிப்படலம் ...	௧௧௨
திருவேகம்பப்படலம் ...	௨௦௮
திருவோணகாந்தன்றளிப்படலம்	௧௬௧
தீர்த்தவிசேடப்படலம் ...	௪௦௩
நவக்கிரகேசப்படலம் ...	௧௮௦
நாரசிங்கேசப்படலம் ...	௧௪௫
பணாதரீசப்படலம் ...	௮௭
பதிகப்படலம் ...	௩௩
பரசுராமீச்சரப்படலம் ...	௧௬௬
பராசரேசப்படலம் ...	௮௧
பலபத்திரராமீசப்படலம் ...	௧௨௨
பன்னிருநாமப்படலம் ...	௪௧௯
பாண்டவீசப்படலம் ...	௧௯௧
பிறவாத்தானப்படலம் ...	௧௮௧
புண்ணியகோடீசப்படலம் ...	௫௪
புராணவரலாற்றுப்படலம் ...	௩௬
மகாலிங்கப்படலம் ...	௧௮௩
மச்சீசப்படலம் ...	௧௯௨
மணிகண்டீச்சரப்படலம் ...	௬௮
மாசாத்தன்றளிப்படலம் ...	௨௦௦
முத்தீசப்படலம் ...	௮௫
முப்புராரிகோட்டப்படலம் ...	௧௪௧
யோகாச்சாரியர்தளிப்படலம்	௧௭௬
வயிரவீசப்படலம் ...	௧௨௬
வலம்புரிவிநாயகப்படலம் ...	௫௮
வன்மீகநாதப்படலம் ...	௧௨௪
வாணீசப்படலம் ...	௧௫௦
விடுவச்சேனீசப்படலம் ...	௧௩௦
விம்மிதப்படலம் ...	௨௭௧
வீரநாகவீசப்படலம் ...	௧௧௯
வீராட்டகாசப்படலம் ...	௧௮௫

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாவடுதுறைச்சிவஞானயோகிகள்

அருளிச்செய்த

காஞ்சிப்புராணம்.

முதற்காண்டம்.

காப்பு.

கலிநிலைத்துறை.

இருகவுட்டுளைவாக்குகார்க்கடங்களிங்குலிகக்
குருநிறத்திழிதோற்றமுன்குலாய்த்தவழ்ந்தேறிப்
பரிதிமார்பினிற்சமுனைனுகொளிந்தியலும்
திருநிகர்த்தசீரைங்கரக்களிற்றினைச்சேர்வாம். க

ஸ்தலவிநாயகர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விகடசக்கரவாரணந்தொடர்வரும்வித்தகமுகில்வீற
விகடசக்கரவிந்தமன்னவன்றனக்கருளுமெய்த்தலைவனாகு
விகடசக்கரவாகமென்முலையுமைகான்முளையென்னுச்சே
விகடசக்கரரெந்திரமெனச்சுழல்வெம்பவக்கடனெஞ்சே. உ

கடவுள்வாழ்த்து.

சபாநாயகர்.

வேறு.

சங்கேந்துமலர்க்குடங்கைப்புத்தேளுமறைக்கோவுந்தழல்கால்சூல
மங்கேந்தும்மாலுந்தத்தமதுதொழிற்றலைநின்றாற்றச்செய்தோர்
பங்கேந்தும்பெருமாட்டிவிழிகளிப்பவிருமுனிவர்பணிந்துபோற்றக்
கொங்கேந்துமணிமன்றுட்குனித்தருளும்பெருவாழ்வைக்குறித்துவாழ்வாம். க

திருவேகம்பநாதர்.

தணந்தபெருந்துயர்க்கடன்மீக்கூர்தலினன்மலைபயந்ததரளமூரற்
கணங்குழையாள்புரிபூசைமுடிவளவுந்தரியாமலிடையேகம்பை
யணங்கினைத்தூதெனவிடுத்துவலிந்திறுகத்தழீஇக்கொள்ளவமையாக்காதன்
மணந்தருளிக்குறிபூண்டவொருமாவிற்பெருமானைவணக்கஞ்செய்வாம்.

காமாட்சியம்மை.

ஊன்பிலிற்றுமழுவாளிகலவிதனிலொண்ணுதென்றோர்ந்துநஞ்சந்
தான்பிலிற்றும்பாப்பணியைநீப்பவுங்கார்வண்டினங்கடைந்துமூசத்
தேன்பிலிற்றுநறுங்கடுக்கைத்தெரியலைப்பாம்பெனமருண்டத்தெரியனுறுங்
கான்பிலிற்றத்தெருண்டணையுங்காய்க்கோட்டத்துமையைக்கருத்துள்வைப்பாம். ௫

கருக்காமக்கோட்டிமிரவினையனைத்துமொருங்கெய்திக்கலகஞ்செய்யுந்
தருக்காமக்கோட்டியெலாமறவெறிந்தாமினியென்றுந்தகைசாலன்பு
சுருக்காமக்கோட்டினைச்சேயரைகரங்கொண்டார்க்குமுலைச்சுவடுநல்குந்
திருக்காமக்கோட்டியம்மைசேவடிப்போதெப்போதுஞ்சிந்திப்பாமால்.

விகடசக்கரவிநாயகக்கடவுள்.

விழிமலர்ப்பூசனையுஞற்றித்திருநெடுமால்பெறுமாழிமீளவாங்கி
வழியொழுகாச்சலந்தரன்மெய்க்குருதிபடிமுடைநாற்றமாறுமாற்றாற்
பொழிமதநீர்விரையேற்றிவிகடநடப்பூசைகொண்டுபுதிதாநல்கிப்
பழிதபுதன்றாதையினும்புகழ்படைத்தமதமாவைப்பணிதல்செய்வாம்.

குமாரக்கடவுள்.

முருகோட்டந்தரப்பாயுமும்மதமுமூற்றெடுப்பமுரிவிற்கோட்டு
மொருகோட்டுமழகளிற்றையிருகோட்டுமுதுகளிறுவுலவக்காட்டிப
பருகோட்டநறைவேட்டுப்பைங்கோட்டுத்தினைப்புனத்துப்பரண்மேற்கொண்டு
குருகோட்டும்பெடைமணந்தகுமரகோட்டத்தடிகள்குலத்தாள்போற்று.

வயிரவக்கடவுள்.

வேறு.

எளியனரவலியர்வாட்டின்வலியரையிருநீர்வைப்பி
னளியறத்தெய்வம்வாட்டுமெனுமுரைக்கமையவன்றே
தெளியுமாவலியைச்செற்றோற்செகுத்துரிக்கவயம்போர்த்த
வளியுளர்கச்சிகாவல்வயிரவர்க்கன்புசெய்வாம். ௭

திருநந்திதேவர்.

அங்கணன்கயிலைகாக்குமுகம்படித்தொழின்மைபூண்டு
நங்குருமரபிற்கெல்லாமுதற்குருநாதனாகிப்
பங்கயந்துளவனாறும்வேத்திரப்படைபொறுத்த
செங்கையெம்பெருமானந்திசீரடிக்கமலம்போற்றி. ௮

அகத்தியமுனிவர்.

காசியினின்றும்போந்துகம்பர்தாமருளப்பெற்று
மாசிலாக்கச்சிமூதூர்மன்னிவீற்றிருந்துபூமே
லாசிலாத்தமிழ்பரப்பியருந்தமிழ்க்குரவுபூண்ட
தேசினன்மலயவெற்பின்குறுமுனிதிருத்தாள்போற்றி. ௯

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

வேறு.

பரசமயகோளரியைப்பாலறாவாயனைப்பூம்பழனஞ்சூழ்ந்த
சிரபுரத்துத்திருஞானசம்பந்தப்பெருமானைத்தேயமெல்லாங்
குரவையிடத்தமிழ்வேதம்விரித்தருளுங்கவுணியர்தங்குலதீபத்தை
விரவியெமையாளுடையவென்றிமழவிளங்களிற்றைவிரும்பிவாழ்வாம்,

திருநாவுக்கரசுநாயனார்.

இடையறாப்பேரன்புமழைவாருமிணைவிழியுமுழவாரத்தின்
படையறாத்திருக்கரமுஞ்சிவபெருமான்றிருவடிக்கேபதித்தநெஞ்சு
நடையறாப்பெருந்துறவும்வாகீசப்பெருந்தகைதன்ஞானப்பாடற்
றொடையறாச்செவ்வாயுஞ்சிவவேடப்பொலிவழகுந்துதித்துவாழ்வாம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

ஒருமணத்தைச்சிதைவுசெய்துவல்வழக்கிட்டாட்கொண்டவனைக்கொண்டே
யிருமணத்தைக்கொண்டருளிப்பணிகொண்டவல்லாளனெல்லாமுய்யப்
பெருமணச்சீர்த்திருத்தொண்டத்தொகைவிரித்தபேரருளின்பெருமாளென்றுந்
திருமணக்கோலப்பெருமாண்மறைப்பெருமாளெமதுகுலதெய்வமாமால். க௨

மாணிக்கவாசகசுவாமிகள்.

பெருந்துறையிற்சிவபெருமானருளுதலும்பெருங்கருணைப்பெற்றிநோக்கிக்
கரைந்துகரைந்திருகண்ணீர்மழைவாரத்துரியநிலைகடந்துபோந்து
திருந்துபெருஞ்சிவபோகக்கொழுந்தேறல்வாய்மடுத்துத்தேக்கிச்செம்மாந்
திருந்தருளும்பெருங்கீர்த்திவாதவூரடிகளடியிணைகள்போற்றி. க௩

அறுபத்துமூவர்.

கலிவிருத்தம்.

தத்துமூதெயின்மூன்றுந்தழலெழ - முத்துமூரன்முகிழ்த்தநிராமய
சித்துமூர்த்திதன்றாளிணைசேராறு - பத்துமூவர்பதமலர்போற்றுவாம். க௪

சேக்கிழார்நாயனார்.

நாக்குசீர்த்திருத்தொண்டத்தொகைவிரி - வாக்கினாற்சொல்லவல்லபிரானெங்கள்
பாக்கியப்பயனாம்பதிகுன்றைவாழ் - சேக்கிழானடிசென்னியிருத்துவாம்.

திருக்கூட்டத்தார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பேயனையபுறச்சமயப்பிணக்குநூல்வழியனைத்தும்பிழையேயனறி
வாயன்மைதெளிந்துசைவசித்தாந்தவழிதேறியதீதவாழ்விற்
போயண்மியஞ்செழுத்துந்திருநீறுங்கண்டிகையும்பொருளாக்கொண்ட
நாயன்மார்திருக்கூட்டம்பணிந்திறைஞ்சும்பெரும்பேறுநான்பெற்றேனால்.

பஞ்சாக்கரதேசிகர்.

கயிலாயபரம்பரையிற்சிவஞானபோதநெறிகாட்டும்வெண்ணெய்
பயில்வாய்மைமெய்கண்டான்சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபானுவாகிக்
குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ்குருநமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன்றிருமரபுநீடூழிதழைகமாதோ. க௭

பின்வேலப்பதேசிகர்.

எவ்வெவர்கோட்படுபொருளுமஞ்செழுத்தினடக்கியவற்றியல்புகாட்டி
மெய்வகையஞ்சவத்தையினுநிற்குமுறையோதுமுறைவிளங்கத்தேற்றி
யவ்வெழுத்தினுள்ளீடுமறிவித்துச்சிவபோகத்தழுத்திநாயேன்
செய்வினையுங்கைக்கொண்டவேலப்பதேசிகன்றாள்சென்னிசேர்ப்பாம்.

மற்றையசிவநேசர்கள்.

மறைநான்கும்பயின்றொழுகியீட்டிகளும்பலவியற்றிமல்லன்ஞாலத்
திறவாதபுகழ்படைத்துமீசனிடத்தன்பிலரையெண்ணாதுள்ளம்
புறமோடிக்கொலைபயின்றுமதுமாந்துங்கொடும்பாவப்புலையரேனு
மறவாணன்றிருவடிக்கீழன்பினரேலவரெம்மையடிமைகொள்வார். க௯

கடவுள்வாழ்த்துமுற்றிற்று.

நூல்செய்தற்குக்காரணம்.

கலிநிலைத்துறை.

பொருவில்கச்சியம்புராணம்வண்டமிழினிற்புகலென்
றிருநிலம்புகழ்மணிமதிற்கச்சியேகம்பர்
திருவருட்குரியான்றவர்கூறியசிறப்பா
லுரிமையுற்றெழுதாசையாலுரைத்திடலுற்றேன் ௧

அவையடக்கம்.

மாயைகாரியவுருக்களுமெம்பிரான்வடிவ
மாயவேலவையருண்மயமாகுமற்றதுபோற்
பேயனேன்பிதற்றுரையுமேகம்பர்தம்பெருமை
தூயகாதையுள்ளுறுதலாற்றுகளறத்தோன்றும். ௧

இழித்தசொற்புணர்த்தெளியனேனியம்பியகவியுங்
கழித்தவைவகையிலக்கணவழுவுக்குக்காட்டாப்
பழித்திடாநெடுத்தாளுவர்பல்வகைச்சுவையுங்
கொழித்தநாவினராகியவழுத்தபுகுணத்தோர். ௨

எழுத்துப்போலியுமெழுத்தெனவாளுவரதுபோற்
புழுத்தநாயினேன்பிதற்றியசெய்யட்போலியையும்
பழுத்தகேள்வியோர்கைக்கொள்வரென்பதுபற்றி
விழுத்தநாணினேன்சிவகதைவிளம்புதற்கிசைந்தேன். ௩

நெறிவழாவுமைபூசனைபோனெறிபிறழ்ந்தோ
னெறிதருங்கலுங்கைக்கொளுங்கச்சியெம்பெருமாற்
கறிவின்மேலவர்காப்பியப்பனுவல்போலறிவின்
குறியிலேன்கவிப்புன்சொலுங்கொள்வதுவழக்கால். ௪

அவையடக்கமுற்றிற்று.

நூற்சிறப்புப்பாயிரம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அருட்பணிக்குரியமகேச்சுரர்முதலாநால்வருந்தருகவென்றறைய
மருட்பகைதமிக்குங்காஞ்சிமான்மியத்தைவழங்குதென்மொழியினுலுரைத்தான்
கருப்பகையிரிக்குஞானமுமேனைக்கலைகளுநிகரிசறப்பயின்ற
மருப்பொழிலுடுத்தவாவடுதுறையில்வாழ்சிவஞானமாதவனே. ௧

நூற்சிறப்புப்பாயிரமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௭.

திருநாட்டுப்படலம்.

நாடுவாழ்த்துத்துறை.

கலிநிலைத்துறை.

பணங்கொள்பாம்பணிகம்பனார்பணிவுரைபயந்த
வணங்கினோடென்றுமமர்ந்தினிதரசுவீற்றிருக்கு
முணங்கரும்புகழ்க்காஞ்சியையகந்தழீஇயும்பர்
வணங்கமேவரும்பாலிநாட்டணிநலம்வகுப்பாம்.

மழைவாழ்த்துத்துறை.

கடல்கடைந்திடச்செல்லுறாஉம்வெள்ளைமால்கடுப்பப் திலம
படலைவெண்முகில்பரவைநீருழக்கிவாய்மடுத்து
விடமெழுந்தெனமீண்டவம்மாயனைவிழைய
வுடல்கறுத்துவிண்ணெறிப்படர்ந்தொய்யெனமீண்டு. உ

அற்றைஞான்றுமால்கயிலையைச்சரணடைந்தாங்குப்
பொற்றநந்தியஞ்சாரல்சூழ்பொருப்பினைக்குறுகிக்
கற்றைவார்சடைச்சுந்தரன்கடவுவான்மதுரை
முற்றுநான்முகிலெனவரைமுழுவதும்பொதிந்து. ௩

முரிந்தவெண்டிரைக்கருங்கடன்முகட்டினைக்குழித்து
விரிந்தவெள்ளநீர்மடுப்புழிக்கரந்துடன்மேவிக்
கரிந்திடத்தனைச்செய்ததீவடவையின்களவைத்
தெரிந்துவில்லுமிழ்தடித்தெனத்திசைதொறுஞ்சிதறி. ௪

கான்றவக்கனன்மீட்டடையாவகைகருதி
வான்றனிற்குனிசிலையெனத்தடையினைவாக்கி
யேன்றநீயினியெதிர்த்தனையாயிடினின்னை
யூன்றனோடுயிர்குடிப்பலென்றுருமொலியெழுப்பி. ௫

அடுத்தடுத்தலைமோதுதெண்டிரைப்புனலளக்க
ருடுத்தபாரிலுன்கிளையெலாமுதலறவொருங்கே
படுத்துநின்வலிபாற்றுவன்யானெனப்பகைமை
தொடுத்தவெஞ்சினங்கொண்டழன்மேலமர்தொடங்கி. ௬

விச்சைமந்திரவலியினால்வீங்குநீர்மழையை
வச்சிரக்கணையாக்கிமெய்வளமெனக்கருளும்
பொச்சமின்மறைவேள்வியும்புனிதனேந்தழலு
மெச்சமாகமற்றெவையுமீண்டறுக்கெனவியம்பி. ௭

மழைவளம்.

காட்டகங்களுங்கழைநரல்கதிர்மணிச்சிமயக்
கோட்டகங்களுங்குளிர்புனற்கழனிசூழ்குலவு
நாட்டகங்களும்பரன்முரம்படுத்தெரிநடஞ்செய்
மோட்டகங்களுமுழுவதுங்குளிர்கொளச்சொரிந்து. ௮

இற்றொழிந்தனவொழியமற்றெஞ்சியவெரிபோய்க்
கற்றவேதியர்வேள்வியஞ்சாலையுட்கரப்ப
வுற்றவாகண்டுதன்சினக்கனலையுமொருவி
வெற்றிமாமுரசெனமறைப்பேரொலிவிளக்கி. ௯

தனதுகீர்த்தியுந்திறற்பிரதாபமுந்தரைமே
லனல்செய்கோபமுமுல்லையுமெனவெங்குமமைத்துப்
புனிதமாமவைதன்னையும்பொதிந்துகொண்டென்னப்
பனிவிசும்பினிற்சிவந்துவெண்ணிறம்படைத்தன்றே. ௧௦

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உடுவணிகுடுமிக்கோடுபிள்வுபட்டுடையப்பெய்யுங்
கொடுமழைக்காற்றுதங்கட்குளிர்பெயன்மாறவெண்ணி
நெடுமலையடுத்துக்காட்டுநெட்டிதழ்க்காந்தட்கொள்ளி
விடுசுடர்க்கணலியந்தப்புனலொடும்வீந்ததன்றே. ௧௧

போதமேலாகப்பண்டேபுல்லியமலநோய்தீர்ந்தும்
வாதனைதாக்குமாபோன்மழைப்பெயன்மாறித்தீர்ந்துங்
காதல்செய்துறையும்புள்ளுமாக்களுங்கவன்றுநெஞ்ச
நோதகமரங்களெல்லா நுண்டுளிதுவற்றுமாதோ. ௧௨

கனைபெயலெழிலிக்கூட்டங்கலிவிசும்பகடுபோழ்ந்த
நனைமுடிநந்திக்குன்றநளிபடப்பொழியுந்தெண்ணீர்
புனைமறைவசிட்டமேலோன்செருத்தலான்பொழிந்ததிம்பால்
வனைபுகழ்வெள்ளமென்னத்திசைதொறும்வழிந்தமன்னோ. ௧௩

பாலியாற்றுவளம்.

கண்ணகன்குடுமிக்குன்றிற்கல்லெனக்கறங்கியார்த்து
விண்ணிவரேணியென்னவியன்முடிதொடுத்துவீழுந்
தண்ணறுவருவியெல்லாந்தலைத்தலைவிரிந்துதோன்றும்
புண்ணியப்பாலியாற்றிற்சேர்ந்துடன்போயுமாதோ. ௧௪

பாரிடங்குழித்துவீழும்பல்வயினருவியெல்லா
மோரிரும்பாலியாற்றினொருங்குசென்றணையுந்தோற்றஞ்
சீரியபுவனந்தோறுஞ்சிதறியவினைகளெல்லா
மோரிடத்தொருவன்றன்பாலுடங்குசென்றுறுதல்போலும். ௧௫

விலகிவீழருவித்தாரைவேறுவேறுகவோடிக்
குலநதிப்பாலிவைப்பினேகமாய்க்கூடுந்தோற்ற
மலகில்பல்வழியுமூதாரணிமையினொன்றுமாறும்
பலபலமதமுமீற்றினொருவழிப்படலும்போலும். ௧௬

மலைநகைத்தன்னகாட்சிவயின்வயினருவித்தாரை
சிலையினின்றிழிந்துமண்மேற்றிரண்டுசென்றணையுந்தோற்ற
முலவையோடிகலிச்சேடனுயர்வரைக்குடுமியெல்லாம்
பலதலைவிரித்துப்பொத்திக்கிடந்தவப்பான்மைபோலும். ௧௭

குரைபுனற்றெண்டைநாட்டைக்குறும்பெறிந்தடிப்படுத்துப்
புரைதபநடாத்துகென்றுப்புதுமுகிலரசனந்தி
வரைமிசையிருந்துவேந்தாமணிமுடிசூட்டியுய்ப்பத்
திரைபடுபாலிவல்லேசிலையினின்றிழிந்துபோந்து. ௧௮

அரசுகள்சூழ்ந்துசெல்லவருங்கணிமலர்வாய்விள்ளச்
சரிகுழற்குறமின்னார்கள்பறைபலதாலைவெள்ளம்
விரவிடப்பரியகாலாண்மேதகுமாக்களத்தி
யிருபுடைதழுவிப்போதவிகல்கொடுவையமூர்ந்து. ௧௯

அணிவகுத்தெழுந்துகுன்றரும்பெறற்குறிச்சிபுக்கு
மணிவகையாரம்பூண்டுமதுக்குடவிருந்துமாந்தித்
தணிவறவெளிக்கொண்டேகித்தலைத்தலைவேட்டம்போகித்
துணிபடமாக்களெல்லாந்தொலைத்துடனீர்ந்துச்சென்று. உ0

கலிவிருத்தம்.

மண்டமர்மேல்கொடுவெந்தனமின்னே
தண்டகநாட்டுறைதாபதர்நோயோர்
பெண்டிருநம்மரணேகுதிர்பெட்டென்
றெண்டிசையார்ப்பவிசைப்பறைசாற்றி. உக

இருற்றிகிரிப்படைதாங்கியிபக்கோ
டுருத்திறல்வெஞ்சிலைகாந்தளரும்பு
நருப்பயில்கோலெனவேந்திநல்வீர
மருப்பகைமாய்த்துறவெட்சிமலைந்து. உஉ

முல்லையின்வேந்துமுடித்தகரந்தை
யொல்லையலைத்துயராணிரைபற்றி
மெல்லிதழ்தின்றுசிவந்தெழுவேய்த்தோ
ணல்லவர்கற்பையழித்துநடந்து. உ௩

வஞ்சிமலைந்தழல்பாலையைவாட்டி
யஞ்சியிடாதுதன்னுனையிருத்தி
யெஞ்சிலுருமருதத்திறையோடும்
வெஞ்சமரேற்றுழிஞைத்துணர்வேய்ந்து. உச

தடுத்தெதிர்நின்றதட்டங்கரையெல்லாம்
படுத்துமதன்பயில்பாசறைவீட்டி
மடுக்குளமேரியின்வாட்டமனைத்துங்
கெடுத்தனமென்றுதழீஇக்கிளர்வுற்று. உரு

வீறியடாவகைவெஞ்சிறைகோலித்
தூறிடுமள்ளர்தொலைந்தழிவெய்தச்
சீறியடர்ந்தெழித்துமுள்வேலி
கீறிவளைந்துகிடங்கினைநீங்கி உ௬

நொச்சியைமுற்றியநொச்சியினுள்ளார்
பச்சிளநொச்சிபறித்தணியாமே
நச்சியதும்பைநறுந்துணர்சூடி
யச்செழுமாமதின்முற்றுமகழ்ந்து. உஎ

கொச்சகக்கலிப்பா.

இடித்துவெளிசெய்துநகரெங்கணுநுழைந்தாங்
கடுத்தமடவார்வயிறலைத்தனரிரங்கக
கொடுத்திடுவளங்கள்பலகொள்ளைகொடுமண்ணி
னெடுத்துவருவெள்வரகுகொள்ளுடனிறைத்து. உஅ

வெற்றிபுனைமாலிகைமிலேச்சியிருபாலுஞ்
சுற்றிவருபுட்குலநிரைத்தொழுதிதன்னுற்
கொற்றமிகுமார்கலியைநோக்கியறைகூவி
யெற்றுகழிநெய்தல்வழியெய்துறுதலோடும். உகூ

பௌவமதுணர்ந்துபவளந்தாளமாதி
வெளவுதிரையேந்தியெதிர்கொண்டடிவணங்கச்
செவ்விதினுவந்துபயமீந்துசினமாறிக்
கௌவியமெய்யன்பொடுகலந்துளதையன்றே. ௩௦

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தன்னடிப்படுத்துயேலத்தண்டகநாடுமுற்று
முன்னுறக்கவர்ந்துகொண்டவளத்தினுமூவிரட்டி
பின்னுறவளித்துவானிற்புலவரும்பெட்குமாற்று
லந்நிலேயுயிர்களோம்பியரசுசெய்துறையுமபாலி. ௩௧

காரணப்பொருளின்றன்மைகாரியத்துளதாமென்ன
வாரணப்பனுவல்கூறுமரும்பொருடெளியத்தேற்றும்
பேரிசைப்புவிமேல்யார்க்கும்பெட்டனபெட்டவாறே
சீரிதிற்கொடுக்குந்தேனுத்தரவருஞ்செழுநீர்ப்பாலி. ௩௨

வறுமையுற்றுழியுந்தொண்டைவளமலிநாட்டோர்தங்க
ளிறுமுடல்வருத்தியேனுமீவதற்கொல்காரற்றே
தெறுகதிர்கனற்றும்வேனிற்பருவத்துஞ்சீர்மைகுன்று
துறுமணலகடுகீண்டுமொண்புனலுதவும்பாலி. ௩௩

சொற்றவித்தீர்த்தமேன்மைசுவைபடும்பாலோடொக்கு
மற்றையதீர்த்தமெல்லாம்வார்தருபுனலோடொக்கும்
பெற்றிமையுணர்ந்துதொல்லோர்பெயரிடப்பட்டசீர்த்தி
பற்றியதெனலாம்பாலிப்பெருமையார்பகருநீரார். ௩௪

நாட்டுவளம்.

கலிநிலைத்துறை.

விளம்புமித்தகைமணிகொழிவிரிதிரைத்தரங்க
வளம்புனற்றடம்பாலியான்வண்மைபெற்றோங்கி
யுளம்பயின்றுநாற்பொருள்களுமுளுற்றுநர்க்கிடமாய்த்
துளும்புமேன்மையிற்பொலிந்ததுதொண்டைநன்னாடு. ௩௫

செக்கர்வார்சடைச்சிவபிரான்றிருவருள்செய்யத்
தக்கவாய்மையினுயிர்க்கெலாந்தன்னிடத்திருந்து
மைக்கணெம்பெருமாட்டியெண்ணான்கறம்வளர்க்குந்
தொக்கமாப்புகழ்படைத்ததுதொண்டைநன்னாடு. ௩௬

பவம்விளைத்திடாப்பெரும்பதியெனத்திசைபோய
சிவம்விளைத்திடுநகரங்களேழுளுஞ்சிறந்து
தவம்விளைத்திடுகாஞ்சியைத்தன்னிடத்திருத்தி
நவம்விளைத்திடும்பெருமைபூண்டதுதொண்டைநாடு. ௩௭

தரைவிளங்கியதண்டகநாட்டினிற்றகைசால்
வரையுங்கானமும்புறம்பணைப்பழனமுமணிநீர்த்
திரையும்வேலையுமென்னுநானிலத்தினுட்சிறந்த
புரையிலைந்திணைவளஞ்சிறிதறிந்தவாபுகல்வாம். ௩௮

குறிஞ்சி.

முருகவேட்கிடுதூமமோம்புறமுளியகில்சந்
துருவவாரழற்பெய்துபுன்பயிர்விளைத்துவப்பார்
பெருவளந்துறந்தூர்தொறும்படுபலிபேணும்
பொருவில்வாழ்க்கையர்தஞ்செயல்போன்மெனப்பொருப்பர். ௩௯

ஏறுதன்னுடல்வருத்தியபகைமையெண்ணுது
தூறுபன்மணிமரமுதல்பொறையெலாந்தொலைத்த
வேறுநன்றியேகடைப்பிடித்திதைவியன்பொருப்பர்க்
கூறுநல்வளம்விளைத்திடுமியாநதவர்செயல்போல். ௪0

வேட்டைமேற்புகுவார்க்குநல்வினையுந்தமட்டவார்
கூட்டம்வாய்க்குமச்சாரலிற்றினைக்குரற்செய்துஞ்
சேட்டிளங்கிளிக்குலங்களத்தெரிவைமாரோப்பும்
பாட்டிசைத்திறமொளியிருந்தனுதினம்பயிலும். ௪௧

நங்குலத்தருவாழ்க்கையைக்கெடுத்துநம்மிருக்கை
தங்களுக்கெனக்கொண்டவிவ்வேனல்கடம்மை
யிங்கண்வாட்டுதுமென்பதோர்சூழ்ச்சியெண்ணியபோ
லங்கணெஞ்சியவேங்கைகள்போதுசெய்தலரும். ௪௨

என்னையூர்ந்தருள்சுடர்வடியிலையவேற்பெருமான்
றன்னைநன்மருகெனப்படைத்தவன்றனதூர்தி
யன்னதாமெனுங்கேண்மையானளிமுகிற்குலத்தைக்
கன்னிமாமயில்காண்டொறுங்களிசிறந்தகவும். ௪௩

நெருங்குலைபைந்தழைவருக்கைமேனெடுவெளியலைப்ப
வருங்கண்மாமயில்வீற்றிருந்துசைதருங்காட்சி
கருங்கணுயிரச்செம்மறன்மருகனைக்காண
மருங்குவந்துதன்னூர்தியைநிறுவுதன்மானும். ௪௪

சந்துமாரமுந்தாங்கிவம்பலர்ந்ததண்குவட்டான்
மைந்தர்கண்ணையுமனத்தையுங்கவர்ந்திடும்வனப்பின்
முந்துமோங்கலுங்கொடிச்சியர்குழுக்களுமுகிறோய்
கந்தமார்குழைமுகத்தலரிலவங்கங்காட்டும். ௪௫

கொங்கையேந்தியவாண்களுமவணகொம்புடைய
துங்கவேங்கையின்குலமெலாமவணபால்சுரந்து
பொங்குநீடுசேவினங்களுமவணவான்புனலை
யங்கண்வேட்டுணுமொற்றைத்தாளெகினமுமவண. ௪௬

ஆணெலாமொருகன்னியைமணப்பவானையுங்
கோளைவேங்கைகள்யாட்டினேடுறவுகொண்டோங்கும்
பேணுசேவினஞ்சிங்கமேலேற்றிடும்பிழையா
தேணிணற்பொலியெகினங்களிடபத்தைவிழுங்கும். ௪௭

வில்லலர்ந்தபல்லுடுக்களும்விண்ணெறிப்படருஞ்
செல்லும்வெண்கதிர்க்கடவுளும்பானுவுந்திறல்சான்
மல்லல்வானவக்குழுவுமெய்ப்பாறவந்திருக்கு
மில்லமெங்கணும்வான்றொடவிழைத்திடுங்குன்றம். ௪௮

போதுமூன்றினும்போதுசெய்காவிசூழ்பொருப்பு
மேதகுந்தமிழ்க்கெல்லையாம்வேங்கடவரையுங்
காதல்பூப்பவத்தாணிகொண்டாறுமுகக்கடவுள்
கோதுநீத்தரசாட்சிசெய்குறிஞ்சியக்குறிஞ்சி. ௪௯

அன்பெலாமொருபிழம்பெனத்திரண்டகண்ணப்ப
னெம்பிராற்கொருவிழியிடந்தப்புகாளத்திப்
பொன்பிறங்கியமுகலிசூழ்கயிலையம்பொருப்புந்
தன்புலத்திடையுடையதுதடவரைக்குறிஞ்சி. ௫௦

நாவன்மன்னவர்க்கிரந்துசோறளித்திடுநம்மான்
றேவியோட்டமர்திருக்கச்சூர்திருவிடைச்சுரமும்
பாவகாரியரெய்தொணாக்கழுகுசூழ்பறம்பு
மேவரத்திகழ்குறிஞ்சியின்பெருமையார்விரிப்பார். ௫௧

பாலை.

குராவளித்திடுபாவையைக்கோங்குபொன்கொடுத்துப்
பராரைப்பாடலம்பூந்தழற்பாங்கரின்மணப்ப
மராமரத்துளர்வண்டுபண்பாடவன்முருங்கை
விராவிவெண்பொரியிறைத்திடும்வியப்பினதொருபால். ௫௨

எயிற்றிமாரொழினலத்தினுக்கிரியல்போயுடைந்தாங்
கயற்பொதும்பர்புக்கலர்குராப்பாவைகண்டவர்தந்
துயிற்றுசேயெனக்கவன்றுபோய்த்தூதுணம்புறாக்கள்
வெயிற்றலைக்கணின்றுயங்குவநிலைமைவிண்டவர்போல். ௫௩

தூதுணம்புறவினமெலாந்துணையுடன்கெழுமிப்
போதலூடியுமுணர்த்தியுந்தலைத்தலைப்புணர்ந்து
காதலன்னலார்மொழியையுங்கடந்துசேணிடைச்செ
லேதிலாடவர்தமைச்செலவழுங்குவித்திடுமால். ௫௪

வெங்கதிர்ப்பிரானண்பகற்போதினில்வேனின்
மங்கைகொங்கைதோய்ந்தளித்திடும்பாலையாமைந்த
ணங்கணுனிலவரசர்பாலிரந்துவன்முரம்பு
தங்குசூழலிற்சிற்றரசாள்வதுமுளதால். ௫௫

முல்லை.

நவிலுமிந்நிலப்புறம்பயில்புறவநன்மடந்தை
குவிவருந்தழல்வெம்மைகூர்கொடும்பசிதணியச்
செவிலியாய்முகிறீம்பயமூட்டிடவளர்ந்தாங்
கவிழுநீள்வரகாதியாமகப்பயந்தளிக்கும். ௫௬

கொல்லையெங்கணுங்கொழுமலர்ததைபுனமுருக்கின்
முல்லைமென்கொடிபடர்ந்தலர்நிரைநிரைமுகிழ்ப்ப
வல்லைவென்றகந்தரப்பிரானரக்கெறிமார்பிற்
றொல்லைவெண்டலைமாலிகைதுயல்வரன்மானும். ௫௭

நீலம்பூத்தலர்பூவையைக்கோட்டுநீள்கரத்தாற்
கோலம்பூத்தபொற்கொன்றைகடழீஇக்கிடந்தசைவ
வாலம்பூத்தருண்மிடற்றினோனென்றுமோகினியாஞ்
சீலம்பூத்தமாலிளமுலைதிளைப்பதுதெளிக்கும். ௫௮

பெண்ணலங்கனியிடைக்குலப்பிடிநடைமடவார்
விண்ணலங்கனிமாதரையெழிலினால்வென்று
பண்ணலங்கனிமிடற்றவர்பணைத்தமூக்கரிந்து
மண்ணிலெங்கணுந்தூக்கிவைத்தெனக்குமிழ்மலரும். ௫௯

மௌவலங்குழலார்விழிக்குடைந்துவானகுதிக்கு
நவ்விமீண்டகலாவகைமகளிரானனத்துக்
கௌவுறுதவராணையிற்றிரியுமொண்மதிகண்
டவ்வுழித்தனதிருக்கையிற்சிறைப்படுத்தலைக்கும். ௬௦

கற்றைவார்குழலாய்ச்சியர்கயல்விழிமுகத்தின்
பெற்றியொப்புறப்பெருங்குருந்துச்சிமேற்றாவி
யொற்றைமானுடைக்கலைமதியதனிழலுறங்கு
மற்றைமானையும்பற்றுவான்கதிர்க்கையால்வருடும். ௬௧

நலம்பயின்றிளவேனிலின்விலுமாங்குயில்க
ளலம்புகார்வரும்போதுவாயடைப்பதுமுன்னாட்
புலம்புகொண்டவர்காரொடுந்தலைவர்தேர்புகுத
வலம்புனைந்துரைவளமொழிக்கிடைதலானன்றே. ௬௨

தொண்டைமான்கடக்களிற்றினைமுல்லையாற்றொடக்கி
யண்டர்தம்பிரான்வெளிப்படக்காட்சிதந்தருள்சீர்
கொண்டவான்பதிமுதல்பலதன்னிடைக்குலவக்
கண்டமுல்லையின்பெருமையார்கட்டுரைத்திடுவார். ௬௩

மருதம்.

பொலஞ்சிறைச்சுரும்புளர்தருகுறுஞ்சுனைப்புறவ
நிலந்தனைப்புடையுடுத்ததுநெட்டிளவாளை
யிலஞ்சிநின்றுமீப்பாய்ந்துவெண்மதிகிழித்தேகித்
தலங்கொள்வானியாற்றுலவுபூந்தடம்பணைமருதம். ௬௪

ஒருவனாகியசிவபிரானுலகுயிரளிப்பக்
கருணைகூர்ந்துதன்னவந்தருபேதமுங்காட்டுந்
திருநிகர்ப்பவோபாலியேவயல்வளஞ்செழிப்பப்
பெருகுதண்புனல்பற்பலகால்களாய்ப்பிரியும். ௬௫

பராரைமூலமேற்பணைகிளைவளாரெனப்பலவும்
விராவியொன்றிலொன்றனந்தமாய்க்கவடுவிட்டென்னத்
தராதலம்புகும்பாலியிற்பிரிந்துதண்கரைக்க
ணராவுகால்களுமவைதருகால்களுமனந்தம். ௬௬

நான்முகப்பிரான்வேள்வியைத்தபவருநதியை
மான்மறுத்திடைக்குலையெனக்கிடந்தமைமான
மீன்முகப்பெருங்காற்புனறட்பவீழ்ந்துழக்கும்
பான்முலைக்கருமேதியாற்பருமடையுடையும். ௬௭

பழங்கண்வேனிலைப்புயல்கொடுபோற்றுதன்னிறைக்குத்
தழங்குமோதையின்மருதம்வாழ்த்தெடுப்பதுதகைய
வழங்குதண்ணுமையோதையுமள்ளரார்ப்பொலியு
முழங்குதீம்புனற்சும்மையுமுடுகிவிண்புகுமால். ௬௮

பொறிகளைந்தையும்புறஞ்செலாதடக்கியோர்நெறிக்கே
குறிகொளும்படிசெலுத்துபேராளர்தங்கோள்போற்
பிறிவுறும்பலமடைகளிற்பிழைத்திடாதொதுக்கிச்
செறிதரும்புனன்முழுவதுமகன்பணைசெறிப்பார். ௬௯

பழியினீங்கினன்கீட்டியபசும்பொருள்சிறிதுங்
கழிபடாதுநல்வழிப்பயன்படுவதுகடுப்பக்
கொழிதிரைச்சுவைப்பாலியின்குளிர்புனன்முழுதும்
வழிவுறாதுகால்வழிச்சென்றுவளவயனிறைக்கும். எ0

கண்ணகன்புவிமுழுதுமாங்கடுங்கொலையவுண
னண்ணன்மார்பகம்பிளப்பவர்போலவிர்மணியின்
வண்ணவன்கடாநிரைநிரையாத்துவன்படையாற்
பண்ணைதோறுநின்றுழுநர்கம்பலைகளேயெங்கும். எக

மருவுசாறுறும்வெருவிமுன்குதித்தெழுவாளை
யிருமருப்பிடையுதைந்துழுமெருமையைத்தடுக்கும்
பருவராற்குலமொய்யெனப்பாய்ந்தெழுந்துலக்கு
முருவவாற்புறத்துதைந்துவல்விரைந்தெழவுந்தும். எஉ

பூண்டவன்கொடுந்தானவனுக்கைபோழ்ந்திடலுங்
காண்டகும்புவிதன்னிறங்காட்டியதென்னக்
கீண்டசாறுறுஞ்சேழ்கிளர்தமனியங்கிடந்து
மாண்டபேரொளிவயங்கிநீள்கனையிருண்மேயும். எங

வேறுசெய்துபின்பொருத்துறும்வினைவலவமைச்சிற்
கூறுசெய்ததண்சேறெலாந்துரப்பியொன்றுக்கிச்
சாறுசெய்துவாசவற்கெழுதுறுபிடர்தவிர்த்து
நாறுசெய்கெனவென்முளைவித்துவர்நாளால். எச

அருள்விளங்கலுமுடல்பொருளாதியபந்தந்
தருமவன்புடையெய்துறக்கொடுத்திடுந்தகைபோற்
பெருகயாத்தநீர்க்கலங்கல்போய்த்தெளிந்தபின்முழுது
மருவுகால்வழிவடிந்துறக்கவிழ்ப்பர்கண்மள்ளர். எரு

கலிவிருத்தம்.

இளமகப்பசிதனக்கேந்துகொங்கைப்பா
லளவறிந்தூட்டுதாய்மானவாறந்
களமர்கண்முளைப்புலம்பசலிகண்டுநீர்
வளவயல்பாய்த்தித்தம்மகவினோம்புவார். எசு

ஊரிடத்துயிர்த்ததன்பறழையோம்புவான்
பாரிடைப்பல்வயினுய்க்கும்பூனைபோற்
காருடற்களமர்கைந்நாறுவாரிப்போய்ச்
சீருடைப்பணைதொறுநடுதல்செய்வரால். எஎ

மரகதந்தளிர்த்தெனவளர்பைங்கூழ்செறி
தரநிறைகழனியுட்சங்கமூர்வன
பரவைநீர்மேய்ந்தெழும்படலைக்கொண்டலுட
சரமதிநுழைந்துசெல்காட்சிசாலுமால். எஅ

களமர்கள்களைகளைபருவங்காட்டலு
மிளமயில்வயல்வளங்காணவெய்தியாங்
குளமகிழ்கூர்தரவுழத்தியாரெலாம்
வளமலிபணைதொறும்வந்துமுற்றுவார். எகூ

அம்புயமுற்பலமாம்பலாதியாம்
பைம்புதற்களையறப்பறித்ததம்முருக்
கொண்புனற்றேறன்றலுங்கொய்துபுன்களை
பின்பினுமுளைப்பதென்பெயர்த்தென்பார்சிலர். ௮௦

பங்கயமாம்பலுற்பலத்திற்றேனுண்டு
தங்கியவண்டினங்கமதுவாண்முக்கு
செங்கனிவாய்விழிசேர்ந்துமூசுற
வங்கவைகட்டெறிந்தகற்றுவார்சிலர். ௮௧

பாயிதழ்த்தாமரைப்பறித்தங்கொப்புமை
யாயுநரொண்முகஞ்சேர்த்திசையதுதேன்
வாய்மடுத்திணையிலதென்றுமாற்றல்போன்
மீயுயர்கரைப்புறம்வீசுவார்சிலர். ௮௨

இணைவிழிக்கிணையிலையென்பதன்மையி
னணுகிக்காணெனவழைத்துக்காட்டல்போற்
பிணையுநாசியினெதிர்பிடித்துமோந்துதேன்
றணிவிழும்பலமுடிசார்த்துவார்சிலர். ௮௩

சைவலங்களைகுவார்குனியத்தாழ்குழ
லெய்தியெம்மினத்திணையொறேன்மினென்பபோற்
கைமிசைவிழுந்துசிக்குண்ணைக்காணிமிர்த்
தையுபூங்குழன்முடிந்தணைகின்றார்சிலர். ௮௪

நறுமலர்ப்பங்கயங்களையநாரியர்
கறுவொடுமுள்ளரைக்காம்புபற்றலுந்
தெறுகரங்கிழியப்புண்செய்யுமேதமக்
கிறுதிசெய்வார்க்கெவரிடரிழைத்திடார். ௮௫

அலமருவிழியினமாமெனுமுக
மலர்மிசைப்பாய்தருகயலுமாண்டதன்
குலமெனப்புறவடிகூடுங்கூர்மழு
மிலவிதழ்கடைசியரெளிதிற்கைக்கொள்வார். ௮௬

பறிதரக்களைந்தெறிபாவைமாரையம்
மறிபுனற்குவளைகால்வளைத்துப்பாம்பெனப்
பொறிவெருவுறச்செயும்புடைப்பின்மொய்ம்பிலாச்
சிறியருந்தம்மினுந்தீங்கிழைப்பரே. ௮௭

களிபடுசுரும்புளர்கமலக்கஞ்சமு
நளிபடுகுவளையுநணைகொளாம்பலுந்
தளிரியற்கடைசியர்முழுதுஞ்சாடுவா
ரளிமருவலர்க்கெவரன்புசெய்குவார். ௮௮

புரைதபுபசும்பயிர்ப்பொலிவுங்கூங்கெலா
நிரைநிரைகிடந்தபன்னிறத்தபூக்களும்
வரைதவழ்முகில்களும்வானவிற்களுந்
தரையிடைப்பயன்பெறச்சார்ந்ததொக்குமால். ௮௯

இருண்முகிலுறழ்ம்பயிரிடையெலாந்தடித்
துருகெழவயங்கியாங்குலவுமங்கலார்
திருமலர்ப்பதமெலலப்பெயர்த்துத்தேங்குழற்
கருஞ்சிமிறார்த்தெழக்கரையிலேறுவார். ௯0

தெறுங்களைகட்டுநீர்ச்செறுவிற்பண்டுபோ
னறுங்களம்போருக்ச்சேக்கைநாடிவந்
துறுங்களியோதிமமுயங்கிவாடுவ
வறுங்களநாடியுண்மறுகுமாந்தர்போல். ௯௧

கொள்ளைபோய்நனிவற்ங்கூர்ந்தக்காலையும்
வள்ளியோர்விருந்தினர்வாடக்காண்பரோ
கள்ளருமலர்வளமிழந்துங்கார்வயல்
வெள்ளனமகிழமீன்விருந்துநல்குமால். ௯௨

மண்ணகமகளிர்கைவண்மைகண்டயாம்
விண்ணகமகளிர்கைமேன்மைகாண்டுமென்
றெண்ணிமேற்சேறலுற்றென்னவான்பயிர்
கண்ணிறைகவின்செழித்தோங்குங்காட்சித்தே. ௯௩

பொச்சக்கலிப்பா.

ஈன்றெடுத்தோர்குணமகவுக்கியையுமுறைப்பழுவித்திற்
றோன்றுமுளைமுன்விளர்த்துப்பின்பசந்துதொடர்பிற்
லான்றசெழுங்கதிர்களுமுன்றாவெள்ளையாயெழுந்து
மான்றுமரகதமேனிவாய்த்துமடல்கிழித்தெழுமால். ௯௪

அரமகளிரங்கைவளமறிபாக்குமேற்போந்து
திரையெறிநீர்க்கடல்வரைப்பிற்றெரிவையர்கைக்கிணையொவவா
மரபுணர்ந்துமீண்டென்னவானேக்கிக்கதிர்த்தெழுந்த
பரவுபுனற்றடஞ்சாலிபார்நோக்கியிறைஞ்சுமால். ௯௫

பேதைமையிலாடவர்முன்வளவின்றிப்பெதும்பைமையின்
மேதகச்சற்றெனவணங்கிமங்கைமையின்மிகநாணு
மாதரைப்போற்பைங்கூழின்மன்னனெதிர்கதிர்த்தெழுந்த
வேதமிலாக்கதிர்முதிர்ந்துவரவரக்கீழிறைஞ்சுமால். ௯௬

உருத்திட்பமுருக்காலேத்தலேநிறீஇயுற்றதற்பின்
றருக்கற்றுநனிவணங்கிப்பழுத்தகதிர்த்தடஞ்சாலி
பெருக்கத்துவேண்டுமாற்பெரும்பணிவுமிகச்சிறிய
சுருக்கத்துவேண்டுமுயர்வெனுமொழியின்சுவைதேற்றும். ௯௭

தூமதிவாக்கியகிரணந்துளித்தென்னக்கதிர்ச்சாலி
காமர்மணித்தரளங்கள்கான்றுசெறித்திடராக்கிப்
பூமலர்க்கால்யாத்தபுனன்முழுதுமபுறங்கவிழ்த்து
மாமைநீர்புலர்த்தவருமள்ளருளமகிழ்விக்கும். ௯௮

வணங்குகுலைக்கதிர்ச்சாலிசிலையாகவளர்பதடி
யுணங்குகதிர்கணையாகவொளிர்முளரிக்கரம்பற்றி
யிணங்குபசுங்குரல்கவரவரும்புட்களிரிந்தோட
வணங்குபுரிந்தெதிர்கண்டோரதிசயிப்பச்செயும்பணைகள். ௯௯

பாலொளிநீத்தெழும்விடத்தான்முகில்வண்ணம்படைத்திருந்த
மாலவனார்கவிக்கச்சிவந்தெய்தித்தவமுஞற்றி
மேலையுருச்சிவந்தென்னவெள்ளொளிபோய்ப்பசந்தெழுந்த
சாலியெலாஞ்செங்கனகநிறம்வாய்ந்துதழைக்குமால். ௧௦௦

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நாவலோர்புனைந்துரைக்குநலமுழுதுமமைந்துவடநாகஞ்சூழ்பொன்
னாவலோவெனவியப்பவளர்செந்நெலரிபருவநாடித்தெண்ணீர்
நாவலோனுளங்களிப்பப்படியெடுக்குங்குண்டைநகருழவர்போல்வார்
நாவலோவெனவிளிப்பத்தொழுவரெலாநயந்தெய்திவினையின்மூள்வார்.

கலிவிருத்தம்.

ஒருவருக்கொருசெல்லலுற்றுழலஃ
தருகுளார்க்குமடுப்பதுதிண்ணமே
கருவிமள்ளர்கதிர்க்குலையூன்றொடும்
பருமென்றீங்கரும்பற்றியரிகுவார். ௧௦௨

அரிவர்சேர்ப்பர்குக்குவர்சிக்கென
வரிவர்செந்நெலியில்வைப்பர்களஞ்செலப்
புரிவர்பொன்னங்கிரியெனப்போர்செய்வர்
பிரிவர்மீள்வரிப்பெற்றியரங்கணும். ௧௦௩

சிறைசெய்திம்புனனாட்டிடைசெற்றுமுன்
சிறையரிந்தவரைகளைச்சிற்றத்தாற்
சிறைசெயங்கருதித்தன்னிலத்தொரு
சிறைவைத்தாலெனப்போர்கள்சிறக்குமால். ௧௦௪

வெற்பெலாமண்ணின்வீழ்த்துவலாரிதன்
னொப்பிலார்கிளையேவியொறுத்தல்போற்
பற்பல்போர்கள்சரித்துப்பகட்டின
முற்பிணைத்துநடத்துவர்மொய்ம்பினோர். ௧௦௫

நெற்பலாலத்தினீங்கியதோவெனப்
பற்பல்காலுமுகங்கோட்டினபார்ப்பபோற்
பொற்பவாயினிற்பூங்கதிர்கவ்வுபு
சொற்பகட்டினஞ்சுற்றியுழக்குமால். ௧௦௬

உடலினைப்பிரிந்தெனவூழ்வினைத்
தொடர்புநீங்குவதொப்பத்தொகுத்தநெற்
படலைவையினினீங்கப்பகட்டின
மடையவுந்தொடர்நீங்கியகலுமால். ௧௦௭

வையகற்றிவளியெதிர்தூற்றலும்
பொய்யகன்றவரைம்பொறிபோதல்போற்
கையகன்றுகழிவைப்பொடியொடு
மொய்யெனப்பதரப்புறத்தோடுமால். ௧௦௮

அறத்துநால்வழியாற்றுவவாற்றியத்
திறத்தினெஞ்சியசெந்நெற்குவையெலாங்
குறித்தெடுத்துநெற்கூடுய்த்தறச்செயன்
மறப்பிலாதவளக்குடியெங்கணும். ௧௦௯

குறையவித்தினங்கொண்டுகுடியெலா
நிறையச்சாலிநிரப்புவபூம்பணை
யிறையளித்தவிருநாழிநெற்கொண்டே
யறமெலாநிறைவிக்குமமலைபோல். கக0

கொடுப்பகொண்டுபெருக்கிக்கொடுத்தலா
லடுத்தவாணிகர்போலுமகன்பணை
யுடுத்தசோலைகளும்பர்கடவுணீ
மடுப்பதென்னவளர்ந்தெழுந்தோங்குமால். ககக

கலிநிலைத்துறை.

கொண்டலுகுக்குமாலிநிகர்ப்பக்குளிர்பாளை
விண்டுமுகைக்கும்பைங்கமுகங்கும்விளையாட்டு
வண்டலர்கொங்கைக்கிடையிளநீர்மற்றவர்காணு
தண்டமிசைக்கொண்டெய்தியளிக்கும்வளர்தெங்கு. ககஉ

செற்றெயில்வென்றார்தேர்மிசைமேற்போக்கொன்மென்பூத்
துற்றபொதும்பர்த்துறையினினத்தாற்செருவேற்றுப்
பற்றியவாவிநீங்குபுபைந்தேனடைகிறி
யுற்றெழுவாளைபொருதுயிர்விண்டார்கதிகாட்டும். ககஙா

போதுகண்மேயநெடுங்கயமேவுபுனிற்றுக்கார்
மேதியையாயிடைவாளைவெகுண்டுவிசும்பேறி
பாதிவெரிந்புறமுட்குழியக்குதிபாய்ந்தாடி
மீதுயர்திண்கரையேறவுகைக்கும்வியப்பிற்றால். ககச

சுவையொளியூறொலிநாற்றமெனைந்தின்றொடர்பற்றிக்
கவர்ப்டுநெஞ்சிற்றிரைதிரைதோறுங்கடைநீர்நாய்
துவளவெழும்பாமுறைமுறைகீழ்நீர்ச்சுழல்காட்சி
யெவருமிறும்பூதுறவுளவேரித்தடமெங்கும். ககரு

கரைத்துறுதண்பூங்காஞ்சிகள்சாகைக்கரமோச்சி
விரைத்தகரும்பைத்தைவருதோற்றம்விரிதார்வண்
டிரைத்தெழுதிண்டோட்கேள்வரொடுமிளையார்மே
னிரைத்தமர்செய்வான்வேள்சிலைபற்றுநிகழ்விற்றால். ககசா

மேத்குசெவ்வணிதாங்கினர்செல்லுமினன்னுரு
நீதறவெள்ளணிபூண்டுசெல்சேடியராறொரும்
போதலுமீடலுமாய்ப்பொலிவீதிகளெங்கெங்கும்
காதல்செய்சேரிமடந்தையருள்ளங்கவல்விக்கும். ககஎ

தசும்புறழ்கொங்கையொடெம்பெருமான்மகிழ்தண்பாகூர்
விசும்பையுரிஞ்சுமதிற்றிருவல்லம்விரைச்செந்தே
னசும்புதடம்பொழிலேனைய்வைப்புமனந்தஞ்சூழ்
பசும்பணைமாமருதத்தெதிரில்யார்பகர்கிற்பாரே. ககஅ

நெய்தல்.

சொச்சகக்கலிப்பா

அம்மருதவைப்பினையடுத்தகழிநெய்தன்
மம்மர்விடவாலமாறுக்குதவுமாற்று
னம்மினமெனப்பொய்ம்மொழிநாடியுரைகைதை
சும்மையவளக்கரொடுசூழ்ந்துறவுகொள்ளும். ககசூ

கண்டன்மடலேறவலர் தூற்றுகமழ்புன்னை
யுண்டுறைகாலுமளியொத்துடனிசைக்கும்
வண்டுளருநம்புவிரிநெய்தன்மணமிசையுங்
குண்டுகழிமேய்பறவைநோக்கிமகிழ்கூரும். கஉ0

கண்டுமொழியாரவயவத்தெழில்கவர்ந்து
தெண்டிரையளக்கரினொளித்ததுதெளிந்து
கொண்டதுறையோர்கடல்குளிப்பர்துகிர்சங்கம்
வண்டரளம்வாரிமடவாரெதிர்குவிப்பார். கஉக

எம்முடையுறுப்பெழிலைவவ்வினிர்களென்றுக்
கொம்மைமுலைவம்பணிபரத்தியர்வெகுண்டு
விம்முவளைசேல்பவளம்வெண்டரளமற்று
மம்மபிறர்கொள்ளவிலையாற்றிமகிழ்கூர்வார். கஉஉ

கண்ணெழில்கவர்ந்தகடன்மீன்களையுணக்கு
முண்ணமிழ்தமன்னமடவார்பறவையோப்பும்
பண்ணிசைமடுப்பவிழைபல்வமுமருக்கன்
விண்ணெழுபகற்பொழுதின்மெல்லெனவொலிக்கும். கஉங

துணந்தவர்களாருயிர்வருத்தவிறல்சாற்றி
மணந்தழுவுதும்பைமலர்சூடியடன்மார
னணங்கமர்செய்காலமெனவோர்ந்துமுரசாழி
யிணங்குறவிராப்பொழுதின்மிக்கொலியெழுப்பும். கஉச

வீழ்ந்தவர்துணைத்தலின்விழிப்புனலுகுத்துத்
தாழ்ந்தழுதிரங்குமடவார்தந்தமைநோக்கி
யாழ்ந்தகழிமாதுமுடனின்றழுவதென்னச்
சூழ்ந்துபுளரற்றமலர்தேத்துளிதுளிக்கும். கஉரு

நலம்பயில்பொருட்குமலிவங்கமிசைநண்ணும்
புலம்பர்வருகின்றவழிநோக்கினர்புலம்பி
யிலம்படுமடந்தையர்களின்னுயிர்தளிர்ப்ப
வலம்புகுளிர்பூந்திவலைவீசுமலைவாரி. கஉசா

புன்புறபதந்தரும்வியந்துபுகழ்செய்ய
வென்னையொருபெண்ணெனவியற்றுநகரொற்றி
நம்பதிமுதற்பலவுடுத்துநளிநெய்த
நன்பெருமையாவரளவிட்டறிதரத்தோர். கஉஎ

திணைமயக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருத்தொண்டைநன்னாட்டுநானிலத்தைந்திணைவளமுந்தெரிந்துகாட்ட
மருத்தொண்டைவாய்ச்சியர்சூழ்குன்றைநகர்க்குலக்கவிஞரேயவல்லானல்லாற்
கருத்தொண்டரெம்போல்வாரெவ்வாறுதெரிந்துரைப்பார்கலந்தார்க்கின்ப
மருத்தொண்டரணியிலவையொன்றோடொன்றியைந்தனவுமாங்காங்குண்டால்.

வரைப்பிண்டிமலர்தூவிவனப்பலாசெதிர்சொரிந்தமலருண்மூழ்கி
நிரைக்கும்பூங்கணைதூவிமதனெம்மான்விழிநெருப்புணிற்றல்காட்டும்
வரைத்துன்றுகறிக்கொடிபோய்க்கடுக்கைமிசைமரகதத்தோரணம்போற்றாவி
நிரைக்கிள்ளைவாரணமுமெதிர்நடப்பப்பொருநர்நெடுங்கயிறுகாட்டும்.

சுற்றெல்லாமலர்முல்லைதன்றந்துபெருந்தூறுசெயவதன்கீழெண்கு
பற்றிநுழைந்துறங்கவளர்கொன்றைமிசைக்கறிதாய்ப்படருந்தோற்ற
முற்றரக்கன்வெள்ளிமலையெடுத்தநாள்வெரீஇத்தழுவுமுமையாளோடுங்
கற்றைவார்சடைப்பெருமானின்றநிலைகாட்டுவதுமுண்டாலங்கண்.

தாம்பயிலும்வரைக்கிளைத்தசெயலைமலர்கவர்மாரன்றன்மேற்சீறி [கும்
யாம்பலினங்கழனியிற்போயவன்சேமச்சிலைக்கரும்பையழித்துண்டார்க்
பூம்படுகர்ப்பகட்டினங்கள்வெகுண்டெழுந்துமலைச்சாரற்புனிற்றுவாழை
தேம்பயில்செந்தினையனைத்துமழித்துழக்கிமேய்ந்துவக்குஞ்செவ்வித்தோர்பால்.

வரைக்குறக்கன்னியர்புனத்துக்குருகோட்டுங்கவண்மணிக்கன்மருதத்தெண்ணீர்த்
திரைக்கயத்துத்திடர்செய்யவங்கிலந்துச்சிறுமகார்சினமீக்கொண்டு
விரைத்தகுழற்பேதையர்கள்வண்டலாட்டயர்துறையின்மேவிப்பந்து
நிரைக்கழங்குமவரலறப்பறித்தெறிந்துநீர்ச்சுனையைத்தூர்ப்பாரங்கண்.

தாழுமொருபயப்படார்பயப்படுவார்தம்மையுந்தம்போற்செய்வார்போய
காமரளிநுகராமற்கழிப்பூமேலடுக்கலுறுங்கணிதேனூற்று
மாமிதனையறிந்துவெகுண்டெழுந்தென்னவணிவேங்கைக்குடிமிதன்னை
நாமநீள்கூடல்பவளக்கரநீட்டிப்பற்றியிடுநலமுமோர்பால்.

அலைக்காகமலைச்சாரற்பலாச்சுளையைக்கவ்வியெழுந்தரக்கர்கோமான்
சிலைத்தாசரதிமனையைக்கொண்டகன்றெனவங்கஞ்சேருமந்நா
ணிலைப்பாமதிலிலங்கைபிசைத்தாவுமனுமானைப்போனின்வாமந்தி
மலைப்பானின்றலைத்தோணிபாய்ந்துழக்கிமீண்டெய்துமவ்வாழ்வுமங்கண்.

இடைச்சியர்பானடைகற்பச்செல்வதெனவயன்மேவுமெகினமெல்லாம்
படைத்தவம்பாடியிற்போயான்பாலைவாய்மடுத்துப்பயுணீங்கு
மடைத்தலைசூழ்வயன்மகளிர்மொழிபயிலப்போவதெனவத்துள்வாழும் [ல்.
பெடைக்குயில்போய்ப்பணைக்கமுகின்கனிதொண்டைக்கனியென்னப்பேறுமோர்பா

கொடும்பரவர்மியுழக்கக்குதித்தெழுமீனாய்ச்சியர்பாற்குடத்துள்வீழ்ந்தங்
கடும்பயத்தோடலமருமற்றவர்கடையுந்தயிரோதைக்கலமந்தோடி
யொடுங்குழயல்கைதையினுளடங்கியங்கட்கடலொலிகேட்டுள்ளமாழ்குங்
கடுங்கருமத்தொடர்ந்தோயாங்குறினும்விடாதெனக்காட்டுமோர்பால்.

இடுகுரிமைக்கடையர்கள்களைந்தெறிந்தநறுங்கமலமிரைக்குமுந்நீர்ப்
படுதிரைமேல்வயங்குதலுங்கடன்முளரிபூத்ததெனவன்பாரீரென்பா
ருடைதிரைநீர்க்கடல்கிளைத்ததுகிர்க்கொடிபோய்ப்பழனமிசையொளிரக்கண்டோர்
கடிவயலுந்துகிரீன்றதென்னென்பாரிப்பரிசுகவினுமோர்பால்.

வரைப்புறத்துப்பசுங்கிளியுங்கான்குயிலுமுடனுன்பான்மடுத்துப்புட்க
ளிரைத்தெழுபூம்பணைமருதச்சேக்கைமிசையெதிரெதிநின்றிசைகள்பாடு
நிரைக்குடுமிவரைப்பகடும்வயற்பகடுங்கரும்பொடித்துமந்தித்
திரைத்தடனீர்க்கான்யாற்றுத்திளைத்தாடியுடனுறங்குஞ்செவ்வித்தோர்பால்.

புறவகத்தகுமிழம்போதுங்கழிக்கானற்கைதைதரும்பொலங்கேழ்ப்பூவுந்
தறைபொறுத்தவரைதோன்றித்தண்மலர்மேலிருபுடையுந்தாங்கிநின்றே
யிறைவனுக்காமலர்யோந்தாண்மூக்கரிந்துசுரிகையுடனேந்தியந்நா
முறைநிறுத்தசெருத்துணையார்நின்றநிலைகாட்டிவளமுகிழ்க்குமோர்பால்.

விண்முட்டுங்குடுமிவரைத்திகிரிபடும்வெள்ளமூதும்வேலைச்சூழும்
மண்முட்டநறும்புன்னையுகுமரும்புங்குலைமயங்கியவற்றுட்சேர்ந்து
தண்முட்டையிதுவெனப்பகுத்தறியவல்லாதுதளர்வுகொண்டு
கண்முட்டவளம்படைத்தவயலன்னந்துயர்கூருங்கா சித்தோர்பால்.

குறுஞ்சுனையிற்களிவண்டுகூழன்றுடுங்காள்குயில்கள்குறைநீர்ப்புன்னை
தொறும்பொதுளுங்கருங்கொடிதன்குடம்பையிற்போய்க்கருவுயிர்த்துச்சுலவிமீண்டு
நறும்பிரசமலர்க்காஞ்சிச்சினையேறியொளியிருந்துநாடிக்கால
முறுந்துணையுமினிதுறையுமுல்வாதுவளங்காட்டியோங்குமோர்பால்.

கறிக்கொடியுந்துகிர்க்கொடியுமவ்வயலைப்பசுங்கொடியுங்கமழ்தேமன்மௌவல்
வெறிக்கொடியுநாற்றிசையுந்தாய்ப்படரநடுவெளர்ந்தவிரைக்குராமேற்
கிறிக்கொடியபெருங்காற்றுறப்பல்காலுமசைபாவைக்கிளர்ச்சிவாள்கண்
மறிக்கொடியுங்கூத்தியர்செய்கயிறுவிசிகழைக்கூத்தின்வயங்குமோர்பால்.

இனையநானிலமடுத்தவளாகம்மெலாம்பெருங்குடிகளியல்பினோங்கித்
தினையளவுமுறைபிறழாத்தொண்டைநாட்டணிமுழுதுந்தெரித்துக்கூறக்
கனைதிரைநீர்க்கடலாடைநிலவரைப்பின்யாருளரோகற்பநாட்டுந்
தனைநிகர்பாதலதலத்துமன்னதேயெனிற்பிறிதுசாற்றுமாறென்.

எந்நாட்டுப்பெருவளமுமெவ்வெவர்கோட்பாடுகளுமியம்பவல்ல
பொன்னாட்டுப்பொன்செருக்கும்பன்னாக்குப்பணிச்செருக்கும்போக்குமிந்த
நன்னாட்டைப்புலவரெலாந்தொண்டைநாடெனவுரைப்பர்ஞாலமங்கை
தன்னாட்டப்போதனையமுகக்கனிவாயாங்காரணத்தின்சார்பாற்போலும்.

சலதியுடைச்சேயிழைக்குத்தமிழ்நாடேமதிமுகமாத்தமிழ்நாட்டுள்ளு
மலர்புகழ்த்தண்டகநாடேகனிவாயாவதனுள்ளுஞ்சாதிபேதங்
குலவுமாருயிர்க்கெல்லாந்தத்தமதுமரபொழுக்கங்குடங்கைசேரா
மலகமெனத்தேற்றுதலின்வளமெலாங்காஞ்சிநகர்வண்மைசொல்வாம்.

திருநாட்டுப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௭௨.

திருநகரப்படலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கச்சிமாநகரோர்தட்டுங்கடவுளருலகோர்தட்டும்
வைச்சுமுன்னயனார்தூக்கமற்றதுமீதுசெல்ல
நிச்சயமுறுகித்தாழ்ந்துநிலமிசைவீழுமிவ்வூரை
யிச்சகத்தூர்களோடுமெண்ணுதன்மடமைப்பாற்றே. ௧

கவினெலாந்திரட்டிக்காஞ்சிக்கடிநகராக்கிக்கஞ்சத்
தவிசினோனதன்பாலுட்பத்தொழில்செயச்சார்ந்தகாலைப்
புவியிடைக்கழிந்தசேடம்பொற்பவேறெடுத்துவிண்ணு
டவிர்தரச்செய்தான்போலுமன்றிவேறுரைப்பதென்னே. ௨

ஆதிநான்முகக்கணெம்மானயன்றனைப்படைத்துவேத
மோதுவித்தருளிநோக்கியுலகெலாம்படையென்றேவும்
போதிதுபார்த்திவ்வாறுபடையெனப்புகன்றுவைத்தா
னீதெனலாகுங்காஞ்சியென்னுரையளவைத்தாமே. ௩

இந்நகர்நோக்குந்தோறுமிமையவர்தமதுநாடு
நன்னரென்றிருந்ததம்மைத்தாங்களேநாணிவைவர்
முன்னொருசமயந்தன்னைப்பொருளெனாமுற்றிநின்றோர்
பின்னர்வான்சைவமெய்தப்பெறினவர்பேசுமாபோல்.

நீடுமிந்நகரமன்னிநெடுந்தவமுயல்வோர்வான
நாடர்தம்பதமுங்கஞ்சனாரணன்வலாரிவைப்பும்
பாடிரிகான்றசோறுக்காண்பதிப்பதியின்வண்மை
கோடியிலொருகூறன்றெவ்வாவவையெனக்குறித்தேயன்றே. ௫

புறநகர் - சோலை.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுரும்புகாலுழக்கமுகையுடைந்தலர்ந்துதுளித்ததீஞ்சுவைமதுப்பிலிற்று
மரும்பெறற்சோலைமீமிசைக்கருவிமுகிற்குழாமடவர்பாட்டளிக்கு
விரும்புதேனளியாக்கற்பகநாட்டைவெல்லுவான்வருவதோர்ந்தஞ்சித்
தரும்புகழ்வலாரியூர்தியைச்செலுத்தித்தடுத்திடைமடக்குதன்மானும்.

நறவமூற்றெடுப்பச்சிறகர்வண்டிமிருநளிபொழிலிடும்பைகூர்ந்தழுகு
குறைபடப்பொதிந்தகுயின்களைவல்லேகுதித்தெழுந்துதைத்துதைத்தகற்றி
நிறைபுனற்றடத்துப்பிறழ்தருங்கிழமைநெட்டிளவாளைமீன்றனக்குத்
துறைதொறுங்கைம்மாறெனக்கனிசெழுந்தேன்சொரிவனநெடுமரப்பொதும்பர். ௭

வண்டலாட்டயரும்வாண்மருணெடுங்கண்மங்கையர்நெறிசுரிகூந்தற்
கொண்டலைக்காணுந்தொறுந்தொறுமவர்தங்கோமளச்சாயலுக்குடைந்து
தொண்டுபூண்டெதிர்நின்றுவதேய்ப்பத்தோகைமாமயினடங்குயிற்றுந்
தண்டளிர்துவன்றிப்புதுநறுந்துளிக்குந்தணதமலர்ச்சாகையம்பொதும்பர்.

வாம்பெருந்திரையதடம்புடையுடுத்தவளம்பொழிற்சாகைகடோறுந்
தீம்புனல்குடையுமாதரார்முன்னூட்செறித்தபட்டாடைபொன்னணிகள்
பூம்புனலகத்திற்றோன்றலுமிளையோர்புனலரமகளிரென்றஞ்சிக்
கூம்பியகரத்தராநலார்நகைப்பக்குலைமிசைநோக்கிவெள்குவரால். ௯

கொங்கவிழ்பொதும்பர்க்கொழுமுகையுடைந்துகுளிர்மதுச்சொரிதலினாழ்ந்த
பங்கயச்சேக்கைமீமிசையெகினம்பைப்பயமேனிவந்தெழுவ
பொங்குவெம்பாவக்கருமுருட்டமணற்புணரியுட்சிலையுடனமிழ்ந்து
மெங்கள்வாகீசரஞ்செழுத்தருளாலெழுந்துமேல்வயங்குதன்மானும். ௧௦

யானைக்கூடம்.

கலிவிருத்தம்.

முறைமுறைபனைக்கைநீர்முகந்துவாய்மடுஉ
நிறைதடங்குறைதடமாக்குநீண்டவெண்
பிறைமருப்பொருத்தன்மாமதப்பெருக்கினாற்
குறைதடநிறைதடமாக்குங்கொள்கைத்தே. ௧௧

தாமுறையிடந்தரியலர்கட்கீந்தவர்
தாமுறையிடங்களிற்றங்கிளைக்குலந்
தாமுறப்பரிவருத்தனைசெய்வேழங்க
டாமுறைமுறைதிரிதண்டமெண்ணில. ௧௨

மழைப்புனறங்கண்மேலூற்றுமாமுகி
லுழைச்செலவெருண்டெதிரிழைப்பதொப்பநீள்
புழைக்கையினிறையநீர்முகந்துபோர்மதத்
தழைச்செவிக்கரிகள்விண்டலத்துவீசுவ. கந

கழையடிச்சுவடெனுங்கனகவட்டில்வ
ணிறையவாக்கியமதநீரைச்செல்வர்போற்
சிறையளிக்குலமெலாந்தெவிட்டவுண்டுவாழ்ந்
துறைபெருவளத்தனவாம்பல்வீதியே. கச

கொடையினிற்கீழ்ப்படுங்கொண்டல்யானையுந்
தடைபடச்சிறையிலிட்டாங்குச்சார்கடு
நடையிருமுறச்செவிநான்றவாய்க்களி
றடையவும்பிணித்தனவளவில்கூடமே. கரு

குதிரைப்பந்தி.

கரியுமிழ்விலாமியுங்காய்சினக்கடும்
பரியுமிழ்விலாழியும்பாய்ந்துசேறுசெய்
தெருவெலாமங்கலார்சீறடிச்சுவ
டுருகெழுதாமரைத்தோற்றமொக்குமே. கசா

குலவுகொய்யுளையடிச்சுவடுதோறுமேற்
கலனையினுக்கசெம்மணிகதிர்ப்பன
பலசுடர்த்தகழிகள்பரப்பிவைத்தெனக்
குலவுநல்வளத்தனகுந்த்வீதியே. கஎ

மல்லலைரமயில்களைவானரங்களைப்
புலவியமுயல்களைப்பொருசரங்களை
வல்லவாபுறக்கொடைகண்டவான்கதிப்
பல்லியற்புரவியின்பந்தியாயிரம். கஅ

தேர்நிலை.

மதக்கரிதனைமுயல்வயங்கொள்காதையைப்
புதுக்கவீங்கிருளொளிப்பொலிவைப்பற்றியீர்த்
ததிர்ப்பதென்றுளங்கொளக்கரியவாங்குர
கதத்தொகைபற்றுபொற்றேர்கணக்கில. கசு

எரிமணிச்சோதியுண்மூழ்கியீர்த்துச்செல்
பரிகளைக்காண்கிலர்பார்த்துச்சூரனார்
திருவுடையிந்திரஞாலத்தேர்கொலென்
றுருகெழச்செல்லுதேருலப்பில்வீதியே. உ0

வீரரிருக்கை.

நால்வகைநிலையினிற்பயிலுநாகவில்
வேல்வளைபலகைவாள்கற்கும்விஞ்சையர்
கோலவான்விஞ்சையர்குழாங்கணேக்குபு
சால்பினைவியத்தகுதலைமைப்பாலரே. உக

கிம்புரிபுரசைகள்கிடுகுகூவிர
மம்பொனிற்கலனைகுப்பாயமாதிய
வெம்படையேனவும்வேறுவேறுசெய்
பம்பியவினைஞர்வாழிடம்பல்லாயிரம். உஉ

நடைநகமுதலியவுலவுநாமநீர்ப்
புடைநகாவளமிதுபுசன்றாந்திங்களே
ருடைநகமமைழநிகரோதியார்பயி
லிடைநகர்வளமினியியம்பலுற்றதே. உ௩

இடைநகர்.
அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குடமுலைக்கெதிரென்றேறுங்குரும்பையைவெகுண்டுமின்னார்
பொடியிடியுலக்கைமீப்போய்ப்புடைத்தனமீளாமுன்னர்
முடிமிசையதிரத்தாக்கிச்சிந்துமுப்புடைக்காய்த்தெங்கிங்
கிடரிடர்க்கெதிர்செய்வோரின்வியத்தகவெங்குமோங்கும். உ௪

கோல்வளைகறங்கக்கொங்கையசைதரக்குலையக்கூந்தன்
மேலணிகலகலென்னவியர்வெழவுயிர்ப்புநீள
வால்வரிப்புனைபந்தாடுமொதரார்செயல்காண்டோறுங்
கால்வரிகழலினர்க்குக்காமமிக்கூருமாதோ. உ௫

தமதுருநிறத்தைவவ்வுந்தருக்கறிந்தொறுப்பார்போலத்
தமனியந்தகர்த்தசுண்ணமொருவர்மேலொருவர்வீசத்
தமனியச்சுண்ணமெங்கும்பரந்தனதவழ்தலாலே
தமனியவுலகந்தன்னையசிப்பனதடந்தேர்வீதி. உ௬

எரிமணிசோதிகாலவிருள்வரவறியாமாடத்
தரிவையர்கூந்தலூட்டுமகிற்புகைநாகத்தெய்திப்
பெரிதிருள்விளைப்பநோக்கும்பெற்றியேர்தட்டுமாறு
மரீஇயினவுலகமென்னேயெனமனமருள்வராமா. உ௭

மாற்றவள்பூசையாற்றிவரம்பெறுமுறைமைகேளா
வேற்றமார்கங்கையாளுங்கம்பர்பால்வரத்திற்கெய்திச்
சாற்றருங்கச்சிமூதூர்வலங்கொளுந்தகைமைத்தாய
வாற்றல்சாலகழியாழமகலமாளக்கவல்லார். உ௮

நெடிபடுபொதும்பர்சூழநிரைதிரைக்கரத்தாற்செம்பொற்
றடமதில்பொதியப்புல்லுந்தண்கிடங்கிறைவரேவக்
கடல்களேவளையநோக்கிக்கம்பரையிறுகப்புல்லுஞ்
சுடர்மணிக்கங்கைமானுந்துளித்தநீர்தழும்புமானும். உ௯

திரையெறிதாளம்பாங்கர்த்திரண்டுவாலொளிகள்வீசிக்
குரைபுனல்குளிக்கும்வேழக்குழாத்தைவெண்கயமாச்செய்யக்
கரைமிசைக்காண்போரென்னேயிம்மையேகடவுட்டன்மை
புரைதபத்தருமித்தீர்த்தமெனவிறும்பூதுகொள்வார். ௩௦

கடம்படுகளிநல்யானைகுண்டகழ்கலக்கிக்கொட்பத்
தடங்கரையேறற்கார்த்துத்தாட்டொடர்பிணித்துப்பாக
ரிடம்படவிருபாலீர்ப்பவிருங்கடலமுதமுண்ணத்
தொடங்குநாட்சிலம்புநட்டுச்சுராசுரர்கடைதன்மான. ௩௧

நவமணிகொழித்துப்பொங்குநளிதிரையகழிநாப்பட்
கவளமாக்கடத்தயானைக்கணஞ்சுலாயுழக்குங்காட்சி
யுவர்படாப்பௌவமீதென்றுவந்துவந்தெழிலிதெண்ணீர்
சுவறவாய்மடுப்பக்கொட்குந்தோற்றமேயனையதம்மா. ௩௨

இத்தகையகழியென்னுமிதுவுமோர்கடலையர்க
வத்தினாலிரட்டியென்றுதேமெனவறைவர்மேலோர்
தத்தலைக்கடைக்கால்வட்டச்சலதியுமிஃதுமன்றச்
சுத்தநீர்க்கடலென்றெண்ணியொருமையிற்றொகுத்தார்போலும். ௩௩

புடைபயில்பொதும்பர்த்தேனும்புனன்மலர்த்தேனும்பாய்ந்து
விடையவர்க்குமையாளாட்டவருமதுவேலையொக்குங்
குடநிகர்செருத்தன்மேதிகொட்புறச்சொரிந்தபாலா
லுடைதிரையகழிதீம்பாலளக்கருமொத்தலொக்கும். ௩௪

பழமுதற்பொருள்கள்விற்குமபாவையர்நாளுமங்கிப்
பொழுதினக்கலன்கழீஇயவண்டலாற்றனாற்கிடங்கு
வழிபடுமுமையாளொக்கைக்காட்டுமாலியங்களொன்றுங்
கழிவுறுசூழத்தேங்கிக்கிடந்ததேகடுக்குமன்றே. ௩௫

பாசடைக்கவயம்போர்த்துப்பகைஞரோடிகலித்தாலும்
பூசலைவிளைப்பவன்னோர்க்கணைபொருபுரைகடோறுந்
தேசுறவெழுந்தசோரியாமெனச்செய்யகஞ்ச
மூசுவண்டயினார்ப்பமொய்த்துளதகழித்தெண்ணீர். ௩௬

அணிமலரழகேநோக்கியகழியுளிழிகின்றோரும்
கிணியுறுகொடுமைநோக்கிச்சேயிலைவிலகுவோரும்
கணிகையர்கோலநோக்கிக்காதலித்துகப்பாமேறாரும்
பிணியுறுகருத்துநோக்கிவெரீஇப்பெயர்ந்துசெல்கின்றோரும். ௩௭

மதில்.

கலிநிலைத்துறை.

கம்பையைத்தடுத்தபின்புகம்பனுரைத்தலும்
பம்பியார்த்தொருங்குபௌவமேழுமுற்றுமாறுணர்ந்
தம்பையண்டபித்திகாறுமாக்குமாத்தடைபொர
வம்பலர்க்கிடங்குசூழ்ந்தமல்லனொச்சியோங்குமே. ௩௮

திருக்கிளர்ச்சியிற்செருக்குதேவநாடுபாதலத்
தருக்குநோக்கிவெஞ்சினந்தலைக்கொள்காஞ்சியவ்வலி
முருக்கவெண்ணிமுன்புபோய்வளைப்பவேவிமூண்டென
மருக்கிடங்குமிஞ்சியும்வியத்தகும்வளத்தவே. ௩௯

கிடங்கினெல்லைகாண்பதன்றிகீழுமேலுமாகநீள்
விடங்கர்தாளணிந்தவிண்டுநோக்கமேவியன்பதிற்
றடங்கொளெல்லைகாண்பதுந்தலைவர்தஞ்சடைத்தலை
யிடங்கொள்வெண்டலையலாமலேவர்காணவல்லரே. ௪௦

கச்சிவாணர்சென்னிதாள்கள்காணமுன்பறந்தகழ்ந்
தச்சழிந்தமால்விரிஞ்சரன்றுசென்றவெல்லைக
ணிச்சயிப்பவவ்வளவமேகவைத்தநீள்குறி
னொச்சியுங்கிடங்குமென்னநோக்குவார்க்கிலங்குமே. ௪௧

இடித்தகழ்ந்துதம்மிருக்கையெற்றிநீர்க்கிடங்கினில்
வெடித்தெழுந்துதாவுவாளைமீனைமீண்டொருவ்வகை
யடுத்துவிக்கவுண்டுதேக்கியம்பரத்துமீனையுந்
தடுத்துவென்றிகொள்ளவுள்ளசார்மதிற்பொறிக்குலம். ௪௨

உடல்படைத்தியக்கவோர்நிமித்தனுண்டெனக்கொளத்
திடம்வலித்தசான்றதாயவனர்தாட்செயப்படுங்
தொடர்புடைப்பொறிக்குலஞ்சுழன்றெழும்விழும்பகை
மிடல்கெடத்தெழிக்குமோடுமீளுமின்னதீரவே. சங

இம்மதிற்பொறிக்குலமெதிர்த்துளோர்தமைச்செருத்
திம்மெனுமுன்வென்றிகொள்ளுமீதுணர்ந்துதெவ்விர்கா
ளம்மவீண்டுறேன்மினென்றுகையெடுத்தசைப்பபோ
லம்மதிற்றலைத்துகிற்கொடிநுடங்குமாலரோ. சச

கலிவிருத்தம்.

வளமகன்றிருநகர்க்கிழத்திமாமைசா
விளமுலைதிளைப்பக்காரெழினிசேர்த்துபு
தளர்வறநாட்டியதம்பமேயெனக்
கிளர்மதிலிடந்தொறுஞ்செறியுங்கேதனம். சரு

நேமிமால்வரைமிசைக்கிளைத்துநீண்டவே
யாமெனக்கொடிமிடையம்பொன்மாமதின்
மீமிசைக்கோபுரமேலுஞ்சேறலால்
யாமினிப்புகல்வதற்குவமையில்லையே. சசு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மகதநாடென்னக்காஞ்சிவைப்பினுங்கடைகுறெய்தி
யிகலறவளர்க்குமெண்ணுன்கறத்தினுக்கிடர்செய்யாமைத்
தகையணங்குமையாள்வைத்ததடைநிகர்மதிற்சிர்சூழ்ந்தும்
புகரறவியம்பப்புக்காற்புலவர்க்குமுலப்புறுதே. சஎ

மிடைபுறத்தூர்களெல்லாம்விண்ணவர்நகராவங்கட்
புடைநக்ரயனூராகப்பூமகள்கொழுநன்றன்னூ
ரிடைநகராகமற்றையீசனூருலகமேயா,
நடைபிறழாதகீர்த்திபடைத்தவுண்ணகரஞ்சொல்வாம். சஅ

அகநகர் - பரத்தையர் வீதி.

அளிமதனூலினுற்றுலாடவர்தம்மோடாடிக்
களிமனைக்குள்ளாற்றுங்கள்விளைத்திடுங்கலவியெல்லாந்
தெளிதரமாடந்தோறுஞ்சித்திரந்தன்னிற்காட்டி
யிளையுரைமயக்கிக்காமமேற்றுவோர்சேரிமல்கும். சகூ

வரியளிமுரலாவாடாமாலையவிமையார்நோக்க
தரைமிசைத்தோயாத்தாளசித்திரந்தயங்குகாட்சி
வரைவிலாமகளிரின்னோர்மாணலம்வேட்டுவானிற்
சுரர்களுமெய்திச்செவ்விபார்த்துழைதோற்றமொக்கும். ருo

பூத்தபினிராறுநாளுங்கிழத்தியர்ப்புணர்ந்துதம்மை
நீத்தனரெனுஞ்சீற்றத்தானின்றவீரான்பானூ
மேத்துமாடவரைத்தங்களிளமுலைத்துருக்கமேற்றிப்
பாத்திருநிதியமெல்லாம்பறித்தனர்தொள்ளைகொள்வார். ருக

கோலத்தினிசையின்யாணர்க்கூத்தினின்விநயத்திற்
சீலத்திற்கலவிச்செய்கைத்திறத்தினிற்பிறவாற்றானு
ஞாலத்துமைந்தர்தம்மைமருட்டிநற்பொருள்கள்வவ்விக்
காலுற்றசாற்றுவேழக்கோதுபோற்கழியநீப்பார். ருஉ

அலகினல்லறஞ்சூழ்காஞ்சியமர்பெருஞ்செல்வராயுங்
குலமுறைச்சார்பால்வெங்கோய்க்கோட்பட்டாரிழிஞரேனுஞ்
சிலகொடுப்பனவுங்கொண்டுசேர்ந்துபொய்வஞ்சமெல்லா
நிலைபெறவடைத்துவைத்தநெஞ்சினராகிவாழ்வார். ௫௩

அலைவிழிக்கணிகைநல்லாராடவர்தமக்குநல்கு
மிலைநிகரெனுமின்பத்திற்கின்பமுஞ்சமமாக்கொண்டு
விலையெனநிதியுங்கோடல்வியப்பிற்றேயேற்றமாக
மலைநிகர்தனங்களீந்தோர்மலைநிகர்தனமுங்கொள்வார். ௫௪

தவமறைக்கிழவன்மாயன்றானுமென்றிவருமிவ்வூர்க்
கவர்மனப்பரத்தைமாதர்கண்வலைப்பட்டேயின்று
மிவறியவலரோன்மாலோன்பித்தனென்றிப்பேர்பெற்றார்
சிவசிவயாவரேயோவவர்திறத்தகப்படாதார். ௫௫

விற்றிடுமெல்குறஞ்னைமீள்வுந்தாந்தேயாக்கி
மற்றையநாளும்விற்கும்வரைவிலார்வீதியிச்சீர்
கற்றிலாவணிகமாக்களாவணக்கவினைநோக்கிப்
பற்றுவெண்டாளக்கோவைபத்தியாற்சிரிக்குமன்றே. ௫௬

இருமைவாணிபத்திற்கூர்த்தமதியருமிறும்பூதெய்த
வருவமாமின்பந்தன்னையிம்மியினளவுமேறா
துருவமாம்பொருளுக்கேற்பநிறுத்துவிற்றொழுகவல்ல
விருமனப்பெண்டீர்தம்முட்டருக்கிவாழிருக்கையீதால். ௫௭

ஆவணவீதி.

இன்னவீங்குளவோவென்னக்கடாதலுமியம்பியோர்கட்
கன்னவிங்குள்ளவில்லென்றிறுத்தலுமறியாதியாரு
மென்னவுந்தருதிரென்னவிலைகொடுத்தேற்பவீய
மன்னியெப்பொருளுமென்றுநிறையுமாவணமனந்தம். ௫௮

செய்வினையனைத்துந்தன்பாற்சேர்த்துவைத்துயிர்க்குப்பின்னா
ரவ்விறையாணையாற்றாலளித்திடுமாயையேபோற்
கொய்வளம்வருவமுற்றுங்கொண்டுபின்னுய்கர்மாறப்
பெளவநீருலகுக்கெல்லாமுதவுவபைம்பொன்மாடம். ௫௯

அணங்கனார்பரப்பிவிற்குமணிகிளர்கோங்கந்தாரிற்
சுணங்கினைக்கணியென்றஞ்சிச்சுரும்பினமுறாமைநோக்கிப்
பணங்கிளர்பாந்தளல்குற்பாவைமீரென்னேபொற்பூ
மணங்கமழ்கின்றதென்பாராடவர்மருட்சியெய்தி. ௬௦

வீழ்பொருளெடுக்கலாற்றாவுறுசனமிடைந்தவீதித்
தாழ்குழன்மடவார்மைந்தர்தங்களுண்முட்டுங்காலைத்
தாழ்மணிமுலையுந்தோளுங்கலந்துறவுவகைபொங்கி
வாழ்நருஞ்சிலரேபல்லோர்வாடிநைந்தழுங்குவார்கள். ௬௧

கலிநிலைத்துறை.

நெருங்குபல்சனமுழக்கறாக்கூலநீல்விடத்தைக்
கரந்தகம்பர்மேற்றெழித்துறுங்கடல்பெருந்தெருவாம்
சுரந்துவந்துநாற்புறத்தினுஞ்சனமிகத்தொகுவ
பரந்தவீரையுட்புகுந்திடும்பற்பலநதியே. ௬௨

மற்றையவீதி.

அறத்தினீணகர்புவனேசக்கரமெனவான்ற
திறத்தபொன்மதிலேழுடைச்சின்மயக்கோயிற்
புறத்தவான்மிசைப்புலவர்கண்ணூறுபட்டிடாமை
மறைத்தெனக்குயினூரிஞ்சுபூம்பந்தர்சான்மறுகு. சுந

மகரப்பொற்குழைப்பிரான்றளிசூழ்மதில்குறடு
நகரச்சீரெயில்சுற்றுமாளிகைநிரையாருந்
திகழச்சூழ்தெருவாரிடைவெளியுமாய்ச்சிவன்றேர்ச்
சகடத்தேருடைச்சகடமற்றென்றொராத்தயங்கும். சுச

சரிக்குங்குஞ்சரமதப்பெருங்கலுழியுந்தளைவைச்
சிரிக்குமூரலார்களேந்ததார்நறவமுஞ்சேறாய்
விரிக்கும்வீதியிலடிவழுக்காவகைவெயிலேப்
புரிக்குஞ்செம்மணிபதித்துமேன்டப்பராம்புரியோர். சுரு

தெள்ளற்பாங்கரினறியநீர்வண்டலாட்டயரு
மள்ளற்சேறுகள்புலர்த்துவானிடையிடையகழ்ந்து
பள்ளத்தாற்சிறுகால்பலவகுத்தெனப்பிறங்கும்
வள்ளற்காவலர்செலுத்துதேர்ச்சகடுபோம்வழியே. சுசா

செய்யதிண்புயத்தெழிலினைக்கவர்ந்தமைதெரிந்து
வெய்யமாந்தர்கள்வெதும்புறப்பன்முறைதாக்க
வையவோவெனவலறுவபோலணிமுழவ
மையவேலையுஞ்சமழ்ப்புறவயின்றொறுங்கறங்கும். சுஎ

விலாழிநீருமொண்சந்தனவிரைச்செழுஞ்சேறுங்
குலாயவீதிகால்வழுக்குமென்றஞ்சுபுகோண
னிலாமுடித்தவர்திருவிழாத்தொழுவர்துநெருங்கும்
வலாரியாதியோரடிபடியுருவகைநடப்பார். சுஅ

புரசைத்திண்களிறுலாத்தரும்பொலஞ்சுடர்மறுகிற்
பரசப்போதருமன்னவர்பணிமுடிநெருக்கி
னரசப்பன்மணிதெறித்துவீழ்ந்திமைப்பனவயியா
முரசப்பேரொலியதிர்ப்பினிலுக்கமூதுடுப்போல். சுகூ

அங்கண்வீதியினணிநலங்காணுமாதரத்தி
னெங்கணுதனுந்திருவிழாவென்பதோர்பெயரான்
மங்கையாளொடுமகாரொடும்வானவர்பழிச்சத்
திங்கடோறெழுந்தருளுமேலதன்வளஞ்சிறிதோ. எ0

மாளிகை.

பாலியேமுதல்பலநதித்திவலைபாய்ந்தழகின்
பாலவாயமாளிகையடித்தலத்தினைப்பாராப்
பாலவெண்சுதைமாடமேற்சிகரமும்பனிவின்
பாலியாற்றுநீர்த்திவலைகள்போர்ப்பவான்படரும். எக

பன்னிறப்பரிகருங்கரிதொழிலமைபஃறே
ரின்னகீழ்நிலைவர்யினினியநகுதனேக்கி
மன்னுமேனிலைவாயில்வெண்கரிபசுமான்றே
ரன்னவேனவுந்தன்னிடத்தியங்கவானணவும். எஉ

அலங்குசூழ்நிலைமாடமங்கடுப்பினின்மாட்டு
மிலங்ககிற்புகையான்விரையேற்றுவர்மடவார்
புலங்கொண்மேனிலைமாடமும்புரிகுழற்கூட்டுந்
துலங்ககிற்புகையான்மணங்கனாலுறத்தொகுப்பார். எங

இருசுடர்ப்பெருஞ்சிலைகளினியன்றமாளிகைக்க
ணுருகுவெங்கதிர்தடவரச்சுடுகனலுமிழு
மருகுதண்கதிர்தடவரக்குளிர்புனலளிக்கு
மருவினோர்குணம்பிடிபடல்வையகத்தியல்பே. எச

நெறித்தகூந்தலார்மேனிலைச்சாளரக்கதவு
திறத்தலுந்நடைபடுமகிற்புகையெலாந்திரண்டு
புறத்தினேகுவவழுதிதன்சிறைப்படும்புயல்கண்
மறித்துவிட்டநாள்விரைந்துவின்சேறலைமானும். எரு

தெரித்தபன்மணிமாடமேற்றிகழ்ந்தபொற்குடத்து
விரித்ததன்கதிர்க்கடவுணின்றசைதல்வேட்கோவர்
திரித்துவிட்டசக்கரமெனலாகுமத்திகிரி
பரித்தபச்சைமண்ணெனலாமதற்பயில்களங்கம். எசா

நிரவுதித்திலத்தோரணச்செழுங்கதிர்நிரைகள்
விரவிவிண்ணெலாம்வெள்ளொளிவிரித்தலானன்றே
பரவைமேலெழும்போதும்வீழ்பருவத்துமல்லா
விரவிமண்டிலச்சேயொளிவிளங்கிடாவியல்பே. எஎ

திங்கள்செய்கதிராளனென்றுரைப்பதேதேற்ற
மங்கணித்திலத்தோரணத்தொளியினிலரிபோற்
றங்கிவெண்கதிராயினனதற்குறுஞ்சான்று
துங்கமாலையுங்காலையுஞ்சிவந்துதோன்றுவதே. எஅ

அணங்கனார்நகைத்திடுந்தொறுமாய்கவர்வளர்த்த
கணங்கொண்முல்லைகண்முகைப்பனவவர்நகைக்கவினை
யிணங்கிநாங்கவர்ந்தொளித்தமையறிந்தனரென்றே
வணங்கிநாணினாலுடன்சிரித்திடுவதுமானும். எகூ

ஆடகத்தியன்மேனிலைமிசையணங்கனையார்
மாடகத்தனியாழிசைக்குவந்துறும்வான
நாடகத்துவெண்களிற்றினைநளினமென்மலர்ப்பூம்
பாடகத்தடிநடையினாற்பருவரலுறுப்பார். அ0

பளிக்குமேனிலத்தந்நலார்பணைமுலைநெருங்கக்
களிக்குமாடவர்தமைத்தழீஇக்காமப்போர்க்கலவி
விளைக்குமாற்றலைக்குரவனில்விழைந்தவனொருசா
ரொளித்திருந்துகாண்பானெனச்சுருங்கையுண்மையும். அக

மேனிலத்தரமியத்திடைத்துயிலுமெல்லியலா
ரானனத்தெழில்கவர்ந்துசென்மதியினையவர்தங்
கானலர்க்குழற்காரளியின்றொடர்ந்துதைப்ப
வீனமுற்றவத்தழும்புவான்கறையெனவிலங்கும். அஉ

உங்கண்மாதரார்முகத்தெழினோக்கியோர்வடிவங்
கங்கணான்குளான்படைத்ததிலவயவங்காண்பா
னங்கண்முன்னாறவகுப்புழியஞ்சனங்குலையப்
பங்கமுற்றதென்றொழித்ததைமதியெனப்பகர்வார். ௮௩

இவ்வரைப்பினிலிரவியுமதியமும்வழியே
செவ்வனேகுறாதொதுங்குவவிவர்முகச்சீர்க்கும்
பவ்வநேரகலல்குற்கும்வடிவொடுபணைத்தே
ரொவ்வுறாமைகண்டுட்கொளுமுட்கினாலன்றே. ௮௪

தங்கள்வாண்முகமதியெனச்சார்தரும்பணிக்குத்
துங்கமாடமேன்மின்னனார்வேற்றுமைதோற்றத்
திங்கண்மாட்டறிகுறியொன்றுசெய்துவைத்தனரா
லங்கண்மாநிலங்களங்கமென்றிடப்படுமதுவே. ௮௫

மறைந்திடாமறுப்பயின்மதிமுகத்தெழில்பெறாது
குறைந்துபார்க்குமங்கரிவைமார்கோணுதல்கடுப்ப
நிறைந்துபார்க்குமீண்டவர்முகநிகர்ப்பமற்றிவ்வா
றறைந்ததிங்கடோறலமருமக்கரைப்பசுப்போல். ௮௬

கதிர்செய்மாடமேற்புலவிநீர்கலவியின்முடிவின்
வெதிர்செய்தோளியர்கொண்கர்தம்மருமமேல்வதனம்
பதியவைத்தனர்துயிலுவரற்றம்பார்த்திருந்து
புதுமுகத்தெழிலுடுபதிவௌவுறும்பொருட்டே. ௮௭

தேங்குழலூடலின்மாதரார்பறித்தெறிசெங்கே
ழோங்குபன்மணியவரடிவருந்திநைந்துளா
வாங்குநாடொறும்பைதுறத்தவிர்வனகொடிதாத்
தாங்கள்செய்வினைதங்களுக்கேபகையாமே. ௮௮

விருந்துநாடொறுமிடையறாதெதிருமேதகவா
லருந்திறற்சிறுபுதல்வர்சூழ்ந்தணுகிடுந்திறத்தான்
முருந்துமூரலார்க்காயிடைக்கொழுநர்பான்மூண்ட
மருந்திலூடலுஞ்சிறுவரையன்றிமேவாதால். ௮௯

மேனிலத்துவந்துலாவிடுங்கடவுண்மெல்லியலார்
தாழ்நிலத்துறுங்கூவல்கணோக்கிநந்தமைப்போற்
கீழ்நிலத்தவர்தாமுமிங்கெய்தினர்கொலீஇப்போ
மூழ்நிலைத்தபல்பிலங்கொலாமுவையெனவியப்பார். ௯௦

கலிவிருத்தம்.

காலமன்றிக்கனிவுறமாத்தளைக்
கேலவான்புகையேற்றுதல்போன்மினார்
சாலவெம்முலைச்சாந்தம்புலர்த்திடு
நீலதூமநிமிர்ந்தெழுமெங்கணும். ௯௧

கொன்னும்வார்குழற்கூட்டுங்குரூஉப்புகை
யந்நலாரைப்பொதிவதவர்தமைத்
தன்னினீங்கியுமின்னெனத்தண்முகி
லுன்னிவந்துவளைந்திடலொக்குமே. ௯௨

வார்கொள்கொங்கைமலர்க்கணையேறிடு
மேர்கொடொய்யிற்கருப்புவிலேந்துவார்
தார்மலர்க்குழனாரியர்தாங்கடாம்
வீரவேள்படையென்றறிவிப்பபோல். ௯௩

நாறுதோட்டுளினமிரண்டினின்
மாறிமாறிவீழ்வண்டினமாமெனக்
கூறுமாதர்குழீஇயிருந்தாடுசீ
ரேறும்மனைப்பாட்டிசையெங்கணும். ௯௪

தங்கள்பண்மொழிக்கொக்குந்தகைமையை
யங்கணுய்பவரேய்ப்பவணிமலர்ச்
செங்கைமெல்விரல்சேர்த்தித்திவவியா
ழெங்குமங்கையர்பாடுவரெண்ணிலார். ௯௫

வேறு.

கொங்கையினெதிருறக்கூசினலெனப்
பொங்கொளித்தாளம்பின்னொலிப்பப்பூவைமார்
மங்கலச்சூதிநெறிவழாமலாடரங்
கெங்கணுநூபுரத்திசையினீட்டமே. ௯௬

மைந்தர்பந்தெறிதலுமாடப்பித்திகை
சிந்துவபன்மணிசெழியன்செனெடுந்
துந்தியன்றேருச்சலுமுலப்பிலாநிதி
தந்திடும்வடதிசைச்சாரற்குன்றுபோல். ௯௭

மணிப்பொலம்பூட்சிறார்விடுக்கும்வான்படந்
தணிந்தொறும்விடுந்தொறுந்தணிந்துநீள்வன
கணிப்பருநந்திநெட்டுயிர்ப்பின்காற்றிடைப்
பணிப்பணைக்குமுன்னுழல்பரிசுகாட்டுமே. ௯௮

மாடமேற்சிறுமகார்விடுக்கும்வண்படம்
பாடல்சாலிருசுடர்தம்மைப்பற்றுவா
றோடினதிரிதருநாகமென்னவு
மாடுவவிசும்பிடையமார்நோக்கவே. ௯௯

அட்டிலிற்குய்ப்புகையணங்கனார்குழற்
கிட்டிடுமகிற்புகைமகத்தெழும்புகை
முட்டிமேற்பரந்தெங்குமொய்த்ததோர்கிலார்
வட்டவான்செழும்புகைவண்ணமென்பரே. ௧௦௦

வேள்விச்சாலை.

இந்திரனூர்தியிங்கெய்தித்தன்முடிச்
சுந்தரஞ்சிதைதரத்துதையச்சிறித்தன்
மந்திரப்புகையினால்வலாரியூரெழில்
சிந்திடச்செய்வதீர்வேள்விச்சாலையே. ௧௦௧

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆகுதித்தழலினறுதொழிலாளருமறைமனுவெடுத்தோதி [ண்டு
யோகையிற்சொரிநெய்தெறித்தெழும்பிதிர்வுமொலிபடுபுலிங்கமுங்கொ
மேகமாய்ப்படர்ந்ததூமமேயிடித்துமின்னிநீர்பொழிவனபோலு
மீகைசால்வேள்விமறுத்துழிமாரியின்மையேயிதற்குறுசான்றால். ௧௦௨

அந்தணரிருக்கை.

பூசுரப்பெயரினிருமொழிப்பொருட்குமுரிமைபூண்டுறுநிலைக்கேற்பக்
காசினிவரைப்பினுடோறும்வழாதுகமழ்சுவையடிசிலானதிதி
பூசையும்வேள்வியவியினுற்கடவுட்பூசையுமொருங்குசெய்கடப்பா
டாசறவாற்றும்பார்ப்பனவாகையறிஞர்வாழிடம்பலவவண. க0௩

அரசரிருக்கை.

நகைபெறுவலியாற்றெம்முனைமுருக்கிக்காவற்சாகாடுகைத்தெங்குந்
திகிரியொன்றுருட்டிமுறையுளிசெங்கோல்செலுத்துநர்கள்வர்மற்றுயிர்கள்
பகைவர்தாந்தமரென்றிவ்வயினெய்தும்பயநதடுத்துலகெலாம்புரக்கு
மிகுபுகழ்படைத்தவரசியல்வாழ்க்கைவீரர்வாழிடம்பலவவண. க0௪

வணிகரிருக்கை.

மேதகுவிரிஞ்சனரும்பெறற்குறங்கிதழ்விழைதகையரெனப்படைத்தோ
ரேதிலர்பொருளுந்தம்மபோற்பேணிவாணிபமீட்டுநர்வடாது
மாதிரத்தலைவன்புறங்கொடுத்திரியும்வளத்தினர்மறைநெறியொழுக்க
மாதரித்துயர்ந்தவிழுக்குடிவணிகரமர்ந்துவாழிடம்பலவவண. க0௫

வேளாளரிருக்கை.

முருகுயிர்த்தலர்ந்தமலரவன்றனதுமுகமுதலுறுப்பெலாந்தாங்கிச்
சரணமென்றுரைக்குமுறுப்பினிற்றோன்றிச்சாற்றுமம்முகமுதலுறுப்பின்
வருமொருமூவர்தங்களையுமுவின்வண்மையானிலைபெறத்தாங்கு
முரியவேளாண்மைபூண்டபேர்தமக்கேயுடையவரிடம்பலவவண. க0௬

அனுலோமர்முதலியோரிருக்கை.

நால்வகைவருணத்துயர்குடிப்பிறந்தநல்லவரிருக்கையைச்சூழ்வ
சால்புறுமவரிலுயர்ந்தவரிழிந்தோர்தங்களூட்புழ்இமணந்தளித்த
பால்படுமேனைச்சாதிபேதத்தோர்பலர்களுந்தத்தமநெறியின்
சீலராய்த்துவன்றிமரபுளியொழுகுந்திருமலிபல்வகைக்குடியே. க0௭

கழகம்.

வளரிலைத்தருப்பைநுனியெனக்கூர்த்தமதியினர்தொன்றுதொட்டுடைய
பளகறுகேள்விப்பயிற்சியர்மேற்கோண்முதற்பகர்மூன்றினுந்தெருட்டி
யிளையருக்குணர்த்துமிலக்கணநெறியோரிருபுலமையர்தம்முட்
களவிகலிகந்துகுழாங்குழாமாகிக்கலைதெரிகழகமும்பலவால். க0௮

சைவமடம்.

காமனைமுனிந்துநெடுஞ்சடைதரித்துக்கவின்றகல்லாடைமேற்புனைந்தி
யாமெலாம்வழுத்துந்துறவியென்றிருந்துமொருத்திதனிளமுலைச்சுவடு
தோமுறக்கொண்டாரெனச்சிறையிடல்போற்சுடர்மணக்குழையுளேகம்பத்
தோமொழிப்பொருளையடக்கியானந்தமுறுநர்வாழிடம்பலவுளவால்.

திருக்கோயில்.

இருண்மலந்துமிக்குஞ்சிவாகமமுறையினீரிருபாதமுமனுட்டித்
தருள்பெறுமாதிசைவர்களாதியவாந்தரசைவரீருமூனோர்
மருவிவாழ்மாடமாளிகைப்பத்திமருங்குடுத்துயர்வனப்பினதாற்
றெருட்டருமனுதிசைவர்வீற்றிருக்குந்திவளொளிப்புரிசையேகம்பம். கக0

திருமதில்.

கலிவிருத்தம்.

விண்ணழிவுறநிமிர் வீறடக்குவா
னண்ணலாணையினிமிலூர்தியாண்டுற்றீஇ
யெண்ணிலவுருவுகொண்டிருத்தனீரதே
பண்ணமைமதின்மிசையிடபப்பந்தியே. ௧௧௧

திருக்கோபுரம்.

ஒன்பதுகோள்களுமுலாவிவைகுவா
னென்பதுபாடமங்கூழ்ந்செய்தென
வொன்பதுமணிகளினியன்றவொண்மைசா
லொன்பதுநிலைதழீஇயோங்குங்கோபுரம். ௧௧௨

கார்முகிலுடுக்கைபாக்கிரின்வானவன்
மார்பணிமணியுநாவட்டமாமதி
சீர்நுதற்பூதியாச்செல்வக்கோபுரம்
பார்புகழ்புருடனிலோங்கும்பான்மைத்தே. ௧௧௩

நச்சியேகம்பரைத்தொழுநாடொறுங்
கச்சியில்வாழ்பவரிறுதிக்காலையி
லச்சிவலோகத்தையணுகவைத்ததோர்
பொச்சமிலேணியும்போலுங்கோபுரம். ௧௧௪

பரிதியினிழல்செயக்கதிர்க்கும்பன்மணித்
திருவியல்கோபுரச்செல்வவாய்தலின்
முரசுகாலைதொறுமுழங்குஞ்செவ்வியென்
றருகுறவமரரையழைத்தன்மானவே. ௧௧௫

விடைக்கொடி.

மடுத்தவைம்பாசமாவரணமைந்தனுந்
றடுத்தருள்கோயிலிற்றம்பிரானெதி
ரெடுத்தபூங்கொடிமிசையிடபம்வான்மிசை
யடுத்ததோரிடபத்தோடளவளாவுமே. ௧௧௬

விமானம்.

தங்குலத்திறைவிசெய்பூசைச்சால்பினை
யங்கணன்மகிழ்வொடுங்காணுமாசையி
னெங்குளவரைகளுமீண்டினுலெனப்
பொங்கெழிற்சிகரங்கள்பொலிந்துதோன்றுமால். ௧௧௭

மண்டபம்.

கன்மநோய்குடைபவர்கடப்பச்செய்திடும்
பன்மலர்துவன்றியதீர்த்தப்பாங்கரிற்
பொன்மலர்மண்டபம்பொலிந்துதோன்றுவ
தென்மணிப்பேழையைத்திறந்தமூடிபோல். ௧௧௮

வேள்விச்சாலை.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சேந்தபொற்குண்டத்தோங்குஞ்சிகைத்தழன்மிசையேகம்ப
வேந்தையாவாகித்தேத்தும்புகைபொதிவேள்விச்சாலை
யேய்ந்தசீர்த்தகரவித்தைதமுறைப்படியிதயகஞ்சப்
பூந்தழற்சிகைமேலீசற்போற்றுமாயவனையொக்கும். கககூ

மாமூலத்தோருவர்.

கோமுரைகாம்பாச்சாகைவட்டமேற்குடையாப்பொற்பின்
வாழியவொருமாமீதுவளநிழல்கவிப்பவாங்க
ணூழ்முறையுயிர்கட்கெல்லாமைந்தொழிலோம்பியெம்மா
னூழ்புனலுலகமேத்தவாசுவீற்றிருக்குமன்றே. சஉ0

பற்பலதேயமெல்லாம்பாங்குடைத்தொண்டைநாடு
பற்பலசங்கநாப்பட்படர்வலம்புரியாமங்கட்
பற்பலநகரமெல்லாம்வட்டமாப்படைத்தகாஞ்சி
பற்பலவலம்புரிக்குட்சலஞ்சலப்பணிலமாமால். கஉக

அத்திருக்காஞ்சிவைப்பினலகிலாத்தலங்கடம்முட்
பத்திசேர்மாடக்கம்பம்பாஞ்சசன்னியமாமந்த
வுத்தமச்சுரிமுகத்துள்விலைவரம்புணராச்சாதி
முத்தமேயொருமாமூலத்திருந்தருண்முக்கண்மூர்த்தி. கஉஉ

பன்மணிவெயில்கள்கான்றுபடரிருள்சீப்பவட்டப்
பொன்மதிற்சூழ்ந்துநாப்பட்சதாசிவப்புத்தேள்வைகுந்
தன்மையாற்கச்சிமூதூர்தரைமிசையுயிர்கள்செய்த
கன்மமோர்ந்தளிப்பான்வந்தகதிர்செய்மண்டிலமேயாமால். கஉ௩

விலக்கிலாவறநூல்சொன்னமுனிவரும்விதிவிலக்கா
மிலக்கியமிதன்பாற்கண்டேயிலக்கணம்விதித்தார்போலு
மலக்கணீத்தறமெண்ணான்குமம்பையேவளர்க்குநீராற்
கலக்கமிலறங்கட்கெல்லாமாகரங்காஞ்சியன்றே. கஉ௪

உவரிசூழுலகவைப்பினுரையமைகேள்விசான்ற
கவிகளென்றுரைப்போர்தம்முட்காஞ்சியைப்புகழாரில்லை
யவரெலாம்புகழ்ந்துமின்னுமுலப்புறுவதன்சீர்முற்றுஞ்
சிவநிறைகல்விசாலாச்சிறியனோகிளக்கவல்லேன். கஉ௫

இத்திருக்காஞ்சிவைப்பிற்பலதளியிடத்துமேவி
யத்தருகம்பவாணரவரவர்க்கருளிச்செய்த
வுத்தமக்காதையெல்லாஞ்சூதனன்றுரைத்தவாறே
முத்தமிழறிஞர்தேறமொழிபெயர்த்துரைப்பேனுய்ந்தேன். கஉ௬

திருநகரப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உகூ௯.

முதற்காண்டவுட்டோகுதி.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிவபரஞ்சுடரைக்காண்டகுமேதுச்செய்தவர்வினவியவாறுந்
தவலருஞ்சிறப்பினந்தியெம்பெருமான்சனற்குமாரனுக்குவெஞ்சாப
நவையறுத்தருளிச்செவியறிவுறுத்தநலமெலாஞ்சூதமாமுனிவ
னவர்தமக்கியம்பிப்பின்னுங்கவுமையாட்கருளியவுண்மைசெப்பியதும். க

கன்னியாழ்க்கிழவன்வரம்பெறுகாரைக்காட்டினிற்பூசனையுஞற்றி
மின்னவிர்மணிப்பூட்சிவிபெறுபகவான்வீடுபேறெய்தியவாறும்
பொன்னுடைப்புத்தேள்புண்ணியகோடிப்புனிதனையருச்சனையாற்றி
யன்னவேறுகைக்குமன்னணமேலோடுலகையுண்டுமீட்டுதவியவாறும். உ

அத்தகுமாயோன்வலம்புரிக்களிற்றையடியிணைவணங்குபுதனது
கைத்தலத்திழந்தசெம்மருள்சிலைப்பிற்கதிர்வளைதனைப்பெறுமாறு
மெய்த்தபோனம்பலர்மிசைக்கடவுள் வேள்விசெய்துயர்சிவாத்தானத்
துத்தமனருளான்மாயனேடுலகையுண்டுமீட்டுதவியவாறும். ங

கருகிருள்விடத்தைமிறையவன்பருகக்காட்டியவுறுக்கடைதணப்ப
விருமறைவிதியாற்கடவுள்மணிகண்டேசனையேத்தியவாறு
மருளுறுசெருக்கிற்பொய்யுரைகிளந்தவல்வினைகழிதரவியாதன்
பொருவருஞ்சாந்தாசயப்பெருமானைப்பூசனையியற்றியவாறும். ச

வீட்டினைவிழைந்தேத்தமுனிவரும்பூசை வேறுவேறியற்றியவாறுங்
கோட்டமில்கொள்கைப்பராசரமுனிவன்றெருழூதுந்தன்றுதையர்க்கொன்று
வாட்டியவரக்கன்குலத்தொடுமடியச்செற்றதும்விளக்கொளிமாயோ
னேட்டரூன்றுணையநாதனைப்பரவிநந்திதுடுத்தோம்பியவாறும். ரு

ஈண்டியபுகழ்முத்திச்சரம்பரசியின்றவள்பிறையினைவிடுவித்
தாண்டகைக்கழுனஞ்சுமல்கேயிற்றப்பணிகளையலைத்தெழுமாறு
நீண்டவனுணராத்திருவடிபோற்றிவெளிபடும்பணிகளுமெம்மான்
பூண்டுகொண்டருளப்பெற்றமேதகவாற்புள்ளினைவினவியவாறும். சு

இறுதிநாளிருவர்காயமேற்றுங்கிவியாழமுமியமனும்வழுத்த
மறுவறுகாயாரோகணவரைப்பினெம்பிரான்மன்னியவாறு
மறுகணிவேணியுஞ்சணிக்கூத்தராடியிணையருச்சனைசெய்து
தெறுபுலனவித்தசித்தரெண்ணரியசித்திபெற்றுய்ந்திடுமாறும். எ

மாதவன்பரசிப்பிருகுவன்சாபவன்பயந்தபப்பெறுமாறு
மேதகுமொருசார்முனிவரர்பதங்கள்வெண்கரிபோற்றியவாறு
பேதமில்வெள்ளிமொழிப்படித்ததீசியிட்டசித்தீசனைத்தொழுது
கோதறுவயிரயாக்கைபெற்றேங்கிக்குபன்றனைப்புறங்கண்டவாறும். அ

அந்தணன்கச்சபாலையத்திறைஞ்சிப்பகைடத்திடுமாற்றல்பெற்றதுவும்
பைந்துழாய்க்கூர்மமாயிடைப்பரசிப்பாதகந்தவிர்ந்துய்ந்தவாறு
மைந்துறுமாண்டுகன்னிமாமுனிவன்வழுத்திவானரம்பையரைவர்
சந்தனந்திளைக்குமிளமுலைப்போகந்தரைமிசைநுகர்ந்துவாழ்ந்ததுவும். கூ

அங்கியங்கடவுளேத்திவிண்புலத்தாரவிப்பொறைமதுகைபெற்றதுவும்
பங்கமின்றிறைஞ்சிச்சவுனகமுனிவன்வீட்டினைத்தலைப்படும்பரிசு
மங்கருவெப்புவிழியவற்செகுத்தசுரகரம்வானவர்வழுத்திப்
புங்கவர்பெருமான்சுக்கிலம்பருகுவெப்புநோய்போக்கியவாறும். க0

புலிப்பதமுனிவன்காண்முளைபோற்றிப்பொங்குதீம்பாற்கடல்பெற்று
வலித்திறற்பார்த்தன்வலவனைமுடிமேன்மலரடிசூட்டியாண்டதுவும்[யிற்
கலித்தெழுமிமையோர்மலைமகண்மொழியாற்கரிசறத்தெளிந்தருட்குறி
சலிப்பறுமியக்கவடிவுகொண்டணைந்ததலைவனைத்தொழுதுய்ந்தவாறும்.

ஏதமில்பதிற்றுப்பதின்மரோடொரான்பதின்மருமேத்தியவாறு
மாதர்மேற்றளியிற்கவுணியன்பாட்டான்மால்சிவனுருவுபெற்றதுவு
மாதரம்பூப்பவைங்கரப்புத்தேளனேகதங்காவதம்பாசிக்
கோதறவுலகமெண்ணியாங்குதவக்கொடுத்திடுமிறைமைபெற்றதுவும்.

மகதியாழ்முனியும்புத்தருக்கிறையும்வளம்பொழிற்றிருக்கயிலாயப்
பகவனைத்தொழுதுமுப்புரத்தவரைமருட்டியபாவமாற்றியது
நிகலுநர்ச்செகுப்பவிராகவன்வழுத்திநெறிழ்வலிமெய்தியவாறும்
புகழுறுங்கற்கிபோற்றுபுகடைநாட்கயுவரைப்புரட்டியவாறும். ௧௩

நறைமலர்ப்பனந்தார்முடியவன்வழுத்திநலம்பயில்வரம்பெறுமாறு [து
மறைகழன்மகவான்றொழுதுசெல்லுருவாயச்சுதன்சென்னியைத்துணி
நிறைபெருங்கீர்த்திகவர்ந்துபீடெய்யப்பூசனைநிகழ்த்தியவாறு
மறையவன்றலையைக்கொய்துவெம்பலிதேர்வயிரவன்பூசித்தவாறும். ௧௪

விண்டுநேர்விடுவச்சேனனும்பாவிவீரபத்திரனிறத்தணிந்த
வெண்டலைவிழுங்குமாழிபெற்றிகடக்கூத்தினுமெய்தியவாறு
மிண்டிருள்வெள்வியாற்றியதக்கன்வினைகெடவருச்சித்தவாறும்
விண்டவர்புரத்தினுய்ந்திடுமூவர்தொழுதுமெய்வரம்பெறுமாறும். ௧௫

பொன்பெயர்படைத்தோன்கிளைஞரோடெய்திப்பூசைசெய்தரசுபெற்றதுவுங்
கொன்பயில்விடையோனருள்வழிமாயோன்மடங்கலாயவனுயிர்குடித்துப்
பின்புகுந்தருக்கைச்சரபமாய்த்ததற்பின்பிழைகெடப்பூசித்தவாறும்
வன்புடையிரணியாக்கனையிறுத்தபன்றிபின்வழிபடுமியல்பும். ௧௬

அந்தகன்பரசிப்புவிமுழுதாண்டுகடைமுறையருள்பெறுமாறும்
வெந்திறல்வாணனிறுதியிற்பரவிவிறற்கணத்தலைமைபெற்றதுவுங்
கந்தமென்மலர்கொண்டடிதொழுதோணகாந்தனுங்கதிபெறுமாறு
மைந்துறவழுத்திச்சலந்தரன்கடைக்கால்வீட்டின்பமருவியவாறும். ௧௭

கேசவன்றிருமாற்பேற்றினிற்போற்றிக்கிளரொளியாழிபெற்றதுவும்
வேசறுபரசிராமனேத்தெடுத்துவெம்மழுப்படைபெறுமாறுந்
தேசுறப்பரவியிரேணுகையென்பாடெய்வதமாகியவாறு
மாசறும்யோகாசாரியர்தொழுதுவயங்குதம்பதம்பெறுமுறையும். ௧௮

சித்தசன்போற்றியுலகெலாங்காமஞ்செறித்திடுமிறைமைபூண்டதுவு
மத்தனுரேவலாற்றினுலணைந்தவகைலதீர்த்தங்களும்வணங்கிப்
பைத்தபாப்பல்குல்பாகனுர்தம்பாற்பற்பலவரங்கள்பெற்றதுவுந்
தத்துநீர்க்கிறைவனருச்சனையாற்றித்தங்குமிப்பதம்பெறுமாறும். ௧௯

காசிவாழ்விசுவநாதனுங்காஞ்சிப்பெட்பினுலணைந்துவைகியதும்
பூசனையுஞற்றிக்காற்றினன்கந்தவாகனுப்பொலிவுறுமாறு
மாசறுகோள்களொன்பதும்வழுத்திமெண்ணியவரம்பெறுமாறுந்
தேசுறுவாமதேவனன்முனிவன்றொழுதுவெம்பிறவிதீர்ந்ததுவும். ௨0

அகனுறப்பரசிமார்க்கண்டிமுதலோரிறப்பினைக்கடந்துமயன்மா
லிகலுறுசெருக்கின்வருவினைதணப்பவிலிங்கமங்கருச்சித்தவாறுந்,
சகமெலாமிறுத்துமுக்கணெம்பெருமான்றங்குவீராட்டகாசத்தின்
முகினிறப்புத்தேள்பூசனையுஞற்றித்துகிர்நிறம்பெற்றிடுமுறையும். உக

மாண்டகுகாமக்கண்ணியைவணங்கிமலர்மகள்சாபமாற்றியதும்
பாண்டவர்முதலோர்தொழுதுநல்வரங்கள்பரித்ததும்வணங்கியீசான
வாண்டகையாசைக்கிறைமையெய்தியதுமச்சுதன்மச்சமாய்ப்போற்றி
வேண்டலர்ச்செகுத்துவேதநூல்கொணர்ந்துவேதியர்தமக்களித்ததுவும்.

மீயுயர்குறளோனவுணனைச்சிறையிற்புகுத்துமீண்டிறைஞ்சியவாறு
மாயவன்பரவிக்கடல்விடந்தாக்கும்வெப்புநோய்மாறநின்றதுவு
நாயகியுருவிற்கவுசிகைதோன்றிநாதனைப்பூசித்தவாறுந்
தூயமாகாளப்பாப்பரசிறைஞ்சித்தொல்லைவீடுறப்பெறுமாறும். உ௩

அண்ணலாராணைமறுத்தவெந்தீமையறுத்திடக்குமரகோட்டத்தி
னண்ணிவீற்றிருந்துசேயிலைநெடுவேலனையன்பூசித்தவாறு
மண்ணெலாம்பரவுமார்க்கண்டமுனிபால்வஞ்சகங்கருதியமாயோன்
கண்ணுதற்பிரானையத்தலத்திறைஞ்சியவ்வினைகழுவியவாறும். உச

சாத்தனார்போற்றியுரிமைபெற்றதுவுமங்களைத்தையல்போற்றியதுந்
தீத்தொழிலரக்கர்ச்செகுத்துவந்திராமன்பணிந்ததுந்தேவர்கோன்வலவ
னேத்தியவாறுநாரணன்பரவிப்பாப்புருவிரித்ததுமியானைக்
கூத்தனார்முழுதுந்தழலிடையொடுக்கிப்பண்டனைக்கொலைசெய்தவாறும்.

ஓவியவுலகைத்தோற்றுவானைங்கோணுற்றைமாமூலத்தின்முளைத்துத்
தாவறுசிறப்பினில்லிதைப்பிராட்டிதனைப்பயந்தாங்கவள்விழியின் [ந்தற்
மூவரைப்படைத்துச்செய்தொழில்வகுத்துச்செவியறிவுறுத்துமொய்கூ
றேவியுங்கடவுண்மூவரும்பரவச்சிறப்பொடுவீற்றிருந்ததுவும். உசா

திருவிளையாட்டான்மந்தரத்துமையாள்சிவபிரான்விழியிணைபுதைப்பக்
கருகிருட்பிழம்பினுலகெலாமூழ்கிக்கடப்பருங்கவலையுற்றதுவும்
வருவினைதணப்பப்பூசனைபுரிவான்மழவிடைச்செய்கையும்புகன்று
பெருநகர்க்காஞ்சிக்கிறையவன்விடுப்பப்பிராட்டியங்கெய்தியவாறும்.

மெய்த்தநல்லறங்கள்வளர்த்திடுமாறும்விண்டுவீச்சரமகத்தி
மத்தளமாதவீச்சரம்வணங்கிப்போந்துமாந்தருவடிமுளைத்த
சத்தறிவின்பத்தனிமுதம்பொருளைத்தவத்திறற்கண்டுகொண்டிறைஞ்சிப்
புத்தமிழ்தனையாள்விதியுளிவழாமைப்பூசனையுஞற்றியவாறும். உஅ

கருணைமீப்பொங்குந்திருவிளையாட்டாலழைத்துறுங்கம்பைநீர்ப்பெருக்கைக்
குருமணிக்குழையாள்கண்டுளம்பதைத்துக்குழகனைத்தழுவியவாறுந்
திருமுலைச்சுவடும்வால்வளைத்தழும்புஞ்சிவபிரான்பொலிவுறப்பூண்டு
மருமலர்க்குழலாள்காணமுன்னின்றுவரம்பலவருளியவாறும். உகூ

இமவரைப்பிராட்டிகவுரமாநிறம்பெற்றெம்பிரான்வதுவைவேட்டதுவு
முமையவள்காளவுரியினிலுயிர்த்தவொளியிழையவ்வுணரைமாட்டி
விமலநாயகன்றனருள்பெறுமாறுமேதகுவிம்மிதத்திறமு
மமைவரவொழுகுமொழுக்கமுமெங்கோனருட்சிவமண்ணியப்பேறும்.

இரண்டாங்காண்டவுட்டோகுதி.

மற்றுமோராற்றுற்கிளங்திடுந்திறத்தின்மால்வரைக்கயிலேயினுமையாள்
கற்றையஞ்சடையார்விழியிணைபுதைத்துக்காஞ்சியிற்பூசனையாற்றும்
பெற்றியுமந்தர்வேதியுங்கரிகால்வளவர்கோன்பெருமையும்வினைநோய்
செற்றிடுந்தீர்த்தமுதலியமூன்றின்சிறப்புமீண்டியம்பிடப்படுமால். ௱௧

பதிகப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௱௨௬.

புராணவரலாற்றுப்படலம்.

நைமிசாரணியச்சிறப்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மிடல்கெழுதவத்தோர்வேள்விசெய்வினைக்குவேண்டியவேண்டியாங்குதவக்
கடவுளான்பயிலுங்காட்சியாலவியூண்கைக்கொளத்துதைந்தவானவராற்
றொடர்வுறுமோமப்புகைதழீஇச்சுரும்பருளார்தராப்பன்மலர்ப்பொழிலா
லடர்தருங்காமர்கற்பகவனமேயாயதுநைமிசாரணியம். ௧

தாதவிழ்கடுக்கைநறுந்தொடைமிலேச்சுந்தம்பிரானடியலதுணரா
மாதவரியற்றுமகவினைசிதைப்பவருகருந்தயித்தியர்வர்தங்
காதுவெஞ்சாபவலிக்குடைந்தோடுங்காட்சியேகடுக்குமம்மகத்தீ
மீதுயர்ந்தண்டச்சுவர்த்தலமுரிஞ்சவிசும்பெழுநறும்புகைப்படலே. ௨

கருந்திரையுள்ளக்கரகடுடைத்தெழுந்துகனையிருள்பருகுவெங்கதிரோ
னிருந்தவர்வேள்விக்களத்தவிப்பாகமேற்பவந்தணுகுவோன்மான
மருந்தெனக்கிளைத்துவானுறநிவந்தவளம்பொழிற்கிளைகளைக்காத்தாற்
றிருந்துறவொதுக்கிக்குனிந்துபுக்குலாவிச்சேணிடைப்போய்நிமிர்ந்துறுமால். ௩

சிறகர்வண்டிமிரும்வட்டவாய்க்கமலச்செழும்பொகுட்டாசனவீற்றிருக்கு
மறைமுதல்கிழவன்முனிவரர்வேண்டவவனித்தனன்விடுத்தபுன்னேமி
யிறவுறுதின்றுமாயிடையுறைவதெனக்கவின்காட்டிடுந்தேத்தி
யறைதரச்செறிந்துநறவுமூழ்ந்திறடுக்குமரும்பெறன்மதுவிருல்வலயம். ௪

விரும்பியவிடபந்தாங்குதோற்றத்தால்விளங்கெரியுருவினிற்பூத்து
வரும்பணிகொண்டகாட்சியாற்பரியவரையவணிருந்தவராக
விரும்புவியுய்யக்கோடலாலியாருமேத்திடும்பெற்றியாலுலவாப்
பெரும்பெயர்க்கயிலேக்கடவுளேபோலும்பிறங்கொளிநைமிசக்கானம்.

திசைமுகனுந்தியுறவளேநேமிசேர்ந்திடுங்கொள்கையாலென்று
மசைவில்வானவர்க்குப்புரையவியமிழ்தமளித்தலாற்பூமணம்பெறலால்
வசைதபுகாட்சிக்கருநிறக்கருவிமழைமுகின்மேனிவந்தழகா
யிசைதலாற்சார்ங்கமேந்தியோனிகர்க்குமிணையிலாநைமிசக்காடு. ௬

குலவுநால்வாய்கண்மருவலாலகலங்கொண்டமுந்நூல்வயங்குதலாற்
சலமறவேதமொழிதல்லாவனத்துத்தாமரையிருக்கைமேவுதலாற்
பலபொறிச்சுடிகைப்பையராச்சுமந்தபாரவைசூழ்புடவியேமுதலா
மலர்தலையுலகமுழுதுமீன்றளித்தவள்ளலாநைமிசப்புறவம். ௭

முனிவர் கூட்டம்.

புகலுமிவ்வனத்தில்வசிட்டன்வேதாரணியன்புலத்தியன்றுருவாசன்
சுகன்வசுச்சிரவணுணிமாண்டவியன்சுனப்புச்சன்சமூவர்த்தன்மணிமே
சகன்சுனச்சேபனிரைக்குவன்சம்புதற்பரவாத்திரேயன்சௌ
நகமுனிபுலகனுசுவலாயனன்சமதக்கினிசங்கன். ௮

இரைவதன்குசுருவிந்தன்மாதேசனிலிகிதன்பராசரன்கற்கன்
கிருதுவக்கினிபன்பருப்பதனுசிகேதனாரதன்மாசிகர்ந்த
னுருருவிச்சுவாமித்திரன்குணிபரத்துவாசனுந்தாலகன்வாசச்
சிரவன்சாண்டிலியன்காசிபன்வாமதேவன்றூம்பியனிரசனியே. ௯

கண்ணுவன்முதலாமெண்ணருமுனிவர்கழிபெருஞ்சிர்த்தியர்மாசு
மண்ணியானத்தார்பசுபதியடியார்வடிவெலாநீறுசண்ணித்த
புண்ணியர்மும்மைப்புண்டரநிரையர்ரக்கமாலிகையர்போர்விடையூ
ரண்ணல்வாழ்தலத்திற்பற்றினோரன்னனருச்சனையியற்றுமார்வத்தர்.

அங்கமுமறையுந்தெளிந்தவர்வேதமந்திரத்தவறிவினர்விமலர்
தங்குமஞ்செழுத்தேகிளப்பவர்பொறியைத்தடுத்துயர்ந்தவர்மகமனைவி
செங்களலோடுறைபவர்தமைப்போற்றிற்றாயிரனைத்தையுங்காணும்
பொங்குபேரருளின்னெல்லையிரனையோர்பொலிவுறவொழுங்குடன்குழும்.

கறைமிடற்றிறையைக்கண்ணுறக்காணுங்காட்சியாங்கணிச்சியினல்லான்
மறவினைக்கனிகன்மம்கியவுலகவாழ்வெனுநச்சுமாமரத்தை
யிறுமுறைசான்பரிதெனத்துணிந்தாரிதுபெறுமுபாயமற்றெவனென்
றறிவினின்னெடும்போதாய்வுழியவருளாருந்ததிகொழுநன்றனையும். ௧௨

தவம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தவமேமேலாநெறியாகுந்தவமேசிவனார்தமைக்காட்டுந்
தவமேதுறக்கமடைவிக்குந்தவமேநரனைத்தேவாக்குந்
தவமேவலாரிதிசைக்கிறைவர்சார்ங்கனயனுமாக்குவிக்குந்
தவமேகிடைப்பற்கிடையாததுண்டோவென்றுசாற்றினனும். ௧௩

தானம்.

அறமேமறங்கண்முழுதழிக்குமறமேகடவுணூலகேற்று
மறமேசிவனுக்கொருவடிவமாகுஞ்சிவனைவழிபடுவோர்க்
கறமேயெல்லாப்பெரும்பயனுமளிக்கும்யார்க்குமெய்விடத்து
மறமேயச்சந்தவிர்ப்பதெனவறைந்தான்சாதாதபமுனிவன். ௧௪

ஈகை.

கொடையேயெவர்க்குமெப்பேறுங்கொடுக்குநெறியிற்பிறழாத
கொடையேயாருந்தன்வழியினொழுகச்செய்யுங்குறைதீர்ந்த
கொடையேபகையையுறவாக்குங்குலவும்பூதமனைத்தினையுங்
கொடையேபுரக்குமென்றுள்ளங்கொள்ளப்புகன்றான்கவுதமனே. ௧௫

வாய்மை.

மெய்யேசிறந்தபெருநலமாமெய்யேயெவையுநிலைபெறுத்து
மெய்யாலழல்கால்கதிர்பிறவுந்தத்தந்தொழிலின்விலகாவா
மெய்யேயெவைக்குமிருப்பிடமாமெய்யேமெய்யேசிவமாகு
மெய்யேபிரமபதமுமெனப்புகன்றான்வினைதீர்காசிபனே. ௧௬

மகம்.

ஏச்சமொன்றேயிருமையினுமேலாமிமையோர்க்குவப்பாவ
தெச்சமொன்றேமகத்திறையாமெம்மான்விழையப்படுவதுவு
மெச்சமொன்றேநனிசாலச்சிறந்தபொருளுமிருங்கரும
வெச்சநிகர்வேறில்லையெனப்பரத்துவாசனியம்பினனால். ௧எ

மகவு.

மகவேமேலாங்கதியாக்குமகவானுலகந்தனைவெல்லு
மகவின்மகவான்முடிவின்மையெய்துமகவின்மகவளித்த
மகவான்மேலைப்பதமுறுந்தென்புலத்தார்கடனைமாற்றுவது
மகவானன்றியில்லையெனவகுத்தான்றெரித்துக்கண்ணுவனே. ௧அ

துறவு.

துறவேயறங்களெவற்றினுக்கும்பெரிதாம்விடையூர்தோன்றலுக்குந்
துறவேயுவகைவரச்செய்யுந்துறவேயயன்மாலுலகளிக்குந்
துறவேயீசனிடத்திருத்துமெவருமேலாச்சொல்லுவதுந்
துறவேயாமென்றெழுந்துநின்றுசொற்றான்சைவத்துருவாசன். ௧௯

சூதபௌராணிகர்வரவு.

வேறு.

இன்னவாறுபன்முனிவருமியம்பினர்பிணங்குழியிவர்பீடு
நன்னர்வான்றவங்கொணர்ந்தெனவாயிடைநணுகினன்விடையூரு
மென்னையாளுடையிறையடிதைவருமிடையறாத்தியானத்தான்
பன்னுமெய்த்தவப்பராசரன்பயந்தருள்புண்ணவன்மாணுக்கன். ௨0

விளங்குநீற்றொளிகதிர்செயவீங்கிருளக்காலிகைவீசும்
வளங்கனிந்தபொன்மேனியான்புண்ணியம்படிவெடுத்தெனவந்தான்
றுளங்குறுதுயர்புராணமுற்றளந்தறிந்தொல்லையோனமரர்க்காக்
களங்கறுத்தவனுண்மைதேர்ந்துயிர்க்கெலாங்கருணைகூர்ந்தருள்சூதன். ௨௧

முனிவர்வினா.

புக்கசூதனைமுனிவரர்யாவரும்பொங்கியபெருங்காதன்
மிக்கவோகையினெதிர்கொடுபூசனைவிதியுளிவழாதாற்றித்
தக்கவாதனத்திருத்தினர்வினவுவார்தறுகணைம்புலவாழ்க்கை
யொக்கநீப்பயாமுன்னரேயருந்தவமுஞற்றினமதனாலே. ௨௨

வென்றிவெள்விடைப்பிரானடிகாண்பதேவீடுபேற்றினுக்கேது
வென்றுதேறினங்காண்பதற்குபாயமற்றதுவெனத்தெளிகில்லே
மொன்றலாதனவேறுவேறுரைத்தனமுயங்கினம்பிணக்குற்றே
மன்றகண்டிலேந்துணிவுமெய்யுணர்வினுன்மலக்குறும்பறச்செற்றோய்! ௨௩

எங்கள்பாக்கியப்பயனெனநீயிவணெய்திடப்பெற்றேம்யாங்
கொங்குயிர்த்ததார்த்துளவனேவியாதனக்குலமுனியருளாலே
யங்கண்மூவறுபுராணமுமுணர்ந்தனையறமுதல்பொருளுங்கிற்
பொங்குசீர்த்தியோய்நீயறியாததுபுவனமூன்றினுமில்லை. ௨௪

ஆதலாற்பலநெறியினுந்துணிந்தவாறரன்றிருவடிகாண்டற்
கேதுவெங்களுக்கருளுதிவறிதுநீயேகலேயுயர்வானிற்
பாதவம்பொரப்பெரியவர்காட்சியும்பயன்படாதொழியாதாற்
சூதமாதவவென்றலுமகங்களிதுளும்பியோதுவன்சூதன். ௨௫

சூதபௌராணிகர்விடை.

மொழியுமிப்பொருண்மூவறுபுராணத்துட்காந்தமூவிருகூற்றிற்
கழிவில்சீர்ச்சனற்குமாரசங்கிதையினிற்காளிகாகண்டத்திற்
றழுவுதீர்த்தமான்மியத்ததுநந்திபாற்சனற்குமாரன்கேட்டங்
கழிவிலாவருள்வியாதனுக்குரைத்திடவவனெனக்கருள்செய்தான். ௨௬

நீயிர்பேரறிவாளராய்விரதநன்னெறியினிற்பிறழாமே
தூயமெய்த்தவவுலியினூற்பழமலத்துகளறுத்துமையோர்பா
ஞையனாரருள்பெற்றுளீராதலினன்றுமிப்பொருளுங்கட்
கேயவோதுவனெருங்கியமன்றொடுங்கேண்மின்களெனவோடும். ௨௭

அண்டர்நாயகனடம்புரிநாயகனடியவருளக்கோயில்
கொண்டநாயகன்றிருவடித்தரிசனங்கூடுதற்குபாயஞ்சீர்
மண்டுதீர்த்தமான்மியத்துநீபெற்றதெவ்வாறெனக்காவுற்ற
பன்னைமெய்த்தவர்க்கிருண்மையும்புலப்படப்பகாலுற்றனன்சூதன். ௨௮

புராணவரலாற்றுப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௭.

சனற்குமாரப்படலம்.

மகாமேருச்சிறப்பு.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தொடுகடல்வரைப்பின்மன்பதைத்தொகைகள்சோமன்மீனவனெனவீண்டிப்
படர்பொலங்குழைவகள்கவர்ந்துருவண்ணம்பரிந்துகாப்பவுமானவசுரர்
கடவுளரியக்கர்சித்தர்கந்தருவர்கின்னரர்சாரணர்பிறரு
முடனுறநெருங்கிப்போற்றமூவுலகுமுருவிமேனிவந்ததுமேரு. ௧

சேர்ந்தனமுழுதுநன்னிறமாக்குஞ்செய்கையாற்றனக்கினமாகிச்
சார்ந்தமாணிக்கவண்ணனேகம்பர்தமக்கலால்வணங்கிடாதாகி
வார்ந்தபல்கோளுநாள்களுநாளும்வலம்வரவிராப்பகல்விளக்கி
நேர்ந்தபேராசையெட்டையும்பகுத்துநின்றதத்தமணியக்குன்றம். ௨

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நயக்குமற்றிதனொளிபாந்திமையோர்நாடுபொன்னிறம்படைத்ததென்றெவரும்
வியத்தகுங்கிரிமணிபலவரன்றிமீதுநின்றிழிமுழங்குவெள்ளருவி
வயக்கமாண்டமுப்புரிசையன்றிறுத்தவள்ளல்பூட்டுவிட்டிருத்தியசிலையி [ம்.
ணியக்கமேவுபல்பொறிபன்னகநாணிரைந்துகொண்டொளிர்தொடக்கமேயொக்கு

மலையெவற்றையுஞ்சிறகரிவனரியயங்கெடப்பொருந்தழித்தவன்வணக்குஞ்
சிலையினைப்பறித்தூங்குவைத்தென்னத்திவலையிந்திரதிருவிலைக்காட்டு
மலைதிரைப்புனலருவிசூழ்போருவம்பொன்மாற்றினிலதிகமாயதுசா
னிலைபெறத்தவமெண்ணிலூர்குழ்இச்செய்நிறைதவக்கனல்கதுவலிற்போலும்.

சததிருங்கமலைவளம்.

தடாதபேரொளித்தபனியம்பழுத்ததன்னுருச்சுனைக்குடிபயங்குவட்டு
வடாதுமாமலைக்காந்தியின்பிறக்கமடங்கிடாதுபல்சுடர்விரித்தெழுந்த
கெடாததோற்றமேயுறமற்றதன்மேற்கிளர்சுரும்பினம்படையொடுதழுவி
விடாதுகண்படுபொழிற்சதசிருங்கவெற்பெனத்திசைபோயதொன்றுளதால்.

குரவுமாதவியுழிஞைமந்தாரங்குருந்துபாடலம்பாலைமுந்திரிகை
மருதுபோதிபிடாவெருமையோமைவஞ்சிகாஞ்சிகுங்குமநமையொடுவா
ணரைதளாவுதிசெருந்திசேவெகினமகில்பலாசுசந்தில்லமாவில்லம்
வரைதமாலமாதளைகணியதிங்கம்வகுளமின்னனநெருங்கினவோங்கும்.

அன்றிருர்புரமழலெழநகைத்தவண்ணல்சேவடிக்கன்பரூவியல்பிற்
றன்றுமெய்த்தவயோகியர்க்கெல்லாந்தூயநற்றவச்சாலையுமாகித்
தென்றலார்தரப்பூமணங்களுலத்தெளிபுனற்சுனையளவிலகவின்று
பொன்றிடாக்கடவுளர்முதலோர்க்குப்போகபூமியுமாயதப்பொருப்பு.

அங்கண்வாழ்தருமயன்மனைக்கிழத்தியங்கொப்பணின்றருந்தவஞ்செயல்போற்
கொங்குலாந்துவர்ப்பங்கயத்திரைதேர்குறிப்பினேதிபமசைவறவிருக்கும்
பொங்குவெண்டிரைத்தீர்த்தத்தின்மாடேபுரங்கடந்தவர்வரமவட்குதவித்
தங்குகாட்சியினறுமலர்பொதுளித்ததைகடுக்கைபொன்சொரிவனவுடைத்தால்.

ரீதுசந்திரசூரியர்கிரணம்விரவலாமையினொருபொழுதலர்ந்தோர்
போதுகூம்புமச்செய்கையாங்கின்றிப்புரிமுறைக்குடைந்தென்றுமோரியல்பிற்
கோதில்பன்மணிக்கதிரொளிவருடக்குளிர்ந்தலர்ந்திரண்டவத்தையுங்கடந்து
மாதர்வெண்பிறைக்கண்ணியரடிசேர்மாந்தரொத்துள்வளஞ்சுனைமலர்கள்.

வென்றவைம்புலவார்நகையர்வடிவின்விளங்குபூதியும்விரைகமழ்கடாத்த
குன்றுபோலுயர்களிற்றுநீள்கோட்டுக்குலவுமுத்தமும்வேயுகுமணியுந்
துன்றிவானிலாக்கற்றைகால்வெண்மைதூயபொன்மையைவிழுங்கியதேயோ
வன்றியவ்வரைப்பொன்மையேவெண்மைதனைவிழுங்கியதோவதுவறியேம்.

இனையசீர்பெறுசதசிருங்கத்திலெண்ணிலாப்பெருவளத்தனவாகி
நனைமலர்ப்பொழில்சண்பகஞ்சரளநாரந்தந்தெங்குகோங்காம்பைகளுடுத்து
வனசநீள்சுனைமல்கியபிரமவனமொன்றுள்ளதுமற்றதஞ்சப்பா
டனைநிகர்ப்பதுநான்மறைக்கிழவன்றனமாயதுபிரமமாநகரம். ௧௧

சனற்குமாரமுனிவர்யோகசெய்திருத்தல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொற்பமரினையநகர்க்கொருபாங்கர்ப்பொங்கொளிமடங்கலேறென்று
பற்பலமடங்கல்சூழவீற்றிருக்கும்பரிசெனத்தவர்நீற்றொளியி
னற்புதக்கோலத்தறிஞர்சூழ்ந்தேத்தவருட்சனற்குமாரமாமுனிவ [நாள்.
னெற்பணிப்பெருமான்சரணுளத்திருத்தியோகுசெய்திருக்குநாளொரு

வைகறையெழுந்துகங்கைநீராடிவானவர்முனிவர்தென்புலத்தார்
செய்கடனுவப்பத்தெண்புனலிறைத்துநியமசமுத்தியாணமுமாற்றிப்
பொய்கவிராசையங்கியின்விதியாற்பூத்தநீறங்கையினெடுத்து
நைகரந்தீர்ந்தவன்பொடுநியாசநடைபெறுதியானமுன்னுக. ௧௩

அடைவுறுபஞ்சப்பிரமமந்திரத்தாலங்கியென்றற்றொடக்கத்தான்
முடிவில்சாபாலமனுக்களேழாற்றுன்மூவிரண்டதர்வமந்திரத்தால்
வடிவுறுமிடக்கைவைத்துமுன்மூக்கான்மந்திரித்தறலினுற்குழைத்துக்
கடிகெழுசென்னிமுதலடிகாறும்பிரமமோரைந்தையுங்கழறி. ௧௪

நிறையவுத்தூளஞ்செய்துபின்றிரியம்பகங்களாணிகழ்த்துமஞ்செழுத்தா
லறலினுசமித்துப்பின்னருந்திரியாயுடந்திரியம்பகமனுவான்
முறையினஞ்செழுத்தாற்புண்டரமூன்றுமுச்சுடர்முக்குணமும்மை
மறைகண்மூவுலகுமுந்நிறமுத்தீவடிவெனச்சிந்தையிற்கண்டு. ௧௫

ஐந்துமூவிடத்துமழகுறவணிந்தாங்கருக்கற்குச்சந்திநீருதவி
யிந்திரதிசையைநோக்குபுமோனமெய்திநல்லாதனத்தும்பர்ப்
பந்தமில்சுகஞ்சேரிருக்கையனாகிப்பஞ்சபூதத்தையொன்றொன்றி
னுந்துறவொடுக்கியாவியைப்பிரமரந்திரத்தொடுக்கியபின்னர். ௧௬

பாதகக்குழிசிப்புலையுடற்றொடக்கைப்பவனபீசத்தினுலுணக்கிப்
போதரவன்னிபீசத்தால்வேவப்பொடித்ததுவாரிபீசத்தாற்
சீதமாநனைத்துத்தரணிபீசத்தாற்றிரட்டிவேறுறப்பெலாம்பகுத்து
மேதகச்சத்திபீசத்தானிறைத்துமேயபின்விதியுளியுயிரை. ௧௭

ஆசுதீருடம்பின்முன்புபோலிருத்தியங்கணாதாரபங்கயத்துத்
தேசுறும்வன்னரூபியாய்நிறைந்ததேவியைமுறைவழாதமைத்துப்
பேசிருபத்தோராயிரத்தறுநூறுயிர்ப்பினைப்பிரித்தசபையினை
மாசறுமானைமுகப்பிரான்முதலோர்மகிழ்வுறும்படியவர்க்குதவி. ௧௮

ஆவியாமிலிங்கத்தந்திரியாகவருசசனைவிதியுளியாற்றி
மேவியபின்னர்ப்புறத்தினுஞ்செவ்னிமுகமுதல்விளம்புறுப்பெல்லாந்
தேவியையம்பாலெழுத்துருவானசெல்வியைநலம்வரவமைத்துப்
பாவுறும்பிராணாயாமங்கண்முறையிற்செய்துபின்பரிதிகாணளவும். ௧௯

அருமறைக்காயத்திரிப்பெருமனுவையாயிரத்தெட்டுருக்கணித்துக்
கருதியயோகசித்தியின்பொருட்டுங்கணேசனைமுன்புபூசித்துப்
பரிதிமண்டிலத்துந்தண்டலந்தனினும்பகர்தருமிலிங்கமூர்த்தியினு
மருவுமங்குட்டரூபியாஞ்சிவனைவரன்முறையருச்சனைபுரிந்து. ௨0

யோகினைக்கூடித்தன்னுடையிதயத்திசமென்றுரைக்குமெட்டிதழுஞ்
சேகறும்வயிராக்கியமெனும்பொகுட்டுஞ்செப்புவாமாதிகேசரமு
மாகியகமலமாவியாயாமத்தலர்தரக்கண்டுமற்றதன்மே
லேகன்மும்மூர்த்தியாகிமுக்குணங்கட்கிறைவன்மும்மண்டிலவீசன்.

முக்கணன்புட்டிவருத்தனனிலப்பொன்மயன்முதிர்கறைமிடற்றன்
றக்கவீசானன்வன்னிரேதாநற்சத்தியனருவினனுருவன்
புக்கசீர்ப்புருடன்விச்சுவரூபன்புருட்டுதன்சிவன்புருகூதன்
னவக்குமெய்ச்சத்துப்பராபரம்பரமான்மாமகத்துயர்பரப்பிரமம். ௨௨

என்றெடுத்துரைக்கும்பெயர்களின்பொருளாயியம்புரும்பரவெளிநாப்ப
ணின்றபேரொளியின்பிழம்பினையினையசத்தியினோடுநேர்நோக்கி [ந்து
யொன்றுதன்னுயிரையப்பெரும்பொருளோடொன்றுவித்திருபகுப்பிற
மன்றயோகத்தினசைவறவிருந்தான்மறையவனின்றருண்மதலை. ௨௩

சிவபெருமான்திருவுலா.

ஆங்கவனவ்வாறரியயோகத்தினனந்தபரவசனாகி
யோங்குபேரறிவின்விழித்தனனுறங்குமேல்வையினும்பர்தம்பெருமான்
மாங்குயிற்கிளவிமலைமகளோடுமலர்தலையுலகுகாத்தளிப்பான்
வீங்கியகருணையூற்றெழத்தூயவெள்விடையூர்திமேல்கொண்டு. ௨௪

உரகர்கந்தருவரிராக்கதர்சித்தர்யோகிகளாசைகாப்பாளர்
நிரைமணிமோலிபாதுகைவருடநிகழுமாகாவுடனூர்கூ
விரிபுகழேனைவீணைவல்லவரும்விருதெடுத்தோதியாழ்தடவ
விருவிசும்பகத்தினினிதெழுந்தருளியுலவினனென்னையாளுடையான்.

அதுசனற்குமாரன்யோகினில்வைத்தகருத்தினலறிந்திலனுகிக் [டு
கதுமெனவிருக்கையெழாமைகண்டெம்மான்கருணைகூர்ந்துமையவளோ
விதுவணிசடிலத்தெம்மையேயுளத்தின்விழைதரவிருத்திமற்றெம்பாற்
பொதுவறவொருக்குமனத்தினனென்னுப்புரிவொடுங்கோயில்புக்கனனல்.

சினநீதமாரமுனிவர்சாபமேற்றல்.

நந்தியெம்பெருமானுக்கினன்வெகுண்டுநலமிலாவொட்டகமேபோ
லந்திலெம்பிரானையிகழ்ந்திருந்ததனலவ்வுருவாகெனச்சபிப்பச்
சிந்தைகூர்முனியுமொட்டகமாகிச்செழுநிலத்துழிதருகாலை
முந்தைஞான்றியற்றுநல்வினைப்பயனுன்முன்னினன்கச்சிமாநகரம். உஎ

பிரமன்கச்சபேசரைப்போற்றல்.

ஆயிடைக்கச்சபேசனுமிறைவனமர்ந்தருள்கோயிலின்மாடே
காயுமைம்பொறியினுலகெலாம்படைக்குங்கருத்தினன்மலரணைப்புத்தே
டேயமாதவத்தினினிதுவீற்றிருக்குஞ்சூழலினணுகுதலோடுந்
தீயபாவத்தினெட்டகவடிவாஞ்சிறுவனைக்கண்டனன்ருதை. உஅ

பாவடிநெடுங்காற்றிரையெழுதோல்வாய்ப்பழியுடலொளிந்துநீள்கழுத்தி
யாவருமிழிக்குமொட்டகயாக்கையிளவலைநோக்கிநின்றந்தோ [ன்
சேவுயர்கொடியானடித்தொழும்பாற்றுந்திருவருட்குரியனுமிவனுக்
காவவெஞ்செய்கோவென்மகற்கிதுவந்தடுத்ததென்வாவெனவெண்ணி.

யோகினைக்கூடிமுன்னிகழ்வனைத்துமுணர்ந்தனனவ்வினைதவிர்ப்பா
னுகமமுறையாற்கச்சபேசன்பாலடைந்துபூசனைசெய்தேத்தெடுப்பான்
மாகர்போற்றிசைக்குமிளம்பிறைமோலிவள்ளலேயுலகளித்தழிக்கு
மேகனேயாமையுருவொழித்தரியையாண்டநின்னிணையடிபோற்றி. ௩0

காசிகேதாரம்புட்கரங்குருக்கேத்திரங்கடிநைமிசங்களினு
மோசைகொள்காஞ்சியதிகமென்றுரைப்பதுரைப்பிரமாணமொன்றன்று
லீசனேநீயுமுமையுமேயல்லாலிங்கர்படைத்தவரில்லை
தேசுறயானேகண்ணுறக்கண்டுதெளிந்ததாமெந்தவூழியினும். ௩௧

புரியுநின்னருளாலுயர்ந்தவரனேகர்புரவுபூண்டெட்டுருவெடுத்தோய்
வரிவிழியுமையாண்மணந்தபேரின்பவடிவமேபிடும்பைநோயறுக்குங்
கருணைவாரிதியேயிரங்கிடாயெமக்குக்களைகணீயன்றிவேறிலையென்
றிருகணீர்சொரியநெக்குநெக்குருகியேத்தினனுத்தமப்பேறு. ௩௨

கச்சபேசர்காட்சி.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திசைமாமுகன்வாழ்த்தொலியஞ்செவியிற்சென்றேறலுமாரருளுந்துதலால்
மிசைவானவர்பூதகணம்புடையின்மிடையப்பெருமானெதிர்நின்றருளி
வசைதீர்தரவேட்டவரந்தருகேமைந்தாவுனுசெய்கெனவாய்மலரா
விசைபாடினனுேகைதுளும்பிடநின்றிதுகூறுதலுற்றனன்வேதியனே.

நின்றுண்டுவழாதவனென்புதல்வனீடுந்தவமுற்றுசனற்குமரன்
முன்றிண்சதகோட்டிடைநின்னிருதாண்முன்னிச்சிவயோகுமுயன்றுதவத்
தொன்றும்பொழுதாயிடைநீவருதலுணர்ந்தான்லனிட்டைகருத்துறலா
லன்றங்கருணந்திசபித்ததனுலமொட்டகவாக்கையனுயினனே. ௩௪

பிரமன்நந்திதேவரைவேண்டல்.

இன்றேயிதுதீர்த்தருளென்னவிரந்தேத்தித்தொழவெந்தையுமெம்மடியார்
நன்றேகொடுசெய்தனையாவையவைநம்மால்விலகாவதனுன்மறையோய்
பொன்றுதிதுநந்திதவிர்ப்பனெனப்புரிவுற்றருள்செய்துமறைந்தனனு
லன்றேமலராளிதவத்திறனலங்குற்றருணந்தியைவேண்டுதலும். ௩௫

நந்திதேவர்கருணைகூர்தல்.

நந்திப்பெருமானுமகிழ்ந்தலரோய்நங்கச்சபவீசனெதிர்ப்படலா
லந்தப்பொழுதுன்புதல்வன்பெறுசாபந்தீர்ந்ததுவாயினுமன்பர்கள்பாற்
பந்தித்தபெருங்கருணைகரனென்பதுநாட்டினனெம்மிறைநின்புதல்வன்
கந்தப்பொழில்சூழ்வடமேருவினங்கண்ணெய்துகவிவ்வுருநீங்குமரோ.

நவைதீர்ந்தபினெம்மருளாலிவனம்மாணுக்கனுமாகியந்துதவுஞ்
சிவதீக்கையையுற்றுவிரிந்தகலைத்திரள்யாவுமுழீஇச்சிவஞானமுணர்ந்
தவமாற்றுவனென்றருள்செய்தகலவ்வல்லோனவண்மைந்தனையன்புறுத
னிவர்வுற்றகணத்தரொடும்புகுவித்திப்பாலருமாதவமுற்றியபின். ௩௭

உயர்கச்சியிலோங்குபலாசடியினுறைகச்சபவீசனருட்கருணை [ற்
பயில்வுற்றுமுறைப்படியெவ்வுலகும்பண்டேயெனநன்குபடைத்தனன்ம
றியல்பின்வடமேருவினந்திபிரானிருக்குநிலையத்தின்மலர்த்தலைவா [ல்.
முயன்மைந்தனொடுஞ்செல்கணத்தவரப்பெருமானடியேத்தியியம்புவரா

நந்திதேவருக்குசனற்குமாரமுனிவர்மாணுக்கராதல்.

வேதாவெமையேயினனீயிர்கள்போய்மேருப்புடைநந்திமுதல்குரவன்
பாதாம்புயமேத்தியிம்மைந்தனவன்மாணுக்கனுமாம்படிசேர்த்துயிவட்
போதீரெனவென்றருள்பெற்றவர்தாம்போகத்தனருட்கணிநேட்டகமாய்
கோதாருருநீத்தொளிபெற்றவனைமாணுக்கனெனும்படிகொண்டனனே.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அன்னோனவன்பாற்றீக்கையுமிவழிபாடாற்றிமுழுதுணர்ந்தான்
முன்னர்ப்புராணநியாயநூல்கருமமுதனூறருமநூன்
மன்னுசிக்கையேழ்சந்தைவழங்குமொன்பான்வியாகரணம்
பன்னுமெண்ணூன்முககந்தம்பலவுமுறையினோதினனால். ௪௦

ஏயுங்கற்பசூத்திரங்களிருக்குமுதலாநான்மறைக
ளாயுள்வேதம்வில்வேதமமல்காந்தருவமருத்தநூல்
பாயபலவும்விதிமுறையாற்பயின்றுநந்திப்பிரானருள்சேர்
தூயமுனிவன்பின்னருமொன்றிரந்துவேண்டித்தொழுதுரைப்பான். ௪௧

சனற்குமாரமுனிவர்வேண்டுகோள்.

வேறு.

உன்புடைக்கல்வியெல்லாமுணர்ந்தனனவைகளெங்கு
மின்புடைச்சிவப்பேறன்றேமுத்தியென்றியம்புமெந்தாய்
புன்புலையுடம்புநீங்கிப்பரவெளிப்பொருளைக்கூடு
மன்புடைப்பசுவேயன்றோசிவனியல்பதனைச்சேரும். ௪௨

மானிடன்விசும்பைத்தோல்போற்சுருட்டுதல்வல்லோனுயி
னீனமில்சிவனைக்காணுதிடும்பைதீர்வீடுமெய்து
மானமார்சுருதிகூறும்வழக்கினையாதலாலே
யானமரிறையைக்காணுமுபாயமேயறிதல்வேண்டும். ௪௩

ஆங்கதுபலவாற்றானும்மருளினையவற்றினுள்ளும்
நீங்கறவெளிதிற்கூடுமுபாயமுஞ்செப்புகென்றே
யோங்குசீர்ச்சனற்குமாரனுரைத்தலுஞ்செவிமடுத்து
வீங்குபேருவகைபூப்பவிளம்புவானந்திமெய்யங்கோன். ௪௪

நந்திதேவரனுக்கிரகம்.

அருள்பெறுசனற்குமாரனாறுமுகன்கூறென்றன்னைச்
சுருதியிற்கிளந்தவாற்றாலறிவினிற்றாயைமுற்று
மிருளறவுணர்ந்தாய்நீயேயிருந்தவத்தலைவன்கேட்டி
மருளினீர்ந்துலகமுய்யவினையதுவகுத்துச்சொல்வாம். ௪௫

அந்தணரரசர்நாய்கரிருபிறப்பாளர்வேத
மந்திரக்குரியோர்நான்குவகைநிலையவர்கட்கென்ப
நிந்தையில்பிரமசாரிநிலையுயர்மனையின்வாழ்க்கை
சுந்தரவனத்தின்வாழ்க்கைதுறவறமந்நான்காமால். ௪௬

கருநிலைக்கொட்டாமாயுள்பதினொன்றுகருதிராறும்
வருடத்தின்மறையோராதிமூவர்க்குமறையினூசான்
றொருளுபநயனஞ்செய்வன்முனிவர்தங்கடன்றீர்ந்தற்குப்
பொருவிலாமறைகளங்கமோதுதம்பொருட்டுமன்றே. ௪௭

ஆங்கதன்பின்னர்க்காமமறம்பொருட்பேற்றினோடு
மோங்குசீர்ப்பிதிரர்வானோர்கடன்களினொழிவும்வேண்டி
மாங்குயிற்கிளவிமென்றோண்மனையையமணப்பர்பின்னர்த்
தாங்கரும்வனத்துச்செல்வர்தவமிகக்கிடைத்தல்வேண்டி. ௪௮

கடனெலாம்விண்டபின்புகருதருந்துறவிற்செல்வர்
நடலைகூருலகவாழ்வைவெறுத்துநல்லறிவுதூய்தா
யிடனுடைத்துறவிற்சென்றேயிருவகைநியாயத்தோடு
மடனறான்னூல்பற்றிமறைமுடிவுணர்தல்வேண்டும். ௪௯

இருவகைநியாயம்பூர்வமுத்தரமெனப்பெயராய்து
மொருவகைசிவபூசைக்காமொருவகைசிவப்பேற்றிற்காஞ்
சுருதியோயிலிங்கஞ்சார்ச்சேர்வெடுத்துக்கோட்போஞ்சொல்லின்
வருமபயரிவற்றுண்மென்மைவன்மையென்றிவற்றையாய்தல். ௫௦

கட்படுபூசைபூர்வகருமநூனியாயத்தாகும்
மெத்தா[illegible]க்கமீறப்பிராசயபூர்வதைபலமேசொல்லப்
பெண்டுத்துரையருத்தவாதம்வையவப்பேறுகூறற்
கடுத்தவுத்தரநூலுண்மைதுணிவதற்கிலிங்கமாமால். ௫௧

இரவெரியாடுந்தேவையிம்முறைதுணிந்தஞானி
பிரணவமனுவாற்போற்றிப்பேதுறுதுடல்சாங்காறும்
பரவிடினவற்குமுக்கட்பரன்வெளிப்படுவன்பட்டான்
மருவுபேரின்பந்துய்த்துவியலனில்வாழலாமே. ௫௨

பின்னவன்மாயவாழ்விற்பிறந்திடான்சிவமேசேர்வன்
முன்னருஞ்சிவப்பேற்றிற்குமுறைவருமுபாயமீதா
மின்னெறிச்சிறியோர்வார்க்குமெளியதன்னெறிதாய்நேரா
மந்நெறிமேக்கண்ணம்மான்பதிகளினமர்தலாகும். ௫௩

ஆயிடைச்சாக்காடெய்தின்விலங்குநாயடுவான்புள்ளு
மேயபுன்மாக்களேனும்வீடுபேறடைவதன்மை
நீயிதற்கையங்கொள்ளேலென்றலுநெடிதுவாழ்ந்து
தூயசீர்நந்திபாதந்தொழுதெதிர்குமாரன்கூறும். ௫௪

சீர்த்தலவாழ்க்கையானேசெவ்வழிப்பயன்றாயைய
பார்த்தலத்திறைவன்மேவும்பதிகளெண்ணிலவாமிக்க
கீர்த்திசாலவற்றுண்மேலாய்க்களர்சிவப்பேற்றின்முத்தி
யார்த்தியின்றுதவுந்தானம்யாதுநீயருளுகென்றான். ௫௫

என்றலுநந்திப்புத்தேள்கணப்பொருநெண்ணிமுன்னாள்
வன்றிறல்விடையோன்றேவிக்குரைத்ததுமனத்துட்கொண்டா
னன்றவர்ப்பணிந்துமைந்தாவரனுமைக்கியம்புமாற்ற
நன்றுநீகேட்டியென்னவரன்முறைநவிலலுற்றான். ௫௬

சனற்குமாரப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௪௧௫.

தலவிசேடப்படலம்.

சிவபெருமான்றிருவோலக்கச்சிறப்பு.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இழைத்தபன்மணிகள்காந்திவிட்டெறிக்குமரிசுடர்ப்பேரொளிப்பரப்பு
மழைக்கணத்திறையைத்தொழப்புகுந்திறல்சால்வானவர்நோக்கலாற்றது
விழித்துணையிமைப்பச்செய்தொறுமவரவ்விளைவறியாதெமக்கென்னே
பழுத்ததோமுடிவுகாலமென்றழுங்கும்படியதோர்கனகமண்டபத்தில். ௧

எறும்பவித்திரடோளிரணியன்மருமத்திரத்தநீர்வாய்மடுத்தெழுந்த
வெறிமயக்கறுத்தபேருவப்பிநோக்கிவிலக்குறுமும்மலமயக்குந்
தெறுமெனநரமாமடங்கலன்முழுதுமடங்கலாய்த்திருவடிதாங்கி [ன்
யுறுவதுகடுக்குமடங்கலேற்றெருத்தத்தொளியெறிமணிப்பொலந்தவிசில்

எரியவிர்ந்தனையதுவர்மணிச்சடிலத்தெறிதிரைக்கங்கையூடலைந்து
பருவருங்கேண்மைச்சிறுபிறைக்கிரங்கிப்பற்றித்தனிருக்கையிற்கொடுபோய்த்
தெருமராதளிப்பான்முழுமதியனுக்செவ்விபார்த்துறைவதுமானும்
விரிகதிர்த்தரளத்தொங்கல்சூழ்வட்டவெண்குடைமீமிசைநிழற்ற. ௩

தொல்லைநாட்புகழ்களங்களுநெருங்கத்துன்றிவெற்றிடங்களின்மையிரு
மல்லுறழ்மிடற்றுப்பிரானிடத்துயிர்த்தவற்றைநாட்கீர்த்திகளிருபாற்
செல்லிடந்துருவிக்கொட்பபோலரிமான்செழுந்தவிசொடுமணிக்குடைக்கீ
ழெல்லையுமேலும்வெள்ளொளிபரப்புமிடையினிற்சாமரையிரட்ட. ௪

வேட்டவேட்டாங்குவரங்கள்பெற்றேகும்விண்ணவர்துகொடுசெருக்கிக்
கோட்டமுற்றழியாதறிவுறுப்பவர்போற்கோட்டமுற்றழிகயமுகத்தன்
வாட்டிறற்சூரன்முதலியோர்ச்செகுத்தமருப்பொடுசுடர்வடிநெடுவேல்
காட்டியகரத்தினறுமுகத்தேவுங்கணேசனுமிருபுடைவயங்க. ௫

உருவினிற்பெருமைபெருமையன்றுருவிற்சிறுமையெய்தினுமுமைபாக
னருளினிற்பெருமைபெருமையென்றுலகவகிலமுந்தெளிதரக்காட்டி
மருமலர்க்கிழவன்முதலியோர்புறத்துமன்னிஉநகுநடைக்குறுத்தாட
பெருவயிற்றழல்கால்குழிவிழிப்பூதப்பெருங்கணமருகுநின்றேத்த. ௬

கண்ணிணைக்கடங்காத்திருவுருவழகைக்காண்டொறும்பண்டுதான்கொண்ட
பெண்ணுருவெடுப்பக்கருதிநீண்முகுந்தன்பிரிவிலாதொருபுடையமர்ந்த
பண்ணிசைமொழியாள்வனப்புமெம்பெருமான்பார்வையுநோக்கிமற்றெமக்கிங்
கெண்ணியவெண்ணமுற்றுறுதினியென்றெழுந்தவக்கருத்தினைமீட்ப. ௭

ஆடலைத்தொடங்குந்தொறுந்திருமேனியழகினைக்கண்களான்மடுத்து
வாடருமயல்பூண்டவசராய்ச்சதியின்வழிப்பதம்பெயர்தராநிலையை
நாடகத்தலைவர்க்கெதிரடியேங்கணடிப்பதற்கஞ்சுதுமென்னாச்
சேடமைவனப்பினுருப்பசிமுதலோரவிநயச்செய்கையான்மறைப்ப. ௮

மல்லலங்கமலத்திருவடிநோவமறுவலுமறாவிலுமோடிக்
கல்லொளிபரப்புமணிமுடியமுத்துங்கடவுளர்தொகையினைவிலக்கு
நல்லமெய்ப்பணியைநான்பெறநல்கியவரவர்க்கருள்செய்துபோக்கி
யெல்லைதீர்கருணைமலையினோலக்கத்திருந்தனனென்னையாளுடையான். ௯

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருந்தருள்காலைவெண்கேழ்மம்பொதியடுக்கலீன்ற
முருந்திளமுறுவற்செவ்வாய்முகிழ்முலைக்கடவுட்கற்பிற்
றிருந்திழையுலகமீன்றசெல்விமுத்தேவுங்காணாப்
பெருந்தகையடிகள்போற்றியிதுவொன்றுபேசலுற்றாள். ௧௦

உமாதேவியார்வினா.

கடப்படும்வீடுபேறுன்றிருவடிக்காட்சிதன்னாற்
கிடைப்பதாமறையிறாய்ந்துகிளர்தவந்தியானநிட்டை
நடைப்படிமுதிர்ந்துவாய்ந்தநல்லவர்க்கன்றியுன்ற
னடித்துணைகாண்டலேனோர்க்கரிதரிதாகுமம்மா ௧௧

ஏனையோர்விலங்குபுட்களிங்குனைக்கண்டுமுத்தி
மேனிலத்துறுவதெவ்வாறென்றனள்வினாதலோடு
மூனுடையுயிர்களியாவுமுய்யுமாகருணைகூர்ந்து
மானமர்கரத்துப்புத்தேள்வாய்மலர்ந்தருளுமன்றே. ௧௨

சிவபெருமான்விடை.

அரிபரந்தகன்றவுண்கணலர்முலையணங்குகேள்யாம்
பரவெளிப்பரப்பின்வைகும்பண்பினேமுலகமெங்கும்
விரவியேநிறைந்துநிற்பேம்விளங்குமெய்ஞ்ஞாலம்பாதந்
தரைமுதலுலகமூன்றுபாதம்வான்றலத்துமேவும். ௧௩

ஆவகைவயங்குநம்மையாவருமறியமாட்டா
ரோவரும்பெருமைசான்றவுத்தமதலங்கடம்மி
னேவருங்காணவாழ்வேமென்றலுமுவகைபொங்கி
யாவையத்தலங்களொன்றுட்கெம்பிரானருளிச்செய்யும். ௧௪

வேறு.

திருச்சேதுவாலவாய்சிராப்பள்ளிதிருவழுவூர்திருவையாறு
தருச்சூழிடைமருதூர்யாமென்றுநடம்புரியச்சலியாத்தில்லை
கருச்சாடுமுதுகுன்றமருணகிரிதிருவிரிஞ்சைநவினாரோத்தூர்
மருச்சூழுங்குழலுமையேநின்னொடியாமகிழ்ந்துறையும்வளஞ்சூழ்காஞ்சி.

ஆலவனங்காளத்திதிருச்சயிலஞ்சித்தவடமடியார்சைவக்
கோலநிறைவிரூபாக்கந்திரியம்பகந்திருக்கோகன்னமின்புஞ்
சாலவுதவுச்சயினிமாகாளங்காசிகேதாரமென்றுங்
காலனுறாப்பிரபாசமிமயமலைமந்தரஞ்சீர்க்கயிலையாதி. ௧௫

எண்ணிலவாம்யாமருவுமிடங்களெனவுரைத்தருளவிறைவிகேளா
வண்ணமேலையிவற்றுள்ளுஞ்சிறந்ததலம்யாதென்னவருளிச்செய்வான்
புண்ணியமெய்த்திருக்காஞ்சியெவற்றினுமேம்படுபுரியாமவ்வூர்தன்னை
யெண்ணினுங்கேட்பினுஞ்சொலினும்வணங்கினும்பேரின்பவீடெவர்க்குமல்கும்.

அப்பதியினெஞ்ஞான்றுமகிழ்கூர்ந்துநின்றெங்கோமானோர்வேமவ்வூர்
பற்பலர்சூழவிமுத்தத்தலத்தினுமேம்பட்டதுவாமவிமுத்தத்தி
னிப்புவனங்காப்பயாம்விச்சுவநாதப்பெயரானிலிங்கந்தாபித்
தொப்பருஞ்சீர்பெறவைத்தேங்காஞ்சிநகரிடத்தொருமாமூலந்தன்னில்.

தோற்றநிலையிறுதிமறைப்பருளென்னுமைந்தொழிலுநடாத்தயாமே
யேற்றமுடையேகம்பநாதனெனுந்திருப்பெயர்பூண்டிலிங்கமானோம்
தேற்றமிதனாற்காஞ்சியெவற்றினுக்குமதிகமெனத்தெளிவாயங்கட்
போற்றியொருநாளேனுமமர்ந்துறையின்முத்திநிலைபுகுதலாமால். க௯

வழிச்செலவிற்புகுந்தேனுமறந்தேனும்பொருளாசைமருவியேனுந் [தி
கழிப்பருஞ்சீர்க்காஞ்சியினிற்கணப்பொழுதுவதிந்தோருங்கலப்பர்முத்
பழிப்பிலாக்காஞ்சியைத்தன்னியல்பானொருபொழுதுபகரிற்கண்ணி
லொழிப்பரும்பாதகமனைத்துமொழிந்துபெருந்துறக்கவீடுறுதலுண்மை.

அக்காஞ்சியவிநாசப்பொருட்டுநாம்படைத்துவைத்ததாதலாலே
யெக்காலுமந்நகரினகத்துயரும்வினைத்துயருமெய்தாவாகு
மைக்காளஞ்சுழையமிழ்நின்மனங்குவிழிமணிநீவியல்குலெட்டுத்
திக்காளர்தமைப்பொருதும்பெருநீர்த்திநகராஞ்சிறிதுகேட்டி. உக

கலிமுதற்றீங்கணுகரியவேலியெனச்சூழ்பொழிலுங்காவன்மாறு
நிலையுடையுட்சேனையெனக்குவளைவிழிநந்தனனீள்வனமுந்தேவ
குலநிறைபஃறீபமெனநிரைக்கமலக்குளிர்தடமுங்கயிலைதன்னி
லிலகுறுபல்குவடென்னப்பலதளியுமுடைத்தாகுமெறிநீர்க்காஞ்சி. உஉ

பம்பைகம்பைபுண்ணியநீர்மஞ்சனைநிவேகவதிபாலிசேயா
றென்பனவேழுலகுமிடுமேழ்மாலையெனவொழுகுமெய்துவோரைச்
செம்பதுமக்கரமெடுத்துவிரையகவிளிப்பதுபோற்றெங்குநீளும்
வம்பவிழ்பூஞ்சோலைகளுண்மழைமறைத்தகதிர்போலவயங்குமூதூர்.

ஐயிருநூற்றுயர்சாகைசாகைகளாப்படைத்திங்கணமர்ந்துவாழு
மையனேயென்முதலென்றெழுகோடிமனுக்களுமபமனுவால்யார்க்கு
மையமறத்தெரிவிக்குமறைமாவின்சாரூபமடைந்தபோலு
மையநறுமாம்பொழில்களெஞ்ஞான்றுங்கனிகளுருதமலுமாங்கண். உச

விப்பிரர்கண்முதனல்வர்சங்கரர்செய்தொழிலர்மயிர்வினைஞர்செக்கார்
செப்பினையர்தச்சர்கொல்லர்பொன்வினைஞர்தேவகணிகையர்கள்கூத்தர்
விற்புருவப்பாத்தைமுதலோர்தெருக்கள்கலப்பின்றிவெவ்வேறாகிப்
பொற்பநீண்டகன்றொழுங்காய்மதிக்கணிசெய்கதிர்களெனப்பொலியுமாங்கண்.

தந்தைதாயிரண்டொழியப்பிறவெலாங்கொளத்தகுமாவணங்கண்மல்கு
மெந்தவூர்வேதவேதாந்தங்கண்மூவுலகுமெடுத்துக்கூறு
மந்தவூரெனக்கோடிமடமயிலேகவ்விவன்பதயன்பேரென்ன
முந்துமிருக்கோதுமஞ்சென்பகுதியடைவொடுபூசைமொழியுமாதோ.

திசைமுகனாலஞ்சிக்கப்படுதலினாற்காஞ்சியெனத்திசைபோய்மல்கு
மிசையுடையதிதுபிரமலோகமென்றுமிதனாற்பேரெய்துமாற்றா
னசைவிலாதங்குறைவோரெல்லார்க்கும்வீடுதவுமவ்வூர்நாப்பண்
வசையின்றித்திப்பியமாய்ப்புண்டரிகம்போலெமக்குவயங்குங்கோயில்.

அங்கதனிற்சோதிலிங்கவடிவாகியாமென்றுமமர்வேமிவ்வா [னூர்
றிங்கிரண்டாமறைவிளம்புஞ்சந்தோகாமறையெம்மையொளிவானென்
துங்கநகர்தனைப்பிரமபுரமென்னுமிறுதிமறைசுவர்க்கமென்னும்
பங்கமறுதயித்திரியஞ்சோதிசூழ்சுவர்க்கமெனப்பகராநிற்கும். ௨௮

அப்பிரமபுரங்காஞ்சிநகரல்லால்வேறில்லையாகுமென்றே
செப்புமுபநிடதமெலாஞ்சிவாகமங்களொடுமுழக்குஞ்செல்வியிந்த
வைப்பினைச்சேரிடையானுமாயிடையாயினுமிருந்துவணீங்கிற்கண்ணி
லெப்பெரும்பாவமுநீங்கிவீடெய்துமுனக்குண்மையியம்பினேமால். ௨௯

என்றிறைவனுலகுய்யவினவுமலைப்பெருமாட்டிக்கியம்பும்வாய்மை
யன்றுவினவியசனற்குமாரனுக்குத்திருநந்தியறைந்தானன்னோன்
வென்றபொறிவாதராயணற்குரைப்பவவனெனக்குவிளம்பல்செய்தான்
குன்றனையபெருந்தவத்தீர்சிவனைக்காண்பதற்கேதுவிதுவேகொண்மின்.

பரவருமந்தணமாகுமிக்காதைமெய்யன்பிற்படிப்போர்கேட்போர்
கரிசுறுநோய்நீங்கிநெடுநாட்புவியின்மக்களொடுங்களித்துவாழ்ந்து
வாகுணராய்மறுமையினும்பெரும்போகமினிதுண்டுமாறுமுத்தி
விரவுவரென்றுமாங்கொள்ளச்சூதமுனிமுனிவர்க்குவிளம்பினானால். ௩௧

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௪௪௪.

திருநெறிக்காரைக்காட்டுப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மெய்த்தவர்யாவருமங்கதுகேட்டுவிழித்துணைநீர்வாரக்
கைத்தலமுச்சிமுகிழ்த்துமயிர்ப்புளகங்கண்மலிந்தயர்வார்
முத்திபெறற்குயர்காரணமின்றுதொகுத்துமொழிந்தனைநீ
யத்தலமேன்மையனைத்தும்விரித்தருளென்றலுமச்சூதன். ௧

கச்சியுளெண்ணறுதீர்த்தநிறைந்துளகாமுறுபலதானம்
பொச்சமில்போகமும்வீடுமளிப்பனபோக்கருமேன்மையவா
மச்சமறுத்துவியாதனெனக்கருள்செய்தமுறைப்படியே
யிச்சையினோதுவலந்தணிர்கேண்மினெனச்சொலலுற்றனனால். ௨

இந்நகரிற்புகல்சத்தியமாவிரதப்பெயரிற்குணபாற்
றன்னிகர்மெய்த்தலமொன்றுளதங்கமர்சத்தியவிரதீச
னென்னையுடைப்பெருமாட்டியுமோரிருமைந்தருமுடன்மேவ
மன்னியிருத்தலினத்தலமேன்மையையாவர்வகுக்கவலார். ௩

சத்தியசத்தியர்சத்தியசோதகர்சத்தியசங்கற்பர்
சத்தியகாமரிருத்தலினப்பதிசத்தியவிரதமதாஞ்
சத்தியநன்னெறியார்க்கும்விரைந்தருள்செய்துறுதானமதிற்
சத்தியமாவிரதத்தடமொன்றுளதத்தடநீராடி. ௪

புதனமர்நாளினினீர்க்கடனுதிபொருந்தமுடித்தங்க
ணிகமுறுசத்தியமாவிரதீசரையேத்திவணங்குநர்தாங்
கதவினைதீர்ந்தருளுண்மையுணர்ந்துகலப்பர்கண்முத்தியினை
மதமுறுகாமமயக்கமனைத்துமறுத்துயர்முனிவீர்காள். ௫

மனைவியர்மக்கணிலங்கலைசெல்வமுமற்றெவைவேண்டிடினு
மனையவைமுற்றுமளித்துயர்வீடுமளித்திடுமத்தீர்த்த
மினையதடம்பதியிந்திரதீர்த்தமுமிந்திரபுரமுமெனப்
புனைபெயரும்பெற்றுழப்பெயரெய்தியகாரணமும்புகல்வேன். ௬

இந்திரனரசிருக்கை.

மதுமலராளிதன்மேதகுகற்பம்வராகமதுறுமாறு
முதுமனுவந்தரநாட்சிவியென்றொருவாசவன்முன்னுளனால்
விதுவினையொப்பனரம்பையராகியமென்குமுதங்களிடைப்
பொதுவறுதானவமாக்கடலுங்குவடாதெரிகனல்போல்வான். ௭

கடவுளர்சேனைப்பங்கயபானுகற்சிறையரிவயிரப்
படையவனோர்நாட்கடவுளவைக்கட்பாசிழைவெதிர்பொருதோட்
படவரவல்குற்சசிபுடைமேவப்பன்மணியரியணைமேல்
வடிவமடங்கன்மேலொர்மடங்கல்போன்மெனவைகினனால். ௮

இருபுடைவெண்கவரித்தொகைதுள்ளமிசைக்குடையெழில்செய்ய
விருதுகண்மாகதர்சூதர்முழக்கவியன்மணிமாநிதியைந்
தருவொடுதேனுவிழிக்கடைநோக்கினைநோக்குபுதலைநிற்ப
வருகுறுகின்னரர்யாழமிர்தஞ்செவியாரவிருந்தயர. ௯

மணங்கமழ்தோளணிகற்பகமாலைதுளித்தமதுப்புனல்பாய்ந்
துணங்கருமின்பவிழிப்புனலொப்பவுறைத்துவிழிக்கெல்லா
மணங்குபுரிந்திடல்கண்டுபுலர்த்துநர்போலவிர்சாந்தாற்றி
நுணங்கிடைமங்கையரோவறவெங்கணுநொய்தினசைத்தனுக. ௧௦

அரம்பையுருப்பசிமேனகைமுதலியவரிமதர்விழிமடவார்
நிரம்பியகாமநலங்கனியவிநயநெறிமுறைகரமசையப்
பரம்புமிடற்றிசைவிம்மிடவிழியிணைபுடைபெயர்பயில்விறலும்
வரம்பெறுமற்புதமின்னவிர்கொடியெனமகிழ்நடமெதிர்புரிய. ௧௧

மருத்துவர்வானவர்கின்னரர்சித்தர்வசுக்கண்மருத்துக்க
ளுருத்திரர்சாத்தியர்கந்தருவத்தருடுக்கணவக்கோள்க
டிருக்கிளர்மெய்த்தவர்யோகிகள்கையிணைசென்னிமிசைக்குவியா
நெருக்கினுளெய்தியிறைஞ்சிமருங்குறநிரல்படநிற்பவரோர். ௧௨

கணங்கொடயித்தியர்யாவரும்வந்துகடைத்தலைவாய்தலின்மாட்
டணங்குபுசெவ்விகிடைத்திலர்நிற்பவொழிந்தவர்தங்குறைதீர்த்
தணங்கருமின்பவெள்ளத்திலழுந்தியளப்பருசெல்வத்தா
னிணங்கலர்கோளரியின்னணமேவுழியெண்ணினனிவையெல்லாம். ௧௩

இந்திரனரசியலைவெறுத்தல்.

வேறு.

இருவினையொப்புவாய்ந்தபருவம்வந்தெய்தலாலே
மருவருந்துறக்கவைப்பினரசியல்வாழ்க்கைதன்னை
யருவருத்துவர்த்துக்காவற்சிறையிடையகப்பட்டோரின்
வெருவரும்பதைக்குமஞ்சும்வேறிவைகருத்துட்கொள்வான். ௧௪

அழியுமிவ்விடயவாழ்விற்களித்திருந்தோகெட்டேன்
பழிபவக்கடலிற்காலப்பாந்தள்வாய்க்கிடந்துநாணேன்
வழிமுறையறியாமாயவல்லிருட்படுகர்ச்சேற்று
ளிழியுமூர்ப்பன்றியேபோலுழந்தவென்னறிவுநன்றால். ௧௫

அருவினையுலகமெல்லாம்படைத்தளித்தழிக்குங்காலங்
கருவுறுமெவையுங்காலவயத்தவாங்காலந்தான்மற்
றொருபொருள்வயத்ததன்றாலுந்தியோன்கற்பத்தீரேழ்
பொருவிலிந்திரர்கண்மாய்வர்பொன்றுவர்மனுக்கடாமும். ௧௬

ஓதுமிக்கற்பம்வேதற்கொருதினமஃநாண்முப்ப
தாதலோர்மதியாந்திங்களாறிரண்டாயினாண்டா
மேதமில்வருடநூறேலிருவகைப்பரார்த்தமாகப்
போதரும்போதிலன்னான்பொன்றுவன்மன்றமாதோ. ௧௭

அம்மலர்க்கிழவன்காலமரிக்கொருதினமன்னோனு
மம்முறைதிங்கள்கூடுமாண்டுநூறெய்திற்பொன்று
மம்மவோசீசீயிந்தவனித்தியவாழ்வுவேண்டே
னம்மையில்வீடுபேற்றிற்குபாயமேயறிதல்வேண்டும். ௧௮

எண்ணருந்தவந்தானங்கள்பட்டினியெச்சந்தானோ
புண்ணியநன்னீராடப்போதலோமுத்திக்கேது
நண்ணுமிவ்வனைத்துந்தேறநமக்கெலாங்குருவாம்பொற்பே
ரண்ணலைவினாதுமென்னத்துணிந்தனனமரர்கோமான். ௧௯

அவையகத்துள்ளார்க்கெல்லாம்விடையளித்தெழுந்துபோந்து
நவையறவிரைவினந்தப்புரத்தினைநண்ணுகியங்கட்
புவிபுகழ்குரவற்கூவிப்போற்றிநின்றிதனைவிள்வான்
சிவியெனத்திசைபோங்கீர்த்தித்தேவர்கட்கிறைவன்மன்னோ. ௨௦

இந்திரன்தேவகுருவிடம்முறைகூறல்.

இவ்வரசியற்கைதன்னிலினியெனக்காசையில்லை
யவ்விதிமுகுந்தனேனோர்வாழ்க்கையுமவாவுகில்லேன்
மெய்வகையுணர்ந்துமுத்திமேவுதற்குபாயமொன்று
செவ்வனோர்ந்துரைத்தியென்னத்தேசிகன்றேர்ந்துசொல்வான் ௨௧

இந்திரனுக்குதேவகுருவுபதேசித்தல்.

நன்றுநீவினாயமுத்திநற்றவம்வேள்விதானங்
கன்றுபட்டினிவேறொன்றாற்காண்பரிதாகுமைந்தா
துன்றியமாயவாழ்க்கைத்தொடக்கறுத்துய்யக்கொள்வா
னொன்றுமெம்பெருமானுள்ளானவன்றிறமியம்பக்கேட்டி. ௨௨

கலிவிருத்தம்.

குறைவிலாமங்கலக்குணத்தனாதலி
னிறைமலமனாதியினீங்கிநிற்றலி
னறைகுவர்சிவனெனவறிவின்மேலவ
ரிறையவன்பெருமையையாவர்கூறுவார். ௨௩

மேலெனப்படுவனவெவைக்குமேலவன்
மாலெனப்படுவனவெவையுமாற்றுவா
னாலெனப்படுவனவெல்லாநுவன்றவன்
வேலெனப்படும்விழிபாகமேயினான். ௨௪

பங்கயன்றன்னைமுன்படைத்துமான்முதல்
புங்கவர்தம்மைப்பினுதவும்பொற்பினு
னங்கவனிலனெனிலகிலலோகமும்
பொங்கியவல்லிருள்பொதிந்தநீரவே. ௨௫

பகலிரவிலதுளதெனும்பகுப்பிலா
வகலருமிருள்பொதியனுதிகாலையி
லுகலரும்பரசிவனொருவனேயுள்ளன்
மிகுமுணர்வவனிடைவெளிப்பட்டோங்குமால். ௨௬

எங்குளயாவையுமிவன்வயத்தவா
மெங்கணுமிவனொருவயத்தினெய்திடா
னெங்கணும்விழிமுகமெங்குங்கால்கர
மெங்கணுந்திருவுருவிவனுக்கென்பவே. ௨௭

அரியயனமரர்களசுரர்யோகிக
ளிருமாறுவேதவேதாந்தம்யாருமிப்
பெரியவனடியிணைகாணும்பெட்பினுற்
றெரிகிலர்மாறுகொண்டின்னுந்தேடுவார். ௨௮

அவனவளதுவவனுமவைதொறுன்றுமிச்
சிவனலான்முத்தியிற்சேர்த்துவாரிலை
துவளருமிம்முறைசுருதிகூறுமா
லிவனடிவழிபடின்முத்தியெய்துவாய். ௨௯

பன்னுவதெவன்பலபரிந்துமெஞ்சினு
மந்நியர்தம்மையொழித்தரனையேத்துதி
யின்னதேவீட்டினுக்கேதுவாமெனும்
பொன்னுரைமனக்கொடுபுகலுவான்சிவி. ௩0

குரவனேயயனரிகுரவனேசிவன்
குரவனேதந்தைதாய்குரவனேயெலாங்
குரவனேயென்றுநூல்கூறுமுண்மையைக்
குரவனேயென்னிடையின்றுகாட்டினுய். ௩௧

உன்பெருங்கருணையாலுறுதிபெற்றுளே
னின்பொடுமெவ்விடத்தெவ்விதிப்படி
பொன்பொதிசடையனைப்போற்றுமாறிது
வன்பொடுமடியனேற்கருளுகென்றலும். ௩௨

கடலுடைவரைபயினிற்காஞ்சிமாநக
ரிடனுடைக்குணக்கினிலெய்தினரெலாம்
விடலருஞ்சத்தியவிரததானத்தின்
முடிவில்சத்தியவிரதீசன்முன்பரோ. ௩௩

மேற்றிசைச்சத்தியவிரததீர்த்தமொன்
றுற்றவுமேன்மைபெற்றுடையதாயிடைப்
போற்றுறும்பசுபதிவிரதம்பூண்டுசெனீ
றாற்றெழுந்துறுதடத்துதகமாடியே. ௩௪

விதியுளிமுடித்துநித்தியநைமித்திகம்
புதியநீறுடலெலாம்பொதிந்துபுண்டர
மதிநுதல்விளங்கிடவக்கமாமணி
நிதியெனப்பூண்டுநல்லொழுக்கநீடியே. ௩௫

தெள்ளொளிப்பளிங்கெனச்சிறந்தசெவ்விசால்
வெள்ளொளிச்சத்தியவிரதநாதனை
யுள்ளகக்கமலத்தின்வழிபட்டுண்மையா
னள்ளலர்க்கடந்தவழுந்திநண்ணுவாய். ௩௬

என்றலுமிந்திரனிறைஞ்சியென்கொலோ
வென்றிகொள்சத்தியவிரதங்கேள்வியாற்
றொன்றுளதொடர்புபோற்சுழலுமென்மனஞ்
சென்றுபற்றியதெனக்குரவன்செப்புவான். ௩௭

உள்ளதுகூறினையும்மையாயனை
யள்ளிலைக்குலிசநீயணைந்துபுந்திநாள்
வெள்ளநீர்ச்சத்தியவிரதமூழ்கியிண்
டெள்ளரும்விண்ணகர்க்கிறைமைபெய்தினாய். ௩௮

ஒருபொழுதாடினரும்பர்சோணிட
மிருபொழுதயனிடமெண்ணுமுப்பொழு
தரியிடநாற்பொழுதாயின்முத்தியே
மருவுவர்யாரதன்வண்மைகூறுவார். ௩௯

புந்திநாண்முழுகுநர்புகுவர்முத்தியி
னந்தநாண்மூழ்கலிவ்வரசநீயுமிப்
பந்தமில்வீடுறற்பாலையாயினை
மந்தணமிதுவெனக்கேட்டவாசவன். ௪0

இப்பெருந்தீர்த்தநீரெற்றைஞான்றினு
மப்புதவாரநாளதிகமாயதென்
செப்புதியென்றலுந்தேசிகப்பிரா
னெப்பறுகருணையினுரைத்தன்மேயினன். ௪௧

சத்தியவிரதர்புதனுக்குவரமருளுதல்.

கொச்சகக்கலிப்பா.

மதிக்கடவுடாரைதனைமணந்தீன்றமகவான
புதக்கடவுள்கிரகநிலைபெறுவதற்குப்புரிதாதை
கதித்துரைத்தமொழியாறேகருதருஞ்சத்தியவிரதப்
பதிக்கணணைந்துயர்தீர்த்தம்படிந்தாடித்தவஞ்செய்தான். ௪௨

மேதகுசத்தியவிரதப்பெருமானும்வெள்விடைமேன்
மாதுமையாளுடனேறிவயக்கரிமாமுகனிளையோன்
காதல்புரியருணந்திகணநாதர்புடைசூழ
வாதரமோடெழுந்தருளித்திருக்காட்சியளித்தருள. ௪௩

கண்டுபரவசனாகிக்கைதொழுதுபெருங்காதன்
மண்டியெழமயிர்சிலிர்ப்பமனத்தடங்காப்பேருவகை
கொண்டுநிலமுறவீழ்ந்துகுழைந்துருகிவிழிதுளிப்பத்
தொண்டனேனுய்ந்தேனென்றெழுந்தாடித்துதிசெய்வான். ௪௪

நெடியோனுமலரவனுநேடரியதிருவடிக்
ளடியேனுக்கெளிவந்தவருட்கருணைத்திறம்போற்றி
யொடியாதவெண்குணங்களுடையானேயெனையுடையாய்
கடியார்சத்தியவிரதநாயகநின்கழல்போற்றி. சரு

என்றேத்தியெந்தையெனையான்கிரகநிலைபெறவுங்
குன்றாதுன்றிருவடிக்கீழ்மெய்யன்புகூர்ந்திடவு
மின்றுதியென்வாரத்தித்தீர்த்தம்படிந்துபொறி
வென்றோர்முன்னையினிராட்டிப்பயனெய்திவீடுறவும். சசு

வேண்டுமெனவிரந்தேற்பவளித்தருளிவெள்விடைமே
லாண்டகையங்ககன்றனனலன்றுமுதலத்தீர்த்தம்
பூண்டபுதவாரத்துச்சிறப்பெய்தும்புந்தியுறக்
காண்டியெனுங்குரவனுரைகாருர்திசெவிமடுத்தான். சஎ

இந்திரன்சத்தியவிரதமடைந்துபூசித்தல்.

அப்பொழுதேயரசுரிமையம்மறையோன்புடைவைத்துச்
செப்பருஞ்சத்தியவிரதத்திருநகரின்விரைந்தெய்தி
முப்பொழுதுநீராடிமுழுநீறுமெய்பூசி
மெய்ப்படிகண்டிகைபூண்டுபுண்டரமுநுதல்விளங்க. சஅ

உருத்திரமுங்கணித்துள்ளப்புண்டரிகத்துமைபாகன்
றிருப்பதங்கள்சிந்தித்துக்கோயிலினுட்சென்றெய்தி
யருத்தியொடும்பூசனைசெய்தாராமைமீக்கொள்ளப்
பெருத்தெழுந்தபேரன்பிற்பெருமானைத்துதிக்கின்றான். சகூ

இந்திரன்துதித்தல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மறைமுடிவின்னுந்தேறுமலர்சிலம்படியாய்போற்றி
யறைபுனலுலகமெல்லாம்படைத்தளித்தழிப்பாய்போற்றி
சிறைநிறைவாசத்தெண்ணீர்ச்சத்தியவிரததீர்த்தத்
துறைகெழுவரைப்பின்மேயசுந்தரவிடங்காபோற்றி. ருO

அண்ணலேவிடயத்துன்பமாற்றிலேனோலமோல
மெண்ணரும்யோனிதோறுந்திரிந்தலைந்தெய்த்தேனோலங்
கண்ணினுண்மணியேவேறுகண்டிலேன்களைகணோலம்
புண்ணியமுதலேயின்பப்பூரணாவோலமோலம். ருக

புழுப்பொதிந்தசும்புபாயும்புன்புலையுடலையோம்பிக்
கழித்தனன்காலமெல்லாங்கடையனேன்பொறிகள்யாண்டு
மிழுத்திழுத்தலைப்பநொந்தேனினித்தினைப்பொழுதுமாற்றேன்
சழக்கறுத்தருள்வாயுன்றன்சரணமேசரணமையா. ருஉ

இந்திரனுக்குசத்தியவிரதர்காட்சிகொடுத்தருளுதல்.

அடைக்கலமடியேனென்றென்றழுதிரந்தயருங்காலை
விடைத்தனிப்பெருமானன்னோன்பத்தியின்விளைவுநோக்கி
நடைப்பிடியுமையாளோடுநண்ணிநீவேண்டிற்றென்னை
யெடுத்துரைதருதுமென்றானிந்திரனெழுதுவேண்டும். ருஙு

வினைவழிப்பிறந்துவீந்துமெலிந்தநாளெல்லையிலலை
யனையவற்றடிகேளுன்றனடிதொழப்பெற்றிலேனு
னினைவருந்தவத்தாலின்றுநின்னருட்குரியனானே
னினிவரும்பிறவிமாற்றியென்றனையுய்யக்கோடி. ருச

இத்தலந்தீர்த்தமென்றன்பெயரினானிலகவேண்டு
மத்தனேயென்னவோடுமவ்வகையருளிமீளா
முத்திசேர்கணநாதர்க்குண்முதல்வனுந்தன்மைநல்கிப்
பைத்தபாம்பாரம்பூண்டபண்ணவனிலிங்கத்தானான். ருரு

ஆற்றைநாண்முதலச்சூழலிந்திரபுரமாயங்கட்
கற்றைவார்சடையீரோர்காற்கண்ணுறப்பெற்றோர்தாமும்
வெற்றிவேற்காலன்றன்பால்விரவிடார்கருவிமெய்தா
ரிற்றதன்பெருமைமுற்றும்யாவரேயியம்பவல்லார். ருசு

சத்தியவிரதங்காரைத்தருவனஞ்செறிதலாலே
சித்திசேர்ந்தவர்க்குநல்குந்திருநெறிக்காரைக்காடென்
றித்திருப்பெயரினோங்குமென்பரான்மாசுதீர்ந்த
வுத்தமக்கேள்விசான்றவுணர்வுடையும்பர்மேலோர். ருஎ

திருநெறிக்காரைக்காட்டுப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ருoக

புண்ணியகோடீசப்படலம்.

கலிநிலைத்துறை.

செக்கைச்சடையந்தணிர்தேமலரோடைசூழ்ந்து
மேயசத்தியமாவிரதத்தலமேன்மைசான்றுங்
கச்சிப்பதியிற்கவர்புண்ணியகோடிமேன்மை
நச்சிப்புகல்கின்றனநன்குமதித்துக்கேண்மின். க

மின்பாய்பொழிற்சத்தியமாவிரதத்தலத்தின்
றென்பாலதுபுண்ணியகோடிநந்தேவன்வைப்பு
வன்பாலர்களெய்தரும்புண்ணியதீர்த்தமாடே
யென்போலிகட்குஞ்சிவப்பேறெளிதெய்துமங்கண். உ

சிவபெருமானிடத்துவிஷ்ணுவரம்பெறுதல்.

மலர்மேயவன்மேகநல்வாகனகற்பமொன்றிற்
றலமேழ்புகழ்நாரணன்றாமரையாளியாதி
யுலகேழையுமீன்றிடுமாசையினும்பர்கோனைப்
பலநாண்முகிலினுருக்கொண்டுபரித்தல்செய்தான். ந

நம்மானிரங்கிக்கடைக்கண்ணருணல்கிமாலோய்
வம்மோசுராரண்டினிலாயிரவாண்டுமற்றிங்
கிம்மேகவுருக்கொடுதாங்கினையெம்மைவேண்டு
மம்மாவரநல்குதுமோதுதியென்னவன்னோன். ச

எந்தாயொருநின்றிருமேனியிடப்புறத்து
வந்தேனடியேனுயர்நின்னருள்வண்மைதன்னா
னந்தாதவிவ்வாழ்க்கையுமெய்தினன்ஞாலமுற்றும்
பைந்தாண்மலரோனையுமின்றுபடைத்தல்வேட்டேன். ரு

அவ்வாற்றலளித்தருளென்னுமரிக்குநாத
னிவ்வாற்றல்கச்சிப்பதியெய்தியிலிங்கந்தாபித்
தொவ்வாநளினங்களினாலுயர்பூசையாற்றிற்
செவ்வேபெறுகிற்பையெனத்திருவாய்மலர்ந்தான். ௬

விஷ்ணுகாஞ்சியில்சிவபூசைசெய்தல்.

அங்கப்பொழுதேவிடைகொண்டருட்காஞ்சியெய்திப்
பொங்கிப்பொலிதீர்த்தநறும்புனலாடிச்சூழுந்
தெங்கிற்பொலியிந்திரநன்னகர்த்தென்றிசைக்கட்
டுங்கச்சிவலிங்கமிருத்திமெய்யன்புதோன்ற. ௭

தெண்ணீர்த்தடமொன்றுவகுத்துத்திருந்தமூழ்கி
வெண்ணீற்றணியக்கமணித்தொடைமெய்விளங்கக்
கண்ணீர்க்கமலம்பலகொய்துகருத்துவாய்ப்ப
வண்ணீர்ச்சிவபூசனைநித்தலுஞ்செய்துவாழ்ந்தான். ௮

கஜேந்திரன்தொண்டுசெய்தல்.

வேறு.

அன்னோனேவன்மெய்ப்பணியாற்றுமன்புந்தத்
தன்னேரில்லாவோர்மதவேழந்தானெய்தி
யென்னையகனேயென்பணிகொள்வாயென்றேத்திப்
பொன்வாடோன்றுமுன்னரெழுந்துபுனலாடி. ௯

நாளலர்தாமரைபாதிரிவில்வநறும்புன்னை
தாளுயர்சண்பகமல்லிகைதண்கழுநீர்மௌவல்
கோளறுகோங்குமுதல்பலகொய்துகொடுத்தென்றும்
வேளையளித்தவனுண்மகிழ்வித்திடுமந்நாளில். ௧௦

கஜேந்திரனைமுதலைப்பற்றல்.

ஓப்பகனீர்நிறைபூந்தடமொன்றுறுபூக்கொய்வான்
சீர்தருதிண்கரிசேறலுமங்கொருவன்மீன
நீரிடைநின்றுவெகுண்டடிபற்றிவிரிந்தீர்ப்பக்
காரொலிகாட்டியகன்கரையீர்த்ததுகாய்வேழம். ௧௧

இவ்வகைதண்புனலிற்கரைமீதிவையோவாமே
தெவ்வுடனீர்ப்புழியாண்டுகளெண்ணிலசென்றேகக்
கைவரையாற்றரிதாயலறிக்கருமாமேகத்
தவ்வடிவோனையழைத்ததுமூலமெனக்கூவி. ௧௨

விஷ்ணுகஜேந்திரனைககாத்தல்.

அண்டரெலாம்பாமூலமலமென்றகல்போழ்திற்
புண்டரிகக்கட்புண்ணியனன்புள்ளரசின்மேல்
கொண்டெதிரெய்திக்கரியரசெய்துங்கொடுவெங்நோய்
கண்டுளநெக்கானஞ்சலையஞ்சேல்களிறென்னா. ௧௩

ஆழியெறிந்தானதனுயிருண்டான்கரியோடும்
வாழியகாஞ்சிமாநகரெய்திச்சிவபூசை
வேழமளிக்குமேதகுபள்ளித்தாமத்தா
லூழ்முறையாற்றித்தவநனிசெய்தங்குறைகாலை. ௧௪

எண்ணருவாஞேரின்னமுநாடற்கரியானைக்
கண்ணினையாரக்கண்டகுகாதல்கைமிக்கங்
குண்ணிகழன்பானெக்குருகிக்கணுறைசிந்தப்
புண்ணியவேதப்பழமொழியோதிப்புகழ்கிற்பான். கரு

விஷ்ணு துதித்தல்.

தொச்சகக்கலிப்பா.

நீராய்நிலனாய்நெருப்பாய்வளிவாஞு
யேராரிருசுடராயாவியாயாவைக்கும்
வோரகிவித்தாய்விளைவாகியெல்லாமாம்
பேராளாவெங்கள்பிரானேயடிபோற்றி. கசு

அண்டபகிரண்டமனைத்துமகத்தடக்கிக்
கொண்டுநிறைந்தோங்கியபேரின்பக்குரைகடலே
தொண்டரெலாமுண்ணத்தெவிட்டாச்சுவையமிர்தே
தண்டலைசூழ்கச்சித்தலைவாவடிபோற்றி. கஎ

மாறுவறக்கடவுண்மானவடியேனு
மேறுகித்தாங்கவருள்சுரந்தவெம்மானே
சீறுதுமைகளிப்பத்தேவியாக்கொண்டெனிடம்
கூறுடைவைத்தகுணக்குன்றேயடிபோற்றி. கஅ

துக்காடையாதுய
னக்கோடிகண்ணேடுரியென்பணிந்தானே
யிக்காய்மழுமுதலாம்வான்படையோடென்றனையுந்
தக்கோர்புகழ்கணையாக்கொண்டாய்சரண்போற்றி. ககூ

மெய்யடியார்சாத்தும்விரைமலர்போலுன்பிலாப்
பொய்யடியேனான்விழியுங்கொண்டருளும்பொன்னடியாய்
செய்யானேநந்திகணத்தவர்போற்சேயேனு
மெய்தியருட்கூத்தினியமுழக்கும்பேறளித்தோய். உ0

ஆலமளக்கரெழுமந்நாளடைக்கலமென்
றோலமிடுமெங்கட்குயிரளித்தசீராளா
காலமேகாலங்கடந்தபெருங்கருணைக்
கோலமேயானந்தக்குன்றேயடிபோற்றி. உக

விஷ்ணுவுக்குச்சிவபெருமான்காட்சிகொடுத்தருளுதல்.

கலிவிருத்தம்.

என்னைப்பலபன்னியிரந்தயரும்
பொன்னுக்கிறைமேலருள்பொங்கியெழ
மின்னற்சடை யோன்விடைமீதுவரை
யன்னாந்தொடுகாட்சியளித்தனனால். உஉ

கண்டானிருகண்களிகூரமகிழ்
கொண்டான்வறியோன்கொழிதெள்ளமுத
முண்டானெனவோடினனுடினனால்
வண்டாமரைமாதுமணாளனரோ. உங

அதுகண்டுமைபாலருணேக்குதவி
விதுவொன்றுபொலஞ்சடைவிண்ணவனேர்
முதிருங்குறுமூரன்முகத்தலர
மதுசூதனகேட்டிவரந்தருகேம். உச

நார்வானவர்தம்மினுநாரணநீ
பெருவான்வலிபெற்றுளையெம்மருளாற்
பொருபோரினுளெம்மினும்வென்றிபுனை
வரமெம்மிடைமுன்பெறுமாதவனே. உரு

எனவங்கருள்செய்தலுமிந்திரைகேள்வன்
மனமொன்றவணங்கிவணங்கியெழுந்
தனைதம்புயபாதயுகத்தடியேற்
கனகம்பெறுபத்தியளித்தருளாய். உசு

வரதாமரையோரெடுமுற்றலகும்
வரதாதரல்வேட்டமனத்தினையாலம்
வரதாவரமீதுவழங்குதிநீ
வரதாவெனவோதிவழுத்தினனும். உஎ

மின்னுசைநிரம்பவரங்களெல்லா
மின்னேகொளநல்கினமேரிழையா
மன்னுபலகால்வரதாவெனநீ
சொன்னமையெம்புதுநாம்புறவே. உஅ

வாசத்துளவோயினிநீவரத
ராசப்பெயராற்பொலிவாயெமதான்
பூசித்தனைபுண்டரிகங்களினாற்
பேசிற்பதுமாக்கனெனப்பெறுவாய். உகூ

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

என்றருள்புரிந்தவள்ளலிணையடிவணங்கிமாயோன்
வென்றிவெள்விடையாயின்னும்விண்ணப்பமொன்றுகேட்டி
நின்றிருப்பாதபூசைநித்தலுமடியேனுற்ற
நன்றுமிவ்வத்தியேவற்பணிநயந்தொழுகிற்றன்றே. ஙO

என்னிடையன்புசாலப்பூண்டதாலிதன்பேர்தன்னு
ளுன்னெதிரடியேன்வாழுமுயர்வரைக்குமியோங்கன்
மன்னுசீருலகினத்திகிரியெனவழங்கல்வேண்டுங்
கன்னலஞ்சிலைவேளாகங்கனல்விழிக்குதவவல்லோய். ஙக

புண்ணியதீர்த்தப்பொய்கைப்புனல்படிந்திங்குளார்செய்
புண்ணியமொன்றுகோடிமடங்குறப்புரிந்துமற்றிப்
புண்ணியகோடிவைப்பினுயிர்க்கெலாங்கருணைபூத்துப்
புண்ணியகோடிநாதவிலிங்கத்திற்பொலிகநாளும். ஙஉ

அடியனேன்றண்டாதென்றுநின்னெதிர்மர்ந்துபோற்றக்
கடிகெழுகற்பத்தண்டார்க்கடவுளர்முனிவர்யார்க்கு
முடிவறுவரங்கணல்கிமுழுதருள்சுரந்துவாழி
கொடியவெஞ்சீற்றத்துப்பிற்கூற்றுயிர்ப்பருகுந்தாளோய். ஙஙு

அண்ணலேயென்றுவேண்டவவற்கவையருளியெங்கோன்
புண்ணியகோடிநாதவிலிங்கத்துட்புக்கானங்நாட்
கண்ணுதற்பரனைமாயன்சாருக்கொண்டுதாங்கும்
வண்மையாற்சக்கரனெனப்பெயர்பூண்டான்றே. ஙச

புண்ணியகோடீசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ருஙரு.

வலம்புரிவிநாயகப்படலம்

கலிவிருத்தம்.

நலம்புரிபுண்ணியகோடிநாதர்தம்
புலம்புரிபெருமையைப்புகன்றுளேமினி
நிலம்புரிதவத்தினீரத்திகீள்வரை
வலம்புரிவிநாயகன்மாட்சிசெப்புவாம். க

முன்னொநாளயனரிமுனிவர்வானவ
கின்னரரோரிடைக்கெழுமித்தங்களுட்
பன்னுதலுற்றனர்படிறர்செய்வினை
யங்ஙிலையுறின்றியழுங்கின்முற்றுமால். உ

அங்கவர்தமக்கிடையுற்றைபாக்கவு
மங்கருக்கூறுதீர்த்தினிதுநல்கவு
மிங்கொருகவுளைப்பெருதற்கெப்பிரா
பங்கயத்திருவடிபழிச்சிவேண்டுவாம். ௩

விச்சினமகலவிண்ணவர்வேண்டல்.

என்றுளந்துணிந்தனரெய்திமந்தரக்
குன்றமீதெம்பிரான்கேயிலுள்ளுறுச்
சென்றனர்தொழுதனர்செவ்விநோக்கிமுன
னின்றனர்மறைகளாற்றுதிநிகழ்த்தினர். ௪

அறுசீரக்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சற்றிதுதிருவுளஞ்செய்துகேட்டருளுதிதலைவனேவெங்
குற்றமேதுறுமனத்தானவக்கொடியவர்தொடங்குசெய்கை
முற்றுறுதூறுபட்டழியவுமெம்மனோர்முயன்றசெய்கை
யிற்றுறுதூறுதீர்ந்தாகவுங்கருணைசெய்யெனவிரந்தார். ௫

விநாயகர்திருவவதாரம்.

அம்மொழிசெவிமடுத்தருள்புரிந்தகிலமுமுய்யுமாற்று
லிம்முறைபுரிதுமென்றவர்க்கெலாம்விடையளித்தெழுந்துபோந்து
கொம்மைவெள்விடையினுன்சித்திரச்சாலையைக்குறுகியங்கட்
செம்மைசால்சித்திரம்யாவையுநோக்கினுன்றேவியோடும். ௬

வானகத்தச்சனுலகிலமுஞ்சித்திரித்தெழுதிவாய்ந்த
வூனமில்சாலையுளொழுதுமாமனுக்களோடுபமனுக்க
ளானவெல்லாமுமைக்கெம்பிரான்காட்டுபோதவற்றுளாதித்
தானமாரிருவகைப்பிரணவமனுச்சனைத்தையலகண்டாள். ௭

உவகையாற்பற்பல்காஞேர்கியிங்கிவையெவையுரைத்தியென்னச்
சிவபிரான்றேவியைத்தழீஇயினன்கூறுவான்செலவிகேட்டி
தவலில்விப்பிரணவமதுகாண்மூவரைத்தந்ததாகு
நவிலின்மற்றதுநினதாகுமுச்சத்தியைநல்குமூலம். ௮

மும்மறைமுதலெலாமீன்றிடுமிருமுதுகுரவரான
விம்மனுக்கரியொடும்பிடியெனத்தோன்றலினிவைகளாகி
யம்மநாம்புணர்துமென்றவ்வுருக்கொண்டனராடுகாலைச்
சும்மைநீருலகெலாமுய்யவந்துதித்தனன்றேமன்றலன்றே. ௯

கயமுகப்பிள்ளையையிருவருங்காதலாலெடுத்தணைத்து
வயமுறமடித்தலத்திருத்திமெய்க்கலன்பலவணிந்துவாழ்த்த
வியலபுண்டப்புதல்வனுமுவகையாலெழுந்தெதிர்நடித்தலைச்செய்தா
னயனமாக்களிகொளநோக்கினுளுலகெலாமீன்றநங்கை. ௧0

அங்கையாலெடுத்தின்றுடலகண்டகங்களிதுளும்பியையன்
பங்கயப்பதந்தாழ்திறைவநீபயந்தசேயிவனையின்னே
யெங்குளகணங்கட்கும்பல்கணநாதருமெவருமேத்தத்
துங்கமாமிறைமையீந்தருளெனவேண்டலுஞ்சூலபாணி. ௧௧

கடவுளர்முனிவராயனரிபலகணநாதரெல்லா
முடன்வரத்திருவுளஞ்செய்தழைத்தோதுவான்மடித்தலத்தின்
மிடலுடைச்சிறுவனையிருத்திமற்றிங்கவனெவற்பின்வந்த
மடமயிற்கினியவன்யாம்பெறுமூத்தமாமைந்தனோர்மின். ௧௨

இவனையிவ்வுலகெலாந்தொழுதெழுமிறைமையினிருத்துகின்றேங்
குவிமுடிசூட்டுவான்வேண்டுபகரணங்கொணர்மினென்றே
யவரவைகொணர்ந்தபின்மைந்தனைமடங்கலாதனத்தேற்றிச்
சிவபிரான்றிருவபிடேகநீராட்டினன்மகுடஞ்சேர்த்தான். ௧௩

அரசினுக்குரியநல்லணிகளானவுஞ்சாத்தியன்புகூரப்
பிரமனைமாயனைத்தேவரைமுனிவரைப்பார்த்திரங்கு
யுரனுடையுமக்கெலாநாயகனிவனிடையூறறுத்தருங்
கரவிலாநாயகனாநாம்வைத்தனங்கண்டுகொண்மின். ௧௪

தீயவத்தானவர்க்கூறிழைப்பானிவனென்றுசெப்பும்
தூயவன்வாய்மொழிதலைமிசைக்கொண்டனர்துதித்திறைஞ்சி
மாயவன்முதலியோர்கணேசனைவணங்கினர்கையுறைக
ளேயுமாறுகவினர்விடைகொடுத்ததமதிருக்கைசேர்ந்தார். ௧௫

விநாயகர்திருவிளையாடல்.

கலிவிருத்தம்.

பொருவருந்தடநெடும்புழைக்கையேந்தலு
மிருமுதுகுரவர்தாளிறைஞ்சிமேவுபா
லொருவருங்கணங்களோடுலவிமையங்களுந்
திருவிளையாடலிற்சிந்தைவைத்தனன். ௧௬

ஒளித்துநின்றுடன்பயிலுழைச்சிறார்மிசைத்
தெளித்தெழுபுழைக்கைநீர்த்திவலைதூஉயிது
துளித்ததுமுகிலெனச்சொல்லியுள்ளகங்
களிப்பவானகருமையைக்காட்டிவஞ்சித்தும். ௧௭

புழைக்கையின்மோந்துயிர்ப்பெறிந்துபூமியைக்
குழித்துமுன்னணிந்தனபழமைகூர்ந்தவவ்
வெருழித்தகல்பாதலத்துரகம்யாவையு
மிழுத்தெடுத்தணியெனப்புயத்தினேற்றியும். ௧௮

ஒன்பதுகோள்களுமுடுக்கணங்களுந்
துன்பறப்பிணித்தசைதுருவசூத்திரம்
வன்பனைக்கரத்தினுற்பறித்துமார்பிடை
யன்பமர்நவமணியாரமாக்கியும். ௧௯

என்னைநீர்கண்டெடாதிருப்பதென்னெனப்
பன்னகமெவற்றையுங்கனன்றுபற்றிவான்
மன்னிடவீசியங்குடைந்தவானதி
தன்னுடைத்தந்தைபோற்சடிலத்தேந்தியும். ௨0

கலிநிலைத்துறை.

இவ்வகைப்பலசிறுகுறும்பெங்கணுமியற்றிக்
கௌவைநீர்விளையாட்டினிற்காதலனொருநாட்
பௌவம்யாவையுமுழக்கினன்பாற்கடல்புகுந்தான்
கொவ்வைவாயுமைபயந்தருள்குஞ்சரக்குரிசில். ௨௧

புகுந்துவெள்ளநீர்முழுவதும்புழைக்கையின்மடுத்தான்
மிகுந்தபன்மணிநீருறையுயிர்கள்வெம்பணிக்கோன்
முகுந்தனுந்தியன்றிருந்தநான்முகப்பிரான்முகுந்தன்
சகுந்தமன்னவன்றிருவுமப்புழைக்கையுட்சார்ந்தார். ௨௨

வறுங்கடற்பரப்பகட்டினிலெஞ்சுசூர்ப்பங்க
ளுறுங்கரும்பெருஞ்சேற்றிடையொழிப்பனமுன்னு
ணுறுந்துழாயணியானையைநலிவுறப்பற்றிக்
குறும்படக்கியபிரான்வருதிறங்குறித்தனபோல். ௨௩

மாயமீன்விழிபறித்தவன்முன்வருமிளவல்
மேயவாறுகண்டனவெனத்துடிப்பனசிலமீன்
பாயபூம்புனலரசனம்பனுக்கிடுந்திறைபோற்
சேயபன்மணிவயின்றொறுமிமைப்பனசிலவே. ௨௪

ஐயன்வார்செவிக்காற்றினிலலைகண்மிக்கெறிந்து
வெய்யபேரொலிகாட்டுவெற்றவியன்கடல்கண்
ணையகன்றதங்கிளைவறங்கூர்ந்தமைகாணூஉக்
கையெறிந்தழுதிரங்கிவீழ்ந்தரற்றுவகடுக்கும். ௨௫

இன்னவாறுபாற்கடல்வறந்தழிவுறவிருங்கை
தன்னிலேற்றநீர்மீளவுந்தரைமிசைவிடுத்தா
னன்னநீருடன்வீழ்ந்தனரயனரிமுதலோர்
துன்னுநீர்படுதுரும்பெனத்திசைதொறுஞ்சிதறி ௨௬

பின்னரோரிடைத்திரண்டுடன்குழீஇயினர்பெரிது
மின்னலுற்றனர்தத்தமுட்பேசினரெளியோ
முன்னைநல்வினைப்பயத்தினாலின்றுமூதுலகந்
தன்னில்வந்தவாறுறுபிறப்பெனமதித்தனரால். ௨௭

விஷ்ணுபாஞ்சசன்னியமிழத்தல்.

மருட்சிதீர்ந்தபின்மாயவனிடக்கையின்வழுவு
முருட்சிகூர்ந்தவெண்சங்கினைக்காண்கிலனுயங்கி
வெருட்சிகொண்டனன்றேடினன்வியன்றிசைப்புறத்துத்
தெருட்சிகொண்டதுமொலிப்பதுகேட்டனன்செவியில். ௨௮

ஓசையாலதுபாஞ்சசன்னியமெனவுணர்ந்தவ்
வாசையிற்சிலர்தமைச்செலவிடுத்தனனவர்போய்
மாசிலங்கரப்பிரான்கணம்வாயிடைக்கொண்ட
வேசறுஞ்சுரிமுகத்தினைக்கண்டுமீண்டுரைத்தார். ௨௯

விஷ்ணுதிருக்கயிலையடைதல்.

சொன்னவாசகங்கேட்டுளந்துளங்கிமற்றினிநா
னென்னைசெய்வலென்றுசாவினன்கணங்களோடெழுந்து
பன்னகப்பகையரசுமேல்கொண்டனன்படர்ந்தான்
கன்னிபாகன்வீற்றிருந்தருள்வெள்ளியங்கயிலை. ௩௰

அங்குநந்திதன்னருளினுற்றடைகடந்தணுகி
யெங்கணாயகன்றிருமுன்புவீழ்ந்துதாழ்ந்தெழுந்து
பங்கயக்கரங்குவித்துநின்றிமவரையயந்த
நங்கையோடுற்றசெவ்விகண்டின்னதுநவில்வான். ௩௧

அண்ணலேயுனதாணையினடியனேன்கடலுட்
கண்வளர்ந்தனனுயிர்களையாடல்செய்கணேசப்
பண்ணவன்கவர்ந்தனனலாதுமென்னையும்பணைக்கை
யுண்மடுத்தனன்விடுத்தனன்மீளவுமுலகில். ௩௨

மறுகுசூழ்மணிமன்றுளாய்நின்னருள்வலியால்
மறுபிறப்பெனவுய்ந்துநின்பால்வரப்பெற்றேன்
மறுகுமப்பொழுதென்னையில்வழிஇனசங்கை
மறுவிலங்கடப்பிரான்கணநாதன்றன்வலியதால். ௩௩

ஐயனேயதுவடியனேன்கரத்தெய்தவருளிச்
செய்யவேண்டுமென்றிரந்திரந்திறைஞ்சலுஞ்சிறுமான்
கையனெம்பிரான்கவுரிபாற்கடைக்கண்செலுத்தி
மையாமுண்டவகேளெனப்பராய்மலர்ந்தருள்வான். ௩௪

விஷ்ணுகாஞ்சியையடைந்துபூசித்தல்.

வலம்புரிந்தபேராணையையோயாமிதுவலமேலம்
வலம்புரிச்சங்குபெறககாஞ்சியிலவைகி
வலம்புரிக்கணபதியைநின்னைதிமால்வரைபோல
வலம்புரிந்துதாபித்தருச்சனைபுரிமரபால். ௩௫

அன்னவன்றிருவருளினுற்பெறுகெனுமருளைச்
சென்னிமேல்கொண்டுவிடைகொண்டுமீண்டுகாஞ்சியினிற்
கொன்னுமேற்றிசைவாயிலார்குகையுடையந்திக்
கன்னகந்தனிலவலம்புரிக்கணேசனையிருத்தி. ௩௬

தருக்குநீங்கியாவாகனம்பாத்தியாசமன
மருக்கியம்புனலாட்டுடைபூணுநூல்கந்த
வருக்கந்தூபதீபம்பலபண்ணியவருக்கங்
குருக்கொள்சுண்ணமார்பாகடைகுளிர்புனல்பிறவும். ௩௭

ஓங்குதந்திகாயத்திரிமனுவினுலுதவி
வீங்குகாதலால்வலஞ்செய்துபுவியிடைவீழ்ந்தா
னுங்குநின்றுகைகொட்டினனுடின்னமூதான்
றங்குதீர்மறைமொழிகளாற்றுதிபலசெய்தான். ௩௮

விஷ்ணுவிநாயகரைத்துதித்தல்.

கொச்சகக்கலிப்பா.

ஐயாமறைமுடிவுந்தேராதவானந்த
மெய்யாபிரணவத்தினுட்பொருளேவேழமுகக்
கையாய்வெளியாய்கரியானேபொன்மையாய்
செய்யாய்பசியாய்பெருங்கருணைத்தெய்வமே. ௩௯

நல்லோர்க்கும்வானோர்க்குநண்ணுமிடையூற்றுக்
கில்லாமைநல்கவவதரித்தவெம்மானே
வல்லார்முலையுமையாளீன்றமழகளிறே
பொல்லார்க்குந்தானவர்க்குமூறிழைக்கும்புத்தேளோ. ௪0

சூரனுயிருண்டுசேர்ருல்கங்காத்தளித்த
வீரனுக்குமுன்பிறந்தவித்தகாமுப்புரமுஞ்
சேரவுருத்ததிருவாளனீன்றெடுத்த
வாரணமேயெந்தாய்வலம்புரிக்குஞ்சரமே. ௪௧

பண்ணியமும்வெண்கோடும்பாசாங்குசப்படையு
நண்ணியசெங்கைத்தலத்துநாதாவொருகோட்டுத்
தண்ணியவெண்பிறைத்தாழ்சடையாய்மெய்யடியா
ரெண்ணியவெண்ணியாங்கீந்தருளும்வள்ளலே. ௪௨

வழிபடுவோர்க்கெய்ப்பிடத்தின்வைப்பேயுமையாள்
விழிகளிப்பமுந்நீர்விளையாடுங்காலை
பொழிமதக்கையூடுபுகுந்துவரப்பெற்றே
னிழிவகன்றுமெய்த்தூய்மையெய்தினேன்யானே. ௪௩

அங்கப்பொழுதினடியேன்கரத்தகன்ற
துங்கப்பணிலமுனைச்சூழுங்கணநாதன்
செங்கைத்தலத்துளதாற்செல்வாவெனக்கதனை
யிங்கிப்பொழுதேயளித்தருளாயென்றிரப்ப. ௪௪

விஷ்ணுபாஞ்சசன்னியம்பெறுதல்.

வேண்டுந்திருநெடுமாற்கெங்கோன்வெளிநின்று
காண்டகையபூதகணங்கரத்துக்கொண்டிருந்த
மாண்டபுகழ்ச்சங்கமளித்தருளியாயோனே
யீண்டுநினக்கின்னும்வேண்டுவதென்னென்றருள. ௪௫

முன்னையபுண்ணியகோடீசர்திருமுன்பென்
றன்னோடிவ்வத்தித்தடங்கிரியில்வீற்றிருந்திங்
கென்னாளுமெல்லார்க்குமெவ்வரமுமீந்தருளாய்
மன்னுவென்றேத்தமகிழ்ந்தங்கண்வைகினனால். ௪௬

ஒன்னலரைவாட்டுமுலவைப்படைத்தேவும்
பன்னகப்பூம்பாயற்றிகிரிப்படைக்கோவு
மன்னநடைக்குன்றமால்வரையினருயிர்கட்
கென்னவரமுமளித்தென்றுமேவுவார். ௪௭

மற்றிதனைக்கற்றோருங்கேட்டோருமாசிலர்க்குச்
சொற்றவருமூறுதவிர்ந்தென்றுந்தொல்லுலகிற்
பெற்றமகவாதிப்பெருஞ்செல்வத்தோடினைந்து
பற்றறுத்துமேலைப்பரபோகமேவுவரால். ௪௮

வலம்புரிவிநாயகப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௫௪௩.

சிவாத்தானப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

அலம்புநீர்வாவிசூழத்திமாமலைமிசை
வலம்புரிவிநாயகன்வரவிதுபோதினா
லலம்புரிபூசைசெய்நவில்சிவாத்தானமாம்
புலம்புரிபெருமையைப்புகலுதுங்கேண்மினோ. ௧

ஆதிநாட்சிவனிடத்துதித்தவனருளினாற்
பேதியாதுலகெலாம்படைத்திடப்பெற்றுள
சீதநாண்மலர்மிசைத்திசைமுகன்றன்னையான்
மூதுலகோடுமுண்டாக்கினன்முறைமையால். ௨

நாரணனைப்படைக்கநான்முகன்வேண்டல்.

அதுமனத்தெண்ணினானைப்பக்கறுத்திளநிலா
விதுமுடிப்பிரான்றிருக்கயிலையின்போயினான்
பொதுவறத்தொழுதனன்போற்றிநின்றுரைசெய்வான்
மதுமலர்ப்பொகுட்டணிமாளிகைப்பண்ணவன். ௩

பெருமநின்னிடப்புறத்தரிதனைப்பெற்றனை
யருளொடும்வலப்புறத்தென்னையீன்றளித்தனை
யுருவவைகுந்தமுஞ்சத்தியவுலகமு
மிருவரும்பெற்றுளோமெந்தைநின்னருளினால். ௪

படைப்பதுங்காப்பதும்பணியெமக்காக்கினை
தொடைப்பொலங்கொன்றையந்துணர்துறுஞ்சடைமுடி
விடைக்கொடிப்பகவனேவிருப்பொடுவெறுப்பினை
யுடைத்தநின்னருட்கிருவேங்களுமொத்துளோம். ௫

பத்திசெய்துன்னருள்பெற்றுவெம்பாம்பணை
யுத்தமனென்னையிவ்வுலகொடுமீன்றன
னத்திறத்தியானுமம்மாயனோடிலமுஞ்
சித்தனேபடைக்குமாதிருவுளஞ்செய்குவாய். ௬

பிரமன்காஞ்சியையடைந்துபூசித்தல்.

என்றசொற்செவிமடுத்தெம்பிரானுரைசெய்வா
னொன்றுகேண்மைந்தனேயுனக்கிதுவேண்டுமேற்
சென்றுகாஞ்சியினெமைப்பூசைசெய்திருத்தியா
னன்றவங்கெய்திநீவேட்டவாவழங்குதும். ௭

ஐயுறேலென்றலுமம்புயன்றாழ்ந்தெழுந்
தொய்யெனக்கச்சியிற்போந்துமைகோன்வளர்
கொய்பொழிற்புண்ணியகோடியின்குணதிசை
யெய்துதன்பெயரினாலிலிங்கமொன்றிருத்தினான். ௮

போக்கரும்பிரமதீர்த்தப்பெயர்ப்பொய்கையொன்
றாக்கினானங்குநீராடிநல்வினைமுடித்
தூக்கமாரன்பினான்மலரெடுத்துடையவன்
பூக்கமழ்சேவடிப்பூசனைசெய்தபின். ௯

பிரமன்சோமயாகந்தோடங்கல்.

தீயவிர்குடங்கையான்றிருவுளங்களிவரக்
காயழற்சோமயாகஞ்செயக்கருதினு
ளுயவக்கருத்துணர்ந்தண்டருமுனிவரு
மேயினராயிடைவிண்ணவர்கோனெடும். க0

மங்கருந்திறன்மொழிக்கிழத்திவாணுட்டவர்
தங்களினீங்கினீர்தன்னகத்துற்றனள்
பங்கயன்வேள்வியைப்பற்றுமக்காலையிற்
றங்கமார்தருக்களிற்றெருக்கனெளன்பவே. கக

எழில்வளர்நாமகளென்றுமிவ்வுலகிடை
முழவினில்வீணையின்முழங்குதீங்குரல்படுங்
குழலினிலிசையெனக்குலவுகின்றுளெனட்
பழமறைமுழுவதும்பன்னுமிவ்வுகையமே. கஉ

ஆதலிற்காண்கிலானயனுஞ்சாவித்திரி
வேதகாயத்திரியென்னுமின்னருட
னோதமிரீக்கையுற்றிருமகச்சாலையுட்
போதலுங்கலைமகள்கேட்டுளம்புழுங்கினுள். கங

நாவின்கிழத்திநதியுருவாதல்.

திருமகச்சாலையைப்பாழ்படச்செய்வலென்
றிருவிசும்பூழிநாளிடித்தெனக்கொதித்தெழுந்
தொருநதிவடிவுகொண்டுருகெழுத்தோன்றினுள்
கருநிலையுயிரெலாமீன்றருள்காரணி. கச

கலிநிலைத்துறை.

மலர்மிசைவருதிசைமுகனுயர்மகவினைபுரியிடமே
யலவவனுறையுலகமுழுடனழிவுசெய்திடவெழல்போற்
பலகுமிழிகளலைதிரைநுரைபயில்வுறவகல்ககனத்
தலமிசைநிமிர்விசையொடுவருதகையதுகுலநதியே. கரு

வரியளியினமுளர்நறைமதுமலரவன்மகவினையைப்
புரிவுறவிடமுதவியதொருபுவியிதுவெனவெகுளா
விரிபணமணிவிடவரவினுறவெருவரவுடனொளிய
வரில்றுகடனிலமுழுவதுமகழ்வதுகுலநதியே. கசு

விரவியமறைவிதியுளிமகவினைபுரியுபகரணத்
திரவியமுழுதுதவினவிவையெனவெழுசினமதனுற்
பரவியபுனனிறைகழனிகள்பலகயநிரைபொழிலி
னுரவியல்வளமுழுதழிவுசெய்துறுவதுகுலநதியே. கஎ

ஒடிவறுமகமதுதனிலவியுணவருமிருகடரை
யிடைவழியினிலெதிருறுதலுமெழுவெகுளியினெடுகைப்
பிடியெனவுடன்விரைவொடுகொடுபெயர்வதுபொரவிருகேழ்க்
கடிகெழுமரைமலர்பலகொடுகடுகிடுவதுநதியே. கஅ

அயனிடையுறும்வெகுளியினணைபொழுதிணைவிழியவைசேர்ந்
தியல்வதுபொரவெரிமருள்குவளைகளிடையிடையொளிர
வெயரெனவுரைசிதறிடமுலைமிசையணிதுகில்குழறித்
துயல்வரல்பொரவரையொடுதிரைதொகவருவதுநதியே. கக

அவியுணநிரைசுரர்பலரையுமலைசெயவெழுசெயல்போற்
கவிழ்தலையனகுவடுகளொடுவெதிர்களினொடுகெடுகிப்
புவிமுதலறவருபிரளயநிலையுணர்புரையவருஞ்
செவியொடுவிழிவெருவரவருதிறலதுகுலநதியே. ௨௦

அள்ளவிநிரைகளமுழுவதுமழிவுசெய்தபிணைதனி
னுள்ளுறநடவெனமிகுசினமொடுகெறகறவழிபாற்
கள்ளிகள்பலபலகொடுவிடுகணைநுதிநிகரயில்வாய்
முள்ளுடைமுதல்பலபலகொடுமுடுகுவதுயர்நதியே ௨௧

மேற்படுகலைமகணதியெனவேற்றுருவுறுசால்பிற்
கேற்புறவவயமவைகளுமேத்தெழிலுருமாறித்
தோற்றியவெனவறன்மிசைவருதாத்திரன்மணிமலர்கள்
போற்றுறுபலகொடியுடனெழில்பூத்தனைவதுநதியே. ௨௨

வருநெறியெதிருறுபுரிசைகண்மாளிகைநிரையகழூற்
றுருமிடியெனவதிர்தருமொலியொடொருநதிவடிவாய்ப்
பருவால்செய்யவிம்முறைவருபாரதிசெயலதனை
முருகலரளியெனவிசைபயினாரதமுனிகண்டான். ௨௩

நாரதமுனிவர்நதிவரவுகூறல்.

வேறு.

கண்டுசெய்யசடைகட்டவிழவோடிமுனிவன்
புண்டரீகனைவணங்கியெதிர்நின்றுபுகல்வா
னண்டர்நாயகநின்வேள்வியையழிக்கமுனிவு
கொண்டுவாணிநதியாய்க்குறுகுகின்றனளரோ. ௨௪

கடிதுநீதடையியற்றுதியெனக்கழறலும்
படியினான்முகனுளத்திலுமைபங்கரிருசே
வடியிருத்தினனறிந்தனரனைத்துமிறைவர்
நெடியமாயனைவிளித்திதுநிகழ்த்தலுறுவார். ௨௫

வேள்விநீவரதராசவுயர்வேள்வியிறைநாம்
வாழியம்மகமழிப்பநதிவாணிவரலாம்
காழறக்கடிதுகாத்திடுதியென்றுகருதார்
பாழிமும்மதிலழித்தவர்பணித்தருளலும். ௨௬

நாரணன்நதியைத்தடுத்தல்.

உந்துவேள்வியினைகாப்பமனமூக்கியெதிர்சென்
றைந்தியோசனையினாகலைவிரித்ததன்மிசை
மைந்துநீலமலைபோல்வழிமறுத்துமலரோன்
றந்தைகண்வளர்தல்கண்டனள்கலைத்தலைவியே. ௨௭

கண்டுசேயிடையகன்றுநெறிகண்டுவடபான்
மண்டியேகவதுநோக்கியரிபாதிவழியின்
மிண்டிநாப்பண்விழிதுஞ்சமலர்வாணிவிலகிக்
கொண்டவேகமொடுதென்றிசையுறக்குறுகினாள். ௨௮

பின்னுமங்கவன்விடாதுபிணைகச்சிநகராந்
தன்னிடைக்குலையெனக்கிடைகொளத்தவளமான்
முன்னர்நோக்கிமுடிசாய்த்துநனிநாணமுதிர
வன்னதென்றிசையினீளிடையகன்றுவிலகி. ௨௯

வேள்விசெய்களமதன்குணதிசைக்கண்விரவி
யாழியிற்செலநடந்தனளயன்றன்மனைவி
தாழ்வுதீர்ந்தயனுகந்தனன்மகிழ்ந்துதலைவன்
சூழ்கணங்களொடுமாயனெதிர்தோன்றியருள்வான். ௯0

நதியுருவுநற்பெயர்பெறுதல்.

வேறு.

சொன்னவண்ணஞ்செய்தநீசொன்னவண்ணஞ்செய்தவ
னென்னவென்றுமோங்குதியித்திருப்பெருநதி
மன்னுவல்வினையெலாம்வாட்டுவேகவதியென
விந்நிலத்தினிற்சிறந்தின்பவாழ்வளிக்கவே. ௯௧

இரவிருட்கணிந்நதியிப்பதிக்கணெய்திடும்
வரவுகாணநீயொருவாள்விளக்கொளிழியென
விரவினாய்விளக்கொளிவிண்டுவென்னமேவுகென்
றருளியெந்தையிம்முறைவேள்விகாத்தளித்தபின். ௯௨

நன்னராற்றுநீரெனநண்ணினுடருக்களின்
மன்னிநிற்பநோக்கிவன்றுருவிற்செய்தண்டினே
டின்னவாணிதன்னையேற்றேய்ந்ததீக்கையுற்றனன்
றன்னுசீர்கலையினுற்சோமமேற்றபின்னரோ. ௯௩

இன்னவட்பகுத்திநீயிருத்துவிக்கெனப்படு
மன்னவர்க்கெனக்கிளந்தம்புயத்தனக்கதை
நன்மயித்திராவருணன்கரத்தளிப்பவம்
மின்னைவாங்கிமிட்டவர்வேதன்மாட்டிருத்தினர். ௯௪

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மீண்டுதிசைமுகன்றன்பான்மேவியவாணிமகிழ்ந்தாங்
கீண்டியதன்னுருக்கொண்டேயெச்சத்துணைவியுமாகிக்
காண்டகுபாங்கரிருப்பக்காதலன்வேள்விமுடித்தா
ஞண்டைவிதிமுறைத்தெண்ணீராடினன்வல்வினைவென்றான். ௯௫

கண்ணுதற்பெருமான்காட்சிகொடுத்தல்.

அங்கணிலிங்கத்தின்முன்னரணைந்துமனைவியர்மூவர்,
துங்கவசிட்டன்முதலோர்சுராசுரர்சூழ்ந்துதுதிப்பத்
தங்குமவைக்கணிருந்துசம்புவையுள்ளத்திருத்திப்
பொங்கியவன்பிற்றியானம்புரிந்துவழிபடும்போது. ௯௬

வானவியங்கள்கலிப்புமலர்மழையண்டர்சொரிய
வூனமில்சாமரையேந்தியுருத்திரமாதரிரட்டப்
பான்மையினற்கந்தருவர்பாடிவிருத்தெடுத்தோத
ஞானசனந்தர்முதலோர்நண்ணியிருபுடையேத்த. ௯௭

எண்டிசையாளர்முடிகளிணையடிதாங்கிநடப்ப
வண்டுளர்கோதையுமையைமடித்தலமீதுறக்கொண்டு
பண்டைமழவிடையேறிப்பண்ணவர்தம்பெருமானும்
விண்டலமேர்கொளவெய்திவிழைதகுகாட்சியளித்தான். ௯௮

கண்டுவிரிஞ்சனெழுந்துகரையறுகாதல்கைமிக்குக்
கொண்டபுளகங்கண்மல்கக்குவித்தகைசென்னியிலேற
விண்டமொழிகள்குழறவின்பவெள்ளத்திடையாடி
மண்டனில்வீழ்ந்துவணங்கிமறைமொழிகொண்டுதுதிப்பான். ௩௯

பிரமன்துதித்தல்.

வேறு.

அடியவரிழைத்தகுற்றமனந்தமும்பொறுப்பாய்போற்றி
கொடியவர்தம்மைச்செய்யுங்குற்றங்கண்டொறுப்பாய்போற்றி
யொடிவறுவனைக்கமுற்றுங்கைக்கொளுமுடையாய்போற்றி
முடிவிலாமொழிகட்கெல்லாம்வாச்சியமுதலேபோற்றி. ௪0

சீதநீருலகம்போற்றுந்தேவர்க்குந்தேவேபோற்றி
கோதறவுண்மைகாட்டுங்குரவர்க்குங்குருவேபோற்றி
பூதநாயகனேபோற்றிபுரீசர்க்குமீசாபோற்றி
பாதியிலுமையைவைத்தபசுபதிபோற்றிபோற்றி. ௪௧

ஒருமுறைபத்துநூறாயிரமுறையுனதாள்போற்றி
மருவருமபொருளேபோற்றிமறுவலும்போற்றிபோற்றி
யிருணிறமிடற்றாய்போற்றியென்றுநாத்தழும்பவேத்தித்
திருமலர்க்கடவுள்போற்றச்சிவபிரானருளிச்செய்யும். ௪௨

சிவபெருமான்வரங்கொடுத்தருளல்.

உவந்தனமறையோயுன்றன்பத்தியினுறுதிநோக்கிச்
சிவந்தருமெம்பானீமுன்வேட்டவாதிருமாலோடும்
பவந்தருமுலகமெல்லாம்படைத்தியாமலன்றுநல்கத்
தவந்திகழ்வேதன்மற்றுமிதுவொன்றுதாழ்ந்துவேண்டும். ௪௩

என்றனுத்தானமாகயானுறையிருக்கைதன்னை
யுன்றனுத்தானமாகக்கோடலாலும்பரேறே
நன்றுமித்தானமென்றும்வில்சிவாத்தானப்பேரா
னின்றிடவிங்குநாளுநீயினிதுறைதல்வேண்டும். ௪௪

நின்னருட்குரியேனாகிநின்பணிதலைநின்றானு
வுன்னடியிணைக்கீழ்ப்பத்தியுலப்புறாதடியேனென்று
நன்னெறியொழுகச்செய்யாய்நவில்சிவாத்தானத்தெய்தி
யென்னரேயெனினுநின்னையேத்திநின்றுய்யக்கோடி. ௪௫

உவாமுதற்சிறந்தநாளினுடைதிரைப்பிரமதீர்த்தத்
தவாவுடனாடிச்செய்யுங்கடன்முடித்தடிகேளுன்னைத்
தவாதசீர்ச்சிவாத்தானத்துவழிபடுந்தகையோர்செல்வக்
குவாலொடுமினிதுவாழ்ந்துமுத்தியிற்கூடச்செய்யாய். ௪௬

என்றிரந்தேத்தவெல்லாமருள்புரிந்திலிங்கத்தெங்கோ
னொன்றினனயனுமாலையுலகொடும்விழுங்கிமீளத்
தொன்றுபோன்முறையானல்கித்துகளறுசிவாத்தானத்தின்
மன்றவனருளான்முன்னர்வைகினனுவகைகூர்ந்து. ௪௭

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முந்துறமனத்தைத்தோற்றினனதன்பான்முழங்குகாயத்திரியதனிற்
சந்தைகளவற்றிற்சாமமச்சாமந்தன்னிடைமயசுர்க்ளாங்கவற்றின்
மைந்துடைநெடுமாலவனிடைப்பைங்கூழ்பயிர்களின்மதியமம்மதியி
னுந்துறும்பசுக்கள்பசுக்களின்மகவானுவனிடையுலகெலாந்தந்தான்.

இம்முறையொருவரொருவரைப்படைத்துச்செருக்குமற்றிவர்களைப்பரமென்
றும்மைவல்வினையான்மருளுநர்மருள்கவுண்மைநூலுணர்ந்தருள்கூடுஞ்
செம்மையோரெல்லாம்விடமிடற்றடக்கித்தேவரைப்புரந்துயர்குணங்கண்
மும்மையுங்கடந்தமுதல்வனேயெவர்க்குமூலகாரணனெனத்தெளிவார்.

சிவாத்தானப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௱௨.

மணிகண்டேச்சரப்படலம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஞிமிறுகாலுழக்கமுகையுடைந்தலர்ந்துநெட்டிதழ்வாய்தொறுநறவ
மூழ்மலர்த்தடஞ்சூழ்திருச்சிவாத்தானத்துண்மையைத்தெரிந்தவாறுரைத்தா
மமிழ்தமுங்கைப்பக்குழாங்குழாமாகியறிஞர்தாங்கழகங்கடோறுந்
தமிழ்தெரிகாஞ்சிவரைப்பினின்மணிகண்டேச்சரத்தலத்தியல்புரைப்பாம்.

தேவருமசுரருந்திசைமுகனைவேண்டல்.

பாட்டளியுளருங்கற்பகநறுந்தார்ப்பனிமுடிக்கடவுளர்தாமும்
வாட்டிறல்படைத்தவசுரருமுன்னாள்வல்வினையிறப்பினுக்கஞ்சி
வேட்டனர்சாவாமருந்தினைப்பெறுவான்வெறிநறுக்கொப்புளித்தலர்ந்த
தோட்டணிக்கமலக்கிழவனையெய்தித்துணையடிபழிச்சிநின்றுரைப்பார்.

முக்குணப்பகுப்பின்மூவருங்கொண்டுமுத்தொழிலியற்றியோயெங்குந்
தொக்கநின்விழிப்பினிமைப்பினிலெமக்குத்தோற்றமுமொடுக்கமுமாமா
லொக்கநாமிறப்புக்கஞ்சிவந்தடைந்தேமுலப்புறுதிருந்துபோர்புரியத்
தக்கதோருபாயந்தெரித்தெமக்குரையாய்தலைவனேயென்பதுகேட்டு.

மடநடைக்கலைமானிளமுலைதிளைக்குமார்பினுமவரொடுமெழுந்து
நடலைதீர்காட்சிவைகுந்தவரைப்பினண்ணுபுவிழியுறக்கண்டான்
படவராவணையின்முனிவரர்பழிச்சமலர்மகள்பதாம்புயம்வருட
வடர்சிறைக்கலுழன்முதலியோர்சூழவறிதுயிலமர்ந்தநாயகனை. ௪

திசைமுகன்முதலோர்திருமாலுக்குரைத்தல்.

கண்டுநாத்தழும்பத்தனித்தனிதுதித்துக்கண்டுயிலெழுப்பிமுன்வணங்கி
முண்டகன்முதலாஞ்சுராசுரர்குழுமிமொழிவராலிறப்பினுக்கஞ்சி
யொண்டளிர்ச்சரணஞ்சரணமென்றடைந்தேமுலப்பினைக்கடக்குமாறெமக்குத்
தண்டுழாயலங்கற்கருணையங்கடலேசாற்றெனநாரணனெழுந்து. ௫

நெடிதுபோதெண்ணிச்செய்வகைதுணிந்துநீயிர்மற்றஞ்சலிரினிநா
முடிவுறுதிருப்பக்கடல்கடைந்தெடுத்துமுனிவறப்பருகுவாமமிழ்தங்
கடிபடுமமிழ்தம்பருகினிறப்பைக்கடக்கலாமென்றலுங்களிகூர்ந்
தடியிணைவணங்கிக்கடையுமாறெவ்வாறளக்கரையெனவினாயினரால். ௬

இந்திரைகொழுநனுளத்திடையெண்ணியெறிபுனலருவியஞ்சாரன்
மந்தரப்பறம்புமத்தெனநாட்டிவாசுகிகயிறெனப்பூட்டிச் [ப
சுந்தரத்திருப்பாற்கடலினைக்கடைந்துசுவையமிழ்தெடுத்துமென்றுரைப்
வந்தநாளவர்தாம்பெற்றபேருவகையாரெடுத்தியம்பவல்லவரே. ௭

திருப்பாற்கடல்கடைதல்.

கரைபொருதிரங்கும்வெண்டிரைத்திருப்பாற்கடலிடையாவருமெய்தி
நிரைமணிக்குவட்டுமந்தரநிறுவிநெளியுடல்வாசுகிசுற்றி
வரைபடுதிரடோளசுரருஞ்சுரரும்வலிப்புழியவர்தமைநோக்கி
விரைகருத்துளிக்கும்பசுந்துழாயலங்கல்விண்ணவனொன்றுபேசுவனால்.

இருதிறத்தவருள்வான்சுவையமிழ்தமெறுழினாற்கடைந்தெடுத்தவரே
பருகிடத்தகுமாலேனையோரெய்தற்பாலதன்றென்பதுகேட்டுப்
பொருதிறலசுரர்மகிழ்ந்தெழுந்தார்த்துப்பொறியராவிருபுடைபற்றித்
தருவலிமிகையாலீர்த்தனரசலந்தன்பெயர்நாட்டியதன்றே. ௯

இயக்கலாற்றாமையிளைத்ததானவரையெதிருறுங்கடவுளர்நோக்கி
வியத்தகவெழுந்துநீரினிவிடுமின்விடுமினென்றெய்திவாசுகியை
வயத்துடன்பற்றியீர்த்தனரவரும்வலியிழந்தெய்த்தனர்நின்றார்
செயத்தகுந்திறமேதினியெனயாருஞ்சிந்தையிற்கவலைகூர்பொழுது ௧௦

வலனுயிர்செகுத்தவாளவனுயிர்த்தவாலியாங்குரக்கினத்தலைவன்
பலகடலிடத்துஞ்சென்றுபாண்டரங்கன்பதாம்புயமருச்சனைபுரிவான்
புலனுயர்சிறப்பினாயிடையியல்பாற்போதலுமாலயன்முதலோர்
நலமுறநோக்கியுவகைமீதூரநல்வரவேற்றுநின்றனரால். ௧௧

வந்தவனயனைமாயனைவணங்கிவானவர்க்கஞ்சலியளித்துச்
சிந்தனையொருக்கிநீரிவண்முயலுஞ்செயலிதுவென்னெனவினவக்
கந்தமாமலரோனுள்ளவாறுரைத்துக்கருதருந்தெய்வமிங்குன்னைத்
தந்ததாலெமக்குத்துணைசெய்யத்தகுமெனவிறுத்தனனவனும். ௧௨

பெருவலிபடைத்தசுராசுரர்குழுமிப்பெறலருந்திறத்தினிலெளியே
னொருவனேவல்லேன்யாமெலாமொருங்குற்றுததியைக்கடையுமத்தெய்வந்
தருவதுகாண்டுமெனநகைத்தியம்பித்தானவர்கடவுளரெல்லாம்
வருமெனவிளித்துவாலிமாசுணத்தின்வாற்புறம்பற்றிநின்றார்த்தான். ௧௩

பருங்கொலைப்படத்தையசுரருஞ்சுரரும்பற்றினர்தனித்தனியீர்த்து
மொருங்குநின்றீர்த்துமாற்றலாதுடைந்துதம்புடையொதுங்குதல்காணூஉக்
கருங்கழல்வாலிவிடுமினீரென்னாக்கட்செவிவாலுறும்பணமு
மிருங்கையிற்பற்றிமுறுகுறவாங்கியீர்த்தனன்கடைந்தனன்புணரி. ௧௪

ஒருகரமுடக்கியொருகரநீட்டியுவவுநீர்மதுகையிற்கடைபோ
தருவரைக்குமிமந்தரங்கடலுளாழ்தலுங்கச்சபவடிவாய்த்
திருமறுமார்பன்றாங்கவச்சயிலந்தெண்கடன்மீச்செலமிதப்பக்
கருமுகில்வண்ணன்கரமிசைநீட்டிக்கனங்கொளவிருத்தினன்வரையே.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருத்தியபின்னரியேறுமிட்டம்வலமாகவரையைத்
திரித்துக்கடுகச்சுழற்றித்தெண்டிரைவேலையலறிச்
சுரித்துவிரித்துப்பரந்துதுள்ளிக்கொதித்தெழுந்தாட
வருத்திக்கலக்கிமறுகவலித்துக்கடைந்திடுகாலை. ௧௬

ஆலாலந்தோன்றியது.

ஆற்றரிதாகியிளைப்புற்றரவிறைவாயினுரைகள்
காற்றியுயிர்ப்புவிடலுங்கடுஞ்சுடுநீர்க்கடலெங்குந்
தோற்றுநுரைகள்பரம்பித்தொக்ககலப்பிடைநின்றுங்
கூற்றுறழாலாலமென்னுங்கொடுவிடந்தோன்றியதன்றே. ௧௭

அளக்கர்முழுதும்வறப்பவண்டகடாகமழற்றத்
துளக்கிலுயிர்த்தொகைமுற்றுஞ்சுட்டெழும்வல்விடத்தீயின்
கிளக்கருவெம்மைகதுவிக்கேழுடல்வாடிவெதும்பி
விளக்கமுறும்புகழ்வாலிவெரீஇயினனோட்டமெடுத்தான். ௧௮

வருகனல்வல்விடந்தாக்கிமாயவன்வெண்ணிறமேனி
கருகினனன்றுதொடங்கிக்கரியனெனப்பெயர்பெற்றான்
றிருமலர்மாதுடற்பொன்மைதீர்ந்துபுகைநிறமுற்றாள்
வெருவுதிசைக்கிறையோரும்வேற்றுருவெய்தியழுதார். ௧௯

தேவர்கள்திருக்கயிலையையடைதல்.

யாரும்பதைபதைத்தோட்டமெடுத்தினிச்செய்வதென்னென்று
சார்புபிறிதொன்றுங்காணார்தாளொடுதாள்களிடற
நாரணனேமுதலானோர்நண்ணினர்க்கின்பமளிக்குஞ்
சீர்கெழுவெள்ளிக்கயிலைத்திருமலைநோக்கிநடந்தார். ௨0

வெங்கதிர்தாக்கவுடைந்தோர்பொன்னிழல்சேர்ந்தெனச்சென்று
மங்கலவெற்பினையெய்திவஞ்சவிடத்துயர்நீங்கி
யங்கண்வரையைவணங்கியருளொடுமேறியிளங்கா
றங்கியபோகபுரமுன்சற்றிளைப்பாறியிருந்தார். ௨௧

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

படைத்தபெருந்துயர்நீங்கிநாற்றிசையுங்கண்விடுத்துப்பார்ப்பாரங்கண்
விடைக்கொடியோன்றிருக்கயிலைவரிசுடர்வெண்கதிர்நீட்டும்விளக்கந்தன்பா
லடைக்கலமென்றுறுந்தம்மைதமதாடந்துவருங்கொடுவிடமங்கலாவுருமைப்
புடைத்துந்தித்தள்ளுவானீட்டுதடங்கைகளெனப்பொலிவுகண்டார். ௨௨

கடலகடுகிழித்தெழுந்தவிடவேகமாற்றாதுகழியநொந்தா
ரிடர்பெரியரளித்தக்காரந்தோவென்றிரங்கினபோலிலகும்வெள்ளித்
தடவரைமேற்றூங்கருவிபனித்திவலைநீர்தங்கண்முகத்துவீசப்
படருநறுந்தடங்கொடிகளசாந்தாற்றுதமதாபூல்செய்யும்பான்மைகண்டார். ௨௩

அச்சமுறவருவிடத்தையாமடுத்துப்பருகுவலென்றாற்றல்சாலப்
பச்சைவரையுயர்கயிலைப்பறம்புவாயங்காந்துபரிசேபோலச்
செச்சைமணிகிடந்திமைக்குமுழைகடோறும்வெண்ணீறுதிகழப்பூத்த
பொச்சமிலாமுனிவர்குழாநிரைநிரையாவீற்றிருக்குமபொலிவுகண்டார்.

அழுந்தாழிப்புனலகத்துவடவையுமக்கடுவெம்மைக்காற்றாதங்க
ணெழுந்தோடிமுன்னாகத்திருக்கயிலைப்பருப்பதத்திலெய்திமுன்னர்
விழுந்தாறுதன்னில்வரங்கிடப்பதெனவயங்குமொளிமேவுசெக்கர்ச்
செழுந்தாமமணிபடுத்தநெறிநோக்கிநெறிமேற்சேறலுற்றார். ௨௫

இந்திரனார்பட்டதுயர்க்குளமிரங்கியவருருமெழிலிசேர
வந்தணுகியெந்தைபிரானெதிர்நின்றுமுறையிட்டான்மான்முன்னர்
முந்துகுடமுழமுதலாம்பேரியங்கள்பலமுழங்குமுழக்கங்கேட்டுச்
சிந்தைநனிகளிகூரச்சார்ங்கனயன்முதலியோர்துளைத்துச்சென்றார். ௨௬

யாமெய்திமுறையிடும்போதருடருமோமுனிந்திடுமோவெம்மானென்று
நாமெய்திச்செல்வோர்களாயங்காங்குப்பூதகணநாதர்கூடித் [று
தோமெய்திப்பிழைத்தோருஞ்சரணடையினருள்சுரக்குமெங்கோனென்
தாமெய்தித்தம்மியல்பிற்புகழெடுத்தோதுவகேட்டுத்தளர்வுதீர்ந்தார்.

தம்மினத்தோர் வரவுதனைமுன்னெய்தியறிவிப்பச்சார்வோரென்ன
வம்மலைவாழெண்ணிலாவரிபிரமர்சேவைசெய்யுமமையம்பார்த்துக்
கொம்மைமழவிடைப்பெருமான்கோயிலினுட்சென்றணையக்குறித்துநோக்கி
விம்மியெழும்பெருமகிழ்ச்சிதலைசிறப்பமாலயனும்விரைந்துசெல்வார்.

எம்பிரானுருக்கொண்டங்குறைவோரையவனென்னச்சென்றெய்தியோர்பா
லம்பிகையிலாமையினலவனல்லரெனத்தெளிந்தேயப்பாலேகிச்
செம்பதுமைவளர்மார்பனயன்முதலாம்யாவர்களுஞ்சேரவீண்டி
நம்பனமர்ந்தினிதுறையுந்திருக்கோயிற்கடைத்தலையைநண்ணினரால்.

கணங்களின்மிடைமுதற்றடையிற்றடையுண்டுநின்றனர்கள்கருமதேவ
ருணங்குதயித்தியரிரண்டிற்கடவுளர்கண்மூன்றிலொருநான்குதன்னி
லணங்கறுசாத்தியர்முதலோர்மருத்துக்கண்முனிவரெலாமைந்திலாறி
னிணங்கமழ்வேற்றிசைக்கிறைவரெண்மர்களுந்தடையுண்டுநின்றாரன்றே.

சிவபெருமானைத்தரிசித்தல்.

தாமரையோன்றிருமாலுந்தடையின்றியணைந்துதனித்தடையின்வைகுந்
தேமருதார்நந்திபிரானடிபணிந்தாரவன்கொண்டுசெலுத்தச்சென்று
காமருசீரரம்பையர்களாடலொடுபாடலறாக்கடியார்செல்வப்
பூமருபேரவைநாப்பணமர்ந்தருளும்பெருவாழ்வின்பொலிவைக்கண்டார்.

கண்டுபெருங்களிகூர்ந்துகணநாதர்பிரம்படியிற்கலங்கியேங்கி
மண்டியபேரச்சமுடனன்புமிருபுடையீர்ப்பவணங்கித்தாழ்ந்தே
யண்டனெதிர்நீளிடைநின்றஞ்சலிசென்னியிலேறவிழிநீர்வாரக்
கொண்டமயிர்ப்புளகமுறப்பலமுறையும்பணிந்தெழுந்துகுடந்தம்பட்டார்.

கொச்சகக்கலிப்பா.

தூரத்தேயிவர்நிற்பவணித்தாகத்தொழுதணைந்து
வாரத்தானந்திபிரான்மலரோனுந்திருமாலுஞ்
சேரத்தாம்வந்ததிறம்விண்ணப்பஞ்செயக்கொன்றை
யீரத்தாருடையானுமீண்டவரைத்தருகென்றான். ௩௩

நந்திபிரான்றிருப்பிரம்பையசைத்தருளநான்மலர்மே
லந்தணனுநெடியோனுமஞ்சலிசேர்கரத்தோடும்
வந்தணுகிமருங்குறலுமணிநிலாநகைமுகிழ்ப்பப்
பைந்தொடியாளொருகூற்றிற்பரம்பொருண்மற்றிதுகூறும். ௩௪

மாயநீயிருந்தையுருவாய்த்தனையென்மலர்மேவுந்
தூயநீபுகையுருவந்தோற்றனையென்னென்றருளு
மாயபொழுதாண்டாண்டுக்கணநாதரலைப்பமெலிந்
தேயமுறைமுறையிட்டார்புறநின்றவிமையவர்கள். ௩௫

ஆங்கவர்கண்மிகமுழக்குமரவோதைதிருச்செவியேற்
றீங்கிதெவனென்றருளவம்புயத்தோனெதிர்வணங்கிப்
பாங்குடையசுராசுரருன்பாதங்கடொழப்போந்தார்
பூங்கழற்கால்வெம்பூதகணந்தடுப்பப்புறநின்றார். ௩௬

விளித்தருளிக்கருணைசெயவேண்டுமெனத்திருநோக்க
மளித்தெந்தைநந்திதனைப்பணித்தருளவவனெய்தித்
தெளித்தெழுபல்கணத்தோரைத்தடுத்துள்ளாற்செல்கவெனத்
துளித்தமதுப்பிரம்பசைத்துச்சுராசுரரைப்புகுவித்தான். ௩௭

உய்ந்தன முய்ந்தனமென்றேயும்பர்களுந்தானவரு
முந்திமணிவாய்தலிடைமுடிநெருங்கநுழைந்தேகி
யெந்தைபிரான்வீற்றிருக்குமோலக்கமெதிர்நோக்கிப்
புந்திநிறைகளிகூரத்தொழுதெழுந்துபோற்றினர். ௩௮

நான்முகன்முறையிடு.

அங்கவரையெதிர்நோக்கிநகைத்தருள்கூர்ந்தருள்வாரி
பங்கயத்தோயுருமாறிமுகஞ்சாம்பிமெய்பனிப்ப
விங்கிவர்கட்குற்றதெவனென்றருளமறைப்புத்தேள்
செங்கையிணைமுகிழ்த்திறைஞ்சிவிண்ணப்பஞ்செய்கின்றான். ௩௯

ஐயனேயடியேங்களறியாமைத்தொடக்குண்ட
கையரேமாதலினுன்கண்ணருள்பெற்றெய்தாது
வெய்யநறுஞ்சுவையமிழ்தம்பெறற்பொருட்டுவெவ்வினையேம்
பையரவான்மந்தரத்தாற்பாற்கடலைக்கடைந்தேமால். ௪0

துன்றியதிஞ்சுவையமிழ்தந்தோன்றாதுவிடந்தோன்றி
யின்றுசராசரமனைத்துமெரிசெய்துநீற்றாக்கிற்
றன்றினருளெரித்தாயுன்னருளன்றிமுயல்வதெலா
மொன்றொழியவொன்றாமென்றுரைக்குமொழிமெய்யாமே. ௪௧

இற்றொழிந்தோமொழியவேறெஞ்சியயாஞ்சிலர்வந்திங்
குற்றனம்வன்னமுமாறியுயங்கினோநீயலதோர்
பற்றிலேமிவ்வளவிலுலகமெலாம்பாழாகுஞ்
சற்றுமினித்தாழாதுதண்ணளிசெய்திரங்காயால். ௪௨

இதுபொழுதுகாத்திலையேலெமக்கிறுதியின்றேயாம்
விதுமுடித்தபெருங்கருணைவெள்ளமேயென்றிரந்தா
மதுமலர்த்தார்விண்ணவருமனங்கலங்கிமுறையிட்டா
ரதுவுணர்ந்தெம்பெருமானுமஞ்சலீரென்றருளி. ௪௩

சிவபெருமான்விடமுண்டருளுதல்.

கலிநிலைத்துறை.

இருந்தவாறுளத்தெண்ணினன்மலர்க்கரநீட்டக்
கருந்தழற்கடுகமலமீச்சிறையளிகடுப்பப்
பெருந்திருக்கரத்தெய்தியோர்செய்துபேராளன்
றிருந்துபார்வையிற்சிற்றுருவாயடங்கியதால். ௪௪

அண்டர்மாலயனுலகெலாமதிர்வுறப்பாந்து
மண்டுவெஞ்சினக்கடுவலிபோய்மலர்க்கரத்தி
னெண்டளிர்ப்பதத்தடியவர்சிந்தைபோலொடுங்கக்
கண்டவெம்பிரான்பெருமையார்கட்டுரைத்திடுவார். ௪௫

தன்னடித்தொழும்பாற்றுமோர்தமிழ்முனிகரத்தி
லுன்னுமுன்கடற்புனலெலாமுழுந்தளவாமே
லென்னதென்கடற்றோன்றியபெருவிடமம்மான்
பொன்னலர்க்கரத்தடங்கியதெனபதோர்புகழோ. ௪௬

சேயிதழ்த்தடம்பங்கயக்கரத்திடைச்சிவணுங்
காயுநஞ்சினைக்காண்டோறும்பதைக்கும்வானவரைப்
பாயுபால்விடைப்பண்ணவன்பரிந்தெதிர்நோக்கித்
தூயவெண்ணிலாக்குறுநகைமுகிழ்த்தனன்சொல்வான். ௪௭

செறியுநஞ்சினையுண்குமோசேயிடைச்செல்ல
வெறிகுமோபுகன்மின்களென்றருள்செயவிமையோர்
வறிதுழுங்கையர்போறலுமொருபுடைமணந்த
நெறிகருங்குழன்மலர்முகநோக்கினளிகழ்ந்தும். ௪௮

அரிவைகேட்டியிக்கொடுவிடமகிலமுமொருங்கே
யெரிமடுத்ததுன்பார்வையாலின்னமுதாமாற்
புரிவதொன்றிலைபருகினாற்புகறிநீயென்ன
வரிவிழிக்கடைநீதாய்மணிக்கணங்குழைமடமான். ௪௯

உலகெலாந்தருமன்னையவ்வுலகின்மேல்வைத்த
வலகிலாப்பெருங்கருணையாற்கொழுநன்மாட்டமைந்த
தலைமையன்பினன்மலர்முகமொருபுடைசாய்த்துக்
குலவுசெங்கையின்விடத்தினைநோக்கினள்குறித்து. ௫௰

மாழையுண்கணிநோக்கலுந்திருவுளமகிழ்ந்து
பாழிமால்விடைக்கொடிமிசையுயர்த்தருள்பகவ
னேழைவானவர்க்கிரங்கியேயினிதுகண்டேறு
யாழிவல்விடம்பருகினானிலமுமுய்ய. ௫௧

பருகுவெங்கடுமிடற்றிடையேகுழிப்பாரா
மருமலர்ப்பிரான்முகுந்தனேவஞ்சகஞ்செம்மான்
றிருமிடற்றினுக்கழகுசெய்குமரர்சேயிழையா
ரருமிடற்றுநூல்காத்ததுகாண்கெனவறைந்தான். ௫௨

மிடற்றுச்செக்கர்வான்மிசைவிடக்கருமுகிலுறநோய்
கெடத்தளிர்த்தபைங்கூழெனச்சுராசுரர்கெழுமிக்
கடற்பெரும்புனலுடைத்தெனக்காதன்மீக்கூர
வடற்கணிச்சியோய்சயசயபோற்றியென்றார்த்தார். ௫௩

நாரணாதியர்கிளர்ச்சியைநோக்கிநன்கருளிக்
கோரவல்விடமிடற்றிடையமைத்தனன்குழக
னாரவாயிடைவயிற்றிடையன்றிமற்றிடைக்க
ணாரமைத்திடவல்லவரமிழ்தமேயானும். ௫௪

சகமெலாம்பொடிபடுத்தெழுந்தழல்விடமிடற்றிற்
றிகழவைத்தனன்முப்புரமெரியெழச்சிரித்தோ
னகலருந்திறத்தெண்குணநிறைந்தபேராண்மைப்
பகவன்மேன்மைமற்றெம்மனோரளவிடற்பாற்றே. ௫௫

கந்தரத்திடையடக்கியகறைவிடங்காணூஉச்
சுந்தரத்திருமாலயன்சுராசுரர்முனிவ
ரிந்திராதியர்கவலைதீர்ந்தெண்ணருங்களிப்பாற்
சிந்தையன்பொடுமஞ்சலிசென்னிமேற்கொண்டு. ௫௬

நீலகண்டனேபோற்றியெண்குணங்களானிறைந்த
மூலகாரணாபோற்றிமுன்சிறுவனுக்கிரங்குங்
காலகாலனேபோற்றியின்றெம்முயிர்காத்த
வேலவார்குழல்பங்கனேபோற்றியென்றிசைத்தார். ௫௭

என்றபோதருள்சுரந்துமக்காற்றலின்றளித்தேந்
தொன்றுபோற்கடல்கடைந்துவான்சுவையமிழ்துண்பீர்
பொன்றிலீரெனத்திருவருள்புரிந்தனன்புனித
னென்றுபின்னரும்வேண்டுவர்மான்முதலும்பர். ருஅ

பொதுமைநீத்துநின்றிருவடிக்கன்புபூண்டொழுகக்
கதுவுநின்னருணொறுமெம்வயிற்கலப்ப
விதுமுடிச்சடைவள்ளலேயருளெனவேண்ட
வதுவழங்கினன்விடைகொடுத்தருளினனமலன். ருகூ

விண்டுவாதியோர்சிவபூசையாற்பிறவாநலம்பெறல்.

மீண்டுமாலயன்முதலியவிண்ணவர்குழுமி
யீண்டுநம்பொருட்டிருள்விடம்பருகினனிறைவன்
பூண்டவிப்பெரும்பிழையறும்படிசிவபூசை
யாண்டுசெய்துமென்றெண்ணினர்தெளிந்தனரிதனை. கூ0

தலமுந்தீர்த்தமுமூர்த்தியுஞ்சிறந்தமெய்த்தானங்
குலவுகாஞ்சிமாநகரமாமெனக்குறுகி
நலமுறச்சிவபூசனையுஞற்றிடவரியா
வலகில்பாவமுநசிக்குமென்றப்பதியெய்தி. கூக

அன்றுதம்முயிரளித்ததுமணிகண்டமென்னு
நன்றியான்மணிகண்டநாதப்பெயரிலிங்கம்
வென்றபுண்ணியகோடிநாதர்க்குமேல்பாங்க
ரொன்றுமன்பினுலிருத்தினர்பூசனையுஞற்றி. கூ௨

மணிகண்டேசர்தம்மருளினல்வன்பிழைதவிர்ந்து
பணியினாற்கடல்கடைந்தமிழ்தெடுத்தனர்பருகித்
துணிவில்வெஞ்சினத்தானவர்தமைத்துரந்தகற்றிப்
பிணியுநீங்கினரிறப்புறாப்பெருநலம்பெற்றார். கூ௩

அத்தலத்திடைத்தன்பிழையகலவாசுகியும்
பத்தியிற்பரூஉமணிசனைப்பண்புறவிருத்திச்
சுத்தநீர்நிறையனந்ததீர்த்தத்தடந்தொட்டு
நித்தமக்கரைக்கண்ணிருந்தருச்சனைநிரப்பி. கூ௪

பணைமணிசனைத்தன்பணாமணிகளாற்பரவி
நணுவகத்தமர்நம்பனோநலிவுசெய்விடத்தை
யுணவெனக்கொளுமுத்தமாவெனத்துதித்துமையாண்
மணாளன்மேனியிலிழையெனப்பயில்வரம்பெற்றாள். கூரு

கொங்கலர்ந்தபூந்துணர்தொறுநறுநறாக்கொழிக்கும்
பொங்கர்சூழ்கலிக்கச்சியுட்பழமறைப்பொருளா
யங்கண்வாழ்மணிகண்டனையருச்சனையாற்றித்
துங்கமுத்தியிற்சேர்ந்தவர்தொகுப்பினெண்ணிலரால். கூகூ

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அடுங்காலமிதுவென்னவிடமெழலுநனிவெருவியயன்மாலேனோர்
கொடுங்காலன்றனைக்குமைத்தகுரைகழற்கீழ்ச்சரண்புகுதக்கொதித்துவாழ்நாள்
விடுங்காமலருள்புரிந்தபரம்பொருளையன்றியுமோர்பிரானுண்டென்ன
நடுங்காதார்தமைக்காணப்பெற்றிடினுமென்னுள்ளநடுங்குமாதோ. கூஎ

மணிகண்டேசர்ப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கூகூகூ.

சார்ந்தாசயப்படலம்.

கலிநிலைத்துறை.

வளைத்தபாப்பணியணிமணிகண்டநாயகனை
முளைத்தவெண்பிறைக்கண்ணியோன்வரவிதுமொழிந்தாம்
விளைத்தருளினுவிளைத்துறும்வியாதனைக்காத்த
விளைத்துச்சார்ந்தவர்சார்பினன்வரவினியிசைப்பாம். க

வியாதன்பொய்யுரைகிளத்தல்.

பராசரப்பெயர்முனிவரன்பழுதறுவரத்தாற்
றராதலத்திடைத்தோன்றிநான்மறைதனிப்பதினெண்
புராணமேனவும்பகுத்துயர்புரவுபூண்டோங்கிப்
பிரானெனத்தகுவியாதனும்பெரியவன்போனன். உ

கொடியபாதகக்கலியுகம்வருதலைக்குறித்துப்
படியில்யாங்கினிச்செல்வதென்றஞ்சிமெய்பனித்துக்
கடிநறும்புனற்கங்கைசூழ்காசியினெய்தி
முடிவின்மாதவஞ்செய்துவீற்றிருந்தனன்முறையால். ௩

அங்கண்மெய்த்தவர்யாவருமவனடி வணங்கி
யிங்கெமக்குநின்மறைமுடியுண்மையீதென்னச்
செங்கைநெல்லியிற்றெளிவரத்தெருட்டுகென்றிரந்தார்
வெங்கொடும்பகைவினைக்குறாப்பெருந்துயர்வியாதன். ௪

மிருதிநூல்புராணத்தொகைவேதநாலங்க
மிருவகைப்படுநியாயமாயுண்மறையெழிற்கந்
தருவவேதம்வில்வேதமோடருத்தநூலெவற்றின்
பொருளினுண்மைமற்றிதுவிதுவெனத்தவிர்புகன்றான். ௫

பெருவலித்தவமுனிவரர்கேட்டெம்பிறழா
தொருவழிப்படத்துணிபொருவார்த்தையினெமக்குச்
சுருதிநூன்முடிபிதுவெனத்தொகுத்துரையென்றார்
மருளின்மூழ்கியசிந்தையின்வியாதமாமுனிவன். ௬

உறுவர்யாரையுநோக்கிமுன்னுரைக்குமாறுகத்
தறுகணுண்மையிற்கூறுதலுற்றனன்றவத்தி
ரறிவுநூலெலாம்பன்முறையாயினுந்தெளியப்
பெறுவதொன்றதுநாரணனேபரப்பிரமம். ௭

வண்ணமாமறைநூற்குமேலானூலிலைமதியோ
ரெண்ணுகேசவன்றனக்குமேற்றெய்வமுமில்லை
கண்ணுமெவ்வகைநூல்கட்குந்துணிபிதுகாண்மி
னுண்மையுண்மையீதெனக்கரமெடுத்துநின்றுரைத்தான். ௮

கேட்டமாதவர்வெரீஇயினர்கிளர்மறைப்பொருட்குக்
கோட்டமாமிதுவெம்மனோர்கோட்டக்கதன்று
ஞட்டியீங்கிவன்புகன்றதென்னென்றுளநடுங்கி
நீட்டுசெஞ்சடைமுனிவரன்றன்னைநேர்நோக்கி. ௯

வாதராயணநீயிவண்மொழிதருமாற்றம்
வேதநூற்பொருளுண்மையேயாமெனில்விசுவ
நாதனார்திருமுன்பமக்குரையென்னநவின்றா
ரோதுகேனெனமூர்க்கனுமெழுந்துசென்றுற்று. க௦

விச்சுவேசன்முன்னின்றிருகரமிசைநிமிர்த்தாங்
கச்சமின்றிமுன்புகன்றதேபுகன்றனனந்தோ
விச்சைநூல்பலகற்பினுஞ்சிவனருள்விராவாக்
கொச்சையோர்தமைவிடுவதோகொடுமலச்செருக்கு. கக

அறிவுபோலடர்ந்தெழுமறியாமையின்வலியாற்
பொறியிலானிதுகிளப்பவும்வெகுண்டிலன்புனிதன்
மறுவில்கூற்றெலாந்தன்பெயரெனுமறைவழக்கால்
வெறிமலர்க்குழலுமையொடுமகிழ்ந்துவீற்றிருந்தான். க௨

நந்தியெம்பிரான்வெகுண்டுநாண்மலர்க்கரமெடுத்த
வந்தவண்ணமேயசைவறநிற்குமாசபிப்ப
மந்தனாயினானிமிர்த்தகைமடக்கவல்லாமை
நிந்தையாற்சிலைத்தூணமொத்தசைவறநின்றான். க௩

தெற்றுச்செஞ்சடையெம்பிரான்றிருமுன்புநாட்டும்
வெற்றித்தம்பமொத்திலகிவல்லிடும்பைகூர்வியாதன்
பற்றிச்சிந்தையினெடியமாலிணையடிபரவ
வற்றைப்போதுமுன்றோன்றிநின்றச்சுதனறைவான். க௪

வியாதனுக்குவிண்டுபுத்திபுகட்டல்.

என்னகாரியஞ்செய்தனையென்னையுங்கெடுத்தாய்
முன்மறைப்பரப்பியாவையும்பாற்படுத்தவற்றுட்
சொன்னமெய்ப்பொருளுண்மையைத்துணிந்தநீயந்தோ
கொன்னுரிம்மயக்கெவ்விடைப்பெற்றனைகூறாய். க௫

எனையாரையுமறந்துறந்தியாவருமென்றும்
பான்மையிற்றியானஞ்செயப்படுமொருமுதல்வன்
மேன்மைகூர்சிவனொருவனேயெனவிரித்தன்றே
நான்மறைத்தலையாமதர்வச்சிகைநவிலும். க௬

பாரெலாமவனிணையடித்தியானஞ்செய்பசுக்க
ளாமெனத்தெளியவனருள்சேர்தலிற்பசுவும்
பூமிசைத்தியானப்பொருளாமெனப்புணர்ந்து
தோமறச்சிலநூல்புகலுண்மையுந்துணியாய். க௭

அறிஞர்கொண்டகோட்பாடிதுவறிந்திலையம்மா
பிறிவிலாணவச்செருக்கினின்மயங்கியபேதாய்
வெறியநீயினியுய்வதுவேட்டனையாயிற்
குறிப்பறப்புந்திடாதென்னுரைமெய்யுறக்கோடி. க௮

மந்திரத்துமுன்மகத்தினுக்கிறையவன்மகவான்
சந்தமாமறைக்கிறையவன்றாமரைக்கிழவ
னிந்திராதியாமுலகினுக்கிறையவன்யானே
மைந்தனேயெனக்கிறையவன்மணிமிடற்றிறையோன். க௯

அகிலநாயகனவற்குமேலிறையவனில்லை
யகிலலோகமும்வன்றிருவாணையினடக்கு
மகிலலோகமும்படைத்தளித்தழிப்பவனவனே
யகிலநூல்களுமுரைத்திடுந்துணிவிதுவாமால். ௨0

வானமேத்தயான்வைகுந்தவாழ்வுபெற்றதுவு
ஞானநான்முகன்சத்தியவுலகநண்ணியது
மேனைவிண்ணவர்தத்தமவாழ்க்கையெய்தியது
மானுயர்த்தவனருட்குறியருச்சனைப்பயனால். உக

அன்னவன்றிருவடிகளேசரணமென்றடைமோ
வின்னதாயநின்மயக்கினைவிடுமதியின்றேற்
பின்னல்வேணிநீகெட்டனைபிறரையுங்கெடுக்க
வுன்னுகின்றனையெனவெகுண்டுரைத்தனன்றிருமால். உஉ

வியாதன்முனிவர்மேல்முனிதல்.

வாயுறுத்தியகடுமொழிகேட்டனன்மற்றைத்
தூயமாதவத்தொகையெலாந்துரும்பெனக்கழித்தான்
பாயுமால்விடைப்பகவனேபரமெனத்தெளிந்தா
னேயுமாறருள்கிடைத்துயரிருந்தவத்தலைவன். உங

மெய்த்தவத்தவர்தமையெதிர்நோக்கிமேதகைய
ரித்தகைத்தாயுமக்குமென்போலவெய்தியதோ
சுத்தமாமறைமுழுவதுந்துகளறத்தெரிந்த
சித்தர்காளெனைவினவியதென்கொலோசெப்பீர். உச

விச்சுவுஞ்சிறைப்புள்ளரசுயர்த்தவன்விளம்பும்
விச்சுவாதிகனென்றுவலிச்சினவிடையூர்தி
யெச்சமேசுரும்புளர்துழாயலங்கலானென்ப
வெச்சநாயகன்பொலந்துணரிதழிமாலிகையான். உரு

மாயையாங்கொடும்பரன்றனைச்செகுத்துயர்வயவன்
மாயையாள்பவன்முப்புரங்கனற்றியவள்ளல்
சாயன்மாமயில்வள்ளிதையோநாரணன்றரியார்
சாயவென்றசீர்ப்புருடனுங்கண்ணுதற்றலைவன். உசு

என்னபாமறைமிருதிநூல்புராணமற்றெவையும்
பன்னுகின்றநிலையுறற்பாலதொன்றுளதோ
புன்மருட்சியின்மயங்கினேன்புலங்கொளத்தெருட்டா
தென்னையிவ்வணங்கண்டனிரிதுநுமக்கழகே. உஎ

சிவனையாவரேயருச்சனைசெயாதவர்சிவன்மற்
றெவரையாயினுமருச்சனையியற்றியதுண்டோ
கவர்மனத்தினையொழித்தினியாமெலாங்கவலா
தவன்மலர்த்துணைச்சரணமேயடைதுமென்றியம்பி. உஅ

வியாதன்வேண்டுகோள்.

பவளமுண்டகக்கிழத்திதோய்பணைப்புயக்குரிசி
றவளமேனியைநீனிறமாக்கிவெண்சலதி
துவளவந்தெழுங்கொடுவிடமிடற்றினிற்றாங்கக்
கவளமாக்குநின்பெருமையார்கணித்திடவல்லார். உகூ

சிரித்தெரித்தனைமுப்புரந்திறற்சமன்வாழ்நா
ளிரித்தழித்தனையுதையினிலங்கையார்க்கிறையை
நெரித்துவீழ்த்தினைபெருவிரனுதியினிநீருப்
பொரித்துவிட்டனைகாமனைப்பொறிநுதல்விழியால். ஙo

பிரமனார்சிரமுகிரினிற்பேதுறக்கொய்தாய்
சுரர்கள்யாரையுஞ்சிறுவிதிவேள்வியிற்றொலைத்தாய்
நரமடங்கன்மீன்வராகனென்கூர்மநற்கேழ
லூரமெலாமறத்தடிந்தனையொவ்வொருகூற்றால். ௩௧

அந்தகன்றனைமாயனைச்சூலமீதமைத்த
வெந்தைநின்பெருந்தகைமையாவென்னறிந்திசைப்பேன்
சிந்தைமையலிற்றொழுத்தையேன்செய்பிழைபொறுத்தே
யுந்துபோருட்கருணையாலுய்வகையருளாய். ௩௨

என்றுகண்கணீர்சொரியநாத்தழும்பநின்றேத்தி
யொன்றுகாதலானெக்குநெக்குருகியான்பிரிந்த
கன்றுபோற்பதைத்தலந்திரந்தயருமக்காலைக்
கொன்றைவார்சடைக்குழகனுங்கருணைகூர்ந்தருளி. ௩௩

சிவபிரான்திருவாய்மலர்ந்தருளல்.

வெள்ளியங்கிரியெழுந்தெனவிளங்கொளிவிடைமேல்
வள்ளைவார்குழையுமையொடுமகிழ்ந்தினிதேறிப்
பிள்ளைவாரணக்கடவுளும்பிறங்கெரிவடிவே
லள்ளிலைப்படையேந்தலுமிருபுடையணுக. ௩௪

பிறங்குசக்கரபாணியும்பிரமனுமிருபா
லறங்குலாந்திருவடியிணைதாங்கினர்நடப்ப
மறங்குலாம்படைக்கடவுளர்வான்பிசைமிடைந்து
கறங்குவண்டுழுக்கற்பகமலர்மழைபொழிய. ௩௫

எட்டுமாதிரத்தலைவரும்போற்றெடுத்திறைஞ்ச
வட்டவெண்குடைநந்திதன்றிருக்கரம்வயங்கக்
கட்டுசாமரையுருத்திரகன்னியரிரட்ட
வொட்டிமூாகதர்சூதர்கள்வாழ்த்தொலியெடுப்ப. ௩௬

நீண்டசெஞ்சடைப்புதுமதியிளநிலாவிரிப்ப
வீண்டுபூதவெங்கணங்களோடெதிரெழுந்தருளி
மூண்டபேரருளூற்றெழக்குறுநகைமுகிழ்த்து
மாண்டசீர்முனித்தலைவனைநோக்கிவாய்மலரும். ௩௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எவனைநீமதித்துநம்முன்சூளுறவிசைத்தாயிந்நா
ளவனிதோகாண்டிமற்றெம்மடியிணைதாங்கினின்றான்
சுவைலநீபேதைநீராற்சாற்றினையெம்மைத்தேறா
துவலையாமதத்திற்பட்டோரிடும்பைநோயுழப்பர்கண்டாய். ௩௮

வடிவுடையெமதிடப்பால்வந்தவன்மாயனேனைக்
கடிமலர்ப்பொகுட்டுமேயகடவுளெம்வலப்பால்வந்தோ
னிடபரிதகையோயின்னவிருவருமெம்பாலன்பா
மடியவர்க்கடிமைபூண்டேயணுக்கராயமர்வர்கண்டாய். ௩௯

கற்பங்கடோறுந்தோன்றுங்கணக்கிலாப்பிரமர்மாயர்
முற்பொன்றுதலைகள்கோத்துநாற்றியமுளிபுன்மாலை
பொற்பொன்றுநமதுசென்னிபுயமலிரசரணமெங்கும்
சிற்பங்கள்விளங்கப்பூண்டதிறமிதுநோக்கிக்காணாய். ௪௦

மாண்டவிண்ணவர்களெற்புமாலையும்பலவும்பூண்டே
மீண்டிவைபூண்டதெற்றுக்கென்றியேனின்போல்வார்க்குப்
பூண்டமாலொழிப்பானன்னோர்பொன்றுறுமனித்தவாழ்வுங்
காண்டருமெமதுநித்தத்தன்மையுங்காட்டக்கண்டாய். ௪௧

சொன்மறைமுடிபுதேறுந்தூயருட்டலைவனீயே
பன்முறையுலகமெல்லாம்படைத்தளித்தழிக்குமெம்மை
நன்மைகூர்வழிபாடாற்றிமுத்தியினண்ணுகென்னைப்
புன்மருளகலநல்கிமறைந்தனன்பூதநாதன். ௪௨

நாயகன்கிளந்தவெல்லாங்கேட்டுளநடுங்கியஞ்சித்
தீயனேனந்தோகெட்டேனென்னிதுசெய்தேனிந்நா
ளேயுமிம்மடமைக்கேதியாதெனாவியாதனெண்ணி
யாயதோர்மூர்த்தமெம்மானடியிணைநினைந்துசெய்து. ௪௩

வியாதன்சிவபூசைசெய்துவரம்பெறல்.

விருதுடைக்காசிவைப்பின்விச்சுவநாதன்யார்க்கு
மருள்வதுமெய்யேயாகுமாயினுமீங்குவாழ்வார்
தெருமரத்தேவர்கூடியூறுகள்செய்பவென்ப
விருவினையுடையேனிங்குவைகுதற்கிடையூறீதால். ௪௪

இடையறுகாசிமூதூர்தன்னினுமிருமைசான்ற
விடையறுக்காஞ்சிமூதூரெம்பிராற்கினியதாகு
மிடையொசிமுலையாள்பாகன்கருணையாலெவர்க்குமவ்வூ
ரிடையிடையூறொன்றின்றிமுத்திவீடெளிதினெய்தும். ௪௫

காசியினிறப்பமுத்திகாஞ்சியைநினைப்பமுத்தி
யாசறவுதவுமென்னுமருப்பொருடுணிந்துசிந்தை
மாசறுதீர்முனிவர்கோமான்விரைந்துமாணாக்கரோடுந்
தேசினாற்றிசைபோங்காஞ்சித்திருநகரடைந்தான்மன்னோ. ௪௬

திகழ்சிவகங்கையாடித்தேமலரொருமாமூலப்
பகவனைவழிபாடாற்றிமஞ்சணீர்நதியின்பாங்கர்
நிகழ்மணிகண்டநாதநெடுந்தகைநிருதிவைப்பிற்
றகவினிலிலிங்கத்துச்சார்ந்தார்சார்பினன்றனைத்தாபித்து. ௪௭

விதியுளிப்பூசையாற்றிவிழைதகத்துதிக்குங்காலை
மதிபொதிசடிலமோலிவரதனுமகிழ்ச்சிபொங்கி
யெதிரெழுந்தருளிவேண்டும்வரமெவனியம்புகென்ன
முதிர்பெருங்காதலிம்முனிவரன்வேண்டுகிற்பான். ௪௮

ஐயனேயிலிங்கத்துச்சார்ந்தேற்கரும்பெறற்சார்பாமிந்தத்
தெய்வலிங்கத்துநாளுஞ்செழித்துவீற்றிருந்துஞால
முய்வகையவரவர்க்குவேட்டனவுதவாயநின்றன்
மெய்வகைப்பத்திநாயேற்கருளிவைவேண்டுமென்றான். ௪௯

அவ்வரமுழுதுமந்நாள்வியாதனுக்கருளியெங்கோன்
பௌவநீருலகம்போற்றப்பைத்தபாம்பல்குற்செங்கேழ்க்
கொவ்வைவாய்க்களபக்கொங்கைக்குலவரைப்பிடியினோடுஞ்
செவ்விதின்வியாதசார்ந்தாச்சிரயமாவிலிங்கத்துற்றான். ௫௰

முழுதுணர்கேள்விசான்றவியாதனேமுறைமைமாறிப்
பழுதுபூண்டிவ்வாறெள்ளப்பட்டனனென்னிலன்றே
வழுவறுநூலொன்றுளுமுள்ளவாறுணரமாட்டா
விழுதையோர்தெளிவர்கொல்லோவிருவருக்கரியானுண்மை. ௫௧

சாரூப்பியசாரசயப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௭௱.

சத்ததானப்படலம்.

கலிநிலைத்துறை.

சாத்திரம்வல்லவியாதனையாண்டருள்சார்ந்தாரைக்
காத்தபிரான்றிறமிங்கிதுகட்டுரைசெய்தேமா
லேத்தருமஞ்சணதிப்புடையேழ்முனிவோரெய்தாய்
சோத்தெனமேவுத்தியவேழிடமேயவளுஞ்சொல்வாம். ௧

அத்திரிகுச்சன்வசிட்டனருட்பிருகுப்பாசங்
கைத்துயர்கௌதமர்காசிபரோடங்கிராவென்றேழ்
மெய்த்தவரும்பணிசூழியயக்கிரிமேன்முன்னு
ளுத்தமமானவருந்தவமாற்றலுறுங்காலை. ௨

ஆயிதழம்புயவாழ்க்கைநெடுந்தகையாங்கெய்தி
நீயிர்விழைந்தமைகூறுமினென்றலுநேர்போற்றிப்
பாயிருள்சீத்துவிளங்கொளிகான்றெழுபானுப்போல்
மீயுயர்தோற்றமுறுந்தவவேந்தர்விளம்புற்றார். ௩

முதுக்குறைவாளர்பெறத்தகுமுத்தியருட்செல்வ
மதிக்குறைவுற்றுழல்வோர்களுமற்றெளிதிற்கூடப்
புதுக்குமுபாயமெமக்கருளென்னமலர்ப்போதன்
விதுக்குறைசூடிமலர்ப்பதமேத்திவிரிக்கின்றான். ௪

பற்றிகலற்றுக்குற்றமில்சிந்தைப்பனவீர்காள்
கற்றுயர்காட்சிக்கொற்றமிலோருங்கருநோய்தீர்
பெற்றியினுற்றுப்பெறலருமுத்திப்பேறெய்து
மற்றமிலேதுக்கேண்மினுமக்கின்றறைகிற்பேன். ௫

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தருமமென்றியம்புமொன்றேதழல்விடம்பருகுமெங்கோன்
றிருவுளங்கருணைபூப்பச்செய்யுமவ்வருளால்யார்க்கு
மருவருமுத்திப்பேறுவாய்க்குமத்தருமந்தானு
மருள்சிவதருமமாவித்தருமமென்றிருகூறாமால். ௬

பளகறுமிட்டியாதிபசுதருமங்கள்காலத்
தளவையிற்கழியுமென்றும்வச்சிரவரிசிமானத்
தளர்வுறாநிலையேறெய்துமுயர்சிவதருமமன்ப
ருளமுறச்சிவலிங்கமெண்ணன்முதல்பலவுளவாமன்றே. ௭

சிவலிங்கப்பதிட்டைசெய்தலெவற்றுளுஞ்சிறந்ததாகுஞ்
சிவபத்தர்பதிட்டைதானுமன்னதேயிவைதாஞ்செல்வச்
சிவனமர்தலங்கடம்மிற்செய்பயன்கோடிமேலாஞ்
சிவநிறைகாஞ்சிவைப்பிற்செய்திடினனந்தகோடி. ௮

காஞ்சியைநினைப்பிற்காசிக்கடிநகர்வசித்தபேறுங்
காஞ்சியேயெவற்றினுள்ளுஞ்சிறந்ததுகாண்மினென்னுங்
காஞ்சிசூழல்குல்வரணிகணவனூர்மொழியுட்கொண்டு
காஞ்சியையடைந்தார்மாசுகடிந்துயரெழுவர்தாமும். கூ

அருட்சிவகங்கைநன்னீராடியேகம்பவாணர்
திருப்பதந்தொழுதுமஞ்சட்செழுநதிக்கரையினெய்தி
யருத்திகூர்வியாதநாதனணிமையிற்றத்தம்பேரா
ணிருத்தினாலிங்கம்பூசையியற்றினரார்வத்தோடும். க0

பச்சிலைபழம்போதேனும்பறித்திட்டுப்பத்திசெய்வோர்க்
கெச்சமிலிருமைப்பேறுமளித்தருளிறைவாபோற்றி
முச்சகமுதலேபோற்றிமுலைச்சுவட்டணியாய்போற்றி
நச்சினார்க்கினியாய்போற்றியெனத்துதிநவிலுங்காலை. கக

ஆயிடைவெளிநின்றெம்மானத்திரிபிருகுவாதித்
தூயரைநோக்கிவைவச்சுதமனுவந்தரத்தி
னீயிரெம்மாணையாற்றுனிகழுமேழ்முனிவராமின்
மாயிருமுத்தியீற்றின்வழங்குதுமென்றுபின்னும். கஉ

ஏழிலிங்கத்துமெம்மைத்தரிசித்தோர்க்கிருமைப்பேறும்
வாழ்வளித்தருள்கேமென்றுவரங்கொடுத்தகன்றானையன்
பாழ்வினையறுக்குஞ்சத்ததானத்திற்பணியப்பெற்றோ
ரூழ்வலித்தொடக்குநீங்கியும்பர்கோனடியிற்சேர்வார். கங

சத்ததானப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - எகூங.

பராசரேசப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

தருமம்பிறழாதசத்ததானத்தின்
பெருமையுரைசெய்தாஞ்சத்திபெறுமைந்தன்
றருதந்தையர்க்கொன்றவரக்கர்தமதாவி
பருகவழிபட்டபராசராஞ்சொல்வாம். க

விசுவாமித்திரன்சூழ்ச்சி.

மத்தப்புலன்வென்றவசிட்டன்றரவந்தார்
பத்தையிருமக்கள்பதுமத்தவனைப்பார்
சத்திமுதலானோர்தகவாலிவர்வாழ்நாட்
சுத்தநெறிதேர்விச்சுவாமித்திரனென்போன் உ

அசித்துப்புரஞ்செற்றோனருளானுயர்ந்தோங்கும்
வசிட்டனுடனென்றுமாறுகொண்டுள்ளான்
வசிக்குந்தவவாழ்க்கைவசிட்டன்குலமெல்லா
நசிக்கும்படியொன்றுநாடியிதுசெய்தான். ங

மன்னர்வழித்தோன்றிவசிட்டன்சாபத்தாற்
றுன்னுமரக்கன்றானஞ்சுதாசனெனும்பெயரோன்
றன்னைவிளித்தேவத்தறுகண்ணவனெய்தி
யிந்நூற்றுவர்தம்மையெடுத்துவாய்ப்பெய்தான். ச

வடமீனவளோடும்வசிட்டனதுகேட்டுப்
படர்கூர்ந்தழுதேங்கியாற்றிப்பரம்பேறிப்
புடவிமிசைவீழப்பூமாதுளங்கக்கா
ருடல்விண்டொழியாமேதாங்கியுய்வித்தாள். ரு

வன்பற்பதமேறிவீழ்ந்துமாயாமே
யன்பிற்புவிதாங்கவயர்ச்சிதெளிந்தேங்கி
யின்பமகவெல்லாமிறந்தசோகத்தாற்
றுன்பக்கரைகாணார்புலம்பிச்சோர்காலை. சு

பராசரசம்பவம்.

கொன்னும்வசிட்டன்றன்குலமைந்தரின்மூத்தோன்
மன்னுந்தவச்சத்தியென்பானனையாட்டி
யன்னசெயல்கேளாவாற்றிக்கருப்பத்தாற்
றுன்னும்வயிறெற்றிப்புரளுந்துயர்கண்டான். எ

ஆவாவென்செய்தாயந்தோகெட்டேனென்
றூவாச்சந்தானத்தாளந்தனையெற்றி
மூவாக்குலமுற்றுமுடிக்கமுயல்கின்றாய்
பாவாயெனநைந்துகூறப்பணைத்தோளி. அ

மாமன்மொழிக்கஞ்சிவாளாவமர்போது
தூமென்மலர்க்கூந்தலெற்றுந்துயர்க்காற்றாட்
பூமென்கருப்பத்துட்பொலியுங்குழவிநந்
தாமென்கனிவாய்விண்டழுபேரொலிகேட்டு. கூ

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இவ்வாதையெவரோதையெனவசிட்டன்றன்னுள்ளத்தெண்ணுநிற்கு
மவ்வேலைவைப்படநாகச்சேக்கைமிசைக்கண்படுக்குமறவோன்றோன்றிச்
செவ்வாய்மைமுனிவரநின்சந்தானந்தழைத்தோங்கத்தேயம்வாழ
வொவ்வாதார்குலஞ்சிதையநின்மகனுக்கொருமைந்தனுதிக்கின்றானால்.

அணங்கொருபாலமர்ந்தபிரான்றிருவடிக்குமெய்யன்பனைநிலநூலு [ன்
முணர்ந்துதெளிந்தெனையொப்பான்பாணியாதின்னேவந்துறுமாகாணெ
றிணங்கமொழிந்தேகியபின்வசிட்டனுந்தன்மனக்கவலையின்றிவாழ்ந்து
வணங்குமிடையருந்ததியோடானந்தந்தலைசிறப்பவைகும்போது.

சத்திமனைக்கிழத்தியதிர்சந்திபாலுலகுய்யத்தருமம்வாழ
வுத்தமச்சீர்ப்பராசரன்வந்தவதரிப்பவிராக்கதர்தம்மூர்கடோறு
மொய்த்தெழுந்தகுருதிமழைபொழிந்ததவான்முனித்தலைவன்மகவைநோக்கி
மெய்த்தமனங்களிகூர்ந்துசாதமுதற்சடங்கனைத்தும்விதியிற்செய்தான்.

இளம்பிறைபோல்வளர்மைந்தனொருஞான்றுமடித்தலமீதிருந்துநோக்கி
வளம்பயிலுமங்கலமின்றிருந்தனையால்யாண்டையன்மற்றெந்தையென்ன
வுளம்பரியப்பயந்தாளைவினவுதலுமவள்கேட்டங்குள்ளமாழ்கி
விளம்புவாள்பிள்ளாயுன்றந்தைதனைவெகுண்டரக்கன்மிசைந்தானென்று.

அழுதிரங்கிக்கண்ணீரானிளமைந்தன்றனையாட்டவருகுசூழ்ந்த
வழுவகன்றமுனிமடவார்முனிவராருமருந்ததியும்வசிட்டன்றானுந்
தொழுதியெனக்கிடந்தரற்றியழக்கண்டுகூலிதிருவருளாலின்னே
முழுதுலகும்வாய்மடுப்பலெனவெகுண்டான்முனிவரிளவேறுபோல்வான்.

வசிட்டமுனிவருபதேசம்.

அம்மொழிகேட்டோர்வசிட்டனுலகெல்லாமென்செய்யுமப்பாவந்த
வெம்மைநிலையரக்கர்குலம்வேரறுப்பச்சிவபூசை விழையாயென்ன
விம்முறையேல்விடையூர்தியென்பூசைகொண்டருளியின்னோநல்கும்
செம்மைநூற்றுணிபானசிறந்ததலம்யாததனைச்செப்புகென்றான். ௧௫

கலிவிருத்தம்.

என்றலுநன்றுநீவினயதிந்நலம்
துன்றியபெரும்பதிதூயவானவர்
மூன்றிலுமரங்கமுமுகிலுரிஞ்சநீள்
மன்றமுமுழவறாக்காஞ்சிமாநகர். ௧௬

மறுவறுவானவர்மனிதர்மற்றோ
ருறுபெருந்தவரெனையுள்ளிட்டோர்களும்
பெறலரும்பேறும்பெற்றுய்தும்பெட்பின
திருவழிநினைப்பினுமுத்தியீவது. ௧௭

பன்னருங்கொடியவெம்பாதகர்க்குமப்
பொன்னகர்வரைப்பினோர்தினத்துட்போர்விடை
மன்னவன்றிருவருள்வாய்க்குமேயெனி
னுன்னையொப்போர்க்கினியோதல்வேண்டுமோ. ௧௮

ஆயிடைச்செல்கெனும்வசிட்டனம்புயத்
தூயமென்மலர்ப்பதந்தொழுதெழுந்துதன்
றாயினைவிடைகொடுத்தகன்றுகாஞ்சியிற்
காய்பொறிப்பராசரன்கடுகியெய்தினான். ௧௯

பராசரர்சிவபூசை.

கம்பைநீராடியேகம்பநாயகர்
தம்பணிமலர்ப்பதந்தாழ்ந்துமஞ்சனீர்
வம்பவிழ்கரைமிசைமணிகண்டச்சர
நம்பர்தம்வடகுடாற்றங்கர்நண்ணினான். ௨0

தன்பெயரிலிங்கமொன்றிருத்தித்தாவிலா
வன்பினின்மலரொடுத்தருச்சித்தேத்துழிப்
பொன்புரிவேணியோன்கருணைபூத்தெதிர்
வன்பழவிடைமிசைவந்துதோன்றியே. ௨௧

வேட்டனகூறுகென்றருளவேதநூற்
பாட்டினுற்பலமுறைபழிச்சித்தாழ்ந்துமுன்
வாட்கதிரைம்படைமார்பிற்கிண்கிணித்
தாட்டுணைமழமுனிசாற்றன்மேயினான். ௨௨

ஏறுழ்விடைப்பரிமிசையெம்மாதொடெந்தையோர்
குறுவலியரக்கனாற்கோட்பட்டானவ
னுறுகுலமுழுவதுமறலியூர்புகத்
தெறுவரமெனக்கருள்செய்யவேண்டுமால். ௨௩

ஈண்டுநீயினிதமர்ந்தெவர்க்குமின்னருண்
மாண்டகுசிறப்பினின்வழங்கவேண்டுமா
லாண்டகையென்றிரந்தன்புமேதக
வேண்டலுமெம்பிரான்விளம்பன்மேயினான். ௨௪

பராசரர்வரம்பெறல்.

மைந்தநின்பூசையிற்றம்பிமாரொடு
நுந்தைமற்றெமையடைந்துற்றநோன்மைசா
லந்தணனுமுனைக்காணுமாசையின்
முந்துறநின்றவாகாண்டிமொய்ம்பினோய். ௨௫

அரக்கரைக்கொலைசெயும்வேள்வியாற்றியந்
நெருப்பினிலவர்தமைநீறுசெய்தியின்
வரைப்பினிலென்றுநாமகிழ்ந்துவாழ்துமென்
றுரைத்தனன்மறைந்தனன்வேதத்துச்சியில். ௨௬

பராபரன்றிருவருள்பெற்றுப்பாய்புகழ்ப்
பாராசரநெடுந்தகைபணைத்தவேள்வியிற்
பராய்மனத்தரக்கரைநீற்றிப்பாற்றினான்
பராயசீருறுவர்தம்பகர்ச்சியாற்கதும். ௨௭

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விரிபுனல்படிந்தோர்பருகினோர்தீண்டப்பெற்றுளோர்தமக்கும்வீடளிக்கு
முரிதிரைமுகட்டுவராலினமுகளுமுழங்கொலிமஞ்சணீராற்றங்
கரைமிசைத்தகைசான்முனிவரர்வழுத்துங்கண்ணுதல்வளாகங்களினனு
முறைசெயப்புக்காலுலப்புறுகாண்மினுயர்நிலைப்பெருந்தவமுனிவீர்.

பராசரேசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௭௱௧.

ஆதிபீதீசப்படலம்.

கலிவிருத்தம்.

பராரைமாநிழற்பண்ணவன்மேவிவாழ்
பராசரேசம்பகர்ந்தனமாதவன்
பராயபைம்பொழிலாதீபிதீச்சரம்
பராகமாவினைப்பற்றறவோதுவாம். ௧

அன்னவூர்திமகத்தையழிப்பலென்
றுன்னிவாணிநதியுருக்கொண்டநாட்
கன்னிபால்வளர்கண்ணுதலேவலின்
முன்னரேகிமுகுந்தன்றடுத்தனன். ௨

அங்கங்கெய்தித்தடுத்துமடங்கிடாப்
பொங்குவேகப்புதுநதிநள்ளிராத்
துங்கக்காஞ்சியிற்றண்ணெனத்தோன்றலுஞ்
சங்கபாணிதளர்ந்தழிவுற்றரோ. ௩

பெருவிளக்கொளியாகிப்பிறங்கிமற்
கருணைமால்கரிகாத்தவன்சூழலி
னருகுமேற்றிசையாதீபிதீசமென்
றொருசிவக்குறியுங்கணிருத்தியே. ௪

பூசையாற்றிப்புரிவரம்பெற்றெழுந்
தோசைநீத்தந்தடுத்துயர்வேள்விகாத்
தாசையாடையவனெதிர்வைகினான்
வீசுசோதிவிளக்கொளியண்ணலே. ௫

செங்கண்மாலொருழுமாதிபிதீச்சரம்
பொங்குகாதலிற்போற்றப்பெறுநர்தா
மிங்கண்வேண்டும்வரங்களுமெய்திமற்
றங்கண்முத்திப்பதமுமடைவரால். ௬

ஆதிபிதீசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - எகூஎ.

முத்தீசப்படலம்.

கலிவிருத்தம்.

கற்றைச்செஞ்சடைக்காமருகொள்கையீ
ரற்றநீத்தருளாதிபிதீச்சரஞ்
சொற்றனம்புள்ளரசுதொழுதுயிர்க்
கொற்றமுற்றமுத்தீச்சரங்கூறுவாம். ௧

காசிபன்மனைவியர்கலாய்த்தல்.

மன்னுகாசிபன்றன்மனையாட்டியர்
பன்னுகத்துருப்பாவைசுபருணை
யென்னுமாதரிருவருந்தம்முரு
நன்னலத்தைநயந்துகொண்டாடினார். ௨

தத்தமேனித்தகைநலஞ்சாற்றுபு
மெய்த்தபூசல்விளைத்தனர்தோற்றவ
ருய்த்தவெஞ்சிறைமேவுகென்றொட்டின
ரத்தவத்தனையண்மிவினையினர். ௩

பைத்தபாப்பகலல்குற்பணிமொழிக்
கத்துருப்பெயர்க்காரிகைவேறலாற்
சுத்தநீர்மைச்சுபருணைப்பேரிய
மைத்தகண்ணியைவெஞ்சிறைமாட்டினள் ௪

வீடுசெய்யெனவங்கவள்வேண்டலுங்
கூடுமொன்றும்விசும்பிற்குளிர்மதிப்
பாடுதோன்றுமமிழ்தமப்பண்ணவர்
நீடுகாவலினுள்ளதுநேரிழாய். ௫

அதுகொணர்ந்திங்களித்துநின்வெஞ்சிறை
விதுமுகத்திவிடுவித்துக்கொள்ளெனக்
கதிர்செய்பூண்முலைக்கத்துருகூறலு
மதியழிந்துவருந்திச்சுபருணை. ௬

கருடசம்பவம்.

ஆசின்மெய்த்தவமாற்றியரும்பெறற்
காசிபன்னருள்பெற்றுக்கலுழனை
மாசிலாதமகவெனவீன்றனள்
பேசினளம்மகற்கிதுபெற்றியே. ௭

கேட்டெழுந்துகிளர்ந்துவிடைகொடு
கோட்டமில்புட்குலத்தரசன்னைதன்
வாட்டநீப்பவலிந்துகடுகிவிண்
ணாட்டினின்னமிழ்துற்றுழிநண்ணினன். ௮

அங்கண்வைகியகாவலராயினர்
தங்கள்வீரந்தபப்பொருதேற்றெதிர்
வெங்கண்வெண்கயவேந்தனையோப்பினன்
பொங்குவேகப்பொலஞ்சிறைக்காற்றினால். க௯

அமிழ்தம்வெள்வியகல்வழிமாலெதிர்ந்
தமிழ்சினத்தினுருத்துவெம்போர்செயத்
தமியனுயவுவணனுந்தாக்கின
னிமிழிசைப்போரிருவர்க்குமூண்டதே. க0

ஏழடுக்கியமுந்நாளிருவருந்
தாழ்வொன்றின்றிச்சமர்பெரிதாற்றுழி
யாழிமாயனகமகிழ்கூர்ந்துயர்
பாழிவன்சிறைப்பார்ப்பினைநோக்கியே. கக

வன்புள்வேந்தநின்வீரமகிழ்ந்தன
னென்புடைவரங்கொள்ளெனவீங்கிவ
னுன்பெருந்திறற்குண்மகிழ்ந்தேன்மற்றென்
றன்புடைவரங்கொள்ளெனச்சாற்றினன். க௨

மாயன்வரம்பெறல்.

மாயனம்மொழிகேட்டுமகிழ்ச்சியிற்
றாயையோதியசொற்றவறுயெனி
னீயெனக்குநெடுந்தகையூர்தியா
யேயுமிவ்வரம்யான்கொளநல்கென்றான். க௩

ஆர்த்திகூர்தரவம்மொழிகேட்டொரு
மூர்த்தமெண்ணியுயிர்த்துமொழிந்தமெய்
வார்த்தையிற்பிறழ்வஞ்சியற்றுகளைச்
சீர்த்தியாளன்விடைபெற்றுச்சென்றனன். க௪

கருடன்சிவபூசைசெய்துவரம்பெறல்.

மறுவில்கத்துருபாட்டுச்சுதைக்குடங்
குறியெதிர்ப்பைகொளக்கொடுத்தன்னையைச்
சிறையினீக்கினன்சிறரவங்கள்பாற்
கறுவுசெய்துகொலைசெயுங்காதலான். க௫

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கச்சிவைப்பினையெய்தியாதீபிதக்கடிநகர்வடகிழ்பா
னச்சுமன்னைதன்சிறைக்குவடருளுமுத்தீசனைநயந்தேத்தி
யிச்சையாற்றினிற்பெருவரம்பெற்றனனெறுழ்வலிப்பணிக்கூட்ட
மச்சமுற்றிடச்சிறகெழுவளியினிலலைத்தெழுபுள்வேந்தன். க௬

சித்தமாசொரீஇவிளங்குமேகாலியார்திருக்குறிப்பத்தொண்ட
ரத்தலத்தினில்வீடுபேறெய்தினர்மற்றுமாயடைப்போற்றி
முத்திசேர்ந்தவரெண்ணிலார்மதிமுடிமுழுமுதலடிப்போதின்
வைத்தசிந்தையின்முக்குறும்பெறிந்துயர்மாதவத்தலைவீர்காள். க௭

முத்தீசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - அகச.

பணாதரீச்சரப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கவையடிக்கயவாய்க்கருமேதிகளுழக்கியகடிவாவிச்
சுவைநறும்புனல்வாளைமீன்குதிக்குமுத்தீச்சரத்தியல்சொற்றாங்
குவைமலர்ச்செழும்பொதும்பரிற்பாட்டளிகொழிநறாமடுத்தும்ப
ரவைவியத்தகப்பண்பயில்பணாதரீச்சரமினியறைகிற்பாம். ௧

பழுக்கச்சுட்டபொற்பிழம்பெடுத்தப்பியபரிசுறழ்திருமேனிக்
கழுக்கடைப்படையேந்துமுத்தீசனெண்கழலடிதொழும்பேற்றா
விழுக்கித்தங்கிளைமுருக்குறுங்கலுழனைத்தெறுவலித்திறநோக்கி
வழுக்கில்வெம்பணிக்குலங்களெம்பிரானடிவழிபடநினைவுற்று. ௨

தழங்குதீங்கிளைமுழக்கருத்தடநெடுங்கச்சிமாநகர்சார்ந்து
முழங்குவெண்டிரைசுழித்துவானிமிர்ந்துநான்முகன்மகந்தபச்சீறி
வழங்குநன்னதிவடக்கணாதிபிதவனநகர்த்தென்பாங்கர்ப்
பழங்கணேயறப்பணாதரீச்சரன்றனைப்பத்தியிற்றாபித்து. ௩

விதிமுறைச்சிவபூசனையாற்றிமால்விடைக்கொடிப்பெருமானின்
புதியபூங்கழலருச்சனைப்பேற்றினாற்புள்ளிறைமிடலெய்தி
யதிர்வுறுத்தெனையலைத்திடவெரீஇயினமடைக்கலம்புகுந்தேம்யாங்
கதியெமக்குவேறில்லையென்றிரத்தலுங்கண்ணுதலருள்கூர்ந்து. ௪

பன்னகங்களைப்பணியெனத்தாங்கினன்பன்னகாபரணன்ற
னின்னருட்பெறுமதுகையான்மற்றவையெந்தைபாலரியோடுந்
துன்னும்வெம்பகைக்கலுழனைக்கலுழனேசகங்கொலென்றஞ்சாமே
பன்னிமேன்மையின்வினையினவிம்மொழிபாரெலாமெடுத்தோதும். ௫

சிறியராயினுஞ்சார்பினைவிழையன்மின்றிறல்கெழுபெரியோரா
மறிஞராயினுஞ்சார்பினைவிழைமினேவலரிதழ்விரிகொன்றை
வெறிநறுந்தொடையெம்பிரான்சார்பினைவிழைதலாலுரகங்கண்
மறுவிலாற்றல்சால்கலுழனைவினையினவாழ்ந்தனையோவென்ன. ௬

பவளச்செந்தளிர்நீட்டியபைம்பொழிற்பணாதரீச்சரவைப்பிற் [குங்
குவளைக்கண்ணியோடுயிர்க்கெலாமின்னருள்கொழித்துவீற்றிருந்தோங்
கவளக்கைவரையுரித்தவனிக்கதைகற்றவர்கேட்டோர்க்குந்
தவளப்பூதிகொண்மேனியிர்வெம்பணித்தழல்விடமணுகாதால். ௭

பணாதரீச்சரப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௮௨௧

காயாரோகணப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வயிறுளைந்தலறிச்சங்கினமுயிர்த்தமணிநிலாவெறித்திருள்சீத்துப்
பயில்விரைமுளரியிலஞ்சிசூழ்கிடந்தபணாதரீச்சரமிதுபகர்ந்தாந்
துயில்வரவறியாப்பல்லியந்துவைக்குந்தாமணித்தெற்றிசூழ்காஞ்சிக்
குயிரெனச்சிறந்தவுத்தமத்திருக்காரோணத்தினுண்மையையுரைப்பாம்.

பிரமாதியோர்காலநிர்ணயம்.

படுங்கலைமுகூர்த்தங்காட்டைகளென்றுபகலிராப்பக்கமேதிங்க
ளொடும்புணரிருதுவாண்டுகத்தொடக்கத்தோதியவவயவப்பகுப்பா
னிடும்பைதீர்காலங்கழிவுறுங்காலத்தெல்லையில்யாவருமிறுவர்
நெடும்புலக்குறும்புகடந்துளீருலகினிலைப்பதோர்பொருளுமற்றின்றால்.

ஈண்டுமோரிருபானுயிரந்தலையிட்டியன்றநாற்பத்துமூன்றிலக்க
யாண்டெனப்படுவநான்குகத்தளவையிம்முறையாயிரமிறந்தாற்
காண்டகுமயனுக்கொருபகலதுவேகற்பமாமிரவுமத்துணைத்தவ்
வாண்டகைக்கந்நாண்முப்பதோர்திங்களஃதொருபன்னிரண்டாண்டே.

பகர்ந்தவாண்டொருநூறிருவகைப்பராத்தம்பற்றறில்வெள்ளிவண்டோடு
தகர்ந்திடவுடைத்துமுடங்குகான்றிமிறுதழங்கிசைப்பேட்டொடுநறுந்தே
னுகர்ந்துபண்பயிற்றும்பொகுட்டலர்கமலநோன்மலரணங்கினுக்கரங்க
நிகர்ந்தநாவகத்துப்பழமறைகொழிக்குநெடுந்தகைக்கிறுதிவந்துறுமால்.

அங்கதுமுகுந்தன்றனக்கொருபகலாமம்முறையாண்டுநூறெய்திற்
செங்கதிர்ப்பரிதிமழுங்கவிட்டெறிக்குஞ்சேயொளிவிலைவரம்பிகந்த
பைங்கதிர்க்கடவுட்கவுத்துவமிமைப்பப்பசுந்துழாய்துயல்வருமார்பிற்
கொங்கலர்கதுப்பிற்றிருவிளையாடுங்குரிசிலுமெய்துவனொடுக்கம்.

காயாரோகணப்பெயருண்மை.

இருவருமொருங்கேயிறவருங்காலையெந்தையேயொடுக்கியாங்கவர்த
முருவமீதேற்றிக்கோடலாற்காயாரோகணப்பெயரதற்குறுமால்
வருமுறையிவ்வாறெண்ணிலாவிரிஞ்சர்மாயவர்காயமேற்றாங்கிக்
கருணையாலங்கணடம்புரிந்தருளுங்காலமாய்க்காலமுங்கடந்தோன்.

திருமகள் வழிபாடு.

ஆதலாற்சிறந்ததிருநகரதனையடைந்துளோரிருமையுமெய்தி
யேதகுதுரியங்கடந்தபேரின்பவீட்டினைத்தலைப்படவல்லர்
சீதளகமலப்பொகுட்டணைக்கிழத்திசெஞ்சடைப்பிரானைவில்லத்தாற்
கோதறவழிபட்டச்சுதன்றனக்குக்கொழுநனைப்பெற்றனளங்கண்.

வியாழப்புத்தேள்வழிபாடு.

பிறங்கொளிவிசும்பிற்குரவனும்வியாழப்பெருந்தகையாயிடையெய்திக்
கறங்கிசைவிளரிப்பாட்டளியிமிர்ந்துகளிமதுவுண்டுதேக்கெறிந்தங்
குறங்குபொன்னிதழிநறுந்தொடைவேணியொருவனையருச்சனையாற்றி
யறங்கரைசிறப்பிற்சேந்நாத்தழும்பவாரணமொழிகளாற்றுதிப்பான்.

பிராமணனீயேகடவுளர்தம்முட்பிஞ்ஞகாவேனையோர்தம்முட்
பிராமணன்யானேபிராமணன்றனக்குப்பிராமணன்சுதியுனையிகழ்வோன்
பிராமணனல்லன்றன்குலதெய்வம்விண்டுபின்னெனைத்தொழுமப்
பிராமணற்கிரண்டும்பயப்படாநிரையம்புகுவனென்றுயர்மறைபேசும்.

அடியனேனுன்றாளடைக்கலநீயேயன்னையுமத்தனுங்குருவுந்
துடியிடைப்பதுமைகேள்வனுமயனுந்தொடர்வருஞ்சோதியேசெல்வக்
கொடிமிசையிடபமுயர்த்தருள்கருணைக்குன்றமேயருட்பெருங்கடலே
படிபுகழ்மறைநூல்வடித்ததெள்ளமிழ்தேபகவனேயிணையடிபோற்றி.

வியாழபகவான்வரம்பெறல்.

என்றெடுத்தேத்துமாண்டளப்பானுக்கெம்பிரானெதிரெழுந்தருளி
நன்றுநீவேட்டகூறுமக்கலையருளவாழ்ந்துவீழ்ந்திறைஞ்சினனவில்வான்
குன்றவிற்குழைத்துப்புரிசைமூன்றிறுப்பக்குறுநகைமுகிழ்த்தருள்குழகா
நின்றிருவடிக்கீழிடையறுப்பத்திநெறியெனக்கருள்செயவேண்டும்.

வளங்கெழுவேகவதிநதித்தென்பால்வயங்குமித்தீர்த்தநீர்படிந்து
விளங்குமென்வாரத்துன்னடிச்சேவைவிழைதகப்பெற்றுளோர்தத்த
முளங்கொளுமுறுதிப்பயனளித்தருளிமுத்தியுமுதவியீண்டென்று
மிளங்கதிர்முலையோடினிதமர்ந்தருளாயிவ்வரம்வேண்டுமென்றிரந்தான்.

இயமன்வழிபாடு.

அங்கவைவழங்கிக்கடவுளர்க்காசானும்பெருந்தகையையுமல்கிச்
சங்கவெண்குழையானிலிங்கத்தின்மறைந்தான்றருமனங்கெய்தியேத்தெடுப்பப்
புங்கவன்றோன்றித்தென்றிசைக்கிறையாம்புரவளித்தனையவனங்குநர்க்கு
மங்கருந்தண்டமியற்றிலன்றுழைக்குமாளுமிப்பதமெனவிடுத்தான்.

தென்புலத்தவர்க்குச்செய்கடனுஞ்செலுத்திடின்வீடுபெற்றுய்வார்
மின்பழுத்தன்னநெறித்தவார்சடிலன்வீழெனவெரிங்புறங்கிடப்பப்
பொன்பழுத்தனையவைவந்தழனுப்பட்டுரிதவக்கொள்கையிரனேக
ரன்புசெய்தங்கட்பேறுபெற்றுயர்ந்தாரத்தலமேன்மையார்மொழிவார்.

காயாரோகணப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - அகூரு.

சித்திசப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

மருக்காவிவண்டூதமதுவூற்றும்வாவித்
திருக்காயாரோகணத்தின்சீர்மையிதுசொற்றும்
கருக்காயுமற்றதற்குவடகிழ்சார்கண்டோர்
தருக்காதசித்தீசந்தன்னியல்புசொல்வாம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கம்பைமாநதியின்கரைப்பெருங்காதல்கூர்தவமாற்றுமால்வரைக்
கொம்புமஞ்சளின்காப்பணிந்துமெய்குளிரவாடுநீர்மணங்கமழ்ந்தெழூஉப்
பம்புமஞ்சணீர்நதியெனப்புடைபரந்துசேறலும்பாய்புனற்சடை
யெம்பிரானருள்பொங்குமோகையினிலிங்கமாயவணெழுந்துதோன்றினன்.

கூடுகொள்கையாற்குலவுமஞ்சணீர்க்கூத்தனென்றுபேர்கொண்டநாயக
னுடுதாளிணைசித்தர்பற்பலரணைந்துபோற்றிவான்சித்தியெய்தலாற்
பாடுசான்றசித்தீசனும்பெயர்பார்விளங்குமவ்வண்ணல்சந்நிதி
மாடுகூவலொன்றுன்னினோர்க்கெலாம்வழங்குசித்திசால்சித்ததீர்த்தமே.

ஒற்றையாழியங்கொடிஞ்சிவையமீதொளிபரப்பிவீங்கிருடுமித்தெழுங்
கற்றைவெங்கதிர்க்கடவுளுளினுங்கருமுடத்திறற்காரிநாளினு
மெற்றுதெண்டிரைச்சித்ததீர்த்தநீரெய்தியாடியவ்வேந்தனுடொழுங்
கொற்றவாழ்வினர்க்கெழுபிறப்புநோய்கோடியோசனைக்கப்புறத்ததே.

சித்தீசப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - அகூகூ.

அரிசாபபயந்தீர்த்ததானப்படலம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புரிமுறுக்குடைந்தவிழலராடிப்புண்முரன்றுவாய்மடுக்குமின்னறை
விரிமலர்த்தடம்புடையுடுத்தசித்திசமேன்மையின்விளைவியம்பினு
முரியமற்றதனுத்தரத்துறுமுவணவூர்தியாச்சிரமவைப்பினிற்
றிரிவிலாவரிசாபவெம்பயந்தீர்த்தவானவன்சீர்த்திகூறுவாம். க

சுராசுரர்கலகம் - மாதவன்செய்கை.

செப்புமுன்னைநாளதிதிமைந்தருந்திதியின்மக்களுமிடையறாதுபே
ரப்புமாரிபெய்தெண்ணிலாண்டுகளழக்கறுத்துவெஞ்சமரியற்றுழி
மைப்புறுத்தகண்ணரம்பைமார்முலையுழுதமார்பினர்வலியிழத்தலுந்
துப்பெறிந்தபூங்கமலவாள்விழித்தோன்றலெய்திவெம்படைவிதிர்த்தனன்.

எஞ்சுதானவரஞ்சியோட்டெடுத்திருமையோகுசெய்பிருகுமாமுனி
தஞ்சமாமனைக்கிழத்திபூமகட்டாயெனப்படுங்கியாதிதன்புடை
வஞ்சமின்றிவந்தடைக்கலம்புகவருந்துறேன்மினென்றபயநல்கியப்
பஞ்சின்மெல்லடிப்பாவையாச்சிரமத்தினுள்ளுறப்பாதுகாத்தனள். ங

சீற்றமிக்கெழச்சேந்தகண்ணினன்றிகிரியோச்சியங்கெய்துமாதவன்
போற்றிவாய்தலின்வைகுமாமியைப்பொருக்கெனச்சிரந்துணித்துவீழ்த்தலு
மேற்றெழுந்தகூகூவொலித்திரளிருசெவித்துளையேறுமாமுனி
மாற்றருந்திறல்யோகுநீங்கிமுன்மனைவிபட்டதுமற்றுநோக்கினன். ச

மாதவன்பிருகுசாபம்பெறல்.

கண்டுமாழ்கினன்றுயரின்மூழ்கினன்கண்கள்சேந்தனனிதழ்துடித்தனன்
மண்டுவெங்கனற்பொறிதெறிப்பவம்மாதவன்றனைவெகுண்டுநோக்கினு
னெண்டளிர்க்கரத்தரிவைதன்னைமற்றனக்குமாமியைத்தறுகணாளனாய்
மிண்டினாற்கொலைசெய்துவிட்டினாய்வெய்யபாவிநீயுய்யுமாறெவன். ரு

எடுத்தியம்பியசைவமேயெவற்றுள்ளுமுத்தமமென்னில்யாங்களுங்
கடுத்ததும்பியகண்டனாடிக்கமலமன்றிவேறறிகிலேமெனிற்
றொடுத்துரைக்குமிச்சத்தியத்தினாற்றயருழந்துநீநரகவல்வினை
மடுத்தவெம்பிறப்பொருபதெய்துகவழுவுபாதகக்குழிசியாயினாய். சு

நின்றனக்கடித்தொண்டுபூண்டவர்நெறியலாப்புறத்தாம்றுநால்வழித்
துன்றுதீக்கையுற்றென்றுமுப்புரஞ்சுட்டவெம்பிரான்றிருவடிப்பிழைத்
தொன்றுமூன்றுதண்டேந்தினராயுலப்பிலாதவெந்நிரையமேவுக
மன்றவங்கவர்க்கண்டுளோர்களுமறலியூரினைக்குறுகிமாய்கவே. எ

எவ்வமேமிகுந்தமோகுணம்பயின்றிழிந்தயோனியின்மீனமாதியாம்
வெவ்வினைப்பவந்தோறுமின்னலேவிரவுவாயெனவெய்யசாபமிட்
டவ்வியத்தொகையிரியநூறுமப்பிருகுவெள்ளியாலாவிபெற்றெழு
நவ்விவாள்விழிமனைவிதன்னொடுநாரிபாகனைவழுத்திவைகினான். அ

மாதவன்சிவபூசைசெய்தல்.

நிறைமொழித்தவப்பிருகுவோதியசாபமெய்திநெஞ்சழுங்கியேங்குபு
நறைமலர்த்துழாய்ப்படலைமார்பினருடினனிதன்றீர்வியாதெனப்
பிறைமுடிச்சடைப்பிரானுளன்மனுப்பிரமமைந்துளயாமுளேமினிக்
குறையெமக்கெவனென்றுதேறினன்கொழிதிரைப்புனற்கச்சியெய்தினன்.

தூயநீர்ச்சிவகங்கைவாவியுட்டோய்ந்தெழுந்தொருமாவினீழல்வாழ்
நாயனாரடிவழுத்தியேகியஞ்ஞாங்கர்வைகுமாச்சிரமமொன்றமைத்
தாயிடைச்சிவலிங்கமொன்றுகண்டன்புகூர்தரவருச்சித்தேத்தியங்
கேயுமாறருள்பெற்றுமாதவமியற்றலுற்றனன்வயப்புள்ளூர்தியே. ௧௦

பூதிமேனியனெற்றிதீட்டுமுப்புண்டரத்தினனக்கமாலையன்
சீதவேணியோன்றிருவுருத்திரஞ்செப்புநாவினனடகுநீர்கனி
வாதவுண்டியன்பிராணமைவகைமனுக்கணித்துளக்கமலங்களூற
மாதுபாகனையிருத்தியைந்தழன்மத்திநின்றருந்தவமுஞற்றினான். ௧௧

மாதவன்சிவப்பிரசாதம்பெறல்.

இன்னவாறுபல்லாண்டுமாதவமிவனியற்றுழிமுக்கணாயகன்
பொன்னிமாசலப்பூவைதன்னொடும்புடைமிடைந்துபல்கணங்கள்போற்றறப்
பன்னுமவ்விலிங்கத்தினின்றெழூஉப்பாய்விடைப்பரிமேலணைந்துநீ
நன்னர்வேட்டனகூறுகென்றலுநறுந்துழாய்மலர்ப்படலையோனியான்.

எட்டுறுப்பினுமைந்துறுப்பினுமிருநிலத்திடைவீழ்ந்துவீழ்ந்தெழுந்
தட்டமூர்த்தியாய்போற்றியென்னையாளண்ணலேயடிபோற்றியென்வினைக்
கட்டறுத்தவாபோற்றிமாறிலாக்கருணைவெள்ளமேபோற்றிபோற்றியென்
றுட்டதும்பியகாதலாற்றொழுதுருகிநீர்விழிசொரியவிள்ளுவான்.

ஐயனேயுனைச்சரணமெய்தினேனடியனேனினிமற்றோர்பற்றிலேன்
பொய்யில்கேள்விசால்பிருகுமாமுனிபுகன்றசாபநோய்க்கஞ்சிநொந்துளே
னுய்யுமாறருள்செய்யவேண்டுமென்றுரைத்தலந்துநின்றிரப்பவெம்பிரான்
மையுலாம்விழிப்பதுமைகொங்கைதோய்மார்பகேளெனவாய்மலர்ந்தனன்.

கலிநிலைத்துறை.

நடுவிகந்திடாநம்மடித்தொழும்பராணுட்டப்
படுவதொன்றெதுவஃதவ்வப்பயன்றனைப்பயந்தே
விடுவதல்லதுபழுதுறுதின்றுநீமெலிய
வடுமிச்சாபமுமனுபவித்தல்லதுவிடாதால். ௧௫

தாங்குங்கொள்கையினுயர்ந்தநம்மடியவர்தமக்கோர்
தீங்கிழைத்திடுங்கொடியரைச்செகுப்பதேகரும
மாங்கும்வல்லிருட்குழிவிழுந்தழுங்குவரந்தோ
யாங்கணுய்வரெம்மடியவர்தமக்கிடரிழைத்தோர். ௧௬

பெருகுமன்பினாலெம்மைநீவழிபடும்பேற்றா
லிருமைசான்முனிசபித்திடுமையிருபிறப்புந்
திரிபுறாதுலகினுக்குபகாரமாந்தெளிநீ
யருளுமைந்தினிலைந்தினிற்றண்டமும்புரிகேம். ௧௭

என்றுவாய்மலர்ந்தருளலுநெடியவனிறைஞ்சி
நன்றுமுய்ந்தனனடியனேன்ஞாலத்தினையே
சென்றுதண்டமுமருளுமற்றியான்பெறச்செய்யின்
மன்றவிப்பெரும்பேற்றினும்பேறுமற்றுளதோ. ௧௮

இன்னுமோர்வரம்வேண்டுவலெளியனேற்குன்பான்
மன்னுமேதகுமுழுவலன்பருண்மதிவள்ளால்
பன்னுமிவ்வரிசாபவெம்பயந்தவிர்லிங்கந்
தன்னிலென்றுநீயமர்ந்தருளென்றலுந்தலைவன். ௧௯

வேட்டயாவையும்வழங்கினனுவகைமீதூர்ந்து
பாட்டளிக்குலம்விருந்தயர்பசுந்துழாய்மார்பன்
னோட்டலர்க்கரங்குவித்தெதிர்நிற்பமுச்சுடரா
நாட்டமூன்றுடைநாயகனிலிங்கத்தின்மறைந்தான். ௨0

ஞானேசமுதலியகோயில்.

அனையசூழலின்குணதுமுக்காலமுமறிவான்
முனிவர்சிற்சிலரெய்திமுனிலிங்கமொன்றிருத்தி
யினியபூசனையியற்றிடவவர்க்கதுவிந்தார்
கனியுமன்பருக்கருளுமுக்காலஞானேசம். ௨௧

விதந்தமற்றிதன்வடக்கதுவெம்புலனடங்க
மதங்கமாமுனியருச்சனைபுரிமதங்கே
மதன்குடக்கபிராமீசமச்சுதன்குறளாய்ச்
சிதைந்துமாவலிதபத்தெறவழுத்தியவரைப்ப. ௨௨

அத்தளிக்குடபாலதன்றிமையவர்கடைபோ
தத்திமேலெழும்வெண்கரியருச்சனையாற்றி
யத்திகட்கரசாகிவிண்ணரசினைத்தாங்க
வத்தனருள்பெறுமயிராவதீச்சரமால். ௨௩

துவற்றுதேத்துளிதுறுமலர்ப்பொதும்பர்சூழ்கிடந்த
விவற்றுளொன்றனிலெந்தைதாள்வழிபடப்பெற்றோர்
கவற்றும்வல்வினைப்பிறவிவித்தாயகாமாதி
யவற்றினிங்குபுமழுவலானடியிணைசேர்வார். ௨௪

அரிசாபபயந்தீர்த்ததானப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௮௬௫.

இட்டசித்தீச்சரப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திகழரிசாபந்தீர்த்ததிருநகர்முதல்வானுடன்
புகழயிராவதீசப்பொன்மதில்வரைப்பிறாக
நிகழ்தருதளிகளொன்றாநிறையயிராவதீசத்
திகழ்தருந்தென்பாலிட்டசித்தீசத்துண்மைசொல்வாம். ௧

தொழுதகுபெருமைசான்றசுக்கிரனங்கணெய்தி
கெழுதகுபூசையாற்றிக்கிடைத்தனன்சித்தியெல்லா
முழுதருள்பெற்றவன்றேன்மொழிவழித்ததீசியெய்தி
வழிபடுமுறையினைத்திவச்சிரயாக்கைபெற்றான். ௨

உதீசிமாநாகங்கோட்டிமுப்புரமொறுத்தவ்விரா
வதீசனுக்கணியதென்பால்வைகியவுணர்வுக்கெட்டா
வதீதனைவழுத்தியநாள்வச்சிரயாக்கைபெற்ற
ததீசியின்செயல்விரித்துச்சாற்றுவன்முனிவீர்கேண்மின். ௩

பிருகுவின்மரபிற்றோன்றும்பிறங்குசீர்த்ததீசிமேலோ
னருவிமாமதமால்யானைக்குபனெனுமரசன்றன்னோ
டொருவருங்கேண்மையெய்தியளவளாயுறையுங்காலை
யிருவருமொருநாட்கூடிநகுபொழுதினையசொல்வார்.

விப்பிரர்கொல்லோவன்றிவேந்தரோபெரியரென்னு
மப்பொழுதந்தணாளரரசரிற்சிறந்தோரென்னச்
செப்பினன்றதீசிமன்னன்மன்னரேசிறந்தோரென்று
னிப்பரிசிருவருக்குமெழுந்ததுவயிரப்பூசல். ரு

அழலெனமுனிவன்சீறியடித்தனனடித்தலோடு
மழலைவண்டிமிருந்தாரான்வச்சிரஞ்சுழற்றிவீசிப்
பழமறைமுனிவனுக்கையிருதுணிபடுப்பவன்னோன்
கிழமைகூர்வெள்ளிதன்னைநினைந்துகீழ்நிலத்துவீழ்ந்தான். சு

சுக்கிரனுபதேசம்.

சுக்கிரனுணர்ந்துபோந்துதுணியுடல்பொருத்திக்கூட்டி
யக்கணத்தெழுப்பித்தேற்றியறைகுவான்முனிவகேண்மோ
நக்கலர்கமலவாவிக்காஞ்சியினணுகியன்பான்
முக்கணற்றொழுதியாண்டுங்கொலையுறாமுதன்மைகோடி. எ

இழைமணிமாடக்காஞ்சியிட்டசித்தீசவைப்பின்
மழைதவழ்மிடற்றுப்புத்தேண்மலரடிவழுத்திப்பெற்றேன்
விழைதகுமிருதசஞ்சீவனியிதுவதன்றென்பாங்கர்த்
தழைபுகழிட்டசித்திதரும்புனற்றடமொன்றுண்டால். அ

அத்தடம்படிந்தோர்தம்பாலாருள்சுரக்குமீசன்
பத்தியாலதனைக்கண்டோர்நீண்டினோர்பருகலுற்றோர்
புத்தியோடாடப்பெற்றோரறம்பொருளின்பம்வீடாஞ்
சித்திகள்பெறுவாரென்றாலதன்புகழ்செப்பற்பாற்றோ. கூ

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மல்லனீரிலாரமூழ்கிடின்மகவிலான்மகவீன்றிடு
மில்லமில்லவன்மனைவியெய்துவனுயுளில்லவனாயுறுங்
கல்வியில்லவன்கல்வியெய்துவன்கண்ணிலான்விழிபெறுகுவன்
செல்வமில்லவன்செல்வமேவுவனரசிலானரசுசெய்யுமால். க0

அலகைபூதபாதாதிபற்றியலைக்கநின்றவரிராவிநாட்
குலவுமத்தடமாடினங்கவைகோடியோபனைபின்னிடுங்
கலிகெழுந்துயர்குட்டவெம்பிணிமுயலகன்பெருநோயெலாம்
விலகிநீங்குமங்கீர்படிந்திடுமக்கணத்திதுமெய்மையே. கக

காதளாவியகுழைகிழித்துவிடங்கனிந்துகுமிழ்ம்மிசை
மோதுமையரிவாட்டடங்கண்முகிழ்த்தகொங்கைநுணங்கிடை
மாதராயினுமைந்தராயினும்வந்துபூம்புனலாடினோ
ரியாதியாதுவிரும்பினாலுமவ்விட்டசித்தியளிக்குமால். கஉ

முந்துகந்தனில்வாணிதன்னொடுமுளரிமெல்லணைநான்முகன்
வந்துமேதகுமிட்டசித்திமலர்த்தடந்தனிலாடிநன்
றுந்துசத்தியலோகவாழ்க்கைபடைத்திடுந்தொழிலோடுற
விந்துசேகரனருள்கிடைத்தனனென்றுழ்வலித்தவமுனிவனே. கந

ஏயுநற்றிரேதாயுகத்தினென்றூழ்படிந்துமறைத்தனு
வாயிரங்கதிரான்டுதென்றினத்தத்தடம்படிந்தோர்க்கரன்
மேயசித்திகள்விரைவினல்கவும்விருச்சிகத்தினநாளுறின்
வாயுமப்பயன்மிகவிரைந்துவ[illegible] கச

துவாபரத்தரிபூவின்மாதொடுதோன்றியத்துடமாடினன்
றவாதுபல்லுயிர்காக்கும்வாழ்வொடுமால்பதந்தனைப்பெற்றன
னுவாமதிக்கலையானனும்பிகைகலியுகத்திலங்கீர்படிந்
தவாநிறைந்தருள்கம்பநாயகர்பாதிமேனியடைந்தனள். ௧௫

இவர்களனல்வருநான்குகங்களுக்கிறைவராயினர்மற்றுமிச்
சிவமுறும்புனலாடிமுன்றினகரனிழந்தபலெய்தினன்
றவளமாமதிமுயலகப்பிணிசாடினன்பகனென்பவன்
றுவளுமாறுயர்வீரபத்திரன்றெருட்டவாள்விழிபெற்றனன். ௧௬

வடதிசைக்கிறைவரைமடக்கொடிவடிவுநோக்கியிழந்தகண்
ணுடனரற்கொருநட்புமெய்தினனேதுதுச்சருமேளனு
முடல்கனைக்கருவிழியுருப்பசியுகளகொங்கைமணந்தனன்
மிடல்கொள்கண்ணனளித்தசாம்பனுங்குட்டவெம்பிணிநீங்கினன்.

நிடதமன்னியநளனயோத்தியிராமனிள்புகழ்ப்பாண்டவர்
மடனிலிங்கிவர்முத்திறத்தருமருவலாரையழித்துவென்
றிடனிழந்திடுமிறைமையெய்தினரிரியுமைம்புலவாழ்க்கையோய்
தடவுமென்மலரிட்டசித்திதருந்தடம்படிபேற்றினல். ௧௮

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தோற்றமார்வடாதுவெங்நோய்துமித்திடுந்தருமதீர்த்தம்
போற்றருங்குணதுவிண்ணோர்புகழ்தருமருத்ததீர்த்தங்
கூற்றுறுந்தெனதுமாருக்குரைபுனற்காமதீர்த்தஞ்
சாற்றியகுடாதுமுத்தித்தீர்த்தமத்தடத்துளோங்கும். ௧௯

நாற்பயனுதவுந்தீர்த்தநான்குடையினையதீர்த்த
மேற்புறத்திங்கடோறுஞ்சிறந்ததேயெனினுஞ்சால
மேற்படுமிடபங்கும்பம்விருச்சிகங்கடகந்தன்னிற்
பாற்படுமெவற்றின்மேலாங்கார்த்திகைப்பானுவாரம். ௨0

பானுநாள்விடியற்போதினத்தடப்படிந்தோர்யாவ
ரேனுமங்கவர்களெய்தும்பேறெவரியம்பற்பாலார்
தானநீராடலோமங்கணித்தலத்தடவுக்கஞ்சத்
தேனலரிட்டசித்திதீர்த்தத்தொன்றனந்தமாமால். ௨௧

ஆதலினங்கண்மூழ்கியருங்கொலையுருதமேன்மை
தீதறப்பெறுகென்றேதிமிருதசஞ்சீவனிப்பேர்
மேதகுமனுவுநல்கிச்சுக்கிரன்விடுப்பப்போந்து
கோதிலாமுனிவனேகைகூர்ந்துகாஞ்சியினைச்சேர்ந்தான். ௨௨

ததீசிமுனிவர்வச்சிரயாக்கைபெறுதல்.

சேர்ந்தவனிட்டசித்திதீர்த்தநீர்ப்படிந்துகண்ணீர்
வார்ந்திடவிட்டசித்திவரதனையருச்சித்தன்பு
கூர்ந்தனன்சின்னாட்பின்னக்குழப்பிறைமோலிதோன்றி
யீந்தனன்வயிரயாக்கையினிவருங்கொலையெய்தாமே. ௨௩

அவ்வகைவரங்களெல்லாமண்ணல்பாற்பெற்றுமீண்டு
மெய்வகைத்ததீசியெய்திவேத்தவைவேந்தன்சென்னி
யெவ்வமிலிடத்தாளோச்சியுதைத்தனனிவனுக்கென்று
தெவ்வெனச்சமரினேற்றமாயனைச்செயிர்த்துவென்றான். ௨௪

இடனுடைப்புரிசைசுற்றுமிட்டசித்தீசவைப்பிற்
குடதிசைமுகமாவைகுங்குழகனைவழிபட்டின்னு
நடலைதீர்ந்திட்டசித்திநண்ணினரெண்ணிலாதார்
புடவியிலதன்றனீர்மையாவரேபுகலுநீரார். ௨௫

இட்டசித்தீச்சரப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௮௮௮.

கச்சபேசப்படலம்.

கலிநிலைத்துறை.

ஓடரிக்கண்ணியாராடலும்பாடலுமோவுறாச்
சேடமையிட்டசித்தீசமேன்மையிதுசெப்பினோ
மாடமைத்தோளியோர்பாகர்வாழன்னதன்றென்புடைத்
தோடவிழ்சோலைசூழ்கச்சபேசத்தியல்சொல்லுவாம். ௧

பெருமானுலகினைப்படைத்தல்.

ஐவகைப்பூதமாலயன்முதலாயபல்சராசர
மெவ்வகையுள்ளவுமீறுசெய்திமயமாமயிலொடு
மவ்விராவாட்டயர்ந்தங்கவைமீளவுமாக்குவான்
றெவ்வடுகுறுநகைச்சிற்பரன்றிருவுளஞ்செய்தனன். ௨

உலகெலாமழிவுறுங்காலையுந்தன்னுடைக்காவலிற்
குலவுசீர்க்காஞ்சியிற்சோதிலிங்கத்துருக்கொண்டெழுந்
திலகுதன்சத்தியான்முன்புபோல்யாவையுநல்கினு
னலகிலாநாமரூபங்களுமாக்கினனண்ணலே. ௩

பிரமன்வழிபட்டது.

போற்றுசீரவ்விலிங்கத்தினைப்போற்றினோர்யாவரு
மாற்றரும்வீடுபேறெய்துவர்நான்முகன்வாணியோ
டாற்றலானுயிடைமாதவமாற்றியவ்வங்கண
னூற்றமாரருளினாற்படைத்திடுந்தலைமைபெற்றோங்கினன். ௪

மாயன்வழிபட்டது.

முன்னொருபிரமகற்பத்திடைநாரணன்மூரிநீர்
மன்னுமந்தரமலையாமையாய்த்தாங்கிவார்கடல்கடைந்
தின்னமுதஞ்சுரர்க்கீந்தபின்வெஞ்செருக்கெய்தியாங்
கன்னமுந்நீர்முழுதுழக்கினனுலகெலாமஞ்சவே. ௫

அச்சநீத்தாருயிருய்வகையருள்சுரந்தாங்குறீஇக்
கச்சபத்தின்னுயிர்செற்றதனோட்டினைக்கதுமென
நச்சியவெண்டலைமாலிகைநடுவுறக்கொண்டனன்
பச்சிளங்கிள்ளைபால்வீற்றிருந்தருளியபண்ணவன். ௬

இப்பெரும்பிழைதவிர்ந்துய்யுமாநாரணனெம்பிரான்
வைப்பெனுங்காஞ்சியிற்சோதிலிங்கத்தினைவழிபடூஉ
மெய்ப்படுமன்பினாலிரந்திரந்தேத்தலும்விடைமிசைத்
துப்புறழ்செஞ்சடைத்தோன்றலங்கவனெதிர்தோன்றினன். ௭

காண்டலுங்கண்கணீர்வார்தரக்கரையறுகாதலிற்
பூண்டபேரன்பினால்வீழ்ந்துவீழ்ந்திறைஞ்சினன்போற்றினா
னாண்டகாயாருயிர்த்தலைவனேயங்கணாவடியனேன்
வேண்டுவயாவையுந்தந்தருளென்றெதிர்வேண்டினான். ௮

மாயன்சிவப்பிரசாதம்பெற்றது.

மழுவலானிணையடிப்பொதுவறுபத்தியுமால்பதத்
தழிவிலாவிறைமையுமவ்விலிங்கந்தனக்கன்றுதொ
டொழிவருங்கச்சபேசத்திருநாமமுமும்பரார்
தொழுதெழவாய்கரனுமையொடுமிளிதயர்தோற்றமும். ௯

அத்தலந்திகழவிமுத்தமாந்தலத்தினுமதிகமா
வைத்திடுந்தலைமையும்வரமெனக்கொண்டனன்வள்ளலுஞ்
சித்தநீடுவகையினங்கவைமுழுவதுந்தேத்துழாய்ப்
பத்தனுக்கருள்புரிந்தாயிடைமன்றந்தனன்பரையொடும். ௧௦

அன்றுதொட்டென்றுமக்காஞ்சியினீங்கலாதமர்ந்திடுங்
கொன்றைவார்சடையனைக்கச்சபேசன்றனைக்கும்பிடச்
சென்றவர்கண்டவர்கருதினர்யாவருந்தீதுதீர்ந்
தொன்றியொன்றாநிலைமாறிலாமுத்திபெற்றுய்வரே. ௧௧

துர்க்கைமுதலியோர்வழிபட்டது.

துர்க்கையுஞ்சாத்தனுமிரவியும்வயிரவத்தோன்றலு
நற்கரிமுகனுடனைவருங்கச்சபநாயகன்
பொற்கமலப்பதம்பூசனையாற்றியங்குடனமர்ந்
தொற்கமில்கணங்களோடப்புரிக்காவல்பூண்டுறுவரால். ௧௨

சத்தியமொழிவிநாயகன்சிறப்பு.

அந்தணீர்கச்சபேசக்குடவைப்பினிலாயிதழ்க்
கந்தமாமலர்மிசைச்செல்விதன்கணவனார்போற்றிசெய்
துய்ந்தசத்தியமொழிவிநாயகனுளனவற்போற்றினா
ரெந்தவூறுந்தவிர்ந்திம்மையேவேட்டவையெய்துவார். ௧௩

கச்சபேசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௯0௧.

சகோதரதீர்த்தப்படலம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வெள்ளிக்குப்பாயம்போர்த்தெனப்பொலிந்தவெண்டிருநீற்றொளிக்கதிர்
ளள்ளிக்கொள்வனையமேனியீர்கச்சபாலயமறைந்தனமலநோய்
தள்ளிப்பேறுதவுமத்தலக்குடபாற்சகோதரதீர்த்தநீர்க்கரையிற்
புள்ளித்தோலாடைபுனைந்தநம்பெருமான்பொலிவுறுமிருக்கைசன்மொழிவாம்.

மாண்டகன்னீசவரலாறு.

மன்னுமெய்க்கிளவிக்கரிமுகன்றென்பாலைமாண்டகன்னீசனைவழுத்திக்
கன்னியோர்பாகனருளினன்மாண்டகன்னிமாமுனிவரனென்பான்
மின்னிடைக்கடவுண்மடந்தையரைவர்வீங்கிளவனமுலைதிளைத்துப்
பொன்னுலகிடத்தினுகர்பெரும்போகம்புவிமிசையிருந்தவாநுகர்ந்தான்.

மதமலமறுக்குஞ்சகோதரத்தடநீர்வரைப்பிடைவேளாகமொன்றியற்றி
யதனிடையினிதுவீற்றிருந்தரம்பையகலாரிளமுலைபம்பாகஞ்
சதமகன்சமுழ்ப்புதுகர்ந்தனனெனநாட்கடைமுறைமுத்தியிற்சார்ந்தான்
சிதரரித்தடங்கணரம்பையர்தந்தீர்த்தமென்றுரைப்பதத்தடமே. ௯

வரிவிழிசேப்பக்குடமுலைமதர்ப்பவால்வளைகறங்கவண்டிமிரும்
தெரிமலர்க்கூழைத்தையலார்குடையுந்தெண்புனற்றடமதன்குலமே
லெரியலர்குடங்கைமாண்டகன்னிசனினிதமரிருக்கையின்குடசா
ரரிலறுத்தருள்வன்னிசமொன்றுண்டாலதுவருங்காரணங்கேண்மின். ௪

வன்னீசவரலாறு.

மூதழற்கடவுடனுடன்பிறந்தமுன்னவர்மும்மையருள்ளார்
பேதுறுமதுகைமூவரும்விண்ணோர்பெறுமவிசுமக்கலாற்றுது
மேதகுமாவியிறந்தனரதனைவிரிதழற்பண்ணவனோக்கி
யாதினிப்புரிவலெனக்குமிவ்விடும்பையெய்துமேயென்றுளமழுங்கி. ௫

மகோததியனையவையரம்பையர்தம்வாவியினுள்ளுறக்கரந்து
சகோதரர்தம்மையிழந்தவென்றனக்குச்சகோதரதடம்புனலே
யுகாதெனைப்புரத்தியென்றுரைத்தங்கணுறைந்தனனென்றதொட்டளிகண்
முகேரெனப்பாயுமலர்த்தடமதற்குமொழிபெயர்சகோதரதீர்த்தம். ௬

எரிதழற்புத்தேளன்னணமுறையவிமையவரெங்கணுந்துருவிப்
பெரிதிளைப்பெய்தியான்வெந்துறலும்பெருந்தடத்துறையுமீனவர்க்குத்
தெரிதரவியம்பிற்றுகவெங்கனலோன்செயிர்த்தடைக்கலம்புகுந்தேனைப்
பரிவுறக்காட்டிக்கொடுத்தநீர்தூண்டிற்படுகொலையுறுகெனச்சபித்து. ௭

மின்னெனவெளிக்கொண்டிரந்துநின்மறைக்கும்விண்ணவர்தங்களைநோக்கி
முன்னுறப்போமின்வருவலென்றியம்பிமுளரிநீர்த்தடமதன்கரையின்
மன்னுவன்னிசவள்ளலையிருத்திமரபுளியருச்சனையாற்றி
யன்னவனருளாற்பெற்றனனிமையோரவியெலாஞ்சுமந்திடுமாற்றல். ௮

தமையன்மார்மூவர்சுமக்கலாற்றுதுதளர்வுறுமவியெலாந்தானே
கமையுறப்பொறுக்குமதுகைபெற்றிமையோர்குழாத்தினுட்கலந்தனன்கனலோ
னிமையவில்வாங்கிப்புரிசைமூன்றிறுத்தவெந்தைவன்னிசனையண்மி
யமைவருமன்பால்வழிபடப்பெற்றோரருந்திறலெய்திவீடடைவார். ௯

சவுனகீசவரலாறு.

விளம்புவன்னிசந்தனக்குமேல்பாங்கர்விழைதருஞ்சவுனகீச்சரத்திற்
களங்கனிவிளர்ப்பவிடங்கிடந்திமைக்குங்கறைமிடற்றடிகளையிருத்தி
வளம்பயில்காதற்சவுனகமுனிவன்மரபுளியுருச்சனையாற்றி
யுளம்பயின்மலநோய்தவிர்ந்துபேரின்பவீடுபேறுற்றதவ்வரைப்பு. ௧௦

சகோதரதீர்த்தப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௧௧.

சுரகரீசப்படலம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தாண்டவமாடுதல்வல்லபெம்மான்றங்குஞ்சகோதரதீர்த்தப்பாங்கர்
மாண்டகன்னீசம்வன்னீசம்விண்ணுயண்ணும்புகழுஞ்சவுனகீச
மீண்டுவிளங்கவெடுத்துரைத்தாமெம்மையுநல்கிடுஞ்சவுனகீசத்
தாண்டகைவைப்பின்வடக்கண்மேவுமண்ணற்சுரகரம்பன்னுகிற்பாம்.

மந்தரமலைச்சிறப்பு.

கலிவிருத்தம்.

சுந்தரத்திருமான்முதற்சூழ்சுப
ரந்தரத்தவர்க்காரமுநீந்தது
கந்தரத்துமுனிக்கணம்யோகுசெய்
மந்தரப்பெயர்மால்வரையுண்டரோ. உ

சுற்றும்யாளிமுழைதொறுந்துஞ்சுவ
வெற்றிமத்தெனவேலைகடைந்தநா
ளற்றநீக்குமமுதமிடையிடைப்
பற்றிநின்றிடும்பான்மைநிகர்க்குமால். ௩

வஞ்சிக்கப்படுதானவர்வாரியின்
விஞ்சத்தீஞ்சுவைவேறுகடைந்தெய்தத்
தஞ்சத்தற்பெயர்ப்பானகழ்தன்மையி
னெஞ்சப்புற்றங்ககழ்வகுடாவடி. ௪

துன்னுதானவர்சூழுஞ்செயலறிந்
தன்னகுன்றம்பெயர்ப்பரிதாகமா
மன்னுமார்பினன்பள்ளிகொண்மாட்சியி
னின்னுநீன்முகின்மீமிசைத்துஞ்சுமால். ௫

திரிபு.

செல்லியங்குழல்வண்டிமிர்தேக்கடி
வல்லியங்குழவாட்கண்படுப்புவ
வல்லியங்குழலார்வெறியாடிய
பல்லியங்குழலாற்பனித்தஞ்சுமால்.

இ-ள். செல் இயங்கு உழல் வண்டு இமிர் தேக்கு அடி - மேகங்கள் தவழாநின்ற (உன்னதத்தையும்) சுழன்று திரியாநின்ற வண்டுகள் (தேனுண்டு) இசைபாடும் (பூங்கொத்தையுமுடைய) தேக்கமரத்தின்கீழ்,—வல்லியம் குழவாள் கண் படுப்புவ - புலிகள் தமது குட்டியை ஒள்ளிய கண் துயிலச்செய்யும்,—அல்லி அம் குழலார் வெறியாடிய - அகவிதழால் (ஆகியமாலையையணிந்த) அழகிய கூந்தலையுடைய குறமகளிர் வெறியாட்டயருமிடத்தினிகழும், — பல் இயம் குழல் ஆல் பனித்து அஞ்சும் - பலவாச்சியங்களின் ஒலியாலும் வேய்ங்குழலொலியாலும் நடுக்குற்று அஞ்சும் என்க.

குழவென்னும் பண்பு ஆகுபெயராய்க் குட்டிமேல் நின்றது. வெறியாடல் குறிஞ்சி நிலத்திற் குரிய கருப்பொருள்களுள் ஒன்று. இயம் குழல் கருவி ஆகுபெயராய் ஒலிமேல் நின்றன. ஆல் இரண்டனுள் முன்னது ஏதுப்பொருளில் வந்த மூன்றாமுருபு. பின்னது அசைநிலை. கூ

இரண்டடிப்பாடகமடக்கு.

காமரம்புகனற்றமரம்பரர்
காமரம்புகனற்றமரம்பர
ரேமமல்கியிருந்துணர்கான்றரு
வேமமல்கியிருந்துணர்கான்றரும்.

இ - ள். காமர் அம்பு கனற்று அமர் அம்பரர் - மன்மதபாணம் உடற்றுகின்ற போரினுக்கு (உடைந்த) அரமடந்தையர்கள்,—புகல் காமரம் நல் தமரம் - பாடும் காமரமென்னும் (ஓரிசையாகிய) நல்ல ஒலியை,—பரர் ஏமம் அல்கி இருந்து உணர் கான் தரு - அந்நியரான குறவர் மனைறவிடத்திற் றங்கியிருந்து (கேட்டு இசைவிகற்பங்களை) ஆராயும் காட்டின்கண்ணுள்ள மரங்களில், — ஏமம் மல்கிய இருமை துணர்கான் தரும் - பொன்னொளிபோல் நிறைந்து மலர்ந்த பெரிய பூங்கொத்துக்கள் வாசம் வீசும் என்க.

அம்மலையினுள்ள குறவரும் பண்விகற்பங்களுணர்ந்தோர் என்பார் உணரென்றார். மகளிர் பாடலால் மலருமரம் குருக்கத்தியாதலால் இருந்துணர் கான்றரும் என்றார். மல்கியவென்னும் பெயரெச்சத்தின்னீறுகெட்டது. காமர் ரகரவீறு உயர்வின்கண்வந்த பால்வழுவமைதி. ௭

வண்டலம்படர்மாவரையாரமை
வண்டலம்படர்மாவரையாரமை
பிண்டியைவனநாறியவில்லமுன்
பிண்டியைவனநாறியவில்லமும்.

இ - ள். வண்மை தலம் படர் மா வரையார் - வளவிய இடங்களிற் செல்லும் கரியமலையின்கண்ணுள்ளகுறவரது,—அமை பிண்டி ஐவனம் நாறிய இல்லம் முன் - செய்தமைத்த தினைமாவும் மலைநெல்லும் பொருந்திய குடில்களின் முன்னர்,—பிண்டி ஐவனம் நாறிய வில்லம் உம் - அசோகும் அழகிய சுனைநீரும் மணம் வீசாநின்ற வில்லமரமும்,—வண்டு அலம்பு அடர் மா அரை ஆர் அமை - வண்டுகளிசை பாடாநின்ற நெருங்கிய மாமரமும் தூரையுடைய ஆத்தியும் மூங்கிலும் உள்ளன.

நிலைமொழி யுயிரீறுதலின் வருமொழியின் இகரவுயிரூர்ந்த மெய்யை வகர உடம்படு மெய்யாக்கி இல்லமெனக்கொண்டு தேற்றுமரமெனினும் அமையும். விரிந்துந் தொக்குநின்ற உம்மைகள் எண்ணுப்பொருளில்வந்தன. அன்றிக் கடைநிலைத்தீவக அணியெனினு மமையும். உள்ளன என்னும் பயனிலை தொக்கது. இத்தொடர் பொருள்குறித்துவந்த அடிமறிமாற்று. ௮

வானரம்பையராவிற்பயந்துதாய்
வானரம்பையராவிற்பயந்தரத்
தானிரப்பவியக்கணத்துண்டிசை
தானிரப்பவியக்கணந்துஞ்சுமே.

இ - ள். வானரம் பை அராவின் பயந்து வான் தாய் - குரங்கினங்கள் படத்தையுடைய பாம்பிற்குப்பயந்து விண்ணுலகிற்றாவி,—அரம்பையர் ஆவின் பயம் தர - அங்ஙனம் வசிக்கும் தெய்வமகளிர் காமதேனுவின் ஒளிபொருந்திய பாலை யூட்ட,—தாம் நிரப்பு அவிய கணத்து உண்டு - அக்குரங்கினங்கள் தாம் (பசியென்னும்) வறுமைகெடக் கணப்போதினுண்டு,—தால் இசை நிரப்ப வியம் அம் கண் துஞ்சும் - அம்மகளிர் நாவாலிசையைப்பாட (தாலாட்டுப்பாடல் செய்ய என்றபடி) (அக்குரங்கினங்கள்) பரந்த அழகிய கண்டுயில் கூரும் என்க.

தாகிரப்பவிய எனபது எதுகை நோக்கி ந:ரம் னகரமாகவந்தது. யமகம் திரு கல்களில் இவ்வாறு பெரும்பாலும் வருதலை யுணர்க. ஏ ஈற்றசை. அராவின் உருபுமயக்கம். கூ

முரசபந்தம்.

ஒவ்வோரடி ஒவ்வொருவரியாக நான்கடியும் எழுதி மேலிரண்டுவரியும் தம் முட் கோமூத்திரியாகவும், கீழிரண்டுவரியும் தம்முட் கோமூத்திரியாகவும், சிறுவார் போக்கப்பட்டு மேல்வரி யிரண்டாம் வரியினும் மூன்றும் வரியினும் நான்காம் வரி யினும் கீழூற்று மீண்டு மேல் நோக்கவும், கீழ்வரி அவ்வாறே மேலூற்று மீண்டு கீழ்நோக்கவும் பெருவார் போக்கப்பட்டு இந்தவார்நான்கும் நான்குவரியாக வருவது.

அடிமடக்கு.

வஞ்சிவிருத்தம்.

தானமாந்தருமஞ்சரி - வானமாந்தருமஞ்சரி
தானமாந்தருமஞ்சரி - வானமாந்தருமஞ்சரி.

இ - ள். தானம் ஆம் தருமம் சரி - சோடசதானமும் உண்டாகிய முப்பத்தி ரண்டறங்களும் (உலகத்தில்) சஞ்சரிக்க,—வானம் ஆம் தரும் அம் சரி - மேகங்கள் நீரைப்பொழியாநின்ற அழகிய அம்மலையின் பக்கத்தில்,—தானம் மாந்தரு மஞ் சரி - யானையின் மதசலங்களும் மாமரங்களின் பூங்கொத்துக்களும்,—வானம் மாந் தர் உம் அஞ்சு அரி - விண்ணுலகத்தி லுள்ளோரும் மண்ணுலகத்தி லுள்ளோரும் அஞ்சாநின்ற சிங்கங்களு முள்ளன என்க.

சரி என்னு முதனிலைத்தனிவினை எச்சப்பொருளில் வந்தது. ஈறு கெட்ட தெனினு மமையும். தானம் மாந்தரு மஞ்சரி அரி இவை விகுதி பெறாதுவந்தசாதி யொருமைகள். வானம் இடவாகுபெயர். ம்தாக்கும் விரிந்தும் வந்த உம்மைகள் எண்ணுப்பொருளில் வந்தன. ௬0

தகரவிகற்பத்தான்வந்தமடக்கு.

கலிவிருத்தம்.

தத்தைதித்தித்ததோதிதைதாதுதேத்
தொத்துதித்துத்திதித்ததத்தித்துதூத்
துத்தித்தேதத்ததீதுதைதீத்தத்தத்
தொத்ததாதுததைத்துத்துதித்ததே.

இ - ள். தத்தை தித்தித்தது ஓது இதை - கிளிகள் தித்தித்தவசனங்களைப் புக லாநின்ற புதியதினைப்புனம்,—தாது தேம் தொத்து உதித்து திதித்தது - (வேங் கைமரங்களில்) மகரந்தத்தையுந் தேனையு முடைய பூங்கொத்துக ளரும்பக்குறமக ளிர் காவலுடையதாய்,—அத்தித்து - யானையின் கொம்புகளும்,—தூ துத்தித்து - பாம்பினது புனிதமான தலையின்கணுள்ள ரத்னங்களும், — ஏ தத்த தீது உதை தீதத்து அத்து ஒத்த தாது - துன்பப்பகுதியவான தீங்குகளை யோட்டாநின்ற நெருப்பிற் சுடப்படுதலால் (மாற்றுயர்ந்து) சிவந்த நிறம்பொருந்திய பொற்கட்டிக ளும்,—ததைத்து துதித்தது - நெருங்கப்பெறுதலால் (யாவரும்) புகழுந்தன்மையை யுடையது என்க.

தித்தித்தது வினைமுற்றுப்பெயர். திதித்த தென்னும் வினைமுற்று எச்சமாய்த் துதித்ததென்னும் குறிப்பு வினைமுற்றின் தொழிற்பண்பைக்கொண்டு முடிந்தது. யானைக்கொம்பு முதலியவை குறிஞ்சிக்கருப்பொருளாதலானும் அந்நிலத்துள்ள புனத்தின் சிறப்புக்கூறுதலானும் அத்தித்து துத்தித்து என்னும் ஏழாம் வேற்றுமை யிடப்பொருளின்கண்வந்த குறிப்பு வினைமுற்றுகள் கொம்பையும் மணியையும் உணர்த்தின. துத்தி இருமடியாகுபெயர். துத்தி - படப்பொறி. அது படத்தை

யுணர்த்தித்தானியாகுபெயராய் அது தலையை யுணர்த்திச் சினையாகு பெயரா யிற்று. உதித்து செயவெனெச்சத்திரிபு. தத்து படுவிகுதி குன்றிவந்த செயப் பாட்டுவினைத்தொழிற்பெயர். ததைத்து மெல்லொற்று வல்லொற்றாய் வந்த பிற வினையெச்சம். ௧௧

கோமூத்திரி.

இரண்டிரண்டுவரியாக ஒருசெய்யுள் எழுதப்பட்டு மேலுங்கீழும் ஒன்றிடை யிட்டு வாசித்தாலும் அச்செய்யுளே வருவது.

வானளாவினவார்கனியாவிரை
கானறுவிளவூர்கடியாவரை
தேனலம்பினதிங்கடமாருமான்
தானவம்பனறுங்கெடவூருமால்.

இ - ள். வான் அளாவின வார் கனி ஆவிரை - ஆகாயத்தை யளாவிய நீண்ட கனிகளை யுடைய ஆவிரையும்,—கான் அறு விள ஆர் கடியா வரை - வாசம் நீங்காத விளாமரமும் ஆத்திமரமும் நீங்காத அம்மலையின் கண்ணுள்ள,—தேன் அலம்பின திம்கடம் ஆரும் மான் தானம் அம்பு - வண்டுகளாரவாரிக்க இனிய மதநிறைந்த யானைகளின் மதநீரானது,—அனல் தாம் கெட ஊரும் (புனங்களிற்பற்றிய) நெருப்பு அவியச்செல்லும் என்க.

தாம் சாரியை. ௧௨

கூடசதுக்கம்.

ஈற்றடி யெழுத்துகள் ஏனை மூன்றடியுள்ளுங் கரந்து நிற்கவருவது.

கந்தமல்கியகாவிற்குலாய்க்கமழ்ந்
தந்திமானுமவிர்தளிர்க்கொக்குதிர்
செந்துவர்க்கனிதித்திக்குமாசினி
மந்திமாந்திமகிழ்ந்துகுதிக்குமால்.

இ - ள். கந்தம் மல்கிய காவில் குலாய் - வாசம் நிறைந்த சோலையின்கண் குலவி,—கமழ்ந்து அந்தி மானும் அவிர் தளிர் கொக்கு உதிர் செம்மை துவர் கனி - வாசம் வீசி வண்ணத்தாற் செவ்வானத்தை நிகர்க்கும் விளங்குந் தளிரையுடைய மாமரத்தினின்று முதிர்ந்த சிவந்த கனியையும்,—தித்திக்கும் ஆசினி - தித்தியா நின்ற ஈரப்பலாவின் கனியையும்,—மந்தி மாந்தி மகிழ்ந்து குதிக்கும் - பெண் குரங்குகள் புசித்துக் களிகூர்ந்து குதித்து விளையாடும் என்க.

அந்தி மானுந்தளிர் பண்புபற்றி வந்த வுவமை அணி. ௧௩

மாத்திரைச்சுருக்கம்.

ஒருபொருள் பயக்கும் ஒருசொல் ஒருமாத்திரையைக்குறைப்ப வேறுபொருள் பயக்குஞ் சொல்லாய் வருவது.

விடியற்காலத்தோர்மாத்திரைவீந்தது
மடியுநஞ்சொன்றுமாய்ந்ததுமொன்றுமாய்
கடிகொளந்தியிற்கானவர்தங்களொன்
றொடியுநீள்றையார்ப்பொடிலம்புமால்.

இ - ள். விடியற் காலத்து - விடியலாகிய காலம் (விடியல் - காலை),—ஓர்மாத் திரை வீந்தது உம் - ஒரு மாத்திரையைச் சுருக்க அது கலையென்றாயிற்று (கலை - கலைமான் ஒலியும்),—மடியும் நஞ்சு - மடியச்செய்யுந் தன்மையையுடைய நஞ்சு (நஞ்சு - காரி),—ஒன்று மாய்ந்தது உம் - ஒரு மாத்திரையைச் சுருக்கக் கரி என்

றுயிற்று (கரி - யானையொலியும்),—ஒன்று மாய் கடிகொள் அந்தியில் - ஒரு மாத்திரை குறைந்த அச்சத்தைத் தராநின்ற மாலையில் (அந்தி - மாலை) (ஒரு மாத்திரை குறைந்த மாலை யென்றமையால் மலையென்றுயிற்று) அம்மலையில் வசிக்கும்,—கானவர் தங்கள் ஒன்று ஒடியும் நீள் அறை - குறவர்களது ஒரு மாத்திரை குறைந்த நீண்ட பாறை (பாறை யென்றமையால் பறையென்றுயிற்று),—பறை - பறையினது,—ஆர்ப்பொடு உலம்பும் - சத்தத்தோடு கூடி யொலிக்கும் என்க.

கலைமான் ஒலியும் யானையொலியும் குறவர் பறையொலியோடு கூடி யொலிக்கும் என்பது கருத்து. விடியல்காலம் பிறிதினியைபு நீக்கத்தல்வந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அத்துச்சாரியை தவிராவழிவந்தமையின் விரித்தல் சாரியை. காலை காரி என்பவற்றின் பயனிலையாகிய வீந்தது மாய்ந்தது என்னும் வினைமுற்றுப் பெயர்கள் அவற்றோடு சார்த்திய மாத்திரையின் பயனிலையாயும் வந்தன. மடியும் பிறவினை விகுதி தொக்குநின்ற பெயரெச்சம். கச

மாத்திரைவருத்தனை.

ஒருபொருள் பயக்கும் ஒருசொல் ஒருமாத்திரைபெற்று வேறுசொல்லாய்ப் பொருள் பயந்து நிற்பது.

அளபொன்றேறியவண்டடிரார்ப்பினு
லளபொன்றேறியமண்ணதிர்ந்துக்கன
வளபொன்றேறியபாட்டலரீர்ஞ்சுனை
யளபொன்றேறழகூடலைந்தாடுமால்.

இ - ள். அளபு ஒன்று ஏறிய வண்டு - ஒரு மாத்திரை கூடிய வண்டு (வண்டு - அளி) (அளபொன்றேறிய அளியென்றமையால்) ஆளி - ஆளி யென்னும் ஓர் மிருகம்,—அதிர் ஆர்ப்பினுல் - ஒலிக்கு முழக்கத்தால்,—அளபு ஒன்று ஏறிய மண் - ஒரு மாத்திரை கூடிய மண் (மண் - தரை) (அளபொன்றேறிய தரையென்றமையால்) தாரை - நட்சத்திரங்கள்,—அதிர்ந்து உக்கன - கம்பித்துதிர்ந்தன,—அளபு ஒன்று ஏறிய பாட்டு - ஒரு மாத்திரை கூடிய பாட்டு (பாட்டு - கவி) (அளபொன்றேறிய கவியென்றமையால்) காவி - நீலோற்பலங்கள்,—அலர் ஈரம் சுனை - அலராநின்ற குளிர்ந்த சுனையிலுள்ள நீரானது,—அளபு ஒன்று ஏறு அழகு ஊடு - ஒரு மாத்திரை கூடிய,—அழகு - ஊடு (அழகு - வனப்பு) (அளபொன்றேறிய வனப்பு என்றமையால்) வானப்பு,—வான் அப்பு ஊடு - ஆகாசகங்கையினிடத்தில்,— அலைந்து ஆடும் - கலந்தசையும் என்க.

ஆளி முழக்கத்தால் நட்சத்திரங்கள் விண்ணினின்றுதிரும் என்பதும், சுனை நீர் ஆகாசகங்கையோடு கலக்கும் என்பதும் கருத்து. ஈரம் ஈரெனநின்றது செய்யுண்மருஉ. சுனை இடஆகுபெயர். கரு

எழுத்துவருத்தனை.

ஒருபொருள் பயப்பதோர் சொல்கூறி யதனில் ஒவ்வோரெழுத்து நீக்க வெவ்வேறு பொருள் பயப்பது.

காந்தள்போல்வனகாமுகர்வீழ்வன
போந்துசேர்ப்பர்கள்பூக்குறிவைப்பன
சாந்தநாறியசாரலினரிமா
ரேந்துசீரெழிற்கைதகைகேதகை.

இ - ள். சாந்தம் நாறிய சாரலின் நாரிமார் ஏந்து சீர் எழில் கை - சந்தனமரம் வாசம் வீசாநின்ற அம்மலைப் பக்கங்களில் வசிக்குங் குறமகளிரது சிறப்புவாய்ந்த அழகியகைகள்,—காந்தள் போல்வன - காந்தண்மலரை யொப்பனவாம்,—நாரி

மார்தகை - அம்மடவார் அழகு,— காமுகர் வீழ்வன - காமிகளால் மயங்கி வீழப்படுவனவாம்,—போந்து சேர்ப்பர்கள் பூகுறிவைப்பன கேதகை - (இரவுக்குறிக்கண்) வந்து (தலைவிவரப்பெறுமையாற்றும் வந்தமை யறிதற்கு) தலைவர்களாலழகியவறிகுறியாக வைக்கப்படுவன தாழை மலர்கள் என்க.

கைதகை கேதகை என்பனவற்றைக் கைதகை கேதகை எனப்பிரித்துக் காந்தள் போல்வன காமுகர்வீழ்வன போந்து சேர்ப்பர்கள் பூக்குறிவைப்பன என்பவற்றோடு முறை நிரனிறையாகக்கொள்க. நாரிமார் என்னுஞ்சொல் தகையென்பதனையும் பொருணிலையாகக்கொண்டு நிற்றலின் அது முதனிலைப்பொருட்டீவக அணி. ஒருசொன்னின்றே தனித்தனி யுறவுவென்னும் பொருள்சோளனினும் அமையும் நாரிமார் ஒருமையிற் பன்மைவந்தபால் வழுவமைதி. கேதகை பொருளாகு பெயர். இரவுக்குறிக்கட்போந்த தலைவர் தலைவி வரப்பெறுமையின் குறிவைத்துச் சென்றமை தலைவிக்கிரங்கலைத்தரும் ஆதலின் இரங்கலுரிப் பொருட்குரிய நெய்தற்றலைவராகச் சேர்ப்பரென்றார். ௧௬

உபயநாகபந்தம்.

இரண்டுபாம்பு தம்முள் இணைவனவாக உபதேசமுறையான் வரைந்தவற்றுளிரண்டு கவியெழுதிப்பட்டுச் சந்திகளினின்ற எழுத்தே மற்றையிடங்களினும் உறுப்பாய் நிற்க வருவது.

ஆம்பனீண்மருப்பாரமுமாசறு
காம்புமாணவுருங்கதிர்முத்தமும்
பூம்பசும்பொழினீடும்புரையிரு
ளோம்பிப்பப்பொளிமேவுமுட்டாதரோ.

இ - ள். ஆம்பல் நீள் மருப்பு ஆரம் உம் - யானையினது நீண்ட கொம்பிற் பிறந்த முத்தமும்,—மாசு அறு காம்பு மாண உரும் கதிர் முத்தம் உம் - குற்றமற்ற மூங்கில்கள் மாட்சிமைப்படச் சிந்திய கிரணங்களை யுடைய முத்தமும்,—பூ பசுமை பொழில் நீடும் புரை இருள் ஓம்பி - பூக்களையுடைய பசியசோலையின்கண் நீடிய பெரிய இருளை யோட்டி,—முட்டாது பப்பு ஒளிமேவும் - குறைபாடில்லாமல் பரவிய ஒளியை வீசும் என்க.

முத்தங்களினொளி சந்திரகிரணம் போலக் குறைபாடின்றி யிருளையோட்டுமென வியப்புத்தோன்றக் கூறினமையின் குண அதிசய அணி. ௧௭

செம்பொனன்சுனைசேர்முகைநீலமா
வம்புநீடுருங்களியாரவின்
கொம்புபூமலிபொன்னவிர்குன்றந்தூர்
பம்புசேணதிப்பாமருட்டாருமே.

இ - ள். செம்பொன் நன்மை சுனை சேர் முகை நீலம் மா வம்பு நீடு மருங்கு அளி - சிவந்தபொன்னுருவாகிய நல்ல சுனையிற்பொருந்திய முகைத்தநீலோற்பலங்களின் பெருமை பொருந்திய வாசம் நீடிய பக்கங்களில் (சஞ்சரிக்கும்) வண்டுகள்,—ஆரவின் கொம்புப்பூ மலி பொன் அவிர் குன்றத்து ஊர் பம்பு சேண் நதி - மிகவு மலர்ந்த கோட்டுப்பூக்கள் நிறைந்த பொற்கட்டிகள் விளங்காநின்ற அம்மலையின்கண்தவழா நின்ற நெருங்கிய ஆகாயகங்கையில்,—பா மருட்டு ஆரும் - பாய்ந்து அவ்வாகாய கங்கையைச் சுனைநீரென்றே மயங்குதலைப் பொருந்தும் என்க.

பா முதனிலைத்தனிவினை வினையெச்சப்பொருளில் வந்தது. மருட்டு முதனிலைத் தொழிற்பெயர். ஆகாச கங்கை நீரைச் சுனைநீரென்று மயங்கினமையின் மயக்க அணி. ௧௮

சுழிகுளம்.

ஒரு செய்யுள் எவ்வெட் டெழுத்தாக நான்குவரி யெழுதப்பட்டு மேனின்று கீழிழிந்தும் கீழ் நின்று மேலேறியும் புறநின்று வந்துண் முடிய அவ்வரி நான்குமே யாகி யச்செய்யுளே வருவது.

வஞ்சித்துறை.

மதிபகவேயான்ற - தினைமனிமாவாவன்
பமர்துறுசேவாயா - கனிதுவன்றுமாவே.

இ - ள். மதி பக வேய் ஆன்ற தினை மனி - சந்திரனுடல் பிளவுபட (உயர்ந்த) மூங்கில்களமைந்த தினைப்புனத்திற்சென்று,—மா ஆ அன்பு அமர் துறுசே ஊயா - பெரிய பசுக்களுடன் அன்பு பொருந்திய நெருங்கிய இடபங்கள் (அப்புனத்திலுள்ள தினைக்கதிர்களை மேய்ந்து) (உடல்) வாடா,—மா கனி துவன்றும் - (அம்மலையி லுள்ள) மாமரங்கள் (எப்போதும்) கனிகளால் நெருங்கி நிற்கும் என்க. ககூ

சருப்பதோபத்திரம்.

நிரையாக அறுபத்து நான்கறை கீறி எவ்வெட்டெழுத்தால் ஒவ்வோரடியாகத் தொடுத்த நான்கடியுமேனின்று கீழிழியவும், கீழ்நின்று மேலேறவும் எழுதப்பட்டு மேனின்று கீழிழியவும் கீழ்நின்று மேலேறவும் முதலொடுங்கி யிறுதியாகவும், இறுதிதொடங்கி முதலாகவும் மாலைமாற்றாக நான்குமுகத்திலும் வாசித்தாலும் அச் செய்யுளே வருவது.

கலிவிருத்தம்.

வீயாவாமாமாவாயாவீ - யாவாயாராராயாவாயா
வாயாடோமாமாடோயாவா - மாராமாதோதோமாராமா.

இ - ள். ஆமா வீயாவாம் - (அம்மலையிலிருக்கும்) காட்டுப்பசுக்கள் (எக்காலும்) இறவாவாம்,—வாயா வீ ஆ ஆராயா வாயார் ஆயா - கிடைத்தற்கரிய பூக்களைப் பசுக்களாராய்ந்து வாய் நிரம்பக் (குதட்டிப்புசித்து) (உடல்) வாடாவாம்,—வாய் ஆடு மா மாடு ஏயா - பொருந்திய வரையாடுகள் (தமக்குக்குறைவின்மையின்) பெரிய (அம்மலை) ப்பக்கங்களி லுள்ள வேறிடத்திற் செல்லாவாம்,—ஆம் ஆர் ஆம் - அருவி நீரும் ஆத்திமரமும் எங்குமுளவாம்,—மாது மா தோம் ஆரா அழகிய மாமரங்கள் (குறைவின்றி நிற்றலின்) குற்றத்தைப்பொருந்தா என்க.

ஏகாரம் தேற்றப்பொருளிலும், ஓகாரம் அசைநிலைப்பொருளிலும் வந்தன. அம்மலை தெய்வத் தன்மையுளதாதலின் அங்கிருக்கும் காட்டுப்பசுக்கள் வீயா என்றார். தெய்வமணமும் வாடாமையு முளதாதலின் கிடைத்தற்கரியமலர் என்றார். பருவகாலமன்றி எக்காலும் பூத்துக்காய்த்துப் பழுத்துநிற்றலின் அவையின்மை யென்னுங் குற்றங்கள் கண்டோர்சொல்லப் பொருந்தா என்பார் மா தோம் ஆரா என்றார். ஆர் என்னும் வினைப்பகுதி வினையெச்சப் பொருளில்வந்தது. உ0

மாலைமாற்று.

ஒருசெய்யுளை ஈற்றடியைமுதலாகக்கொண்டு வாசிப்பினும் அச்செய்யுளே வருவது.

தேடாவாழைமாவீடாதே - தேனாராமாவாழாயாதே
தேயாழாவாமாராரானதே - தேடாவீமாழைவாடாதே.

இ - ள். தேள் தா வாழை மா வீடாது - வானத்திலுள்ள விருச்சிகராசியைத் தோயாநின்ற (உன்னதத்தையுடைய) வாழைமரங்களும் மாமரங்களும் (எக்காலும்) கெடாமல் நிற்கும்,—தேன் ஆர் ஆமா வாழ் ஆயாது - (சோலையிலுள்ளமலர்கள் ஒழுக்கும்) தேனைப்புசித்துச் (சஞ்சரிக்கும்) காட்டுப்பசுக்கள் தம் வாழ்விற்கெடாது நிலைபெறும்,—தேயாழ் ஆ ஆம் - தெய்வத்தன்மையுடைய மிதுனராசியைத்

நீண்டாநின்ற உயர்ச்சியை யுடைய) ஆச்சாமரங்கள் பல்கிநிற்கும்,—ஆர் ஆறுது - ஆத்திமரங்கள் நீங்காது நிலைபெறும்,—தேடா வீ மாழை வாடாது - எளிதிற் கிடைக்கும் மலர்களையுடைய புளியமரங்களும் உலராது நிற்கும் என்க.

ஏகாரம் நான்கும் அசைநிலை யிடைச்சொற்கள். அம்மலை தெய்வத்தன்மையும் கயிலைமுதலியவற்றோ டொன்றாகச்சேர்த் தெண்ணப்பட்டு மான்மியத்தையு முளதாதலின், அங்கிருக்கும் மரங்களும் மிருகங்களும் கெடா என்பார் வாழை மா மாழை வீடா தென்றும் ஆமாவாழாயா தென்றும் கூறினர். உக

காதைகரப்பு.

ஒருசெய்யுள் முடிய எழுதப்பட்டதன்பிற்று மொழியின் முதலெழுத்துத் தொடங்கி ஒவ்வோரெழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொருசெய்யுள் போதுவது.

சொச்சகக்கலிப்பா.

இனநீடியயானைவிலா ருலாவ
வனமோடிடமாதவியாருநாவி
புனமோடினையாதவிலாருண்மன்னி
யனல்வாயவியாருவகன்றிமாதோ.

இ - ள். வில்லார் உலாவ நீடியயானை இனம் வனம் ஓடிட - வில்லையுடைய குறவர்கள் உலாவுதலைக்கண்டு அச்சமுற்ற யானையின் கூட்டங்கள் காட்டில் விரைந்தோடும் அரவத்தைக்கேட்ட,—மாதவி ஆரும் நாவி - குருக்கத்திமரங்களின் (மறைந்து) தங்கியகத்தூரிமிருகம்,—புனம் ஓடி நையாத இல் ஆர்உள் மன்னி - தினைப்புனத்தின்கட்டியங்கோடிக் குறைவின்மையின் வருந்துதலில்லாத குறவர் குடிசையுட்சேர்ந்து,—அனல்வாய் கன்றி அவி ஆரும் - (அக்குடிசையிலுள்ள) நெருப்பிற்பட்டுவாடி (அக்குறவர்கட்கு) உணவாகப் பொருந்தும்.

வாய் என்னும் முதனிலை வினையெச்சப்பொருளில் வந்தது. உஉ

காதைகரப்பிற்கரந்தது.

வஞ்சித்துறை.

கருவிவானணி - மருவியாடின - விருவிமாடின - வருவியாடின.

இ - ள். கருவி வான் நணி ஆடின அருவி - கூட்டமாகிய மேகங்கள் மிகவும் பொழியாநின்ற நீராலாய (அம்மலையி னின்றுவீழும்) அருவியினீர்ப்பெருக்கில்,— மாடு இருவி இனம் மருவி ஆடின - பக்கத்திலுள்ள தினைத்தாட் கூட்டங்கள் பொருந்தி மூழ்காநிற்கும் என்க.

இனம் அருவி நிலைமொழியினது மகரம் கெடுதல் விகாரம். உ௩

திரிபங்கி.

ஒருசெய்யுளாய் உறுப்பமைந்து ஒருபொருள் பயப்பதனை மூன்றாகப்பிரித்து எழுத வெவ்வேறு செய்யுளாய்த் தனித்தனியே பொருள் பயந்து தொடையும் கிரியையும் தனித்தனியே காண வருவது.

காப்பியக்கலித்துறை.

சந்தனமார்தடஞ்சாரலெலாந்தனிவானளவுங்
கொந்துலர்வீநெடுங்காவினெலாங்குனிமாந்தருவி
னந்தியதேன்படுஞ்சூழலெலாநணிமாந்தர்விழை
கந்தநிலாங்கடந்தாழ்கரிபோங்கனிவீழ்ந்தழியும்.

இ - ள். சந்தனம் ஆர் தடம் சாரல் எலாம் நணி மாந்தர் விழை கந்தம் நிலாம் - சந்தனமரங்கள் நிறைந்த விசாலித்த மலைப்பக்கங்க ளெல்லாம் மிகவு மனிதர் விரும்

பூம் மலர்வாசனை விளங்கும்,—தனி வான் அளவும் கொந்து அலர் வீ நெடுமை காவின் எல்லாம் கடம் தாழ் கரிபோம் - ஒப்பற்ற ஆகாயத்தை யளாவிய பூங்கொத்தின்கண் அலர்ந்த பூக்களை யுடைய நெடிய சோலைகளி லெல்லாம் மதமொழுகாநின்ற யானைகள் சஞ்சரிக்கும்,—சூழல் எல்லாம் குனி மாந்தரு இன் நந்திய தேன் படும் கனி வீழ்ந்து அழியும் - அம்மலையி னிடமெல்லாம் (கனிப்பொறையால்) தலைவளைந்த மாமரங்களினது மிகுந்த தேன் பொருந்திய கனிகள் சிந்தி அழியும் என்க.

இத்தொடர் கொண்டு கூட்டுப்பொருள்கோள்.

மேற்கவியுட்பிரிந்தசெய்யுள்கள்.

வஞ்சித்துறை.

சந்தனமார்	தடஞ்சாரலெலாம்	தனிவானளவும்
கொந்தலர்வீ	நெடுங்காவினெலாம்	குனிமாந்தருவின்
நந்தியதேன்	படுந்சூழலெலாம்	நனிமாந்தர்விழை
கந்தநிலாம்.	கடந்தாழ்கரிபோம்	கனிவீழ்ந்தழியும். ௨௪

பிறிதுபடுபாட்டு.

ஒருசெய்யுள் அடியையுந் தொடையையும் வேறுபடுப்பச் சொல்லும் பொருளும் வேறுபடாது வேறொரு செய்யுளாய் வருவது.

கலிவிருத்தம்.

ஆன்றார்ந்தகாவினளியாடுபூந்தேன்
மான்றின்றவேரன்மணியிர்ங்கவுண்மாச்
சான்றோங்குகாட்டிற்றயங்குமணிமுத்தோ
டேன்றார்ந்துநாட்டினடக்கவெழுமார்த்து.

இ - ள். ஆன்று ஆர்ந்த காவின் அளி ஆடு பூ தேன் - பெருமை அமைந்து நிறைந்த சோலையிலுள்ள வண்டுகள் திளைத்தாடாநின்ற பூவினின்றொழுகுந் தேன்பெருக்கானது வேரல் மான்று ஈன்ற மணி - மூங்கில்கள் ஒன்றோடொன்று தாக்குதலால் சிந்திய முத்துக்களை,—சுரம் கவுள் மா சான்று ஓங்கு காட்டில் தயங்குமணி முத்தோடு - மதத்தாற் குளிர்ந்த கபோலத்தையுடைய யானைகளால் நிறைந்தோங்கிய முல்லைநிலத்தில் விளங்கு முத்துகளோடு,—ஏன்று ஊர்ந்து நாட்டின் நடக்க ஆர்த்து எழும் - வாரிச்சென்று கோஷித்து மருதநிலத்திற் செல்ல எழாநிற்கும்.

மான்று மால் என்னும் பண்படியாகப் பிறந்த வினையெச்சம். வேறுபடுப்ப ஒழுகிசைச் செப்பலோசைத்தாய் ஈராசிடையிட்டு இருகுறளிருவிகற்பத்தானடந்து காசென்னும்வாய்பாட்டானிற்ற நேரிசைவெண்பாவாய்வந்த செய்யுள்.

ஆன்றார்ந்தகாவினளியாடுபூந்தேன்மான்
றீன்றவேரன்மணியிர்ங்கவுண்மாச் - சான்றோங்கு
காட்டிற்றயங்குமணிமுத்தோடேன்றார்ந்து
நாட்டினடக்கவெழுமார்த்து.

இ - ள். மேற் கலிவிருத்தப் பொருளேயாம் என்க. ௨௫

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இனையவளம்பலபெற்றுநீடியிம்பருமும்பருமேத்தவாய்ந்து
நனைமலர்க்காவுமருங்குடுத்துநளிர்மழைப்போர்வைதன்மெய்யிற்போர்த்துக்
கனைகதிர்ப்பன்மணிச்சென்னிமேல்வான்கங்கைதலைச்சுற்றுமானவோங்கிப்
புனைபுகழ்மல்கவரசுவைகும்பொற்பமர்மந்தரவெற்பின்மாதோ. ௨௬

தமாரசம்பவம்.

ஆருயிர்யாவையுமுய்யுமாற்றுலப்புதமேனியெடுத்துநின்று
பேரருளாற்றொழிலாட்டுகந்தபிஞ்ஞகன்கந்தனைநல்கவேண்டிச்
சீரிமயத்துமடப்பிடியைத்திருமணஞ்செய்தபினெய்தியங்க
ணேரியலந்தப்புரத்தின்மன்னிரியின்பக்கலவிநடாத்தலுற்றான். உஎ

வண்டிமிர்கூந்தலிமயவல்லிவனமுலைதாக்கமகிழ்ந்துபுல்லிக்
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றுப்பன்னாட்கலவிப்பெருநலந்துய்க்குங்காலை
யண்டருணர்ந்துவெருவியஞ்சியம்பிகைதன்பாற்கருப்பவீறு
கொண்டிடுமுன்னஞ்சிதைவுசெய்யுங்கொள்கையினங்கியையேவினார்கள்.

ஏவலுமங்கிமற்றங்கணேகியெம்பெருமான்கோயில்வாயின்முன்னர்த்
தேவியுகைக்குமடங்கல்வைகுஞ்செய்கையைநோக்கிநடுங்கிமீண்டு
மேவியவிண்ணோர்குழாத்தைநண்ணிவினவுமவர்க்குவிளைந்தநோதி
நீவிர்களேயவணெய்தியூறுநிகழ்த்திடுமின்கவெனக்கரைந்தான். உகூ

ஆரியனாதியமாரெல்லாமம்மொழிகேட்டுளழுங்கிநொந்து
பெரிதுயர்மந்தரப்பாங்கரெய்திப்பேணிநிலமிசைவீழ்ந்திறைஞ்சி
யுரியமுறையிற்பழிச்சிநின்றேயோவிமொற்றமுணர்ந்துநம்மான்
றெரிவையொடாடும்புணர்ச்சிநாப்பட்சென்றனன்வெற்றரையோமெங்கண்.

கண்டனர்காமனைச்செற்றகோவைக்கழிபெருங்காதல்கரையிகப்ப
புண்டரிகக்கண்முகுந்தன்வாசப்பூந்தவிசாளியுருத்திரர்க
ளண்டர்மருத்துவர்சாத்தியர்களனைவருமெல்லையிலன்புபொங்கிக்
கொண்டமயிர்ப்புளகங்கண்மல்கக்குவித்தகரத்தொடுயேத்தலுற்றார். ஙக

வெள்விடைபூங்கொடிமீதுவைத்துவென்றிமழுப்படையேந்திவஞ்சக்
கள்ளர்கருத்தினகபபடாதகண்ணுதற்சாமிநின்றாளிணையி
லள்ளலளக்கரமிர்தந்தன்னாற்பூசனையாற்றியமிர்தரானே
மெள்ளருமாமலரிட்டிறைஞ்சிச்சுமனரெனும்பெயரெய்தினமால். ஙஉ

ஆழியுடைப்புவிமீதொர்சிற்றுராள்பவர்தம்மையடுத்தவருந்
தாழ்வருமின்பமகிழ்ச்சியெய்தித்தகைபெறவாழுகின்றார்களென்னிற்
பாழியுயரகிலாண்டகோடிப்பரப்புமுழுதுமரசுசெய்யு
மாழைவிழியுமைபாகநின்னைவந்தடுத்தேங்களுக்கென்குறையே. ஙங

துறந்தவருள்ளக்கமலமேவுஞ்சோதித்திருவுருபோற்றிபோற்றி
மறந்திகழ்வோரையெறிந்துவீசுமறந்திகழ்வாட்படையாளிபோற்றி
யுறந்தமலர்ப்பதம்போற்றியாங்களுன்றனடைக்கலங்கண்டுகொள்ளென்
றறந்தலைநின்றவமரர்போற்றவங்கணனேக்கியருள்சுரந்து. ஙச

வேண்டுவகூறுமினுங்கட்கின்னேமேவரநல்குதுமென்றருள
வீண்டியமாயனையுள்ளிட்டோர்தம்மேவலினான்முகனேத்தியெந்தாய்
மாண்டமலைமகள்பாற்கருப்பம்வாய்ப்பதுவேண்டிலர்மான்முதலோர்
காண்டகவந்தனர்மேலியற்றுங்கடனறியேங்களெனக்கரைந்தான். ஙரு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தனக்கெனச்சிறிதும்வேண்டாத்தன்மையனுயிர்கட்கென்றே
நினைப்பருநடனம்பூண்டநின்மலனற்றேலிந்தப்
பனித்தமுத்துருக்கியன்னவெண்புனல்பருகுமின்க
ளெனப்புகன்றருளவல்லேயெரியிறையங்கையேற்றான். ஙசா

எண்ணரும்வருடங்காறுமாயிரவிரவிப்பொற்பி
னண்ணல்பானின்றுவீழுமதனையவ்வனலோனுண்ண
விண்ணவரெவர்க்குமங்நாண்மேவருங்கருப்பநீடத்
துண்ணெனத்துளங்கிவெப்புநோயினிற்றொடக்குண்டார்கள். ௩௭

மீளவுமிரந்துவேண்டும்விண்ணவர்குழாத்தைநோக்கி
வாளெனப்பிறழ்ந்துநீண்டமதர்த்தரிபரந்துகூற்றை
யாளெனக்கொண்டமைதோய்ந்தகல்விழிச்சேனைவில்வேட்
காளையைமுனிந்தவீரன்கருணையால்விளம்பலுற்றான். ௩௮

கராத்துயிர்பருகிவேழங்காத்தவன்முதலாநீவிர்
பராய்த்தொழுங்காஞ்சிவைப்பிற்பயில்சுரகரீசமென்னச்
சுராக்கனுமவுணனுவிதொலையநாமமைத்ததான
மிராக்கதிரெறிக்குமிந்துமுடிநமக்கினியசூழல். ௩௯

சுரகரீசத்தின்பாங்கர்ச்சுரகரதீர்த்தமுண்டால்
விரவிநீர்படிந்தோர்பாவவெப்புநோய்முழுதுநீங்கு
மிரவிநாட்கழியநன்றாநீரவணெய்திநம்மைப்
பரவிநீராடிலிந்தவெப்புநோய்பாறுங்காண்மின். ௪0

ஆயிடைநீங்கிப்பின்னர்மேருவையணுகியங்கண்
மேயவிக்கருப்பந்தன்னைவிடுமினென்றகன்றுநீங்க
மாயனோமுதலாம்விண்ணோர்மகிழ்ந்தெழுமுள்ளத்தோடுந்
தூயசீர்க்காஞ்சியெய்திச்சுரகரந்தன்னைக்கண்டார். ௪௧

காண்டலுமுவகைபொங்கிச்செயத்தகுகடன்கண்முற்றித்
தீண்டினோர்பிறவிமாய்க்குஞ்சுரகரதீர்த்தமாடி
மாண்டருசுரகரீசவள்ளலையருச்சித்தேத்தி
வேண்டினர்வேண்டலோடும்வெப்புநோயொழியப்பெற்றார். ௪௨

பெற்றபினங்கணீங்கிப்பெறலருமேருக்குன்றி
னுற்றமாத்திரையினன்னோர்வயாவுநோயொழிவுபெற்றார்
மற்றவரகட்டினீங்கிவளங்கெழுசுடர்ப்பொற்சோதி
பற்றிளம்பரிதிநூறாயிரமெனப்பரந்துதோன்றி. ௪௩

வடவரைமுழுதுஞ்செம்பொன்வண்ணமாச்செய்துதெண்ணீர்த்
தடநெடுங்கங்கையாற்றுச்சரவணப்பொய்கைமேவிக்
கடவுளர்முனிவரெல்லாமுய்யுமாகருணைகாட்டிச்
சுடர்வடிநெடுவேலண்ணலறுமுகன்றோன்றினானல். ௪௪

சுரந்தவிர்த்துமராக்காத்தசுரகரதீர்த்தமாடி
வரந்தருஞ்சுரகரீசவள்ளலைவணங்கிப்போற்றி
நிரந்தரமன்புசெய்யப்பெற்றவர்நெடுநீர்ஞாலத்
தரங்கைநோய்தவிர்ந்துமுத்திப்பேற்றினையடைவர்மாதோ. ௪௫

சுரகரீசப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௩௫௩.

தான்றோன்றீச்சரப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கிளைத்தெழுங்குழவித்திங்கட்கீற்றிளங்கொழுந்துபோலி
வளைத்தழும்பாளன்வைகுஞ்சுரகரவளாகஞ்சொற்றாந்
திளைத்தவர்கருவிலெய்தாச்சுரகரதீர்த்தந்தென்பா
லிளைத்தவர்க்கிரங்குந்தான்றோன்றீச்சரத்தியல்புசொல்வாம். க

முழுமலத்தொடக்குநீங்கியாருயிர்முத்திசேர்வான்
மழுவலான்றானேதோன்றும்வாய்மையாற்றான்றோன்றீசக்
கெழுதகுபெயரினோங்குங்கிளக்குமவ்விலிங்கந்தன்னைத்
தொழுதொறுசிறுவன்றீம்பால்பெற்றவாசொல்லக்கேண்மின். உ

உபமனியர்பாற்கடலுண்டவரலாறு.

சலிப்பறுதவவசிட்டன்றங்கையைமணந்துஞானப்
புலிப்பதமுனிவனீன்றபுகழுபமனியனென்னு
மொலிச்சிறுசதங்கைத்தாளோன்மாதுலனுறையுண்மேவிக்
கலிப்பகைச்சுரபித்தீம்பாலுண்டுளங்களித்துவாழ்நாள். ங

தாதையுந்தாயுமேகித்தநயனைக்கொண்டுதங்கண்
மேதகுமிருக்கைபுக்குமேவுழிச்சிறுவன்றீம்பாற்
காதரமெய்தியன்னையடிபணிந்திரப்பவந்நாள்
கோதறுநென்மாநீரிற்குழைத்திதுகோடியென்றாள். ச

ஏற்றனன்பருகித்தீம்பாலன்றிதுபுனலென்றோச்சி
மாற்றினன்மாதுலன்றன்மனைவயிற்பருகுந்தீம்பா
லாற்றவுநினைந்துதேம்பியழுதழுதிரங்கநோக்கிக்
கோற்றொடிநற்றாய்நெஞ்சமுளைந்திதுகூறலுற்றாள். ரு

தவம்புரிநிலையின்வைகுஞ்சார்பினேமதாவன்றுமுன்னாட்
சிவன்றனைவழிபடாமையிலம்படுந்திறத்தினேங்க
ளவந்தெறுமான்பால்யாண்டுப்பெறுகுவமப்பாமுக்கட்
பவன்றனைவழிபாடாற்றிப்பான்மிகப்பெறுதிகண்டாய். சா

கச்சிமாநகரத்தெய்திக்கண்ணுதல்பூசையாற்றி
னிச்சையினேற்றமாகப்பெறுவையென்றியம்புமன்னை
மெச்சிடவிடைகொண்டேகிவிழைதகுகாஞ்சியெய்தி
முகசகம்புகழுந்தான்றோன்றீச்சரமுதலைக்கண்டான். எ

கண்டுளங்குழைந்துநெக்குக்கரையிலாக்காதல்பொங்கித்
தொண்டனேனுய்ந்தேனென்றுதொழுதெழுந்தாடிப்பாடி
யிண்டைவார்சடிலத்தண்ணலிணையடியருச்சித்தங்க
ணண்டருமவியக்குமாற்றாலருந்தவம்புரியுமெல்லை. அ

தகைபெறுஞ்சயம்புலிங்கத்தலத்துறைகணிச்சிப்புத்தே
ளுகைமுகிலூர்தியண்ணலுருவுகொண்டெய்திப்பத்தி
மிகையினையளந்துதானுந்தன்மையைவிளங்கக்காட்டி
நகைமுகமருளித்தீம்பாற்கடலினையழைத்துநல்கி. கூ

முற்றுணர்தெளிவுமூவாவளமையுஞ்சாக்காடெய்தாப்
பெற்றியுமுதவியின்னும்வேண்டுவபேசுகென்றான்
கற்பகஞ்சுரபிசிந்தாமணிவளைகமலமெல்லாம்
பற்றுடையடியாரேவற்பணிசெயப்பணிக்கும்வள்ளல். க0

என்னலுமுனிவன்போற்றியெளியனேற்குனதுநோன்றாண்
மன்னுபேரன்புவேண்டுமெற்றுமிவ்விலிங்கமூர்த்தி
தன்னிலெக்காலுநீங்காத்தண்ணருள்கொழித்துவாழ்ந்து
துன்னினோரெவர்க்கும்பாவந்துமித்துவீடுதவவேண்டும். கக

என்றுநின்றிரந்துபோற்றுமிளவலுக்கருளிச்செய்து
மன்றலங்குழலியோடுமிலிங்கத்தின்மறைந்தானைய
னன்றுதொட்டறிஞர்க்கெல்லாமருட்பெருங்குரவனாகி
வென்றிவெள்விடையான்சைவம்விளக்கிவீற்றிருந்தானன்றே.

கண்ணன்சிவதீக்ஷைபெறல்.

பிருகுமாமுனிவன்சாபப்பிணிப்பினாற்பிறந்துவீயு
மருமலர்த்துளவோன்கண்ணனாயநாண்மனிதயாக்கை
யருவருப்பெனவாங்கெய்தியத்தகுமுனிவன்றன்பாற்
றிருவளர்தீக்கையுற்றுத்தேகசுத்தியினைப்பெற்றான். கங

பாண்டவர்தூதனென்னப்பயில்பெயரானங்க
ணாண்டகையடிகள்போற்றிவைகினானன்றுதொட்டு
நீண்டுலகளந்தமாலைநிறைதிருநீற்றுக்கோலம்
பூண்டுயர்சைவனென்னப்புகன்றிடுமுலகமெல்லாம். கச

தான்றோன்றீச்சரப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கூஎ0.

அமரீசப்படலம்

கலிநிலைத்துறை.

தெத்தேயெனவரிவண்டினமுரலமதுச்சிந்துந்
தொத்தேர்மலர்ப்பொழில்சுற்றுசுவாயம்புவஞ்சொற்று
முத்தார்துறையதன்கீழ்த்திசைமுப்பத்துமுக்கோடிப்
புத்தேளிரும்வழிபாடுசெயமரீச்சரம்புகல்வாம். க

சுராசுரயுத்தவரலாறு.

வரிவண்டினமுரலாமணமாலைக்கடவுளரு
முரிநுண்ணிடைத்திதிமைந்தருமுன்னொருகாலத்
தெரிமண்டியெனச்சீறியெதிர்த்துப்பொரலுற்றார்
நரிபேய்கொடிசேனங்கழுகுழலுங்களனாங்கா. உ

முற்றிப்பலவுகமங்கவர்தண்டாதமர்முயலக்
கற்றைச்சடையிறையோன்மலைமகளோடுயர்ககனத்
துற்றுச்சமராடற்றிறநோக்கியுறைந்தனனால்
வெற்றித்திறந்தோலாவகைமேன்மேலமர்மூண்ட. ங

உண்ணாவமுதனையாளையுடையான்முகநோக்கி
யெண்ணாலுணர்வரியாயிருதிறத்தோரிவர்தம்முண்
மண்ணாவிறலொருகூற்றினர்வாகைபுனைகெனலும்
விண்ணாடரைவன்றானவர்வென்றார்திறல்கொண்டார். ச

அதுகண்டுமையந்தோபெருமானேயருள்புரியாய்
மதுவொன்றியவெற்றித்தொடைவானோர்புனைகெனலும்
விதுவொன்றியசடையோனருள்விண்ணோர்புடைவைப்ப
முதுவன்பகையறவென்றனர்முடிவானவரம்மா. ரு

வெற்றிப்பறைசாற்றிப்பெருவிறல்விண்ணவர்மீண்டு
கொற்றத்துயர்கடவுள்ளவைக்களமேவரக்குறுகிச்
செற்றுச்செருவென்றோங்கியதிறலோடுறைகுற்றார்
மற்றப்பொழுதுயர்வாசவன்மதமுற்றுரைசெய்வான். ௬

அச்சோவெனதாண்மைத்திறமார்கூறுவரென்று
னச்சிரவன்றனைவெங்கனலவனைச்சமனிருதி
யச்சூரனையவனைப்புனலரசன்வளியவனை
யச்சிலனையளகைக்கிறையீசானனங்கவனை. ௭

ஈசானனைமலரோனைவன்றனைநாரணனிகலிப்
பேசாவிறல்பேசிப்பிணக்குறுபூசலைநோக்கித்
தூசார்வனமுலையம்பிகைதுணைவற்றொழுதின்னோர்
மாசார்செருக்கொழியும்படிவள்ளாலருளென்றாள். ௮

பெருமான்தேவர்களகந்தையையொழித்தல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நிணம்புல்குசூலம்வலமாகவேந்திநெடுமால்விரிஞ்சன்முதலோர்
பிணம்புல்குகாட்டினடமாடுகங்குபற்றைவேணிவைத்தபெருமான்
கணம்புல்குதேவர்முரணைத்தவிர்ப்பவவர்முன்புகாமரளிவீழ்
மணம்புல்குதொங்கலணிதோளியக்கவடிவொன்றுகொண்டணுகினான்.

அணுகித்துரும்பையெதிர்நட்டுமுன்னரிறுமாந்துவைகுமவனைப்
பணிலத்தனுதியிமையோர்கடேறுக்கிரியவணிபாரிற்றுரிதுவென்
றணிபுற்றலைத்துமொருநீயவன்றனக்குபுகல்கின்றுசொல்லுமொழிகேட்
டுணர்விற்சிறந்தவர்கண்டுநோன்றருமுவனின்னபேசலுறுவான். ௧0

எவனேனுமாகவருநாணுமாறுவலியின்றளக்கலுறுவேன்
றவளாதுநம்முனடுமித்துரும்புதுணிசெய்யவல்லனெவனோ
வவனேதயித்தியரைவென்றமளியறிகென்றுரைப்பமகவா
னிவராவெழுந்துகுலிசத்தைவீசிவறிதேயிளைத்தனனரோ. ௧௧

மற்றைத்திசைக்கணுறைவோரும்வன்மைமுழுதுஞ்செலுத்திவலியி
லொற்றைத்துரும்பையசைவிக்குமாற்றலிலராயுடைந்துவிடலுஞ்
செற்றத்தெழுந்தவயனூர்தமாதுபடையைச்செலுத்தவரியு
மற்றப்படாதபடைவீசியார்ப்பவவைகூர்மழுங்கியனவே. ௧௨

துரும்பொன்றுதன்னில்வலிமுற்றிழந்தசுரர்ச்சமெய்திவியவா
விரும்பண்புகூரவெவனியம்புகெனலுமியக்கவடிவாய்
வரும்பாண்டரங்கனுருவங்கரப்பமறுகித்திகைக்குமவர்முன்
கரும்பொன்றுதோளிமலையான்மடந்தையெதிர்காட்சிதந்தருளினாள்.

உமையம்மைதேவர்களுக்குப்புத்திபுகட்டல்.

எதிர்காணநின்றகருணைப்பிராட்டியிருதாள்பழிச்சியிமையோர்
முதிர்காதல்கொண்டுவழிபட்டுவண்கைமுடிமீதுகூப்பியுலகம்
பதினாலுமீன்றமுதல்வீயியக்கர்பதியாயணைந்தவவன்யார்
மதியேமெமக்குமொழிகென்றிரப்பமலைவல்லியின்னபுகலும். ௧௪

எவன்வாணிகேள்வன்முதலோர்பதங்கணிலைபேறுசெய்யுமிறைவ
னெவனெப்பொருட்குமாதாரமாகியெவருந்தொழப்படுபவ
னெவன்முற்றுமாக்கிநிலைசெய்துபோக்கியறிஞர்க்கினிக்குமமுத
னவனென்றுகாண்மினிமையீரியக்கவடிவாகிவந்தவழகன். ௧௫

எவனுக்குமுற்றும்வடிவங்களாகுமெவனுண்மையாருமறியா
ரெவனெங்கும்யாவுமறிவுற்றுநிற்பனெவனாணடக்குமுலக
மெவனைத்துதிக்குமறையீறுமுற்றுமெவனங்கவைக்குமரியா
னவனென்றுகாண்மினிமையீரியக்கவடிவாகிவந்தவழகன். கசு

எவனாமமெண்ணியென்னவன்றாள்பழிச்சினெவனைக்கருத்தினிறுவி
னெவனன்பர்சேவைபுரியிற்பவங்களிரிவுற்றுமுத்திமருவு
மெவனுண்மையின்பவறிவாகிநிற்பனெவனிந்துவேணிமுடியா
னவனென்றுகாண்மினிமையீரியக்கவடிவாகிவந்தவழகன். கஎ

ஒற்றைத்துரும்பினுமதாற்றன்முற்றுமொழிவித்தகன்றவவனைப்
பற்றுற்றுநீவிரறிகின்றிலீர்கள்பழையோனவன்றன்வலமே
யற்றத்தினீக்குமவன்பாலுதித்தவகிலந்தனக்குவலமா
மற்றுத்தமக்குமுதலாயமண்ணின்வலியேகடாதிவலிபோல். கஅ

இனிநீவிருய்திபெறுமாறுரைப்பலிமையாதமுக்கணிறையோன்
பனிவீசுகம்பைநளிநீர்துளிக்குமொருமாநிழற்படியிலென்
றனையாண்டுகொண்டுமகிழ்காமர்கச்சிதனிலெய்திவெள்ளைவிடையோன்
றுனிதீர்சரண்கள்சரணென்றடைந்துதொழுமின்களும்பருலகீர். ககூ

தேவர்கள்சிவபூசைசெய்தல்.

கலிநிலைத்துறை.

என்றுகூறினன்மறைந்தனனுலகமீன்றெடுத்தா
ளன்றுமாலயன்றொடக்கமாமமரர்களெல்லா
நன்றுநம்மறிவிருந்தவாறென்றுளநாணிச்
சென்றுசேர்ந்தனர்கச்சியந்திருநகர்த்தேத்து. உ0

திரிகவீச்சரப்பெயரினாற்சிவக்குறியிருத்திக்
கரியகண்டனையருச்சனைகரிசறவாற்றிப்
பெரிதுமாமிடல்பெற்றனர்வரங்களும்பெற்றா
ரரிவைபாகனுக்கினியதாமத்திருக்கோயில். உக

அமரீசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கூகூக.

திருமேற்றளிப்படலம்.

கலிநிலைத்துறை.

துளிமதுத்தொடைக்கடவுளர்தொழுமமரீசங்
களிவரப்புகன்றனமுருத்திரகணமுதலோ
ரளியினாற்றொழுதேத்துமீரைம்பகிற்றோன்பான்
றளிகளீண்டெடுத்தியம்புதும்வழுத்துபுநெறியீர்.

சேகுதீரமரீசத்தின்சேயிடைத்தென்பான்
மாகவைப்பினையுரிஞ்சியமணிமதிற்காயா
ரோகணக்குட்பாங்கர்நூற்றுப்பதினெட்டு
நாகர்போற்றிடநலங்கெழுதலங்கணன்குளவால்.

அண்டங்காத்தமருருத்திரர்நூற்றுவர்அருட்சீ
கண்டன்வீரன்குரோதனேமுதல்கருதெண்மர்
மண்டலத்திறையோரிருநால்வரும்வழுத்திப்
பண்டுபூசனைபுரிந்திடப்பட்டனவத்தளிகள். ௩

விஷ்ணுசிவசாரூபம்பெறவிழைதல்.

இருமையுந்தருமேன்மையத்தளிகளையென்றும்
பொருவின்மெய்த்தவர்பற்பலரருச்சனைபுரிவார்
கருதரும்புகழவற்றிடைக்கண்டவர்கருநோ
யொருவிவீடுறுமேற்றளியென்பதொன்றுளதால். ௪

நவிலுமத்தலத்தெய்திமுன்னுகணைப்புத்தேள்
கவிரிதழ்ச்சிறுநுணுகிடைக்கவுரிதன்களபக்
குவிமுலைத்தடச்சுவடுதோய்குரிசில்சாரூபம்
புவிமிசைப்பெறவிழைந்துமெய்த்தவம்புரிந்தனனால். ௫

ஐம்புலன்களையடக்கிநின்றறுபகைதுறந்து
நம்புநீற்றணியக்கமாலிகையுடனயந்து
கம்பியாதுருத்திரங்கணித்திதயநற்கமலத்
தெம்பிரானருள்வடிவினையிடையறாதிருத்தி. ௬

ஆற்றருந்தவமியற்றுழியழல்விழித்தறுகட்
கூற்றைவென்றருள்பரம்பொருள்கருணைகூர்ந்தடலா
னேற்றின்மீதெழுந்தருளியெம்மடியரிற்சிறந்தோய்
நோற்றுநொந்தனைவேட்டனநுவறியென்றருள. ௭

உந்திபூத்தவனளப்பருமுவகையுட்டிளைத்துச்
சந்தமாமலரடிமிசைவீழ்ந்துதாழ்ந்தெழுந்தா
னெந்தைநீதரமுழுவதும்பெற்றுளேனிந்நா
ளந்திலென்றனக்களித்தருளையநின்னுருவம். ௮

திருஞானசம்பந்தர்சிவசாரூபங்கொடுத்தல்.

என்றவாய்மொழிதிருச்செவியேறலுமெங்கோ
னொன்றுகூறுதலுற்றனனுவணமீதுயர்த்தோய்
நன்றுதேர்வைவச்சுதமனுவந்தரநுணுகு
மன்றுநாலிரண்டெற்றுடையிருபதாங்கலியில். ௯

காழிமாநகர்க்கவுணியர்குலத்தொருகாளை
யேழிசைத்தமிழ்ஞானசம்பந்தனெம்மடியான்
யாழநீபெறவெம்முருவிங்குவந்தளிப்பா
னூழியோயதுகாறுமிவ்வரைப்பினிலமர்ந்து. ௧௦

ஈட்டருந்தவமியற்றுகென்றருளிநீங்குதலும்
கோட்டமின்றிமாலம்முறைவதிந்துபூங்கொன்றைத்
தோட்டலங்கலரற்குழப்புகுமுத்தமிழ்விரகர்
பாட்டலங்கலாற்பரஞ்சுடர்திருவுருப்பெற்றான். ௧௧

திருமேற்றளிப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௦௦௨.

அனேகதங்காவதப்படலம்.

கலிவிருத்தம்.

அச்சதருத்திராதியர்போற்றுபு
மெச்சியபஃறளிமேன்மைவிளம்பினு
மெச்சமின்மேற்றளியின்வடசாரமர்
கச்சியனேகதங்காவதங்கூறுவாம். ௧

கறையடிச்சிறுவிழிக்கடுநடைச்சொரிமதப்
பிறையெயிற்றெறுழ்வலிப்பிளிறொலிக்கரிமுகத்
திறைபுகழ்க்கச்சியிலெய்தியெம்பிரான்றனை
நிறையுமெய்க்காதலானருச்சனைநிரப்புவான். ௨

சயமிகுமனேகபேச்சுரனெனத்தன்குறிப்
பெயரினிலிங்கமொன்றிருத்தினன்பெட்பொடு
மயர்வரும்பூசனைமரபுளிப்புரிதரு
மியல்புகண்டெம்பிரானெதிரெழுந்தருளினன். ௩

வேட்டதென்மைந்தனேவிளம்பெனத்தாதைதன்
றாட்டுணைமலர்மிசைத்தாழ்ந்தெழுந்திபமுக
னாட்டினில்யான்செயும்பணியெவனல்கெனப்
பாட்டளிதுதைமலர்க்கொன்றையான்பகர்தரும். ௪

கலிநிலைத்துறை.

சுருதிநான்முறைநிறுவவுந்தூயவர்தொடங்குங்
கருமமூறுதீர்த்தளிப்பவுந்தயித்தியர்கயமைத்
திருவிலார்க்கிடையூற்றினைச்செய்யவுமிவணீ
வருதல்வேட்டெமைமுன்னரேவழுத்தினர்வானோர். ௫

ஆதலாற்புறச்சமயநூலரட்டருக்கென்றுந்
தீதுசாலிடையூற்றினைவிளைமதிசிவனூல்
வேதநன்னெறியொழுகுநர்க்கூறுகள்விரவா
தேதநீத்தருள்புரிதியெம்மாணையின்வலியால். ௬

உலகெலாமுனைவழுத்துகவழிபடாதொழியிற்
கலிகொள்வேதியரும்பராயினுமவர்கரும
நிலமிசைப்பயனெய்துறாதழிகநின்னிணைத்தாண்
மலர்வழுத்தினோர்பெரும்பயனெய்துகமாதோ. ௭

மங்கலங்களுமமங்கலமாமுனைவழுத்தார்
தங்களுக்கிவைவரமுனக்கருளினந்தக்கோ
யிங்குநீயின்னுமொன்றுகேளிரணியபுரமா
மங்கண்வாழ்பவர்கேசியேமுதல்பலரசுரர். ௮

அவனியாவையுமலைத்துவெங்கொலைபுரிந்தமர்வா
ரவர்களாருயிர்தாளினிற்செகுத்தவர்கருவு
ளவர்கள்சத்தியம்வல்லனப்பயனங்குவீற்றிருக்கு
மவனைநாடொறுங்கெழீஇக்கலந்தன்புகொண்டமர்வாய். ௯

வல்லபைத்திருவோடுனைவழிபடப்பெற்றோர்க்
கொல்லைவேட்டனயாவையுமுறுகெனவருளி
யெல்லையில்பெருங்கருணையாலுச்சிமோந்தெடுத்துப்
புல்லியெம்பிரான்விடுத்தனன்மீண்டனன்புதல்வன். ௧௦

மீண்டநாயகனிரணியபுரத்தினைமேவி
யீண்டுதானவக்குழுக்களைத்தாளினாலெற்றிக்
காண்டகுந்திறன்முருங்கவென்றழித்தவர்கருவின்
மாண்டசத்தியைவாங்கினன்மணந்துவீற்றிருந்தான். ௧௧

விநாயகப்பிரானருச்சனைபுரியவீற்றிருக்கு
மனேகபேசனையனேகதங்காவதத்திறைஞ்சி
னினைதவெந்துயர்ப்பிறவிதீர்ந்தென்னையாளுடையான்
றனதுவெள்ளியங்கயிலையிற்சார்ந்துவைகுவரால். ௧௨

அனேகதங்காவதப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௦௧௪.

கயிலாயப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

அல்லிப்பூஞ்சேக்கைமிசையன்னச்சேவல்பெடைக்குருகைப்
புல்லிக்கண்படுபொய்கையனேகதங்காவதம்புகன்றா
மெல்லைச்செய்மணிக்கோயிலதன்மேல்பாங்கரிறைஞ்சினவர்க்
கொல்லைப்பேரருள்கூருங்கயிலாயந்தையுரைசெய்வாம். ௧

திரிபுராதியரொழுக்கம்.

நிலமீதுமந்தரத்துநெறிதாழ்கூந்தலரம்பையர்வாழ்
புலமீதும்வெவ்வேறுபொன்னின்வெள்ளிதனிலிரும்பில்
வலமேவுமாதவத்தான்மயனால்வகுத்தமுப்புரிசை
யுலமேவுபுயத்தவுணர்க்குளவாயினவான்முன்னாளில். ௨

அங்கவற்றினுறுமவுணர்சுருதிமிருதியாய்ந்துணர்ந்தோர்
துங்கநிலையாகமங்கண்முழுதுந்தேர்ந்துதுகளில்லோர்
கங்கையணிசடைப்பெருமான்வழித்தொண்டாற்றுங்கடப்பாட்டோர்
தங்குதிருவெண்ணீறுசண்ணித்தொளிகால்வடிவினர். ௩

சிவலிங்கத்தருச்சனையேசெய்யுநியதிக்கடன்பூண்டார்
சிவதருமந்தலைநின்றோர்திகழப்பூணுஞ்சாதனத்தார்
சிவனடியார்தமைக்காணினுவகைதுளும்புஞ்சிந்தையினார்
சிவநெறியிற்பிறழாதசெயலிற்றமக்குநிகரில்லார். ௪

எவ்விடத்துஞ்சிவகதையேயியம்புவோருங்கேட்போரு
மெவ்விடத்துஞ்சிவபணியேயியற்றுவோருமெச்சுநரு
மெவ்விடத்துஞ்சிவனடியாரெதிர்கொள்விருந்துபுரந்தருத
லெவ்விடத்துஞ்சிவநாமமுழக்கமன்றியிலையங்கண். ௫

விஷ்ணுவின்வஞ்சகசூழ்ச்சி.

இத்தகையதயித்தியராலிரியல்போகியுடைந்தழியுஞ்
சித்தமுடைக்கடவுளர்போய்த்திருமால்சரணஞ்சரணடைந்தார்
பைத்தபணிச்சேக்கைமிசைமலர்க்கண்படுக்கும்பசுந்துளபத்
தொத்துவிரியுநறுந்தாரானவரோடிதனைத்தொடங்கினான். ௬

வேதமனுவெடுத்தோதிக்கொடியவேள்விபுரிகாலைப்
பூதமிகத்தோன்றினவாலவைதாமும்மைப்புரஞ்சிதையக்
காதுகென்னுந்திருநெடுமாலேவலாற்றிற்கடிதணைந்து
நீதிநிலைத்தயித்தியர்முன்னிற்கலாற்றாதழிந்தனவே. எ

அதுகாணூஉநனிநடுங்குமமரர்தம்மைமுகநோக்கி
மதுவாருநறுந்துளபமாயனிதனைவகுத்துரைப்பா
னிதுகேண்மினமரர்காள்சோவவுணரெல்லாரும்
பொதுமேவிநடநவிற்றும்புத்தேள்சரணஞ்சரணடைந்தார். அ

தீத்தொழிலின்றலைநின்றகொடியரேனுஞ்சிவபத்தி
வாய்த்தவர்கள்சாவாதமதுகையுடையர்யாமவரைப்
பூத்தநுதிக்கணையொன்றாற்பொருக்கென்றழிக்கும்வலியில்லே
மார்த்தபுகழ்ச்சிவபெருமான்றனேயதற்குவல்லவனும். கூ

வேறு.

அனையவனடிபேணியடைந்தவரவர்கண்மூ
ரினியவர்சிவபத்திசிதைவுசெய்திடுகேம்யா
நினைதருமிதுவல்லாற்பிறிதிலைநெறியென்றுப்
புனைபுகழ்நெடுமாயன்புகன்றிதுபுரிகிற்பான். க0

மறைநெறிபழுதென்றுமறுமையொன்றிலையென்று
முறைதருபொருளெல்லாங்கணத்தழிவுறுமென்று
மறைதருமொருநூலையாக்குபுவடிவத்திற்
பொறைபுரிதன்கூற்றோர்புருடனைவருவித்தான். கக

அங்கவன்முகநோக்கியடலரிபுகல்கிற்பா
னிங்கிதுபுத்தாகேளினியதொர்நூல்கொண்டே
பொங்கியசிவநேசம்பூண்டுயர்புரவுணர்
தங்களைமயல்பூட்டிச்சிவநெறிதபுவிப்பாய். கஉ

நாரதன்றுணையாகநடமதியிருவீர்க்குஞ்
சீரியமறைவாய்மைசிந்தையினிலைபெறுகென்
றோர்பெறவிடைநல்கயாழினமுனிவோனுந்
தேரனும்விரைந்தெய்தித்திரிபுரமணுகுறலும். கங

மீயுயர்புரமூன்றின்மேவுநரவர்செய்யு
மாயையின்மருளுற்றுமற்றவர்மாணுக்க
ராயினரவர்கூறுஞ்சாத்திரமதுநம்பித்
தீயதொர்வழியொழுகிச்சிவநெறிதனைவிண்டார் கச

தாழ்நெறிதலைநின்றுசாதனந்திருநீறு
வாழ்வுறுஞ்சிவதருமமறைநெறிகைவிட்டார்
ரூழ்வலியெவர்வெல்வாருங்குவர்மன்னவியரும்
யாழ்முனிமொழிகேட்டுக்கற்பினையிழந்தார்கள். கரு

விஷ்ணுகைலையையடைந்துவிண்ணப்பித்தல்.

விழியுறக்கண்டதுவேமெய்யெனுந்துணிபினரா
யிழிதொழில்பலபுரியுமிவர்செயன்முழுதோர்ந்து
பழுதறுபுகழ்மாயோன்பண்ணவர்புடைசூழக்
கழிபெருமகிழ்வோடுங்கைலையையணுகினனால். கசு

அங்கணைந்திறையோனையடியிணைதொழுதேத்திப்
பங்கயக்கரங்கூப்பிப்பரிவொடுமுரைசெய்வான்
சங்கணிகுழையாய்முப்புரமுறுதானவர்தா
மெங்களுக்கிடர்செய்யநொந்தனமிதுகாறும். ௧௭

மாயையினெறிகாட்டும்புத்தனின்மருளுற்றுத்
தூயநன்னெறிவிட்டார்துகள்படுமவர்தம்மை
மாய்வுசெய்தெமையாள்வாயாமெனவனிதைமுத
லாயினர்தமைமுன்னுண்மருள்புரியடிகேளோ. ௧௮

பெருமான்திரிபுரசம்மாரஞ்செய்தருளுதல்.

வஞ்சிவிருத்தம்.

என்றுமாயனியம்புசொற் - சென்றுவார்செவிசேர்தலு
மன்றுளாடியவான்பொரு - ளொன்றுகூறுதலுற்றிடும். ௧௯

கருவிமூதெயில்காதுபோர்க் - கருவியொன்றிலங்காண்வரக்
கருவிகூடிற்கணத்தவர் - கருவெலாமிறல்காண்டியால். ௨0

என்னும்வாய்மொழியெம்பிரான் - முன்னர்நந்திமுகத்தினுற்
சொன்னகாலைத்துழாயனு - மன்னதேவரோடாய்ந்தனன். ௨௧

வேறு.

உருகெழுநிலமொருவையமு - மிருசுடரிருபுடையாழியுஞ்
சுருதிகடுகளறுவாசியு - மருமலரணையவன்வலவனும். ௨௨

தடநெடுவடவரைசாபமுந் - படவரவிறைபகர்நாரியு
மடல்விரிதுளவினன்வாளியுங் - கடவுளர்பிறர்பிறகருவியும். ௨௩

ஆயினரதுபொழுதண்ணலு - மேய்வுறுமிரதமதேறினன்
மாயிருநெடியவில்வாங்கினன் - காய்கனலுமிழ்கணைபூட்டினன்.

எறழ்வலிமுழுவதுமெண்ணினன் - கறுவுறுகுறுநகைகாட்டினன்
முறுவலினுயர்புரமும்மையு - நெறுநெறுநெறுவெனநீறின. ௨௫

பரவுறுமிமையவர்பார்த்தனர் - குரவையினொடுமகிழ்கூர்த்தனர்
பொருபுளகமுமுடல்போர்த்தன - ரரகரகரவெனவார்த்தனர். ௨௬

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அனையவானவர்க்கரும்பெறல்வரம்பலவருள்செய்துகயிலாயத்
தெனையுடைப்பிரானினிதெழுந்தருளினனிமையவரெல்லாரு
நனைமலர்த்துழாய்நாரணனயனொடுநலம்பெறக்குழீஇயங்நாள்
வினையிகந்துலகுய்யுமாறிஃதொன்றுவிதிக்கலுற்றனர்மன்னே. ௨௭

இற்றைநாண்முதல்சைவலிங்கார்ச்சனையில்லவர்வினைமாசு
செற்றநீற்றணிகண்டிகையிகந்தவர்சிவன்பெயர்வழுத்தாதார்
கற்றுமஞ்செழுத்துருத்திரங்கணித்திடாரெமக்கயலவராக
வற்றவாறவர்கடையரேயெனவகுத்தவரவரிடம்புக்கார். ௨௮

நாரதனும்புத்தனும்நலம்பெறப்பூசித்தல்.

மன்னுநாரதமுனிவனும்புத்தனுமனங்கவன்றழிந்தேங்கி
யென்னகாரியமியற்றினமிமையவரியம்பியமொழிகேட்டுப்
பன்னருஞ்சிவபத்தரிலுயர்ந்தவர்பழமறைக்கரைகண்டோ
ரன்னதானவர்தமைவறிதேமயல்பூட்டினமந்தோவே. ௨௯

பழியில்வாய்மையர்பலர்தமைத்தீவழிப்படுத்தவிப்பெரும்பாவக்
கழிவுவேதநூல்யாங்கணுங்கண்டிலேங்கற்பகோடியின்மேலு
மொழிவுறாதெமக்கிருணரகினிச்செயல்யாதெனவுளநெக்கார்
சுழிபுனற்பணைக்காஞ்சியினெய்தினர்தொடுபழிவினைமாற. ௯௦

கருத்தவிர்த்தருண்மழுவலான்புரந்தருள்காஞ்சியிற்புகலோடு
மிருப்புக்குன்றுறழ்திண்பெருந்தீவினையெம்பிரானருளாலே
பருத்திக்குன்றெனநொய்மையதாயதுபார்த்தனரிருவோரு
மருத்திகூர்ந்தனரவ்விடம்பருத்திக்குன்றமெனப்பெயரிட்டார். ௯௧

அவ்வரைப்பினிலிருந்துகொண்டிருவருமதன்வடகீழ்பாங்க
ரெவ்வமில்லதோர்விசித்திரக்கோயிலங்கியற்றினரதனுள்ளாற்
சைவர்சூழ்கயிலாயநாதன்றனைத்தாபனஞ்செய்தேத்திச்
செவ்வன்மாதவம்பன்னெடுநாளுறச்செய்தனரதுகாலை. ௯௨

சயிலாயநாதன்காட்சிதந்தருளல்.

பளிக்குமால்வரைநிமிர்ந்தனவிடைமிசைப்பல்கணம்புடைசூழ
வொளிக்குழாந்திரண்டெழுந்தெனவெழுந்தருளொருவனைக்கண்ணுற்றார்
தெளிக்குமின்னிசைத்திவவியாழ்முனிவனுந்தேரனும்விழிநீருட்
குளிக்குமேனியர்பலமுறைபணிந்தனர்கூறுதலுற்றால். ௯௩

ஐயனேயுனக்கடியரையடியரேமரில்படுபுறநூலான்
மையல்பூட்டினேமிப்பிழைபொறுத்தருள்வள்ளலேயெனவேண்டத்
தொய்யில்பூத்துவிம்மாந்தெழுந்தணிகெழுதுணைத்தபூண்முலைக்கோபச்
செய்யவாயுமைக்கொருபுறமளித்தருள்சிவபிரானிதுபேசும். ௯௪

வேறு.

கொடியநீரிழைத்தபாவங்கோடியாண்டவதியாற்றுங்
கடனெறியெவற்றினானுங்கழிவுறாகண்டீர்நந்த
மடியரைப்படிற்றுநூலாற்பொருளிலாசைகாட்டிப்
படிமிசைமயக்குவோர்கள்படுகுழிநரகில்வீழ்வார். ௯௫

பாதகமெவற்றினுக்குந்தீர்திறம்பகருநூல்கண்
மேதகுமடியார்தம்மைமயக்கியவினையினோர்க்கு
நோதகுநரகேயன்றிநுவன்றிடாவேறுதண்ட
மோதுழியதுவுங்காஞ்சியுற்றவர்க்கொழிவுகூடும். ௯௬

கச்சியிலுறுதலானுங்கடுவினைமெலிதாய்விட்ட
திச்சையினிலிங்கமிங்கணிருத்துபுவழிபாடாற்று
மச்செயல்வலியாற்சாலக்கழிந்ததேயானுங்கேண்மின்
முச்சகம்புகழுநல்யாழ்முனிவனேபுத்தரேறே. ௯௭

பிறர்க்குபகாரமாதற்பெற்றியானொருகாற்பர்வத்
திறத்தினைப்புரிவரேனுஞ்சிவநெறிச்சிதைவுதன்னை
மறப்பினுமெண்ணலோம்பலெண்ணினோர்வழங்கல்செல்லா
நெறிப்படுநரகின்வீழ்ந்துநீந்தருமிடும்பைகூர்வார். ௯௮

இன்றுநீர்வழுத்துமன்புக்கிரங்கினேநுமதுபாவந்
துன்றுபல்பிறவிதோறுஞ்சுழன்றலாற்கழியாதாகு
நன்றதுகழியுமாறுநவிலுதுமினையவைப்பின்
மன்றமற்றெமைப்பூசித்துவலம்புரிந்துறைதிரென்றும். ௯௯

வலஞ்செயப்புகுமப்போதும்வெளிக்கொளும்போதும்வாயிற்
புலந்தனைச்சுருங்கையாகப்புரிதுமங்கவையேகன்மப்
பலங்களைநுகருந்தோற்றமிறப்பெனும்பகுதியாகி
யிலங்கவீண்டினிதுவாழ்மினிறுதியிற்றருதுமுத்தி. ச0

சித்திகளனைத்தையுநல்கும்விசித்திரச்சிற்பம்வாய்ந்து
சித்தர்களருச்சித்தேத்தத்திகழ்கயிலாயமேன்மை
சித்தமாசகன்றோர்க்கன்றித்தெரிவுறாகாண்மினென்று
சித்தசனெரியநோக்குஞ்சேவகன்கரந்துபோந்தான். சக

இருவருமவ்வாறங்கணிறைவனைவலஞ்செய்தேத்திக்
கருவறநெடுநாள்வைகித்திருவருட்கலவிபெற்றார்
திருவளர்காஞ்சிமூதூர்த்திண்பெருங்கயிலைபோலும்
பொருதலமதுவேயன்றியுலகமூன்றிடத்துமில்லை. சஉ

கயிலாயப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - க0ருகூ.

வீரராகவீசப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புத்தீருக்கிறையுநல்யாழ்ப்புலங்கெழுமுனியும்போற்ற
வத்தனூரினிதுவைகுங்கயிலையினடைவுசொற்றா
மித்தகுவரைப்பின்கீழ்பாலிளநருக்கொப்புளித்துத்
தொத்தலர்பொழில்சூழ்வீரராகவஞ்சொல்லலுற்றாம். க

இராமனழுதேங்கிமுறையிடல்.

ஒன்னலர்குருதிமாந்தியொளிறுவேலிராமனென்பான்
றன்மனைக்கிழத்திதன்னைத்தண்டகவனத்துமுன்னாட்
கொன்னுடைத்தறுகட்சீற்றக்கொடுந்தொழிலரக்கனெளவித்
துன்னருமிலங்கைபுக்கான்மேல்வருதுயரநோக்கான். உ

பெய்கழல்கறங்குநோன்றாட்பெருவிறலிராமனந்நா
ளொய்சிலைத்தம்பியோடுமிடருழந்துழங்கியேங்கிக்
கொய்துழைவளாங்கவொங்குங்கொட்டுமிக்கமலவாவிச்
செய்புடையுடுத்தகாஞ்சித்திருவளர்நகரஞ்சேர்ந்தான். ௩

இடும்பைநோயறுக்குந்தெண்ணீரொழிற்சிவகங்கையாடி
நெடும்பணையொருமாமூலநின்மலக்கொழுந்தையேத்திக்
கொடும்படைச்சனகனீன்றகோதையைப்பெறுவான்கூற்றை
யடும்புகழ்ச்செய்யதாளையிரந்துநின்றழுதுவேண்டி. ச

தாழ்ந்தெழுந்தேகித்தென்பாலகத்தியீச்சரத்தின்முன்னர்
வாழ்ந்திருந்தகைமைசான்றவண்டமிழ்முனியைக்கண்டான்
சூழ்ந்தவெந்துயரத்தோடுமோடினன்றுணைத்தாண்மீது
வீழ்ந்தனன்புலம்பலோடும்வெருவலேலென்னத்தேற்றி. ரு

இத்துணையிடும்பைக்கேதுவெவனெனவினவுஞ்செல்வ
முத்தமிழ்முனிவன்கேட்பப்புகுந்தவாமொழியலுற்றான்
மைத்தவார்கரியகூந்தற்கௌசலைமணந்ததிண்டோட்
சத்துவகுணத்தான்மிக்கதசரதனீன்றசெம்மல். சா

கலிநிலைத்துறை.

எம்பிரானிதுகேட்டருளேழிரண்டாண்டு
வெம்புகாட்டகத்துறைதிநீவியனிலந்தாங்கி
நம்பியாகியபரதனேவாழ்கெனநுவன்று
கம்பியாதெனையெந்தையிக்கானிடைவிடுத்தான். எ

ஏயவாணையைச்சிரமிசைக்கொண்டெழுமெனையே
தூயசீரிலக்குமணனுஞ்சீதையுந்தொடர்ந்தா
ராயமூவருந்தண்டகவனத்தமர்ந்திடுநாண்
மாயமானெனத்தோன்றினனங்கணன்மாரீசன். அ

தோன்றிமற்றெனைச்சேயிடைக்கொண்டுபோய்ச்சுலவி
மான்றவம்பினிற்பொன்றுவான்சீதையைவலியா
னன்றவெம்பியைவிளித்துவீழ்ந்தனனதுகேளா
வேன்றசீதையைவிடுத்தெனைத்தொடர்ந்தனனிளவல். சு

அனையகாலையிலிராவணனவட்கவர்ந்தகன்றான்
புனைமலர்க்குழற்பூங்கொடிதணத்தலிற்புலம்பி
யினையுமென்னுயிர்பொன்றுமுனிரங்குதியெந்தா
யுனையடைந்தனன்சரணமென்றழுதழுதுரைத்தான். க0

அகத்தியர்தத்வோபதேசஞ்செய்தல்.

உரைத்தவாய்மொழிகேட்டெதிரகத்தியனுரைப்பான்
விரைத்ததார்ப்புயவேந்தகேள்வீங்குநீருலகி
னிரைத்தவைம்பெரும்பூதத்தினிலைபெறும்முடலந்
தெரிக்கில்யாவையுமுடன்பிறந்தவையெனத்தெளிதி. கக

மற்றுயிர்க்குவேறணவிபெண்ணெனவழக்குஞ்
சற்றுமில்லைநீர்ச்சலதியுட்படுபலதுரும்பின்
பெற்றிபோலுமிப்பூதத்தின்கூட்டமும்பிரிவுங்
கற்றுளோரியிவையிருமைக்குமாயைகாரணமாம். கஉ

செய்வினைப்பயனுள்ளதுவருமெனத்தெளிதி
யெவ்வமுற்றுழந்திரங்கலைமகிழ்ந்திருவெனலும்
பௌவமுற்றுமோருழந்தளவாக்கிமுன்பருகுஞ்
சைவமாமுனிமொழிக்கெதிரரசனுஞ்சாற்றும். கங

அத்தநின்னுரைமுழுவதுமுண்மையேயானு
மித்தலைக்கிதுவிணங்குமோமனையவண்மாற்றான்
கைத்தலத்தகப்பட்டுழித்தத்துவங்காண்போன்
பித்தனென்றுலகுரைத்திடுமாதலிற்பெரியோய். கச

பறந்தலைப்புகுந்தொன்னலர்ச்செகுத்துயிர்பருகிச்
சிறந்தசீதையைமீட்டபினையநீதெரிக்கு
முறந்ததத்துவஞானத்துக்குரியவனுவே
னறைந்தவாறலதென்னுளமடங்கிடாதென்றான்.

மலையமாதவன்கேட்டுநின்மனத்துறும்விழைவு
கலைமதிக்கழுஞ்சிறுவனேடொக்குமக்கதிர்ப்பூண்
முலைமடந்தையைராவணன்கவர்ந்துபோமுறைமை
யிலைகொள்வேலினுயெவருனக்கியம்பினரென்றான். கசு

சடாயுவென்றுயர்கழுகிறைசானகிபொருட்டு
விடாதுபோருழந்திறப்பவன்விளம்பிடத்தெளிந்தேன்
கடாதுகொண்டவட்பெறுந்திறமருளெனக்கரையும்
வடாதுவெற்புறழ்புயத்தனைமாமுனிநோக்கி. கஎ

நின்கருத்திதுவேலுயர்நெடுவரைகுழைத்து
வன்கண்மாற்றலர்புரம்பொடிபடுத்தவன்மலர்த்தாள்
புன்கணீங்குமாறடைக்கலம்புகுமதியவனே
யுன்கருத்தினைமுடித்திடவல்லனென்றுணராய். கஅ

உலகம்யாவையுமொருநொடிப்பொழுதினிலழிப்போ
னிலையும்வில்லினன்கொடுங்கொலைப்பகழியனிகரா
வலகிலாற்றலனுருத்திரனொருவனேயன்றி
யிலையெனப்புகன்றோவிடுமியம்பருஞ்சுருதி. கக

தென்றிசைக்கிறையிராவணன்றிருவடிவிரலி
னொன்றனுலிறக்கண்டனனொருசிறுதுரும்பா
லன்றுவிண்ணவர்தருக்கொடுமிடலறச்செய்தான்
வென்றிபூண்டுயர்கூருகிர்நகைவிழிப்படையான். உ0

அனையனாகியதனிமுதல்பாற்சரணடைந்தோ
ரெனையவேட்பினுமெண்மையினெய்துவரதனாற்
கனைகொள்பூந்தடமுடுத்தவிக்காஞ்சிமாநகரிற்
புனைமலர்க்குழல்பாகனையருச்சனைபுரிவாய். உக

வீரம்வேண்டினையாமின்விதியுளிவழாது
வீரராகவப்பெயரினல்விமலனையிருத்தி
வீரனேதொழுதேத்துதியெனமுனிவிளம்ப
வீரர்வீரனுமம்முறைபூசனைவிளைப்பான். உஉ

இராமன்சிவபூசைசெய்துவரம்பெறல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வெண்ணீறுங்கண்டிகையுமுடல்விரவப்பாசுபதவிரதம்பூண்டு
தண்ணீடுமலர்க்கடுக்கைவீரராகவமுதலைத்தாபித்தன்பா
லெண்ணாறுமிருநூறுமாயதிருப்பெயரியம்பியருச்சித்தேத்தி
யுண்ணீடுபெருங்காதல்வளர்ந்தோங்கத்தொழுதுநயந்துருகுங்காலை.

எவ்வமறப்புரிபூசைக்கெம்பெருமான்றிருவுள்ளமிரங்கிப்போற்று
மவ்விலிங்கத்திடைநின்றுமெழுந்தருளிவிடைமேல்கொண்டமரர்சூழ
நவ்விவிழியுமையோடுங்காட்சிகொடுத்தருளுதலுநலியாவென்றித்
தெவ்வடுதிண்புயத்தோன்றல்பலமுறையுந்தொழுதேத்திச்செப்பலுற்றான்.

அண்ணலேயடியேனுக்கெளிவந்தபெருங்கருணையமுதேயன்பர்
புண்ணியமேயிராவணனுமரக்கர்கோன்பொலந்தொடித்தோட்சீதையென்னும்
பெண்ணரசைக்கவர்ந்தெடுத்துப்போயினன்முறைபிறழுமவனையின்னே
நண்ணலரும்பறந்தலையிற்கிளையோடுமுடிக்கவரநல்குகென்றான்.

எனப்புகலச்சிவபெருமான்றிருவருள்கூர்ந்தெமக்குநீயின்றுதொட்டு
மனக்கினியனுயுலகில்வீரராகவனென்னும்பேர்மருவிவாழ்வா
யுனக்கிகலியெதிர்ந்தோர்களனைத்துணையரேனுமவருடையக்காண்டி
பனித்தநறுந்தொடையோயென்றருள்செய்துபாசுபதப்படையுநல்கி.

முள்ளரைக்காம்பணிமுளரிப்பொகுட்டணையோன்றனிப்படையுமுரன்றுமாக்கள்
கொள்ளையிடுமறைத்துளவோன்படையுமவர்தமைக்கொண்டுகொடுப்பித்தேனைக்
கள்ளவிழ்தார்க்கடவுளர்தம்படைபிறவுநல்குவித்துக்கருணைகூர்ந்து
நள்ளலரைப்பொடிபடுக்கும்பெருவரமுமளித்தருளிநவிலுகிற்பான். ௨௭

கவற்றிநெடும்பகைதுரக்குமிவையுனக்குக்கருணையினலளித்தேங்கண்டா
யிவற்றினெடுமிளவலோடுங்கிட்கிந்தையிடத்தமர்சுக்கிரீபன்சேனை
யவற்றொடும்போய்ப்பரவைகடந்திராவணனைக்கிளையோடுமறுத்துவீரஞ்
சுவற்றியபின்சீதையொடுமீண்டரசுபுரிந்துகவிதுரந்துவாழ்வாய். ௨௮

என்றருளவெதிரிறைஞ்சியிராகவன்மற்றிதுவொன்றுவினைதலுற்று
னன்றினுர்புரமெரித்தோய்குறுமுனிவனுருயிர்கட்காண்மைபெண்மை
யொன்றுமிலையாக்கையெலாமுடன்பிறந்தவாகுமெனவுரைத்தல்செய்தான்
மன்றவெனக்கவைமுழுதுந்தேறவிரித்தருளென்றுவணங்கிவேண்ட. ௨௯

வேதாந்தநிலையனைத்துமவன்றெளியவிரித்துரைத்துவரங்கணல்கிக்
காதார்ந்தகுழையுமையாளுடனுகவிலிங்கத்துட்கரந்தானெங்கோ
ஞதாந்தப்பரஞ்சுடராமிவ்விலிங்கந்தனைத்தொழுதுநயந்தோரெல்லாங்
கோதார்ந்தபகைவென்றுபெருஞ்செல்வமெய்தியருள்கூடுவாரால். ௩௰

கற்கீசவரலாறு.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தகைபெறுமிக்கடிவரைப்பின்றென்பான்மண்ணித்தடங்கரையிற்கற்கீசத்தலமாமங்க
ணுகமுடிவிற்கயவர்தமையழிப்பமாயோனுயர்பிருகுசாபத்தாற்கற்கியாகி [ருன்
யிகழருஞ்சீர்க்காஞ்சியில்வந்திலிங்கந்தாபித்தினிதேத்தியெண்ணிலரும்வரங்கள்பெற்
புகழுறுமவ்விலிங்கத்தைத்தொழுதுமண்ணிப்புனலாடுமவர்பெறுவார்போகம்வீடு.

வீராகவீசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௦அ௯.

பலபத்திராமீசப்படலம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பகலோனைப்பல்லுகுத்துமதியைத்தேய்த்துப்படைவேளைப்பொடி
படுத்தபழையோனென்றுந், திகழ்வீராகவீச்சரத்திேனுடுதிருத்தகுகற்
கீச்சரமும்புகன்றமிப்பாற், புகழுறுகற்கீச்சரத்தின்மேல்பாற்கண்டோர்
பொருவலித்திண் பகட்டூர்தி யுடையக்காணு, நிகழ்பலபத்திராமீச்சர
மென்றேதுநீடுதிருத்தானவளம்பாடலுற்றும். க

கலிவிருத்தம்.

மண்ணின்மிக்குவயங்குதுவரைவாழ்
கண்ணன்முன்வருகாளையலப்படை
யண்ணலாம்பலபத்திரவாண்டகை
பண்ணுவெஞ்சமர்ப்பாரதமூண்டநாள். உ

கார்த்தடக்கைக்கடும்புசெய்கைதவப்
போர்த்தொழிற்குப்பொருதமனத்தனுய்த்
தீர்த்தயாத்திரைசெய்யத்தொடங்கினு
னோர்த்தவாண்ணிநதிக்கரையெய்தினன். ௩

அங்கண்முப்புரமட்டபிரான்றளி
யெங்குமுள்ளனநோக்கியிறைஞ்சியத்
துங்கவைப்பினிற்றெக்கமுனிவரர்
தங்கள்சேவடிதாழ்ந்துவினவுவாம். ௪

ஈசன்வைகுமிடங்களெவையெவை
யாசின்றோங்குமவற்றுளுமேலதாந்
தேசின்மிக்கதிருநகர்யாவது
பேசுகென்னமுனிவரர்பேசுவார். ௫

பருவரைத்தோட்பநதன்வருடமே
கருமபூமியெனப்படுங்காணது
மருவுமெவ்வுலகத்தினுமாண்டதாந்
திருமலர்ப்பனந்தேந்தொடைமார்பனே. ௬

கருமபூமிவரைப்பிற்கடவுளர்
மருவிடங்கள்சிறந்தனமாட்சியோ
யருள்விளக்குமவற்றினுமேலவாந்
தருமசக்கிரபாணிதலங்களே. ௭

அவற்றின்மிக்கனமானிடராக்கிய
சிவத்தலங்கள்கடவுளர்செய்தன
வவற்றின்மேலனவாகுஞ்சயம்புவாஞ்
சிவத்தலங்களவற்றிற்சிறந்தன. ௮

சயம்புவைகுந்தலங்களுண்மிக்கவாம்
வியந்தெடுத்துவிளம்பப்படுமவை
நயந்தவங்கவற்றுள்ளுநற்காசிமிக்
குயாந்ததன்னிற்காஞ்சியுயர்ந்ததே. ௯

ஓதுகாஞ்சிக்குயர்ந்ததுமொப்பதும்
பூதலத்திடையில்லைபுகலுமம்
மாதலத்தினுகத்தின்வருத்தமும்
பாதகப்பயனும்படராவரோ. ௧0

பிறந்துளோர்கள்வதியப்பெறுநரந்
திறந்துளோருளத்தெண்ணுநர்யாவரு
மறந்தழைக்குமேகம்பரருளினாற்
சிறந்தமுத்தியுறுவதுதேற்றமே. ௧௧

வேறு.

என்றறிவுறுத்தியவியல்பின்மாதவர்
மன்றலம்பூங்கழல்வணங்கியாதவ
னன்றவரேவலிற்காஞ்சியண்மியங்
கொன்றியவளனெலாமுவந்துநோக்கினன். ௧௨

தெறுமழுப்படைச்சிவதீர்த்தம்யாவையு
முறைமையினாடினன்முரசுகண்படா
விறையவன்கோயில்களெவையும்போற்றிவண்
டறைபொழிலேகம்பமருச்சித்தேத்தினன். ௧௩

அந்நகர்வயினமர்ந்தருளுஞ்சிருப
மன்னியனிணையடிவணங்கித்தொண்டுபூண்
டுன்னருந்திருச்சிவதீக்கையுற்றனன்
றன்னுடைப்பெயரினேரிலிங்கந்தாபித்தான். கச

பண்ணினைசமொழிகளிற்பழிச்சுமேல்வையிற்
கண்ணுதற்சிவபிரானருணைகூர்ந்தெதிர்
விண்ணவர்தொழவிடைமீதுதோன்றியே. கரு

வேண்டுவகூறுகென்றருளமெய்யெலாம்
பூண்டபேருவகையிற்புளகம்போர்த்தனன்
றூண்டவாவிற்றுநின்சரணிலேமைழயேற்
காண்டகையிடையறுவன்புநல்குதி. கசு

இச்சிவலிங்கத்தினிமயமாதொடு
நிச்சலுமினிதமர்ந்தருளிநின்னடி
நச்சினோர்க்கிருமையுநல்குவாயென
வச்செயன்முழுவதுமருளிநீங்கினன் கஎ

காருடைப்பளிக்குருக்கலப்பைவான்படைத்
தாருடைப்போர்கினன்றுபித்தேத்திய
சீருடையிலிங்கதனைத்தெரிசித்தோரெலா
மேருடைக்கைலையினினிதுவாழ்வரால். கஅ

பலபத்திரராமீசப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ககoரு.

வன்மீகநாதப்படலம்.

கலிநிலைத்துறை.

தேன்றூழ்பொலம்பூங்கடுக்கைச்செழுந்தார்விரைக்கின்றதோள்
வான்றூழ்மிடற்றண்ணல்வைகுற்றபலபத்திரனுஞ்சொற்றன
மீன்றூழ்தடஞ்சூழுதன்பச்சிமத்திக்கின்விண்ணாட்டவர்
கோன்றூழநிலைபெற்றவன்மீகநாதத்தினியல்கூறுவாம். க

விஷ்ணுசிரமிழந்தவரலாறு.

புத்தேளிர்முன்னொளொருங்கேகுழீஇக்கொண்டுபுகழெய்துவான்
முத்தீவளர்த்தோர்மகம்வேட்கலுற்றார்கண்மொழிகின்றன
ரித்தால்வருங்கீர்த்தியெல்லாநமக்கும்பொதுத்தானெனக்
கொத்தார்மலர்க்கூந்தல்பங்கன்றுணைத்தாள்குறிக்கொண்டரோ. உ

குருக்கேத்திரத்தேமகஞ்செய்யுமேல்வைக்கொழுங்கொன்றைவெள்
ளெருக்கோடணைக்குஞ்சடைச்செம்மலார்தம்மினருள்கூர்தலா
லுருக்கூர்பளிக்குப்பறம்பிற்பெருங்கீர்த்தியுண்டாதலுங்
முகுந்தன்கவர்ந்தானடந்தான்றடுப்பக்கொடான். ங

ஓடுந்திறங்கண்டுவிண்ணோர்தொடர்ந்தெய்தலுற்றூரவன்
பீடொன்றுவில்லம்புகைக்கொண்டுவெம்பூசல்பெரிதாற்றுபு
நீடும்பர்தம்மைப்புறங்கண்டுபின்னீளிடைச்சென்றுநின்
றீடின்றியெல்லீருமொருவேற்குடைந்தீர்களெனநக்கனன். ச

நக்கான்முகத்தாலவன்றேசுமுற்றுநறுஞ்சா[illegible]
யக்காலைநீய்குற்றவாற்றலடல்விற்கழுத்து[illegible]
மைக்காளமன்னனெடும்போதுவாளாதுநின்றான்குண
திக்காளியன்னான்றனிலைகண்டுபுகழ்வெளவுதிறமெண்ணினான். ௫

கசசபபதுககண்விரைந்தெய்தியங்கட்கடுக்கைப்பிரா
னிச்சித்தகயிலாயநிருதித்திசைக்கணிலிங்கநிறீஇ
நச்சித்தொழுங்காலையெய்ங்கோனனைந்தென்னைநவில்கென்றலும்
பச்சைத்துழாயண்ணல்கவர்கீர்த்திவிண்ணோர்பெறப்பாலியாய். ௬

என்னாநவின்றேத்துச்சிகேள்வனுக்கெம்பிரானேதுவான்
வன்மீகநாப்பட்சிறுச்செல்லுருக்கொண்டுவார்வில்லுடை
யந்நாணறத்தின்றுபின்கீர்த்திகொள்கென்னவருள்செய்தலும்
பொன்னாடர்கோமானும்விடைகொண்டுமீண்டான்பொருக்கென்றரோ.

அவ்வாறுபுற்றிற்கிளைத்தெய்தியந்நாணறத்தின்றுழிப்
பைவாய்ப்பணிப்பாயலான்சென்னியறுபட்டுவீழ்ந்தவ்விட
மிவ்வாய்மையாற்சின்னமாகேசவத்தானமென்றாயதாற்
செவ்வேகுறைச்சென்னியாறங்கணேடுந்திருத்தக்கதே. ௮

விஷ்ணுசிரம்பெற்றவரலாறு.

வேறு.

ஆயகாலையிலவன்புடைநின்றுமப்புகழைப்
பாயவிண்ணவர்கவர்ந்துகொண்டோகையிற்படர்ந்தார்
மாயிருப்புவிமிசைவளரிருபிறப்பாளர்க்
கேயுமெச்சனுமாயவனின்மையினயங்கி. ௯

மீட்டுமெய்த்தினன்காஞ்சியைவிதியுளிவழிபட்
டீட்டுமன்பினுக்கெம்பிரானெதிரெழுந்தருளப்
பாட்டிசைப்பழமறைகளாற்பரசினனவில்வான்
றோட்டலர்க்குழற்சசிமுலைதிளைத்தகோட்குருசில். ௰

கலிவிருத்தம்.

அறுபதமுரன்றிசைமுழக்குமாயிதழ்
நறுமலர்க்கடுக்கைசூழ்சடிலநாயக
வெ[illegible]விச்சிலையினாலெச்சனாகிய
சறுமலாததுளவினான்சென்னியற்றதால். ௧௧

உறப்புறமெங்களுக்குதவுமுண்டியு
மறுதமித்தொழில்ப[illegible]ர்க்கான்றவான்
றுறக்கமுமில்லையாய்விட்டதுட்கென
விறத்தலினெச்சனிவ்வுலகினெம்பிரான். ௧௨

ஆதலினெச்சனுக்களித்திசென்னியென்
றோதினன்வேண்டலுமுரைத்தன்மேயினான்
மாதர்வெண்குழச்சிறுமதிக்கொழுந்தினைப்
போதொடுமிலைச்சியசடிலப்புங்கவன். ௧௩

எம்புடைவரம்பெறுமிரு[illegible]
வும்பரினவன்றலையொன்றுக[illegible]
நம்புமிவ்விருவருநந்தமாணையாற்
பம்பியவேள்வியிற்பாகமெய்துக. ௧௪

என்றருண்மழுவலான்சரணமேத்திமற்
றொன்றிதுவேண்டுவானுடையநாதனே
மன்றநின்னருளினாற்புற்றின்வாயெழூஉத்
தின்றுநாணறச்செயுந்திறல்பெற்றேனரோ. ௧௫

மேதகுவரைப்புவன்மீகநாதமென்
றோதவுங்கண்டவர்பிறவியோவவு
மீதிநீவரமெனவிடையினேந்தலும். ௧௬

தந்தனம்வரமெனச்சாற்றிநீங்கினா
னிந்திரன்மீண்டனனிருமருத்துவத்
தந்திரத்தலைவராலெச்சன்றன்சிர
முந்துபோற்பொருத்தலுமுளரிக்கண்ணினான். ௧௭

தெய்வத்தின்வலியினாற்சென்னிபெற்றெழூஉக்
கொவ்வைச்செவ்வாயுமைகூறன்றனொடூ
தவ்வத்தனாணையாலவியின்பாகமங்
குய்வித்தோர்க்கமைத்துத்தன்னுலகம்புக்கனன். ௧௮

இகழருமுகுந்தனேயிந்தவாறிழி
தகவுறவிடும்பையிற்றங்குநீர்மையா
லுகலருஞ்செல்வத்தையுடம்பையல்லது
புகழினைவிரும்பலும்போதத்துன்பமே. ௧௯

வன்மீகநாதப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௧௨௪.

வயிரவீசப்படலம்.

கலிவிருத்தம்.

வயிரவாளினான்வணங்கிவெந்துயர்
வயிரமாற்றும்வன்மீகமோதினும்
வயிரமாடமற்றதற்குத்தென்றிசை
வயிரவீச்சரமரபியம்புவாம்.

வடவரைத்தலைமுஞ்சமானெனுந்
தடநெடுங்கிரிதன்னிடைச்சிலர்
படிமவுண்டியர்பாங்கினோற்றுழி
யடலனப்பிரானருளினெய்தினான்.

வதனமைந்தொடும்வந்துதோன்றினான்
பதமலர்த்துணைபணிந்திறைஞ்சினார்
துதிமுழக்கினாற்சூழ்ந்துகைதொழூஉக்
கதமறுத்தவரிதுகடாயினார்.

இலகுமிச்சகம்யார்முதற்றுமன்
னுலகெவன்புடையுயிர்த்தொடங்கிடும்
பலபசுக்களின்பாசநீத்தரு
டலைவன்யாரிதுசாற்றுகென்றனர்.

ஐம்முகத்தயனனையகாலையின்
மம்மர்நெஞ்சினன்மயங்கிக்கூறுவா
னிம்மறைப்பொருள்யாருமுய்வகை
நும்மனக்கொளநுவலக்கேண்மினே. ௫

உலகினுக்கியானொருவனேயிறை
யுலகமென்கணேயுதித்தொடுங்கிடு
முலகெலாமெனைவழிபட்டும்பர்மே
லுலகினைத்தலைப்படுங்களுண்மையே. ௬

வேதங்களுரைத்தல்.

கலிநிலைத்துறை.

என்றான்விரிஞ்சனதுகாலையில்வேதமெல்லா
முன்றோன்றியங்கண்மொழிகுற்றனமுண்டகத்தின்
வென்றேய்புராணம்பலசாத்திரம்வேதமற்றுங்
குன்றான்றவில்லான்றனையேமுதலென்றுகூறும். ௭

அவனேமறுவற்றபரம்பிரமம்புராண
னவனேமுழுதுந்தருகாரணமாங்கெவர்க்கு
மவனேயிறைவன்றொழுவார்க்கருள்வீடளிப்போ
னவனேயெனவோதிவெவ்வேறுமுரைப்பவங்கண். ௮

எச்சன்றனக்குமிமையோர்க்குமெய்வேதியர்க்கு
மச்சங்கரனேயரசன்விசுவாதிகன்சீர்
நச்சும்முனையின்றருட்பார்வையினோக்கிநல்கு
மெய்ச்சித்துருவென்றறியென்றதிருக்குவேதம். ௯

தன்கூறுடையபெருங்கணநாதர்தடுக்கலாற்றாக்
கொன்கூர்சரபாதியரால்வயங்கூறும்விண்ணோர்
வன்காழ்வலிசெற்றவன்யாரவனேமதிக்கு
நன்காரணமென்றுநவின்றதடுத்தவேதம். ௧௦

தோலாவவைநாப்பணடைந்துதுரும்புநட்டு
மாலாதிவிண்ணோர்வலிமுற்றவுமாற்றவல்லோ
னாலாலமுண்டோனவனேயகிலங்களுக்கு
மேலாயவேதுவெனவிண்டதுசாமவேதம். ௧௧

வளிதாழ்விசும்பைப்பசுந்தோலிற்சுருட்டவல்லோ
ருளரேற்புடைவிங்கியெழுந்துதிரண்டுருண்ட
விளைவெம்முலைபங்கனையன்றியுமின்பமுத்தி
யளவிற்பெறலாமெனவிண்டததர்வவேதம். ௧௨

முனிவோரதிரந்தணன்வேதமொழிந்தகேட்டுத்
தனிநாயகன்மாயையின்மூழ்கிவெகுண்டுசாற்றுஞ்
சினநீடுதமோகுணசீலனுருத்திரன்றான்
மனமோடுரைசெல்லருநிட்களம்வான்பிரமம். ௧௩

ஞானவழுரைத்தல்.

சால்பானுயரோமமென்மொழிப்பொருள்சம்புவென்ற
லேலாதெனவம்மனுவேவடிவெய்திவந்து
மாலாலுரைசெய்தனைநீகமலப்பொகுட்டின்
மேலாயிதுகேண்மதியென்றுமுன்னின்றுசொல்லும். ௧௪

வேதத்தலையிற்புகலுற்றுயர்வேதவீற்றும்
போதச்சுரமாய்நிறுவப்படுபொற்பினேன்யான்
மாதர்ப்பகுதிக்குளடங்கிவயங்கினேற்கு
மாதிப்பரம்யாரவனுகுமகேசனம்மா. கரு

ஏழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

என்றிதுவிளம்பும்பிரணவந்தனையுமிகழ்ந்துதன்பெருமையேவியப்ப
மன்றலந்துளவோனுயிடைத்தோன்றிமன்றயான்கருத்தனென்றுரைத்தான்
குன்றருங்கொடுநோயாணவக்குறும்பாற்கோட்படுமிருவருமிவ்வா
றொன்றியசெருக்கான்மீமிசையிகலியோவறப்பிணங்குமவ்வேலே.

வயிரவசம்பவம் - பிரமன்சிரமிழத்தல்.

அலர்ந்தசெங்கமலநிகரிணைவிழியுமதுமுகிழ்த்தனையதோர்விழியு
மலர்ந்தபொன்னிறத்தகேசமுமுகரோமங்களும்வடிவமுங்காட்டி
நலந்திகழிரவிமண்டிலத்துறையுநாயகனனையதுகண்டான்
சலந்தவிர்த்தருள்வானுருகெழத்தோன்றித்தமனியக்கிரியெனநின்றான்.

காண்டலுநெடியோனடுங்கிநீத்தகன்றான்கமலநாண்மலர்மிசைக்கடவு
ளீண்டையென்புதல்வாவருகெனவிளிப்பவெகுண்டருளெம்பிரானுருவி
ஞண்டுவந்துதித்தவயிரவப்புத்தேளயன்மிசைச்செல்வுழியயனு
மாண்டகுபிரமப்படையெதிர்விடுத்தான்வந்தததடும்பரும்படையே.

வருபடைவேகக்காற்றினின்முரியவிரைந்துசெல்வயிரவப்புத்தே
டிருமலர்க்குரிசில்பழித்திடுமஞ்சாஞ்சிரத்திணையுகிரினுற்கொய்தான்
பெருவிறலுயிர்போய்விழுந்தபின்மீளப்பிஞ்ஞகனருளினுலுய்ந்து
மருள்வலிநீங்கியெழுந்தனன்மறையோன்வள்ளலைவணங்கிநின்றேத்தும்.

நான்முகன்முறையிட்டுவரம்பெறல்.

விளைநறையுகுக்குங்கமலமென்பொகுட்டுமேவருமெனையெடுத்தாண்ட
களைகணேயாவித்துணைவனேசருமக்கலிங்கனேபிரமனேயிருகால்
வளைதருபிறைகபாணியேயுனக்குநெய்யவிமடுத்துநல்லோம
முளைவறப்புரிகேமுலப்பறும்வாழ்நாளுதவிமற்றெந்தமைக்காக்க.

கரைபொருதிரங்கிவெண்டிரைசுருட்டுங்கருங்கடல்புடையுடுத்தகன்ற
தரையொடுவிசும்பினள்ளிடைப்போந்ததழனிறச்சுடரெறிகாந்திக்
குரைபுனன்மோலிக்குழகனேதறுகட்கொடுஞ்சினக்கடுந்தொழிற்பகட்டு
விரைசெலற்கூற்றினடுதிறற்பாசமிடலறத்துணித்தெமைக்காக்க.

உலகெலாம்விரியுமாதிகாலத்திெருவனேயாகிநின்றுள்ளாய்
பலதிறப்புவனநாயகர்தம்மைப்பாற்படப்பயந்தளித்தருள்வோய்
மலர்தலையுலகமீளவந்தொடுங்கமன்னிவீற்றிருந்தருண்முதலே
யலகிலாவருளாமனைய்யவிமிசைந்தீண்டரியுளையளித்தெமைக்காக்க.

சிறுவிதிமகவாய்முன்வரும்பிராட்டியம்பிகைசீரிலக்குமிகோ
மறுவறுமகிலகாரணிமலையான்மகளெனப்பெயரியதலைவி
நறுமலர்க்கடுக்கைத்தொடையலெம்பெருமானலங்கெழுசத்தியேவினைமா
சறுமுறையிருதாள்வழிபடுகின்றேமாயுளையளித்தெமைக்காக்க.

அகிலமீன்றெடுத்தவிருமுதுகுரவீரடியிணைபோற்றியென்றேத்து
நகுமலர்ப்பதுமத்தவிசினேன்றுதிக்குநயந்துளங்கருணைகூர்ந்தருளி
முகிழ்முலையொருபான்மணந்துவீற்றிருந்துமுரண்கெடக்கூற்றுயிர்குடித்த
பகையடுகணிச்சியாதியம்பகவன்பிரமனைப்பார்த்திதுபகரும்.

வேறு.

இன்றுதொட்டுநீநான்முகனாகியெம்மாணையிற்பிழையாமே
நன்றுவாழ்தியால்வேட்டதுநவில்கௌநாயினேனுய்ந்தேனிங்
கொன்றுநின்னடிக்கன்புதந்தடியனேனுஞற்றியபிழையெல்லா
மன்றநீபொறுத்தருளெனத்திசைமுகன்வேண்டலும்வரமீந்து. ௨௫

வயிரவவிஜயம்.

கூர்த்தசூலமுங்கபாலமுங்கொண்டுகைதொழுதொருபுடைநிற்குஞ்
சூர்த்தநோக்குடைவயிரவத்தோன்றலைநோக்கினனிதுசொல்வான்
கார்த்தமேனியோய்வயிரவகாலனீகலவிகரணன்சீர்சால்
வார்த்தைசூழ்பெலவிகரணன்பெலப்பிரமதனனுமாகின்றாய். ௨௬

சறுவபூதைகதமனனீயெம்முடைத்தனையர்கடமின்மூத்த
சிறுவனேயெனத்திருவருள்செய்துநீசிறக்கணம்புடைசூழ
வெறிமலர்த்துழாய்ப்பண்ணவன்முதலியவிண்ணவருலமெல்லாங்
குறுகிவார்கறைப்பிச்சையேற்றவர்மனக்கொடுஞ்செருக்கறமாற்றி. ௨௭

விதியைப்பற்றுமிம்முனிவரர்செருக்கையும்வீட்டுகென்றருள்கூறும்
பதியைத்தாழ்ந்தனன்விடைகொடுவயிரவப்பண்ணவன்படர்குற்றான்
மதியக்கீற்றணியெம்பிரான்மறைந்தனன்வார்கழறொழுதேத்தி
யதிர்விற்றீர்ந்திடுமலரவன்முதலியோரவரவரிடம்புக்கார். ௨௮

உட்கத்தோன்றியவயிரவன்முன்னுறநெடியவனுலகுற்றான்
றட்கச்சென்றெதிர்வாயிலோர்த்துரந்தனன்விடுவச்சேனனைத்தாக்கிக்
கொட்கச்சூலத்தினுதியினிற்கோத்தனன்குறுகினன்வட்காமை
வட்கப்போர்புரிமாயவனிருக்கையுண்மதுகையினிகரில்லான். ௨௯

பிச்சைதேரியவருஞ்செயல்கேட்டனன்பெட்பொடும்விரைந்தெய்திப்
பச்சைமேனியோன்மனைவியரிருவரும்பாங்குறவெதிர்கொண்டு
செச்சைநாண்மலர்த்திருவடிவணங்கினன்செம்புனற்பலியாரு
மெச்சநெற்றியினரம்பினைப்பிடுங்குபுவிட்டனன்கபாலத்துள். ௩0

தாரையாகிநூறாயிரமாண்டளவொழுகியுந்தகுநெய்த்தோ
ரீரவெண்டலைக்கபாலத்தைநிறைத்திலதிரத்தமுற்றறலோடும்
வீரமாதவனிலமிசைமூர்ச்சித்துவீழ்ந்தனனதுகாலை
வாரமுற்றருள்வயிரவன்றிருக்கையால்வருடினன்மயறீர்த்தான். ௩௧

அயர்வுயிர்த்தனனெழுந்தனனஞ்சலியளித்தனன்குனிசார்ங்கன்
வயிரவப்பிரான்றிருவடிப்பத்தியுமற்றவன்றன்மாட்டுப்
பயிலுமின்னருட்கருணையும்வேண்டினன்பரிந்தவற்கவைநல்கிப்
பெயர்புமீண்டனன்பிச்சைதேர்ந்தருளியபிறண்டுமெய்தினன்மாதோ.

உலகமெங்கணுந்திரிந்துநெய்த்தோர்ப்பலியேற்பவனெனவொன்னார்
வலமிசைந்தவேற்கடவுளர்தருக்கறவாங்கினன்முனிச்செல்வர்
குலமடப்பிடியங்கலாரையுங்குறுநகையினின்மயல்பூட்டி
நிலவரைப்பினிற்காஞ்சியையணுகினனெடுந்தகைநெறியானே. ௩௩

வயிரவர்சிவபூசைசெய்துகச்சியைக்காத்தல்.

கறைக்கபாலத்தையொருவயினிறுவினன்சேனைகாவலன்றன்னை
யிறைத்தசெம்புனற்சூலத்தினுதியினின்றிழிச்சுபுமால்வேண்ட
நிறைத்தபேரருட்கருணையாலுதவினனிகழ்ந்ததன்பெயரானே
மறைக்குநாயகன்வயிரவீச்சரன்றனைநிறீஇயினன்வழிபட்டான். ௩௪

ஐயனேமறைமுடிமிசைநடித்தருளமலனேயெனையாண்ட
மெய்யனேயெனப்பழிச்சிநெக்குருகினன்விளங்கியிவ்விலிங்கத்தே
தையலோடினிதமர்ந்தருள்யானுநின்சந்நிதியெதிர்வைகி
யுய்யுமாறருளடியனேனசெயத்தகுமுறுபணியருளென்றான். கடு

வேண்டிநின்றிரந்துரைத்தலுங்கருணையான்மேவியிங்குறைகின்றே
மீண்டுநீயெதிர்வைகியித்திருநகர்புரந்தினிதமர்வாயாற்
காண்டகுங்கபாலத்திலையத்தோரைநின்கணங்களுக்கருளென்னாப்
பூண்டபேரருள்வழங்கினனெம்பிரான்வயிரவப்புத்தேளும். கசு

குருதியீர்ம்புனல்கணங்களுக்களித்தனன்குடிப்புழிச்சிலவேனும்
பருகுதற்குப்போதாமைகண்டவனிமேற்பறந்தலைப்பெருவேந்தர்
செருவிலேற்றுயிர்மடிந்தவர்விண்மிசைத்திகழவங்கவர்செந்நீ
ரிரணமண்டிலவயிரவன்கணங்களுக்கினிதமைத்தருள்செய்தான். கஎ

கயிரவத்தெழிலகவர்ந்தவாயாய்ச்சியர்பாடியிற்கவர்ந்துண்ட
தயிரவற்கயர்வொழித்தருள்வயிரவத்தம்பிரான்றொழுதேத்தும்
வயிரவப்பெயரீசனைவணங்குநரவமிருத்துவினீங்கிச்
செயிரவத்தைகண்முழுவதுங்கடந்துபோய்ச்சிவனடிநிழல்சேர்வார்.

வயிரவீசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ககசு௨.

விடுவச்சேனீசப்படலம்.

கலிநிலைத்துறை.

போதணிபொங்கருடுத்ததண்கச்சிப்புரத்திடை
மாதர்வண்கோயில்வயிரவீசத்தைவகுத்தன
மாதியுமந்தமுமில்லானமர்ந்தருளங்கதன்
மேதகுதென்பால்விடுவச்சேனீச்சரம்விள்ளுவாம். க

விஷ்ணுசக்கரமிழந்தயர்தல்.

வெங்தொழிற்றக்கனார்வேள்விவிளிந்தநாண்மாயவன்
சந்திரசேகரன்றாளிணையேத்திவிடைகொண்டே
யந்தண்விரசைகடந்துவைகுந்தமடைந்தபின்
சுந்தரப்பொற்றவிசேறியிருந்திதுசூழ்ந்தனன். ௨

மலைவறுகாட்சிவிடுவச்சேனனைமுதன்மந்திரித்
தலைவர்தமக்குநிகழ்ந்ததுசாற்றிக்கவன்றனன்
குலவுமரக்கரவுணரைப்போரிற்கொலைசெய்திவ்
வுலகமுழுவதுமோம்புதலென்றொழிலாகுமால். ௩

ஏயுமலங்காரத்தின்றித்தொடங்குமுழுவன்போ
லாயுதங்கையின்றியெவ்வாறகிலம்புரப்பல்யான்
காய்கதிர்மண்டிலந்தீற்றுயகடவுண்மாசக்கர
மாய்வரும்யாக்கைத்ததீசியினால்வாய்மடிந்ததே. ௪

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மதனுடைத்திண்சலந்தரனையுயிர்செகுப்பச்சிவபெருமான்வகுத்தசோதிச்
சுதரிசனப்படையன்னோன்றரப்பெற்றேனஃதின்றுதக்கன்வேள்வி
சிதைவுசெயுந்திறல்வீரபத்திரன்மேல்விடுத்தலுமச்செல்வன்பூண்ட
கதமுறுவெண்டலையொன்றுகவ்வியதாலினிச்செய்யக்கடவதென்னே.

நஞ்சுபடுதுளையெயிறுதனையிழந்தநாகத்தினுயிர்ப்புமொன்னா
ரஞ்சுதகத்தலைச்செல்லுங்கோடிழந்தகடாக்களிற்றினடலுமேற்றார்
நெஞ்சுருவப்பாயுமிருமருப்பிழந்தவிடையேற்றினெறிப்புங்கூர்வாய்
வஞ்சநெடும்படையிழந்தமதவீரன்வீறுமெவன்செய்யுமாதோ.

ஆழிகரத்துளதாயிற்சிவனருளால்வியனுலகமளிப்பேனன்றிப்
பாழிவரைத்தடம்புயத்தீரென்செய்வேனெனக்கவன்றுபரியுங்காலை
வாழிநெடும்பொலஞ்சிறையபுள்ளூர்தினக்கிரண்டாம்வடிவமான
காழிகந்தபெருங்கீர்த்தியுலம்பொருதோட்கனைகழற்கால்விடுவச்சேனன்.

விஷ்ணுவின்சக்கரம்விடுவச்சேனன் பெற்றது.

அன்றென்னைவயிரவனார்சூலத்தின்விடுவித்தேயருளுநீலக்
குன்றன்னான்றனக்காழிகொணர்ந்தளித்துக்கடன்றீர்த்துக்கொள்வேனிந்நா
ளென்றெண்ணியெழுந்திறைஞ்சிவயவீரபத்திரன்பால்யான்போயின்னே
நன்றுள்ளமகிழ்வித்துக்கொடுவருவலாழியெனநவின்றுபோற்ற.

அங்கவனைக்கொண்டாடிவிடைகொடுத்தான்றிருமார்பனவனும்போந்து
புங்கவர்சூழ்வயவீரனிருக்கைமுதல்கோபுரமுன்புக்ககாலை
மங்கருஞ்சீர்பானுகம்பன்முதலாயவாயில்காவலர்கணோக்கிப்
பங்கமுறவெகுண்டெழுந்தாரச்சுறுத்தாரதுக்கினார்பழங்கணீட.

பிறைசெய்தகரங்கொண்டுபிடர்பிடித்துநீளிடைக்கணுந்தலோடுங்
கறைசெய்தவேற்றானைக்காவலனுங்கிருந்தெண்ணிக்கவலைகூர்ந்தான்
முறைசெய்தமுனிவோர்களநெறியிற்செலநோக்கிமுன்போய்நின்று
மிறைசெய்தசெயலனைத்துந்தன்வரவுமாங்கவர்க்குவிளங்கக்கூறி.

இனிச்செய்யுந்திறநீவிர்கூறுமெனத்தாபதருமெண்ணிநோக்கிப்
பனித்துண்டமிலைந்தானைக்காஞ்சியினிற்றாபித்துப்பரவிப்போற்றின்
மனத்தோன்றுமெண்ணமெலாம்பெறுவாயென்றியம்புதலுமகிழ்ச்சிகூர்ந்து
கனித்தொண்டைவாயுமையாளொருபாகன்றிருக்காஞ்சிநகரஞ்சேர்ந்தான்.

அங்கடைந்துதன்பெயராற்சிவலிங்கமிருத்திமகிழ்ந்தருச்சித்தேத்திப்
பொங்குபெருங்காதலினாலினியதவம்பூண்டிருந்தானுகவந்நாள்
வெங்கடுநேர்வியாக்கிரனுமசகரனும்பஞ்சமேட்டிரனுமென்னு
மிங்கிவர்முத்தானவரும்வரப்பேற்றாலெவ்வுலகும்வருந்தச்செய்வார்.

அன்னோரைத்தெறுபாக்குவிண்ணாடர்விரிஞ்சனொடுமளவளாவிப்
பொன்னாடையுடையான்கைப்படையின்றிவறங்கூரும்புதுமைநோக்கி
யென்னாதனிடத்தணுகிமகிழ்ந்திறைஞ்சியியம்புதலுமிமயமீன்ற
மின்னாளுமிடத்தானும்வயவீரபத்திரனைவிடுத்தான்மன்னோ.

அவனணுகித்தயித்தியர்கண்மூவரையுமெதிர்ந்துபொருதழித்துவீட்டித்
தவநிறையுந்திருக்காஞ்சிவளநகர்க்குநெறியானேசார்தலோடுஞ்
சிவமுதலைத்தொழுதுறையுமுகுந்தனார்தஞ்சேனைத்தலைவனங்கே
கலையெலாம்விண்டகலவயவீரன்றனையெளிதிற்காணப்பெற்றான்.

முயல்வுற்றுமரிதாயதிருக்காட்சிமுயலாமேயெய்தப்பெற்று
னியல்புற்றபெருந்தவத்தீர்சிவபூசைப்பயனெவரேயளக்கற்பாலார்
பெயர்வுற்றுச்சென்றுநீர்தீர்த்தமெதிர்வந்தாடப்பெற்றேனன்னுன்
பயில்வுற்றமகிழ்வோடும்வீழ்ந்திறைஞ்சிமறைமொழியாற்பரசலுற்றான்.

நண்பாநீர்தீவளிவானுலகெங்கும்விராய்நின்றநலமேபோற்றி
முன்பாலுந்தென்பாலும்பின்பாலும்வடபாலுமேலுமூவா
நின்பாரச்சிலைபோற்றியன்பாளர்க்கன்பானநித்தபோற்றி
வன்பாளர்தமைச்சீறும்வெம்புலிப்போத்தன்னானேயென்றுவாழ்த்தா.

திருவுள்ளங்களிசிறப்பவேட்டதெவன்புகலென்னுச்செம்மல்கேட்பக்
கருவண்ணனறமனேனைகைகூப்பிநின்றியம்புங்கவுரிபாக
னருளுண்மைதெளியாததக்கன்றன்வேள்வியைநீயழித்தஞான்று
தெருளின்றியமரேற்றுநெடுமாலுன்மிசைவிடுத்ததிகிரிதன்னை.

அற்றவர்கட்கினியாயுன்றிருமேனிமிசைப்பூண்டவயன்கபாலம்
பற்றிவிழுங்கியதிங்காளடியேனுக்களித்தியெனப்பகரக்கேளாச்
சொற்றதுநங்கரத்திலைகபாலத்தின்வாயுளதேற்றுகொளொன்றில்லாய்
மற்றதுவேதாக்கோடியெத்திறத்துமெனப்புகன்றான்வாகைவேலான்.

உரைத்தமொழியுளங்கொள்ளாவினிச்செய்வதென்னேயென்றோர்ந்தான்யாருஞ்
சிரிக்கலுறக்காலிரண்டுங்கரமிரண்டுங்குஞ்சிதமாச்செய்துகொண்டு
வரித்தகழல்வீரனெதிர்வாய்நாசிவிழியிணையைமாறிமாறிச்
சுரித்தசைத்துநடஞ்செய்தானெவ்வமொடுபயங்காட்டியெயிறுதோன்ற.

இவ்வண்ணமுடல்கூனிவளைந்துநெளிந்தாருவிகடமியற்றநோக்கிச்
செவ்வண்ணவயவீரன்வறிதுநகைதோற்றுதலுந்திரண்டோரெல்லா
மைவண்ணக்கடல்கிளர்ந்தாலெனநகைத்தாரக்காலைமலர்மேல்வைகு
மவ்வண்ணனைகுபைங்கண்வெண்டலையுமதுநோக்கிச்சிரித்தலோடும்.

போராழியதன்வாயிற்கழிந்துபுவிமிசைவீழ்ப்பொருக்கென்றங்கை
யோரானைமுகக்கடவுளதுகவர்ந்தங்கறியான்போன்றிருப்பநோக்கிப்
பேராண்மைப்படைத்தலைவனினிச்செயலேதென்றழுங்கிப்பேதுற்றந்தச்
சீராளன்றிருமுன்புங்கைகண்டவிகடநடஞ்செய்துவேண்ட.

ஏக்கறவானவனியற்றும்விகடநடமெம்பெருமானோக்கி
மாக்கருணைசுரந்தருளியாழியவன்றனக்களித்தான்வரத்தான்மிக்கீர்
போக்கறுமிக்காரணத்தாலன்றுமுதல்காஞ்சியினைப்புழைக்கைத்தேவை
யூக்கமுறுந்திறல்விகடசக்கரவிநாயகனென்றுலகங்கூறும்.

விடுவச்சேனன்பெற்றசக்கரம்விஷ்ணுவுக்கீதல்.

கலிவிருத்தம்.

விகடசக்கரவிநாயகனளித்தவத்திகிரி
யகமலர்ச்சியாற்பெற்றனன்மீண்டனனகிலம்
புகழுமால்புரத்தெய்தினான்பொலம்புனையாடைத்
தகவினானடியிறைஞ்சியச்சக்கரமீந்தான். உக

கண்டனன்பணிப்பாயலான்கவலைகண்முழுதும்
விண்டனன்றழீஇக்கொண்டனன்மீமிசைவியப்புக்
கொண்டனன்றனதமைச்சியல்பூண்டவக்குரிசிற்
கண்டர்போற்றுசேனைபதித்தலைமையன்றளித்தான். உச

விடுவச்சேனன்விகடநடங்காட்டிவரம்பெறல்.

உருத்திரச்செயல்வீரபத்திரன்புடையுற்றுத்
திருத்தகும்படைபெற்றவாசெப்புமென்றிசைக்குங்
கருத்தனுக்கவணிகழ்ந்தனயாவையுங்கரைந்தா
னருத்திகூர்படைக்கிறையவனச்சுதன்கேளா. உரு

முறுவல்பூத்தனன்மொழியுமவ்விகடநாடகத்தை
யுறுவரேறனுமெம்மெதிர்காட்டுகென்றுரைப்பத்
தெறுபெரும்புடைக்கிறைவனுந்திருந்தவைக்களத்து
நறுமலர்த்துழாயவனெதிர்நடித்தனனதனை. உசா

நோக்கியற்புதமெய்தினன்மாயவனுவல்வா
னாக்குமாற்றலோயுள்ளமும்விழிகளுமுவகை
மீக்கொளப்புரிவியத்தகுமிப்பெருவிகடம்
பார்க்கில்யாவரேகழிபெருமகிழ்ச்சியிற்படாதார். உஎ

எமக்குநன்மகிழ்வளிக்குமிக்கூத்தினையிதன்மே
னமக்குமுன்னுறநலம்பெறீஇநடிக்குநம்மடியார்
தமக்குவேட்டனவழங்குவேந்தழன்மணிக்கதிர்க
ளிமைக்குங்காஞ்சியின்வரதராசப்பெயரெம்முன். உஅ

எவர்களித்தனிக்கூத்தினையியற்றுமார்வந்தா
ரவர்களேயெமக்கினியவர்சாலவென்றருளிப்
புவனமேத்துமத்திரிகையுவிதியுளிப்பூசித்
துவகைமீக்கொளக்கரமிசைக்கொண்டனனுரைப்பான். உகூ

முன்னைநாளுயர்கச்சியின்வயிரவமுதல்வன்
றன்னைவேண்டிநன்றிரந்துசூலத்தலைக்கிடந்த
நின்னையான்விடுவித்தனதற்குநேராக
வின்னதாயகைம்மாறுநீயளித்தனையிந்நாள். ௩0

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

செய்ந்நன்றியறிவோருமதன்பயனைப்பெறுவோருந்திரைநீர்வைப்பி
னின்னன்றியாருளரோகாஞ்சியினீதொழுதேத்துமிலிங்கம்போற்றி
யுன்னன்பின்செயலிதனைக்கேட்டோர்களெம்முலகமுறுகவென்னுத்
துன்னன்பின்கிழவோனைத்தழீஇக்கொண்டுமகிழ்ந்திருந்தான்சார்ங்கபாணி.

விடுவச்சேனீசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கககூரு.

தக்கீசப்படலம்.

கலிவிருத்தம்.

விரவினோர்தணக்கலாவுறுவிடுவச்சேனீச்சரத்தின்
வரவினைத்தெரிந்தவாறுவகுத்தெடுத்துரைத்தேமிப்பா
லிரவெரியாடுமெம்மானினிதமர்ந்தொடுங்கீழ்ப்பாங்கர்க்
கரவிலார்க்கருளுந்தக்கீச்சரத்தியல்கட்டுரைப்பாம். க

தக்கனார்மைந்தர்தவங்கொண்டமைதல்.

பொறிவரிச்சுரும்புமூசப்புரிமுறுக்குடைந்துவிள்ளுஞ்
செறியிதழ்ப்புழற்காற்கஞ்சத்திருமலர்ப்பொகுட்டுவாழ்க்கை
யறிவனதேவலாற்றலுடல்வலித்தக்கனென்போன்
மறிவருவரத்தாற்பல்லோர்மைந்தரைப்படைத்தான்மன்னோ. ௨

அங்கவர்தக்கனேவலாற்றினாற்படைப்பானெண்ணித்
தங்களுண்முயலுங்காலைத்தந்திரிக்கருவிச்சால்பி
னங்கையோர்பாகற்பேணுநாரதனவர்பாற்றோன்றி
யிங்குநீருழக்குஞ்செய்கையென்னெனக்கடாவவன்னோர். ௩

படைமினென்றெம்மைத்தாதைபணித்தனன்படைக்குமாற்ற
லடைவெமக்கருளிச்செய்யாயையவென்றிறுத்தார்கேளா
நடைநெறிபிறழாவாய்மைநாரதன்மகதிநல்யா
ழுடையவனனையார்தேறச்செவியறிவுறுக்கலுற்றான். ௪

ஐந்தொழினடாத்துமுக்கணையனேயுலகமெல்லா
மைந்துறப்படைக்கின்றானான்மற்றுநீருழந்திராயிற்
பந்தமேபயக்கும்பந்தப்படைப்பினாற்பயப்பதென்னே
வெந்தளைப்பட்டோர்வேறுநிகளமும்விழைவரேயோ. ௫

பிணிப்புறுநிகளநீக்கும்பெற்றியேயெவரும்பெட்பர்
கணிப்பருந்தவத்தான்மிக்கீர்தெளிமினோகருணைவெள்ள
மணிக்களத்திறைவன்பாதம்வழிபடலொன்றேயன்றிப்
பணித்திடுமெவையுந்தீயபந்தமேபயக்குங்கண்டீர். ௬

ஆருயிர்க்குறுதிப்பேறாமரும்பயனெவற்றினுள்ளுஞ்
சீரியமுத்தியொன்றேசிறந்ததாமேனைப்பேறு
பேரிடர்ப்பாலவாகுமாதலாற்பேசக்கேண்மி
னாரியோர்பாகன்மேயகச்சிமாநகரநண்ணி. ௭

சிவலிங்கநிறுவிப்போற்றித்திகழ்சிவஞானப்பேற்றாற்
கவலும்பொய்ப்பிறவிமாசுகழுவிவீடுறுமினென்னா
நுவலுஞ்சீர்முனிவர்கோமானோன்கழலிறைஞ்சியேத்தித்
தவலின்றத்தக்கனீன்றார்த்தொழிறலைநின்றுயர்ந்தார். ௮

வினைவலித்தக்கன்கேளாவெய்துயிர்த்தழுங்கிவேறு
தனையரைப்படைத்தானன்னோர்தமக்குமம்முனிவனெய்தி
யினையவாறியம்பிமீட்பக்காஞ்சியினிலிங்கந்தாபித்
தனையவாறருச்சித்தேத்தியவர்களுமுத்தரானார். ௯

தக்கன்மகஞ்செய்யத்தொடங்கியது.

தக்கனாரிடருண்மூழ்கித்தழலெழநோக்கியென்றன்
மக்களைச்சிவன்பாலன்புமருவுறுத்துலகவாழ்க்கை
யொக்கநீகெடுத்தாய்மக்கண்மனையுனக்கின்மையாக
முக்கணற்குரியாயென்னாமுனிவனைச்சபித்துப்பின்னர். ௰

கன்னியர்தமையேபெற்றான்முனிவனுங்கனன்றுநோக்கி
நின்னுடைப்புதல்வரெல்லாநெறிச்செலவிடுத்தேனற்றா
லென்னைமற்சபித்தாய்பேதைத்தக்கநீயின்னேநெற்றித்
தன்னிடைவிழித்தவெம்மான்றண்டிக்கப்படுகவென்றான். ௧௧

இவனிலையிதுவாமேனையிமையவர்தமைத்ததீசித்
தவமுனிசபித்தான்பார்ப்பான்றலறிலிதமியனென்னை
யவமுறப்பொருதெல்லீருமகாரணத்தெதிர்த்தீர்நீயிர்
சிவபிரான்வெகுளித்தீக்கோட்படுகெனச்செயிர்த்துமேனாள். கஉ

இருதிறத்தவர்க்குஞ்சாபம்பழுத்தவாறியம்புகின்றாங்
கருவியாழ்முனிவன்சிறிக்கழறியபின்னர்த்தக்கன்
றெருமருமயலின்மூழ்கிச்செருக்கினாற்புரமூன்றட்ட
வொருவனையன்றிவேள்வியுஞற்றுவான்றொடங்கினானால். கங

மருத்துவர்முனிவர்சித்தர்வசுக்களாதித்தர்மற்றை
யுருத்திரரயன்மாலேனோர்யாவருமுடங்குசேரத்
திருத்தகவிளித்துவேள்விசெய்வுழித்ததீசிமேலோ
னுருத்தனனவையைநோக்கித்தக்கனுக்குரைக்கலுற்றான். கச

அளித்தருள்பயக்கும்வேள்விக்கரசனாஞ்சிவனையீண்டு
விளித்திலையெவன்கொலென்றுவினாதலுந்தக்கன்சொல்லு
மிளிப்பறுமெச்சந்தன்னையெச்சத்தாற்றொழுகவென்னத்
தெளித்திடுஞ்சுருதியெச்சன்மாயவனெனவுஞ்செப்பும். கரு

ஆதலினெச்சமூர்த்தியச்சுதனவனேயன்றி
யோதருந்தமோகுணத்தினுருத்திரனீண்டுப்போதம்
கேதுவொன்றில்லைகாண்டியென்றலுமுனிவனக்கு
நோதகுமவையினுள்ளார்[illegible]ரையுநோக்கிச்சொல்வான். கசு

எச்சத்தாலெச்சமென்னு[illegible]றப்பொருளிதுவோகூறீ
ரெச்சத்தின்வேறாமேனைக்கருமங்கட்கெச்சம்போல
வெச்சத்திற்குயர்ந்தோன்வெள்ளையேற்றினனெனுங்கருத்தா
லெச்சச்சொல்லதனான்முக்கட்பகவனையியம்புமங்கண். கஎ

ஆதலினெச்சந்தன்னாலணங்கொருபாகன்றன்னை
மாதவன்முதலாம்விண்ணோர்வணங்கினர்வழிபட்டுய்யப்
போதுவரென்பதன்றேயம்மறைப்பொருளாமன்றி
யேதமிலெச்சந்தன்னாற்றனைத்தொழுமென்பதாமோ. கஅ

சகந்தனிலெவருந்தம்மினுயர்ந்தவர்தமைப்பூசிப்ப
ருகந்தவர்க்கன்றித்தம்மோடொத்தவரிழிந்தோர்தம்மை
யகந்தெறப்பூசைசெய்வாராருளார்விதியுமற்றே
மகந்தனக்கரசன்முக்கண்வள்ளலேயென்னும்வேதம். ககூ

மலர்தலையுலகமெல்லாம்வழிபடுகடவுளென்று
மலைகடலுயிர்த்தநஞ்சமமுதுசெய்தருளுமேருச்
சிலையுடைமுதலேயென்றியாரிதுதெளியாரென்னாப்
பலர்புகழ்ததீசிமேலோன்பகர்ந்தனன்பகரக்கேட்டு. உ0

ததீசிமுனிவர்சாபங்கொடுத்தேகல்.

அவைக்களத்துறையும்பார்ப்பார்தருபொருட்காசைகூர்ந்து
கவர்த்துபுல்லறிவின்மான்றுகடுந்தொழிற்றக்கன்கூற்றே
நிவப்புறப்புகறலோடுநெடுந்தகைமறுவில்காட்சித்
தவத்திறற்றதீசிசீறிவிப்பிரர்தம்மைநோக்கி. உக

படுபொருள்வெஃகுநீராற்பார்ப்பனக்கடையர்காணீர்
நடுவிகந்துரைத்தவாற்றானடலைகூரொழுக்கம்பூண்டு
கெடுநெறிபற்றிச்சைவநிந்தையிற்கிளர்ச்சிகொண்டு
கொடுமுகக்கலியிற்றோன்றிக்கலாய்த்தனீரிடும்பைகூர்ந்து. உஉ

வைதிகப்புறத்தராகிச்சைவநூல்வழியைக்கைவிட்
டுய்தியில்புறநூல்பற்றியுலப்பருமறையினிந்தை
யைதெனப்புகன்றுவேற்றுமொழியினையாதரித்துப்
பொய்திகழ்நரகினுய்க்கும்புண்டரம்பொலியக்கொண்டு. உங

எண்டிகழ்மறையீறெல்லாமியம்பும்வெண்ணீற்றுமும்மைப்
புண்டரமக்கமாலைசிவலிங்கபூசைதம்மின்
விண்டிடாவயிரங்கொண்டுதிகிரியான்வெந்தபுண்ணைத்
தண்டுசெங்காழிகஞ்சக்குறிகளைத்தனுவிற்றாங்கி. உச

அந்தணர்தமக்குத்தேவாமரனடிதழாதுதோளின்
வந்தவர்தமக்குத்தேவாமாயனைத்தழுவிப்பேணி
நிந்தனைக்குரியராகிநிலமிசைத்திரிகவாளா
நொந்துநீர்தழுவுமாலுநுங்களுக்கருள்செய்யானால். உரு

என்னவெங்கொடியசாபமியம்பினன்சிதம்புத்தக்கன்
றன்னைமுன்செயிர்த்துநோக்கிச்சாற்றுவானச்சமின்றிப்
பொன்னவிர்சடிலத்தேவையிகழ்ந்தனைபொறியிலாதாய்
நின்னுடைக்குலத்துக்கின்னேமுடிபெனநினைவிற்கோடி. உசா

வழிபடற்குரியார்தம்மைவழிபடன்மறுத்துமற்றை
வழிபடற்குரியரல்லார்தமைவழிபடுவோராகி
வழீஇனார்தமக்குத்தெய்வம்வகுத்திடுங்கொடியதண்டம்
வழியினாலின்னேயெய்துமென்பதுவழக்காமன்றே. உஎ

என்றனன்றதீசிசெம்மலெழுந்துதன்னிருக்கைபுக்கா
னன்றதுநோக்கிப்பூமேலாண்டகையச்சமெய்தித்
துன்றியகுழுவினீங்கிச்சுடர்மழுப்படையான்பாங்கர்ச்
சென்றனன்சென்றபின்னர்ச்சிறுவிதியெழுந்துநின்று. உஅ

தக்கயாகசம்மாரம்.

எச்சனாந்துளவினானையடைக்கலமென்றுபோற்றி
யச்சுதனருளால்வேள்விதொடங்கலுமனையதெல்லா
முச்சகம்புகழுநல்யாழ்முனிவரன்மொழியக்கேளாப்
பச்சிளங்கொடியினன்னாள்பரம்பொருட்கிதனைக்கூறும். உகூ

இறைவனேயெனக்குமுன்னர்த்தாதையென்றிருந்ததக்கப்
பொறியிலிநமக்குத்தீங்கேநாடொறும்புரியுந்தீயோன்
மறைநெறிவேள்விச்செந்தீவளர்க்குமாலதனையின்னே
குறைபடச்சிதைத்திநின்பாற்கொளத்தகும்வரமீதென்றாள். ௩0

இருள்குடியிருந்தகூந்தலிறைவிதன்மாற்றங்கேளாத்
தெருள்குடியிருந்தசிந்தைதவரச்சிவந்தநோன்றா
ளருள்குடியிருந்தவெம்மானழிதகைத்தக்கனெஞ்சின்
வெருள்குடியிருத்துமொய்ம்பின்வீரபத்திரனைத்தந்தான். ௩க

எண்ணருமுலகமீன்றசிற்றகட்டெம்பிராட்டி
வண்ணவார்புருவமீப்போய்நெரிப்பவாய்துடிப்பப்பொங்கி
கண்ணறுசினமீக்கொண்டுபத்திரகாளியென்னும்
பெண்ணணங்கரசையின்றாள்பிறங்கெரிசிதறுங்கண்ணாள். ௩௨

பத்திரகாளிவீரபத்திரனிருவர்தாமு
மத்தனையுமையைப்போற்றிப்பணியெமக்கருளிரென்ன
முத்தலைச்சூலத்தண்ணன்மொய்ம்பனையருளினோக்கி
யித்திருமடந்தையோடுமிறைப்பொழுதின்கட்போந்து. ௩௩

பழித்தொழிற்றக்கன்வேள்விபாழ்படுத்துமையாள்சீற்ற
மொழித்தியென்றருளிச்செய்தானொளிழையுமையுமவ்வா
றழித்துநீர்வருதிரென்றுவிடைகொடுத்தருளப்பெற்றுத்
தெழித்தனரெழுந்தார்சென்றாரிருவருஞ்சீற்றம்பொங்க. ௩௪

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சண்டவாயுமந்தமாகவடவையங்கிதண்ணெனச்
சண்டபானுமதியமொப்பமொய்தயங்குதென்றிசைச்
சண்டன்வீறுசாந்தமெய்தவெஞ்சினந்தலைக்கொளீஇச்
சண்டிகைத்தலைவியோடுதலைவனங்கணெய்தினான். ௩௫

தன்னைநேருரோமசப்பெயர்க்கணந்தவப்படைத்
தன்னவெங்கணங்கடம்மைவேள்வியாற்றுசாலையின்
வெங்நெருப்புவைப்பவேவியுட்புகுந்துமேவலாப்
புன்னெறிச்செஃறக்கனுவிபொன்றுமாதுணித்தனன். ௩௬

உழையுருக்கொடோடும்வேள்வியுயிர்செகுத்தருக்கர்தம்
விழிகண்மற்றைமுப்பதிற்றிரண்டுபல்லுங்வீழ்த்தினான்
வழுவுமிந்துவைச்சினந்துதேய்த்துவன்னிநாவினோ
டெழுகரந்துணித்துமற்றுமேற்றதண்டமாற்றுவான். ௩௭

குலவுவாணிதன்னிடத்துவீங்குகொங்கைமூக்கரிந்
துலகமீன்றவன்னையும்பர்பெண்டிருக்குமுதுபுரிந்
திலகுமேனைவிண்ணவர்க்குமுனிவருக்குமெண்டிசைத்
தலைவருக்கும்வீரனன்றுதக்கதண்டமாற்றினான். ௩௮

தடங்கொள்சாலைமுற்றும்வெந்தழற்களித்துயூபமும்
பிடுங்கிவேள்வியாற்றினோர்பெருங்கழுத்தைநாணினான்
மடங்கயாத்துவேள்வியங்கமற்றவுமெடுத்தெடுத்
திடங்கொள்கம்கையூடழுத்தியிட்டவன்கணங்களோ. ௩௯

இன்னவண்ணம்வேள்விமுற்றுமிற்றவாறுகாண்டலும்
பொன்னுடைத்துழாயினன்பொருதுளம்புழுங்கினான்
முன்னர்வெள்கிமானமுந்தமொய்பறப்பையேறெனப்
பன்னுமூர்த்திமேலிவர்ந்துபடையெடுத்தெதிர்ந்தனன். ௪0

ஆயகாலையண்ணலானையாற்றினன்முகப்பிரான்
மேயவையமுன்னருய்ப்பவேறிவீரவுள்ளலு •
மாயனோடெதிர்த்துவெம்படைக்கலம்வழங்கினா
னேயவங்கண்மூண்டபூசல்யாவர்சொல்லவல்லரே ௪௧

வெற்றிதோல்வியின்றிநின்றுவெஞ்செருப்புரிவுழிச்
செற்றமிக்குமாயன்வெய்யதிகிரியைச்செலுத்தினான்
மற்றுவீரபத்திரன்றன்மார்பின்முண்டமாலையு
ளொற்றைவெண்கபாலமப்படைக்கலத்தையுண்டதால். ௪௨

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உணங்கரும்வலத்தவாழியுணங்கியதோர்ந்துமாற்றூர்க்
கணங்குசூழ்கணங்களண்டம்வெடிபடமுழங்கியார்த்துத்
துணங்கையாட்டயருமோதைதுஞ்சினொரொழியநின்ற
கணங்கெழுசுரர்கள்கோக்கலங்கியோட்டெடுக்குமேல்வை. ௪௩

காண்டகுவீரச்செம்மல்கணங்களான்வளைத்துத்தாளின்
மாண்டகுகிளையாப்புவலித்தலும்புரவிமான்றேர்
தூண்டியவெகினப்பாகன்றுணையடிதொழுதிரந்து
வேண்டினனடிகேள்சீற்றம்விடுத்தருள்இனியென்றேத்தி. ௪௪

பெருமான்யாகசாலைக்கெழுந்தருளுங்காட்சி.

மாதர்வெண்கமலத்தோன்றல்விண்ணப்பஞ்செவிமடுத்து
மேதகைக்கணங்களோடும்வெகுளியைவிடுத்துநம்மான்
பாததாமரைக்கீழ்ச்சிந்தைபதித்தனன்பதித்தலோடும்
பூதரமகளுந்தானுமாயிடைப்போந்தானண்ணல். ௪௫

குடமுழாபதலைதக்கைகொக்கரைபணவங்கோதை
படகமாகுளிதடாரிதகுணிச்சம்பம்பைமொந்தை
துடிபணைதிமிலைகண்டைதொண்டகம்பேரிகல்ல
வடமுதலியங்களெல்லாம்வயின்றொறுமியம்பிமல்க. ௪௬

வளைவயிர்பணிலஞ்சின்னம்வங்கியந்தாரைகாளங்
கிளைபடுநரம்புவீணைதீங்குழன்மிடற்றுக்கீத
முளவெனைப்பிறவுங்காலுந்துளைப்பொலியுறந்துவிம்மி
யளவினுலகமெல்லாமிசைமயமாகித்தேங்க. ௪௭

வாலொளிக்கவிகைபிச்சஞ்சாமரைமணிப்பூண்டொங்க
லாலவட்டங்கண்மற்றும்விடைக்கொடியருகுசெல்லக்
காலனைச்செகுத்தவாறுமுப்புரங்காய்ந்தவாறும்
போல்வனவுலகந்தேறப்பூதர்கள்விருதுபாட. ௪௮

ஏற்றுருக்கொண்டுதன்போலிணையடிதாங்கப்பெற்று
மாற்றலனாகித்தன்னேர்தருக்கியமாயோன்செய்ய
காற்றலைப்பிணிப்புக்காணுங்களிப்பினன்மேல்கொண்டுய்க்கு
மாற்றல்சாலறவெள்ளேறுபராந்துசெண்டாடிச்செல்ல. ௪௯

வெள்ளநீர்க்கிடையோன்வைத்தவிழியவனெவ்வங்காண
வெள்கியாங்கடியிற்சாத்தும்விரைமலர்க்குவையுண்மூழ்க
வெள்ளெலும்பணிகடங்களினத்தவர்மெலிவுநோக்கி
யுள்ளுடைந்தழுவதேய்ப்பவொன்றொடொன்றலம்பியாட. ௫௦

புன்னெறித்தலைநின்றெங்கோன்றனையிகழ்ந்திடும்பைபூண்ட
வின்னரையெனக்கூறுகவளித்திடுமிறைவனென்று
மன்னுபேருவகைபொங்கிமலர்ந்தெனநளினச்செங்கை
தன்னிடைவயங்குசெங்கேழினரரித்தழல்கூத்தாட. ௫௧

உய்திறனுணராமற்றையும்பர்போற்பழிப்புணும்மே
செய்திறன்முன்னர்த்தேறிக்கொடிஞ்சித்தேர்செலுத்தியுய்ந்த
மைதபுதன்ஞேன்சீலமறிந்துளமகிழ்ச்சிபூத்தாங்
கைதெனவயன்கபாலமற்புதமுறுவல்காட்ட. ௫௨

மாறடுமதுகைத்தன்னைவள்ளலுக்கியம்பிக்கொல்வித்
தூறுகாணமரரிங்நாளுலந்தவாநோக்கியோகை
யேறுதன்முடியசைத்துத்தகுந்தகுமென்பதேபோ
லாறணிசடிலமோலிக்கொக்கிரகசைவுற்றுட. ௫௩

மறைமுதலேலவலாற்றின்வயமகனியற்றுந்தண்டக்
குறையினைநிரப்பவெண்ணிக்கொடுவிடமிறைப்பதேபோற்
கறையணற்றுத்திப்பாந்தட்கலன்கள்வாய்பூட்டுயிட்டு
முறைமுறைக்கவைநாநீட்டிமூசெனவுயிர்த்துநோக்க. ௫௪

கணங்கெழுபாற்றுப்பந்தர்ப்பறந்தலைக்களத்துஞாங்க
ருணங்குறுமிமையோராவியுள்ளதோவிலதோவென்னப்
பிணங்களைத்தொட்டுப்பார்ப்பான்பிணைக்கரநீட்டியாங்கு
வணங்குடன்மதியம்வெண்கேழ்வளங்கதிர்பரப்பாநிற்ப. ௫௫

இகழ்ந்தவர்தமக்கேபின்னுமின்னருள்புரியவேண்டிப்
புகுந்திறநோக்கியுள்ளம்பொருதுவேர்த்தூடிப்பொங்கி
யகந்தளர்ந்தெழுந்துவீழ்ந்துபுரண்டுகையெறிந்தாலன்ன
நெகுஞ்சடைக்கங்கைமாதுநிரந்தரங்கதும்பியாட. ௫௬

தாதையென்றிருந்துதீங்கேதாங்கினற்காக்கநல்கப்
போதரேன்யானென்றாடும்பூவையைத்தழீஇக்கொண்டேகு
மாதரங்கடுப்பவன்னவணங்கினையிடப்பாற்கையாற்
காதலித்திறுகப்புல்லியணைத்திடுங்காட்சிதோன்ற. ௫௭

குருதியென்பிரத்தமூளைகுடருடற்குறைகடுன்றும்
பொருகளந்திருக்கண்சாத்தாப்பொருட்டவண்மறைப்பார்போலத்
தருமலர்மாரிதூவியுருத்திரகணங்கள்சாரக்
கருணைகூர்ந்தருளித்தோன்றுங்கடவுளையெவருங்கண்டார். ௫௮

கொடுங்கனுக்கண்டுவேர்த்துக்குழறிவாய்வெரூஉங்காலன்னை
யடுங்கனுவொழித்துவல்லேயணைத்திடப்பெறுஞ்சிறார்போ
னடுங்குறுமிமையோரெல்லாநாதனைக்காண்டலோடு
நெடுங்களிதுளும்பியோகைகீடினார்வணங்கிநின்றார். ௫௯

இன்னரைநோக்கியெங்கோன்முறுவலித்தெமக்குவேள்வி
தன்னிடைப்பாகமென்னைதந்திலீரஃதுநிற்க
மன்னுபோரடுபேராண்மைவலியினீர்பலருமென்னோ
பன்னுமோர்வீரற்காற்றுதுடைந்தனிர்பகர்மினென்றான். ௬0

பிரமாதிதேவர்வேண்டுகோள்.

அடியிணைதொழுதுமாயோன்முதலியவமரர்சொல்வா
ரடிபடுமெங்களாண்மைதுரும்பொன்றிலன்றேகண்டா
யடியராமெம்மைப்பல்காற்குரங்குபோலாட்டுவிப்ப
தடிகளுக்கழகோவெந்தாயாற்றிலேமுய்யக்கொள்ளாய். ௬௧

அத்தனேபல்காலிவ்வா றுணர்த்தியுமா டைமாசின்
மைத்துறுபேதைநீராற்பின்பினுமயங்குகின்றேங்
கைத்தனேயாடியோச்சிக்காதியுமாள்வரல்லா
லெத்தனேபிழைசெய்தாலுமிகப்பரோவடிமைபெற்றோர். கூஉ

கறுத்தநின்மிடறுநோக்கேங்கையணிகபாலநோக்கேம்
வெறுத்தவெள்ளென்புநோக்கேம்விழியடிகிடத்தனேக்கேங்
குறுத்தமோட்டாமையோடும்பன்றியின்கோடுநோக்கே
மிறுத்திடும்விதியினுறேமதியெனலெம்பாற்கண்டேம். கூங

பொங்கருட்பரமானந்தபூரணமுதலேயிங்கு
நங்களேயாளத்தோன்றியைந்தொழினடாத்தலோரே
மங்கையைமணந்தாயென்றுமக்களேயுயிர்த்தாயென்று
மெங்களிலொருவனுகவெண்ணியேயிகழ்ந்துகெட்டேம். கூச

கடவுள்யாஞ்செருக்காவண்ணங்கண்டனமுய்யுமாற்றல்
விடமுதலடையாளங்கணின்றிருமேனிவைத்தா
யடலுறுமவையுந்தேருச்செருக்கறிந்திங்காளெங்க
ளுடலினுமடையாளங்களுறுத்தினேபோலுமுய்ந்தேம். கூரு

இன்றெமையொறுப்பவீரன்போந்ததுன்னேவலாக
வன்றெமையொறுப்பப்போந்தவிடமுமுன்னருளேயென்று
மன்றயாந்தெளிந்தேமிந்நாளிடித்தெமைவரைநிறுத்த
லென்றுநின்கடனேயன்றேவீறிலாக்கருணைவாழ்வே. கூகூ

அன்றுனேமதியாதாழிகடைந்ததூஉமன்றியெம்மேற்
சென்றடாவதனுக்கஞ்சிச்செல்வநீயமுதுசெய்யக்
கொன்றிடுநஞ்சங்காட்டிக்குற்றமேற்குற்றஞ்செய்பு
மின்றுனேயிகழ்ந்ததொன்றோடொழிதலினுய்ந்தேமெந்தாய். கூஎ

அளவறுகாலந்தீவாயள்ளலிற்குளித்துந்தீரா
வளருமிச்சிவத்துரோகம்வயப்புகழ்வீரன்றன்னு
லெளிதினிற்றவிர்த்தாயன்றேயிப்பெருங்கருணேக்கெந்தாய்
தெளிவிலாச்சிறுமையேங்கள்செய்குறியெதிர்ப்பையென்னே. கூஅ

இனயனபுலவும்பன்னிபிரந்திரந்தலந்துகண்டங்
கனேயவாய்குழறக்கண்ணீர்வார்ந்திடக்கரங்களுச்சி
புனேயநின்றிமையோரெல்லாம்போற்றுழிமுட்டாட்கஞ்ச
மனேயவனெம்பிரானேவணங்கிவிண்ணப்பஞ்செய்வான். கூகு

வேள்வியிற்பாகநல்காமருண்மனவிண்ணோரெல்லாந்
தாழ்நெறித்தக்கனேடுங்குறைவறுதண்டம்பெற்றார்
வாழியவினிநீயெச்சம்வரமுறவருளிச்செய்து
பாழ்படச்சிதைந்தவிண்ணோர்பண்டுபோலுய்யச்செய்யாய். எ0

பிரமாதிதேவர்வரம்பெற்றுப்பூசித்தல்.

கடுந்தளேப்பிணிப்புண்டார்க்குங்கட்டறுத்தருளாயென்ன
வடுங்கரியுரித்தபெம்மானம்முறைகடைக்கண்சாத்த
விடும்பைதீர்ந்துய்ந்தாரன்னோர்யாவரயுநோக்கிப்பின்னும்
கொடும்பிழைமுழுதுநீங்கும்வழியினேக்கூறலுற்றான். எக

எமக்குநீர்பெரிதுங்குற்றமிழைத்தனிரவைதீர்ந்துய்ய
நமக்குமிக்கினியகாஞ்சிநகர்வயினண்ணீரங்க
ணிமைத்தொளிர்கயிலாயப்பானாரதனியம்புங்கூற்றி
னமர்த்தவேற்றக்கனீன்றவரியச்சுவப்பேர்மைந்தர். எஉ

பொதுவறநம்பிநம்மைப்போற்றுமாயிடைக்கட்சென்று
கதுமெனவிலிங்கந்தாபித்தருச்சிமின்கரிசுநீங்க
விதியுளித்தக்கன்றானுமிம்முறைவிழைகபூசை
யிதுபுரிகாறுநுங்கட்கிடும்பையேபுரிவர்மாற்றார். எங

கலிநிலைத்துறை.

அனையர்தாரகன்சூரபன்மாமுதலாகு
மினையதானவரென்றறிமின்களென்றருளிக்
கனைபொலங்கழல்வீரனுங்கணங்களுஞ்சூழத்
தனைநிகர்த்தவன்கயிலையைச்சார்ந்தனனிப்பால். எச

புள்ளினத்தரசுயர்த்தவனுதிப்புத்தேளிர்
வள்ளலாணையின்கிளவிபொச்சாத்தலின்மதுகை
நள்ளுசூரபன்மாமுதறயித்தியர்நலிய
விள்ளருந்துயர்ப்பெருங்கடலாழ்ந்தனர்மெலிந்து. எரு

மெலிந்தபின்மறைக்கிழவனையுசாவுபுவிடையோன்
வலிந்தவாய்மொழிநினைந்துபோய்க்கச்சியைமருவி
யிலிங்கமாயிடைநிறீஇத்தொழுதிடும்பைதீர்ந்துய்ந்தார்
பொலிந்தவிண்ணவர்தம்மொடுதக்கனும்போகி. எசு

மக்கள்பூசனைவிளைத்தவச்சூழலைமருவி
நெக்கவன்பினற்றொருசிவலிங்கநிறுவித்
தக்கவாய்மையிற்றொழுதனன்வெவ்வினைதணந்தான்
மிக்கசீர்க்கணநாதனும்வீறுபெற்றிருந்தான். எஎ

தக்கீசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஉஎ0.

முப்புராரிகோட்டப்படலம்.

கலிநிலைத்துறை.

சிறுவதீர்த்தநீயஞ்சலென்றியமனைச்சீறி
மறுவதீர்த்தவன்மேயதக்கீச்சரம்வகுத்தாஞ்
சறுவதீர்த்தமேல்பாங்கரிற்றாழ்ந்தவர்க்கவமா
யுறுவதீர்த்தருண்முப்புராரீச்சரமுரைப்பாம். க

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முப்புரங்களின்மூவர்புத்தன்மொழித்திறத்துமயங்கிடா
தப்பணிந்தவர்தாள்பணிந்தருளாற்றினின்றனராதலாற்
பொய்ப்புரந்தபுகாலைநீற்றறைநாவின்மன்னவர்போலெரி
தப்பிவாழ்ந்தனரீசனையினிப்பவர்க்கிடர்சாருமோ. உ

சுதன்மனென்றுசுசீலனென்றுசுபுத்தியென்றுசொலப்படு
மதன்மகீத்தவம்மூவருக்குமருள்சுரந்துமைபாகனு
ரிதம்விளங்கவரங்கள்வேட்டவிளம்புமின்னெனவங்கவர்
பதம்வணங்குபுநின்றிருப்பணிவாயில்காப்பருளென்றனர். ௩

கச்சிமாநகரெய்திநங்குறிகண்டுபூசனைசெய்மினோ
விச்சையாற்றினுமக்குநந்தளிவாயில்காவலுமீதுமென்
றச்சனாருள்செய்துநீங்கலுமங்கணெந்துவரம்பல
நிச்சலுந்தருமுப்புராரியிலிங்கமொன்றுநிறீஇயினார். ௪

பூசையாற்றியுளத்திலெண்ணியபேறுபூண்டனர்முப்புரா
ரீசமேன்மையளக்கவல்லுநரேவரப்பெயர்வண்மையான்
மாசில்காஞ்சிவயங்குகோட்டமெனப்படும்மெனவாய்திறந்
தோசையாலுயர்சூதனோதமுனிக்கணத்தர்வினவுவார். ௫

முப்புரத்துறைவோருளிங்கிவர்மூவருந்திருநாயகன்
செப்புமாயமயக்கினுக்குளகப்படாதுசெழுந்தழற்
கைப்பரம்பொருள்பத்திவாய்மைகடைப்பிடித்துநிலைத்தவா
றெப்படித்திதுவற்புதச்செயலெங்களுக்குரையென்றலும். ௬

தத்துவெண்டிரைவேலைநஞ்சமிடற்றடக்கியதம்பிரான்
பத்திமார்க்கமிரண்டுகூற்றதுபற்றறுத்துயரந்தணீர்
புத்திநல்குவதொன்றிரண்டறுபூரணப்பொருளோடுலா
முத்திநல்குவதொன்றிரண்டனுண்முன்னியம்பியபத்திதான். ௭

சார்புபற்றியுதிக்குமற்றையதொன்றுசத்திபதிந்தமெய்ச்
சார்பினெய்துமிரண்டுமுத்திதழைக்குமாயினும்வெவ்வினைச்
சார்பினோர்பெறுசார்புபற்றியபத்திதானிடைவிள்ளுமச்
சார்பிலாதெழுமுண்மையன்புதணப்புறுதெவர்கட்குமே. ௮

செய்தசெய்வனவாயதீவினையாவுமிச்சிவபத்தர்பா
லெய்திடாகமலத்திலைக்கமலத்தினென்றறிமின்களோ
வைதுகாமம்விழைந்தபத்தியுநல்லறந்துறையார்பெறி
னைதராதிதுபத்திபேதமுணர்ந்துளோர்நவில்கிற்பதே. ௯

திரிபுரத்தவர்சார்புபற்றியபத்தியோர்நனிதீமையே
புரிமனத்தினராதலால்வருபுத்தநாரதரான்மயன்
மருவியிற்றனரின்னமூவரும்வள்ளல்சத்திபதிந்தெழும்
பெரியபத்தியராதலாலவர்பேசுமையல்கடந்தனர். ௧௦

கலிவிருத்தம்.

பேறுமெய்தினரென்றுபேதுறு
வாறுமேதகுசூதன்மாதவர்
கூறுகூற்றினுக்கிறைகொடுத்தனன்
வேறுமாக்கதைமேல்விளம்புவான். ௧௧

முப்புராரிகோட்டப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௨௮௧.

இரணீசப்படலம்.

கலிவிருத்தம்.

அரணியின்கனலையர்கூற்றடு
சரணிமுப்புராரீசஞ்சாற்றின
முரணியங்கதன்குணக்கண்முன்றெழு
மிரணியீச்சரத்தியல்புரைத்துமால். க

இரணியப்பெயரசுரரேறனன்
குரவனுய்நலங்கொளுத்துவெள்ளியைச்
சரணமேத்துவாரணியிடத்தினில்
வரவழைத்தனன்வணங்கிவிண்டனன். உ

அரும்பெறற்றிருவரசுநான்பெறத்
தரும்படித்தொருவிரதஞ்சாற்றென
விரும்புமந்திரக்கிழவன்வீங்குதோ
ளிரும்பினன்னவற்கிறைவழங்குவான். ௩

வேட்டவாறிதுவாயின்மேவரக்
கேட்டியிவ்வுரைகேடிலாற்றலோய்
நாட்டமூன்றுடைநாதன்சேவடிக்
கீட்டுமன்பினுற்றவமிழைத்திநீ. ௪

பதுமவாழ்க்கையான்படைக்குமாற்றலு
மதுவைமாட்டினனளிப்பும்வான்மிசை
யதுலனுதியோராசையாட்சியும்
பொதுநடிப்பவன்பூசைப்பேறரோ. ௫

செல்வமாண்மையோர்சீர்த்திவாழ்வருள்
கல்விகட்டெழின்மகளிர்காழிலாச்
சொல்வலித்திறஞ்சூழ்ச்சியேனவு
மல்லெவரூஉங்களனருச்சனைப்பயன். ௬

மெய்த்தவின்னணவிருக்கைவேண்டினு
நத்துமாலயனகரம்வேண்டினு
முத்திவேண்டினுமூவருஞ்சிவ
பத்தியொன்றனலெய்தற்பாலவே. ௭

ஒன்னலார்பிணியுரகமன்னனைகோ
ளொன்னவுமவர்க்கிடரிழைத்திடா
வன்னவாகலானரனடித்தொழின்
முன்னினுர்ங்கெவனரிதுமொய்ம்பினோய். ௮

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிவன்றன்றிருவுருவைக்காணுதகண்ணேகுருடாஞ்சீர்சால்
சிவன்றன்றிருவுருவையெண்ணுதசிந்தையேபித்தாமென்றுஞ்
சிவன்றன்றிருப்புகழைக்கேளாச்செவியேசெவிடாமன்பிற்
சிவன்றன்றிருப்புகழையோதாதவாயேதிணிந்தமூங்கை. ௯

நில்லாதிளமையும்யாக்கையுமின்னினியேநீங்குமன்றிப்
பொல்லாதநோயுமடர்ந்துபெரும்மையுள்புகுத்துநீரா
லெல்லாநரைத்துடலமேகாமுனன்னெறிக்கேசெல்வோமென்று
வல்லானுகைத்தானையர்ச்சிப்பாரிவ்விடும்பைவாழ்க்கைவெல்வார். க0

பத்தன்மொழிப்பகுதிசேவையினைக்கூறும்பரிசாலீசன்
பத்தனவற்கினியசேவகனேயாதலினிப்பான்மைபூண்ட
பத்தர்படிமமொழுக்கங்குலனென்றும்பார்க்கவேண்டா
பத்தரெனப்படுவோர்கண்டிகையுநீறும்பரித்தமெய்யோர். கக

அங்கவரைக்காணப்பெறுகிற்பிற்கங்கைநீராடற்பேறு
மங்கவர்பாற்பேசப்பெறினகிலதீர்த்தமுந்தோய்ந்தோராவ
ரங்கவர்க்குச்செய்பூசையண்டருக்குமூவருக்குமாகுங்கண்டா
யங்கவர்க்கேதானமளிப்பரவர்தம்பாலேற்பர்நல்லோர். கஉ

மாயனயன்விண்ணுடோர்வாழ்வுந்துரும்பாமதிக்குமிந்தத்
தூயசிவனடியார்மேம்பாடியானேயோசொல்லவல்லேன்
பாயபெருங்கீர்த்திதோன்றல்பலசொல்லியென்னையிந்நா
ளாயபிறவெல்லாங்கழித்துச்சிவனடியேயர்ச்சித்துய்வாய். கங

என்னுங்குரவனிணைத்தாடொழுதோகையெய்தியெந்தாய்
பன்னும்பரம்பொருளையெத்தானத்தெவ்வாற்றுற்பண்புகூரப்
பொன்னங்கழலிணைகள்பூசித்திடுவதெனும்பொன்னேன்கேட்ப
மன்னும்பிருகுதாவந்தமைந்தன்வகுப்பான்மன்னோ. க௪

கலிநிலைத்துறை.

எங்கணுநிறைந்துநிற்குமெம்பிராற்கினியவாய
பங்கமில்வரைப்புமண்மேற்பலவுளவவற்றுட்காசி
யங்கதிற்காஞ்சிமேலாங்காஞ்சியினதிகமில்லை
செங்கதிர்மதியஞ்செந்தீமண்டிலமடியருள்ளம். கரு

மந்தரங்கயிலைதம்மின்மேம்படவயங்கித்தோன்று
மந்தமாநகரினெங்கோன்வல்விரைந்தருள்சுரக்கும்
மந்திரவெழுத்தஞ்சோதிப்பச்சிலைமலரேதேனுஞ்
சிந்தைகூரன்பிற்சாத்தித்தொழுவதேசிவனுக்கின்பம். கசு

கண்டிகைநீறுமெய்யிற்கவின்றிடவிவ்வாறங்க
ணண்டனைத்தொழுதுமெய்ப்பேறடைகெனுங்குரவன்பாத
புண்டரீகங்கள்போற்றியெழுந்தனன்பொறிவண்டூதுந்
தண்டலைக்காஞ்சிநோக்கிநடந்தனன்றறுகணாளன். கஎ

தன்னுடன்பிறந்தகேண்மைத்தானவனிரணியாக்க
னன்னவன்றனையனந்தகாசுரன்பிரகலாதன்
முன்னுறுபுதல்வரன்னோர்வழிவருமுரியர்தேசின்
மின்னுமாவலியேவாணன்விரோசனன்முதலியோரும். கஅ

பற்றுகாயாதிவாதிமனைவியர்பலருமேனைச்
சுற்றமுமொருங்குகாஞ்சித்தொன்னகரெய்தித்தாந்தாம்
பெற்றிடும்பெயரான்முக்கட்பிரான்குறிநிறுவிப்போற்றக்
கொற்றமார்முப்புராரிகோட்டத்தின்குணபாலெய்தி. கசூ

தன்பெயரிலிங்கமொன்றுதாபித்துக்குரவன்கூறு
மன்புடைமுறைமையாறேயருச்சனையாற்றியுண்டி
யின்பமும்வெறுத்தூப்பன்னுண்மெய்த்தவமியற்றுமேல்வைப்
பொன்பொதிசடிலப்புத்தேளெதிரெழுந்தருளப்போற்றி. உ0

மக்களின்விலங்கின்மற்றையோனியின்மண்ணில்விண்ணி
லுக்கதீப்படைகடம்மினுணங்கலினீரமென்னத்
தக்கதிற்புறம்பினுள்ளிற்பகலினிலிரவிற்சாவாப்
பொக்கமில்வரமுமும்மைப்புவனமும்புரக்கும்பேறும். உக

எம்பிரானருளக்கொண்டானிரணியகசிபுமாசை
யம்பகன்முதலியோருமவரவர்க்கினியபெற்றார்
வம்பலர்மலரிட்டன்னோர்வழுத்தியதலங்களோடு
மும்பர்சூழிரணியீசமுத்தமச்சிறப்பினோங்கும். உஉ

இரணீசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஙOங.

நாரசிங்கீசப்படலம்.

கலிவிருத்தம்.

தரணிமேற்புகழ்தாங்கியகாஞ்சியி
னிரணியீச்சரமேன்மையியம்பினு
மரணிலைத்தவதன்குடபாங்கரின்
முரணிநாரசிங்கீசமெர்ழிகுவாம். க

தக்கன்வேள்வியஞ்சாலையவியுணப்
புக்கதேவர்புரளச்சவட்டிய
முக்கணன்னருள்பெற்றபின்மூவுல
கொக்கவாடகன்றாட்படுத்தோங்கலால். உ

வண்ணவண்டிமிராமலர்க்கற்பகக்
கண்ணிவிண்ணவர்யாருங்கவன்றுபோய்த்
தண்ணறுந்துளவோனடிதாழ்ந்தெழூஉக்
கண்ணிலாக்கனகன்செயல்கூறலும். ங

ஐம்படைத்திறலாண்டகைகாஞ்சிபுக்
கெம்பிரான்றனிலேயடியேத்துபு
வெம்புதெவ்வினைவெல்லுமுபாயமவ்
வும்பர்கோனருள்செய்யவுணர்ந்தரோ. ச

உந்துதன்னெஞ்சுகூற்றையுவன்பெறு
மைந்தன்மாமுறைவைத்துத்தருக்குழி
யெந்துநீயினியுய்திறனீங்கெனுச்
சுந்தரப்பொலந்தூணங்கிழித்தெழீஇ. ரு

கொட்குமானிடக்கோளரியாகியவ்
வட்கிலானைக்கவான்மிசைவைத்திரு
ணட்குமந்தியின்வாய்தலினள்ளிருந்
துட்குகூருகிர்கொண்டுரங்கீறியே. சா

வன்கணனுயிர் வவ்வியிரத்தநீ
ரென்கணுகெனவாய்மடுத்திம்மெனத்
தன்கணெய்துந்தருக்கின் மயங்கினன்
புன்கண்மும்மைப்பொழிற்கும்விளைத்தனன். எ

பிரகலாதன்பிறங்கெழிற்செய்யவள்
சுரருமேத்தித்துதிசெயுநன்னய
வுரையுங்கேட்கலனுன்மத்தமேலிடுற்
கரையுமென்மொழிகாதினிலேறுமோ. அ

உய்தியில்லவன்சோரியொன்றீத்துணை
வெய்யவாயசெருக்குவிளைக்குமேற்
பையுள்சூழப்பதகன்கொடுமையை
யையயாவரளவிடற்பாலரே. கூ

சரபவிஜயம்.

அனையகாலையயன்முதல்விண்ணவ
ரினையுநெஞ்சினரஞ்சினரெம்பிரான்
றனையடைந்துசரணமென்றேத்தினார்
வினையிகந்துயர்மந்தரவெற்பின்மேல். க0

வாய்புலர்ந்துநடுக்குறவந்தவ
ரேயவார்த்தைதிருச்செவியேற்றனன்
பாயபல்கணமேத்தப்பனிவரை
யாயிழையொடினிதாடல்செயாண்டகை. கக

அஞ்சலீரென்றளித்தனன்சிம்புளாய்
வஞ்சமானிடவாளரியாயுளைத்
துஞ்சுவித்துரிகொண்டொளிதோற்றினன்
றஞ்சமுண்டவர்தஞ்சரணாயினன். கஉ

கலிநிலைத்துறை.

நரமடங்கலினாரணனுந்திருக்காஞ்சியை
விரவிநாரசிங்கீச்சரவேங்கைநிறீஇயினன்
பரவியேத்தினன்வெவ்வினைநீத்தருள்பற்றினு
னரவுநீருடையத்தலமுத்தமமாகுமால். கங

வராகீச்சரவரலாறு.

வாரகீச்சரமன்னதன்றெற்கதுமன்னுபொற்
பேரான்றன்னொடுதோன்றியபொன்விழிப்பேரினன்
பார்தான்வெளவினன்பாதலத்தேகலும்பைந்துழாய்த்
தாரான்சூகரமாயவன்றன்னைச்சவட்டியே. கச

முன்போற்பாரைக்கொணர்ந்துநிறீஇமதமூண்டுழிக்
கொன்பாயேற்றவன்வேடுருக்கொண்டிருண்டொரு
வன்பார்கோடுபிடுங்கியணிந்தபின்மற்றவ
னன்பாலீசனையர்ச்சனைசெய்தருள்பெற்றதே. கரு

நாரசிங்கேசப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஙகஅ.

அந்தகேசப்படலம்

கலிவிருத்தம்.

தாரார்கொன்றையனூரசிங்கீச்சரந்தன்னொடு
வாராகீச்சரமேன்மைதெரிந்துவழங்கினு
மேரார்கின்றவிதன்குணபாங்கரெறாழ்வலிப்
போராரானேற்றவரந்தகவீச்சரம்போற்றுவாம். க

இரணியாக்கனளித்திடுமந்தகனென்பவன்
மரபினெந்தையையாயிடையேத்திவரம்பெறாஉ
முரனையட்டபிரான்முதல்விண்ணவர்யாரையு
முரணில்வென்றுபுறக்கொடைகண்டுலகாண்டனன். உ

தேவர்கள்பெண்வடிவங்கொண்டுறைதல்.

அன்னதானவனுக்கழிவெய்தியச்சத்தினுற்
பொன்னவாமருமத்தவனுதிப்புத்தேளிர்தா
மின்னிடைக்குநடுக்கம்விளைத்திறுமாந்தணி
மன்னுபூண்முலையார்வடிவத்தையெடுத்தரோ. ௩

கொள்ளிவட்டமெனச்சகமெங்கணுங்கொட்புறீஇ
வெள்ளியங்கயிலைக்கிரிமேவினர்முத்தலை
யள்ளிலைப்படையங்கணனாருள்பெற்றவண்
வள்ளிமாமிகணங்களினேடும்வதிந்தனர். ௪

இன்னவாறுபல்காலமகல்வுழியெம்பிரான்
மன்னுதாருவனத்துறைமாதவர்தங்களைத்
துன்னிமையல்கொளீஇயவருண்மைசோதித்திடு
மன்னசெய்கைநினைந்தவணெய்தினனவ்விடை. ௫

அந்தகாசுரன்விண்ணவர்வெள்ளியடுக்கலின்
வந்துபெண்மையராகிமறைந்துறைசெய்திகேட்
டுந்துசீற்றமிகுத்தவணெய்தியுடற்றுழி
முந்துமம்பிகைதன்னருள்பெற்றுமுகுந்தனர். ௬

எண்ணில்பெண்டிர்தமைப்படைத்தேயினரத்தடங்
கண்ணினூர்க்கிடைகண்டகனேடினனுகமற்
றண்ணலாருறுவோரமர்தாருவனத்திடை
நண்ணியங்கணடாத்தியசெய்கைநவிற்றுவாம். ௭

பிட்சாடனர்திருவிளையாடல்.

கொச்சகக்கலிப்பா.

கழல்கறங்கப்பலிக்கலனுங்கரத்தேந்திப்பலபரிதி
மழகதிரின்வரும்பெருமான்றுடிமுழக்கஞ்செவிமடுத்துக்
குழலிசைகேட்டருகணையுமசுணமெனக்குளிர்தூங்கிப்
பழிதபுதாபதமடவார்பலிகொண்டுமருங்கணைந்தார். அ

நிலவலர்ந்தநகைமுகிழ்க்குமணிவாய்க்குநெடுஞ்சூலத்
தலைகிடந்ததிண்டோட்குந்தடமார்பினழகினுக்கு
மலைமடந்தைகரஞ்சேப்பவருடுமிருகுறங்கினுக்குங்
கலைநுடங்கவருமடவார்கண்மலரிட்டிறைஞ்சினர். ௯

கண்மலரையெம்மானார்திருமேனிகவரவவர்
பண்மலரும்வாய்மலரும்பனிமலருமுகமலரும்
தண்மலரும்விழிமலருந்தாண்மலருங்கைமலரும்
விண்மலருமின்னனையவிளங்கிழையாரெதிர்கவர்ந்தார். க௦

எம்பிரான்றிருமேனியுளமுழுதுமிடங்கொள்ள
நம்பியநாண்முதனான்குந்துச்சிலர்போற்புறநடப்பக்
கொம்பனையார்கள்ளுண்டுகளித்தோரினிருமருங்கும்
பம்பினராடினர்பாடினரென்செய்வார். கக

தண்ணறுஞ்சந்தனந்தீயத்தரளவடநீறாகக்
கண்ணெகிழ்பூந்தொடைமூசுங்களிவண்டினொடுங்கருக
வெண்ணரியகாமத்தீயிடைக்குளித்தார்புரம்பொடித்த
வண்ணலிளநகைபோலுமடிகளிவர்நகையென்பார். கஉ

வழுவுமுடைகரத்திடுக்கிக்கொணர்ந்தபலியிடமாட்டார்
தொழுதகையார்பனந்தாளினணிந்தருளத்தொடையேந்தி
யெழுமவளின்மறுகுவாரெம்பிரான்கடைக்கணிப்ப
முழுதருள்பெற்றுய்ந்தேமென்றகமலராமுகமலர்வார். கங

தக்கபலிகொளவந்திர்தனப்பிச்சைதருகின்றேங்
கைக்கொடுபோமிதோவெனமுன்னூரநெளிப்பார்கழிகாம
மிக்கயாங்களுநீரும்வெற்றரையேமாயினமா
லிக்கிடந்ததுகிலுமதோவெமதோசொற்றிடுமென்பார். கச

எம்மல்குற்கும்மல்குலிணையொக்கும்போலுமது
செம்மலீருடன்சேர்த்தித்தெரிதுமெனவருசணைவார்
வெம்முலைவாரணமெங்களிடைக்கீறுவிளையாமே
நும்முகிர்த்தோட்டியினடக்கினறனுண்டுநுமக்கென்பார். கரு

மன்றநீரிரந்தபலியாமளித்தேமற்றியாங்க
ளொன்றிரந்ததளியாக்காலிகழன்றேயுமக்கென்பா
ரின்றெனினும்விடுவோமோவீர்ங்கலைவேள்பறந்தலைக்கட்
சென்றுபெரும்போர்விளைத்தும்வளைமினெனத்தெழித்தெழுவார்.

யாங்கொணர்ந்தபலியோடுமெம்முடையவளையாழி
பூங்கடிஞையுறக்கொண்டீர்புனிதரேயவையளித்தா
லாங்கிரந்தமாலார்க்குவளையாழிமீட்டளித்த
வீங்குநீர்க்கலிக்கச்சிவிநாயகரொப்பீரென்பார். கஎ

பாம்பலதிங்கிஃதல்குல்பகட்டல்லவிவைகொங்கை
கோம்பியலதிதுநாசிகோளரியன்றிதுமருங்கு
லேம்பலிக்குமிவைதம்மைக்கோளிழைப்பவெனவெருவிப்
போம்பரிசுநினையாதீர்புல்லுமினென்றடிதொழுவார். கஅ

இவ்வாறுதம்பிரான்றிருமேனியெழினோக்கிச்
செவ்வாய்மைக்கற்பிழந்தார்திறங்கண்டுவெகுண்டெழுந்த
வவ்வாழ்க்கைமுனிவரிடுசாபங்களடிகள்பாற்
றுவ்வாமையுறநோக்கிக்கொடுவேள்விதொடங்குதலும். ககூ

எழுந்தமுயலகன்புலிபாம்புழைபூதமெரிம்ழுவும்
தொழுந்தகையார்கைக்கொண்டுதொடங்குதிருநடங்காணூஉ
விழுந்தயர்ந்துசோர்ந்துள்ளம்வெரீஇயினுர்தமக்குமதிக்
கொழுந்தணிவாரறிவளிப்பக்குறைதீரத்தொழுதெழுந்தார். உ0

சென்னிமிசைக்கரங்கூப்பித்தெய்வசிகாமணிபோற்றி
யின்னருளாலெமைப்புரக்கவெழுந்தருளுஞ்செயல்போற்றி
பொன்னிதழித்தொடையாயெம்பிழையனைத்தும்பொறுத்தருளிப்
பன்னரியமுத்திநிலைப்பரபோகமருளென்றார். உக

அவ்வண்ணந்தொழுதிரந்தவருண்முனிவர்க்கருள்கூர்ந்து
செவ்வண்ணத்திருமேனிச்சிவபிரானிதுகூறு
மிவ்வண்ணம்வேண்டுதிரேலெழிற்காஞ்சிநகர்வயிற்போய்
மெய்வண்ணநாற்குலத்துந்தோன்றியவண்மேவுதிரால். உஉ

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பற்றறத்துறந்தோர்பற்றுட்பட்டவரேனுஞ்ஞானம்
பெற்றவர்மடவரேனும்பெரும்பன்றிகழுதைஞாளி
புற்றராப்புல்லுப்பூடுபுழுமாமேனுங்காஞ்சி
நற்றலத்திறுதிகூடினம்மடிகலப்பதுண்மை. உ௩

பிருதுவாதிமுனிவர்காஞ்சியிற்பிறத்தல்.

ஆதலினங்கணில்லாற்றொழுகிவீட்டைமினென்னக்
காதலின்வணங்கிப்போற்றிக்கடும்பொடும்பிருகுவாதி
யேதமினுற்பத்தெண்ணுயிரவருங்காஞ்சிநண்ணிக்
கோதறுமரபினுன்றநால்வகைக்குலத்துந்தோன்றி. உச

மெல்லிதழ்நறுமென்போதால்விதியுளிவெவ்வேறன்பி
னல்லுறழ்மிடற்றுப்புத்தேளருட்குறியருச்சித்தேத்தி
நல்லனவரங்கள்பெற்றுநாயகனருளாலங்க
ணில்லறநெறியின்மன்னிவாழ்ந்தனரினையநீரால் உரு

எல்லைதீர்காஞ்சியுள்ளார்யாவருமுனிவரங்கட்
கல்லெலாமிலிங்கஞ்சீதப்புனலெலாங்கங்கைசொல்லுஞ்
சொல்லெலாமனுக்கள்கைகாற்றொழிலெலாம்விடையோனேவல்
செல்லலாந்தகைத்தன்றம்மதென்றிசைக்கிழவற்கவ்வூர். உசு

அந்தகாசுரன்முத்தியடைதல்.

அருந்தவக்கிழவர்தங்கள்செயலதுவாகவிப்பாற்
பெருந்தகைகயிலைநண்ணிப்பிராட்டியோடமர்ந்தானங்கட்
டிருந்திழைமகளிர்கோலங்கொண்டுறைதிருமாலாதி
யிருந்திறற்சுரரும்போற்றிமருங்குறவிருக்குமேல்வை. உஎ

தனைப்புறங்கண்டமின்னுர்தமைப்பற்றிவருதுமென்னு
மனத்தருக்குய்ப்பமீட்டுமந்தகன்வருதல்காணூஉப்
புனத்துழாய்ப்புத்தேண்முன்னர்ப்போற்றிவிண்ணப்பஞ்செய்ய
வினைத்தொடக்கறுக்குமெங்கோன்வயிரவன்றனைவிடுத்தான். உஅ

வயிரவன்படையோன்முன்னும்வானவர்க்கிடுக்கண்செய்வான்
வயிரவன்றுடியன்சேனைவலத்தவனுகிப்போந்த
வயிரவன்மனத்தான்றன்னைப்பொருதுவண்சூலத்தேந்தி
வயிரவன்களிப்புமிக்குவாகையினடனஞ்செய்தான். உகூ

அந்தகற்கருளாலுண்மையறிவுவந்துதிப்பவன்னோன்
கொந்துமுத்தலைச்சூலத்திற்கோப்புண்டுகிடந்தவாறே
கந்தமென்மலர்த்தாள்போற்றித்துதித்தலுங்காரிப்புத்தேண்
மைந்தயாமகிழ்ந்தாம்வேட்டவரமினிப்புகறியென்ன. ௩௰

தானவன்முத்தியொன்றேதந்தருளென்றுனற்றேற்
கோனருள்பெற்றுக்காஞ்சிகுறுகுவாமென்றுநண்ணி
யானுடையூர்தியண்ணலருளினாற்றனதுகாப்பா
மாநகரெய்திச்சூலவைத்தலைக்கிடந்தான்றன்னை. ௩௧

தெறும்புரமெரித்தார்கம்பந்திகழ்சிவகங்கைத்தீர்த்த
நறும்புனன்மூழ்குவித்துத்திருவருணல்கிப்பாசக்
குறும்பறுத்தளித்தான்றண்டக்குரிசிலந்தகனுந்தன்பே
ருறும்பழவிலிங்கத்துள்ளாற்கரந்தனனொருமைபெற்றான். ௩௨

அந்தகேசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௩௱௰.

வாணீசப்படலம்.

கலிவிருத்தம்.

அறம்பயில்காஞ்சியினந்தகேச்சரத்
திறஞ்சிறிதறிந்தவாசெப்பினாமினிப்
பிறங்குசீரத்தளிக்குணதுபேதுறப்
பறம்புவில்லுழவர்வாணீசம்பன்னுவாம். ௧

வாணன்வரம்பெற்றகங்கரித்தல்.

எறுழுடைவாணனென்றியம்புதானவன்
றெறுவினைக்காஞ்சியினருட்சிவக்குறி
நிறுவினனருச்சனைநிரப்பிமாதவ
முறுவரினுஞற்றினனுலப்பில்காலமே. ௨

அன்பினுக்கெளிவருமழகனங்கவன்
முன்புறத்திருநடமுயலக்கண்டனை
னென்புநெக்குருகநின்றேத்தினனந்தி
தன்பெருங்கணத்தொடுமுழவுதாக்கினன். ௩

குடமுழவிருகரங்குலுங்கத்தாக்குதோ
றடர்பெருங்கருணைகூர்ந்தடிகளாயிரந்
தடநெடுங்கரம்பெறநல்கித்தானவ
விடலைநீவேட்டதுவிளம்புகென்றலும். ௪

ஆயிரமுளரிநீண்டலர்ந்தநீனிற
மாயிருங்குன்றுறழ்வாணன்றாழ்ந்தெழு
தீயழற்புரிசையுந்திறலுமாக்கமும்
பாயமூவுலகமும்பரிக்குங்கொற்றமும். ௫

ஓவருநிலைமையுமுன்னடித்துணை
மேவருபத்தியும்வேண்டினேனொரு
மாவடிமுளைத்தெழுவள்ளலேயெனக்
காவணியுடுத்தொளிர்கம்பவாணனும். ௬

அனையவைமுழுவதுமளித்துநீங்கினன்
புனைபுகழசுரர்கோன்புவனம்யாவையுந்
தனதடிப்படுத்தினன்றருக்கிவாழுநாண்
முனிவனைத்தொழுதெழக்கயிலைமுன்னினான். ௭

நம்மையாளுடையவனடனவேலையிற்
செம்மலாயிரமணிக்கடகச்செங்கையாற்
றெம்மெனக்குடமுழாவெழுப்பச்சூர்த்தகட்
கொம்மைவெள்விடையினன்கருணைகூர்ந்தரோ. ௮

எவ்வரம்விழைந்தனையெனினுநல்குது
மவ்வரம்புகலெனவசுரன்கூறுவான்
செவ்வனின்றிருவடிச்சேவைநித்தலுஞ்
செய்வதுவிழைந்துளேன்கருணைசெய்தி. ௯

பீட்டியர்முருகவேள்வரைப்பிராட்டியோர்
கோட்டிளங்களிற்றெருடுகோட்கணங்களி
னீட்டமொடெய்தியென்னிருக்கைவாய்தலின்
மாட்டிருந்தெனக்கருளெனவணங்கினான். ௧0

எண்ணியவெண்ணியாங்களிக்குமெந்தையவ்
வண்ணமேயாயிடைமருவிவைகினன்
கண்ணுறுமசுரனுங்காலந்தோறுமங்
கண்ணலையடிதொழுதன்பின்வைகுநாள். ௧௧

வாசவனெடியவன்மற்றையாரையும்
பூசலிற்புறங்கொடுத்திரியப்போக்கினன்
காசணிமிடறுடைக்கடவுண்முன்னுறீஇ
யேசறுசெருக்கினுலிதுவிளம்புவான். ௧௨

என்னொடுபோரெதிர்ந்திரியல்போயினு
ரென்னருமினிமற்றென்புயக்கண்டூதியை
யென்னுடைப்பிரானிடைத்தீர்ப்பவெய்தினே
னென்னைநின்றிருவுளமியம்புவாயென. ௧௩

பெருமானிறுதிகூறிபோக்கல்.

வெருவலனெதிர்நின்றுவிளம்பக்கேட்டலுந்
திருவடிவிரலுகிர்விழிசிரிப்பினுன்
மருவலர்க்கடந்தருண்மதுகையெம்பிரான்
குருநிலாநகைமுகிழ்த்திதனைக்கூறுமால். ௧௪

முதுதவப்பிருகுவின்சாபமொய்ம்பினு
லெதுகுலத்துதித்தெனக்கினியனாகிய
புதுமலர்த்துளவனின்புயக்கண்டூதியைக்
கதுமெனப்போக்குவான்வருவன்காணெனு. ௧௫

தற்றொழுவான்றனைத்தான்செகுப்பது
நற்றிறமன்றெனநாடியிவ்வணஞ்
சொற்றனன்றிருவுளஞ்சுளித்தியாவையு
மற்றமிலவனவளதுகொண்டாட்டுவான். ௧௬

இருள்குடியிருந்தபுன்மனத்தினீங்கிவன்
முரணினையடக்கவேபோலுமுந்தைநாட்
செருவகத்தெம்மினுந்திறல்கொள்வாயென
வரமளிக்கெம்பிரான்வழங்குஞ்சூழ்ச்சியே. கஎ

நம்பனீதுரைத்தலுநக்குக்கையெறிந்
தெம்பிரான்முப்பதாமுறையினென்னொடேற்
றம்பரார்கணத்தொடுமோடியுய்ந்துளா
னம்பகமுளரியானமருக்காற்றலான். கஅ

அவனையோராண்டகைமீளியாக்கவைத்
தவனிதுகிளந்தனையெந்தைநீயெனக்
கவர்மனக்கொடுந்தொழிற்றறுகட்காய்சினத்
தவலுடையூழிஞனிகழ்ந்துசாற்றலும். ககூ

அவனமர்க்கிடைந்தவன்றனைக்கொண்டேயவன்
கவர்மதமடக்கியநினைந்தகண்ணுதற்
சிவபிரான்குறுநகைமுகிழ்த்துச்செப்புவான்
றவலருமாற்றலோய்சாற்றக்கேண்மதி. உ0

நின்னமர்க்குடைந்தபின்னினையடக்குவான்
றன்னுசீருபமனியனுக்குத்தொண்டுபூண்
டென்னருட்குரியனாயெறும்படைத்தனை
னன்னவன்முன்னவனாகவெண்ணலே. உக

என்னநாளவன்வருமென்றியேலொரு
நின்மகட்கோர்பழிநிகழநின்னகர்
நன்னெடுங்கொடியுளோன்றெருடியுநாள்வரு
மென்னலுமசுரர்கோனிருக்கையெய்தினான். உஉ

உஷைகாமத்தால்வருந்தல்.

அங்கொருநாளவள்பயந்தவாயிழை
கங்குலிற்கனவினிற்கண்ணன்சேய்பெறும்
பொங்கெழிலநிருத்தன்புல்லப்புல்லினாள்
வெங்களிப்பெய்தினள்விழிப்பக்கண்டிலாள். உங

கையெறிந்தழுதுகண்கலுழ்ந்துசோர்ந்தனண்
மெய்யணிசிதைந்துமெய்வெறுவிதாதல்கண்
டைதெனத்தன்மலரனங்கன்சூட்டினான்
றையறன்மருகியாச்சார்வதோர்ந்தென. உச

களங்கனிக்கூந்தலிற்கவற்றித்தற்றெறத்
துளங்குறுபழம்பகைத்தொடர்பின்வேள்கரி
விளங்கிழையுழந்துதன்வீறுகாட்டலா
விளங்கொடிமுதலரிந்தென்னச்சாம்பினள். உரு

பழிவருமென்றசொற்பழுதுருவகை
யுழைவிழிக்கிறந்துபாடொழிப்பவல்விரைந்
தெழுபவன்போலிருள்கிழித்துவெய்யவன்
சுழிபுனற்கருங்கடன்முகட்டுத்தோன்றினான். உசா

உஷையிருலனுநந்தன் சிறையடைதல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அத்திறங்கேட்டதோழியாய்ந்துருப்படத்திற்றீட்டி
யித்தனிக்குமரனேயோவென்றுளமகிழ்ச்சிநோக்கித்
தத்துநீர்த்துவரைநண்ணித்தவிசொடுந்துயில்கின்றானைச்
சித்திரமெனக்கொண்டெய்தித்திருந்திழைமுன்னருய்த்தாள். உஎ

கண்டனளசுரனீன்றகனங்குழையமிழ்தமன்னி
யுண்டனளென்னவோகைதுளும்பினளுவனைப்புல்லிக்
கொண்டனள்கரிளமேனிவனப்பெலாங்குறித்துநோக்கி
விண்டனள்கவலையன்னான்விழித்தனன்விளைந்தகாமம். உஅ

இளமுலைவருடிமோந்துமுத்தமுண்டிதழ்த்தேன்மாந்தி
விளரிவண்டிமிருந்தாரான்மேகலைநெகிழ்த்துநீவித்
தளைவிடுத்தகலயாணரல்குலந்தடத்துள்முழ்கி
விளைபெருங்கலவிப்போகவெள்ளத்தினமுழ்ந்தினுல். உகூ

துலைவிழிசேப்பச்செவ்வாய்துடிப்பவேர்வரும்பப்பூக
மணிமிடறொலிப்பவார்ப்பவால்வளைதடந்தோள்வெற்பிற்
பணைமுலைக்களிநல்யானைபாய்ந்துபாய்ந்துழக்கமெல்கு
மணைமிசைக்கலவிப்பூசன்மடந்தையுமாடினுளே. ௩0

புணர்ச்சியின்மருங்குநிற்றல்புரையெனவிலகுமேலோர்
குணத்தையுற்றுடையுநாளும்புறஞ்செலத்தூர்த்தர்மான
வணர்க்குழல்கட்டுவிட்டுமருங்கெலாங்கொட்டநோக்கி
யிணைச்சிலம்பார்ப்பத்தண்டாதின்னலநுகர்ந்துவாழ்நாள். ௩க

தளிரியனிறம்வேறாகித்தையலாள்கருப்பமெய்த
வளமனைகாப்போர்நோக்கிவாணனுக்குணர்த்தவன்று
னிளவலையரிதிற்பற்றியிருஞ்சிறைப்படுத்தான்காணூஉ
வளமருமயிலிற்றேம்பிப்பெண்கொடியரற்றிவீழ்ந்தாள். ௩உ

கண்ணன்போருக்கெழுதல்.

வீழ்ந்தயர்பொலங்கொடிக்குத்துணையெனவிசும்புநக்க
வீழ்ந்துயர்கொடியுநாள்வெய்யகாலுதைப்பவிற்று
வீழ்ந்ததுவாணன்கொண்டவிழுத்தவப்பேறுமொக்க
வீழ்ந்ததுநிகழ்ந்தசெய்கைவீணைமாமுனிவனோர்ந்தான். ௩௩

சிலைத்தொழின்மாண்டதன்சேய்சிறுவனைக்காணுதெங்கு
மிலைப்புணர்கிளைத்துவாடுந்துவாரகைக்கிறைபாலெய்திப்
புலப்படப்புகலக்கேட்டுப்பொருபடையெழுகவென்று
வுலப்புயத்துளவத்தாரானொலிமுரசறைவித்தானுல். ௩ச

வியவரினுணர்ந்தார்சாற்றும்விசிமுரசோதைகேட்டுச்
செயிரறத்தொகுவவங்கட்சேனையேயல்லமாறாச்
சயமுடையிமையோர்தங்கள்சிதறுநல்வினைகடாமு
முயர்முரசோதைகேட்டவ்வும்பர்பாற்றொகுவமாதோ. ௩ரு

கடுந்தொழிலசுரர்தம்பாற்றெறப்படுங்காலதூதர்
கெடுந்தொழிலனையார்ப்பற்றக்கிளர்ந்துவேற்றுருவுகொண்டு
கொடுந்தொழின்முற்றக்கற்றலனையசூர்ங்கோட்டுநால்வா
யடுந்தொழிற்றறுகண்வேழமளப்பிலபண்ணினர்கள். ௩௬

குவைமணிமோலிவிண்ணோர்மனமெலாங்குழுமிநம்மைக்
கவலுறவருத்தினுரைவெலற்கிதுகாலமென்னு
வுவயவங்கொண்டுவெவ்வேறணைந்தெனவிரைசெல்காட்சி
யிவறுசீர்க்கலினப்பாய்மாவெண்ணிலபண்ணினுரால். ௩௭

வரைமகள்கிரீசனேங்கற்குறிஞ்சிமன்மதக்கைவெற்பென்
றுரைபெறுகிழமையோரையொருங்குதன்வாய்தல்வைத்த
புரையினுன்றன்மேற்சீறிவரையெலாம்புறப்பட்டாங்கு
விரைசெலற்கொடிஞ்சித்திண்டேர்பண்ணினர்கோடிமேலும்.

தடமதிலெரியாற்கோலப்பெற்றவன்றன்னையேவ
லிடவரம்பெறவும்வல்லுமெனத்துணிந்தனையாறுவி
கொடுசெலக்குறித்துப்பல்வேறுருவுகொண்டணைந்தகாட்சி
வடவைநேர்சீற்றத்துப்பின்மள்ளருமொய்த்தார்பல்லோர். ௩௯

பண்ணுநாற்படையின்வீக்கம்பார்த்துமண்ணடுங்காவண்ணம்
வண்ணவெண்கவிகைபிச்சங்கொடிகண்மேன்மறைப்பத்தீம்பால்
வெண்ணிறப்புணரிநள்ளுநமேயதன்றேற்றங்காட்டிக்
கண்ணனுந்தானைநாப்பட்கடகளிறுகைத்துச்சென்றான். ௪0

கொழுநனுடமர்க்குச்செல்லக்குலமனையகத்துவாளாக்
கெழுவுறுதகையஞாலக்கிழத்தியுந்திருவைகுந்தப்
பழமனையியற்கைவல்லைபார்த்தனண்மீளவிண்மே
லெழுவதுகடுக்குஞ்சேனைச்செலவிடையெழுந்ததூளி. ௪௧

கண்ணன்சேனையும்வாணன்சேனையுங்கைகலத்தல்.

இன்னணமளக்கரேழுமெழுந்தெனபரந்தசேனை
துன்னலரணுகல்செல்லாச்சோணிதபுரத்தைமுற்ற
வன்னதுதெரிந்தவாணனழலெழவிழித்துநக்குத்
தன்னிகரடுபோர்ச்சேனைத்தலைவரையேவினுனல். ௪௨

எழுந்தனபடைகணுன்குமியம்பினவியங்களெங்கும்
வழிந்தனவிலாழிமண்ணும்வானமுஞ்செறியத்துன்னி
யொழுங்கினதூளிசேய்த்திற்கண்டவருகுமண்மாரி
பொழிந்திடும்போலும்வாணன்புரத்தெனமருட்கைகொள்ள. ௪௩

தன்னுயிர்க்கணவன்மேற்செலுனையுள்ளழுங்கக்கண்கள்
பொன்னுருப்புவனிமாதுபுழுதியாற்புதைப்பச்சீறி
யன்னவண்மருமநோவவடிபெயர்த்ததிர்த்துச்சென்று
மின்னிலைப்படையசேனைவியனகர்வெளிக்கொண்டன்றே. ௪௪

விதிர்படைமின்னுக்காட்டவிலாழிநீர்தாரைகாட்ட
வதிரொலியுருமுக்காட்டவந்தநாட்படலைமேக
மெதிரெதிருடன்றுலென்னவிருபெருங்கருவிச்சேனை
கதிர்முலைச்சயமான்மெச்சக்கைகலந்தமரின்மூண்ட. ௪௫

கொச்சகக்கலிப்பா.

செங்களத்துடல்கிடப்பவருதிண்டிறலரை
யங்குநின்றெதிர்கொளப்புகுநரொப்பவழல்சால்
வெங்களத்துறுசெருத்திறமைநோக்கவியல்வா
னெங்குமொய்த்தனர்களிர்ந்தொடையன்மோலியிமையோர். ௪௬

கல்லியற்பொருகளத்திருவரங்கமதனின்
மெல்லியற்சயமடக்கொடிநடிப்பமிடையும்
பல்லியத்தொகைமுழக்கெனவெழுப்புபடகஞ்
சல்லிதக்கைமுதலெண்ணிலதழங்குவனவால். சஎ

பொருதொழிற்றனில்வல்லபகவன்புரமடு
மொருவனேயெனவுணர்ந்தனரெனச்சிவன்முடிச்
செருகுதும்பையைமிலேச்சினர்தெழித்துமிடலா
னிருதிறத்தருமுடற்றுசமர்யாவர்மொழிவார். சஅ

கரிகளூருநரொடுங்கரிகளூருநர்களும்
புரவியூருநரொடும்புரவியூருநர்களு
மிரதமூருநர்களோடிரதமூருநர்களு
மரபின்மன்னரொடுமன்னருமெதிர்ந்துபொருவார். சகூ

தண்டமென்பெயர்வழிக்குதவுதானவயவே
தண்டமோச்சியெறிதண்டமவையொன்னலர்கள்கைத்
தண்டமோடுபுயதண்டமுநிலத்தினுருளத்
தண்டமாற்றுவசமர்க்கணினமென்பதுளதோ. ருo

ஏறுதேர்வயவரேற்றெதிர்விடுத்ததிகிரி
மாறுதேரிடைநுழைந்திடுவவாளெழுவரைக்
கூறுகொண்டமுழைநின்றெழுகுலப்பறவைகள்
வேறுகூற்றமுழையிற்குடிபுகல்விழையவே. ருக

வேறு.

ஆடுபரிசாரிகைதொடங்குதொறடங்கார்
சேடிடைமுடித்தலைகள்வீழ்ந்துதமர்தேரி
னேடுருடடுப்பவொருநீயிருமெமைப்போ
லீடழியவேகலிரெனத்தடைசெய்தென்ன. ருஉ

வண்டுமுரல்வாவியுறைகஞ்சமனையாளைக்
கொண்டுதனிருக்கைசெல்சுடர்க்கொழுநனைப்பத்
திண்டிறலடங்கலர்சிரந்திருகியேந்தி
யண்டவெளியிற்சுழல்வசுற்றிவிடுமாழி. ருங

மீச்செல்வயவெங்கரிகளொன்றன்மிசையொன்றங்
கோச்சுகதைமாற்றுகதையொள்ளிழைமடச்செவ்
வாய்ச்சியர்கோலாட்டநிகர்வண்மையினைநோக்கி
யேச்சறுவிசும்பினிமையாதவர்வியப்பார். ருச

விழித்தவெகுளிக்கணிடனுடுதொறுமேவா
ரழித்திமையெனக்கருதியார்ப்பரெனவெள்கி
யொழித்துவலனேக்கினழல்சீற்றநனிகாட்டித்
தெழித்துவிறல்சாற்றியமரேற்பர்திதிபெற்றார். ருரு

வேறு.

வெங்கட்கரிகடிதுந்திடவிண்ணத்தெழுமவுண
ரங்கைப்பிடியெஃகத்துடனனேகின்றமைகாணு
நங்கட்கிடர்புரிவானிவணணுகுற்றனனென்று
வுங்கட்செறிவிண்ணோரிரிவுற்றுருளமஞ்சி. ருசா

தெவ்வட்டழல்படைவெய்யவர் விண்ணிற்செலவுந்தும்
கௌவைக்கரிபிளிறிக்கடமொழுகப்புவிவீழ்வ
வெவ்வப்படவலனேத்தெறுமிறையேவலினெழிலி
வெவ்விற்படைமாயற்கொருதுணையாய்வரல்வீழும். ருஎ

ஒருவன்றிறலவுணன்கதமுடனூக்கியபரிமா
பெருவிண்மிசையெய்திச்சுழல்காற்பட்டுழல்பெற்றி
வருவெங்கதிர்மான்றேர்விசையிற்றப்பியவாசி
தெருமந்தினங்காணுதவனூழிதந்தெனத்திகழும். ருஅ

வேறு.

துன்னுகுருதித்தசை வழுக்கிவிழுசூரர்
வெந்நிடைமதக்களிறுகுத்துவெண்மருப்பு
முன்னுறவுரீஇநிமிர்வமைந்தர்முலைபெற்ற
தென்மொனவரம்பையர்பருட்டையினிசைப்பார். ருகூ

அட்டழல்கழன்மறவராகமிசையெஃகம்
பட்டபுழைநின்றிழிவ்வாய்குருதிவெள்ள
மொட்டலரையானுயிர்குடிப்பலெனவொல்லை
யுட்டிகழ்மறக்கனல்வெளிப்படுவதொக்கும். சுo

கடுங்களிறுகைக்கதைசுழற்றியெறிகாற்றேர்க்
கொடிஞ்சியினிரைத்தகுருமாமணிகளுக்க
வடும்படைவலத்தினர்தெழித்தெழமதிப்பி
னெடுங்ககனமீனிரைநிலத்துகுவமானும். சுக

நீள்கொடிமிசைத்துகிலனைத்துநெருநெங்கோல்
வாளிகள்பொதிந்தனவசிதர்ந்துவியல்வானின்
மீளிகளதிர்ப்பினுயர்விண்மிசையதாருத்
தாளதிரவுக்கதழைபோன்றனபறப்ப. சுஉ

கைப்படையிழந்தவரெதிர்ந்தவர்கடாவு
மெய்ப்படுபெரும்படைபறித்தெதிர்விடுப்பா
ரெப்பொருளுமற்றழியுமேதிலர்கணல்கு
மப்பொருள்களோங்களினுமானமுடையார்போல். சுங

வீடினர்வயப்பொருநர்வீடினவிபங்கண்
மூடினநிலங்குருதிமூடினபிணங்கள்
கூடினகருங்கொடிகள்கூடினபருந்து
மாடினமகிழ்ந்தலகையாடினகவந்தம். சுச

எங்கணுநிணங்குடரிறைச்சிகொழுமூளை
யெங்கணுமுரிந்தசிலைவாள்பல்லமெஃக
மெங்கணுமிறுத்தகிடுகச்சுருள்கொடிஞ்சி
யெங்கணுமுடித்தலைநிமிர்ந்தனவிடங்கள். சுரு

பிணங்களொடுயர்ந்துவிழுபெற்றியருஞ்வீழ்தோட்
கணங்களொடுதண்டமும்விசித்ததடிவள்வார்
குணங்களொடுபல்லியொழுங்குடருமங்கேழ்
நிணங்களொடுபன்மணியுநீத்தறியலாகா. சுசு

மண்ணிடமெலிந்துபிணக்குவையின்வாளோ
னண்ணிடமெலிந்ததுடல்விட்டுறுநர்போழ்ந்து
விண்ணிடமெலிந்தவர்துன்னிமிடைவோரை
யெண்ணிடமெலிந்தனர்விசும்பினிமையாதார். சுஎ

மிடைந்துசமரின்னனம்விளைத்துழியிசைத்தேன்
குடைந்ததொடைவல்லவுணவீரர்வலிகுன்றி
யுடைந்தனர்நடுங்கினரொடுங்கினர்சிதர்ந்தா
ரிடைந்தனர்பெயர்ந்தனரிரிந்தனர்களெங்கும். சுஅ

கொச்சகக்கலிப்பா.

கள்ளவிழுமலர்வாவித்துவரைக்கோன்கடற்சேனை
மள்ளர்படைக்கல்லெறியான்வல்லாண்மைக்குடமுடைய
வுள்ளிருந்தஞண்டுகளிற்றனித்தனியேயிரிந்தோடி
நள்ளலான்பெருஞ்சேனைநகர்நோக்கிநடந்தனவால். சுகூ

கண்ணன்கணபதிமுதலியோரைவழிபடல்.

போர்தாங்குமறவீரர்பின்முடுக்கிப்போதராலும்
தார்தாங்கிமுதல்வாய்தற்கடைமன்னுதவளமதிக்
கூர்தாங்குமொருகோட்டுக்குஞ்சரப்புத்தேள்காணூஉச்
சூர்தாங்கிவருபடையைத்தொலைத்துழக்கிச்சவட்டினன். எ0

கண்ணனுமற்றினியென்னேசெயலென்றுகடுகச்சென்
றுண்ணமைந்தபாலடிசில்கனிவருக்கமுறுசுவைய
பண்ணியங்களெனைப்பலவுமமுதுசெயப்படைத்திறைஞ்ச
வண்ணல்வயப்பகட்டேந்தலத்தொழிலின்மகிழ்ந்திருந்தான். எக

இதுகண்டுமற்றிரண்டாங்கடைவைகுமிளந்தோன்ற
லெதுமைந்தன்வருமென்றுசிலைவாங்கியேற்றெழலு
மதுவொன்றுமலர்த்துளவோன்பூசனையான்மகிழ்விப்ப
வதுகண்டுமகிழ்ந்திருந்தானறுமுகப்பண்ணவனும். எஉ

இருவர்களும்விடையளிப்பவெழின்மூன்றாங்கடைநண்ணி
மருமலர்த்தார்க்கருங்கூந்தன்மலைமகளைக்கண்டிறைஞ்சித்
திருவருள்பெற்றினிதேகத்திகழ்நாலாங்கடைமேவு
முருகெழுவெஞ்சினவெள்ளேறுயர்த்தபிரான்கண்டனனால். எங

முந்தைநாண்மைநாகமுதுநாகத்தருந்தவஞ்செ
யிந்தநாரணற்கெம்மான்யானைவந்துடன்றாலு
மைந்துமிகுநாட்பின்கண்வாகைநீபெறுகென்னத்
தந்தவரம்பொய்யாமைப்பாதுகாத்தற்பொருட்டு. எச

பிறைநெடுஞ்சிலையேந்தியெதிர்நிற்பப்பெருந்திருமா
லனாதியாயனந்தமாயானந்தமாயொளியாய்
மனாதிகளுக்கெட்டாதவான்கருணைப்பரம்பொருளைத்
தனாதுவிழிகளிகூரக்கண்டெய்தித்தாழ்ந்தெழுந்தான். எரு

நாத்தழும்பப்புகழ்பாடிநளினமலர்க்கைகூப்பிச்
சோத்தெந்தாயெனச்சொல்லியிமையவர்க்கேயருள்சுரந்து
காத்தருளுங்கடனுடையாய்கண்ணேண்டாவவுணர்குலத்
தீத்தொழிலான்றனைவெல்லத்திருவருள்செயெனக்கென்றான். எசு

என்றிரந்துநனிவேண்டுநெடியோனையெதிர்நோக்கிக்
குன்றநெடுஞ்சிலைவல்லான்குறுமூரல்காட்டியெமை
வென்றன்றேவாணனைநீவிறல்கொள்வதெம்மோடு
மன்றபோர்க்கெழுகென்னமணிவண்ணனுளநடுங்கி. ௭௭

என்னருளிச்செய்தவாறெவ்வுயிர்க்குமெளியேற்கு
மன்னவனீநாயனொடுமொறுழைப்பதெனக்கழகோ
வுன்னடிக்கீழ்மெய்த்தொண்டுபூண்டுரிமைப்பணிசெய்வே
றன்னிடத்திலிவ்வாறோசாமீநின்றிருவருளே. ௭௮

எந்தையடியருச்சனையாலெதிர்ந்தாரைப்புறங்காண
மைந்துபெறும்யானின்னோடமரேற்கவல்லுவலோ
பந்தமுறுமுலகனைத்துந்தொழிற்படுத்துநின்னெதிர்நின்
றுய்ந்தவருமுளரேயோவுபநிடதத்தனிமுதலே. ௭௯

எண்ணிகந்தவண்டமுழுதொருநொடியிலெரிக்குதவுங்
கண்ணமைந்தநுதலாய்க்குக்கடையேனோரிலக்கன்றே
வண்ணமெலாம்யாங்காணநீநகைத்தமாத்திரையே
யண்ணலார்புரமூன்றுங்கூட்டோடேயழிந்தனவால். ௮௦

துரும்பொன்றிற்புத்தேளிர்தருக்கெல்லாந்தொலைவித்தாய்
கரும்பொன்றுசிலையானைநுதல்விழியாற்கனற்றினாய்
சுரும்பொன்றுமலர்ப்பாதப்பெருவிரலாற்சுடரிலங்கை
யிரும்பொன்றுமனத்தானையிடருழப்பக்கண்டனையால். ௮௧

நோனாதகூற்றுவனைநோன்றாளாலுயிருண்டாய்
தேனாடுமலரானைநகநுதியாற்சிரங்கொய்தாய்
மீனாமைபன்றிநரவெறிமடங்கலுலகளந்தான்
றானுமென்பிறவிகளுந்தண்டிக்கப்பட்டனவே. ௮௨

தக்கன்றன்வேள்வியைநீதரவந்ததனிவீரன்
புக்கன்றியழித்தநாளென்னோடும்புத்தேளிர்
நொக்கன்றுபட்டபாடெடுத்தியம்பிற்சொல்லளவின்
மிக்கன்றாலுனக்கிவையும்விளையாடற்செய்கையே. ௮௩

அற்றமுறவெகுண்டுவருமடற்கங்கைவீறடக்குங்
கற்றைநெடுஞ்சடையாய்மற்றெனைமுனியக்கருதினையேற்
சற்றுநீமுகநிமிர்த்துநோக்கினதுசாலாதோ
வெற்றிமலர்த்திருக்கரத்துப்படைக்கலமும்வேண்டுமோ. ௮௪

வடிவாளிவிடையேறுமனைவியெனநினக்குறுப்பா
மடியேனையெதிர்ப்பதுநின்னருட்பெருமைக்கொல்லுவதோ
குடியோடுமெனையடிமைகொண்டாயின்றெனக்கிரங்காய்
கடியாழிவிடமயின்றகண்டாநின்னடிபோற்றி. ௮௫

கண்ணனும்கடவுளும்கைகலத்தல்.

என்றென்றுபலமுறையுமிரந்திரந்துதொழுதிறைஞ்சுங்
குன்றெடுத்தகுடையானுக்கெங்கோமானிதுகூறு
மன்றநீவெருவலைநின்மனக்கவலையொழிகண்டா
யன்றுனக்குமைநாகத்தளித்தவரமறந்தனையோ. ௮௬

நின்வரவுவாணனுக்குமுன்னரேநிகழ்த்தினம்யா
மன்னவனையினிநீவென்றடல்வாகைபுனைகிற்பாய்
மின்னிமைக்குமணிமார்பவிசையினொடுபுரிவெம்போர்
முன்னெமக்குமுருகவேள்விளையாட்டிற்சிறந்ததால். ௮௭

அம்முறையேகணப்பொழுதுநின்னோடமர்புரிகே
னிம்முறைகண்டுலகும்பர்மகிழ்வுறுகவிதுவன்றித்
தெம்மரபிற்செய்கில்லேமஞ்சாதியெனத்தேற்றிக்
கைம்முகத்திற்பிடித்திருந்தசார்முகத்தைவணக்கினன். ௮௮

உய்ந்தேனெம்பெருமானேயருளாயென்றுரைத்துரைத்து
மந்தாரமணங்கமழுமலரடிகடொழுதிசைந்து
பைந்தாமநறுந்துளவப்பண்ணவனும்பகைமுருக்குஞ்
சிந்தாதவிறற்சார்ங்கச்சிலைவாங்கிநாணெறிந்தான். ௮௯

கலிநிலைத்துறை.

பவளவெற்பொடுநீலவெற்பெதிர்ந்தெனப்பரூஉக்கை
கவளமாக்களிறட்டவரிருவருங்கடுகித்
துவளவார்சிலைவாங்கினர்நாணெறிசும்மை
திவளலுற்றமூவுலகமுஞ்செவிடுறப்பொதிந்த. ௯0

மண்டுமோதையின்மற்றவர்சினக்கனல்புறநீர்
கொண்டவிப்பவான்வழிதிறந்தாலெனக்குலையா
வண்டம்விண்டதுபுடவியும்விண்டதப்பெருநீ
ருண்டல்வேட்கையினுணங்கிவாய்பிளந்தமையொப்ப. ௯௧

சிலையினொலிக்கிளர்ச்சியாற்றிண்புவியதிர்வுற்
றலையுமோதையினாழிமாவுடமரம்பறவை
பலவுந்தத்தமுண்மோதுபுதெளிதரப்பயிற்றுந்
தலைவரெப்படியப்படியுலகெனுந்தகுதி. ௯௨

மூள்சினத்துடனடுத்துழிமுதல்வனென்றறிந்து
மீளநோக்கியாங்கெம்பிரான்சரணமுன்வீழ
நீள்பெருந்தடங்குனிவரிச்சிலையிடைநெடியோன்
வாளியொன்றுதொட்டேயினனருச்சனைமாண்பின். ௯௩

சத்திசத்திமாறாகியவிருதிறத்தவரும்
தொத்தழற்கணைதூண்டினர்மூண்டதுபெரும்போர்
மைத்தமாநிலமயிர்த்ததுபனிவிசும்பிறுத்தார்
சித்தர்சாரணரிமையவரியக்கர்கந்தருவர். ௯௪

புட்டில்வீக்கியகரத்திடைப்பொருசிலைகுழையத்
தொட்டவாளிகளிறுதிநாண்முகிலெனச்சொரிவா
ரட்டதிக்கையுமடைப்பர்கள்கணத்தவைமாற்றி
முட்டவெங்கணைமீளவுமுடுக்குவர்தொலைப்பார். ௯௫

கடவுள்வான்படையெண்ணிலவழங்குவர்கடுநோய்
படரும்வெப்பொடுகுளிர்ப்பிணிபடைத்தெதிர்விடுப்பா
ருடலுமற்றவையொன்றினொன்றழிவுறக்காண்பா
ரடைவினின்னணம்விளைத்தனரற்புதப்பூசல். ௯௬

மூவருந்தொழுமுதல்வனே முனைந்தனனினியென்
னாவதோவென முனிவரரஞ்சினரகில
தேவரஞ்சினர்பூதங்களஞ்சினதேவர்
கோவுமஞ்சினன்றிருவுளக்குறிப்பினையுணரார். ௯௭

இளிவில்வெஞ்சமரின்னணநெடும்பொழுதாற்று
மளவின்மற்றினியாற்றிலேனடியனேனென்றா
முளரிநோக்கினான் வணங்கலுமுறுவல்செய்தடியார்க்
கெளியனென்பதுவிளக்கினனென்னையாளுடையான். ௯௮

அடிகளேவைச்சென்றாளனவிறகுமண்சுமந்து
மடிபொறுத்துமோரரிவைதூதாற்றியும்வெள்கா
தடியரெண்ணமேமுடிப்பதுவிரதமாக்கொண்ட
வடிகள்வாகையிக்கண்ணனுக்களித்ததோர்வியப்போ. ௯௯

தம்பிரான்பெருங்கருணையின்சால்பினைநோக்கி
யும்பரார்த்தவருவணவேற்றிறைவனுமாவ
வெம்பிரானருளென்னிடையிருந்தவாறென்னென்
றம்பிகாபதியடிதொழுதானந்தமுற்றான். ௧௦௦

கண்ணனும்வாணனும்கைகலத்தல்.

துண்டவெண்பிறைக்கண்ணியோன்போர்வினைதுறப்பக்
கண்டுவெஞ்சினந்தலைக்கொளீஇக்கனைகழலவுண
னண்டம்விண்டெனவார்த்தனன்மாயனையடுத்தான்
மண்டுதீச்சிலைவளைத்தனர்விளைத்தனர்பூசல். ௧௦௧

நூழில்வன்படையிருவருநெடுமொழிநுவல்வா
பாழிவன்புயம்புடைத்தெழூஉவஞ்சினம்புகர்வா
ரூழியிற்றனல்விழியுகச்சீறுவருலகைப்
பூழியாக்குவர்சாரிகைசுற்றுவர்பொருவார். ௧௦௨

இனையமண்டமர்நாட்பிடையெம்பிரானருள்சேர்
வனைமலர்த்துழாய்வானவன்மதுகைமீக்கொண்டு
முனைவரிச்சிலைவாளிதேர்முடிகளையிறுத்துத்
தனியனாக்கினன்சலம்புரியவுணருக்கிறையை. ௧௦௩

கண்ணன்கண்ணுதல்கட்டளைவழிச்செயல்.

கருப்புத்துண்டெனநூற்றுப்பத்தடுக்கியகனகப்
பொருப்புத்தோள்களையரிவுழிமதனுடல்பொடித்த
நெருப்புக்கண்ணினானெதிரெழுந்தருளிநீள்கருமை
மருப்புக்குஞ்சரங்காத்தவன்மேற்செலவழங்கி. ௧௦௪

கண்ணனேயிதுகேட்டியிக்கனைகழலவுண
னெண்ணல்வாய்மையுன்போலெமக்கன்புமிக்குடையா
னெண்ணம்வாய்ப்பநம்பூசையினமைந்ததோளிரண்டும்
வண்ணவாண்மலர்வதனமுமரிதலோம்பென்றான். ௧௦௫

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

என்றவாய்மொழிகேட்டலுந்தொழுதெழுந்தியாதவர்குலத்தோன்றன்
மன்றமாமறைமுழுவதுமுழுவதுமுருத்திரனெனுமாற்றா
லொன்றுமன்பொடுமுன்னடியருச்சனையுஞற்றினேனெமையெல்லா
நன்றுபூசனையியற்றியோனாதலினாற்கரம்விடுத்தேனால். ௧௦௬

அடியனேன்பிழையாவையும்பொறுத்தருளையனேயெனத்தாழ்ந்து
கொடியின்மேல்விடையுயர்த்தவனுணையிற்குடவளைக்குடங்கையான்
மடிவில்வாணனைக்கேண்மைகொண்டாங்கவன்மகளைத்தன்மகனின்ற
விடலைசேர்வுறமணம்புணர்த்துடன்கொண்டுமீண்டனன்றன்மூதூர்.

வாணன்முத்திநிலையடைதல்.

ஐயிரண்டினிலுறழ்தருமும்முறையமரகத்துடைந்தெள்ள
லெய்தினுனெனப்பட்டவன்றனைக்கொண்டேயிவன்செருக்கறக்கண்டான்
செய்யச்செய்திடாதொழியவேறென்றனைச்செய்யவும்வல்லோனும்
மையராவணிபண்ணவன்பெருமையையாவரேபகர்கிற்பார். க0அ

கருவிமாமுகின்மேனியோனகன்றபின்கனங்குழையுமைபாக
மருவுநாயகன்வாணனைநோக்கிநின்மணிப்புயக்கண்டேதி
யொருவினுய்கொலாமெனக்குறுநகைமுகிழ்த்துரைத்தலுமுடிசாய்த்துப்
பெருமமற்றினிவீடுபேறளித்தியென்றிரந்தனன்பெருநேசன். க0கூ

முத்திவேண்டுமேற்காஞ்சியினெய்திநீமுன்னைமைநிநீஇப்போற்று
மத்தலத்திடைப்பெறுதியென்றருள்புரிந்தகன்றனனெங்கோமான்
பத்திமேதகுவாணனுங்காஞ்சியிற்படர்ந்துதான்ஞெழுதேத்து
நித்தனுருளாற்கணத்தலைமைபெற்றனனந்நிலைபெற்றுன். கக0

வரிச்சிறைச்சுரும்புளர்தரக்குவிமுகைமுறுக்குடைந்தலர்வாசம்
விரித்தநெட்டிதழ்ப்பங்கயப்பொய்கைசூழ்வியத்தகுவாணீச
மருச்சனைக்குரிமரபினிற்போற்றிசெயடியவர்கருத்தீமை
நரிச்சுநீங்கமெய்ப்பெருநலக்கிழமைவீடெய்துவர்நமரங்காள். ககக

வாணீசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கசசுக.

திருவோணகாந்தன்றளிப்படலம்.

கலிவிருத்தம்.

பேணவல்லார்பிறவிதீர்த்தருள்
வாணநாதமரபுசொற்றனம்
யாணர்வண்மைபெறுமிதன்குணக்
கோணகாந்தன்றளியுரைத்துமால். க

மருவலார்தாழ்வாணன்றன்னுடைப்
பொருவில்சேனைத்தலைமைபூண்டவர்
தருமவாற்றினின்றொழுகுதானவ
ரிருவரோணன்காந்தனென்றுளார். உ

வன்புபூண்டமனவகப்படா
வென்புபூண்டவிறைவர்தம்மடிக்
கன்புபூண்டுவறிவின்மேலவர்
துன்புபூண்டதொடர்புநீக்குவார். ௩

ஓங்குகாஞ்சியூரைநண்ணினர்
தேங்குதெண்ணீர்த்தீர்த்தந்தொட்டனர்
பாங்கிலிங்கம்பதிட்டைசெய்தனை
ராங்கணன்பிற்பூசையாற்றினர். ச

ஆற்றுமிருவரன்புநோக்கிய
நீற்றுமேனிநிமலனம்மையோ
டேற்றின்மேலாற்காட்சியீதலும்
போற்றியின்பப்புணரிமூழ்கினர். ரு

கரையில்காதல்கைமிகத்தொழும்
புரையிலார்க்குப்பொங்குவெள்ளிமால்
வரையினாரின்னருள்வழங்கிநீ
ருரைமின்வேட்டவாமென்றோதினர். சு

கைகள்கூப்பிக்கண்கணீருகச்
செய்யபாதந்தொழுதுசெப்புவா
ரையனேமெய்யறிவுதந்தெமை
யுய்யக்கோடியுனக்கடைக்கலம். எ

இனையதீர்த்தமாடியெம்பெயர்
புனையிலிங்கம்போற்றப்பெற்றவர்
நினைவுமுற்றுநிரப்பியீண்டுநீ
யெனையநாளுமினிதுவைகுவாய். அ

என்றுபோற்றுமிருவர்க்கன்னவை
மன்றவொற்றைமாவினீழலா
னன்றுமங்கணல்கிவைகினா
னன்றுதொட்டஃதற்புதத்தலம். கூ

திருவோணகாந்தன்றளிப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கசஎo

சலந்தரீசப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

ஓணனார்க்கரியவரோணகாந்தன்றளி
நீணகர்மேன்மையைத்தெரிந்தவாநிகழ்த்தினா
மாணமர்காட்சிசான்மற்றதன்வடதிசைப்
பேணியசலந்தரீசத்தியல்பேசுவாம். க

சலந்தரன்வரம்பெற்றுப்போருக்கெழுதல்.

சலத்திடைத்தோன்றியோன்சலந்தரப்பெயரிய
குலப்புகழ்த்தானவன்கோநகர்க்காஞ்சியி
னலச்சிவலிங்கமொன்றமைத்துநாளுந்தொழு
துலப்பருமெய்த்தவமுனாற்றினனவ்வுழி. உ

காட்சிதந்தருளியகண்ணகன்மாநிழ
லாட்சியார்த்தொழுதெழுந்தாண்மையுமதுகையு
மாட்சிசாலிறைமையுமாற்றலர்த்தெறுதலு
மீட்சியின்றருளெனவேண்டினான்பின்னரும் ஙு

நின்னலாலென்னுயிர்நீப்பவரின்மையுந்
துன்னருமுத்தியிச்சூழலிற்பெறுவதும்
பின்னல்வார்சடையினாயருளெனப்பெற்றுமீண்
டன்னவாறுலகுதன்னடிப்படுத்தாளுநாள். ச

இந்திரன் முதலியவெண்டிசைக்கிறைவரைக்
கந்தமென்மலர் மிசைக்கடவுளை வென்றுபின்
பைந்துழாய்க்குரிசிலைப்பன்னகப்பகையொடும்
வெந்திறனாகபாசத்தினால்வீக்கினான். ௫

சிறையிடைமாட்டினன்சிற்சிலநாட்செல
வறைகழல்வானவர்வணங்கிநின்றவுணனைக்
குறையிரந்தனையனைக்கொண்டுமீண்டேகினார்
பிறையெயிற்றவுணனும்பெருமிதத்துறையுநாள். ௬

இறுதிநாளடுத்தலினேறுழ்விடைப்பாகனைத்
தெறுவலென்றெழுந்துயர்கயிலையைச்சேறலு
முறுதுயர்ச்சிறையிடையுறையுநாளன்னவன்
பெறுமனைக்கிழத்தியைக்காமுறும்பின்னைகோன். ௭

திருமால்பிருந்தையின்சாம்பரிற்புரளல்.

ஆற்றமீதென்றறிந்தம்மனைப்புறமுறத்
தூற்றபூம்பொழிலிடைத்தூத்தவவடிவுகொண்
டுற்றிடக்கண்டனளொசியிடைப்பணைமுலை
முற்றிழைதாழ்ந்துமுன்னின்றிதுவினவுவாள். ௮

நற்றவத்தடிகளீர்நதிமுடிக்கடவுளைச்
செற்றுமீள்வேனெனச்சென்றவெங்கொழுநர்பால்
வெற்றியோதோல்வியோவிளைவதொன்றறிகிலே
னெற்றிதுமொழிமினீரென்னமால்கூறுவான். ௯

அஞ்சுபூதங்களுமவற்றிடைப்பொருள்களும்
பஞ்சுதீப்பட்டதுபடவிழிதிறந்தருள்
செஞ்சடைப்பகவன்முன்சென்றெவருய்ந்துளார்
புஞ்சவெள்வளையினையறிந்திலைபோலுநீ. ௧௦

அன்னபேராளனோடமரினுக்கேகலாற்
பன்னகப்படமெனப்பரந்தகலல்குலா
யுன்னுடைக்கேள்வனும்பொன்றுவானுண்மைகா
ணென்னவாய்விண்டனன்வளைகரந்தெய்தினான். ௧௧

கலிநிலைத்துறை.

அந்தவெல்லையோர்தானவன்பங்கிசோர்ந்தலையச்
சந்தமென்புயத்துகிலுடைசழங்கவேரொழுக
வுந்துநெட்டுயிர்ப்பெறியமெய்நடுக்குறவோடி
வந்துதோன்றிவாய்புலரநின்றின்னதுவகுப்பான். ௧௨

இறைவிநின்றனிக்கொழுநனீள்கயிலையினிளவண்
டறைகடுக்கையான்றனையறைகூவுமவ்வளவி
னறைமலர்க்கரக்கணிச்சியனேக்கினனமது
நிறைகடற்பெரும்படையெலாநீற்றினனதன்பின். ௧௩

பரிதிமண்டிலமாயிரமெனக்கதிர்பரப்பு
முருவவாழியொன்றாக்கினனொளிருமப்படையாற்
பொருவலித்திறற்சலந்தரன்பொன்றினனதனை
வெருவிநீளிடைக்கண்டுமீண்டித்தலைப்போந்தேன். ௧௪

என்றவாய்மொழிகேட்டலுங்கொம்பரையிழந்த
மன்றலங்கொடிபோற்கிடந்தலமருமயிலே
வென்றிவேள்படைதுளைத்திடமெலிவுறுநெடியோன்
சென்றுபற்றினன்றிருந்திழைகுற்றத்திதுசெப்பும். கரு

மன்னுகேள்வனையிழந்துளேன்வைகன்மூன்றகன்ற
பின்னைநினைமணக்கிழத்தியேயாகுவல்பெரும
வென்னவஞ்சித்துநீங்கினன்மனையகத்தெய்தி
வன்னிபுக்குயிர்விடுத்தனள்கற்பினில்வழாதாள். கசு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஏம்பலோடுறையுமாயனித்திறமுணர்ந்தானந்தச்
சாம்பரிற்புரண்டுபேய்க்கோட்பட்டவர்தம்மின்மாழ்கித்
தேம்பினனனையாள்செல்வத்திருவுருவுளத்திற்றட்டி
யோம்பினனென்செய்வானங்குழிதந்தானெடுநாளிப்பால். கஎ

பெருமான்திருவருட்பிரசாதங்கொடுத்தல்.

இமையவர்பலருமாலையயங்கணுந்தேடிக்காணா
சிமையநீள்கயிலைநண்ணித்திருவடிவணங்கிக்கூற
வமையெனத்திரண்டுநீண்டுபசந்தணியிலங்குபொற்றோ
ளுமையொருபாகத்தெந்தைகோனவன்றிறமுணர்ந்துசொல்லும். கஅ

சொற்பயில்கமலைகேள்வன்சலந்தரன்றுணைவியாய
கற்பினிற்சிறந்தகாமர்விருந்தையைக்காமுற்றன்னுள்
பொற்புருவிழந்தவீமப்பொடியிடைக்கிடக்கின்றானல்
விற்பொலிவிசும்பின்வாழ்க்கைவிண்ணவர்கேண்மின்னென்னு. கசு

பாயபல்லுலகுமீன்றபணிவரைப்பிராட்டிமேனிச்
சேயொளிக்கலவைச்சாந்தின்முக்கணேத்திரட்டிநல்க
நீயிரிங்கிதனையந்தநீற்றிடைவித்துவீரே
மாயவன்மயக்கந்தீர்க்குமரங்கண்மூன்றுளவாமென்றான். உ0

விண்ணவரதனையேற்றுவிடைகொடுவணங்கிப்போந்து
தண்ணனைகவிருந்தைவீந்தசாம்பரின்வித்தலோடு
மண்ணலந்துளவமய்கேழ்நெல்லிநாகத்திமூன்றுங்
கண்ணெதிர்தோன்றக்கண்டான்கரியவன்மகிழ்ச்சிகொண்டான். உக

மென்றுணர்த்துளவந்தன்னைவிருந்தையாத்துணிந்துபுல்லிக்
குன்றருங்கழுமலங்கிக்குலவுதன்னிருக்கைசார்ந்தான்
றுன்றுபூந்துழாய்முன்மூன்றுந்துவாதசிவழுத்தப்பெற்றோர்க்
கன்றினர்க்கடந்தமாயோனருள்சுரக்குமன்றே. உஉ

சலந்தரன்முத்தியிற்கலத்தல்.

தடவரையிகந்ததிண்டோட்சலந்தரன்கயிலைவெற்பில்
விடமிடற்றிறையால்வீந்துவியனகர்க்காஞ்சிவைப்பிற்
படரொளிப்பிழம்பாய்த்தோன்றிப்பரசுதன்னிலிங்கமூர்த்தத்
துடனுறக்கலந்தானன்னோன்பெருமையாருரைக்கவல்லார். உங

சலந்தரீசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கசகூங.

திருமாற்பேற்றுப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வணங்குநர்க்கிருமைப்பேறுமேன்மையின்வழங்கியெங்கோ
னிணங்கியசலந்தரீசவரவினையெடுத்துச்சொற்று
[illegible]றாடல்பாடன்முழக்கறுவணிநீள்வீதிக்
கணங்கெழுதிருமாற்பேற்றுக்கடிநகர்ப்பெருமைசொல்வாம். ௧

திருமால்சக்கரம்பெறவர்ச்சித்தல்.

குவலயங்காவல்பூண்டகுபனெனுமரசற்காகச்
சிவனெறித்ததீசியோடுஞ்செருச்செய்நாள்விடுத்தவாழி
தவமுனிவயிரயாக்கைதாக்கிவாய்மடிதலோடுங்
கவலுறுமனத்தனாகிக்கடுஞ்சமர்துறந்தமாயோன். ௨

இனிப்படைபெறுவதெவ்வாறென்றுவாளவுணர்க்காற்றுப்
பனிப்புடையிமையோர்தம்மையுசாவினன்படைகட்கெல்லாந்
தனிப்பெருங்குருவாமீசன்சலந்தரன்மடியக்கண்ட
சினப்பொறிசிதறுந்தீவாய்த்திகிரியொன்றுளதென்றோர்ந்தான். ௩

உவகைமீதூரவிண்ணோர்க்கோதினனிதனைவேண்டிச்
சிவனடிபரசினின்னேதிருவருள்சுரக்குமென்னு
மவரொடும்போந்துகாஞ்சியணிநகர்வடமேல்பாங்கர்த்
துவரிதழுமையாள்போற்றுஞ்சுடரொளியிலிங்கங்கண்டான். ௪

சேயிழைக்கவுரிசெங்கைதைவரச்சிவந்துதோன்றிப்
பாயொளிப்பவளக்குன்றமெனப்பெயர்படைத்துநான்கா
மாயிரமுகங்களங்கணருந்தவர்வழுத்தவைகு
நாயனார்தமைக்கண்டோறுநாரணனிறும்பூதுற்றான். ௫

நிறைபெருங்காதல்கூரவாயிடைநியமம்பூண்டு
மிறைவழியிகந்துபாசுபதத்தனிவிரதமாற்றி
முறைபெறும்வெண்ணீறங்கமுழுவதும்பொதிந்துபாசப்
பொறைதவிர்த்தருளுமும்மைப்புண்டரநுதலிற்றீட்டி. ௬

கண்டிகைபாலபூண்டுகதிரொளிபரப்புமாழித்
திண்படைபெறுதல்வேண்டிச்சங்கற்பஞ்செய்துகொண்டு
விண்டலத்திமையோரங்கண்வேண்டுவவெடுத்துநல்க
வண்டுபேரன்பாற்பூசைவிதியுளிவழாதுசெய்வான். ௭

மாயிருங்கமலப்போதுகைக்கொண்டுமாட்சிசான்ற
வாயிரந்திருநாமத்தாணித்தலுமருச்சித்தேத்தி
மேயினன்றிருமாலன்னோன்பத்தியின்விளைவுகாண்பான்
ஆயிரமறைகடேறாப்பரம்பொருளொருநாளங்கண். ௮

வேறு.

நறைவாருமிதழ்த்துறுத்தசெழும்பொகுட்டுநளினமாயிரத்திலொன்று
மறைவாகத்திருவுள்ளம்வைத்தருளக்கருவிமுகில்வாட்டுமேனி
யிறையோனும்பண்டுபோற்பவன்முதலாமாயிரம்பேரெடுத்துக்கூறிக்
குறையாதபேரன்பிற்பதுமமலர்கொடுபூசைபுரியுமெல்லை.

பன்னுமொருதிருப்பெயர்க்குநறுங்கமலங்காணாமைப்பதைத்துநோக்கி
யென்னினிமேற்செயலென்றுதெரிந்துணர்ந்துதனதுவிழியிடந்துபெம்மான்
பொன்மலர்த்தாண்மிசைச்சாத்திக்களிகூர்ந்தானுறுப்பினையுங்கொடுப்பதல்லான்
மென்மையுறத்தாங்கொண்டவிரதத்தைவிடுவர்களோகொள்கைமேலோர்.

சிவபெருமான்சக்கரங்கொடுத்தருள்செய்தல்.

பாறிலகுமழுப்படையோன்மாயவன்றனன்பினெருப்பாடுநோக்கி
மாறிலாப்பெருங்கருணையூற்றெடுப்பச்செழுஞ்சோதிமலரப்பாங்கர்
நூறியோசனையளவுமெரிகொளுந்தநோக்கரும்பேருருவுதாங்கி
யீறிலாக்கதிரிரவிமண்டிலநின்றிழிந்தெதிரேகாட்சியீந்தான்.

இறைவரவுகண்டஞ்சிப்புடைமருவுமிமையவரோட்டெடுப்பநோக்கி
நிறையுவகைதலைசிறப்பத்திருநெடுமாலிருநிலத்தின்வீழ்ந்துதாழ்ந்து
முறைமையினலட்டாங்கபஞ்சாங்கமுறவணங்கிமுடிகையேற
மறைமொழியிற்றுதித்தாடியானந்தவிழிமாரிவெள்ளத்தாழ்ந்தான்.

ஆங்கவனையெதிர்நோக்கிநின்பூசைக்ககமகிழ்ந்தேமுனக்கிஞ்ஞான்று
தேங்கமலவிழியளித்தேம்பதுமாக்கனெனும்பெயரிற்றிகழ்வாயிவ்வூர்
பாங்குபெறுதிருமாற்பேறெனப்பொலிகவென்றருளிப்பானுகோடி
தாங்குகதிர்ச்சுதரிசனப்பெயராழித்தனிப்படையுமுதவியெங்கோன்.

வெல்லரியசெறுநரையுமிப்படையால்வெல்வாயாலீண்டுநின்னாற்
சொல்லியபேராயிரங்கொண்டெமைப்பூசைபுரிவார்க்குத்துகடீர்த்தென்று
மெல்லையிலாவீடளிப்பேமிங்கிவையன்றியுந்தீண்டச்சிவந்தாராதிப்
பல்குபெயர்கொண்டெம்மைத்தொழுவோருமுத்தியினிற்படர்வாருண்மை.

தணிவொன்றுமனமுடையார்புகழ்தீண்டச்சிவந்தபிரான்சாதரூபர்
மணிகண்டர்தயாநிதியார்பவளமலையார்வாட்டந்தவிர்த்தார்பாசப்
பிணிவிண்டசாகிசனர்திருமாற்குப்பேறளித்தாரெனும்பேரெட்டு
மணிகொண்டவாயிரம்பேர்க்கொப்பனவாமறிமதியென்றருளிச்செய்தான்.

நம்பிரான்வாய்மலர்ந்தமொழிகேட்டுப்புண்டரிகநயனத்தோன்றல்
செம்பதுமத்தாளிறைஞ்சிச்சென்னிமிசைக்கரங்கூப்பிச்செங்நின்றேத்தி
யெம்பிரானிங்ஙகருட்கணப்பொழுதுவதிந்தவர்க்குமிறவாவாழ்க்கை
யும்பர்வீடளித்தருளாயின்னுமொருவரமடியேற்குதவாயென்று.

வள்ளலேயென்பூசைகொண்டருளுமிவ்விலிங்கம்வணங்கப்பெற்றோர்
பள்ளநீர்வரைப்பினுளசிவலிங்கமெவ்வெவையும்பணிந்தபேறு
கொள்ளவருளெனவேண்டவேண்டுவார்வேண்டியதேகொடுக்குமெங்கோ
னெள்ளருஞ்சீர்நெடியோனுக்கவையனைத்துமருள்செய்தவ்விலிங்கத்துற்றான்.

கொழிக்குமணித்தடந்திரைநீரிலஞ்சிதொறுமினவாளைகுதித்துப்பாயச்
செழிக்கும்வளம்பொழிற்காஞ்சிப்பலதளியுண்மேதகையதிருமாற்பேற்றின்
வழிச்செலவினொருபோதுவதிந்தவருமாறுதபிறவிப்பாச
மொழிப்பரெனிலெஞ்ஞான்றுமங்குறைவோர்தமக்கினியென்னுரைக்குமாறே.

திருமாற்பேற்றுப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௫௧௧.

பரசிராமீச்சரப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுழிபாடுபடுமுந்திமலைமகளும்யோகியருந்துழாயினானும்
வழிபாடுசெயவைகுமணிகண்டர்மாற்பேறுவகுத்தாம்பண்கள்
கொழிபாடற்சுரும்பினஞ்சூழ்மருப்பொதும்பர்மாற்பேற்றின்குணபால்வேந்தர்
பழிபாடிக்கொலைசெய்தோன்பரசிராமீச்சரத்தின்பான்மைசொல்வாம்.

இரேணுகைகொலையுண்டெழுதல்.

சிவம்பழுத்த[illegible]குமுனியிடுஞ்சா[illegible]த்தொடர்ச்சியினாற்றிருமான்முன்னாட்
டவம்பழுத்தாலனையசமதக்கினிமெய்யாடிரேணுகைக்குத்தநயனாகி
யவம்பழுத்தகுறும்பெறியுமிராமனெனவைகுறுநாளன்னைபாலோர்
—ழுத்ததீங்குணர்ந்துதன்றாதைதனையேவனாடித்தேறி.

தாதைமொழிகடவாமைதருமமெனத்தனையீன்றுவளர்த்ததாயை
யேதமுறக்கொலைசெய்துமுனியருளான்மீண்டுய்யவெழுப்பிநின்றான்
மேதகையமுனிமகிழ்ந்துவெகுளிதனையறவிடுத்துச்சமாதிமேவும்
போதவனைவெகுண்டெய்திக்காத்தவீரியன்கோறல்புரிந்தான்மன்னோ.

பரசுராமன்தவமுஞற்றல்.

மிடல்படைத்தகிராடிண்டோளிராமனதுநோக்கிநெடுவெகுளிமீக்கொண்
டடல்படைத்தவயவேந்தர்குலமுழுதுமிறுப்பேனென்றார்த்துப்பொங்கிக்
கடல்படைத்தவிடமயின்றோனருள்வேண்டிவிரைந்தெய்திக்கலந்தார்தங்க
ளுடல்படைத்தபேறெய்துங்காஞ்சியினோரிலிங்கமமைத்தருச்சித்தேத்தி.

ஆற்றரியதவமாற்றியைம்புலனுமகத்தடக்கியமர்ந்தானாகக்
கீற்றிளவெண்பிறைக்குழவிதவழுநெடுஞ்சடிலமுடிக்கிழவோனந்நாண்
மாற்றரும்பேரருட்கருணைகூர்ந்தருளியவனன்பின்வாய்மைகாண்பான்
றேற்றமுறுமறைதேறாத்திருவடிகணிலந்தோயவருகின்றானால்.

பெருமான்புலைவேடங்கொள்ளல்.

கலிவிருத்தம்.

மால்வரையீன்றவயங்கிழைமாது
நூல்வரைமார்புடைநோன்றகைமாவும்
வேல்வலனேந்தியவித்தகனுந்தன்
போல்வடிவந்தழுவிப்புடைநண்ண. ௬

நான்மறைவள்ளுகிர்நாய்புறஞ்சூழக்
கான்மலர்சேர்த்தசெருப்பெழில்காட்ட
வூன்மலிகாழகமீதிலுறுத்த
தோன்மலிகச்சணிதோன்றிவிளங்க. ௭

ஏரியல்கொண்டசுவன்மிசையிட்ட
வாரினனுட்குநடையினன்மாணச்
சீரியல்சோக்கொலைசெய்புலையன்போ
லாரிருண்மைத்தனமேனியனாகி. ௮

வெங்கதிருச்சியின்மேவியகாலை
யங்கலுழ்பூம்புனலாற்றிடையெய்திப்
பங்கமில்செய்வினைபான்மைதொடங்கும்
புங்கவமாதவன்றன்னெதிர்போந்தான். ௯

பெருமானும்பரசுராமனும்வாதம்புரிதல்.

கொட்குமனத்தையொருக்கியகொள்கை
வட்குறவைம்பொறிவாட்டுமிராமன்
கட்கமழ்கின்றகளிப்பினனாகித்
துட்கெனநேர்வருசோதியைநோக்கா. ௧௦

வாய்திறவாதுமலர்க்கையசைப்பிற்
சேயிடையேகெனச்செப்பலுமுக்க
ணாயகனண்மையினண்ணினன்போபோ
நீயெனவிள்ளவுநீங்கலனாகி. ௧௧

வேறு.

மாயனொடுநான்முகன்மனக்குநனிசேயோ
னாயவிறைசாலவணிமைக்கணுறலோடுந்
தூயமுனிசீற்றமொடுசொல்லுமறவாய்மை
போயபசுவூனுகரிழிந்தபுலையாநீ. கஉ

தருக்குறுவதென்னையிதுதண்டமதுசெய்வா
ரொருத்தரிவணில்லையெனவுன்னினைகொலென்றான்
மருத்துணநெடுஞ்சடைமறைத்துவருபெம்மா
னருத்தமறைநாய்கடமையேயினனவன்பால். கங

மகாற்றவடிவேற்கடவுள்கோளிபமுகத்தோ
னுற்றெழுவெகுட்சியரினோடியிருகையும்
பற்றினர்கணாய்புடைவளைப்பவிருபாலர்
வெற்றியுறுகைப்படுவிழுத்தவனைநோக்கி. கச

கலிநிலைத்துறை.

அந்தோபாவமையமிரக்கும்பார்ப்பானீ
நொந்தாய்போலுமென்றுநுவன்றங்கிமெய்ப்புத்
தந்தாள்வெவ்வாய்நாயைவிலக்கத்தவநோன்பி
னந்தாவாய்மையிராமனுநம்மான்முகநோக்கி. கரு

வேறு.

எனைப்புடையுற்றாய்தீண்டுவதென்னீதறனன்றா
லுனக்கிதுபாவங்காணெனவெங்கோனுறுபாவ
நினக்குளதோசொலெனக்குளதோநீதான்யாரே
யெனக்கொருகேள்போற்றோன்றிடுகின்றாயெனவன்னோன். கசு

என்னிதுசொற்றனையான்சமதக்கினியென்பான்ற
னன்மகனாகுவனீபுலையோனெனைநாணாமே
யுன்னுறவாகவுரைத்ததுநன்றெனவொப்பில்லான்
மன்னியசீர்ச்சமதக்கினிதன்மகனீயேயோ. கஎ

கழியவெனக்குறவாயினையையமிலைக்கண்டா
யிழிவறநின்னையளித்தவிரேணுகையென்பாளொன்
பழுதறுசீர்மனையாட்கினியாளாம்பரிசாலே
விழுமியநீயுமெனக்கினியாய்காணெனவிண்டான். கஅ

இராமனெருப்பெழநோக்கிவெகுண்டனனெல்லாரும்
பராவுறுவேதியனென்னெதிர்பார்த்திதுசொற்றாய்க்கு
விராவியதண்டமுனக்கரிவிக்குமதேயன்றித்
தராதலமேற்பிறிதில்லெனலோடுந்தலைவன்றான். ககூ

யாவருமச்சுறுதாய்சொலையேன்றுசெய்மாபாவி
யோவிலருட்குணமொன்றிலையென்புடைவல்லாயே
னாவாவாய்சிரமும்மரிவாயினிநாணாய்கே
ளோவறுகேளிர்தமைத்தழுவாதவராருள்ளார். உ0

பாமபுடனேனும்பழமைவிலக்கார்தமரானோர்
வேம்பினையொப்பக்கைப்பினும்விள்ளாருலகத்தோர்
தேம்பலபேசிச்சுற்றம்வெறுக்குங்கொடியோனைத்
தேம்பிடும்வண்ணஞ்செற்றிடல்வேண்டுமெனவெம்பி. உக

பெருமானும்பரசிராமனும்கைகலத்தல்.

சுணங்கனையெல்லாமேற்செலவேவித்துரிசோதிக்
கணங்கெழுகல்லுமோடுமெடுத்துக்கடிதோச்சி
யணங்கொருபாலானெறிவுழியம்மாமுனிவெந்தீ
யிணங்கவெகுண்டான்றண்டமெடுத்தான்புடைவீசி. உஉ

ஞாளிகடம்மையகாக்கினனள்ளலரூர்செற்ற
மீளியின்மேற்செலவிட்டனன்வேழமுகக்கோனக்
கோளுறுதண்டமுரித்திருகூறுபடுத்திட்டான்
காளியொடாடியகண்ணுதல்வெய்யகதங்காட்டி. உஙு

வன்மொழிகூறிப்புலையர்தொழுத்தைமகனுநீ
யென்மகனேவத்தண்டமெறிந்தாய்தெய்வத்தா
லன்னதுபக்கதுதாய்கொலையஞ்சாயருளில்லாய்
நின்னையினிக்கொல்வேனெனநேர்ந்தான்காமோச்சி. உச

நேர்ந்திடுகொலையினின்மறைஞாளிகண்முன்னுகச்
சார்ந்துதுரந்துமுடுக்கலுமத்தகையானச்சங்
கூர்ந்துபதைப்புடனோடினன்வெண்சிறுகூன்றிங்கள்
வார்ந்தசடைப்பெருமானும்விரைந்துதொடர்ந்துற்றான். உரு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒற்றையங்கரத்தாற்பற்றிக்கோடலுமுறையானீண்டப்
பெற்றுமெய்ப்புளகம்போர்ப்பப்பெரிதுளமகிழ்ந்தானிச்சீர்ப்
பற்றியுமிழிஞன்றீண்டப்படுமெருஞ்சங்கைகொண்டு
முற்றவெந்துயரின்மூழ்கிவெருண்டனன்மொழிதலுற்றான். உசு

மறிகடல்வரைப்பின்யாங்கணுயினுமறையோன்றன்னைப்
பொறியிலீயிழிந்தவாழ்க்கைப்புலைமகன்வெருவராமே
செறியழுக்கடைந்தகையாற்றீண்டுமேயவ்வச்சாதி
பிறிவினிற்பிறழாவண்ணம்பிஞ்ஞகனடாத்துங்காலை. உஎ

இன்னினியுனதுசென்னியிறுவதுதேற்றங்காண்டி
புன்மைனறுக்குலத்தோயென்னப்புகன்றுதன்னுளத்தேவெம்பிப்
பன்னரும்புலையன்றன்பாற்பட்டுளேனந்தோவீதி
யென்னுடைத்தவமும்யானுமழிந்தவாறெனப்புழுங்க. உஅ

விழிபயினுதலுமுந்நீர்விடம்பொதிமிடறுங்கூர்வாய்
மழுமறிக்கரமுஞ்செங்கேழ்வடிவமுங்கரந்துசாலக்
கழிபுலைவேடந்தாங்கியெழுந்தருள்கருணைத்தோன்ற
லிழிவறுமிராமன்கூற்றுச்செவிமடுத்தினையசொல்வான். உகூ

வடுவறுமறைவலாளர்மரபினையெனில்யான்றீண்டப்
படுகுவையல்லைநீதான்பார்ப்பனக்கடையனுவை
யடுதொழிற்புலையன்யானவ்வொழுக்கினிற்சிறந்தவர்ற்று
விடுகிடைத்தாயைக்கொன்றேயென்னினுங்கடையனீகாண். ஙூ

இழுஞருகதிழிஞனுயெனக்குநீயடிமையெய்திக்
கழிபெருமகிழ்ச்சிகூர்வாயுனக்கியான்களைகணுவேன்
மொழிவதுசரதமென்றானவ்வுரைமுனிவன்கேளாப்
பழியுறுகதையிற்றுக்கப்படுமரவென்னப்பொங்கி. ஙக

அண்ணலைமலர்க்கையோச்சியடித்தனனமரர்தேறப்
புண்ணியமுதல்வன்றானும்பொருக்கெனமுனிவன்றன்னைத்
திண்ணியவிரண்டுகையுஞ்சிக்கெனவொருகைபற்றிக்
கண்ணறக்கொடிறுவீங்கப்புடைத்தனன்கமலக்கையால். ௩௨

முறைமுறையதிரத்தாக்கியிருவருமுனைந்துவெம்போர்
பிறையுறப்புரிதலோடுமெல்லியற்பிராட்டிநோக்கி
[illegible]வனின்னடிக்கீழன்பினினியவன்வருந்தாவண்ணம்
பொறைகொளப்புடைத்தியென்றாள்புனிதனுமெலிதிற்றாக்க. ௩௩

கடனறிமுனிவன்வாகைதனதெனக்கருதிவாங்கும்
வடவரைச்சிலையோன்மார்பிற்கரங்கொடுவலிதிற்றாக்கி
மிடலுறத்தெழித்தானாகவிண்ணவர்க்கரியகோமான்
கெடலருஞ்சினமீக்கொண்டான்போன்மறைக்கிழவன்றன்னை. ௩௪

கன்றிடக்கரங்கள்காலிற்பிணிப்புறக்கட்டிநோன்று
ளொன்றினாலுருட்டிச்சேணினுந்தினனவனைவேத
வன்றிறன்ஞாளிசுற்றிவளைந்தனமருங்குநின்ற
வென்றிகொண்மைந்தர்நோக்கிவிலாவிறச்சிரித்திட்டாரால். ௩௫

திருவிளையாட்டானண்ணல்சேவடிக்கமலத்துந்தப்
பருவருமுளத்தனாகிப்பசும்புதல்செறியநீண்ட
தருவடித்தலத்தினாவிசாம்பினனெய்த்துவீழ்ந்தான்
மருமலர்க்கருமென்கூந்தலிரேணுகைமைந்தனம்மா. ௩௬

அடங்கருந்துயரத்தாழமவ்வுழிவேரிக்கஞ்சத்
தடம்புனல்குடைந்துவாசந்தாங்கிமென்மலர்ப்பூஞ்சோலை
யிடந்தொறும்வதிந்துவீங்காரின்னுயிர்தளிர்ப்பச்செல்லு
மடந்தையரென்னமெல்லபடர்ந்ததுமலையத்தென்றல். ௩௭

தேம்பொதியிளங்கான்மேனிதைவரத்தெளிவுதோன்றி
மேம்படுமயர்ச்சிநீங்கவிழித்துணைவிடுத்துநோக்கித்
தேம்பினனிடும்பைக்கெல்லையாயினான்றிரியாச்சிந்தை
யேம்பலின்மறையோனெஞ்சத்திவையிவையெண்ணலுற்றான். ௩௮

பரசிராமன்பரிதபித்தல்.

கலிவிருத்தம்.

மறையொழுக்கம்வழாநெறிவாய்மையோர்க்
கிறைவனாமுனிவன்குலத்தெய்தினே
னிறையவேதமுமங்கமியாவுமு
முறையினோதினன்[illegible]ம். ௩௯

பன்னெடும்படையாவும்பயின்றுளே
னின்னனாயவெனக்கிதுகாலையின்
முன்னைவல்வினைமூட்டிவிளைந்தவா
றென்னபாவமெவரிதுதாங்குவார். ௪0

என்னையீன்றவள்வெம்பழியெய்துநீஇக்
[illegible]மென்றாற்சிரங்குறைபட்டனள்
[illegible]ந்தையும்பேதையரசனாற்
சென்னியிற்றுச்சிதைந்தனனம்மவோ. ௪௧

ஈண்டுமெற்றுமிழிஞன்புலைக்கரந்
தீண்டியென்னையவமதிசெய்திட
மூண்டவெம்பழிமூழ்கியுமையவோ
மாண்டிலேனுயிர்வல்வினையேனரோ. ௪௨

கவளமாகக்கடல்விடமுண்டருள்
சிவனையேத்துநர்செல்லலுறுர்களாற்
பவனடித்துணைபற்றியுமென்னிடர்க்
ன்டிலனற்புதமற்புதம். ௪௩

இன்பஞ்செய்தலிற்சங்கரனெம்பிரா
னின்பமாக்கலிற்சம்புவிடும்பைநோ
யென்பதோட்டுமியல்பினுருத்திர
னென்பராலவையென்னிடைபொய்த்தவோ. ௪௪

பேதைநீரிற்பெருநம்பிழைசெய்துளே
ஞதலாலிவ்வருநதுயரெய்தினேன்
பூதநாதனைப்போதப்பழிச்சியென்
னேதந்தீர்வலெனத்துணிந்தேத்துவான். ௪௫

வேறு.

மூவாதபடைப்புமுதற்றெழிலைந்
தோவாமையியற்றியுயிர்த்தொகைக
டாவாமலேமூன்றுமறத்தருவா
யாவாவடியேனுன்னடைக்கலமே. ௪௬

படியாதியபற்பலதத்துவமாய்க்
குடிலாந்தமகன்றகுருஉச்சுடரே
முடியாமுடிவேமுதலாமுதலே
யடிகேளடியேனுன்னடைக்கலமே. ௪௭

உமையாளொருபாலுடையாய்முறையோ
விமையாசலவில்லிறைவாமுறையோ
வமையாவிடமுண்டமைவாய்முறையோ
தமைநாடினர்தந்தலைவாமுறையோ. ௪௮

கச்சிப்பதியெய்துபுநின்கழல்க
ணச்சிப்பணிசீர்நரர்வானவரு
ளிச்சித்தபெறுதவரேயெனினும்
பொச்சத்தொடுபோயினர்தாமுளரோ. ௪௯

உளையுஞ்சிறியேனிடருன்னலையோ
களைகண்பிறகண்டிலனெம்பெருமா
னிளையாகினியேனுமிரங்கிடுவாய்
முளைவான்மதிவேய்ந்தமுடிச்சடையோய். ௫0

பெருமான்காட்சிகொடுத்தருளல்.

கலிநிலைத்துறை.

என்றின்னபழிச்சியிரந்தயர்கின்றமேருக்
குன்றன்னதவத்தவனன்பினளாயகொள்கை
துன்றுந்துதிவார்த்தைசெவித்துணையேற்றுநின்று
நன்றும்பெரிதுள்ளமகிழ்ந்தருணங்கைபாகன்.

அன்னானெதிரவ்வுருமுன்னுருவாகத்தோற்றித்
தன்னேர்வடிவங்கொடிருந்திழைத்தையலோடு
மின்னார்வடிவேற்படைவிண்ணவன்வேழப்புத்தே
ளென்னாவருமைந்தரொடுந்திருக்காட்சியீந்தான். ௫௨

கண்டான்முனிவன்கழிகாதனடுக்கமச்சங்
கொண்டானெழுந்தான்றுனிகூருமிடுக்கண்முற்றும்
விண்டானுவகைக்கடன்மூழ்கிமருட்கைமேவித்
தண்டாதவன்பிற்பெருமானிருதாள்பணிந்தான். ௫௩

பணிந்தான்றனையொல்லையெடுத்தணைத்துப்பனிக்கோ
டணிந்தானருள்கூர்ந்துநம்பக்கமிருத்துமன்பிற்
றுணிந்தாயுளம்வேட்டதுசொல்லுதியென்னவுள்ளந்
தணிந்தார்வமுறக்கரமஞ்சலிசார்த்திநின்று. ௫௪

பின்றாழ்சடிலத்திறையோய்பிழையொன்றுமில்லா
வென்றாதையாகுஞ்சமதக்கினியென்னுமஞ்சும்
வென்றான்றனையேகயவேந்தனருச்சுனன்றான்
கொன்றானவனைக்குலத்தோடறக்கொன்றழித்து. ௫௫

எந்தைக்கவர்தங்குருதிப்புனலங்கையேந்தி
நிந்திப்பறுதர்ப்பணமாற்றியசிந்தைநேர்ந்தே
னந்தத்திறலுன்னடியேற்கருளொன்னவையன்
வந்திக்குமழுப்படைமீதுகடைக்கண்வைத்தான். ௫௬

திருவுள்ளமுணர்ந்துகணிச்சிதிருந்துதன்கூற்
றொருதிண்படையாக்கவுவற்கதுநல்கியெங்கோன்
பெருவெண்களிறுளிதடுப்பினும்பேணலாரைச்
செருவின்கண்விடாதுசெகுத்தனைவெற்றிகொள்வாய். ௫௭

பரசுப்படைபெற்றனையப்பெயர்பற்றிவாழ்கென்
[illegible]டையங்கணனின்னருள்செய்யவன்னோன்
மரபிற்றொழுதிவ்விலிங்கத்தாகிழ்ந்துவாழ்வாய்
புரமட்டருள்புண்ணியவிப்புனல்யாறுமூழ்கி. ௫௮

கற்றைக்கதிர்வெள்ளொளிகான்றிருட்கட்டறுக்குங்
கொற்றச்சசிநான்முதனுள்களிற்கொள்ளுமென்பேர்
பற்றிப்பயிலிவ்விலிங்கம்பணிந்தன்பர்க்கேன்ற
தற்றைப்பகனல்குநரெய்துகவாக்கம்வீடு. ௫௯

எனவேண்டிவணங்கிவணங்கியெழுந்தகாலை
முனிவன்றனக்கவ்வரமுற்றும்வழங்கிமூரிப்
பனிமால்வரைநல்கியபைந்தொடிமைந்தரோடு
மனலங்கைகொளண்ணல்கரந்தபினங்கணீங்கி. ௬0

முனிவன்முனிவன்மழுவான்மணிமோலிவாய்ந்த
சினவெம்படைவேந்தர்தமைச்செருவிற்படுத்துக்
கனலன்னசெழுங்குருதிக்கயநீரிறைத்திட்
டினமன்னுபிதிர்க்கடனாற்றிமெய்யின்பமுற்றான். ௬௧

அப்பொற்பினருட்சிவலிங்கமெய்யன்பினங்க
ணைப்பெற்றியரேணுமிறைஞ்சினிறைஞ்சுமுன்னர்க்
கைப்பட்டதோராமலகக்கனிபோலவீடுஞ்
செப்பற்கரிதாகியசெல்வமுமெய்திவாழ்வார். கஉ

பரசிராமீச்சரப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஞ௭௩.

இரேணுகேச்சரப்படலம்.

கலிவிருத்தம்.

கொங்கவிழ்நறுமலர்க்கொன்றைவேணியன்
றங்கியபரசிராமீசஞ்சாற்றினா
மங்கதன்றென்புடையலைநதிக்கரைப்
பொங்கர்சூழிரேணுகேச்சரத்தைப்போற்றுவாம். க

இரேணுகைகாமமுறுதல்.

கரோணுகதிப்பரைகணவனன்பரா
... வசமுடற்றுங்கிநேர்ந்தமன்
னரேணுகவெல்பரசிராமனம்புதா
யிரேணுகையென்பவளாழகினெல்லையாள். உ

விச்சைதேர்பெற்றியவருமவேந்தனூர்
மெச்சியவரத்தினிற்றேன்றமெல்லிய
லச்சமதக்கினிமனைவியாயினாள்
பொச்சமில்கற்பினிற்பொலியுமேன்மையாள். ௩

மனையறக்கிழமையினொழுகுமாணிழை
நனைமலர்க்குழலியோர்ஞான்றுபொய்கையிற்
கனைதிரைத்தடம்புனல்கவரப்போந்துழி
வினைவழிக்கண்டனன்கந்தவீரியன். ௪

காண்டலுங்காமவேள்கணைக்கிலக்கமா
யாண்டகையவனொதிரண்டுகினினன்
மாண்டதன்புறவடிநோக்குமாதரா
ளீண்டுபேரழகுடையிறையைநோக்கலள். ௫

இனிச்செயலெவனெனவெண்ணிவேந்தர்கோன்
புனற்குமேல்விசும்பிடைப்பொலிந்துதோன்றினான்
பனித்தநீர்ப்பரப்பினப்பதகனீழலை
முனிக்குரிமரபினாண்முந்திநோக்கினாள். ௬

காமனுஞ்சிறிதுதன்மதுகைகாட்டினான்
பூமலர்க்கூந்தலாளுளத்தைப்பொள்ளென
வாய்மையிற்றன்வழிப்படுத்துமாண்குடத்
தாமுகந்தெடுத்துமீண்டகத்தைநண்ணினாள். ௭

பரசிராமன்தாயைக்கொன்றெழுப்புதல்.

எதிருறப்போந்துழிமுனிவரேறனன்
மதிமுகமனைவிபாணித்தவாற்றினைக்
கதுமெனவறிவினிற்கருதித்தேர்ந்தனன்
முதுநெறிகோடியமூர்க்கன்செய்கையே. அ

வடவையனையவகுணமுதனமகனைநாகனுமை
படர்புகழிராமனிற்பயந்தபூங்குழல்
கடல்புரையெழினலங்காமுற்றண்மினுன்
விடமெனத்தோன்றியகாத்தவீரியன். ௯

ஆங்கவனிளமையுமரசுமாற்றலு
நீங்கருமடமையுநிறைந்தநீர்மையா
லீங்கிவட்பற்றுவனெம்மையெண்ணலா
னோங்குயர்குணத்தினோயுரைப்பக்கேட்டியால். ௧0

என்னுடையாணையினிற்றியேயிவள்
சென்னியைத்தடிமதிவிரைந்துசெல்கெனத்
தன்னுடைக்குருமொழிசிரத்திற்றாங்கினு
னன்னையைக்கொடுபுறத்தணுகினனரோ. ௧௧

அல்லலேபெண்ணெனப்பிறத்தலாங்கதி
னல்லலேயிளமையிற்சிறத்தலாங்கதி
னல்லலேகட்டழகுடைமையாங்கதி
னல்லலேயிரவலர்சார்பினுகுதல். ௧௨

ஆரங்குறைபடுத்தவாளங்கையேந்திநல்
லூரங்குறைபடுத்திடாவுறுவனன்னைதன்
சிரங்குறைபடுத்துமீண்டெய்தித்தேசிகன்
வரங்குறைபடுத்திடாவடிவணங்கலும். ௧௩

துன்பமுற்றருந்தவனிரங்கிச்சொல்லுவான்
வன்பெருமன்னவன்மகட்குமைந்தனீ
யென்பதுமென்னிடத்தன்புமின்றியா
னின்புடைக்கண்டனனறிவினீடியோய். ௧௪

என்னுரைநிறுவினையேனுந்தாய்கொலை
நன்மையன்றுலகமும்பழிநவிற்றுமென்
றன்னுரைப்படியவணேகித்தாழ்குழல்
சென்னியைப்பொருந்துறச்சேர்த்தெழுப்பியே. ௧௫

பொன்னடிவணங்கியஞ்சலித்துப்போற்றியெ
னன்னைநின்கருத்தினுக்கடுத்தவாறுசெல்
கென்னவங்ககற்றியீண்டெய்துவாயெனத்
தன்னுடைத்திருமகற்கியம்பித்தாபதன். ௧௬

சமதக்கினியைக்காத்தவீரியன்கொலைசெய்தல்.

வெகுளியேயுயிர்க்கெலாம்விளைக்குந்தீவினை
வெகுளியேகுணந்தவம்விரதமாய்க்குமால்
வெகுளியேயறிவினைச்சிதைக்கும்வெம்மைசால்
வெகுளியிற்கொடும்பகைவேறொன்றில்லையால். ௧௭

என்றிவைதன்மனத்தெண்ணிவெஞ்சின
மொன்றறத்துறந்தினிதுறையுங்காலையப்
புன்றொழில்வேந்தனஃதுணர்ந்துபொள்ளென
வென்றிமாதவன்சிரந்துணித்துமீண்டனன். ௧௮

இரேணுகைசிவபூசைசெய்துதெய்வமாதல்.

மதலையினாவிபெற்றகன்றமாணிழை
யிதமுறுகணவனையிழந்ததுன்பினா
ளுதலருமகன்வரப்பேறுநோக்கியப்
புதல்வனதிசைவுபெற்றாங்குப்போயினாள். ௧௯

இளங்களிவண்டினமிமிரும்பூம்பொழில்
வளங்கமழ்காஞ்சியைமருவிமைந்தனா
ருளங்கொளவழிபடுநகரினாங்குற
விளங்கொளிச்சிவக்குறிவிதியிற்றாபித்தாள். ௨௦

மகவிடத்திருத்துபோன்பின்மாட்சிமை
தகவுறப்பூசனைதவாதுபல்பக
லகமுறப்புரிவுழியருளியாங்கெதிர்
நகமடப்பிடியொடுநம்பன்றோன்றினான். ௨௧

நுண்ணிடையிரேணுகைமடந்தைநோக்கினா
ளுண்ணிகழ்காதலினுருகிக்கைதொழூஉ
வண்ணமென்குயிலினஞ்சமழ்ப்பவாய்திறந்
தண்ணலைப்பழிச்சிநின்றறைதன்மேயினாள். ௨௨

ஏதமிலுயிர்த்தொகையெவற்றினுக்குநீ
தாதைதாயிமவரைத்தையலாகுமாற்
கோதறுமிருமுதுகுரவர்மாட்டெவர்
மேதகுமானம்விட்டியம்பிடாதவர். ௨௩

கலிநிலைத்துறை.

அடியனேன்பலதிறத்தினும்புரிபவமடைந்தேன்
பொடிகொண்மேனியாயிங்குனைப்பூசனைபுரியும்
படியிலாப்பெருவாழ்வுபெற்றெய்தினேன்படியோர்
கடிதராதருள்வைத்தெனைக்காப்பதுன்கடனால். ௨௪

புகழுமாக்கமுமுத்தியுமுயிர்க்கருள்புராண
னிகழுமின்னலுந்தவிர்ப்பவனிருண்மலக்கிழங்கை
யகழுநாயகன்யாங்கணுநிறைந்தவனடியார்
திகழுமன்பினுக்கெளியவன்சிவபிரானென்றும். ௨௫

கொழுநன்யாரினுமினியவனென்றுகூறுவரக்
கொழுநனிவ்வுடற்குரியவன்குறிக்கிலாருயிர்க்குக்
கொழுநன்றந்தைதாய்செல்வமுமேனவுங்கொன்றைக்
கொழுநனைத்தொடைக்குளிர்சடைச்சிவபிரானென்றும். ௨௬

இனையவாயினபெருமைகளெடுத்தெடுத்தெனக்கு
வினையினீங்குமென்கணவனாடொறும்விரித்துரைக்கு
மனையநிற்றொழுதுய்ந்துளாரளவிலாரடியேன்
றனையனுக்குமீண்டருட்பெறற்பேறுதந்தளித்தாய். ௨௭

ஐயனேயடியேனையுங்காத்தருளசலத்
தையலேசகமுழுவதுமளித்திடுந்தாயே
யுய்யுமாறெனைக்காத்தருளுமைச்சரணடைந்தேன்
பொய்யர்சிந்தையினகப்படீர்போற்றியென்றிரந்தாள். ௨௮

அம்மையப்பராய்கிலமும்புரந்தருள்கருணைச்
செம்மலார்நகைமுகிழ்த்தெழத்திருவுளமகிழ்ந்தே
யெம்மைவேட்டவைவிளம்புதியிமயமீன்றளித்த
கொம்மைமென்முலையுனக்கவைதருமெனக்கூற. உகூ

அன்பினேத்திநின்றிரேணுகையணியிழைவேண்டு
மென்பணிக்கினியாய்நனிவிழுத்தகவெய்தித்
துன்பமெண்ணிலபட்டயான்றூயநின்னருளான்
மன்பதைக்கெலாம்வழிபடுதெய்வமாய்வயங்கி. ௩0

போகமவ்வவர்வேண்டியபுணர்ப்பெலாங்கண்கூ
டாகநல்குபேறெனக்கருளிவ்விலிங்கத்தி
னேகநாயகவினிதமர்ந்திருமையுமெவர்க்கு
நீகனிந்தருள்புரிமதியெனநிகழ்த்துதலும். ௩க

அண்ணலாருமைகூற்றிறைலவட்கவையுதவி
மண்ணின்மேற்கலியுகத்துறுமானிடர்கருது
மெண்ணமெண்ணியாங்கியாவையுமிழிகுலத்துள்ளார்
நண்ணிவேட்டனசாலமிக்களிப்பவுநல்கி. ௩உ

கொம்பனுள்பெறத்தெய்வதத்திருவுருக்கொடுத்துக்
கம்பனார்மலைமகளொடுங்கரந்தருள்செய்தார்
வம்புவார்குழலிரேணுகைமடந்தையப்பொழுதே
யம்புவிக்கொருதெய்வதமாயினளம்மா. ௩௩

கலிவிருத்தம்.

காதராவணியினுள்பலகைவாட்கையினுள்
போதராசன்முதல்பலகணம்புடையுற
வேதராசிகள்பயில்விரிபொழிற்காஞ்சியின்
மாதராளாயிடைத்தெய்வமாய்வைகினள். ௩௪

எண்ணியாங்குதவிசெய்திரேணுகையீச்சரத்
தண்ணலார்பெருமையாரளவிடற்பாலரே
கண்ணுமிக்காதையைக்கற்றுரைப்போரையவ்
வொண்ணுதற்றெய்வதமூறுசெய்யாதரோ. ௩௫

இரேணுகேச்சரப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ககூ0அ.

யோகாசாரியர் தளிப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

ரவுநீர்ச்சடைமுடிப்பகவனுருமையொடும்
விரவிவாழிரேணுகையீச்சரம்விளம்பினும்
பரசிராமீச்சரத்தெனுதுபாலியோகமாக்
குரவர்சூழ்பலீறளித்திறனினிக்கூறுவாம். க

சுவேதனேசுவேதகேதுக்கருத்தொடர்பிலாச்
சுவேதசிகன்சுவேதாச்சுவன்றூயசீர்ச்
சுவேதலோகிதனெடுஞ்சுதாரனேசாதனஞ்
சுவேதநீற்றணியொளிர்துந்துபிமுதலியோர். உ

ஏயுமெய்த்தவமருவிலகுளீசன்முடி
வாயினோர்மற்றுமெண்ணிலவராகிலமும்
பாயசீர்யோகமாக்குரவர்கள்படைமழுத்
தூயவன்கூற்றினிற்றோன்றியோரிவர்கடாம். ௩

யோகமாக்குரவர்தம்முயர்பதத்தெய்தவு
மோகவல்வினையுறாமுத்தியின்வைகவும்
போகுவெண்கயிலையின்மெய்த்தவம்புரிவுழி
யேகநாயகனவர்க்கெதிரெழுந்தருளியே. ௪

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அம்மநீர்கச்சிமூதூரணுகிமாநீழல்வைகு
மெம்மடிவழுத்திவெவ்வேறிலிங்கமங்கிருத்திப்போற்றி
மம்மர்தீர்தவங்களாற்றிவைகுமினுண்டுநுங்க
டம்மனக்கருத்துமுற்றத்தருதுமென்றருளிச்செய்தான். ௫

மற்றவர்தொழுதுபோற்றிவள்ளலைவிடைகொண்டேகி
முற்றிழைமகளிர்நல்லாருடலினுகுத்தமுத்தங்
கற்றைவெண்ணிலவுகான்றுகனையிருள்பருகுநீண்ட
பொற்றடநெடுந்தேர்வீதிபொலிதிருக்காஞ்சிநண்ணி. ௬

முழங்கிசைஞிமிறுபாயமுகைமுறுக்குடைந்துதீந்தேன்
வழங்குபூங்கமலத்தெண்ணீர்மணிச்சிவகங்கைதோய்ந்து
பழங்கணேயறுக்குமாவிற்பகவனைவழிபாடாற்றித்
தழங்கொலிமறையினாற்றாற்றனித்தனியிலிங்கஞ்செய்தார். ௭

முன்பொருகாலத்தங்கண்முதல்வனைத்தொழுதுமுந்நூற்
றைம்பதிற்றைவர்யோகாசாரியராகிமுத்தி
தம்பதமாகக்கொண்டாரவரெனத்தாமுமன்பி
னம்பனைத்தத்தம்பேரானலத்தகநிறுவிப்போற்றி. ௮

கறையணிமிடற்றுப்புத்தேள்கருணையாலுகங்கடோறு
நிறைபுகழ்படைத்தயோகாசாரியநிலைமையெய்திக்
குறைவிலாமுத்திபெற்றாராங்கவர்குலவிப்போற்று
மிறையவன்றளிகள்யார்க்கும்வீடுபேறெளிதினல்கும். ௯

வென்றிகொளினையவெல்லாம்பரசிராமீச்சரத்தின்
றென்றிசைதொடங்கிச்சாற்வதீர்த்தத்தின்வடபால்காறு
மொன்றருஞ்சுவேதலிங்கமுதலிலகுளிசமீறாத்
துன்றிடுமிவற்றுண்மேலாச்சொலப்படுமிலகுளீசம். ௧0

யோகாசாரியர்தளிப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கசுகஅ.

சறுவதீர்த்தப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருட்கொடும்பிறவிமாற்றுமிலகுளீச்சரமீறாகத்
தருக்கறுகாட்சியோகாசாரியர்தளிகள்சொற்றா
மருத்துதைமலர்மேற்பூத்தவளம்புனல்குடைவோர்தங்கள்
கருத்தவிர்சறுவதீர்த்தக்கரைபொலிதலங்கள்சொல்வாம்.

காமீச்சரம்.

குடவளையலறியீன்றகுரூஉமணித்தரளக்குப்பைப்
படலைவெண்ணிலவுகான்றுபடரிருளிரிப்பஞாங்க
ருடைதிரையொதுக்குந்தெண்ணீரொலிபுனற்சரவதீர்த்தத்
தடநெடுங்கரையிற்காமீச்சரமெனுந்தலமொன்றுண்டால். உ

கருப்புவிற்குழையவ்வாங்கிக்கடிமலர்ப்பகழிதூண்டு
மருப்பிளங்கொங்கைச்சேனையடல்வலிக்காமன்முன்னாண்
மருப்பொதியிதழிக்கோமான்மனத்திடைப்பிறந்தானையன்
றிருப்பதமிறைஞ்சிப்போற்றிசெய்துமற்றிதனைவேண்டும். ௩

மகப்பயில்பிறவிக்கேதுவாகிவண்புணர்ப்புநல்கி
யிகப்பில்சீரிரதிக்கென்றுமினியனாய்க்கொடுப்போர்கொள்வோ
ரகத்திருந்தினையசெய்கையாற்றியென்றனைமூன்று
சகத்தினுஞ்செலுத்தும்பேறுதந்தருளென்னக்கேட்டு. ௪

மற்றெமக்கினியமூதூர்வளம்பயில்காஞ்சியங்க
ணுற்றெமைவழிபட்டேத்தியுங்குவைபெறுகென்றெங்கோன்
சொற்றலும்விரைந்துகாஞ்சித்தொன்னகரெய்திக்காம
னற்றமில்சரவதீர்த்தத்தடந்திரையலைக்குங்கோட்டின். ௫

தவாதபேரன்பிற்காமீச்சரன்றனையிருத்திப்போற்றி
யுவாமதிமுகத்துமென்றோளொள்ளிழையுமையாடன்னைக்
கவான்மிசைக்கொண்டபெம்மான்கண்ணருள்கிடைத்துநெஞ்சத்
தவாவியபேறுமுற்றுமங்கிலையெய்தினானால். ௬

ஏதமிலுயிர்களெல்லாந்தோற்றுதற்கேதுவாகிக்
கோதறத்தானமீவோன்கொள்பவன்றானுந்தானாய
மேதகுமிறைமைபெற்றுவிளங்கினான்மறையோரேற்கும்
போதுளத்தவனையெண்ணிற்புரைதவிர்ந்துய்வாரன்றே. ௭

தீர்த்தீச்சரம்.

பரவினோர்விழைந்தகாமப்பயனளித்தருளுங்காமீச்
சரநகர்வந்தவாறுசாற்றினமிதன்பாலாகப்
பரிதிமான்றடந்தேரீர்க்கும்பரிக்குளம்பிடறிப்போய
திருமணிச்சிகரக்கோயில்வயங்குதீர்த்தீசமுண்டால். ௮

குழையுதைநெடுங்கட்செவ்வாய்க்கோமளச்சாயலப்பாவை
விழைதகத்தழுவுமாற்றால்விரிசினைத்தனிமாநீழன்
மழைதவழ்மிடற்றுப்புத்தேள்வருகெனவிளித்தஞான்று
தழைபுனற்றலைவனோடுந்தடநதிவடிவாய்த்தாங்கி. ௯

விழுமியவண்டத்துள்ளும்புறத்தினும்விரவுந்தீர்த்த
முழுவதுந்திரண்டுகாஞ்சிமுதுநகர்க்குடபாலெய்திக்
கொழுமலர்த்தனிமாநீழற்குழகனையுமையாள்வல்லைத்
தழுவலுமெழுந்தவேகந்தணிந்துமீட்டல்கியங்கண். ௧௦

கலைமதிக்குழவிமோலிக்கடவுளைத்தீர்த்தராசத்
தலைவனென்றிருத்திவீங்குந்தடம்புனலருவிக்குன்றச்
சிலைநுதற்பிடியினோடுமருச்சனைதிருந்தச்செய்ய
மலையினைக்குழைத்ததிண்டோள்வள்ளலுமெதிரேநின்று. ௧௧

இற்றைஞான்றுதியாகநும்மிடத்தெய்திமூழ்கிச்
செற்றமின்முனிவர்விண்ணோர் நன்புலவாணர்தங்கட்
குற்றநீர்க்கடன்கனல்கியுறுபொருமறுயமா க்கீந்து
மற்றெமையீண்டுக்காண்போர்முத்தியின்மருவச்செய்கேம். கஉ

இன்னமும்புகலக்கேண்மினெனப்பெருங்கருணைகூர்ந்து
தன்னிகர்பிராட்டியாரத்தழீஇக்கொளச்செய்தவாற்று
லன்னதற்கியையக்கைமாறளிப்பவனென்னவங்கேழ்ப்
பொன்னவிர்சடையோன்றீர்த்தப்புனல்களுக்கிதனைநாட்டும். கஈ

கொலைகளிற்கொடுமைசான்றபார்ப்பனக்கொலைவல்வீரக்
கொலைகருக்கொலைதாய்தந்தைக்கொலைகவைக்கோட்டுநல்லான்
கொலைமுதல்பிறவுநீங்குங்கொடுவினைப்பாசத்தெவ்வைக்
கொலைபுரிமாபினும்பாற்குடைந்தெமைத்தொழப்பெற்றோர்க்கே. கச

முரிதிரைசுருட்டுந்தெண்ணீர் நும்மிடத்தொருகான்மூழ்கி
விரிபுகழ்த்திருவேகம்பம்விழைதகக்காணப்பெற்றோ
ருரிமையினுன்றநாற்கூற்றுறுதியும்பெறுவர் மீள
வரிவையரகட்டுனெய்தாதெம்மருளகட்டின்வாழ்வார். கரு

என்றிது நீர்த்தநாயகனிலிங்கத்துற்று
னன்றுதொடடங்கண்மேவுமலங்கொளிச்சருவதீர்த்தத்
தின்றடம்புனலின்மூழ்கியெழில்வளர்திருவேகம்பஞ்
சென்றுகண்டிறைஞ்சப்பெற்றோர்செய்கொலைத்தீமைதீர்வார். கசு

சருவதீர்த்தப்பெருமை.

தந்தையைச்செகுத்தபாவந்தணந்தனன்பிரகலாதன்
முந்தையோர்ச்செருத்தபாவம்வீடணன்முழுதுந்தீர்ந்தான்
மைந்துடைப்பரசிராமன்வீரரைவதைத்தபாவஞ்
சிந்தினன்சருவதீர்த்தச்செழும்புனல்குடைந்தபேற்றால். கஎ

அருச்சுனன்றுரோணமேலோனுதியர்ச்செகுத்தபாவம்
பிரித்தனனசுவத்தாமன்பெறுங்கருச்சிதைத்தபாவ
மிரித்தனனுலகின்னுமெண்ணிலர்சருவதீர்த்தத்
திருப்புனல்குடைந்துதீராக்கொலைவினைத்தீமைதீர்ந்தார். கஅ

சிலைநுதன்மகளிர்மைந்தரின்றுமத்தெண்ணீர்மூழ்கிற்
கொலைவினைப்பாவந்தீர்வார்குறைகடற்பரப்பென்றெண்ணித்
தலைவருமுகிலின்கூட்டந்தனித்தனிவாய்மடுக்கு
மலைபுனற்சருவதீர்த்தப்பெருமையாரளக்கற்பாலார். கசு

கங்காவரீச்சரம்.

மற்றதன்கரையின்கீழ்பால்வருணனெம்பெருமான்றன்னை
முற்றிழைக்கங்கையாளோடிருத்திமுன்றெழுதுநீரு
ளுற்றுறையுயிர்க்குநீர்க்குமொருதனித்தலைவனுகப்
பெற்றனனதன்பேர்கங்காவரமெனப்பிறங்குமாலோ. உ0

விசுவநாதீச்சரம்.

பாற்றினமிடைந்தகூர்வாய்ப்படைமழுக்குடங்கைப்புத்தேண்
மாற்றருங்கருணைமுந்நீர்வாரியினிறைந்துதேங்கு
நாற்றிசையணவுஞ்சீர்த்திநளிபுனற்சருவதீர்த்த
மேற்றிசைக்கரைக்கண்மேவும்விச்சுவநாதத்தானம். உக

கலிநிலைத்துறை.

அன்னவாற்றாற்பிறவாத்தானமாயதா
லின்னதானம்வழிபட்டேத்தப்பெற்றவர்
பின்னர்மாதர்கருவினெய்திப்பேதுறார்
கன்னிபாகன்கருணைவெள்ளங்காண்பரே. அ

அங்கட்போற்றிவாமதேவனருளினாற்
றுங்கக்கயிலையெய்தினோன்றொழுதெழூஉக்
கங்கைச்சடையானுதவிலிங்கங்கைக்கொடு
பங்கப்பழனக்காஞ்சிப்பதியின்மீண்டனோ. கூ

முத்தீச்சரம்.

மேன்மைசான்றபிறவாத்தானமேற்றிசை
ஞானவாவினாங்கர்முத்தீச்சரனென
மானமுத்தித்தளியினிறுவிவாழ்த்தினு
னேனவெண்கோட்டணியார்க்கினிதாமன்னதே. க0

பிறவாத்தானப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கரு௲0.

இறவாத்தானப்படலம்.

கலிநிலைத்துறை.

புள்ளிவண்டுபெடையொடாடிப்பொங்கரிற்
பள்ளிகொள்ளும்பிறவாத்தானம்பன்னினாந்
துள்ளிவாளைபாயுநீர்சூழ்தனயல்
வெள்ளிவரையாரிறவாத்தானம்விள்ளுவாம். க

இறவிக்கஞ்சிச்சிஃறுபதர்கண்மாதவ
முறையிற்செய்தார்முன்னாளங்நான்முன்னுற
நறவிற்றிகழுமுளரிமேலோனண்ணிநின்
றறவர்க்கென்னேவேட்டதென்றானுங்கவர். உ

உலகமுழுதுமுதவுமெந்தாயுன்னடித்
தலமேயன்றிச்சரணமில்லேஞ்சாவதற்
கலகிலச்சமுற்றேமதனைவெல்லுமா
றிலகவெங்கட்குரையாயென்றங்கேத்தினார். ௩

செங்காலன்னப்பாகன்கேளாத்தேத்துணாக்
கொங்கார்பொங்கர்க்காஞ்சிநண்ணிக்கோமளை
பங்காராதிபகவன்பாதம்வழிபடி
னங்கேயிதனைப்பெறலாமென்றானவர்களும். ச

அன்னத்தோன்றலடிகள்போற்றிவிடைகொடு
நன்னர்க்காஞ்சிநகரநண்ணிநாயகன்
றன்னைத்தாபித்தேத்திச்சாவாமாட்சியின்
மன்னப்பெம்மானுதவப்பெற்றுவாழ்ந்தனர். ரு

சுவேதனென்பான்வாழ்நாட்கழிவுதுன்னுநாட்
சுவேதந்தீற்றுமாடச்சூழலதனிடைச்
சுவேதநல்லானூர்தியோன்றொழுதனன்
சுவேதநீற்றானீத்தானிறவித்துன்பமே. சா

மாரக்கண்டேயனங்கட்போற்றிமறலியைத்
தாக்கிநிலைமைபெற்றான்சாலங்காயினா
னுக்கமைந்தன்மகனுமங்கணேத்துபு
சாககாடற்றான்கணநாதச்சீர்தழுவினான். ௭

ஆயுண்மாய்வினின்னுமங்கணெண்ணிலர்
தூயவன்பிற்றொழுதுநிலைமைபெற்றனா
ரேயவாற்றாலாயுள்வேட்டோர்யாவரும்
பாயசீர்த்தியிறவாத்தானம்பணிகவே. ௮

இறவாத்தானப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௬௬௮.

மகாலிங்கப்படலம்.

கலிநிலைத்துறை.

வெள்ளைத்திங்கட்பிள்ளைக்கீற்றுமிளிர்சடை
வள்ளற்கோமானிறவாத்தானம்வாழ்த்தினாங்
கிள்ளைச்சொல்லார்பயிலுமதனின்கீழ்த்திசை
விள்ளற்கருமாலிங்கத்தானம்விள்ளுவாம். ௧

அரியுமயனும்யுத்தஞ்செய்திளைத்தல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வையமுழுதுமடியவருமோருழிமுடிவின்
வெய்யவிருள்வந்தடரவிரிநீர்ச்சலதிவேகஞ்
செய்துமிர்ந்துபொங்கித்தேங்கிக்கிடந்தகாலைப்
பையவுறக்கநீத்துமீளப்படைக்கவுன்னி. ௨

துங்கக்கனதுநகரிற்சுடருமறையின்கிழவ
னெங்குமலைகள்புரளவேகப்புணரிவெள்ளந்
தங்குசெயலைநோக்கித்தடவுக்கருவிமுகில்போ
லங்கணரவிற்றுயிலுமையன்றனையுங்கண்டான். ௩

கண்டுபுடையினணுகிக்கடுகவெழுப்பியையல்
கொண்டுநீயாரென்றுவினவக்கொண்டலனையா
னண்டமுழுதுங்காக்குமகிலமுதல்வன்யானே
மிண்டுநீயாரென்பால்வேட்டதென்கொலென்றான் ௪

நறவமொழுகுமலரோன்கேட்டுநகையுட்கொண்டு
பிறருமல்லர்நீயுமல்லைபேணியுலக
நிறுவுமுதல்வன்யானேயென்னுமினையநெறியின்
மறலிக்கூறித்தம்முளூடல்வளர்த்துநின்றார். ௫

சிந்தைநாணுக்கழலச்சிலையினாணுப்பூட்டி
முந்துகணைகடேர்த்தார்மூரிக்கனலிவருண
னிந்துவிரவிப்படையுமேவியவைகண்மடியப்
பந்தவினையின்மருள்வார்தத்தம்படைவிட்டார்த்தார். ௬

மும்மைப்புவனமீன்றான்படையுமுகுந்தன்படையுந்
தம்முட்பொருதுமாய்ந்தபின்னர்க்கமலத்தவிசோன்
வெம்மைப்பாசுபதமாப்படையைவிடுப்பமாயோன்
செம்மலுருத்திரத்தின்படையைச்செலுத்தினின்றான். ௭

பெருமான்சோதிலிங்கவடிவாயது.

அம்மவிரண்டுபெடையுமயுதவருடநேர்ந்து
தம்முளுடலுங்காலைத்தழங்குமெரியின்பொறிக
டம்மவெழுந்துதோன்றிச்சோதியிலிங்கவடிவாய்
நமமையுடையபெருமானவற்றினடுவுநின்றான். அ

நின்றசோதியுருவினேர்ந்தவிரண்டுபெடையுஞ்
சென்றுகரப்பநோக்கித்தெருமந்தரியுமயனு
மின்றுதோன்றுமிதுவென்னென்றுதம்முளெண்ணிக்
கன்னமிகன்றனடியுமுடியுங்காண்டுமென்னு. கூ

கேழலெகினமாகிக்கீழுமேலுந்துருவி
யூழினிரண்டைஞ்ஞூறுவருடமுழிதந்துற்றார்
வாழிமுடியைக்காணன்வண்டுமுராலுமலரோன்
பாழிச்சிறகர்முறியாப்பையுளெய்திவீழ. க0

நாறுந்துளவத்தவனுநாடிச்சரணங்காணன்
வீறும்வலியுங்குன்றிமெய்ப்புமிளைப்புமிரவ்
வேறும்பரவைப்பெருநீரிடையுளெழுந்தங்குற்று
மாறுமிருவர்களுமாலெய்திமருட்கைகொண்டார். கக

வேதம்முதல்வனுண்மைகூறல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எமமபொழுதவணொலிவடிவிஞூதமதெழுபுமுனிருதிறனு
மயாமமனவுமைமயெனமருவியிருக்கோடியர்நெறியருள்புரியெசுவுஞ்
சாமமுமெனநிலைபெறவிரிவுற்றங்கவைதம்வலிபெருமவர்முற்
காமுறுதகையநல்வடிவொடுநின்றினையனகருணையினுரைசெயுமால்.

எவனடிமறையவர்மகவினையாலிருவினைவலிகெடவழிபடுவா
ரெவனரியயனெனுநுமையொருதனிடவலவடியினில்வரவருள்வோ
னெவனுமைநும்பதமுறநிறுவுமிறையவனுமதிருள்கழியவரு
மவனதுகுறியிதுவறிமினெனுவருள்வழிவருமறையவைபுகல.

அயனுமரியும்பழிச்சல்.

நறைகமழ்துளவணிதொடையவனுநகைமலரணைமிசைமறையவனு
மறைமொழிசெவியுறமயல்கழிவுற்றலைகடல்வரும்விடமமுதுசெயு
மிறைவனைமுறைமுறைபரசினராலெலனையுடைமுதல்வனுமவரெதிர்நின்
றுறைபெருமயலினையினிவிடுமோவுதவுநும்விழைவனவுரைமினென.

பங்கயனிருகரமுச்சிமிசைப்பயில்வுறவடிதொழுதுளமுருகி
யெங்குறையின்றுபொறுத்தருளியெளிவருநாயகவுனையுணரா
துங்குறுமயலினியெனையணுகாதுன்புடைநிலைபெறுமன்புதவி
மங்கலிலூழிதோறென்வடிவில்வந்தருளெனமொழிவிண்டனனே.

திருமகள்விழைதருதிகழ்மருமச்செம்மலுமடியிணைதொழுதினியிம்
மருளெனையொருபொழுதினுமடராலுன்னடிவழிபடுசெயல்பிறழல்
கருமுகிலுறழ்மிடறுடையவநின்கருணையென்னிடைநிலைபெறநிறுவி
லொருகுறையுளதுகொலடியடியேற்கென்றுளமகிழ்வுடனோதினனால்.

அயனுமரியுஞ்சிவப்பிரசாதம்பெற்றுய்தல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இவ்வண்ணமிருவர்களுமிரங்கேத்தியிண்ணப்பஞ்செய்யக்கேளா
வவ்வண்ணமாகவெனப்பெருங்கருணைகூர்ந்தருளியகிலமீன்ற
மைவண்ணக்கருங்கூந்தன்முலைச்சுவடும்வளைத்தழும்புமாறாமேனிச்
செவ்வண்ணப்பரமேட்டிபின்னருமங்கவர்க்கிதனைத்தெரித்துக்கூறும்.

இற்றைநாணீர்காணுமிவ்விலிங்கப்பெருவடிவமிறுதிக்கால
முற்றுநாளனுகாதுகொற்றங்கொடிருக்காஞ்சிமூதூர்மாடே
பற்றுபெருங்காதலினூற்றுபித்துவழிபட்டுப்பரசியானைப்
பெற்றியுறுவியனுலகம்படைத்தளிக்கும்பெருமதுகைபெற்றுவாழ்மின்.

வெண்டிரைநீரகல்வரைப்பினும்முதலோர்விண்ணவர்களவுணர்சித்தர்
பண்டைவினைக்குறும்பெறியுமுனிவரர்மானிடர்யாரும்பாசக்கூட்டம்
விண்டகலும்படியின்றுதொட்டெம்மையிலிங்கத்தின்மீளாநேசங்
கொண்டுபூசனைபுரிகபுரிவோர்க்குமயலென்றுங்குறுகலோம்பல். கக

கடப்பாடுவறுமைபயமனக்கவலைபசிபாவங்கடுநோய்மற்று
முடற்றுமையாங்கவர்க்குமீளவினைப்பிறவியுறலுறினுமின்பங்
கிடைத்தானுப்பெருமகிழ்ச்சிதலைசிறப்பநனிவாழ்கிளருஞ்சீற்ற
நடைக்காலன்மற்றவர்பானணுகற்கஞ்சுமாலைவலியானன்னே. உ0

வேதியர்மன்னவர்வணிகர்வேளாளர்சங்கரத்தின்மேயோராக
மூதிமையோருரகர்தயித்தியரரக்கர்கந்தருவர்முனிவராகப்
பூதிதருமிலிங்கபூசனையில்லார்பூதிசாதனங்கள்பேணு
ரேதிலராமிழிஞரினுமிழிஞரேயவரொடுபேச்சியம்பிரேரும். உக

நியதிமகந்தவந்தானம்விரதநிலைபிறவற்றினிகழ்த்தும்பூசைப்
பயனைவையுமிலிங்கபூசனைக்கோடிகூற்றிரொருபானுக்கொவ்வா
வியனுலகமுய்யுமுறையிவ்வாறுநமதாணைவிதித்தேம்போற்றி
யுயலுறுவீரென்றருளிச்சிவபெருமானடியருளக்கோயில்புக்கான். உஉ

பாப்பணையிற்றுயில்வோனும்பணிமலரிற்பயில்வோனும்பணிந்துநீங்கி
யாப்பமைநீர்த்தடம்பொய்கைத்திருக்காஞ்சிவளநகரமெய்தியாங்கண்
மீப்பொலியுமகாலிங்கநிதீஇத்தொழுதுபயன்பெற்றார்விரிநீர்வைப்பி
னீப்பரியசிவலிங்கவழிபாட்டின்பேறெவரேநிகழ்த்தவல்லார். உங

மகாலிங்கப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஙகக.

வீராட்டகாசப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தண்காமர்புனல்குடையுந்தையலார்திமிர்ந்தநறுந்தகரஞாழ
லெண்காதங்கமழிலஞ்சிமகாலிங்கத்தளிபுகன்றாமிதன்வீட்டாது
விண்காவலுடையார்முன்னிளநகைபூத்திவ்வாலம்விடுக்காவன்றி
யுண்காவென்றருள்செய்தான்வீராட்டகாசநகருரைத்துமாலோ.

சர்வசம்மாரகாலத்திருநடனம்.

வள்ளவாய்நறைக்கமலவெண்பீடத்தரசிருக்குமாதரன்னப்
புள்ளவாநடைநல்லாண்முலைமுகட்டிற்கோட்டியபூங்களபந்தோய்ந்த
கள்ளவாந்தொடைத்திண்டோண்மறைக்கிழவனொருவனுக்குக்கடையேனுள்ளத்
துள்ளவாமிறைவகுத்தபரார்த்தங்களோரிரண்டுமொழிந்தகாலை.

ஐவண்ணநிறம்படைத்ததிருமுகமைந்துடையபிரானருளாலந்திச்
செவ்வண்ணக்காலத்தீயுருத்திரப்புத்தேணுதற்கட்செந்தீப்பொங்கி
மொய்வண்ணவண்டமெலாமுழங்கிமிர்ந்தெழுந்துருக்கியுண்டுதேக்கி
மெய்வண்ணமனத்தன்பர்வினைப்பயன்போனீறாக்கிவிட்டதாக.

ஆயநாளிரவில்லைபகலில்லையயன்முதலாயுமலை
மேயவான்முதல்பூதமிலையேனைப்பவுதிகத்தைவிளம்புமாறென்
பாயபேரண்டமெல்லாமிவ்வாறுபடநீற்றிப்புரமூன்றட்ட
காய்கணையோனனந்தமேலீட்டிற்றன்னியல்புகருத்துட்கொள்ளா.

கடைநாளுமழியாதுதன்னொருபாற்பெருமாட்டிகாப்பவைகு
நடைமாறாத்திருக்காஞ்சிநகர்மன்னியுலகீன்றநங்கைகாண
விடையாமவிரவெல்லாந்திருக்கூத்துநவின்றருளியெறுழ்சால்வெள்ளை
விடையாளுந்தனிப்பாகனார்த்துவீரநகைவிளைத்தான்மேன்மேல்.

அவ்விரவுபுலர்காலைத்திருநடனநீத்திலிங்கவடிவமாகி
யவ்வரைப்பின்விளங்கினனதலினால்வீராட்டகாசத்தேவா
மவ்விலிங்கம்வழிபட்டுச்சிலர்சித்தராய்ப்புதமாஞ்சித்திபெற்றா
ரவ்வியல்புதனைக்கேட்டுக்கொங்கணமாமுனிச்செல்வனாங்கணெய்தி.

கொங்கணமாமுனிவர்வழிபாடு.

அவ்விலிங்கமேன்மையினையளந்தறிவானாங்கதன்றன்சென்னிமீது
செவ்வனேதன்குளிகையிந்திட்டான்மற்றவற்றின்சிரமேல்வைப்பி
னெவ்வமுறநீறாக்குமனையதையக்கணமேயவ்விலிங்கமுள்ளால்
வெளவியதுதனைக்கண்டான்வியப்பெய்தியவ்விலிங்கமுன்னர்வைகி.

மெய்த்தவங்களினிதாற்றிப்பேறுற்றானின்னுமவணமேவிச்சீர்சால்
சித்திகளையடைவாதுபெறுகின்றாரெல்லையிலர்செநநீர்தேக்கு
முத்தலைவேல்வீராட்டகாசீசன்மேன்மையெவர்மொழிவார்மாய
னத்தலத்தேவழிபட்டுப்பவளநிறம்பெற்றானவ்வகையுஞ்சொல்வாம்.

திருமால்பவளநிறம்பெற்றகாரணம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விரிதிரைசுருட்டிக்கரைமிசையெறியும்வெள்ளிவெண்பாற்கடல்வரைப்பி
னெரிமணிமாடப்போகமாபுரத்தினெய்தருந்தனியிடத்திருந்து
புரிமுறுக்குடைந்துநறவுகொப்புளிக்கும்பூந்துவிசணங்கினோடிணங்கி
வரிவளைக்குடங்கைவானவன்விளையாட்டியற்கையின்மகிழ்வுறுமொருநாள்.

மாயிருஞாலமுழுதுமீன்றளித்துமனைவியுமணாளனுமாயோ
ராயிடைப்பொழுதுகழிப்பியதம்முட்கதைசிலவறைகுவானமைந்தார்
பாயபாப்பணையிலறிதுயிலமர்வோன்பனிமலர்க்கிழத்தியைநோக்கித்
தேயுநுண்ணுசுப்பினகன்றபேரல்குலொருகதைகேளெனச்செப்பும்.

நன்னிறம்படைத்தநாமநீர்ப்பரவைநளிதிரைப்பாற்கடன்மாமை
புன்னிறந்தோற்றவெள்ளொளிவிரிக்கும்புகரறுகயிலையெம்பெருமான்
மின்னிடைமருங்குலுமையுடனொருநாட்கறங்குவெள்ளருவியஞ்சாரற்
றன்னிறமாண்டமந்தரப்பறம்பிற்றனியிடத்தினிதுறுமேல்வை.

[illegible]பிடற்றளிகள்கொள்ளைகூட்டுண்ணவீர்ந்தொடைநறுவிரியைம்பாற்
கமாமணிமேனிப்பிராட்டியைநோக்கிக்காளியென்றெம்பிரானழைப்ப
[illegible]லைக்கற்பினுள்ளகம்வெதும்பிவரிவிழிநித்திலமுகுத்துக்
குழாமுடையிமையோரேத்தெடுத்திறைஞ்சுங்கோமளையின்னதுகூறும்.

[illegible] நகைக்காளநிறம்படைத்துளன்யான்வெண்ணிறம்படைத்துளைநீயே
மாறுமாறுதகாய்நமக்குப்புணர்ச்சியெவ்வாறுநிகழுமற்றிங்கிதுகாறுங்
கடுந்தகையென்மாட்டருளினுலின்பக்கலவியிற்றிளைத்தனையினிநா
னடுந்தகைப்படையோய்கவுரியாம்வண்ணம்பெறுமுறையருடியென்றிரந்தாள்.

பொலங்குவட்டிமயப்பனிவரைப்பிராட்டிபுகன்றனதிருச்செவிசாத்தி
யிலங்குவெண்ணீற்றுச்சுந்தரக்கடவுளியம்புவான்வரிவிழிகேட்டி
கலங்கஞரெய்தேல்கடவுளர்கருமப்பொருட்டுனையிம்முறையழைத்தே
னலங்கொளவுலகநாடொறும்புரத்தனங்கடனுதலிற்கண்டாய்.

மற்றதுபின்னர்த்தெளிதிநீகவுரநிறம்பெறுமாறுனக்குரைப்பல்
வெற்றிடமின்றியெங்கணுநிறைந்துபாவெளிப்பரப்பிடைமேவும்
பெற்றியன்யானேயாயினுந்தகைசால்பீடுயர்தலங்களின்மாட்டு
மற்றமின்மறையோரகத்தினுமுலவாவருள்சுரந்தினிதுவீற்றிருப்பேன்.

மேம்படுமவற்றினுத்தமத்தளிகள்விதியுளிமறைநெறியொழுக்க
மோம்பிமிக்குயர்ந்தோருள்ளமுமெனக்குச்சிறந்தனவவற்றினுமேலாய்த்
தேம்பொழில்வேலிக்காசிமாநகரும்யோகிகள்சிந்தையுஞ்சிறந்த
வாம்பகரவற்றிற்காஞ்சியுமுண்மையடியவருள்ளமுஞ்சிறந்த.

தகைபெறுமவற்றின்வேறெனக்கினியதானமற்றெங்கணுமில்லை
நகைமலர்க்கொடியேயந்நகரெய்திநயந்தெனையருச்சனையாற்றி
மிகையறுதவத்தான்வேட்டவாபெறுதியென்றலும்விளங்கிழையுமையாள்
பகைவினைதுரக்குங்காஞ்சியினெய்திப்பஞ்சதீர்த்தக்கரைஞாங்கர்.

மாதவமியற்றிப்பொன்னுருப்பெற்றுக்கவுரியாய்வயங்கினளினைய
மேதகுமிறும்பூதென்னெனப்புகல்வேன்வெறிமலர்ப்பங்கயத்தவிசின்
மாதர்வாணகையாயென்றெடுத்துரைத்தான்மந்தரமலமாச்சுழற்றி
யோதநீரளக்கரமுதெடுத்திமையோர்க்கூட்டியபெருந்திறற்குரிசில்.

திருமகள் வேண்டுகோள்.

செய்யவள்கேட்டுவியப்புமீக்கூர்ந்துசெப்புவாளென்னையாளுடையா
யையவிச்செயலைக்கேட்டொறுமுலவாவற்புதம்பயக்குமான்மன்ற
மெய்யுணர்வின்பச்சத்தியுஞ்சிவனும்விளைக்குமிவ்விளைவுகளெல்லா
மையறத்தெளிந்தோர்திருவிளையாட்டின்வண்மையென்றியம்புவர்மன்னே.

இற்றலாற்காமற்காய்ந்துமுற்றுணர்ந்துவரம்பிலின்புடையவீசனுக்கு
மற்றெவனுளதோவவ்விளையாட்டுமுலகெலாமுய்யுமாறன்றே
யற்றெனவுணராக்கயவர்கள்காமத்திறமெனக்கருதுவரனையர்
பெற்றியையாரேதெளிதரற்பாலார்பிறங்கொளிமணிநிறக்குரிசில்.

நிலையியற்பொருளுமியங்கியற்பொருளுநிலைபெறத்தொழிற்படுத்துடைய
தலைவனங்கவனேபனிவரைப்பிராட்டிதன்னையுநின்னையுமிடப்பான்
மலரணைப்புத்தேடன்னையுமெனையும்வலப்புடைக்காலருத்திரனைக்
கலைமகடன்னையுமுளத்திடைத்தந்தான்காத்துயிர்த்தழிப்பதுகருதி.

அகிலமுந்தானேயருட்டொழினடாத்துமாங்கவற்கெவற்றினுஞ்சால
மிகுபெருங்காதலுமையவளிடத்தும்விரவுநின்னிடத்தினுமன்றே
முகிலுறழ்கூந்தலவளெனநீயுமுதல்வனேயுன்னடியேற்கு
மகிழ்வுமீக்கிளைப்பவவ்வுருப்பெறுதியென்றனண்மலரணைக்கிழத்தி.

விளங்கிழைமாற்றமச்சுதன்கேளாவெகுண்டுநின்மனக்கருத்திதுவேற்
களங்கனியனையேன்றன்னுடனிந்நாள்காறுநீபொலஞ்சுடர்நிறத்தாய்
வளங்கெழுமின்பமென்னணநுகர்ந்தாய்மற்றினிச்செக்கர்வானுருவ
முளங்கொளப்பெறுகவென்றவட்கியம்பிக்கதுமெனக்கரந்தனனாங்கு.

கச்சிமாநகரமெய்திவீராட்டகாசநல்வரைப்பினுக்கெதிரா
வச்சிவன்வீரநகைதிரண்டனையசக்கரதீர்த்தமுண்டாக்கி
முச்சகமேத்துங்கங்கையிற்சிறந்தவததடமூழ்கிநோன்பியற்றிப்
பச்சைமால்வதிந்தான்வதிந்திடம்பச்சைவண்ணனாலயமெனப்படுமால்.

ஆங்ஙனம்வைகிநாடொறுமீரேழாயிரமலிகெழுபொகுட்டுத்
தேங்கமழ்கமலங்கொண்டுவீராட்டகாசமாதேவனையருச்சித்
தோங்குபேரன்பிற்றொழுதெழுந்திரப்பவுலப்பருங்கருணைமீக்கூர்ந்து
மாங்குயில்பாகனெதிரெழுந்தருளிவழங்கினன்பவளநேர்வடிவம்.

பொரியரைக்காயாம்போதுறழ்வண்ணங்கழீஇத்துகிர்புரைநிறமெய்திப்
பெரிதுளமகிழ்ந்தானாயிடைச்சிலநாள்வைகிமீண்டரவணைப்பெருமான்
விரிதிரைத்தீம்பாற்கடலகத்தணுகிவிரைமலர்க்கிழத்தியோடிணங்கித்
தெரியிழைத்திருவேகாண்டிநீபவளச்சேயொளிதழைக்குமிவ்வடிவம்.

கச்சறப்பணைத்துப்புடைபரந்தெழுந்தகதிர்மணிமுலையினாயிதுவென்
னிச்சையாற்பெற்றேன்விழைந்தவாறென்மாட்டின்னலீநுகரெனக்கேட்டுப்
பச்சிளந்தோகையிந்நிறமடிகளிச்சையாற்படைத்ததேன்மாய
விச்சையேபோலுநிலைமையன்றெனக்கீதென்பயன்விளைத்திடுமென்றாள்.

திருமகள்காஞ்சியடைதல்.

பாய்சிறைக்கலுழப்புள்ளரசுகைக்கும்பஃறலைச்சேக்கையன்வெகுளா
நீயினியிருந்தைவண்ணமாகென்னச்சபித்தலுநேரிழைமேனிச்
சேயொளிகருகக்கண்டுளம்பதைத்தாள்சிறியனேன்செய்பிழைபொறுத்திங்
கேயுமிச்சாபந்தவிர்த்தருள்பொறையாள்கொண்கனேயென்றடிபணிந்தாள்.

தெம்முனைகடந்ததிகிரியோனிரங்கிச்சீற்றத்தால்விரைந்துனைச்சபித்தே
னம்முறையாற்றாற்கரிநிறம்பெற்றாயாயினுமுன்னையின்விழைய
வெம்முலைப்போகமெனக்குளதாகவெருவலையெனத்தழீஇக்கொள்ளச்
செம்மலர்த்திருவுமடியிணையிறைஞ்சித்திருந்துதன்னிருக்கையுட்புக்காள்.

புக்கபினங்கட்பாங்கியர்தம்மோடுசாவினள்புதுநறாக்கான்று
நக்கபூஞ்சோலைக்காஞ்சிமாநகரைநண்ணியாங்கிணைவிழிகளிப்பத்
திக்கெலாம்பரசத்திகழுலகாணித்தீர்த்தநீர்த்தடங்கரைமாடே
மைக்குழலுமையாளினிதமர்ந்தருளித்தவஞ்செயும்வரைப்பினைக்கண்டாள்

அனையநல்வரைப்புநுண்பிலமாகியருட்பரவெளியதாய்த்திகழுங்
கனைகடலுடுக்கைநிலமகட்குந்தித்தானமாங்கமழ்நறுங்கடுக்கைத்
தனிமுதற்பிரமந்தனக்கொருவடிவாந்தாழ்குழலுமையவட்கடியார்
வினைதபுமூலத்திருவுருவதுவேவிளங்கொளிக்காஞ்சியம்பதியுள்.

குறைவிலாநிறைவாயுண்மையாயறிவாய்க்கொட்புறுமனமடங்கிடமாய்
மறைமுடிப்பொருளாயின்பமாய்ச்சிவமாய்மாசறவயங்குபேரொளியை
நிறைதவயோகத்தலைவரிவ்வாறுநெஞ்சகத்தேவழிபடுவா
ரறைகடற்பரப்பிற்காஞ்சிமாநகரினுயிடைவழிபடுவாரால்.

காமக்கோட்டப்பேருரைமாக்ஷி.

ஒருமுறையங்கட்...மாந்தருமமுஞற்றுநர்தமக்குமத்தருமந்
தருபயன்கோடிய ...பிற்கரடத்தடத்திழிகடாம்படுகலுழிப்
பெருவரைவதனப்பிள்ளையைக்குகனைப்பெற்றவளமர்பிலமதுதான்
கருதருகாமக்கோடியென்றுலகிற்காரணப்பெயரினுல்வயங்கும்.

அன்றியுங்...க்கிறைபவர்தனதரனையவர்கோடியர்த்தரலா
லென்றுமோரியல்பினெங்கணும்விரவியெவற்றினுங்கடந்தபேரொளியைக்
குன்றுறழ்கொம்மைக்குவிமுலைத்தடத்தாற்குழைத்தருள்கருணையெம்பிராட்டி
நன்றுவீற்றிருக்கும்பேரொளிப்பிலத்திற்கப்பெயர்நாட்டலுமாமால்.

இன்னுமிப்புவனப்பரப்பினிற்காமமென்பனமனைவியர்மக்கள்
பொன்னணியிருக்கைப்பூண்முதல்பலவாம்பூந்தளிரணிநலங்கவற்றுந்
தன்னடிவணங்கியிரந்தவர்தமக்குத்தடங்கிரிபயந்தபேராட்டி
யன்னவைகோடியளித்திடலானுமப்பெயரெய்துமங்கதுவே.

அல்லதூஉங்கவைத்தாட்கரும்பகட்டேர்தியடுதொழிற்கூற்றினைக்குமைத்த
கொல்லையேற்றண்ணனுதல்விழிச்செந்தீக்கோட்படுமொருதனிக்கருப்பு
வில்லியைவிளையாட்டியற்கையிற்கோடிகாமராவிழித்துணைக்கடையா
லல்லியங்கோதையாங்களித்திடலாலப்பெயர்பூண்டதுமாமால்.

மற்றுமாருயிர்சேர்நாற்பொருட்பயனில்வகுத்தமூன்றாவதுகாமம்
பற்றுகாமத்திற்கோடியாமுடிவிற்பயில்வதுவீடுபேறுகு
முற்றவர்தமக்குவீடுபேறளிக்குமுண்மையினுலுமப்பெயராற்
சொற்றிடப்படுமாலுலகெலாமீன்றுளபர்ந்தருள்சுடரொளிவிமானம்.

பின்னருமொன்றுககரமேயகரமகரமாப்பிரிதருமூன்று
மன்னவேறுகைக்குமயனரியீசனுயமுத்தேவரைப்பகரு
மின்னவர்தம்மையுகந்தொறுங்கோடிமுறையெழில்விழிகளிற்படைத்தாண்
மின்னிடைப்பிராட்டியென்பதனுலுமப்பெயர்விளங்குமென்பதுவே.

வேறுமொன்றுங்கட்காவெனப்படுவாள்வெண்மலராட்டிமாவென்பா
ளூறுதேங்கமலப்பொகுட்டணையணங்காமூங்குவரிருவருமுகிலை
மாறுகொளைம்பாலுமைவிழிக்கோடிதன்னிடைவருமுறையானு
மேறுமத்திருப்பேரெம்பெருமாட்டிக்கென்றெடுத்தியம்புவருணர்ந்தோர்

விங்கவின்வயங்கியம்பைவீற்றிருக்கும்வியன்றிருச்சக்கரவடிவா
மடுதவான்பிலந்தானியம்பியகாமமனைத்திற்குமாதரமாகிப்
பந்தமில்காமக்கோட்டமென்றொருபேர்பரித்திடுமெற்றெவற்றினுக்கு
முந்தியபீடமாதலினுதிபீடமுமொழிந்திடப்படுமால்.

திருமகள்வழிபாடு.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இனையதாகியதிருப்பிலமதனை...மிடற்றிளஞ்சுருப்பினமுரலு
நனைகலுழ்ந்தலர்மலர்த்தவிசி...கையலர்க்கொடிகண்டுகைதொழு
யனையசூழலினிடப்புறம்வைகியடங்கலார்புரமழலெழச்சிரித்த
முனைவனர்க்கொருசத்தியாயின்பாய்முழுதுமாகியவகிலகாரணியை.

பாதமொன்றொடுநிவிர்த்தியாற்றரைக்கட்பதமிரண்டொடுபெதிட்டையாற்புனற்கட்
பாதநான்கொடுவித்தையாற்கனற்கட்பதங்களெட்டொடுசாந்தியால்வளிக்கட்
பாதமொன்பதனொடுவெளிப்பரப்பிற்பகருஞ்சாந்தியினதீதமாங்கலையாற்
பாதமாயிரத்தொடுபரவெளிக்கட்பயிலுமக்கரத்தனிமுதல்பரையை.

கருமைசெம்மைவெண்ணிறமுடையாளைக்காமக்கோடியாம்பெயருடையாளை
யருவிதாழ்குவட்டணிமலைமகளைமாயையோடுலகனைத்துமுயிருமா
யுருகிநெக்குநெக்குளப்பெருங்கோயிலுள்ளுறுத்தியென்னுடம்பினைப்பொலிக்கு
மருவுமிக்கருநிறஞ்செதிளெடுப்பான்கருணைசெய்கெனவழிபடலுமுமா.

வருணனருணைவாருணியென்னபயிருகுமாதவற்கருளியவாற்றாற்
பிருகுவாரணாருணைவழிபடுவார்பெருவளத்தொடுவாழ்வரென்றுரைப்ப
வருவினைப்புலக்குறும்பெறிந்துயர்ந்தபிருகுமாமுனிமகளடியேற்குங்
கருணைசெய்வதுகடனுனக்கன்றேகருப்புவில்லியைக்காய்ந்தவர்க்கினியாய்.

காவெனப்பெயரியகலைமகளைமுந்தைநான்றுநின்கண்ணெனப்புரந்தாய்
மாவெனப்பெயருடையமற்றெனையுமலர்ந்தநின்விழிபோற்புரந்தருளி
யேவெனப்பிறழ்தடங்கணாய்காமக்கண்ணியாம்பெயரெய்துவையென்னுப்
பூவெனப்பயிலணைமிசைக்கிழத்திபோற்றிசைத்தலுமெதிரெழுந்தருளி.

திருமகள்வரம்பெறல்.

எம்பிராட்டிவான்கருணைகூர்ந்தருளியேடவிழ்ந்தபூந்தவிசுறையணங்கே
கம்பியாதிமற்றுன்னுடற்கருமைகரியசாந்தமாக்கழிகமுன்னையினு
நம்பூநல்லுருப்பெறுதியிப்பொழுதேகாரணற்குமிக்குரியவளாவாய்
வம்பறுத்தெழுந்தோங்கியண்ணாந்துமதர்த்துவீங்கியவனமுலைத்தோகாய்.

அழகுவாய்ந்தநின்வடிவினிற்கழியுமனையசாந்தணிநுதலினர்தமக்கு
விழவுமின்பமுஞ்செல்வமும்புகழுமேகவின்மையுமிகழுமற்றொழிக
பழையவேதமுற்றுணர்ந்துயர்சிறப்பிற்பனுவலாட்டியுமிவணமர்செயலாற்
கழிவிலன்பினீவேட்டவாறெனக்குக்காமக்கண்ணியாம்பெயருறுகென்ன.

திருமால்தேவியார்கட்டளையேற்றல்.

இனையவாறிவணிகழ்வுழிச்சுரும்பரிமிருந்தாமரையுந்தியங்கடவுண்
மனையகத்துமாமடந்தையைக்காணான்மனமழுங்கினன்பிரிவுநோய்வருத்தக்
கனைகடற்பரப்பெங்கணுந்தேடிக்காஞ்சிமாநகராவயிற்கண்டா
னனையதாரமுமிறைவியுந்தம்முளுறைவகேட்டவனொளித்துநின்றனனால்.

ஓள்வளைக்கரத்திருவருமவனையுணர்ந்துநோக்கினளென்னையாளுடையாள்
கள்வனொத்திவணிற்பவன்யாரேயெனக்கடாயினள்கடிமலரணங்கும்
வெள்கலுற்றுமுன்னிறைஞ்சினண்மாயோன்விரைவினம்பிகைதிருவடிவணங்கி
யுள்ளகம்பெருமகிழ்ச்சியிற்றிளைப்பவொருமருங்குறவொடுங்கிநின்றனனே.

நங்கைநாகணைக்குரிசிலைநோக்கிநன்றுவந்தனையோவெனவினவி
யங்கண்மூச்சகநீபுரந்தளிக்குமாருயிர்த்தொகையினிதுவாழ்ந்தனவே
பங்கயக்கணேயென்றலுங்கலுழப்பாகனின்னருட்கருணைபெற்றுடையே
மெங்கள்வாழ்வினுக்கெவன்குறையானுமிவளுமுய்ந்தனமெனத்தொழுதுரைத்தான்.

இறைவிபின்னருமொன்றலற்கியம்புமீண்டுமுப்பதிற்றிரண்டறம்வளர்க்கு
முறையினென்னறச்சாலையிதிங்கோர்மூரிப்பாரிடமிதற்கிடையூறுய்க்
குறைவிலாற்றலினுழிதருமதனைக்குறும்படக்குதிநீயெனவேவ
நறைமலர்த்துழாய்மோலியுமிறைஞ்சிநயந்துபஞ்சதீர்த்தத்தடங்கரைப்பால்.

திருமால்பூதனுயிருண்டெழுந்தருளல்.

அன்றுபாரிடம்பாரிடைவீழ்த்தியாற்றலான்மிதித்ததன்மிசைநின்று
னின்றவன்றனையுந்திமேலெழும்பநெரித்திருந்தனனிருந்தவன்றனையும்
வென்றிசால்விறற்பூதமேலுந்தநீண்டுமற்றதன்மிசைப்படக்கிடந்தான்
கன்றுபூதமும்வலிமுழுதிழந்துகடலக்கண்ணனைவணங்கியொன்றிரக்கும்.

வள்ளலேமலர்த்திருவிளையாடுமார்பனேபெரும்பசியெனைவருத்த
வுள்ளுடைந்துளேனுண்டுதோறடியேற்கொருமகன்றனையுயிரொடுமுதவிற்
கொள்ளுமப்பலியேற்றுளமகிழ்வேன்கொடுத்தியிவ்வரமெனக்கெனவரவப்
பள்ளியோனுமற்றுகெனவிளம்பிப்பத்தர்போற்றவத்தலத்தினிதிருந்தான்.

கள்வனின்றவனிருந்தவன்கிடந்தோனென்னுநால்வகைக்கரிசறுவடிவால்
வெள்வளைக்கரக்கடவுளங்கமர்ந்தான்விமலநாயகியாணையினாற்றன்
முள்ளெயிற்றராப்பணம்புரையல்குன்முளரிமாதுமப்பிலத்தயலிருந்தாள்
புள்ளுயர்த்தவற்கினியவாமங்கட்போற்றப்பெற்றவர்வைகுந்தம்புகுவார்.

கறைமிடற்றிறைவைகும்வீராட்டகாசமேன்மையின்றொடர்ச்சியாலிங்கே
யறைகழற்றிருநாயகன்வரலாறனைத்துங்கூறினுமத்திருநகரை
நிறைவிருப்பினாலொழிபடப்பெறுவோர்நிலமிசைப்பெருவாழ்வினராகிப்
பிறைமுடிப்பிரான்றிருவடிக்கலப்பிற்பெறலரும்பரபோகமுற்றிருப்பார்.

வீராட்டகாசப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஎசகூ

பாண்டவீசப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

பேரின்பச்சாக்கியனார்கல்லெறிக்கும்பேறுதவு
வார்தங்கும்வீராட்டகாசவரவிதுவாற்
சீர்தங்குதென்பாற்றிருப்பாண்டவீச்சரமாங்
கார்தங்குமிஞ்சிக்கடிநகரங்கட்டுரைப்பாம். க

தருமம்பயந்ததநயன்முதலோ
ருருகெழுவெங்காட்டினுரோமசனேயாதித்
திருமுனிவர்தம்மோடுந்தீர்த்தமெலாமாடக்
கருதிநடந்தார்கழியாதகாதலார். உ

அங்கங்கிலிங்கநிறுவியருச்சித்துப்
பங்கந்துமிக்கும்பரம்பொருளைப்போற்றிசைத்துச்
சிங்கம்படுக்குந்திறலார்வருநெறியார்
தெங்கம்பொழில்சூழ்திருக்காஞ்சிநண்ணினார். ங

அங்கட்பலதளியுநோக்கியகமகிழ்ச்சி
பொங்கித்திருக்கம்பமாதியாப்புண்ணியநீர்க்
கங்கைச்சடிலக்கடவுளிடமெல்லாந்
துங்கப்பேரன்பிற்றொழுதுதொழுதேகினார். ச

வீராட்டகாசங்கடைக்கால்வியன்மலர்கொண்
டாராப்பேரன்பினருச்சித்ததன்றென்பா.
லோராரத்தத்தம்பெயர்சாத்தியெல்லாருந்
தாரார்த்தகொன்றைச்சிவலிங்கந்தாபித்தார். ரு

அறமைந்தன்வீமன்விசயனலர்பூந்தார்
நறவிண்டதிண்டோணகுலசகாதேவர்
மறனின்றியின்னோர்மனைக்கிழமைபூண்ட
முறையொன்றுகற்பிற்றுரோபதைமுன்னோர். ௬

சீரார்திருட்டத்துமனன்சிகண்டிமற்று
மேரார்கழற்கால்யதுமரபின்மன்னருட
னூரானுற்கண்பினுரோமசர்முற்கலனூர்
பாரார்வியாதர்முதலாயபன்முனிவர். ௭

என்றினையரெல்லாமிலிங்கந்தனித்தனியே
நன்றிருத்தியேத்திநயப்பாடுபெற்றூரா
லன்றவர்கள்போற்றுமிலிங்கமவைகண்டோர்
மன்றினடமாடும்வள்ளலருள்பெறுவார். ௮

கயிலாயநாதீச்சரம்.

அன்னவற்றின்றென்பாற்கயிலாயமவ்வரைப்பி
னன்னர்கயிலாயநாதன்றனைநிறுவி
மன்னுந்திசைக்கிறைமைபெற்றான்மருவலார்க்
கின்னல்புரிமுத்தலைவேலீசானனென்பவே. ௯

பாண்டவீசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஎ௫௫.

மச்சீசப்படலம்.

கலிவிருத்தம்.

பார்த்தாதியோர்வழிபடும்புக
ழார்த்தசூழல்கள்விளம்பினுமருள்
கூர்த்தவப்புலக்குடக்கணிப்பிநீர்த்
தீர்த்தஞாங்கர்மச்சீசங்கூறுவாம். க

ஒப்பிலற்புதமுணர்த்தவெம்பிரா
னிப்பிமுத்தமங்கெடுத்தளித்தலாற்
செப்பரும்புகழிப்பிதீர்த்தமென்
றப்பெரும்பெயரதனுக்காயதே. உ

மற்றதன்கரைமச்சலிங்கமொன்
றற்றமில்லரியருச்சித்துள்ளது
துற்றபாதகச்சோமகாசுரன்
கற்குமாமறைகவர்ந்தொளித்தநாள். ௩

ஓத்தொழிந்தனவுலகம்யாவையு
நீத்தவேள்வியநிலைமைகுன்றலாற்
றீத்தெறும்பசித்தேவர்மாயனைச்
சோத்துநீசரணெனத்துதித்தனர். ௪

அஞ்சலீரெனவருளியச்சுத
னெஞ்சகத்துறநினைவினொடினு
னெஞ்சுறுமறையாவுங்கைக்கொடு
வஞ்சனுழியுண்மறைந்தவண்ணமே. ௫

பிருகுமாமுனிசபித்தபெற்றியா
லொருவருங்கயலுருவுதாங்குபு
மருமலர்ப்பொழிற்காஞ்சிவைப்பிடைப்
பொருவிலிப்பிநீர்ப்புடையினண்ணினன். ௬

வேறு.

சுலங்குகொண்மீனுருத்தன்பெயர்நாட்டியங்
கிலிங்கமன்பினிருத்தியருச்சனை
துலங்கச்செய்தருள்பெற்றுத்தொகுநிதிக்
கலங்கண்மல்குகடலகத்தெய்தினன். ௭

சோமகன்றனையட்டுச்சுருதிகண்
மாமறைக்குலத்தார்க்குவழங்கினு
னுமநீர்க்கடனுகணைப்பள்ளிமேற்
றுமரைக்கண்வளருந்தகைமையான். ௮

சங்கநேருருப்பஞ்சசனப்பெயர்
வெங்கணுனையுமாயிடைவீட்டியே
துங்கவோசைவலம்புரித்தோற்றமா
மங்கவன்றனெலும்பையணிந்தனன். ௯

கச்சிமாநகர்வைப்பிற்கருந்துழாய்
மச்சமர்ச்சித்தமச்சலிங்கத்தினை
நச்சியேத்துநர்தாம்பெறுநன்னல
மிச்சகத்தெவரிற்றென்றளப்பரே. ௧0

மச்சீசப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧எ௬௫.

அபிராமீச்சரப்படலம்.

கலிவிருத்தம்.

காவுசூழக்கனலிச்சுருப்பின
மேவுமச்சலிங்கேசம்விளம்பினும்
வாவிமல்குமதன்வடமேற்றிசைத்
தாவில்சிரபிராமீச்சரஞ்சொல்வாம். ௧

வேறு.

மாவலியெனப்பெயர்மரீஇயதானவர்
காவலனுலகெலாங்காத்தளிக்குநாட்
டேவர்கட்கிறையவனரசுதேய்தலின்
யாவதுசெயலெனக்கினியென்றெண்ணுழி. ௨

செந்தளிர்மலரடித்திருவினுயக
னிந்திரற்கிளையவனென்னக்காசிபுன்
மைந்தனுய்க்குறளுருத்தாங்கிமுன்னினன்
முந்தையோர்க்கரசியலுதவமுன்னியே. ௩

அலங்கொளிக்காஞ்சியினபிராமீச்சர
விலிங்கமங்கியல்புளிவழிபட்டேத்தினான்
வலம்பெறச்சிலபகல்வைகிக்கங்கைநீர்
சிலம்புவேணியனருள்செய்யப்போந்தனன். ச

வெய்யவாளவுணர்கோன்வேள்விச்சாலையி
னெய்திமூவடிநிலமிரந்துவேண்டினான்
கைதவமுணர்ந்தெதிர்தடுத்தகாழ்படு
மையறுவெள்ளியைவிழியைமாற்றினான். ரு

தன்னடிமும்மையினளவைசாலிட்
மன்னிலையவுணர்கோனளிப்பவேற்றனன்
கொன்னுறவளர்ந்தனனண்டகூடமேற்
சென்னிபோயுரிஞுறத்திகழ்ந்துதோன்றினான். சா

ஈரடிப்படுத்தனனுலகம்யாவுமற்
றோரடிக்கிடம்பெறுனுதவினான்றனை
யாரிடைப்பாதலச்சிறையினுக்கின
னேருடைப்புரந்தரற்கிறைமைநல்கினான். எ

மறுவறுங்காஞ்சிமாவரைப்பினண்ணுபு
நறுமலர்ச்சடையபிராமநாயகன்
பிறைமுடிக்காட்டுவான்வாமனப்பெயர்
நிறைபுனற்குண்டமொன்றகழ்ந்துநீடியே. அ

புண்ணியப்பூம்புனலாட்டிப்போர்விடை
யண்ணலைத்தொழுதுலகளந்தபேருருக்
கண்ணுதன்மகிழ்வுறக்காட்டிப்பூந்துழாய்ப்
பண்ணவனுயிடைப்பணியின்மேயினான். கூ

அபிராமீச்சரப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஎஎச.

கண்ணீசப்படலம்.

கலிவிருத்தம்.

வாமனப்பெயர்மாணிதொழுமபி
ராமநாதவரைப்புவிளம்பினு
நாமநீர்த்தடங்காஞ்சிநகர்வயி
னேமமாண்டகண்ணீசமியம்புவாம். க

கடலுயிர்த்தகடுவிடந்தாக்கிமுன்
னுடலெலாங்கரிவுற்றுவெதும்பலாற்
படவராவணைப்பண்ணவன்மாழ்கியவ்
விடமயின்றவிமலனைப்போற்றுவான். உ

கச்சியெய்தினன்கண்ணலிங்கத்தினை
நச்சியுன்பினிதீஇநயந்தேத்தினன்
பச்சைமென்கொடிப்பாகன்கருணைகூர்ந்
திச்சையாதுவிளம்புதியென்றலும். ந

குமுதவாய்ப்பசுங்கோமளைகூறநீ
யமிழ்திரைக்கடல்வெவ்விடமென்பொருட்
டமுதுசெய்தனையங்கதன்முன்னமத்
திமிரநஞ்சஞ்சிறிதெனைத்தாக்கலால். ௪

மேனிமுற்றுங்கருகிவெதும்பினேன்
யானினிப்படும்வெப்பிதுவாற்றலேன்
கானிலாயகடுக்கைத்தொடையொடு
தூநிலாப்பிறைசூற்றியமோலியாய். ௫

பங்கநீக்கிநலுந்தருபான்மையாற்
சங்கரன்சிவன்சம்புவுருத்திரப்
புங்கவன்னெனநாமங்கள்பூண்டனை
யங்கணுவடியேனுன்னடைக்கலம். ௬

என்றுமாயனிரந்திடுவேண்டலுங்
கொன்றைமாலைக்குழகனிரங்கினன்
மன்றலந்துணர்வாசத்துளவினோ
யென்றுகேட்டியுனக்கிதுவேண்டுமேல். ௭

என்றும்யாமகிழேகம்பலிங்கமுற்
சென்றுநம்முடித்திங்களிலாத்தய
னின்றுகச்சிநிலாத்துண்டமாலென
வொன்றுநாமம்பெறுதியென்றும்பர்கோன். ௮

நாமவெந்துயர்தீர்திறநல்குபு
வாமமேகலையோடுமறைந்தனன்
றாமலர்த்துளவோனுந்தொழுதெழூஉத்
தீமைதீரத்திருமுன்னர்வைகினன். ௯

கவுசிகீச்சரம்.

கரியவன்பணிகண்ணலிங்கீசனை
யுரியவன்பின்வழிபடுவோரும்பர்
மருவிவாழ்குவர்மற்றுங்கவுசிகீச்
சரமொன்றுள்ளதுசங்கரன்றனமே. ௧௦

வரையணங்குவடிவிற்கழிந்தகா
ருரிவைகோசத்துதித்தகவுசிகி
யிருமையன்பினிருத்தியருச்சனை
புரியும்பொற்பதுமற்றும்புகலுவாம். ௧௧

மாகாளீச்சரம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உலகாணித்தடமருங்குமாகாளீசமொன்றுளதுமாகாளனெனும்பேரன்பின்
விலகாதபாப்பரசுவீடுபேறுவிழைந்தேதென்றிசைக்கயிலைவேணித்திங்கட்
கலையானைத்தொழுதுறைநாளனையாற்றுற்காஞ்சியிற்போந்தவ்விலிங்கநிறுவிப்போ
நிலவீடுதென்கயிலைமீளநண்ணிநீப்பரியபெருவாழ்வுநிலாயதன்றே. [ற்றி

கண்ணீசப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௭௮௯.

குமரகோட்டப்படலம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கடப்பரும்பிறவிவேலைசுவற்றுங்கண்ணலிங்கமொடுகவுசிகலிங்க
மடப்பிடிக்கிடமளித்தபிரான்மாகாளலிங்கமெனுமூன்றுமொழிந்தா
மடற்படைச்செறுநர்சேனையனைத்துமழித்துழக்கிநிணமுண்டுதிளைத்துக்
குடர்க்கொழுந்தொடைமிலைச்சியசெவ்வேற்குரிசில்வாழ்குமரகோட்டமுரைப்பாம்.

குமரக்கடவுள்திருவிளையாடல்.

தருக்குமிக்குடையதாருகனென்னுந்தானவர்க்கிறைமையைவெய்யகளத்தின்
முருக்கியாருயிர்செகுத்துவிசும்பின்முதல்வனுக்கிறைமைநல்கியபின்னர்ச்
செருக்கடந்தவடிவேல்வலனேந்துஞ்செம்மல்வெள்கயிலைமால்வரையெய்தி
மருக்கடுக்கைமுடிவள்ளலையோர்பான்மலைமடந்தையைவணங்கிமகிழ்ந்து.

அலகிலண்டமுமளித்துவளர்க்குமம்மையப்பர்தமடித்தலமேறி
நிலவரும்புகனிவாயெழில்காட்டிநெடிதுபோதுவிளையாடியடுக்கற்
குலமடப்பிடிகலன்பலபூட்டிவிடுப்பமீண்டுகொடிநீள்கடைவாயில்
வலமிகுத்தகயமாமுகனுவிமாட்டுமுன்னிளவல்வைகுழியுற்றான்.

ஊங்குவன்மடிமிசைக்கொடுபல்காலுச்சிமோந்துகவுண்முத்தமுமுண்டு
வீங்குமன்பொடுதழீஇக்களிகூர்ந்துவிடையளிப்பமுகமாறுடையெங்கோன்
யாங்கும்வைகுகணநாதரிடந்தோறெய்தியாடலுறுவானதுகாலை
யாங்கணுன்முகவனும்பர்குழாத்தோடம்மையப்பரைவணங்கவணைந்தான்.

அங்கணின்றுவிளையாட்டயர்செவ்வேலண்ணலைச்சிறிதுநோக்கலனண்ணி
மங்கைபாகனைவணங்கிவழுத்திவாழ்வுபெற்றுவிடைகொண்டுதனாது
பொங்குசீருலகமெய்தியமீண்டான்மீளுமப்பொழுதுமாவயினுடும்
துங்கவேலிறையைநோக்கலனேகத்தோகைமஞ்ஞையுடையானதுகண்டான்.

பிரமன்சிறையடைதல்.

செழுமலர்க்கமலம்வைகியசெம்மலிகழ்ந்துசெல்லுமறிவின்மைகுறித்து
விழிசிவந்துகுறுமூரலரும்பிவருகவீண்டெனவிளித்தலுமன்னோன்
கழிசெருக்கினன்வணங்கியடங்கிக்கைகள்கூப்பிநணுகிப்புடையுற்றான்
கொழிமறைப்பனுவலான்முகநோக்கிக்குன்றெறிந்தசுடர்வேலிறைவிள்ளும்.

யாவனீயுறைவதெவ்விடமன்னும்யாதுசெய்தொழிலுமெக்கலைவல்லாய்
நீவிளம்புகெனயான்பிரமன்சிர்நிறையருட்கருணைநுந்தையெனக்கன்
றேவுறுங்கலைகண்முற்றும்விளங்கவோதுவித்துலகநன்குபடைப்பா
னேவவைகுறுவல்சத்தியலோகத்தென்றுபன்முறைவணங்கியுரைத்து.

இமவரைத்தலைவியோடுபிரானையேத்தவேண்டியிவணெய்தினனன்றோ
தமதுகட்கருணைபெற்றனன்மீண்டேன்றாழ்விலாதுசெய்தவத்திறனுலுன்
கமலநோக்கருளுமின்றுகிடைக்கேன்காதலுன்னடியேனினியென்னூர்க்
கமலநாயகசெல்கின்றனனென்றான்முகக்கடவுளன்னதுகேளா.

நன்றுசொற்றனையுணர்ச்சியின்மிக்காய்ஞாலமுற்றுதவுநான்முகனீகொல்
குன்றவில்லியருளாற்கலையெல்லாங்கோதறத்தெளிதலுற்றனையன்றே
யொன்றுமக்கலைகண்முன்னுறவென்னேயோதுமக்கரமதன்பொருள்யாதோ
வின்றெனக்கிதுவிளம்புதியென்றானேடவிழ்க்குமலராளியிறைஞ்சி.

ஐயநுந்தையருளின்றியெமக்கோரறிவுமுள்ளதுங்கொலாதியிலோது
மெய்யெழுத்தையறிகின்றிலனங்கண்விளம்புமப்பொருளுமியானறிகில்லே
னுய்யுமாகருணைவைத்தெனையாளென்றுரைத்திரந்துகடிதேகமுயல்ரூன்
பொய்கடந்தவனுமாதியெழுத்தின்பொருளுரைத்தலதுபோகலையென்று

சென்னியைக்துடையவெந்தைபிரான்றன்றிருவடிக்கண்விரையுறக்கவிவைப்பேன்
பன்னுகிற்றிகடிதென்றலுமன்னேஞ்பகவனீன்றதனிமாமகனீயே
யென்னபல்கலையுமுன்னிடைவைகுமெம்பிரானடியிலாவணதரேல்யா
னுன்னரும்பொருளினுண்மையெனக்குத்தெரிந்தவண்ணமுரைசெய்குவலென்று.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பல்கலைக்குமுதலாகப்புகன்றிடுவதோமென்னும்பதமாமந்தச்
சொல்விளக்கும்பொருளயன்மாலீசனெனுமூவரெனச்சொல்வர்மேலோர்
மல்குமறையுட்பொருளாய்ச்சுடரொளியாயோகுடையார்மனத்தேதோன்று
மல்கியசீர்ப்பிரணவத்தையுணர்ந்தவரேவீட்டின்பமடையவல்லார்.

முன்னெழுத்துமதன்பொருளுமிவ்வளவேயானறிந்தேன்முதல்வாபோற்றி
யென்னையினிவிடுத்தருளாயெனலோடுங்கணங்கண்முகநோக்கியின்னேன்
புன்னிலையன்சிறிதேனுமுணர்ந்திலான்றருக்குமிகப்பூண்டான்கண்மர்
துன்னரியசிறையின்கண்மற்றிவனைப்புகுத்துமெனவெகுண்டுசொல்லி.

தன்வரைப்பிலலரோனைச்சிறைப்படுப்பித்துலகமெலாந்தானேதோற்று
மிந்நிலைமைத்தலைநின்ருனறுமுகவேளுடனெய்துமுனிவர்தேவ
ரன்னவனைக்கொடுபோதப்பின்சென்ருரவ்வரைப்பினளவுமப்பாற்
கன்னவிரேட்கணநாதர்பிடித்துந்தமீண்டமுங்கிக்கயிலைபுக்கார்.

பெருமான்பிரமன்சிறைவிடுவித்தல்.

புக்கிறைவன்றனைவணங்கிநிகழ்ந்தவெலாம்விண்ணப்பஞ்செய்யப்பூந்தே
னக்கஈறுந்தொடையிதழிக்கடவுளவர்தமைநோக்கிநவில்வானென்னே
ட———ன்விளம்பியவாநம்மையுநம்புதல்வனையுமன்றேமான
மிக்கபுகழ்ச்சுருதியெலாம்பிரணவத்தின்பொருளாகவிளம்புமாறே.

எக்கலைக்கும்பூதங்களெவற்றினுக்கும்பிரமனுக்குமீசனென்னத்
தக்கமுதல்பரப்பிரமஞ்சதாசிவனேமெனவேதஞ்சாற்றுமல்லான்
முக்கனல்சூழ்வேள்வியிற்சுப்பிரமணியனேமெனவுமுக்காற்கூறு
மிக்கருத்தையறியானையெவ்வாறுவிடுவிப்பதியம்புமன்னே.

அருள்வலியாலாங்கவனைவிடுவித்துமஞ்சேன்மினென்றுகூறித்
திருநந்திநாயகனையெதிர்நோக்கியறுமுகன்பாற்சென்றுமுற்றுந்
தருகின்ருன்றனைவிடுமோவெகுளேலென்றெம்முரையாற்சாற்றித்தேன்பாய்
மருவொன்றுமலரோனைவிடுவித்துநம்மாட்டுக்கொணர்தியென்ருன்.

வேத்திரத்திண்படையாளிவிடைகொண்டுவேற்படையோனுலகநண்ணி
மாத்தடிந்தபெருமானைத்தொழுதிறைஞ்சியெங்கோவேமழுவாளெம்மான்
பூத்தவிசிற்புத்தேளைநீவிடுமாறருள்செய்தானென்றுபோற்றி
யேத்துவழியறுமுகவேளிதழதுக்கிவெகுளுதலும்வெருவிமீண்டான்.

பிஞ்ஞகனின்றிருவாணைவிண்ணப்பஞ்செயச்சிறிதும்பேணுகி
மஞ்ஞையுயான்சினவுதலின்வெரீஇப்பெயர்ந்தேனெனநந்திவள்ளல்கூற
மொய்ஞ்ஞிமிறுமுரல்பூந்தார்க்கடவுளருமுனிவருங்கேட்டுத்தம்முட்
கைஞ்ஞெரித்தார்வெருக்கொண்டாரிறையவனேகாவாயென்றடியில்வீழ்ந்தார்.

சுயிலாதிவாய்மொழியுஞ்சுரர்முனிவர்மனத்துயருர் ... சால்வெள்ளிக்
கயிலாயத்தெம்பிரான்றிருவுளத்திற்கொண்டருளிக்கருணைகூர்ந்து
மயிலாலுமலைமகளோடெழுந்தங்கண்மகவிருப்பாலெய்தநோக்கி
யயிலாளுந்திருக்கரத்தான்விரைந்தெதிர்சென்றடிவணங்கிப்போற்றிநின்றான்.

அனையானையிருவர்களுமடித்தலமீதிருத்திமகிழ்ந்தன்புகூரக்
கனிவாயின்முத்தங்கொண்டுச்சிமோந்தகங்கனியத்தழீஇயபின்ன
ரெனையாளுஞ்சிவபெருமான்குறுமூரலெழில்காட்டிமேனிதைவந்
துணையோராவேதியனைச்சிறைவிடுத்திமைந்தாவென்றுரைத்துப்பின்னும்.

சேனாபதீச்சரப்பிரதிட்டை.

நம்மாணைகடந்தனையாலன்னதற்குக்கழுவாய்நீயத்தல்வேண்டும்
வெம்மாயமணுகரியதிருக்காஞ்சிநகர்வரைப்பின்மேவியன்பி
னம்மாடேசேனாபதீச்சரமென்றோரிலிங்கமருச்சித்தேத்திக்
கைம்மாணத்தவம்புரிதியென்றருளக்கேட்டெழுந்தான்கடப்பந்தாரான்.

திசைமுகனைக்கணங்களாற்சிவபெருமான்றிருமுன்னர்ச்செலுத்தியுள்ளப்
பசையினிருமுதுகுரவரடிவணங்கிவிடைகொண்டுபழனக்காஞ்சி
வசைகடந்தநகரெய்தியுலகாணித்தடமேல்சார்மாகாளிப்பா
லிசைவிளங்குதேவசேனாபதீச்சரவிலிங்கமிருத்திப்போற்றி.

புள்ளிமான்றேனுடிக்கைமுஞ்சிநாணரைப்பொலியவக்கமாலை
தெள்ளுநீர்க்குண்டிகையுங்கரத்தொளிரத்திருக்குமரகோட்டமென்னு
முள்ளியோர்பிறப்பறுக்குமாச்சிரமத்தினிதிருந்தானுறுவர்போற்ற
வள்ளியாரிணைக்களபமணிக்கலசமுலைதிளைக்கும்வாகைத்தோளான்.

குருமணிகள்வெயிலெறிப்பக்குயிற்றுநீண்மதிற்குமரகோட்டமோர்கா
லிருவிழியிற்காண்டல்பெறிற்சடையோருமெழுபிறப்பின்மறையோராவர்
திருமறையோர்முதலானோர்தொழுதிறைஞ்சப்பெறுகிற்பிற்றேவர்தேறும்
பொருணிலைமைதெளிந்தின்பப்பெருவீட்டிற்பரபோகந்திளைத்துவாழ்வார்.

கறங்கருவிப்பொலங்குடுமிவரைகிழித்தநெட்டிலைவேற்கடவுள்போற்றப்
பிறங்கியவித்தேவசேனாபதீச்சரமுதலைப்பெட்பினேத்தி
மறங்குலவுஞ்சுடராழிவலனேந்துமாலுருகுமுள்ளத்தானென்
றறங்கரைவாரெடுத்துரைக்குமொருதிருப்பேர்பெற்றுணம்முறையுஞ்சொல்வாம்.

மகாப்பிரளயம்.

கலிநிலைத்துறை.

முள்ளரைச்செழுந்தாண்மலர்முளரிவீற்றிருக்கும்
வள்ளல்கற்பமொன்றிறுதலும்யாவையுமலங்கப்
பொள்ளெனப்பரந்துலகெலாம்விழுங்கியபுணரி
வெள்ளநீர்மிசைமிதந்தனன்மார்க்கண்டிமேலோன். உஎ

தனியனாகிவெஞ்சலதியினுழிதருந்தகைசால்
புனிதமாதவனியிடைப்பொறியராத்தவிசி
னினிதுகண்வளர்மாயனைக்கண்டுசென்றிறைஞ்சி
நனிமகிழ்ச்சிமீக்கிளர்ந்தெழுமனத்தொடுநவில்வான். உஅ

நகைமலர்த்துழாய்நாயகனாலமற்றெவையும்
பகல்செய்வெங்கதிர்ச்சண்டமாப்பரிதிநின்றெரிப்பத்
துகள்படுஞ்செயல்கண்டயானத்துணைப்பொழுதி
னிகழருந்திறலறிவுபோயெய்தினன்மயக்கம். உகூ

ஏய்ந்தமையறீர்ந்திதுபொழுதுணர்ச்சிவ்ந்தெழுந்தேன்
காந்துவெம்புனற்கடுந்திரைப்பரப்பிடைமிதந்து
நீந்திநீந்தியென்னெடியகால்கரங்களுமெலிந்தே
யோய்ந்தநல்வினையிருந்தவாறுனையிவட்கண்டேன். ௩0

நிலமடக்கொடிவனமுலைதிளைக்குநீண்மார்ப
வுலகமெங்கணுங்கருகிருண்மூடியதுரவோ
யிலகுபேரொளியிருசுடர்யாங்ஙனம்போய
குலவுமேனையகோளொடுநாள்களெங்கிறந்த. ௩க

சகமிசைப்பயில்பொருளெலாமெவ்வுழிச்சார்ந்த
திகழுநீயெனக்கிவையெலாந்தெரித்தியென்றிரப்ப
நிகழுமாதவன்மாதவன்றனைநேர்நோக்கி
யகலிடத்துளபொருளெலாமென்னகட்டுளவால். ௩௨

மார்க்கண்டர்மாயனைமுனிதல்.

புகுந்துநோக்குதியென்றலுமுனிவரன்புகல்வான்
முகுந்தமுன்னொருகற்பத்திம்மொழியினாலன்றே
மிகுந்தவஞ்சனைப்படுத்தனைவிளைமதுப்பிலிற்றி
நகுந்தடம்பொகுட்டம்புயவாழ்க்கைநான்முகனை. ௩௩

முனைகடந்தவேன்மணிமுடியம்பரீடன்றன்
மனையினாகப்பநுப்பதமுனிவரைவஞ்சித்
தனையமலைமலைவலைபுதல்வியைக்கவர்ந்துகொண்டகன்று
யினையமாவலிதனக்குமுன்வஞ்சனையிழைத்தாய். ௩௪

இன்னவாறுனைநம்புநரடியவரிடத்துந்
துன்னுமாயமேசெய்வதுன்றொழிலெனக்கண்டே
னின்னையஞ்சுகேனெறிக்கொடுசெல்வனென்றியம்பி
யன்னநீரினைக்கரங்கொடுநீந்தியங்ககன்றான். ௩௫

மார்க்கண்டரருள்பெறல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

செல்லுமெல்லைநீர்மிசைத்தோன்றும்வேதமாஞ்சினைப்
பல்லவங்கள்கண்டனைவபற்றியுள்ளிழிந்தன
னெல்லையங்கணேக்கினனொளிப்பிழம்பினீடிய
மல்லலம்பொனிஞ்சிசூழ்மாடக்காஞ்சிமாநகர். ௩௬

எற்றுதெண்டிரைப்புனலிஞ்சியின்வளைப்பவெண்
புற்புதத்தினுள்வெளிப்பொற்பொடுத்திகழ்ந்துநீ
ளொற்றைமாவினூருளொளிதுளும்பமன்னுமூ
ரற்புதத்தைநோக்குதோறற்புதத்தனாயினான். ௩௭

அங்கணெய்ப்புநீத்தபினண்ணல்கம்பவாணரை
யுங்கணெய்தியர்ச்சனைபுரிந்தியவ்விராவெலாந்
துங்கமாவினீழல்வாழ்சோதிமுன்னர்வைகினான்
சங்கமாழியேந்தியோன்றானுந்தொடரநண்ணினான். ௩௮

விஷ்ணுகுமரகோட்டமைதல்.

நண்ணுநெறியிற்காஞ்சிமாநகரமெய்தியங்ககர்
வண்ணமுற்றுமற்புதமருவநோக்கிமாநிழ
லண்ணலாரையேத்தியம்முனிவன்சொன்னயாவையு
மெண்ணியெண்ணிநெஞ்சுளைந்தினிநினைந்தவாறெனு. ௩௯

சேர்ந்தவர்க்குவஞ்சமேநாடொறுஞ்செய்கின்றனேன்
வார்ந்தகூந்தலம்பிகைமாயையின்மயங்கினே
னோர்ந்தமாயநீக்குமாநீள்வரைப்பிராட்டிதாள்
சார்ந்துபோற்றுவேனெனத்தனிப்பிலத்தைநண்ணினன். ச0

ஆயிடைப்பிராட்டியையருச்சித்தேத்தியருளினன்
மாயநீங்கிமெய்யுணர்வெய்திப்பஞ்சவாவிநீ
ரேயமூழ்கித்தேவசேனபதீசத்தேகியந்
நாயனரைவிதியுளிநயந்துபூசையாற்றினன். சக

கருணைகூர்ந்துநம்பனர்காட்சிதந்தளித்தலும்
பரசியேத்திநின்னடிப்பத்திமாறிலாவர
மருளவேண்டுமெய்த்தவரடியர்மாட்டுவஞ்சனை
யொருகணத்துமெண்ணிடாவுளமெனக்குவேண்டுமால். சஉ

ஈண்டுநின்புதல்வனேடெந்தைதிருமுன்வைகவும்
வேண்டுமென்றிரந்துவிண்ணப்பஞ்செய்யவெண்பிறை
நீண்டசெஞ்சடைப்பொதிநிருமலப்பரம்பொரு
ளாண்டகைப்பிரான்மகிழ்ந்தன்னவாகவென்றபின். சங

என்றுமன்பினேகிநீயுருகுமுள்ளக்கோயிலா
னென்றுநாமமெய்துகென்றருளியிறைவனீங்கினன்
குன்றெடுத்துமுந்துகோநிரைகள்காத்தகுரிசிலு
மன்றல்வெட்சிமாலையானருளினங்கண்வைகினன். சச

கூறுமினையமேன்மைசால்குமரகோட்டவைப்பினிற்
பாறுநச்சுவேலினன்பாதமங்கியநிலநாள்
வேறுநாற்றினங்களில்விரும்பிச்சென்றிறைஞ்சினோர்
பேறுமுற்றும்யாவரேபேசவல்லநீர்மையார். சரு

குமரகோட்டப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கஅ௱கக.

மாசாத்தன்றளிப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

றறகொப்புளிக்குநறும்பொருட்டுநளினவாழ்க்கைப்புத்தேளைச்
சிறையிற்புகுத்தும்பெருமானர்குமரகோட்டச்சிறப்புரைத்தா
நிறையப்பூத்தமலர்ப்பொதும்பர்நீடுமதற்குத்தென்றிசைக்கண்
முறையிற்றிகழுமாசாத்தமுதல்வன்றளியெடுத்துரைப்பாம். க

சுராசுரர்கலகம்.

வைவாளெயிற்றுத்தானவரும்வானுட்டவருமந்தரத்திற்
பைவாய்த்தாம்புபிணித்தீர்த்துக்கடைந்தஞான்றுபரவையெழும
வெவ்வாய்நஞ்சமிடற்றடக்கிவெருவாதளித்தபெருங்கருணை
யைவாய்ப்பணிப்பூட்பெருமானருளான்மீளக்கடைந்தவழி. உ

சேட்டையணங்குதிருமணியான்றெய்வம்களிர்மருத்துவர்நாற்
கோட்டிமதமாமுதல்பலவுங்குறைநீர்க்கடலுட்டோன்றியபின்
வாட்டுமிறவிப்பெரும்பிணிக்குமருந்தாவமிழ்தந்தோன்றுதலும்
வேட்டவிண்ணோரவுணர்களுந்தம்முட்கலாங்கள்விளைத்தனரால். ங

மாயோன்மோகினிவடிவமாதல்.

ஆற்றன்மிகையாற்சுதைக்குடத்தையடல்வாளவுணர்கைப்பற்றத்
தோற்றுமறுகிப்புத்தேளிரலமந்தேங்குந்துயர்நோக்கிக்
காற் றும்பிரசநறுந்துளவக்கமஞ்சூற்கொண்டலிணைவிழிக்குக்
ம்பதைக்குமோகினியாம்வடிவமாங்குக்கொண்டனனால்.

கலிவிருத்தம்.

இரண்டறப்பெண்மையுமெழிலும்வஞ்சமு
திரண்டுருக்கொண்டெனத்திகழ்ந்துதோன்றிமான்
முரண்டகுமவுணர்கைக்கொண்டமூரிநீர்
வரண்டமாமணிக்கடலமிழ்தம்வாங்கினன். ௫

வாங்கினின்றசுரருஞ்சுரரும்வல்லையே
யாங்கநீர்நிரைநிரையாகவைகுமி
னீங்குநல்லமிழ்தமெல்லீர்க்கும்வேட்டவா
பாங்குறத்தனித்தனிபகுந்துநல்குகேன். ௬

வேல்விழிமாதர்யான்வீழ்ந்துளார்பெறச்
சாலநல்குவலெனச்சலதிச்சேக்கைவாழ்
வால்வளைக்குடங்கையான்மகிழக்கூறலுங்
கோல்வளைத்திதிமைந்தர்குறித்துநோக்கினர் ௭

கேசாதிபாதவர்ணனை.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கலிதிரைமுகந்தசூன்முகில்விளர்ப்பக்கடைகுழன்றிருண்டுநெய்த்தொழுகிப்
பொலிவுறமகரம்வலம்புரிதிரித்திபொஃகிடை கொட்டபூங்குழலைக்
குலிகநீரளவிமழவிளம்பரிதிக்குரூஉச்சுடருமுசியகாட்சி
யிலகொளித்தேய்வையரும்பெறற்றிலகமிட்டகீற்றிளம்பிறைநுதலை. ௮

மாற்றருமதுகையைங்கணைக்கிழவன்வாங்கியநறுஞ்சுவைத்தேறல்
காற்றுவெஞ்சிலைக்குச்சிலைத்தொழில்பயிற்றுங்கட்டெழிற்புருவமென்கொடியைச்
சீற்றவல்விடமுமமிழ்தமும்விரவிச்சிதரரிபரந்துமைதோய்ந்து
கூற்றரசிருக்குமிணைவிழிகளவுகொள்ளநோக்கிடுஞ்சிறுநோக்கை. ௯

செயிரறுந்தரளவெண்மணிநாலத்திருந்தெழில்படைத்தெதிர்கண்டோ
ருயிரினைப்பருகிக்குமிழெனத்திகழ்ந்தவொள்ளொளிநாசியின்வனப்பை
வெயில்விடுமணிப்பூட்காளையர்மனங்களாடுபொன்னூசலின்விளங்கி
கருவிமுதலெனக்கவின்றுமணிக்குழைவயங்கிருசெவியை. ௧0

ஞ்சமழ்ப்பக்குழலிசைபழகுஞ்சின்மொழிக்குறுநகைமொக்குட்
கயிரவமலர்ந்தசெய்யவாயமிழ்தமூறற்றெழுங்கனியிதழொளியைப்
பயிலிருளொதுக்கிப்பானிலாக்கான்றுபடரொளிபரப்புவெண்மதிய
முயலறுத்தெழுந்தாலனையபேரழகின்முண்டகவாண்முகமலரை. ௧௧

மடலவிழ்பாளைப்பசியபூங்கமுகோவயிறுநொந்தலறிமுத்துயிர்க்குங்
குடவளைப்பொலிவோவெனமருளுறுப்பக்கவின்குடியிருந்தகந்தரத்தைக்
கடிகமழ்கொளுஞ்சாறெழுகமென்கரும்பைக்கண்ணறத்தகர்த்திளம்பணையைத்
தடவரைப்புகுத்தித்தொடையலைவாட்டித்தகையமையணிகெழுபுயத்தை.

மடிதிரைப்பரவையமுதுறழிசையமகரயாழ்புறங்கொடுத்திரியத்
தொடிகளும்வயிரக்கடகமுஞ்செறித்துத்தூநலம்படைத்தகூர்ப்பரத்தை
நொடிபயில்கிள்ளைப்பவளவாய்கடுக்குநுதியுடைக்கூருகிர்வனப்பிற்
படியறுவிரல்வாய்ந்தொள்ளொளிதுளும்பும்பனிமலர்க்காந்தளங்கரத்தை.

சுணங்குடைவனப்புமார்முமெழுதுந்தொய்யிலுஞ்சந்தனக்களியு
மிணங்கியண்ணுந்துபாதிகாண்டகமேற்படாம்பொதியிளமுலைப்பொருப்பை
யணங்குறுத்திளையோர்மதியினைப்படுக்கும்படுகுழியனையவுந்தியின்மே
லுணங்குவண்டொழுக்கிற்கருமயிரொழுகிநோக்கமைசிறுவயிற்றழகை.

கொடியெனநுடங்கிவேளணக்கரந்துகுவிமுலைக்கிடைந்துசெந்தளிர்க்கைப்
பிடியினுளடங்கித்துடியெனச்சுருங்கிமின்னெனப்பிறங்குநுண்ணுசுப்பைப்
படிமையர்சீலக்குறும்பெலாமடக்கிநடுவுயர்ந்தகன்றெழில்படைத்து
வடிமலர்ப்பகழிவேந்தரசிருப்பவயங்கியவல்குலின்பரப்பை ௧௫

நெட்டிலைக்கதலித்தண்டென்சேர்ந்துசெறிந்துசீர்விலைவரம்பிகந்த
வட்டொளியரத்தநுழையிழைக்கலிங்கமணிகெழுவளம்பயில்குறங்கைக்
கட்டெழின்மதவேளுதுகாகளமுங்கணைபொதியாவநாழிகையும்
பெட்டவர்மருளவீற்றிருந்தனையபிதிரொளிப்போற்கணைக்காலை. ௧௬

கறுத்தவாண்முகனைவெரீஇப்பதம்பணியுங்கலைமதிவெள்ளுகிர்மதனூல்
பொறித்தபுத்தகமாம்புறவடியன்னமென்னடைப்பூந்தளிரடியைக்
குறித்துரையுவமைக்கிடம்பெறுதள்ளிக்கொளத்தகும்பேரழகமைந்த
மறுத்தபூமேனியிளநலங்கனிந்துமணிநிறம்வயங்குகோமளத்தை. ௧௭

மாயோனமுதமளித்தல் - சாத்தனாவதாரம்,

கலிவிருத்தம்.

காண்டலுமாரவேள்கணைக்கிலக்கமாய்
மாண்டனரெனவறிவழிந்துமையனுய்
பூண்டனர்தானவர்மடந்தைபோல்வரு
மாண்டகைமாயையாலவரைவஞ்சித்து. ௧௮

கடவுளர்க்கமுதெலாங்கடுகவீந்தவர்
வடிவெடுத்துடனுறவதியிராகுவைத்
தடநெடுமழையானரிந்துதானுமக்
கடலமிழ்தருந்துபுகளிப்பினீடினுன். ௧௯

வேறுகொளவுணரைநூட்டபின்வென்றுபோய்
மாறமொழியானிருக்கைமன்னினு
னேறணிநெடுங்கொடியெரியினீள்சடை
யாறணியடிகளிவ்வனைத்துங்கேட்டரோ. ௨0

நன்னடிவழிபடச்சார்ந்தமாயனை
யன்னவையென்னெனக்கடாவியவ்வுரு
வென்னெதிர்காட்டுகென்றியம்பச்சார்ங்கனு
மன்னியமலைமகள்வதனநோக்கியே. ௨௧

மையல்செய்மோகினிவடிவங்காட்டுபு
வெய்தென்நடந்தனன்வேலைவென்றகோ
னெய்யெனவெழுந்துசென்றுற்றுப்புல்லவுங்
கையகன்றோடினுன்கரியமேனியான். ௨௨

மறுவலுமெம்பிரான்வலிந்துபற்றியாங்
கிறுகுறத்தழீஇயினனினையகாலையி
னுறுபுகழ்சாத்தனூங்குவர்க்குத்தோன்றினு
னிறுமுறையுலகெலாநிறுத்துங்கோலினுன். ௨௩

சாத்தனார் சிவப்பிரசாதம்பெற்றுவந்திதல்.

ஆயபின்கேசவன்வெள்கியண்டர்கோன்
சேயதாடொழுதுதன்னுலகஞ்சேர்ந்தனன்
பாய்புகழ்சாத்தனும்பகவன்றாளிணை
வாயினாற்றுதிசெய்துவணங்கிவேண்டுவான். உ௪

அரிலறச்செய்பணியருளிநின்னருட்
குரியபேரிறைமையுமுதவவேண்டுமாற்
கருவிடம்பருகியுகளேகணெந்தைநின்
றிருவடிச்சார்புடைச்சிறியனேற்கென. உ௫

மறைமிடற்றெம்பிரானியம்புமைந்தகே
ளிறைமைநம்மருளினாலெய்தற்பாலதா
மறைதருமருளுமெய்யன்பினாவதப்
பொறைகெழுபத்தியும்பூசைப்பேறரோ. உ௬

பூசையாவதுசிவலிங்கபூசையத்
தேசமையருச்சனைக்கிடனுஞ்சீர்த்திசா
லாசறுதலங்களாமங்கவற்றினுங்
காசிமற்றதனினுங்காஞ்சிமாநகர். உ௭

கண்ணகன்புரிசைசூழ்காஞ்சிவைப்பிடைப்
புண்ணியச்சிவக்குறிநிறுவிப்பூசித்து
விண்ணவர்தவமுனிவேந்தர்யாவரு
மெண்ணரும்பேறுபெற்றின்பநீடினார். உ௮

ஆயிடைநீயெமையருச்சித்தேத்துதி
மாயிருந்தலைமைநாம்வழங்குகேமெனச்
சேயிழைபங்கினனருளிச்செய்தலுங்
காயிலைப்படையவன்காஞ்சிநண்ணினான். உ௯

உருகெழுபனிவரைப்பிராட்டியொண்மலர்த்
திருவடிச்சுவடுதோய்செல்வக்காஞ்சியின்
மருவிவேற்கடவுளைவழுத்தியாங்கவ
னருளினாற்சிவக்குறிநிறுவியர்ச்சித்தான். ௩0

மறைமுதல்விடைமிசைத்தோன்றிமற்றவற்
கறைகழலிமையவரருகுசூழ்தர
முறைகெழுபூதங்கண்முழுதுங்காப்புறு
மிறைமையின்மணிமுடியினிதுசூட்டினான். ௩௧

பல்கரிவீரர்தேர்பரிகடம்முட
னல்கியதலைமைபெற்றனையசாத்தனு
மொல்கிடைமலைமகளுவகைமீக்கொள
மல்குசீர்ப்பிலக்கயுன்மகிழ்ந்துவைகினான். ௩௨

கடாநிரையேழுயர்காலைன்மேல்கொடு
நடாயுளங்களித்திறுமாந்துநாடொறும்
வடாதுபாற்செண்டணைவெளியின்மாறடு
மடாவலிபடைத்தவனுடல்பேணுமால். ௩௩

வலம்படர்சிறப்பின்மாசாத்தனேத்திய
நலம்படர்கருணைமாசாத்தநாதனைப்
புலம்படர்சிந்தையாற்போற்றப்பெற்றவ
ரிலம்ப[illegible]ாரிருமையுமின்பமெய்துவார். ௩௪

மங்களீச்சரம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மற்றதன்வடபான்மலைமகளிகுளைமங்களைமண்டபமிழைத்து
வெற்றிமண்டபத்தின்பிறகுறமங்களீசனைவிதியுளிநிறுவி
யற்றமில்சிறப்பின்மங்களதீர்த்தமகழ்ந்துநீராட்டிபுதொழுதாள்
பற்றுமங்களநாளத்தடம்படிந்துபணிபவரிருமையும்பெறுவார். ௩௫

இராமநாதீச்சரம்.

உரைத்ததன்குடபாற்றசரதன்மதலையரக்கனையடுபழியொழிப்பா
னருட்குறியிருத்திச்சேதுவிற்றொழுதங்கண்ணலாரேவலிற்காஞ்சி
வரைப்பினுற்றிராமநாதனைநிறுவிவழிபடூஉக்கொடுவினைமாற்றித்
திரைப்புனலயோத்திப்புகுந்தரசளித்தான்சேதுவிற்சிறந்ததத்தலமே.

மாதலீச்சரம்.

இனையதன்வடபான்மாதலியென்பானிராகவனிலங்கையர்கோமான்
றனையடுஞான்றுவாசவன்விடுப்பத்தயங்குதேர்செலுத்துவானுகி
நனைமலர்வாகைமுடித்தபினிராமன்றன்னொடுகாஞ்சியையு[illegible]
புனைபுகழ்மாதலீச்சரந்தொழுதுபுரந்தரற்கினியவனானன் ௩௭

மாசாத்தன்றளிப்படலம்முற்றிற்று

ஆகத்திருவிருத்தம் - ௧௮௬௮.

அனந்தபற்பநாபேசப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வருவினைதெறுமாசாத்தன்றளியொளிமங்களீசந்
திருவிராமீசமாதலீச்சரந்தெளியச்சொற்றாம்
தருவலர்நிரந்தமுன்றின்மாதலீச்சரத்தின்மேல்பா
லொருவில்சீரனந்தபற்பநாபத்தினுண்மைசொல்வாம். ௧

உமாமகேசன்திருவிளையாடல்.

எண்ணருமுயிர்களீன்றவிருமுதுகுரவராமோ
ரண்ணலங்கயிலைவெற்பினமர்வுழியொருநாளங்க
ணுண்ணிறைகளிப்பினீடியொள்ளொளிமணிச்சூதாடக்
கண்ணினரகிலமுய்யக்கண்ணினூர்ளையகாலை. ௨

மாலையந்துளவோனெய்திவணங்கிச்சாந்தாற்றிக்கோடன்
மாலையனாகிநின்றுமெய்வெயர்மாற்றநோக்கி
மாலைவெண்பிறைதாழ்வேணிவள்ளலுமுமையுமாங்கண்
மாலையவ்வினைக்குச்சான்றுவைத்தனராடினூர்கள். ௩

பிடித்தெறிகவறுட்டத்திற்பிஞ்ஞகன்றோற்பச்செங்கே
ழடித்தளிர்ப்பிராட்டிநோக்கியடிகளைவென்றேனென்றாள்
விடைக்கொடிப்பெருமான்யாமேவென்றனமென்றான்பாச
முடைத்தவர்தங்கட்கிவ்வாறுற்றனகலாங்கண்மேன்மேல். ௪

மாயோன்சாபமடைதல்.

யாமினிக்கலாய்த்தல்வேண்டலொழிகெனவிருவர்தாமு
மாதணிமார்பன்றன்னைவினுதலுமாயோனையன்
ருமரைவதனநோக்கித்தலைவனும்வென்றுனென்றுன்
கோமளங்கவின்றமேனிக்கோற்றொடிசீற்றங்கொண்டாள். ௫

கண்டதுகண்டவண்ணங்கழறிலைவாரம்பற்றித்
தண்டுணர்த்துளவத்தாரோய்கைதவச்சான்றுசொற்று
யண்டரும்பிறருமேசக்கட்செவியாதியென்று
வொண்டொடிச்சபிப்பமாயோனுளம்பதைத்திரந்துபோற்றி. ௬

மாயோன்சாபநீத்தருள்பெறல்.

அடியனேன்மடமைநீராலறைந்ததுபொறுத்துச்சாப
முடிவளித்தருளாயென்றென்றேக்கறமுதல்விநோக்கி
நெடிதருள்சுரந்துமாயோயஞ்சலைநிலைநீர்க்காஞ்சிக்
கடிநகர்வரைப்பினேகிக்கடிதெமைப்புரிதிபூசை. ௭

இகழறுமிலிங்கவேதியென்னுருவிலிங்கமூர்த்தி
திகழ்மதிச்சடிலமோலிச்சிவபிரான்வடிவுகண்டாய்
புகழ்தருமிலிங்கவேதிப்பொற்பினுலென்னைநின்பேர்
நிகழ்வுறநிறுவிப்போற்றிநீக்குதிசாபத்தீமை. ௮

நலம்புரியனந்தபற்பநாபனென்றோங்குவாயால்
வலம்புரிக்கரத்தோயென்றுவழங்கினுள்குவவுத்திண்டோ
ளுலம்புரியனந்தபற்பநாபனுமுமையாடன்னைப்
பொலம்புரிசடிலத்தேவைத்தொழுதுபோய்க்காஞ்சிபுக்கான். ௯

வணங்கினன்றிருவேகம்பமற்றதனயலேவேதி
யிணங்குறுமனந்தபற்பநாபமாவிலிங்கம்பூசித்
தணங்கருள்பெற்றுப்பாந்தண்மூதுரியகற்றியாங்குப்
பிணங்கியசாபநீத்துப்பேரருட்குரியனுனன். ௧0

அனந்தபற்பநாபேசப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௮௭௮.

கச்சிமயானப்படலம்.

கொச்சகக்கலிப்பா.

சிற்பநிகழ்மணிமாடநெடும்புரிசைத்திருவனந்த
பற்பநாபேசத்தின்பரிசறிந்தவாறுரைத்தா
நிற்பனவுஞ்சரிப்பவுமாய்நிறைந்தபிராணினிதுறையு
மற்புதமாந்திருக்கச்சிமயானத்தினடைவுரைப்பாம். ௧

பண்டாசுரன்பிறப்பு.

முன்னொருநான்முகன்புருடப்பெயர்க்கற்பமுடிவெய்திப்
பின்னுறுசீரகோரமாங்கற்பத்துப்பிறங்குலகின்
மன்னுயிர்கள்வளர்ந்தோங்கிவைகுநாள்விறற்பண்ட
னென்னுமொருவல்லவுணனிப்புவனத்துளனுனன். ௨

அங்கவன்செய்மாதவத்தாலகமகிழ்ந்துகாட்சிதரும்
பங்கயனையடிவணங்கிப்பன்னுசுராசுரர்முதலோர்
தங்களுடம்பிடைவிரவித்தகைபெறுவீரியமனைத்து
நுங்கவரமருளென்றான்முண்டகனுநுவறத்தெண்ணி. ௩

அற்றாகென்றகலுதலுமவுணர்கோனுடம்புதொறு
முற்றாவியுடன்விரவிவீரியங்களுண்டிருப்பப்
பற்றாயவீரியம்போயாருயிர்கள்பருவந்து
வற்றாதவொளிமாழ்கிவளர்வின்றியஃகினவால். ௪

சுராசுரர் துயர் கூறித் துதித்தல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மருத்துவரியக்கர்வானவரவுணர்மானிடர்சித்தர்கந்தருவ
ருருத்திரர்வசுக்களிராக்கதரருக்கருரகர்சாத்தியர்மருத்துக்க
ளருத்திகூர்விரிஞ்சனச்சுதன்பிறருமவ்விடராற்றலர்குழுமித்
திருத்தகுகயிலைப்பருப்பதம்புக்குச்சிவபிரானடிதொழுதுரைப்பார். ௫

வீரியமின்றிவலிகுறைந்தடியேம்வெற்றுடம்பெனத்திரிகின்றேங்
காரணங்காணேமன்னதுதவிர்க்குமுபாயமுங்கண்டிலேமென்று
நாரணன்முதலோருலந்துநின்றிரப்பநாயகனகைமுகிழ்த்துரைக்குஞ்
சீரியநுமதுவீரியமுழுதுந்திருந்துபண்டாசுரன்கவர்ந்தான். ௬

ஆங்கவனெல்லாவுடம்பினும்விரவியாவியோடுறைதலினெவ்வா
றீங்கினிவெல்லப்படுவனென்றருளவிமையவர்யாவரும்வெருவி
மாங்குயிற்கிளவிமலைமகள்கொழுநாமறிதிரைவளைகடலுயிர்த்த
பூங்கடுமிடற்றுப்புனிதனேயெம்மைப்புரப்பதுன்கடனெனத்துதிப்பார்.

வேறு.

முடிவிலாற்றலைதன்வயத்தினைமுற்றுணர்ச்சியைபேரருண்
மடிவிலாட்சியைதூயமேனியைமற்றியற்கையுணர்ச்சியை
படியிலாவியல்பாகநீங்கியபாசநோயைவரம்பிலின்
புடையையுன்னடியேங்களென்றுமுனக்கடைக்கலமையனே. ௮

அண்டமோரணுவாம்வளர்ச்சியையணுவினுண்ணியையண்டமார்
பிண்டமெங்கணுநின்றசைக்குநிமித்தனையிறைபெற்றியை
கண்டயோகியர்சிந்தைமேயினைகாரணமுற்றுமகன்றனை
யொண்டொடிக்கொருபங்கயாங்களுனக்கடைக்கலமையனே. ௯

பிரமமென்மருமீசனென்மருஞ்சிவனென்மரும்பேதுறுங்
கருமமென்மரும்வேறுமவ்வவகடவுளென்மருமாகியே
முரணியவ்வவர்பேசநின்றருண்முதல்வனேமுதலீறிலா
வொருவனேயடியேங்களென்றுமுனக்கடைக்கலமையனே. ௧0

சிவபிரான் வேள்வியிற் பண்டனுடலைகையோடுக்கல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இனையவாறுளங்களிவரப்பழிச்சுறுமிமையவர்தமைநோக்கிக்
கனைகழற்பிரான்வீரியம்பெறுவதேதகருத்துமக்கெனிலேற்கும்
வினைமுடித்தவற்கொல்லுதுமல்லதுவிரவியெங்கணுநிற்கு
மனையகள்வனைச்செகுத்திடலரிதுமக்கிசைவுகொலதுவென்றான். ௧௧

ஐயன்வாய்மொழிகேட்டலுங்கடவுளரவ்வினைதாழாமே
செய்யவேண்டுமற்றுலகெலாம்புரப்பதெம்மிசைவுபெற்றோசெந்தீக்
கையனேயெனத்தலைவனுமன்னதேற்காஞ்சியினுமதாக்கை
வெய்யசெந்தழற்குறியிடையவியெனவிரவுகென்றருள்செய்தான். கஉ

யாங்களிங்கிருந்தென்பயனின்சுடர்க்குறியிடைக்கரந்தேமே
லோங்குமின்பமேதலைப்படப்பெறுதுமென்றுரைத்தடிதொழுதேத்து
மாங்கவர்க்கெலாம்விடையளித்தருவரையணங்கொடுந்திருக்காஞ்சி
ஞாங்கரெம்பிரான்செழுந்தழற்பிழம்பொளிநலந்திகழுருக்கொண்டான்.

அளப்பருஞ்சிகைப்படலைமீக்கனைவத்தெழுந்தெங்கணுமழல்வீசக்
கிளைத்துநின்றுதன்வலப்புடையுகிரினுற்குண்டமுங்கெழுவித்து
வளைத்தகுண்டத்துவாழடுதேவத்திருவடிவினெய்பூரித்து
விளக்குறுத்துவத்தருப்பைமுக்குணப்பெரும்பரிதிமேவரக்கொண்டு.

வேறு.

வேள்வியுந்தானேவேள்விப்பொருள்களுந்தானேவெய்ய
வேள்விவேட்பவனுந்தானேவேள்விகொளிறையுந்தானே
வேள்வியின்பயனுந்தானேயென்பதுவிளக்கியெம்மான்
வேள்விசெய்தீக்கையுற்றான்விளங்கருட்சத்தியோடும். கரு

வண்டுற்றமலரோனாதிவலிகெழுதருக்களீறு
வண்டத்தினகத்தபூதமனைத்தையும்பெருங்கால்வேகச்
சண்டத்தின்வாங்கிவாங்கியாச்சியந்தயங்குமங்கேழ்க்
குண்டத்திற்றூய்மைசெய்துகொழுந்தழன்மடுத்திட்டானல். கசு

வேறு.

மடுப்பமடுப்பமீதெழுந்துவயங்கிச்சுடருந்தழற்பிழம்பி
லடுப்பநனைக்கும்புறத்தெண்ணீரண்டமுகடுவேவாமைத்
தடுத்ததாகுமன்றாயின்மன்றநிறையுஞ்சராசரங்க
ளடுத்தமேலைச்சுவாத்தலமுமுருகிக்கவிழுமுலகன்றே. கஎ

வேறு.

இவ்வகைவடிவுமுற்றுமிணரெரிப்பிழம்புளாக்கிக்
கௌவையில்காலச்செந்தீப்பிரான்முதல்கணங்கடாமு
மெவ்வமின்றொளிருந்தன்னோடேகமாய்ச்சேர்த்துப்பின்ன
ரவ்விடைவிரவும்பண்டாசுரனையுமழலிற்பெய்தான். கஅ

எண்ணருமுயிர்களெல்லாமெரியகத்தொடுங்கிநாளுங்
கண்வளர்காலத்தெய்துமின்பத்திற்களித்துவாழ்ந்த
வண்ணுதற்கரியவத்தீயன்றுதொட்டிலிங்கமாகிப்
புண்ணிய[illegible]லிங்கமெனப்பெயர்பொலிவுற்றன்றே. கக

அத்தகையிலிங்கந்தன்னிலளப்பருங்கருணைபூத்துப்
பைத்தபாப்பல்குற்செவ்வாய்ப்பனிவரையணங்கினோடுந்
தத்துநீர்வேணிப்பெம்மான்றன்னடியிணைக்கீழ்ச்சிந்தை
வைத்தவர்க்கிருமைப்பேறும்வழங்கிவீற்றிருக்குமன்னோ. உ0

சிவகங்கைவரலாறு.

நிகழ்பெறுவேள்விமுற்றிநிறைந்தநெய்க்குண்டந்தன்னைத்
திகழ்சிவகங்கைப்பேராற்றீர்த்தநாயகமாய்ச்செய்து
புகழுபவிரதநன்னீராடினுன்புரமூன்றட்ட •
விகழறுசீற்றத்துப்பினீர்ந்துழாய்ப்பகழிவல்லான். உக

மறக்களிற்றடியினேனையடியெலாமடங்குமாறு
முறக்குமால்வித்திலுள்ளாலொடுங்கியவாறும்போலத்
திறப்படச்சிவபிரான்செய்சிவகங்கைத்தடத்தினண்ட
புறத்தனவகத்ததீர்த்தமியாவையும்பொலியவைகும். உஉ

அத்தடம்படிந்துமேனுளருந்தவமுனிவர்சில்லோர்
வித்தகமயானத்தெம்மானருளினல்வினையினீங்கி
முத்தியிற்கலந்தாரன்னமுளரிநீரிலஞ்சிமேன்மை
சித்தமாசகன்றீர்யாரேயிற்றெனத்தெரியவல்லார். உ௩

கச்சிமயானப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௧௦௧.

திருவேகம்பப்படலம்.

கலிநிலைத்துறை.

கல்வித்தமிழோர்புகழ்கச்சிமயானமீதாற்
றொல்லைத்தவத்தீரினித்தோமறுசீர்த்திசான்ற
மல்லற்றலங்கட்கரசாமணித்தெய்வக்கோயிற்
செல்வத்திருவேகம்பஞ்சிந்தையுட்கொண்டுசொல்வாம். க

பெருமானுலகுதிக்கத்திருவுள்ளஞ்செய்தல்.

மயானச்சுடரின்வடிவான்மணிவண்ணன்றேறுத்
தியானப்பொருளாக்கைகளோடும்விராயசிந்தைத்
தயாவற்றபண்டன்றனையட்டபிறுவியெல்லா
முயாவற்றுடலோடிசையத்திருவுள்ளஞ்செய்து. உ

பகுப்பின்றிமன்னும்பழமாமறைதன்னைநோக்கி
வகுக்கும்படைப்பின்பொருட்டுத்தனிமாவதாகிச்
செருக்குந்திறல்வல்லமயானத்தின்மேற்றிசைக்கட்
டொருக்குந்தளிர்பூகனிதுன்றவயங்குகென்றான். ௩

வேறு.

தாவரும்பழமாமறைதம்பிரானருளான்
மேவருந்தனிச்சூதமாய்மயானத்தின்மேல்பாற்
பூவரும்பிமென்றளிர்கனிபுதுமலர்துறுமி
யோவருங்குளிர்நிழல்குலாயோங்கியதன்றே. ௪

கொன்றைமாலிகைச்சடைமுடிக்குழகனங்கதன்கீழ்த்
துன்றுமானந்தப்பேரொளியிலிங்கமாத்தோன்றி
வென்றநல்லெழில்விரிந்ததன்மெய்யிடப்புறத்து
மன்றல்வார்குழலிலனிதைமாதினையுயிர்த்தான். ௫

வணங்குநுண்ணிடைக்கிடர்செயமதர்த்துமேலெழுந்த
விணங்குபூண்முலையிலனிதைப்பிராட்டியுமெழுந்தங்
கணங்குவெம்பவக்கடலினின்றருட்கரைவிடுக்கு
நிணங்கொள்சூற்படைநெடுந்தகைதிருவடியிறைஞ்சி. ௬

விளங்குமேகம்பமேவியவிமலவிண்ணவர்க
ளெங்கவார்கலிமுகட்டுவெந்தெழுஞ்சுடுவிடத்தைக்
களங்குலாவவுண்டமைத்தருள்கனகணேயெனக்கு
வளங்குலாவியவருட்பணிவகுத்தருளெனலும். ௭

நிரந்தரீனுலகுக்குபாதானநிமித்த
மரந்தைதீர்த்தருள்செய்யும்யாமாதலினணங்கே
கரந்தவையகம்பண்டுபோற்காண்டகுமாறுன்
சுரந்தபேரெழில்வடிவினிற்றோற்றெனப்பணித்தான். அ

அரவுமம்புலிக்குழவியுமலையெறிநதியும்
விரவுசெஞ்சடைப்பெருந்தகைபணித்தமெய்யருடன்
சிரமிசைக்கொடுசெறிந்தபல்லுயிர்களுமுறையாற்
பரவைநித்திலமுறுவலாள்படைப்பவளானாள். கூ

எண்கணுளனையெழில்வலக்கண்ணினும்பதும
வண்கணுளனைமற்றிடக்கண்ணினுநுதன்மே
லொண்கணுளனைநள்ளுடைக்கண்ணினுமுலவாப்
பெண்கணாயகியீன்றனண்முத்தொழில்பிறங்க. க0

தழங்குமங்கியங்கடவுள்காயத்திரிச்சந்த
முழங்குசீரிரதந்தரசாமமுத்தோமம்
பழங்கணின்மறையோருடனயத்தினைப்பரிவின்
வழங்குபேரருட்கருணைகூர்மதிமுகத்தளித்தாள். கக

காமரிந்திரன்றிரையிட்டுப்பெனக்கரைசந்தந்
தோமிலேந்துமூன்றுறழ்ந்ததோமம்பெருஞ்சாமந்
தாமநீண்முடிமன்னவரவியினைத்தகைசான்
மாமணிக்கலன்வயங்குமென்புயத்திடைத்தந்தாள். க௨

தக்கவிச்சுவதேவர்கள்சாகதச்சந்தம்
பொக்கமில்வயிரூபமாம்புகலருஞ்சாமந்
தொக்கமேன்மையிற்பதினெழுதோமமான்வணிக
ரிக்கிளந்தவைமுழுவதுங்கவானிடத்தீன்றாள். கங

சந்தமாமனுட்டுப்புவைராசமென்சாமம்
வந்தமூவெழுதோமம்வாம்புரவிபின்னவரைச்
செந்தளிர்ப்பதத்தீன்றனளிவர்க்கொருதெய்வந்
தந்திலாமையின்முன்னவரிவர்தொழுந்தலைவர். கச

ஏனைப்புன்மரமுதலியபூதகாரியமு
மேனிப்பாலுரோமங்களினுயிர்த்துமெய்யன்பி
ஞனப்பூங்குழனாயகிமாந்தருநீழல்
வானக்கங்கைதோய்முடிச்சடைவள்ளலைத்தொழுதாள். கரு

தொழுதநங்கையைத்தூம்டித்தலமிசைக்கொண்டு
முழுதுமாகியமுன்னவன்மாந்தருநிழற்கீழ்
விழுமணித்தவிசும்பரின்விளங்கிவீற்றிருந்தான்
கழுமணீங்கியெவ்வுயிர்களுங்களிப்பொடுவளர்ந்த. கசு

மூவருமுதல்வனைத்துதித்துவரம்பெறல்.

அந்தணாளன்முன்மூவருமிலளிதையவள்பால்
வந்தமாத்திரையேதுயின்றெழுந்தவர்மாண
முந்தைவாலறிவெய்தினார்முதல்விதன்பதமு
மெந்தைபாதமுந்தொழுதெழுந்திறைஞ்சியேத்தெடுப்பார். கள

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தரங்கவெண்புணரிகான்றதழல்விடம்பருகியெம்மை
யிரங்கியன்றளித்தாய்மற்றுமின்றொருபண்டன்றன்னா
லுரங்கெழுமடியேமாவிமுழுவதுமுய்யக்கொண்டு
வரங்கிளர்கருணைகூர்ந்தவள்ளலேபோற்றிபோற்றி. கஎ

சைவச்செந்தழலின்யாங்களாகுதிச்சமிதையாகச்
செய்வித்துவேள்வியாற்றுஞ்சிவபிரானருளினாலே
யுய்வித்துமீளவெம்மையுதவியகருணைநாட்டத்
தெய்வப்பூங்கொம்பரன்னசெல்வியின்சரணம்போற்றி. கசூ

அம்மையாயப்பனாகிக்குருவுமாய்த்தெய்வமாகிச்
சும்மைநீர்க்காஞ்சிவைப்பினிருவகையுருவுதோற்றி
யெம்மையுமாண்டுகொண்டவிருமுதுகுரவீரன்பர்
வெம்மனச்சுரும்புவீழும்விரைமலர்ப்பாதம்போற்றி. உ௦

மைந்தர்கள்குழறிப்பேசுமழலைமென்கிளவிவேட்குந்
தந்தையுந்தாயுமென்னத்தமியரேம்புகழ்ச்சிகொண்டு
புந்திமிக்குவகைபூப்பத்திருவருள்புரியீரென்று
நைந்திருவிழிநீர்சோரநயந்திருந்துதிகள்செய்தார். உக

மடங்கருங்காதன்மேன்மேல்வளர்ந்தெழக்குடந்தம்பட்ட
முடங்குகான்ஞிமிறுபாயுமுண்டகத்திறையைமாலை
யடங்கமூவுலகுநீற்றுமண்ணலையருளினோக்கி
விடங்கனிமிடற்றுப்புத்தேள்வேட்டதெனுரைமினென்றான்.

அவ்வண்ணமருளிச்செய்யக்கேட்டவரறைதலுற்றா
ரவ்வெனுங்கமலத்தோனுமவ்வெனுங்கரியமாலு
மவ்வெனுமரனுமாயமற்றெமைவிழியினீன்ற
வவ்வனோகாமக்கண்ணியெனப்பெயர்பெறுகமன்னோ. உங

சேந்தமென்றளிர்கள்கோதித்தீங்குயிலினிதுகூவு
மேந்திணர்ச்சாகைதோறுமிளநறாவொழுக்கிவாசப்
பூந்துகளுகுத்துச்சீதப்புதுநிழல்விரிக்குந்தெய்வ
மாந்தருவடியினீவிர்வைகலும்வதிகவென்றார். உச

தவளவெண்ணீற்றுமேனித்தலைவனவ்வரங்கணல்கி
யிவறிமற்றவர்கண்மீட்டுமிணைக்கரங்குவித்துவேண்டப்
புவனமோர்மூன்றுமுய்யப்புதுநிழன்மாவின்மூலத்
தவிரொளிமயமாய்த்தோன்றுமருட்குறிமேன்மைவிள்ளும். உரு

திருவேகம்பப்பெயர்மாட்சி.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இன்னிசைச்சுரும்புளர்மலர்த்தொடையலிணங்குதோட்டுணைமைந்தர்காள்கேண்மின்
மன்னுருத்திரனொருவனேபிரமமொன்றுமற்றிலையென்பதுதுணிபாற்
பன்னுமெய்ப்பொருட்பிரமமாம்வேதமொற்றைமாவெனப்பணைத்ததுகண்ட
ரன்னதற்கிறையாகியமேயிலிங்கமாயதனடித்தலத்துறைகேம்.

ஏதநீக்குசொல்வடிவினுந்தனிமாவெனப்படுந்தருவடிவினுமதற்கு
நாதர்யாமெனத்தெளிமினிங்கேகமதுநாமமேகம்பநாதனென்றுரைப்ப
வாதிமந்திரமஞ்செழுத்திதுவேயைம்பெருமபாதகமறுக்கு
மோதுமைவகைப்பிரமமந்திரத்துமஞ்செழுத்தினுமுயர்ந்ததிம்மனுவால்.

விதிவழாதபல்லுறுப்புடைமறையின்மிக்கதாகுங்காயத்திரியதனி
னதிகமஞ்சமாமந்திரமதனினுறிரண்டெழுத்ததனினெட்டெழுத்தாம்
பதியுமேன்மையெட்டெழுத்தினஞ்செழுத்துக்கோடிகோடிமேம்பட்டதஞ்செழுத்தி
னுதலுமேகம்பநாதமாமனுத்தானூறுகோடியின்மிக்கதென்றுணர்வீர்.

அன்னதன்மையின்மனுவெவற்றினுக்குமதிகமாகியவேகம்பநாத
னென்னுமந்திரமியம்புநாவுடையாற்கிப்பிறப்புறும்பெரும்பயனெய்தும்
பன்னரும்பெருங்கீர்த்தியுமூக்கப்பாடுமாக்கமுமாயனும்வளரு
மன்னுகல்வியுங்கேள்வியுமொழுக்கும்வழுக்கிலானவனேயெனத்துணிவீர்.

கன்னிதந்தைதாய்வேதியர்ச்செகுத்தோர்களுமாந்துநர்களுநர்குரவன்
பன்னிமாணலம்விழைந்தவர்மற்றைத்தீர்வுகாணரும்பழிவினைவிளைத்தோ
ரென்னராயினுமேகம்பநாதனென்னுமந்திரமொருமுறைகணிப்பிற்
றுன்னுவெங்கொடும்பாதகமனைத்துந்துனைவினங்கவர்தம்மைவிட்டோடும்.

அறப்பயன்பொருளின்பம்வீடென்றுவனைத்துமோதுநர்க்களிக்குமிம்மனுவை
யிறப்பவந்துமுற்றிரும்பசிப்பிணியினீண்டியாருயிர்கவற்றும்வல்லிடரின்
மறப்பினுயினுங்கிளக்கவல்லுநரேமற்றெமக்குமிக்கினியவர்கண்டீர்
சிறப்பவிம்முறைமனுவிதன்பெருமைதெரிந்துகூறினர்க்கின்பவீடளிப்பேம்.

காஞ்சித்திருநகர்மாட்சி.

என்றுமாவடிமுளைத்தெழுந்தருளுமிலிங்கமேன்மையையெடுத்துரைத்தருள
வொன்றுமானந்தவுததியின்மூழ்கியொன்னலார்குடர்குழம்பியுள்வெதும்ப
வென்றகூர்ம்படைத்தாணுமாலயனுவிளம்புமூவரும்விரைத்தபூந்தொடையற்
கொன்றைவார்சடைமுதல்வனுர்கமலக்கொழுமலர்ப்பதந்தொழுதுபோற்றிசைத்து.

காட்டினுடைக்குயின்றருளிறைவகம்பமேவியகருணையங்கடலே
மோட்டுநீர்ப்புவிவியத்தகுமினையமுதுநகர்ப்பெருந்தன்மையுந்தனிமா
வீட்டுமேன்மையுமெமக்குரைத்தருளாயென்றுவேண்டலுமீர்ந்துணரிதழித்
தோட்டுமோலிகைச்சடைமுடிக்குழகன்றென்னகர்த்திறங்கேண்மினென்றியம்பும்.

கறங்குவண்டிமிர்கமலமூந்துழாயுங்கடுக்கைமாலையுந்துயல்வருபுயத்தீர்
பிறங்குகல்லெனுமொழிப்பொருள்பிரமம்பிரமமானயாமஞ்சிக்கப்படலா
லுறங்கிடாப்புகழ்க்காஞ்சியென்றுரைக்குமொருதிருப்பெயரெய்துமிந்நகர
மறங்கரைந்தநூலெலமைப்பரப்பிரமமகிலகாரணமென்பதுதெளிவீர்.

இலகுவாணகையரிமதர்மழைக்கணிருண்டவார்குழல்வேய்மருள்பணைத்தோட்
கலபமாமயிலியலெழின்மடவாருந்தித்தானத்தைக்காஞ்சியென்றுரைப்ப
சுலவுவெண்டிரைப்பனிக்கடலுடுக்கைத்தொல்லைஞானிலமடக்கொடிதனக்குக்
குலவுகாஞ்சிநற்றானமாய்ப்பொலிந்தகொள்கையானுமத்திருப்பெயர்வழங்கும்.

மற்றுங்கவ்வெனல்சென்னியோடின்பமலரவன்றனையுணர்த்துமஞ்சித்தல்
சொற்றபூசனையடைவுமாம்யாருஞ்சென்னிமேற்கொடுதொழத்தகுஞ்சிறப்பாம்
பற்றிவைகுநர்பேரின்பமுறலாற்பங்கயத்தவன்வழிபடலானும்
பெற்றதாகுமித்திருப்பெயரிதனுற்பிரமலோகமென்றுரைக்கவும்படுமால்:

வீடுபேற்றினர்தேவரென்றுரைப்பவிழையுமிந்நகர்வரைப்பிடைவீடு
கூடும்வாழ்க்கையர்நிறைதலிற்றேவபுரமெனப்படுங்கொடுவினைத்திறத்தாற்
பாடுசான்றபோர்புரிவருந்தகவினயோத்தியென்னவும்பகருமிந்நகர
நீடுமென்னவருறைதருமயோத்திகழுமுத்தருக்குறையிடமன்றல்,

சுவர்க்கமெய்தினர்தேவரென்றோதுஞ்சுருதியாலதுநாகநாடன்று
நவிற்றுருத்திரலோகமேசுவர்க்கமாகுமாதலினலங்கெழுஞ்சோதி
நிவக்குமென்றிடுமேயோத்திநீள்பிரமலோகநீடொளித்தேவமாபுரமும்
புவிக்குண்மேதகுகாஞ்சியேயன்றிப்புவனமூன்றினும்வேறிலேகண்டீர்.

இத்திருப்பெருங்காஞ்சியினெம்மைமறலிக்கஞ்சுநரிகபரம்விழைந்தோர்
நித்தமன்பொடுவழிபடூஉப்பழிச்சநிறைந்தபேரருட்கருணைபூத்துறைகே
மெய்த்தமாமறைமுழுதுமிவ்வாறுவிளம்புமாதலின்மற்றெமக்கினிய
வுத்தமப்பதியிதுவெனத்தெளிமினோங்குமாந்தருப்பெருமையுமுரைப்பாம்.

மாவிருட்சமாட்சி.

மீதுமன்னியமூலமுங்கிழக்குநோக்குசாகையுமாய்விரைகமழும்
பாதவந்தனையுணர்ந்தவன்வீடுபெற்றுமாங்கதுபலகனிபடைத்துச்
சீதவார்புனலொழுக்கறுக்கம்பைத்திருநதிக்கரைமருங்கொலிவேதச்
சூதமாமரமெனத்திகழ்ந்தொளிருந்தொல்லைவையகம்பெரும்பயன்படைப்ப.

ஏழிரட்டியகல்வியுமதன்மேன்மல்லிகைக்கொடியெனப்படர்ந்தமரும்
பாழிவிச்சைகட்கிறைவியாங்கமக்கண்ணியத்தகுபசுங்கொடிக்கினியா
ளூழியீற்றினுமுலப்பருந்தகைசான்றோங்குமாவினுக்குரிமையம்யாமே
யாழியேந்தியநாரணன்விரிஞ்சனரன்னைப்படுமென்புடைப்புதல்வீர்.

மாறிலாமறையெமதுவாசகமாம்வாசகத்தொடுவாச்சியந்தனக்கு
வேறுபாடில்லையாதலினெமக்குமினையமாவிற்கும்வேறுபாடில்லை
யீறிலாவிதன்மூலத்தினென்றுமிலிங்கமூர்த்தியாயுறைகுதுநெருநல்
காறும்யாவருங்கண்டிலரிந்நாட்கவுரியோடுநீர்காணவீற்றிருந்தேம்.

அகிலநாமமுமெமக்குரிப்பெயராமவற்றினும்பவன்முதல்பெயர்சிறப்பாத்
தகுமவற்றினுஞ்சம்புவேமயோபுசங்கரன்மயக்கான்சிவன்மற்றை
யிகழருஞ்சிவதரனெனும்பெயர்களினியவாகுமங்கெவற்றினுமேலாய்ப்
புகழ்படைத்தவேகாம்பரநாதனெனப்புகல்பெயரெமக்குமிக்கினிதாம்.

இன்னதன்மையிற்காஞ்முளைமுதலோர்க்கித்திருப்பெயரிட்டழைப்பவர்க்குத்
துன்னும்வல்வினைமுழுவதுமகலத்தொலைத்துமுத்தியுஞ்செல்வமுமளிப்பேம்
பன்னருந்தனிமந்தணமுமக்குப்பகர்ந்துளேமெனப்பண்ணவனிறுப்ப
வன்னமூவருமுவகைமீக்கிளைப்பவம்மையப்பரைவணங்கிவேறுரைப்பார்.

கம்பாநதிமாட்சி.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கன்னிமாநதிகம்பையொன்றிவணுள்ளதென்றருள்செய்தனை
யின்னகாரணமென்றுதேறிலமிறைவனேயெனவெம்பிரான்
முன்னெழுந்துமதர்த்துவீங்கிமுகிழ்த்தமென்முலையம்பிகை
தன்னைநோக்கிமகிழ்ந்துமைந்தர்கள்கேண்மினென்றதுசாற்றுவான். சரு

வடிவமெட்டுநமக்கமைந்தனமறையுரைக்குமவற்றுளோர்
வடிவமாம்புனலுலகெலாமுறுதூய்மைசெய்யும்வனப்பது
வடிவமுற்றவருயிர்தளிப்பவழங்குமற்றிதுமாநதி
வடிவுகொண்டிவணொழுகுகின்றதுமன்னுயிர்த்தொகையுய்யவே. சசு

இந்நதிப்புனலெம்மைநேர்வரயார்விழிகுமகப்படா
துன்னருஞ்சிவயோகசிந்தையுள்யாமுறைந்திடுமாறுபோல்
வன்னிலத்தினகத்துவார்ந்துவழங்குகின்றதுகாண்மினோ
கன்னியாறிதுகம்பையென்றொருகாரணப்பெயர்பெற்றதே. சஎ

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பன்னுபாவென்றறூய்மைபருகுதல்காப்புங்கூறுங்
கன்னி... ...ய்கையாதிகம்மெனும்புனல்கடம்பாற்
றுன்னிமூழ்குநர்வெம்ப... ...றதொகுதிமெய்யழுக்குந்தீரத்
தன்னிடைமுழுகித்தூய்மைதாங்கலாற்கம்பையென்ப. ௪௯

கம்மெனுஞ்சிரமேற்றீண்டிற்றூய்மைசேர்கவினுலுண்டோர்
கம்மெனுமாவிதம்மைக்காத்தலான்மூழ்கினோரைக்
கம்மெனும்பெருவீட்டின்பநுகர்விக்குங்காட்சியாலுங்
கன்மநோயறுக்குமிந்தத்தடநதிகம்பையாமால். ௫௦

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கங்கைமாநதியமுனைவாணிமுதல்கவின்பெறுநதியெலாம்
பொங்குவெண்டிரையெற்றுகம்பைநறும்புனற்கிணையெய்துறு
மங்கலந்தருகம்பைமென்புனறோய்ந்தகாற்றுவழங்கிடத்
தங்கண்மேவியபுன்மரங்களுமின்பமூத்தியையண்ணுமால். ௫௦

யோகநன்னிலையிற்றவத்தின்வழீஇயினருயர்கம்பையின்
மோகமில்கயலாதியாகியுயிர்த்துமுத்தியினண்ணுவார்
போகுமக்கரையிற்கிளைத்தபுதன்மரங்களுருத்திர
லோகநின்றுவழூஉமுருத்திரராகுமுண்மையுணர்ந்திடீர். ௫௧

யாண்டிறப்பவர்கட்குமிப்புனலிறுதிவேலையினுச்சியிற்
றீண்டுமேலவர்முத்தியெய்துவர்தீஞ்சுவையமிழ்துண்பவ
ரேண்டகுந்திறலமரராகுவரினையபூம்புனலுண்பவ
ராண்டநம்முடனுவராதலினமிழ்தின்மிக்கதுகம்பைநீர். ௫௨

காட்சியெய்தருமேன்மைசான்றுயர்கம்பைவார்புனலாற்றினு
லாட்சியெய்தியபதியெவற்றினுமதிகமாயதுகாஞ்சியூர்
மீட்சியில்புகழிவ்விரண்டினும்வேறெமக்குளவேணவா
மாட்சிபெற்றுறுகங்கைகாசியின்வைத்திலேமிதுமெய்ம்மையே. ௫௩

பன்னிருநாமமாட்சி.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புவனசாரமும்மூர்த்திவாசம்விண்டுபுரங்காஞ்சி
தவமார்கலிசித்திலயசித்துசகலசித்திதபோமயவூர்
கவினார்பிரமபுரமாதிபீடங்கன்னிகாப்புவினைப்
பவநோயறுக்குஞ்சிவபுரமாப்பகர்பன்னிரண்டுதிருப்பெயர்த்தால். ௫௪

புவனமூன்றன்பயனுகிப்பொலிவுபெறலாற்புகழ்தகைய
புவனசாரமெனத்திகழும்புனல்காலுயிர்தீயிருசுடர்வான்
புவனவடிவாநந்தமைநீர்மும்மூர்த்திகளும்பூசித்துப்
புவனமேத்தவைகலின்மும்மூர்த்திவாசபுரமாமால். ௫௫

பரவுமேகவாகனமாங்கற்பத்தெம்மைப்பங்கயக்கண்
வரதராசன்வழிபடலால்விண்டுபுரமாம்வளர்காஞ்சி
புரமாயதுமுன்வகுத்துரைத்தாம்பொல்லாக்கலிநோய்கலியுகத்தும்
விரவாவண்ணநல்குதலால்விளங்குங்கலிசித்தெனப்படுமால். ௫௬

கடைநாளெமக்கீதாடரங்காங்கவினுலிலயசித்தாகுந்
தடைதீர்சகலசித்திகளுந்தரலாற்சகலசித்திபுரம்
படையாவாய்மைத்தவமியற்றிப்பனிமால்வரையின்வருமன்ன
நடையாள்வழுத்தும்பரப்பிரமமயமாநகரந்தபோமயமாம். ௫௭

வேதனெமக்குத்தகுஞ்சோமவேள்விசெயலாற்பிரமபுர
மாதிபீடமுதல்பீடமாயசிறப்பாற்கன்னியெனுங்
காதலணங்குபுரந்திடலாற்கன்னிகாப்பியெங்கெமைக்கண்டோர்
பேதமின்றிச்சிவனுண்மைபெறலாலாகுஞ்சிவபுரமே. ருஅ

வேறு.

எடுத்தியம்புமிப்பன்னிருநாமமும்வைகறையெழுந்தோதி
லடுத்ததீக்கனுக்காட்டியவிடும்பைநோய்வறுமைதீர்ந்தருள்வாரி
மடுத்துவான்கதியெய்துமாறுமக்கிவைவகுத்தனமருளாலென்
றுடுத்ததிக்குடைநாயகன்விளம்பலுமுவகையங்கடலாழ்ந்து. ருசு

மூவர்விண்ணப்பங்கேட்டு பெருமானுபதேசஞ்செய்தல்.

உலம்படைத்ததோட்பண்டனுமைவுணனுமொளியிழந்துலந்தேமை
நலம்படைத்தவான்சோதியுளொடுக்கிமீட்டிறைவிதன்னடிவாமம்
வலம்படைத்தமூவிழியினும்வருவித்தவளேலேயடியேங்கள்
புலம்படைத்தினிச்செய்பணியருளென்னப்போற்றினர்முதன்மூவர். சூ0

ஓதுமவ்வுரைதிருச்செவிசாத்தியெம்முளங்களிவரச்செய்யுங்
காதன்மைந்தர்நீராதலினுமக்கருள்காட்டுதுமெனவோர்பாற்
போதளாங்குழன்முகிழ்முலைப்பொலந்தொடிப்பூங்கணைமதர்வேற்கண்
மாதர்வானுதற்பசுங்கொடிமணந்தவன்வாய்மலர்ந்தருள்செய்யும். சூக

பிள்ளைவண்டினமுரன்றுபண்பயிற்றிவார்ந்திழிநறுப்பெருவெள்ளங்
கொள்ளைகூட்டுணுமலர்த்தடம்பொதும்பரிற்கொழிதமிழ்மறைப்பாடற்
கிள்ளைபாடுசீர்க்காஞ்சியினென்றுமிக்கிளரொளியிலிங்கத்தே
வெள்ளைவாணகைத்துவரிதழுமையொடுமினிதுவீற்றிருக்கின்றேம். சூஉ

எம்மையாவருங்காணலரொருபொழுதியோகியர்க்கெதிர்காண்பே
மம்மநீரிவணெம்மடிப்பூசனையருமறைவிதியாற்றுன்
மும்மையாகியவுலகமும்படைத்தளித்தழிக்குமாமுயல்கிற்பீர்
நம்மிடத்துறுபத்தியுமருச்சனைநலத்தினுற்பெறுவீரால். சூங

படைத்திபங்கயனளித்திமாலுருத்திரன்பற்றறவுலகெல்லாந்
துடைத்தியென்றருள்வழங்கியிச்சுரிகுழற்றேவியுமெமையீண்டே
கிடைத்தபேரன்பினுடெறும்பூசனையாற்றுகவெனக்கேட்டோ
ரடைத்கநல்விதிபுகன்மறையாததுவந்தவாறெவனென்றார். சூச

என்றமூவருக்கிளநிலாநகைமுகிழ்த்தெம்பிரானுரைசெய்யு
நன்றுகேண்மினெம்மிரவிடைத்திருநடநவின்றிருள்புலர்காலை
மன்றவெம்மிடையொடுங்கியவுலகுயிர்முழுவதும்வழுவாமே
தோன்றுபோற்படைத்திடுவதுகருதினேமுத்தொழில்புரிவீர்காள். சூரு

படரொளிப்பிழம்பாகுமிவ்விலிங்கமேபற்றிநின்றுலகெல்லா
முடையநம்மிடைநிலைபெறுமறைகளைமுன்னுறவுயிர்ப்பித்தேந்
தொடையிணங்குமப்பழமறைமுழுவதுமெம்மடிதொழுதேத்திக்
கடையிலாதபேரன்பினுற்பழிச்சினசிரமிசைக்கரங்கூப்பி. சூசு

பாரின்மேயினைபாரொருவடிவினைபாரினுக்கறியொண்ணுய்
பாருமற்றையப்பாரிடைப்பொருளுநின்றுணையிற்பயில்வித்தாய்
நீரின்மேயினைநீரொருவடிவினைநீரினுக்கறியொண்ணுய்
நீருமற்றையநீரிடைப்பொருளுநின்றுணையினிலைப்பித்தாய். சூஎ

நெருப்பின்மேயினை நெருப்பொருவடிவினை நெருப்பினுக்கறியொண்ணாய்
நெருப்புமற்றையநெருப்பிடைப்பொருளுநின்னுணையினிறுவித்தாய்
மருத்தின்மேயினைமருத்தொருவடிவினைமருத்தினுக்கறியொண்ணாய்
மருத்துமற்றையம்மருத்திடைப்பொருளுநின்னுணையின்வதிவித்தாய்.

யொண்ணாய
விண்ணுமற்றையவ்விண்ணிடைப்பொருளுநின்னுணையினிறுவித்தாய்
கண்ணுமாருயிரிருசுடரெவற்றினுமிம்முறைகலந்தோங்கி
யெண்ணினுலறிவரும்பெருமுதல்வநின்னிணையடிமலர்போற்றி. சுசு

கலிவிருத்தம்.

இன்னவண்ணம்பழிச்சியெமைத்தொழு
மன்னுமன்பின்மறைகளைநோக்கிநீர்
நன்னர்வேட்டனநல்குதும்வேதங்காள்
சொன்மினென்றலுஞ்சொல்லுதலுற்றன. எ0

எந்தைநின்முகத்தெங்களையீன்றனை
யந்தமெய்ப்பெரும்பேறுடையெங்களைச்
சிந்தைசெய்துதிருவருள்வைத்துநின்
சந்தமேனியணியெனத்தாங்குவாய். எக

நயக்குமாறினிநாங்களுலகிடைச்
செயத்தகும்பணிசெப்புதிமற்றெமை
வியப்பவேதங்களென்றுவிளித்தனை
யுயர்த்தவப்பெயர்க்காரணமோர்கிலேம். எஉ

என்றமாமறைதம்மையியல்பினு
லன்றுகோவணநூபுரமாதியா
மன்றமெய்யணியாக்கிமகிழ்ந்துபி
னென்றுகூறினமூங்கிவைகேட்பவே. எஙு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறம்பாவமென்றிரண்டினெம்முண்மைத்தன்மையினுமகிலலோகந்
திறம்பாமற்பிரமாணமாவீர்வித்தெனும்பகுதிஞானஞ்செப்பும்
புறம்பாயாமனப்பெரியோர்நும்மொழியாணைமையுணரும்பொலிவான்வெள்ளிப்
பறம்பாருமெமக்கினியபான்மையீர்வேதமெனப்பெயர்பெற்றீரால்.

வேதியர்கண்முதன்மூவருமையோதிவீடுபேறடைகமுற்று
மோதுமறையிரண்டானுமொன்றானுமோதாதுபுறநூல்கற்று
மேதிலிருபிறப்பாளரிருட்குழிவீழ்ந்திடர்ப்படுவாராகநீயிர்
பேதியாமெய்யன்பினெமையீண்டுவழிபாடுபேணிவாழ்மின்.

உலகுய்தற்பொருட்டுநாமெவ்விடத்தினெவ்வுருவமெடுப்போமங்க
ணலமெய்துமதற்கியைந்தவடிவநீர்கொள்கென்றுநயப்பமுன்னு
ளலர்தலைமாநிலம்பரசுமிங்ஙகரின்வரமளித்தேமடையாருட்கும்
வலமன்னுந்திரடிண்டோண்மைந்தர்களாதலினுனம்மறைகளெல்லாம்.

ஈங்குநாம்பரஞ்சோதியிலிங்கவடிவாயமர்ந்தேமாகவீண்டைத்
தேங்கவிழ்க்குங்கவிழிணர்ப்பூங்கனிதுவன்றுமொராமாகுமாய்த்திகழ்ந்துநின்ற
வீங்குதிறற்புரமூன்றுமிறுத்தநாட்போர்கமகாலமேயினேம்யா
மாங்கவையுங்கொய்யுளைவெங்கலினவாம்பரிவடிவாயமைந்தகாண்மின்.

மற்றைவேடுருவாதிவடிவநாங்கொண்டுழிமாமறையுமாங்கட்
பற்றமைகூறுகிர்ஞாளிமுதலியவாய்ப்போந்தனவிப்பதியுளோர்பால்
வெற்றிகடம்புரிகாலைநூபுரமாய்ப்பொலிந்தனவவ்விரிநீர்ச்சூழ
லற்றைநாண்முதல்வேதநூபுரப்பேர்பெற்றுவினையறுக்குமாலோ. எஅ

மாண்டபெருவளம்படைத்ததாருகாவனத்திடைநாம்பயிக்கவேடம்
பூண்டவழிகோவணமாய்ப்பொலிந்தனவாலிவ்வாறுபுரைதீர்நம்பால்
வேண்டும்வரம்பெற்றோங்கும்வேதநாலுணராதாரெம்மைத்தேறு
ராண்டகைமைவேதியர்க்குமேம்பாடுவேதமேயாகுமன்றே. எகூ

இத்தகையமாமறைநான்முன்னளித்திருக்காஞ்சிவரைப்பிற்றென்சார்
தத்துநீரலைபுரட்டுஞ்சேயாற்றின்றடங்கரைக்கணிமையோர்கட்கு
மெய்த்தவர்க்குமோதுவித்தோமாதலினுன்மேவுதிருவோத்தூரென்னு
மத்தலத்தினைமைத்தொழுவோருமறைநூன்முழுதுணர்ந்துவீடுசேர்வர்.

இன்னமறைவிதியாலிவ்வேகம்பத்தெமைப்பூசையியற்றீரென்னப்
பன்னகப்பூணணிமார்பிற்பரமேட்டிபணித்தமொழிபேணியன்னோர்
சென்னிமிசைக்கரங்கூப்பியானந்தப்பெருங்கடலிற்றிளைத்துவாழ்ந்து
பொன்னிமயப்பிடிமணந்தமணவாளநம்பிகழல்பூசிப்பாரால். அக

கலிவிருத்தம்.

பார்வதிமுதலியோர்பரன்பூசைசெய்தல்.

சயமுறுகாரணத்தலைவர்மூவரைக்
கயல்விழித்தோற்றியகாமக்கண்ணியாம்
பெயரியவிலளிதைப்பிராட்டிவானளா
யுயரியமாமுதலொளியைப்பூசித்தாள். அஉ

வெள்ளக்கம்பம்.

மற்றதற்கணியதென்மருங்கினைப்பெயர்
பற்றியசிவக்குறிநிறுவிப்பாயிதழ்
பொற்றசெந்தாமரைப்புனிதன்பூசனை
தெற்றெனச்செய்தனன்றெளிந்தசிந்தையான். அந

கள்ளக்கம்பம்.

பன்னருமாமுதல்வாமபாகத்தி
னன்னணமணியணியகன்றமார்பினன்
மன்னியவலகெலாமயக்குமாசையிற்
பொன்னவிர்மலர்கொடுபூசையாற்றினன். அச

நல்லகம்பம்.

பேதமில்பாவனைபிறங்கத்தாணுவுங்
காதலிற்பூசைமுன்னியற்றிக்கண்ணுதன்
மேதகையடிகளோடொருமைமேயினு
னுதலினிருவர்க்குமில்லைவேற்றுமை. அரு

இம்மூர்த்திகள்விசேஷம்.

வாலியசிந்தையான்மலர்ப்பொகுட்டணை
மேலவன்வழிபடும்வெள்ளக்கம்பனை
யாலியவன்பினாலருச்சித்தேத்துவார்
தோலுடற்பொறைகழீஇத்தூயராகுவார். அசு

மருள்புரிகருத்தினன்மாயனைத்தலிற்
கருதுமப்பெயரியகள்ளக்கம்பனைத்
திருவடிவழிபடப்பெற்றசீரியோ
ருருகெழுகொடுவினையையலுட்படார். அஎ

உருத்திரனலத்தகுமொருமைபூண்டுயர்
கருத்தொடும்வழிபடுநல்லகம்பனை
யருத்தியின்வழிபடுமடியரெம்பிரான்
மருத்தபூந்திருவடிக்கலப்பின்மன்னுவார். அஅ

கருதருநல்வினைகள்ளன்வெள்ளமோர்
தருதிருவேகம்பனென்றுதன்னொடு
மருமலர்க்கவிழிணர்மாவினீழல்வா
ழொருவனைநால்வகையுருவமேயினான். அகூ

தென்னுயர்கச்சியினகிலசித்தியு
மன்னுயிர்க்குதவியமகிழ்ந்துநம்பிரா
னன்னணம்பூசைகொண்டருளிமூவர்க்கு
முன்னியவரங்களுமுறையினல்கினான். கூ0

இறைவிவேண்டுகோள்.

இறைவியிம்மாநிழலினிதுவைகிய
மறைமுதலடியிணைவழிபட்டேத்துபு
நிறைபெருமகிழ்ச்சியினீடுகாதலாற்
குறைவறுவரம்பலகுறித்துவேண்டுவாள். கூக

வேறு.

வேதக்கோவணவேதப்புரவிய
வேதப்பூணவவேதமுதல்வனே
வேதத்தாலுமுணர்வருமேதகாய்
வேதச்செல்வவென்விண்ணப்பங்கேண்மதி. கூஉ

மன்றலார்மறைமாவினடித்தலத்
தென்றுமேவுதியேனுமியோகியர்க்
கன்றித்தோன்றிலையாயினையீண்டினி
மன்றயாவர்க்குங்காட்சிவழங்குவாய். கூ௩

தெள்ளுதீம்புனலித்திருக்கம்பையும்
வள்ளலோரிடைக்காண்டகமன்னுசென்
றுள்ளிழைக்கிரியுத்தமிவேண்டலும்
பிள்ளைவெண்பிறைக்கண்ணியன்பேசுமால். கூச

இறைவன் கூறல்.

வேறு.

மன்னுயிர்முழுவதும்பயந்தமாணிழா
யன்னவையுய்யுமாகருதியன்பினா
லின்னவைபுகன்றனைமகிழ்ச்சியெய்தினேம்
பன்னுதுமனக்கொளப்பரிந்துகேண்மதி. கூரு

மேதகுசிற்பரவியோமரூபநீ
யோதியசிற்பரவியோமரூபியா
மாதர்வாணுதலியப்பரமவானமும்
பேதுறவொழிக்குமிப்பிலத்துவாரமே. கூசு

மற்றிருவேங்கட்கும்வடிவமாகுமப்
பொற்றனிப்பிலத்தினைப்புண்ணியஞ்செய்து
பற்றறத்துறந்தவர்காண்பர்பற்றமை
சிற்றறிவுடையவர்தமக்குச்சேயதே. சுஎ

ஆயிடைமகிழ்ந்தினிதுறைதுமாய்தொடி
மேயவப்பிலத்தினுமிக்ககாதலி
னேயுமிச்சுடரொளியிலிங்கத்துன்னொடு
மாயிரும்புவிதொழுமன்னிவைகுகேம். சுஅ

இதற்குமுன்னீண்டமையெவருங்காண்கில
ரிதற்குமேனீபெறுமெழில்வரத்தினாற்
கதித்திடயாவருங்கண்டுபோற்றுக
கதிர்த்தவான்பிலத்திடையுனையுங்காண்கவே. சுசு

எற்றுநீர்க்காஞ்சியேயெமக்குமேனியாந்
தெற்றெனத்தெளிமதியினையசீர்மையான்
முற்றொளிவானவர்முனிவர்தாமெலா
மற்றிவண்விளங்கியுமறைந்துவைகுவார். க00

உலகமிக்கோயிலினுறுப்புமுற்றுமாய்க்
குலவியீங்கெமைத்தொழுதுறையுங்கோற்றொடிப்
புலவுவேலிணைவிழிப்புளகப்பூண்முலை
யிலவிதழ்மதிநுதலிமயமாதராய். க0க

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விரவுசீர்நல்லகம்பம்விளங்கொளிவெள்ளக்கம்பம்
வரமருள்கள்ளக்கம்பம்வண்டிருமயானம்வாலீச்
சரமெனுமிலிங்கமைந்திற்றகுபஞ்சபிரமமாகி
யிரவுசெய்குழலாய்நின்னேடினிதுவீற்றிருப்பங்கண்டாய். க0உ

வாலீச்சரம்.

என்னலுமிறைஞ்சிநல்வாலீச்சரம்யாங்கணைந்தா
யன்னதுகண்டோர்யாவரதன்றிறம்யாதோவென்னப்
பொன்னவிர்சுணங்குபூத்தபொம்மல்வெம்முலையாள்கேட்பக்
கன்னல்வேளெரியநோக்குங்கண்ணுதலருளிச்செய்யும். க0ங

வாலிமாலிலிங்கமேன்மைகேண்மதியயானக்கீழ்சார்
சீலமார்சித்தர்பல்லோர்சித்திகள்வேண்டிப்போற்ற
மூலமாயொளியாயின்பாய்முகிழ்த்ததுவாயுலிங்க
மேலவார்குழலாயென்றுமகிழ்ந்தினிதிருப்பேமங்கண். க0ச

வாலிமுன்றொழுதுநேர்ந்தார்வலத்தினிற்பரிதியாண்டுந்
தோல்வியில்வாகையோடும்பெற்றனன்றோகாயென்றான்
கோல்வளைவாலியென்பான்யாரெவன்குமரன்மற்றுன்
பால்வரம்பெற்றதெவ்வாறென்றலும்பகரலுற்றான். க0ரு

பண்ணவர்முனிவரான்றோர்பாங்குற்றிடைந்துவைக
விண்ணவர்க்கிறைவன்புத்தேள்வேத்தவைத்தவிசின்மேனு
னுண்ணிடையணங்குநல்லார்மின்கொடிநுடக்கமானக்
கண்ணெதிராடுமாடல்கண்டுவீற்றிருந்தானாக. க0சு

அங்கவராடல்காணுமாசையாலிருள்கால்சிக்குஞ்
செங்கதிர்க்கடவுண்மான்றேர்செலுத்துறுமருணனுங்கண்
வெங்கதிர்விடைபெற்றேகியரம்பையர்விண்ணோரெல்லாம்
மெங்கணுநிறைந்தவாற்றாலிடம்பெறுதிதனைச்செய்வான். ௧0௭

அற்புதவனப்பின்வாய்ந்தவரம்பையரெவர்க்குமுன்னர்
நிற்பதுநோக்கித்தானுநேரிழைவடிவுகொண்டு
பொற்புறுமாடல்பார்த்துநிற்றலும்புல்லாருட்கு
மற்பொலிகுலிசப்புத்தேளத்தகைவடிவைக்கண்டான். ௧0அ

காண்டலுங்குழைத்தவில்வேள்கடுங்கணைக்கிலக்கமாகி
மூண்டவெங்காமமூழ்கிமுரணிருல்வலிந்துபற்றி
யாண்டொருபாங்கரெய்தியணிமுலைபொதியப்புல்லிப்
பூண்டபேரின்பவெள்ளப்புதுநலம்பருகலோடும். ௧0௯

வாலியின்பிறப்பு.

அரக்கர்கோனகைப்பநந்திவெகுண்டுனையழிப்பவல்வா
னரக்குலந்தாமேயென்னச்சபித்தவாநயந்துவிண்ணோர்
குரக்கினமானரன்றேயினையவன்குரக்குவேந்தாய்ச்
சுரர்க்கிறைகூற்றலப்போதாயிடைத்தோன்றினுல். ௧௧0

ஆயபின்கூத்துநோக்கியாவயினின்றுபோந்து
சேயொளிப்பரிதித்தேர்மேற்றிகழ்ந்தனன்வலவனுகக்
காய்கதிர்க்கடவுளங்கணிகழ்ந்தமைகடாவிமுற்றும்
வாய்மையிற்புகலக்கேட்டவ்வடிவிவட்காட்டுகென்னு. ௧௧௧

உவகைமீதூரமேன்மேல்வேண்டலுமுருவில்லான்
பவளவாய்கரியகூந்தல்பான்மொழிதிதலைபூத்த
குவிமுலைபரந்தவல்குல்கோல்வளைத்தளிர்க்கைதோற்றித்
கவினுருக்கொண்டாலென்னக்காட்டினன்றனதுபெண்மை. ௧௧௨

சுக்கிரீவன்பிறப்பு.

காண்டலுங்கதிரோன்றானுங்காமுற்றுக்கலவிசெய்ய
வாண்டகைச்சுக்கிரீபனுயிடைப்பிறந்தானிப்பான்
மாண்டகுமகவானீன்றவாலியைக்கமலக்கையாற்
றீண்டினனுச்சிமோந்துசெவியறிவுறுத்தல்செய்வான். ௧௧௩

பண்ணவர்முனிவர்யாரும்பரவினர்பேறுபெற்ற
புண்ணியநகரங்காஞ்சியாயிடைப்போந்துமுக்க
ணண்ணலைத்தொழுதுமைந்தாகவிகளுக்கரசாம்பேறு
நண்ணுகென்றுரைப்பவாலிநளிர்புனற்காஞ்சிபுக்கான். ௧௧௪

நடலைவெம்பிறவிமாற்றுஞ்சிவகங்கைநன்னீராடிச்
சுடரொளித்திருவேகம்பந்தொழுதுபோய்மயானக்கீழ்பான்
மடனறச்சித்தர்பல்லோர்வழிபடும்பெருமைசான்ற
கடனுடைவாயுலிங்கஞ்ச[illegible]ளிபயப்பக்கண்டான். ௧௧௫

மடல்பெறுவேட்கையாளன்வாயுவின்மிடலென்றெண்ணிக்
கடல்புரையன்பினங்கட்கைதொழூஉத்தவங்களாற்றி
மடலவிழ்கடுக்கைநம்பால்வரம்பலகொண்டுநேர்ந்தா
ரடல்வலிபாதியோடுகுரக்கினத்தரசும்பெற்றுன். ௧௧௬

பெற்றபிணிலிங்கந்தன்னைப்பிறங்குதன்னிருக்கையுய்ப்பான்
பற்றினன்வலியாற்காஞ்சிப்பதிநமக்கினியவாற்றான்
மற்றவன்பெயர்க்கலாற்றான்மிடலெலாம்வைத்துவாலிற்
சுற்றியீர்த்தணிவாலிற்றுத்தூரத்தேயலறிவீழ்ந்தான். ககஎ

வீழ்ந்தவனெழுந்துவந்துமென்மலரடிகள்போற்றித்
தாழ்ந்தெழுந்தடியேனில்லந்தனிலெழுந்தருளிச்சூடும்
போழ்ந்தவெண்மதியாய்செய்யும்பூசைகொண்டருளாயென்று
சூழ்ந்துநின்றிரந்துவேண்டத்தோன்றிமுன்னிதனைச்சொன்னேம்.

கச்சிமூதூரினீங்காக்காதலமெம்மையீண்டே
யர்ச்சனைபுரிதிநின்வாலழுந்தியதழும்புபூண்டு
சச்சைவெண்ணீற்றுவாலீச்சரமெனவிளங்கித்தோன்றி
முச்சகம்பரசவாழ்துமெனமொழிந்திலிங்கத்துற்றேம். ககசூ

அன்றுதொட்டனையசூழலம்புதத்திருவாலீச
மென்றொருபெயரினோங்குமேரிமாய்பஞ்சதீர்த்த
மன்றநீர்வாவிமூழ்கிவகுத்தவிப்பஞ்சலிங்க
நன்றுகண்டேத்தப்பெற்றோர்நலிவினைப்பிறவிதீர்வார். கஉ0

இன்னணமருளிச்செய்துபொலங்குவட்டிமயம்பூத்த
மின்னொடுமுவரோடும்விளங்கொளித்திருவேகம்பந்
தன்னிடைக்கரந்துநின்றான்றாசிவப்புத்தேளந்த
நன்னகர்ப்பெருமைமுற்றும்யாவரேநவிலவல்லார். கஉக

திருவேகம்பப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உ0டஉ.

தழுவக்குழைந்தபடலம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கம்பமால்கரியுரித்தவர்சிரமேற்கம்பதித்தவர்பசும்பொழிற்றலத்துக்
கம்பலம்விரித்தெனமலர்பரப்புங்கம்பமேவியதொருசிறிதுரைத்தாங்
கம்பலைத்ததிர்த்தெழுந்துமீக்கடுகுங்கம்பைமாநதிப்பெருக்கினைக்கண்டுக்
கம்பமுற்றுமைதழுவமெய்குழைந்தகருணைமேன்மையுங்கட்டுரைத்திடுவாம்.

பிரமன்பெருமானருளாலுலகைப்படைத்தல்.

பொற்றதாமரைப்பொகுட்டணைக்கிழவன்புகுதலுற்றதற்புருடகற்பத்திற்
பற்றும்வைகறைத்துயிலொழிந்தெய்யப்பாவைபாகனாரடிதொழுதெழுந்தான்
முற்றும்வெள்ளநீர்ப்பரப்பிடையவனிமுழுதுமாழ்ந்ததுகண்டுளங்கவன்று
மற்றினிச்சகவகிலமும்படைக்கும்வண்ணம்யாதெனமயங்குறும்பொழுது.

பூதிமேனியார்திருவருள்கூட்டப்புரிந்தமுன்னிகழுணர்ச்சிவந்தெய்த
வாதிகற்பத்திலெதிரெழுந்தருளியண்ணலார்கற்பந்தொறுந்தொறுநின்பாற்
சோதிசேரெழிற்குமாரநல்வடிவாற்றோன்றிநாமுனக்கருளுதுமென்னும்
பேதியாவகைதனக்குமுன்னளித்தபெருவரத்தினைத்தெளிந்தனன்பிரமன்.

அன்னதன்மையினின்றுமங்கவரேயருள்செய்வாரெனத்துணிபுடைமனத்தாற்
றன்னுதற்றலத்தடியிணைகருதித்தவங்கள்பல்பகலாற்றுழித்திகழுஞ்
சென்னியாற்றினருருத்திரகாயத்திரியினோடெழிற்குமாரநல்வடிவாய்
முன்னரெய்திடநோக்கியம்மனுவான்முதல்வனார்தமையுளர்ந்துகைதொழுது.

ஏற்றதற்புருடற்குறங்கினைதுமெமக்குருத்திரனருளுகவென்னு
மாற்றல்சான்றகாயத்திரிமனுவையனைத்துமாக்குவான்முறையுளிக்கணித்துப்
போற்றவாந்திழியருவியங்குவட்டுப்பொருப்புவில்லவாகருணைகூர்ந்துலகந்
தோற்றுமாறருள்கொடுத்தெழுந்தருளத்தோட்டுவெண்மலர்க்கலைமகடுணைவன்;

ஒருமையன்பினைப்புருடனைநினைந்தாங்குலகமாக்குழியாண்மையேதோன்ற
முருகுலாங்குழற்பெண்மையும்படைப்பான்முயன்றுமெய்திலன்புந்தியிற்றேர்ந்து
புருடனுக்கெனத்தற்பொருட்டெய்தும்பொருண்மைநீத்தனன்சகத்திரயனைப்
புருடன்றன்னுடைப்பேரருணினைகேமுருத்திரப்பிரானெமக்கருள்புரிக.

என்னும்வேறுகாயத்திரிமனுவையெழிற்புணர்ச்சியினுலகமுண்டாக்க
மன்னுயிர்க்கிழமைப்பொருள்வாய்ப்பக்கணித்துமாதவம்புரிவுழிவகிர்நாப்
பன்னகம்புனைசடைமுடிப்பிரானார்பாதிபெண்ணுருத்திகழ்தருவடிவான்
முன்னரெய்தியிம்மனுவினைக்கணித்தாய்முளரிவாழ்க்கைநீவேட்டதுதெளிந்தேம்.

நினக்குநாயகியிவளெமதிடப்பானின்றுநீங்குபுதன்னொருகூற்று
னுனக்குப்பெண்ணுருப்படைத்திடுமாற்றலுதவுமென்றுரைத்தருளவக்கணமே
தனக்குநேர்வரும்பிராட்டியுமாங்குத்தணந்துதோன்றுபுதன்னொருகூற்றின்
வனப்புமிக்கவேறணங்கினைப்படைத்துமலர்ப்பொகுட்டணையவற்கிதுவகுப்பாள்.

இவளைநாடொறுநீவழிபட்டுப்பெண்கள்யாரையும்படைத்தியென்றியம்பி
யவளைநோக்கிநின்கூற்றினிற்பெண்களனைத்துநீபகுத்திடுகெனவருளித்
தவளமுண்டகக்கிழத்திதன்கொழுநன்றனக்குநல்கித்தன்றலைவரைமணந்தாள்
கவளவெங்கரியுரித்தவர்தாமுங்கருணைசெய்துபோய்க்கயிலையைப்புக்கார்.

புக்கபின்றனைத்தொழுதுபோற்றிசைக்கும்போதினானையவ்வளைக்கையாய்நோக்கி
நெக்கசிந்தையோய்நினக்கியான்புரியுநிகழ்ச்சியாதெனமலரவன்வணங்கித்
தொக்கபேருளெந்தையாரிடத்துத்தோன்றுமன்னைநீபெண்ணுருமுழுதுந்
தக்கவாபடைத்தருள்கதில்லன்றேற்படைக்குமாற்றலென்றனக்கருள்புரியாய்.

பிரமன்வேண்டஇறைவிதிருவவதாரஞ்செய்தல்.

உம்பர்போற்றுநின்றிருவடிப்பொடியையுச்சிமேல்கொண்டுநான்படைக்கின்றே
னம்மையின்னமோர்விண்ணப்பமுளதாலடியனேன்பெறுதக்கன்றன்மகளா
யிம்பர்நீயவதரித்திடல்வேண்டுமென்றுவேண்டலுமுலகமீன்றளித்த
கொம்பர்நுண்ணிடையெம்பெருமாட்டிகூர்த்தபேரருட்கருணையினுணர்த்தும்.

முழுதுமாயுயிர்க்குயிரெனத்திகழுமுதலுருத்திரனென்றிடுஞ்சுருதி
தழுவியாங்கவனிடப்புறமேவுஞ்சத்தியானவன்சத்தியனதனாற்
றொழுதகுந்திறலவன்றிருவடிவாந்தொல்சகங்களினிடப்புறமெனதாம்
பழுதிலாளநின்வடிவினைப்பகுத்துப்பாதிபெண்மையாண்பாதியிற்றிகழ்தி.

அண்ணலாரருட்சத்தியுஞ்சிவனுமாயதன்மையினன்றுதொட்டுலகம்
பெண்மையாண்மையென்றிருவகைப்புணர்ப்பாற்பெண்ணுமாணுமாய்ப்பிறங்குமென்
பண்ணைமாமறைக்கடவுளுக்கருளிப்பாவையம்பிகையாயிடைக்கரந்து [றியம்பிப்
மண்ணெலாமுய்யச்சதியெனும்பேரால்வயங்குதக்கனுக்கொருமகளானாள்.

ஆயநங்கையைவிதியுளியரனார்க்களித்துநான்முகனன்னணந்திகழ
மாயிருஞ்சகமாணொடுபெண்ணாய்வயக்கமுற்றனவகிலநாயகியும்
பாயும்வெள்விடைப்பாகரைமணந்துபழித்ததக்கனைவெறுத்தவன்மகண்மை
மேயமேனியைநீத்திமகிரிக்குமேனைபான்மகளாயவதரித்து.

அங்கண்மேவியபிஞ்ஞகனைவற்பணியின்மேவினளாகமற்றங்நாட்பங்கயத்தவனல்கியவரத்தாற்றாருகாசுரனெனப்பயில்கொடியோன்பொங்குமாண்மையினுலகெலாம்வருத்தப்பொன்னகர்க்கிறைகுரவனைமுதலோர்தங்குழாத்தொடுமுசாவினான்முகத்தோன்றன்னையெய்தியக்கொடுந்தொழிலியம்பி.

எந்தைநீயிதுதீர்திறம்புகலென்றிறைஞ்சிவேண்டலுந்திசைமுகப்புத்தேளந்தவெந்திறற்றாருகன்செருக்கையடக்குமாண்மையன்முருகவேளன்றிக்கந்தமென்றொடைக்கடவுளரேனோர்வல்லரல்லரக்கந்தனைத்தருவானிந்துசேகரனுமையினைமணக்குமுபாயநீபுரிகெனவிடைகொடுத்தான்.

மீண்டுவாசவன்மாரனைநினைப்பவேனில்வேள்சிலைபகழிகைக்கொண்டுகாண்டகுங்கவினிரதியுமதுவுமருங்குமேவரக்கடுகிவந்திறைஞ்சியீண்டுநின்னருளாணையின்வலியால்யாதுமாற்றுவல்செய்பணியருளாய்மாண்டமுப்புரம்பொடித்தவர்தமையும்வெல்லவல்லுநன்மற்றுரையெவனோ.

ஈதியம்புழியிந்திரனுவகையெய்திவிண்ணவரிடும்பையுமவுணனீதியில்லனபுரிவதுமலரோனிகழ்த்துமாற்றமும்வகுத்துரைசெய்துபேதியாவகைபெருந்தகையின்னேபிஞ்ஞகன்றனையுமையொடுஞ்சேர்த்திபோதியென்றலுமைங்கணைக்கிழவன்பொன்னகர்க்கிறைவிடைகொடுமீண்டான்.

இறைவன்இறைவியைமணத்தல்.

மீண்டுசெம்மலாரிருந்துழியணுகிமெல்லவெஞ்சிலைவாங்கலுமவனைமாண்டகுந்திருநுதல்விழிநெருப்பின்மடுத்துவார்குழலிரதிநின்றிரப்பக்காண்டகாவகையுருவிலியாக்கிக்கடுந்தவம்புரிமலைமகண்மணந்துதூண்டுவேற்படைக்குரிசிலையுதவித்தாருகன்றனைத்தொலைத்தருள்செய்தார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆங்கதன்பின்னர்ச்செங்கேழலங்கொளிவடிவினஞ்சந்
தூங்கியமிடற்றினாருஞ்சுரிகுழலிமயமாது
மோங்குயர்பலவுஞ்சந்தும்வேரொடுமொடியத்தள்ளி
வீங்கொலியருவிதாழுமந்தரவெற்பின்மேலால். உ௦

உலகெலாமுய்யுமாற்றாலுவளகத்தைந்துமூன்றாச்
சிலதியரடுக்கியிட்டசெழுந்தவிசணையின்மன்னி
விலகருமகிழ்ச்சிமீதூர்திருவிளையாடற்செய்கைக்
கலவியினயந்துதம்முட்களித்தினிதிருக்குமெல்லை. உக

கலிநிலைத்துறை.

மும்மைப்புவனங்களுஞ்செய்தவப்பேறுமுற்றச்
சும்மைத்திரைநீருடைமேதினிதோற்றமெய்தச்
செம்மைத்திசையெட்டினுந்தென்றிசைமிக்குவெல்ல
மம்மர்த்தொகைநூறியவண்டமிழ்நாடுவாழ. உஉ

வேறு.

நலமன்னியதண்டகநாடுசெழித்துமல்கப்
பலரும்புகழ்காஞ்சிவளம்பதிமேன்மைசாலக்
குலவுஞ்சமயங்களொராறுமகிழ்ச்சிகூர
வுலகெங்கணும்வைதிகசைவமுயர்ந்துமன்ன. உ௩

எவ்வெத்தவத்துஞ்சிவபூசனையேற்றமென்னப்
பௌவப்புனல்சூழ்படிமேலவர்தேறியுய்யத்
தெவ்வுத்தொழில்பூணுமறக்கடைதேயநல்கூ
ரெவ்வத்திறநீங்கியுயிர்ப்பயிரெங்குமோங்க. உ௪

முப்பான்முதலிட்டவிரண்டறமுந்தழைப்ப
வெப்பாலுலகத்தொளியாவையுமெம்பிரானார்
தப்பாவிழியின்னொளிச்சால்பெனயாருங்காண
வப்பார்சடையாரடித்தொண்டரகங்களிப்ப. ௨௫

இறைவி இறைவன் திருக்கண்புதைத்தல்.

கைம்மிக்கெழுகாதல்விருப்புமீதூர்குறிப்பின்
விம்மிப்பணைத்துப்புடைவீங்கியெழுந்தகொங்கைப்
பொம்மற்பெருமாட்டிவெரிந்புறத்தெய்திவல்லே
செம்மற்பிறைவேணியனார்த்திருக்கண்புதைத்தாள். ௨௬

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருண்டபூங்குழலாள்செங்கையிறுகுறப்புதைத்தலோடு
மிருண்டகந்தரத்தார்நோக்கினிருசுடர்மறைந்தவாற்றா
லிருண்டதுபுவனமுற்றுமிருண்டவெண்டிசையுமென்று
மிருண்டறியாதவிண்ணோரிருக்கையுமிருண்டதந்நாள். ௨௭

அழுங்கவேதன்னைநாளுங்காய்ந்துலாமருக்கர்தம்மோ
டொழுங்குறத்திரட்டிநீட்டிச்செருகிவைத்திட்டாலொக்குஞ்
செழுங்கதிர்மதியுஞ்செந்தீயுடுமணித்திரளையெல்லாம்
விழுங்கித்தன்வீறுகாட்டிப்படர்ந்ததுதிமிரவீக்கம். ௨௮

சிறைபடுகூகையாதிகருங்கொடித்திரள்களொத்த
மறமலிபுலிகளாதிவானரக்குலங்களொத்த
நறைகமழ்குமுதப்போதுநளினமுந்தம்முளொத்த
வுறுதுயர்நேமிப்புள்ளுஞ்சகோரமுமொருங்கேயொத்த. ௨௯

அலர்தலையுலகங்காணாதற்படுபொருள்கள்காணார்
நிலைபெறுதத்தம்யாக்கைநீர்மையுங்காணார்முந்நீர்க்
கலிதிரைவரைப்பினோருங்கண்டறியாதவானத்
தலைவருந்திமிரமொன்றேதணப்பறக்காண்டல்பெற்றார். ௩௦

இறந்ததுபடைப்பினூக்கமிகந்தனவேள்விச்செய்கை
பறந்தனதவந்தானங்கள்பறைந்தனகடவுட்பூசை
துறந்தனகலவியின்பந்தொலைந்தனவறிவின்றேர்ச்சி
மறந்தனமறைநூற்கேள்விமயங்கினவுலகமெல்லாம். ௩௧

இறைவிகரநீப்பஇறைவன்கண்திறத்தல்.

கடவுளர்முனிவர்மக்கள்யாவருங்கவன்றாங்காங்குப்
படலைவல்லிருளின்மூழ்கிப்பதைபதைத்தாவாவென்னக்
கடலொலிக்கிளர்ச்சிநாணமுறையிடுங்காலைவெற்பின்
மடவரல்கரங்கணீப்பமலர்விழிதிறந்தாரையர். ௩௨

அல்கினவொளிகளெங்குமஃகியதிருளின்வீக்க
மல்கினபடைப்புங்காப்பும்வயங்கினவறத்தினீட்டம்
பல்கினவேள்வியெங்கும்பரந்தனவிறைவர்சீர்த்தி
புல்கினவேதவாய்மைபொலிந்தனவுயிர்களெல்லாம். ௩௩

வெறிமலர்த்தளவமூரல்வழியிணைமறைத்துநீக்குஞ்
சிறுபொழுதுலகுக்கெல்லாமெண்ணில்பல்லூழிசென்று
மறைநெறிபடைப்புச்செய்கையாதியமறுத்தவாற்றா
லிறைவிதன்வதனநோக்கியேந்தலாரருளிச்செய்வார். ௩௪

இறைவியைத்தவஞ்செய்யப்பணித்தல்.

இருசுடர்தமக்காதாரமாகியவெமதுகஞ்சத்
திருவிழிபுதைத்தவாற்ருற்படைப்பாதிச்செய்கைமாறி
யுருகெழுதீமைநின்னையுற்றதாலதற்குத்தீர்வு
மருமலர்க்குழலினுய்நீமரபுளியியற்றல்வேண்டும். ௩௫

இகப்பருங்கருணைபூண்டவெமக்குநின்றனக்குநந்த
மகத்தடியவர்க்கும்பாவமணுகுவதில்லையேனும்
வகுத்தவாபுரிதியெல்லாக்கருமமுமரபினுல்யா
நிகழ்த்தியவாறேபற்றிநிகழ்த்திடுமுலகங்கண்டாய். ௩௬

என்றருள்செய்யக்கேட்டுநடுக்கமுற்றிறைஞ்சிநின்றா
மன்றலங்குழலாள்கூறும்வள்ளலேகழுவாய்ச்செய்கை
யென்றறியாதுசெய்யுங்காலமேதிடமேதெல்லா
நன்றெனக்கருளாயென்னநம்பனுர்வகுத்துச்சொல்வார். ௩௭

கலிநிலைத்துறை.

வில்லிழைபூண்டிறுமாந்தெழுகொங்கைவிரைக்கோதா
யல்லனசெய்துபினஞ்சுபவர்க்குறுகழுவாய்தா
நல்லறநூல்களின்மாதவர்நாட்டினரவையெல்லாஞ்
சொல்லியதீர்வுமிகச்சிறுமைத்திதுதுணிவாயால். ௩௮

எத்துணைவன்மையறக்கடைமுற்றுமிறச்செய்யு
மத்தகுசீர்க்கழுவாயெமையன்பினருச்சித்தல்
சித்தமொருக்கிநினைத்தல்பழிச்சுதல்பேர்செப்பல்
பத்தியினெம்மடியார்வழிபாடெனுமிவையாமால். ௩௯

முற்றியசீரிருமுப்பருவங்களுமுறையானே
யற்றமில்காலமெனப்படும்யாம்பெரிதானந்த
முற்றுறைகின்றவிடங்களிடங்களெம்முறுமன்பர்
பற்றியதானமுமத்தகைமைத்தெனவறிபாவாய். ௪0

ஆதலினுமுறைவைப்பிடையாயினுமெம்மன்பர்
மேதகவைகும்வரப்பிடையாயினுமீப்பொங்கும்
காதலினுலெமையர்ச்சனையாற்றுதியிதுகாணூஉப்
பாதலமண்ணகம்விண்ணகமுய்வதுபண்பென்ருர். ௪௧

என்றலுமங்கணர்பங்கயபாதமிறைஞ்சித்தாழ்ந்
தொன்றியசிந்தையினுளுடைநாயகியுரைசெய்வா
ளென்றியநெஞ்சுரைசெல்லருநீயவரவர்தத்தம்
பொன்றுமுணர்ச்சியினர்ச்சனைபூணவுமெளிவந்தாய். ௪௨

நானுமகிழ்ந்துனையர்ச்சனைசெய்யுநலம்பெற்றேன்
றேனமர்கொன்றைமிலைச்சியசெஞ்சடைவள்ளானின்
னூனமில்பூசனைசெய்திறமெத்திறமுரையென்ன
வானுடையூர்தியருட்கடலன்னவர்புகல்கிற்பார். ௪௩

கரிசறுநித்தநைமித்திககாமியமெனமூன்று
முரிமையினெம்மடியர்ச்சனையேனையவுலகத்துப்
புரிதருபூசனைநித்தியபூசனையாமன்றித்
தெரிதரிலன்னவைகாமியநைமித்திகமாகா. ௪௪

பொருவறுமூன்றுமுறுங்கருமம்புரிநிலமீதே
கருமநிலந்திகழ்பாரதமாம்வருடங்கண்டாய்
திரைகெழுகீழ்க்கடன்மேல்கடல்சேதுவொடிமயத்துண்
மருவியமேதினிபாரதமால்வருடம்மாமால். ௪௫

இத்தகுபாரதமாம்வருடத்தினெமக்கான
வுத்தமவைப்பின்விதிப்படியெம்மையிலிங்கத்தின்
முத்துறழ்வெண்ணகைமுற்றிழைமூதுலகெல்லாமெய்ச்
சித்திபெறும்படிவல்லையருச்சனைசெய்கிற்பாய். ௪௬

காஞ்சியேதவஞ்செயற்கிடமெனல்.

என்றலுமாவயினெண்ணிறலங்களுளெம்மானீ
நன்றுமகிழ்ந்துறைமிக்குயர்நற்றலம்யாதென்னக்
குன்றுகுழைத்துவடிக்கணைபூட்டினர்கோல்கோடி
யன்றினரிஞ்சியழித்தருளங்கணர்தாஞ்சொல்வார். ௪௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆயிடைநாமகிழ்ந்துறையுந்திருப்பதிகள்பலகோடியவற்றுண்மேலா
மாயிரத்தெட்டவற்றதிகமொருநூற்றெட்டவற்றதிகமறுபத்தெட்டா
மாயினவற்றுயர்காசிகாஞ்சியெனுமிரண்டதிகமறிவான்மிக்கோ
ராயினவையிரண்டுள்ளுஞ்சாலநமக்கினியநகரணிநீர்க்காஞ்சி. ௪௮

இவ்வண்ணந்தானங்கள்பலவகுத்ததெற்றுக்கேலியம்பக்கேளாய்
மைவண்ணவிருண்மலத்தினிருவினையாற்பிணிப்புண்டுமருளின்மூழ்கி
யுய்வண்ணமறியாதபசுக்கடமையம்மலத்தினுருதநாமே
மெய்வண்ணப்பெருங்கருணைத்தன்மையினால்விடுவிக்கவேண்டுமாற்றான்.

மருவாரும்பூங்குழலாயைவகையசத்திகளைவகுத்துப்பின்ன
ரருநான்குமுருநான்குமருவுருவந்தானொன்றுமாகவொன்பான்
றிருமேனிதோற்றுவித்துத்தோற்றமுதலைந்தொழிலுஞ்செய்வானுன்னி
யிருவேறுமாயைகளினுடல்கருவியிடமனைத்துமுயிர்கட்கீந்து. ௫௰

உள்ளமுதல்விகாரத்தினெய்துமிருவினைக்குரியபிறவிகாட்டிப்
பள்ளநீர்நடுக்கீழ்மேலூசலெனக்கொட்புறுத்துப்பருவநோக்கி
மெள்ளவினைப்பயனூட்டிநஞ்சோடுசுவையமிழ்தும்விரவித்தீற்றித்
தெள்ளுதவமறிந்தறியாதுபாயத்துமுண்மையினுஞ்சேரச்செய்வேம்.

தீக்ஷையினுட்பிரிவு.

சரியையெனக்கிரியையெனயோகமெனஞானமெனச்சாற்றுநான்கா
மிரியமலத்துகளறுத்துநமைக்காட்டுமருந்தவங்களிவற்றிற்சேரற்
குரிமைதருமுயர்தீக்கைசமயமுதன்மூன்றவைதாமுதவுமுத்தி
யரிலகன்றவெம்முலகத்துறலாதிநான்கென்னவறையுநூல்கள். ௫௨

தேக்கூறுதேமொழியாய்மலஞ்சீக்குந்தீக்கைபலவிதமாமங்க
ணோக்கூறுமொழியெண்ணநால்யோகமவுத்திரியாநுவலுமேழுண்
மீக்கூறுமவுத்திரிதான்வியன்கிரியைஞானமெனவிருபாலாய்முப்
பாற்கூறுபடுஞ்சமயவிசேடநிருவாணமெனும்பகுப்பினாலே. ௫௩

சமயதீக்ஷையுஞ்சரியையும்பயனும்.

மருவுபுறமகமென்னுமதத்துமூன்றுவருணநிலைவழாதுநின்று
மிருதிமறைநெறிவேள்விபலபுரிந்துவேதாந்தப்பொருண்மைதேறி
வருமுறையானிவையனைத்துமுற்றியபின்மேனோக்குமதியான்மிக்கோர்
தெருளுதவுசைவநெறிப்படுஞ்சமயதீக்கைதனக்குரியராவர். ௫௪

அவ்வாற்ருன்யாமருவுந்திருக்கோயிலலகிடுதன்மெழுகலன்பின்
செவ்வாற்ருன்மலர்கொய்துதார்மாலைதொடுத்தணிதநீபமேற்றன்
மெய்வாய்ப்பச்சிவனடியார்பணித்தபணிதலைநின்றுவே......ாதி
யிவ்வாற்றிற்ருதநெறிச்சரி.....யினைப்புரிவோரெம்முலகின்வாழ்வார்.

விசேஷதீக்ஷையுங்கிரியையும்பயனும்.

ஈதியற்றிமுற்றியபின்மகநெறிக்காம்விசேடத்தையெய்திப்பூசைக்
கோதியகொண்டாதாரசத்திமுதல்சத்தியீேருங்குகஞ்சத்
தாதனமேமூர்த்திமுதல்பாவித்தாவாகித்தாவரணபூசை
யாதியசெய்தழலோம்புமிக்கிரியைவழாதாரெம்மூருகுவாழ்வார்.

யோகமும்பயனும்.

இக்கிரியைமுற்றியபினியமாதியெட்டுறுப்பினியல்புவாய்ந்து
பக்கவளிதனையடக்கிநடுநாடியுறப்பயிற்றியாருதாரந்
தொக்கபொருளுணர்ந்தேகிமதிவரைப்பினமுதுண்டுசோதியுள்ளாற்
புக்கழுந்துஞ்சகமார்க்கயோகுழப்போரெம்முருவம்பொருந்திவாழ்வார்.

நிருவாணதீக்ஷையுஞ்ஞானமும்பயனும்.

முறையானேயிம்மூன்றுமுற்றியருள்பதிந்துவினையொப்புவாய்ந்து
நிறைவாயபருவத்தினுயிர்க்குயிராய்நின்றருளும்யாமேதோன்றி
மறைவாய்மைநிருவாணவிதியாற்ருல்வழியாறுந்தூய்மைசெய்து
குறையாதபேரருளினறிவுறுக்குமஞ்செழுத்தின்கொள்கைதேற்றி.

அருவுருவங்குறிகுணங்கண்முதலீறுகட்டுவீடனைத்துமின்றிப்
பெருமையதாய்நுண்ணியதாய்ப்பேருணர்வாயானந்தப்பிழம்பாயெங்கு
மொருமுதலாயழிவின்றியோங்கொளியாய்நிறைந்துளதாயுயிர்கடோறும்
விரவியுடன்ருழிற்படுத்துப்புலங்கொளுத்திவீடுய்க்கும்பதியாமெம்மை.

எண்ணிலவாய்வகைமூன்ருய்வெண்சிலைபோற்பற்றியவைதாமாயென்று
முண்மையவாய்ச்சத்தசத்தும்பகுத்துணர்சத்தாயிருளுமொளியுமல்லாக்
கண்ணியல்பாய்வசிப்பவருநிறைவாயெம்மருளாற்கட்டறுத்துவீடு
நண்ணுபவாயுணர்த்தவுணர்சிற்றறிவிற்பலவாநற்பசுக்கடம்மை.

ஒன்ருகியழிவின்றிப்பலவாற்றலுடைத்தாய்ச்செம்புறுமாசென்னத்
தொன்ருகியருள்வினைவினீங்குமிருண்மலத்துடனத்தொடக்குநீப்ப
மின்ருவுமுடலாதிநல்குமிருமாயையிருவினைகட்கேது
வென்றேதுகருமமிவைநிகழ்த்துதிரோதமுமெனுமைவகைப்பாசத்தை.

திரிபுணர்வுபொதுமாற்றிச்சிறப்பியல்பானுணர்ந்தெண்ணித்தெளிந்துதேற
மரியபெறற்சன்மார்க்கஞானநிலையிதுகிடைத்தவறிவான்மிக்கோர்
பெரியமலப்பிணியவிழ்த்துச்சிவானந்தப்பெரும்பேறுமருவிப்பாச
மிரிவதூஉம்புகுவதூஉமின்றியொருநிலையாமவ்வியல்புதன்னில்.

உணர்பொருளுமுணர்வானுமுணர்வுமெனும்பகுப்பொழியாதொழிந்தபானுப்
புணர்விழியுநீர்நிழலுந்தீயிரும்பும்புனலுவரும்பரிதிமீனுந்
துணையவிரண்டறுகல்ப்பினெம்முடனுய்ப்பேரின்பந்துய்த்துவாழ்வா
ரிணர்விரைத்தமலர்க்கோதாயவர்வடிவேயெமக்கினியகோயிலாமால்.

பூமியிற்பலதளிபோதந்தியகாரணம்.

முத்திமுடிபிதுகண்டாய்முன்னியம்புமூன்றுமுத்திபதங்களாகு
மித்தகையமுத்திகளேபிம்முறையான்முயன்றவரேயெய்தற்பாலா
ரத்தகையவலியில்லோரெளிதாகவீடுபேறடைவானெண்ணி
வைத்தபெருங்கருணையினுன்மேதினிமேற்பலதானம்வயங்கச்செய்தேம்.

அங்கவற்றின் வதிவோர்கண் முயலாதெம்முலகர்இபதங்கள்சேர்வர்
கொங்குயிர்த்தமலர்க்குழலாயவற்றுள்ளுங்குருமாடக்காசிவைப்பிற்
றங்குபவரெம்முருவந்தனைப்பெறுவர்திருகாஞ்சித்தலத்தின்வாழ்வார்
மங்கரியமலந்துமித்துநம்முடனும்பேரின்பவாழ்வுசேர்வார். ௬௫

எம்முலகத்துறைவதனிலெம்மணிமைக்கண்ணமர்தலேற்றமாகு
மெம்முருவந்தனைப்பெறுதலதற்கதிகமதற்கதிகமிறவாவின்பத்
தெம்முடனுயொற்றித்தலிம்முறையான்வதிவோர்களெவர்க்குமாரு
தெம்முடனும்பேறளிக்குங்காஞ்சியெவற்றினுமதிகமென்னத்தேருய்.

மறைமுடிவுமிவ்வாறேவீடுதவும்வளநகரங்காஞ்சியென்ன
வறைதருமாலன்னதூஉம்வகுததுரைப்பக்கேட்டியெனவருளிச்செய்வார்
மிறைபுரியுந்தக்கனூர்வேள்வியகத்திமையவர்தம்மேனிமுற்றுங்
குறைபடுத்துத்துகைத்துழக்கிச்சவட்டியபினிரங்கியருள்கொடுக்கவல்லார்.

கேசாந்தமுத்தி.

தன்னிகரில்கேசாந்தமுறுமாவிதன்சிரத்துக்கபாலங்கீறி
வன்னியினிற்பூவெனப்போய்வாயுவினிற்புவ்வெனப்போயிரவிமாட்டுப்
பின்னமறுசுவ்வெனப்போய்விண்ணரசினமகவெனப்போய்ப்பிரமத்தொன்றாய்
மன்னிடுமிக்கேசாந்தமுத்தியினையெவ்வுயிர்க்கும்வழங்குங்காஞ்சி. ௬௮

கவ்வெனச்சொல்விதிக்கீசனுயவெமைக்கேசனெனக்கழறும்வேத
மெவ்விடத்திலாருயிர்களெம்பாலேயந்தத்தையெய்தாநிற்கு
மவ்விடத்திலதுமுத்திகேசாந்தமுத்தியெனப்படுமாலந்தச்
செவ்விடமுநமக்கென்றுமரசிருக்கையெனத்திகழுங்காஞ்சிமூதூர். ௬௯

இன்னுமொருவாறியம்பக்கேண்மதிநீகம்மென்றல்சிரமாமந்தச்
சென்னிமிசைச்சயனமுறுவதுகேசமதுதனையஞ்சித்தல்காஞ்சி
யன்னதனாற்காஞ்சியொடுகேசமொருபொருட்கிளவியாகுந்தேம்பு
மின்னிடையாய்கேசாந்தமாவதுமேதகுகாஞ்சியந்தமாமால். ௭௦

என்றுநமக்கினியதனுன்முதன்மையாற்றானங்கட்கெல்லாஞ்சென்னி
யென்றியம்பப்படுங்காஞ்சியித்திறத்துக்கேசாந்தப்பெயர்சால்வைப்பி
னென்றுணராமடவோர்கள்விலங்குமரமுதலனைத்துமுயிர்போங்காலை
மன்றமிசைத்தலையோடுகீறியுடல்விடுத்தேகுமலர்ப்பூங்கோதாய். ௭௧

ஆதலினங்கிறந்தவர்கட்குடல்வேங்காற்சிரமனலின்வெடியாதின்றும்
வேதமெலாமெடுத்தியம்புமங்நகரின்பெருமையெவர்விளம்பற்பாலா
ரேதமறவங்கெய்திக்கழுவாய்நீயியற்றுதிமுன்னிடபவேறுங்
கோதகலக்கழுவாயங்காற்றியதுகோதாயென்றருளிச்செய்தார். ௭௨

தருமம்பெருமானுக்குவிடையாதல்.

கலிநிலைத்துறை.

அருளுந்திருவாய்மொழிகேட்டலுமங்கைகூப்பிப்
பெருவெள்விடையாததுசெய்பிழையென்னைதீரப்
புரியுங்கழுவாயெவனோபுகல்கிற்றியென்றாட்
கிருள்கண்டனவல்விடமேந்தியகண்டர்சொல்வார். ௭௩

முன்னோர்கடைநாண்மூளரிக்கண்முகிழ்த்தபுத்தேண்
முன்னுஞ்சகமுற்றுநம்மான்முடிவுற்றதாகப்
பொன்னேர்சுணங்கிற்பொலம்பூண்முலைப்பூவையன்னு
யந்நாளறத்தெய்வதமத்திறமுற்றுநோக்கி. ௭௪

நில்லாவுலகத்துள்வாயசரிப்பநிற்ப
வெல்லாமழிவுற்றனயானுமிறப்பலோவென்
றல்லாந்தினிச்செய்வகையாதென்றிறைஞ்சிநம்பாற்
கொல்லேறுருவங்கொடுவந்ததுபோற்றியென்ன. எரு

கண்டாமதனைக்கவலாதியென்றூர்தியாக்கிக்
கொண்டாங்கொளப்பெற்றுலவாக்களிகூர்ந்ததாக
வண்டாரளகக்கொடியவ்விருண்மாண்டகாலைத்
தண்டாவருளாலதற்கின்னதுசாற்றலுற்றேம். எசு

தரிப்பித்தலினீதருமந்தரிப்பித்திடாமை
தெரிப்பிக்குமதன்மமெனப்பெயர்செப்புமாலெம்
பொருட்டுப்புரிபாவமும்புண்ணியமாக்கியெம்பால்
விருப்பற்றவர்செய்யறமும்மறமாக்குவிப்பாய். எஎ

இவ்வேற்றிடபப்படிவத்துடனெங்குமெம்முன்
செவ்வேவதிகென்றருள்செய்திடுநல்வரம்பெற்
றவ்வாறுநமக்கெதிர்நித்தலும்வைகுமங்கேழ்ச்
செவ்வாய்க்கருமென்குழல்வெண்ணகைச்செம்பொற்பூணாய்.

வீறூர்தருமக்கடவுட்சினவெள்விடைக்கோர்
கூறூதலின்மாயனுமுப்புரங்கொன்றவஞ்ஞான்
றேறூயெமைத்தேரொடுதாங்கினனேறுவந்த
வாறூமிதுமேலதுசெய்பிழைமற்றுஞ்சொல்வாம். எகூ

கருடன்செருக்கடைதல்.

கலிவிருத்தம்.

பின்னொருகாலத்துப்பிறங்குமாற்றல்சால்
பன்னகப்பகைமைகொள்பறவைநாயகம்
பொன்னமர்மார்பனைப்பொறுத்துவல்லையே
யந்நிலையுலகெலாமணுகிமீண்டதால். அ0

மீண்டபின்றருக்குமீக்கொண்டுவீறுட
னாண்டகைமாயனைநோக்கியண்ணலே
காண்டகுமாற்றலிற்கதழ்வினென்னிகர்
மாண்டவருளர்கொலோவையமூன்றினும். அக

நிற்பனசரிப்பனயாவுமாய்நிறை
நிற்பொறுத்தரைக்கணப்பொழுதினீடியோய்
பொற்பமூவுலகினும்போந்துமீளுமிவ்
வற்புதமெனக்கலாதார்க்குண்டாகுமோ. அஉ

என்றிதுபுள்ளரசியம்பக்கேட்டலு
நன்றெனக்குறுநிலாநகைமுகிழ்த்தரோ
வின்றிதன்செருக்கெலாமிடபநாயக
மொன்றறக்களையுமென்றுளத்திலெண்ணினான். அங

மெய்யுரைவிளம்பினையுலகமீமிசை
யையநிற்கிணையெவராருமில்லெனக்
குய்யம்வைத்தணிமுடிதுளக்கிக்கூறினான்
செய்யவள்வனமுலைதிளைக்குமார்பனே. அச

வார்சடைப்பிரானடிவணங்குவாமெனப
போர்வலிப்புள்ளொடுங்கயிலைபுக்கன
னோர்கெழுபோகமாபுரத்தினெல்லையவ்
வூர்தியினிழிந்துசென்றாங்கணெய்தினான். ௮௫

ஐந்ததாமாவரணத்தினெம்மெதி
ரைந்துகோமாதர்சூழ்ந்தணுகிவைகவாழ்
மைந்துடைவிடையவண்மாயனோடுறும்
வெந்திறற்புட்குலவேந்தைக்கண்டதால். ௮௬

விண்டயினுயிர்ப்பில்கருடனலமறல்.

தன்னெதிரிகழ்ச்சியாற்றருக்குமாங்கதன்
புன்னிலைநோக்குபுபொருக்கெனச்சிரந்
தன்னிடக்குறங்கினிற்சார்த்தித்துஞ்சுவ
தென்னநெட்டுயிர்ப்பினிற்சிமிழ்த்ததேந்திழாய். ௮௭

மாயவனெம்மடிவணங்கியன்பினா
னாயிடைநெடும்பொழுதமர்ந்துவைகினான்
பாய்விடையூர்திநெட்டுயிர்ப்பிற்பட்டுழல்
காய்சினக்கலுழனுங்கழியநொந்ததே. ௮௮

விட்டுவிட்டடக்குதோறுயிர்ப்பின்வேகத்தா
லட்டநூறியோசனையவதிபோந்துபின்
கட்டெழினாசியினுனிக்கட்சார்தரக்
கொட்புறுத்தலைத்ததுபறவைக்கோவினை. ௮௯

ஒய்யெனநெட்டுயிர்ப்புதைந்துமீடொறு
மெய்வயிற்சு[illegible]றெனவிரிந்துகூம்பிடுஞ்
செய்யபொற்சிறைகளிற்சிதைந்துபுன்மயிர்
துய்யெனவெளியிடைச்சுழன்றயாங்கணும். ௯௦

அதிர்ந்தனவிண்ணெலாமயர்ந்ததிக்கய
முதிர்ந்தனதருத்தழையுக்கமீன்கணம்
பிதிர்ந்தனவரைக்குலம்பெயர்ந்தகோள்களு
முதிர்ந்தெழுஞ்சினவிடையுயிர்ப்பின்மொய்ம்பினான். ௯௧

எதிருறவிலங்கியவரையுமேனவு
மதலையிற்பற்றுவான்மனத்தினெண்ணுமுன்
கதழ்வினூறியோசனைகடத்திமீட்குமான்
மதனுடைக்கலுழனையுயிர்ப்பின்வாயுவே. ௯௨

சரிந்ததுதருக்குட்ல்சழங்கலுற்றதா
விரிந்ததுமிடலிறுமாப்புமிற்றது
முரிந்தனபொலஞ்சிறைமுதிர்ந்ததின்னனோய்
கரிந்ததுமாமையுங்கருடற்கென்பவே. ௯௩

பருவரும்புடையினிற்கழுயப்பார்க்குமீ
தொருவருந்தகைத்தெனூக்கமின்மையிற்
றெருமருமுணங்குறுந்திகைக்குந்தேம்பிடும்
வெருவருமாயனைவிளிக்குமென்செயும். ௯௪

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஐயவோவுலகங்காக்குமடிகளோகாயாம்பூவின்
மெய்யவோவென்னையாண்டவிமலவோதிகிரியேந்துங்
கையவோவெய்ப்பின்வைப்பாங்களைகணேகலந்தார்க்கென்று
மெய்யவோகலவாதார்க்குவெய்யவோவேந்தனேயோ. கூரு

விடையரசுயிர்ப்பிற்பட்டுமெலிகின்றேனோலமிந்தத்
தடைவிடுத்தடியனேனைத்தாங்குவாயோலமன்றேற்
கடையனேனாவியின்றேகழிந்திடுமோலமென்னை
யுடையவாவோலமென்றென்றோலமிட்டழைத்ததாலோ. கூசா

விடையுங்கருடனுமெதிர்வரப்பணித்தல்.

சீறுவெம்பணிவாய்ப்பட்டதேரையின்மறுகியோசை
வேறுபாடெய்திமாலைவிளிப்பதெஞ்செவியிற்கேட்டே
மாறடுதிகிரியோயீதென்னெனவட்கார்தம்மை
நூறியசீற்றத்துப்பினோன்றகைநெடியோன்சொல்வான். கூஎ

இன்றுநின்னடிகள்போற்றுமிச்சையினென்னோடிங்கு
வன்றிறற்கலுழன்போந்தான்வாய்தலிற்றுயிலும்வெள்ளிக்
குன்றுறழிமிலேற்றண்ணலுயிர்ப்பினிற்கோட்பட்டாவி
பொன்றுவானென்னநொந்துவிளிக்கின்றான்புனிதவென்றான். கூஅ

மாதவன்விளம்பக்கேளாமற்றிதுநிகழ்தற்கேது
வேதுநீயறிந்ததுண்டேலியம்புதிவிடுத்துமென்ன
நாதனேகலுழன்சாலத்தருக்கினனதனைப்போக்குங்
காதலாலீங்குவந்தேன்காரணமிதுவாலென்றான். கூகூ

உள்ளதுபுகன்றாயென்னநந்தியையாங்குநோக்கிக்
கள்ளவிழ்தொடையாய்நம்மைவழிபடுங்கருத்தானெய்தும்
புள்ளரசினையாவண்ணம்பொருக்கெனப்போந்துசீற்ற
வெள்விடையுயிர்ப்பினின்றும்விடுவித்துக்கொணர்தியென்றாம்.

இத்தகுமாணைதாங்கியாவயினெய்திநந்தி
பொய்த்துயில்கொள்ளுமேற்றைப்புடைத்தனனெழுப்பலோடு
மெய்த்துயிலுணர்ந்தான்மானவல்விரைந்தெழுந்துகண்க
ளத்துறுகலக்கங்காட்டியாங்கனனின்றகாலை. கOக

போற்றுசீர்நந்திப்புத்தேள்புண்ணுறுமுடம்பிற்புள்ளி
னேற்றொடுவிடையினேற்றையெம்மெதிருய்த்தானாக
சீற்றமுஞ்செருக்குமாண்மைத்திட்பமும்வீறுங்குன்றி
மாற்றருமதுகைப்புள்ளேறெம்மடிவணங்கிப்போற்றி. கOஉ

ஒடுங்கியுள்ளுடைந்துதண்டாதுயிர்ப்பெறிந்திரங்கிமேனி
நடுங்கிடக்கண்ணீர்வாரமுரிசிறைமருங்குசால
நெடுங்கைதன்சிரமேற்கூப்பிமால்புடைநிற்பநோக்கிக்
கொடுங்கொலைப்பகழிக்கண்ணாய்விடைக்கிதுகூறலுற்றாம். கOங

விடையினைச்சிவபூசைசெய்யப்பணித்தல்.

எம்முடையானையின்றியெம்மெதிர்நீயேயிந்நாண்
மம்மரினிதனைச்செய்தாய்மாணிடவடிவந்தாங்கிச்
சும்மைநீர்வரைப்பிற்காஞ்சித்தொன்னகரெய்தியங்க
ணம்மைநீபுரிதிபூசைநவையிதுகழியுமாறே. கOச

எனவிடையளிப்பப்போற்றிப்புடைபரந்தெழுந்துவஞ்சி
யனவிடைதுவளவீங்குமலர்முலைக்கொம்பரன்னாய்
சினவிடையரசுவல்லேனரவுருத்திகழக்கொண்டு
மனவிடையிழைத்தசெம்பொன்மாளிகைக்காஞ்சிநண்ணி. ௧0௫

இடபேச்சரம்.

கவிழிணர்த்தனிமாமூலத்தெம்மெதிர்கமலப்பூந்தோ
டவிழ்சிவகங்கைக்கோட்டினுங்கதுவைகும்வைப்பிற்
குவிவரும்பெருமைசான்றகுடதிசைமுகமாத்தன்பேர்
புவிபுகழிலிங்கந்தாபித்தருச்சனைபுரிந்துபோற்றி. ௧0௬

காட்சியீத்தருளுநம்பால்வரம்பலகருதிப்பெற்று
மாட்சியினுலகமெல்லாமனுமுறைவழாதுபன்னா
ளாட்சிசாலரசுசெய்துகடைமுறையானேற்றண்ணன்
மீட்சியினருள்பெற்றிங்குமேவிவீற்றிருந்ததன்றே ௧0௭

இறைவியிறைவனருள்வழியேற்றல்.

ஆதலினீயுமங்கணகிலமுமுய்வானெம்மை
மேதகுகமூவாய்நீரின்விதியுளிப்பூசைசெய்யப்
போதராயென்றுநல்கப்புரிகுழலணங்குதாழ்ந்து
நாதனுரிசைவுபெற்றுநயந்தெழுந்தருளலுற்றாள். ௧0௮

நம்பனூர்தம்மையின்பநகையிடைத்தணக்குநோயுங்
கம்பரைப்பூசைசெய்யுங்காதலுமிருபாலீர்ப்ப
வெம்பிரானருளாயென்றுதாழ்ந்துதாழ்ந்தெழுந்துநின்று
கொம்பரினெல்கிப்பல்காற்புறவிடைகொண்டுபோற்றி. ௧0௯

மின்கொண்டன்மிடற்றார்காட்சிவிழிக்கெதிர்மறையுங்காறும்
பின்கொண்டுநடந்துசென்றுபெருமுதல்வாய்தனீங்கி
முன்கொண்டுநடவாநின்றாண்முக்குறும்படக்கியைவர்
வன்கொண்டிகடந்தமேலோர்காண்டகவயங்குமம்மை. ௧௧0

இறைவிபாங்கிமாரோடுகாஞ்சிக்கெழுந்தருளல்.

ஆயிடையரிதினீங்கியங்கணரருளாலங்கட்
பாயபல்கணங்களுய்த்தபடரொளியெறிக்குமங்கேழ்
மாயிருவிமானத்தும்பர்மன்னுயிர்த்தோழிமார்தம்
மாயமுந்தானுமேறிவழிக்கொண்டாளனையகாலை. ௧௧௧

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உலகெலாமீன்றவெம்பெருமாட்டியோங்குயர்விழுப்புகழ்க்கம்பத்
தலைவரைவிதியானருச்சனைசெய்யச்சார்கின்றாளென்றுபேரோகை
மலிவெடுத்தியம்புமங்களங்கேளாவுருத்திரமடந்தையர்முதலோ
ரலகிலாமகிழ்ச்சிமீக்கொளுங்களிப்பினார்த்தெழுந்தொருங்குவந்துறுத்தார். ௧௧௨

தாமரைமடவார்புடைபரந்தணுகத்தாமரைமடவரல்வந்தா
ளாமிசைக்கிழத்திபற்பலவெள்ளநாரியர்புடைவரவந்தாள்
கோமளவனப்பினும்பன்மெல்லியலார்குழாத்துடனுயர்சசிவந்தாள்
காமருமாதரெழுவருஞ்சங்கக்கன்னியர்சூழ்தரவந்தார். ௧௧௩

வான்மடமகளிர்வேறுபல்வகுப்பின்மங்கையர்பற்பலாயிரவ
ரூன்மலிசூலத்திடாகினிகாளியோகினித்திறத்தவரனேகர்
நீன்முகிற்கூந்தன்முனிவர்பன்னியருநிரந்தரமிடைந்தனருவகைப்
பான்மையினிறைஞ்சியவரவர்க்கடுத்தபணிதலைநின்றுடன்போத.

உரகர்கந்தருவரிராக்கதரியக்கருருத்திரர்மருத்துவர்வசுக்கள்
கருடர்கிம்புருடர்சாரணர்சித்தர்கடவுளரயனரிமுனிவர்
மருவுபல்சமயதேவர்கண்முதலோர்வந்தனரடிதொழுதிறைஞ்சிப்
பெருருவருங்களிப்பாற்சயசயபோற்றிபோற்றியென்றேத்திமுன்செல்ல.

தண்ணுமைமுருடுகுடமுழாமொந்தைதகுணிச்சம்பேரிகைதக்கை
யண்ணலம்பதலையதிர்குரன்முரசமாதியவெழுப்புவபிறவும்
பண்ணமைசின்னங்காகளங்கோடுபணிலமேதீங்குழன்முதலா
வெண்ணருந்திறத்தினாதுவபலவுமெழுகடன்முழக்கினையடக்க. ௧௧௬

பயின்மணிக்கவரிகவிகைசாந்தாற்றிபடரொளியாலவட்டங்கள்
வயின்வயின்வயங்கக்கற்பகத்தாருமலர்மழையெங்கணுமிறைப்பக்
குயின்மொழிமடவார்குழாங்குழாமாகிக்குலவுபல்லாண்டெடுத்திசைப்பக்
கயின்மணிக்குழையாராணுடைதாங்கிக்கதிர்த்தவாளேந்தினரேக.

வேதகம்புயக்குஞ்சிலைமுதலானவிழுமிதத்திறத்தனபலவும்
பூதிமிக்களிக்குங்கடவுளர்தருக்கள்புண்ணியதீர்த்தங்கணதிக
ளேதமில்சிறப்பினிணையனபிறவுமுடன்செலச்சிங்கொடுகுறள்கள்
காதலின்முன்னேகையிணைவீசிக்கதுமெனக்குறுகுறுநடப்ப. ௧௧௭

கலகலமுழக்குங்களகளமுழக்குங்கலின்கலின்முழக்கமுங்கருவிச்
சலசலமுழக்குஞ்சளசளமுழக்குஞ்சடசடமுழக்கமுமேனைச்
சிலசிலமுழக்குமரகரமுழக்குஞ்சயசயமுழக்குமெண்டிசைவாய்ப்
பலபலமுழக்குமடைத்துமேலோங்கிப்படியொடுவானமுநிறைப்ப.

மறைமுதலொருபான்மணந்தவள்வந்தாள்வானவர்க்கரியவள்வந்தா
ணிறைபெருங்கருணைநாயகிவந்தாணிருமலப்பேரொளிவந்தா
ளறைபுனற்காஞ்சிக்கம்பரைவணங்கவகிலமுமாதிநாட்பயந்த
விறைவியேவந்தாளென்றுபல்சின்னத்தெழுமொலியாங்கணும்விம்ம.

அளவிலாக்கருணைப்பெருங்கடலென்னவடர்ந்தவல்லிருளுடைந்தோடுங்
கிளைவழிதுருவித்துரந்துகொண்டெய்துங்கேழ்கிளரொளிக்குழாமென்ன
வளமலிதென்பாற்செய்தவந்திரண்டுவருவதேயென்னவுமுலவாக்
களிவருசிறப்பின்வானெறிபடர்ந்தாள்கணவனாருள்வழிநின்றாள். ௧௨௧

கலிநிலைத்துறை.

எண்ணிலார்மிடைந்துவிண்பரப்படைத்தியங்கலா
லண்ணன்ஞாயிறுதிவாண்மறைந்திருளடர்ந்திடக்
கண்ணுறுத்தயிர்க்குமுன்கடுப்பினெய்துவோரொளி
வண்ணமவ்விருள்கிழிப்பநோக்கினாலமாந்தர்தாம். ௧௨௨

மாலுறுக்குநீர்மையோடுதோன்றியிங்குமாய்ந்தது
நீலமின்னல்போலுமென்பரென்னுமுன்னர்நீளிடைச்
சாலமிக்கவோதைகேட்டுமின்பயந்ததண்முகில்
காலுமோதையாங்கொலென்றுகாதினோர்த்துநிற்பரே. ௧௨௩

செல்லுவோர்நெருக்கிடைத்தெறித்திடும்பொலஞ்சுடர்ப்
பல்லணிக்கலன்களுக்கபன்மணித்திரள்களை
யொல்லைநோக்கியார்த்தமேகமொன்பதிற்றுமாமணிக்
கல்லின்மாரிபெய்வதென்றுகாண்டொறும்வியப்பரே. ௧௨௪

முறையினாலடுக்கநண்ணுமொய்குழாத்தர்நோக்குவா
ரிறைவியென்றுசின்னமெங்குமேங்குமோசைகேட்குவார்
நிறைமகிழ்ச்சியிற்கிளர்ந்துநீடுமின்பவெள்ளநீர்த்
துறைபடிந்துகண்கணீர்துளிப்பநின்றுபோற்றுவார். கஉரு

எம்பிரான்றனிப்பவம்மையிங்குவந்ததென்னெனக்
கம்பவாணர்பூசைசெய்கருத்தின்வந்ததாமென
நம்பினேங்கள்வீடுபேறுநண்ணுகாலமீதென
விம்பர்ஞாலமெத்தவம்படைத்ததென்னவிள்ளுவார். கஉசா

மண்ணகத்துவைகுமாந்தரின்னராகமர்ணிறைப்
பெண்ணிநல்லவள்விமானநின்றுமிப்பெரும்புவிப்
புண்ணியத்தலங்கடோறிழிந்திழிந்துபோர்விடை
யண்ணலாரிலிங்கபூசைசெய்துகாசியண்மினாள். கஉஎ

முச்சகம்புகழ்ந்துபோற்றுமொய்கொள்காசிமாநகர்
விச்சுவேசர்பூசையாற்றிவேறிலிங்கமொன்றமைத்
தர்ச்சனைத்திறத்தினைத்திவைகியங்ககன்றுசீர்க்
கச்சியம்பதிக்கண்வைத்தகாதலுய்ப்பவேகினாள். கஉஅ

அங்கணங்கணெங்கையாரமர்ந்துவாழிடந்தொறும்
பொங்குகின்றகாதலோடுபூசைசெய்துசெய்துபோய்
மங்கலத்தமிழ்ப்புவிக்குவாண்முகமெனத்தகுந்
துங்கமிக்ககீர்த்திபெற்றதொண்டைநாட்டைநண்ணினாள். கஉகூ

இறைவிகாஞ்சியையடைந்தநாள்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அண்ணலந்துலைசேறென்றாழைப்பசித்திங்கட்பூரம்
வெண்மதியாட்சிமூன்றும்பின்பக்கநந்தைமேய
புண்ணியத்திருநாளெல்லாப்புவனமும்பெருவாழ்வெய்த
விண்ணவர்பிராட்டிகாஞ்சிவியனகரெல்லைசேர்ந்தாள். கங0

பார்த்தனள்கடைநாள்செல்லாப்பழம்பதிமகிழ்ச்சிமேன்மேற்
கூர்த்தனள்சிரமேற்செங்கைகுவித்தனள்புளகமேனி
போர்த்தனள்விழிநீர்மாரிபொழிந்தனளங்கோர்வாவித்
தீர்த்தநீர்குடைந்துமூழ்கிச்சங்கற்பஞ்செய்துமுற்றி. கஙக

கங்கணதீர்த்தம் கங்கணேச்சரம்.

அலங்கொளிக்கரத்துச்செம்பொற்காப்புநாணணிந்துமூவா
விலிங்கமாண்டிருவிப்பூசையியற்றினாளனையதீர்த்த
நலங்கெழுகாப்புத்தீர்த்தமெனப்பெயர்நவில்வர்சேர்ந்தார்
குலங்களோடுய்யச்செய்யுமிலிங்கமுங்கொள்ளுமப்பேர். கஙஉ

கடகேச்சரம்.

நவமணிகடகம்பூணுஞாங்கருங்கடகீசானச்
சிவபரஞ்சுடரைப்பூசைசெய்துதன்கரத்திற்பூண்டா
ளவிர்மணிநகையாள்போற்றுமக்குறியிரண்டுங்கண்டோர்
தவலருமலநோய்மாற்றிமுத்தியிற்றரித்துவாழ்வார். கஙங

பிலாகாசம்.

அன்னணமருச்சித்தேத்தியாளுடையெம்பிராட்டி
யுன்னுவோர்பிறவிமாய்க்குமுண்ணகர்வரைப்பின்முற்ற
மன்னியவளங்களெல்லாமனங்களிபயப்பநோக்கிப்
பன்னரும்பெருமைசான்றபரவெளிப்பிலத்தையுற்றாள். கஙச

ஐம்பெரும்பூதமுன்னுளாயிடைமலர்ப்பூம்பொய்கை
தம்பெயர்கிருவிக்தொட்டுத்தடந்திரைகொழிக்குந்தூநீர்ப்
பைம்புனல்படிந்துபன்னுண்மெய்த்தவம்பரிக்குங்காலைக்
கம்பனூர்கருணைகூர்ந்துகாட்சிதந்தருளப்போற்றி. க௩௫

உலகாணித்தீர்த்தம்.

மூவருந்தம்முட்கூடன்முதலியவேறுபாட்டான்
மேவருங்கரணம்யாக்கைவிடையமாதாரமெல்லா
மாவகைவரங்கள்பெற்றவத்திறத்துலகமுற்றும்
பாவுதன்வடிவாயோங்குமுலகாணிக்கரையின்பாங்கர். க௩௬

ஆங்கினிதமர்ந்துவைகித்தவம்புரிகருத்தனாகி
யூங்குடனணைந்தவிண்ணோர்க்கருள்விடையுதவியங்குத்
தேங்குநீருலகமுய்யத்திருவறச்சாலையாக்கி
மாங்குயிற்கிளவிநங்கையறமெலாம்வளர்க்கலுற்றாள். க௩௭

இறைவிமுப்பானிரண்டறம்வளர்த்தல்.

தெய்வந்தென்புலத்தார்பூதமானிடம்பிரமமென்றோ
ரைவகையெச்சஞ்சூக்தந்துறந்தவர்மடங்களன்பு
செய்யுமில்வாழ்வார்க்கில்லமனைக்குபகரணந்தேம்பூப்
பெய்தமைதண்ணீர்ப்பந்தரெங்கணும்பிறங்குசோலை. க௩௮

இரப்பவர்குருடரெவ்வமுற்றவர்புரத்தல்வெந்நோய்
துரக்குநன்மருந்துதூவாய்மகவினையோம்பல்சுண்ணம்
பரித்தபாகடையேயெண்ணெய்பைம்புனல்குளிப்பவேண்டு
மருக்கிளர்துவர்களாதிமலரணைநிலனுன்கன்னி. க௩௯

கடிமணம்விளக்குமாறுக்கடனொழித்திடுதலீச
னடியவர்விழைவவீகையக்கமாமணிவெண்ணீறு
படியிலாக்கடவுட்பூசையுபகரணங்கள்பாசந்
தடிதருவேதவாய்மைச்சைவநூல்புராணநல்கல். க௪0

சிவபிரானடிக்கீழ்ப்பத்திசெவியறிவுறுத்தலோடு
மூவகையினபயம்யார்க்கும்வழங்குதலுள்ளிட்டோது
நவையிரியறமெண்ணான்குநாடொறுநிகழ்ச்சிமாணப்
பவநெறிதுரக்குஞானப்பைந்தொடிநிறுவிப்பின்னர். க௪க

இறைவிதிருக்கோயிற்கெழுந்தருளல்.

வீங்குநீர்க்கம்பையாற்றின்கரைமிசைவிரிமாநீழ
லோங்கொளிப்பொருளைக்காணுமுறுபெருங்காதலீர்ப்ப
வாங்குநுண்மருங்குனோவவளரிளங்குவவுக்கொங்கைப்
பாங்கியர்முதலோர்சூழப்படரொளிமறுகிற்போந்தாள். க௪௨

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலையான்மடமகண்முறுகூடணைதலும்வளமாநகரவர்தொழுதாடி
யுலவாநசையொடுபணிவார்மனமகிழுறுவார்வயின்வயினணிசெய்வார்
குலைநீள்கதலிகள்கமுகந்துகில்விரிகொடியென்றினையனநடுவார்கண்
மலர்மாலிகைநவமணிமாலிகையெழின்மலிதோரணநிரைநிறைவிப்பார்.

மறுகெங்கணும்விரைகமழும்படிகுளிர்பனிநீர்விடுவர்கண்மறையோதி
நிறுவுந்தவநிலைமுனிவோர்கரமிசைநிறைபொற்குடமுடனெதிர்கொள்வார்
சிறுநுண்ணிடைமறைமடவார்வாழ்த்திசைதிகழ்மங்கலமொழியுரைசெய்வார்
நறவம்பயில்குழலரமங்கையரொடுநரமங்கையர்நடமிடுவாரால். க௪௪

பொங்கும்பெருகெழில்புனையுந்திருநகர்புரிவின்வலம்வருமுறையானே
தங்குங்கலைமகண்மலர்மாதிமையவர்மடவார்காளிகள்சாத்தன்சீ
ரெங்கும்பரவியதிறல்யோகினிகளையெழுமாதர்களையிடந்தோறு
மங்கங்கிருவினளென்னெஞ்சிருவியவம்பொற்றிருவடிபிறர்காணாள்.

குணபான்முதனதிமுடியாரினிதமர்கோயின்முழுவதுமுறையிற்சென்
றிணரார்மலர்கொடுவழிபட்டருளொடுமெனையாளுடையவளெய்துற்றா
ளுணராதரியயன்முதலோரலமருமொருபேரொளிமருமலர்தூவு
மணமாநிழலிடைவெளியேயெளிவரமாகம்புவிதொழுமேகம்பம்.

ஏணிற்பொலிமலையாசன்றருமயிலுள்ளங்களிவரவெம்மாளு
ராணைப்படிமனநினைவிற்கடவுளர்யவனன்புரியுமருட்கோயின்
மாணப்பலமணிகுயிலுந்தமனியவடிவிற்புரிசையினோக்கத்தைக்
காணப்பெறுகழிகாதற்கடலிடைமூழ்கித்துளைபவள்கரைகாணாள்.

விழிநீர்பொழிதரவுள்ளங்குழைவுறமெய்யிற்புளகமுகிழ்ப்பெய்தப்
பொழிகார்மழைநிகர்கற்றைப்புரிகுழன்மிசையேகையிணைகுவியப்போய்க்
குழுவானவர்மிடைவிண்வத்துயரியகொடிநீள்கோபுரநெடுவாய்தற்
றொழுநீர்மையினிலிறைஞ்சிப்பன்முறைதுதிசெய்துவகையினுள்புக்காள்.

அங்கட்சகமுழுதுடையப்பொலிவுறுமைந்தாமாவரணந்தன்னிற்
றங்கித்திகழ்சிவமறையோர்முதலியசைவர்க்கருள்செய்துவலம்வந்து
செங்கட்கதிரவர்காலத்தீயிறையவர்மாலயனொடுசெறிநான்கி
னெங்கட்கிறையவளெய்தித்தென்புடைவிண்டுத்தளியெதிர்கண்டுற்றாள்.

விண்டுவீச்சரவரலாறு.

கலிநிலைத்துறை.

என்றுகூறியசூதனையிருந்தவத்தலைவர்
நன்றுபோற்றினர்நலிதருமைம்புலக்குறும்பு
வென்றமேதகாய்விண்டுவீச்சரமென்றதென்னை
யின்றுநீவிரித்துரையெனக்கடாவலுமிறுப்பான். ௧௫0

அள்ளிலைப்படைக்கடவுளார்க்காரமுதளிக்கும்
வெள்ளிவெண்டிரைவிரிகடல்வரைப்பினின்மாயோன்
முள்ளெயிற்றராவணைமிசைநாடகமுயலும்
வள்ளலாரடிமனத்திடைத்தழீஇயினன்றுயில்வான். ௧௫௧

அனையதன்மையினறிதுயிலமர்பவனொருநாட்
கனைவிளங்கொளியிதயமென்கவிழ்நனைக்கமலந்
தனைமலர்ந்துமேனோக்குறச்செய்தனன்றணவா
வினையிகந்துயர்யோகினால்வளிமிசையெழுப்பி. ௧௫௨

பகருமுந்தியின்மேலிடத்தலருமப்பதுமத்
திகழருந்திறத்திலங்குநுண்குகையதனிடத்து
நுகருமூண்பகுத்தமருநோன்றழலதன்றலையிற்
றிகழமேவருநுணங்குபூஞ்சிகையதனடுவண். ௧௫௩

சாற்றுமெய்ப்பரப்பிரமமாஞ்சதாசிவப்புத்தேள்
வீற்றிருப்பதியோகத்திற்கண்டனன்விரைத்தே
னூற்றுபூந்துழாய்ப்பண்ணவனுவகையின்வல்லே
போற்றிபோற்றியென்றிறைஞ்சினனன்புமீப்பொங்க. ௧௫௪

விண்டு யோகிற்றிருநடங்கண்டு போற்றல்.

அன்பினுக்கெளியார்பெருங்கருணைகூர்ந்தருளி
யின்பவானந்தத்திருநடமாயிடையியற்ற
வன்பழம்பகைமலவிருள் கடிந்ததுகாணூஉ
வென்புநெக்குநெக்குருகினன்முரனையன்றிறுத்தோன். ௧௫௫

புளகமெங்கணும்போர்த்துமெய்பனித்துவாய்குழறி
யிளகியின்பநீர்விழியுகக்கம்பனமெய்தித்
தளர்விலார்வத்தாற்றனைமறந்தறிதுயின்மேவு
மளவிலாங்கயலிருந்தவரன்னதுகண்டார். ௧௫௬

கண்டுநெஞ்சகம்பதைத்தனர்திகைத்தனர்கவலை
கொண்டழுங்கினரஞ்சினரிரங்கினர்குறிப்பின்
வண்டலத்திருமுதலியோர்மற்றிதுநிகழ
வண்டர்நாயகற்கடுத்தவாறென்னெனத்தெரிவார். ௧௫௭

மென்றளிர்ச்செழுங்கோமளத்திருவடிவினையேன்
வன்றனிக்கரம்வருடலான்வருந்தினகொல்லோ
வன்றியென்மடித்தலமிசையசைந்துநொந்தனவோ
வென்றுதன்னுளமயிர்த்தனளிலங்கெழின்மலராள். ௧௫௮

மெல்லனிச்சமுங்குழைக்குமெம்பிரான்றிருமேனி
கல்லெனக்கடிந்திட்டபமுந்தட்பமுஞ்சதுவும்
புல்லியேனுடல்வைகலானுளைந்ததுபோலு
மல்லதொன்றறியேனெனவெரீஇயினனனந்தன். ௧௫௯

எருத்தமீதுகொண்டுலகெலாங்கொட்புறுமென்னுன்
மருத்துழாய்முடிமாமறுமார்பினன்மேனி
வருத்தமுற்றதேயாங்கொலென்றெண்ணினன்வலியா
லுருத்துமாற்றலர்முனைகெடப்பொருதிறலுவணன். ௧௬௦

இன்னவாறிவர்யாவரும்வேறுவேறெண்ணிப்
பன்னரும்பெருங்கவலைகூர்வுழிவரைபயந்த
கன்னிபாகனார்திருநடக்கருணையிற்றிளைத்த
பின்னைநாயகன்யோகமாத்துயில்பிரிந்தெழுந்தான். ௧௬௧

கண்டபேரின்பவனுபவக்கருத்தினோடெழுந்து
மண்டுவெள்ளநீரருவிகண்பொழியமன்றுடையார்
தொண்டனேற்கெளிவந்தவாறெனக்களிதுளும்பிக்
கொண்டகாதலாலஞ்சலிசென்னிமேற்குவித்து. ௧௬௨

ஐயனேயருள்புரிகவாரழற்சிகையேந்துங்
கையனேயருள்புரிகபல்கதிரொளிபரப்பு
மெய்யனேயருள்புரிகமெய்க்கூத்தனைக்காட்டுஞ்
செய்யனேயருள்புரிகெனச்செப்பினன்பலகால். ௧௬௩

விண்டுவடைந்தவின்பம்விளம்பல்.

அன்னபெற்றிகண்டியாவருமதிசயமெய்தி
யென்னையென்னைமற்றிதுவெனக்குதுகுதுப்போடும்
பொன்னடித்தலம்போற்றினர்வினுதலுநெடியோன்
மன்னுறும்பெருமகிழ்ச்சியானவர்க்கிதுவழங்கும். ௧௬௪

செறியுநான்மறைச்சிரமிசைப்பரம்பொருளிந்நா
ளறிஞர்காண்கிலாவற்புதத்திருநடமெனக்குப்
பிறிவரும்பெருங்கருணையாற்காட்டிடப்பெற்றேன்
மறியுமிவ்வுடல்வருபயன்கிடைத்ததென்றனக்கே. ௧௬௫

அவ்வருட்டிருக்கூத்தினைக்கண்டவார்வத்தா
லிவ்வுறுப்பெலாம்விதிர்விதிர்ப்பெய்தினகண்டீர்
செவ்வனோர்மினென்றியம்புசொற்செவித்துளைநிறைப்பக்
கொவ்வைவாய்த்திருமுதலியோராதரங்கொண்டார். ௧௬௬

கேட்டவப்பொழுதேயெதிர்கண்டெனக்கிளர்ந்து
காட்டும்வேணவாமீமிசையெழக்கழல்வணங்கி
நாட்டுமத்திருக்கூத்தினைநாங்களுங்காண
வேட்டனங்கண்மற்றதுபெறுநெறிவிரைந்தருளாய். ௧௬௭

என்றுபன்முறைவேண்டலுமீர்ந்தொடைத்துளவோ
னன்றுநுங்கருத்தெனமிகநகைமுகமலர்ந்து
குன்றவில்லியார்சேவடிசிந்தையிற்கொண்டாற்
கன்றுநம்பர்தம்மருளினாலறிவுவந்துதிப்ப. ௧௬௮

விண்டுமுதலியோர்தில்லையடைந்துபோற்றல்.

மல்லற்றெண்டிரைமறிகடன்மணிகள்கொண்டொதுக்குந்
தில்லைக்கானுடைச்சிதம்பரவரைப்பிலெஞ்ஞான்றுஞ்
செல்வத்தாண்டவநவிற்றுமெம்பிரானெனத்தெளிந்தா
னல்லிப்பூமகண்முதலியோர்க்கன்னதுசெப்பி. ௧௬௯

அங்கணெய்திநாமாளுடைநாயகன்றிருமுன்
பொங்குகாதலானடைக்கலம்புகுந்துபோற்றிசைத்துத்
தங்கிமெய்த்தவமியற்றிடிற்றண்ணருள்சுரந்து
நங்களுக்கெதிர்காட்டுவனானந்தநடனம். ௧௭௦

யோகியோர்களுமெய்தருந்திருநடமுரிமை
யாகுமன்புடையடியவர்க்கெளியதுகண்டீ
ரேகுவாமினிவம்மினென்றவருடனெழுந்து
மாகவாற்றினால்வயங்கொளித்தில்லைவந்தடைந்தான். ௧௭௧

கலிநிலைத்துறை.

சேர்ந்துதிருமூலட்டடந்தொழுதுபோற்றிச்சிந்தைகளி
கூர்ந்துதிருப்பாப்பரசுகலுழன்முதலோருடன்குழும
நேர்ந்ததவயோகத்தினெடுநாண்முயன்றானக்காலை
வார்ந்தசடைப்பிரானாருமகிழ்ந்துகாட்சிகொடுத்தருளி. ௧௭௨

ஒன்னாதாருயிர்பருகியொளிருந்திகிரித்தனிப்படையோ
யென்னீமற்றிவரோடுமெம்பால்விழைந்ததியம்புகெனப்
பொன்னாடையுடைத்தோன்றல்புவியின்வீழ்ந்துபணிந்தெழுந்து
நன்னாமமெடுத்தோதிப்புகழ்ந்துபோற்றிநவில்கின்றான். ௧௭௩

அண்ணலேயானந்தத்தெள்ளாரமுதேயடியேங்கள்
புண்ணியநின்றிருக்கூத்தினமுதம்பருகிப்பொலிவெய்த
வுண்ணிறைந்தபெருங்காதலுடையேங்கருணைசெய்தருளா
யெண்ணியாரெண்ணமெல்லாமுடிக்கவல்லவெம்மானே. ௧௭௪

விண்டுவைக்காஞ்சியிற்சிவபூசைசெய்துவரப்பணித்தல்.

குறளுருவாயுலகளந்தானியம்புங்கூற்றுக்கேட்டருளி
யறவனெதிர்மொழிவாராழிப்படையோயெவ்வெவரும்
பெறலரியநடங்காணப்பெட்டாயாகிலெம்மிலிங்க
மறனணுகாத்திருக்காஞ்சிவரைப்பினெய்தித்தாபித்து. ௧௭௫

நறுமலர்கொண்டருச்சித்துவல்லையீண்டுநண்ணுதிநின்
னூறுகருத்தைமுடிக்கின்றேமென்றுங்கருளுமுரைகேளா
மறுவிகந்தமனத்தன்பின்மாயோனங்கண்யாவரையு
நிறுவிவளவயற்காஞ்சிநெடுநீர்நகரங்கடிதடைந்தான். ௧௭௬

ஏகம்பத்தொளிமணியையின்பத்தொழும்பர்செய்தவங்க
ளேகம்பத்தெனக்கொள்ளுமிறையைக்குறளாய்மாவலிமுன்
னேகம்பத்தாற்புரிசையொருமூன்றிறுத்ததனிமுதலை
யேகம்பத்தொடும்புளகமெய்தவணங்கித்தொழுதெழுந்து. ௧௭௭

அக்கம்பமுடையார்க்குத்தென்பாலங்கட்சிவலிங்க
மிக்கன்புதழைத்தோங்கவிண்டுவீசனெனவிருவிப்
பொக்கங்கண்முழுதகலப்போற்றிவேண்டியருள்பெற்றுத்
திக்கெங்கும்புகழ்பரப்புந்தில்லைவனத்தைமீண்டணைந்தான். ௧௭௮

விண்டுநடங்கண்டுபடகமுழக்கும்பேறுபெறல்.

ஆண்டணைந்ததிருமாலுக்கருளாரமிழ்தமனையாருந்
தூண்டரும்பேரொளிப்பிழம்பாய்ச்சுடருந்திருச்சிற்றம்பலத்துட்
காண்டகையவானந்தநிருத்தங்காட்டக்கழியன்பு
பூண்டதிருப்பாப்பரசுபுள்ளேற்றண்ணலொடுங்கண்டான். ௧௭௯

கண்டளவில்பெருங்காதலின்பவெள்ளங்கரையிகப்பக்
கொண்டநிறைமகிழ்ச்சியினாலாடிப்பாடிக்கும்பிட்டுப்
பண்டைநிலைமறந்துமதுப்பருகுஞ்சுரும்பிற்பரவசனாய்
மண்டியபேரார்வத்தால்வணங்கித்தொழுதுகளிசிறந்தான். ௧௮௦

இறைவனார்திருக்கூத்துக்கிசையக்கணங்களியமுழக்கு
முறையுணர்ந்துபெருங்களிப்பாற்றானும்படகமுழக்குதலு
மறைமுதல்வரதுநோக்கிமகிழ்ந்துபடகப்பணிதனக்கே
நிறைவிருப்பினருள்செய்யப்பெற்றுவாழ்ந்தானெடியோனே. ௧௮௧

விதுவொன்றுஞ்சடைமுடியார்விண்டுவீசம்வந்தவா
றிதுகண்டீர்முனிவீர்காளீண்டுத்தொழுதுவழிபட்டுத்
துதிசெய்துகணநாதர்திருமாளிகைசூழ்தருமுன்றின்
மதுவிள்ளுமலர்க்கூந்தன்மலையான்மடந்தையெய்தினாள். ௧௮௨

பண்ணிசைந்தவரிச்சுரும்பர்பாடல்பயிலுமலரிலைஞ்சித்
தண்ணிசைந்தசிவகங்கைத்தழங்குந்திரைநீர்குடைந்தாடிப்
பெண்ணிசைந்தபெருவனப்பிற்பிராட்டியாங்குப்பிறங்கொளியாற்
கண்ணிசைந்தகளிசிறப்பவகத்தியீசங்கண்டணைந்தாள். ௧௮௩

வேறு.

என்றசூதனைமாதவர்யாவருமேத்தியே
பன்றிகாணருஞ்சேவடிப்பற்றியசிந்தையோய்
துன்றுசீர்மையகத்தியீசத்தியல்சொல்கென
நன்றுமுள்ளமகிழ்ந்துவிளங்கநவிற்றுவான். ௧௮௪

நாரதன்விந்தமலைக்குமேன்மைகூறிப்போதல்.

கடவுண்மாமுனிநாரதன்முன்னொருகாலையி
னிடனுடைத்திருக்காஞ்சியிலேகம்பநாதரைச்
சுடருமாடகயாழிசையாற்றொழுதேத்துவான்
றடவுவெள்ளிப்பருப்பதநின்றுந்தணந்தனன். ௧௫௫

அண்ணலார்தம்மடியிணைதைவருசிந்தையா
னண்ணுகின்றநரப்புக்கருவித்தலைவனை
விண்ணினேக்குபுவெய்தெனவிந்தநெடுங்கிரி
யெண்ணம்வாய்ப்பவியங்குமுருக்கொண்டுமுன்னுறா. ௧௫௬

அருக்கியம்முதலாயினகொண்டுவழிபடூஉப்
பெருத்தகாதலிற்பேணித்தொழுதுவணங்கலுங்
கருக்கடிந்துயர்காழறுமாதவனனையான்
மருத்தபூஞ்சுனைவிந்தவரைக்கிதுபேசுவான். ௧௫௭

மன்னுமெய்த்தவர்பாற்புரியும்வழிபாட்டினி
னின்னையொப்பவர்கண்டிலனித்தகுநின்னையும்
பொன்னினாட்டவர்போதவிகழ்ந்தனரன்னதை
யுன்னியுன்னிவருந்திடுகின்றதென்னுள்ளமே. ௧௫௮

என்றதாபதவேந்தனைமீளவிறைஞ்சிமுன்
னின்றதேவருள்யாவரிகழ்ச்சிநிகழ்த்தினா
ரென்றனக்கிகழ்யாதுசொல்கூறினையேலது
மன்றமாற்றுவன்யானெனவிந்தம்வகுத்ததால். ௧௫௯

முனிவனவ்வுரைகேட்டுமொழிதருமேன்மையிற்
புனிதநின்னொடுபுன்வரைநேரெனுநூலெலாம்
பணிமதிச்சடைப்பண்ணவர்தேவர்குழாத்தொடு
நனிமகிழ்ந்தவண்வைகுவர்நாடொறுமாதலால். ௧௬௦

இயங்குகோள்களுடுக்களிராசியெவற்றொடும்
வயங்குசந்திரசூரியர்தாம்வடமேருவை
நயந்துசுற்றுவர்நாடொறுமத்திறநோக்கியே
யுயங்குகின்றனன்யானெனப்பின்னருமோதுவான். ௧௬௧

தனக்குநேர்வரியாய்பலசாற்றுவதென்கொலோ
வெனக்குநீநனிநண்பினையாதலினித்திற
முனக்கியம்பினனின்னினியேகுவலோய்யென
மனக்குவேண்டியசெய்கெனமாதவனீங்கினான். ௧௬௨

விந்தம்கருவமடைந்துமேனோக்கியெழுதல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பத்தர்மெய்க்கிளைமகதியாழ்பயில்படிமவுண்டியனீங்கலு
மெய்த்தவெஞ்சினமீக்கொண்மால்வரைவியுமெல்லைவிளக்கினைச்
செத்திறப்பவளர்ந்தெழூந்துவிசும்புசென்றுநிவந்ததான்
மைத்தவல்லிருள்கீறிவாள்கள்வயங்குமாறுதடுத்தரோ. ௧௬௩

துருவமண்டலவெல்லைகீழ்ப்படமேக்கெழுஞ்சுடர்வெற்பினைத்
தருநிலத்தவர்நோக்கிமுந்துதழற்படைக்குலிசக்கொடுங்
கருவியிற்சிறகரிவலாரியுடன்செருச்செய்கருத்தினால்
வருவதாங்கொலெனத்திகைத்துமருண்டுதம்முள்வெரீஇயினார். ௧௬௪

தங்களொப்புமைகொண்டெண்ணுதருக்குணர்ந்துவெகுட்சியாற்
பொங்கிவிம்மிமதர்த்தெழுந்தெதிர்ப்போர்செயப்புகுதன்மையிற்
கொங்கைவம்புசழுங்கமார்பமலைத்துவீறுகொளக்கதழ்ந்
தங்கண்மங்கையர்வெற்பினோக்கமுன்னோக்கவிண்மிசையண்மினார்.

சிட்டிநாண்முதலோய்விலாதுதினம்பொலங்கிரிசூழ்வர
வட்டமிட்டகறங்கினோலையெனச்சுழன்றலமந்துநைந்
திட்டகோள்களிராசிநாள்களுமன்றுதன்னமிளைப்பொழிந்
துட்டதும்புகளிப்பின்வைகினவோங்குமால்வரையாலரோ. கசூசு

மாயிருங்கனகமாமலைத்தலையின்மன்னிவன்குயவனேமியின்
ஞாயிறுதிகளையிடையறுதுகடுகச்சுழற்றிநனிதளர்வுகூர்
பாயசீர்த்திமிகுதுருவனுஞ்சிறிதுபணியொழிந்துறைநலம்பெற
மீயுகந்தமணியருவிதாழ்நெடியவிந்தவெற்புதவிசெய்ததால். கசூஎ

அருவிதாழ்சயிலமொளிவழங்குநெறிதனையடைத்துமிசையணவலா
லொருபுடைத்திமிரமொய்ப்பமற்றையொருபுடையுறக்கதிர்கண்மொய்த்திடு
மிருதிறத்தினொடுமருவுபெற்றிமையிசைந்தமன்னுலகமற்றைநாண்
மருமலர்க்குழலிபாகமாகவளர்மறைமுதல்பொருணிகர்த்ததால். கசூஅ

இகழ்ந்தநீரினிடப்பதெங்கணெனவெள்ளிவாள்களைநகைப்பதூஉந்
திகழ்ந்தமேருவொடுசெருவிளைப்பவறைகூவிவீரநகைசெய்வதூஉ
முகந்தெழுந்தனதுசீர்த்திபல்குவதுமொப்பவெங்கணுமடித்தல
மகழ்ந்துகல்லெனவிரைத்துவெள்ளெனவிளர்த்துவீங்குபுனலருவியே.

இறவுளர்க்குமிசையுலகவாழ்க்கையர்விருந்தளித்துவகையெய்தினார்
குறமடந்தையருமரமடந்தையருமளவளாயுறவுகொண்டனர்
முறைநிறுத்துசுரமுனிவர்வெற்புறையுமுனிவர்நல்வரவெதிர்ந்தனர்
மறைமுழைப்பணிகள்வாலுலாம்பணிபுலம்புதீர்ந்திடமணந்தன. உ00

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மிளைபடுசாரற்குன்றமேக்குறநிவத்தலோடு
மொளிவழங்காமைகாலவேறுபாடொழிந்தவாற்றான்
வளமலிதவந்தானங்கண்முதலியமறுத்துப்பைங்கூழ்
விளைவுகளஃகிஞாலம்வெறுவியதாயிற்றன்றே. உ0க

புரந்தராதியோர்முறையீடு.

அங்கதுநோக்கிவல்லைபுரந்தராதிவிண்ணோர்
தங்குலக்குரவனோடுஞ்சதுமுகனிருக்கைசார்ந்தார்
பங்கயக்கிழவனோன்றாள்பணிந்தனர்பரசிப்போற்றி
யெங்களைவெருவாவண்ணம்புரத்தியென்றிதனைச்சொற்றார்.

இருசுடர்வழங்குமாற்றையிறும்புசூழ்சோலைவிந்தப்
பருவரைதடுத்தவாற்றாற்பகலிராத்தொடக்கமின்றித்
திருநெறிவேள்விமாறித்தெருமந்ததுலகமன்னோ
மருமலர்க்கமலவாழ்க்கைவயங்கெழுகடவுளேறே. உ0௩

இனியெமக்குறுதியென்னேயென்றலுமிளவண்டூதும்
பனிமலர்க்கதுப்பினம்பாற்பாரதிகொழுநன்கேளாத்
தனிமிடல்படைத்தவிந்தத்தருக்கினைப்பௌவமுண்ட
முனிவனேயடக்கவல்லுமென்றுளமுன்னிச்சொல்வான். உ0ச

நடலையின்றுயர்ந்தோய்கேட்டிகாசிமாநகரம்வைகுங்
குடமுனிதன்னைவிண்ணோர்குழாத்தொடுநணுகிவிந்தத்
தடவரைத்தருக்குநீப்பான்வேண்டுதிதவத்தான்மிக்கோன்
கடலெலாங்குடங்கையேற்றுப்பருகினான்முன்னங்கண்டாய். உ0ரு

என்றிதுவியாழப்புத்தேட்கியம்பினனியம்பிப்பின்னுந்
தன்றிருவுளத்தினெண்ணிச்சயிலவீறடக்கயானே
மன்றலம்பொழில்சூழ்காசிவரைப்பினைக்குறுகியந்த
மின்றிகழ்சடையாற்கோதிவிடுப்பலென்றெழுந்துசென்றான். உ0சு

பொன்னவனாதிதேவர்புடையுறப்போந்துசெங்கா
லன்னமுங்கருமென்கூந்தலன்னமுமறலியாடுங்
கன்னிவெண்டரங்கத்தெண்ணீர்க்கங்கையாறுடுத்தகாசி
நன்னெடுநகரம்புக்கானகைமலர்க்கமலத்தோன்றல். உ0எ

அயனகத்தியர்க்குரைத்தல்.

அவ்வயினகிலநாதரடியிணைதொழுதுபோற்றித்
தெவ்வலியடுபேராண்மைத்தேவர்தங்குழாத்தினோடு
மெவ்வமில்கேள்விசான்றகுறுமுனியிருக்கைநண்ணிப்
பௌவநீர்பருகினானைக்கண்டிதுபகரலுற்றான். உ0அ

முக்குறும்பெறிந்தகாட்சிமுனிவரேறனையாய்சால
மிக்குயர்விந்தநாகந்தருக்குமீக்கொண்டுநாளும்
பொக்கமிலிரவிதிங்கள்புகுநெறிதடைசெய்தன்ற
லக்கிரியிறுமாப்பெல்லாமகற்றுவானீயேவல்லை. உ0கூ

இன்னினிவிரைகவல்லேதாழ்க்கலையென்றுவேண்டு
மன்னவேறுயர்த்தபுத்தேட்கருந்தவக்கிழவன்கூறு
மென்னிதுபுகன்றாயையாவெம்பிராற்கினியகாசி
தன்னைவிட்டகலேன்வீடுதருவதித்தலங்காணென்ன. உக0

வண்டொடுஞிமிறுந்தேனும்வரிச்சிறைச்சுரும்புமார்ப்பத்
தண்டுளிநறவமூற்றுந்தடமலர்ப்பொகுட்டுத்தெய்வப்
புண்டரீகத்தின்மேயபுண்ணியன்கேட்டுமுந்நீ
ருண்டுயர்முனிவர்கோமானுளங்கொளவுணர்த்துகின்றான். உகக

வெறுப்பொடுவிருப்பொன்றில்லாய்விண்ணவரிடுக்கண்டீர்க்குந்
திறத்தினையெவ்வாற்றானுமுடிப்பதேசீரிதன்றி
மறுப்பதுதகாதான்மற்றுவயங்கொளியுலகமூன்றும்
பெறத்தகுகருமமென்றாலென்னினிப்பேசுமாறே. உகஉ

சீருடைத்ததீசிமுன்னோர்தேவர்தம்பொருட்டுத்தங்க
ளாருயிர்க்கிறுதிநோக்காதுடம்பையுமளித்தாரன்றே
காரியமிதுமற்றம்மசிறிதெனக்கருதல்வேண்டா
யோரின்வேறுன்னையொப்பாருலகமூன்றிடத்துமில்லை. உகங

வேசறவொழிதிவெள்ளைவிடையவர்க்குவகைநல்கிக்
காசியின்மேன்மைசான்றகடிநகரங்கணுண்டான்
மூசிளஞிமிறுபாயமுகையுடைந்தொழுகுந்தேறல்
வாசமென்மலர்ப்பூம்பொய்கைவளவயற்காஞ்சிமூதூர். உகச

மதுமலர்ப்பொழில்சூழ்காசியிறந்திடின்வழங்குமுத்தி
யதுவுநம்பெருமானார்தம்மருளுருப்பெறுவதாகும்
முதுநகர்க்காஞ்சிதன்னைநினைப்பவேமுத்திநல்குங்
கதுவருஞ்சிவபிரானார்திருவடிகலப்பதாமால். உகரு

அத்தலப்பெருமைமுற்றுமழலவிர்சடைமேற்கங்கை
வைத்தவரறிவதல்லான்மற்றெவரறியப்பாலார்
சித்திகளனைத்துநல்குமாயிடைச்சென்றுயாகி
லுத்தமகுணத்தாய்மற்றும்பெருநலமுனக்குண்டாமால். உகசு

சிமிழ்விடப்பாம்புசுற்றித்திரைகடல்கலக்கிப்பெற்ற
வமிழ்தினையிமையோர்க்கூட்டுமரியெனக்கம்பமேய
குமிழ்மறிவிழியாள்பாகரருளினாற்கொழிக்குமின்பத்
தமிழ்மொழிப்பானைபொன்றுதரைபிசைவிளங்கச்செய்வாய்.

பாணித்தலமையுமின்னேபடர்கெனும்பவளச்செவ்வாய்
வாணிக்குமணாளன்றன்னைவிடைகொண்டுமகிழ்ச்சிகூர
வாணிப்பொன்மாடக்கோயிலகிலநாயகரையன்பாற்
பேணித்தாழ்ந்தெழுந்துகாசிப்பெரும்பதிதணந்துபோந்தான்.

அகத்தியர்விந்தமடைதல்.

கச்சிமாநகரங்காணுமாதரங்கைமிக்கீர்ப்ப
நச்சணிமிடற்றூர்பாதநகைமலர்மனத்துட்கொண்டு
பொச்சமின்மனையாளோடும்வானெறிபோதுகின்ற
விச்சைதேர்முனிவன்றன்னைக்கண்டதுவிந்தநாகம். உககூ

ஊற்றெழும்பரவைத்தெண்ணீருழுந்தளவாக்கியுண்ணு
மாற்றலினெடியனுகியளவினிற்குறியனுய
நீற்றணிமுனிவர்கோனைக்காண்டலுநெஞ்சமாழ்கிப்
பாற்றரும்பயமீக்கொண்டுபதைபதைத்தொடுங்கிச்சோர்ந்து. உஉ0

குறுகிமுன்குறுகித்தாழ்ந்துகோதறுவிதியினாற்று
னிறுவியவருக்கியாதியருச்சனைநிரப்பனேக்கி
யுறுவனுமகிழ்ந்துபத்திவிளைவினையுயர்த்துக்கூற
மறுவலுந்தொழுதுபோற்றிமணிவரையிதனைவேண்டும். உஉக

ஐயனேயடியேன்மாட்டுமருட்பெருங்கருணைவைத்த
செய்யனேயணங்குலோபாமுத்திரைதிளைக்குந்தூய
மெய்யனேயலைகள்வீசும்விரிகடன்முழுதுமேற்ற,
கையனேயினியான்செய்யக்கடவதென்னருளாயென்ன. உஉஉ

அகத்தியர்விந்தமலையையடக்குதல்.

பொன்னிலமிருக்கைகொண்டார்பொருட்டிவட்டென்பாலாசை
தன்னையான்குறித்துப்போந்தேன்சயிலமேமீளுங்காறு
மிந்நிலையிருத்தியென்னக்கரத்தினாலிருவிக்காஞ்சி
நன்னெடுநகரநோக்கிநடந்தனனிகரொன்றில்லான். உஉ௩

வேறு.

செந்நெறிநோக்கியமைந்தாங்கொழுகானளவறிகில்லான்
றன்னைவியந்தான்விரைந்துகெடுமெனல்சத்தியங்கண்டா
மன்னியமேருவரையோடிகலிவளர்ந்தெழுவிந்த
முன்னுளதோற்றமும்வீறுமுழுதுமிழந்ததுமன்னோ. உஉச

சங்கரனெதிர்தோன்றமறையுந்தடாதகைதன்னோர்
கொங்கைநிகர்த்ததுசெல்லுங்குறுமுனிநேருறுகுன்ற
மங்கதுகண்டவிமையோரனைவருமத்திறங்கேட்ட
நங்கையையின்றபொன்மாலையுவகையினுற்றியடைந்தார். உ௨௫

அகத்தியர்காஞ்சியையடைதல்.

குன்றிடைமுட்டிமறுகுங்குரீஇயிற்றடையுண்டழுங்கி
நின்றவருக்கன்முதலோர்நெறிகொளச்செல்லவிடுத்துத்
தன்றுணைப்பாவையினோடுஞ்சார்தருதாபதவேந்து
மன்றலம்பூம்பொழிற்காஞ்சிவளநகர்தன்னைமுன்கண்டான். உ௨௬

கண்டுதொழுதுவணங்கிக்கையிணையுச்சியிற்கூம்ப
மண்டியகாதலிற்புக்குமரபுளிச்செய்கடனாற்றி
யண்டர்பிரானார்தளிகளனைத்துமுறையானிறைஞ்சிப்
பண்டைமறைகண்முழங்கும்பட்டொளியேகம்பஞ்சேர்ந்தான்.

செல்வமணித்திருவாய்தல்சென்றுபணிந்துபுகுந்தாங்
கல்வளர்கின்றமிடற்றாராருளொன்னநிறைந்த
சொல்வளர்சீர்ச்சிவகங்கைத்தூநறுமென்புனலாடி
யெல்வளர்கண்டிகைவெண்ணீறெய்கும்வயங்கவணிந்தான். உ௨௮

வாய்குநுணங்கிடைபாகர்மாளிகைசூழ்மணிமுன்றிற்
பாய்குவலங்கொடுசென்றுபடரொளியானந்தவெள்ளந்
தேங்குந்தனிமறைச்சூதத்தெய்வத்தருநிழன்மேய
வீங்குங்கருணைப்பிழம்பைவிழிபெறநேரகண்டுகொண்டான்.

இணங்குமுறைமையினங்கமெட்டினுமைந்தினுஞ்சால
வணங்கிமகிழ்ந்துதிளைத்துவார்புனல்கண்கள்சொரியக்
குணங்குறியின்றியெழுந்தகோலத்திருவுருப்போற்றி
யணங்கருமெய்யருள்பெற்றுமீண்டனனூர்கலியுண்டான். உ௩0

வன்பழவல்வினைமாற்றுங்கம்பமகிழ்ந்தவர்தென்சார்த்
தன்பெயராற்சிவலிங்கந்தாபித்தருச்சனையாற்றி
முன்புவரம்பலபெற்றுமீமிசைமூண்டெழுமன்பான்
மின்புரிசெஞ்சடையாரைமீளப்பழிச்சுதலுற்றான். உ௩௧

அகத்தியர்தோத்திரம்.

கொச்சகக்கலிப்பா.

இந்நாளெனக்குப்பயப்பட்டதிப்பிறவி
யிந்நாளெனக்குப்பயப்பட்டதியான்செய்தவ
மிந்நாளெனக்குப்பயப்பட்டதென்னறிவு
மிந்நாளுனைக்காணப்பெற்றமையினெங்கோவே. உ௩௨

எண்ணமெலாமெய்தினேனெண்ணமெலாமெய்தினே
னெண்ணமெலாமெய்தினேனெங்கள்பெருமானே
கண்ணனொடுநான்முகனுங்காணாத்துணையடிகள்
கண்ணெதிரேயிற்றைநாள்யான்காணக்காட்டினையால், உ௩௩

சங்கராசம்புவேசங்கராசம்புவே
சங்கராசம்புவேசாம்பசிவனேயென்,
னங்கணுவென்றென்றுமோலிட்டழைத்தாற்று
மிங்கெனக்குவாழ்நாள்களிவ்வாறேபோகியவே, உ௩௪

குன்றாதவன்புன்க்கேகுன்றாதவன்புனக்கே
குன்றாதவன்புனக்கேமிக்கோங்குகொள்கையது
வென்றுமெனக்குண்டாகவென்றுமெனக்குண்டாக
வென்றுமெனக்குண்டாகவென்றுமோர்பெற்றியனே. ௨௩௫

வையமிசைத்தோற்றமுதல்சாங்காறுமன்றவனைத்
தெய்வமெனப்பேணாத்திருவிலிகளென்குலத்தி
லெய்தியொருஞான்றும்பிறவற்கவெய்துறினும்
வெய்தெனமற்றாங்கேவிளிந்தொழிகவெம்மானே. ௨௩௬

ஆனேறுயர்த்தருளியன்றிமூவூரெரித்த
கோனேயெனக்குக்குலதெய்வமாம்பேற்றால்
யானேபெருஞ்செல்வன்யானேபெருஞ்செல்வன்
யானேபெருஞ்செல்வனெல்லாவுலகினுமே. ௨௩௭

சிறந்துன்னைத்தெய்வமெனக்கொள்ளாதசித்தை
பிறந்தகுலம்பிறவாநின்றகுலம்பீளி
னுறந்தகுலத்துமுமையொருபான்மேயாய்
மறந்தும்பிறவாதவாழ்வெனக்குவேண்டுமால். ௨௩௮

ஏழைக்குறும்பினிமையோர்தமக்கிரங்கிப்
பீழைக்கொடுவிடத்தையுண்டளித்தபேராளா
வாழிப்பெருங்கருணையாரமுதேவெற்பீன்ற
மாழைப்பூங்கண்ணிமணாளாவடிபோற்றி. ௨௩௯

அகத்தியர்வேண்டுகோள்.

வேறு.

என்றென்றுபன்முறையுந்துதித்திறைஞ்சித்தாழ்ந்தெழுந்து
நின்றுகராஞ்சிரமுகிழ்ப்பநிறைந்தபெருமகிழ்ச்சியுடன்
குன்றனையபெருந்தவத்தோனிதுவொன்றுகூற்றுதைத்த
மின்றிகழுஞ்சேவடிக்கீழ்விண்ணப்பஞ்செய்கின்றான். ௨௪௦

அடியனேன்வடகாசிநீத்தகன்றுநினக்கினிய
கடிமதில்சூழ்கொடிமாடக்காஞ்சியினைத்தலைப்பட்டுப்
பொடியணிந்ததிருமேனிப்புண்ணியமேயிமயவரைப்
பிடிமணந்தமதகளிறேபெரும்பேறுபெற்றுய்ந்தேன். ௨௪௧

இத்தகுபேறுடையேற்குமற்றின்னுமொருகருத்து
மெய்த்தபெருவேட்கையினாலொழியாதுமேன்மேலுஞ்
சித்தமிசைமூண்டெழுமாலதுநிரம்பச்சிறியேன்பால்
வைத்தபெருங்கருணையினால்வழங்குவாயெனப்போற்றி. ௨௪௨

எவ்வினையுமோப்புதலாற்றிராவிடமென்றியல்பாடை
யெவ்வமறப்புதிதாகயான்வகுப்பநல்கியது
வெவ்வருணத்துள்ளார்க்குமெளிதாகப்புத்தேளி
ரெவ்வெவர்க்குஞ்சுவையமிழ்தினினிதாகச்செய்தருளாய். ௨௪௩

மூன்றுறழ்ந்தபதிற்றெழுத்தான்முழுவதுமாயுனக்கினிதாய்த்
தோன்றிடுமத்தமிழ்ப்பாடைத்துதிகொண்டுமகிழ்ந்தருளி
யான்றவரமெல்லார்க்குமிவ்வரைப்பினளித்தருளா
யென்றெடுத்தமொழிகல்வியெவற்றினுக்குமிறையோனே. ௨௪௪

மன்னியவித்தமிழ்க்கிளவிமந்திரங்கள்கணித்தடியேன்
செந்நெறியின்வழுவாவித்திருக்காஞ்சிநகர்வரைப்பி
னுன்னனுக்கனுகியினிதுறைந்திடவும்பெறவேண்டு
மின்னவரமெனக்கருளாயெம்பெருமானென்றிரந்தான். உசரு

அகத்தியர்தமிழாசிரியராதல்.

கூம்பியகைத்தலமுடையகுறுமுனிக்குப்பிஞ்ஞகனார்
தாம்பரிந்துதமிழ்விளக்குமாசிரியத்தலைமையொடு
மேம்படுதென்றிசைக்கிறைமைநல்கிவேட்டனபிறவு
மாம்பரிசினளித்தருளியவ்விலிங்கத்திடைக்கரந்தார். உசசு

இவ்வண்ணமருள்பெற்றவிருந்தவனுமகலிடத்தின்
மெய்வண்ணவோத்துமுறைத்தீந்தமிழைவிளக்குவித்துச்
செவ்வண்ணத்திருமேனிப்பெருமானார்திருவடிக
ளெவ்வண்ணந்தொழுதேத்திநெடுங்காலமங்கிருந்தான். உசஎ

வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளியதற்கிணையாத்
தொடர்புடையதென்மொழியையுலகமெலாந்தொழுதேத்துங்
குடமுனிக்குவலியுறுத்தார்கொல்லேற்றுப்பாகரெனிற்
கடல்வரைப்பினிதன்பெருமையாவரேகணித்தறிவார். உசஅ

இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவரியல்வாய்ப்ப
விருமொழியும்வழிப்படுத்தார்முனிவேந்தரிசைபரப்பு
மிருமொழியுமான்றவரேதழீஇயினரென்றாலிவ்
விருமொழியுநிகரென்னுமிதற்கையமுளதேயோ. உசகூ

வடதிசைதாழல்.

கலிவிருத்தம்.

இத்தகுதமிழோதியாங்கினிதுறைநாளி
லத்தலையரனார்தாமாயிழையுமையாளைப்
புத்தணிதிகழ்மன்றல்புரிநலமுளதாக
வெத்தலையுறைவோருமீண்டினரிமயத்தில். உருo

முனிவொடுவரைதாழ்த்தமுனிவனுமதுநோக்கிப்
பனிவரைதனையுற்றான்பலபலவுலகத்தி
னினிதுறையுயிரெல்லாந்தொகுதலினிருஞாலத்
தனிமகளொருபக்கஞ்சாய்ந்தனள்பொறையாற்றாள் உருக

தென்புவிமிசையோங்கித்திகழ்வடபுவிதாழப்
பொன்பயிலுலகத்துப்புங்கவரதுகாணூஉத்
துன்பொடுபயமெய்தித்துணையடிதொழுதேத்தி
யென்பணிவரைமார்பற்கின்னதுபுகல்கிற்பார். உருஉ

தாழுறுபுவிதன்னைச்சமனிலைபெறவைத்துக்
காழுறுதமியேமைக்காப்பதுகடனெந்தா
யாழுகடல்விடமுண்டோயில்லெனிலடியேங்கள்
வாழுலமிதுபோதேயவல்விழுவதுதிண்ணம். உருங

வெருவருசெயலோராய்விண்ணவரிதுகூறத்
திருமுடியசைவோடுஞ்சினவிடையவர்சொல்வார்
தருமலர்த்தொடையீர்காள்சன்மிகநிறைவுற்று
மருவியபாரத்தாற்றாழ்ந்ததுவளர்ஞாலம். உருச

அகத்தியர் பொதியமலையடையப்பணித்தல்.

ஆதலினியாமாதலெம்மொடுநிகராமோர்
மாதவமுனியாதறென்றிசைவயினின்னே
போதரினுலையாமேபுவிநிலைபெறுமென்னக்
காதரமுறுவிண்ணோர்கேட்டனர்கவலுற்ருர். ௨௫௫

மணவினைநிகழ்காலைமதிமுடியுடையானங்
கணைவதுதகுமேவேறவணொடுநிகர்வார்யா
ரிணையிலிமுழுதிற்குமிறையவனெவராலு
முணர்வருமுதலென்றேயோவிடுமறையெல்லாம். ௨௫௬

என்றிவைபலவெண்ணியிணையடிதொழுதேத்தி
யன்றினர்புரமூன்றுநீற்றியவடிகேளிம்
மன்றலினீசேறலெவ்வணமுனைநேரா
கின்றவருளரென்றுகேட்டிலமெங்கெங்கும். ௨௫௭

என்னலுமனலங்கையேற்றவரிமையீர்நீர்
சொன்னவைமெய்யேயித்தொல்லுலகினிலெம்மை
யன்னவரிலைகண்டீர்குறுமுனியலதென்னுப்
பன்னியமொழிகேளாப்பண்ணவர்களிகூர்ந்து. ௨௫௮

மங்கலவினைசான்றவதுவைசெயமையத்தி
னெங்களையுடையாய்நீயேகுவதமையாதே
யங்கினியணைகிற்பான்றமிழ்தெரியறவோர்க்குச்
சங்கரவிடைநல்கத்தகுமெனவுரைசெய்தார். ௨௫௯

கடல்விடமமுதாக்குங்கறைமிடறுடையாருங்
குடமுனிதனையங்கட்கூயினரெதிர்நோக்கிப்
படரொளியிளமூரல்பனிமுகமலர்காட்டித்
தொடர்புடைவிழிகாட்டுங்கருணையினிதுசொல்வார். ௨௬0

புத்தெழில்பெறுவிந்தம்புரிதருமிடர்மாற்றி
முத்தமிழ்முனிவாமுன்முச்சகமுழுதுய்ய
வைத்தனையிதுபோதுஞ்சந்தனவரைநண்ணி
யித்தரைசமமாகப்புரிமதிகடிதென்ருர். ௨௬௧

அகத்தியரிறைவன்பாலிரங்கல்.

இருள்பொதிமணிகண்டரடிதொழுதிருமுந்நீர்
பருகியமுனிவேந்தன்பையுளினுரைசெய்வா
னருள்பெறுமடியார்கட்கவரினுமினியானே
கருணையினிறைவேயான்கழிவதுமுறையேயோ. ௨௬௨

மருவினர்பிரியொண்ணுய்மற்றிவரில்லாநின்
றிருமணநிறைகோலங்காண்டகுதிறல்பெற்ருர்
பெருமணநடுவேநீபிரிகெனவெனைநீப்ப
விருளுறுகொடியேனிங்கெப்பிழைசெய்தேனே. ௨௬௩

துணைவியரொடுவானத்தொல்லுலகுடையாரும்
பணமணிமணிநாகர்பாரிடர்முனிவோரு
மணவணிதொழுதுய்வானின்னமும்வருகின்ரு
ரணைவுறுதமியேனைத்தள்ளுவதழகேயோ. ௨௬௪

விரைசெலன்முனிவோர்கள்விரைகெழுசுனைதோய்வா
ரரசிலைகுசைமற்றுமன்புடனெதிருய்ப்பார்
கரகமுமிழைசூழ்வாரவரொடுகெளியாமே
தெருமரவடியேனைத்தள்ளுதல்சிரேயோ. ௨௬௫

பாடுவர்சிலரன்பர்பரவுவர்சிலரன்ப
ராடுவர்சிலரன்பரழுகுவர்சிலரன்ப
ரோடுவர்சிலரன்பருவரொடுமகிழாமே
வாடுறவடியேனைத்தள்ளுதன்மரபேயோ. ௨௬௬

ஒளிமணிமழைதூர்ப்பாரொண்மலர்மழைதூர்ப்பார்
புளகமுமுடல்போர்ப்பார்புகழ்பலதிசைபோர்ப்பா
ரளவறுமகிழ்கூர்ப்பாரவரொடுகலவாமே
தளர்வுறவடியேனைத்தள்ளுவதருளேயோ. ௨௬௭

கண்டனமணவின்பங்காழுறுவினையெல்லாம்
விண்டனமுலவாதமேதகுசிவபோகங்
கொண்டனமெனவார்ப்பாரவரொடுகுலவாமே
தொண்டறவடியேனைத்தள்ளுதல்குழேயோ. ௨௬௮

குழலவிழ்வதுமோரார்குழைவிழுவதுமோரா
ரிழைசரிவதுமோராரெதிரெதிர்மடமாதர்
மொழியுமங்கலவோதையிருசெவிமுகவாமே
கழிவுறவடியேனைத்தள்ளுதல்கடனேயோ. ௨௬௯

முனிவரர்கணநாதரயனரிமுதலானோர்
பனியறுகணிகாலைப்பேரிசைபடமுன்பி
னெனவெழுநிறைபூசல்கண்டினிதுவவாமே
மனமடிவுறவென்னைத்தள்ளுதன்மாண்பேயோ. ௨௭௦

மண்டிலமணிவேதிகுண்டமுமலிவித்திங்
கெண்டிசைபுகைவிம்மவெரியிடையிழுதூற்றித்
தண்டிரள்பொரியட்டுந்தகவதுகாணாமே
விண்டிடவடியேனைத்தள்ளுதல்விழைவேயோ. ௨௭௧

ஒழுகொளிமணிவேய்ந்தகரகமதுறுபான்மை
விழிமனையவள்வார்ப்பவெற்பிறைநினதாள்கள்
கழுவினன்மலர்தூவிவழிபடல்காணாமே
யழிவுறவடியேனைத்தள்ளுதலறனேயோ. ௨௭௨

காரொடுநிகர்கூந்தற்கன்னியைமலைவேந்த
னீரொடுநின்கையிலுதவிடுநிறைகோல
மாரொடுமதிவேய்ந்தவங்கணகாணாமே
பேரிடருறவென்னைத்தள்ளுதல்பெட்பேயோ. ௨௭௩

ஒருவர்முனணிசாந்தமொருவர்தம்முதுகப்பப்
பருவிலைமணியாரம்பட்டுடல்வடுவாக
நிரல்படமிடைகுற்றூர்தொழுநிலைகாணாமே
பருவரவடியேனைத்தள்ளுதல்பண்பேயோ. ௨௭௪

குடையொடுகுடைதாக்கக்கொடியொடுகொடிதாக்கப்
படையொடுபடைதாக்கப்பண்ணவர்குழுவோடும்
விடைமிசைவருகோலம்விழியெதிர்காணாமே
கடைபடவடியேனைத்தள்ளுதல்கவினேயோ. உஎரு

வாரணநிரைசூழவாம்பரிநிரைசூழத்
தேரணிநிரைசூழத்தேவர்கள்புடைசூழ
வேரணிநகர்சூழ்நினதெழில்காணாமே
யாரருளுறவென்னைத்தள்ளுதலமைவேயோ. உஎசு

தொடிபலநிலம்வீழத்துணைமுலைநனிவிம்மக்
கடிபடுகுழல்சோரக்கன்னியர்மயல்கூரும்
படிமறுகிடைநண்ணும்புத்தெழில்பாராமே
மிடியுறவடியேனைத்தள்ளுதல்விதியேயோ. உஎஎ

மரகதவடிவாளுமழவிடையனையாயு
மொருமணியணையும்பரினிதுறையுயர்கோல
மிருவிழிகளிகூரப்பருகுவதில்லாமே
பரிவுறவடியேனைத்தள்ளுதல்பாங்கேயோ. உஎஅ

வந்தனர்மணநாட்பின்மலரடிதொழுவார்க்குத்
தந்திடுமருணோக்கந்தமியனுமுடனின்று
சிந்தையின்மகிழ்வெய்தப்பெறுவதுசெய்யாமே
நைந்திடவடியேனைத்தள்ளுதனலமேயோ. உஎகூ

அன்றியுமுயர்காஞ்சிப்பதியினிலடியேற்கு
மன்றநினணிமைக்கண்வைகிடவரமீந்தா
யின்றதுதனைமாற்றியெழில்வளர்பொதியத்திற்
சென்றினிதுறைநீயென்றருளியசெயலென்னே. உஅ0

என்னையுமுடையாய்நின்றிருவருளிதுவோவென்
றின்னனபலபன்னியிருவிழிபுனல்வார
வங்கிலைநனியேங்கியழுதழுதயர்வெய்துந்
தன்னிகர்தமிழ்வாய்மைத்தலைவனையெதிர்நோக்கி. உஅக

அகத்தியர்க்குறுதிகூறல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுவலிற்றாழ்குதம்பைக்காதிற்சுந்தரரருளிச்செய்வா
ரவலித்தல்வேண்டாகேட்டியருந்தவக்கிழவநாலஞ்
செவிலித்தாயென்னவோம்புந்தீம்புனற்கன்னிநாட்டிற்
றவலிற்றீர்வேறுகாஞ்சிசமைத்துமுன்பொருட்டுமாதோ. உஅஉ

அத்தலைக்காஞ்சியூருமெமக்குமிக்கினிதாமங்க
ணித்தகுசிறப்புவாய்ப்பயாம்புனைவதுவைக்கோல
முத்தமக்கிழத்தியோடுமுனக்கெதிர்காட்டுகின்று
மெய்த்தபேருவகைபூப்பவிழியுறக்காண்டிமற்றும். உஅ௩

கருதிநீவரங்கள்பெற்றவடநகர்க்காஞ்சிமாட்டும்
வருமுறையாண்டுதோறும்பங்குனித்திருநாண்மல்கத்
திருவிழாமுடிவின்மன்றற்செய்கையுமெமக்குண்டாக
வருள்புரிந்திடுதுங்கண்டாயறிவநீமகிழுமாற்றால். உஅச

என்றிவையுலகமெல்லாமுய்யுமாறியம்பிவேளை
வென்றவர்தழுவித்தேற்றிவிடைகொடுத்தருளப்பெற்று
வன்றிறன்முனிவர்கோமான்மகிழ்ந்தடிவணங்கிப்போந்து
தன்றுணைக்கிழத்தியோடுஞ்சையமால்வரையைச்சார்ந்தான். உ௫௫

வேறு.

சலம்படைத்தவாதாவிவில்வலன்றனைச்சவட்டியபெருநோன்பின்
வலம்படைத்தவனவ்வரையணுகலுமறிதிரைக்கடலாடை
நிலம்படைத்ததுதொன்னிலையாவருநிறைபெருங்களிகூர்ந்தார்
நலம்படைத்தசீருறுவனுமாயிடைவதிந்துதென்மலைநண்ணி. உ௫௬

தெனுதுகாஞ்சியுமுத்தரகாஞ்சியுநித்தலுஞ்சென்றேத்திப்
பிறைகபாணியார்திருமணங்கண்ணுறப்பெற்றுளங்களிப்பெய்தித்
தனுதுபத்தியாலணிபெறத்தொடுத்திடுஞ்செந்தமிழ்ப்பாமாலை
மனுதியாலுணர்வரியவரிணையடிமலர்மிசைப்பலசாத்தி. உ௫௭

தென்றற்பிள்ளையைவயிறுளைந்தீன்றுதீம்பொருநைநீர்குளிப்பாட்டி
மன்றற்சந்தனப்பெருதும்பரிற்றமிழொடுவளர்த்துமென்மெலஞால
முன்றிற்பால்விளையாடவிட்டமர்முதுமலயவெற்பினுஞ்சையக்
குன்றத்தும்மகத்தீசத்த முறைமுறைகுலவிவீற்றிருக்கின்றான். உ௫௮

இன்னதாமகத்தீச்சரம்வந்தவாறிவ்விடைப்பணிந்தேத்தி
யன்னமன்னவண்மண்டபமாளிகையங்கணமாங்காங்குத்
துன்னும்வந்திகர்களுதிபர்வாயில்காப்புடையவர்தொழப்போந்து
மன்னுமாமுதலிடவயின்மத்தளமாதவீச்சரங்கண்டாள். உ௫௯

என்றியம்பியசூதனைப்பழிச்சினரிறும்புசூழ்வடமேருக்
குன்றவார்சிலைவாங்கியமதனுடைக்குழகனுரடிப்போதி
லொன்றுசிந்தையோய்மத்தளமாதவீச்சரத்தியலுரையென்ன
வென்றமாதவர்வினுதலுமாங்கவன்மேவரவிரிக்கின்றான். உ௬0

மத்தளமாதவீச்சரவரலாறு.

விரைப்பசுந்துழாய்மணிமுடிப்புங்கவன்வீங்குநீர்க்கலிக்கச்சி
வரைப்பின்விண்டுவீச்சரக்குறிநிறீஇத்தொழும்பேற்றினுன்மறைநான்கு
மிரைப்பவார்பொழிற்புலிநகர்ப்பொதியிலெடுத்ததாண்டவங்காணூஉ
வுரைப்பரும்பெறற்படகமங்கெழுப்பிடப்பெற்றபினுவப்பாலே. உ௬௧

அடியளந்தவன்கறைமிடற்றடிகளையானந்தக்கூத்தாடன்
முடிவிலேத்தெடுத்தடியனேன்மத்தளமுழக்கவும்பெறவேண்டும்
படியிலாப்பெருங்கருணையஞ்சலதியேபணித்தருளெனப்போற்ற
வடிநெடும்படைக்கழுக்கடையேந்தியவள்ளலாரருள்செய்வார். உ௬உ

இவ்வரைப்பிடைநித்தனும்படகநீயெழுப்பிடவரம்பெற்றாய்
செவ்விமத்தளமுழக்கவும்விழைதியேற்செப்புதுமிதுகேட்டி
யவ்வியத்தொகையறவெறிந்துயரியவான்றவர்குழூப்போற்றுங்
கௌவையம்புனற்காஞ்சியைமுன்புபோற்கதுமெனச்சென்றெய்தி.

அங்கண்மத்தளமாதவீச்சரமெனவருட்குறிநிறீஇப்போற்றிப்
பொங்குமன்பினுல்விதியுளியருச்சனைபுரிகுதிமற்றாங்கே
துங்கநீடியபரவெளிப்பிலத்தயற்சூழலினென்றுனாறுந்
தங்குகாப்புடைநடமெனப்பெயரியதாண்டவம்புரிகின்றேம். உ௬௪

செல்வமல்குமித்தில்லைநீள்வனத்திடைத்திருச்சிற்றம்பலமொன்றே
சொல்லிறந்தொளிர்பரவெளியெனப்படுஞ்சுரிவளைக்குலமார்க்கு
மல்லனீர்த்தடம்புறம்பணைவேலிசூழ்வளம்பொழிற்றிருக்காஞ்சி
யெல்லையுட்படுவரைப்பகமுழுவதும்பரவெளியெனத்தேறாய். ௨௯௫

ஆதியந்தமுமில்லதோர்மெய்யறிவானந்தநிறைவாகுஞ்
சோதிநந்தமைத்தம்மனக்குகையினுந்தொழுபவர்கருத்தீமை
காதுகாஞ்சியாம்பரவெளித்தலத்தினுங்காண்டகப்பெறுவோரே
யோதிமுற்றுணர்ந்துறுவரும்பெறலரும்வீட்டினையுறுவாரால். ௨௯௬

வன்னியிற்படுபொருள்களக்கணந்தனில்வன்னியாமதுபோல
வென்னராயினும்பரவெளிக்காஞ்சியினெய்தினெம்மியல்பாவா
ரன்னதன்மையானத்தலத்திறந்தவர்க்கழற்கடன்கழிப்போரைத்
துன்னுசூதகந்தொடக்குறாதிழிஞரைத்தீண்டினுந்தொடக்கில்லை. ௨௯௭

பாப்புப்பாயலோயித்தகைச்சிறப்புடைப்பதிவயினெமைப்போற்றிக்
காப்புத்தாண்டவமாயிடைக்காட்டுதுமந்நடந்தனக்கேற்பக்
கோப்புச்சீரமைமத்தளமுழக்குவாயாகெனக்கொடும்பாச
நீப்புச்செய்தெமையாளுடையண்ணலார்நிகழ்த்தியமொழிகேட்டு.

வண்டினம்புகுந்துழக்கியபூந்துழாய்வானவன்பெரிதோகை
கொண்டுவல்விரைந்தணுகினன்காஞ்சியிற்கோழரைத்தனிமாக்கீ
ழண்டர்போற்றவாழங்கணர்க்கணிமையினுகமவிதியாற்றாற்
கண்டுமத்தளமாதவீச்சரன்றனைப்பூசனைக்கடன்பூண்டான். ௨௯௯

இறைவர்காப்புநடனஞ்செய்தல்.

கலிநிலைத்துறை.

போக்கருந்தவம்பற்பகல்புரிந்துபேரன்பு
தேக்குசிந்தையான்மீச்செலத்திருவருள்வழங்கி
வாக்குமுள்ளமுந்தொடர்வருவள்ளலார்முழுதுங்
காக்குநாயகர்காட்டினார்காப்புநன்னடனம். ௩௦௦

வீங்கிருட்பிழம்பள்ளிவாய்மடுத்துவெங்கதிர்கான்
றோங்குசெங்கதிராயிரமொருவழிக்குழுமி
யாங்குவில்லுமிழற்புதப்பொலஞ்சுடர்ப்பொதுவின்
பாங்கரெங்கணும்படரொளிவிரிகதிர்பரப்பி. ௩௦௧

அனையமன்றினுக்கரும்பெறலணியெனக்கவின்று
புனையுநீற்றொளிவயங்கியதிருவுருப்பொலிய
வினையிகந்தவர்விள்ளருஞ்சரண்மிசைவீக்குங்
கனைமணிக்கழல்கலின்கலின்கலினெனக்கறங்க. ௩௦௨

வார்ந்தசெஞ்சடைமாதிரமெட்டினுஞ்சுல்வ
வார்ந்ததெய்வதக்கங்கையாறலம்பிநீர்துளிப்பக்
கூர்ந்தவின்னருட்குறுநகையிளநிலாமுகிழ்த்துச்
சார்ந்துபோற்றெடுத்திசைப்பவர்தம்முயிர்பருக. ௩௦௩

கஞ்சவாண்முகமலர்தரக்கட்கடைக்கருணைப்
பஞ்சினேரடிப்பனிவரைப்பிராட்டிபாணடப்ப
வஞ்சுபூதமும்புடைத்தளித்தழிக்கவும்வல்ல
துஞ்சரும்புகழ்க்குறட்கணந்துணங்கையாட்டயர. ௩௦௪

ஊனமில்பசுங்கொடியெனவொல்கிநின்றொருபாற்
கானளாங்குழன் மலைமகள்கண்டுகண்களிப்ப
வானநாட்டவர்கற்பகமலர்மழைபொழியத்
தானமெங்கணுமரகரசயவொலிதழைப்ப. ௱0ரு

கட்டுவார்முரசாதியபெருங்கணப்பூத
ரெட்டுநாகமுமாகமுஞ்செவிடுறவெழுப்ப
மட்டுவார்ந்தெனச்செவியெலாமண்ணிக்குமதுரம்
பட்டதீங்கிளைநரப்பியாழ்கின்னரர்பயில. ௱0சு

வேதமாயிரமொருவயின்வெண்குடப்பணில
நாதமாயிரமொருவயினலங்கிளர்முழவப்
பேதமாயிரமொருவயிற்பெரும்புனற்பாவை
யோதமாயிரமார்த்தெனத்தழங்கொலியோங்க. ௱0எ

நடிக்குமற்புதநாடகங்காண்டலும்புளகம்
பொடிக்குமேனியன்புனல்பொழிவிழியினன்றுதிகள்
படிக்குநாவினனஞ்சலிபற்றியகரத்தன்
கடிக்குறுந்துழாய்க்கண்ணியான்படிமிசைவீழ்ந்தான். ௱0அ

வீழ்ந்தெழுந்துளமகிழ்ந்துபேரின்பவெள்ளத்தி
னாழ்ந்துபன்முறைபணிந்துபோற்றிசைப்புழியவற்கு
வாழ்ந்தபேரருட்கருணையான்மத்தளமுழக்கப்
போழ்ந்தவெண்மதிக்கண்ணியார்திருவருள்புரிந்தார். ௱0கூ

நீண்டமேனியானிறைபெருமகிழ்ச்சியிற்றிளைத்துத்
தாண்டவந்தனக்கிசையமத்தளவியமுழக்கி
மாண்டகுந்திறன்மத்தளமாதவனான்
வேண்டுமெய்வரமவன்பெறவளித்தனர்விமலர். ௱க0

அச்சுதன்பெறுவரத்தினாலன்றுதொட்டென்றுங்
கச்சிவைப்பினின்மத்தளங்கறங்குபேரோதை
முச்சகத்தையுநிறைத்திடமுழுவதும்புரக்கும்
பச்சிளங்கொடிபாகனார்திருநடம்பயில்வார். ௱கக

காப்புநன்னடங்கண்ணுறப்பெற்றவர்கரும
யாப்புவீழ்த்துயர்வீடுபேறெய்துவர்பிறவி
யோப்புமத்தளமாதவீச்சரமிதுவுரைத்தாம்
வாய்ப்புறுந்தவக்கொள்கையீர்மேலினிவகுப்பாம். ௱கஉ

இறைவிமகாமண்டபத்தெழுந்தருளல்.

எம்பிராட்டியங்கிறைவரைத்தொழுதுபோற்றிசைத்து
நம்புகாதலிற்றோழியர்குழாத்தொடுநடந்து
கம்பநாயகர்திருவருட்பெருமையேகருதிச்
செம்பொன்வேய்ந்தொளிபிறங்குமாமண்டபஞ்சேர்ந்தாள்.

எண்ணில்பன்மணியாங்கணுமிளவெயிலெறிப்ப
வண்ணமாண்டபொற்றூண்பலநிரைநிரைவயங்கக்
கண்ணிறைந்தபேரழகினுக்கணியெனக்கவின்று
விண்ணளாங்கொடிமிடையுமம்மண்டபவரைப்பின். ௱கச

சுற்றுநீடியதோழியர்கவரிசாந்தாற்றி
பற்றிநின்றிருபாங்கரும்பணிநனிபுரியச்
சற்றிருந்திளைப்பாறினளெழுந்துமீத்தருக்கு
முற்றிலாமுலையன்னலார்க்கின்னதுமொழிவாள். ௩௧௫

மன்னுயிர்த்தொகைமுழுவதுமாயையின்மறைப்புண்
டின்னல்செய்யிருவினைவலைப்படுங்களிவ்வினைதா
முன்னையெம்மையெம்மடியரைப்பிணிப்பதொன்றில்லை
யன்னதாயினுமகிலமுந்தெளிந்துய்தற்பொருட்டு. ௩௧௬

ஆடலான்விழிபுதைத்தலினிருட்படல்
மூடயாவையுமிடர்க்கடன்மூழ்கியவதனாற்
கூடும்வல்வினைகழுவுறக்காஞ்சியைக்குறுகி
நீடநீயெமையருச்சனையியற்றுதிநெறியால். ௩௧௭

என்றுமந்தரப்பறம்புறையெம்பிரான்விடுப்ப
மன்றவிந்நகர்க்கெய்தினன்வளரிளமுலையீ
ரின்றுநான்புரிபூசனைக்கிசையவென்பணியி
னின்றுவேண்டுவதம்மினென்றுணர்த்தினனிமலை. ௩௧௮

உரைத்தவாய்மொழிகேட்டலுமுளங்களிதுளும்பி
விரைத்தகூந்தலார்மென்மலரடிதொழுதெழுந்து
திரைத்தபாற்கடலமிழ்தனாய்செய்பணிவெவ்வே
றரத்தவாய்திறந்தெங்களுக்கருளெனவருள்வாள். ௩௧௯

இறைவிதோழிகட்குக்கட்டளையிடல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீலந்தாங்குவிண்ணவரும்விழைதகுதீம்புனற்கூவல்
காலந்தோறும்யானாடிக்கருமமியற்றுதற்கொன்று
மாலந்தாங்கியகண்டத்தடிகளுக்காட்டுதற்கொன்று
மேலந்தோய்ந்திருள்கூறுமீர்ங்குழலவர்சிலரகழ்மின். ௩௨௦

அலைகள்வெண்மணிவீசியதிர்புனனதிக்கரையருகு
மலர்கள்பச்சிலைகனிகண்மல்கியமயிலைவில்லந்தண்
பலவுமாகியபலவும்பயில்வுறுநந்தவனங்க
ளிலைமுகப்பொலம்பூணினெழுமுலையவர்சிலர்புரிமின். ௩௨௧

நறியசந்தனவிழுதுநாறியமான்மதச்சாந்தம்
வெறிகுலாங்கருப்பூரம்விரைகெழுகுங்குமம்பிறவுஞ்
செறிவுகொண்டபூங்கதிரின்றெய்வதமணியணிவிலையிட்
டறிவரும்பரிவட்டமாதியசிற்சிலர்கொணர்மின். ௩௨௨

ஆனினைந்துடனேவேறமுதமுஞ்சிலர்சிலர்தம்மின்
றேனளாந்திருவமுதுமுதலியசிலர்சிலர்தம்மின்
வானளாவியகோயின்மாளிகையெங்கணுமணிகள்
கானளாமலர்பட்டிற்கவினலஞ்சிலர்சிலர்புனைமின். ௩௨௩

தோழியர்பூசாத்திரவியம்சேகரித்தல்.

இன்னவாறிமயத்தினிளம்பிடியேவுதலோடு
மன்னதோழியர்பலருமையெனவடியிணைதொழுது
முன்னர்யாஞ்செய்துமென்றங்கொருவரினொருவர்முன்முடுகித்
துன்னுகாதலின்மூண்டுதொழிறலைநின்றனர்மன்னோ. ௩௨௪

தெவ்வடுவேற்கணுமாபத்திரையொடுகீர்த்திமதியென்
றிவ்விருமாதர்வடக்குந்தெற்குமகிழ்ந்திருகூவல்
கௌவைநெடுந்திரைக்கங்கைகாளிந்தியங்கண்மடுத்தா
ரவ்விருதீர்த்தங்குடைந்தோரல்லற்பவப்பிணிநீப்பார். ௯௨௫

வார்ந்தநெடுஞ்சடைமோலியேகம்பவாணர்தமக்கு
நேர்ந்ததிருவமுதாக்கநீடுமனற்கிறைதிக்கி
னீர்ந்தண்மணிப்புனற்கூவலிடம்பெறத்தொட்டுவனப்பி
னூர்ந்ததிருமடைப்பள்ளியமைத்தனராலொருசாரார். ௯௨௬

நிலவுமெருக்குமணிந்தநீண்முடிசாத்தியமேல்பாற்
குலவுநதிக்கரைஞாங்கர்க்கோதறுதூயவரைப்பிற்
பலருந்தொழத்தகுமேன்மைபயிலம்பிகாவனமென்னு
மலர்நிறைநந்தவனங்களாக்கினராங்கொருசாரார். ௯௨௭

நெட்டிலைவாழைக்குலங்கணெருப்புறழ்செம்பழம்பூக
மட்டுமதுக்கமைதூணத்தியாத்தவிர்காழ்வடநாற்றி
மட்டவிழ்பூந்தொடைதூக்கிவன்னவிதானம்விதானித்
திட்டுமெணித்திருக்கோயிற்கெழில்புரிந்தாரொருசாரார் ௯௨௮

வாசக்கொழும்புழுகப்பிவண்ணமலர்த்துகளட்டி
வீசிச்செழும்பனிநன்னீர்விரைகமழ்தீம்புகையேற்றிக்
காசைத்தகர்த்துக்கரைத்துக்கவின்றிருமாளிகைச்சுற்று
மாசைச்சுவர்த்தலமுற்றுஞ்சித்திரித்தாரொருசாரார். ௯௨௯

வீறும்விரைப்பாளிதங்கள்வெறுவியவல்சியக்காரச்
சோறுபுளிந்தயிர்ச்சொன்றிதுப்புடையேனைப்புழுக்க
லுறுநறுங்குய்க்கருனைமுதலியநால்வகையுண்டி
யாறுசுவைத்திறம்விம்மவட்டனராலொருசாரார். ௯௩0

ஓட்டொழியாநறுந்தேறலொண்மலர்குற்றனர்கொண்டு
சூட்டொடுகண்ணிகளிண்டைதொங்கன்முதல்பலவாக்கி
யீட்டுநறும்புகையேற்றியீர்ம்பனிநீர்தெளித்தம்பொற்
சேட்டொளிமூழியமைத்துச்சேர்த்தனராலொருசாரார். ௯௩௧

செம்பொனிழைத்ததசும்பிற்றெய்வதமந்திரமோதி
யம்பொனிழைத்துகில்வாய்ப்பெய்தலையெறிதீர்த்தம்வடித்துக்
கொம்பினெருசிந்தனர்கொண்டுகுளிர்மணிக்கோயிலினுள்ளாற்
பம்புநிறைகணிறையப்பாய்த்தினரர்லொருசாரார். ௯௩௨

சுடர்விடுமாடகச்செம்பொற்றூமணிவட்டகையோடு
ஏநறும்பூ
வடைதளிர்யாவையுமாய்ந்தங்கார்த்திமணத்தவேலாதிக்
கடிதிருமஞ்சனமட்டிக்களிமிகுந்தாரொருசாரார். ௯௩௩

தூங்குபலாக்கனிதாற்றுத்தூத்திரள்வாழைப்பழங்கண்
மாங்கனிக்குப்பைநரந்தமாதுளைநாறெலுமிச்சை
தேங்கமழ்தெங்கின்குடக்காய்தீம்படுபூகப்பழுக்கா
யாங்கணிரப்பினர்கைக்கொண்டணுகினராலொருசாரார். ௯௩௪

ஆனுடைப்பாற்குடங்கோடியருஞ்சுவைநெய்க்குடங்கோடி
தேனுடைப்பொற்குடங்கோடிசெழுங்கரும்பட்டதண்சாறு
தானிறைபொற்குடங்கோடிதயிருடைப்பொற்குடங்கோடி
வானமிழ்தக்குடங்கோடிவல்லையுய்த்தாரொருசாரார். ௧௧௫

திருமலியோவியப்பட்டுந்தீபத்தியன்றவெண்பட்டுங்
குருமலிபாசிலைப்பட்டுங்கோபநிகர்த்தசெம்பட்டு
முருவுடைமாழையம்பட்டுமொளிர்தருநீனிறப்பட்டுந்
தருவுதவும்பலபட்டுந்தந்தனராலொருசாரார். ௧௧௬

விற்படுமோலிகுதம்பைமின்னுமிழ்பொன்னணிபட்ட
மற்பகைவிள்ளவிளங்குமங்கதமாழிகடகம்
பற்பலகண்டத்தணிகள்பாயொளியாரமுதலாங்
கற்பகமுய்த்தனகொண்டுகடுகினராலொருசாரார். ௧௧௭

முழுதுலகுங்கமழ்கிற்குமுருகுடைச்சந்தனத்தேய்விற்
புழுகினைவாக்கிநுணங்கப்பொடித்திடுகப்புரமட்டிச்
செழுவியகுங்குமம்பெய்துசெறிவுறமட்டித்தெடுத்த
விழுதமைபொற்குடமேந்திவிரைந்தனராலொருசாரார். ௧௧௮

கண்ணடிசாமரைவெண்கோக்கவிகைவளியெறிவட்டம்
புண்ணியநீறுபளிதம்புகைமலிகுங்குலியங்கள்
வண்ணமணிக்குடந்தட்டோடாராதனைக்குவகுத்த
வெண்ணிலுறுப்பிற்பிறவுமீட்டினராலொருசாரார். ௧௧௯

நெய்விரவம்புயநாளநீளிழைத்தீபமனந்தம்
பைவிரிபாந்தளுயிர்த்தபரூஉமணித்தீபமனந்தந்
தெய்வதத்தீபமனந்தந்தீம்புகைவர்க்கமனந்தங்
கைவகுத்தெங்கணுமல்கக்கண்டனராலொருசாரார். ௧௪௦

மாடகவச்சிரப்பத்தர்வார்நரப்பின்னிசையாழும்
பாடுறுபாடலுமொன்றப்பண்ணினமைமின்களென்று
மீடறுபற்பலியங்களெழுப்புமினென்றுமிணங்க
வாடுமினென்றும்விண்ணோரைப்பணித்தனராங்கொருசாரார்.

இறைவிபூசைக்கெழுந்தருளல்.

கலிவிருத்தம்.

இன்னணம்பணியெலாமிகுளைமார்செய
மின்னவிர்மணிவடஞ்சுமந்தவெம்முலைக்
கன்னிமாமண்டபநின்றுங்காதலாற்
கொன்னுமாபத்திரக்கூவனண்ணினுள். ௧௪௨

நிறைபரஞ்சுடரடிநினைந்துகூவனீர்
மறைநெறிவிதியுளிவழாமையாடியே
யிறுநுசுப்பங்கலாரெடுத்துநீட்டிய
வறுமையிறொற்றிமெய்யீரமாற்றினுள். ௧௪௧

தேசிகப்பட்டிரண்டுடுத்துத்தீவினை
யாசிரித்தருளுநீறுகமெங்கணும்
பூசிமுப்புண்டரம்பொறித்துக்கண்டிகை
நேசமுற்றணிந்துசெய்நியமமுற்றியே. ௧௪௪

காவலர்பூசனைபுரியுங்காதலான்
மேவரவேண்டுவகொண்டுமெல்லியற்
பாவையர்புடைவரப்படர்ந்திரண்டெனு
மாவரணந்தனையணுகினளரோ. ௧௪௫

சங்கினம்வயிரொடுதாரைகாகளம்
பொங்கொலிச்சின்னங்கள்வீணைபூங்குழல்
வங்கியம்பேரிவார்முரசந்திண்டிம
மெங்கணுங்கடலுடைந்தென்னவார்ப்பவே. ௧௪௬

கின்னரர்கருடர்கிம்புருடர்பாண்செயக்
கன்னியரெதிரெதிர்கலவியாடிடத்
துன்னியமுனிவரர்துன்றும்வேதிய
ரென்னருமறைமுழக்கெடுத்துச்சூழவே. ௧௪௭

ஐவகைப்பிரமமுமங்கமாறுமோர்
கைவளர்முகனுடைக்கடவுள்வேழமுங்
கொய்விரைக்கடம்பணிகோவுமோகையான்
வைகுமச்சூழலைவலங்கொண்டெய்துவாள். ௧௪௮

ஐங்கரப்பிள்ளையைநிருதியாசையிற்
செங்கைவேலிளவலையுலவைத்திக்கினு
முங்குறுபூசையினுவப்பச்செய்துபோய்
மங்கலந்திவாழ்வாய்தனண்ணியே. ௧௪௯

வாயிலோர்பூசனைமரபினாற்றினண்
மாயிருமறைத்தனிமாவினீழல்வாழ்
நாயனார்தமைவிழிநயப்பக்காண்டலு
மீயுயர்காதலான்வீழ்ந்தெழுந்தனள். ௧௫௦

ஒருங்கியமனத்தினஞ்செழுத்துமோதியே
கருங்குழற்கற்றைமேற்குவித்தகையொடும்
பெருங்களிதுளும்பியுள்புகுந்துபிஞ்ஞகர்
மருங்குறமுறைமுறைவணங்கியேத்தினள். ௧௫௧

முருகலர்மாவடிமுளைத்ததீஞ்சுவை
யருள்விளையமுதினையாரக்கண்களாற்
பருகினள்பன்முறைபழிச்சியண்ணலார்
கருணையேநோக்கிவெங்களிப்பினீடினள். ௧௫௨

விழிகளானந்தநீர்த்தாரைமெய்யெலாம்
பொழியநெக்குருகினள்புளகம்போர்த்தனண்
மொழிதடுமாறினளறிவின்முற்றிய
தொழிலமைபூசனைதொடங்கன்மேயினள். ௧௫௩

இறைவிபூசைதொடங்கல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வழுவறுதோற்றமாதிவழுக்கியபாவத்தீமை
கழுவநின்பூசையினாட்கடைப்பிடித்தருளாற்செய்கேன்
முழுதருள்வழங்கியூறுநீக்கிமுன்னின்றுகோடி
செழுமதிமுடியாயென்றுசங்கற்பஞ்செய்துகொண்டாள். ௧௫௪

பூமுதல்பூதசுத்திபுரிந்தகப்பூசையாற்றிக்
காமருமலரும்வாசவருக்கமுங்கலந்ததெண்ணீர்த்
தோமில்பாத்தியமேயாசமனமருக்கியந்தூய்தாக்கி
மாமுரலிதழித்தாரார்முடிமிசைமலரைமாற்றி. ௩௫௫

மாதர்வண்சத்தியாதிசத்தியீறிலகவாய்ந்த
வாதனமதன்மேல்வைகுஞ்சதாசிவவடிவினுன்ற
சோதியைத்திருவேகம்பச்சுடரினைநடுக்கீழ்பக்க
மீதறநிறைந்துவிம்முமானந்தநிமலவாழ்வை. ௩௫௬

சித்திருளறுக்குநோக்காற்றெளிவுறக்கண்டுபோற்றிப்
பாத்தியமுதலாமூன்றும்பதமுகமுடியினீத்து
நாத்திகழ்மனுவின்மாண்டநறுமதுபருக்கநல்கி
யாத்தனூல்விதியினுற்றுன்மறித்துமாசமனமீந்தாள். ௩௫௭

இணங்கியநெய்பால்பெய்தவின்னமுதிசையநல்கி
மணங்கமழெண்ணெய்க்காப்புமாநெல்லிமஞ்சட்காப்பு
மணங்கருங்கபிலையைந்தைந்தமுதுபல்குடத்துத்தீம்பால்
குணங்கெழு தயிர்நெய்செந்தேன்குளிரிளநீருமாட்டி. ௩௫௮

கருப்புமிழ்தேறலாட்டிப்பல்கனிவருக்கமாட்டி
யருத்திகூரன்பினுன்றசந்தனக்குழம்புமாட்டி
மருக்கமழ்ந்தெடுத்தகீர்த்திமதித்தடங்கூவற்றெண்ணீ
ருருத்திரமனுக்களோதிவிதியுளிநிறையவாட்டி. ௩௫௯

நுழையுநூற்கலிங்கமேந்திநொய்தெனமேனியொற்றி
விழைதகுநறும்பட்டாடைவிளங்கெழின்முந்நூல்சாத்தித்
தழையுமான்மதங்கர்ப்பூரஞ்சந்தனக்கலவைசாத்தி
யிழையணிவருக்கமேனையீர்ந்தொடையலங்கல்சாத்தி. ௩௬0

நறுவிரைத்தூபந்தீபங்காட்டிநால்வகைவேறுண்டி
யறுசுவைதிறத்தின்மாணவமுதுசெய்வித்துச்சீத
முறுபுனலுதவிக்கைவாய்பூசியொண்பழுக்காய்வாசம்
பெறுமிலைமுகவாசங்கண்மந்திரம்பேசிநல்கி. ௩௬௧

அகிற்புகைதீபமெல்லாமினிதளித்தரக்குநன்னீர்
மகிழ்ச்சியிற்சுழற்றிப்பல்கால்வலஞ்செய்துவணங்கிப்போற்றி
யிகப்பிலஞ்செழுத்துமெண்ணியின்னபிறவுமாற்றி
முகிழ்த்தபேரன்பினுன்றபூசனைமுற்றச்செய்தாள். ௩௬௨

முற்றுவித்தெழுந்துமீண்டுமொய்யொளிப்பிலத்தின்பாங்க
ரற்றமிலறமெண்ணான்குமருள்வழிவளர்ப்பாளாகிப்
பற்றலார்புரஞ்செற்றுரையிம்முறையெண்ணில்பன்னுட்
சிற்றிடையெம்பிராட்டிபூசனைசெய்துவாழ்நாள். ௩௬௩

அன்னணமளவில்காதலருச்சனைத்திறத்திறேங்க
மன்னியமறைநூல்வாய்மையாகமவழியிற்பேணுந்
தன்னிகரிமயமீன்றமதாரித்தடங்கட்செவ்வாய்
மின்னிடைக்கொருநாளங்கணிகழ்ந்ததுவிளம்பலுற்றேன். ௩௬௪

பண்டுபோற்கம்பையாற்றுமணிப்புனல்படிந்துமெய்யிற்
கண்டிகைநீறுதாங்கிக்கடப்படுநியமமாற்றித்
தொண்டினில்வழாதுபூசைத்தொழிற்றலைநின்றுகாதன்
மண்டவேகம்பனுரைமஞ்சனமாட்டுங்காலை. ௩௬௫

மருமலர்த்தனிமாநீழல்வள்ளலார்மேன்மேலன்பு
பெருகியகருத்தினுட்குப்பேரருட்கருணைகூர்ந்த
வொருதிருவிளையாட்டாலேபத்தியினுறுதிநோக்கித்
திருவருள்புரிவானெண்ணியிதுதிருவுள்ளஞ்செய்தார். ௩௬௬

இறைவன்கம்பாநதிவரவிடுதல்.

விழுமியவண்டத்துள்ளும்புறத்தினும்விரவுந்தீர்த்த
முழுவதுமொருங்குநண்ணமுன்னினார்முன்னலோடு
மொழுகுநீர்க்கம்பையாற்றினுடன்பிராய்க்கடைக்கால்வெள்ள
மெழுவதுகடுப்பவெல்லாப்புனலும்வந்திறுத்தவன்றே. ௩௬௭

கொச்சகக்கலிப்பா.

மிடைவானவர்திசைகாவலர்புவிமேலவர்காணூஉக்
கடைநாளணுகிற்றெனவெருவிக்கலுழ்கண்ணீ
ரிடையாறெனவிரவக்கொடுவேகத்தொடுமெவ்வெப்
புடைநீர்களுமுடனாகியகம்பைப்புனல்வருமால். ௩௬௮

படலைக்கருமுகிலும்மிடையிடையேபடரொளிசேர்
தொடலைக்கதிருடுவுந்துவளுறுபாசடைவிரவு
மிடையிற்றிகழ்மலரும்மெனவிலகக்ககனமுமுட்
படமிக்கெழுபரவைப்புனல்பயமுற்றிடவருமால். ௩௬௯

அடிநேடியதிருமாலெனவிருமாநிலமகழு
முடிநேடியமலரோனெனவிண்மேற்செலமுடுகுங்
கடவாமுரணிருவோரெதிர்கனலாயெழுமுருவ
முடையானெனவிரைசெல்புனல்கீழ்மேலுறநிலையும். ௩௭௦

வாழைக்கனிபலவின்கனிமாவின்கனிநெடிய
தாழைக்கனியகில்குங்குமநிறைசந்தனமலர்தேன்
வேழத்துணிமுதலின்னனகொடுமேவலினுமையா
ளூழிற்புரிபூசைக்குரியவையுய்ப்பவருறழும். ௩௭௧

இருபாலினுமணிதங்கியவிருகோடுபடைத்து
வெருவார்களும்வெருவித்துயர்மேவத்தவவுரறி
மருவார்குழலுமையச்சுறவரலானுயர்கம்பை
பெருமானெதிர்பண்டெய்தியபெருவேழமுநிகரும். ௩௭௨

இறைவிஇறைவனைத்தழுவிக்கொள்ளல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலைபடுவளங்கள்வாரிமணிபலவரன்றிப்பொங்கி
யலையெறிந்திலைத்துவிம்மிவிசும்பெலாமடைத்துப்பம்பித்
தலைவருவெள்ளந்தன்னைத்தடவரைபயந்ததிங்கட்
கலைநிறைவதனத்தேவிகாண்டலும்வெரூஉக்கொண்டாளால்.

புடையுறுமிகுளைமாரும்பொள்ளெனவச்சம்பூப்பத்
தடைபடாதணுகுநீத்தந்தனையெதிர்நோக்கிநோக்கிக்
கடல்கிளர்ந்தனையவெள்ளங்காரணமின்றியென்னே
விடையவன்பூசைகாப்பண்மேவியவாறென்றெண்ணி ௩௭௩

என்னுடைத்தீங்குதன்னாற்பூசனைக்கிடையூறாகத்
துன்னியதிதுவாமென்றுசொல்லருங்கவலைகூர்ந்து
சென்னியின்மதியம்வைத்தார்திருவடியிதயத்தெண்ணு
முன்னரப்பெருநீர்வெள்ளமுடுகிவந்தடுத்ததாக. ௩௭௫

துன்புறநோக்கிநெஞ்சந்துண்ணெனத்துளங்கியாவா
வும்பர்வான்றடவிச்செல்லுமொப்பரும்பெருநீர்வெள்ள
மெம்பிரான்மிசையேநண்ணுமினிச்செய்வதென்னேயென்று
தம்பிரானார்பாலன்புதழைந்தெழுமுள்ளத்தோடும். ௩௭௬

அட்டொளிப்பசும்பொன்மேனிவடிவெலாமதிர்ப்புக்காட்டப்
பொட்டணிநுதலின்பாங்கர்க்குறுவெயர்த்திவலைபூப்ப
மொட்டிளமுலையிற்றூங்குமுத்தொளிவடங்களாட
விட்டிடைவருந்திச்சாலவிறுமெனத்துவண்டுவாட. ௩௭௭

கூந்தலினறவந்தோய்ந்தகுருமலர்ச்சுரும்பரார்ப்ப
வேந்தகலல்குற்சூழ்ந்தவெரிமணிப்பருமமார்ப்பச்
சேந்தொளிபிலிற்றுஞ்செம்பொற்கிண்கிணிசிலம்போடார்ப்பக்
காந்துபொற்கடகக்கையிற்கதிர்வளைக்குலங்களார்ப்ப. ௩௭௮

ஒருகொடியெழுந்துசெம்பொனுயர்வரைக்குவடுதன்னை
யிருகொழுந்திருபாற்போக்கித்தழீஇயெனவெழுந்துவல்லே
முருகலர்வேதியும்பர்த்தன்வலமுழந்தாளூன்றிக்
கருமணிப்பாவையன்னாள்கண்வரைத்தழுவிக்கொண்டாள். ௩௭௯

இறைவன்இறைவியின்சுவடுபெறல்.

மணிமுலைக்குவட்டினேடுவளைக்கையானெருக்கிப்புல்லித்
தணிவருங்காதல்விம்மக்காதலிதழுவலோடுந்
திணியிருளறுக்குஞ்சோதித்திருவுருக்குழைந்துகாட்டி
யணிவளைத்தழும்பினோடுமுலைச்சுவடணிந்தாரையர். ௩௮௦

கலிவிருத்தம்.

வற்றிநின்றருந்தவமுயன்றுபன்மறை
கற்றவருணர்வையுங்கடந்தபேரொளி
சிற்றிடைத்திருந்திழைத்தேவிவால்வளைப்
பொற்றழும்பொடுமுலைச்சுவடுபூண்டதே. ௩௮௧

உருவருவனுமலையுண்மையின்மைமற்
றிருளொளியன்றிநின்றிலகுபேரொளி
மருமலர்க்கருங்குழன்மங்கைவால்வளைப்
பொருதழும்பொடுமுலைச்சுவடுபூண்டதே. ௩௮௨

பெருவிரலளவையினுளத்திற்பேணிநின்
றுருவுயிர்முழுவதுமாட்டுமொள்ளொளி
யருள்பொழிகுறுநகையணங்குவால்வளைப்
புரிதழும்பொடுமுலைச்சுவடுபூண்டதே. ௩௮௩

உயிர்ப்பினையொடுக்கியேவிழித்துறங்குவோ
ரயர்ச்சியிலகக்கணேக்குமாரொளி
குயிற்பெடைச்சின்மொழியிறைவிகோல்வளைப்
புயத்தழும்பொடுமுலைச்சுவடுபூண்டதே. ௩௮௪

என்றுமோரியல்பினிற்பகலிராவற
நின்றவரன்பினுக்கணியநீளொளி
மென்றளிர்ச்சீறடிவிமலைகைவளைக்
கொன்றழும்பொடுமுலைச்சுவடுகொண்டதே. ௧௮௫

மனத்திடைத்தனதடிநினைந்தமாத்திரை
வினைப்பெரும்பிறவிவேரகழுமெய்யொளி
யனைத்துலகீன்றருளமலைபல்வளை
யினத்தழும்பொடுமுலைச்சுவடுமேற்றதே. ௧௮௬

வடவரைகுழைத்தவோர்பவளமால்வரை
முடிவொடுமுதலிலாமாவின்மூலத்து
மடநடையிளங்கொடிவளைக்கரத்தொடு
குடமுலைக்கம்மவோகுழைந்துமெல்கிற்றே. ௧௮௭

தேவாதியோர்ஒருங்கணைந்துபோற்றல்.

கலிநிலைத்துறை.

அம்பொன்வால்வளைத்தழும்பொடுமுலைச்சுவடணிந்து
கம்பவைப்புடைவாழ்க்கையார்கருணைகூர்ந்தருளி
நம்புமோகையிற்பெருங்களிசிறத்தலுநலமார்ந்
தும்பரிம்பரினுயிரெலாமுவகையிற்களித்த. ௧௮௮

திக்கும்வானமுமாசறத்திகழ்ந்தொளிபடைத்த
தக்கபல்லியமெண்ணிலதழங்கினவிளங்கால்
புக்குமெல்லெனப்புதுமணங்கொண்டெழுந்தசைந்த
விக்கடற்பெரும்புவியெலாமடங்கினதுகள்கள். ௧௮௯

மந்திரத்தழல்வலஞ்சுழித்தெழுந்தொளிதிகழ்ந்த
சுந்தரப்பொலம்பூமழைநிரந்தரஞ்சொரிந்த
சந்தமாமறைத்தனித்தனிமகிழ்ந்தெழுந்தார்த்த
வெந்தவையமுமயலிடையின்றியோங்கினவால். ௧௯0

எங்குமின்னணிகழ்வுழியிருமதக்கலுழித்
துங்கவெண்கரிக்கோமுதல்சுராசுரரெல்லாந்
தங்களின்றுணைக்கிழத்தியர்தம்மொடும்வல்லை
யங்கணைந்தனரகநிறையுவகைமீக்கிளைப்ப. ௧௯௧

புண்டரீகமென்பொகுட்டணைக்கடவுளும்புதுப்பூந்
தண்டுழாய்முடித்தனிப்பெருந்தலைவனுமிருகேழ்
முண்டகத்துறைமுதல்வியர்தமையுடன்கொண்டு
மண்டுபேரின்பங்கிடைத்ததின்றெமக்கெனவந்தார். ௧௯௨

சோதிநாரதன்முதல்சுரர்முனிவரும்வசிட்ட
னாதியாயபல்பிரமநன்முனிவருமளவில்
காதன்முந்துறுகளிப்பொடுங்குழாங்கொடுகரத்தின்
மீதுதண்டமும்வேணி"ம்விளங்கவந்தடைந்தார். ௧௯௩

சத்திமார்திதியதிதிமற்றுறுதக்கன்மக்க
ளொத்தயோகினிப்பகுதியருந்ததியுலோபா
முத்திரைத்திருந்திழையனசூயையேமுதலா
மித்திறத்தவர்யாவருமகிழ்துவந்திறுத்தார். ௧௯௪

சனகனாதியர்தமிழ்முனிதவத்துருவாசர்
முனிவர்சூழுபமன்னியன்முதுதிறற்பூதர்
நனியுருத்திரர்களாதியர்நந்தியெம்பெருமா
னினையர்யாவருமாயிடையொருங்குவந்திறுத்தார். ௩௬௫

நண்ணியாவருநாயகிதழுவிடக்குழைந்த
வண்ணலார்திருக்கோலநேர்கண்டுகண்டார்த்தார்
விண்ணிறைந்தபேரானந்தவெள்ளத்தினிறைந்தார்
கண்ணினாற்பெறுபெரும்பயன்கைவரப்பெற்றார். ௩௬௬

அலர்ந்தவாள்விழியின்பநீர்சொரியநின்றழுதார்
மலர்ந்தகாதலின்வடிவெலாம்புளகங்கண்மலிந்தார்
கலந்தசிந்தையாரருட்பெருங்கருணையேநோக்கிப்
புலந்தழைத்திடச்சென்னிமேலஞ்சலிபுனைந்தார். ௩௬௭

ஆயிரங்கதிராழியங்கடவுளுமயனு
மாயிரம்விழிபெற்றிலேமென்றழுங்கினர்க
ளாயிரம்விழியுடன்முழுதாளியுமமையா
வாயிரங்கணிவ்வற்புதங்காண்பதற்கென்றான். ௩௬௮

இன்னதன்மையின்யாவருந்தொழுதெழுந்தாடி
மன்னுமேழ்கடன்முழக்கெனப்பழிச்சினர்வாழ்ந்தா
ரன்னவர்க்கவணிகழ்ந்தபேரானந்தமிதழிச்
சென்னியாரன்றிமற்றெவர்தெளிதரற்பாலார். ௩௬௯

ஏகம்பர்காட்சிகோடுத்தல்.

அந்தவேலையினிறைவிதனணிவளைத்தழும்பு
சந்தமென்முலைச்சுவடுதோய்தனியுருப்பொலியச்
சுந்தரந்திகழ்சுடரொளியிலிங்கத்தினின்று
முந்துதோன்றினார்மூவருக்கறிவருமுதல்வர். ௪௦௦

தோன்றிவாணிலாக்குறுநகைதோற்றிமீக்கடுக
வேன்றவெள்ளநீர்சுறுவதீர்த்தப்பெயரிசையான்
மான்றுமேதகநிறுவினார்மாதினைத்தழீஇக்கொண்
டான்றகாதலாற்செய்யவாய்முத்தமுண்டளித்தார். ௪௦௧

தோகைமஞ்ஞையஞ்சாயலாய்துளங்கியுள்வெருவே
லோகையுற்றனங்காண்டிநீயென்றுரைத்தருள
வாகையேற்றினார்தம்மணவாளநற்கோல
மேகநாயகிநோக்கினாளிணைவிழிகளிப்ப. ௪௦௨

தழீஇயகைகளைவிடுத்தெழுந்தவனியிற்றாழ்ந்து
குழீஇயவன்பினாலஞ்சலிசென்னிமேற்குவித்தாள்
கழீஇயசெம்மணிவடிவினைக்காண்டொறுமுலவாக்
கெழீஇயகாதலாற்கிளர்ந்தெழுமுவகையிற்றிளைத்தாள். ௪௦௩

இறைவிதோத்திரஞ்செய்தல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அடியவன்பிரமன்காணுநின்மலக்கொழுந்தேபோற்றி
யடியனேற்கபயநல்குமருட்பெருங்கடலேபோற்றி
படிமுதலாறாறாகிவேறுமாம்பரனேபோற்றி
கடிமலர்த்தனிமாநீழற்கடவுளேபோற்றிபோற்றி. ௪௦௪

பெறலரும்பெரும்பேறின்றுபெற்றனனடியேன்போற்றி
முறைமுறையுலகமெல்லாமுகிழ்த்தளித்தழிப்பாய்போற்றி
யறைகழல்கறங்கமன்றினிலைதொழினடித்தாய்போற்றி
நிறைமலர்த்தனிமாநீழனித்தனேபோற்றிபோற்றி. ௪௦௫

தரைபுனலிரவியிந்துதழலுயிர்வளிவானென்று
வுரைபெறுவடிவோரெட்டுமுடையனேபோற்றிபோற்றி
வரையெழும்பரிதிசெந்தீமதியமைவிழியாய்போற்றி
விரைமலர்த்தனிமாநீழல்வித்தகாபோற்றிபோற்றி. ௪௦௬

கறைமணிமிடற்றாய்போற்றிகண்ணினுண்மணியேபோற்றி
மறவியின்வழிபட்டோர்க்கும்வழங்குபேரருளாய்போற்றி
நிறைபரஞ்சுடரேபோற்றிநெஞ்சகவிளக்கேபோற்றி
மறைமுதற்றனிமாநீழல்வள்ளலேபோற்றிபோற்றி. ௪௦௭

முன்னுறுபொருள்கட்கெல்லாமுற்படுபழையாய்போற்றி
பின்னுறுபொருள்கட்கெல்லாம்பிற்படுபுதியாய்போற்றி
புன்மதியாளர்தேறாப்பூரணமுதலேபோற்றி
சின்மயத்திருவேகம்பசிவசிவபோற்றிபோற்றி. ௪௦௮

இறைவன்இறைவிக்குக்கூறல்.

கொச்சகக்கலிப்பா.

என்றுளநெக்குருகியெல்லையிலன்பினளாய்
மன்றன்மலர்த்தொடையல்வார்குழல்போற்றிசெயக்
கொன்றைமுடிச்சடையார்பேரருள்கூர்ந்தருளித்
துன்றியகேண்மையினுன்மற்றிதுசொல்லினரால். ௪௦௯

பொங்கிமணங்கமழப்பூசுநறுங்களப
மங்கலமென்முலையாய்காளிமகிழ்ந்திதுகே
ளங்கணைநின்னொடுநாம்வேறலமாரமுதத்
திங்களும்வெண்ணிலவும்போலுமெனத்திகழ்வேம். ௪௧௦

இலளிதையாம்பெயரான்முன்னிவணெம்முருவிற்
பலர்தொழவந்துலகம்பங்கயனுதியெலா
மலர்தரநல்கினைபின்மற்றொருகற்பமதிற்
சலமறுமெய்ஞ்ஞானசத்தியினீங்கியரோ. ௪௧௧

அந்தணனுக்கருளியாக்கியதுப்புதவிக்
கந்தமலர்க்கடவுள்கான்முளைதன்மகளாய்
நிந்தனைசெய்தவனைநீத்துவரைக்கிறைபால்
வந்துமறித்துமெமையன்பின்மணந்தனையால். ௪௧௨

இத்தகுநீயுலகம்யாவையுமுய்யுமுறை
யத்தனிமந்தரமேல்யாமருளாற்றினிலைஇப்
பொய்த்திறனில்கழுவாயின்றுபுரிந்தனையாற்
கொத்தலர்மென்குழலாய்வேட்டதுகூறுகென. ௪௧௩

இறைவிவரம்பலவேண்டல்.

வன்றனிமால்விடையாய்மந்தரம்வண்கயிலை
வென்றவினைச்சிவலோகத்தினுமேதகவுற்
றென்றுநமக்கினிதாமிந்நகராதலினிங்
கொன்றுநர்யாவர்களுமுத்தியுறப்பணியாய். ௪௧௪

மறந்துமறம்பிற்றாக்காஞ்சிவளம்பதியி
னறிந்துசெய்தீவினையுமன்றியெழுந்தனவும்
பிறிந்துதவப்பயனென்றெண்ணிலவாய்ப்பெருகி
யறம்பொருளின்பமெலாமாகவுநீயருளாய். சுகரு

இங்கிவைவேண்டுமெனக்கெம்பெருமானெனமீப்
பொங்குபெருங்கருணைப்பூரணிவேண்டுதலுஞ்
சங்கணிவெண்குழையார்தந்திருவுள்ளமகிழ்ந்
தங்கலுழ்மேனியினாய்கேளிதுவென்றருள்வார். சுகசு

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எய்சிலைநீள்புருவத்தேந்திளமென்முலையாயெம்மிடையெம்மடியார்
தம்மிடையெய்தலுறச், செய்பிழையன்றிவருந்தீவினையேனையெலாஞ்சீர்
வளர்காஞ்சியினிற்றேய்ந்துதவம்பெருகி, மெய்திகழ்நாற்பயனுமேவநிறி
இயினமால்வேறுமுனக்கினியென்வேண்டுவதென்றிடலு, மொய்யொளி
மேனியினாண்முன்றொழுதேத்தியிளமூரன் முகத்தலரப்பேசுதலுற்றன
ளால்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முதுகுடுமிப்பொலங்குவட்டுமந்தரத்தின்முன்னரெனைக்காளீயென்று
புதுமையுறவிளித்தனையாலதுகேட்டதுண்டிலைபோலிருந்தேனந்நா
ளிதுபொழுதுமிவ்வாறேவிளித்தருளிச்செய்தாய்மற்றிதனைமாற்றி
விதுவணியுஞ்சடையானேகவுரநிறம்பெறவேண்டுமருளாயென்றாள்.

ஆண்டகையாரதுகேளாக்குறுமூரன்முகத்தரும்பவருளிச்செய்வார்
மாண்டவலித்தயித்தியராலலைப்புண்டதிவ்வுலகம்வாழ்வானெண்ணி
யீண்டுமுனையவ்வாறுவிளித்தேமிக்கருங்கோசமின்னேமாற்றி
வேண்டியவாகவுரநிறம்பெறுதிநீவிண்டிடுமக்கோசந்தன்னில்.

கூற்றமுறழ்சும்பனையுநிசும்பனையுங்கொலைசெய்யக்குறுகாருட்கத்
தோற்றுதிறற்கவுசிகியாந்துர்க்கையினிதவேதான்றுமிதோகாண்டியென்றார்
கோற்றொடியுமக்கணமேவரியரவின்மூதுரிபோற்காளமேனி
மாற்றினண்மணிக்கவுரவுருப்பெற்றாள்காதலரைவணங்கிச்சொல்வாள்.

நாதனேநின்னருளாலிப்பொழுதேநவைக்காளவடிவமாற்றிக்
காதல்புரிகவுரியெனவயங்குற்றேனுதலினிக்காஞ்சிமாடே
மாதரொடுவானவர்தங்குழாநெருங்கப்பனிவரையினிகழ்ந்தவண்ண
மேதகையகடிமன்றலெமக்கிந்நாளுண்டாகவிழைகினறேனல்.

உருத்திரர்கள்கணநாதர்பலவேறுகடவுளர்களுவணவூர்தி
மருத்தமலரணைப்புத்தேளெந்தவித்தமாதவர்மற்றுள்ளோர்யாருங்
கருத்துவகையுறத்தத்தம்பன்னிகளோடிங்கெம்மைக்கண்ணிற்காணு
மருத்தியினாலொருங்கணைந்தாரண்ணலேயருளென்றுபின்னும்வேண்டும்.

இவ்வதுவைகவுரிதிருக்கலியாணமென்றுலகின்வழங்கவேண்டுஞ்
செவ்வியுறவையாட்டின்டக்கன்னியெனயானீங்குச்சிறந்தவாற்றாற்
பௌவநீரகல்வரைப்பிற்பைப்பாந்தண்மணியல்குற்பணைத்தோண்மாத
ரெவ்வெவருமையாண்டிற்கன்னியர்கள்கவுரியரென்றுதல்வேண்டும்.

ஏராருமையாண்டிற்கன்னியரைச்சைவநெறிமறையோர்க்கீயுஞ்
சீராளர்குலமுதலோர்சிவலோகந்தனிற்சிவணப்பெறவும்வேண்டுங்
காராருமணிமிடற்றாயெனத்தொழுதுவணங்குதலுங்காமற்காய்ந்த
பேராளர்திருவுள்ளஞ்செய்தருளிப்பெருங்கருணைகூர்ந்துசொல்வார்.

இறைவனிறைவிக்கதளல்:

திருத்தகுவண்காஞ்சிதனிலாண்டுதொறும்பங்குனியுத்திரநாள்யார்க்கு
மருத்திபுரிதிருவிழாநிகழ்ந்திற்றின்வதுவைநமக்கமைவதாகப் வக்
பொருத்தமுறக்காண்டியெனத்தமிழ்முனிக்கன்றருள்புரிந்தேமதனுற்பா
கருத்துடைக்கும்பிலத்தயலேயாண்டுதொறுங்கடிநமக்குநிகழ்வதாக.

கல்யாணமண்டபத்தினுனக்குரிமைத்தொழின்மறையோர்கள்ளிசெய்ய
வெல்லாருமிதுகண்டுகளிப்புறுகவின்னுமுனக்காண்டுதோறு
நல்வாய்மையறம்வளர்க்கும்வித்தாநெல்விருநாழிதருகேமந்த
நெல்லாலேயிகபரத்துமுயிர்ப்பையகூழ்தழைகவெனவிறுவல்செய்தார்.

அவ்வண்ணம்பெறலரியபெருவரங்களளித்தருளியகிலமீன்ற
மைவண்ணக்கருங்கூந்தன்மனக்கருத்துமுற்றநெடுமலயவாழ்க்கை
மெய்வண்ணக்குறுமுனிவன்றவப்பேறுநிரம்பவியனுலகம்வாழச்
செவ்வண்ணப்பெருமானுர்மணவினையிற்றிருவுள்ளம்பற்றினுரால்.

தழுவக்குழைந்தபடலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உசசகூ.

திருமணப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விண்டாழ்மாவின்முளைத்தெழுந்தவிமலனுர்தந்திருமேனி
தண்டாவன்பினுமையம்மைதழுவக்குழைந்தவாறுரைத்தா
மண்டாணவத்தின்றருக்கிரித்துமாருவின்பப்பெருவாழ்வு
கண்டார்கதுவவருள்கொழிக்குங்கவுரிமணத்தின்றிறம்புகல்வாம். க

இறைவன்கட்டளைப்படிவிண்டுபணிசெயல்.

திருவேகம்பத்தமர்ந்தருளுந்தேவர்பிரானுர்புடைநின்ற
மருவார்துளபத்தொடைமவுலிமாயோன்றன்னையெதிர்நோக்கிக்
கருவார்கூந்தற்றடங்காமக்கண்ணிதனக்குமற்றெமக்கும்
பெருவாய்மையினுற்கடிவிழாத்திருநாள்பிறங்கப்புரிகென்றுர் உ

பல்லார்நிற்பத்தனைநோக்கிப்பணித்தகருணைத்திறம்போற்றிப்
புல்லார்வெருவுந்தனித்திகிரிப்புத்தேளோகைதலைசிறப்பச்
சொல்லாற்றெருழுகிமணவெழுச்சித்தொழிலின்மூண்டுவேண்டுவன
வெல்லாப்பொருளுங்கடிதீங்குக்கொணாகென்றிமையோர்தமைவிடுத்தான். ௩

தொடியார்தழம்பிற்பெருந்தகைக்குந்தோகைதனக்குங்கலியாணங்
கடிமாநகரமுழுதறியக்கறங்குமுரசமறைவித்துக்
கொடிநீண்மாடமாளிகைசூழ்கடிமண்டபமுன்கோடிப்ப
நெடுமால்விசும்பின்யவனரைக்கூய்ப்பணித்தானவருநிருமித்தார். ச

கலியாணமண்டபவலங்காரம்.

கலிவிருத்தம்.

அகனிலம்பசும்பொனினமைத்தொராயிரப்
பகலொளிமழுங்குசெம்பவளத்தூணிநீஇ
யுகுமொளிமரகதப்போதியும்பர்வைத்
திகலறவயிரவுத்திரமுமேய்வித்தார். ரு

உருக்கியசெழும்பொனின்மணிகளொன்பது
நெருக்குறப்பரப்பியோவியநிகழ்த்திய
திருக்கிளர்பலகைமேலிணக்கித்தெள்ளொளி
பெருக்கும்வெண்பளிங்கினூற்பித்தியாக்கினர். சா

மேனிலைமாளிகைவேதிசூளிகை
யேனவும்பலபலவியற்றிமேவர
வானெழுமிருசுடர்மணிகளாதியா
லூனமில்சிகரமுழும்பர்ச்சூட்டினர். எ

காவியங்கண்ணியர்விழையுங்காமுக
ராவியுஞ்சிந்தையுமழியவேக்கற
வோவியத்தொகையெலாமும்பர்மாதர்போற்
பாவியல்பாடலிற்பயிலச்செய்தனர். அ

வரையினின்றிழிதருமாலைவெள்ளநீ
ரருவியென்றயிர்ப்புறவலங்குநித்திலக்
குருமணிவடமொளிகொழிக்குஞ்சுற்றெலா
நிரைநிரையாத்துமண்ணீவநாற்றினர். கூ

மணிவடக்கிடையிடைமறுவில்கண்ணடி
தணிவறவொளிவிடுந்தவளச்சாமரை
பிணிமலர்த்தொத்துவண்பிரசப்பல்கனி
யணிபெறமுறைமையினலங்கத்தூக்கினர் க0

நெட்டிலைக்கதலியுநீலப்பூகமு
மட்டிமிழ்கன்னலும்வானிற்றுருவும்
விட்டொளியெரித்திருள்விழுங்குதூண்டொறுங்
கட்டினர்மலர்கனிகாய்களினவே. கக

கொடிகளுந்தாருவுங்கோணைப்பொய்கையும்
வடிவுடைக்கிளிபுறமஞ்ஞைறுமற்றவுஞ்
சுடர்பலநிறங்களுந்தொகுத்துலேகித்த
விடுகதிர்ப்பட்டினூல்விதானஞ்செய்தனர். கஉ

முத்தொளிமாலையுமூரிப்பன்மணிச்
சித்திரமாலையுஞ்செம்பொனூற்செயுந்
தத்தொளிமாலையுந்ததைந்துவண்டிலாந்
தொத்தலர்மாலையுந்துவன்றத்தூக்கினர். கங

நாப்பணினெம்பிரானங்கையோடுறை
பூப்பொலிமணியணைபொருத்திப்பாங்கெலா
மூப்புடைவிண்ணவர்முனிவர்வைகிட
வேற்புடையணைகளுமிட்டுவைத்தனர். கச

குண்டமும்வேதியுங்கோலமார்தரு
மண்டிலவகைமையுமற்றுமோர்பெற
விண்டவர்புரமடுமவிமலர்நூன்முறை
யண்டருமுனிவருமயிர்ப்பச்செய்தனர். கரு

கொங்குயிர்சந்தனக்குறடுகொழுகில்
குங்குமங்கருப்புரங்குரவமான்மதம்
வெங்கடிகமழ்தரப்புகைத்துமேதக
வெங்கணுமையவிசிதறியேர்செய்தார். ௧௬

பாங்கெலாம்பனிமலர்ப்பந்தர்கட்பொறி
வாங்கியவெழில்பெறவகுத்துமாமணம்
வீங்கியநானநீர்துவற்றிநித்தில
மாங்கவாலுகமெனவகம்பரப்பினார். ௧௭

பந்தரின்புடையெலாம்பங்கயப்புன
லந்தராராட்டயரலங்கற்பொய்கையுஞ்
சந்தனங்கற்பகந்தருக்கண்மல்கிய
சுந்தரப்பொழில்களுந்துவன்றச்செய்தனர். ௧௮

வேறு.

யவனர்தந்தொழிலித்திறமாகமற்
கவுரிமன்றலெனக்கறங்கும்பணைச்
சிவமலிந்தசெழுங்குரல்கேட்டலு
முவகைபூத்தனரொண்ணகர்மாக்களே. ௧௯

நகராலங்காரஞ்செய்தல்.

இயங்குமாந்தர்நெருக்கினிலிற்றுவீழ்
தயங்குகாழ்களுந்தாரும்புல்லியின்
முயங்குமாதருகுத்தவுமொய்த்தொளி
வயங்குவீதியிற்குப்பைகண்மாற்றுவார். ௨0

சந்தமல்குதமனியச்சுண்ணமுஞ்
சுந்தரக்கருப்பூரத்துகள்களுங்
கந்தநீரிற்கரைத்துமறுகெலாம்
பந்திநூட்டிப்பனிப்பர்களென்பவே. ௨௧

வண்டுலாமலர்வார்மணிப்பந்தரு
விண்டுறாவுபதாகையும்வின்மணி
கொண்டதோரணக்கூட்டமும்யாணரிற்
பண்டையுள்ளனபாற்றியியற்றுவார். ௨௨

தாமநாற்றித்தமனியவேதியிற்
பூமெனீர்நிறைபூரணகும்பமுங்
காமர்பாலிகையுங்கதிர்த்தீபமுந்
தூமமுந்தொகுப்பாரிட்டந்தோறுமே. ௨௩

நித்திலத்திணைநீற்றுபுவேதியிற்
சித்திரித்துச்செழும்பொனின்மாளிகைப்
பித்தியோவியம்பெட்பப்புதுக்குவார்
பத்திமாடம்பழுதொழித்தாக்குவார். ௨௪

இருகவுட்டுளையிர்ங்கலுழிக்கடக்
கரிகள்பண்ணுவர்கால்விசைத்தோடுவாம்
பரிகள்பண்ணுவர்பார்குழியாழியி
னிரதம்பண்ணுவரெங்கணுமெண்ணிலார். ௨௫

நீண்டபொன்னிலத்தேர்கணிறுத்துவார்
மாண்டதூண்டொறும்வாருறைசேர்த்துவா
ரீண்டுவார்கட்கிடம்பலவாக்குவார்
வேண்டியார்க்கும்விருந்துதிருத்துவார். உசு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கச்சிமாநகர்முழுவதுமின்னணங்கவின்பயில்சிறப்போங்க
முச்சகத்தவர்குழாங்கொடுவயின்ஞெறுநிறைந்திடமுடிவானோ
ரிச்சையாற்றினின்மணவினைக்குரியவையெங்கணுங்கொணர்ந்தீண்டப்
பொச்சமில்பெருமங்கலத்தொழுனியிற்பொலிவுறுமுதுகாலை. உஎ

விண்டுதிருவிழாவியற்றல்.

கம்பநாயகன்றிருவருள்பெற்றுவெண்கதிர்வளைக்கரத்தோன்ற
லம்புயத்தவன்முனிவரர்தம்மொடுமெணிபெறுநன்னாளாற்
செம்பொன்மாமணிப்பாலிகைமுளைவித்திச்சினவிடைக்கொடியேற்றி
யெம்பிரான்மலைமாதுடனுலாத்தருந்திருவிழாவெழுவித்தான். உஅ

ஒன்பதிற்றுநாள்விழாவணிநிகழ்ந்தபினுற்றவீரைந்தாநா
ளின்பமீக்கொளப்பங்குனியுத்திரத்திமையவர்குழாத்தோடு
மன்பதைத்திரண்மகிழ்ந்தெழுந்தார்ப்புறமணவினைக்கவின்கொள்வா
னென்பணிப்பிரான்மஞ்சனச்சாலையினினிதெழுந்தருளுற்றான். உகூ

இறைவன்மணக்கோலங்கோளல்.

வேறு.

திருத்துயிலகலப்புத்தேள்செய்தவப்பேறுவாய்ந்து
மருத்தபூங்கடுக்கைவேணிப்பராஞ்சுடர்வடிவந்தீண்டிப்
பெருத்தபொற்குடத்துத்தெண்ணீர்மஞ்சனம்பிறவுமாட்டி
யருத்திகூரன்பினுண்ணூலறுவையொற்றுடைசாத்தி. ௩0

கற்பகமளிப்பவாய்ந்தகைபுனைந்தியற்றல்செல்லா
வெற்படுநுழைநூற்பட்டினிலங்கவுள்ளாடைசாத்தி
யற்பகவிமைக்குஞ்செம்பொனுடைமற்றதன்மேற்காமர்
விற்படுபுருவமாதர்விழியிணைகவரச்சாத்தி. ௩க

தனிவிரைப்பனிநீர்வாக்கித்தேய்த்தசந்தனப்பூஞ்சேறு
நனிமணம்பயில்கற்பூரங்குங்குமநறுங்கத்தூரி
யினியமான்மதமேமற்றுமட்டித்தகலவையெண்டோட்
கனிமொழிபாகன்மேனிகமழ்தரமெழுகிக்கீறி. ௩உ

சுடர்த்திருமேருவெற்பிற்சூன்றனர்நுண்ணிதாகப்
பொடித்தபொற்சுண்ணந்தெய்வப்பூந்தருமலரின்வாங்குங்
கடித்திரட்சுண்ணத்தாதிற்கலந்துமேலட்டிவாச
மடுத்தெழுந்தூமமீரம்வறலுமாறன்பினேற்றி. ௩௩

அரிக்குரற்சிலம்புபோற்றுமடியவர்மலங்கண்மூன்று
மிரிக்குஞ்செங்கமலப்பாதத்திணக்கிவல்லிருளையெல்லாம்
பொரிக்கும்விற்பிழம்புகாலும்பொலங்கழனரலவீக்கிப்
பரிக்கும்பட்டுடைமேலொண்கல்பதித்தபொன்னரைநாண்சாத்தி.

கதிரும்மிழ்பதுமராகவுதரபந்தனங்கால்யாத்துப்
புதியநித்திலப்பூங்கோவைபொன்னரிமாலைதண்டா
ரெதிரறுசன்னவீரமிலைமுகப்பைம்பூண்முந்நூன்
முதலியமார்பின்வார்ந்துமுதிரொளியெறிப்பச்சாத்தி. ௩௫

மணிவடங்கழுத்திற்சாத்திவாள்கிடந்திமையாநிற்கும்
பணியுமிழ்மணியிற்செய்தவாழிபல்விரலுங்கோத்துத்
திணிவயிரத்திற்செய்தகடகங்கூர்ப்பரத்துச்சேர்த்துத்
துணிகதிர்முத்திற்செய்தவங்கதந்தோளிற்பூட்டி. ௩௬

மாதர்வண்குழையுந்தோடும்வார்ந்திருபுயத்துநீவக்
காதிடையணிந்துசெம்பொற்கதிர்மணிப்பட்டநெற்றி
மீதுறவிசித்துத்தெய்வவிற்குலாமணியின்மோலி
போதமல்வேணிச்சென்னிபொலிதரக்கவித்தான்மன்னே. ௩௭

திருவணியணிந்துபோற்றிச்சிவபிரானெழுந்துகும்ப
மிருகயல்கவரிதோட்டியிலங்குகண்ணடிபதாகை
முரசொளிவிளக்கினோடுமுன்னிவிண்மகளிர்போற்றப்
புரிமணிமண்டபத்திற்புகுந்துபூந்தவிசினேறி. ௩௮

உருத்திரர்முதலோர்தத்தமொண்டவிசிருக்குமாறு
திருத்தருகடைக்கணோக்கஞ்செய்துவீற்றிருந்தபின்னர்
விருத்துவண்டமிழ்தப்பாடல்விளரியாழ்முரன்றுசேக்கு
மருத்துழாய்ப்படலைத்தண்டார்வயங்கியமருமப்புத்தேள். ௩௯

இறைவிமணக்கோலங்கோளல்.

மனைக்குரிமரபின்வாசமலர்மகள்வதனநோக்கிக்
கனைக்கும்வண்டிழக்குமென்பூங்கருங்குழற்கவுரிமாதா
தனைக்கலன்றிருந்தப்பூட்டித்தம்மெனவுரைத்தலோடுஞ்
சுனைக்கருநீலக்கண்ணாள்பெருங்களிதுளும்பச்சென்றாள். ௪0

உவளகவரைப்பினெல்லாவுபகரணமுங்கொண்டுற்றுப்
பவளநீள்பலகைமீதுபகிரண்டமுழுதுமீன்றுந்
துவளிடைக்கன்னியாகித்தூநலங்கனிந்தகாம
ரவளைநன்கிருவிக்கூந்தலவிழ்த்துநெய்யள்ளிச்சாத்தி. ௪௧

நெல்லிநுண்விழுதுமஞ்சள்விழுதுமெய்நிரம்பப்பூசி
மல்குபேரன்புகூரவாசமுந்துவருமற்று
நல்லவைநயப்பச்சேர்த்திநறுவிரைத்தூநீராட்டி
யெல்லுமிழ்குழையாண்மேனியீர்ம்புலரல்வறலவொற்றி. ௪௨

நனைமுறுக்கவிழ்பூங்கற்பநல்குபட்டாடைசாத்திப்
புனைமணித்தவிசினேற்றிப்பொருந்தலர்வெருவச்சீறு
முனைமதக்களிநல்யானைமூரிவெண்கோட்டிற்செய்த
தனைநிகர்சீப்புக்கொண்டுதாழ்குழலொழுங்கநீவி. ௪௩

வம்பவிழ்நானம்பூசிமான்மதமகில்சந்தாதி
யம்புறப்புகைத்ததூமம்பரிமளங்கமழவூட்டி
யம்பொன்வாய்மகரந்தாழுமண்ணுறுத்தளிந்தபெண்ணைப்
பைம்பழமென்னமுச்சிபசும்பொன்வார்நாணிற்சேர்த்தி. ௪௪

நகுசுடர்முத்தமாலைக்கொத்துநான்றெருத்தினீவித்
திகழொளிவிரிப்பவங்கேழ்முச்சியிற்செருகிவாச
முகையவிழலங்கல்சூழ்ந்துமொய்கதிர்கைமாலை
தொகுமணிமாலைகூந்தற்பரப்பினிற்சுடரப்போக்கி. ௪௫

ஒழுகொளிபரப்புந்தெய்வவுத்தியுமயிலுமிக்க
வழகுறவணிந்துநாப்பணை துறுகீற்றின்வெய்யோன்
மழகதிர்கிடந்ததென்னவயங்குகுங்குமத்தூளட்டிப்
பொழிகதிர்மாசைப்பட்டம்பொலியவாணுதலில்வீக்கி. சசு

சிந்துரஞ்சேறுசெய்ததிருந்தெழிற்றிலகமிட்டுக்
கந்தமென்குவளைநோக்கினஞ்சனங்கவினத்தீட்டிக்
கொந்தொளிமுகத்திருசித்திருவணிகொளுவிக்காதி
னந்தமுன்மணியின்றோடுமெவிர்கதிர்க்குழையுஞ்சாத்தி. சஎ

விலகிவில்லுமிழுங்கட்டுவடத்தினையிடற்றிற்சூழ்ந்து
நிலவுமிழ்மணியிற்செய்தவங்கதநெடுந்தோள்சாத்தி
யிலகொளிவாய்ந்தமுன்கைக்கடகமுந்தொடியுமேற்றி
யலர்கதிர்மோதிரங்கள்வார்விரலமையக்கோத்து. சஅ

மிகக்கடிகமழ்ந்தசாந்தால்வெரிந்புறமெழுக்கிக்கையி
னகத்திறு வெழுதிச்சாலநறுவிரைக்களபச்சேறு
முகைத்தனம்புகையக்கொட்டிமுருகுயிர்பூந்தாதப்பிப்
புகைத்துஞ்சாந்தாற்றிக்கொண்டுவீசியும்புலர்த்திப்பின்னர். சகூ

நித்திலமாலைதுப்புநிரைத்தபூந்தொடைமாணிக்கக்
கொத்துறுதாமம்பச்சைக்கோப்பமைந்தெரியல்வேரித்
தொத்தலர்ப்பிணையல்செம்பொற்சுடர்விரிதொடலையேனைத்
தத்தொளிநீலக்கோதைதன்கதிரெறிப்பச்சாத்தி. ருo

எரிச்சிகையெழுவதென்னவிளங்கதிர்விரிக்கும்மைவா
யரிச்சிகைமணிகளாதியமுகுறக்கோத்தகாழின்
விரிச்சிகைகலாபங்காஞ்சிமேகலைபருமமைந்துங்
கரிச்சிகைமத்தகத்துக்கடிதடம்புலம்பச்சாத்தி. ருக

அலம்புகிண்கிணிமின்காலுமவிர்பரியாகஞ்செம்பொற்
சிலம்புபாடகமென்றின்னபுறவடிதிகழச்சாத்தி
நலம்புனைசெய்யபஞ்சினறுங்குழம்பலர்ந்தகஞ்ச
மிலம்படச்சிவந்ததாளிணுட்டினளிறைஞ்சிநின்றாள். ருஉ

இறைவி இறைவனிடம் எழுந்தமர்தல்.

கலிவிருத்தம்.

தூக்குழலுமைதிருவடிவிற்றன்னலான்
மாக்கவின்மிகுமணிவனப்புநோக்குதோ
றீக்கணமுரண்மலரேழையிதியா
ளுக்கியவணிகொலென்றயிர்ப்புமேயினள். ருங

விண்ணரமடந்தையர்பலரும்வேற்றடங்
கண்ணிணைக்கவர்பெருவனப்புக்காண்டொறு
மெண்ணருங்களிப்பினரெம்பிராட்டியைப்
புண்ணியச்சோபனம்புகன்றுவாழ்த்தினர். ருச

நங்கையுநறைகமழ்களினப்பாவைதன்
பங்கயமலர்க்கரம்பற்றியாங்கெழுந்
தெங்கணுமலர்மழையிறைப்பவானவர்
மங்கலவாழ்த்தொலிமல்கப்போந்தனள். ருரு

நிழலுமிழ்மணிக்குடை நீண்டகேதனந்
தழையொளிக்கவரிசாந்தாற்றியாதிய
மழைமதர்க்கண்ணரமகளிரேந்தியே
விழைதகுதொழின்முறைவிளைத்துடன்செல. ௫௬

பாவியவாடைமேனடந்துபைப்பய
மாவணிமணவினைமண்டபத்திடைப்
பூவணைமிசைப்பொலிபுனிதன்பாங்கரி
னேவியக்கொழுந்தெனவுற்றுவைகினள் ௫௭

திருமணம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருத்தகுமணைமேலண்ணலணங்குடன்றிகழநோக்கி
யுருத்திரர்முதலோர்யாருந்தொழுதெழுந்துவகைபூத்தார்
மருத்துழாயலங்கன்மார்பன்மலரடிவிளக்கப்புக்கான்
பெருத்தபல்லண்டமொன்றாய்ப்பிளந்தெனவியங்களார்த்த.

பொலம்புனைகரகத்தீம்பால்பூமகள்வணங்கிவார்ப்ப
வலம்புரிகரத்தோனையன்மலரடிவிளக்கிப்போற்றி
யிலங்கொளிப்பட்டாலீரமெல்லெனப்புலர்த்தியேந்து
மலங்கொளிப்பாததீர்த்தம்பருகினனுர்வங்கூர. ௫௯

கன்னனெய்கனிபாலின்னகமழ்மதுப்பருக்கநல்கி
யென்னையாளுடையகோமானேடவிழ்கமலச்செங்கை
தன்மிசையுலகமீன்றதனிமுதற்பிராட்டியான
கன்னிகைவைத்துநீர்பெய்தளித்தனன்கமலக்கண்ணன். ௬௦

கலிவிருத்தம்.

ஆர்த்தனபணிலங்களார்த்ததுந்துமி
யார்த்தனபல்லியமார்த்தமங்கல
மார்த்தனநான்மறையார்த்தவாகம
மார்த்தனபல்கலையார்த்தவாழ்த்தொலி. ௬௧

பொழிந்தனர்வானவர்கற்பகப்பூமழை
வழிந்தனபாடலின்மதுரத்தேமழை
யிழிந்தனவடியவரிணைக்கணீர்மழை
யழிந்தனவினையெலாமனையகாலையின். ௬௨

பங்கயக்கிழவனைப்பகர்ந்தநூன்முறை
செங்கனல்வளர்ப்பவங்கருளிச்சேவுடை
யங்கணன்மலைமகண்மிடற்றிலாருண்
மங்கலநாணினைவயங்கச்சாத்தினன். ௬௩

முண்டகக்கட்வுளுமுதல்வனுணையுட்
கொண்டுவேதாகமக்குறிவழாவகை
மண்டியகொழுங்கனல்வளர்த்துவாசநெய்
மொண்டுதூய்க்கடிவினைமுற்றச்செய்தனன். ௬௪

மாண்டசெந்தமிழ்முனிமனக்கருத்தொடு
காண்டகுகவுரிதன்கருத்துமுற்றின
வேண்டியவேண்டியாங்களிக்குமெய்யரு
ளாண்டகைவிளக்கினன்போலுமற்றைநாள். ௬௫

கலிநிலைத்துறை.

திருமணத்திறங்கண்டவர்யாவருஞ்செழுந்தேன்
பருகுவண்டெனவானந்தவெள்ளத்திற்படிந்தா
ருருகியேத்தினர்கையிணையுச்சியிற்குவித்தா
ரிருகணீர்மழைத்தாரையின்மூழ்கியின்புற்றார். சுசு

மலைக்கொடிக்குறுகவுரமெய்வடிவும்வள்ளலுக்கு
முலைச்சுவட்டொடுவளைத்தழும்பணியுமுன்னேக்கிச்
சிலைத்தடம்பனிவரைமிசைத்திகழ்மணக்கோல
நிலைக்குமற்றிதுவேற்றமிங்கெனநெடிதுவந்தார். சுஎ

அலகிலோகையிற்றிளைப்பவிப்பெரமக்களித்த
மலையமாமுனிவாழியவாழியென்றுரைத்தார்
குலவுமங்கலம்பாடினராடினர்குழைந்தார்
தலைவிபாகனுமவரவர்தமக்கருள்வழங்கி. சுஅ

இறைவன்திருவுலாப்போதல்.

எட்டுமாதிரக்கரிகளுமுடல்பனிப்பெய்த
நெட்டுயிர்ப்பெறிமதுகைவெள்விடைமிசைநீல
மட்டுலாங்குழன்மடவரலொடுமெகிழ்ந்தேறிச்
சிட்டர்போற்றிடமறுகிடைத்திருவுலாப்போந்தான். சுக

பிளிறுவெம்மதயானையின்வெரிந்தலைபிணித்த
குளிறுவார்மணிமுரசொடுகொக்கரைமுழவ
மொளிறுமாமுடிவானவரியங்களுமொருங்கே
களிறுதாங்குமெண்டிசைகளுஞ்செவிடுறக்கறங்க. எ0

வாணிகோன்பணிபானுகம்பப்பெயர்வயவன்
வாணிலாவளையாயிரம்வாயில்வைத்தூத
வாணனுயிரங்கரங்கொடுமணிமுழாமுழக்க
மாணமத்தளமாதவன்மத்தளமெழுப்ப. எக

காமனோக்கியைமணம்புணர்காதலன்வந்தான்
பூமுலைச்சுவடணிந்தருள்புண்ணியன்வந்தான்
யாமெலாமுய்யவந்தவன்வந்தனனென்றுத்
தாமநித்திலச்சின்னமுங்காளமுந்தழங்க. எஉ

கீதவேய்ங்குழல்யாழிசையெங்கணுங்கிளர
வேதவோசையுமாகமமுழக்கமும்விம்ம
மாதர்நாடகநூன்முறைமடந்தையர்நடிப்பப்
பேர்தவிண்ணவர்பூமழைவியசிலம்போர்ப்ப. எங

வீதிவாய்த்திருவிழாவணிதொழுதிடப்போந்த
பேதில்பேரிளம்பெண்முடிவாயபல்பருவ
மாதர்யாவருநாமெனுடுவளைகலைதோற்றுக்
காதல்வேள்சிலைப்பூங்கணைமாரியிற்குளிப்ப. எச

புதியசாமரைவெண்குடைபூங்கொடிமிடைய
வெதிரில்கொள்கையினகர்வலங்கொண்டெழுந்தருளி
மதுரமென்மொழிமங்கலவாழ்த்தொலிமலியக்
கதியிலார்க்கெலாமின்னருட்காட்சிதந்தளித்து. எரு

இறைவன்தேவர்கட்குவரமருளல்.

மீண்டுகோயிலினுள்ளெழுந்தருளிமெல்லணைமேன்
மாண்டமெல்லியற்பனிவரையணங்கொடும்வைகி
யாண்டுநின்றமாலயன்முதல்யாரையுநோக்கி
யீண்டுநீர்வரம்வேண்டுவகொண்மினென்றிசைத்தான். எசுா

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருமுதுகுரவர்பாதமிமையவர்வணங்கியிந்தத்
திருமணங்காண்டல்பெற்றேமுய்ந்தனந்திரைநீர்வைப்பின்
மருவினர்வதுவைசெய்யுமிடந்தொறுமன்னியாங்காங்
கிருநலமுதவல்வேண்டுமிவ்விருவீருமென்றூர். எஎ

இவ்வரமளித்தேங்காஞ்சியிருநகர்காவல்பூண்டு
செவ்வனிங்குறைமினென்றுசிவபிரான்பணித்தலோடு
மவ்வருள்சென்னிமேற்கொண்டகமகிழ்ந்திமையோரெல்லாங்
கௌவைநீர்காஞ்சிமூதூர்காவல்கொண்டிருந்தாரங்கண். எஅ

அரந்தைதீர்கவுரிகூற்றிற்றோன்றியவணங்குமென்னை
வரைந்துகொண்டருண்மோவென்றுவணங்கிநின்றிரப்பவங்நாட்
கரந்தைவார்சடையோன்மன்றன்முடித்துநீகச்சிமூதூர்
புரந்திவணுறைதிதற்காயென்றருள்புரியப்பெற்று. எகூ

கவுசிகேச்சரம்.

கன்னிகாப்பெனும்பேரெய்தக்கவுசிகிமடந்தைகாஞ்சிப்
பொன்னகர்காவல்பூண்டுபொங்கொளிகவுசிகேசன்
றன்னையங்கிருவிப்பூசைதழைத்தபேரன்பினூற்றி
யின்னறீர்ந்துலகமுய்யவிருந்தனளிருக்குநாளில். அ0

சும்பனேநிசும்பனென்போருலகெலாந்துளக்கநோக்கி
யம்புயக்கடவுள்போந்தங்கண்ணலுக்கியம்பிவேண்ட
வெம்பிரானருளாற்கன்னிவிந்தவெற்பெய்திவைகி
வெம்புவாளவுணர்தம்மைச்செகுத்துமீண்டினிதுவாழ்ந்தாள். அக

பகர்பெருவளஞ்சாலிந்தமன்றலைப்பண்புகூற
வகனமர்ந்தேத்தினோர்கள்கண்டவராறையக்கேட்டோர்
தகவுறநினைந்தோரெல்லாந்தையலார்மன்றல்வாய்ந்து
புகலரும்பரமானந்தமன்றலும்பொருந்திவாழ்வார். அஉ

திருமணப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உருகக.

விம்மிதப்படலம்.

கலிநிலைத்துறை.

சாமகண்டர்தம்மாணையாலகிலமுந்தழைப்பக்
காமநோக்கியெண்ணுன்கறங்கரிசறவளர்க்கு
நாமநீர்வயற்கச்சிமாநகர்வயினளவில்
சேமவிம்மிதமுள்ளனசிலவெடுத்திசைப்பாம்.

தெள்ளொளிக்கதிர்ப்பன்மணித்திரளெலாஞ்செறியப்
பள்ளநீர்க்கடலாகரமாகியபரிசின்
வெள்ளவேணியரருளினுலற்புதவிளைவென்
றுள்ளவைக்கெலாமுறைவிடமாயதுகாஞ்சி. ௨

பலவற்புதவிலிங்கம்.

தீண்டில்யாவையுஞ்செய்யபொன்னுக்குவதிறலின்
மாண்டசித்தர்களெண்ணிலர்வழிபடப்படுவ
வேண்டிலென்னவுமளிப்பனமெய்த்தவமுடையோர்
காண்டகும்பலவிலிங்கமக்கடிநகருளவால். ௩

ஒருதனிப்பொருளிருதிறனுகியுவ்விரண்டு
மொருமையுற்றிடும்வியப்புமங்குள்ளதுவிரிக்கி
லொருபரம்பொருள்சிவனெடுசத்தியென்றிரண்டா
மொருமையுற்றிடுமுமையவள்கம்பரைத்தழுவி. ௪

இருமையோர்பொருளெண்ணிலவாதலுமெண்ணில்
பொருள்களொன்றெனத்திகழ்தலுமுடைத்ததுபுகலி
னொருசிவச்சுடர்பற்பலவடிவுகொண்டுறையு
மருவுபன்மறையொருதனிமாவெனவயங்கும். ௫

பன்னிரண்டுவற்புதம்.

மற்றுமூன்றிடம்வேதிகைவயல்கணூற்றவிசு
பொற்றவைந்தருத்தடமறுபுட்களேழ்பொதியில்
பற்றுமெண்பொய்கையொன்பதுசிலைபொழில்பத்தாங்
கொற்றமன்றுபத்தோடொருகூவலுங்குலவும். ௬

மூவகைத்தானம்.

ஒன்றுபல்பவத்தாதையர்க்காட்டிடுமொளிசே
ரொன்றுபல்பவத்தாயரைவேண்டுறிற்காட்டு
மொன்றுபல்பவக்கிளைஞரோடுரைபயில்விக்கு
மென்றுமூவகைத்தானமவ்விருநகருடைத்தால். ௭

மூவகைத்தெற்றி.

ஊங்கணேந்தவர்க்கமுதுநீருதவிடுமொன்று
பாங்கின்வேட்டனயாவையும்பயந்திடுமொன்று
மூங்கைபேசவும்பேசினேன்மூங்கைமையுறவு
மாங்களிப்பதொன்றுகமுத்தெற்றியுமுளவால். ௮

மூவகைவயல்.

மீளமீளநெல்லரிதொறும்விளைவதோர்பழன
நாளின்வித்துமன்றேபயனல்குமோர்கழனி
தாளினேருழவின்றியேதரும்பயிர்விளைக்குங்
கோளதொன்றெனவயல்கண்மூன்றுள்ளனகுறிக்கில். ௯

மூவகைத்தவிசு.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தன்பகுப்பின்மூவரொடுமுனிவர்விண்ணோர்பழிச்சிடவாழ்சதுமுகனேக்காட்டுமொன்று,தன்பகுப்பின்மூவர்திருமுதலோர்சூழுந்திருமாலைச்சார்ந்தோர்க்குக்காட்டுமொன்று, தன்பகுப்பின்மூவரொடுகணங்கள்போற்றுந்தழற்காலருத்திரனேக்காட்டுமொன்று, தன்பகுப்பின்மூர்த்திகளோடென்றூழ்காட்டுந்தவிசொன்றுமடங்கலணைநான்குமன்னும். ௧0

ஐவகைத்தரு.

ஓவாமையமிழ்தொழுக்கும்பொலம்பூச்சூதந் தன்னிழலேப்பிறர்க்கு தவாக்காஞ்சியொன்று, பூவாதுகாயாதுகனிகணல்கும்பூம்புளிபல்வகைப் போதுந்தருமதூகம், தாவாதசெம்பொன்மல ரத்தியென்று சாற்றிய தெய்வதமாத் தருக்களைந்தும், தேவாதிதேவரினி தமருங்காஞ்சித் திரு நகரினிறும்பூதுதிகழவோங்கும். கக

ஐவகைத்தடாகம்.

எல்லியிடைப்பங்கயமும்பகற்காலத்தி னிருங்குமுதச்செழும்போ துமலர்ந்துதீந்தேன், பில்குவதொன்றொருகாம்பின் முளரிமூன்றுபிறங்கு புனற்றடமொன்று குளித்தோரெய்த, வல்லவானரத்துருவ மளிப்ப தொன்று மூழ்கினோர் மாற்றார்க்குக் கொடியதீமை, நல்குவதொன்று டினோருற்றார்க்கின்பநலந்தருவதொன்றெனலாந்தடாகமைந்தே. கஉ

அறுவகைப்பறவை.

பெய்யாத காலத்தி னகவிக்கொண் மூவருவிக்கும் பெருமஞ்ஞையொரு மறைநூலெல்லா, மெய்யாமை யின்றியுணர் கிள்ளையேனைக் கணிதநூ லெனைத்துமெடுத் துரைக்குமாங்கை, நையாதுமுழுதுணர்ந்த கபோதம் பாடு நல்லிசைநூலவைவல்ல நலஞ்சேர்பூவை, பொய்யாதுவேட்டவெ லாம்வழங்குநேமிப் புள்ளுமெனவறுபறவைபொருந்துமாங்கண். க௩

ஏழ்வகைப்போதுத்தானம்.

வானுடர்வார்த்தைசெவிப்புலனுமொன்றின்மதகரியைமுயலாக்கித் துரக்குமொன்றின், மேனைகருலகுவிழிப்புலனுமொன்றின்மேவினர்க்குத் திசைமயக்கமெய்துமொன்றிற், கானுர்நெய்யின்றிவிளக்கெரியுமொன்றிற் பாதலத்தோர்கழறுமொழிகேட்குமொன்றி, லானுநுதுந்துமிகண்முழங் குமொன்றிலாகவேழ்பொதுத்தானம்வயங்குமாலோ. க௪

எண்வகைத்தடாகம்.

மூழ்குநர்க்குப்பொன்னுருவமளிக்குமொன்று முழுமணியோர்தரு மொன்றுவிண்ணோர்கோமான், வாழ்வளிக்குமொன்றுமனக்கினியவெல் லாந்தருமொன்றுவேண்டியவைவழங்குமொன்று, வீழ்நகைத்தாமெய்ஞ் ஞான மளிக்குமொன்று வீடுதவுமொன்றுவினைப் பிணிநோய்முற்றும், பாழ்படுத்துமொன்றென்னமலங்கண்மாற்றும் பனிமலர்ப்பூம்பொய்கை யிருநான்குமேவும். க௫

ஒன்பதுவகைச்சிலை.

தீண்டினரைத்தேவாக்குமொருகல்பாம்பின்கடிவிடந்தீர்த்திடுமொ ருகல்சித்தியெல்லா, மாண்டளிக்குமொருகலுயிருதவுமோர்கல் வழக்க னைத்துநவிவாய்கின்றறுக்குமோர்கல், மூண்டபிணித்தபூம்புறுபுண்மாற் றுமோர்கல் மெய்யொளிமெய்த்துணியுறுப்பைப் பொறுத்துமோர்க, லீண்டியதீ வினையிரிக்கு மோர்கல்ஞானந் தருமொருக லெனச்சிலைக ளொன்பதோங்கும். க௬

ஒன்பதுவகைப்பொழில்.

ஒன்றினோர்பெறக்கனகமாறியொன்றி லிரசதமாமழையொன்றின் முத்துமாரி, யொன்றிலொளிர் குருவிந்த மாரியொன்றில் வயிரமழை யொன்றில்வயிடூயமாரி, யொன்றிலொளிவிடும்புருடராகமாரி யொன்றி லடற் புள்ளேற்றுப் பச்சைமாரி, யொன்றினிலிந்திரநீலமாரியொன்றிற் பொழியுமலர்ப்பொழிலிவையோரொன்பதோங்கும். க௭

பத்துவகைமன்றம்.

சொல்லருமா பாவியுறின் மூங்கையாக்குஞ் சோரர்களைமருளுறுத் துங்கல்விதேற்றும், பல்வகையவடிவுதவுஞ்சாவாமேன்மை பாவிக்கும் பாதலஞ்சேர் பிலத்தைக்காட்டும், வல்லவர்க்குந்திசைமயக்கும் பொன் மாணிக்க மழைபெய்யும் பகலிரவுமாறுக்காட்டுஞ், செல்லுநரைப்பிறர் காணுவியப்புச்செய்யுமிவைமன்றமொருபதெனத்திகழுமாலோ. கஅ

பதினேருவகைக்கூவல்.

தயிர்க்கூவல்பாற்கூவு னறுநெய்க்கூவன் மதுக்கூவல்செழுங்கருப் புச்சாற்றுக்கூவன், மயக்கமறமுத்திநெறிதுறக்கமார்க்க மற்றுலகின்கதி காட்டுமும்மைக்கூவல், வியப்பெய்தநிழல்பிணிக்குங்கூவல்பாரின் வித் தின்றி நாறுசெயும் விரிநீர்க்கூவ, லயர்ப்பின்றி யங்கணங்தோர் மீளச் செய்யுமருங்கூவலொடுங்கூவல்பதினொன்றுமால். ககூ

சேக்கு - சீலை - சிலம்பொலி.

தன்னிடையெள்ளினைப்பெய்யின்மற்றோர்நூங்கர்த் தயிலமெழச் செய்வதொருசெக்குமுண்டு, மன்னுயிர்செய்வினைப்பயனைத் தாமேநல் குஞ் சிலையொன்றுசிலைப்பாவை யொன்றுமன்னுங், கன்னிமதிற்காஞ்சி நகர்காவல்பேணுங் கருமேனிவயிரவமாக்கடவுள்பாத, நன்னடனச்சிலம் போசையிடையறுதுநானிலத்தோர்வியப்பெய்தக்கேட்குமோர்பால்.

இன்னனவாமதிசயங்கண் மற்றுமுள்ளவெல்லையிலை யவைமுழுது மறிவார்யாரே, முன்னுகத்தினெல்லார்க்குங்காட்சியெய்து மூண்டகொ டுங்கலியுகத்திற்படிமைவாழ்க்கை, மன்னினோர்சிலர்க்கன்றித்தோன்று முத்திமருவினர்க்கும்மேலுலகின்வைத்தவண்ண, மன்னமலிவயற்காஞ்சி வரைப்பின்வாழ்வாரகங்களிப்பக்கண்ணுறுதலாரமைத்தவாகும். உக

இங்குரைத்தமேன்மையெலாங்கண்டுங்கேட்டு மிந்நகரிற்கொடுந்தீ மையிழைப்பாராயி, னங்கவரேகயவரெனப்படுவரந்தோ வறிவின்றியறி யாதுஞ்செய்தபாவப், பங்கமெலாமொழிவெய்துமறிந்துசெய்யிற் பாற் றரிதாமாதலினுற் பயனும்வேண்டி, யுங்குறைவோர் தத்தமக்குவிதித்த வாற்றுனொழுகியேகம்பரருட்குரியராவர். உஉ

விம்மிதப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உ௫௱௬

ஒழுக்கப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாதரையெல்லாம்வீழமடவனுமீன்றதாயைக்
காதலனுகானச்சேர்க்கடியனுஞ்சிவன்வாழ்வைப்பிற்
பாதகம்புரியல்காஞ்சிப்பதியிடைச்சிறிதுஞ்செய்ய
லோதியவிதியினேறேயொழுகுதன்முறைமைத்தாமால். க

செந்துவர்படருமாழித்தினகரனெழுமுன்கன்ன
லைக்தெனவெழுந்துவெண்ணீறணிந்துயர்மாவின்மூலத்
தெந்தையைக்காமநோக்கினிறைவியைநினைந்துபோற்றிப்
புந்தியினுறத்தான்செய்யும்பொருளறஞ்சிந்தைசெய்து. உ

கரகமுந்தண்டுமேற்றுங்கரந்தழீஇக்காமனூர்க்கு
நிருதியிற்படர்ந்துகாதினீண்டமுப்புரிநூலேற்றித்
தரணியிற்றிருணமிட்டுச்சந்திகள்பகல்வடக்கு
மிரவுதென்பாலுநோக்கியிருந்திரண்டியக்கநீத்து. ௩

குறியிடக்கரத்துப்பற்றிக்குறுகிநீர்முகந்திட்டோர்கால்
வெறிகமழ்புனலான்மண்ணாற்குறியினைவிழுமிதாக்கி
நிறையமண்முக்காலிட்டுக்குதங்கழீஇக்கழுவுநீள்கைக்
கிறுதியினீரைங்காலுமிருகைசேர்த்தேழுகாலும். ௪

அடியெழுகாலும்பூசியறலினாற்சுத்திசெய்க
விடனுடையில்லோர்க்கீதாமிரட்டிமும்மடங்குநாற்றி
கடனறிபிரமசாரிகாட்டகத்துறைவோன்மற்றைக்
கெடலருந்துறவியின்னோர்கெழுதகவியற்றல்வேண்டும். ௫

கொணர்வுறுநீர்வாய்ப்பெய்துகொப்புளித்திருகாற்றூய்மை
யணையநீர்குடித்துப்பின்னரணிவிரலுறுப்புத்தீண்ட
லிணைவிழைச்சுணவுமாற்றீரியுக்கமுற்றிடினெண்கா
லிணையிலீரெண்காலெண்காற்கொப்புளித்திடுதல்வேண்டும். ௬

சலமலம்விடுக்கும்போதுந்தையலார்கலவிப்போதுங்
குலவெரிவளர்க்கும்போதும்வெண்பல்கோறின்னும்போது
முலவுநீர்குடையும்போதுமுணவினும்பேசல்செய்யார்
மலவலிதுரக்குமெங்கோன்வகுத்தநான்முறையினிற்போர். ௭

விதித்தகோறின்றுதூயமென்புனல்படிந்துமேனி
கதிர்ப்பநீறணிந்துசந்திக்கடன்புரிந்துறுபேரன்பின்
முதிர்ச்சியினிலிங்கபூசைநாடொறுமுட்டாதாற்றித்
துதித்தனர்காலந்தோறுமேகம்பந்தொழுதுபோற்றல். ௮

இம்முறையொழுக்கின்மாறுதியங்குறும்பிரமசாரி
செம்மணிவடிவிற்கம்பர்திருவருள்கிடைத்தல்வேண்டி
மம்மரில்குரவன்மாடேமறையெலாமுறையினோதன்
மும்மறையிரண்டொன்றானுமுற்றுறப்பயிறல்வேண்டும். ௯

மடங்கலிற்கன்னிதன்னின்மதிநிறைந்துறுநாளோதத்
தொடங்குகமகரத்தந்நாட்டுகளறமுடிக்கமீண்டு
மடங்கரும்வெண்கேழ்ப்பக்கத்தோதுகவங்கமாதி
யுடங்குதேய்ப்பக்கத்தோதலவிலக்குநாளோதல்வேண்டா. ௧௦

செவ்விநாணுடையேதண்டந்திகழ்முந்நூலுத்தரீய
மவ்வவர்தமக்குவெவ்வேறருமறைவிதித்தவாற்றா
லெவ்வமின்மறையோராதிமூவருமியல்பிற்கொள்க
செவ்வழல்விதியினோம்பியணிகவத்திருவெண்ணீறே. ௧௧

முன்னிடைகடையினேற்பவதிச்சொன்மொழிந்துபார்ப்பார்
மன்னவர்வணிகர்பிச்சையேற்பதுமரபாமாயுண்
முன்னுறுமிளையர்தம்மின்மூத்தவர்ப்பணிகதாழ்ந்த
பின்னவர்நமக்குமூத்தோர்வாழ்த்துரைபேசல்வேண்டும். ௧௨

ஓதியபிரமசாரியொழுக்கினில்வழாதுநின்று
மூதருமறைநூல்கற்றோர்முனிவர்தங்கடனிற்றீர்ந்து
வேதமாமூலத்தெங்கோன்றிருவருண்மேவப்பெற்றுப்
பேதமில்பெருவீட்டின்பப்பேற்றினுக்குரியராவார். ௧௩

வேறு.

பின்னவர்கள்பற்றிகந்துபத்தியினாற்றிருக்காஞ்சிப்பேரூர்வாழ்க்கை
மன்னுதல்வேட்டனராயினேகம்பன்றனக்கணித்தாமிருக்கைவைகிப்
பன்னருஞ்சீர்க்கண்டிகைநீறுடல்வயங்கச்செய்பணிகள்பலவுமாற்றித்
துன்னியமாந்தருமூலச்சுட்டொளியைமுட்டாதுதொழுதுவாழ்வார். ௧௪

கலிவிருத்தம்.

வற்றருமறையவ்வாறேதிவாழ்க்கையிற்
பற்றிலனாயிடிற்குரவன்பாலென்று
முற்றினிதுறைகபற்றுடையனேயெனிற்
பெற்றியினருட்குருவிசைவுபெற்றரோ. ௧௫

கடவுளர்பிதிரர்தங்கடன்கழிக்குவான்
வடிவுறுமிலக்கணமாண்டகற்பினின்
மிடலுடைக்கிழத்தியைவிதியின்வேட்டுப்பி
னெடுமனைவாழ்க்கையினொழுகனீதியே. ௧௬

கருதுமுப்பதிற்றிருகவளமென்பத
மிருபொழுதுண்டலுமெச்சமைவகை
புரிதலும்விதித்தநான்மனைவிபுண்முலை
மருவலுமினையவுமிவர்க்குமாணுமே. ௧௭

ஓதெரிசமிதையினோம்பறெய்வமா
மேதமில்பிதிரருக்கீதலன்னதாம்
பூதருக்கிடுபலிபூதவெச்சமே
வேதியர்க்கோதனம்வீதன்மானிடம். ௧௮

பெருமறையோதுதல்பிரமவெச்சமின்
விருமகமைந்தனுட்பிரமவெச்சந்தான்
றிருமிகச்சிறத்தலிற்றெய்வவேதிய
ரொருதலையாகவீதோம்பல்வேண்டுமால். ௧௯

வைகறையெழுந்துசெய்வினைகண்மாண்டகச்
செய்துமாநகர்ப்புறத்தொழுகுந்தெய்வநீ
ரெய்தினர்குடைந்துவெண்டுகிலிரண்டுடுத்
தைதுறுகண்டிகைநீறணிந்துபின். ௨௦

வண்புதற்றருப்பைமேல்வைகிமும்முறை
யொ[illegible]வேதங்களுவப்பவாசமித்
தென்பெறவாய்துடைத்தியல்பிற்றீண்டியே
பண்பயின்மறைகளைப்படித்தல்வேண்டுமால். ௨௧

மாதவப்பேற்றினன்மறைகளீணலைச்
ருதமாய்ப்பிறத்தலிற்றொல்லையேகம்ப
நாதனுக்கினியதிப்பிரமமன்மக
மேதகுமறங்களுண்மிக்கதாகுமால். ௨௨

ஆற்றலுக்கியையவெவ்வளவைத்தாயினும்
போற்றருமறையினைப்போற்றிமேதகச்
சாற்றுகாயத்திரிசதவுருத்திர
மேற்றவைந்தெழுத்திவைவிதியினெண்ணியே. ௨௩

அனைத்தினுநிறைந்துறையடிகள்பூசனை
தனக்குறுதிருப்பள்ளித்தாமங்கொய்துபோய்
மனைத்தலைவைத்துமேல்வாழ்க்கைக்கேய்ந்தன
வெனைத்துளகருமமுமியல்பினுடியே. ௨௪

கதிரவனுச்சியினணுகுங்காலையின்
முதுசிவகங்கைநீர்முறையின்மூழ்குபு
மதியுறுநியதிகண்முடித்துமாநிழ
லதிபனைமுறையுளியணைந்துபோற்றியே. ௨௫

மீண்டுதன்மனைவயின்மேவித்தற்பொருட்
டீண்டியவருட்குறியிறைவனர்ச்சனை
பூண்டபேரன்பினிற்புரிந்துபூசனைக்
காண்டுறுப்பெனப்படுமழலுமோம்பியே. ௨௬

அறமுதலிழிஞரீறனவற்றினுக்
குறுபலியுதவியூய்கெச்சமைவகை
முறையுளியாற்றியவ்வேலைமுன்னிய
பெறலருவிருந்தினர்ப்பேணியூட்டியே. ௨௭

நீத்தவர்க்கையமுநேர்ந்துநோயினர்
வாய்த்தவெஞ்சூன்முதிர்மகளிர்பிள்ளைகண்
மூத்துறுகிழவரைமுந்தவூட்டிப்பி
னேத்துறுகிளைஞரோடுண்டலேயுமால். ௨௮

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கங்கைவார்சடிலக்கடவுளைநினைந்துகறிதயிர்நெய்யுடனுவி
யங்கியையெழுப்பியாகுதிச்செய்கையாகமுப்பதிற்றிருகவளம்
பங்கமில்விதியாலுண்டுகைபூசிப்பாகடைதின்றதன்பின்னர்ப்
பொங்குபேரன்பினொக்கலோடமர்ந்திப்புராணமேகேட்டிடல்வேண்டும்.

நான்மறைப்பொருளாய்க்கதைக்கெலாமிடனாய்நாற்பயனுதவுமேகம்பன்
மேன்மையுங்காமநோக்குடையிறைவிமேன்மையும்விளக்குவதிதுவே
நூன்முறைவருநிலைகளினொழுக்கநுண்ணிதிற்றெரிப்பதுமிதுவாம்
பான்மையாற்காஞ்சிப்புராணமேநாளும்பயில்வுறக்கேட்பதுமரபால்.

அலர்கதிரென்றாழ்மறைந்திடுங்காறுமான்றவர்படித்திடக்கேட்டுக்
குலவுசீரந்திசெய்கடன்முற்றிக்கோயிலைக்குறுகியேகம்பத்
தலைவனைத்தொழுதுமனைவயினணுகிச்சமிதையினங்கிவேட்டமர்ந்து
பலருடனருந்திமனைவியோடிரவிற்பள்ளியின்மேவுதல்விதியே.

தருக்குறுவனப்பிற்பிறர்க்குரியவரைத்தவ்வையிற்றங்கையிற்காண்க
வுருத்திரகணிகைமகளிரைத்தாயினுன்னுகவயிணவமடவா
ரருப்பிளங்கொங்கைத்தாதிகண்மாட்டுமென்னதேயாகலிற்புணர்ச்சி
விருப்பினையவர்பான்மறப்பினுமெண்ணலோம்புகநன்னெறிவிழைவார்.

இருட்சுரிகருமென்மலர்க்குழன்மனையாளிளமுலைப்போகமுமகவின்
பொருட்டெனக்கொண்டேவிலக்குநாளொழித்துப்புணர்ந்தபினீங்கிவெ
ளரைக்கசைத்தருளுமடிகளீரடியுமகந்தழீஇத்துயிலுகமற்றீங் [ம்பாந்த
குரைத்தவாறென்றுமொழுகுநரெங்கோன்றிருவருட்குரியவராவார்.

கச்சிமாநகரிற்கம்பநாயகன்முன்கரிசறுத்தான்றவர்முகப்ப
வச்சுவமாடையூண்முதற்றானமாதரித்தியைந்தவையளித்தல் [வரைப்பி
பொச்சமிலவ்வக்கொடைப்பெரும்பயனென்றனந்தமாய்ப்பொலியுமவ்
னச்சிமெய்யுணர்வுகொளுத்துவோன்வீடுநணுகுமேம்பட்டதித்தானம்.

ஓதல்வேள்வீகையோதுவித்திடல்வேட்பித்தலேற்றலுமுறுமறையோர்க்
காதியின்மூன்றோடளித்திடலூர்திபடைத்தொழிலரசருக்குரிய
வாதியின்மூன்றுவாணிகம்பசுவேர்வணிகருக்காகுமங்கவற்று
ளாதியின்மூன்றுமல்லவைமுறையேயவ்வவர்விருத்திகட்காமால்.

இருதமோடமிர்தவிருத்தியுமான்றோர்க்கிசைவனமிருதமுமாகுந்
தருபிரமிருதஞ்சத்தியாநிருதந்தழுவலுமொன்றுநாய்விருத்தி
யொருவலேவேண்டுமுஞ்சநல்விருத்தியிருதமாமொன்றிரவாமல்
வருவதேயமிர்தமிரந்துறன்மிருதமுழவின்வந்துறல்பிரமிருதம்.

சத்தியாநிருதம்வாணிகவிருத்திதாழ்வுறுஞ்சேவகஞ்செய்யல்
வைத்தநாய்விருத்தியாதலினதனைமாற்றியேயிருபிறப்பாள
ரொத்ததோர்தூயவிருத்தியாற்றம்மையோம்பிமெய்ந்நூல்பலபயின்று
தத்தமக்குரியநியதியினொழுகித்தங்குதன்மரபெனப்படுமால்.

கைசெவிசென்னிகழுத்தினெப்போதுங்கண்டிகையணிதல்வெண்ணீறு
மெய்யெலாம்பூசியைந்துமூவிடத்தும்விலங்குமுப்புண்டரம்பொறித்தல்
வைதிகநிலையோர்மரபெனமறைநூல்வகுத்திடுமாதலினிவற்றைக்
கைவிடாதென்றுங்கடைப்பிடித்திடுகவிகழ்ந்திடிற்கடையரேயாவார்.

வைதிகசைவநெறிகளைப்பற்றுமாண்பிலாச்சூத்திரர்முதலோர்க்
கைதுமீப்போயபுண்டரமாதியணியலாமேனையர்க்காகா
மெய்திகழ்மறைகளாகமம்விதித்தகருமமற்றினையனபிறவு
முய்தியைவேட்டோராசரித்தொழுகிவிலக்கினவொழிவதுமுறையே.

தவத்தினூற்செருக்கல்கண்டதுவிளம்பல்பொய்யுரைசாற்றுதலைந்து
மவித்தவந்தணரையிகழ்தல்யாதுமளித்ததுபுகழ்ந்தெடுத்துரைத்த
லெவற்றினையானுங்கொலைசெயல்பிறர்பாலிடுக்கணையுறுத்துதல்குறளை
செவிப்புகப்புகறல்பூப்புடைமனையைத்தீண்டலும்வழுவெனப்படுமால்.

மனைவியோடுண்டலவளுடன்றுயிறன்மனைவியாவித்துழிப்பசிப்பில்
வினையிகந்தியல்பாணிருப்புழியுண்ணும்வேலையுமாங்கவட்பார்த்தல்
கனைகதிர்த்தேவைக்கிழக்கெழுங்காலைமேல்கடற்பால்விழுங்காலைப்
பனிவிசும்புச்சியுற்றிடுங்காலைபார்த்தலும்பழுதெனப்படுமால்.

உடையொழிந்திருநீராடுதலாடையொன்றுடுத்துண்டலீரியக்க
நடைவழிச்சாம்பரானிலைதீநீர்நள்ளூறவிடுதலாங்குமிழ்த
லுடையிலாமாதைநோக்குதலிருகாலொளிர்ந்தசெங்கனலிடைக்காய்ச்ச
லிடையுறுமந்திவேலையினருந்தலிவைகளும்விலக்கெனப்படுமால்.

இந்திரதிருவில்விசும்பிடைநோக்கியேனையர்க்கறிவுறக்காட்ட
னிந்தையின்வாளாபேரிகல்விளைத்தல்கையிணைக்குவித்துநீருந்தல்
செந்தழற்கடவுள்வான்பசுபார்ப்பார்தேவர்கண்ஞாயிறுகுரவ
ரிந்துவின்முன்னரிச்சையாறிருத்தலின்னவுந்தீங்கெனப்படுமால்.

கேழுகிருரோமந்துணித்திடலுகிராற்பல்லினைக்கிளைத்திடறனியே
பாழ்மனைதுயிறல்கண்படையெழுப்பன்முடிவடபாலின்வைத்துறங்க
லாழ்துரும்பொடித்தலோட்டினையடித்தறனிவழிச்செலல்பிறரணிந்த
காழகஞ்செருப்புமுதலியவணிதலினையவுங்கடிந்திடப்படுமால்.

அறககடைமிகுமூர்பெரும்பிணியுறுமூரமரிழிகுலத்தவர்பதிதர்
மறக்கொடுந்தொழிலோர்துவன்றுமூர்வைகலவரையிடைநெடும்பொழு
திறப்பருமிசும்பினேறுதலிழிதலிளவெயிற்காய்தனீராடா [துறைத
துறப்பெருஞ்சிவலிங்கார்ச்சனைபுரியாதுண்டலும்பழுவெனப்படுமே.

பூத்தவள்பரிதனிழிஞனையமணரைப்புத்தரைத்திகிரிமேற்பொறித்த
மூர்த்தியைத்தீண்டலுங்காண்டலும்விலக்கேயிலங்குமுப்புண்டரமின்றி
மீத்திகழ்வடிவமுதலியபொறித்தவேதியர்முகத்தினைமறந்தும்
பார்த்துமோரம்பதலைவனைப்படர்ந்துகண்ணுறினண்ணுவர்தூய்மை.

மறையுடனேனைநூல்களையெச்சந்தன்னுடன்மற்றைநல்வினையைக்
கறையறும்பார்ப்பாரோடுருத்திரரைக்காஞ்சியினெடும்பிறநகரைப்
பிறைமுடிக்கடவுளோடரியயனையொப்பெனப்பேசற்கபேசிற்
குறைவருநிறையக்குழியினிற்புழுகுளிப்பதற்கையமொன்றிலையே.

இன்னனபிறவுமறைமுதனூல்கள்விலக்கிடுமிவற்றினையொழிக
பன்னருமறையின்புறத்துநூலனைத்துங்கெடுதியேபயக்குமாதலினா
லன்னவைவிடுத்துமறைநெறிவழுவாதொழுகினீளலர்பொழிற்காஞ்சி
தன்னிலேகம்பநாயகனடியார்தம்மொடுங்குலாவுதன்முறையே.

இருமுதுகுரவரிறந்திடுமதிநாளாண்டுதோறெய்துழியுகாதி
வருமனுவாதியுவாமுதற்றினத்தின்வயங்குதென்புலத்தவர்க்குறித்துத்
திருமறையவர்க்குமுறையினூட்டிடுகவேனைமாத்தலங்களிற்செய்யும்
பெருநலமனைத்துங்காஞ்சியினூட்டும்பேற்றினைச்சிறிதுமொவ்வாவால்.

தென்புலத்தவர்தாமயன்றருமரீசிமுதலியோர்சிறுவரங்கவரு
ளின்புறுமரீசிவிராட்டுவைமுதலோரீன்றவர்சுராசுரர்முதலோர்க்
கன்புடைப்பிதிரராகுவர்கவியோடங்கிராபுலத்தியன்வசிட்ட
னென்பவர்கருதித்தோர்மறையவரரசர்வணிகர்வேளாளருக்கியைவர்.

முனிவரிற்பிறந்தார்தென்புலத்தவரம்முதல்வரிற்சுராசுரர்பிறந்தார்
புனிதவிண்ணவரிற்சராசரமனைத்தும்புகரறத்தோன்றினமுறையா
லினையசீர்ப்பிதிரர்தமைக்குறித்தீசனிணையடிக்கன்புடைமறையோர்
நனியுளங்களிப்பவுறுதியாற்காஞ்சிநகர்வயினூட்டுதல்கடனே.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இம்முறையில்லின்வைகியிடைப்படுங்காற்கூறுயுள்
செம்மையிற்கழிப்பிப்பின்னர்ச்செறிமயிர்நரைப்புக்காலு
மம்மரினறிவுமிக்கார்மனைவியைமகன்பால்வைத்து
வம்மெனவுடன்கொண்டேனும்வனத்திடைச்சேறல்வேண்டும்.

விழைதருகாஞ்சிமூதூர்ப்புறனிலவரைப்பின்மேவித்
தழைபொதிசாலைவைகிவேனிலைந்தழலினுப்பண்
மழையினிற்பனியினீருள்வதிந்துமாதவங்களாற்றிக்
குழைவுறுமனத்தானுஞ்சவிருத்திகொண்டுறைகமாதோ. ௫௩

கண்டிகைநீறுதாங்கிக்கம்பனைக்காமநோக்கி
னெண்டொடிப்பிராட்டிதன்னையுன்னியஞ்செழுத்துமெண்ணி
யண்டர்கோன்பூசையாற்றியன்னணம்வதிந்தபின்னர்
மிண்டறும்வனத்தின்வாழ்க்கைமெய்த்தவமுதிர்ச்சியாலே. ௫௪

அற்றமிலறிவிற்றூயராகியிவ்வுலகவாழ்வும்
பொற்றபூங்கமலவாழ்க்கைப்புண்ணியன்முதலோர்வாழ்வும்
பற்றறவெறுத்துவீட்டினவாவுறும்பான்மைபெற்றான்
முற்றுறத்துறவினெய்திமறைமுடிபுணர்தல்வேண்டும். ௫௫

ஐந்தவித்துயர்ந்தவாசான்றன்புடையருணூல்கேட்டுச்
சிந்தனைசெய்துமாணத்தெளிந்துபினிட்டைமேவு
மிந்தவாறடைவினெய்துமியல்பினைத்தலைநின்றேறா
ரந்தணனிருதாளென்றுமகந்தழீஇயொழுகலாறே. ௫௬

அடற்கொடும்பாசமாற்றிப்பசுக்களையருள்வீட்டுய்ப்பப்
படைத்தளித்தழித்துநோக்கும்பரம்பொருள்சிவனேயென்ற
லுடற்றுநர்க்கரியவேதவுள்ளுறையாவதென்னத்
தொடக்கமீறெழுவாயானவிலிங்கத்தாற்றுணிதல்கேள்வி. ௫௭

உவமையினேதுத்தன்னாற்கேட்டதையுள்ளங்கொள்ள
வவமறச்சிந்தைசெய்தல்சிந்தனையதனைப்பல்காற்
சிவணுறப்பயிற்சிசெய்கைதெளிதலாம்விளங்கக்காண்ட
றவலறுநிட்டையென்றுசாற்றுவர்புலமைசான்றோர். ௫௮

இத்திறம்பயின்றுவைகியிருவகைப்பற்றுநீத்த
வுத்தமத்துறவின்மேலோரூர்வயிற்பிச்சையேற்றுச்
சுத்தநீரலம்பிமுக்கட்சுடரினுக்கூட்டிப்பின்ன
ரத்தகுவிதியினோர்போதெண்பிடியருந்தல்வேண்டும். ௫௯

அலலவைமுழுதுநீக்கலான்றவர்கழித்ததூசு
கல்லசும்பெற்றிக்கோடல்காழ்மரத்தடியின்மேவல்
பல்லவுமொப்பக்காண்டறமியனாய்ப்படர்தல்வேற்றுப்
புல்லியரிணக்கந்தீர்தல்பொறிவழிமனஞ்செல்லாமை. ௬௦

அடித்துணைநிலத்தினோக்கிமிதித்திடலறுவைதன்னில்
வடித்தநீர்பருகல்நெஞ்சிற்றூயதுமாணக்கோடல்
படிற்றுரையின்றிக்கூறனன்மையேபயப்பப்பேச
லெடுத்துரைபிறவுமுத்தனிலக்கணமென்பமன்னோ. ௬௧

உறையுளோடங்கிபேணல்கல்வியினுடலையோம்பல்
சிறையுடற்பொருட்டுச்சீற்றஞ்செய்திடல்சாலப்பேசல்
புறனுரையிகழ்ச்சிபிச்சைப்பொருட்டலதூர்க்குட்சேறன்
மிறையுறுத்திடும்பைசெய்வோர்தம்மையும்வெகுளலாகா. ௬௨

சினவிடைக்கடவுட்பூசைகண்டிகைதிருவெண்ணீறு
கனவினுமிகழாதோம்பல்கதிரொளியுலோகமல்லாப்
புனிதபாசனத்தினீராற்றூய்மைகள்பொருந்தக்கோடல்
வினையிகந்தவர்க்காமென்பவேள்வியிற்சமசம்போலும். ௬௩

என்பினைநரம்பிற்பின்னிக்குடர்வழும்பிறைச்சிமெத்திப்
புன்புழுப்பொதிந்துசெந்நீர்ப்புண்ணசும்பொழுகிநாறித்
துன்பநோயெவற்றினுக்குமுறையுளாய்ப்புறந்தோன்றுடும்
வன்புலையுடம்பேயாவிவருத்திடும்பிணிவேறில்லை. ௬௪

பெரும்பிணியிதனைத்தீர்க்குமருத்துவன்பிறவியில்லாப்
பரம்பொருளானமுக்கட்பரமனேயென்றுதேறி
முரண்பயில்விடையோன்றென்பான்முகத்தினைச்சரணமெய்தி
விரும்பிவீடுறுதற்பாலர்பிறப்பினைவெருவப்பெற்றார். ௬௫

கலிநிலைத்துறை.

மற்றைத்தெய்வங்களெவற்றையும்விடுத்துமாநீறு
கற்றைச்செஞ்சடைப்பிரான்சரணரணெனுங்கருத்தே
பற்றிச்சாவினும்வாழ்வினுங்களிப்பிகல்படாமை
யெற்றைப்போதுமொத்தொழுகலேதுறந்தவர்க்கியல்பாம். ௬௬

பொறுமைகல்விமெய்தூய்மையைம்பொறிசெறலடக்க
முறுதிநாண்வெகுளாமைகள்ளாமையொண்பூதி
மறுவில்சாதனஞ்சிவார்ச்சனைதியானம்வெண்பதின்றன்
கறமுநல்லறம்புரிபவர்க்கிலக்கணமாமால். ௬௭

சொன்னநால்வகைநிலைகளிற்றுரிசறவொழுகிக்
கன்னிமாநிழற்கண்ணுதலகத்தொழும்பாற்றி
மன்னிநீடியகாஞ்சிமாநகர்வயின்வதிவோர்
துன்னுமும்மலத்துகளறுத்தின்பவீடுறுவார். ௬௮

ஒழுக்கப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உ௬உ௧.

சிவபுண்ணியப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கச்சிநகரமர்ந்துறையுநி[illegible]ராயேகம்பக்கடவுள்பாதச்
செச்சைமலர்வழிபடுவோர்மேம்பாடுநானேயோதெரிக்கவல்லேன்
முச்சகமும்புகழ்ந்தேத்தும்பன்னிரண்டுபெயர்படைத்தமூதூர்வைப்பிற்
பொச்சமறச்செய்தக்கசிவதருமத்திறனுமினிப்புகலக்கேண்மின். ௧

எவ்வறமுந்திருக்காஞ்சிக்கடிநகரிற்புரிகிற்பினேற்றமெய்து
மவ்வறத்துட்சிவதன்மமதிகமவைசிவலிங்கப்பதிட்டையேனைச்
செவ்வியுடைத்திருமேனிதிருக்கோயிற்பணிபூசைச்சிறப்புமற்று
மௌவியந்தீர்மெய்யடியார்திருத்தொண்டுமுதல்பலவாமவற்றுண்மாதோ.

சிவலிங்கப்பிரதிஷ்டையும்பயனும்.

கயக்கமுறுமறக்கடையின்சிமிழ்ப்பறுத்துப்பிரமாண்டக்கனத்தைநூறி
மயலைமிகும்வினைப்பகையும்பெரும்பிறவிப்பழம்பகையுமறுகமாட்டி
வயக்கமுறுசிவபதத்தினுய்க்குமிலங்கயில்வாளாய்மாறுவாழ்வு
பயக்குநுதல்விழிக்கடவுணயக்குமருட்சிவலிங்கப்பதிட்டையம்மா. ௩

விரைமலரோன்மணிவண்ணன்முகிலூர்திமுனிவர்சித்தர்விண்ணோர்யாரும்
வரைகளினும்வனங்களினும்வார்ந்தநதிப்புடைகளினுமணிநீர்வேலைக்
கரைகளினுமெங்கெங்குங்கண்ணுதலோன்சிவலிங்கப்பதிட்டையொன்றே
யுரைவிளங்கச்செய்தமைத்தாரன்றிவேறிறைவன்செய்தாருணர்வான்மிக்கோர்.

மேதகையதவந்தீர்த்தங்கொடைவேள்விதுறவுநிலைவிரதம்யாவு
மோதுசிவக்குறிநிறுவும்பயன்கோடிபடுங்கூற்றினொன்றுக்கொவ்வா
வாதலினிச்சிவலிங்கம்வேதிகையினெடுஞ்சிலையானமைப்போர்யாரு
மேதமறுத்தவ்வுடம்பின்வீடெய்தப்பெறுவரிதற்கையுறேன்மின். ௫

இம்முறையிற்றாபித்தசிவலிங்கமிறைஞ்சுநரும்விமானமேல்கொண்
டம்மலர்ப்பூங்குழற்பணைத்தோளரம்பையர்சாமரையிரட்டவமராபோற்ற
வெம்மருங்குமிசை முழங்கப்பெருந்தேவரூக்கமுறப்பவினிதினேகிச்
செம்மலருட்சிவலோகத்தானந்தந்திளைத்துறைவார்பிறவுங்கேண்மோ. ௬

சோமாஸ்கந்தர்.

வேறு.

அடலிற்கொதிக்கும்படையாழியண்ணன்முதலோரேத்தெடுப்பத்
தடவுச்சீயப்பிடர்த்தலையிற்கவினுமணிப்பூந்தவிசும்பர்க்
கடவுட்பிராட்டியுடனிருப்பக்கதிர்வேற்காளைநள்ளிருப்ப
நடலைப்பிறவிமருந்தாகிவைகுநாதன்றிருவுருவம். ௭

ஏகபாதர்.

அடுப்பார்க்கருளுமொருதாளுமம்பொற்கமலவிழிமூன்றும்
படப்பாம்பணிந்தபுயநான்குஞ்சூலப்படையுமெழில்வயங்க
விடப்பாலரியைவலத்தயனையெழுநாற்கோடியுருத்திரரை
நடுப்பாற்றோற்றியையைந்துவடி வுமுடனுநலம்பிறக்கி. ௮

புகன்றவிடப்பாற்பகுதியினைப்புந்தித்தலத்திற்புந்தியினை
யகங்காரத்தினுறுதன்மாத்திரையிற்பொறியினவ்வவற்றைத்
தகுந்தானுய்யமுந்திகளந்தலையிற்பார்நீரனல்வளிவான்
மிகுஞ்சீர்விழியினிடத்திரவிவெண்கேழ்மதியைப்படைத்தருளி. ௯

அடியினடங்குங்கீழுலகமனைத்துமடியினுறத்தோற்றி
முடியினடங்குமேலுலகமுழுதுமுடிப்பாலளித்தருளிப்
படியில்கருணைப்பிழம்பாகிப்பரசுமடியாரகவிளக்காய்க்
கொடியமலநோயரட்டொதுக்குங்கோணைப்பெருமான்றிருவுருவம். ௧௦

எந்நேஸ்வரர்.

ஓவாவின்பப்பெருங்கருணையொன்றும்வதனமோரிரண்டும்
பூவார்கமலப்பதமூன்றும்போகுகூர்ங்கோடொருநான்குங்
காவாயென்பார்மலமைந்துமறுமாறளிக்குங்கரமேழுந்
தாவாவருளும்படைத்துடையவெச்சத்தலைவன்றிருவுருவம். ௧௧

இடபாரூடர்.

இகலியெதிர்ந்தோர்குடர்குழம்பவிடியின்முழங்கியேற்றெதிர்ந்து
தொகுவெம்படைகண்முழுதுழக்குந்தோலாமதுகைச்சூர்த்தவிழிப்
புகரில்காட்சிவெள்ளிவரைநடந்தாலனையபோர்விடைமேற்
றிகழுமலைமாதுடனுறையுந்தேவதேவன்றிருவுருவம். கஉ

சந்திரசேகரர்.

உடையாளொருபால்வீற்றிருக்குஞ்செவ்விநோக்கியுள்புக்கு
மிடையாநின்றபெருந்தேவர்விலகப்புடைக்கும்வேத்திரத்திண்
படையார்குடங்கைத்திருநந்திபகவன்றனக்குவரமுதவிப்
புடையார்கணங்கள்போற்றிசைப்பவைகும்புராணன்றிருவுருவம். கங

நடராஜர்.

சிலம்பினொலிகேட்டருகணையுஞ்செங்காலன்னப்பெடைமானப்
புலம்புமணிப்பூண்முலையுமையாண்மகிழ்ந்துநோக்கிப்புடைநிற்ப
வுலம்பிமறைகளோலமிடவும்பர்பரிச்சமுடிக்கங்கை
யலம்பவழகார்பெருந்திருக்கூத்தாடும்பெருமான்றிருவுருவம். கச

உக்கிரர்.

வடாதுமலையிற்புயநான்குமலர்க்கண்மூன்றுமுருத்திரமுந்
தடாயபடப்பாப்பரைநாணுங்கபாலக்கரமுந்தழலன்றிக்
கடாதுசிவந்தசுரிபங்கிகவின்றமுடியும்வெண்ணிறமுங்
கெடாதவனப்பிற்பெருங்கோலங்கெழீஇயபெருமான்றிருவுருவம். கரு

புரசைக்களிறட்டுரிபோர்த்தகோலப்பொலியும்புகைவடிவு
மரசச்சீயவுரிகொண்டவுத்தரீயத்தணியழகும்
பிரசக்கமலமெனச்சிவந்தவிழிகண்மூன்றும்பிறங்குலகம்
பரசத்தகுவெண்டலைதண்டம்பரித்தகரமுங்கூரெயிறும். கசு

மருவிற்பொலிந்தமலர்க்கிழவன்வருத்தவண்டமனைத்தினையும்
பொரியிற்கொறித்துக்கொறித்துமிழும்பூட்கைக்கூரண்டப்பெயரானைச்
செருவிற்படுத்தவெள்ளிறகுந்திங்கட்குழவிக்கதிர்கிளைத்திட்
டுருவுற்றெழுந்தாலெனமாடேயொளிரச்செருகுந்திருமுடியும். கஎ

திருமால்பணிலக்கோவைநிரைவயங்கும்புயமுந்தெரித்தருளிப்
பெருநீரளக்கர்வாய்மடுத்துமுங்காரப்பேரொலிவிளைத்தும்
வெருவாவீரம்படநகைத்தும்பூதகணங்கண்மிடைந்தேத்த
வருளானந்தநடங்குயிற்றுமண்டர்பெருமான்றிருவுருவம். கஅ

அர்த்தநாரீஸ்வரர்.

உமையுந்தானும்வேறன்மையுருவினிடத்துந்தெளிப்பான்போ
லிமயமயிலையொருபாதிவடிவினிருவிநாற்கரத்து
மமையவனசந்திரிசூலமபயவரதமிவைதாங்கி
நமையுமுய்யக்கொண்டருளுநாரிபாகன்றிருவுருவம். ககூ

இலகுளீசர்.

அடுத்தங்குடனும்பரம்பொருளையன்றேவிரவவொட்டாமற்
றடுத்துமுக்கூற்றுயிருணர்வைத்தகையுமவிச்சைமுழுதிரிய
மடுத்தகருணைத்திருநோக்கின்மாணாக்கருக்குப்பொருளுரைப்ப
வெடுத்தகரத்தான்வீற்றிருக்குமிலகுளீசன்றிருவுருவம். உ0

விஷாபஹாரணர்.

நவிலோநீலகண்டாயநமவென்றியம்புமெட்டெழுத்து
நுவல்வார்மீளமலக்கூட்டினுழையாவாறுபெறவிமையோர்
கவலாதிரங்கியாலாலங்கதிர்ப்பூங்கரத்தினேந்தியரிச்
சுவலாரணையின்வீற்றிருக்குஞ்சோதிச்சுடரோன்றிருவுருவம். ௨௧

சலந்தராரி.

இருகூறுகச்சலந்தரனையிறுத்துமாட்டியவ்வடிவ
மருகேதோன்றச்சுதரிசனமங்கைத்தலத்தின்மிசையேந்தி
முருகார்கடுக்கைந்தண்ணறும்பூந்தொடையல்வாகைமுடிவிளங்கத்
திருவார்காட்சியளித்தருளுந்தேவர்கோமான்றிருவுருவம். ௨௨

சக்கரதானர்.

வழிதீஞ்சுவைக்கள்வாய்மடுத்துமழலைச்சுரும்பரிசைமிழற்றுஞ்
செழிபூங்கமலமொன்றினுக்குத்திருந்துகாதன்மெய்யன்பின்
விழிசூன்றடியினருச்சித்தவிறன்மாயனுக்குச்சுதரிசனங்
கழிபேரருளாலீந்தருளுங்கடவுட்பெருமான்றிருவுருவம். ௨௩

அந்தகாசுரஹரணர்.

வெருவாநிகும்பன்மிசையொருதாளூன்றிநின்றுவெஞ்சூலத்
தொருகூற்பரம்மைத்தொருகரத்தாலுமையைத்தழுவிக்கைகூப்பி
யருகேநிற்குமந்தகனைநோக்கியரவச்சிலம்பணிந்து
திருமான்முதலோர்தொழுதேத்தச்சிறக்குமிறையோன்றிருவுருவம். ௨௪

திரிபுராந்தகர்.

பொருப்புச்சிலையில்வாசுகிநாண்பூட்டியரிகோல்வளியீர்க்கு
நெருப்புக்கூராம்படைதொடுத்துப்பிரமவலவனெடுமறைமா
விருப்பிற்செலுத்துநிலத்தேர்மேனின்றுதெவ்வூர்வெந்தவிய
வருப்புக்குறுவெண்ணகைமுகிழ்த்தவந்தணாளன்றிருவுருவம். ௨௫

சங்காதரர்.

விசும்பினின்றும்வெகுண்டார்த்துமுழங்கிக்கொதித்துவீழ்தந்து
வசும்புதிரைநீர்வான்யாற்றையங்கோர்வேணிமயிர்நுதியிற்
பசும்புலறுங்கிற்பனியுறைபோற்றுங்கிவைகிப்பாவவினை
யிசும்புகடக்கும்பகீரதனின்றிரப்பமகிழ்வான்றிருவுருவம். ௨௬

ஆபத்சகாயர்.

கணங்கள்கறுழிமதுக்கடபுள்கதிர்வேற்குரிசிலெழுமாதர்
நிணங்கொடிகிரிப்படையேந்தனிலவெண்டோட்டுமலர்ப்புத்தே
ளணங்குருவக்கோன்முனிவரர்சூழ்ந்தணுக்கராகப்பொலந்தவிசி
னிணங்குமாவற்சகாயனெனுமிறைமைப்பெருமான்றிருவுருவம். ௨௭

சோதிலிங்கேஸ்வரர்.

கடைக்கால்வெள்ளப்பெரும்புணரிநாப்பட்கதிர்த்தசுடரிலிங்கத்
திடைப்பான்மதியமுடிவயங்கத்தோன்றிவிசும்பினெகினமுங்கீழ்த்
தொடைப்பூந்துளபச்சூகரமுந்துலங்கமுடிமேற்கரங்குவித்துப்
படைப்பானுமுகுந்தன்வலமிடமும்பரவத்திகழ்வோன்றிருவுருவம். ௨௮

மச்சசம்ஹாரர்.

வானம்பழிச்சவலைமாக்கள்வடிவுதாங்கிவலம்புரிக்கை
மீனம்படுத்துவிழிசூன்றுவிரன்மோதிரத்தினெவ்வுயிர்க்கு
ஞானம்பயப்பக்குருவிந்தநலங்கேழ்மணிபோற்பதித்தணிந்த
கானம்படித்துச்சுரும்புளருங்கடுக்கைத்தொடையோன்றிருவுருவம். ௨௯

கூர்மசம்ஹாரர்.

மகரந்திளைக்குங்கடலேழுமலங்கக்கலக்கும்பசுந்துளவ
முகைவிண்டலர்தாரானாமைதனைப்பற்றித்தகர்த்தமுதுகோடு
நகுவெண்டலைமாலிகையணிக்குநடுநாயகமாக்கோத்தணிந்து
புகரின்றுயர்ந்தோர்தொழப்பொலிந்தபுத்தேள்செல்வத்திருவுருவம். ௩௦

வராகசம்ஹாரர்.

சுழிக்கும்புனலேழ்கடல்சுவற்றிமலைகளேழுந்துகள்படத்தி
விழிக்குங்கடவுட்பன்றியினைவிறல்வேடுருக்கொண்டெழுந்தருளி
யழித்தங்கொருவெண்கோடுபறித்தணிந்துமற்றையிடக்கோடு
பழிச்சுந்துதிகேட்டுளமிரங்கிவிடுத்தபகவன்றிருவுருவம். ௩௧

நரசிம்மசம்ஹாரர்.

நன்னாலிரண்டுதிருவடியுநனிநீள்வாலுமுகமிரண்டுங்
கொன்னார்சிறகுமுருத்திரமுங்கொடும்பேராபபுமெதிர்தோற்றிச்
செந்நீர்பருகிச்செருக்குநரமடங்கலாவிசெகுத்துரிகொண்
டொன்னார்குலங்கண்முழுதழிக்குமுடையான்சரபத்திருவுருவம். ௩௨

கங்காளர்.

குறளாயணைந்துமூவடிமண்கொண்டுநெடுகிமூவுலகுந்
திறலானளந்துமாவலியைச்சிறையிற்படுத்துவியந்தானை
யிறவேசவட்டிவெரிநெலும்பையெழிற்கங்காளப்படையென
வறவோர்வழுத்தக்கைக்கொண்டவங்கணாளன்றிருவுருவம். ௩௩

காலபைரவர்.

பொலங்கொள்பங்கிமுகரோமம்பொலியவுமையோடம்புயம்போ
லலர்ந்தவிழிகளிரண்டுமெதுமுகிழ்த்தாலனையநுதல்விழியு
மிலங்கவிரவிநடுவிளங்கியிருவரிகல்போதயன்சிரங்கொய்
தலங்குமுகிரான்மருங்கமரவமர்ந்தபெருமான்றிருவுருவம். ௩௪

பிக்ஷாடனர்.

அடியிற்றொடுத்தபாதுகையுமசைந்தநடையுமிசைமிடறும்
வடிவிற்சிறப்பநடந்தருளிமூழையேந்திமருங்கணைந்த
தொடியிற்பொலிதோண்முனிமகளிர்சுரமங்கையரைமயல்பூட்டிப்
படியிட்டெழுதாப்பேரழகாற்பலிதேர்பகவன்றிருவுருவம். ௩௫

பிரதிஷ்டாபயன்.

என்றுமறையாகமம்வகுக்குமின்னோரன்னதிருவுருவு
மொன்றுகாஞ்சித்திருநகரிலுடையபெருமானேகம்ப
மன்றல்கமழுமலர்வாவிமதில்சூழ்கோயிலகவரைப்பி
னன்றுமகிழ்ந்துவிதியாற்றாற்பதிட்டைபுரிந்தநலமுடையோர். ௩௬

எண்ணில்கோடியிளம்பரிதிகுழீஇக்கொண்டெழுந்தாலெனவயங்கி
விண்ணை விழுங்கும்வளரொளிசூழ்விமானமேல்கொண்டிருமருங்கும்
வண்ணமணிச்சாமரையிரட்டவானோர்முடிகளடிவருடத்
தண்ணெனறும்பூமழைபொழியத்தனிவெண்கவிகைமிசைநிழற்ற.

மிதுனம்பயிலுங்கின்னரங்கண்மெய்சோர்ந்தணுகிப்புடைவீழப்
பொதுளுந்தருக்கள்கனிந்துருகிப்புதுப்பூங்கொம்பர்தலைகுராங்க
மதுரங்கனிந்தமென்கிளவிமடவார்பாடுமிடற்றிசையு
முதிருஞ்சுவைதீங்குழலிசையுமுதல்யாழிசையுந்தலைமயங்க.

பண்ணின்மழலைத்தேன்றுளிப்பப்பனிப்பூங்கதுப்பிற்றேன்றுளிப்பக்
கண்ணும்விரலும்புடைபெயரக்கண்டோர்மனமும்புடைபெயர
வண்ணமணிமேகலையிரங்கமறுகுமிடைக்குவேளிரங்க
விண்ணின்வாழ்க்கைமெல்லியலார்மின்னுக்கொடிபோலெதிர்நடிப்ப.

சென்றுசேர்ந்துபன்னெடுநாட்சிவலோகத்திற்பரபோக
நன்றுநுகர்ந்துபின்னெடுமானளினக்கிழவன்வாசவன்சீ
ரொன்றுமேனைப்பெருந்தேவருலகமனைத்துமணைந்தணைந்து
மன்றநெடுநாளாங்காங்குப்போகநுகர்ந்துவைகியபின்.

முந்நீர்வரைப்பினவதரித்துஞாலமுழுதுமொருகுடைக்கீழ்ப்
பன்னாளாண்டுமறுவலுஞ்சீர்பரவுங்காஞ்சித்திருநகரிற்
பொன்னார்வேணியேகம்பப்புத்தேளடிக்கீழ்வழிபட்டு
மின்னோர்பாகன்றிருவருளான்மீளாவீட்டினிலைபெறுவார்.

மற்றையதெய்வப்பிரதிஷ்டையும்பயனும்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஓங்குயர்விழுச்சிர்க்கம்பனார்கோயிலுள்ளுறைநந்தியெம்பிரானை
யாங்கவர்திருமுன்வெள்ளியங்கயிலையமர்ந்தெனத்தருமவெள்விடையை
வாங்குவில்வரையார்வாய்தலினிருபால்வாயில்காப்பாளரையமைப்போர்
தேங்கியசெல்வச்சிவபுரியணுகித்திருநலந்திளைத்துவீடடைவார்.

ஆங்குசபாசம்வரதமோடபயநாற்கரத்தமைவரக்கலைமான்
பங்கயக்கிழத்திபாங்கியர்சூழப்புத்திரபீடமேல்வைகு
மெங்கணுயகிதன்றிருவுருப்பிறவுமியற்றிவண்காஞ்சியினமைப்போர்
தங்கிளைகுளிர்ப்பநெடிதுநாள்வாழ்ந்துகடைமுறைதாளிணைசேர்வார்.

ஐங்கரப்பெருமானறுமுகக்குரிசிலறிவிலான்வேள்விபாழ்படுத்த
வன்கழல்வீரன்கேத்திரபாலவயிரவர்தம்மையாங்கமைப்போர்
செங்கதிர்துற்கைமாயனையயனைத்திருத்தகநிறுவினர்தாமும்
புங்கவர்வழுத்துமவ்வவருலகம்புகூஉப்பெரும்பயனுகர்ந்தமர்வார்.

அறநெறியொழுகிச்சிவாகமமறைநூலஞ்செழுத்துண்மைதேர்ந்துணர்ந்து
முறைப்படியுளிவழாதுகண்டிகைபூண்டுமுழுதுநீறணிந்துவெள்விடையூ
ரிறையவனடிக்கீழ்ப்பொதுவறுசிறப்பினெண்வகையுழுவலன்புடையார்
மறையவர்வேந்தர்வணிகர்வேளாளர்மற்றையர்யாவரேயாக.

மன்னியபிரமசரியமில்வாழ்க்கைவனம்புரிநிலையினராக
வன்னவர்தமக்குமனைநிலையீகையாதியவளித்துவண்காஞ்சித்
தொன்னகர்வரைப்பிற்கவலையின்றிருத்துந்தூயவர்கறைமிடற்றிறைவன்
றன்னருள்வடிவம்பதிட்டைசெய்தவர்க்குச்சாற்றியபயன்முழுதடைவார்.

[illegible]ற்றெலா[illegible]சன்றிருவடித்தலத்தேபதித்துடற்சார்பறநீத்த
வற்றமி[illegible]ட்சிப்பெருந்துறவுடையாரடியிணைதொழுதுபோற்றிசைத்து
சுற்றும்பொதும்பர்த்தடம்புனற்காஞ்சிச்சூழலுட்பயிக்கநன்குதவப்
பெற்றவர்பெறும்பேறிற்றெனக்கிளத்தல்பெரும்பணித்தலைவர்க்குமரிதே.

பொருணிலைக்கேற்பவோவியத்தலத்திற்புகாறுபடாந்தனிலனைய
திருவடிவங்களெழுதிவைப்பவருந்தீவினைதுணித்துவீடடைவா
ரருமறைமிருதிசிவாகமபுராணமனைத்தினும்புகன்றவாபுகன்ற
மருணிலைகழித்துமாசறுதவத்தீர்மற்றுளதருமமும்புகல்வாம்.

சிவாலயப்பிரதிஷ்டையும்பயனும்.

கலிநிலைத்துறை.

வளங்கொள்கச்சிமாநகர்மறுகிடைவிளையாடு
மிளஞ்சிறார்களும்புழுதியிற்சிவாலயமியற்றிக்
கிளர்ந்துபோற்றினுஞ்சிவபுரங்கெழுமுவரென்றால்
விளங்குகாஞ்சியிற்சிவாலயமெடுப்பதேவேண்டும். ௪௯

ஈட்டுகின்றதம்பொருள்வருவாயினுக்கிசைய
வூட்டருஞ்சுடர்மணிகளிற்கனகத்தினெட்டபங்
காட்டுதாதுவில்வெள்ளியிற்கதையினிற்சனலின்
வாட்டுசெங்கலின்மாத்தினின்மண்ணினுறுதல். ௫0

கந்தமாதனம்பனிவரைநீலம்வான்கயிலை
மந்தரந்திகழேமகூடம்வளர்நிடத
முந்துபொன்வரைமுதல்குலவரைப்பெயரொன்றுஞ்
சந்தமேனிலைக்கோபுரமண்டபந்தயங்க. ௫௧

விளங்குநாகரந்திராவிடம்வேசரமற்றுங்
கிளந்தவற்றுளோர்பெற்றியிற்கெழுவுபேரன்பாற்
றுளங்குவெண்டிரைக்கருங்கடற்சுடுவிடம்பருகிக்
களங்கறுத்தவனாலயங்காண்டகவெடுப்போர். ௫௨

மேவுமவ்வமால்வரைநிகர்விமானமேல்கொண்டு
தேவர்மாலயன்முனிவரர்சித்தரேத்தெடுப்பக்
காவிநேர்மிடற்றெம்பிரான்கயிலையைநண்ணி
யோவரும்பெரும்போகமுண்டுறைந்துவீடடைவார். ௫௩

சீர்ணோத்தாரப்பயனும்.

முரிந்துவீழ்ந்தனவெடித்தனவுடைந்தனமுதிய
நெரிந்தவாகியகோபுரநெடுமதில்பிறவுந்
தெரிந்துமுன்னையிற்சீர்பெறப்புதுக்குவோர்பண்டு.
புரிந்துளோர்பெறும்புண்ணியநான்மடங்குறுவார். ௫௪

மெய்யனாலயப்பணியுடல்விருத்தியைக்குறித்துச்
செய்துளோர்பெறும்பயனுமொண்மகமெலாஞ்செய்தா
ரெய்துமாறரிதென்றிடிலுறுதியோடியற்று
முய்தியாளருக்குரைத்திடவேண்டுவதெவனோ. ௫௫

எட்டுச்செங்கலினாயினுமீர்ம்புனல்வேணி
வட்டச்சென்னியாலயத்திருப்பணிவகுத்த
லொட்டிப்பெற்றவிவ்வுடற்பயனாவதென்றுணர்வீ
ரட்டுத்தீவினையைந்தவித்தொழுகுமந்தணர்காள். ௫௬

சாதனங்களும்பயனும்.

ஏற்றின்மேலவனாலயத்திருப்பணியியற்று
மாற்றலில்லருங்கோயிலினகம்புறமெங்கும்
போற்றிநுண்ணுயிர்மெல்லெனவலகிடல்புரித
னூற்றுநூறுசாந்திராயணகிரிச்சிரநோக்கும். ௫௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குடம்புரைசெருத்தற்றீம்பால்கொழித்திடுங்கபிலையாப்பி
யிடம்படும்விசும்பினேந்திவடித்தநீர்வாக்கியென்று
மடம்பணிசடிலத்தெங்கோனாலயமெழுகுவோர்க்குப்
படும்பயனதனினூறுமடங்கெனப்பகருநூல்கள். ௫௮

ஒலிமலர்த்தொடரிபெம்மானெண்ணிலாக்குழவிவேய்ந்த
வலர்முடிச்சடையிற்சாத்தனூற்றுநூறதிகமாகு
மலர்தொறுமுவகைபூத்துவானவர்வதிவாரந்த
நலமிகுமலர்கொண்டேத்தனுதனுக்கினிதென்றோர்வீர். ௫௯

புட்பத்தினதிதேவதைகள்.

கன்னிகாரத்தில்வாணியலரியிற்கமலப்புத்தேள்
வன்னியில்வன்னிநந்திநந்தியாவட்டப்பூவிற்
புன்னையில்வளிநமேருப்பூவினிற்கணங்களோடு
துன்னியவெருக்கினங்கித்தோன்றல்செண்பகத்துச்செவ்வேள். ௬0

திருமகள்வில்லந்தன்னிற்சிறந்தகொக்கிறகின்மாயோன்
வருணன்வாருணமென்போதில்வகுளத்திற்சுயசைமற்று
நிருதிமென்சிரீடப்பூவிற்சாதியினிகழீசானன்
பரிதிசெங்கழுநீர்ப்பூவிற்குமுதத்திற்பனிவெண்டிங்கள். ௬௧

இந்திரன்மந்தாரத்தினியக்கர்கோன்பொலம்பூமத்தத்
தந்தகனபாமார்க்கத்தினாருள்கூர்ந்துவாழ்வார்
கந்தமென்கமலப்போதிற்கண்ணுதலிறையேவைகும்
பைந்துகணீலப்பூவிற்பனிவரைப்பிராட்டிமேவும். ௬௨

மேதகுவாசத்தெல்லாமலைமகள்விரும்பிவைகு
மாதலாலினையபூக்களமைந்தவைகொண்டுசெய்யும்
பாதபூசனைக்கேகம்பப்பரம்பொருள்கருணைகூரும்
போதணிபுயத்தின்மேலாம்பூந்தொடைதொடுத்துச்சாத்தல். ௬௩

அவற்றினுமதிகமாகுமலர்ந்தபுண்டரிகமாலை
யெவற்றினுஞ்சிறந்தமேன்மையெழிற்கருங்குவளைப்போது
நிவப்புறுநூற்றுப்பத்தானெடுந்தொடைமாலைசாத்திற்
பவத்தொகையிரியநூறிமுத்தியேபயக்குமம்மா. ௬௪

ஓங்குயர்திருவேகம்பமுடையவன்றிருமுன்வாசம்
வீங்குநெய்விளக்குத்தூபம்விளைத்திடின்முருகுநாறிப்
பாங்கொளிபரப்புமேனிபடைத்துவெண்கயிலைநண்ணித்
தேங்கருடபரமானந்தவேலையுட்டிளைத்துவாழ்வார். ௬௫

மட்டவிழ்பொழில்சூழ்கம்பவரைப்பிடைமதிதேய்பக்கத்
தட்டமிபதினுன்கானதினங்களினன்புகூர்ந்து
வட்டெழிற்கபிலையானெய்கலந்தகுங்கிலியத்தூப
மிட்டவர்செய்தகுற்றமாயிரம்பொறுப்பனெங்கோன். ௬௬

வடித்தநீர்வாசம்பெய்துவள்ளலுக்காட்டல்செய்யிற்
படித்தலைப்பத்துநூறுபரிமேதஞ்செய்தபேறுங்
கடிச்செழுந்தயிலமானெய்கமழுமைந்தமிர்தமெம்மா
னடித்துணைக்குறுமாணைந்துமொன்றினென்றறிகமாமால். ௬௭

மண்டுபேரன்பினுன்பான்மணிமுடிக்காட்டுவோர்பா
லண்டர்தம்பெருமான்மேன்மேலளவிலாமகிழ்ச்சிகூரும்
வெண்டயிர்கருப்பஞ்சாறுவிளைமதுபிறவுமாட்டி
னெண்டரும்வேள்வியெல்லாமியற்றியபெரும்பேறெய்தும். ௬௮

மந்திரத்திருவொற்றுடைசாத்திமர்ன்மதங்கற்பூரஞ்
சந்தனக்கலவைசாத்திச்சாந்தாற்றிப்பணிசெய்கிற்போர்
தந்திருமரபிற்கோடிதமர்களைநரகினீக்கி
யிந்துவாழ்சடிலத்தெந்தையிணையடிநீழல்வாழ்வார். ௬௯

நுழையுநூற்கலிங்கம்வெண்கேழ்நுரைபுரைநறும்பூம்பட்டு
விழைதகுதீவிற்றந்தவிசித்திரபடங்களன்பான்
மழைமிடற்றிறைக்குச்சாத்தின்மழுவலானுலகிஞேரோ
ரிழையினுக்கியம்புங்கற்பமாயிரமினிதுவாழ்வார். ௭0

நால்விரலளவைகொண்டநல்லிழைதொண்ணூற்றுறிற்
சால்புறமும்மூன்றுக்கிழென்றுறச்சமைத்தபூணூல்
சீலமோடென்றுஞ்சாத்துந்திருமறையவரைக்கண்டான்
மாலுடைப்புலையர்தாமுமறுமையின்மறையோராவார். ௭௧

இம்மியினளவுசெம்பொனெம்பிரான்முடியிற்சாத்தி
னம்மவாங்கவர்பெறும்பேறனந்தற்குமளத்தல்செல்லா
விம்மியசெல்வர்கோடிவீசலும்வறியோர்தன்ன
முண்மையினளித்தற்கொவ்வாவுறுதியன்புடைமைபெற்றால். ௭௨

வெறிமலரிண்டைமாலைவிரைகமழ்தூபதீப
மறுசுவையடிசிலான்றவெள்ளிலைபழுக்காய்மற்று
முறுகுடைகவரியாதிபூசனைக்குரியவெல்லா
முறுகுபேரன்பினெந்தைக்காக்குவோர்முத்தராவார். ௭௩

நித்தியத்திருநாள்பக்கவிழாநிகழ்திங்கட்சாறும்
புத்தலரிளவேனிற்கட்பொருவரும்வசந்தங்கோடை
மெத்தியமுதுவேனிற்கண்மிதவைநீராட்டுமோரி
மொய்த்தகார்ப்பருவந்தன்னிற்பவுத்திரமுதுவிழாவும். ௭௪

அன்புறுகூதிர்க்காலையைப்பசிப்பூரச்சாறு
முன்பனிப்பருவந்தன்னில்வைகறைமுகிழ்த்தபூசை
பின்பனிப்பருவந்தன்னிற்பிறங்குபொன்னூசலாட்டு
மென்பனசிறப்புமாணவியற்றுவோர்வீடுசேர்வார். ௭௫

பொங்கரிபரந்தவுண்கட்பூவையோடொருமாநீழற்
றங்கியபெருமானார்க்குச்சார்தருமாண்டுதோறும்
பங்குனித்திருநாட்செய்கைபழுதறுசிறப்பின்மல்க
மங்கலவிதியினாற்றால்விடைக்கொடிவயங்கவேற்றி. ௭௬

கலிவிருத்தம்.

முழவந்திண்டிமம்பேரிமுரசுசீ
ரொழுகுகாகளமாதிபுலம்புவ
கழிபெருங்கடல்காட்டவதனிடைக்
குழுமுபேனமொத்தொண்குடைபம்பிட. ௭௭

அன்னமாக்கடற்றோன்றியவாரமிழ்
தென்னமாதர்மிடற்றிசைப்பாடலு
நன்னர்மங்கலநாதமும்வேதமு
மன்னுமன்பர்கள்பாட்டுமலிந்தெழ. ௭௮

இமயமாதியவிஞ்சையங்குன்றெலாந்
தமதிருங்குடித்தையலெல்லாரொடும்
விமலர்கொள்ளும்விழாவணிகாணவந்
தமைவுகொண்டெனத்தேர்களலங்குற. ௭௯

பொன்னங்கிண்கிணிபூஞ்சிலம்பின்னொலி
மின்னுமேகலையார்ப்பொலிமிக்குற
வன்னமன்னவணங்கனையார்குழாந்
துன்னியெங்கணுமாடறொடங்கிட. ௮௦

சிகரமாளிகைத்தெற்றிதொறும்பயின்
மகரதோரணப்பன்னிறமாமணி
துகளில்பேரொளிதுன்றியவீதியும்
புகரில்சித்திரந்தீட்டியபோலுற. ௮௧

பூகமும்பசும்பொற்குலைவாழையு
மாகமுந்திடநாட்டிவயக்கிய
போகுபந்தரும்பூரணகும்பமு
மேகுமவ்விடந்தோறுமிலகிட. ௮௨

வளியுலாமதர்மாளிகைசூளிகை
குளிர்கொண்மண்டபங்கோபுரமீதெலா
நளிமலைத்தலைநன்கொடிபூத்தெனக்
களிமடக்கொடியார்களுலித்தொழ. ௮௩

குங்குமக்குழம்புங்குளிர்சாந்தமும்
பொங்குவாசப்புதுப்பனிநீரொடு
வெங்கண்மங்கையர்பந்தினில்வீசுவ
வெங்குமல்கியடிகளிழுக்குற. ௮௪

முடிகடம்மினராவிமுழுமணி
படியிலுக்கனபாறினங்கொண்மினென்
றுடையமாந்தர்க்கறிவுறுத்தாங்கவ
ரடிகள்பேதுறுத்துங்கங்கவிர்தர. ௮௫

இளிந்தபூகத்திருங்கனிவெள்ளிலை
யொளிர்ந்தபொன்மணியொண்பொரிபன்மல
ரளிந்தபல்பழமாதியிறைப்பன
குளிர்ந்துவீதிகுழீஇத்திடர்செய்திட. ௮௬

கவளயானைக்கடாமழைத்தாரையு
மிவுளிவாயினிழிந்தவிலாழியு
முவரியாகியுயர்ந்தவத்திட்டையைத்
திவளமோதிப்படர்ந்தனசெல்லவே. ௮௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கல்வரைப்பிராட்டிசெவ்வேளைங்கரன்கணங்கள்சூழப்
பல்வகையூர்தியும்பர்ப்படரொளியரசவீதி
யெல்லையிலுயிர்கட்கெல்லாமெண்ணருங்கருணைபூத்துப்
புல்கொளித்திருவேகம்பன்றிருவுலாப்போதச்செய்வோர். ௮௮

மேதகுதவந்தானங்கள்வேள்விகளனைத்துஞ்செய்தோர்க்
கோதியபயத்திற்கோடியுடையராய்க்கோடிகோடி
யேதமில்குலத்தினோடுமெம்பிரானுலகின்வாழ்ந்து
சாதலும்பிறப்புமில்லாத்தத்துவந்தலைப்பட்டுய்வார். ௮௯

இத்தகுகடவுட்சாறுநோக்கியங்கிறைஞ்சுவோரு
மத்தகுவிழவினீற்றிற்றீர்த்தநீராடுவோரும்
பைத்தபாம்பல்குற்செவ்வாய்ப்பனிமொழியொருபான்மேய
வித்தகன்கயிலைநண்ணிவிறற்கணநாதராவார். ௯0

ஏழுயர்ந்தேழுமண்டோய்ந்திலக்கணநிரம்பும்வேறுங்
காழ்மணியணிகள்பூட்டிக்கவின்பெறவிருத்தியோடுங்
கோழரைத்தனிமாநீழற்குழகனுக்குதவப்பெற்றோர்
பாழ்வினைச்சிமிழ்ப்பிற்றீர்ந்துதிருவருள்பற்றுவாரால். ௯௧

நலமிகும்பரிமாவாக்களுடகக்கணிகைநல்லார்
நிலநகர்நாடுமற்றுநெடுமறைமாவின்மூலத்
தலைவனுக்கினிதுநல்குந்தவத்தினோர்கயிலைநண்ணி
யலகில்பல்லூழிவாழ்ந்துங்கரும்பெறல்வீடுசேர்வார். ௯௨

மாயிருமறைகண்மற்றும்புத்தகத்தெழுதிக்கம்பக்
கோயிலினமைப்போர்வெள்ளிக்குன்றிடையெழுத்தொவ்வொன்றற்
காயிரங்கற்பம்வாழ்வார்சிவாகமமமைக்கும்பேறு
மேயினோரெய்தும்பேற்றையாவரேவிளம்பவல்லார். ௯௩

வண்டுளர்தனிமாநீழல்வள்ளலுக்கன்புகூர்ந்து
பண்டுளோராக்குமின்னவறங்களைப்பாதுகாப்போ
ரெண்டிறலன்னோர்பேற்றிற்பதின்மடங்குறுவர்மையல்
கொண்டிவைகாவாவேந்தர்நிரயமேகுளிப்பருண்மை. ௯௪

அனந்தராலவற்றொன்றேனுங்கவருநரையமின்றி
யினம்பயில்கடும்பினோடுங்கெடுவராலினையநீரார்
றனங்களுங்கிளையுந்துன்றத்தங்குதல்விழையும்வேந்தர்
கனம்பயில்பொழில்சூழ்காஞ்சியுறுதியின்வழாதுகாத்தல். ௯௫

கச்சியின்வாவிகூவல்கடிபொழில்வகுத்துப்பேணிப்
பொச்சமில்சிவநேசர்க்குப்பொருணிலம்வதுவையீவோர்
நிச்சலுமன்னதானநிகழ்த்துவோரெய்தும்பேறு
பச்சிளங்கொடியினேர்பாற்பகவனேயறியுமன்னே. கூசு

சொல்லுமித்தருமவாய்மைத்தொகுதியுள்யாதொன்றேனும்
வல்லுநர்வல்லாராகமதிபொதிவேணியார்க்கு
நல்லரசிருக்கையாயகாஞ்சிமாநகரினோர்நா
ளல்லதோர்கணமேயானுமமர்ந்திடிற்பிறப்புநீப்பார். கூஎ

கண்டிகைநீறுதாங்கிக்காலையுமாலைப்போது
மண்டர்கோனடிகள்போற்றியடியவர்பூசையாற்றித்
தொண்டினலங்கண்வைகுந்தூயவர்தமக்கேகம்பத்
தொண்டொடிபாகனெங்கோன்கருணைகூர்ந்துதவுமுத்தி. கூஅ

பற்பலபேசியென்னேபருவருநிரயத்துன்புந்
துற்றபல்யோனிதோறுஞ்சுழன்றுழல்பிறவிநோயு
முற்றிடுமாண்டாண்டெய்துமுறுதுயர்பலவுநோக்கி
மற்றிவையொழிதல்வேட்டோர்காஞ்சியின்வதிதல்வேண்டும். கூகூ

காஞ்சியேகலியில்வசித்தற்கிடமெனல்.

கலிவிருத்தம்.

காமருஞ்சிவிகைகள்காவியாயினுந்
தோமுறுபிறர்சுமைசுமந்திட்டாயினுஞ்
சாமியென்றிழிஞர்தம்பணிசெய்தாயினு
மாமதிற்காஞ்சியின்வதிதல்வேண்டுமால். கOO

கழுதைமேய்த்தாயினுமற்றுங்காழ்படு
மிழிதொழிலியற்றியுமிரந்துண்டாயினு
மொழிவறுபத்தியினுறுதியாளராய்
வழுவறுகாஞ்சியின்வதிதல்வேண்டுமால். கOக

பாதகமிகுதியோர்பதிதர்மூர்க்கர்கள்
போதமில்கயவர்கள்புலையராயினு
மாதர்வள்காஞ்சியின்வதிவராயிடிற்
கோதறுகலியினின்முத்திகூடுவார். கOஉ

ஒளவியங்கொலைகளவாதிமிக்குடைக்
கௌவைகூர்கொடுந்திறற்கலியுகத்திடைத்
தெய்வதக்காஞ்சியந்தேயத்தன்றிமற்
றெவ்விடத்தெய்தினுமுத்தியில்லையே. கOங

இல்லைவைதிகநெறியில்லைநல்லற
மில்லைநால்வருணமாச்சிரமமில்லையா
மில்லைமாணுக்கர்களில்லையாரிய
ரில்லைநல்லொழுக்கமுங்கலியினென்பவே. கOச

வைதிகசைவநூன்மானக்கோளிலை
பொய்யிலைநீறெழுத்திற்கண்மணியிற்பூதியி
லைமுகப்பிரானிடத்தன்புமிவ்வுகத்
தெய்திடுமிருபிறப்பாளர்க்கில்லையே. கOரு

தாபதப்பிருகுமெய்த்ததீசிகௌதமன்
சாபமன்றியுங்கலிதோடத்தான்மிகத்
தேய்பொருட்பாஞ்சராத்திரம்பவுத்தமாம்
பாபநூலுறுதியேபனவர்க்குண்டரோ. ௧0௬

யாதுகொல்கலியதனியல்புமங்கதற்
கேதமுமதன்மிறைகாஞ்சிக்கின்மையு
மோதுதிவிரித்தெமக்கெனவுரைத்தலுஞ்
சூதமாமுனிமுனிவரர்க்குச்சொல்லினன். ௧0௭

யுகம்நான்கும்வரம்பெறல்.

கலிநிலைத்துறை.

சகமெலாமலைமாதொடுந்தன்னகத்தொடுக்கிப்
பகலிராவுளதிலதெனும்பகுப்பிலக்காலைப்
புகழ்படைத்ததாெனொருவனேவைகிமுன்போல
வகிலலோகமும்படைத்திடக்கருணைசெய்தருளி. ௧0௮

அறிவுமிச்சையுஞ்செய்கையுமடைவுறத்தோற்றி
வெறிமலர்த்தவிசிருக்கைவேதியனைமுன்படைத்து
மறைகளீந்துபின்மாயனையும்பரையுலகை
முறையினின்றளித்தருளினன்முக்கணெம்பெருமான். ௧0௯

மன்னுநான்மறைவேதியர்மன்னவர்வணிகர்
பின்னுளோருடன்வீடறம்பெரும்பொருள்காம
மென்னுநான்கினையிசைவுறத்தோற்றியிங்கான்கிற்
பன்னுசீருகப்பெயரியநான்கையும்படைத்தான். ௧௧0

கனிந்தகாதலாலன்னவைகாஞ்சியைக்குறுகி
யனந்தபற்பநாபீச்சரந்தனக்கயல்வடபான்
மனந்தழைத்திடச்சிவக்குறிநிறுவிநாண்மலர்கள்
புனைந்துபோற்றிநின்றருந்தவமாற்றிடும்பொழுது. ௧௧௧

கம்பநாயகர்விடைமிசைக்காட்சிதந்தருளி
யிம்பர்வேட்டதுவிளம்புமின்றருதுமென்றருள
வம்புலாமலர்தூய்த்தொழுதிறைஞ்சிவாழ்த்தெடுத்துத்
தம்பிரானெதிருகங்கண்மற்றின்னதுசாற்றும். ௧௧௨

நரகும்வானமுநல்கிடும்பனிவரைத்தென்பாற்
கருமபூமியையாம்பகுத்தாள்கருத்துடையேம்
பெருமநீபகுத்தெங்களுக்கருளெனப்பேசித்
திருவடித்துணைபழிச்சலுஞ்சேவுடைக்கொடியோன். ௧௧௩

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கருமமிகழ்பாரதமாம்வருடமிசைக்காலப்பேரிறைமைநும்பா
லிருவினைமாண்டளவையொன்றெழிந்தபதினொருநான்கிலக்கமேலா
லிருபதினுயிரமுறுகவிங்கிவற்றைநால்வீர்க்குமேயுமாற்றால்
வருமுறையிற்கூறுபடுத்துதவுதுமென்றருள்செய்துவகுக்கலுற்றான்.

அருள்பயக்கும்வீடுதவுங்கான்முளையாங்கிருதயுகமூத்தோயாதி
தெருள்பயக்குமறம்பயக்குந்திரேதாநீயிளையோய்காண்செப்புங்காலைப்
பொருள்பயக்குந்துவாபரநீயிவர்க்கிளையாய்பொலிவுபெறுகாமமீன்ற
மருள்பயக்குங்கலியுகநீமூவருக்குமிளையோயாய்வயங்குவாயால்.

வேதியனேகிருதயுகம்வேல்வேந்தன்றிரேதாமெய்வணிகன்றானே
யோதுதுவாபரமேனோன்கலியாகுமிம்முறையானுமக்குவைத்த
வேதமிலிந்நாற்பதுமூன்றுலக்கத்திருபதினாயிரமாமாண்டும்
பேதமுறுமீரைந்துகூறாகப்பகுத்தந்தப்பிரிவின்மன்னே.

கிருதமோர்நாற்கூறுமுக்கூறுதிரேதாவுங்கிளந்துகூறு
மிருகூறுதுவாபரமுமொருகூறுகலியுகமுமெய்துவீராற்
பெருவாய்மைமறையாகநாற்குலத்துமனைவியர்பாற்பெறுஞ்சேய்கட்கு
வருகூறுமிவ்வாறேநான்குமூன்றிரண்டொன்றுவழக்கமாமால்.

இவ்விடையேற்றறக்கடவுண்முறையானேயெழிற்கிருதமுதலீர்நும்மை
யெவ்வமறுநாற்பாதமுப்பாதமிருபாதமொருபாதத்தாற்
கௌவையறநடத்திடநீர்காசினியைநடாத்திடுமின்முதன்மூவிர்க்கு
மௌவியமிலம்புயத்தோனிரவிமாலிவர்முறையேயிறைவராவார்.

தீமையேமிகப்படைத்தகலியிவராற்காப்பரியதிறத்தாலிந்த
நாமநெடுங்கலிநாளின்மன்பதைகள்புரப்பதற்குநாமேயுள்ளேங்
காமருசீருகங்காண்மற்றின்னுமொருமொழிகேண்மின்காதல்கூர்ந்தி
யாமினிதுமகிழ்ந்துறையுங்காஞ்சியிடைநும்மவத்தையெய்தாதாக.

வெய்யகொடுங்கலித்தீமைசிறிதுமிவணுறலவேண்டாவிவ்வாறென்று
மையகலநம்மாணைவழியொழுகியுய்மினெனவரங்களீந்து
கையொளிருமழுப்படையோனருள்செய்தானாதலினிக்கலிநாண்முத்தி
யெய்தியிடும்விழைவுடையோர்திருக்காஞ்சியிடம்பிரியாதிருத்தல்வேண்டும்.

நந்திபிரானருள்பெற்றுச்சனற்குமரனவின்றபடிவியாதமேலோ
னிந்துவாழ்சடைப்பெருமான்றிருவடிகாண்பதற்கேதுவிதுவேயென்ன
வந்திலெனக்குரைசெய்தவரும்பொருளிங்குமக்குரைத்தேனறிவினொன்ற
சிந்தையீர்தெளிமினெனச்சூதமுனிமுனிவரர்க்குத்தெருட்டினானால்.

சிவபுண்ணியப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உ௭௪உ.

முதற்காண்டம்முற்றியது.

சிவஞானயோகிகள்சேவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாவடுதுறைக்கச்சியப்பமுனிவரர்

அருளிச்செய்த

காஞ்சிப்புராணம்.

இரண்டாங்காண்டம்.

காப்பு.

கலிவிருத்தத்துறை.

பகடசக்கரமுதற்பலபவமெனுந்துயரி
னிகடசக்கரங்கடத்திடுநெடும்புணைவிண்போழ்
முகடசக்கரவாளத்திற்சூழ்வினைமுடிக்கும்
விகடசக்கரதந்திமென்மலரடித்துணையே.

கடவுள்வாழ்த்து.

திருவேகம்பநாதர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மழலைவண்டிமிருங்கொன்றைமாலிகைதுவற்றுந்தேனுங்
குழவிவெண்மதியுநீருந்தருகுளிர்க்குடைந்தான்மானத்
தழல்விழித்தலத்துமங்கைத்தலத்தினுமேந்தியாடு
மழகனைத்திருவேகம்பத்தடிகளைவணக்கஞ்செய்வாம். க

காமாட்சியம்மை.

முறுவலித்தருளுந்தோறுமொய்த்தெழுநிலவுபொங்கி
யுறைபடத்துளித்தவில்லையொழுங்குறக்கிடந்தாலென்னப்
பிறைவடஞ்சுமந்தகொங்கைப்பேரமைத்தோளிமம்மர்க்
கறைதபுகாமக்கண்ணிகழலிணைகருத்துள்வைப்பாம். உ

நூல்வரலாறு.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வியன்சனற்குமாரசங்கிதைதெரித்தமேன்மையீண்டறைந்தனமிதன்மே
லியம்புபல்வேறுபுராணத்துமூண்டாண்டிலகியகாஞ்சிமான்மியத்தை
நயந்தெடுத்தொழுங்குபடத்தொகுத்துரைப்பான்புகுந்தமுன்னவில்பிரமாண்டத்
தயன்சனற்குமாரன்றெளிதரத்தெருட்டுமற்புதக்காதைகட்டுரைப்பாம்.

கடவுள்வாழ்த்துமுற்றிற்று.

திருக்கண்புதைத்தபடலம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நிலத்திடைச்சிறந்தநகரெனப்படுவநீள்புகழயோத்திமாமதுரை
மலர்ப்பொழிற்காசியவந்திகைதுவரைமாயைவண்காஞ்சியென்றுரைப்ப
மலக்குறும்பறுக்குநகரமேழுள்ளுமேம்படுகாஞ்சிமற்றதன்கட்
பலப்பலதளியுளேழுநான்கதிகம்பகர்தருமவற்றுண்மூன்றதிகம். க

அன்னவைகச்சபாலயங்காயாரோகணங்கம்பமரீமவற்றி
னின்னநீர்பலாசுகூவிளஞ்சூதமெனப்படுமரங்கண்மூன்றுளவான்
முன்னுமத்தருக்கண்மாமுறவாணிதிருவுமைமூவருமென்று
மன்னினர்வழுத்தப்படைத்தளித்தழிப்பார்வடிவமாய்த்திகழுமத்தளிகள்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பஞ்சதீர்த்தத்தவள்காஞ்சிப்பதியாண்மணித்தானத்துடையா
ளஞ்சந்தியினில்வாழ்வாள்சேயாற்றங்கரையாள்கீர்த்திமதி
கஞ்சவதனத்தென்மலையாள்காப்புத்தீர்த்தத்தவளென்னுந்
துஞ்சுமிளவண்மௌர்கூந்தற்றுற்கைகூற்றினெண்மர்களும். ௩

புரைதீர்கருப்பத்தானத்திபோற்றுமம்பிகாபுரத்தி
தரைசூழ்கோடிமாரணைதன்காயோற்காரகாரணிசீர்
வரையாவென்றியிலயசித்துப்பீடாபுரத்திமணிசிந்துக்
கரையாள்கூவத்தவளென்றுகாளிகூற்றினெண்மர்களும். ௪

சத்திபீடமுருத்திரனுர்பீடஞ்சசாங்கமாபீட
முத்திபீடமாரியைதன்பீடந்தருமமுதற்பீடம்
பித்தரணுகாவுயராதிபீடம்யோகபீடமென
நித்தநினைப்போரிடும்பையெலாநீக்கும்பீடமோரெட்டும். ரு

உரைக்குமிரவிமதிகனலிசுவணமமிழ்தமுறுபெயரான்
வரப்புட்கரணித்தடமைந்தும்வாசுதேவனரணனே
பிரத்துமினனேடனுருத்தன்சங்கருடணனெனப்பீதாம்
பரத்தன்பகுப்பினைவர்தொடும்பஞ்சதீர்த்தமுதற்பலவும். சு

மதுகைசான்றகணநாதர்மருவுசாத்தரெண்மர்களு
முதுமாதவத்தோர்பலரிமையோர்மொய்பூங்கூந்தலரம்பையர்கள்
பொதுமையிழந்தபலசமயத்தெய்வம்பூதம்பேய்பலவுங்
கதுவித்துவன்றவிறும்பூதுகவினிப்பொலியுந்திருக்காஞ்சி. எ

இனையசிறப்பாற்பன்னிரண்டுதிருப்பேர்படைத்தவிவ்வரைப்பி
னனையபொழில்சூழிமயவரைப்பிராட்டிநணுகிவழிபட்டு
நினைவார்க்கினிக்குமேகம்பநிதியைமிறுகத்தழீஇக்கொண்டு
முனைவன்மேனிகுழைத்ததிறமொருவாறிக்குமொழிகின்றும். அ

கலிநிலைத்துறை.

செறுத்தவன்றிறலரக்கனைத்திருவடிவிரலா
லொறுத்தஞான்றவன்வாய்திறந்தலறுபேரோதை
மறுத்தடாதின்னுமதிர்ந்தெனவயின்வயினருவி
வெறுத்தபூம்புனன்முழக்கறுவெள்ளிமால்வரையில். ௯

முடங்குவாலுளை மடங்கலேற்றணைமிசைமுனிவு
மடங்கலார்புரஞ்செற்றவரினிதமர்ந்தருளி
யுடங்குவந்துதாழும்பர்கோன்றிசைமுகன்பணிலக்
குடங்கையாளிதங்குறைவிளைத்திருவருள்வழங்கி. ௧0

எல்லையில்பெருங்கருணையால்விடையளித்தெழுந்தாங்
கல்லிமென்மலர்த்தொங்கல்சூழ்வளகத்தனுகி
வல்விரைந்தெதிர்கொண்டடிவணங்குமாவிமயச்
செல்விதன்னைமுன்றழீஇக்கொடுபள்ளியிற்சேர்ந்தார். ௧௧

அங்கணுருயிர்த்தொகைக்கெ... ...அப்பரும்போகந்
தங்குமாட்சியின்றலைநின்றுபழையனதணப்பப்
பொங்கொளிப்புதுப்பூண்பலவணிந்துபூந்தவிசி
னெங்கணுயகருமையொடுமகிழ்ந்துவீற்றிருந்தார். ௧௨

அம்மையப்பராயகிலமும்பண்டத்தளித்தருளு
மெம்மையாளுடைப்பேரருளிருநிறத்தவருந்
தம்முளின்னணங்களித்துவாழ்ந்துறையுழித்தணந்தோர்
மம்மர்கூரிளவேனில்வந்திறுத்ததுமாதோ. ௧௩

மலயமாதவன்றமிழ்ச்சுவைதெரிந்தவான்றென்றல்
கலைவிளங்கியவடமொழிச்சுவையையுங்காண்பான்
குலவுதண்மையும்வெம்மையுமணமுங்கொண்டெதிர்ந்தாங்
கிலயம்வார்பொழிலியற்றவந்துலாயதுமன்றே. ௧௪

துன்றுதம்வளமுழுவதுந்தொலைந்தபூஞ்சோலை
தென்றன்முற்றலும்பண்டையிற்செழித்திடுஞ்செயலா
னன்றுமென்புபெண்ணுக்குநற்றமிழ்பயின்மலயத்
தொன்றுதென்றலுஞ்சித்திமிக்குடையதுபோலும். ௧௫

புனிதமென்றளிர்களுலியபூம்பொழிற்பொலிவு
பனியெனுங்கொடுங்கோலனைப்பலர்புகழ்வேனி
லெனுமனுக்குலத்தவனிறுத்திறுத்தபுண்கான்ற
கனலியொத்தநெய்த்தோர்பரந்திட்டதுகடுக்கும். ௧௬

தளிர்த்தமென்றளிர்ச்சேயொளிததைபொழிற்றேற்றம்
வெளிப்படாவகையொளித்துவெவ்விருட்பகைநாளுங்
களித்துவைகிடமிதுவெனக்கதிரவனங்க
ணொளிப்பிழம்பெரியூட்டடின்றொளிர்வதும்புரையும். ௧௭

நெருங்குபன்மலர்நிரம்பியகாட்சிகாமுகர்மே
லொருங்குவெங்கணைசொரியுநாளிதுவெனவுன்னிப்
பருங்கரும்பினுன்றனதுபாசறைக்கணைவாது
பொருங்கடன்படப்பூங்கணைதுறுத்ததுபோலும். ௧௮

புரிமுறுக்குடைந்தலைத்தெழும்புதுமதுத்தோய்ந்து
விரிமலர்த்திரடோற்றியபொலிவுவேட்குரிசி
லுரியவன்சமருஞற்றுவானுழுகுத்ன்கணையிற்
றரிசகற்றநெய்பூசியதொழின்மையேதுணையும். ௧௯

தேந்துளிப்புனறெளித்துநுண் சுண்ணமேற்சேர்த்தி
யேந்தலர்த்தவிசுள்ளெலாமிட்டுவண்காவு
பூந்தண்வார்கணைமதன்விழாப்பொலிவுறப்போது
மாந்தர்யாவருமவைகுமாறழகுசெய்தமைக்கும். உ0

அயிற்குழாம்பொருகண்ணியர்குரலெனவகவுங்
குயிற்குழாங்குடைகாஞ்சியின்கோமளத்தாது
வெயிற்குழாமறைத்திருவிசும்பிருள்செயநோக்கி
மயிற்குழாமெழுந்தாடுவமழையெனமருண்டு. உக

கடம்புசண்பகங்கன்னிகாரங்கணிகடுக்கை
யடம்புவில்லமென்போதவிழ்நறுந்துகளெங்கு
மிடம்பெறுவெயில்செய்தலிற்பகலெனவிரவு
நெடும்பசும்பொழிற்கயத்துறைநேமியின்புறுமால். உஉ

வார்புனைந்தபூண்வனமுலைமாதரையிசையாற்
போர்புரிந்துறவழைப்பனபோலவும்பொழில்கள்
சீர்புனைந்தமைதெரிப்பனபோலவுங்குயில்க
ளார்புமென்றளிர்கொழுதிநின்றாலுவவெங்கும். உங

செக்கரம்புயந்ததைதடஞ்செழுங்கனற்குண்ட
மொக்குமன்னதன்கரைப்பஃறுதுகுபுளினந்
தக்கநூன்முறையாற்றிறற்றயங்குநுண்பொடிக
டொக்கபன்னிறச்சருப்பதோபத்திரந்துணையும். உச

சிலதர்தேனழித்தமைத்துமேற்றெங்கினமுகுத்த
குலவுதீங்கனிமூடியங்கிருந்துபொற்குடந்தா
னலராழ்த்துதிரணிமலர்மென்றளிரேந்தி
யிலகுவேனில்வேளருச்சனைக்கும்பமொத்திலங்கும். உரு

விழுந்தமாதுளங்கனிவனச்சிறார்விளையாட்டா
னெழுங்கவாயிடையுறத்தினமாவிலைசெருகிச்
செழும்பொனீர்க்கலசங்கள்சுற்றமைத்தெனத்திகழுந்
தழைந்தகொம்பரினுகுவனசமிதையிற்றதையும். உசா

முருங்கைபுன்குகான்றுக்கபூமுகைகள்வெண்பொரியி
னொருங்குநீனிறப்பூவையாதிகணெகிழ்ந்துகுவ
மருங்குதொக்கனவெண்முதலொன்பதுவகையு
மொருங்குமல்கியதோற்றமொத்ததிசயம்விளைக்கும். உஎ

இடங்கொள்பூந்தடமெடுத்தெறியூன்கழிகூர்மத்
தடங்களோடும்வெண்பணிலமுந்தளிர்த்தகார்ப்பொதும்ப
ருடங்குவாக்குசெந்தேனிறைந்துறுவனநறுநெய்க்
குடங்களோடெரிகூர்க்குநெய்யகலெனக்குலவும். உஅ

கிளியும்பூவையுங்குயில்களுமஞ்ஞையுங்கிளையு
மளியுமாறுகூயாலுவமுறையுளிவழாமை
யொளிர்செழுங்கனலோம்புமத்தலைமறைமனுக்கள்
களிகொள்சிந்தையிற்சந்தையினோதுநர்கடுக்கும். உகூ

வண்டுபாய்ந்துபாய்ந்துழக்குதோறுவியின்மலர்ந்த
முண்டகத்தினின்றெழுந்துகண்முழங்குவெங்கனலிக்
குண்டநின்றெழும்புலிங்கமேயுறழ்தருங்கொழுந்தே
னுண்டுவானெழுஞ்சுரும்பினம்புகையினையுறழும். ௩0

ஏமமல்கியவின்னபல்வளம்பயில்காட்சித்
தூமலர்ச்சினைசெறிமரப்பசும்பொழிற்றோற்றம்
பூமருங்கணைமாரனூற்பொருளறிவுறுப்போர்
காமதீக்கைசெய்கவின்பொலிசாலையுங்கடுக்கும். ௩௧

முருக்குபோர்புரிகாலம்வந்தடுத்தமைமுன்னித்
தருக்குவேல்கணைமாசறக்கழுவியதகைபோன்
மருக்கொடாமரைத்தேம்பொழிநறுமலரனைத்துந்
திருக்குலாவினபணிபடக்கருகியதிறம்போய். ௩௨

கொழுதுவண்டுலாமங்கையர்கருங்குழல்புரையப்
பழுதில்பூந்துகண்மலர்தளிர்பறித்துநுண்ணறல்கண்
முழுதும்வார்ந்துகட்புலப்படமூரிநீர்குறுகுந்
தொழுதியோதிமம்பயினதித்துறைதுறைதோறும். ௩௩

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிறுவளிக்கொடிஞ்சித்திண்டேர்செலுத்திவந்திறுத்தவைங்கோல்
பெறுசிலைக்குரிசிறன்னைக்காணியம்பெட்டாற்போல
வுறுநலநுகர்ச்சிகொண்மாரொண்ணகர்மாக்களெல்லா
முறுகியகாதல்பொங்கமுன்னுவார்பனிப்பூஞ்சோலை. ௩௪

தெள்ளமுதயின்றூர்மானச்சிந்தையிற்களிப்புத்துள்ள
வள்ளெயிற்றணங்கனூருமைந்தருநுகர்ச்சிமேலா
னுள்ளகநெருங்கிச்சென்றகிளர்ச்சியானும்பர்நாடும்
வெள்ளூறச்சிறந்தவென்பவியனகரிருக்கையெல்லாம். ௩௫

முழங்குறுமதுப்பெய்தண்டுமுருகுலாமெண்ணெய்த்தண்டுந்
தழங்குமாணிழுதுத்தண்டுந்தண்பனிநறுநீர்ச்செப்புங்
குழங்கல்மாலிகைப்பூஞ்செப்புங்கூட்டமைகலவைச்செப்பும்
வழங்கியவாசச்சுண்ணமான்மதச்சாந்துச்செப்பும். ௩௬

கடகமுங்குழையுந்தோடுங்கதிர்மணிவடமும்பூணும்
வடகமுந்துகிலுமற்றும்வகைவகையமைத்துமூடும்
படலிகைக்குலமும்வேட்குக்கையுறைபரிப்பதேய்ப்பச்
சுடரிழைத்தோழிமார்களேந்துவதொகையிலாத. ௩௭

மாடமேலிருந்துதாங்கள்வார்மணிச்சிவிறிவீசும்
பாடமைபனிநீர்தோய்ந்தகுங்குமச்சேறுபாய்ந்த
வாடகவீதிமன்றவழுக்குமென்றஞ்சினூர்போற்
றேடருமணியிற்செய்தசிவிகையினிவர்ந்தார்சில்லோர். ௩௮

மறப்பெருந்திறத்தாற்சுற்றம்புறந்தருமாண்பாலேறு
விறப்பவுந்தோற்றுத்தம்மையெடுத்தனசுமததலைபாலப்
பறப்பளியிமிருந்தானப்பருமிதக்களிநல்யானை
சிறப்புறுகளிப்புத்துள்ளவிவர்ந்தனர்மைந்தர்சில்லோர். ௩௯

நடைத்திறங்கற்பத்தத்தநனந்தலைக்கானநீங்கிக்
கடைத்தலைபன்னாட்காப்பக்கருணைகூர்ந்தூர்ந்துமேன்மை
படைத்ததன்நடையைச்சாலப்பயிற்றுவார்மானக்கோலப்
பிடித்திரளிவர்ந்தார்காமர்பெண்களிமடவார்சில்லோர். ௬௦

வாரிணுல்விசித்தமாதர்வனமுலைதாக்கவிள்ளுந்
தாரிணுல்வனப்பாற்காமன்றனைப்புறங்காணத்தென்றற்
றேரினனவனென்றெண்ணித்தாங்களுந்தேரூர்வார்போ
லேரினற்பொலிந்தவையமிவர்ந்தனர்புகன்றுசில்லோர். ௬௧

எத்திறத்தரசனின்றானத்திறத்தினிதுவைகும்
பைத்தநீர்ஞாலமென்னும்பழமொழிபுதுக்குவார்போன்
மொய்த்தெழுதென்றற்றேரான்முனைகெழுபடையாயுள்ள
தத்தைமென்கிளவியாருமிவர்ந்தனர்தடந்தேர்சில்லோர். ௬௨

விரியொளிநினதுபொற்றேர்மென்னடைக்காலேயெங்க
ளுரியகொய்யுளைகள்சண்டவுலவையென்றழகாற்றம்மோ
டரியபோரேற்குங்காமற்கறிவித்தச்சுறுத்துவார்போற்
பரியினமிவர்ந்தார்வீங்கும்பாழித்தோண்மைந்தர்சில்லோர். ௬௩

ஒழுகியவுதரபந்திமடிப்பிறைலுடைந்துவெள்கிச்
செழுவியகடலில்வீழ்ந்ததிரையினையஞ்சலென்னக்
கழிசிறப்பளித்தாலென்னக்கல்ன்பலவணிந்துபாய்மா
விழுமியவமுதங்காலும்விழியினரிவர்ந்தார்சில்லோர். ௬௪

மாக்கதிரெறிக்கும்வெய்யோன்வாளொளிகரந்துமாய
மேக்கொளிகொளுங் கூங்காமர்வெண்மணிமாலைவேய்ந்து
தூக்கியகவி[illegible]பிச்சநதூமணியூர்தியாதி
நீக்கறத்துவன்றியெங்குநிழற்றமேற்பிடித்துக்கொண்டார். ௬௫

இழையொளியிரதப்பந்தியிலங்கொளிகவிகைக்காடு
பொழியொளிதகர்த்தசெம்பொற்பொடியொளிமாதர்மூரன்
முழுதொளிமைந்தர்வெள்வேன்முதிரொளியிமைக்குமாற்றாற்
றழையொளியிரவிமாய்ந்துஞ்சார்ந்திலதிருளின்வீக்கம். ௬௬

அரிபரந்தகன்றவாட்கணங்கலாரிரட்டவார்ந்து
முரிதிரையென்னத்துள்ளுமுழுநிறக்கவரிக்கற்றை
யெரிமணிக்கோவைசுற்றி[illegible]ணைக்குசாந்தாற்றிவெப்பம்
பரிமலரியாலவட்டம்பதாகையுமலிந்தபாங்கர். ௬௭

தழங்குபேரோதைவிம்மத்ததைந்தமாசனத்தினீட்ட
மழுங்கியகடலேயென்னவமாருமயிர்த்துநோக்க
முழங்கினசங்கநாதமுரன்றனசின்னங்காளம்
வழங்கினகலிப்புப்பேரிவங்கியமாதியெல்லாம். ௬௮

இடைதெரியாதுதம்மைச்சுமந்துமிக்கெய்ப்பநோக்கிப்
புடைநகர்ப்புறம்போயந்தவெய்ப்பினைப்போக்குவார்போற்
கொடியயின்மாடப்பந்தி[illegible]கரநின்று
நெடுமெதில்வாய்தனீங்கியெளனருமருமகப்போந்தார். ௬௯

கரியினமுலம்புமோதைகவனவாம்புரவியோதை
தெரிமணித்தேரினோதைசிலம்புகிண்கிணியினோதை
புரிகுழற்சுரும்பரோதைபொலஞ்சுடரிழையினோதை
யுரைமொழியோதைதோற்றுதொழித்தனவிசும்புகாறும். ௫0

மதனுறைபாசறைக்குவழிக்கொண்மாத்திரையேபூங்கோல்
புதைபடவருந்தியாங்குப்பொருகரிபரிகளூருஞ்
சிதரரிவிழியினல்லாரவைகள்செண்டாடநொந்து
நுதல்வியர்பொடிப்பக்கூந்தல்சோரமெய்நுடங்காநின்றார். ௫௧

மதகரிகொடிதுவாங்கிவாம்பரியேற்றுகென்பார்
கதழ்நடைமாவும்வேண்டாகாலிடையேற்றுகென்பார்
பிதிரொளித்தேருநஞ்சேபெருநிலத்திறக்குகென்பார்
குதலைமென்சொல்லார்துன்பேபழகுறுவினைமேற்கோடல். ௫௨

மயிலனாய்மானையஞ்சேல்வருகின்றேன்பாங்கரென்பார்
குயிலனாய்முந்தேமொன்றாய்க்கூடினம்போதுமென்பார்
தயனலாய்பொதும்பரீதேசார்ந்தனமென்பாரங்கை
யியிலினாரின்னவாறேயறைந்தனர்கலந்துசென்றார். ௫௩

பொதும்பரைக்குறுகியூர்திபொள்ளெனவிழிந்துவேகக்
கதம்படுவேழமாதிகளூற்றுழிகளூற்றியாத்துக்
குதம்பைநான்றொருத்தினீவக்கொண்கரோடன்பிற்பின்னிப்
பதம்பனிப்பெய்தவுள்ளாற்படர்ந்தனர்பாவையன்னார். ௫௪

தூமணிவிளக்கமல்கித்தூங்கிருள்புகாமலோப்பிக்
காமருபொதும்பர்கற்பக்காவினைவென்றவங்கண்
மேவரவின்பந்துய்ப்பமேவியமாந்தரெல்லாம்
பூமருகற்பநாட்டுப்புலவரைவென்றாரம்மா. ௫௫

விருந்தெதிர்கொண்டாலென்னமென்மொழிகுயிலாற்சொல்லி
வருந்தியநடையின்வெப்பமாய்ந்திடநீழனல்கி
யிருந்துணர்சுண்ணப்போதுந்தேறலுமேந்திற்றென்ப
பொருந்தியபுக்குள்ளார்க்குப்புதுமணப்பொதும்பரீட்டம். ௫௬

சிங்கமுங்கோட்டுவேழத்திரள்களுமைந்தர்க்காட்ட
வெங்களிப்பிடியுமானுமயிலுமின்னனையார்க்காட்ட
மங்குறோய்மாடமேடைமலையொடுபுளினங்காட்டப்
பொங்கருமில்லேயென்னப்புகுந்தனர்மகிழ்ச்சிபூத்தார். ௫௭

கிளிகுயில்பூவைமஞ்ஞையாதியகிளர்ந்துதத்த
மளியுறுபெடையினூடலகற்றியும்புணர்ந்துங்கொம்பிற்
களியுறக்கண்டுமைந்தர்காமமீக்கொள்ளவல்லே
யிளிமொழிமனைவியாரையிறுகுறத்தழுவிக்கொண்டார். ௫௮

அளியெறிந்திருந்துதேறலிருந்தவாய்கிழிந்தசெங்கேழ்ச்
சுளைபயில்கனியும்வாழைச்சுவைப்பழத்திரளுமாவின்
விளைமதுப்பழமுமற்றும்விழியுறநோக்காமுன்னங்
கிளைமணமுயிர்த்துநாவிற்றீம்புனலூறநின்றார். ௫௯

அஞர்த்திறமனத்தையேய்க்குநடையவரமரத்தீஞ்சொ
லுறுமுயயகிளியினோதையொண்சிறைக்குயிலினோதை
மிஞிற்றினமுரலுமோதையேனவும்விம்மியெங்குங்
கஞற்றியபண்ணையிட்டங்கேட்டொறுங்களியரானார். ௬௰

புள்ளகம்பிணிக்குஞ்சோலைப்பொலிவுமப்பொழிலினுள்ளாற்
கள்ளகம்பிணிக்குங்கஞ்சக்கயங்களுங்கதிரின்றேரை
நள்ளகம்பிணிக்குங்கோட்டுநாகமும்புளினச்சீரு
முள்ளகம்பிணித்துக்கொள்ளநோக்கினருலாவியெங்கும். ௬௧

பொங்கருள்ளகத்துச்சாலப்பொங்கியவளனையெல்லாந்
தங்களுட்பகுந்துதத்தந்தனியடையாளமிட்டாங்
கெங்கணுமெழினிவாங்கியெழில்பெறவிதானித்தும்பர்ச்
சிங்கவல்லேற்றுக்கட்டில்கம்பலந்திகழவிட்டார். ௬௨

மாடகமுறுக்கும்யாழின்மதுரமெல்லிசையுங்காமர்
நாடகத்திறனுங்கேட்டுநோக்கியுநயந்தார்மைந்த
ராடகமசும்புகொங்கையந்நலார்குழாங்குழாமாய்த்
தோடகந்துறுத்தசெந்தேன்சொரிமலர்கொய்வான்புக்கார். ௬௩

நித்திலவடந்தாழ்கொங்கைநிரைமணிமகுடமேந்தி
முத்தவிர்கருப்புவில்லிமுடிமிசைக்கவிப்பவன்றா
னெத்தலையுள்ளானென்றுநேடுவாரென்னவெங்குந்
தத்தமக்கொத்தவாறேதிரிந்தனர்தையனல்லார். ௬௪

தங்களைப்புலம்புநோக்கித்தழலெனச்சரம்பெய்வேளை
யங்கவனென்னத்தாமுமலர்க்கணைசொரிந்துபோரான்
வெங்களிகாற்றிவாட்டமுயற்சியின்மேவுவார்போற்
பங்கயவதனநல்லார்பன்மலர்கரத்திற்குற்றார். ௬௫

மின்னுறழிடையார்கொய்தவெண்மலர்கரத்துச்செம்மை
துன்னலுநோக்கிவெண்பூத்துவர்மலராயதென்று
முன்னுறக்காட்டிக்கேள்வர்வாங்கித்தம்முலைமேற்சேர்த்தி
யன்னதுபொற்கென்றாயதறிகெனநாணுக்கொண்டார். ௬௬

இணர்மலர்பறிக்குந்தோறுமிருத்தியபாரந்தீர்ந்து
தணிமலர்க்கொம்புமேன்மேலெழுதலுந்தருவுந்தன்பா
லணிகுறைகின்றதென்றீங்கலர்கொடாதகல்வதென்னாப்
பிணிமலர்க்கோதைநல்லார்பெருவியப்பினராய்நின்றார். ௬௭

சுந்தரவனங்கள்வாளிதொடவிளைவிகாரமென்னக்
கந்தமென்கதுப்புச்சோரக்கால்கரம்விதிர்ப்பவாங்குஞ்
சிந்துரநுதல்வேராடச்சிற்றிடையொசியநின்றா
ருந்தியங்காந்துகோட்டினூறுமலர்பறிக்குமாதர். ௬௮

பிடிநெடுந்துளைக்கைநீட்டிப்பிடித்திழுத்தெனப்பூங்கையாற்
கடியவிழ்சினைகள்வாங்கிக்காமர்பூக்கொய்யுமாதர்
கொடியெனநினைந்துதம்மைக்குமரரோடாங்குவேற்று
மடவியர்கலவியாற்றத்தணந்தனர்மயிலிற்றோன்றி. ௬௯

மருத்தபூங்கோடெட்டாமைவருந்துவாள்பறியென்றன்ப
ணிருத்தியதிணிதோடன்னையேந்தியகளிப்பால்விந்தப்
பொருப்பெனவீங்கவும்பருட்னெழீஇப்பொதும்பர்தாழத்
திருப்பொலிமார்பனேயென்றயிர்த்தனள்பரிவுந்தீராள். ௭௰

வேறு.

அல்லிமலர்க்குழலியரெம்மூரனிகராதென்றேயரும்புதோற்றாய்
முல்லையெனநகையாடவவையுமெமதரும்புறழாமுறையாலன்றே
பல்லிதழ்வாயொளித்தபரிசறிந்தேமென்றெதிர்நகைத்தபண்புமான
மெல்லரும்பினலும்வெகுண்டுதண்டழ்விளைப்பாரென்னவிரைவிற்கொய்தார். ௭௧

கணவரொடுநெடுங்கானத்துடன்போக்கிற்கதிர்ப்பரிதிகனற்றும்வெம்மை
தணியநறுநிழல்கஞற்றித்தளர்வகற்றும்பண்டையநன்றோர்ந்தாரென்ன
மணமலர்கொய்திலம்படுமேழிலைம்பாலைமரத்தோடுநட்புச்செய்து
துணர்விரிபாலையுநண்பூண்டென்னமலர்முகிழ்ப்பத்துனைந்துகொய்தார். ௭௨

தோடணிந்துநனிபூத்திங்கெமைப்போலுநீயெமக்குச்சுரும்பரார்ப்ப
வேடவிழுநறும்போதுநல்காவாழ்வென்னேயென்றிகழ்ந்துகூற
பாடிரியும்பழிப்பஞ்சியிகழாதிரெனப்பணிந்தாங்கெட்டாதோங்கும்
கோடமலமீட்டுமலர்ந்தெதிர்குரங்கும்பாடலத்திற்கொழும்பூக்குற்றார்.

செழுமதியைப்புறக்கொடைகண்டெக்கழுத்தம்படுமுகத்தார்சில்லோர்தங்க
ணிழல்படுபெற்றியின்முழுதுமறப்பறிக்குந்தொறுமீட்டுநிறம்பப்பூத்துத்
தழைதருசண்பகநோக்கியேதுவிஃதெனக்காணார்தழங்கும்வண்டு
விழையகிலாச்சண்பகமுமுலவாப்பொற்கிழிகொலெனவியந்துநின்றார்.

தம்முடையவடிவொப்பத்தளிர்த்ததெனவழுக்கற்றுத்தடந்தாட்கொக்கின்
செம்மைநிறத்தளிரனைத்துங்கொய்தொறுந்தம்விழிப்பார்வைசெறியுஞ்சீரா
லம்மரனுமெதிரிகலியாங்குமிகத்தளிரீனவதற்குநாணிக்
கொம்மைமுலைமடமாதர்தோற்றென்னக்கொய்தளிர்க்கையிளைத்துநீத்தார். ௭௫

இக்கிளையின்மலர்முன்னம்யான்பறிப்பல்யான்பறிப்பலென்றாங்கொட்டிப்
பக்கசிலரொருங்கரத்தாற்சினைபற்றிமலர்பறித்துமானநோக்கித்
தொக்கமலர்சினைவாயிற்சௌவியிருகைபறித்துந்தொலையாவண்ண
மிக்கலருமகிழ்மரத்தைநடுப்பிழைத்ததெனக்கனன்றுவிடுத்தார்சில்லோர்.

பஞ்சழுத்தமிகப்பனிக்கும்பரிபுரச்சீறடிமடவார்பல்லோர்செய்ய
கஞ்சமலர்வாய்திறந்துதம்மியல்பிற்பாடுதலுங்கமழ்தேன்வார்ந்து
விஞ்சமலர்பூத்துக்குமாதவியைவேறுசிலருவந்துநோக்கித்
தஞ்சரிமென்கரமலரான்முகமதியம்வியரரும்பச்சார்ந்துகொய்தார். ௭௭

ஒளியுமிழ்தம்முருவெழிலையொண்டளிராக்கவர்ந்தமைகண்டொறுப்பார்மானக்
கிளைநரம்பினிசைமொழியார்கமுகிலிடுங்கேழ்த்தமணியூசலேறித்
தளிரடியினுதைந்தாடுந்தொறுந்தவப்பூத்தசோகுமலர்தரையிற்கொட்ட
வளவின்மகிழ்ச்சியின்வருந்தாதவையனைத்தும்வேறுசிலரள்ளிக்கொண்டார். ௭௮

அலம்புமணிமேகலையுமரிக்குரற்கிண்கிணியுமணிச்சிலம்புமார்ப்பக்
கலம்படுபொற்குயமடவாராடுதலுமாட்டமைதிகவினக்கண்டு
நலம்படுபொற்பரிசிலெதிர்வீசுவபோலிளம்புன்னைநறியவீயின்
குலம்புதிதுபூத்துகுப்பவிம்மிதராய்ச்சிலரிவர்ந்துகுற்றுநின்றார். ௭௯

ஊக்கமணியம்மனைதன்னுயர்பாவைக்களிப்பதுபோற்சினைமேலேந்து
ட..ப்புரவையங்கலாரிவர்ந்துகொளத்தழுவலுநம்மகவையின்னோர்
தாக்குவரென்றஞ்சியடிதாழ்வதெனமலர்நெருங்கிச்சாகைதாழப்
பூக்களுடனம்மனையுந்தாழ்ந்ததெமக்குத்தந்ததெனப்புகழ்ந்துகொய்தார்.

பண்ணைபொரமுரன்ஞிமிறுபாய்ந்துழக்கத்துயருண்டுபொரின்வீழ்ந்த
வண்ணமலர்த்துகணெருங்குஞ்சனமிதித்தற்கஞ்சிமாமலரின்மீட்டு
நண்ணவெழுவதுபோன்றுமேக்கெழக்கந்துகந்தழுவிநடுத்தள்ளாட
வொண்ணுதலின்வியர்பொடிப்பக்கரஞ்சேப்பவுடல்குழையப்புடைத்தார்சில்லோர்.

வெள்ளிமலையெனக்குவவிக்கிடந்தநெடும்புளின்மிசைவதிந்தும்வாசக்
கள்ளுயிர்க்குமுழைக்குவட்டுக்கண்மணிப்பொற்சிலம்பெதிர்கூய்க்களித்தும்வட்டத்
தெள்ளொளியபளிக்கறையிற்கண்ணடியிற்றிருவழகுதெரிந்துமைந்த
ருள்ளுருகவெவ்வேறுவிளையாட்டுத்திறங்குயிற்றியுவந்தார்சில்லோர்.

கலிவிருத்தம்.

சாயலினிகர்மஞ்ஞைதளரியபொழிலாடன்
மேயவர்நடைநோக்கிவெள்ளனமயர்கூர
நாயகரொடும்வெள்ளநதிகயமுதலெங்கும்
பாயினர்கரியோடும்படர்தருபிடியென்ன. ௮௩

பங்கயமலர்மானும்பாவையரடியூட்டும்
பொங்கியசெம்பஞ்சிபோகறலிடைதோறுந்
தங்குவவவர்நீலத்தண்குழல்பொருதட்ட
செங்கனலுறழ்நெய்த்தோர்சிவணியபுண்போலும். ௮௪

கிண்கிணியொலிபூணிற்கிளரொலிகுழல்வண்டின்
பண்கனியொலியெல்லாம்பரவலினனியுட்கி
யொண்கயன்மிசைதுள்ளுந்தமையுறழ்தருமாதர்
கண்களின்வரவைத்தாங்காணியவெழுவதென. ௮௫

மைந்தருமடவாருந்தங்களுண்மயிர்நீவிக்
கந்தமதிடுமெண்ணெய்கமழ்தரமுடிதேய்ப்பச்
சுந்தரமலரோன்முன்றொகுபலவிதியுள்ளும்
வெந்துயரனதேய்த்துவீத்திடுதிறமான. ௮௬

ஒண்ணிறமணிசாலக்கழுவுதொறொளிகான்று
நண்ணுவதெனமிக்குநள்ளிருள்குடிகொள்ளக்
கண்ணிகொண்மயிர்நெல்லிக்கமழ்விழுதினிதூட்டி
மண்ணினர்கடிவீசும்வார்புனல்குடைகின்றார். ௮௭

வேறு.

தனதினமென்றுபின்சார்தருதோகை
யனமெனமீண்டலர்பொங்கரையண்மக்
கனமுறழ்கூந்தலினார்கரைநின்றும்
புனலலையும்படிபாய்ந்தனர்புக்கார். ௮௮

மான்மதவேழமதங்கொடுவீழ்ந்தாற்
போன்மெனவாடவரும்புனல்பாய்ந்தா
ரூன்மலிவேல்பொருமொண்டொடியார்கண்
டான்மருண்மீனம்விண்டாயதையன்றே. ௮௯

மாதரெனுங்களிமாமயிலீட்டந்
தாதவிழ்தந்துறைசாரவலற்றின்
போதுறுபொங்கர்புகுந்திறன்மானை
வோதிமமஞ்சினவோடினசோலை. ௬௰

தலைவரெனும்மததந்தியைமாதர்
வலவரின்வங்கமெனும்பிடியூரா
வலர்ததைமாலையருந்தொடரோக்கிப்
பலமுறையண்மினர்பற்றமுயன்றார். ௬௧

தொங்கலைவாரினெழுக்குபுதூய
வெங்களின்மாலைவலைத்திரள்வீசி
மங்கையராமுழைமானைவனத்தி
னங்களிவேடரினுடவர்சூழ்ந்தார். ௬௨

நறைக்குழல்சோர்தரநங்கையர்பந்தின்
முறுக்கியதாரைமுகங்கிழிசெய்து
பொறைக்குயமார்புபுதைப்புறமைந்தர்
நிறைக்குநராயினர்தாரைகணீரான். ௬௩

சுண்ணமெடுத்தெதிர்தூவினர்சந்த
வண்ணநறுங்களிவாரியெறிந்தார்
கண்ணெகிழ்பூக்கள்கனன்றினர்சிந்தி
யுண்ணிகழோகையினும்பரையொத்தார். ௬௪

வீக்கியதாரைகள்வெய்துறவாங்கி
யோக்கினனோர்மகனோர்மகளாற்றாள்
வாக்கியதாரைமழைக்கொசிகின்ற
பூக்கொடிபோற்பொருமித்தளர்வுற்றாள். ௬௫

பூசலெதிர்ந்தொருபூவைதுணைந்து
வீசியகுங்குமமேதகுசாந்தங்
காசவிர்மார்புகலந்துறநின்றான்
மாசறுசெந்திருமார்பனையொத்தான். ௬௬

களிப்பினோர்மாதெறிகாமருதொங்கல்
வளைப்புறமார்பின்வனத்திடைநின்று
னளப்பருவேலையராவிடையாத்துத்
திளைப்புறநட்டசெழுங்கிரியொத்தான். ௬௭

ஆற்றலளாயவிழ்சோர்குழல்போர்த்த
கோற்றொடிமேற்கொழுந்தாரையுறுத்தான்
மாற்றருங்கூடன்மறைத்திடுமேக
மேற்றழைதாரைவிடுங்கனமொத்தான். ௬௮

உறுங்களிமாதர்களோக்கியதாரை
கறங்கியகைத்தொடிகார்க்குரல்செய்ய
விறங்கியகூந்தலிடைப்பொலிமெய்ம்மின்
றிறங்குலவப்புயல்சிந்துவவொத்த. ௬௯

கலிநிலைத்துறை.

மருப்பதுமமலர்நீலமலர்பறித்துமங்கையரும்
விருப்புறுமைந்தருந்தம்முள்வீசிவிளையாடினார்
கருப்புகொடுஞ்சிலையானுங்காமரிரதியுந்தம்மு
ளுறப்பொலியுமலர்வாளிகொண்டடற்றுந்திறனிகர்ப்ப. ௧௦௦

துருத்தியினீர்க்குடைந்துபுனலொளித்தோடுந்தோகையரை
வருத்தமுறப்பிணித்தடர்சைவலமகிணர்தமைக்காட்டும்
பெருத்தமுலைமடமாதர்பிரசமலர்க்கூந்தலினு
லுருத்தபழம்பகைமுடிக்குங்காலமெனவுன்னியபோல். ௧௦௧

போர்க்குடைமங்கையர்முகமேபுறந்தோற்றிப்புனலொளிப்ப
வார்க்கழலாரதுவனசமெனவிடுத்துத்துருவுவார்
சீர்க்கவுளத்தினிதிருந்துஞ்சிவபெருமான்சேவடிகள்
பார்க்குளிலைப்புரைகிளைத்துப்பருவந்தவரிபோன்றார். ௧௦௨

முழுகுமடமாதர்குழன்மூசுமிளஞ்சுருப்பினம்போய்க்
கொழுதிமுழுவதும்பரந்துகுடிகொண்டகமலமல
ரொழுகொளியவவர்வதனவொண்கமலமொடுபொருவான்
விழுமியகாழகக்கவயம்வீக்கியதுபொருமன்றே. ௧௦௩

அரிவையர்வான்முகமதியாலாம்பன்மலர்தரநோக்கி
யிரவணைந்ததெனக்கரையினிவர்ந்தவைமீட்டஃகுதலும்
பொருகளத்துச்சயத்திரதன்பொன்றியநாளிதுகொலென
விரவியவிம்மிதராகிமீட்டுமிரும்புனல்குடைந்தார். ௧௦௪

சந்தனங்குங்குமஞ்சுண்ணந்தார்மாலைவிழக்குழம்பி
யிந்துவொளிபடைத்தபுனலிரவியொளிபடைத்தன்றால்
வந்துதனைவருத்தமுறவுழக்கலுறுமாந்தரைப்பொன்
சிந்துமணிக்கரையுறுப்பான்சிவந்தெழுந்ததிறம்போல. ௧௦௫

வளைக்குலமுங்கயற்குலமுமலர்க்குலமும்விளையாட்டி
விளைக்குமிகுதுயர்க்கிரங்கியேறுவாரெனப்போகம்
விளைக்குமணிமுலைக்குவட்டுமெல்லியருங்காளையருந்
தளைக்குமனக்களிப்பினராய்த்தடங்கரையின்மருங்கணைந்தார். ௧௦௬

தனக்குநிகரெனக்கிடந்தசைவலத்தைத்தாக்குதற்குச்
சினத்தெழுந்துசெல்வதனைவலிந்துதடைசெல்பவர்போற்
கனக்குழலோர்கரந்தாங்கிக்கலைகலையோர்கரந்தாங்கிப்
புனக்கிளியன்னவர்சில்லோர்புணர்ந்தவர்போற்றோன்றினார். ௧௦௭

அலைக்குமணிநீராட்டினற்றுவிழுமேகலையுங்
கலைக்குலமும்புனல்கரப்பக்காணாதுதாமரையி
னிலைக்குலத்தாற்பின்னியுடையிணக்கியவல்குலினோடு
மலைக்குறவர்மகளிரெனமாதர்சிலர்தோன்றினார். ௧௦௮

களித்துநறுந்திரைகெழுநீர்காதலிற்றம்முடனாடி
யிளைத்துமிகவருந்தியபோலீர்ம்புனற்பூம்பட்டழுந்தி
முளைத்தெழுந்துகொழுந்தோடுமொய்யொளிமேகலையோதை
யொளித்தொழியச்சிலமாதரொய்யெனமேற்றோன்றினார். ௧௦௯

கலிவிருத்தம்.

வார்ந்துதுளிசிந்துமயிர்வண்டுகிலினொற்றி
யூர்ந்தொழுகுமாதரகமூட்டிவிரனீவி
யார்ந்தவகிலின்புகையினூட்டியளிசூழ்தேன்
கூர்ந்தமலர்மாலிகைகொளுத்தினர்களித்தார். ௧௧0

நெற்றியினறுந்திலகம்வைத்துநிழல்காலும்
பொற்றகுழைகாதினொடுகோன்றுபுயநக்கி
விற்றழையவிட்டுவிலையின்றுயர்சிறப்பின்
மற்றையணியும்பலவளம்படவணிந்தார். ௧௧௧

அனங்கனிவர்மெய்தழுவவாக்கையிலனென்று
மனங்கனியமாதர்கள்வனப்பிடையுயர்ந்தார்
தனங்களிவர்தோளுறுதவம்புரிகிலேனென்
றினைந்திரதிநோவவெழிலாடவர்மிகுத்தார். ௧௧௨

மின்னுபளிதக்குவையின்மீமிசைநிவந்து
மன்னியெரிதீபமெனவார்புளினவுச்சி
யன்னநடையன்னநடையார்கள்சிலர்நின்று
துன்னுகுழனூற்றினர்பரப்பினர்தொகுத்தார். ௧௧௩

மொட்டிளவடச்செழுமுலைக்குநிகராகிப்
பட்டபகையாற்பிதிர்படுக்குநர்கடுப்ப
நெட்டிலையதெங்குகளினின்றுவிழுகாயை
வட்டவறையிற்சிலர்புடைத்தறன்மடுத்தார். ௧௧௪

கோங்கொடுநிகர்த்தகுவவுத்தனமினாரும்
வீங்குப்புயவாடவரும்வெய்யகலவிக்கட்
டாங்கணுகர்வாய்க்கனிதனக்குநிகர்தேர்வா
னுங்கநுகர்வாரெனநறுங்கனியயின்றார். ௧௧௫

நெய்யிடைமிதந்தகறிநீண்டுதிசையெல்லாங்
குய்யணவிநாறியகொழுங்கருனைபாலாற்
செய்யுமுணவாதிமடைநூலவர்செறிப்ப
வெய்யவர்களாகிவிருந்தோடினிதுதுய்த்தார். ௧௧௬

வாசமொடுபாகடையயின்றுமகிழ்கூர்ந்து
தேசவிரும்யாழ்குழல்செவித்துளைநிரப்பி
வீசுமணமாருதமெய்யேற்றுவிளையாடி
வேசையரின்வீடரியவெங்கணுகர்வுற்றார். ௧௧௭

வேறு.

சாடியின்றவினைத்தவளவட்டிவிற்
பாடமைவிளிம்புவாய்நிரம்பப்பாய்த்தினு
ராடிநோக்குவதெனவங்கையேந்தினு
ரேடவிழாம்பல்வாய்பருகியின்புற்றார். ௧௧௮

மகிழ்ந்துமுன்வீக்கியவட்டிற்றேறலை
நுகர்ந்திடுமயக்கினால்வட்டினோக்கினு
ரகங்கையினவிர்மதியதனைநாப்பணே
யகழ்ந்தெனக்களித்தனர்யாரையென்றனர். ௧௧௯

தொட்டவெண்மதியுடற்கூறுதொக்கதென்
றட்டபான்மதுநுரையதனைவாரியவ்
வட்டில்வாய்நிறைத்துவிண்வாழப்போதியென்
றட்டவழ்கருணையினேக்கிப்போக்கினர். ௧௨0

எதிருறவிருந்துசூதாடுமாடவர்
கதிரிழையொதுங்கலுமல்குல்கண்ணுறீஇ
யதிரிடையாய்கொடியகத்தையுள்ளுறப்
பொதிவதென்னெழியெனப்பூங்கைநீட்டினர். ௧௨௧

மங்கையரெடுத்துமாடிருத்தும்வல்லினைச்
செங்கனியெனக்குயில்கவரச்செல்வர்பி
னங்கதுகொடுமெனவற்றஞ்சாற்றல்கேட்
டிங்கிதோவுளதெனமுலையையீர்த்தனர். ௧௨௨

மேகலையுடைபுவிவீழவல்குலை
நாகமென்றஞ்சிநன்கரத்திற்றள்ளியும்
போகுதலின்மையிற்பூவைமார்குகன்
வாகனமுன்னுறவெளவென்றேடினர். ௧௨௩

ஆடியினேக்குமானனத்தின்வேற்றுமை
நாடியென்முகத்தினைவெளவினாளமேற்
றேடவிழ்செம்மலர்சூடநவைத்துளா
ரேடியாருரையெனவொருத்திவேண்டினள். ௧௨௪

நின்முகங்கவர்ந்தவரிவரெனநிறை
யிள்மதுக்கலமெதிர்காட்டநோக்குபு
தன்னிழன்முகமுந்தன்முகமுமொத்தலி
னன்னதுந்தாமரையாமென்றாடினள். ௧௨௫

வண்டுளர்கூந்தலோர்மங்கைதோழியென்
றெண்டகுமஞ்ஞைமுன்னியதேறலைக்
கொண்டிஃதுண்கெனக்குறுகியோடலு
முண்டிடுமிச்சிலென்றெழிதியோவென்றாள். ௧௨௬

ஊடியமாதகன்றெழியமுன்னுற
வாடியகொம்பினையவளென்றங்கையாற்
சேடுறுகாதலிற்சென்றுபுல்லின
ஞடவர்நகைப்பவோர்நம்பியென்பவே. ௧௨௭

தன்னுருவேற்றுமைதன்னைநோக்குறீஇ
முன்னையதன்மையின்முயங்குகாதல
னென்னையரோவெனவிகக்குமேயென்
வுன்னினளுயங்கினளொருபெண்மாதராள். ௧௨அ

முருகவிழ்குழலினர்முயங்குகாதலார்
பெருமகிழ்மதுவுணும்பெற்றிநோக்கியான்
பருகினேனில்லைகொல்பருகினேன்கொலென்
றேருமடமயிலனையமோவிலள். ௧௨௯

கூடினார்மறுவலுங்கூடிலோமென
வாடமைத்தோளினலன்பர்ப்புல்லின
ரூடினார்மறுவலுமூடிலேமென
நீடெரிப்பிழம்பெனப்புலந்துநீங்கினார். ௧௯0

ஆடினார்சிற்சிலராடிவீணையிற்
பாடினார்சிற்சிலர்பாடியன்பர்மு
னோடினார்சிற்சிலரோடியூடலி
னீடினார்சிற்சிலர்நீலக்கண்ணினார். ௧௯௧

ஆன்றவர்நோக்கிநீள்பனையுமம்மவோ
சான்றவிக்கள்ளினைத்தரித்தலானன்றே
சூன்றெனவகந்துளைபட்டதென்னவே
மான்றுளம்புழைபடமானநீங்கினார். ௧௯௨

பறைந்தபேரறிவினும்பதின்மடங்கெதிர்
நிறைந்துவெங்காமநோயகத்துநீடலா
லுறந்தபூவணைமிசையும்பாரரெனச்
சிறந்தமெய்க்கலவியிற்றிளைக்கப்புக்கனர். ௧௯௩

கலிநிலைத்துறை.

தூதுசென்றுசென்றுழல்வதுபோற்சுரும்பினங்கள்
போதினுக்கியமாலையிலெதிரெதிர்போகித்
தாதுநொண்டிசைமிழற்றுறவிருந்தனர்தம்முண்
மாதர்வாண்முகநகையினுள்மனக்குறிப்புரைத்தார். ௧௯௪

சாலப்பண்ணினைப்பயிற்றியுந்தடமுலையலைத்து
மேலத்தண்குழலவிழ்த்தெதிர்முடித்துமீர்ந்தளிரின்
கோலக்கொம்பினைக்குழைதரப்புல்லியுங்குறிப்பாற்
சீலப்பாவையர்கருத்தினைக்கொண்கரைத்தெளித்தார். ௧௯௫

தொய்யிலங்கலார்முலைமிசைத்தொழில்பெறவரிந்து
மையுண்கண்களினஞ்சனமெழுதியும்வாச
நெய்யுண்கூந்தலினிறைமலர்செருகியுநுதலிற்
செய்யசிந்துரந்தீட்டியுமாடவர்களித்தார். ௧௯௬

முலையுந்தோள்களுமிறுகுறமுயங்கியுமமிழ்த
கலைநிலாவியமுகத்தின்முத்தாடியுங்கலையுஞ்
சுலவுகாரளியோதியுந்தொடிகளுஞ்சோர
விலகுசூட்டராவெனவுடற்பின்னியுமணந்தார். ௧௯௭

காசுகண்பரிந்துக்கனகாழினம்பரும
மாசைவண்சிலம்பொலித்தனமருவுலாங்களபம்
பூசுகுங்குமமழிந்தனபூவணைமேலா
னேசவின்புமீக்கிளர்ந்தனபுணர்ச்சிநீடுநர்க்கு. ௧௯௮

அப்புமாரிதூய்ப்பணிபுரியினங்களுமன்பர்
செப்புநேர்முலைமகளிரிற்றிளைத்திடுநட்ப
வொப்பிலாதமெய்க்கலவியையுடனின்றுகவர்ந்தான்
றுப்புநேர்சடையான்விழிக்கனலினைத்துதித்தான். ௧௯௯

தடக்கைவார்சிலைகணைகளுந்தொலைந்தனதழுங்கி
மடைக்கண்வூல்வளைமணிசொரிபண்ணையிற்கரும்பும்
பொடிக்குந்தேம்பொழிற்பொய்கையிற்பல்வகைப்பூவுந்
தொடுக்கவற்றனமுழுவதுமனங்களுந்தோற்றுன். ௧௪0

வேறுமாந்தர்களணிமையின்மேவினரென்று
மாறிலாநலக்கலவியையிடைமறுத்தொழியத்
தேறுவான்கலைசிறைக்கிளிபூவையைத்தெளித்துக்
கூறுமன்னவர்வாங்கியவெழினியுட்குறுகி. ௧௪௧

அனங்கன்போர்விளைமாதர்தம்மணிமிடற்றொலியை
யினங்களின்குரலாமெனவெண்வகைக்குருகுந்
துணைந்துவாங்கியவெழினியுட்டுவன்றினவவர்தங்
கனிந்ததீங்குரற்பொலிவுகற்பான்புகுந்தனபோல். ௧௪௨

உடலுமாரனைத்துணைவரோடொற்றுமையாகி
யடலினேப்பியதிறற்பிரதாபமுமலங்கிப்
படருங்கீர்த்தியுமறிவுறுத்தனபணிமொழியார்
மடமைநோக்கமுமணிமுருக்கதரமுமாதோ. ௧௪௩

களவிற்கூடியகற்பினர்கருவிழிசிவந்த
வளனைநோக்கியசெவிலியரயிர்த்தவர்மலர்த்தேன்
றுளியிற்றேய்குழனேக்கலுமிகத்துளைந்தாடுந்
தெளிகொணீர்விளையாட்டதென்றகத்திடைத்தெளிந்தார்.

புலந்துபோதுழியாடவர்பொலந்துகிலீர்ப்ப
மலர்ந்தவல்குலைக்கதுமெனக்குடங்கையான்மறைப்ப
விலங்குபாம்பபிமந்திரத்தடங்குமோவெனலு
நலங்கொண்மின்னனூர்குறுநகைவிளைத்தனர்நாணி. ௧௪௫

கலையின்வென்றியுங்கரிபரியிரதமேகாலாண்
மலையும்வென்றியுஞ்சுட்டிடைவாரணங்குறும்பூ
மூலையமோதுவன்கடாப்பிறபோரிடையுறுத்திக்
குலவும்வென்றியுங்கொண்டனவாடவர்குழுக்கள். ௧௪௬

பாடல்வென்றியும்பரிபுரஞ்சீறடிச்சிலம்பு
மாடல்வென்றியுமஞ்சுகம்பூவைவெம்பிடியி
னீடில்வென்றியுமேனையவென்றியுங்கொண்டார்
வீடிலின்பமேவிளையும்வெம்முலைக்கொடிமடவார். ௧௪௭

வேனிலின்னணமிறுத்தவேள்விழாத்தினத்தொருநாண்
மானைவென்றகண்மடவரலுடன்மலர்த்தவிசி
னுயர்த்தவரகிலமுங்களிப்புறும்பொருட்டுத்
தாங்கிழ்த்துமத்தனிவிளையாட்டிடைமாதோ. ௧௪௮

வெள்ளிவெற்பின்மேல்விரைமலர்ப்பொதும்பர்காத்தமரு
முள்ளெயிற்றரவல்குல்வெம்முலைமுறுக்கவிழ்த்துக்
கள்ளுயிர்க்குமென்மலர்க்குழற்றெய்வதக்கன்னி
தள்ளமெல்லிடையுவளகமருங்குசார்ந்தனளால். ௧௪௯

அங்குவந்தடிவணங்கரமகளிர்களோடுஞ்
செங்கைகூப்பினடிருமுன்புபணிந்தனளெழுந்தா
ளெங்கணாயகசயசயவெனத்துதியிசைத்தா
ணங்கைபாலமர்நாயனார்தமக்கிதுநவில்வாள். ௧௫௦

கருவிவான்முகில்குடியிருந்தனையகார்க்கூந்தற்
றிருவின்மேலவடிதலைவெம்முலைக்களிற்றுலவை
பொருதுவார்ந்திழிபுலவுநீரெனப்புதுத்தேற
லருவிதாழ்தொடைமார்பவந்[illegible]றிளவேனில். ௧௫௧

பாற்றனிக்கடற்றுகிரெனப்பைந்தொடிமுலையி
னேற்றுகுங்குமமெழுதியநீற்றணிமார்ப
தோற்றவேனில்வேடுதுவிட்டாலெனமலையக்
காற்றுமென்மெலவசைந்ததுநங்கயிலாயம். ௧௫௨

நானமல்கியநறுங்குழனளிர்முகமலரிற்
றேனருந்துவபோல்விழிசெல்லும்வாண்முகத்தாய்
வேனின்மைந்தனைமேதினியினைவெள்ளணிகற்
றூணணிந்தெனவயங்கினபரந்துதாழருவி. ௧௫௩

நிணந்துழாவுவேனிகருமைவிழியுடனளியின்
கணந்துழாவியகடுக்கையந்தொடைகமழ்புயத்தாய்
தணந்துளார்ப்பெறுமாதர்போற்றளர்வுமுற்றொழிந்து
மணந்துழாம்பொழிறென்றலால்வளம்படைத்தன்றே. ௧௫௪

வார்நிறுத்தியவனமுலைமங்கைகட்கடையின்
கூர்நிறுத்தியகுறுநகையாய்திறையென்னப்
போர்நிறுத்தியகருப்பினான்புனைமணிநெடும்பொற்
றேர்நிறுத்தியதொத்ததுசெழுமலர்க்கோங்கம். ௧௫௫

மடுத்தவல்விடம்வயங்கியமிடற்றினாய்நீயிக்
கடுத்ததும்பியகருங்கணாளுடன்விளையாட்டி
னடுத்ததன்றெனக்களைந்தெறிபுலியதள்போர்ப்ப
வெடுத்துநின்றதேபோன்றதாலிணர்விரிவேங்கை. ௧௫௬

பொன்னொடாடியபுரிசடைப்புராதனபொருப்பின்
மின்னொடாடியதிறனறிந்தராவணைமேலான்
றன்னொடாடவுஞ்சார்ந்துகாத்திருப்பதுதகையும்
தென்னொடாடியசெறிமலரூழ்த்துகுகாயா. ௧௫௭

பருப்புழைக்கரக்களிற்றுரிப்போர்வையம்பகவ
பொருப்புமாதுடனாட்டயர்பொலிவினைக்கேளா
கருப்புவில்லினானினிப்பயமின்றெனக்கணைகள்
விருப்பினெய்யவந்திட்டதேவீழ்ந்ததுகாஞ்சி. ௧௫௮

குழந்தைவெண்மதிமிலேச்சியகுருச்சடைக்குழகா
விழந்தபல்லினையெய்துவானிரவியெற்பிழம்பு
பொழிந்தசேயொளித்தேரொடும்புக்கதேபோலும்
வழிந்துதேன்கமழ்மலர்த்திரடைந்ததண்செருந்தி. ௧௫௯

சினங்கொள்வாளராத்தொடையல்சூழ்செஞ்சடைக்கூத்தா
வனங்கவேளெனுந்தமையனுக்கணியுருத்தருகென்
றினங்கொள்வான்றவமியற்றுவா[illegible]ளவன்
மனங்கொள்காதலின்வந்தெனத்திகழுமந்துறாழல். கசுO

கோதைவார்சிலைப்பொலங்கிரிகுழைத்தெயில்குலைத்தோய்
பாததாமரைபடர்ந்தருந்தவத்தினிற்பயிலும்
பூதிபூசியபுண்ணியத்தொண்டரேபோலு
மாதர்வெண்மலரூழ்த்தநீண்மராமரத்தொகுதி. கசுக

முனையசூற்படைமுழங்கழல்பிலிற்றுசெங்கரத்தோய்
நினையுமாதவர்தமக்குநின்னேவலாற்குறுகிக்
கனையவாநிரப்புறுமுருத்திரகணங்கடுக்கு
மனையநீண்மராத்தருகெலாமலர்ந்தகூவிளங்கள். கசுஉ

என்னவிவ்வகைதனித்தனிவன்த்தெழின்முழுதும்
பன்னிமற்றுமீதுவகையிற்பகருதலுற்றுண்
மன்னுமெம்பிரான்குடங்கையால்வளர்த்தமாங்கன்று
மன்னைதன்கரத்தன்பினுல்வளர்த்தமாலதியும். கசுங

செய்யநின்றிருமேனிபோற்செந்தளிர்தளிர்த்து
மையுண்கண்ணிதன்மூரலின்வான்முகைமுகிழ்த்து
மையசீரியவாயினவலங்குபொற்சடையி
னெய்யுண்கூந்தலின்மிலேச்சுதற்கமைந்தனவென்றுள். கசுச

கருணைநாயகர்கேட்டலுங்குறுநகைகாட்டித்
திருவின்மேலவள்செழுமுகத்தாமரைநோக்கி
யரிவைதன்மனக்குறிப்பறிந்தவையிரண்டினுக்கு
மிருமைமன்றல்செய்வாமெனவுமையொடுமெழுந்தார். கசுரு

மணிப்பொற்கோவையும்பூண்களுமருமலர்த்தொடையு
மணிப்பொற்சுண்ணமுங்குங்குமச்சேறுமாடைகளுந்
தணிப்பில்சீதளக்களபமுந்தனிவிரைபிறவுங்
கணிப்பிலாவரமகளிர்கைக்கொண்டுடன்சார. கசுசு

ஆடியேந்தினர்சிலர்வரவடப்பையேந்தினராய்த்
தோடுகொண்டுசெல்லோர்வரச்சுருண்முகவாச
மோடிமுந்துறநீட்டுவார்சிலர்வரவுமிழ்நீர்
பீடினேந்துவார்சிலர்வரப்படியகம்பிடித்து. கசுஎ

மாடகத்தனியாழ்குழன்முதலியவகையாற்
பாடலிற்பயின்றந்நலார்முன்பினும்படரச்
சூடகத்தொகைமேகலைசிலம்பொலிதோற்றி
நாடகத்தொழிலாற்சிலர்முந்துறநடப்ப. கசுஅ

வட்டவெண்குடைமீமிசைநிழற்றவார்கவரி
யிட்டிடைக்கொடியாரிருமருங்கினுமிரட்டப்
பட்டவொள்ளொளிபரப்புசாந்தாற்றிகள்பரவ
கட்டெழிற்றிருப்பாதுகைகழலிணைசூட. கசுகு

தமதுசீர்முகத்துமைவிழியுமைதனிமுகத்துத்
தமதுவாள்விழியெதிரெதிர்சார்ந்தனகளிப்பத்
தமதுதோளணியுமைபுயத்துமைபுயத்தார்க
டமதுதோளுறத்தங்கையுமுமைகையுங்கோப்ப. கஎ0

மந்தமாருதமருங்குவந்தசைதரவீணை
மைந்தர்பாடலின்வண்டுபாண்முரல்வனநோக்கி
மந்தமென்னடையால்வழிக்கொண்டனர்நடந்தார்
மந்தரத்தனமடந்தையர்தங்களுண்மொழிவார். கஎக

கலிவிருத்தம்.

குரும்பைவெம்முலையாளுளபாங்கர்க்குண்டுநீர்ச்
சுரும்புளர்காவிகடோடவிழ்த்தன
பெரும்பெயர்க்கடவுள்பாற்சுனையிற்பெண்டிர்கா
ளரும்பவிழ்த்திலவலர்க்காவியென்கொலோ. கஎ௨

பண்ணைமென்மொழியினாள்பாங்கரீர்ம்புனல்
வண்ணவம்புயமலர்வல்லைகூம்பின
வண்ணறன்புடையகன்சுனையினவ்விநேர்
கண்ணினீர்குவிந்திலகமலமென்கொலோ. கஎ௩

மான்றபூண்முலையினாண்மருங்கில்வாலொளி
யான்றதண்மதிச்சிலையரும்பிற்றீர்ம்புனல்
சான்றவர்தொழும்பிரான்புடையிற்றையலீர்
கான்றிலதொழுகுநீர்கலைக்கலென்கொலோ. கஎ௪

களித்தளியுளர்குழற்கன்னிபாலரக்
கொளித்தனிக்கதிர்ச்சிலைதீயுமிழ்ந்தில
தெளித்தருடருமிறைதேத்துநங்கைமீ
ரளித்தனசெழுந்தழலரிக்கலென்கொலோ. கஎ௫

இறைவிதன்பாங்குறவிறைவன்பால்வளர்
சிறைபடுசகோரமுங்களித்துச்செல்லுவ
மறைமுதல்புடையுமைமாட்டுநேமியும்
பறையடித்துவகையிற்படர்வதென்கொலோ. கஎ௬

எம்மையாளுடையவளிடத்திற்சார்தொறு
நம்மெலாவுடல்களுந்தண்மைநண்ணுறச்
செம்மல்பாற்புகுந்தொறுஞ்செல்வப்பேதைமீர்
வெம்மையார்ந்துடல்வெதுப்புறுவதென்கொலோ. கஎஎ

வேறு.

என்றனர்தம்முள்ளிவ்வாறுகூறுபு
மன்றலோதியர்மகிழ்கூரவிம்மித
மின்றிகழ்விழிகளால்விளைத்துப்புக்கன
ரன்றினார்புரஞ்சுடுமடிகள்சோலையின். கஎ௮

புகுந்தபேரருளுடைப்புனிதர்பொற்சிதர்
திகழ்ந்தபூண்மணிமுலைத்தெய்வக்கற்பினாட்
ககங்களிபயப்பமெல்லரும்பர்ச்சோலையி
னுகந்தபல்வளமெலாமுலாவிக்காட்டுவார். கஎ௯

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முறுக்குடைந்தலர்ந்தமலர்களுந்தளிருமுருகுலாய்க்கவின்றபூங்கொம்பர்
நறைக்கொடிபடர்ந்துதழுவிவந்தலைக்குநாகிளங்காலினாலசைவ
நிறைக்களித்தலைவரொடுமடமகளிர்நிகழ்த்திடுகலவிதோற்றுவபார்
கறைக்கனமிகந்துமதுத்துளிதுளிக்குங்கடிமலர்க்கதுப்பிளந்தோகாய்.

தென்றல்வந்தசைப்பத்தரைவிழுந்தொசியுந்தேங்கமழ்மலர்க்கொடிப்பாங்கர்
மன்றலந்துணர்ப்பூங்கொம்பர்கள்குரங்கியாடுவபுலந்தமங்கையரைக்
கன்றியகாமத்தலைவர்செந்தளிர்மென்கழல்பணிவதுதெரிப்பனபார்
வென்றிகொள்சிலையும்பிறையுமேக்கறுப்பவிளங்கியதிலகவாணுதலாய்.

கடித்துணர்ப்பணிப்பூந்தேறல்வாய்மடுப்பக்காமர்கொம்பிடத்துமண்கிடந்த
கொடித்திரளிடத்துஞ்சென்றுசென்றணவுங்குரற்சுரும்பிளையவர்பாலும்
பொடித்தபொற்றனத்தார்மருங்கினுந்திரியும்புலவிதீர்சேடர்போல்வனபார்
பிடித்தயிற்பகழிதொடுத்திடாதமர்செய்பெருவிறற்புருவவிற்படையாய்.

அரிக்குரற்சிலம்புமிழற்றியசும்மைக்கஞ்சிறைச்சுரும்பினமிரிவ
வெரிக்கணினவிந்தகாமனுக்கந்நாளிருஞ்சிலைநாணெனப்போந்து
பரிக்குந்தம்பிழையைநினைந்துமுன்னிற்பப்பயந்தமைதெரிப்பனபாராய்
விரிக்கும்வெண்டரங்கவேலையினகன்றுவேலெனக்கூர்த்தவாள்விழியாய்.

நந்தமைநோக்குங்கிள்ளைகள்பூவைநயப்புறநுதல்விழிப்பெருமான்
வந்தனனறிகென்றுரைப்பனதேரின்வாம்பரியெனத்தமையுடையாற்
கந்திலம்மதவேள்பாசறைதனில்யாமணைதிறமொழிவதேய்ப்பனபார்
கொந்தொளிமணிப்பொற்குதம்பைநான்றெருத்திற்குலாவுறும்வார்செவிப்பாவாய்.

மட்டவிழிதழின்வனமுருக்கெதிரேமுழுவதுமலர்ந்தொளிர்தோற்றங்
கட்டழகுடையகாமன்பாசறைக்கட்கண்டமைப்பொரவுருக்கொண்டு
சட்டவந்தழலின்மறுவலுமெரியுந்தன்மையைத்தெரிப்பனபாரா
யட்டொளியரத்தச்செய்யவாய்க்குமுதவலர்பொருங்கோமளக்கோதாய்.

அளியினமுரலத்தளித்தலர்கொடிமுன்னலைந்துவீழ்ந்தொசிவுறுதோற்ற
மொளிவிழித்தழலினுருவழிவேளையுதவுசென்றன்னவன்மனையாந்
தெளியிழையிரதிமறுவலும்வணங்கியிரப்பதுதெரிப்பதுபாராய்
தளிரிடையரும்புந்தளவவெண்முகையிற்றயங்கியதவளவாணகையாய்.

பாசொளிவிரிக்குநினதுருநோக்கிப்பசுமுகிலெனமடமயில்பே
ராசையினெழுந்துநடிப்பனதமையூரறுமுகக்குரிசிலையுயிர்த்த
நீசரணைதுங்கிவரப்பெறும்பேற்றுணிமகிழ்ச்சிதெரிப்பனபாராய்
தேசவிர்முருக்கினிறங்கவர்ந்துமிழுந்தீஞ்சுவைபயின்றவாயிதழாய்.

நெருப்பவிர்ந்தனையசெய்யமாந்தளிர்கணீனிறக்குயில்கொழுதுவநின்
குருப்பொலிமணிவாய்மொழிக்குநேராகக்கருதிநின்கொழுங்கனிவாயி
னுருப்பொலிவுடையசெந்தளிரிரதமுண்பதுந்தெரிப்பனபாராய்
மருப்பொலிகமுகின்கண்டமும்வளையுமறலியமங்கலமிடற்றாய்.

இடைதெரியாமற்குயிற்குலமிசையினிரங்குவவெந்தமைக்காணூஉக்
கொடியினமெடுத்தகுடம்பைகணேடிக்கொழுங்கருவுயிர்த்திடலரிதா
லுடையவுயாமேவளர்த்தியவருளென்றோலிடறெரிப்பனபாராய்
சுடர்மணியுக்குமமையொடுகரும்பைத்தொலைத்தெழில்வாய்ந்தபூந்தோளாய்.

மலைத்தமிழ்முனிபாற்பழகியபயிற்சிமாண்பினைத்தெரிப்பதுபோல
வலைத்திரட்சுனைநீர்படிந்துமாதவர்மெய்யலங்கியபூதிமெய்தோய்ந்து
கலித்திரளருவித்துளிமணந்தென்றல்கவர்ந்துலாய்வழிபடல்காணு
மொலித்தடத்துயிர்க்குங்கமலநீத்தடுக்கற்காந்தளோடுறழுமென்கரத்தாய்.

எழுதருநினதுமெய்யுறுப்பாதியெழிலினைக்கவருவான்முன்னிக்
குழுமியசெயல்போற்குஞ்சரஞ்சியங்கோலமான்பிணைமயில்கிள்ளை
வழுவில்பாண்மிழற்றும்பூவைகள்பிறவும்வயின்வயின்வெறுத்தமைபாராய்
செழுமணித்தரளவடஞ்சுமந்தெழுந்துசேண்வெளியடைக்கும்பூண்முலையாய்.

நாம்புகுமளவிற்பசும்பொழிலெமக்குக்கையுறைநல்குவதென்ன
மாம்பழம்வாழைப்பழநெடுஞ்சுளையவருக்கைநீள்பழம்விளம்பழங்க
டேம்படுபூகந்தெங்குமுந்திரிகைச்செழும்பழமாதிசிந்துவபார்
பாம்பெனக்கவின்றநிதம்பமேற்றழுங்கும்பருமமேகலையணிமடவாய்.

புரிமுறுக்குடைந்துமலர்த்திரளுகுக்கும்புதுமதுத்தோய்ந்துதாதளைந்து
விரியொளிதவளக்குவட்டினஞ்சேப்பவிரைகெழுகுங்குமச்சேற்றுப்
பெரியநின்முலைகளொக்குமாமுயலும்பெற்றிமைதெரிப்பனபாராய்
கரிநெடுந்தடக்கைகதலியென்றிரண்டுங்கவற்றுறச்சேர்ந்துவார்தொடையாய்.

தேந்துளிதுவற்றியிளந்தளிர்பரப்பிச்சிறிதழ்மலர்த்திரள்குவவிப்
பூந்துகளதன்மேற்புதைபடச்சொரிந்துன்பொலங்கழல்பனிப்புறுவண்ண
மேந்தலர்ப்பொதும்பர்சிலதியரெனநின்னேவலினிற்பதுபாராய்
காந்துபன்மணியினரிக்குரற்சிலம்புகறங்குபொற்கமலச்சீறடியாய்.

நெட்டிளமூங்கில்கண்டொறுந்தரளநிரைபடவுகுப்பனவணிச்ச
மட்டவிழ்மலர்போன்மிதிக்கினும்பனிக்குமலர்புரைநினதுதாள்பொதும்ப
ருட்டதைமலர்மேலென்படாதெனமிக்குருகிநின்றழுவநேர்வனபா
ரட்டொளியுருவச்சாயலான்மயிலென்றயிர்ப்புறுநுணங்குசிற்றிடையாய்.

வளையினமுயிர்த்தமணியினுலரவமணியினுலன்றியஞ்சுடர்கண்
டொளியிதழவிழாக்குமுதவம்புயங்களுறந்தநீர்நிலையகம்பொலிவ
களிவருவேனிற்குடைந்துசார்ந்தொளித்தகரவினைத்தெரிப்பனகாணா
யிளிவருதீஞ்சொலமுதெனவிசைக்குமிணைவராலனகணைக்காலாய்.

பல்வகைநிறத்தமலர்களுந்துறுமிப்பரந்தொளிர்பொதும்பரினீட்டங்
கல்வளரடுக்கற்குவடுசூழ்கயிலைக்காரிகைமடவரலணங்கு
வில்வளர்நுழைநூற்சித்திரவுடுக்கைவிரித்துடுத்தமைபொரனோக்காய்
மல்வளரிபமுந்தோகையுமனமுமருட்டுகட்கினியமென்னடையாய்.

இனையவாறளவில்வளங்களுங்காட்டியென்னையாளுடையவளோடுங்
கனையுமாமறைப்பொற்சிலம்புகள்கறங்கக்கழலடிமென்மெலப்பெயர்த்து
வினைகணீத்துலகமுய்ந்திடச்செல்லும்வெண்பிறைக்கண்ணியாரங்க
ணனையவாஞ்சோலைநடுவண்வீற்றிருக்குநனந்தலைமண்டபங்கண்டார்.

கலிவிருத்தம்.

எண்ணில்வள்ளனும்பரியவல்லமெனவெண்க
ணண்ணலொடுதெய்வயவனாதியர்தருக்கா
வண்ணநதிவேணியவரேபுரிவனப்பி
னண்ணுமணிமண்டபநலஞ்சிறிதுரைப்பாம். ௧௬௬

வெண்மணியடித்தலம்விரித்திடையிணங்க
வொண்மையொளிகாலும்வயிரேரியமுறுத்தி
யண்ணன்மணிநீலமதனும்பரினடுத்தி
வண்ணமலிபொற்குறடுவையம்விலைகொள்ளும். ௨௦௦

நீலநிலமீதுநிகழ்செக்கர்மணிவிற்றூண்
சாலமிசையோங்குவதழுங்குமிருள்வேலைப்
பாலணவுதுப்புவரில்பாணியுணவேட்டு
மேலமருமுந்திசெலமேக்கெழுவபோலும். ௨௦௧

அன்னவொளிர்தூணமசைவசிரமேரிந்து
மின்னுகமுகட்டுவெளிமேய்ந்ததிறம்விண்ணின்
முன்னியெழுசெந்துகிர்முகந்தகுளிர்கங்கை
நன்னதிபரந்தொளிர்பரப்பெனநலக்கும். ௨௦௨

வேய்ந்தமுகடெங்கும்வளைமீனகமடமன்னம்
பாய்ந்துதிரிவண்டுபதுமங்குமுதமாதி
காந்துமணியிற்புனைகவின்றவுருவிண்ணத்
தேய்ந்தநதிமல்குவளமென்னவெழில்காட்டும். ௨௦௩

முத்தணிவடங்கண்முழுவெண்ணிலவுகாலக்
கொத்தொளியநாகமணிகூர்ந்தவெயில்காலத்
தத்தொளியநாசிகடயங்குவனவேணி
வித்தகர்முகங்களெனமிக்குவகையேய்க்கும். ௨௦௪

மாயவணிகர்ப்பமணிவாய்ந்தநிலநாப்பட்
சேயொளியமார்பின்மணியொப்பவிருள்சீத்துக்
காயுமொளிவித்துருமமேடையெழில்காட்ட
வேயுமதன்மேலணைமணிக்கிரணமென்ன. ௨௦௫

பத்தியின்வரைந்தபலவும்கதிர்விராவித்
தத்தமுண்மயங்கியிதன்வண்ணமிதுவென்ன
மெய்த்தவறிவாளர்களும்வேறறியலாகாச்
சித்திரமியன்றுதிசைபோயதிசைமாதோ. ௨௦௬

எங்கதைமலைமீமிசையியங்கினரிலாமென்
றந்தரமியங்குநர்களஞ்சியடையாளஞ்
சிந்தையுறவாய்ந்தனரமைத்ததிறமானுங்
கொந்தொளிஞெமிர்ந்தசிகரக்குருமணிக்கல். ௨௦௭

ஊடுபடைசோலையினெளிப்பவதுகாணு
மாடுகிளிபேடையெனவந்துசிகரத்தி
னீடியமணிக்கிளியைநேசமுடனண்மிக்
கூடவெனவூடலுணர்வித்துமதிகொட்கும். ௨௦௮

தத்தமதுபேடைபுடைதங்கவுமருங்கோடு
சித்திரமணிப்புறவணைக்குமியார்சேவ
லத்தகையசேவல்புடைவைகவுமணைக்கும்
புத்தொளிமணிப்புறவைவீழ்ந்திடுபுறுக்கள். ௨௦௯

தூற்றுமொளிமாழையினியற்றியசோபான
நாற்றிசைமருங்கினுநலக்கவினையவித்துச்
சீற்றமலியாளிதிணிவச்சிரமிழைத்துப்
பாற்றமுழுவுமாறுபயில்வித்துளதையன்றே. ௨௧0

துப்புறுமலத்தொகைதுரந்தவடியார்கட்
கெப்புடையுநேரறியலாகுமிறையென்ன
வெப்புடையினின்றுமெழிஞேக்கவெளியாகி
யப்பெரியமண்டபமலங்கிமணநாறும். ௨௧௧

கந்தமலிதெண்புனல்கூலந்தன்றொழுக்குஞ்
சந்தனவசும்புதவழ்தண்ணியநிலந்தான்
சிந்துரநறும்பொடிகள்சிந்தியகிலாதி
யுந்துபுகையேற்றிவிழியொள்ளொளியைவாங்கும். ௨௧௨

மண்டபமருங்குறவயங்குமிருவாவி
முண்டகநறுங்குமுதமூசளியநீலங்
கொண்டுகுருகார்ப்பவிரைகூருவிபாய
வெண்டிரைபயின்றுமணிவீசிவிளையாடும். ௨௧௩

ஆடுவனபாடுவனவையவருகென்று
வோடியெதிர்கொள்ளுவனவாகியுழல்பாவை
நீடுமொளியாடிமணிமாலைகணிரம்பிப்
பீடினுயர்பந்தர்பெரிதோங்குமதன்மாடே. ௨௧௪

எவ்வழகுமெவ்வெவர்தமக்குமியைவிக்கு
மவ்வழகரம்மையுடனுடியமர்வெய்துஞ்
செவ்விமணிமண்டபமதன்றிருவளத்தைப்
பௌவவுலகத்தொருவர்பன்னிடவுமாமே. ௨௧௫

வேறு.

இன்னணங்கவினியவீடிலாமண்டப
முன்னுறக்கண்டருண்முதல்வனுரிமவரை
யன்னையோடாயிடையண்மினுரகனிலாய்
மின்னுகும்பூவணைவீற்றிருந்தாரரோ. ௨௧௬

இயலினுன்மயிலெனவிளமயிலீட்டமுங்
குயிலெனமொழியினற்கோகிலவீட்டமு
மயலுலாயண்முறவங்கலாரோகையிற்
செயனிலாய்ப்பணிபலசெய்குவாராயினர். ௨௧௭

செழுமணிப்பூாசனத்தேம்புனல்கொணர்குவார்
கொழுமணித்திருவுருக்குளிரநீராட்டுவா
ரிழைநுழையாடையானீர்ம்புனலொற்றுவார்
விழுமியசந்தனமெய்யெலாங்கொட்டுவார். ௨௧௮

தூவொளித்தமனியச்சுண்ணமேலட்டுவார்
மேவருங்காரகில்விரைபுகைத்தேற்றுவார்
தாவில்சாந்தாற்றியாற்றண்ணெனவீசுவார்
கோவைவாய்மணிகளாற்கோலமிக்காற்றுவார். ௨௧௯

குதம்பையும்பட்டமுங்குருமணிப்பூணுடை
விதங்களுங்கதிருகமேதகவணிகுவார்
கதழ்ந்துபோய்நீண்மரக்கடிமலர்கொய்துநீஇப்
பதந்தனிற்சென்னியிற்பரிவுடன்சொரிகுவார். ௨௨0

கண்ணடிசீரெலாங்காணியகாட்டுவார்
வண்ணவூணறுவகைச்சுவையொடும்வட்டிலி
னுண்ணியவென்றுமுனுய்த்தனரேத்துவார்
தண்ணியநீரினாற்றாழ்கரம்பூசுவார். ௨௨௧

வாசமார்பாகடைநீட்டுவார்வண்சிலம்
போசையார்நாடகமோகையினாடுவார்
வேசறவின்றியாழ்பாடுவார்மென்குயில்
கூசநின்றின்சொலான்மங்கலங்கூறுவார். ௨௨௨

வேறு.

பாவைமார்களிப்பரிசுபோற்றிட
வோவிலின்பமுற்றுறையுமேல்வையின்
மூவருந்தொழுமுதல்வியாகிய
தேவிமற்றிதுசெய்கின்றாளரோ. ௨௨௩

மாதர்மாலதிவல்லிகாணிய
போதுவாமெனப்பொங்கிமேலெழுங்
காதலீர்த்தலாலெழுந்துகாந்தனார்
பாதமேத்தினள்படர்தலுற்றனள். ௨௨௪

நேடருந்தகைநிமலனாரவ
னாடுவாரலர்க்கொடிகளேயிசை
பாடுவார்பசுங்கிளிகளேபணி
கூடுவார்கொழுந்தென்றலேயென. ௨௨௫

இனிதுவீற்றிருந்தருளவேழைமா
ரனைவரும்பிரானருளினெய்தியே
தனதுபாங்கரிற்றதையமங்கலப்
புனிதவாழ்த்தொலிபொங்கிமேலெழ. ௨௨௬

சங்குதுந்துமிதாரைதண்ணுமை
வங்கியங்கிளைமகரயாழுட
னங்கநான்மறையாதிமல்கிசை
யெங்குநீண்டுவெற்பெதிரிசைப்பவே. ௨௨௭

சிலம்புகிண்கிணிசெவ்வித்தாமரைக்
குலம்பழித்தநின்கோலச்சேவடி
நிலம்படப்பொறாதென்றுநெஞ்சுளைந்
தலம்பினாலெனவலம்பியார்ப்பவே. ௨௨௮

என்னைநேர்கிலாவிளங்கொடிக்கிவ
டன்னருட்டிறந்தந்தளிக்குமா
றுன்னினாளெனவுளைந்துநொந்தென
மின்னிடைக்கொடிமெலிந்துதேம்பிட. ௨௨௯

சோலைக்கொம்பர்வாழ்தும்பியைக்குழன்
மாலைக்கூட்டுணைப்படர்ந்துவம்மினென்
றாலிக்கூவியாங்களகத்தொங்கலி
னீலக்காரளிநிரைகளார்த்தெழ. ௨௩௦

கட்டொளிக்கதிர்காணரும்பொழி
லுட்டலைப்படுமிருளொதுங்குமா
வட்டமிட்டொளிவார்ந்தகாதிடைப்
பட்டபொற்குழைபகல்விளக்குற. ௨௩௧

கற்குழைக்கதிர்ப்பரிதிகண்டதன்
விற்கலங்கியைக்கான்றுமெல்லிணர்
தொக்கமாலதிமன்றல்சூழ்வினைக்
கக்கணுக்குறுமங்கிகாட்டவே. ௨௩௨

தேசுலாமுகத்திங்கள்கண்டது
ஞசிலாதகலறலுயிர்த்தவ
ணீசர்மாவினுக்கீந்துவாக்குறும்
வாசமல்குநீர்த்தாரைமானவே. ௨௩௩

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கருப்புச்சிலைக்குநாணுவெம்மைக்கைக்கொண்டருள்கென்
றொருப்பட்டண்மிமொய்த்தலுறழப்பொதும்பர்வண்டு
குருப்பொன்மகரப்பகுவாயொளிருங்கூந்தற்கொழுந்தேன்
மருப்பட்டலருந்தொடையன்மருங்குவந்துசூழ. ௨௩௪

தத்தையொன்றுமுன்கைதரித்தநீமற்றெமையும்
வைத்துப்புரத்தல்வேண்டுமெல்லையருள்கென்பனபோற்
கொத்தின்மலர்கொள்சோலைக்குழுமுகிளிகண்மொழியின்
றித்திப்பிசையினமரச்சேர்ந்துமருங்குமொய்ப்ப. ௨௩௫

அண்ணல்கரத்துமான்போலளியினெமையுந்தாங்கும்
வண்ணமருளவேண்டுமென்றுவணங்கவந்தாங்
கெண்ணினகன்றவிழியினியல்பைநோக்கியினமாக்
கண்ணியுகளுமான்கள்கஞலியருகுகுவளைய. ௨௩௬

காமர்முருகவேட்குக்காதல்யாமுங்கடவுஞ்
சேமப்பரிகளாகத்திருக்கணருளென்றுற்றுங்
கோமப்பிறவியீருமியலினினமாவெண்ணிப்
பூமென்கலவமஞ்ஞைபுடையின்மிகவுந்திரள. ௨௩௭

துளிர்மெல்லடிகணிலமேற்றங்கிவருந்துமென்னை
யளியினூருகென்னுவன்பினைத்தும்வந்தாங்
கொளிர்பொற்சிலம்பினொலியுநடையும்பயிலவென்னி
வெளியவன்னத்தொகுதிமேவிப்புடையினெமிர. ௨௩௮

தங்களினத்துக்கொடியுந்தருவும்புணர்க்கும்வதுவை
பொங்கவியற்றுநினைவாற்போதுஞ்செயலைநோக்கி
யங்கங்கெழுந்தகொடியுமரமுமலர்களூழ்த்துச்
செங்கட்புனலும்வாக்கிமகிழ்ந்துசேவைபுரிய. ௨௩௯

அருகுநீட்டுமகளிரம்பொற்கடகமுன்கைக்
குருகுகறங்கப்பற்றிக்கோலவடிகளொதுங்கிக்
கருவிவானமின்னுக்காவினடைகற்றென்னப்
பொருவின்மகிழ்ச்சிதுள்ளமெல்லப்பெயர்ந்துபோந்தாள். ௨௪0

கலிவிருத்தம்.

போந்தவிமயத்தலைவிபூத்தகொடியண்மிச்
சேந்ததளிர்மெல்லடிகள்செங்கையொளிர்வாயா
வாய்ந்தமுகைமூரன்மலர்த்தொத்துமுலைவாட்க
ணேய்ந்தவளியாகமகளென்னவெதிர்கண்டாள். ௨௪௧

ஒண்டொடிமணிக்கையின்வளர்த்தவொருதன்னைக்
கண்டடிவணங்குபுகசிந்துதுதியாரக்
கொண்டதெனவந்தகுளிர்காலின்முடிகோட்டி
வண்டிசையிசைப்புநனிமல்கவெதிர்கண்டாள். ௨௪௨

மன்றல்வினைசெய்வகையறிந்துவதுவைச்சீர்
நன்றுபுரிபாங்கியரிணுறியயனின்ற
கொன்றைநிறைபொன்னணிகொளுத்திமதுவார்ந்த
மென்றுகளெனுங்கலவைமெய்யுணிவகண்டாள். ௨௪௩

தன்னிருவிழிக்கருணைதாங்கள்பெறவெண்ணி
யின்னதுசெயக்கடவமென்றமரர்நாட்டுக்
கன்னியரதற்கணொருகாப்புறுவதேய்ப்ப
மன்னுகுரப்பாவையொடுமாடமர்வகண்டாள். ௨௪௪

ஓங்குமணமன்றல்வினைக்குய்ப்பமலர்மாலை
தாங்கிமடமாதர்பலர்தங்கியதுபோலப்
பாங்கரின்வளர்ந்துபலவீழ்விழல்கடுப்பத்
தூங்குமலர்மல்குமரவந்துதைவகண்டாள். ௨௪௫

மாலதிநறுங்கொடியைமன்றல்வினையாற்றன்
பாலுரிமையாக்கவருபண்பினையறிந்தாங்
காலிமகிழ்மென்குயிலனைக்குமிளமாவுங்
கோலநிறைவேய்ந்துகுளிர்தூங்குவதுகண்டாள். ௨௪௬

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இன்னவாறழகுநோக்குமெம்பெருமாட்டியோகைக்
கொன்னெடுங்கடலுண்மூழ்கிக்குளிர்முகமலர்ச்சிகாட்டத்
தென்னிறைமன்றல்செய்யச்சிவபிராற்குணர்த்தும்போயென்
றுன்னினளுங்கணின்றும்பெயர்ந்தனளொலிசங்கார்ப்ப. ௨௪௭

தடம்படுகுளிர்பூஞ்சோலைத்ததைபெருவளங்கணோக்கி
யிடந்தொறுஞ்சார்ந்துமெல்லவேகுவாளுரிமைபூண்ட
மடந்தையர்மலர்கள்கொய்துவந்தனர்நீட்டநீட்டக்
குடங்கையினினிதுவாங்கிக்குளிர்மணமுயிர்த்துமோந்தும். ௨௪௮

இமிழிசைச்சுரும்புந்தேனுமின்மதுநுகர்ந்துகொட்குந்
தமனியவீழ்நான்றன்னதளையவிழ்கடுக்கைநோக்கி
யமரர்கள்பெருமான்றெய்வவலங்கலென்றண்மித்தானை
யுமிழொளிக்கரத்தாற்கொய்துபூங்குழலும்பர்ச்சேர்த்தும். ௨௪௯

இணர்விரிபொதும்பர்நாப்பணெறிதிரைப்பட்டம்பூத்த
மணநறுநீலங்கொய்துவந்தனர்நீட்ட வாங்கி
நிணமலைமுனையவேற்கணீலங்களளவளாவத்
தணவருங்கடிப்புக்காதிற்றண்ணருவொழுகவைத்தும். ௨௫0

அள்ளிதழ்க்கமலச்செங்கேழலர்பலகயத்துட்குற்று
வள்ளிதழாய்ந்துகட்டிநீட்டியதொங்கல்வாங்கித்
தெள்ளொளித்தரளமாலைதிணிமுலைக்கமலமொட்டு
நள்ளுமாறவற்றினுச்சிநாலவொண்கழுத்திற்பூண்டும். ௨௫௧

புலியுருமருளப்பூத்தபூந்துணர்வேங்கையொள்வீப்
பலபறித்துகுத்ததாதுபைந்தொடிமகளிர்நீட்ட
வலர்கரத்தேந்தியம்பொற்சுணங்கெனும்வேங்கையோடுங்
குலவவெங்களபக்கொங்கைக்குவட்டின்மேற்செறியப்பெய்தும், ௨௫௨

மருதிளந்தளிர்கண்மாவினறுந்தளிர்செயலைச்செங்கே
ழுருகெழுதளிர்கண்மற்றுமொய்யெனக்கொணர்ந்துமுன்ன
ரிருநிலம்பரப்பிமெல்லவெழுந்தருளென்றுவேண்டத்
திருவடித்தளிர்கள்சேப்பப்பையப்பயச்செல்லாநின்றாள். ௨௫௩

செக்கர்வானுருக்கொண்டென்னச்செந்தளிரிளமாநோக்கி
முக்கணனுருவந்தோற்றுமுதன்மையைக்குறித்துநீவி
ரிக்கடிமாத்துக்காரவீர்ம்புனல்வாக்குகென்னாத்
தக்கதன்புடைசூழ்மின்னார்தங்களுட்சிலரையேவி. ௨௫௪

தென்றலாலலைந்துவீழ்ந்துதளர்ந்தெழில்சிதையுமற்றோர்
மன்றலங்கொடியைநோக்கிவல்லியன்னீர்கணீவிர்
நன்றிதுதன்னைப்பற்றிநாகிளமரத்தினேற்றி
யொன்றுறயாத்துப்பின்னருறுகெனச்சிலரையேவி. ௨௫௫

தெற்றியமலர்களானுந்தேத்துளிபருகவந்து
முற்றியசுரும்பினானுமுரிவதுபோலத்தாழ்ந்து
மற்றொருமரத்தைநோக்கிநீயிர்வண்டுண்ணப்பூவைக்
குற்றுமண்ணுசுத்துக்காமின்கோடெனச்சிலரையேவி. ௨௫௬

ஒளகுலாம்பளிக்குப்பாறையுமிழ்கதிர்பாலென்றெண்ணி
வளைகுலாம்வாயிற்கவ்விவருந்துபைங்கிளியைநோக்கி
யளிகுலாய்நீயிர்தேவரான்பயங்கொணர்ந்துவல்லே
கிளியினையூட்டுமென்னக்கேண்மையிற்சிலரையேவி. ௨௫௭

படுபனையுரிஞ்சிக்கான்றபடரெரிதாவிவாடு
நெடுமரமொருசார்நோக்கிநீயிர்விண்ணரசின்வைகு
முடியுடைக்கடவுட்கூவிமுகின்மழைபொழியுமாறு
விடுமதியென்றுசாற்றுமின்னெனச்சிலரையேவி. ௨௫௮

இன்னணம்விளையாட்டாற்றின்யாரையும்விடுத்துமெல்லத்
தன்னையேயனையாளையர்வெரிந்புறஞ்சாரச்சென்றாண்
முன்னெடுவீறில்லார்முழுமணித்தவிசினும்பர்
மன்னிவீற்றிருக்குங்கோலம்வாள்விழிகளிப்பக்கண்டாள். ௨௫௯

அரும்பிளமுலைகடோற்றியலர்முகங்காட்டிமென்கான்
மருங்குவந்தசைப்பமின்னாரெனப்புடைமலர்ப்பூங்கொம்பர்
கருங்குயினல்பாடவாடுமோடலிற்கருத்துவைத்துத்
தெருண்டவர்க்கமுதமன்னார்தனித்துறைசெவ்விநோக்கி. ௨௬0

வளத்தின்மிக்குயர்ந்ததொண்டைமண்டலத்துறைவோருய்யக்
கிளைத்தபுண்ணியத்தின்பேறுகிளரொளிக்காஞ்சிமூதூர்
விளைத்தபுண்ணியத்தின்பேறுமேதகுமறமெண்ணான்குந்
திளைத்தபுண்ணியத்தின்பேறுவிதுவெனத்தெரிதறேற்றும். ௨௬௧

சிலம்பணியொதுக்கித்தேம்புஞ்சிற்றிடைப்பருமம்பற்றி
யலம்புறவண்ணமெய்யினணிகலந்திருத்திக்கொண்டு
குலம்புரிமஞ்ஞைசெம்பொற்குன்றினையணைந்தாலென்ன
வலம்புரிமிடற்றாள்கேள்வர்வெரிந்புடைமறைந்துநண்ணி ௨௬௨

செழுநலக்கலவியாற்றுஞ்செவ்வியினொளிகான்றுள்ள
முழுவதுநாணச்செய்வவிவையெனமுனிவாள்போலப்
பொழிகதிர்ச்சுடர்ப்பூங்கண்களிரண்டையும்பூங்கைநீட்டிக்
கழிகளியகத்துப்பொங்கக்கதுமெனப்புதைத்தல்செய்தாள். ௨௬௩

முருகுகொப்புளிக்குங்கொன்றைநறுந்தொடைமுடித்தவேணி
யொருவர்வாண்முகத்துக்கண்ணையுறையினும்பிடேங்களென்றங்
கிருதிறத்தரவுங்கூடியேல்லைபார்த்துண்டதொக்கும்
விரிமலர்க்கரங்கடம்மால்விழிச்சுடர்புதைத்ததோற்றம். ௨௬௪

இன்னணம்விளையாட்டாகவிமயமீன்றெடுத்தநங்கை
பொன்னவிர்சடையார்கண்கள்புதைத்தலும்புவனமெல்லாந்
துன்னியசகலத்தன்மையெய்தியுந்தொல்லைநாட்கண்
மன்னுகேவலமேயென்னச்செயலறவிருள்வந்தன்றே. ௨௬௫

நித்தியகோலங்களின்பமேநிகழ்த்தலானும்
பித்தெனவருளுந்தொல்லைப்பெரியகேவலமுந்துன்பக்
கொத்தினைப்பகுத்துக்காட்டாக்கொள்கையினானும்வாட்கண்
பொத்தியவிருளின்வீக்கமவற்றொடும்புரையாதன்றே. ௨௬௬

விளக்கிருசுடரும்வேலைவிரியொளித்தழலுமற்று
மளப்பருந்திறல்பல்வேறுகாரியவழலுமேனைத்
துளக்கில்காரணமாம்பூதவன்னியுஞ்சுடராவாகி
யொளிக்குமேலிருளின்வீக்கமிற்றெனவுரைப்பார்யாரே. ௨௬௭

இருந்தவாரிருந்துபம்புமெண்ணிலாவுயிரும்வாடி
வருந்திடுமிடும்பைநோக்கிவள்ளலார்வறிதேநெற்றித்
திருந்தழல்விழியைவல்லேதிறந்தனரிளமகார்கள்
கருந்துயருழக்கவீன்றோர்காண்பரோசிறிதுபோதும். ௨௬௮

ஆரியனருளாற்பாசமனைத்தும்விட்டிரியஞானப்
பேரொளிநிரம்பியாங்குப்பிஞ்ஞகர்கனற்கணோக்காற்
காரிருளொதுங்கிச்சாம்பக்கதிர்வெயிற்கற்றைமாதோ
பாரிடந்துறக்கமெங்கும்பரந்ததாலிறும்பூதெய்த ௨௬௯

எண்ணிலாவுயிருமின்பமெய்தினவிறைவர்கண்கள்
பண்ணுறுமொழியாண்மூடும்பொழுதினும்பரனார்நெற்றிக்
கண்ணினைத்திறந்தபோதுங்கதிர்ச்சுடர்மூன்றுந்தத்தம்
வண்ணவாளொளிபெருமைமழுங்குதலுற்றவன்றே. ௨௭0

எரிவிழிதிறத்தலோடுமிருட்குழாமுடைந்தும்பர்
வெரினுடைப்புறத்திலோடியொளித்ததேவிழையவந்நாட்
கரிநிறவுருவம்பெற்றகாரிகைகரங்கணீத்துப்
பரிவொடுபணிந்துநெஞ்சிற்பயங்கிடந்தலைப்பக்கூறும். ௨௭௧

அடியனேன்விளையாட்டாகவலர்விழிபுதைத்தேனந்தக்
கொடியதோர்செயலால்விண்ணுங்குரைகடலுலகுமெங்குங்
கடியிருண்மிடைந்ததிந்தக்கடும்பிழைபொறுத்தியென்னாத்
துடியிடைமடந்தைமீட்டுந்துணையடிவணங்கிநின்றாள். ௨௭௨

நாயகிபரிவைநோக்கிநம்பனாரருளிச்செய்வார்
பாயினபருமவல்குற்பசுங்கொடிபின்னர்வந்து
நீயெமையறியாவண்ணம்புதைப்பினுநீயேயென்று
சேயிதழ்க்கரங்கடோய்ந்தவூற்றினாற்றெளிந்துகொண்டாம். ௨௭௩

ஆயினுநினக்குமைந்தராகியவுலகத்துள்ளோர்
மேயினவலக்கணீப்பானுதல்விழிவிழித்தாங்கண்டாய்
பாயினவிருளாணியுங்காளிமம்படைத்தாயென்ன
மாயிருஞாலமீன்றாண்மறுவலுமிதனைக்கூறும். ௨௭௪

பற்பலவுயிர்களெல்லாம்பருவரவடிகேணின்றன்
விற்படுசுடர்கண்மூடிவிளைத்ததீவினையின்பேறு
மற்பனேனுடம்பின்மாசுங்கழியுமாதவங்களாற்றப்
பொற்பமரிடமுங்காட்டிவிடையருள்புரிதியென்றாள். ௨௭௫

எள்ளருங்காதற்பாவாய்நிற்றணந்திருத்தலாற்றே
மொள்ளியதவத்தின்மூண்டவுளத்தினைவறிதுமீட்டுக்
கொள்ளலுந்தகுதியன்றிக்கொள்கையாலெவ்வாற்றானு
மெள்ளயாமாற்றியிங்கண்மேவுதும்விரைந்துநீயும். ௨௭௬

வெயில்கிடந்திமைக்குஞ்செம்பொன்விலங்கலின்வடபாலெய்திச்
செயிர்தபுதவங்களாற்றிக்காளிமந்தீர்ந்துதீஞ்சொற்
குயிலனாய்கவுரியாகிக்குழைகிழித்தொழுகும்வாட்கண்
மயிலனார்மாடவீதிவளநகர்க்காஞ்சிநண்ணி. ௨௭௭

திருந்தநம்பூசையாற்றிவிழிபுதைசெயலால்வந்த
வருந்தவறொழிவாயாகவங்கண்மாலதியுநின்றன்
பெருந்தனியிருக்கைவைப்பிற்பிரசம்வார்காஞ்சியாகி
வருந்தடங்கருங்கட்பாவாய்மற்றுநம்மிருக்கைதன்னில். ௨௭௮

இந்நெடுந்தளிர்ப்பூங்கொக்கினினத்தொருகுருதிச்சூத
மன்னிடுமமிழ்தமூற்றுவாலெயிற்றணங்கேயந்தப்
பொன்னெயிலுடுத்தகச்சிப்புரத்தொருமாவின்பாங்கர்
நன்னெடும்புணர்ச்சிமன்றனமக்கினிதுறுகவென்றார். ௨௭௯

இறைவரைத்தணத்தலெவ்வாறெனமிகப்பிணங்குநெஞ்சை
யிறையவர்பாலிருவித்தீர்ந்துவிடைகொண்டங்கிமயமீன்ற
விறைவிபொற்சயிலநோக்கிநடந்தனளென்னையாளு
மிறைவருந்தமியராகியெழில்வளர்சோயில்புக்கார். ௨௯0

அகளமெய்வடிவானந்தவற்புதக்கூத்தனார்தம்
முகவிழிநங்கைசெங்கைமுளரியாற்புதைத்தகாதை
நிகழ்விளையுரைத்தாமிப்பாலவரடிநினைந்துபோற்றித்
தகவுமைகழுவாயாற்றுந்தன்மையிற்றன்னருஞ்சொல்வாம். ௨௯௧

திருக்கண்புதைத்தபடலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௯௫.

கழுவாய்ப்படலம்.

கலிவிருத்தம்.

குருவான்மதிவேய்ந்தகொழுஞ்சடிலப்
பெருமானடிதாழ்ந்துபிறங்கருள்பெற்
றொருமாமலையீன்றவளொண்கனக
வரைமேவியவங்கண்வழிக்கொளலும். ௧

பல்லாயிரகோடியர்பாங்கியருஞ்
சொல்லாலமையாததொகைப்படுவார்
வில்லார்நுதல்விண்ணரமங்கையரு
மெல்லாமடமாதருமீண்டினரால். ௨

காரார்மணிமேனியனுங்கமலச்
சீரானணவானவனுஞ்செழிபொன்
னூரான்புருகூதனுமும்பர்களு
மோரார்கணநாதருமீண்டினரால். ௩

முழவாதிமுழங்கினமொய்ம்மணியாழ்
குழலாதியெழுந்தனகூர்ந்தடியிற்
றொழுவோர்ரொலிபம்பினதூமறையின்
வழுவாவொலிமல்கினமாமழைபோல். ௪

எட்டுத்திசையுஞ்செலிளங்கிரண
வட்டக்குடைமீதுவயங்கியதேர்
புட்டுக்கதிர்கான்றபணிக்கவரி
தொட்டுச்சிலமாதர்துளக்கினரே. ௫

தேந்தாமநறுங்குழலார்சிலர்கள்
சாந்தாற்றியலைத்தனர்சார்ந்தனர்முன்
போந்தாடினர்சின்மடவார்புகழ்க
ளாய்ந்தோதினர்பாடினராயிரவர். ௬

இவ்வாறெவருந்தொகவேகலுறு
மைவாரளக்கதிர்வண்பவளச்
செவ்வாயுமைமாதுசெழுங்கயிலை
யவ்வார்பொழினின்றுமகன்றனளே. ௭

கலிநிலைத்துறை.

கடாமதக்களிற்றைவென்றகஞ்சுகப்புராணரை
விடாதுளத்தமைத்துநீணெறிச்சென்மங்கைவில்லிடும்
வடாதுகுன்றிவர்ந்துசொன்னவைப்பணிந்துகாதலிற்
றடாதவன்புமீக்கொளுந்தவஞ்செயத்தொடங்கினாள். அ

சீதமல்கிவாசமேந்துதென்றல்வந்துமுற்றுறும்
போதுபோதிகந்தசாதிபோலவெற்புயிர்த்தசீர்
மாதர்பொற்சிலம்புதோரைவண்ணமுத்துமாலைபூங்
கோதையாதிமெய்யணிந்தகோலமுற்றுநீவினாள். கூ

நீலவண்ணமாகிநீண்டகொம்புதன்னிடைத்தலைச்
சாலவுஞ்சிவந்தமென்றளிர்க்கணந்தனைத்துநன்
றூலினாலெனப்பரந்தவல்குன்மீதுவற்கலை
ஞாலமுற்றுமீன்றளித்தநம்பிராட்டிதாங்கினாள். க0

கொழுங்கள்வாய்மடுத்துணக்குழீஇத்திரண்டுவண்டின
மொழுங்குகொண்டுசூழ்ந்தமொட்டுடைந்தகஞ்சமொப்புறக்
கழங்குபந்துசெய்யபங்கயங்கடிந்ததன்னிருஞ்
செழுங்கரத்தினக்கமாலைசீர்பெறத்தரித்தனள். கக

காதலாற்பிணைந்திணங்குகாந்தனாரைநீங்கலான்
மாதர்மாமைபோய்விளர்த்தவண்ணமென்னவாசநீர்ச்
சீதமல்குசந்தனந்திமிர்ந்திலங்குமெய்யெலாம்
பூதநாதரைந்தெழுத்துமோதிநீறுபூசினாள். கஉ

வெள்ளிவெற்பினண்டர்சூழவீற்றிருக்குமெய்யருள்
வள்ளலார்தம்மேனியைப்பகிர்ந்துதான்வதிந்தநாள்
வெள்ளவேணியும்பகிர்ந்துகொண்டதொப்பமென்மலர்க்
கள்ளறாதகூந்தலைக்கதிர்க்கும்வேணியாக்கினாள். கங

அங்கிநாற்புறத்துமிக்கழற்றநாப்பணின்றுதன்
பொங்கரித்தடங்கணம்புயத்தைநிற்புறந்தரத்
தங்குகாதலான்மருங்குசார்தியென்றுபோக்கியாங்
கங்கண்வான்சுடர்க்குநேர்கதிர்க்குமாறமைத்தனள். கச

விரும்புதேனலங்கல்கந்தம்வீசுநானநீக்கியுங்
கரும்பனுக்குதிஞ்சொனங்கைகாரளாங்குழற்சடை
யரும்புதொன்மைவாசம்வேட்டுமுன்புபோலவஞ்சிறைச்
சுரும்பெலாமுரன்றெறிந்துசூழ்ந்துகொண்டவென்பவே. கரு

காரனங்குலாய்ப்படிந்தகாட்சியொப்பமெய்த்தவச்
சீர்புனைந்தகாமர்மங்கைசென்றுமூன்றுகாலமும்
வார்தரங்கநீர்படிந்தவண்சுனைத்தடங்களு
மேர்புனைந்ததெய்வவாசமெங்கணுங்கஞற்றுமே. கசு

ஐந்தழற்குமெய்யினையழற்றவைத்தவெள்ளிவெற்
பெந்தையாரைநீங்கலாலெழுந்தவெய்யகாமமாஞ்
செந்தழற்குநெஞ்சினைச்சினக்கவைத்திவ்வாறுவேற்
கந்தனைப்பயந்தநங்கைகாதன்மல்கநோற்றனள். கஎ

ஆயகாலையிற்றனதருங்குலப்பெண்ணுமென
மேயவன்பின்வெள்ளிமால்விலங்கல்கொண்டணைந்தெனத்
தூயவெள்விடைக்கணங்கள்சுந்தரப்புராதனர்
நாயகிக்கிரங்கியங்கணும்பர்சூழநண்ணினார். ௧௮

தோடுகொண்டவும்பரார்துதிக்குமோதையுங்கணம்
பாடுமோதையுந்திருப்பதச்சிலம்புகல்லென
வாடுமோதையுங்கறங்கியந்தரத்தெழுந்துலாய்ச்
சேடுகொண்டபொற்குழைச்செவிப்புறத்திறுத்தலும். ௧௯

சாய்ந்தமஞ்ஞைகாரினந்தழங்கவார்த்தெழுந்தென
வாய்ந்தமெய்த்தவத்திருந்தமங்கையோகைநீடிமிக்
கேய்ந்தவன்புமுந்துமாறெழுந்துநேர்குறித்தெதிர்
வீழ்ந்துவீழ்ந்தெழுந்தெழுந்துமெய்விதிர்ப்பநின்றனள். ௨௦

கண்டுகண்டுகண்கடாரைகாலவுச்சியிற்கரங்
கொண்டுபோற்றுமெய்த்தவக்கொழுந்துமுன்னர்விண்ணெறிச்
செண்டுகொண்டவேற்றினைச்செலுத்தியண்மியெண்ணிலா
வண்டரண்டமும்படைக்குமாதியானவண்ணலார். ௨௧

தணந்தநோய்தணந்திடத்தழீஇயினார்தழுவலும்
வணங்குலாயனத்தினீர்வயங்குபாலினீங்கியாங்
கிணங்குகாளிமத்துவக்குநீங்கியேற்றரக்கருக்
கணங்குறுத்துகன்னியாகவண்டமீன்றவம்மையும். ௨௨

கவுரவாணிறத்தளாய்க்களிப்புமிக்குமேலெழு
விவறிநாதனாருட்டிறத்தையெண்ணியீர்ம்புனல்
குவளைவாட்கண்வாரவார்ந்தகோதைபோலொசிந்துபொன்
னவிர்பதாம்புயத்தின்வீழ்ந்தெழுந்தகங்கைகூப்பினாள். ௨௩

சித்திரம்பொறித்தெனத்திகழ்ந்தநங்கைமேனியின்
புத்தெழிற்பெருக்கமும்பொருப்பெதிர்ந்தவெம்முலை
மத்தகக்களிற்றைவென்றுவாய்ந்தெழுந்தவீக்கமு
மத்தனார்தடங்கணாரவள்ளியள்ளியுண்டனர். ௨௪

ஆயிரத்தொரெட்டுமாற்றடுக்கல்வெற்புமோர்கவின்
மேயதம்மைமெய்க்கவின்விரிந்தலங்குபான்மையாற்
பாயவங்கண்யாவர்மெய்யும்பண்டைநீர்மைமாறிய
தூயவண்ணலேறுமின்றுலங்குவெண்மைநீத்ததால். ௨௫

அஞ்சுதுந்துமிக்கறங்கலோதையார்ந்துவிம்மின
மிஞ்சுதேன்றுவழ்றிவாசமிக்ககற்பகத்தலர்
மஞ்சுலாவுவானின்வானவக்குலங்கள்சிந்தின
பஞ்சிசேருமெல்லடித்துறக்கமாதர்பாடினார். ௨௬

பூதரோடியாடினார்புகழ்ந்துதொண்டர்பாடினார்
மாதரோடியாடினார்மகிழ்ந்துசித்தராடினா
ரீடில்யாங்கிமாரெலாருமின்பவெள்ளமாடினார்
வீடுகொண்டதென்னயாரும்விம்மிதத்தராயினார். ௨௭

இன்னவானபல்சிறப்பிணங்கவென்னையாளுடைக்
கன்னிவெற்புயிர்த்தமாதுகண்ணுதற்பிரானடி
மன்னுமன்பினால்வணங்கிவாழ்த்தியான்வழுக்களைந்
துன்னையங்கணணுகுமாறுவந்துமாதவஞ்செய. ௨௮

மாதராடலோவுறாதமாடமல்குகாஞ்சியிற்
போதநீதவாதகாதல்பொங்கருட்கணல்கென
வோதவேதமுற்றுயிர்த்தொழுக்கனைத்தும்வைத்தரு
ளாதராதிதேவனாருமுண்ணயந்திசைந்துபின். ௨௯

காதன்மங்கைபங்கயக்கரத்துமன்னுயிர்க்குலந்
தீதிலாதுவாழநீசெறித்தறஞ்செய்யென்றுல
வாதபாசனத்தினோடிரண்டுவெண்சராவமு
மீதலீத்துவெள்ளிவெற்பையெய்திடப்பிராட்டியும். ௩0

ஈந்தபாசனஞ்சராவமுன்வணங்கியேற்றன
ளேந்தலாரணைந்ததிக்குநோக்கிநின்றிறைஞ்சினாள்
போந்தரம்பரோடுபோயபுந்திமீட்சிகண்டிலாள்
வாய்ந்தவன்புகொண்டுதான்வழிக்கொளக்குறித்தனள். ௩௧

சண்டிகைப்பிராட்டியுந்தடைந்தசாரதங்களு
மண்டவாணருங்குலாயடர்ந்துசூழவீற்றுநாள்
வெண்டரங்கவேலையேழுமிக்கெழுந்தொலித்தென
மண்டுபல்லியங்கறங்கமால்விடைக்கணேறினாள். ௩௨

பெருமைமிக்கதன்வழிப்பிறந்ததான்றனைத்தணந்
தொருவியேகுமாறறிந்துயிர்த்தராற்றினாலென
வருவிவீழ்ந்தழுங்குபொன்னெடுக்கணீத்துமற்றிடை
மருவுமெண்ணில்குன்றநீள்வனங்களுங்கடந்தனள். ௩௩

அங்கணங்கண்வைகுதேவராதியோர்களன்பினாற்
பங்கயப்பதந்தொழப்பரந்தநோக்களித்தளித்
தெங்குமாரணங்களங்கமீண்டிவிம்மமென்மெல
மங்கைநண்ணுகாலைமுற்றுவேனில்வந்தடுத்ததால். ௩௪

கற்பகத்தருக்களுங்கரிந்துநீழலோவிடப்
பொற்பிலங்குமண்டரூர்பொரிந்துநீறுபட்டுக
விற்பிறங்குகங்கையும்வறப்பவந்துமேயதாற்
றற்பரப்பிரான்கடைத்தழற்கணன்னவேனிலே. ௩௫

ஒற்றையாழிபூண்டவெய்யதேர்கடாவுழும்பரான்
கற்றைவெங்கதிர்ப்பிழம்புகாற்றியுற்றுநீரொடும்
வற்றவேரிவாவியோடைமற்றும்வாய்மடுத்தனன்
வெற்றவேனிலுக்குடைந்துநீர்நசைக்கண்மிக்கென. ௩௬

செஞ்சுடர்ப்பிரானும்வெண்டிரைப்பெருங்குளிர்க்கட
லெஞ்சலின்றிவைகநேருறுமெய்திமூழ்கியாற்றலாற்
றஞ்சுவான்வழிச்சரிக்கவல்லனாயினனலால்
விஞ்சுவேனில்வெம்மைதாக்கிவீதலுண்மைபோலுமால. ௩௭

திங்கண்மேலுயர்ந்துமெய்துசெவ்விமாறிமாறியு
மங்கண்வேனில்வெப்பமெய்யடாதுதப்பியுய்ந்ததா
லிங்கிவ்வாறுசூழ்ச்சியின்மைபோலுமேனைவெய்யவன்
வெங்கனற்கொழுந்தளாவிமெய்வெதும்புகின்றதே. ௩அ

உதித்தெழுந்தவெண்ணிறத்துடுக்களென்றுகூறுவ
கதித்தெழுந்துமண்ணெலாங்கருக்கிமிக்குயிர்த்தொகை
விதிர்த்துவெவ்வுயிர்த்தழுங்கவேட்டையாடுவேனிலிற்
கொதித்தவெப்பின்மாதமேனிகொப்புளித்தபோலுமால். ௩௯

வெங்கனற்கொழுந்துமஞ்சும்வேனிலைத்தணித்துமென்
றெங்கணும்பரந்துசூழுமேழ்கடற்குலங்களு
மங்கணேயெழுந்துநோக்கியஞ்சிமேலெடுத்திடும்
பொங்குவெண்டிரைக்கரம்பொருக்கெனச்சுருக்குமே. ௪0

பூதலக்கிழத்தியும்பொருந்துநீர்வறத்தலா
லேதமுற்றுநாவறந்திருங்கடற்குடித்தெழீஇச்
சீதநீரொழுக்குகென்றுசெல்வினத்தைவாய்பிளந்
தாதரத்தினோடிரப்பதொக்குமங்குறுங்கமர். ௪௧

விண்ணெலாம்பரந்துசென்றுவேனில்வெப்புடற்றலா
லண்ணல்வானவக்குழாமழுங்கிவாளகன்றுறீஇக்
கண்ணகன்றபாதலங்கரந்துவாழ்துநாமென
மண்ணகழ்ந்துபுக்கவாய்தலுங்கடுக்கும்வார்கமர். ௪௨

மாயிரும்புவிக்கண்விண்டவார்கமர்க்குலந்தொறும்
போயுலாவியாதவன்பொழிந்தசெங்கதிர்த்திரட்
டீயவெந்தழற்பிழம்புதுஞ்சுகின்றதோர்கிலார்
பாயொளிக்கலென்பவாளராவினம்பரித்ததே. ௪௩

மானினந்தனைக்கவற்றவல்லவேனினீர்த்திரண்
மேனிமிர்ந்துதாவியாடுபெற்றிவேனில்வாய்ப்படுந்
தீநிலங்கொதிக்கும்வெம்மைசென்றுடற்றுநோவினைத்
தானுமாற்றிடாதுமெய்தவப்பதைப்பதொக்குமே. ௪௪

கொள்ளுமன்பர்தம்மைவெய்யகூற்றம்வந்துகொண்டநா
ளுள்ளுருகின்றிரங்குவோருமோர்துளிக்கணீர்பெறார்
கள்ளியுங்கரிந்துலர்ந்துகட்படாதிறக்குமேல்
லள்ளலாகும்வேனில்வீக்கமாருரைக்கவல்லரே. ௪௫

வேறு.

வேனிலின்னணமெங்கணும்விரிந்திடும்பருவந்
தேனிலாவியபணிமொழிமுகிழ்முலைச்செவ்வாய்க்
கானிலாங்குழற்கதிர்மலைக்கொடிவருநெறியால்
வானிலாம்புகழ்வயங்கியமகதநாடணைந்தாள். ௪௬

மகதநாடெலாமொன்பதுவருடமூழ்வலியான்
முகில்வழங்குதலின்றிநீர்வறந்துயிர்முழுது
மிகுபெரும்பசியுழந்துகண்சாம்பிமெய்தளர்ந்து
பகைமைகூரிலம்பாடுகோட்பட்டனவந்நாள். ௪௭

நற்றிறந்தருநறும்புனலுமழுமின்றி
யெற்றைநாள்களும்வேனிலேயனையவித்தேயம்
பற்றுவெந்தழல்வேனிலம்பருவத்தின்கடுமை
யிற்றெனக்கிளந்தியம்புதற்குவமையாதுளதே. ௪௮

நங்கைகண்ணிணைபுதைத்தலுறுதன்மிசைநாட்டஞ்
செங்கணேற்றவர்திறந்தநாளதற்படுமொளியே
யெங்குமாகவவ்வெரிவிழிவெம்மைதான்முழுது
மங்கண்வந்துவீழ்ந்தல்கினுலனையதவ்வீக்கம். ௪௯

வழுவிலேனையபருவங்கள்வந்தடுத்தழியுங்
கழிவதின்றியிங்கிருக்கலாமெனப்பெறுங்களிப்பாற்
பழுதறும்புவிப்பரப்பெலாம்பரம்பியவேனின்
முழுதுமங்கொருங்கிறுத்ததுமனையதம்முதிர்ச்சி. ௫௦

வானினோடுபுட்குலமும்வாட்போக்கியார்மலையின்
மேனிலாவியகாகமேயெனவெந்துவீழ்ந்த
தீநிலாவியபுழுவெனத்தீந்தகானகத்தி
லேனமெண்குமானிபமரியேனவுமிறந்த. ௫௧

தண்டமாயிரமகழினுந்தண்புனலூறல்
கண்டிடார்பிறநாட்டுறுகயத்துநீர்முகந்து
கொண்டுநண்ணினுநண்ணுமுன்கொடுந்தழல்வெப்ப
முண்டுதேக்கிடவுணங்குறுமழக்கொண்டபொருள்போல். ௫௨

அறிவிலார்தமைவருத்துழியொருபொழுதவர்பாற்
சிறியபுன்கொடைகாணினுமத்தினத்தன்றி
யுறுவதின்மைபோல்வறுங்கிணறகழ்ந்துழியொருகாற்
பெறினுமப்புனல்பிற்பொழுதுரையொடுங்கெடுமால். ௫௩

மனையின்மக்களினெக்கலினிதிகளின்மற்று
மினையவற்றிடையெய்துவதில்லையாலெவர்க்கு
மனையசேற்றுநீர்க்கலங்கன்மேல்வைத்திடுமன்பு
நினையினேங்குதம்முயிர்க்குறுமன்பையேநிகரும். ௫௪

அலநெடும்படையுழவர்களங்கைதொட்டறியார்
நிலவுபண்ணைகணெடுவரப்பினநிலைகுலைந்து
குலவுபேரொடுமறைந்தனகுளங்கள்காலேரி
பலவுங்கோடுகளழிந்தனபண்பிலார்பொருள்போல் ௫௫

நிரப்பெனும்பெரும்பகைவந்துநிலவலின்யாது
மிரப்பிலார்களுமிரப்பதுதுணிந்தனரம்மா
கரப்பிலார்களுங்கரப்பதுதுணிந்தனர்கருத்தின்
விருப்பிலார்களுமிழிந்தவும்விரும்புமாதுணிந்தார். ௫௬

பொய்மைசொல்லுதற்கஞ்சியபுலனறிவோரு
மெய்மைசொல்லுதற்கஞ்சினர்விதியுளியுகந்த
தெய்வபூசனைசெய்தன்றிமற்றொன்றுஞ்செய்யா
ருய்யுமாறுதேர்ந்துடலினையோம்பியேகழிந்தார். ௫௭

களவுகேட்டறியார்களுங்களவினின்முயன்றா
ரளகமாதர்தம்முயக்கிடைதெரிந்தறியாத
விளமைமைந்தருமெய்தியபசியினால்யாவு
முளம்வெறுத்தொரீஇயின்பவீடடைந்துளாரொத்தார். ௫௮

கண்ணுமாவியுமெனவுறுகேண்மையர்கனல்வே
மண்ணுடன்பசுமண்ணெனப்பகையினரானா
ரெண்ணுமூண்சிறிதெய்தினும்பாதியைநாளை
யுண்ணுவாமெனப்பசியினாலொளித்துவைத்தமர்ந்தார். ௫௯

மதுரமங்கலமுழக்கமுமறையொலிமுழக்கு
மதிரும்வார்முரசோதையுமறுமனைதோறும்
பொதிநிரப்பினாற்பொன்றினாரூழைகையும்பறையு
முதகமாதிகட்கூடியகலாமுமேயோங்கும். ௬0

வேள்விமல்கியதீம்புகைப்படலையும்வினைஞ
ராள்வினைத்திறத்தட்டில்வாய்ப்புகையுமானனையார்
வாள்விடுங்குழற்கேற்றியபுகையொடுமாளக்
கோள்விறந்தவானழக்கடக்கொழும்புகைமலிந்த ௬௧

மாழையாம்பெரியோர்களுமாடெலாந்திரிந்தும்
வீழுமூண்வகைகிடைப்பருமெலிவினாற்பெரிதும்
பீழையுற்றனர்சிபெருநிதிபடைத்தென்னே
யூழினல்லறம்பண்டுசெய்துள்ளகமுவவார். ௬௨

அரசன்கொல்லினுங்கொல்லியவதுநமக்கினிதே
விரவுநல்குரவளித்திடுமெலிவினுமென்னா
வொருவருண்பதினொருவர்போய்மிச்சிலைத்துமிந்தங்
கிருகரத்தினுமீர்ப்பர்மற்றவரெதிரீர்ப்ப. ௬௩

தகவிலாதவுந்தகவெனச்செய்தனர்தமக்கு
நுகரொணாதவுநுகர்ந்தனர்நாலினான்மரபா
னிகவொணாதவுமிகந்தனரென்னெனவுரைக்கேன்
மகதநாடுறுபசிப்பெருங்கொடுமையையமாதோ. ௬௪

குழிந்தகண்களுங்கருகியவாயும்பைங்குடரை
யொழிந்துநின்றதேயெனமுதுகொட்டியவயிறுங்
கழிந்துவற்றசையலகிட்டுக்காணலாம்படியென்
பெழுந்தமெய்யுங்கால்பின்னியநடையுமேயெவர்க்கும். ௬௫

பிணங்களீட்டமேதெருத்தொறும்பிணநுகர்பெரும்பேய்க்
கணங்களீட்டமேகடிநகர்தொறுங்கணமாடுந்
துணங்கையீட்டமேநாடுகடொறுந்துணங்கையைக்கண்
டணங்குமாந்தரேமகததேயத்தலையனைத்தும். ௬௬

காவன்மன்னவன்பருமவெங்களிறும்வாங்கவன்
மாவுமற்றவும்வழங்கியவுணவினாற்றாது
தாவும்வெப்பினாற்றுரும்பெனவுணங்கிமெய்தளர்ந்து
நாவைநாற்றிநின்றுயிர்ப்பனநாய்களேயனைய. ௬௭

கொடியவன்பசிக்கோமகனரசுவீற்றிருப்பப்
படியெலாமலங்காரஞ்செய்திட்டெனப்பசும்புன்
னெடியதிண்மரமாதிவெஞ்சாம்பருமென்புங்
குடருஞ்சோரியுங்கொழுவுமெங்கணுங்குழீஇனவால். ௬௮

இன்னவாறெலாந்துயருறுமகதத்திலெனையா
ளென்னைசேறலுமங்குளாரனைவரும்வருத்தந்
தன்னினீங்கினார்தரைகிடந்தவரெழுந்திருந்தார்
பன்னவாற்றலிலார்களும்பண்ணினாரம்மா. ௬௯

நடையிலார்களுநடந்தனர்நன்பொருள்சிறிதுங்
கொடையிலார்களுமுள்ளத்திற்கொடுத்திடமுயன்றார்
கடையசெய்தவரென்செய்தாமெனவுளங்கரைந்தார்
கொடியராயினார்குளிர்முகத்தினியராயினரே. ௭0

அறஞ்செயாதிறந்தமைக்குழைந்தார்சிலரன்பின்
றிறஞ்செயாதிறந்தமைக்குழைந்தார்சிலர்தெய்வ
மிறந்திடாதினிக்காக்குமென்றார்சிலர்தம்மை
யறிந்திடாதெழுமகிழ்ச்சியாற்றம்முளீர்தறைவார். ௭௧

நெருநல்போற்பசிநெருப்பிற்றைநாளெமைநெருக்கிப்
பொருதுகின்றிலதென்கொலோபோனமெய்வலியு
மருவுகின்றதுவருத்தமுங்கவலையுமுள்ள
மொருவுகின்றதுகாரணமோர்கிலேமென்பார். ௭௨

எமக்குமன்னதேயாயதாலிங்கின்றமாந்தர்
தமக்குமன்னதேயாயதுபோலுந்தண்முகமு
மிமைக்குங்கண்களுமலர்ந்தனவெரிபெரும்பசியைக்
குமைக்கும்வாளுடையாரெனக்குளிர்ந்தனரென்பர். ௭௩

சுற்றினெண்ணில்பல்பரிசனந்தொழுதுசூழ்வரவோர்
கற்றைவார்குழற்கன்னியிந்நாட்டிடைப்பெற்ற
முற்றுவந்தனளென்பாராலன்னவுத்தமியாற்
பெற்றதேகொலாமிந்நலமெனப்பெரிதுவப்பார். ௭௪

அன்னமாதிவணகலுமேற்பண்டுபோலழலி
னின்னல்வந்தெமையிறக்குமேயென்பரிவ்விடுக்கண்
டன்னைநாந்தணந்துய்யுநாள்வரினன்றிச்சாராள்
கன்னியாதலிற்கடந்தனமிடும்பைநோயென்பார். ௭௫

வந்தமாதுமண்மகள்கொலோவானவர்மகளோ
சிந்தைதேர்வரிதென்பர்கள்சேவுகைத்தருளு
மந்தமாண்பினுலெய்துமுன்னனூர்கெடலானு
மிந்தவார்குழலிறைவியேபோலுமென்றிசைப்பார். ௭௬

மாந்தரின்னனதங்களுட்கூறினர்மகிழப்
போந்தவெம்பெருமாட்டியும்புகுதுமத்தேயம்
வாய்ந்ததன்றிருவாணையினிகழுமூழ்வலியாற்
றீர்ந்ததன்மையைநோக்கினள்சேல்விழிவெதும்ப. ௭௭

இரக்கமுள்ளகத்தூற்றெழவினையநாடனைத்துஞ்
சுரக்குநீருணவாதியாற்றுயரெலாந்துரந்து
புரக்கவேண்டுமென்றுன்னினள்போதலைத்தணந்தாள்
பரக்கும்விண்மணிச்சாலைகணிருமித்தாள்பலவும். ௭௮

தூயசெந்நெலின்கூடுகண்முதலியதுறுத்தாள்
காயமுட்டியகாக்களுநந்தனவனமுந்
தோயமுட்டியதோடவிழ்மலர்த்தடம்பலவு
மேயசாலையின்புறமெலாமேதகவிளைத்தாள். ௭௯

உண்டிநால்வகைபறுசுவையூற்றெழச்சமைத்துப்
பண்டியேற்றினடெருத்தொறுமுய்த்தனள்பகர்ந்தாள்
மண்டிவந்தவர்தமையெலாஞ்சாலையின்வகுத்து
முண்டகச்செழுங்கரங்களான்முகந்தனள்படைத்தாள். ௮0

எரிசெய்நோய்ப்பசியின்னலினுழந்தவெல்லீரும்
வருகவந்திடின்விலாப்புடைமலையெனவீங்க
விரதவுண்டிகளுண்ணலாமெனநகர்தோறு
முரசறைந்தனிர்வருகெனமுடுக்கினாள்சிலரை. ௮௧

கலனுமாடையுங்கமழ்விரைச்சந்தனச்சேறு
மிலகுமாழையுமரதநவீட்டமுமெவையு
மலகிலாதனவள்ளினளிறைத்தனள்விலங்கின்
குலமும்புட்களும்பசிகெடக்கொளுத்தினளிரைகள். ௮௨

உண்ணவம்மினென்றுலம்பியமுரசறையொலியு
மெண்ணிலார்களுங்குழுமினரெய்துறுமொலியும்
வண்ணவான்சுவையுணவுகள்வழங்குபேரொலியு
மண்ணியுண்டவர்துதியொலியுடனெங்குமமலும். ௮௩

மறைவலாளர்கள்வேள்வியும்வளர்ந்ததுமனுவி
னிறைவலாளர்களியற்கையுமெழுந்ததுவணிக
முறைவலாளர்களொழுக்கமுமுளைத்ததேருழவி
னிறைவலாளர்கணிறைமையுநிலைத்ததாலெங்கும். ௮௪

பிணங்கண்மல்கியவிடமெலாம்பெருஞ்சனம்பேயின்
கணங்கண்மல்கியவிடமெலாஞ்சாலைகள்கணங்க
டுணங்கையாடியவிடமெலாநடந்துணங்கைகள்கண்
டுணங்கிமாந்தர்சாமிடமெலாநடங்கள்கண்டுவப்பார். ௮௫

மறலியூர்கடாமலையுலாவிடந்தொறுமன்னர்
முறையினூர்கடாமலையுலாவினபிணமுகந்து
செறிவுகொண்டுபூந்தேருலாவிடந்தொறுஞ்செம்பொ
னுறுமணிச்செழுந்தேர்பலவுலாவினவன்றே. ௮௬

மகதநாடெலாமங்கலம்பொலியவெவ்வணங்கு
நிகரிலாவறநிருமலிவளர்த்தனள்வருங்காற்
புகரிலாதவிப்பொலிவினைமகதநாடாளுந்
தகவின்மன்னவன்யாவருஞ்சாற்றிடக்கேட்டான். ௮௭

கேட்டமன்னவன்கிளரொளியிறைவியென்றறியான்
வாட்டுநெல்குரவோவறிவின்மையோமனத்தை
மூட்டவவ்வறச்சாலையைக்கவருவான்முன்னிக்
கோட்டங்கொண்டனனஃதுமைதிருவுளங்குறித்தாள். ௮௮

உயிரெலாந்தனக்கொருமகவெனவருள்சுரக்குங்
கயிலைநாயகிகண்சிவந்திலள்வழிக்கொண்டாள்
பயிலுநெல்லுறைகூடுகளாதியபலவு
மியலும்வார்சிறையெய்தினபறந்தனவுடங்கு. ௮௯

இறைவிநீத்தகன்றதுமிமவரைமகளாக்கு
நிறைவளங்களுஞ்சிறைமுளைத்துடங்குநீத்ததுவு
மறைகழற்சரண்மன்னவன்கேட்டனனச்சோ
நறைமலர்க்குழலுமைகொலோவென்றுளைந்தான். ௯0

எவண்படர்ந்தனளெவண்படர்ந்தனளெனவெங்குங்
கவலையுற்றிடுங்கண்கணீர்பொழிதருங்கசியும்
புவனிமேற்புரண்டரற்றுமெய்ப்புளகமும்போர்க்குந்
தவறுசெய்துவாழ்ந்திருப்பதிற்சாதனன்றென்னும். ௯௧

பொருமுஞ்செய்தபொல்லாங்கினையுன்னியுள்புழுங்கி
யிருமுமென்செய்தேனென்செய்தேனென்னுமென்குலத்தோர்
புரியுநல்வினையிருந்தின்றுகாத்ததாலென்னைக்
கருணைநாயகிகண்சிவவாமையாலென்னும். ௯௨

விண்ணுமண்ணும்பொல்லாதவனெனவெனைவெறுப்ப
நண்ணினேனெனுநரகமுந்துயரமுநயப்பப்
பண்ணினேனெனும்பற்பலநினைந்தனன்பசும்பொன்
வண்ணமாதினைவந்தித்துய்வேனெனவெழுந்தான். ௯௩

ஆய்ந்தமந்திரத்தலைவரெலாம்புடையணுகச்
சேந்தபங்கயவடிநிலந்தீண்டிமிக்கழுங்கப்
போந்துபூதரப்புதல்வியைக்கண்டனன்புகன்று
தாழ்ந்தெழுந்தனன்றணந்தனன்றணப்பருந்துயரம். ௯௪

ஆடினான்பலமுறையருமறைப்பெருந்துதிகள்
பாடினான்பலமுறைபணிமொழியினைவலமா
வோடினான்பலமுறையுளமுருகிமெய்யன்பு
நீடினானெதிர்நின்றனனெடுங்கணீர்சொரிய. ௯௫

குடந்தம்பட்டெதிர்நின்றிடுங்கோக்குலத்தரசன்
மடந்தவிர்ந்துவந்தனைபுரிபத்திமைநோக்கி
யடர்ந்தபூங்குழற்பிராட்டியுமாரருள்வழங்கித்
தொடர்ந்தவன்பினோய்வேட்டதென்னென்றலுஞ்சொல்வான்:

அறிவிலாமையாருயிர்க்கூணமென்பதையறிந்து
நெறியிலேன்புரிபிழையினைப்பொருளெனநினைந்து
கறுவுகொண்டிடாக்களைகணேயடியனேன்காவல்
செறியுநாடெலாமழைவளஞ்செழிக்கவென்றிரந்தான். ௯௭

தாங்களேகொடைவழங்குநர்தருகொளவிரந்தா
ராங்கணில்லையென்றிசைப்பரேயல்லலுக்கிரங்கி
யோங்குநல்லறம்வளர்த்தவளுவகைமீக்கூர்ந்து
தீங்குதீர்வரங்கொடுத்தனள்சென்றனள்காசி. ௯௮

அரையர்சூழ்தரவரசனுமலையரசுயிர்த்த
பெரியபெண்ணணங்கரசியைப்பெட்டனன்வணங்கி
யுரியவேவல்பெற்றுயரியதன்பதியடைந்தான்
பரவுநீண்முகிற்பருவமும்வந்ததப்பதத்தில். ௯௯

கலிவிருத்தம்.

பொறுப்பரும்வேனிலாற்பொன்றுநாடெலாஞ்
சிறப்பநல்வரமருள்செல்விகீர்த்திவிண்
ணெறிப்படர்ந்துலாயதேநிகர்ப்பவெண்ணிற
வறப்பெருமுகிற்குலமாழிநோக்கின. ௧00

விழுமமார்மகதத்துவெந்தயன்மரக்
குழுவினிலெழுந்துவிண்கூர்ந்தசாம்பர்மெய்
முழுவதும்பொதிதரமுரிதிரைக்கடற்
செழிபுனலாடப்போந்தகவிற்சென்றவால். ௧0௧

அள்ளிக்கோட்டக்கவந்நாட்டின்வெப்பினை
யுள்ளிக்குப்புற்றுவந்துடற்றுமென்றுவான்
பள்ளிக்கொட்புற்றெழுபளிக்குமேகங்கள்
வெள்ளிக்குப்பாயம்போர்த்ததும்வீழுமே. ௧0௨

அப்பெருவெப்பினையவிக்கமேகங்க
டுப்பினவலவெனத்தோகைநீற்றுமெய்
யொப்பறுகணங்களைவிடுப்பவூங்கவை
மைப்பெருங்கடலுணவழங்கலும்பொரும். ௧0௩

முழங்குவதின்றிவான்முடுகுமேகநீர்
வழங்குபுதன்னைநாமடிக்கச்சேறலை
யழுங்குவித்திடுமெனவஞ்சிவேனிலுக்
கொழுங்குகொண்டொளித்தொளித்தோடலொத்ததே. ௧0௪

வேனிலுக்குடைந்தனபோலமேகங்கள்
வானிடைநின்றும்வார்கடலின்வீழ்ந்தன
பேனநீர்மடுத்தனபெரிதுநீர்நசை
தானறவுண்டனபோலச்சாலவே. ௧0௫

ஆர்த்துநீர்வாய்மடுத்தலமருங்கருங்
கார்த்திரள்விசும்பிடையெழுந்தகாட்சிவிண்
சீர்த்தவாயிரவிழிச்செம்மற்சீறிய
போர்த்திறலவுணர்கள்போதல்போலுமே. ௧0௬

வெந்தழல்வேனிலைவிளைப்பதீதென
முந்துறவிழுங்கியமுறைமையேயெனச்
சுந்தரப்பரிதியின்றுளக்கங்காலற
வந்தரவெளியெலாமடைத்தநீண்முகில். ௧0௭

மறக்கொடும்பாதகம்வளர்த்தவேனிலைப்
புறக்கொடையறவெங்கும்புதையமுற்றியாங்
கிறப்பவுந்திசைதொறுமீண்டியன்னதைத்
திறப்படச்சிரிப்பபோன்மின்னுக்கான்றவே. ௧௦௮

பரிதியினொளியறப்பகலும்பம்பிய
விருளிரவாயதாலிரவினேற்றுறு
தெருளொளிவிளக்கினைத்திசைதொறும்புதை
கருமுகில்கான்றமின்காட்டிற்றென்பவே. ௧௦௯

நாகவார்கலனணிநம்பனுரைமுன்
மேகவாகனமெனத்தாங்கும்விண்டுவே
மாகமூடியபுயன்மருமநின்றொளிர்
பாகுலாமொழியவள்பயிலுமின்னரோ. ௧௧௦

எடுத்துவாய்விழுங்கியவிடமெம்மான்கரங்
கொடுத்துநேர்கிழித்தபுண்டுணையமின்னொளி
படுத்தகாரெழிலியப்பகட்டினுதையின்
மடுத்தபேரொலிபுவிமலங்கவார்த்தவே. ௧௧௧

துணையறுநெடுவெளிமுழுதுந்தூமணிப்
பணைபொரப்பசியதோல்பரந்தகார்பொர
வினைதிரள்வார்கண்மின்னிழையவோதைசெய்
குணிலெனவிந்திரதிருவில்கொண்டதே. ௧௧௨

ஏர்த்துமின்னியங்குவவிடிகள்பல்லிய
நேர்த்தெழவிசும்பிடைநின்றுமண்ணெனும்
வேத்தவைகாணவிண்ணெழினிநீக்கிவந்
தார்த்தெழுகூத்தியராடல்போன்றவே. ௧௧௩

வருங்குயின்வழங்குமின்வயங்குபெற்றிமை
விரும்பிவெங்கதிரினைவிழுங்கித்தாங்குருக்
கரும்பணியுமிழவங்காக்குந்தோறுமவ்
விருங்கதிரொளிபுறத்திலங்கன்மானுமால். ௧௧௪

கருங்கடனிகர்த்ததுககனக்கார்க்குழாம்
பெருங்குரணிகர்த்ததுபிளிற்றுக்காரொலி
யிருங்கதிர்மணித்திரையெழுந்தடங்குவ
பொருங்கடித்தடித்தினம்பூத்தொடுங்குவ. ௧௧௫

மழைத்திரண்மின்னினம்வழங்குதோறுநோய்
தழைத்தவம்மகதத்துத்ததைந்தமானிட
ழைத்திரளுண்ணமுனண்ணும்பேய்க்கணம்
விழுத்தழல்வாய்களங்காத்தல்வீழுமே. ௧௧௬

வருந்தியநாட்டினின்மழையுகாமுனந்
திருந்தியபெருங்குளிர்செலுத்திப்பேரளி
பொருந்திறலெனவுலாம்பொங்குவேனிலி
னருந்துயருடனுழந்தழன்றவூதையே. ௧௧௭

இடம்வலந்திரிதலுமேவினோர்நடை
படுதலுமண்டிலம்பயின்றுசுற்றலுந்
தடையறவாவலுமுதலதாங்கலா
நெடுவெளியைங்கதிப்பரிகணேருமே. ௧௧௮

மலைவிளையாடியுமன்றற்சோலையி
னிலைவிளையாடியுமரங்கணீணிலைத்
தலைவிளையாடியுஞ்சார்ந்துமைந்தர்வெப்
புலையவின்பருள்வளிமாதரொத்ததே. ௧௧௯

வழிநடந்தண்மியுமனையினெய்தியுங்
குழலினைநீவியுங்குளிரமெய்யெலாந்
தழுவியுமாதர்கடழைப்பச்சேறலாற்
கழிமகிழ்மகிணரைக்கடுத்ததூதையே. ௧௨0

வரைமிசைமோதியுமரத்தின்மோதியுந்
தரைமிசைவீழ்ந்துநீர்த்தடத்தில்வீழ்ந்தும்வார்
கரைமிசையிவர்ந்துநின்றுலாவுங்காட்சியாற்
புரைமதுநுகர்ந்தவர்போன்றதூதையே. ௧௨௧

அம்பிகையருள்பெறுமமையமீதெனப்
பம்பியமணிக்கடல்பலவும்விண்ணெழீஇத்
தம்பயமொழுக்குவதகையவண்புயல்
வெம்பயமுகத்தனவடவ்வமின்செய. ௧௨௨

அவுணரைப்பொரப்புருகூதனுக்குபல்
லிவரொளிவயிரவேற்கிடம்விண்ணின்றியிப்
புவனியெங்கணுநிரைத்திட்டபோன்றன
தவமணிமழைக்குலங்கான்றதாரையே. ௧௨௩

கலிநிலைத்துறை.

ஏற்றதானவர்கிளையறவிறுத்துவிண்ணரசன்
றேற்றுஞாலமாமவரினத்தொருவன்றொல்லுடலம்
பாற்றவச்சிரப்பகழிகணிரைத்ததும்பகரு
மூற்றுதாரைவில்லுடன்பொலியுராறுகார்மேகம். ௧௨௪

கலிவிருத்தம்.

தன்னிறம்பசந்தகடுளைந்துதாங்குறு
தின்னிசைமுழக்கினுவிரங்கிச்செய்யவாய்
மின்னினந்தெரித்தலான்மேகக்கன்னிநீ
ரென்னுமோர்மகவினையீன்றசெவ்வித்தே. ௧௨௫

அறைபலவடுக்கலிற்பெயர்ந்துதாரையா
னிறையுமிங்குலிகநீரலைக்கநின்றன
பறையினுமுளைத்தெழப்பார்த்துவச்சிரத்
திறையினுமரிந்திடத்துடிப்பவென்பவே. ௧௨௬

முல்லைமென்குமிழ்முதிர்காந்தள்கோடுகள்
வில்லுமிழ்தாரையிற்றரையின்வீழ்ந்தன
வல்லவோர்வீரனுன்மறிந்தவேள்வியிற்
பல்லுமூக்கங்கைபன்முலைகள்போன்றன. ௧௨௭

நெடுவிசும்பெழின்முகினிரையினீளொலி
படுவதற்கெதிரகன்பாரும்பேரொலி
யுடையதுபோற்றணந்துறுநர்தேரொலி
கடலுறழியவொலியுகந்துவிம்மின. ௧௨௮

உருவினினிகர்த்தமையண்டவாள்விழி
மருவியவினையினுமானவேட்டெனக்
கருமுகிலொடுமழைத்தாரைசான்றன
தெருமரத்தணந்தவர்ச்சிவனுறூர்க்கெலாம். ௧௨௯

வீங்கியபெரும்பறைமுழக்குவேறுமெருவி
யோங்கியகாலையாழிசைக்கலுற்றவர்
தாங்களேயடங்கியதன்மைபோன்றது
தீங்குயிலெழிலிமுன்னடங்குஞ்செவ்வியே ௧௩௦

அளவினூல்வழியறிந்திலாதவர்
களகளமொழிக்கெதிர்சற்றுமேதகு
வளமொழிதன்னமும்வழங்குகிற்கிலாப்
பளகறுமேலவர்பண்பும்போன்றதே. ௧௩௧

கருதுவாருள்ளமுங்கனற்றுவேனில்வல்
விருதுவாமன்னனையெழுந்தகாரினம்
பொருதுவாய்மடுத்தலிற்பொன்றுமன்னவன்
விருதுமாங்கவிந்ததும்வீழுமற்றது. ௧௩௨

அகன்றவர்வரப்பெறுவணங்களொடு
முகன்றளர்ந்தொடுங்கினமொய்த்தகோகில
மிகுந்ததங்கணவர்வந்தெய்தப்பெற்றுளம்
புகன்றவரொடுபொலிந்தெழுந்தமஞ்ஞையே. ௧௩௩

எமதுருச்சாயல்பெற்றெம்மையொத்திடு
முமைமடவாரினுலகமின்புறு
மமைதிநன்றெனமகிழ்ந்தாடலொத்தன
சிமயமெங்கணுமயிற்றிரள்களாட்டமே. ௧௩௪

உணக்கியவேனின்மன்றொழித்துவையகம்
வணக்கியகாரெனுமன்றன்றன்னிசை
யிணக்கியவிருந்தனவெழுந்தவெங்கணுங்
கணக்கில்கட்டோகையகரையுமீட்டமே. ௧௩௫

மண்டலமெங்கணுமலிந்தகோபங்க
டிண்டிரைவான்பயந்தேக்கிவேனிலிற்
கண்டவருயிரெலாங்காற்றியாக்கையி
னுண்டசெந்நீரைமீட்டுமிழ்வதொத்தவே. ௧௩௬

கவற்றியவேனிலிற்கதித்தவெவ்வழ
றுவற்றிரும்பயத்தெனைத்தொலைக்கமுற்றிய
விவற்றினைச்சுடுதுமென்றெழுந்துநீண்முகி
லவற்றொடும்பொரவமன்றதுவும்போன்றவே. ௧௩௭

கடலுடையாடையின்கன்னிமெய்யெலாம்
படுமழைத்தாரைவெம்பகழிபுக்குறீஇக்
குடைநெடும்புண்வழிகொப்புளித்தெழூஉஞ்
சுடர்விடுகுருதிநீர்த்துளியும்போன்றவே. ௧௩௮

ஆடியமழையெனுமன்பன்றுரையாஞ்
சேடியர்கரங்களாற்சேர்ந்துபுல்லுற
நீடுமின்பெனுங்கருநிறைந்துநீணிலம்
பாடுருப்பசந்ததுபசும்புல்லாதியால். ௧௩௯

இழுமெனவிழுதருமிலங்குதாரையாற்
குழியுமெல்லுடல்குழியாவப்பேணிவன்
செழுமணிக்கவயமேற்செறித்ததும்பொரூஉ
முழுநிலம்பலவுமெய்முகிழ்த்ததோற்றமே. ௧௪0

காம்புறழ்தோளியர்கடைக்கண்போற்சுடுந்
தேம்புவெப்பராசன்கார்ச்சேனைக்கோடுழித்
தாம்பிழைத்தவன்குடைதவிர்ந்ததாமென
வாம்பிகளிடந்தொறுமலங்கிப்பூத்தவே. ௧௪௧

மழைமுகிலசனியின்வழக்கங்கேட்டொறு
முழைதொறுமொதுங்கியமூரிப்பாப்பினச்
செழுமணியொளிர்வனசெறிந்தகாரினை
யழலினம்பயந்துபுக்கொளித்ததாமென. ௧௪௨

அருந்தவமுயல்வுறுமங்கலார்கள்பின்
னிருந்தனியிழையினூலிலங்கினுலென
வருந்தியவேனிலின்மரம்புல்லாதிய
பெருந்தளிராதியாற்பிறக்கமுற்றன. ௧௪௩

பெருத்தபன்மரங்களும்பின்னும்வல்லியு
மருத்தளிராதியின்வயங்குதோற்றமா
லுருத்திடுபிரிவினுருடங்குதொக்குறீஇ
யருத்தியிற்கூடுழியழகுகாட்டுமே. ௧௪௪

பொழிமழைத்தாரையிற்பூக்கள்சோர்ந்துமெய்
குழைவுறுகொடிகளுஞ்சொம்பர்க்கூட்டமும்
விழைவினர்கலவியின்மெலிதல்காட்டின
கழியிழைகாட்டினகழன்றபூக்களே. ௧௪௫

தளியுகுந்தொறுந்தடவரைவரைப்பெலாம்
விளியழல்வேனிலின்வெப்புநின்றுதந்
நெளியுடல்சுடவராநிவந்திவர்ந்தெனக்
களிதருகோடல்பாசரும்புகான்றவே. ௧௪௬

வாக்கியதாரைதன்மார்பம்போழ்ந்துநோய்
தாக்கலும்வரைமகள்சாலுநில்லென
வோக்கியகரமெனவொளிர்ந்தசாரெதிர்
நோக்கியகாந்தளைப்பிதழின்பூக்குலம். ௧௪௭

சுருப்பினந்தூவழிதொடங்கமுல்லைக
ளருப்பினமுகிழ்ந்தநீரமையுமாற்றெனக்
கருப்புயறனைக்கடிப்புறவம்பற்றிறந்
திரப்பதுபோன்றனவிடங்கடோறுமே. ௧௪௮

பொறிவரிச்சுரும்பினம்புகுந்துதாதுணை
வெறிமலர்பூத்தனகடுக்கைமேகநீர்க்
குறுகியுற்றிடும்புவியென்றுசங்கையிற்
செறிசடையேற்பவந்தெழுந்ததேவென ௧௪௯

பொன்னணிமார்பினன்புவனிகாரினுக்
கின்னலுற்றழிந்திடுமென்றுவெற்பினன்
மன்னுயிர்முழுதுமாயாமற்றுங்கவந்
தங்நிலையெழுந்தெனவலர்ந்தபூவைகள். ௧௫0

கருங்களிறட்டவன்றனக்குங்காப்பதிங்
கருங்குரைத்தெனவ்வனேடுதாங்கவப்
பெருங்கடல்வண்ணன்முன்பிறந்தசெம்மலு
மொருங்கவணுற்றெனமலர்ந்தவொண்பிடா. ௧௫௧

திருமயிலெதிர்நடஞ்செய்யவெட்சிதன்
னிருபுறத்தினுங்கொடியெழுந்துபின்னுறக்
குருதியின்மலர்ந்ததுகோலமஞ்ஞையூர்
முருகன்கார்க்கருளமுன்னெழுந்ததொத்ததே. ௧௫௨

பொருந்தனிவேலனைப்புயலைப்போக்கெனத்
திருந்தடிவணங்குவசிவணவெட்சிமுன்
குருந்துபொற்கூவிளங்குல்லைபாங்கரு
மிருந்தலைகுரங்குவவிணர்க்கணத்தினல். ௧௫௩

மரந்தொறுமலர்தொறும்வண்டுசெல்வன
வுரந்தபும்வேனிலினுயங்கினிர்க்கெலா
மரந்தைகடீர்ந்தவோவம்மவென்றுவிண்
பரந்தகார்வினவுறப்படர்தல்போன்றவே. ௧௫௪

கானலைநீரெனக்கருதிப்பின்றொடர்ந்
தூனழிதங்களையுய்யச்செய்திடும்
வானினைத்தலைப்படமகிழ்ந்தெழுந்தென
வானுறத்தாவினமானினங்களே. ௫௫

குளகுமிக்குண்டுடல்கொழுத்தவேழங்கள்
களகளமுழங்குவகடங்கள்சிந்துவ
விளைமுகிலினமெனமேக்குக்கைநிமிர்
தளவளாயாடுவவடுக்கரேறுமே. ௧௫௬

பைத்தபாம்புலகிலும்விடரிற்பாய்ந்துபோய்ப்
பொத்துதீச்சூட்டையும்புரட்டமண்கிளைஇ
மைத்தகாருழப்பதுமானப்புற்றினங்
கொத்துறுமெண்குகளகழ்ந்துகொட்குமே. ௧௫௭

பாதலமருங்கினும்பனிவிராயது
போதரலென்றுபோம்புயன்மறுப்பபோன்
மீதெழுந்தியல்கள்பறந்துமென்சிறை
தீதினர்செல்வம்போற்சிதைந்துவீயுமே. ௧௫௫

திகழ்கயல்பாய்ந்தெடுத்துயர்ந்துசீர்ச்சிர
லுருகுசிறையலேப்பனதோயத்தெல்லேதேர்ந்
துகுமழைபோதும்வேண்டாவென்றொண்கையான்
முகிலினைமறுத்திடுமுறைமைபோன்றவே. ௧௫௬

வேறு.

மேனிலத்தின்விராவியமைந்தருங்
கானிலத்தகருங்குழன்மாதருங்
கீழ்நிலத்திற்கெழீஇபகிற்சேக்கைமேற்
றுநிலைத்துத்தழீஇநுகர்ந்தாரரோ. ௧௬0

தேங்குநீரிற்சிதர்ந்துகுதாரையா
னேங்குபுறப்புதமொண்டரைவேனிலிற்
றுங்குவெப்பிற்றளர்ந்துதண்ணீர்களும்
வீங்குகொப்புள்விராயதுபோலுமே. ௧௬௧

முக்கணாருளுள்ளமுளைத்தலுந்
தொக்கபல்பிறவித்துயர்த்தொல்வழி
யக்கணத்திலடைத்திடப்பட்டெனப்
பக்கமண்கமர்வாயடைபட்டன. ௧௬௨

குன்றமும்புறவுங்குளிர்பண்ணையு
மொன்றுந்தோன்றிலவாயுதகத்தினுண்
மன்றஆழ்கினவெப்பறவாரியே
சென்றுசூழ்ந்தெங்குந்தேங்கியதொப்பவே. ௧௬௩

எட்டறைக்குளெரிக்கினுமின்னகிற்
கட்டழல்கடுகக்கெடுகின்றதாற்
பட்டமாரிதனைப்பயந்தாலென
மொட்டிளம்முலைவெப்பும்முடிந்ததே. ௧௬௪

அமையுமென்றறைவாருரையன்றிநீ
ருமிழ்தல்வேண்டுமென்பாருரையில்லைவா
யமிழ்தமேனுமகட்டிடமுட்டுமே
யுமிழ்வதன்றிப்பின்னுண்ணவுங்கூடுமே. ௧௬௫

இன்னவாறிருதிங்களுமின்மழை
மன்னிநின்றனமாமகதப்புலந்
துன்னுமின்னெறுமித்தின்புகூர்ந்தத
லன்னதேயநிகர்த்தவூனைத்துமே. ௧௬௬

வாய்ந்தமாமகதப்புலமன்னவ
னாய்ந்தநுண்ணிடையம்பிகைபோரு
ளேய்ந்தவர்றெண்ணியின்பநீராடினுன்
றேய்ந்துளாரெவரும்புதுத்தோயமே. ௧௬௭

கருணைநாயகியுங்கடிக்கங்கைசூழ்
திருநிலாவுசெழும்புகழ்க்காசியின்
மருவிவிச்சுவநாதன்மலர்க்கழற்
பொருவில்பூசைபுரிந்திருந்தாளரோ. ௧௬௮

கடவுள்வாட்கண்கரந்திடுநாளென
மடநலாண்மகதத்திறைக்கந்தரு
டடையிலாவரத்திற்றழைகாரிஞன்
மிடையுநீளிருண்மென்மெலநீங்கிற்றே. ௧௬௯

விண்ணிவர்ந்தமழைக்குலமேதகு
மண்ணிறங்கியதென்னமணிக்களத்
தண்ணலோதையடங்கினவம்புவித்
தண்ணெனீர்க்கட்டழுங்கொலிமிக்கதே. ௧௭௦

மாதரோதியின்மென்மெல்வானிமி
ரோதைநீண்முகில்வெண்ணிறமுற்றன
போதன்மேயினபொள்ளெனமென்றுளிக்
கூதிர்வந்துகுலாவியதென்பவே. ௧௭௧

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கோடலந்திபமேந்திக்கண்டனகுன்றங்கான
நீடியகொடிகளேந்திக்கண்டனநிறைபூம்பண்ணை
பாடுசெய்பணிலமூதிக்கண்டனபரவைசால
வாடிமுற்கண்டகூதிரரசிளங்குமரன்றன்னை. ௧௭௨

துணைவரைப்பிரிந்தோர்க்கெல்லாந்துயர்நனிகூர்க்கும்வெய்ய
கணைகளாயணையார்தம்முட்கழந்தனர்கூடச்செய்யும்
தணவருந்தூதராயுந்ததைந்தனகூதிர்க்காலை
யணவியவெழிலிதூர்க்குமரும்புனற்றிவலையம்மா. ௧௭௩

தேம்பிழியளைந்துந்தூற்றுஞ்சிறுதுளியளைந்துந்தண்ணென்
றும்பரிசுடையதாயுமகனெலாம்வெதும்பியாரும்
பாம்புகொலென்னப்பாயும்பகழிகொலென்னக்கொல்வான்
வாம்புலியென்னத்தாவிவளாயதுகூதிர்க்காற்று. ௧௭௪

கள்ளவாய்நுகர்ந்துகண்ணிற்கறங்குமென்சுரும்பரீட்டம்
வள்ளவாய்மலரின்குப்பைவால்வளைக்குப்பைசூழ்ந்த
புள்ளவாயிசையின்சும்மைபொங்கியொண்மணிநீர்சால
வுள்ளவாய்நிறைந்தவேரியுறுதடமாதியெல்லாம். ௧௭௫

உடைகரையடைக்குமோதையுயர்த்தியமண்ணைவாரிப்
படுமவறார்க்குமோதைபற்பலகால்கடோறும்
விடுபுனலொதுக்குமோதைவிரிபணைவிளைவுமூடிக்
கெடுபுனலொதுக்குமோதைகிளர்ந்தனதேயமெல்லாம். ௧௭௬

அருள்பிரியாவியெண்ணில்புவனத்துநுகர்ச்சியார்ந்தவ்
வருளினைக்கூடுமாபோலலைகடனீரேமேகந்
தரமலையாதியுள்ளவளமெலாந்தழுவியாறுய்க்
கரைபொருதிரங்குவேலைக்கடலகநிறைந்ததன்றே. ௧௭௭

பறந்தலையுழக்கிப்பேய்க்கும்பருந்துக்கும்விருந்துசெய்யு
மறந்தலைக்கொண்டாராவிமடநலார்மாட்டுநண்ணிற்
சிறந்திடுங்குணமேயென்னத்தேம்பியவேனிற்கொன்ற
நிறந்திகழ்பரிதிவெப்பந்தன்னமுநிகழ்ந்திடாதால். ௧௭௮

மினற்றழற்கிரணக்கற்றைவிரிக்குமாதவனைவைது
கனற்றினனென்றுவேனிற்காலத்துவெறுத்தார்தாமே
யனற்றினனல்லனென்றிக்காலத்தும்வெறுத்தாரந்தோ
வினற்றிறமுற்றார்க்கின்னசொல்லலாமென்பதின்றே. ௧௭௯

இரவுநன்பகலுமாறியிரவியுமதியுமீறி
வருவனவென்னவெய்யோனொளிமிகமழுங்கிச்செல்லப்
பரவுபைங்கிரணக்கற்றைப்பாணிலாச்சாலக்கான்று
விரவியமாந்தர்க்கின்பம்விளைத்ததுபனிவெண்டிங்கள். ௧௮0

அரவிரியல்குலார்தமரதநக்குவவுக்கொங்கை
கரவினிற்புணர்வோர்செல்லுங்கட்ங்களுந்தேய்ந்தகூதிர்
விரவலினொடுங்கிவேழக்கடங்களுந்தேய்ந்தவெற்பர்
குரைவைகடழுவியாடுங்குமரவேள்குன்றமெங்கும். ௧௮௧

தங்களுக்கின்பநல்குந்தண்புயற்பருவஞ்சாடிப்
பொங்கியகூதிர்நோக்கிப்பொருமிநின்றழுவதேய்ப்பத்
திங்களங்கதிர்தோய்கோட்டுத்தேம்பயின்மரங்களெல்லாங்
கொங்குயிர்சினையின்மேகக்குறுந்துளிதுவற்றுநின்ற. ௧௮௨

இருந்துளிகிளைகடோற்றுமியல்பினாற்சோலையுள்ளும்
பருந்துளிகூதிர்வீசும்பான்மையாற்சோலைப்பாங்கும்
பொருந்துறுப்பறவைக்கூட்டம்பூவையர்வேதுசெய்யுந்
திருந்தொளிப்புகையின்மாடஞ்சேக்கையாய்ப்பயிலுமன்றே. ௧௮௩

ஈண்டியகுளிரானுள்ளமிளகியவிளையமந்தி
தீண்டுதற்கரியவெந்தீச்செறிவெனவுவந்துதுள்ளிக்
காண்டகமலர்ந்தசெங்கேழ்க்காந்தளம்பூவையண்மி
மூண்டதன்கூதிர்மாயமுன்கைமேனீட்டுமன்றே. ௧௮௪

தடிந்தெழுந்திடித்துப்பெய்யுந்தண்புயலொழியுங்காறு
மடித்தலம்பெயர்த்தானையாடியவினைப்பானூக்க
மடித்ததுபோலப்பூவைமலர்புரையெருத்துமஞ்ஞை
கடித்தழைதோகைகூப்பிக்கவன்றனகாவுதோறும். ௧௮௫

தொடங்கியகூதிருள்ளந்துளக்கலுந்துணைகளோடு
மடங்கலுங்கயமுமெண்குமரைகளும்புலியுமற்று
மடங்கினவறைசூன்றன்னவிடரகமனைத்தின்மாட்டுந்
தடங்கொள்வெம்முலையார்மைந்தர்தனியகத்தொடுங்கியாங்கு.

கைத்தலங்குலையமெய்யிற்கனைமயிர்பொடிப்பவாம்பல்
செத்தொளிர்பவளச்செவ்வாய்துடிப்பத்தேமொழிதள்ளாடி
வித்திறத்திருக்குமாந்தர்யாவருமினையவந்து
தத்தியகூதிர்தன்னைச்சாலவும்வெகுண்டாரொத்தார். ௧௮௭

பத்தியிற்கலவிசெய்யும்பள்ளிகடோறும்வைகுஞ்
சித்திரமேடைதோறுந்தெற்றிகடோறுமெங்கும்
பொத்தியகூதிர்காயப்பொருந்தியவகலிற்செந்தீ
நித்தியவேள்விச்சாலைநெருப்பினுஞ்சிறந்ததன்றே. ௧௮௮

செய்யதாமரைகள்வென்றசெழுமுகஞ்சேப்பநீல
மையுலாங்கண்ணினல்லார்மதுநுகர்ந்தில்லந்தோறும்
பையராவல்குல்விம்மப்பணைமுலைவிம்மச்சேக்கை
நெய்யுலாங்கூந்தல்சோரக்கலவியினிகழ்ச்சிமிக்கார். ௧௮௯

விதிப்படிதோயமாடவிதித்தருள்கவுரிபாகர்
கழித்தெழுங்கூதிர்நோக்கிக்கவலுறுவண்ணம்போலு
மதிர்த்தெழுமங்கிவேட்டல்பின்னுறவமைத்தசெய்கை
கொழித்தெழும்பாசமாற்றித்திருவருள்கூடுவார்க்கே. ௧௯௦

விற்படுநுதலின்மாதர்வேணவாவென்னையார்க்குஞ்
சொற்படலரியவாகித்தூமணிப்பண்ணைதோறு
நெற்பலன்விளைந்தகன்னலினிறந்தனநெடியவாழை
யற்படப்பொதுளிவானமளந்தனநெடுமாலென்ன. ௧௯௧

தெருண்பணிதெண்ணீர்பாய்ந்துதேங்கியபட்டமாதி
மருவியமீனைக்குப்பைவரும்புனற்கெதிர்ந்துமீண்டும்
வெருவிமேலெழுந்தும்வீழ்ந்துமென்மலரலைத்துங்கொட்கும்
பெருவளமெய்தப்பெற்றபீடிலர்வப்பரென்ன. ௧௯௨

இத்தகைக்கூதிர்த்தோற்றத்திமயமீன்றெடுத்தநங்கை
முத்தலைச்சங்கைசூழ்ந்தமுதுநகர்க்காசிவைகு
மத்தனைவணங்கியாங்குப்புறவிடைகொண்டுபோந்து
பைத்தநீர்க்காஞ்சிமூதூர்ப்படர்தரநெறிக்கொண்டுற்றாள். ௧௯௩

வேறு.

எண்டிசையுங்குதுகுதுப்பத்தெய்வமடவார்கஞலவிமையோரேத்த
மண்டியவெண்மணிக்கவிகைமேனிழற்றச்சாமரைகண்மருங்கிற்றுள்ளக்
கண்டவர்கள்களிதூங்கவெழுந்தருளுமுமைமாதுகயற்கண்சாத்தச்
சண்டிகைமங்கலையெனுந்தோழியர்வழிக்கண்வளமெடுத்துச்சாற்றுகின்றார்.

பொங்குமொளிமுகமதியமுணவாரித்திரட்டுமிருள்போலுங்கூந்தா
றங்கையெனநினைக்காணவரிசைகொடுவருவதுபோற்றழுங்கியாடுங்
கங்கைநதியகிணறுஞ்சந்தனமலர்கற்பூரமிளங்கனிகாய்தேறல்
செங்கனகமணிபலவுந்திரைக்கரங்கொண்டணைவதனைச்சிறிதுபாராய்.

நிறங்கூர்ந்தகருஞ்சுரும்பர்விளையாடுமுளரிமுகநிமலாய்சால
வறங்கூர்ந்ததாங்கள்பெருவளம்படைப்பமழைக்கருணைவழங்கிப்போந்த
வறங்கூர்ந்தநினையமுனைமுதல்கடவுணதிபலவுமலர்கடூவிக்
கறங்கோதைவழுத்தெடுத்துமகிழ்கூர்ந்துமுன்வணங்குங்காட்சிகாணாய்.

மணங்கமழுங்கருங்கூந்தற்புயாதுயிர்த்தசிலைநிகர்வாணுதலாய்பூத
கணங்களொடுநீவருவதறிந்துதொழக்காத்திருந்தாற்கடுப்பமேக
மிணங்குமலர்ச்சோலையினின்றிரைதேரப்புகுதாபலீர்ந்தண்கூதிர்க்
கணங்கினவாய்ப்பஞ்சரங்கடோறுமொடுங்கும்புட்டொழுதியழகுகாணாய்.

விழிக்கெண்டைபொருதலையாதச்சுறுத்தமகரமொடுவிளங்குகாதோய்
செழிக்கின்றவளனொழிந்தகாலையுமேன்றனகொண்டுசிறப்பிப்பார்போற்
கொழிக்கின்றமலர்வேரிகூதிரினீத்தொழிமரங்கள்குளிர்ந்தநீரான்
வழிக்கொண்டேநின்னெதிரேகுறுந்துளிதூய்ப்பணிமாறும்வனப்புநோக்காய்.

அலையுமிருவிழிப்புணரிக்கிடையிடுபேரணையெனமூக்கலங்குமாதே
கொலையுகளுஞ்செழுங்குலிசப்படையாளிநினதடிக்கோகனகப்போது
தலையுயர்காதலின்விசும்பினின்றுதொழுமாறொருதுக்குந்தன்மையேய்ப்ப
நிலையுமறுத்துகண்முழுகநீங்குநெடுவான்விளக்கநெடுங்கண்சாத்தாய்.

பொங்கியவாணுதன்மதிகண்டலர்ந்தகருங்குவளையெனப்பொலிந்தகண்ணு
யங்கணானனைத்தழுங்கத்தனைப்புதைத்தநினைச்சாலவஞ்சினான்போற்
செங்கதிர்வானவனழற்றுந்தீக்கதிர்நின்றிருமேனிசெலுத்தானாகிப்
பைங்கதிர்வாண்மதியெனநண்பகலும்வயங்குறும்பரிசுபார்வைக்கீயாய்.

நெடியவிழிக்கடலெறிந்தசெம்பவளமெனவதரநிலவுவாயாய்
படியிவர்வெண்கயிலையினீயிருத்தலினானதுகாறும்படரமாட்டா
தடிவரையிற்றவழ்மதியின்றமையமெளிதாதலறிந்தலர்ந்தகஞ்சக்
கடிமலர்நின்முகவொளியைக்கவர்ந்துகவர்ந்தொளிமிகுத்தகவினைப்பாராய்.

கந்தரமென்கமுகுகுத்துக்கிடந்தவிருபாகனையகளபத்தொய்யிற்
சுந்தரப்பொற்கனதனத்துத்தூமொழிச்சிற்றிடைக்கொடியாய்சுரர்சண்மாத
ரந்தரநின்றனைத்தொழவந்தடைவதுபோற்கார்வரமுன்னகன்றுபோகி
யிந்திரநாட்டெய்துமனத்தொழுதியெறிநீர்மருதமெய்தல்காணாய்.

மல்குவிடநுகர்ந்தபிரான்வானவர்போலமுதுமுணவாஞ்சைமீக்கொண்
டல்குன்மணிக்கடல்கடையவமைத்தபெருங்குன்றமுநீளரவும்போலப்
பல்குமிளமுலையுமயிரொழுங்குமொளிர்பசுங்கொடியேபண்ணைச்சாலி
பில்குமணிகொடுநின்னையருச்சனைசெய்தெதிர்வணங்கும்பெற்றிபாராய்.

பணங்கவற்றுமல்குன்மணித்தேரிவர்ந்துகுழற்பொழிற்பாசறைகட்போத
மணங்கமழுமயிரொழுக்குத்தொடர்பூட்டிப்பண்ணமைத்துவகுத்தகொங்கை
யிணங்குகரிசேர்செலுத்துமனங்கனென்னநுணுகுமிடுகிடைநல்லாய்நின்
ணிணங்கொளயில்விழிக்குடைந்துநீர்நிலையிற்கயலிரிவநெடுங்கண்சாத்தாய்.

இடங்கொளுலகனைத்தினுக்குஞ்சிவபெருமானல்லதுவேறிறையிலாமை
நடங்குயிலுமவ்விறைவன்விழிபுதைத்துத்தெரித்தசெழுநளினக்கையா
யடங்கருநீர்க்கயங்கணினைக்காணவிழியாயிரம்பெற்றனமந்தான்மான
வுடங்கவிழுமெல்லிதழ்ப்பலங்கள்பல[illegible]ர்ந்தொளிருமொண்மைகாணாய்.

கொம்மைமுலைமலையுயிர்த்தகொழுங்காந்தளெனமலர்ந்தகோலக்கையின்
விம்முமிசைக்கிளிபரித்தவிளக்கொளியேதவக்கொழுந்தேவிரைப்பூங்கோதாய்
மும்மையுலகீன்றளிக்குநின்முகந்தன்போலிருந்தமுறைமைநோக்கிச்
செம்மைமலர்த்தாமரைமிக்குவப்பதெனவலர்ந்தசெழுந்தடங்கள்காணாய்.

மயிரொழுக்குப்பணிவிரித்தமணிப்படத்திற்கவின்றவளநிதம்பமாதே
செயிரொழிக்குமடக்கொடியேதெய்வதமேதேவர்தொழுகுலமேதெண்ணீ
ரயிரொழுக்குந்திரைப்புணரிநின்வரவிங்கறிந்துதனதுவர்ப்புநீப்பான்
வெயிலொழுக்குமணித்திரள்களெதிர்குவித்துவீழ்ந்திறைஞ்சுநெய்தல்காணாய்.

மூத்தமகனியல்காட்டுங்கரிநோக்கியிரியாமைமுன்னியாங்கம்
மாத்தடக்கையெழிறுயிக்குங்குறங்கினைமென்பட்டுடையான்மறைத்தமானே
நாத்திகச்சொற்கொருகரிபோயிழிந்தேனையிறைமுடிப்பநல்காயென்று
தேத்துளியநறுங்கைதைமடற்போதுதலைவணக்குஞ்செயலைநோக்காய்.

எழுதாதமறைமுடியுமிறைஞ்சுமடியார்முடியுமிலங்கப்பூத்துக்
கொழுதாடுசிறைச்சுரும்பினன்பர்துதிகுடிகொண்டகொழும்பூந்தாளா
யுழுதார்வமிக்குடையாரலர்தூவிப்பணிந்தெனத்தேனசும்பத்தும்பி
யுழுதாலுமலரிறைத்துக்குரங்குசினைநறும்புன்னையொசிவபாராய்.

தெள்ளரியவானந்தச்செழுங்கடலின்மைத்தோய்க்குஞ்செல்வமாதே
துள்ளுமறிவிழியுநறுங்குமிழ்மூக்குஞ்சுடர்க்கோபத்தொண்டைவாயுங்
கள்ளுயிர்க்குங்கடுக்கைமணிக்குழலுநறுந்தளவநகைக்கணமுந்தோற்றித்
தள்ளுகொடியிடைநுடங்கப்புறவமகளெதிர்கொள்ளுந்தகைமைபாராய்.

படைத்தளித்துத்துடைத்துமறைத்தருள்புரியுமைந்தொழிலும்பதுமப்புத்தேண்
முடைத்தலையினிரந்துண்டநின்கணவர்க்குடனிருந்துமுடிக்குமன்னாய்
சடைத்தலைவர்கரத்துழைவந்தனதுசெயலொற்றியவற்சாற்றவோடு
நடைத்திறம்போலெழுந்துகளுநவ்வியின்பினினதுவிழிநவ்விபோக்காய்.

திருமாதுங்கலைமகளுஞ்சயசயவென்றேத்தெடுக்குந்தெய்வப்பெண்ணே
யொருமாணிக்கருள்புரிந்துதம்மரசுக்கரசையுதைத்துருட்டுமுக்கட்
பெருமானுக்கொருமனையாளனையினைச்செறுவதுபோற்பிறங்குங்கானப்
பருமேதிமுகஞ்சுழித்துப்பார்ப்பதவணினதுவிழிப்பசழிதூண்டாய்.

சுரிந்தவளைக்கரத்தானுந்தோட்டலர்த்தாமரையானுந்துருவிக்காணாய்
பிரிந்தகொடுந்துயருடற்றுமாற்றுமைநீக்குதற்கும்பிழைத்தாருட்க
வரிந்தகழற்கணத்தொடுநீசெலும்வனப்புநோக்குதற்கும்வாஞ்சைகூர்ந்து
விரிந்தபுகழ்க்கணவரெதிர்வந்தனையகடுக்கையினின்விழிப்பூச்சாத்தாய்.

மங்கலமுந்தவப்பேறும்வாழ்க்கையுமிங்கெமக்கருளும்வஞ்சியன்னாய்
தங்கள்குலத்தொருகொடிக்குமணம்புரியப்புகுந்ததுவேசார்பாவேணி
யங்கணருளுழைநீங்கியறம்வளர்த்தெல்லாவுயிருமளிக்குமேன்மை
யிங்கறிந்துநகைமுகத்தின்மகிழ்வனபோற்றளவரும்புமியல்புகாணாய்.

பிறந்தவர்க்கும்பிறப்போர்க்குநினையன்றிவீடணுகாப்பிறங்கற்கொம்பே
யிறந்துபடாதுலகளிக்குநின்வரவுகாணலுமிங்கிறைவியெய்தச்
சிறந்ததவமாற்றினமென்றுளத்துவகைமீக்கிளைப்பத்திளைத்தார்த்தென்ன
விறந்தொழுகுமருவிபலகறங்கோதைபயில்குறிஞ்சிவிளக்கநோக்காய்.

கருமுகினிகர்த்தவுருக்கவுரநிறம்படைத்தொளிருங்கனகப்பாவா
யருவிபடிசுனைதோய்ந்தும்பொழில்புகுந்தாட்டயர்ந்துமமர்ந்திருந்துதன்னை
மருவியநீதணந்ததனுல்வழிமறுப்பப்பலவுருவாய்வந்துவெள்ளிப்
பெருவிலங்கல்கிடந்தனையவருவிபொதிசிலம்புகளின்பிறக்கங்காணாய்.

கொடியபுரிசூர்முதலைக்கொடியபுரியொடுங்குலைத்தகுழவியீன்றோய்
படியகத்தினறம்வளர்த்தபரிசுணர்ந்துநுந்தைகுலப்பறம்புவானக்
கடியவிழ்கற்பகத்தராசாற்கழிந்தசிறைபெறப்புகன்றுகரமேற்றுன்பா
லொடிவறுநல்வரமிரப்பதொப்பநறைகாந்தண்மலரேழ்ப்பநோக்காய்.

முழங்குமதகளிற்றுருவினொருமகனை முறையளிக்கமுகிழ்த்தமின்னே
தழங்குபுயலிடிக்குவிடாரகத்தொளித்ததடம்பாந்தள்சாலவிந்நாள்
வழங்குவனதமதினத்தைமணியணியாப்பரித்தவர்க்குமனையாநின்னைப்
பழங்கணறத்தரிசனஞ்செய்பாக்குவெளிப்படுவதனைத்தெரிப்பபாராய்.

கருப்புமதனுருக்கனற்றுங்கண்ணுதற்குவிருப்பளிக்குங்காமர்பொன்னே
யருப்பிளவெம்முலைக்கெதிர்ந்துபகைத்தமதக்களிற்றியானையறிவிற்றேர்ந்தன்
றிருப்பதத்துக்குறவாதல்வேட்டுனதுதோட்கெதிருஞ்செயலைநாடிப்
பொருப்பெழுந்துவளர்பனையைப்புழைக்கைவளைத்தொசித்தலைக்கும்பொலிவுபாராய்

அடைந்தவடியாரகத்திலன்பூறுந்தறுசுவைத்தெள்ளமுதமன்னாய்
வடந்தழுவியிறுமாந்துபணைத்தெழுந்தகொங்கையொடுமாணாகி
யுடைந்ததுவட்டினநின்னைக்காணுதற்குமிகநாணியுறுதோற்றமற்
படர்ந்தொழுகுபெருவெள்ளப்பரப்பிடைப்புக்கொளித்திருக்கும்பண்புபாராய்.

போத்தனுக்கவுயிர்கடொறுமிருளிடத்துங்கலந்தருட்டேன்பொழியுநங்காய்
தீத்தகையபுரிந்தொழுகுஞ்சிதடர்களும்பெருங்கருணைதேக்குநின்றன்
மாத்தடங்கணருள்வாய்ப்பினல்லவருணல்லவராய்வயங்குவார்போற்
கூத்தியற்றுமழன்முரம்புங்குளிர்புனன்மிக்கூற்றிருக்குங்கொள்கைபாராய்.

இத்தகையவளம்பலவுமிருளையகளொடுத்துரைப்பவெழிற்கண்சாத்தித்
தத்துதிரைப்பணைமருதமுதலியபன்னிலங்கடந்துதாங்கத்தெண்ணீர்
முத்தலைத்துக்கரையொதுக்கிமுருகுயிர்க்குமலர்துறுமிமுடுகியோடிப்
பைத்ததிரைக்கடலகடுகிழித்தொழுகும்பாலிவடகரையைச்சார்ந்தாள்.

திருநகரையெதிர்நோக்கிப்பணிந்தெழுந்துதுதிகள்பலசெப்பிவெள்ளி
யொருநகத்தின்வலம்பிரியாவுத்தமனுரய்தியவனுள்ளவெல்லா
மருளறநிற்றெரித்துமெனவுரைத்தருளுமொழிநினைந்துமறையைவேட்ட
கருநிறத்தகலவமயிலெனநின்றாளுலகளிக்குங்களைகண்மாது.

அந்நிலையேவழிபார்த்துநின்றார்போலாளுடையபெருமானார்தாஞ்
செந்நிலைசேரைப்பசியிற்பூரநாள்சிறந்தோங்குமற்றைநான்று
மன்னிவளர்தினகரமண்டிலத்தினொடுஞ்சார்வந்தனையயங்குஞ்செங்கேழ்ப்
பொன்னணிதிண்டேருகைத்துப்பூதகணம்புடைசூழப்போந்தாரங்கண்.

செங்கிரணமண்டலமுமழுங்கவருந்தேரையெதிர்கண்டலோடு
மங்கமெலாமயிர்பொடிப்பவகத்துவகைமுகமலரினரும்பித்தேங்கக்
கொங்குமலிமலர்சிலதிமார்கொடுப்பவாங்கியெதிருவளைத்தூவிப்
பொங்குபெருங்காதலினுற்றடியின்வீழ்ந்தெழுந்துபொலங்கொடியினின்றாள்.

மன்றனறுங்கடுக்கைமலர்மிலைச்சடைப்பிரானுமகிழ்ந்துமுன்னர்
நின்றமலைக்குலக்கொடியைத்தமதொருபாலாட்சிகொண்டநிலைமையானைப்
பொன்றயங்குமணித்தேரினுடனேற்றிக்கொண்டுபுரம்வலமாய்ச்செல்வா
ரன்றனையவளநகரினற்புதங்களனைத்துமவட்கருளலுற்றார்.

மருவியகற்பங்கடொறுமணிமார்பன்விரிஞ்சன்முதல்வானோரெல்லா
மிருவியெமைப்பூசித்துநனிவரம்பெற்றோங்குமிடம்புவிமேற்காஞ்சி
யொருதலமேயாமிதனுட்பலதளிகளுளவற்றுட்காரைக்காட்டார்
திருமலியிந்திரர்தொழுஞ்சத்தியவிரதத்தலமிதுதீங்குதலைச்சொல்லாய்.

வெண்ணிறவின்கரியுரியைவழிபட்டமலையஃதவ்விண்டுபோற்றும்
புண்ணியகோடீசமிதுவதுசேடன்மணிகளினாற்பூசையாற்றி
மண்ணிலந்தாங்கெறும்படைத்ததாருநமதேவல்வழிமாயோன்சிறி
நண்ணியசீர்வேகவதிதடுத்ததிதுநறுங்களபக்கொங்கைநல்லாய்.

இலகுமணிப்பாப்பரசுநமைப்போற்றியிருநான்குபணிக்கும்வேந்தாய்க்
குலவுதலமிதுகாயாரோகணமற்றதுபருத்திக்குன்றிதாகும்
வலிகெழுபோர்க்கயமுகனைச்செகுத்தவன்றன்மத்தகத்துமணியாநம்மை
யுலவையொருபாற்படைத்தநின்புதல்வன்பூசித்ததுதுவாங்கண்டாய்.

கச்சபாலயமிதுகேத்திரபாலன்புழைக்காத்துககடவுள்கன்னி
செச்சைநிறக்கதிர்யாமென்றைந்திறத்தேங்களுஞ்சிவனுஞ்சேக்கையீது
நச்சியிடுமோணகாந்தன்றளியீதெனமுழுதுநவின்றுங்குள்ள
வெச்சிறப்புமெடுத்தியம்பியேகம்பத்தளிக்கோயிலெய்திச்சொல்வார்.

இடைதெரியாதெத்தினத்துமெப்பொழுதும்யாங்குடிகொண்டிருக்குமேன்மை
யுடையதுதண்கடலாடைநிலவரைப்பிற்றேரிலிதுவொன்றேயான
வடைவதனாற்கணங்குழையேகாம்பரமென்றொருபெயர்கொண்டிலமெல்லா
நெடுமொழிசென்றுறநின்றதிதன்சீர்மற்றெவராலுநிகழ்த்தொணாதால்.

கருணையொருகோழரையாய்த்தவங்கவராய்ச்சந்தைகணூல்சாகையாகிப்
பரவுமறமுள்ளீடாய்ச்சிவமுயிராய்நாற்பயனும்பழமாஞ்சூத
மரமிதன்கீழெமைப்பூசைபுரிநமக்குக்கூட்ட மிவண்மருவுகென்னக்
கரையிறந்தகாதலொடும்பஞ்சதீர்த்தக்கரையிற்கொண்டுபுக்கார்.

திருவளர்காமக்கோடிமணிப்பீடத்துயர்ச்சியெலாந்தெரித்துப்பின்னர்
மருவியிவணருந்தவஞ்செய்தறங்களெல்லாமாற்றுவளர்த்துக்காவென்
றருளிமறைந்தருளுதலுமம்பிகையங்கிடமுலையுங்கண்ணுமாடப்
பெருவிருப்பினணித்தாகக்கூட்டுறவுண்டெனப்பிறங்குமகிழ்ச்சிபூத்தாள்.

அலையெறியுமணித்திருத்தமைந்தினுநீர்தோய்ந்துகரையண்மிவேறு
கலைகொடுநீர்புலர்த்தியுடையுடுத்திமுறையுளிநீறுகமழச்சாத்திக்
குலவுமணியக்கவடமணிந்துபுரிதக்கவெலாங்குறையாதாற்றி
யுலகுபுகழுஞ்செழுத்தும்விதிப்படியுச்சரித்துனை யாரடிகள்பேணி.

ஆயிடைநின்றுனந்தப்பரவெளியாம்பிலச்சூழலணையச்செல்வாள்
பாயமணிப்பெருவாய்தலேழனையுந்தான்றுறந்துபையவுள்புக்
கேயுமருள்பீடத்தினியனேக்கிவிம்மிதமிக்கெய்தியந்த
மாயிரும்பீடத்தலையின்முக்கோணவடிவினெலாமகிழவைகி.

நின்மலமாய்ப்பேரொளியாய்நிறைவாகியானந்தநிலையாயோங்குஞ்
சின்மயத்தினிரண்டன்றியொன்றன்றிக்கலந்துசெயலற்றுத்தன்றன்
றன்மையெலாமொழிந்துளம்போற்றமனியப்பொற்றிருவுருவஞ்சலியாவண்ண
நன்மையதாஞ்சிவயோகத்தினிதிருந்தாளுலகமெலாநடலைமாய.

பெருகுசிவபோகத்தினிடைதிளைத்தபின்பறங்கள்பிழையாதோம்பக்
கருதியறச்சாலைபலநிருமிதஞ்செய்தமைத்துமணிக்கனகவெற்பி
னொருதலைவராளித்தருளுமுலவாதபாசனமொண்சீராவந்தம்பூற்
பொருவரியவண்டமெலாங்களிதூங்கவறம்பலவும்போற்றுகின்றாள்.

கலிவிருத்தம்.

தூங்கியதசைக்கழுத்துடையதூயவான்
வீங்குகண்டேதியைவிளித்துரிஞ்சுறா
வோங்கியசிலையினுனெழுங்கச்செய்தறி
பாங்குறவிடந்தொறும்பயிலநாட்டினாள். ௨௩௮

வளர்ந்துநீண்டருங்குயத்தரிந்துவந்திடு
மிளம்பசும்புல்லிணர்த்தருவின்மூலத்திற்
றளர்ந்தனார்பசியெலாந்தளரவானினு
முளந்தழைத்துண்டுடல்வீக்கவுய்த்தனள். ௨௩௯

இருவகைப்பற்றினையிகந்துவீடெனு
மொருபெரும்பற்றையேயுளத்திற்பற்றிமெய்த்
திருமலிபிச்சையிற்றிரிகின்றார்க்குமுன்
னருமைசெய்தட்டவூணாற்றநல்கினாள். ௨௪0

தந்தைதாய்முதலியகடும்புதாமின்றி
வெந்துயரிடைப்படுமகவைமேதகு
புந்தியிற்களிவரப்புகன்றுதாயென
வெந்தநல்வரிசையுமியற்றியோம்பினாள். ௨௪௧

மயரறும்பழமறைவகுப்புமாமலச்
செயிரறுமாகமத்திரளுமேவரு
மியலிசைநாடகத்தமிழும்யாவையு
மயர்வறப்பயிற்றினளனைத்துமீந்தரோ. ௨௪௨

ஈன்றவளிராதுயிரிறத்தலாலிருந்
தான்றபான்முலைசுரவாமையாற்பசி
சான்றழுகுழவிக்குத்தண்ணம்பானனி
கான்றெழுமுலையராற்களிக்கவூட்டினாள். ௨௪௩

அறுவகைச்சமயத்திலமைந்தவர்க்கெலாம்
பெறலருந்தன்னுயர்பெருமைதேற்றுநீஇச்
செறிவுகொள்கருணையாற்றெய்வத்தீஞ்சுவைக்
கறிமுதலுணவெலாங்கமழவீசினாள். ௨௪௪

வருந்தியபீளுடைமாதர்தங்களை
யிருந்துயருழவன்மினிக்கணத்தொளி
திருந்துமாண்மகன்வருமென்றுதேற்றிநன்
கருந்தலையளிபுரிந்தருளிக்காத்தனள். ௨௪௫

பண்ணியவேழமும்பரியுந்தேர்களுந்
திண்ணியகோடியந்தானைச்செல்வரு
மண்ணினர்சூழ்தரவன்றும்வேந்தருக்
குண்ணுவமுதலியவூழினல்கினாள். ௨௪௬

சூலைநோயாதியதொடக்கப்பட்டுளோர்க்
கேலுறுமருந்துகளியற்றியன்பினாற்
காலையுமாலையுங்கைத்துறுவகை
சாலுமின்மொழிகளாற்சாற்றியூட்டினாள், ௨௪௭

நறுஞ்சினைபொதுளியநாகுசோலைகள்
செறிந்திடவிடந்தொறுஞ்செழிப்பவைத்தவற்
றுறுஞ்சிறைமயில்கிளியாதியுண்ணிய
பெறுஞ்சுவையுணாத்திரள்பெரிதுமோக்கினாள். ௨௪௮

தேத்துளிபிலிற்றிதழ்த்தெய்வத்தாமரை
பூத்துறுபொய்கையும்பொங்குவாவியுந்
தூத்தடமாதியுந்தொட்டுநல்லுணா
வீத்தனள்கயன்முதலினங்களுண்ணவே. ௨௪௯

வானரக்குலங்களுமானினீட்டமுங்
கானிவர்மதக்கவுட்களிற்றினீட்டமு
மேனையமான்கணமெவையுமின்புறத்
தேனுமிழ்கவளங்கடிரட்டிவீசினாள். ௨௫௦

உள்ளகவிருள்கெடவொருவன்கூறிய
தெள்ளியதேமொழிப்புராணஞ்செஞ்செவி
யள்ளியுண்டனைவருமன்புமீக்கொளப்
பள்ளிகளெங்கணும்படிப்பித்தாளரோ. ௨௫௧

ஞானமேமுதலியநான்கும்வேட்டவர்க்
கூனமில்குரவராலுயர்ந்ததீக்கைசெய்
தீனவன்மலமறவஞ்செழுத்தையுந்
தேனென்னவமிழ்தெனச்செவியிலேற்றினாள். ௨௫௨

பனிமதிமிலைச்சியபகவன்றாட்டுணை
கனிவுறுபத்தியிற்கலந்தநேயரு
முனிவரும்வைகியமுறையினெங்கணுந்
தனியுயர்மடம்பலசமைத்துப்பேணினாள். ௨௫௩

ஆனநெய்வாக்கியட்டெடுத்தவுண்டியுந்
தேனினிலடுஞ்சுவைக்கறியுந்தேனுவின்
பானனிபெய்தடும்பாளிதங்களு
மீனவர்க்குய்த்திடுஞ்சாலையிட்டினாள். ௨௫௪

வேண்டியபொருள்வியப்பெய்தவீன்றவர்க்
கீண்டுறவளித்தெழிற்கன்னிமார்களைக்
காண்டகுகலன்பலவணிந்துகாழிலா
மாண்டமைந்தருக்குநீர்வாக்கிநல்கினாள். ௨௫௫

தாயினைக்கண்டெனச்சார்ந்துவாங்கிப்பின்
பேயினைக்கண்டெனவொளித்துப்பேதுறீஇ
யீயவொன்றில்லவர்கடன்களேற்றவர்
மாயிருங்களிகொளவழங்கிப்போக்கினாள். ௨௫௬

சந்தனக்கள்பமுந்தய்ங்குபூண்களுங்
கந்தமென்றுடைகளுங்கலையுமற்றவு
மிந்திரன்றிருவெனவியற்றிவேசையர்த்
தந்தனள்காமுகர்தளர்வுதீரவே. ௨௫௭

ஐந்தணையமளியும்பொன்மாளிகைச்
சுந்தரவிடங்களுஞ்சுடர்ந்தபுறங்
கொந்தொளிமணிக்கடங்குலவுநீரொடு
மெந்திடத்திலுந்துயிற்கியற்றினளரோ. ௨௫௮

புதுக்கலத்தொளிகடற்பூக்குமுன்னெடுத்
ததும்புவாசங்களட்டுநீர்களு
மதுப்பழத்தேறலும்வயங்கும்பல்விரை
விதத்தவுமேவுநீர்ப்பந்தரீட்டினள். ௨௫௯

பிணங்கியவுயிர்களைப்பிடித்திழுத்துத்த
னிணங்கருள்கொளுத்துவதீயப்பவின்சுவை
மணங்கமழுணவினைமறுத்திடுந்தொறுங்
கணங்கெழுசிறார்க்கிதங்கழறியூட்டினள். ௨௬0

கலிநிலைத்துறை.

கரக்குமாந்தர்முனுளமெலாங்கலங்கியுமருளிப்
புரக்குமாந்தர்முன்முகமெலாம்பூவெனமலர்ந்தும்
பரக்கும்வெள்ளொளிபடச்செழும்பற்களைத்திறந்துற்
றிரக்குமாந்தருக்கெடுத்தனள்சாலைகளனந்தம். ௨௬௧

திருத்தயாத்திரைசெல்வர்தெய்வயாத்திரையி
னருத்தியோடுசெல்பவர்மற்றையேதுவானடைவார்
கருத்துக்கேற்புறக்கமழ்சுவையுணவுகளூட்டும்
விருத்துமாமணிச்சாலைகளிடந்தொறும்விளைத்தாள். ௨௬௨

பொரியுநோலையும்பிண்டியும்புழுக்கலும்வாசம்
விரியும்பண்ணியவகைகளுமேம்படுபிறவு
முரியதாயினுங்கருனைவைத்துறுகிறார்மகளிர்
பெரியமாந்தருநுகர்வுறப்பெட்டுமிக்களித்தாள். ௨௬௩

பூவர்சோலையும்பொய்கையுமெழுதியதுகிலும்
பாவுநுண்ணிழைப்பட்டுடைவிதங்களும்பலவாங்
கோவைவாய்மணிமேகலையாதியுங்குவவி
மேவினார்க்கெலாமேவியாங்குதவினண்மிகவே. ௨௬௪

சிறக்கவீட்டினர்கெடுதலாற்செழும்பொருள்கெடலாற்
பிறக்கும்வேறிடர்பகையினாற்பிறங்குதலின்றி
யிறக்குமாலையபிறரறமெண்ணிலாதனவுந்
துறக்கம்வாழ்நரும்வியப்புறத்தொடங்கினள்வளர்த்தாள். ௨௬௫

கடும்பிலாப்பிணம்பொருளறும்பிணங்கடும்பங்க
ளுடங்குறும்பிணமின்னவைதம்மையொள்ளெரிவா
யிடங்கொளீமத்தினிட்டியற்றருங்கடன்யாவு
மடங்கவாற்றுமாறருளினளலகிலாதவரை. ௨௬௬

அழுங்கலாக்குவான்பற்றியபறவையாதிகளை
யொழுங்குநூன்முறைதெரித்துமின்மொழிபலவுரைத்தும்
வழங்குமாழையானிரப்பியுந்தன்னுழைவாங்கிப்
பழங்கணீத்துயிர்காத்தனள்பயந்தமைந்தர்கள்போல். ௨௬௭

நவைகொடுசினைக்காண்டலுநயந்தனரண்மி
யிவைகொடுக்கியரொலித்துவந்திதுமென்றேலா
வுவருமாப்பியுமுறுத்தெரியேற்றிநன்கொலிக்குந்
தவறிலாதவேகாலியரிடம்பலசமைத்தாள். ௨௬௮

நீளுகின்றமென்மயிரினைக்காண்டலுநெடிது
மூளுமன்பினுன்முன்னுறப்போந்தின்னதிதியு
நாளுநல்லனவெனவழைத்துவப்பநல்வினைசெய்
கோளிலாப்பெருமஞ்சிகர்குலம்பலதுறுத்தாள். ௨௬௯

இனையமுப்பதிற்றிரண்டறமோங்கலும்விசும்பி
னனைவருங்களிதூங்கினரலைகடல்வரைப்பிற்
றனையயாவருமுய்ந்தனர்குழுறக்கடைகள்
புனையுநாமமுமிறந்தனபுகழ்பெறுபெயர்போல். ௨௭௦

பூதலத்துளமாந்தரேயலர்பொழிந்தற்ப
மாதலத்துளவமரருமணிகி ந்திமைக்கும்
பாதலத்துளவுரகருங்காஞ்சியிற்பா ர்ந்து
காதலித்துமையருளுணைவன்கொழுறுப்பார். ௨௭௧

இரவலாளரையறிவிலார்தமையிடும்பையரை
விரவுதீவினைபுரிநரைச்செய்வமேவலரைக்
கரவையாகியவுடையரையிழந்தனகாஞ்சிப்
புரியொன்றேயலவுலகங்கண்முழுதுவதும்போலும். ௨௭௨

விண்ணுளார்களும்பாதலத்துரகரும்விரிநீர்
மண்ணுளார்களுமேயலர்மலைமகளறத்தாற்
றிண்ணென்வல்வினைமுழுவதுஞ்சிதர்பா வுதறி
யண்ணல்வீட்டினையடைந்தனமிருகமாதிகளும். ௨௭௩

புறங்கொள்வேலையும்பொங்குமேழ்வேலையுமீற்றிற்
கறங்குமேகமுங்கலங்கெனக்கவரிநாயகித
னறங்கொள்சாலையினடைபவமோதையும்வெளிக்கொள்
பிறங்குமோதையுங்களிப்புறுமோதையும்பிணங்கும். ௨௭௪

எண்ணிலாதவான்மகளிரின்னடிசில்கள்பகரும்
வண்ணமுன்கைவாள்வளைகளும்வயங்குமேகலையுந்
தண்ணந்தாமரைச்சிலம்புமண்ணியவோசைசான்றும்
பண்ணமைந்தவின்கிளவியும்பன்முறைதழங்கும் ௨௭௫

சுவையெலாநிரம்பித்தவளமைத்ததூவடிசிற்
சுவையையிற்றெனத்துய்த்தவர்தாங்களுமறியார்
சுவையவான்சுதைசுரர்களும்வெறுத்தனரெனிலச்
சுவையின்மேன்மைமற்றெம்மனோர்சொல்லுதற்கெளிதோ.

பூமென்கோதையரெழுபயிரபுரிநரப்பிசையுஞ்
சோமவாண்முகநகையொடுந்துளும்புபாட்டிசையுந்
தாமநூபுரமாதியதழக்கமுமல்லாற்
காமசாலைகளினைஞரைப்புறத்தினிற்காலா. ௨௭௭

திருவநீண்மறுகிடந்தொறுந்தெரிவைமார்தம்மை
மருவுதானமாவழங்கியமன்றலின்மகிழ்வா
னொருவர்தோளிணையொருவர்கடழுவலுமுயர்வான்
பெரிதுமுத்தரியத்தினையெறிதலும்பிறங்கும். உ௭௮

அற்றைநாணகர்வளங்கெழுசிறப்புமங்கெவரும்
பெற்றவோகையும்பேசுவதரிதரிதம்மா
வெற்றைநாளுமவ்வறமெலாம்வழங்குமாறியற்று
முற்றிலாவிளமுகிழ்முலைமற்றிதுமுயலும். உ௭௯

கொச்சகக்கலிப்பா.

துப்புநிகர்செங்கனிவாய்த்தூமுறுவற்பசும்பணைத்தோள்
வைப்பெருவேலிகந்தவிழிமங்கலைக்குமணிசடைந்த
செப்புமுலைச்சண்டிகைக்குஞ்செய்தவறந்திறம்பாமே
யெப்பொழுதுங்காமினெனவியம்பியருள்பணித்தருளி. உ௮0

உடங்கணைந்தமலர்த்தவிசினொள்ளிழையாரிருவரையு
மடங்கவற்றும்பசுவில்வமலர்ப்பலாசிடத்தெய்திப்
படங்கிளர்பாப்பணியாரைப்படர்ந்துதவஞ்செய்மினெனத்
தடங்கணருள்கொழித்தொழுகச்சாற்றிவிடுத்தருளியபின். உ௮௧

கலிவிருத்தம்.

விற்கான்மதிபோனுதன்மெல்லியலாள்
சொற்காமுறுமத்தகுசூழல்டை
நற்காமர்நறுங்கொடிமாலதியைப்
பொற்காஞ்சியெனப்பொலியக்கருத. உ௮௨

வண்டார்தருமாலதிமென்கொடியும்
விண்டாழ்கயிலைக்கிரிவிட்டெவருங்
கொண்டாடுபிலத்தயலிற்குறுகி
யுண்டாயதொளிர்ந்தெழுகாஞ்சியென. உ௮௩

நளிபட்டகருங்கடனுறிவருந்
தெளிபட்டசெழுஞ்சுடருஞ்சிதையத்
தளிர்பட்டொளிர்சாகைதொறுங்கவினி
யொளிபட்டெழுதண்கதிரூழ்த்ததுவே. உ௮௪

சேண்டாழ்பிலம்வைகியதேத்துமணித்
தூண்டாதசுடர்க்கதிரைந்தலையி
னேண்டாங்கரவின்மணியின்கதிரோ
டாண்டார்ந்துநிரம்பியதக்கதிரே. உ௮௫

அரவின்மணிதூண்டலடாதசுடர்
குரவங்கமழ்காஞ்சிகொழிக்குமொளி
விரவுற்றிடுமத்தலைவில்லொளிமூன்
றுரவுற்றபிரான்முகமொத்ததுவே. உ௮௬

மாணுற்றுவயங்கியகாஞ்சியிழு
தூணுற்றிடலின்றியொளிர்ந்தசுடர்
காணுற்றிடவந்துகதிர்ப்பரிதி
பூணுற்றவணின்றதுபோன்றதரோ. உ௮௭

பொன்னின்மயமாய்ப்புரைதீர்ந்தநவ
மின்னும்மணிமென்றளிர்பாசடைபூ
துன்னுங்கனிகாய்துறுதொத்தினமா
மன்னிக்கவின்மல்கியதம்மரமே. ௨௫௮

மணிபொன்னலர்கற்பமரத்தொகையாற்
றணிவின்றுயர்பொன்னகர்தன்னிறுமாப்
பணிமல்கியகாஞ்சியினுமருட்
டிணிமல்கியகாஞ்சிசிதைத்ததுவே. ௨௫௯

சினைதோறவிர்மசமமணியமமரமங்
கினிதுற்றுறைபாம்பொடிருப்பனினைங்
தினவொண்மணியாயிரமெய்துபணத்
தனிவாளரவெய்தியதன்மைபொரும். ௨௬௦

மலருற்றிழிதாரைமதுப்புனலா
லலரிற்பொலிகாஞ்சியளித்துவளர்
தலைமைக்கொடிநீங்கியதன்றுயர்முன்
னிலவித்தெரிவிப்பதுநேர்ந்ததுவே. ௨௬௧

நற்பாலனநல்லவர்பாலனுகிற்
பொற்பூமணமும்பெறல்போலுமெனு
சொற்பாரினிறீஇயதுதூயவிதன்
விற்பாய்மணமேதகுபொன்மலரே. ௨௬௨

முன்னர்க்கருமெய்யுருமுற்றொழியு
மன்னைக்குநிகர்த்ததடுக்கலின்முன்
மன்னிப்பொலிபாசுருவங்கழுவிப்
பொன்னிற்பொலிபூவுடைநன்மரமே. ௨௬௩

கயிலைக்கிரியேகருமப்புவியா
வியனற்பதமுத்தியிடங்கலைகள்
பயில்பொற்பமர்காஞ்சிநெடும்பதியா
வுயர்முத்தரையொத்ததுபூமரமே. ௨௬௪

உலகேதுறினுங்கலையோவியரு
ணிலையேநிலையாகநிலைத்தவர்க
ளலையாரதுபோலொளியாங்குறினுஞ்
சலியாதடிநின்றொளிர்தண்ணிழலே. ௨௬௫

சீரார்தவமாற்றுறுசெவ்வியினில்
வாரார்முலைவல்லிதன்மீதுவெயி
லாராதுறுபொற்குடையானதரோ
பேராதுபிறங்கியவந்நிழலே. ௨௬௬

கிளிபூவைகள்கேழ்கிளர்மஞ்ஞைகுயி
லளிதேனினமாதிஞெமிர்ந்துலவக்
களிமாசனநோக்கியகண்களுட
னுளமோடிநெருங்கியுலாவியவே. ௨௬௭

அருளையிஃதென்மருமாரணநூற்
பொருளையிஃதென்மருமாய்ப்புகழா
வருவானவர்யாரும்வலங்கொடுமுன்
பெருகோகையின்வீழ்ந்தொளிபெற்றனரே. ௨௯௮

இவ்வாறெழுகாஞ்சியிருங்கவினைச்
செவ்வாயுமைமாதிருசேல்விழியாற்
றுவ்வாமகிழ்கூர்ந்துதொழுந்தகைமை
யவ்வாள்விடு... ருவடிக்கலையின். ௨௯௯

முக்கோணமமைந்தமுழுத்தவிசின்
மிக்கோர்சடைவற்கலைமெய்யொளிர
வெக்காழுமிகந்துலகின்பமுற
வக்காலையமர்ந்துதவம்புரிவாள். ௩௦௦

காக்குந்தணிநாயகரைக்கருதி
நோக்கங்குமிழ்மூக்கினுனிக்கணுறத்
தேக்கும்பரவின்புதிளைப்பவறம்
பூக்குங்கொடிபோல்பவணோற்றனளே. ௩௦௧

ஈகைத்தழைகாஞ்சிதனக்கிசையத்
தோகைக்களிமாமயிலுஞ்சுடர்பொன்
னாகித்தவிரற்புதமொத்ததுதீம்
பாகைத்தவிர்சொல்லிபதிந்ததுவே. ௩௦௨

கொச்சகக்கலிப்பா.

முப்பொழுதுமைந்தீர்த்தமுறையுளிதோய்ந்தலர்காஞ்சி
வைப்பினருந்தவமாற்றிவள்ளலாரருள்கிடைத்துப்
பொற்புமலியேகம்பர்தொழுதேத்தப்புறம்போந்து
செப்பரியவளநகரத்திருவீதிசென்றணைந்தாள். ௩௦௩

தோரணங்களிடங்கடொறும்புதிதாகத்தொடுத்தணிவார்
காரணவேவோங்குநடைக்காவணமெங்கணுங்கவரி
நாரணவுமலர்மாலைநகைமணிமாலைகள்செறிப்பார்
தாரணிபொற்கொடிநிறுப்பார்தாணியவாடைகள்விரிப்பார் ௩௦௪

தெருவீதிதிருவலகுப்பணிபுரிவார்தெண்பனிநீர்
மருவாரத்தெளித்தொழுக்கிமான்மதங்குங்குமந்தொகுப்பார்
முருகாலுமலர்மாரிமுகினாணவெதிர்சொரிவா
ருருகார்வமுடனோடியொண்மணிமாரிகடூர்ப்பார். ௩௦௫

முன்பணிவார்பின்பணிவார்முன்னோடியெதிர்பணிவா
ரென்பணிவார்திருமனைவியென்பணியேற்றருளென்பார்
மின்பணிலமுதலியங்கள்விரியோதையெண்டிசையின்
மன்பணிகண்முடிதுளக்கமங்கையர்கணடம்புரிவார். ௩௦௬

மணிவிளக்குநிறைகுடமுமங்கலமுமெதிர்கொணர்வா
ரணிவிளக்கியிடங்கடொறுமமர்ந்தருளியெழுகென்பார்
பிணிவிளிக்குமலர்ப்பாதம்பெயராதுதொழுதணைவார்
தணிவளிக்கினுயர்வளிக்குந்தையலருளென்னென்பார். ௩௦௭

ளத்தவமுன்னியற்றினமிங்கிவட்காண்டற்கெனவியப்பா
ரத்தகையதவமிலதேலரியயனுந்தெரியாத
வுத்தமிநற்றிருக்காட்சியுதவுமோவெனநயப்பார்
மைத்தபொழிற்காஞ்சிநகர்வாழ்ந்தபயனிதுவென்பார். ௩௦௮

கொம்மைமுலையிவள்வளர்க்குங்கோதிலறப்பெரும்பேற்று
லிம்மையொடுமறுமைநலமெவையுநுகர்ந்தனமென்பார்
செம்மையெனத்துறக்கவளஞ்சேர்ந்துநுகர்பண்ணவரு
மம்மவிதற்கிவர்வரெனிலதனலமென்னேயென்பார். ௩௦௯

மரகதமென்றளிரென்னவயங்குமுருவிவட்கென்பார்
பரவுபொளிக்கவுரநிறம்படைத்திருந்ததென்னென்பா
ரரவணிவார்திருவருளாற்றணந்திடுமவ்வுருக்கண்டீ
ரொருபுடையில்வருநீலவுருக்கன்னியெனமொழிவார். ௩௧௦

ஓருருவிலங்கணனுருடன்பயிலுமுத்தமிதா
னீருருவாத்தணந்துதவமியற்றுதிறமென்னென்பார்
பாருலகிற்றனடந்தபடிநடந்துநாமெல்லாஞ்
சீருருவக்கதியடையுந்திருக்கருணைத்திறமென்பார். ௩௧௧

இருள்பரவியெவ்வுலகுமிடருழப்பத்தனிக்கணவர்
மருமலர்க்கண்புதைத்தருளுமணிக்கரமீதோவென்பார்
தெருமருமவ்வுலகமெலாமகிழ்விக்குந்திறம்போலும்
பெருகுபரமானந்தப்பேரறமாற்றுவதென்பார். ௩௧௨

சுந்தரவெங்கதிரவனுஞ்சோமனுமற்றேனையவுந்
தந்தமியல்பினிருப்பச்சார்ந்ததெவனிருளென்பா
ரெந்தவொளிதனக்குமுயிரெனப்படுவதிவள்புதைத்த
வந்தணனார்முகத்தொளிருமலர்விழியினொளியென்பார். ௩௧௩

இவள்புதைப்பவேதுவாயிருந்தவெனமாலதியைக்
கவிழ்சினையதளிர்மாவைக்கைதொழுவார்கண்புதைத்த
பவளமலர்க்கரங்களையும்பணிகிற்பார்பதகனெனத்
தவறுபுரிமகதனையுஞ்சரண்பணிவார்பயன்பெறுவார். ௩௧௪

அறம்வளர்க்குமணிச்சாலையகப்படுத்திக்கொளநினைந்த
மறமுயிர்வேன்மகதனுக்கும்வரம்வழங்கினளென்பார்
நிறையருளினுலகனைத்துநெடிதோம்பியினிதளிக்கு
மிறைவிபொருளாயிடின்மற்றெவர்பொறுப்பார்பிழையென்பார். ௩௧௫

அலகிறந்தவிம்மிதத்தேர்டொன். [illegible] ம்பிகையா
னிலகுமணிக்காஞ்சியுமற்புதமாயிற்றிவணென்பார்
பலபலவற்புதமுமுனம்படைத்தவளேயிவளின்னு
நிலவுமதிசயமென்னநிகழ்த்துமோவெனவியப்பார். ௩௧௬

சடைமுடியும்வெண்ணீறுந்தாழ்வடமுமரவுரியு
முடையவளாய்த்தவம்புரிந்துமுருநிழற்றவிலையென்பார்
கடைபயின்றமடமுடையீர்கரிசுபடுமாயையினும்
வடிவதுவோவானந்தவடிவன்றேவிதுவென்பார். ௩௧௭

இவ்வாறுபலர்போற்றவெழுந்தருளிவருநெறிக்கட்
செவ்வாய்மைப்பாங்குபுரிதிறத்தொழுகுமங்கலையா
மைவார்மென்குழன்மடந்தைமனமகிழ்விற்றாழ்ந்தெழுந்து
துவ்வாதவமிழ்தனையாட்கெதிர்காட்டிச்சொல்லுவாள். ௫கௌ

அடியனேன்குளிர்தடமொன்றகழ்ந்தொருமண்டபமெடுத்தே
னிடுக்கிடைமெய்த்தவக்கொழுந்தேயிவையவையாமித்தகைய
தடவரைப்புநீவதியத்தக்கதெனச்சாற்றுதலு
மடநடையாட்கவ்வாறுவரமருளியவணெய்தி. ௫கக௯

மலர்கொழிக்கும்புனற்றடமுமணிகொழிக்குமண்டபமு
மலர்கருணைவிழிசாத்தியாங்கொழிந்துமென்மெலப்போய்ச்
சுலவுதிரைக்கம்பைநதித்துறைமருங்குசென்றெய்திப்
பலர்புகழுமங்கலைக்குஞ்சண்டிகைக்கும்பணித்தருள்வாள். ௫௨0

கலிவிருத்தம்.

பிறைநிகர்வாணுதற்பேதைமீரிவண்
மறைதிரண்டுருக்கொளுமாவிதாகுமா
விறையவனென்றுமிங்கினிதுறைவகலா
னிறைவுடையிதன்றிறநிகழ்த்தொணாதரோ. ௫௨க

மாவடிவாகியபொழுதுமாமறை
மூவர்கண்முதல்வனைப்புழிச்சமூண்டெனப்
பூவலர்சினைதொறும்புக்கவண்டினம்
பாவலரிசைக்குரல்பயிற்றல்கேண்மினோ. ௫௨௨

யான்றழுவியபொருண்மெய்யினீர்ங்குழன்
மான்றழுவியபரனென்றுமாந்தரைத்
தான்றெளிவுறுப்பதுதகையவவ்விறை
போன்றுபாசடைதளிர்பொதுளல்காண்மினோ. ௫௨௩

என்னையாளுடையவனெனதுமாணிழன்
மன்னியவைமுகவள்ளல்காணெனுப்
பொன்னவிருலகினைப்புகலப்போதல்போற்
பன்னெடுங்கிளைநிமிர்பரிசுகாண்மினோ. ௫௨௪

பிரிந்தமைக்கிரங்கியென்பெரியபூண்முலை
விரைந்தரன்புணரவோர்முயற்சிவேட்டென
வரந்தைதீர்த்தருளுமவ்வண்ணன்மெய்யெலாம்
புரிந்துமென்மலர்க்கணைபொழிதல்காண்மினோ. ௫௨௫

யனை
புனிதனுக்களித்திடத்தாழ்ந்தபொற்பெனக்
கனிநறுங்காய்ஞெமிர்கனத்திறுற்கொழுஞ்
சினைநனிகுரங்கியசெய்கைகாண்மினோ. ௫௨௬

கொச்சகக்கலிப்பா.

இன்னவகைமறைமாவின்வளம்பலவுமெடுத்தியம்பிக்
கன்னிமடவடிமுளைத்தகண்ணுதலார்பெருமையுமற்
றன்னவர்கட்கறிவுறுத்தியண்ணலார்சிவபூசை
யிந்நிலையில்யான்புரியவெப்பொருளுங்கொணர்கென்றாள். ௫௨௭

உய்ந்தனமுய்ந்தனம்யாமென்றொளிர்கமலப்பதம்வணங்கிச்
சந்தநறுங்களபமுலைத்தையலாரிருவர்களுங்
கந்தமலிகற்பகமுங்கதிர்மணியுமிருநிதியும்
வந்துவளமுழுதளிப்பவகுத்துவினைத்தலைநின்றார். ௩௨௮

பீடுமலிசிவபூசைபேரன்பிற்செயத்தொடங்கி
யாடுதற்குஞ்சிவன்முடியினாட்டுதற்குமிருதீர்த்தந்
தேடருஞ்சீர்க்கம்பத்தின்றென்பாலும்வடபாலுங்
கோடுயர்வெற்புயிர்த்தெடுத்தகொம்பனையாணிருமித்தாள். ௩௨௯

கீர்த்திமிகுமவ்விரண்டுங்கிளக்குமுமாபத்திரநற்
கீர்த்திமதியெனநாமங்கிளர்தரச்செய்துலகத்துக்
கீர்த்திபெறுதீர்த்தமெலாங்கெழுவித்தாள்காப்பதற்குக்
கீர்த்திமதியெனுமணங்கைநிறீஇனாள்கேடில்லாள். ௩௩௦

தென்பாலிற்கூவனறுந்தீர்த்தவுமாபத்திரத்தின்
மின்பாய்ந்துதுளைவதெனவிதிப்படிநீர்தோய்ந்தருளிப்
பொன்பாவுதிருமேனிபொலிதகவெள்ளணியணிந்து
கொன்பாவுவெண்ணீற்றுக்குருக்கவயத்திடைப்புக்காள். ௩௩௧

வெள்ளனத்துமிசைக்கிடந்தவெள்வரிகளெனமெய்யி
னாள்ளொளியவுத்தூளத்தொழுங்குறுபுண் ரந்தீட்டிக்
கள்ளவினைக்கட்டறுக்குங்க வுண்மணித்தொடை பூண்டு
தெள்ளுமுறையாலங்கட்செய்வனவெல்லாஞ்செய்தாள். ௩௩௨

கலவமயினடந்தெனக்கமழ்புனலின்கரைநின்றுங்
குலவியுயர்தனிமாவைக்குறுகுவாள்சென்றெய்தி
யலகில்புகழரசன்னமைங்கரனைத்தென்மேல்பாற்
பலவிடர்க்கும்பலவிடரைப்பண்ணுகவென்றிருவினாள். ௩௩௩

ஆனாதபேரறிவாயகம்புறமுநிறைந்தெல்லாந்
தானாகின்றருளுந்தனிமுதலையேகம்பத்
தீனோரும்வழிபடுமாறெளிவந்ததெள்ளமிழ்தை
யூனாதிகசிந்துருகவுயர்பூசைபுரிகுவாள். ௩௩௪

சுருக்கமிலாகமவிதியாலைவகைசுத்தியுமமைத்து
மருக்கிளர்பூங்குழன்மடவார்மாறாதுபணிகேட்ப
வொருக்குமனத்தினளாகியுயர்கீர்த்திமதித்தீர்த்தந்
திருக்கிளர்பாறயிரனைத்துஞ்சிவமனுவாலாட்டினாள். ௩௩௫

நுழையிழைநூற்கலிங்கத்தாற்றிருமேனிநொய்தொற்றி
விழைதருகோவணமரைநாண்மேதகுபட்டுடையணிந்து
குழைவிரைச்சந்தனச்சேறுகொட்டிமணத்துகளட்டி
யிழைவருக்கந்திருமேனியெங்குமெடுத்தலங்கரித்தாள். ௩௩௬

சுவையாறும்பழுத்தொழுகுந்தூயநால்வகையுண்டி
நவைதீர்ந்தபொற்கலத்தினயந்தமுதுசெய்வித்தாங்
கவிர்தூபதீபமுதற்பணிமாறியன்பாற்றி
ணிவர்தருசைவாகமநூல்விதியெலாமியற்றினாள். ௩௩௭

இவ்வாறுநாடோறுமேன்மேல்வந்தெழுமன்பிற்
செவ்வாய்மைத்திருவுள்ளங்களிசிறப்பத்தேம்புமிடை
மைவாருங்குழற்கவுரிமதின்மூன்றுமொருகணையா
லெய்வாரைப்பூசனைசெய்தினிதிருந்தாளக்காலை. ௩௩௮

கலிவிருத்தம்.

உலையுங்குளிர்கூதிரொழிந்ததுவின்
மலையங்கையினாரைவழுத்தியருள்
குலவம்பிகைபாலுறுதன்குளிர்போய்ச்
சுலவுந்திறமஞ்சியசூழ்ச்சியென ௩௩௯

தானாடியதண்மலையீன்றவிள
மானாடியவண்டவனோக்கியமண்
மேனாடியெழுந்ததுவீழநறும்
பானாடியமுன்பனிபாய்ந்ததுவே. ௩௪0

வேறு.

கூதிராலுமுன்குழைந்தமாந்தர்க
ளேதுசெய்துமற்றிதனுக்கென்றுளம்
போதநோதகப்பொங்குதண்பனிச்
சீதவெண்முகில்செறிவுகொண்டதே. ௩௪௧

பிரிந்துளாருளம்பிழைமல்கலாற்
பொருந்தினாருளம்பொலிவுமல்கலாற்
பரந்துநின்றுவீழ்பனியின்மென்றுளி
வரிந்தவேள்சிலைவாளிபோன்றதே. ௩௪௨

ஐயபுல்லறுகாதியெங்கணும்
பெய்யுநுண்பனித்துளிபிறங்கின
வையமங்கைதன்மகிழ்நர்தோண்மரீஇ
மெய்யெலாம்வியர்பொடித்தல்வீழுமே. ௩௪௩

அன்னமென்றுளியவனிமங்கைதான்
றன்னிடத்துமைதவமியற்றலுங்
கொன்னறம்புரிகோலமும்வியந்
துன்னியுற்றமெய்ப்புளகமும்பொரூஉம். ௩௪௪

மலியுநீற்றுடற்கவுரிமானநோய்
மெலியிமத்தினான்விளர்த்தயாவையு
முலகமுற்றுமையுருவமென்பதை
யிலகுகாட்சியிற்றெளிவித்தென்னவே. ௩௪௫

அனையதண்பனியால்வெளுத்தொளிர்
கனைகடற்புலிக்கன்னிதானுமெய்
வனிதைபோற்றவமருவமெய்யெலாம்
புனிதநீறுதோய்பொலிவும்போன்றதே. ௩௪௬

கதிரினாற்றனைக்காதுமவ்வயவன்
வதுவைசெய்மனையாவதோர்ந்தெனப்
பொதியும்வெப்பினிற்பொலிவழிந்துதண்
பதுமம்வாடுறப்பனிவிளைத்ததே. ௩௪௭

கரிந்ததாமரைக்கதியவண்டினம்
பிரிந்துபோதவபெட்பிணையினற்
பரிந்தநுண்ணிடைப்பாவைமார்தமைத்
தெரிந்துகாமுகர்நீங்கிச்சேறல்போல். ௩௪௮

நோயினலுயிர்நொந்துமென்மல
வீயுமாந்தர்போல்வெய்யதண்பனி
பாயநீரினற்பங்கயக்குலந்
தீயுடன்றெனமுழுதுந்தீந்தவே. ௩௪௯

ஆடுமாந்தருக்கார்வம்ற்றெனத்
தோடுகொண்டதூவெள்ளையன்னமு
நீடுதண்டுறையாடநீங்கின
பேடையோடுதண்சோலைபேணின. ௩௫௦

அணங்குவெம்பனிக்கழக்ழிந்துகா
ரிணங்குமெய்யினரெவருமாதலாற்
றணந்துளாரையுந்தலைப்பட்டன்பினன்
மணந்துளாரையும்வகுக்கொணுதரோ. ௩௫௧

மண்டுவெம்பனிமறலுநீர்மையான்
விண்டவூறுமான்மேயவன்பர்தே
னுண்டபற்குறியூறும்வேற்றுமை
கண்டிட்டப்படாகன்னிமாரிதழ். ௩௫௨

களவினன்பரைக்கலந்தமாதரு
ளளவுபற்குறிக்கஞ்சுவாரிலை
யிளிவுறுத்திமத்திதழ்வெடித்ததோர்
பிளவிதாமெனப்பெயர்க்குமாற்றலால். ௩௫௩

இரவிமேற்கடலெய்துமுன்னரே
விரவுமாந்தர்கள்விளங்குமாளிகைப்
புரவுபூண்டனர்புகுவரல்லது
பரவைவீதியிற்படர்கிலார்நிசி. ௩௫௪

அரமியங்களுமலர்பொதும்பரும்
பரவுசீதளப்பனிமதிக்கலும்
விரவுமேனிலமேடையுங்கவி
னிரியல்போயினவெவுருநீத்தலால். ௩௫௫

சந்தனங்களுந்தரளமாலையுங்
கந்தநீர்களுங்கமழ்செய்மாலையு
மந்திலேந்துருவாவணங்களு
நொந்திமத்தினற்றுமுநூக்கல்போல். ௩௫௬

திங்கள்காலொளித்தெண்ணிலாவுடற்
றங்குதோறுயிர்தளர்வர்யாவரும்
பொங்குமில்லறம்புகரென்றேம்பினர்
நங்கைமார்கரந்தீண்டனைந்தென. ௩௫௭

அழற்றுவெம்மையவங்காரகமுஞ்
செழித்தகாரகிற்செறித்ததூமமு
மிழித்திலாவெலிமயிரின்போர்வையுங்
கழித்திலாரரைக்கணமும்யாவரும். ௩௫அ

ஒருவர்மெய்வெதுப்பொருவர்மெய்யினின்
மருவிவன்குளிர்மாயமார்பெலாம்
பொருமுகொங்கைகள்புதையப்புல்லுவார்
திருவனூர்களுஞ்செல்வமைந்தரும். ௩௫௯

புகையுமப்புறம்போதொணுவல்கத்
தகையுமுள்ளறைத்தடவுச்சேக்கையி
னகிலினிற்புகையார்த்திவைகலாற்
பகலன்றுருமாய்படிவமெய்தினர். ௩௬0

மாலும்வானவரிறையுமாரனுங்
காலவெம்பனிகாதநொந்துமு
னீலவொண்புகையாத்தநீர்மையாற்
போலுமெய்யெலாம்புகர்படைத்ததே. ௩௬௧

நெடியவானமுநீண்டவேலையுங்
கடியசோலையுங்கரியகுன்றமு
மடமைமாதரார்வணர்மென்கூந்தலுங்
குடிகொள்காருமக்கொள்கைபோலுமால். ௩௬௨

முடங்குவார்கழன்முன்கைமார்புவைத்
தடங்கியன்னையரகட்டினூன்றுற
வொடுங்கிமைந்தர்களுறக்கமேயினர்
வடங்கொணித்திரைமாயனொத்துளார். ௩௬௩

அறையும்போர்வையுமடுத்தணைத்தன
ருறைதலாற்றுயிலெவர்க்குமோங்கலான்
முறையிற்புல்லப்போமகளிர்க்கவ்விராக்
குறையின்றாயதுகூதிர்போலவே. ௩௬௪

கந்தைபின்புறங்காக்கவிட்டுமூ
மந்திபோலமுள்காந்தவார்கழற்
பந்தமுற்றுறப்பாணிகோத்துள
நொந்திருப்பர்முன்னோற்றிலாரெலாம். ௩௬௫

முதுமைமாந்தர்கண்மூரற்பந்திக
டதையமோதுவதாளமாகவாய்க்
கதிகொண்மெல்லிசைகறங்கியங்களா
வதரமாடுவவங்கையாடுவ. ௩௬௬

தலைவர்நீங்கியதையன்மெல்லிய
ருலையும்வாடையாலுடைந்துமாமழை
யுலவுவேல்விழிபொழியப்பீர்முலை
மலைகள்பூப்பமுன்மாரிகாட்டுவார். ௩௬௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நாரணர்விரிஞ்சர்தேறுநம்பனார்க்கலர்கள்கொய்வான்
பூரணிவிடியற்காலைபுகுந்திறமுணர்ந்தாலென்னக்
காரணிசோலைமுற்றுங்கழீஇப்பெருந்தூய்மைசெய்யு
மோரணிசிறப்புவாய்ப்பவிறுத்தபின்பனிமாமேகம். ௩௬௮

அருள்கொழித்தொழுகும்வாட்கணம்பிகைபுரிபூசைக்கு
மருமிகுத்தொழுகுந்தேறன்மலர்நனியுதவித்தங்க
ளிருள்பழுத்தொழுகுநீலநிறமிரித்திட்டாலென்னச்
சுருள்விரித்தொழுகுஞ்சோலைதூத்தகவெளுத்தமாதோ. ௩௬௯

இறைமகனாகிவாழுமிறும்புசூழிமயக்குன்றங்
கறைகொடாதிருப்பச்சீறிக்கடாவலுமிறந்துமுற்றி
நிறையமேலிவர்ந்துவண்மைநிலைகெடவலைத்ததேய்க்குங்
குறையறுவளஞ்சூழெல்லாக்குன்றினும்பனிசூழ்தோற்றம். ௩௭0

வலம்புரிதடந்தோளன்பர்வரப்பெறுமாதரார்க்குக்
கலம்புரிவெந்நீராட்டுங்கடும்பனிகணவரெய்தாப்
புலம்புறுமாதரார்க்கும்புணர்விழிவெந்நீராட்டி
நலம்புரியறிஞர்போலவொப்புரவாற்றுநாளும். ௩௭௧

கணவரைப்பெற்றாரன்னோர்கமழ்புயந்துணையாக்கொண்டு
மணியணைநீங்கிமுன்றில்வந்திடார்கதிர்த்தோற்றத்துந்
துணைவரையுறாருமன்னோதுன்பமேதுணையாக்கொண்டு
பிணிமலர்ச்சேக்கைநின்றும்பெயர்ந்திடார்கலந்தாரொத்தார். ௩௭௨

காலையுமிரவேயென்னக்கள்ளுயிர்த்தலர்ந்தபல்வீச்
சோலையுமாறுங்குன்றுஞ்சூழ்ந்துகொள்பனியின்றோற்றம்
வாலரைமுதலாயுள்ளோர்குளிர்ப்பிணிமடங்கக்காய்வான்
சாலவும்வளர்த்தசெந்தீதருபுகைப்படலையொக்கும். ௩௭௩

மாதரார்புலரிக்காலைப்புறஞ்செலாவருத்தநோக்கி
மோதுதண்பனிதானன்னோர்முன்றிலுமறுகுமெங்குஞ்
சீதநல்வாடைதன்னாற்றிருவலகிட்டுநாளு
மேதகுமாப்பிநீராமென்றுளிதுவற்றுமன்றே. ௩௭௪

காலைவெங்கதிர்காயாருங்கனலிடைக்குளிர்காயாருஞ்
சாலவுமுறுகும்வெந்நீர்குளித்திடாதாருமஞ்ஞை
போல்பவர்முலையின்மார்பும்புயங்களுநெருங்காதாரு
மாலுமப்பனியத்தில்லையலர்தலையுலகின்மாதோ. ௩௭௫

சேணிடைத்தணந்தோர்தாமும்வெம்பனிச்சீதநீங்கப்
பூணுடைக்கிழத்திமார்தம்புணர்முலைவெம்மைதங்க
ளேணுடைமார்பினெற்றியின்புறுபாக்குவல்லே
மாணுடையிரதமூர்ந்துவந்தனர்மகிழ்ச்சிபூப்பார். ௩௭௬

திங்களுங்கங்கையாறுந்தண்ணெனச்சென்னிதாங்கு
மெங்களையகருமந்நாளித்தகுபனியிற்பட்ட
வெங்குளிர்க்குடைந்துசெம்பொன்வெற்பரசுயிர்த்தநங்கை
கொங்கையின்வெம்மைமார்பினெற்றிடுங்குறிப்போதேறும். ௩௭௭

பங்குனிப்பருவந்தன்னிற்பண்டுபோலொருநாளன்பின்
மங்கலக்கவுரமேனிமடமயின்மாண்டசாயற்
றுங்கலங்குழலாள்பூசைத்தொழிறலைநின்றகாலைச்
செங்கைமான்மறியாரங்கோர்திருவிளையாடல்செய்வார். ௩௭௮

கங்கையந்தீர்த்தமுன்னுங்கடும்பவங்கழுவுந்தெண்ணீர்
பொங்குமேழ்நதியுமெய்தத்திருவுளம்புரிதலோடு
மங்கவையேழும்போந்துதொழுதருட்பூசையாற்று
மங்கைமற்றறியாவண்ணமறைந்தொருபுடைநின்றேறுதும். ௩௭௯

சிறியரேம்யாங்களெம்மான்றிருவுளஞ்செய்யப்பெற்றே
மறிவுறுத்தருளாய்செய்யும்பணியெனவருளினோக்கி
யிறையிலிக்கம்பையாற்றினுடன்கலந்தெங்கும்விம்மிப்
பிறைநுதல்பூசைமுற்றுப்பெற்றியின்வம்மினென்றார். ௩௮0

நன்றெனவணங்கியேழுநதிகளுமேல்பாலெய்தி
யொன்றலவேலையேழுமொருபுறக்கடலிற்கூடி
மன்றவிங்கெழுந்தாலென்னத்தன்னிடைமருவியீண்டப்
பொன்றிரைகொழிக்குங்கம்பையெழுந்ததுபுவனமஞ்ச ௩௮௧

ஏழுயர்நதியுமேலையேழெனுமுலகும்போர்ப்பக்
கீழுலகனைத்துங்கம்பைத்திருநதிகிழிப்பதொத்து
வாழியபாந்துபொங்கிவரும்பெருவெள்ளநீத்த
மூழியீற்றளக்கரென்னவொல்லொலித்தெழுந்ததம்மா. ௩௮௨

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வன்னப்பனிவரையரையன்பெறுதனிமகள்கண்டிகலியுண்மறநீடிக்
கொன்னப்படைவிழியெரிசிந்தினுமுயிர்குழையாதிரிதரநினைவுற்று
முன்னர்ப்பலநெறிகண்டாலெனமிசையண்டச்சுவரொடுமுந்நீர்சூழ்
கன்னிப்புவிமகளுடல்விண்டெழுவதுகம்பைக்கலிகெழுநதிமாதோ.

கயிலைத்திருமலையுடையாரவரிருகண்ணுயுறைதருநுந்தம்மை
யயரக்கரமலர்கொடுபொத்தியவுமையவளச்சுறவிவணுறுகின்றும்
வெயில்விட்டெழுமிருசுடர்காணீவிர்கடுமையாமேவுதிரெனவெளியி
யியலுற்றெனமிசையுழலுஞ்சுடர்களையெற்றிப்பெயர்வதுபுகழ்கம்பை.

கடையிற்பெருகியகடனீரிதுபுனல்கடைநாளிதுதினமெனவெண்ணி
யுடைவுற்றரியயன்முதலாமமரர்களுறைதத்தமதிடம்விட்டோடி
விடையிற்பொலிவுறுமிகிர்தக்கடவுளைவிண்ணிற்சிவபுரநண்ணிச்சென்
றடைவுற்றனர்நினையடிகேள்புரமெனவபரப்பெயர்வதுபுகழ்கம்பை.

தாளத்தொகுதிகளெனவுந்தகைநரரெனவுந்தார்மைசையுடன்வானில்
விரவிப்பயில்சுரர்குழுவைப்புவிமிசைமிடையத்திரைகொடுதள்ளிப்பி
னுரவுத்தாரகையெனவுந்தேவர்கமெனவும்பலமணியுடன்மல்கு
நரரைத்தாவில்விணிடுவிஞ்சைசியிறுடுநடையுற்றெழுவதுபுகழ்கம்பை.

விண்ணத்துயரியதருவும்பதுமம்வெள்வளையென்றுரைபெறுநிதிதாமு
மண்ணிற்குழுமியமராமுங்கமலமென்மலருங்கதிர்பணிலமுநேரே
நண்ணிக்கிழமையினண்மிக்குழுமுறநாடிச்சந்திசெய்தூதாகி
யெண்ணற்கரியபல்வளனங்கவைதரவேந்திப்பெயர்வதுபுகழ்கம்பை.

அம்மென்றளிரியலுண்மைபோலிறையவரடிவந்தனைசெயவுறுபொற்பின்
விம்முங்கதிரொளிமணியுந்தளிர்களும்விரைபொங்கியமலர்களுநாறுஞ்
செம்மென்பளிதமொள்ளகில்சந்தனநறைசெழுமைக்கனிநனிபலகொண்டு
கொம்மென்றெழுவதுகுரைமந்திரவொலிகுலவுத்திரைபடுமுயர்கம்பை.

துங்கத்திரைபடுநதிகட்கிறையெனமருவுங்கனைகடலுறுயர்கூர
மங்குங்கடவுளர்கடைமத்தெனவுறுமலைமேனிகழ்வயிரத்தாலச்
சிங்கத்திரள்பயில்சிலைதன்குலமெனவெதிர்நின்றுயரியசிலையெல்லாம்
பொங்கிச்சினமுடனகழ்வுற்றலைசெய்துபோதுந்திறலதுபுகழ்கம்பை.

ஆனைக்கொடிமிசையுடையார்திருவருள்கட்டவர்தணைவுறவிடையுந்தன்
மானப்பெருவிறல்வரவைப்பூசனைவழுவாவியதியினொடுபேணு
ஞானப்பனரையைமுனைறிவித்தவளருணலமும்பெறுமுறையுறுமாபோல்
மீனக்கடல்களுமவியப்பெருங்கொலிவிளைவித்தெழுவதுபுகழ்கம்பை.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புனலுடையண்டந்தம்முளிஃதுமோர்புனல்சேரண்ட
மெனவெழுகம்பைத்தெண்ணீரேகமாய்க்கோத்துச்செல்லத்
தனைமறந்தறிமால்கொண்டுதலைவனூர்பூசையாற்றும்
வனமயிலனையாளுக்கிமனம்விதிர்த்தச்சம்பூத்தாள். ௩௪௧

அருந்தவநெடுநாளாற்றியார்துயிர்புனிற்றுப்பிள்ளை
மருங்கொருபாந்தள்வெளவவந்தொன்றவ்வைமானக்
கருங்குழலுமையும்வேறுகாரணநினையாளாகி
யிருங்கரத்துணையால்வீழ்ந்துதழுவினளிறைவனுரை. ௩௪௨

இருவளைக்கரங்கணீட்டியிளமுலைப்பொருப்புத்தண்டார்
மருமமுற்றழுந்தப்புல்லுங்காட்சியுமலைபோற்பொங்கி
வருபுனலுக்கிநோக்கிமறுக்கமுய்ப்பிடத்தூன்று
மொருமுழந்தாளுமண்ணிலுற்றுறைத்தாணிலையுமானாள். ௩௪௩

நறுவிரைத்தெண்ணீராட்டிநலத்தகுகளபஞ்சேர்த்தித்
தெறுகதிரிழைகள்சாத்தித்திருக்கிளர்கோலஞ்சாலப்
பெறுதனிக்கொழுநர்மேனிப்பேரெழிலுக்கக்காதன்
முறுகிடத்தழீஇயதேய்ப்பமுகிழ்முலைதழுவலோடும். ௩௪௪

இருவரும்புணர்ச்சிவாய்ந்தசெயலுணர்ந்தெழுந்தவெள்ள
மருகுறநாணுக்கொண்டாங்காயிடையஞ்சிநிற்பக்
கருணையங்கடலிருங்கவினுருக்குழைந்துமாதர்
திருமுலைச்சுவட்டினோடுசெறிவளைத்தழும்புபூண்டார். ௩௪௫

வலியனவெவற்றினுள்ளும்வலியரென்பதற்குச்சான்று
விலகொளிமேருவாங்கிக்குழைத்தமைவிளக்கமற்றை
மெலியனவெவற்றினுள்ளுமெலியரென்பதற்குச்சான்று
குலவுமென்முலைக்குச்சாலக்குழைந்தமைவிளக்கிற்றம்மா. ௩௪௬

காமவேள்பகழியாயகமலமென்முகைகளென்றுந்
தாமமாலோடையானைத்தரளநீளுலவையென்றும்
பாமலிபுலவர்கூறும்பதப்பொருள்விளைப்பவ்வையர்
தூமணிமார்பந்தைத்ததுடியிடைமடவாள்கொம்மை. ௩௪௭

தொடிபொலிதடக்கைநீட்டித்துளங்கவெண்கயிலைக்குன்ற
மடல்வலியரக்கர்கோமான்பெயர்த்தநாளதனிற்சால
விடனுடைத்திருவேகம்பத்தெந்தையார்கம்பைக்கஞ்சிப்
பெடைமயிறழுவுஞான்றுபெரிதுளமகிழ்ச்சிபூத்தார். ௩௯௫

பயங்கிளருயிர்களெல்லாம்பரவசமகிழ்ச்சிகூர்த்த
வியங்களோரைந்தும்வானத்திடியெனமுழங்கியார்த்த
கயங்கிளர்சமயமுற்றுங்காலறமறைகளார்த்த
நயங்கிளரமரர்பெய்யுநறைமலர்விசும்புதூர்த்த. ௩௯௬

உள்ளகமகிழ்ச்சிபூப்பக்கணங்களுமுறுவர்தாமுந்
தெள்ளியதீந்தண்பாடற்றிவவியாழ்ப்புலவராதி
வள்ளயிற்படைவாள்விண்ணோர்வகுப்புமாங்கெய்தவேதன்
கள்ளவிழ்துளபத்தாமக்கடவுளோடடியிற்றாழ்ந்தான். ௪00

பொறித்தபூஞ்சிறகர்த்தும்பிபுரிமுறுக்குடைத்துத்தெள்யாழ்
குறித்திசைமிழற்றித்தாதுகொழுதிவாய்மடுத்துண்டாடும்
வெறித்தபூவனையிற்புத்தேள்வேதநான்மொழியாற்கூற்றை
யிறுத்துயிருண்டோன்றாளிணைமலர்வழுத்தினால். ௪0௧

வழுத்தலுங்கருணைகூர்ந்துவார்மதுப்பருகிவண்டு
கொழுத்தபூங்கடுக்கைமாலைக்குவவுத்தோளண்ணலார்தாஞ்
செழுத்தநல்வரங்கள்வேட்டசெப்புதிகருதுமென்ன
முழுத்தபேரன்பினன்னோன்முகமலர்ந்திதனைவிண்டான். ௪0௨

இத்திருநகரின்வாழ்வாரெவர்க்குமித்திருத்தநன்னீர்
பத்திமீக்கிளைப்பத்தன்னம்பருகினோர்தமக்குமாய்யைப்
பித்தனேன்பழிச்சுநின்சீர்ப்பெருந்துதிபேசினோர்க்கு
முத்தியீந்தருளாயென்னமுதல்வனாரதனைநல்கி. ௪0௩

நாமகடிருத்தப்பாங்கர்நாவின்வீற்றிருக்குமாதும்
பூமகடிருத்தப்பாங்கர்ப்பூவின்வீற்றிருக்கும்பொன்னு
நாமகிழ்பூப்பவெம்மைப்பூசனைநயந்தாரன்னோர்
தாமகிழ்பூப்பநீயுந்தண்டுழாய்மருமத்தானும். ௪0௪

இருமையினுலகமுற்றுமிசைபெறவரைமினென்னைப்
பொருவறுவரங்களீந்துபுலவமீராடவரைப்போக்கித்
திருவளரொருமாநீழற்சிலம்புயிர்மடந்தையோடுங்
கருணைபூத்துவகையுள்ளக்கலப்பினினிருக்குமேல்வை. ௪0௫

சிறுமதிபெருநிலாவைச்செய்தெனவொளிரச்சற்றே
முறுவலித்தருளவேய்த்தோண்முகிழ்முலைப்பிராட்டிநோக்கி
யுறுசெயலிதுமற்றண்ணல்விளைத்திடுமிடையூறென்று
மறுவறுகாட்சிசான்றமனமுறத்தெளிந்துகொண்டு. ௪0௬

கீர்த்திமாமதியைநோக்கவவ்வாமதிக்கீற்றுப்போலும்
வார்த்திருநுதலிற்காளியெனுமடவாலையீன்று
ஆர்த்தெழுங்காளிமுன்சென்றடிக்கலினுயிர்த்தாள்செம்பொற்
சீர்த்தமெல்லடியிற்றாழ்ந்துசெல்வினைமுழக்கிற்கூறும். ௪0௭

அலைகடன்மடுக்கோவெண்ணிலண்டமுநெரிக்கோபற்பன்
மலைகளுந்தெறிக்கோபாழிமண்ணெலாங்கரக்கோபூத
நிலையெலாமுறழச்செய்கோநித்திலநான்றுநீவு
முலைமுகிழ்பூத்தவன்னாய்மொழிந்தருளென்றனின்றாள். ௪௱௮

நின்றவள்குன்றமீன்றநிருமலியேவலோடு
மன்றுபேரச்சமெய்தவார்த்தெழுந்துலம்பிப்பொங்கி
யொன்றிமேலெதிர்ந்துவந்தவோரெழுநதியுங்கஞ்சம்
வென்றதன்கரகபாலத்தேற்றனள்வீறுகாட்டி. ௪௱௯

காட்டினுண்மதத்தவேழக்கணங்களுமிரியத்தாக்குங்
கோட்டிறலுழுவைவந்துகூட்டினுட்பட்டாலென்ன
வீட்டுபல்புவனமஞ்சவெழுந்தனவுந்தியெல்லாஞ்
சேட்டிருங்கபாலத்துள்ளாற்பட்டுளந்திகைத்துக்கூறும். ௪௱௰

அடியரேஞ்செய்தகுற்றமனைத்தையும்பொறுப்பாயோலங்
கடியவிழ்மயமீன்றகவுரியேயோலம்வேத
முடியினினிருத்தஞ்செய்யுமுருகவிழ்குழலாயோல
மிடிதுரந்துயிரைக்காக்கும்வித்தகியோலமோலம். ௪௱௧௧

எனப்பலமுறையுமோலிட்டிறைஞ்சலும்வருத்தக்கன்றின்
கனைப்பொலிகேட்டவாவிற்கவுரியுங்கருணைகூர்ந்து
மனப்படுந்துயரத்தாழ்ந்துமறுகன்மின்மறுகன்மின்னென்
றனைப்பெருநதிகளேழுக்காத்தவாய்மலர்ந்துகூறும். ௪௱௧௨

அளப்பருஞ்சீர்த்திசான்றவழகியகச்சிமூதூ
ருளப்படுமெண்ணிறீர்த்தமுளவெலாநிறைத்துப்பின்னர்
வளப்பெருங்கம்பையோடுமகரநீர்ப்பௌவத்தின்பக்
கிளைப்புறச்செல்கவென்றுதனித்தனிசெப்பிவிட்டாள். ௪௱௧௩

கத்திகைப்பிணையலோதிக்கௌரியுட்கருணைபூத்துத்
தத்தமக்கருளிச்செய்ததடம்புனற்றீர்த்தமெல்லாம்
பத்தியினிறைத்தேயன்னாள்பதமலர்சிரமேற்சூடி
முத்தலைநதிகளேழுமுடுகியகடலின்மாதோ. ௪௱௧௪

பொற்றமென்சுணங்குபூத்தபுணர்முலைநதிகடம்மை
மற்றொருபுலத்திற்போக்காள்வளைமணிக்கடலிற்கூட்டும்
பெற்றிமைகணவர்கூட்டங்கதுமெனப்பேணும்பே
றுற்றிடத்தனக்குச்செய்தவுதவிநேருதவிபோலும். ௪௱௧௫

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இன்னவகைத்திருவிளையாட்டாடியெங்கோனிணரூழ்த்துமதுத்திவ
லையிறைக்குங்கொக்கி, னன்னிழலினரியணைமேலிமயமீன்றநங்கையொ
டும்வீற்றிருந்துநாளுநாளும், பொன்னகரிற்கடவுளருங்குலிசச்செங்கைப்
புத்தேளுமலர்த்தேவுங்கருவிமேக, மன்னவனும்பழிச்சவருள்கொழித்
துவாழ்ந்தாரங்கிலையினெடுங்காலங்கழிந்தபின்னர். ௪௱௧௬

மேதகுதன்கிழத்தியராநதிகளெல்லாம்வெருவவொருகபாலத்தினே
ற்றுவாட்டுந், தீதுதனைநினைந்துபகைச்செற்றங்கொண்டுசெம்பொன்மலை

வல்லியுடன்செருவாற்றற்கு, மேதமறவவள்படைத்தவுலகமெல்லாமி
மைப்பளவினழிப்பதற்குமெண்ணியாங்குப், போதமருமயனரியையுள்
ளிட்டோரும்பொன்றவருகடைவெள்ளம்பொங்கிற்றம்மா. சகஎ

பொங்கியெழுங்கடற்பெருக்கநோக்கிவிண்ணிற்புத்தேளிர்முதலெ
வரும்பொருக்கென்றோடிச், சங்கரசங்கரபோற்றிபோற்றியெம்மைத்தா
மூதுகடைவெள்ளக்கடலினீக்கி, யிங்கணருள்புரிகவெனவிறைஞ்சியேத்
தவெம்பெருமானஞ்சாதிரென்றுகூறி,யங்கணெதிர்நின்றருளுங்காளிதன்
மேலருட்கண்டைக்கணேக்களிப்பவவளுந்தாழ்ந்து. சகஅ

விடைகொண்டுவல்விரைந்துபோதலோடும்வேறொருவரில்லையெ
னாக்களவுசெய்யுங், கடைகொண்டமனத்தினராங்கொருவர் தம்மைக்கண்
டபொழுதெனவெருவிக்கலங்கியஞ்சி, மடல்கொண்டபூங்குழலாண்ம
லர்த்தாள்போற்றிமழவிடையாரருள்ராறேவையம்பொன்றத்,தடையின்றி
யெழுகின்றேனென்னையன்னைசாடுதற்குமுயல்கின்றாய்சாற்றுகென்ன.

சொற்றமொழிவாயாகுந்தாளஞ்சிந்துஞ்சும்மைநெடுந்திரைக்கடலே
சொல்லக்கேண்மோ, பெற்றமுயர்த்தவனருளாலன்றியானும் பெயர்ந்
தீண்டுப்போந்திலன்காண்பெரியகோலப், பொற்றமணியெழுப்புயத்துக்
கடுக்கைப்புத்தேள்பொலங்கொடியன்னவளோடும்பொருந்திவாழு,மற்ற
மறுமுவளகமாங்காஞ்சிமூதூரணுகலைமற்றெவ்விடத்துமணுகலென்றாள்.

அதுபுரிவேனதுபுரிவேனம்மவென்றங்கருடலைமேற்கொண்டுபதமி
றைஞ்சிப்போற்றி,யுதிர்மலர்ப்பூம்பொழிற்காஞ்சிக்கப்பாலைந்தியோசனை
யெல்லையினகன்றதுததிவெள்ளம், விதுநுதற்காளியுமகன்றுதிருவேகம்
பமேவியடிபணிந்திறைஞ்சவிமலனுரு, மதிமுகமிக்கலர்ந்துபிரளயசித்
தென்னவழங்குபெயரவட்கன்னாளருளிச்செய்தார். சஉக

அப்பொழுதுபுத்தேளிர்முனிவர்யாருங்கடைநாளினிடும்பைவினை
யறியாராகி, யொப்பரியகாஞ்சிவயிற்றிருவேகம்பமுடையபிரானருட்க
டலின்முழுகிவாழ்ந்தா,ரிப்பரிசினிறைவரருட் பெருமைநோக்கியேழுநா
ளோவாதங்களகைவேந்தன், செப்பரும்பொன்மழையுகவமணியுமேழு
செல்லினமும்புறங்கொடுப்பச்சிதறியுய்ந்தான். சஉஉ

அளவுபடாச்சிவபெருமானருளினுற்றாலளவுபடாப்பெருங்கருணைப்
பிராட்டியாற்று,மளவுபடாச்செயலனைத்துந்தெளிவொன்றில்லேனறிவள
வினொருவாறிங்கறைந்தேனிப்பா,லளவுபடாக்கட்வுளர்கண்முனிவர்போ
ற்றுமளவுபடாச்சிவாலயங்களிடந்தோறுள்ள, வளவுபடாப்பெருவளஞ்
சூழ்புரிசைக்காஞ்சியகநகரந்தருவேதிமேன்மைசொல்வேன். சஉங

மூவாய்ப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - எ0எ.

அந்தருவேதிப்படலம்.

7 கலிநிலைத்துறை.

மேகமுட்டிவிழுப்புனல்சிந்தும்விரைப்பொழி
ஞாகமுட்டியுடன்றமராற்றநகிற்றனை
யாகமுட்டரமாதர்கணைக்கினராட்டயர்
மாகமுட்டிவளர்ந்துயர்நந்திவரைக்கணே. க

மாதவத்தினுயர்ந்தவசிட்டன்மகத்தினுக்
கேதமில்சுவைத்தீம்பயமீந்திடுதேனுவங்
கோதநஞ்சமிடற்றவனூர்விடையேற்றினைக்
காதலாலொருநாள்விழைந்துறக்கண்டதால். உ

கண்டுமீமிசைமிக்குலவாதெழுகாமநோய்
கொண்டுநொந்துவிம்மாந்தமெலிந்துகுழைந்துபான்
மண்டியூறுபெருத்தலும்வற்றியுலர்ந்ததா
லண்டர்யாருமுறுப்பிலடங்கியதேனுவே. ௩

அன்னதன்மைவசிட்டனறிந்துதருப்பையை
மன்னுமாமனுவாலொருகன்றின்வரச்செய்து
முன்னருய்த்தலுமோந்துடனக்கிமுகிழ்த்தெழு
நன்னரன்பினையந்ததுகாமநலிந்ததே. ௪

மழையெலாங்குழுமிச்சொரிமாண்பெனவோகையாற்
கழியநீண்முலைதாரைகள்கான்றனகான்றபான்
முழுதுமோர்நதியாயவணின்றுமுந்நீர்ப்புகுந்
தழிவிலும்பருமாட்டயர்தீர்த்தமதாயதே. ௫

பரவைநீளுலகேத்தியவத்தகுபாலியின்
கரையின்மல்கியகண்ணுதல்கச்சமில்வைப்பினு
ளிருளையீர்க்கும்வராகவிரும்புரமுண்டதி
லரவின்மேற்றுயின்மாலுமலர்த்தலையண்ணலும். ௬

தருக்கியானிறையானிறையென்றனர்தம்முளே
யுரைத்துடன்றமராற்றழியங்கணுளச்செருக்
கிரித்தடக்கியவெம்பெருமானெரிவண்ணமாய்ப்
பொருக்கெனப்புவனங்களடங்கநிமிர்ந்தனன். ௭

அண்ணல்வார்கழல்காணுவலென்றரிவன்றியாய்
மண்ணகழ்ந்துபுகுந்தனன்வான்முடிநோக்குவா
னெண்ணியோதிமமாகியெழுந்தனனான்முகன்
கண்ணுமுள்ளமுமாழ்கினர்காணலர்மீண்டனர். ௮

அடுத்தவவ்வுருவோடொருதீர்த்தமகழ்ந்துமண்
ணெடுத்துநாட்டிமிருந்திறன்மால்வராகேசனைத்
தொடுத்தவன்புதுளும்புறுபூசைதொடங்கினன்
புடைத்தெழுஞ்சிறையோதிமமானபுத்தேளுமே. ௯

அன்னத்தீர்த்தமகழ்ந்தழகார்பிரமீசனை
நன்னர்ப்பூசையியற்றிநயந்தனனுதனு
முன்னர்த்தோன்றிமுகுந்தனும்வேதனுமின்புற
வின்னற்றீவினையீர்ந்தருளீத்துமறைந்தனன். ௧௦

அனையசூழலினன்னவர்பூசனையாற்றிய
கனையுநீள்கடனஞ்சுநுகர்ந்தகளத்தனை
நினையவல்லவரேத்துநர்தாழ்பவர்நித்தலு
மினையும்வல்வினையின்றியிருங்கதியெய்துவார். ௧௧

கொச்சகக்கலிப்பா.

செழுங்கிரணவமுதுறைக்குந்திங்கள்பலவண்டமெலாம்
விழுங்கியபேரொளிப்பிழம்பாம்வித்தகனைவழிபட்டுக்
கொழுங்கடுக்கைச்சடைக்கணியாங்கோதறுசோமீச்சரமென்
றெழுங்கியவக்கரைத்தலையினொருதலம்வீற்றிருக்குமால். ௧௨

சலந்தரனுருயிர்பருகுஞ்சக்கரம்வேட்டியர்திருமா
னலந்தவழ்பூசனைக்கெடுத்தநாண்மலரொன்றெஞ்சுதலா
லலர்ந்தவிழியிடந்தருச்சித்தஞ்சலித்துநேர்நிற்கும்
பொலஞ்சடைவித்தகன்றிருமாற்பேறொன்றுபொலிவெய்தும். ௧௩

திருமலியுமரசர்குலஞ்செகுத்திறுக்கும்பொருட்டறங்கூர்ந்
தொருபரசிராமனெயிலுருத்தவனைவழிபட்டுப்
பெருகுமொளித்தழற்பரசுபெறுஞ்சீர்மைத்தாயுளது
விருதுபுகல்பரசிராமேச்சரமென்றொருதானம். ௧௪

இன்னுமரன்மகிழ்ந்தருளுமெண்ணரியசிவாலயங்க
டன்னுடையநெடுங்கரையிற்றழீஇக்காஞ்சித்திருநகர்க்கு
மன்னுமெழில்விளைத்தொழுகுமணிப்புனற்பூந்தடம்பாலி
நன்னதியின்மேன்மையெலாநவிற்றுவாரெவரம்மா. ௧௫

பொருதாரகாசுரனைப்பொன்றமலர்ப்பொருட்டணையி
னொருதேவும்பாப்பணையினுத்தமனும்வானவருங்
கருதார்முப்புரங்கடந்தகண்ணுதல்சீரருள்வாய்ந்து
பெருகார்வத்தொடுங்குழுமிப்பேணுசிவாகமமுறையின். ௧௬

காசறுசீர்வளக்காஞ்சிக்கடிநகருக்காயிரமாம்
யோசனையிற்சுமேருவெனுமோங்கலிடையுமையீன்ற
மாசின்மணிவேற்கரத்துவள்ளலைச்சேனைபதியா
வாசறுநீராட்டினராத்தீர்த்தஞ்சேயாறாய். ௧௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பூதலமருங்குபோந்துபொலஞ்சடைமுக்கண்மூர்த்தி
சீதவானிழலின்வைகித்தேவரைமுனிவர்தம்மை
யோதுவித்தருளுமோத்தூருறைச்சென்றுகடம்பர்கோயிற்
காதரத்தோடும்புக்குவடமுகமாகிப்பின்னர். ௧௮

பிரளயமுடிவின்மீளப்பிரமனெவ்வுலகுந்தோற்றத்
துரிசறுவேதங்காணென்றுருவிப்போயுரகம்பூண்ட
பரசிவன்பூசையாற்றிப்பழமறையருளப்பெற்று
வரமலிகின்றவேதநூபுரவைப்பினெய்தி. ௧௯

இளந்தவப்பதியினின்றுங்கிழக்கினைநோக்கிச்சென்று
வளம்பயில்புனிதவேகவதிமணிக்கம்பைகூடி
விளங்கியகூட்டத்தெய்திவிராவியததுமுக்கூடல்
களங்கறுத்தாடினோர்க்குக்கண்ணியவரங்கணல்கும். ௨௰

மருமலர்க்குவையல்கொட்டும்வளந்திரைப்பாலியென்று
வுருகெழுமணிகளுந்தியொழுகுஞ்சேயாறென்று
விருவகைநதியுங்காஞ்சியெழினகர்வடபாற்றென்பால்
மருவிடுமெல்லையாகித்தீர்த்தமாய்வயங்குமன்றே. ௨௧

அச்செழுநதிகளைப்பணிந்தருவேதியாகி
யெச்சமில்யமுனைகங்கையிடைப்படுமந்தர்வேதிக்
குச்சமாய்முதுவதாயெவ்வூழியுமழிவின்றோங்குங்
கச்சிமாநகரமங்கணிகழ்சிலகாதைசொல்வாம். ௨௨

எரிமணிமோலித்தேவரியக்கர்நாகரேனைக்
கருடர்காந்தருவர்தங்கள்கன்னியரானோரெல்லாந்
திருவளர்தத்தம்வைப்பிற்றீர்த்தநீர்மூழ்கிநாளு
மருமலர்ப்பொழில்சூழ்கச்சிமாநகர்வரைப்பினெய்தி. ௨௩

பெருகொளிப்பரமானந்தப்பிலத்தினிதிருக்குந்தெய்வ
வரையணங்குமையாள்பாதம்வலம்புரிந்திறைஞ்சிவாழ்த்தித்
திருவருள்கிடைத்துச்செல்வார்செல்லுநாளொருநாட்சாலப்
பரிவொடுவணங்கிப்போற்றிப்பன்முறைபழிச்சிநின்றார். ௨௪

அளியினமுரன்றுமூசுமம்மலரலங்கற்கூந்தற்
களிமயிலனையகாமக்கண்ணிமற்றவரைநோக்கி
யொளிநகைமடவீரென்னேநுங்கருத்துரையினென்னத்
தளிர்புரைசெங்கைகூப்பித்தாழ்ந்துவிண்ணப்பஞ்செய்வார். ௨௫

அதிரிடைக்குவவுக்கொங்கையன்னையிவ்வுலகத்துள்ள
நதிநதமுதலாந்தீர்த்தமுழுவதுநாளுநாளும்
விதியுளிப்படிந்துபோற்றும்விழைவினெம்விழைவுமுற்று
முதிரருட்கடைக்கணல்கென்றிரத்தலுமுழுதுமீன்றாள். ௨௬

கருணைகூர்ந்தருளியோர்பாற்கைகுவித்திறைஞ்சிநின்ற
வருணன்மேற்கடைக்கண்சாத்தமற்றவனாங்கெய்தித்
திருநுதலிறைவியாணைசெப்பலுங்கங்கையாதிப்
பொருபுனற்றீர்த்தமெல்லாம்பொருக்கெனத்திரண்டுவந்து. ௨௭

வருவினைப்பிறவிமாற்றும்பம்பைதன்வடமேல்பாங்க
ரொருதடங்கடவுட்பொய்கையுருவமாய்த்திகழ்தலோடுங்
கருமுகிற்கூந்தன்மென்றோட்கன்னியர்தொழுதுபோற்றி
யருளினாலந்நீர்மூழ்கியளப்பருங்களிப்புமிக்கார். ௨௮

அங்கதிற்படிந்தேகம்பத்தடிகளைத்தொழுவோர்யார்க்கும்
வெங்கொலைத்தீமையாதிவீட்டினாற்பயனுமெய்துந்
துங்கநல்வரமுமீந்தாள்சுரிகுழற்பிராட்டியந்தப்
பொங்குநீர்சருவதீர்த்தப்பெயரினாற்பொலிவுற்றோங்கும். ௨௯

முன்னொருநாளிற்செவ்வேண்முருகனும்விண்ணுளோரு
மன்னனுமூண்டபோரில்வலாரிதன்மீதிலோச்சு
மின்னவிர்குலிசத்தண்டின்விறலழித்துமையாளீன்ற
பின்னவன்புடைத்தான்றன்கைப்பிடித்தவெங்குலிசத்தண்டால்.

வானவர்க்கரசனேமறுகிமாழாந்துமூர்ச்சித்
தீனமுற்றிரங்கும்வெள்ளையிபமொருசிறுவன்கையால்
யானுமென்னிறையும்பட்டேமின்னவனூர்தியாகி
லூனமொன்றுறாதென்றெண்ணியொப்பருங்காஞ்சியெய்தி. ௩௧

வம்பலர்ந்துலவும்வேகவதிப்புனற்றிருத்தமாடி
யம்பிகைபாகற்போற்றியருள்பெறுநீலமேனி
யும்பனைமலையிற்போற்றியவ்வரமுற்றதற்றா
னம்புமக்கிரியையத்திகிரியெனநவிலுவாரால். ௩௨

தானவர்கோடியோரைத்தடிக்குடர்சரியக்கொன்று
மானவெங்குருதிச்சூலவார்நுதியேற்றும்பாவ
வினைமுற்றிரிக்குமாறுசண்டிகையெண்ணிவல்லே
கானமர்கோடிதீர்த்தங்கண்டனள்காண்டலோடும். ௩௩

தொட்டருள்குளிர்பூந்தீர்த்தச்சுடர்மணிக்கரையின்பாங்க
ரெட்டுருவுடையமூர்த்தியிலிங்கமாய்ச்சுயம்புவாக
வுட்டவழ்கருணையோடுமுளைத்தனனதனால்யாரும்
பெட்டல்செய்தான்றோன்றீசமெனப்பெரும்பெயர்பெற்றோங்கும்.

இருவினைசவட்டியாளுமெம்பிரான்பயந்தசெம்மல்
பொருதிறற்சூரனாண்மைபொன்றியமுருகப்புத்தே
ளருள்விழிப்பார்வைதன்னாலணிகொண்மேற்றளியிற்செந்தேன்
முருகவிழ்துளபத்தண்டார்முகுந்தனோரிலிங்கமானான். ௩௫

வருங்கடைநாளின்மாலுமறைமலர்ப்பொகுட்டோனு
மொருங்குவீட்டின்பந்துய்ப்பானுன்னினர்சங்கதீர்த்தஞ்
சுருங்குறுதழுந்துபட்ட குண்டிகைதீர்த்தந்தொட்டுப்
பருங்கனிதூங்கும்வில்வம்பலாசிவற்றடியினெய்தி. ௩௬

வடம்புரள்குவவுக்கொங்கைமால்வரையீன்றநங்கை
கடம்பணிகாளையோடுமிறைவனைக்கருத்திற்பேணிப்
படம்படுமாரம்பூண்டபண்ணவவெம்மையின்னே
யுடம்படினதுகாயத்துறுத்துகென்றிறைஞ்சினோற்றார். ௩௭

அடிகளுமவருக்கவ்வாறருளினனதனாலந்தக்
கடிபடுநகர்காயாரோகணமெனப்பெயர்பூண்டன்று
மிடிகெடவங்கணேற்றோர்கயிலையைமெய்யோடெய்திக்
குடிகொளுமாற்றினானுமப்பெயர்கொண்டதாமால். ௩௮

குலவுசீர்மயானவைப்பிற்கொடுஞ்சுடர்க்கனலினாவி
லலகில்பல்லுலகுமெஞ்சாதாகுதியாக்கிப்போக்கி
யிலகுமாவிரதமென்னுஞ்சாத்திரமினிதுதோற்றி
நிலவியயோகபீடத்திருந்தனனிமலமூர்த்தி. ௩௯

திரையெறிகம்பையாற்றின்றென்புலத்தும்பர்மேவும்
விரைகமழ்கடப்பஞ்சூழல்வேலவன்வைப்பினந்தக்
குரைகழற்குமரவேட்குக்கோதிலாஞானந்தன்னை
வரைகுழைத்தருளுமெங்கள்வள்ளன்மிக்கருளிச்செய்தான். ௪௦

மையவிர்ந்தனையதன்கேழ்மாசுடல்கழிப்பான்முக்க
ணையனைவரங்கணல்குமமலனைக்கமலப்போதாற்
கையினாற்காலிற்றூவிக்கசிந்துளமுருகியேத்திச்
செய்யவண்பவளவண்ணம்பெற்றனன்றிருமாலென்பான். ௪௧

கடல்கடைந்தெழுந்தநஞ்சாற்கார்லெனப்பெயர்ந்துமீண்டெம்
மடிகளோசரணமென்றுவடைக்கலம்புக்கவொண்கேழ்
நெடுமுடியமரர்க்கெல்லாநின்மலன்விடவேகத்தின்
கொடுமையைமுழுதுங்காற்றிக்குளிர்வித்துமாலுமாலே. ௪௨

சுந்தரமுடியிற்றிங்கட்டுணிபடுமமிழ்தந்தன்னால்
வெந்ததோரிருந்தைபோலுமெய்யெலாங்குளிர்வித்தங்கு
முந்துறத்தொழுதுநிற்பப்பணித்தனனந்தமொய்ம்பாற்
சந்திரகண்டமாயதப்பெருந்தானமாதோ. ௪௩

கச்சணிமுலையாள்பங்கன்கழலிணைபூசையாற்றிக்
கச்சபவடிவுநீங்கிக்கார்முகில்வண்ணன்மேனாட்
கச்சமிலின்பந்துய்த்துக்களித்தனனாதலாலே
கச்சபாலயமென்றோர்பேர்பெற்றதக்கடவுட்டானம். ௪௪

அத்திருவரைப்பிற்றீர்த்தமருடருங்கச்சபேச
வுத்தமன்பூசையாற்றுமோதிமக்கடவுளாடிச்
சித்திகள்பெறலாவிட்டசித்தியென்றாயதின்று
முத்தியோடிட்டசித்திமுகிழ்த்திடுமாடுவோர்க்கே. ௪௫

தாழ்ந்தவரெழுமுன்றாழ்ந்தோர்தங்களாலீட்டும்பாவம்
வீழ்ந்துபோயணங்கச்செய்யும்வித்தகன்கச்சபேசத்
தாழ்ந்ததன்குற்றந்தீர்ப்பானருட்குறிவேறுண்டாக்கி
வாழ்ந்தமாந்தாதாவென்பான்வழிபட்டான்வகுத்துச்சொல்வாம்.

இரவிதன்வழியின்வந்தானிகல்கடிந்திலகும்வேலான்
பரவியபுகழான்வையம்பாரித்தபுயத்தின்வைத்தான்
கரவினைக்கரக்குநீரான்காமர்மாந்தாதாவென்னு
மரையனோர்தினத்திராவினமளியிற்கனவினானே. ௪௭

விடிந்தபினறுநீராடிவிதியுளிகருமமுற்றி
மடந்தபுகுரவனானவசிட்டனைக்கூவியையவர்க்
கடந்தமாதவனேயான்மன்சனவியகனவைக்கேளென்
றடர்ந்தெழுமார்வம்பொங்கவன்னவற்குரைக்கலுற்றான். ௪௮

கலிவிருத்தம்.

வையகமும்மையுமேவந்துதாழ்தொறு
மையமோலியின்மணியழுத்தித்தேய்த்தலா
லொய்யெனத்தழுவியதழும்பினோடுஞ்
செய்யதாமரையெனச்சிவந்ததாளினான். ௪௯

அரியினமெதிரினுமதிர்ப்பத்தாக்குறுஞ்
சொரிமதக்களிறுதேர்துரகந்தானையோ
டரியல்கண்டரையரையிரங்கத்தாண்மிசை
வரிகயிற்கழலொடுவயங்குஞ்செவ்வியான். ௫0

மெல்லிழைப்பட்டுடைவிரித்துடுத்துமேல்
வல்லுறவீக்கியமணிக்கச்சூடுகோத்
தெல்லுமிழ்சுரிகையானேந்தகட்டினிற்
கல்லணியுதரபந்தனங்கொள்காட்சியான். ௫௧

சந்தனங்கலவைகடதைந்துதண்பனிக்
கந்தநீரொழுக்கிமேற்கமழுந்தாதுறீஇச்
சுந்தரமணிவடந்துலங்கிவெற்பென
மைந்தமைந்தகன்றுபோர்மலைந்தமார்பினான். ௫௨

பொன்னையுந்துகிலையும்பொருவில்பண்டமோ
டென்னவுமிரப்பவர்க்கீந்துசேப்புறீஇத்
தன்னுடைத்தாளினிற்றாழ்வதல்லதோர்
மன்னடிதாழ்கலாமலர்ந்தகையினான். ௫௩

அளவறுவீரர்களெறிந்தவாய்தமு
மிளமயிலனையவரெண்ணிலாரெலா
முளமகிழ்வுடனெறியொண்கணாய்தமுந்
துளைபடவுருவியதொங்கற்றோளினான். ௫௪

அடைந்தவர்க்கமிழ்துமாருயிருமாயடி
யிடைந்தவர்க்காலமுமெரியுமாகிய
சுடர்ந்தசெந்தாமரைதுணையுங்கண்ணினான்
மடந்தையருயிருணும்வதனத்திங்களான். ௫௫

ஒளிர்கதிர்பிலிற்றுமொன்பதிற்றுக்கோள்களுந்
தளையுறுத்தியதெனத்தயங்குபன்மணி
யளவறுவிலையினவமைத்திழைத்ததோர்
வளமலியொருமுடிவயங்குசென்னியான். ௫௬

அற்புதவுருவினானலகில்சீர்த்தியான்
றற்பணியுலகெலாந்தவிர்ந்ததேசினான்
பற்பலதீமையும்பரிந்தபண்பினான்
பொற்பமர்திருவெலாம்பொலிந்தசீரினான். ௫௭

இன்னவன்வரவிறும்பூதுபூத்துளே
னன்னவன்யாவனீயறைதியென்றலுங்
கன்னலையமிழ்தொடுகலந்திட்டாலென
மன்னவன்மகிழ்வுறவசிட்டன்கூறுவான். ௫௮

கொச்சகக்கலிப்பா.

உரவுமணிக்கடலாடையாருமகளைப்புணர்ந்தோய்கேள்
பரவுபுகழ்நினைத்தரும்பூபதியுவனாசுவனென்பான்
விரவுமொருகுடைநிழற்கீழ்மேதினியெலாங்குளிர
விரவகற்றிக்குடியோம்பியினிதிருக்குமந்நாளின். ௫௯

நெடுநாட்புத்திரனுயிராகிரப்பினல்வான்கதியில்
விடுமேன்மைப்புத்திரகாமேட்டியெனுந்தனியாகம்
வடுவீழ்த்தமுனிவரரைவளர்த்தருளவேயினு
னடுவேகப்புலனவித்தவந்தணருமதுபுரிந்து. ௬௦

நுந்தைமனையாட்குதவநோன்மைசான்மறைமனுவான்
மந்திரித்தநறும்புனலைமணித்தகும்பினமைத்திருத்திச்
சந்திசெய்வானவர்நீங்குஞ்செவ்வியினிற்றனிவேந்தன்
முந்துறப்போய்த்தன்னியல்பின்முதுமரக்காட்டகம்புகுந்து. ௬௧

கரியுழுவைமரையுளியங்கவையமுயல்கவரியுழை
யரிபரிசல்லியம்வருடையவைமுதலபலபலவுஞ்
சரிகுடரினுடல்பதறித்தலைத்தலைவீழ்ந்துயிர்விளியப்
புரிதருவேட்டையினிளைத்துப்போந்தனனவ்வாச்சிரமம். ௬௨

கடுவனையநீர்வேட்கைகவற்றவறல்கிடையாமைப்
புடைவருவான்றனைநோக்கிப்பூரித்துமந்திரித்த
குடமெனவெய்யாததனைக்கொணர்மதியென்றவன்கொணர
விடவிழியங்காடுவதுமெண்ணுமற்கைக்கொண்டான். ௬௩

அதுதெரிந்துமந்திரித்தவறல்பருகல்பருகலெனக்
கதுமெனயான்புகுமுன்னங்கருமவசத்தான்மடுத்தான்
மதுமலர்த்தார்மனுவேந்தேமங்கைநலாடனக்கமைத்த
திதுமடுத்தாய்நின்வயிற்றிற்கருப்பமியைந்ததுவெனலும். ௬௪

படிதுளக்காதெழுப்புயத்திற்பரித்தயுவனாசுவனு
முடிதுளக்கியான்முடிகமுறையுளிசெங்கோலோச்சி
மிடிதுளக்குங்கான்முளையேவேண்டுமெனக்களிகூர்ந்து
கடிதுளிக்குந்தேங்கிளவிகட்டுரைக்குமமையத்தில். ௬௫

பருகாதபுனலகும்பிமுடைநாற்றம்பயின்றிருக்கு
மருவாருங்குழலியர்தம்யோனிவழிவாராது
திருவாழுமணிமருமச்செல்வன்மலருந்தியினு
லுருவாகிவந்தனமென்றுள்ளுமயன்றருக்கவிய. ௬௬

வெண்புனலுஞ்செம்புனலும்விரவாமலொருதூணின்
மண்புகழவந்தனமென்றிறுமாக்குமாயவனும்
விண்புகழுநினைப்போலவிளங்குமுயர்திணையிடத்தி
னண்புறுமத்திணைமுழுதாய்நண்ணிலமென்றழுக்கறுப்ப. ௬௭

தரையளித்துப்புகழ்பெருக்கித்தரியலரைத்தெறுநுந்தை
யரையர்குலந்தனைத்தோளினளித்தருளுமுதற்கடவுள்
புரையமணிமார்பகழ்ந்துபூத்தனைநீமன்னவனுந்
திரையுமணிக்கடலுலகினுயிர்வாழுஞ்செயலொழிந்தான். ௬௮

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குலத்தினலன்றிநின்னைக்கொடுத்துயிர்விளிதலானு
நலத்தினுயர்ந்தநுந்தைநகைவலம்புரியையொத்தா
னிலத்திடையரசர்சென்னிநித்தலுமிதித்துநீயும்
வலத்தினினுயர்தலானும்வலம்புரிமணியையொத்தாய். ௬௯

அற்றைநாளண்டம்விள்ளவழுதனையதுகேட்டங்க
ணுற்றயன்பதினுருட்டைப்பருவநிற்குதவிப்போகக்
கொற்றமார்குலிசத்தோன்றல்குறுகிநிற்காப்பார்யாரே
தெற்றெனமொழிமோவென்றுசெப்பலுந்தாதாவென்றாய். ௭௦

ஆதலின்மாந்தாதாவென்றறைதரப்பட்டுஞாலந்
தீதறுசெங்கோலோச்சிச்செல்வனாய்வாழுநின்னைத்
தாதையுந்தாயுந்தானேயாகிநிற்றந்தவேந்தன்
காதலிற்காணப்போந்தான்காண்டியென்றியம்பிப்பின்னும். ௭௧

ஐயனேநுந்தைமார்பமகழ்ந்துநீபிறந்தநீரா
னெய்தியவெய்யபாவமிரித்திடுங்கழுவாய்வாய்ப்பப்
பொய்யறுமேன்மைசான்றபுண்ணியவரைப்பிற்போந்து
செய்யபொற்சடையான்பூசைசெய்திடவேண்டுமென்றான். ௭௨

என்னுடைக்குரவனன்றேயியம்பினையெறிநீர்க்கங்கைப்
பொன்னவிர்சடையான்பூசைபோற்றுதற்குரியர்யாவ
ரன்னவன்பூசையெந்தவாற்றினாற்புரிவதென்று
மன்னவன்கடாவவாசான்மயரறவிறுக்குமன்றே. ௭௩

பரவுமான்மார்த்தமோடுபரார்த்தமென்றிரண்டாம்பூசை
மருவியெல்லாருஞ்செய்தற்குரியதான்மார்த்தபூசை
யிருமையுமுரியவாகுமெழிற்சிவதீக்கைசேர்விப்
பிரார்த்தமக்காகமங்கள்பேணுறும்வழியாலென்றான். ௭௪

இன்னணம்விதந்துகூறுங்குரவனையிறைஞ்சியேத்தி
யன்னணம்பூசையாற்றுமார்வஞ்சென்றீர்ப்பவேகி
மின்னணங்கெழில்சேர்மாடவியன்றிருக்காஞ்சிமூதூர்ப்
பொன்னணங்கிவருந்தோளான்புகுந்தனன்மகிழ்ச்சிபூப்ப. ௭௫

அந்தணர்பயின்றுவாழவம்பொன்மாளிகைகளாக்கிக்
கந்தமார்தடங்கடொட்டுக்கடிமலர்ப்பொதும்பர்வைத்துப்
பந்தநோயறுக்குமுக்கட்பரன்பணிபலவுமாற்றுஞ்
சிந்தையினுவகைபொங்கத்திருத்தகமுடித்தபின்னர். ௭௬

இட்டசித்தியினீராடியெம்பிரான்கச்சபேசத்
தெட்டுருவுடையபெம்மானிலிங்கமொன்றிருவியங்க
ணுட்டவழார்வம்பொங்கவுறுமுறைவழாதுபூசை
பெட்டனனியற்றிக்கண்ணீர்பெருக்கினன்பழிச்சினின்றான். ௭௭

ஆயிடைவானிலண்ணலருளினோர்வாக்குநுந்தை
தூயவான்றுறக்கம்புக்கான்றுகளறுபயனீபெற்றாய்
காயும்வேலரசவென்றுகாதுறவெழுதலோடு
நாயகன்கருணைபோற்றிநயத்தகுவாழ்க்கைபெற்றான். ௭௮

இவ்வகையினுமாங்கணெண்ணிலவரங்கள்பெற்றோ
ரவ்வெலாமுற்றக்கூறலெம்மனோரளவைத்தேயோ
வெவ்வநோய்ப்பிறவிநூறுமித்தகுமந்தர்வேதித்
தெய்வதவரைப்பின்வைகப்பெறுநரேசிவத்தைச்சேர்வார். ௭௯

ஒளிவளரந்தர்வேதிச்சிறப்பெடுத்துரைத்தல்செய்தாங்
களியுறுதண்டவேந்தாற்கானமாய்க்காஞ்சிதன்னைத்
தெளிமதியணிந்தவேணிச்சிவனருள்வாய்ந்தசீர்த்தி
வளர்கலிகாலன்முன்போல்வளநகராக்கல்சொல்வாம். ௨௰

அந்தருவேதிப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௭௮௭.

நகரேற்றுப்படலம்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆறுசூடியவேணிநாதரமர்ந்தகச்சிநகர்த்தலை
வீறுதோற்றவதிந்துகாவல்விளைத்தவேந்தர்களெண்ணிலார்
கூறுமன்னவர்தம்முளோர்குலமன்னவன்குறுகார்தமை
யீறுசெய்திடுதண்டமன்னனென்பவனேகவானைசெலுத்துநாள். ௧

ஒருதினந்தனில்வேட்டையாடியவுன்னிபில்வயின்முற்றுறுங்
கருமநன்குமுடித்தபின்புகமழ்ந்தவுண்டிநுகர்ந்துபூ
மருநிலாவியகுஞ்சியம்பொன்மணிக்கயிற்றினிறுக்கியாத்
தரையின்வார்சுடர்க்கச்சுவீக்கியடிக்கிருங்கழல்சேர்த்தனன். ௨

வில்லுமம்புமிலங்குவேலுமிளிர்ந்தவாள்களுமாழியு
மொல்லையோடியொறுக்குநாயும்வலைக்குலங்களுமூர்தியும்
பல்லியங்களுமெல்லையில்லனபௌவமென்னவளைந்துற
வல்லியம்புரைமன்னராதியர்வந்துவாய்தனெரிந்தனர். ௩

வேதவேதியரங்கையாம்விரைசூழ்ந்தகஞ்சம்விரிந்திடச்
சோதிநீண்முடியேந்துவேந்தர்துணைக்கைமாமலர்கூம்பிட
மாதரானனவம்புயங்கண்மலர்ந்துநாணிவணங்கிடப்
போதுவெங்கணையாளிநெஞ்சுபுழுங்குபொற்பினனேகுவான. ௪

ஒருதிசைக்கடலொருதிசைக்கடலோடுசேர்குவதொப்புறக்
கரிசறுத்திடுகாஞ்சிமாநகர்கடிதுநீங்கியோர்கானினை
யரசர்சூழ்தருதண்டனேகியதன்புறத்தினிலெங்கணும்
புரசைமாலகரிதேர்கண்மற்றுமிரீஇப்புகுந்தனனுள்ளரோ. ௫

செற்றிமான்குலம்வைகுமெல்லைதெரிந்துவம்மினெனச்சொலி
யொற்றர்தம்மைவிடுப்பவன்னவரோடியெங்கணுநோக்கிவந்
தற்றமின்றியுறந்தசூழலுரைப்பவவ்வுழியேகினன்
வெற்றிவார்சிலைநாரியேற்றினன்வெய்யவாளிதெரிந்தனன். ௬

கலைகளாதிதிரண்டுசெற்றியகானமுற்றியடுத்தனர்
வலைவளாவினரொடியெறிந்தனர்வாரொழுக்கினரொய்யெனக்
குலைகுலாவுசுணங்கனேவினர்குரையியங்களியம்பினர்
சிலைவலாருருமென்னவார்த்தனர்சென்றுமாக்களொழுப்பினர். ௭

மானெழுந்தனவல்லியங்கண்மறங்கொதிப்பவெழுந்தன
யானைபாய்ந்தனவெண்குபாய்ந்தனயாளிபாய்ந்தனவார்ப்பொடு
கான்மேதிபெயர்ந்தபல்கவயங்கனன்றுபெயர்ந்தன
ஏனைமாக்களுமெங்குமெங்குமெழுந்தெழுந்துகுதித்தன. ௮

வில்வளைத்தனர்வாளிதொட்டனர்வேலெறிந்தனர்கூற்றெனப்
பல்வகுப்புறுசூலமோக்கினர்பாசம்வீசினர்பற்பல
மல்வளைக்குலம்வாங்கிவிட்டனர்வச்சிரத்தடியோச்சினார்
சொல்விளைத்திடுவாள்கள்கொண்டுதுணிக்கலுற்றனர்மீளிகள். ௯

கால்குறைப்பனசென்னியீர்வனகாதிறுப்பனநீண்டுதாழ்
வால்குறைப்பனகண்கள்சூல்வனமார்புகீழ்வனவன்மைசா
ரேல்கிழிப்பனதுண்டம்வீழ்ப்பனசோரிவீழ்ப்பனதுண்ணென
மேலெழுந்துகுதிக்குமாக்களின்மீளியோர்விடுமாய்தமே. ௧௦

இரிந்துவீழ்வனசீறிமுன்னரெதிர்ந்துவீழ்வனவோவெனப்
பரிந்துவீழ்வனவாடிவீழ்வனபாய்ந்துவீழ்வனகண்ணினீர்
சொரிந்துவீழ்வனவேங்கிவீழ்வனசுற்றிவீழ்வனநீள்குடர்
சரிந்துவீழ்வனமீளியாய்தமடர்ந்துசாடியமானினம். ௧௧

வாலடித்துமயங்கிமாய்வனவாய்பிளந்துயிர்மாய்வன
காலுதைந்துகறங்கிமாய்வனகண்சுழன்றுயிர்மாய்வன
சாலநாக்கள்கடித்துமாய்வனதலைதிரித்துயிர்மாய்வன
கோலமெய்கள்பதைத்துமாய்வனகுன்றிமண்விழுமாக்களே. ௧௨

வேறு.

பல்லியமெங்குமொலித்திடப்பற்பலநாய்கள்வளைத்திட
வில்லிடைமீளிகளெய்தகோன்மெய்யுருவுஞ்சிலமாக்குல
மொல்லையெதிர்ப்படுதம்மினத்தொன்றனையொன்றிதுவேகொலா
மல்லல்விளைத்ததெனச்சினவடலொடுபற்றியடர்ப்பன. ௧௩

மருண்டெழுகின்றவயப்புலிவந்தெதிர்மான்கலைவௌவில
வெருண்டெழுசிங்கமதக்கயம்வீத்திலவேனவுமின்னவே
தெருண்டொருமும்மைமலங்களுஞ்சீறியமாதவரொத்தன
விருண்டுவளம்படுகானிடையிரிதருமத்தகுமாக்குலம். ௧௪

அம்புதைத்வெம்புலிதம்மெதிரார்ந்தகிலுத்தநெடுந்தருத்
தம்பழமானிடநேர்வதுதன்னைமுன்னோக்கியலைத்திடும்
வெம்பகைமானிடர்போன்மெனவெகுண்டுபுடைத்துநிலத்தினிற்
பம்பவுகுத்துயிரோய்வெனப்பாறுவவெங்கணுமெங்கணும். ௧௫

கைம்மலிவேடுவளர்த்திடுங்காளையர்வாளிதுளைத்தலு
மொய்ம்மகண்மாக்குலமையெனமூர்ச்சனையாயினசேணிடை
மெய்ம்மலிசோரியலைத்தெழவீழ்வனகண்டுவனத்துவாழ்
மைம்மலிகண்ணியரோவெனமூழ்கியிரங்குகின்றார்சிலர். ௧௬

உளியமுமேதியும்யானையுமுருமொலிசெய்கருமான்களு
நெளியநெடுங்கணைகீழ்ந்தபுண்ணெருப்புறழ்சோரிநிலத்துக
வளியினிரிந்துகுழாங்கொடுமண்டியதிர்ப்பனகோன்றிரு
விளிவதுகாட்டுநெய்த்தோர்மழைவீசுமுகிற்குலமொத்தன. ௧௭

வலையறநாறிவிரைந்துசெல்வன்றிகண்மன்னவனேவிய
கொலைகெழுவாளிதுளைத்துவிழ்கொள்கைதமாதுகுலத்தவர்க்
குலைவுறுபேரிடருற்றழித்தம்முயிருய்திறநாடுவோ
ரலைகடல்வைப்பினிலொய்யெனவழிவுறுமெப்ற்றிதெளிக்குமால்

அரசெனவோர்பெயர்பெற்றதனரியசெயற்கிையையுந்தொழிற்
புரவுசெயாதுவிலங்கெலாம்பொன்றவிளித்துநுகர்ந்திடும்
பரிசுநினைந்துவெகுண்டெனப்பாழியிரும்புயமன்னவன்
விரவுமடங்கலனைத்தையும்வெங்கணைதூண்டியிறுத்தனன். ௧௯

கவளமளித்துயிர்போற்றநமக்கர்த்தருள்பாகனையுங்கொலுந்
தவறினவென்றுமுனிந்தெனத்தந்தியனைத்துமடித்தன
னிவறிமறைந்துவதிந்துபாய்ந்தெவ்வெவையுங்கொலைசெய்துணு
மவமுறுவீரம்வெறுத்தெனவடல்கெழுவேங்கைசெகுத்தனன். ௨௦

இன்பமளிப்பனபோலுடலெங்கணுநக்கியிறும்படி
துன்பமளிப்பனவாமெனச்சூழ்கவயங்கள்குமைத்தனன்
வன்பினிறுங்கொலையேபுரிமறலியினார்தியினங்களென்
றன்பறுவன்கருமேதிகளாவியமுங்கவிளித்தனன். ௨௧

மேலுமருந்திறல்வேட்டையின்மேயினனுடவிலங்குகள்
சாலவுயிர்க்கும்வித்தாகெனத்தப்பவிடுப்பதுபோற்கமஞ்
சூலுடைப்பன்மிருகங்களுஞ்சூழுமிளம்பருவத்தவு
மாலுறுநோயுடைமாக்களும்வன்கொலைசெய்திலன்விட்டனன். ௨௨

கலிநிலைத்துறை.

இன்னவாறுவளர்ந்தெழுவேட்டைமுடித்தபின்
மன்னர்மன்னன்வளம்பதிக்கெய்தியவெண்ணினு
னென்னவேட்டையினுடியிளைத்தவயர்ப்பினுற்
றுன்னிநீர்நசைமிக்குவருத்தந்துவன்றினன். ௨௩

வேட்டைமீதிலெழுந்தமறக்கனல்வெய்தெனக்
கூட்டுண்டாலெனநாவினிலூறுகுளிர்ச்சியும்
வாட்டமுற்றதுவாயும்வறன்றதுவாலொளி
யீட்டுமூரல்கரிந்தகுழிந்தனவோர்விழி. ௨௪

திருந்துநீர்நசைகண்டவர்சிற்சிலர்திக்கெலா
மிரிந்துநேடினரீர்ம்புனல்காணலர்மீண்டனர்
வருந்துவேந்தனுமென்மெலவேகுழிமாதவம்
பொருந்துபார்க்கவநன்முனிவைகிடம்புக்கனன். ௨௫

ஆயகாலையருங்குசையாதிகொணர்ந்துறப்
போயமாதவன்மீண்டிலனுகப்பொலங்கொடித்
தூயபன்னிவிருந்துதுனைந்துதொகுத்தனண்
மேயமன்னனுயங்குவருத்தம்விளிந்ததே. ௨௬

தேமொழிக்குயிலன்னவள்செய்தவிருந்தினு
னுமநீர்நசைநீங்கியபின்புவிநாயகன்
றுமநீள்குழல்கட்டெழில்கண்மலர்சாத்தினன்
காமநீர்நசையுள்ளங்கவற்றவெதும்புவான். ௨௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பற்பலவைகரேறும்பருகிடப்பட்டுவிம்மித்
தற்பெருவயிறுவாட்டத்தரிக்கிலதாகிச்சீதப்
பொற்பமர்வதனத்திங்கள்பொருக்கெனவெளிக்கான்றிட்ட
விற்பொலியிருளேயென்னவிளங்கியகுழலின்சீரும். உ௮

வெருள்படத்தன்னைநாளும்விளித்திடும்பகைமைநோக்கி
யிருளினந்தொடர்ந்துதாக்கவிளம்பிறைக்குழவியோடிப்
பொருள்படுதனக்குத்தாயாம்புண்ணியிற்சேறலேய்ப்பச்
சுருள்படுகுழல்கணுப்பட்சுடர்ந்தவாணுதலின்சீரும். உ௯

போக்குறுபுரிசைமூன்றும்பொடிபடுத்தருளும்பெம்மான்
நீக்கொடும்பகழிகோப்பவாசுகித்திருநாண்வீக்கு
மேக்குயரிமயவில்லுநாணுறவிழிகளொன்னு
மேக்குலநாணின்றெய்யும்புருவ்விலிலங்குசீரும். ௩0

பொருந்துபோர்க்களத்திற்போந்தும்பொருவலார்விலக்கித்தப்பும்
பெருந்தவறுடையவாளிபீடறவாவந்தூங்க
விருந்துழியிருந்தவாறேயிளைஞர்தம்முயிரைத்தப்பா
தருந்திமீட்டுமிழாவாகுமயில்விழிக்கணையின்சீரும் ௩௧

தொழினனிதிருந்தும்வண்ணஞ்சுடர்ந்துவில்லுமிழ்பொன்மாமைக்
கழிநிறக்குமிழ்ம்பூமுன்னர்ப்படைத்துக்கைபழகிப்பின்னர்
வழிமதுப்பிலிற்றிச்சீர்க்கும்வட்டவாய்க்கமலப்புத்தே
ளிழிவறவருந்திச்செய்தவெழில்குலாமூக்கின்சீரும். ௩௨

சேயிதழ்த்துவருமூரற்றெள்ளொளிமணியுஞ்செவ்வாய்ப்
பாயிதழாம்பற்போதும்படர்விழிக்குவளைப்பூவு
மாயிருங்குழைசேர்காதுவள்ளையுங்கவினப்பூத்த
தோயுநீர்நிலையேயென்னச்சுடர்கவுட்டுணையின்சீரும். ௩௩

எண்ணிலாருயிருமுண்ணப்பட்டுறைவிடமாமாற்றுற்
கண்ணெனவொருபேர்வாய்ந்தகடுங்கொலைவிழிவேலோடி
விண்ணமுமழியாவண்ணம்வெய்யகூர்முகத்திலிட்ட
திண்ணியதடையாய்வைகுந்தேசிகச்செவியின்சீரும். ௩௪

வளங்கெழுகூந்தலென்னும்வார்மணிக்கலாபமின்ன
வுளங்கவர்பன்னியென்னவொளிர்ந்தபூம்பசியமஞ்ஞை
துளங்குறுகுலிகப்பட்டின்றுணிநிகர்கோபம்வவ்வி
விளங்கியாங்கழகுபூத்துவில்லிடுமதரச்சீரும். ௩௫

ஒள்ளியவதனத்திங்களுடனமர்கலவியாற்றுங்
கள்ளிவர்குமுதமென்னக்கதிர்த்தவாயழகுந்திங்கட்
டெள்ளியவமிழ்தந்துள்ளித்தெறித்துவீழ்திவலையாம்ப
னள்ளிடைவிறந்தாலன்னநகைமணியொளிருஞ்சீரும். ௩௬

பெற்றவர்குணங்கடத்தம்பிள்ளைபால்விரவுமென்னு
மற்றமிலுரைவாயாகவமிழ்தொடுநஞ்சுகாலு
மெற்றுநீர்த்தரங்கவேலையீன்றெழுவதனத்திங்கள்
சொற்றனியமிழ்தோடுண்கட்சுடுவிடங்கொழிக்குஞ்சீரும். ௩௭

இளிவருயோனியாக்கையிறையிடத்திருப்பநாணித்
தெளிநிதிக்கஞ்சமீண்டுத்திருமுகமென்னமாறி
யொளிதரவளையுமவ்வாறுணர்ந்ததனருகுபோந்து
களிவருசிறப்பின்வைகியனையவொண்கழுத்தின்சீரும். ௩௫

முக்கணனெரித்தஞான்றுமுனைத்தவேள்கொடியிலேற்று
மிக்கசீர்மகரமீனும்வெஞ்சிலைக்கரும்புந்தப்பித்
தொக்கசீரிவள்பாற்சேமத்துணையொடுஞ்சரணமாகப்
புக்கினிதமர்ந்தாலென்னக்கூர்ப்பரம்புயத்தின்சீரும். ௩௬

ஆதனமாகிநாளுமயன்றனைப்பரித்துந்திங்கட்
கேதமுற்றஃகாவண்ணமீந்திலனென்றுநீத்துப்
பேதைதன்கரமாய்க்கஞ்சம்பெருந்தவப்பணிகளாற்றி
மாதர்வெண்மதிக்குக்கூம்பாவளமைபெற்றிலகுஞ்சீரும். ௪0

கயத்தினுளெழுந்துபூத்தகடிமலர்க்கமலந்தாமே
வியத்தகுகரங்களென்றுவிழைதகவிளக்கவந்தப்
பயத்துறுகளிற்றுமீன்கள்பத்தியிற்செறிந்துநின்று
நயத்தகவிளங்கியாங்குநலங்கெழுவிரலின்சீரும். ௪௧

அதிர்த்துவண்டுளருங்கூந்தலரக்கெறியரிக்கட்பன்னி
யெதிர்த்துவந்திசைவாதாடுமிருங்கிளிவாயைப்பற்றி
விதிர்த்திடவொடித்துவென்றவெற்றியைத்தெரிப்பான்கையிற்
நம். ௪௨

வண்சிறைச்சகோரப்புட்போன்மதியமிழ்துண்ணவேட்டுத்
தண்செறிவதனநோக்கிச்சந்திரனெனக்கிறெய்தி
யொண்சிறைநேமிப்புள்ளுந்துணையொடுமுறைவதேய்ப்பக்
கண்செறிதலைமேனோக்கிக்கதிர்த்தபூண்முலையின்சீரும். ௪௩

மாலினைச்சுமக்கலாற்றுதுடைந்தெனவடமுந்தீம்பால்
வேலைவார்திரையுமின்னுன்மடிவரைவயிறுய்மேவி
யாலியவனப்புமன்னேனஃதறிந்தணைந்தவற்றின்
மேல்விழிவளர்ந்தகாட்சிவீழ்மயிரொழுங்கின்சீரும். ௪௪

'சுங்கதூர் த்துரைமடிகளாகக
குவிமுலைமொக்குளாகக்கொட்புறுசுழியிற்றேன்றிப்
புவிநிறையுயிரையெல்லாம்புகுத்தினுந்தூர்த்தல்செல்லா
திவறிவிண்ணுயிரும்வாங்கவிடங்கொளுமுந்திச்சீரும். ௪௫

முடிமுலைமுரசமல்குன்முழுக்குடைமுகம்வில்வார்த்தை
வடிகணைமேனிகைகான்மதர்விழிநகைமால்யானை
நெடியபூங்கூந்தலாக்கிநெடுந்தகைப்பெருமாற்கஞ்சிக்
கொடியவேளுருவுமாறுங்கொள்கைநேர்மருங்குற்சீரும். ௪௬

அடர்சிறைப்பசியமஞ்ஞையச்சமுற்றணுகல்செல்லா
விடமிதென்றியலுநாசியெனப்படுங்காமரூபி
வடிவமுநோக்கியங்கண்வாளராக்கவற்சியின்றிப்
படம்விரித்தமர்ந்தகாட்சிபடைத்தகலல்குற்சீரும். ௪௭

கொழுமடன்மலர்களார்ந்தகொடியகம்புரையுமல்குல்
வழிமதக்களிநல்யானைமத்தகத்தியற்றும்வேதன்
செழுவுமத்தகத்துக்கேய்ந்ததிரண்மணிக்காமுமாங்குப்
பழுதறவகுத்தாலன்னபுடரொளிக்குரங்கின்சீரும். ௪௮

கலம்படுபாவையல்குற்கதிர்மணிப்பணியையஞ்சி
நலம்படுதன்பாற்றஞ்சநண்ணியகணைக்காலென்னுங்
குலம்படுவரான்மேற்பாந்தள்குறுகிடிற்றுணிப்பவுன்னி
வலம்படுமலவன்முன்னுய்வதிங்கெனமுழுந்தாட்சீரும். ௪௯

வேட்டவர்முடியிலேறுமேன்மையாளிகர்க்குமேனும்
பாட்டளிமூசியூறுபடுத்திடவாடலானு
நாட்டங்கள்புதைக்குங்கங்குனகைமுகங்கூம்பலானுந்
தோட்டலர்க்கமலந்தாழ்க்குந்துணையடிக்கமலச்சீரும். ௫0

மாந்தளிர்க்குலமீதென்னமதிப்பவர்க்கஃதேயாயுந்
தேந்தளிர்ச்செயலையென்னச்சிந்திப்பார்க்கஃதேயாயுங்
காந்திகொள்கனகமென்னக்கருதுவார்க்கஃதேயாயும்
பூந்தழைக்கடுக்கைஞானப்பொருணிகர்மேனிச்சீரும். ௫௧

இருளெலாங்குழுமிநீண்டதெனமருளளசமாகக்
கருமுகிற்குழாத்தைப்பற்றிக்கண்டநாட்டுவற்றுந்திங்கட்
டிருமலர்ப்புத்தேளந்தச்செல்லிடைத்தடித்தைவாங்கி
யுருவெனச்செய்தாலென்னவுருவளர்நுடக்கச்சீரும். ௫௨

ஓங்கியவிருள்கால்சீக்குமொளியுமிழ்கனகக்குன்ற
மீங்கிவையென்றுகொம்மையிளமுலைப்பாரநோக்கி
வேங்கையம்போதுபோர்த்துவிராவிநின்றொளிர்வதேய்ப்பக்
கோங்கனமுலையிற்பூத்தகோமளத்திதலைச்சீரும். ௫௩

தனித்தனிகண்களென்னுந்தடங்கையான்மொண்டுகொண்டு
மனத்திடையமையாக்காதல்வளர்தலாற்றண்டனென்பான்*
கனைத்துவண்டிமிருங்கூந்தற்கற்புடைப்பன்னியுள்ளம்
பனித்துறவலிந்துசெங்கைபற்றினனீர்தல்செய்தான். ௫௪

துன்றியவருத்தமோம்பித்தொலையுயிர்நிறுவிக்காத்த
நன்றியுநோக்கான்கற்புநலிவிக்கும்பழிபாவங்க
ளொன்றையுநோக்கானேற்குமுத்தமத்தவத்தார்மேன்மை
வென்றியுநோக்கானந்தோவிதியினையெவரேவெல்வார். ௫௫

அடங்கருஞ்சீற்றத்துப்பினரியினத்துயர்ந்தவேற்று
மடங்கலொன்றண்மிப்பற்றுமடப்பிடியென்னநெஞ்சி
னிடங்கொளாவெருட்சியீண்டியிருசரண்கரந்தள்ளாடித்
தடங்கணீர்சொரிந்துபன்னிதளர்ந்துடல்பதறுமெல்லை. ௫௬

தருப்பைகளாதிகொண்டுசார்தருமுனிவன்கண்டா
னெருப்பெனவெகுளிதுள்ளநீண்டவார்புருவங்கோட
வுருப்பொலிவிழிகள்சேப்பவுலகெலாம்வெருவவேதத்
திருப்பொலிபவளச்செவ்வாய்துடிப்பமற்றிதனைச்சொன்னான். ௫௭

ங்லிவறுகற்பினாளைநச்சியதண்டாவின்னே
யலியுருவாகநீமற்றவாவிமேற்செல்லுகின்னை
மெலிவறவிலக்காவிட்டவமைச்சனும்வேடனாக
வொலிகெழுசெல்வமெல்லாமொழிகவென்றுறுத்தான்சாபம். ௫௮

கொந்தெரிவளைக்கப்பட்டகுஞ்சரக்குழாமைந்தென்னச்
சிந்தையிற்றுயரநீடித்திருத்தகுமுனிவன்றாளில்
வந்தனைபுரிந்துசிந்துமேதனுமன்னன்றானு
மெந்தைநீபொறுத்தல்வேண்டுமென்றனனிரத்தலோடும். ௫௯

விழைந்தவிப்பிழையானீயிர்விழைந்துறைகாஞ்சிவைப்பு
மளந்தறிவருஞ்சீர்த்தீர்த்தஞ்சிவாலயமன்றியெல்லாம்
வளந்தபநெடுநாட்காடாய்மன்னிமற்றதனைக்காப்பா
னிளந்தனித்திங்கள்சூடுமெம்பிரானருளினாலே. ௬0

விறற்கலிகாலன்சோணாட்டவதரித்தீண்டுமேவுந்
திறற்படையவனைக்காணிற்றீருமிச்சாபமென்றவ்
வறப்பெருமுனிவனில்லாளெரியுடனங்கணீங்கி
யுறற்கரும்பனிசூழ்பொற்கோட்டோங்கலையடைந்தானன்றே. ௬௧

வலியினாற்பிறர்தாரத்தைவவ்வினரும்மையிம்மை
யலியுருவாவரென்னும்பழமொழியவலங்கூரப்
பொலிவருமற்றைநாளேயலியுருப்பூண்டான்மன்ன
னலிவுசெய்வேடயாக்கைநண்ணினனமைச்சன்மன்னோ. ௬௨

வேள்வியுந்தவமுந்தூயவிருந்துமீகையுமேதக்க
கேள்வியுந்திருவும்வாய்மைக்கிளர்ச்சியுநன்மைசான்ற
தாள்வினைத்திறமுமென்றுந்தணப்புறாக்காஞ்சிதானு
நீள்விரைப்பொதும்பர்மல்குநெடுவனமாயிற்றம்மா. ௬௩

வேறு.

கடியிணங்கியகாவுங்கமலவாவிகண்முற்றும்
படருமொண்புனல்யாறும்பறவைவெண்மணற்குன்றுங்
கொடியிணங்கியமாடக்குமரிமேனிலவைப்பு
மடமடந்தையராடும்வளமொடுங்கினமாதோ. ௬௪

பந்தமீர்கலைதேரும்பட்டிமண்டபமோடு
முந்திவானவர்வைகுமூரிமண்டபமன்ன
ரந்திநண்பகல்காலையமருமண்டபமெங்கு
மைந்தரண்மிநெருங்கும்வனப்பிறந்தனமன்னோ. ௬௫

பாடலோம்பினமாதர்பண்பினுடைவர்தம்மோ
டூடலோம்பினவவருமுருகிவந்தடிதாழ்ந்து
கூடலோம்பினகூடுங்கோதிலின்பப்பெருக்கி
னீடலோம்பினவெங்குமிரந்தபள்ளியிடங்கள். ௬௬

அட்டில்வாய்ப்புகைவீந்தவரிவைமார்குழலேற்று
மட்டுலாம்புகைவீந்தமாடமாளிகையூட்டி
முட்டிவார்புகைவீந்தமுறையினாகுதிச்செந்தீப்
பட்டபூம்புகைவீந்தபைம்பொன்மாமனையெங்கும். ௬௭

வரவெதிர்ப்பவர்மாண்பும்வரைவுசெய்பவர்மாண்பும்
புரவுபூணுநர்மாண்பும்புகழ்விளைக்குநர்மாண்பு
மிரவுதீர்ப்பவர்மாண்புமியலுமாதவர்மாண்பும்
பரவுபத்திமைமாண்பும்பலவுமாறினமன்னோ. ௬௮

விழாவிழந்தனதக்கைவெம்புதண்ணுமைபம்பை
முழாவிழந்தனதேவர்முனிவர்மானுடர்கூடுங்
குழாமிழந்தனசின்னங்கோடுதீங்குழல்வீணை
யெழாவிழந்தனவென்பமறுகுவீதிகளெல்லாம். ௬௯

வேதமோதுநயப்பும்வேள்விநல்வினையாற்றி
யேதமீருநயப்புமிறைவனின்னருள்கூருங்
காதைகேட்குநயப்புங்கண்ணுதற்பெருமான்பொற்
பாத்மேத்துநயப்பும்பரிந்தவேதியர்வீதி. ௭௦

வெற்றியானைகள்போரின்வெகுளமூட்டும்வனப்பும்
பொற்றநீண்மணித்தேர்கள்பொருதவுந்துவனப்புங்
கற்றவைங்கதிமாக்கள்கலாம்விளைக்கும்வனப்பு
மற்றுமற்றனவீரமன்னர்வாழ்மணிவீதி. ௭௧

மதலையிற்பொருள்வந்தவாங்குமோதைவியப்பு
மெதிரிரும்பொருள்வங்கமேற்றியுய்க்கும்வியப்பும்
பதியினுள்ளவர்கொள்ளப்பாத்துவிற்கும்வியப்புங்
கதுவுமற்றைவியப்புங்கழன்றநாய்கர்தெருக்கள். ௭௨

பகடுபோற்றுமிசைப்பும்பண்ணையிற்பொலிபைங்கூ
ழகடுவாய்ந்தமகத்தினுக்குமன்பும்விருத்தி
னிகலில்காட்சியர்தம்மையினிதுபேணுஞ்சிறப்பு
மகலநீங்கினபின்னோரமர்ந்துவாழ்திருவீதி. ௭௩

வேறு.

வெண்ணிலாவிளம்பசும்பிறைக்குழவியின்விரிசுடர்ச்சடைக்கற்றை
யண்ணலாருமையுடனமர்கச்சிமாநகர்வயினமர்கின்றோ
ருண்ணிலாஞ்சிவமுறுவதோர்ந்தாயிடைத்தானுமோர்தவமாற்ற
நண்ணினாலெனவெழுந்ததுவிரைகுலாய்நறைபொழிமுதுகானம். ௭௪

கடுத்துழாவியகருமிடற்றிறைவர்தங்கழறொழுபெருங்காத
றொடுத்தகொள்கையினித்தலுங்காஞ்சியந்தொல்லைமாநகர்வாழ்க்கை
விடுத்திடாதமால்செயலறிந்தவன்றனித்தெய்வதமெனமேவி
யடுத்ததானுமங்கணைந்ததேபோலுமிக்கடர்ந்தெழுபெருங்கானம். ௭௫

எழுந்ததம்வலிகாளியாலழுங்குவித்திடுதலினிகல்கொண்டு
கொழுந்துவெண்மதிமிலைச்சினார்திருநகர்குலைப்பமீட்டுடன்றோங்கி
யழுந்துபட்டபல்கடல்களும்வளைந்ததுமாகும்பன்னிறப்போதும்
விழுந்துவண்டினமுழக்கவாய்விள்ளமேனிமிர்ந்தெழுகருங்கானம். ௭௬

கரிதிளைத்துவாழிடந்தொறுங்கரிகளேகருதலர்சிரங்கோட்டும்
பரிதிளைத்துவாழிடந்தொறும்பரிகளேபயிலியகவைகோட்டுப்
பெரியமேதிவாழிடந்தொறுமேதியேபிறங்கிவாழ்ந்தனவம்மா
வுரியதத்தமதினம்பயிலிடமெனவுறவுகொண்டிடுமாபோல். ௭௭

அரசுவீற்றிருந்தாண்டமாளிகைதொறுமரசுவீற்றிருந்தருளுங்
கரிசில்காட்சியிற்கணிகள்வாழிடந்தொறுங்கணிகளெண்ணிலவாழு
தரைபராவுசீர்த்தளிதொறுஞ்சம்புவைச்சம்புவேதொழுதேத்தும்
விரிதுழாயணியரிபயிலிடந்தொறுமரியினம்விராய்போற்றும். ௭௮

கொடிநிலாயெழுந்தாடுகோபுரந்தொறுங்கொடிநிலாயசைந்தாடுந்
தொடருமன்பர்மெய்ப்பணிவளரிடந்தொறுஞ்சுடர்மணிப்பணிவாழும்
விடுகதிர்ப்பொலங்காஞ்சிவைப்பிடந்தொறும்விரைத்தகாஞ்சிகணீடும்
படருமம்புலிதவழுமேடைகடொறும் ாயுமம்புலிமல்கும். ௭௯

இருண்டகார்விடமயின்றவர்க்கலரெடுத்துதவயாவருமின்மை
தெருண்டுதாங்களேயுதவுவானணைந்தெனச்சிவபிரான்றளிச்சுற்றி
லுருண்டகாய்பசுங்கூவிளமுல்லையொண்குமிழ்மகிழ்வழைகூந்தன்
மருண்டதீங்கனிகொன்றையாதிகளெலாமன்னிநின்றலருழக்கும். ௮0

தங்கண்மெய்ப்படுமுறுப்பினைமேதகத்தழீஇயதுதனைநோக்கிப்
பொங்குநட்புமேல்கொண்டணைந்தாலெனப்பொருவிலாவணந்தோறுங்
கொங்குவிம்முபூங்குங்குமஞ்சந்தனங்கோழரையகில்வாச
மெங்குமொய்த்தெழுங்கப்புரமிலவங்கமேலமாதிகள்சூழும். ௮௧

காடெலாமரசாட்சிசெய்தாமரைக்கண்ணனைப்புதுக்காணு
நீடுதோரணம்வைத்தெனநிரைபடநிலைஇயபன்மரந்தோறு
மூடுபோந்திணர்ப்பசுங்கொடிபடருமவ்வும்பணுங்கரசெய்தும்
பீடுபோன்மலர்ப்பூவைகணிலவிடும்பெட்புறவிடந்தோறும். ௮௨

எழில்செய்தம்முழையுறுப்புநேருறுப்புடையேழையர்தமைக்காண
விழையுங்காதலிற்புரைகிளைத்தாலெனவியன்மனைத்தலைதோறும்
வழியுமும்மதக்களிற்றொடுபிடிகளும்வயந்திகழரிமாவு
முழையும்வைகலுநுழைவனபயில்வனவுழிதருவனமன்றே. ௮௩

துளிவிராவியதேனமாரியிற்பொலஞ்சுடர்விடுதிருமேனி
யளியினுட்டுபுகுரங்குசாகையினிலையறுவையாமேலொற்றி
நளிமலர்த்திரடூஉய்நறும்பழவுணாநல்கிநீண்மரக்கானுந்
தளிதொறுஞ்சிவலிங்கபூசனைதினந்தகைபெறப்புரிகிற்கும். ௮௪

படியின்மேதகுமாயிடைமுன்குலாம்பல்லியத்தொகைபோல
நெடியயானைகளுலம்பியசும்மையுநிரைபடுமரியேற்றி
னிடியினார்த்தெழுமுழக்கமும்வேங்கைகளிரங்குமோதையுமல்கி
விடியனண்பகன்மாலையெக்காலமும்விராயெழுமிடந்தோறும். ௮௫

கொம்பினூழ்த்தலர்மலர்களினிழிந்துவார்குலநதியெனவோடும்
வம்பறுதபூந்தேறலைப்புனலெனமடுத்துளர்மகண்மூழ்க்க
ளம்பொனாலயத்தூணினுண்பாவையையாடவரெனச்சால
நம்பிநோக்கியநோக்குமாறுவதனலந்தெரித்திடுமாபோல். ௮௬

நீண்டவேய்நரன்றுக்கபன்முத்தமுநெடும்பகையரிதாக்க
மாண்டயானையின்மத்தகங்கீழ்ந்துகுமணிகளுந்தெருத்தோறுங்
காண்டகக்கிடந்திமைப்பனகலவியிற்கன்னியர்முலைக்கோட்டுப்
பூண்டநித்திலம்பரிந்துவீழ்ந்தவிரொளிபொங்குமத்திறங்காட்டும்.

எம்பிரான்றிருநகரெழிறபவடர்ந்திடுவதென்னெனநம்ப
னம்பொன்வார்கரத்தழலும்வெங்கனல்படர்ந்தழித்திடவெழுந்தென்னப்
பம்புநீள்பசுங்கழைக்குல்முரிஞ்சவுற்பவித்தவொள்ளழலோடி
யும்பரோங்குகானழித்துறப்புகுந்தஃதொழுக்குதேறலிற்சாம்பும். ௮௮

இன்னவாறெலாந்தூறெழுவனம்படவிருநகர்த்தனித்தெய்வக்
கன்னிநோக்கினளருந்துயருழந்தனள்கம்பைவைப்பினில்வேணிச்
சென்னியாருமையுடன்றனித்துறைதலிற்செவ்விபெற்றிலளாகி
நன்னர்வெள்ளியங்கயிலைமால்வரைத்தலைநண்ணினளிடர்தீர்வாள். ௮௯

அங்கண்வள்ளலாரடியிணைதொழுதெழுந்தணுகிநின்றுரைசெய்யுந்
திங்கள்வேய்ந்தபொற்புரிசடைக்கடவுளோதிருமலிநகர்க்காஞ்சி
பொங்குமாதவத்தொருமுனிசபித்தலாற்பொருக்கெனவளங்குன்றி
யெங்குநீடியநெடிபகோன்பொதிந்திடும்பையுற்றதுமன்னே. ௯௦

வெள்ளையோதிமக்குழாங்களுமின்னனமிளிர்ந்தமெய்மடவாரு
முள்ளமீக்கொளுங்களிப்பினிலாட்டயருருகெழுதடந்தோறுங்
கள்ளுலாஞ்சினைக்கான்வளர்கோழியுங்கலுழிமும்மதவெள்ளங்
கொள்ளைவண்டினங்கூட்டுணுங்குஞ்சரக்குழாங்களுந்துளைந்தாடும். ௯௧

தேறல்வார்ந்தெனமதுரமிக்கசும்பியதிவவியாழிசைப்பாட்டு
நாறுபூங்குழன்மகளிர்களிசையுடனடவியகுரற்பாட்டும்
வேறுவேறுசூழிடந்தொறுஞ்சுவாகதம்விரிசிறைமணிப்பூவை
யூறுதீஞ்சுவைக்குயிலினமிழற்றியவோங்குபாட்டிசைமல்கும். ௯௨

கோதைவார்குழற்கூட்டியநறும்புகைகுலாவியவிடந்தோறுஞ்
சீதநித்திலமுருகும்பணையுரிஞ்சியசெழுங்கனல்வளைந்தேறிப்
போதளாமகில்சந்தனமெரித்தெழுபூம்புகைக்கொழுந்தூரு
மாதரார்நடங்குயின்றமேலரங்கெலாமயிலினநடமாடும். ௯௩

மருந்துபோல்வரும்விருந்தினையெதிர்கொளும்வயின்றொறுமதவேழம்
பொருந்துவாலுளைமடங்கல்வெங்குடாவடிபுலிமரையுழையாதி
திருந்துவேறிருங்கானகநின்றெரீஇச்செற்றிவந்தவைதம்மைப்
பரிந்துதத்தமதினமெனவெதிர்கொளும்பகட்டினமுதலாய. ௯௪

பரத்தைமரரொடுங்கிழத்தியர்தம்மொடும்பாழியம்புயமைந்தர்
கருத்துமேதகவாட்டயர்ந்தின்புறுகடிமலர்ப்பொழிறோறும்
பெருத்துநீள்கரப்பிடியுடன்வேழமும்பெட்டைகளுடன்மானை
வருத்தும்வாலுளைமடங்கலுமளவளாய்மதன்கலைமுறைதேற்றும். ௯௫

இளமகார்விளையாடியதெருத்தொறுமிழிமதக்களிறீன்ற
களபநின்றுலாயாட்டயர்தருமுளக்கனிவொடுநற்றயர்
வளநிலாவியவுஞ்செழுஞ்சிறார்களைவாய்புகுத்தகந்தோறு
மளவின்மாக்குலந்தத்தம்மழவினையயிற்றுவகுளகாதி. ௯௬

பந்தர்போகிமென்னிழல்செயும்வீதியும்பண்ணவர்பலர்வாழ்க்கை
நந்துமன்றமும்பொதியிலுஞ்சதுக்கமுநனிமரனிழல்செய்வ
வந்திலோங்கிவிண்ணுடியகொடிநிரையமன்றமாளிகையாருஞ்
சிந்துவேயினங்கிளைத்துவானளந்துநின்றுடுவதிரண்மல்கி. ௯௭

பொன்னும்வெள்ளியுநவமணித்திரள்களும்புயலெனக்கொடுப்போர்க
ணன்னரங்கைநீரொழுக்கியபெருவெள்ளநிறைந்தநல்விடமுற்று
மின்னும்வாளெயிற்றடல்வலியரியினம்வேட்டஞ்செய்துயிர்சாய்க்குங்
கொன்னும்வாரணத்தொகுதிநெய்த்தோருராய்க்குளமெனநிறைநிற்கும்.

காட்டினுடைகங்குயிற்றுமப்பொழுதுநின்கழறொழுதுடன்கூடி
யாட்டமேவுவெம்பேய்க்கணநீயமரணிநகரெனவாங்குக்
கூட்டம்வாய்ந்துநின்கோயில்காப்புறுவபோற்குழிச்சுருட்குஞ்சி
மோட்டிரும்பெருமூக்குடையலகைகண்முழங்கியாட்டயர்கிற்கும். ௯௯

குருகுதாக்கலாற்பதைபதைத்துயிர்தபுங்கோளரிச்செழுந்தோலும்
பெருகுவீரியமடங்கருக்குறவுயிர்பிரிநடைமலைத்தோலும்
பொருதுவார்மதக்களிற்றினந்தாக்கிடப்பொன்றுபுன்புலித்தோலு
மொருவவெங்கணுநின்னுடைப்போர்வைகளுணங்கிறலெனமல்கும்.,

மாந்தரென்பவரொருவருமின்றிமையாந்தவந்நகர்நோக்கி
யேந்துமார்பகத்தணியெனவணிந்தபையெறிலராவினமெல்லாம்
போந்துநின்னுடைவரைப்பெனுமுரிமையாற்பொற்பவெங்கணுமல்கிக்
காந்துபன்மணிப்பஃறலைவிரித்தொளிக்கதிர்விளக்கிடுநாளும். ௧௦௧

மிளிருமங்கியுந்தருப்பையுஞ்சமிதையும்வேதியர்தெருக்காட்டுங்
களிறுங்கானலந்தேர்களும்புரவியுங்காவலர்தெருக்காட்டும்
வளருந்தேன்களும்புழுகுங்கத்தூரியும்வணிகர்தந்தெருக்காட்டும்
பிளிறுங்கான்கருமேதியும்பெற்றமும்பின்னவர்தெருக்காட்டும். ௧௦௨

உடுத்திடாதபல்கலைதினஞ்சூழ்தருங்கற்றவருயர்நாவிற்
படுத்திடாதபல்கவிக்குலம்பயிற்றுறும்பண்புடைப்பெரியோராற்
றொடுத்திடாதபல்கடாவிடைதொடுத்திடுந்தோகையன்னவர்நெஞ்சி
னடுத்திடாதவண்கற்புமிக்கணைத்திடுமனையநீள்வனமன்றே. ௧௦௩

பாயும்வேங்கைகள்பாய்ந்திடாவேங்கையிற்பயிலும்வார்மதநீரிற்
றோயும்வேழங்கடோய்ந்திடாவேழமுன்றுவன்றுமாருயிர்மாழ்கக்
காயுநாகங்கள்காய்ந்திடாநாகத்திற்கஞலுமெங்கணுஞ்சென்று
மேயுஞ்சேவினமேய்ந்திடாச்சேவுழைமேவுமாலவணெந்தாய். ௧௦௪

திருகுகோட்டவன்கலைமுழக்கல்லதுசெழுங்கலைமுழக்கில்லை
பெருகுபூப்புறுமாண்குலமல்லதுபெருமையாண்குலமில்லை
யிருவும்வல்லியாற்சிறைபடுமெகினலாலெழுஞ்சிறையெகினில்லை
குருகுமாப்பயிலில்லமல்லாலவட்குடிகள்வாழில்லமில்லை. ௧௦௫

மணங்குலாவியகிலுத்தமானுடமலான்மற்றைமானுடமில்லை
யணங்குபூங்குரவுயிர்த்தபெண்மகவலாலருமகவினமில்லை
பிணங்களார்பெருவாய்க்கணமல்லதுபெரியவர்கணமில்லை
யிணங்குவண்டின்வாய்ச்செவ்வழியல்லதங்கெய்துசெவ்வழியில்லை.

கலுழிவார்மதக்கமழ்புனல்களிற்றினமாட்டிடக்கருப்பூர
நிலவுசாந்துகுங்குமமுதல்விரையெலாநெடுமரமெடுத்தேந்த
விலகுசாமரைமானமாவீசவேயினமணித்திண்றுநல்க
வொலிகுலாவியநெடுவனமாயிடையரசுசெய்துறைகிற்கும். ௧௦௭

தீயதீர்க்கும்வெண்பூதியுத்தூளனஞ்செய்துவற்கலைசூழ்ந்து
பாயவொள்ளழனுப்பண்வீற்றிருந்துபல்வளமெலாந்துறந்தங்கண்
மேயபன்மரமுகுத்தமென்சருகுகள்விரவுகாற்றினையுண்டு
தூயகாஞ்சியுமருந்தவமுயல்வதுசூழ்ந்தகானிடைமாதோ. க0அ

இனையவாயபல்பெருந்துயருற்றுளேனிறைவனீயறியாப்போன்
மன்னுகிற்றியான்களைகணில்லவரெனமாழ்குவதழகேயோ
கன்னிபாகவென்றிரந்துநின்றியம்பியகாஞ்சிமாநகர்த்தெய்வந்
தன்னைநோக்கினன்குறுநகைமுகிழ்த்தனன்றம்பிரானிதுசாற்றும்.

கொண்டவெந்துயரொழியினிவனம்படுகுலநகர்த்திருக்காஞ்சி
பண்டுபோல்வளம்படுத்தநம்மாணையிற்பனிமலர்த்தொடைமோலி
யண்டர்கோனவண்வருவனீசெல்கெனவருள்விடைகொடுத்தேவித்
தின்டிறற்படைவலாரியைத்திருவுளஞ்செய்தனன்செயலோடும். கக0

கலிவிருத்தம்.

மங்கையர்சாமரைவீசமணிக்கேழ்
பொங்கியமெல்லணைமேற்பொலிபுத்தே
டிங்களிலாவியசெஞ்சடையோன்மு
னங்கைதலைக்கண்முகிழ்த்தடைவுற்றான். ககக

ஐந்தினுமெட்டினுமாரவணங்கிச்
சிந்தையினன்புதிளைப்பவெழுந்து
முந்துறநிற்றலுமுக்கண்நோக்கி
மைந்தபுவிக்கண்வயங்குமனுப்பால். ககஉ

உதித்துவளர்ந்துயர்காஞ்சியைமுன்போற்
புதிக்கிவழாவகைபோற்றெனலோடு
மதிக்கணயர்ந்துபின்மாநகர்மேலாக்
கதிப்பதுதேர்ந்துகவற்சியினீங்கி. ககங

உண்ணிறைகாதலுளத்தினையீர்ப்ப
வண்ணலையேத்தியருள்விடைபெற்று
மண்ணரசாண்மனுமங்கைவயிற்றில்
விண்ணரசாள்பவன்மேவினனன்றே. ககச

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொருந்துசீர்க்கருப்பமீடிப்பொலிதலும்புனைவேய்வென்ற
வருந்திறற்றோளுமாலினழகியவயிறுந்தம்முட்
பெருந்தனிப்பருப்புஞ்சாய்ந்தபெற்றியுமாற்றிக்கொண்டாங்
கிருந்தனமெலிந்துவீங்கியிளமயிற்சாயலாட்கே. ககரு

செழுங்கலிகாலனென்னுஞ்செங்கதிர்மண்மேற்றீய
வழுங்கவந்துயிர்க்குங்காலமடுத்தலாலினையகஞ்சக்
கொழுங்கதிர்முகையும்விள்ளுமெனக்குழீஇச்சுரும்பர்மொய்த்தாங்
கெழுங்குடக்கொங்கையுச்சிகறுத்தெழில்படைத்தமாதோ. ககசு

கறங்குவெண்டிரைசூழ்வேலைக்கடல்வளைமண்ணையெல்லா
மறங்கொணான்முறையிற்றாங்கவரும்பெறற்கருவிற்றானே
பிறங்குதோள்பழகுமாறுபெய்வபோற்புகையேறுண்ட
நிறங்கிளர்மண்ணையுண்ணும்வயாநிறைந்திட்டதன்றே. ககஎ

கலிவிருத்தம்.

சீர்த்தசூல்பெண்மகளேகொறித்துதீ
ரோர்த்தவாண்மகன்கொலென்றீண்டுமார்வத்தாற்
பார்த்திடவுள்ளூறப்படர்கின்றதெனக்
கூர்த்தவேற்குலவிழிகுழீந்தவென்பவே. ௧௧௮

தடங்கொளும்வயிற்றினிற்றவிர்ந்தகான்முளை
யிடங்கொளவளர்தருமியல்புபோன்மணி
வடங்கிளர்முலைகளின்வாசத்திம்பய
மடங்கருங்கருவிருந்தரும்பிமிக்கதே. ௧௧௯

அணியினுமணியருமகவொன்றேயெனத்
திணிநிலந்தெளிவுறத்தெரிப்பதேய்ப்பவுட்
டணிவறவளர்மகத்தளர்விலலணி
பிணிமலர்களுமொரூஉம்பெற்றிவாய்ந்ததே. ௧௨0

இன்னணங்கருக்குறியிலங்கத்தீதுதீர்
நன்னர்நாடலைவரநவையில்கோள்களுந்
துன்னியவோரையுந்துலங்குயோகமு
மென்னவுநலம்பெறவியைந்துநோக்குற. ௧௨௧

மறப்பெருந்தீயனமாழ்கிச்சாம்புற
வறப்பெருந்தூயனவலங்கிமேலிடத்
திறப்பெரும்பகையெலாந்தெருமந்தாழ்தர
வுறப்பருங்கிளையெலாமுவகைபொங்கிட. ௧௨௨

சிறைபுமரசர்தந்திகைப்புநீங்குறக்
கறைகொடாதுலகஞ்சில்வருடங்காமுற
மறையவர்கவிமுதன்மாந்தர்வான்பொரு
ணிறையகொண்டனர்கொடுநிரப்புநீவுற. ௧௨௩

பிறந்தனனிறைமகன்பிழைத்தவேந்தர்மேன்
மறந்திகழ்வேலுடைமன்னர்மன்னெனச்
சிறந்தநற்றாதையுஞ்செய்வசெய்தன
னறந்திகழ்விழாதெருத்தோறுமார்ந்தவே. ௧௨௪

கொச்சகக்கலிப்பா.

திருத்துமவயவந்திருத்திச்சிலதியர்வாய்புகுத்துவன
வருத்தியொடும்வாய்புகுத்தியரிசனத்தண்விழுதாதி
யுருத்தகையத்திமிர்ந்தாட்டியொளிர்நீற்றுக்காப்பணியக்
குருத்தகையுமிளமதியின்கொழுந்துபோல்வளர்கின்றான். ௧௨௫

கொழுங்கனகவிசும்பாளக்கொற்றவவம்மெனுமமரர்க்
கழுங்குமணிப்புனற்காஞ்சியணிதிருத்தியல்லாலஞ்
கெழுங்கருத்தின்றெனவவரையெதிர்நோக்கிமறுப்பதுபோற்
செழுங்கமலமுகநிமிர்த்துச்செங்கீரையூடினான். ௧௨௬

எம்முடையவலைப்பட்டோரிவ்வாறேயலைவரென
மம்மருலகினைத்தெளிக்குமாண்புபோன்மழைக்கூந்தற்
கொம்மைமுலைமடவார்கள்கொழுங்கனகவடமூக்கிச்
செம்மைமணித்தொட்டிலினிற்றாலாட்டக்களிசிறந்தான். ௧௨௭

உயங்குநிரப்பினர்தமக்குமுயர்ந்தவர்க்குங்கவிகளுக்கும்
வயங்கிளருங்கொடைகொடுப்பமெலியாமைவலிபடைக்கும்
பயங்கதுவப்புடைத்தாற்றல்பயிற்றுவபோலொளிதுளும்பித்
தயங்குமிருகரமலராற்சுப்பாணிகொட்டினான். ௧௨௮

எல்லுமிழுந்தனதுமுகமெனுஞ்சோமநாயகனு
மெல்லியலார்வாய்க்குமுதவிளங்கிழைப்பூட்கிழத்தியரும்
புல்லியிறுமாப்பனபோற்பொற்றமுலைக்கிடைந்தொசியும்
வல்லியிடைமடமாதர்வாய்முத்தங்கொளவளித்தான். ௧௨௯

பெருநிலத்திலெவரெதனைப்பெட்பினுமற்றஃதுதவுந்
தருநிகர்த்ததனதியல்பைத்தண்டாதுதெரிப்பதுபோல்
வருகவருகெனவிளிக்குமங்கையரானனமலர்த்தித்
திருவளர்கிண்கிணியொலிப்பத்திரிந்துவிளையாடினான். ௧௩௦

பைங்கிரணமுகுத்துலகிற்பயிர்வளர்ப்போய்வருகவிவன்
பொங்கொளியானினக்குயர்ந்தானுனக்கொளிபுணர்த்தருளுஞ்
செங்கதிரோன்மரபுடையான்றெய்வடுகோக்காண்டியென
மங்கையரொக்கலையிருவிமதிவிளிப்பமகிழ்கூர்ந்தான். ௧௩௧

அற்றமில்யானரசாள்போதனைவரும்பொன்னவிர்மணிசூழ்
பொற்றமனைவயினன்றிப்புணரும்விளையாட்டானு
மற்றைமனைவயினிருத்தல்வழூவென்றுசிதைப்பதுபோற்
சிற்றிலெலாஞ்சிறுமடவார்சினந்தலறச்சிதைத்திட்டான். ௧௩௨

அலகில்புகழ்த்தன்புயத்தையணைசெவ்விபார்த்திருநீர்
நிலவரைப்பின்வந்தொருசார்நிற்குமொருகலைமகளை
மலர்மகளைச்சயமகளைவருகவெனவறைவதுபோற்
றிலகமெனவுயர்சிறுவன்சிறுபறைகண்முழக்கினான். ௧௩௩

பருத்தமணிப்பொலஞ்சகட்டுப்பாழியந்தேர்பற்பலவுங்
கருத்திசையுந்திசையுருவக்கடவியமருழந்துபகை
வருத்துவதற்கிதுவுமொருவலியென்னமறுகுதொறுந்
திருத்தகுபொற்கூவிரத்தசிறுமணித்தேருருட்டினான். ௧௩௪

இவ்வண்ணம்விளையாடுமிளம்பருவத்தியல்பொழிந்த
வவ்வெல்லையுலகமெலாமதிசயிப்பவிழாவெடுத்துச்
செவ்வண்ணக்குருமுன்னர்ச்செழுங்கலைகள்பயில்விப்பார்
பௌவங்கொண்முரசதிரப்பள்ளியினில்வைத்தார்கள். ௧௩௫

அடல்வலித்திண்மழுப்படையானயன்றலையொன்றுகிரினிற்கொய்
திடரியநாண்முதற்றளக்கோரிடமிறந்ததெனும்பரிவு
கடலனையபடைத்தானைக்கலிகாலனுவகத்தைத்
தடமனையாக்கொண்டொழிந்தாடுவளமலர்ச்சேக்கையினாள். ௧௩௬

நிழலுயிர்க்குமணிக்கச்சுநிரம்பவிடைத்தலம்வீக்கிக்
கழலுயிர்க்குநோன்றாளான்கதிர்ப்பலகைநாந்தகம்வெவ்
வழலுயிர்க்கும்வேலாதிப்படைத்தொழிலுமடையார்நெஞ்
சழலுயிர்க்குங்களிறுதியூர்தொழிலுந்தொடங்கினான். ௧௩௭

க்யிற்கழலானெவர்யாதுகண்ணினுந்தாழாதளிக்குஞ்
செயற்புதுமைதனைநோக்கிச்செயிர்த்துடலுமமர்க்களத்தி
லுயிர்ப்பலிவேட்டொருமலையுமொவ்வாதபுயமலையிற்
சயப்பெருஞ்சூர்மடக்கொடியுந்தறுகணொடும்வீழ்றிருந்தாள். ௧௩௮

உரியதிருப்பருவத்தினுபநயனச்சடங்கியற்றி
யரிலறுக்குமறைபயிலக்குசனுபநாச்சிரமத்
தெரிதவழுமிலங்கிலைவேலிருந்தாதையுய்ப்பவவண்
வரிகழற்காற்கலிகாலன்மறையோதிவளர்நாளில். ௧௩௯

விண்ணுலகந்தடந்தோளினமேதகனைத்தருள்வேந்தன்
மண்ணுலகினுயிர்த்தனமயான்மறுவேந்தாயவ்வுலகி
னண்ணியரசாளுதற்கேடப்பான்போலுலகமெலாங்
கண்ணிறைநீர்சொரியவுடல்கழித்துமனுவிண்புகுந்தான். ௧௪0

நம்முடையமகற்றழுவுநகைமணிப்பூணயிராணி
விம்முமுலைபுணர்வதுநும்மேதகைக்கொண்ணுதென்னக்
கொம்மெனப்போமிறைவனைப்பின்குறுகிவிலக்குறுவாள்போ
லம்மலர்ப்பூங்குழன்மாதுமழன்மூழ்கியுடன்போந்தாள். ௧௪௧

தந்தைதாயிருவர்களுந்தாரணியின்வாழ்வொழிந்து
சுந்தரஞ்சேர்விண்புகுதத்துவன்றியெழுந்தரியலர்கள்
சிந்துமணிப்புனற்பொன்னிச்சோணாடுதெவ்வுதலு
மந்திரிகளரசின்றிமனந்தளருமவ்வேலை. ௧௪௨

கவலாதிர்மனுபயந்தகான்முலைதானுளன்கண்டீ
ரவமாறுங்களிற்றரசைத்தளையவிழ்த்துவிடுமினெஃ
துவராழிப்புவிவியப்பக்கொணருமெனவுயர்விசும்பிற்
சிவவாய்மைமொழியொன்றுதிகழ்ந்தெழுந்ததுகேளா. ௧௪௩

விம்மாந்துபகைபுலம்பவேரோடுமிரித்துலகிற்
றம்மாவித்துணைவேந்தன்சக்கரஞ்சென்றிடுநாளிற்
செம்மாந்துகளிதூங்கிச்சிவபெருமானருள்வழுத்தி
யம்மார்ந்தகடக்களிற்றையலங்கரித்துவிடுத்தார்கள். ௧௪௪

மணியிருப்பாற்கலகலப்பமதசலங்கள்சலசலப்ப
வணிபலவுங்கதிர்கதிர்ப்பவடையலர்கள்விதிர்விதிர்ப்பத்
திணியுலகம்விதுவிதுப்பத்தேவர்களுங்குதுகுதுப்பப்
பணிலமுதலியமியம்பப்படர்ந்ததுவெங்கதக்களிறு. ௧௪௫

வீடணுகும்பெருங்காதன்மீக்கொண்டவினையொப்புக்
கூடினவர்குருத்தேடிக்கொட்புறல்போற்றிசைதிசைபோய்
நாடுமவர்குருப்போலநடிப்பவரைவிலக்குதல்போ
லீடிலெதிர்ப்படுமரசர்யாவரையும்விடுத்தேகும். ௧௪௬

விரைவிலிலைப்புரைகிளைத்துவிறல்வேழங்குசநாபன்
புரையறுசீராச்சிரமம்புகுந்தாங்குவீற்றிருந்த
வரையர்குலத்திருமகனையண்முதலுமுடன்பயிலுங்
கரையுமறைமுனிவர்சிறார்கையகன்றஞ்சினரிரிந்தார். ௧௪௭

வெண்ணிறக்குஞ்சரங்கடவும்வீறமையங்குசந்தனது
தண்மலர்க்கைத்தலையொன்றித்தயங்குதல்போற்கிடங்தொளிரு
மொண்ணிறவங்குசவரியாலோச்சியிவர்வான்முயலுந்
திண்ணியமன்னனைவணங்கித்தெறுகரிமேற்பரித்ததே. கசஅ

அண்ணன்மதக்களியானையார்ங்கண்ணிமுடிவேங்தைப்
புண்ணியஞ்செய்தன்னெருத்தமிசைத்தாங்கும்பொறையாற்றி
யெண்வகைமாதிரந்தாங்குமினக்கரிகள்பொறைநீவி
யுண்ணிலவுங்களிதூங்கவுதவிவழங்கியதன்றே. கசகூ

கருமேகமிசைவிடியற்காலையெழுஞ்செங்கதிர்போ
லொருவேழமிசைத்தோன்றுமொன்னலர்சூளாமணித
னிருபாதங்தொழுதிபத்தின்பின்னணைந்தவெல்லோருங்
குருநாட்பங்கயமலர்க்கைகூப்பிமுடிகோட்டினர். கரு0

நுந்தைபணிகேட்டேங்கணுன்பணியுக்கேட்பவிவண்
வந்தனமென்றேத்துதல்போல்வயிர்வளைவேய்ங்குழல்வீணை
துந்துபிதண்ணுமைமுழவந்தொகுமுருடுதகுணிச்ச
மெந்தவகையியங்களுமுன்னியம்பியவேழ்கடலமுங்க. கருக

மைவண்ணக்கரடமதமலைவணங்கிப்பிடரேற்றுஞ்
செவ்வண்ணமலர்முகத்தோன்செம்மாந்துகளிப்புறலும்
பௌவங்கொள்புவியகத்தோர்பயின்மகிழ்ச்சித்தலைநின்ற
ரவ்வண்ணமுலகாமால். கருஉ

கண்டவர்கண்முகவனசக்கடிமலருமகமலரும்
விண்டலர்ந்துகளிதூங்கிவிளங்கியதுமொருபுகழோ
தண்டரளப்பூண்மார்பிற்றூர்வேந்தனிருள்சீத்து
மண்டலமெலாம்விளக்குமிரவிமருமானென்னில். கருங

தொழுந்தகைமைப்பேரமைச்சர்தொல்லுலகம்புரிதவத்தின்
கொழுந்தனையசெம்பியர்தங்குலவிளக்கைப்பகைவெருவ
வெழுந்தசினக்களிற்றெருத்தமிசைநின்றுமிழிச்சினர்
செழுந்தரளமணித்தொங்கன்முடிகவிக்குந்திறம்புரிவார். கருச

பாயினவிண்ணவர்தத்தம்பதியிருந்தாங்கிருந்தரசன்
மாயிருமண்மகட்புணரும்வளநோக்கவமைப்பார்போற்
சேயிரவிமுதலானதேவர்பதிமேனிழற்ற
வாயிடையேவிதியுளிப்பொன்னலங்கொளிமண்டபஞ்செய்தார். கருரு

மின்னசும்புமழமடவார்வெகுண்டுறப்பாற்றன்மைத்தெறுதன்
மன்னவன்முன்முறையிலோன்வந்தனபோற்கனிவாழை
துன்னுபசுங்கரும்பிளநீர்தொகுங்கமுகுமுதலாய
பொன்னவிர்தூண்டொறுநிறைத்துப்பொற்பணியலங்கரித்தார். கருசு

புண்டவழ்வேற்படைத்தங்களிறைவன்பொற்பினைநோக்க
வண்டர்குலமண்மையினிலண்மிநெருங்கியதேய்ப்பக்
கண்டவழச்சித்திரித்தகாமருபட்டாதிகளான்
மண்டபமெங்கணுமலங்கிவளங்கொழிப்பவிதானித்தார். கருஎ

நறும்பூவுமலர்த்தாதுநகையொளிர்பொற்சுண்ணமொடு
புறம்போதச்சிந்தியகிற்புகைபுகைத்துவிண்ணவரு
மிறும்பூதுகொளவுள்ளாலெழிலியகம்பலம்விரித்திட்
டுறும்போகநிலமுமதற்கொவ்வாமைக்கவின்செய்தார். க௫௮

ஊற்றிருந்துகவின்றுளும்புமுருகெழுமண்டபமென்னு
மேற்றமலிமகன்மார்பிலிலங்குமணிப்பணியென்ன
நாற்றிசையுமதிசயிப்பநாப்பணவமணித்திரளால்
வீற்றிருக்குஞ்செழுந்தவிசுவிற்பயிலக்குயிற்றினர். க௫௯

கடக்களிற்றைக்கண்கட்டிக்காவலனைக்கொணர்பாக்கு
விடுத்தனர்களமைச்சரெனுமிகுமொழியேவிறல்வேந்தற்
கடுத்தமணிமுடிசூட்டப்பிடுமுடங்கலாக்கொண்டு
தொடுத்தவிழாவணிகாணயாவருந்தொக்காரன்றே. க௬0

காட்டகத்துமிறைமகற்குக்கறைவாங்குந்திறமேய்ப்பப்
பாட்டளிசூழ்மலர்ச்சூதப்பசுந்தழையுந்தருப்பைகளு
மீட்டமுறாமிதைகளுமேனையவுங்கைக்கொண்டு
நாட்டுமறையந்தணர்கணலங்கிளரத்திரண்டணைந்தார். க௬க

ஐயனிருதோண்மணந்தவரமகளிர்பிரிவாற்றார்
தொய்யின்முலைவேற்றுருவாய்த்தொக்கருகிலிறுத்தனபோன்
மொய்யிழைசூழ்பொற்கரகமுரிமணிக்கும்பங்கள்
பையவிதியுளிநிறுவும்பாங்கரெலாநிறுவினர். க௬௨

தன்னுடையவிறையாகித்தமனியவானுலகாண்ட
மன்னனெனுமுரிமையினன்மழைமேகம்வான்கங்கை
துன்னியதீர்த்தங்கொணர்ந்தாற்றுலையமதக்கரியெருத்தின்
மின்னுமணிக்குடத்துவருவிரைப்புனல்பெய்தருச்சித்தார். க௬௩

மடங்கலொடும்புப்பிடர்பிதிரமன்னுமணித்திரள்குயின்ற
விடங்கொளுமாதனம்பூசையியற்றியதற்கெழில்செய்தாங்
கடங்கருந்துப்பயிலிலைவேலண்ணலைமேலிவர்வித்துத்
தடங்கெழுதெய்வக்கலசத்தண்விரைநீராட்டினர். க௬௪

மெல்லியநுண்ணிழைத்துகிலான்மெய்யீரம்புலர்த்தியபி
னெல்லுமிழுங்கறைகண்டத்தடிகடிருநீறன்றி
யெல்லுமிழுமணிசிறவாதென்பார்போன்முன்னுதலின்
வில்லுமிழ்நீறணிந்தணிகண்மெய்முழுதுமலங்கரித்தார். க௬௫

கோள்பலவுமிறைமகற்குக்கோளுறுமாறொருகாலைத்
தாள்பிறழத்தங்கிடினுந்தங்குமெனநினைந்தவழ்றை
வாள்பயிலமுறைபிணித்துவைத்தனபோன்மணிகுயின்ற
நீள்பசும்பொற்கதிர்மோலிநிலம்வியப்பமுடிகவித்தார். க௬௬

அனையசெழுங்கோள்பிணிப்பினகன்றுவிசும்படையாமற்
புனைகழற்கால்வளவர்பிரான்புகழ்வளைந்துகாப்பதென
நினைவரியபெருங்காட்சிநீடொளிமணிக்காம்பின்
சனைகதிர்முத்தவிர்கவிகைகவின்றுளும்பமேற்கவித்தார். க௬௭

திருமுகமுந்தடங்கரமுஞ்செழுங்கழலுமெனுங்கமல
மருமலருளுயர்ந்ததனில்வாழ்க்கையுறவுயர்ச்சிதெரிந்
திருபுறமுந்துணையன்னமிடைதெரியாதலைவதுபோற்
குருநிலவியொளியுகுக்குங்கோமளச்சாமரையசைத்தார். ௧௬௮

கண்டவர்களதிசயிப்பக்கதிர்த்தெழுந்தவிறைபுயத்து
விண்டலருமலர்த்தொடையல்விரைகமழுமதுநசையான்
மண்டிவருந்தேனினமும்வரிச்சுரும்புமகற்றுவபோற்
றண்டரளவடஞ்சூழ்ந்தசாந்தாற்றிமருங்கலைத்தார். ௧௬௯

பழுதில்கரகங்கடொறும்பாவித்ததெய்வதத்தின்
செழுவளமைதன்னிடத்திற்செறிந்ததிறன்றெரிப்பதுபோ
லொழுகிமையாடாதுயிர்மேலோங்குமருளுக்குதவி
யெழுதரியதிருவடிவினிறைமகனும்வீற்றிருந்தான். ௧௭0

மனுவேந்தனுயிர்நீங்கிவானவனையுமன்றுமுதன்
முனிவாயதுயர்கூர்ந்தமுண்டகப்பூந்தனிச்சேக்கைக்
கனிவாய்ச்செந்திருமாதுங்கலிகாலப்பெருவளவன்
றனிமார்பம்புணர்ந்தின்பசாகரத்தினழுந்தினள். ௧௭௧

பணிவேந்தன்பொறையொழிந்துபஃறலையுமயர்வுயிர்த்தான்
றணியாதபசியொழிந்தாமெனவமரர்தளர்வகன்றார்
மணிமோலிப்பகையரசர்மனத்தருக்குமுழுதவிந்த
பிணியாவுமொழிந்துலகம்பேருவகையெய்தியதால். ௧௭௨

கலிநிலைத் துறை.

புரசைமால்களிற்றுடனெளிதரப்பொதிகொண்ணா
வரசர்முன்சொரிகையுறையனைத்துமந்தணரும்
பரசுநால்வகைக்கவிகளும்பாணருங்கவர்ந்தார்
முரசமார்த்ததன்னவர்கலிமுடிபறைநிகர. ௧௭௩

பூண்டொறுந்தமதலர்விழிபூத்தமைதெரியா
ரீண்டிமெய்யெலாம்விழிகளாயிருந்தவென்றெண்ணிக்
காண்டொறும்பிரான்வலாரியென்றியாவருங்கரைந்தா
ராண்டமன்னனுமறிந்தனரோவெனவயிர்த்தான். ௧௭௪

உலகிலீண்டியகலியினைத்துரந்துசென்றேப்பி
விலகுகாவலாய்த்திசையினும்விண்ணினும்பரந்து
நிலவலுற்றதுநெறிமுறையரசுபூண்டிறைவன்
குலவுமற்றைநாளவனுழைக்கொழித்தெழும்புகழே. ௧௭௫

இன்னவாறுமண்மகளினைமணந்தபின்னிறைஞ்சி
மன்னர்மன்னநின்மரபுளோரரசுவீற்றிருந்த
பொன்னளாவியவிருக்கையிற்புகுதுகவென்று
நன்னர்மந்திரக்கிழவர்கணவின்றனர்கேளா. ௧௭௬

புரவிதேர்கரிபண்ணுகபுரவலர்யாரு
முரவுவாய்ந்ததம்மூர்தியிற்சூழ்ந்துடனுறுக
விரவலாளர்களிருநிதிபெறுகவென்றேவிக்
குரவன்சேவடிபணிந்தருள்கூர்விடைகொண்டான். ௧௭௭

சங்கமாதிகண்முழங்கவார்கொடிநிரைதகையப்
பொங்குதானைகள்புவிநெளிதரப்புடைசூழத்
திங்கள்வாணுதன்மங்கையர்திருநடம்புரிய
வெங்களிற்றணியெருத்தமேல்கொண்டுசென்றணைந்தான். களஅ

அரும்புவிண்டலர்கயங்களுமலர்சொரிபொழிலுங்
கரும்புஞ்செந்நெலுங்கதலியுங்கமுகியபணையு
மருங்குபம்பியவளம்புனற்பொன்னிநாடெய்தி
நெருங்குமாளிகைத்தன்னுடைநெடுநகர்புகுந்தான். களகூ

பந்தர்தோரணம்பூரணகுடம்பலகொடிக
ளேந்தவெண்ணிலவளங்களுநிரம்பியேர்வயங்கு
மந்தண்மாநகர்வீதிகளளவிலகடந்து
முந்தையோர்பயில்கோயிலினடைந்தனன்முறையால். கஅ0

அரசுவீற்றிருந்தாலயத்தெம்பிரார்கான
வரிசையாவையுமூர்தொறும்வழாவகைநடத்திப்
புரிசைசூழ்ந்தபொன்னகர்செலுத்தரசினும்பொலியக்
கரிசெலாமறுத்தாண்டனன்கனைகழுலகம். கஅக

வணங்குமன்னவர்தமக்கெலாந்தனதுவண்குடைக்கீ
ழிணங்குமண்டலம்பாத்தளித்தருளினனிறைஞ்சா
தணங்குபோர்க்களத்தேற்றவர்தமக்குமுன்னுண்ட
கணங்கொள்கற்பகநாட்டினைக்கொளவிடுத்தான். கஅஉ

காழிலாவறுபத்துநான்கெனுங்கலையானும்
வாழிவென்றுவென்றலைகடல்வரைப்பெலாநாட்டுங்
கேழில்வாகையமதலையுங்கிளர்மறைமுறையான்
வேள்வியாற்றியயூபமும்பிறந்தனவநேகம். கஅங

வாழுநாளொருகாலத்துக்காவிரிமலிநீ
ராழியாமெனநாடெலாம்பரத்தலுமலகில்
சூழியானைவேன்மன்னவர்யாரையுந்தொகுத்துப்
பாழிநீள்கரைபடுத்துநீரொழுங்குறப்பணித்தான். கஅச

கயிலைநாயகனருளியவாணையைக்கருதிப்
பயிலுங்காஞ்சியைக்காடுகொன்றிருநகர்படுப்ப
வியலும்வாஞ்சையிற்போதுவானுழையரையேவிச்
சயநிலாவியதானையைத்தருகெனக்கிளந்தான். கஅரு

ஒருகைமார்பகம்பிணித்துமற்றொருகைவாய்புதையா
வருளும்வாய்மொழியஞ்செவிநிறைத்தவவ்வியவா
விரைவினேகினர்விறற்கழல்வேந்தனுமெழுந்து
திருவனூர்பயிறமணியக்கோயிலிற்சென்றான். கஅசு

விசும்பினின்றிழிவேந்தனைத்தாதியர்விழைவாற்
பசும்பொற்பீடிகையிருவினர்பனிகுலாம்விரைநீ
தசும்பினேந்தினராட்டினர்தணத்தனரீஈ
மசும்புசந்தனக்கலவைமெய்யழகுறவணிந்தார். கஅஎ

சூடுமூவிருசுவையுமார்நால்வகையுண்டி
யோடுவாளரித்தடங்கணிணுயிரனூரொண்கேழ்
பாடுதங்குபொற்கலத்தினிற்பண்பொடூட்ட
வாடுநீள்கொடிக்கொற்றவனுகர்ந்தணியணிவான். ௧௮௮

கலிவிருத்தம்.

கருமுகிற்குலமெனக்கருதிவந்துமின்
மருவிநின்றிமைப்பனமானப்பொங்குநெய்
முருகவிழ்சிகையினைமுடித்துவில்லிடும்
பொருவறுகாஞ்சனப்புரியிஃயாத்தனன். ௧௮௯

பந்தியிற்செறித்தபன்மணியின்கோவையைக்
கந்தரம்வாங்கியகாமர்வில்லெனு
மந்தரமனையதோண்மன்னர்மன்னனச்
சுந்தரச்சிகழிகைசூழ்ந்திட்டானரோ. ௧௯0

திருமகடனதெனச்சினந்துவெற்றிகொ
ளொருமகடனதெனுமுலங்கொடோளினன்
பெருமழைதுவற்றியபெற்றிபோலவாட்
குருமலரலங்கறேன்சொழிப்பவேய்ந்தனன். ௧௯௧

மாதராருரியினைவாங்கும்வல்லியி
னீதுதானெனமனத்தெண்ணினன்பொரப்
போதளாஞ்சிகழிகைமறையப்பொன்குலாஞ்
சீதவான்மணிமுடிசென்னியேற்றினன். ௧௯௨

ஈட்டியசெழும்பிரதாபவெல்லினல்
வாட்டமுற்றடைந்தவிண்மணியைத்தன்குலச்
சேட்டொளிக்கதிரெனத்தாங்குஞ்செய்கைபோ
லோட்டொளிப்பட்டமொண்குளத்தில்வீக்கினன் ௧௯௩

அழகெனுந்தேன்வழிந்தொழுகுமானனச்
செழுமணித்தாமரைச்செய்யபூவின்மேல்
விழுமியதிருமகள்வீற்றிருந்தென
வொழுகொளித்திலதமுமாங்குறுத்தினன். ௧௯௪

சுந்தரவுருவினற்றேற்றவேள்விட
வந்திடுமவன்கொடிமருங்குநண்ணுபு
மந்தணமிசைப்பதுமானக்காதினிற்
கொந்தொளிமகர்குண்டலங்கொளுத்தினன். ௧௯௫

காரிகைமடந்தையர்கருங்கட்கூர்ங்கணை
போரியன்றெய்வனபொறுப்பவச்சிரச்
சீரியகவயமேற்சேர்த்திட்டாலென
வேரியலங்கதந்தோளிலேற்றினன். ௧௯௬

இருந்திறற்றன்பிரதாபமெங்கணும்
பரந்ததுவளைத்தமைதெரிக்கும்பான்மையி
னூரந்தழைதோளினொளிர்ந்தசெம்மணி
நிரந்தபொற்கடகங்கைநிலவவேற்றினன். ௧௯௭

உருவினிற்சிறியராயுற்றுநோக்குழிப்
பெரியராந்தவத்தினிற்பெரியமாந்தர்போ
லுருவினிற்சிறியவாயுலகெலாம்பெறும்
பெருவிலைமோதிரம்பிறங்கவிட்டனன். ௧௯௮

மின்னுறழ்வேணியாற்கடிமைதோற்றுவான்
றன்னுடைக்குலத்தவர்தரித்தவார்ந்தொடைப்
பொன்னரிமாலையும்பூவின்மாலையும்
பின்னியமார்பினிற்பிணையச்சாத்தினான். ௧௯௯

துளிக்குநெய்க்கருங்குழற்றோகைமாருயிர்
விளிக்குமென்றல்குலைமறைத்தமேதகு
பளிக்குவெள்ளுடையின்மேற்பசும்பொனம்பரங்
களிக்கும்வேன்மன்னவன்கவினச்சுற்றினான். ௨௦௦

மறக்கொடுந்தானைகண்மலிந்துமுற்றினும்
புறக்கொடைகண்டலாற்போரினீங்கலாத்
திறற்குரித்தொழின்மையைச்செப்பிநின்றென
நிறக்கருங்கழலொலிநிகழ்த்தக்கட்டினான். ௨௦௧

மற்றையவணிகளும்வயங்கமெய்ப்படுத்
துற்றவச்சூழலையொருவிமற்றொரு
பொற்றபூஞ்சூழலிற்புக்குவேதியர்க்
கற்றுநல்கூர்ந்தவர்க்கம்பொன்வீசினான். ௨௦௨

இழைகளுமணிகளுமெண்ணில்பொன்களும்
மழைநிகர்களத்தவர்மகிழுங்கோயிலுக்
குழையவரைக்கூய்க்கொடுத்துற்றுச்சங்கொலி
தழைவுறக்கோயின்முன்வாயில்சார்ந்தனன். ௨௦௩

ஏவலருரைத்தலாலேற்றுவல்லையிற்
காவலர்தொகுதியுங்களிறுந்தேர்களும்
வாவுமாத்திரள்களுமள்ளரீட்டமுந்
தாவருமமைச்சருந்ததைந்தபாங்கரும். ௨௦௪

இளையரும்பாணருமேனையோர்களு
மளவிலர்துவன்றினராங்குநோக்கினா
னொளியுமிழ்பருயவல்லொருத்தல்யானைமேற்
களிமயின்முருகனிற்காணவேறினான். ௨௦௫

கலிநிலைத்துறை.

சழங்கரின்புகழ்மதியெனைச்சமர்விளைத்தலைக்கும
பழங்கண்டீர்மதியெனப்படர்ந்தொளிர்பணிக்கிரணப்
வழங்குவெண்மதிவிடாதுடன்றொடர்வதுமானக்
குழங்கன்மாலைசூழ்முடிமிசைக்குருஉக்குடைநிழற்ற. ௨௦௬

பருப்புவாய்ந்துசேர்ந்தொழுகியபனைக்கையைநெருக்கு
மருப்புவாய்ந்தெழுமரசுவாவெனுமணிதயங்கும்
பொருப்புவாய்ந்திருபுறத்தும்வெள்ளருவிதுள்ளியபோல்
விருப்புவாய்ந்துநின்றிரட்டுசாமரைபுடைவிளங்க. ௨௦௭

அசும்புபூங்கதிர்ப்பொலங்கலனொளியினல்யாக்கை
பசும்பொன்மாநிறம்படைத்தகைமாவினும்பர்கள்சூ
ழிசும்பின்மேருவினிலங்குமத்திறம்பொரவெழுந்து
விசும்புதைவருப்புலிக்கொடிவயங்கிமுன்மேவ. ௨௦௮

கிடுகுசூழ்மணித்தேர்களெண்ணிலகிளரொளியிற்
புடையெலாநெரிதரக்களிறவற்றுடைப்புறத்தி
னடையவாம்பரியவற்றுடைமருங்கெலாமடரப்
படைகள்யாவையுமவற்றுடைப்பாங்கரிற்பரவ. ௨௦௯

இயங்களாதியதழங்கொலியிடிக்குரல்காட்டக்
கயங்களூற்றியகடமழைத்தாரையைக்காட்ட
வயங்கியாடுநன்மாதரார்மின்னினைக்காட்டத்
தயங்குபன்னிறமுகில்பொருங்குழாத்தொடுஞ்சார்ந்தான். ௨௧௦

முத்தினார்தியுங்கவிகையுமூரியங்கொடியும்
பத்தியாய்மிடைந்தெங்கணும்பகலுருக்கரந்த
மத்தயானையின்மன்னனையிரவிமற்றென்றே
சத்துநீர்ப்புவிக்கமையுமென்றெழிப்பதுதகைய. ௨௧௧

மகரதோரணம்பூரணகும்பங்கண்மலிந்து
சிகரமாளிகைசெற்றியதிருமகளுறைதன்
நகரவீதியிற்பகுந்தனனடந்தலுங்காணும்
மகரவார்குழற்றையலாரிவையிவைசெய்வார். ௨௧௨

தாள்வரிந்தபொற்கழலினன்றன்னொளிக்கஞ்சி
வாளுலாங்கணார்வாழ்மனையுட்புகுந்தொளிக்கும்
கேளலார்பிரதாபத்தைக்கெழிஇக்கொணர்ந்திறுத்தாங்
காளும்வேந்தன்முன்னரக்குநீர்சூழ்த்திமண்கவிழ்ப்பார். ௨௧௩

பரந்தமன்னவன்புகழினைப்பயந்திலந்தோறுங்
கரந்தவேற்றவர்புகழையுங்கவர்ந்தனர்கொணர்ந்தாங்
குரந்தவாக்களிற்றடியின்கீழ்ப்படுத்தொழிப்பார்போ
னிரந்துமண்ணெலாமறைதரவெண்பொரிநிறைப்பார். ௨௧௪

வண்டுசூழ்பசுந்தொழாய்த்தொடையன்றுமார்பகத்திற்
கொண்டதீர்ஞ்செழுஞ்சாந்தணியாதலாற்குனிகோ
தண்டவார்சிலையானலனிவன்றடக்கையில்வேல்
கண்டலாலுமைகான்முளைபோலுமென்றறைவார். ௨௧௫

கோழியான்குறுகாருயிர்குழைதரச்செலுத்து
மாழியானெனவிருந்தெழுந்தார்த்தலாலிவனே
வாழிவேளெனமதித்துமோகாஞ்சியிற்றவத்தாற்
காழினீங்குமாலென்றுமோவென்றனர்கரைவார், ௨௧௬

வேட்டயாவையுமிரக்குன்வீசிடுந்திறத்தாற்
கோட்டந்தீர்மனப்பெருந்தகைதவத்திறற்குழைந்து
வாட்டமுற்றலர்ல்வரங்கொடாவானவர்தம்மா
லீட்டரும்புகழ்படைத்தவேற்றமரனேயென்பார். ௨௧௭

முருகவேள்களிறூரவம்முருகனைத்தணவாத்
திருவில்வீசியகலாவமாமஞ்ஞையூர்பின்சேறல்
பொருவவேலவன்குஞ்சரத்திம்பரோர்பொலங்கொம்
புருவனாள்குழலைப்பமால்கொண்டுடன்புடர்வாள். ௨௧௮

கொழுதுதேனிமிர்தொடையலங்கோனவனழகு
முழுதுங்காணியதம்மெதிர்முன்னவெங்களிற்றுக்
கெழுதுதொய்யிலைக்கரும்பிதோவென்றுகாட்டுநர்போற்
பழுதிலாமணிக்கச்சுகநிற்பர்கள்பல்லார். ௨௧௯

இரும்புபாய்ந்துபுண்ணணங்கியமத்தகந்தமது
பெரும்பொன்மேகலையல்குன்மத்தகத்தெழில்பெருமை
சுரும்புமூசியகடகரிக்குணர்த்துவார்துணைய
விரும்புநீவியுமிழ்ந்தனர்வெறியராய்நிற்பார். ௨௨௦

களிறுதேர்பரிமுதலியவேண்டினர்கவாக்
குளிறுவார்முரசிறைக்குநங்குருமணிக்கச்சோ
டொளிறுவாள்வளைகலைகவர்ந்துதவிடாதேகும்
வெளிறுமாத்திரையிருந்ததெம்விதிப்பயனென்பார். ௨௨௧

வள்ளல்காமருக்குருவுடன்மதனிருந்தானே
லுள்ளமாழ்குவனெனநினைப்புகழ்ந்தனமுதற்கே
புள்ளவாந்தொடைப்புயத்தவப்போர்மதன்வெகுண்டு
கள்ளவார்கணைதொடுத்தனன்காண்மதியென்பார். ௨௨௨

தீயமன்னவனுறினுமாடவர்க்கலாற்றீங்கு
பாயமேகலைமாதருக்கியற்றிடான்பழிதீர்
தூயனாகியுமெங்களைத்துயர்செயலழகோ
காயும்வேலவகடைக்கணித்தருளெனக்கசிவார். ௨௨௩

நடையினாணினைநகைத்திடுநங்கள்பான்மறலிக்
கொடையினாலுயர்குமரனைக்கொணர்ந்தெமதுளங்க
ளுடையுமாறுகண்டாய்தகுந்தகுமுனக்கென்னாப்
புடையுலாவியகுஞ்சரநோக்கினர்புகல்வார். ௨௨௪

மறலியாடியமன்னரைமறலிகையாடுந்
திறல்செய்வானெழிலோர்க்குமுன்னுழிதியேற்சினவி
யறலின்வார்மதக்கவுளினாயலர்முலைக்கோட்டால்
விறலிலாவகைவேறுநின்கோட்டினையென்பார். ௨௨௫

பிடிகளாமெனத்தம்மையேபெட்டருகணைந்த
கொடியபோர்சவட்டரசுவாக்கொழுந்துளைக்கரத்தாற்
றொடிகுலாவியதோளினைக்கரும்பெனச்சுழிப்ப
வடிகள்பூவிடவெடுப்பதாமெனவகங்களிப்பார். ௨௨௬

அலகிலாதபல்லுயிர்களும்விம்மிதமடைய
வுலகெலாங்குளிர்செய்யுமிக்காவலர்க்குவமை
விலகுதன்னுடைவனப்பினால்வினையினைமுளத்தி
லிலகுகாமவெந்நெருப்பிடலிசைவதோவென்பார். ௨௨௭

கனைகதிர்ப்பொலந்தாரினான்காமவேளுடற்ற
வினையுநம்முகநோக்கலனிவன்றிருக்காஞ்சி
வனமழித்தெழில்புரிந்தலான்மடந்தையர்ப்பாரா
நினைவுபூண்டுயர்விரதநேர்ந்தான்கொலோவென்பார். ௨௨௮

வட்டவெண்குடைமதிக்குடையாகுமன்னவனும்
பட்டவேளுருப்படைத்தவனுமெனப்படர்ந்து
மொட்டுலாமுலைக்கணைபுயக்கருப்புவின்முறையாம்
பெட்டுநின்கரத்தணைப்பதுபெருமவென்றணைவார். ௨௨௯

இருளுலாங்குழன்மாதர்கள்பலருமிவ்வாறு
மருளுலாமதன்கணைக்கிலக்காயினர்வழுத்தத்
தெருளுலாந்திறன்மன்னவன்றிண்களிறுகைத்துப்
பொருளுலாந்தனதணிநகர்கடந்தனன்போந்தான். ௨௩௦

கதிகொள்சேனையின்முழக்கினைக்காரெனக்கருதி
வதியின்பாங்கமரிலஞ்சியோர்திமங்கள்வான்புகுவ
துதிகொளிந்திரன்புவியினிலரசுசெய்தோற்ற
நிதிகொள்வானவர்க்குரைத்திடப்போவதுநிகர்ப்ப. ௨௩௧

பொன்னிமாமனையாடனைப்புணர்ந்திடாதிகந்த
தென்னையோமனக்குறிப்பினையறிதுமென்றெண்ணிக்
கொன்னும்வார்கடல்குறுகினனெனப்படைக்குழாத்தோ
டன்னமாடுபூங்காவிரிகுறுகியங்ககன்றான். ௨௩௨

நாடும்பற்பலகானமுநகரமுங்கடவா
வோடையானையினொருகுடைமன்னவனடைந்தா
னீடுமன்பர்களுளத்தினுஞ்சிரத்தினுநிருத்த
மாடுமெண்ணலார்காஞ்சிமாநகரணித்தாக. ௨௩௩

கொச்சகக்கலிப்பா.

பொன்னாடர்கோன்வருவானெனப்பெருமான்புகன்றமொழி
முன்னேபெற்றுறுங்காஞ்சிமொய்குழற்றெய்வதமின்னு
மென்னேவந்திலனென்றுதனேவானத்திடைதுருவத்
தன்னார்கைத்தலநிமிர்த்தாற்போன்றதளிர்வனங்கண்டான். ௨௩௪

புரவுபெருமானருளாற்காஞ்சிவளம்பயிற்றவரும்
வரமுணர்ந்தவ்வயின்முன்னேதனைக்காணவந்திருக்கு
மரமகளிர்காண்டலுநின்றாட்டயர்வதெனவளிபாய்
குரவமலர்க்கொடிபலவுங்குழைந்துநுடங்குவகண்டான். ௨௩௫

தமதுருவமொருகாலைத்தழீஇக்கொண்டநெடுவிசும்பி
னமரர்கணாயகன்வந்தானெனத்தனைக்கண்டார்வமொடு
குமரிமயிற்குலமுமிருள்கூர்நிறத்தகுயிற்குலமு
மிமிழிசையுநாடகமுமெங்கணுமீட்டுவகண்டான். ௨௩௬

இந்திரன்வந்தடவியெலாமிறுக்குமெனாவிறைமாற்றந்
தந்ததுணர்ந்தெனக்காடுசினஞ்செய்துதானூருஞ்
சுந்தரவாகனமாகிச்சுலவுகருமுகிலினத்தை
யந்தரத்தினியங்குதொறுமடர்ந்துநெருக்குவகண்டான். ௨௩௭

விடமுதுக்கும்பணப்பாந்தள்விமலர்திருமார்பகத்துப்
படவரவத்தொடுமுறவுபாராட்டிப்பிலவழியே
யிடமுடைத்தம்பாதலத்துக்சேகுவபோற்றனேநோக்கித்
தடநெடும்புற்றனேகடொறுஞ்சார்ந்துகரப்பனகண்டான். ௨௩௫

ஆளவருந்தனேநோக்கியழிவுதமக்குற்றதென
வூளையிடுகின்றனபோலொளியுமிழ்மண்டலமறைய
நீளுமிருட்கானகத்துநிரந்தமலர்த்தருமுழுதுங்
காளகமென்சுருப்போதைகாட்டியசைவனகண்டான். ௨௩௬

இலகுமரக்கொளிபடைத்தபின்னருமீர்ந்துளவணிந்த
தலைவனவன்றமைநிகர்ப்பத்தாங்களுமங்குயர்தவத்தா
னிலவுமரக்குருவாய்ந்துநிற்பனபோற்பூவையெலாங்
குலவியகோங்குமிழ்தாதிற்குளித்தொளிருங்கவின்கண்டான்

ஓங்குபுளினத்தரிகளுருத்தழித்தகரிக்கோடு
தாங்குபொலம்பூங்கடுக்கைபிறைதவழுஞ்சடைத்தேவை
வீங்கியவன்பாற்றெழுதுமேவரியதவமுஞற்றி
யாங்கவனுயர்சாரூபமடைந்தவர்போல்வனகண்டான். ௨௪௧

வனமழிப்பவடைந்திடுந்தன்வரவறிந்துமுன்னுகச்
சினமொடுதம்முடனுமேசிதைத்திறப்பதெனவிலங்கி
னினமுழுதுமொன்றோடொன்றிகலியிருஞ்சமர்விளையா
வனலுமுழுநெய்த்தோர்கான்றுவிளிவனகண்டான். ௨௪௨

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இவ்வகைவளங்கணேக்கிவனம்புகுமெல்லையேழு
மௌவமென்றயிர்க்குந்தானேப்படரொலிகேட்டலோடு
மௌவியவேடராகியணங்கியசிந்துமேதன்
றெவ்வடுதிறன்மாமேதனிருவருஞ்சீற்றங்கொண்டார். ௨௪௩

நம்முடைவனத்தஞ்சாதுநண்ணியபடைகளெல்லா
மிம்மெனுமுன்னர்க்கோறுமெனத்தெழித்தெழுந்துவல்லே
தம்மினத்தவரைக்கூவத்தலைத்தலைநின்றவாண்மைத்
தெம்முனையடுவோர்வேடர்திரண்டனரொல்லைமாதோ. ௨௪௪

காட்டினிற்சரிக்கும்வேழக்கணங்கள்கண்டனையர்தோற்றத்
திட்டுவன்புலியேமன்னபாய்த்துளரெதிரொன்றின்றி
மாட்டுதற்றிறத்திற்சிங்கவலியினரெவர்க்குமுட்கு
மூட்டுறும்வெகுளித்தீயான்மூரியஞ்சரபமன்னுர். ௨௪௫

விளைத்திடும்வேட்டைதண்டாவினையினுன்மடங்கலூனுங்
களிற்றுடற்புலாலும்வேங்கைக்காழ்படுநிணமுநீரும்
குளித்தொளிர்வேலும்வாளுங்கோல்களும்வளையுந்தண்டுந்
திளைத்தகையினராய்முன்னர்ச்சென்றனர்செருவின்மூண்டார். ௨௪௬

சிலையினைநோக்கினுர்கடொரிகளைநோக்கினுர்கண்
மலையெனத்திரண்டதிண்டோள்புடைத்துவாய்மடித்துத்தின்று
ரலர்முகவுரோமங்கையிற்றிருக்கினுரழற்கண்சேந்தார்
கொலைமுகக்கூற்றமென்னக்கொம்மெனத்துள்ளிப்பாய்ந்தார். ௨௪௭

துடியினமார்ப்பக்காலிற்ருெடுகெழலார்ப்பவாணி
ணிடியெனவுலம்பியார்த்தாரெழுமொலிகேட்டலோடுங்
கடலெனமுழக்கம்யாதுகாண்கெனமன்னன்கூற
வடுவறுமொற்றரோடிவந்தனர்புளிஞரென்ருர். உ௪௯

படையொடுதலைவர்தம்மைப்பற்றினிர்தம்மினென்று
விடுதலுமவரும்விட்டார்த்தேகினுர்விளைந்தபூச
லிடைபடுமரமுந்தூறுமெறிந்தெறிந்திரண்டுகாதங்
கடிகையினகற்றினுர்கள்கணிச்சியிற்காலாண்மாக்கள். உ௪௬

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திரிந்ததாடியரிறுக்குகச்சினர்வரிந்ததிண்கழலினுர்மறஞ்
சொரிந்தவாய்தவகையரவுமேந்துமிருதோளர்சாலிகைகொண்மெய்யினுர்
புரிந்துபோரிலிடையாதவாற்றலினர்பொள்ளெனக்கடவுளேத்தினு
ரிரிந்துகூற்றுமுளமஞ்சநாணொலியெழுப்பினுர்கணைதெரிந்தனர். உ௫0

கங்கர்கொல்லர்கருநாடர்மாகதர்கடாரர்குச்சரர்கலிங்கர்கள்
கொங்கர்சீனர்குருநாடரொட்டியர்குலிங்கர்கொங்கணர்விதேகர்கள்
வங்கர்மாளவர்தெலுங்கர்பல்லவர்மராடர்பப்பரவர்கன்னட
ரங்கர்சிங்களர்களாதியோருமுடனூர்த்தெழுந்தனரொருங்கரோ. உ௫௧

தேர்களூர்ந்தனர்மதத்தயானைகள்செலுத்தினூர்பரிகளூர்ந்தினுர்
காரெனப்படைவழங்கினுர்படைகனன்றுவேடருய்வழங்கிரு
ரார்களற்றமலிதூசுமற்றகலினங்களற்றவிசிகச்சுடன்
வார்களற்றவினநாடொணுவகைமலைந்துளாரிருதிறத்தரும். உ௫உ

கூம்புடைப்பெரியதேருடைந்தனகுழாங்கொள்குஞ்சரமலிந்தன
வாம்பரித்திரள்விழுந்தமள்ளர்கண்மலங்கிவீழ்ந்துசிலர்மாய்ந்தனர்
தோம்படைத்தமறவேடருஞ்சிலர்துடித்துவீழ்ந்தனர்பெரும்பிண
மாம்பறந்தலையினேரிகங்கமலகைக்குலம்பிறவுமார்ந்தன. உ௫௩

கரமிழந்துரமிழந்துகாற்ருடையிழந்துகண்சிரமிழந்துசெங்
குதிருபொங்கவயமள்ளரெண்ணிலருடைந்துகொட்குமமையந்தனிற்
பெரிதுவெஞ்சமர்விளைந்ததோர்ந்துபிறைமாமருப்புடையொருத்தன்மா
கரியையூர்ந்துகலிகாலனுங்கடிதினேகினனவர்கள்கண்டனர். உ௫௪

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறங்கிடந்திமைக்கும்வேந்தைக்காண்டலுமளவாவீரத்
திறங்கிடந்திமைக்குஞ்சிற்றர்தீர்ந்துநின்வரவுநோக்கி
நிறங்கிடந்திமைக்கும்பூணுய்நெடிதிவணுறைந்தேஞ்சாப
மறங்கிடந்திமைக்குங்காஞ்சிவளம்படப்புரத்தியென்ருர். உ௫௫

கச்சிமாநகரைமுன்போற்கவின்பெறத்திருத்துகின்ரு
மச்சிவபுரத்துக்காறுகாட்டுமினுங்கணுள்ள
வெச்செழுவளமுஞ்சொன்மினென்றிறையியம்பலோடு
நச்சியவுளத்தாற்போற்றிநவிற்றுவான்சிந்துமேதன். உ௫௬

அண்ணலங்கருணைத்தோற்றத்தருந்தவரிருவர்நாளு
நண்ணிவாழ்ந்திருக்கின்ருர்கணுசியினுயிர்க்குங்காலா
லெண்ணுமூன்றிஃயாசனைக்குளிடைப்படுமுயிரையெல்லாந்
துண்ணெனவீர்த்துத்தின்றுதுளக்குமோர்பூதமுண்டால். உ௫௭

வனப்பினிற்சிறந்தபெண்மைவடிவுளனொருவனுள்ளா
னெனப்பிறபலவுஞ்சொல்லுமேல்வையிலவியாந்தண்ட
னனப்பொலிநடையோசிங்கத்தணிநடையோவென்றுள்ளக்
கனற்படைமன்னன்முன்னர்க்கடிதுவந்தடைந்தான்மன்னோ. ௨௫௮

மன்னனைக்காண்டலோடும்வன்னியிற்பஞ்சிட்டென்னக்
கொன்னும்வாய்முனிவன்சாபந்தீர்ந்துமுன்னுருவங்கொண்டான
றன்னிகர்சிந்துமேதன்றனுந்தொல்லுருவம்பெற்றான்
பொன்னவிரொளினுனும்புந்தியின்மகிழ்ச்சிபூத்தான் ௨௫௯

அவரொடுமௌவளாவியணிநகர்க்காஞ்சிபுக்குக்
கவலைதீர்கருப்பத்தானவதியெனுங்காளிதன்னைத்
தவலருவிதியிற்பூசித்தவடருந்தனிவாள்கைக்கொண்
டிவறினின்றுயிர்ப்பினீர்ச்சும்பூதமுன்னெதிர்தலோடும். ௨௬௦

அஞ்சியப்பூதம்யான்வாழ்வரைப்பினிலடைந்திட்டென்னை
நஞ்செனவழன்றுகோறனன்றுகொனினக்கென்றேத
வெஞ்சலில்லையமெல்லாம்யானரசளிக்குங்காலை
வஞ்சநின்னனையோர்க்கெங்கண்வாழ்விடமெனவப்பூதம். ௨௬௧

மாயிருந்திறலோயன்னதாகமானுடமாண்டொன்றற்
காயிரம்பலிதாவென்னப்பத்துநூறவரையீவே
னீயவைகோடிமற்றுநீடுயிரலைத்தியாயிற்
காயெரிவாளினீர்வல்காண்டியென்றுறுத்துநீக்கி. ௨௬௨

முரிதிரைசுருட்டுந்தெண்ணீர்முருகவிழ்கம்பைமூழ்கி
யெரியவிர்ந்தனையசெங்கேழிணர்விரிமாவின்மூலத்
தரியயன்பரசிக்காணுவண்ணலைப்பூசையாற்றி
யுரியபேரின்பவெள்ளமூழ்ந்தெழுந்தொழுதுபோந்து. ௨௬௩

செவ்விசேர்காமக்கோட்டத்திருத்தலம்புகுந்துகண்டோ
ரௌவியமிரிக்கும்பஞ்சதீர்த்தநீராடியாங்குக்
கொவ்வைவாயுமையைப்போற்றிக்கோமளையருளால்யாரு
மிவ்வெனவறியாமேன்மையெழிலறச்சாலைகண்டான். ௨௬௪

மங்கலநகர்முன்போலவளம்பெறக்காண்பான்முன்னச்
சங்கரிவளர்த்தநாலெண்டருமசாலைகளும்பொன்னாற்
பொங்கொளிமணியாற்செய்துபுதுக்குபுபின்னர்மாசித்
திங்கள்சேர்மகத்திற்கம்பந்திருநகர்நாப்பணட்டான். ௨௬௫

நால்வழிவீதிபோக்கிநொச்சிவிண்ணுரிஞ்சக்கண்டு
மேல்வளருலகநாணமேதகுநகரமாக்கி
நால்வகைவருணந்தோறுநான்குமூவாயிரத்து
சால்புறுகுடிகளேற்றித்தாபித்தானின்னுமன்னோ. ௨௬௬

திருவணிகரிணுட்டுந்தேசிகக்கொடிகள்ளாங்கித்
துருவனர்பிணித்துச்சுற்றுஞ்சூத்திரந்தட்பக்கொட்கு
முருவவான்கோளுநாளுமசைவறவும்பர்நிற்பப்
பெருநகர்ப்புதுமைநோக்கும்பெட்பொடுநின்றனமான. ௨௬௭

பாங்கரினுலவுந்தோறும்பதாகையினுதியைமேல்கொண்
டோங்கியகிரணம்பற்றக்கீழுறுகிரணமூலந
தாங்கவிண்சுடர்கணுப்பட்டயங்குவகழையிற்கோத்துத்
தூங்கியகயிற்றினேறும்பொருநர்கடுணையுமாதோ. ௨௬௮

கொடியலைந்தெறியுங்காற்றாற்கொட்புறுவளியாதாரக்
கடிபடுநாகநாடுகம்பியாநிற்குந்தோற்றம்
வடிவினிற்சிறந்தகாஞ்சிக்கீழுறவதியநாடெப்
படிமிசைவதிவதென்னும்பயத்தின்மெய்விதிர்ப்பதேய்க்கும் ௨௬௯

கங்கைநீர்த்திவலைதூவக்கற்பகம்வாசம்வீசத்
திங்களுங்கதிருங்கீழாச்சென்றுறவுயர்ந்தசெம்பொன்
பொங்குமேனிலையின்மைந்தர்பூவையரோடும்புல்லி
யங்கண்வானமரரென்னவரும்பெறற்போகந்துய்ப்பார். ௨௭0

கரிசறுகம்பையாடிக்கற்பகக்காவுளாடி
வருபெருந்தேவர்மாந்தர்வேற்றுமையறியமாட்டார்
சுரர்கடம்மிருக்கையென்றுமாந்தர்சூழ்மாடஞ்சேர்வார்
நரர்கடம்மிடமென்றும்பர்நயந்துறைமாடஞ்சேர்வார். ௨௭௧

நகருடைவனப்புநோக்கநாடியோநயந்துவேட்ட
தகவுறவளிக்குமாவின்றனிமுதலிறைவன்பாத
மகனுறுமன்பிற்போற்றமுன்னியோவறியோநாளும்
புகழ்பெறுமுகுந்தனுதிப்புலவராங்கணையுந்தோற்றம். ௨௭௨

கணங்கொளுங்கற்பநாட்டுக்கன்னியர்குழலிற்காஞ்சி
யணங்கனார்கூந்தலூட்டுமகிற்புகைநிவந்துசூழ்ந்து
மணங்கமழ்கின்றநீர்மைமதித்திடாரியற்கைவாச
மிணங்கியதென்றன்னோரையேத்துவரறியவல்லார். ௨௭௩

வேள்வியிலுண்ணப்புக்கவேந்துதன்மீட்சிநோக்கி
வாழ்வதோகொடுப்போர்கையின்வண்மையைக்கவரநன்கு
சூழ்வதோவறிதறேற்றேஞ்சுடர்மணிச்சிகரம்விண்ணம்
போழ்வளம்படைத்தமாடப்பொருப்பினிற்றவழுமேகம். ௨௭௪

முலையெலாங்கிள்ளுக்கொள்ளாமொய்குழன்மடவாரில்லை
தலையெலாம்புலவிமாதர்தாள்படாக்கொழுநரில்லை
கலையெலாங்கற்றுவல்லாக்கவிபடுபுலவரில்லை
சிலையெலாந்துவளவெய்யாத்திறல்படுவீரரில்லை. ௨௭௫

மின்னுகுகனகமேருமீமிசைக்கொடியைநாட்டி
மன்னனாயுலகமெல்லாமலரடிபடுத்துநீடும்
பொன்னுலகிறைவன்றானேபுதுக்கினானென்னிலந்தக்
கொன்னுடைநகரின்காமர்கூறலாம்படியதேயோ. ௨௭௬

இமையவர்துயின்றாரேனுமெழின்மணிமுரசந்துஞ்சா
வமைவுடைக்காஞ்சிவைப்பினரும்பெறற்காடநோக்கி
னுழையொடுங்கழ்பவாணர்க்கொலிவிழாநடாத்திப்பாரின்
சுமைபொறுத்தினிதுவாழ்ந்தான்றெறுகழற்கலிகாற்சோழன்.

அன்றினாராவிவல்லையழிதகமுறுவல்கோட்டி
வென்றிகொண்டிலங்காக்கும்விறற்கலிகாலனந்நாண்
மன்றலங்காஞ்சிமூதூர்மத்தியினாட்டுந்தூணை
யின்றுமெவ்வுலகுங்கச்சிக்கல்லெனவிசைக்குமாலோ. ௨௭௮

இருவினைப்பிறவிமுற்றுமிரித்தருள்கொழித்துமுத்திப்
பெருநலமினிதுநல்கும்பிரமாண்டபுராணந்தன்னின்
மருமலர்ப்பொகுட்டுவாழ்க்கைவானவன்சனற்குமாரற்
கருளியகாதைமற்றிங்கறைந்தனம்பிறவுஞ்சொல்வாம். ௨௭௯

நகரேற்றுப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௦௯௬

தீர்த்தவிசேடப்படலம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உரைபயில்காஞ்சிநகர்வயிற்றரங்கமொண்மணிநித்திலக்குவையும்
வரிவளைத்திரளும்பவளநீள்கொடியுமாழையுந்திரைத்தயலொதுக்கும்
விரைகமழ்தீர்த்தமெண்ணிலவவற்றுண்மேம்படச்சிறந்தமூன்றுளவாற்
புரைதபுமவற்றின்வளங்கெழுமேன்மைமுறையுளிப்புகன்றிடப்படுமால்.

வண்டடைகிடந்துசெவ்வழிபாடுமதுமலர்ப்பொகுட்டுவீற்றிருக்குங்
குண்டிகைக்கரத்தோன்மகவினைமுடித்துக்குளிர்புனலாடுவான்விளிப்ப
வண்டரும்வியப்பவளப்பருந்தீர்த்தமனைத்தும்வந்துறுத்தகாரணத்தாற்
றெண்டிரைவரைப்பின்மேம்படுசிறப்பிற்றிகழ்ந்ததுசாறுவதீர்த்தம்.

அத்தகுதிருத்தத்தீம்புனன்மகஞ்செயந்தத்தினாடுறுந்தவத்தோர்
சத்தியவுலகிற்சார்ந்துதண்மலரோன்கற்பம்வாழ்ந்திருப்பர்கள்ளயின்றோர்
பத்திசெய்குரவன்மனைபிறர்மனையைப்பற்றினோர்தந்தையைக்குருவை
மெய்த்தகட்போரைப்பிழைத்தவரிவருமாடுறின்வினைகடிந்துய்வார்.

இறந்தவர்க்காங்குச்செழும்புனலிறைப்பிற்பிதிர்க்குலமின்பமீக்கொள்ளு
மறந்திகழ்நியமநிகழ்த்தினொன்றனந்தமாகுமிப்பெருந்தகுதடத்தின்
மறந்தபுமுனிவர்கடவுளர்மனிதர்யாவருமாசிமாமதியில்
விறந்துசென்றெறிநீர்குடைந்துதத்தமதுமேதகுமிருக்கையிற்சேர்வார்.

கும்பமாமதியின்வைகறையணைந்திக்குளிர்புனல்விதியுளிதோய்ந்து
பம்புநான்மறையோர்க்கேன்றனபசும்பொன்பத்தியினளித்தொருமாவிற்
கம்பரைத்தொழுவோர்புனல்படிந்ததனாற்கரிசெலாமிரியமாதவராய்ச்
செம்பொனன்கொடையாற்செல்வராய்க்கம்பர்தெரிசனத்தாற்கதியடைவார்.

வீங்குநீர்ப்புவியினீண்டவான்பரப்பின்மேதகுந்துறக்கநாட்டகத்தி
னீங்கிதற்கிணையாந்தீர்த்தமொன்றேனுமின்மையால்யாவரும்பழிச்ச
வோங்கியதீர்த்தராசநற்பெயரான்விளங்குமிவ்வொண்புனல்படிந்தோர்
தீங்குதீர்ந்துயர்ந்தகதிபெறுங்கதையுஞ்சிலவெடுத்தறிந்தவாபுகல்வாம்.

கலிநிலைத்துறை.

உலகினிற்கொடுங்கோலெலாமொருபுடையொதுக்கி
நிலவுவெண்குடைக்குளிர்நிழறிசைதொறுநிரப்பிக்
குலவிவீற்றிருந்தரசுசெய்மனுகுலத்துதித்த
தலைமைபூண்டுயர்பார்த்திவன்றுன்மிகனென்பான். ௭

விளிந்ததன்னுடைத்தாதைவெம்பசியினீர்நசையி
னுளைந்துயாவுறுஞ்செயலறிந்ததுவிரைந்தொழிப்பா
னளிந்ததீம்பழத்தேறல்வார்ந்தளியினமுரலுங்
குளிர்ந்தபூம்பொழிலுடுத்தசீர்க்காஞ்சியைக்குறுகி. ௮

வள்ளவாய்ச்செழுங்கமலத்துவண்டுபாண்மிழற்றுந்
தெள்ளுதீம்புனலத்திருச்சுறவதீர்த்தத்தி
னுள்ளுமாதவர்க்கமிழ்தெனவுளத்திருந்துணர்த்துந்
துள்ளுமான்மறிக்கையினார்த்தொழுதுநீராடி. ௯

சந்திமுற்றுறப்புரிந்துதன்றாதையைக்குறித்துக்
கந்தநீர்க்கடன்முதலியபிதிர்க்குலங்களிப்ப
வந்திலாற்றியந்தணர்தமக்கருநிதியார்த்திக்
கொந்துலாமலர்மாவடிக்குழகனைவணங்கி. ௧௦

தடாதபேரொளித்தாமரைநாயகன்றடந்தேர்
வடாதுமாதிரமணுகியகாலைமாசொன்று
மடாதவோரையுநாளுமுற்றமைந்தனநாளிற்
கெடாதமெய்த்தவமுனிவரர்கிளந்திடும்வழியான். ௧௧

மருவினார்தமக்கிருண்மலக்குறும்பெலாமடித்துக்
கருணைகூர்மனுவீச்சரப்பெயரினாற்கடுக்கைக்
குருநிலாமலர்த்தொங்கலானருட்குறிநிறுவித்
தெருளுமாகமமுறையுளிப்பூசைசெய்திருந்தான். ௧௨

தனையனின்னணம்வழிபடுந்தவறிலாப்பயத்தா
வினையுநோயுழந்தாற்றருந்தாதையெத்துயருந்
துனையநீத்துமும்மலத்தொடுதொல்லையேசூழ்ந்த
வினையுமாற்றினன்மெய்யருளினைத்தலைப்பட்டான். ௧௩

ஆயகாலையந்தரத்தொருமொழிநினையளித்த
தூயதாதைநற்கதியினைத்துயரெலாந்துமித்து
மேயினானெனவெழுதலும்வெற்றிவேலரச
னேயதன்பரிவொழிந்தனனின்பமீக்கூர்ந்தான். ௧௪

மீட்டுமண்ணலார்பூசனைமேதகவாற்றி
மோட்டுநீர்ப்புவிமுழுவதும்புரந்தபின்றானுங்
காட்டினூடகநடித்தருள்கம்பர்பேரருளா
லீட்டருஞ்சிவவீட்டினையிறுதியிலடைந்தான். ௧௫

அமரரச்சுறவயிற்படைவிதிர்த்துமூவுலகுங்
குமரிவெண்குடைநிழல்செயக்குலவிவீற்றிருந்த
தமனியப்பெயர்த்தானவனுயிர்த்திடுந்தனய
னிமிர்பெரும்புகழ்மாண்டகநிகழ்பிரகலாதன். ௧௬

நுந்தையாருயிர்விரகினானெடியினிற்குடித்து
வந்துமுற்றியகொலைப்பழிமாற்றுகென்றுரைக்கும
பைந்தண்மாலிகைத்துளவினான்றன்னொடும்படர்ந்து
நந்துமுத்துயிர்நறும்பணைக்காஞ்சியைநண்ணி. ௧௭

கண்டகாலேயேகாழ்படும்வல்வினைத்தொடக்கு
விண்டுபோதரும்விரைகுலாஞ்சாறுவதீர்த்தத்
தெண்டிரைப்புனலாடினுன்றென்புலத்தவர்க்கு
மண்டுமென்பினுற்செய்கடன்மரபுளிவகுத்தான். ௧௮

மருட்சிமிழ்ப்பறவரமருளிரணியீச்சரப்பே
ரருட்சிவக்குறியிருவினைறுற்றினன்பூசை
தெருட்சிவக்கதிதந்தையைச்செலுத்தினன்ருனும்
வெருட்சிதந்தவன்கொலேப்பழிவீட்டிமேதக்கான். ௧௯

கலிவிருத்தம்.

கழுதொடுகோட்டிடைநடிக்குங்கண்ணுதற்
ருெழுதெரிவளர்த்துளஞ்தூய்மைமேம்படும்
விழுமறைக்குலத்தினிற்பிறந்தோர்வேதியன்
பழுதுறுபாதகக்குழிசியப்பினுன். ௨0

முத்தவிர்முறுவலுமுலேயுங்காண்டொறும்
பித்தினுய்மதுப்பிலிற்றித்தாதுகுந்
தொத்தலர்மலர்தொறுந்துன்னும்வண்டுபோன்
மெய்த்தசீர்ப்பிறர்மனேவிழைந்துமேவுநாள். ௨௧

தகவுறும்பிறர்க்குரித்தையன்மாரினே
முகிழ்முலேத்தடத்திடைமுயங்கிச்செல்லுறு
மிகவருந்தவற்றினேயேங்குநீருடை
யகலிடம்புரக்கும்வேலரசன்கேட்டனன். ௨௨

கேட்டலும்வெள்ளொளிகிளரநக்குமென்
ருேட்டலர்த்தாமரைசுடர்ந்துசேந்தென
நாட்டமிக்கெரியுகநயந்துதன்னிரு
மாட்டமருழையரைவல்லேயேவியே. ௨௩

வளமருள்வயல்களுமணிபெய்பேழையுங்
களமருங்கனகமுங்காமர்பொன்மனே
யுளமருவியவெலாவுறுப்பும்வவ்விக்கொண்
டளமருமாறுறத்தகற்றினுனரோ. ௨௪

நலம்படுவாழ்க்கைநல்லறிவுதன்மனத்
திலம்படுமாறுபோலிலம்பட்டேங்கினுன்
புலம்படுமாயிடைத்தணந்துபுன்புலேக்
குலம்படுமொருத்திதன்கொங்கைதோய்ந்தனன். ௨௫

சுந்தரமகளிர்தோடோயுமுந்தைநாட்
புந்திதீண்டவும்பொருப்புலேயைப்புல்கலா
லுந்துமூழ்வினேமறைத்தருத்துமூர்விடை
யந்தணன்விரகையாரளக்கவல்லரே. ௨௬

நவையழுக்குடைகளிநாறமெய்யெலாங்
குவைநிணப்புலான்முடைகொழிக்குமாதினேச்
சுவையமிழ்தினுமிகத்துய்த்துச்சான்றவ
ரவைநகமைந்தரையளித்துவாழுநாள். ௨௭

பாவமிக்குயர்தலாற்பஞ்சிற்றீங்கர்
வீவருநோயினுன்மெலியமைந்தருங்
காவியங்கண்ணியுங்கருத்துவேறுபட்
டோவியவன்பினுலோம்பலோம்பினுர். ௨௮

அருளியும்வெகுண்டுநோயறுத்துடங்குநின்
றொருவருந்துணைவராயுய்த்தளிப்பவ
ரிருவருமறிகலாவிறைவரேயலான்
மருவியமைந்தருமனையுமல்லரே. ௨௯

செல்லனேயுழந்தினிச்செய்வதென்னெனு
மல்லலிற்கவலைகொண்டங்கணீங்கினுன்
கொல்லருங்கொடும்பிணிப்பசியைக்கொல்லிய
வெல்லையில்பதிதொறுமிரந்துசெல்லுவான். ௩௦

மறிபுனற்றடந்தொறுமெழுந்தவாளைமீன்
செறிமலர்ப்பொழிற்சினையலைப்பச்சிந்திய
நறைகமழ்காஞ்சியைநெறியினண்ணினு
னிறுதியுமாங்கவற்கிறுத்ததாகலும். ௩௧

தொன்றுதான்செய்வினைத்தொடர்பினுற்கொலோ
வன்றியேதன்குலத்தந்தணாளர்க
ணன்றுசெயறவினைநலத்தினுற்கொலோ
சென்றனன்சாறுவதீர்த்தப்பாங்கரின். ௩௨

முறுகியநீர்நசைமுருக்கநாவெலாம்
வறலவத்திருத்தடத்திறங்கிவார்புன
னிறையவாய்மடுத்துநீள்கரையிற்போந்தவட்
பொறையுடற்பாதகப்புக்கினீங்கினுன். ௩௩

இழித்தகுகரியவுமிலங்குமேருவி
னுழித்தலைப்படினொளிவிளங்கும்பொன்னிறங்
கொழித்திடுமாறுபோற்குலவுமத்தடஞ்
செழித்தநீர்மேன்மையாற்றேவனுயினுன். ௩௪

பண்ணவர்நயமொழிபகரத்தெய்வத
விண்ணிழிவிமானமேல்கொண்டுவிண்மிசை
பண்ணலமுலகெலாமழகுநோக்குபு
கண்ணுதலுலகினைக்கைக்கொண்டான்[illegible]. ௩௫

கலிநிலைத்துறை.

தக்கதொ[illegible]யாத்தியிற்றனிக்குடைநிழற்று
மிக்குவாகுவின்மரபுளானிரணியநாபன்
றொக்கதானவர்செருக்கடந்திந்திரன்றுணையாத்
திக்கெலாந்தொழத்திண்புவிபுரந்துவாழ்நாளில். ௩௬

அன்னவன்மனைக்கிழத்தியரிருவருளன்னக்
கன்னியென்னடைக்கலாவதிகலாதரற்பயந்தா
ணன்மகப்பெறுநவில்பதுமாவதிமாழ்கிப்
பன்னுமாற்றவள்பழிப்புரையழுதழுதுரைத்தாள். ௩௭

கேட்டமன்னவனின்மொழிகிளர்ந்துநன்கருளிக்
கோட்டமின்றிவாழ்காலையிற்கற்பகக்கொழும்பூந்
தோட்டலங்கலந்தோளிறைவிளிப்பவண்கனக
நாட்டடைந்தனனவுணரைநாமறச்செகுத்தான். ௩௮

வாகைநல்கியகோன்றனைமார்புறத்தழுவி
யோகையால்வரங்கொள்கெனவினவியொண்சிறைய
தோகைநேர்பதுமாவதிமகப்பெறுதோற்ற
நாகர்கோன்றரப்பெற்றனன்விடைகொடுநடந்தான். ௩௯

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விண்ணினின்றிழியும்வேந்தன்மேவருநெறிக்கண்மாந்தர்
கண்ணிணைக்கடங்காச்செங்கேழ்க்கதிரொளிப்பரிதித்திண்டேர்ப்
பண்ணமைபுரவிதூண்டும்பாகனைநோக்கியேயே
திண்ணியகுறங்கிலானென்றவமதிசெய்துநக்கான். ௪0

அறங்கிளரருணப்பாகனஃதறிந்தழலிற்சீறிக்
குறங்கிலனென்னவெள்ளிக்குறுநகைவிளைத்தாய்வைத்த
பறங்கிளர்வேலினாய்நின்மைந்தனுமூருவின்றிப்
பிறங்குகவென்னச்சாபம்பேதுறநல்கினானே. ௪௧

வீடருஞ்சாபத்தீர்வுவேண்டுமுனெழுமாவீர்க்கு
மாடுபொன்மணித்தேர்செய்த்திவசறலும்வாளாசென்று
நீடியகழற்கால்வேந்தனெடுநகரயோத்திசார்ந்தான்
கோடியநுதலினாளுங்குறங்கிலாமகனைப்பெற்றாள். ௪௨

முரணியவயவர்நாட்பின்மொய்யமர்கடந்தவேந்த
னிரணியபாதஞ்சேர்த்தியிரணியபாதனென்னத்
தரணியோர்வியப்பநாமஞ்சாத்தினன்காதன்மைந்தன்
சரணிலானென்னுமுள்ளக்கவலையிற்றங்குநாளில். ௪௩

மடந்தபும்வாமதேவமாமுனிமொழியுட்கொண்டு
குடம்புரைகுவவுக்கொங்கைக்கோற்றொடிமனையுமற்றைக்
கடும்புமங்கொருங்குபோதக்கான்முளையோடுநண்ணி
விடம்பயின்மிடற்றுப்புத்தேண்மேவருங்காஞ்சிசேர்ந்தான். ௪௪

அத்தலைமாவின்மூலத்தனிமுதலடிகள்போற்றித்
தத்துநீர்ச்சருவதீர்த்தத்தடம்புனல்விதியினாடிப்
பத்திரரோசமேயபகவனைவழிபாடாற்றி
யித்திறத்தையான்பானாளியல்புளியாற்றுகின்றனே. ௪௫

வருவழிநாளும்போந்துவார்திரைச்சருவதீர்த்தப்
பெருகுநீர்குடையுமேல்வைப்பிறைமுடிச்சடையார்முஞ்சித்,
திருவரைமறைச்சிறான்போற்சென்றுநீராடுமைந்தன்
கரைமிசைவைத்தபொற்கால்கவர்ந்துகொண்டோடலுற்றார்.

அனைவருங்கள்வன்கள்வனெனத்தொடர்ந்தணுகலோடுங்
கனைகுரற்றிருநீர்தோயும்புதல்வனுங்கால்கள்பெற்றுத்
துனைவொடுகரைக்கணேறித்தொடர்ந்துடனோடிச்சென்றான்,
முனைவரும்பத்திராரக்கோயிலுண்முடுகிப்புக்கார். ௪௭

யாவருந்தொடர்ந்துசென்றார்யாங்கணுந்துருவிக்காணா
ரோவறுமொளிப்பொற்கால்களொருபுடைதிகழக்கண்டா
ராவயின்மைந்தன்றானுமடியிணைபெற்றதோர்ந்தான்
காவலனோக்கிநோக்கிக்கழியவுமகிழ்ச்சிபூத்தான். ௪௮

வெருட்சியும்வியப்புமெய்திவிமலனார்விளையாட்டென்னுந்
தெருட்சியனாகியையர்திருவருட்பெருமைநோக்கி
மருட்சிதீர்வரங்கள்பெற்றுவளநகரணைந்துவாழ்ந்தா
னருட்செழுஞ்சருவதீர்த்தப்பெருமையாரளக்கவல்லார். ௪௯

நித்திலத்திரளும்பூவுநிரந்தரம்வழான்றிவார்ந்து
தத்துநீர்த்தரங்கக்கையாற்றடங்கரைக்கச்சபேச
வத்தனைவழிபாடாற்றுந்தடமுளததனையிட்ட
சித்தியென்றுரைப்பரிட்டசித்திமிக்குதவுநீரால். ௫௦

விருத்துவண்டுளருந்தோட்டுவிரிமலர்க்கமலம்பூத்து
மருத்தகுமனையதீர்த்தம்விருச்சிகமதியிற்சேர்ந்த
வுருத்திகழ்பரிதிச்செங்கேழம்பனுக்குரியவாரத்
தருத்தியிற்படியுநற்பேறனைத்தினுமிக்கதாமால். ௫௧

பண்டையவுகங்கடம்மிற்பாருளோர்கண்ணிற்காண
வண்டரந்நாளினெய்தியரும்புனலாடிச்செல்வார்
மிண்டியகலியிற்காணாமரபினான்மேவியந்நீர்
மண்டியவன்பிற்றோய்ந்துமகிழ்ச்சிமீக்கூர்ந்துசெல்வார். ௫௨

இன்னணமிமைக்குமோலியந்தரத்திமையாராடி
மன்னியதத்தம்வாழ்க்கைவைப்பினைச்செலுமோர்காலத்
தன்னமேக்குயர்த்தபுத்தேளமர்ந்துவாழுலகின்வைகுந்
தன்னைநேரொருவன்விச்சாதரனவணின்றும்போந்தான். ௫௩

திரைதவழிட்டசித்தித்தீர்த்தநீராடித்தெய்வ
விரைகமழ்கொன்றைமாலைவிகிர்தனைக்கச்சபேசத்
தரியயன்பரசுமுக்கணமலனைவணங்கிப்போற்றி
யுரியதன்னிருக்கைநண்ணவும்பரினெழுந்துசென்றான். ௫௪

புரிமணியிமைக்குமோலிபொழிகதிர்ப்பரிதிவட்டஞ்
சொரிகதிர்மழுங்கிச்சாம்பச்சுடர்ந்துபேரொளியைக்கால
விருவிசும்பறுத்துப்போதுமிடைவழிநனைந்ததூசி
னாறுகெழுமுத்தம்போலுமுறைகழன்றுக்கதன்றே. ௫௫

கழன்றுகுதிவலைபன்னாட்காரினம்வழங்கச்செல்லா
தழன்றவெஞ்சுரத்துநீண்டவரசினைப்பற்றிவாடி
யுழன்றநெஞ்சரக்கனுச்சிவிழுந்ததாலுலவைதீந்து
நிழன்றிடாவரசுஞ்சீர்ப்பநிகழ்த்துமுற்றவத்தின்பேற்றால். ௫௬

விழுத்துளிவிழுதலோடும்வீட்டினன்றொக்கசெல்லல்
கழித்தனன்கவலைவேலைகடந்தனன்பாவக்குப்பை
பழித்தனன்கொடியபாலைபழிச்சினன்றவத்தின்பேற்றைத்
தெழித்தனன்மகிழ்ச்சிபொங்கிச்சிரித்தனன்றுயரைநோக்கி.

வருந்துளிமழையதென்னில்வாய்மடுத்திடினுமின்ன
பெருந்துயரிரித்திட்டின்பம்பெருக்கிடாதமரர்நாட்டு
மருந்தெனினுகரினல்லால்வளந்தராதிதனுக்கென்னே
திருந்தியவேதுவென்றுஞ்சொல்லுலாம்விசும்பைப்பார்த்தான். ௫௮

ஆயிடைமுன்னுகின்றவமானைக்கண்டுநீரிற்
றோயிடைதுளிப்பநோக்கியிதுவெனத்துணிந்துநெஞ்சிற்
பாயபேருவகைபொங்கப்படர்தருப்பிறைசைவல்ல
தூயவன்றன்னையன்புதோன்றுறவிளித்திட்டானே. ௫௯

அழைத்தலுமருளினோக்கியெதிர்முகமாகிநின்ற
தழைத்தபேரொளியினானைத்தான்மலர்நிறைஞ்சித்தாழ்ந்து
முழுத்தசீர்க்காதல்விம்மமுறைமுறைபழிச்சியுச்சி
செழுத்தடங்கைகள்கூட்டித்திளைத்திதுசெப்புகின்றான். ௬0

வருத்தியபசியினானும்வார்புனல்வேட்கையானுங்
கருத்துநொந்தழுங்கிச்சாலக்கவலுவேன்றயரையெல்லா
முருத்திடுமருந்தாய்நின்னையுஞ்சமைத்தளித்தகியான்முன்
னருத்தியின்வருந்தியிட்டமருந்துவப்பேறுமாதோ. ௬௧

களைகணென்னைக்காத்தகருணையங்கடலேசெல்லல்
விளையுநோயாக்கயாக்கைவிண்டுநின்கூறைசான்ற
துளியினூற்றாயோனாகித்தொல்லையிற்பாவந்தீர்ந்தேன்
றளிமழைக்குலகமாருந்தருவதுமுண்டுகொல்லோ. ௬௨

பாட்டளிமுரலாக்கற்புப்பனிமலரலங்கலோதிச்
சூட்டுமின்னனையார்த்தோயுஞ்சுரருணியாரைநீதோய்
தோட்டலர்த்திரித்தமாதுதுரிசினேனரக்கனாக
வீட்டியபாவம்யாதிங்கியம்பெனவியம்புவானால். ௬௩

எரிபடுபஞ்சியென்னவினையுநோயரக்கயாக்கை
பரியும்வல்வினையினோடும்பாற்றியபண்பினோய்கேள்
புரிமுறுக்கவிழ்ந்தகஞ்சப்பொருட்டினேனினிதுவைகும்
விரிபுகழுலகின்வாழ்விச்சாதரப்புலவன்யானே. ௬௪

உள்ளலருவகைவிம்மவுற்றியான்படிந்ததீர்த்தந்
தொள்ளைமிக்கலர்ந்தநஞ்சிற்றுரிசினோர்க்கெய்தொணாத
தெள்ளுசீர்க்காஞ்சிழுதூர்த்திருத்தகுவரைப்பினோங்கும்
வெள்ளநீரிட்டசித்திவிரைகமழ்திருத்தமாமால். ௬௫

முதுதுயர்ப்படுத்துச்சாலமுனிதருமாக்கயாக்கை
கதுவியல்லாந்துநெஞ்சங்கனன்றுமிக்கழுங்குநீதான்
பொதுளியமலர்ப்பூங்காவும்பொய்கையுமருங்குசூழ்ந்த
மதுரையென்றுலகமெல்லாம்வழங்குமாநகரிலுள்ளாய். ௬௬

துறந்தவர்தழையுங்கையாற்றொட்டிடினர்வம்பூட்டி
நிறைந்தவெந்துயர்ற்றட்குநீள்பொருள்கவர்ந்துகொள்வா
னறந்திகழ்மறைநூல்வல்லவந்தணர்ச்செசுத்தாயந்த
மறந்திகழ்பாவந்தன்னால்வல்வினையரக்கனாய். ௬௭

இருபதினூறழுமைஞ்ஞூற்றாண்டுகளெண்ணில்காலங்
கருமுகிறிவலைகாலாக்கடுஞ்சுரத்தவலங்கூர்ந்தா
யொருவருநெடியபாவமுஞற்றியகொடியையேனும்
பெருகுநீரிட்டசித்திமேன்மையாற்பிழைத்தாயன்றே. ௬௮

இந்திடந்தனக்குநேரேயானெழுவனையுமன்றிக்
கந்தமென்றிவலைதூசிற்கழன்றுகத்தவங்கள்சால
முந்தைநீசெய்தாயன்றிமுயன்றுமீதெய்தற்பாற்றே
வந்தமெய்த்தீர்த்தமெல்லாப்பாவமுமறுக்குமாலோ. ௬௯

ஆதலாற்பண்டையிட்டுமெறன்கடைமுழுதுந்தேய்த்து
வேதனையாக்கமெய்யும்விளித்ததோர்துளியேயம்மா
வோதுமத்திருத்தமேன்மையுரைப்பதற்கெளிதோவென்னக்
காதரமகன்றவிஞ்சைக்கடவுளாதரத்திற்கூறி. ௭௦

திருத்தகுசிரகத்தேந்திச்செழித்ததன்பதியினுய்ப்பா
னருத்தியிற்கொணர்ந்தவிட்டசித்திநீரருளியுண்மோ
மருத்தகற்பசுமென்றோட்டுமாலிகைக்குவவுக்கோட்டுப்
பெருத்ததோளமரனாகப்பெறுவையென்றியம்பிப்போனான். ௭௧

பண்டைவல்வினையுந்துன்பும்பாற்றியவிழுமியோனு
முண்டனனிட்டசித்தியொண்புனறெய்வமேனி
கொண்டனன்விமானமூர்ந்துகுறுகினானகநாட்டைத்
தொண்டையங்கனிவாயாரிற்றிளைந்தனன்போகவெள்ளம். ௭௨

கொங்கவிழ்மலர்மென்கோட்டுக்குளிர்நிழற்கற்பகப்பூம்
பொங்கரினாடிச்சேர்ந்தும்புதுமணப்போதுபூத்த
கங்கையினறுநீர்தோய்ந்துங்கடலமிழ்தினிதுதுய்த்து
மங்குளநுகர்ச்சியெல்லாமடைவினினுகர்ந்தபின்னர். ௭௩

விடுசுடர்முத்தந்தத்தும்விரிதிரைத்தரங்கவேலைத்
தொடுகடல்வரைப்பிற்றோன்றிச்சுந்தரம்பழுத்தகாஞ்சி
நெடுநகர்க்கரசனாகிநீதியினுயிர்களோம்பிக்
கடுநுகர்களத்தேகம்பர்கழலிணைநீழல்சேர்ந்தான். ௭௪

அரிமதர்மழைக்கண்மாதராடலின்முரசுகேட்டுச்
சொரிமுகின்முழக்கென்றார்த்துத்தோகைகணடனஞ்செய்யும்
விரிமலர்க்காவுசூழ்ந்துமேதகுவளம்விண்ணாடும்
பரவுமுச்சயினியென்னும்பட்டினத்தொருவன்மாதோ. ௭௫

ஒருவருந்தொலைப்பாலாலொறுத்திடுங்குட்டவெந்நோய்
விரவியமெய்யன்காணாவிழியினனுடலமெங்கு
மருவருப்புடையீபுண்ணனைவதொறும்புழுக்கடோன்றித்
தருமலருகுவதென்னச்சரிந்துகவருந்திவாடி. ௭௬

தருக்கிவாழ்தனதுதேயந்தணந்தனன்பெயர்ந்தூழ்த்தெய்வம்
பெருக்கியநோயினோடும்பிறருடைத்தேயத்தோர்பான்
மருக்கிளர்மரத்தின்பாங்கர்வதிந்துசெந்நெருப்பிற்சீறி
நெருக்கியபசியான்மாழ்கிநெட்டுயிர்த்தரற்றுகின்றான். ௭௭

விழியிணையுறைக்கும்புண்ணீர்மெய்யெலாமண்ணாச்செய்யக்
கழியவுநெஞ்சுபுண்ணாய்க்கரைதரக்கண்டும்விம்ம
வழுதிடும்வேலைகம்பாணிவிழாச்சேவைசெய்வான்
செழுவியகச்சிமூதூர்செல்லுவார்நெறியிற்கண்டார். ௭௮

காண்டலுமிரங்கியண்மிக்கரைந்தினியழாதியென்று
வேண்டியவுணவுநல்கிவிழுப்பசிமுழுதுமோப்பி
யீண்டியகுளிர்ச்சியுள்ளத்தேய்ந்தயர்வுயிர்த்தபின்னர்
மாண்டதோர்தண்டுபெற்றிவம்மெனக்கொண்டுசென்றா ௭௯

நவ்விபோல்விழியினார்கண்டகங்குயிற்றுமாடம்
பௌவநீர்படிந்துமேகம்பாந்துகண்படுத்துச்செல்லுஞ்
செவ்விசால்கன்னிகாப்பைச்சென்றனரிறைவற்போற்ற
வௌவியமிரிக்குங்கச்சபாலயத்தணையும்போது. ௮௰

எழுந்தநீர்நசைநாவாட்டவிரந்தனன்மெல்லவுய்ப்ப
வழுந்துபட்டலர்கள்பூத்துவெள்ளனத்தார்ப்புமல்கித்
தொழுந்தகையவர்க்குப்பாவத்தொகுதிகடுவரநீவுஞ்
செழும்புகழிட்டசித்தித்தீர்த்தநீர்பருகினானே. ௮௧

பருகியபின்னர்நீராற்பையத்தன்முகத்தைநீவ
விருளறவிழிகள்வில்லிட்டிலங்கினவந்நீர்தோய்ந்த
கரமெலாங்குட்டமாறிக்கவின்றனநோக்கிவல்லே
வரமலியிட்டசித்திவார்புனன்முழுதுந்தோய்ந்தான். ௮௨

குட்டமுஞ்சியும்புண்ணுங்குருதியும்புழுவுந்துன்னப்
பட்டபுல்லுருவமெல்லாம்படரொளிப்பிழம்புகால
வட்டொளிமுறுவற்செவ்வாயந்நலார்மனமையாப்பக்
கட்டழகெறிக்குமேனிக்காமற்குங்காமனானான். ௮௩

கண்டவர்வியந்துமொய்ப்பக்கரைத்தலையிவர்ந்துசால
வண்டர்நாயகனாண்டவருளினைநோக்கிக்கண்கள்
வெண்டரளங்கள்காலமெய்யெலாம்புளகம்போர்ப்ப
மண்டியவன்புபொங்கமனங்கரைந்தவசனானான். ௮௪

எண்ணியவரங்கணல்குமிட்டசித்தீசர்முன்பு
நண்ணிவீழ்ந்தெழுந்துநின்றுநாத்தழும்பேறவாழ்த்திக்
கண்ணனைமுதலோர்பூசைகண்டசீர்க்கச்சபேசத்
தண்ணலைவணங்கியின்பவார்கலிதிளைத்துவாழ்ந்தான். ௮௫

அன்றுபோலாறுதிங்களத்தடநியதிபூண்டு
சென்றுநீராடிப்பெம்மான்சேவடிக்கமலம்போற்றித்
துன்றுபேரன்பினேன்றதிருத்தொண்டுபுரியமேருக்
குன்றவார்சிலையினானுங்குளிர்பெருங்கருணைகூர்ந்து. ௮௬

நலத்தகுமுணவுநாளுநல்குபுசிலநாட்செல்ல
நிலத்திணைப்புரக்குஞ்செங்கோனெறியளித்தருளலோடு
[illegible]
மலைத்திடுசிறப்புவாய்ப்பமனுநெறிவேந்தனாகி. ௮௭

ஒளியுமிழ்கவிகைவேய்ந்தவெள்ளியதாளஞ்சிந்தக்
களிறெருமிருடலமெல்லாம்வெள்ளொளிகளுற்றத்தேனோ
டளிமுரன்மாலைமன்னரருங்கறைகுவவியலன்மி
நளிமணிமுடியிற்றேய்த்துநறுமலர்ப்பாதஞ்சேப்ப. அஅ

கதிர்மணிக்குழையுந்தோடுங்காதொடுகவவிற்றுழ
முதிர்மணிப்பூண்களெல்லாமுரஞ்சொளிகான்றமின்ன
வெதிரியமன்னருட்கியிறப்பவெக்கழுத்தந்தோற்றி
யதிர்கயிற்கழன்மற்றம்மவண்மினூர்க்காவிநல்க. அகூ

மண்கணைமுழவம்பேரிவார்விசிமுரசுதக்கை
பண்கனிவீணையாதிபடர்முகின்முழக்கங்காட்டப்
பெண்கனிமடவாராட்டம்பிறங்கொளிமின்னுக்காட்டத்
தண்கனிகுழலிற்சிந்துந்தளியந்துடமழையைக்காட்ட. கூ0

வெளிறுவேனயனமாதர்வெள்ளொளிக்கவரிவீசக்
குளிறுவார்முரசமன்னர்குடைந்தமூழ்நருபாளிற்ப
வொளிறுவேற்றூனைக்கூட்டமொள்கழலிறைஞ்சிப்போதக்
களிறுமான்குலத்திறேடுகடலெனப்புறத்திலார்ப்ப. கூக

விரசிநானிலத்தினுள்ளோர்யாருமித்தகையவெள்வேற்
புரசைமால்களிநல்யானைப்புரவலன்னுகென்னுப்
பரசிமெய்த்தெய்வம்போற்றப்பாரொலாமகிழ்ச்சிதுள்ள
வரசவேற்றரிமான்றாங்குமணையிருந்தாசுசெய்தான். கூஉ

அன்னமென்னடைமென்றவணிநடைமானேவிமார்தம்
பொன்னவிர்சுணங்குபூத்தபுணர்முலைத்தடத்தின்மூழ்கிக்
கன்னலுமிழ்துங்கைப்பக்கலவியிற்றேறன்மாந்தி
நன்னெறிநைந்தீன்றுநயந்தகமெருடுநாள்வாழ்ந்தான். கூங

மாயிருஞாலம்போற்றுமுடிவள்ளலார்தங்
கோயில்கண்முறியவெல்லாங்சேரமனந்தழையவாக்கி
மீயுயர்மார்பெட்பவிழாமுதலவைபாற்றிச்
சேயனைபரவினூர்தந்திருவடிநீழல்சேர்ந்தான். கூச

ஓசனையெல்லைக்கப்பாலுறினுமெய்ம்முடையால்யாரு
காசின்யப்புதைக்குந்தீயோனல்வகைப்பயனுமிவ்வா
றுசிலனுகித்துய்ப்பவருளியவிட்டசித்தித்
தேசுசால்பெருமைவேறுஞ்செப்புதல்வேண்டுமேயோ. கூரு

வேறு.

தள்ளாமகிழ்ச்சிதலைசிறப்பப்பைடையோடாடித்தண்கமலக்
கள்ளார்மலர்ப்பூம்பொருகுட்டணையிற்கணங்கேழ்சுரும்பரிசைமிழற்றப்
புள்ளார்ந்துறங்குந்தடமுடுத்துப்பொலிகாம்பீலியனுந்தேயத்
துள்ளான்சோமயாசியெனவோங்கும்பெயராளெருமறையோன். கூசு

சிந்தைமுழுதுமிடங்கொண்டுசெருக்குவிளைத்துத்துயர்பெருக்கு
முந்தைமலநோய்க்கிழங்ககழ்ந்துமுடியாவின்பப்பெருவீட்டி
னுந்தமறைதான்முகமலவுமுறழாதோதித்தலத்தெளிந்தா
னந்தண்மறையோர்குழுநாப்பணலங்குந்திலதமெனச்சிறந்தான். கூஎ

தொல்லையியற்றுந்தீவினையின்றொடர்பாலறியாமையின்வேதம்
வல்லமறையோர்குலத்தொருவன்வாள்நாளழுங்கவுயிர்செகுத்தான்
கொல்லும்பெரியகொடும்பாவங்கொம்மென்றூர்க்கொண்டுள்ளகமிக்
கல்லனெடுநீர்க்கடலழுந்துவாவியழுங்கத்தொடர்ந்ததுவே. ௯௮

வஞ்சிவிருத்தம்.

பெட்குமாந்தரிற்பின்செலு
முட்கும்வண்ணமுருத்திடுந்
தட்குமெற்றுந்தணந்தெதிர்
கொட்குமண்மிக்குனித்தெழும். ௯௯

போர்க்குவம்மெனப்போந்துநின்
றார்க்குந்தோள்புடைத்தையென
வீர்க்குமெய்யனமூழ்ந்தியென்
றோர்க்குநெஞ்சமுகத்தெறும். ௪00

அன்னபல்பிணியாக்கலான்
மன்னுமாலைமடுத்திடுங்
கன்னலென்னக்கருத்துடைந்
தின்னணமல்கியிரங்கினன். ௧0௧

பெரியதானங்கள்பேணியு
மரியநோன்புகளாற்றியும்
பரியும்வல்வினைப்பாவநோ
யிரியல்கண்டிலனேங்கினன். ௧0௨

ஏர்த்தவெண்மதியீர்ஞ்சடை
மூர்த்தியாருண்மூழ்றுறுந்
தீர்த்தயாத்திரைசெய்வலென்
றோர்த்துளந்தனிலுன்னினன். ௧0௩

ஓசைதுக்கனுலாவுறுங
காசியாதியகாமர்சீர்
மாசிலாத்தலம்வல்விரைந்
தேசிலன்பொடுமெய்தினன். ௧0௪

அங்கங்குள்ளவரும்புனற்
பொங்குதீர்த்தம்புகுந்துதோய்ந்
துங்குங்கோடரிக்கண்ணியோர்
பங்கினரைப்பணிந்தனன். ௧0௫

அறமுமங்கங்கியற்றினன்
மறலும்வல்வினைப்பாவநோய
பிறிவிலாமையிற்பேதுறீஇ
யுறையுந்தன்பதியுற்றனன். ௧0௬

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிலபகல்வதிந்துகழிந்தபின்னறுகாற்சிறகர்வண்டிவர்ந்துமேன்மிதிப்ப
வலர்முகநெகிழ்ந்துகட்புனல்சொரியுமம்புயத்தடம்புடையுடுத்து
மலர்தலையுலகினகர்க்கெலாமுதற்றாய்நால்வகைப்பயன்களும்பயக்கு
மொழிபுகழ்க்காஞ்சிவளநகர்க்கேகவுளத்திடையாய்ந்துமுன்னினனல்.

கன்னலுங்கமுகுங்கதலியுந்தெங்குங்கஞலியகழனிசூழ்காஞ்சிப்
பொன்னகர்தனிற்போய்த்தீர்த்தநீராடப்புந்தியின்முன்னுதலோடும்
வன்னியும்விடமுமறலியுமொருங்கோர்வடிவுகொண்டெதிர்ந்தனவுருக்கொண்
டின்னலிற்றொடக்குங்கொடியவல்வினைநோயிமைக்குமுனஞ்சிநீங்கியதே.

பார்த்தனனகன்றபாவவல்வினையைப்பருவருங்கவற்சிமுற்றொழிந்தான்
வார்த்தடங்கொங்கைமடந்தையர்நடிக்குமாடமாளிகைதொறுமணிநீர்க்
கார்த்திரடவழுங்காஞ்சிமாநகரைக்கருதமுற்பிறப்பினிலீட்டுஞ்
சீர்த்தநல்வினைவந்தடுத்ததென்றுளத்திற்றினைத்தெழுமகிழ்ச்சிமீக்கூர்ந்தான்.

மேதகுமணியுங்கனகமுந்துகிலும்வேண்டுவதழீஇக்கொடுமற்றை
யேதமிலுறையுள்பொருணிலமாதியாவையுமைந்தர்பாலிருவி
மாதர்வாண்முகத்துத்தன்மனைக்குரியமடவரலோடுமங்கணன்று [ன்.
சீதநீர்ப்பொதும்பர்முகிலினம்பிணிக்குஞ்சிவபுரத்தெல்லையைச்சார்ந்தா

கச்சிமாநகரின்வளமெலாநோக்கிக்கரையறுகாதன்மீக்கூர
வச்சிவபுரத்தின்வயங்குறுமெண்ணிலலைபுனற்றிருத்தமுமாடி
நச்செயிற்றரவப்பூட்பொலந்தடந்தோணம்பனூரினிதுவீற்றிருக்கு
மெச்சிவாலயமும்புகுந்தினிதேத்தியிறைஞ்சிமெய்யன்பினிற்றிளைத்தான்

வீங்கிருட்பிழம்புமுழுதும்வாய்மடுத்துவிரிகதிர்க்கற்றைகள்பரப்பி
யோங்கொளிகஞற்றுமுருகெழுபரிதியும்பனுக்குரியவாரத்தி
லாங்கணுற்பயனுமாடுநரெவர்க்குமைதுறவென்றுமுய்த்தளிக்குந்
தேங்குவெண்டரங்கத்தெளிபுனலிட்டசித்தியின்விதியுளிப்படிந்தான்.

ஆம்பலங்கிழத்திவாயிதழ்த்தேறலவிர்கதிர்க்கையினுன்முகந்து
தேம்படுமலர்வாய்மடுத்துளங்களிக்குந்தெளிமதிப்பண்ணவனுளிற்
காம்புறழ்நெடுந்தோளுமைமுலைச்சுவடுகம்பனூரணியமூவுலகு
நாம்படப்பரந்ததெய்வவான்கம்பைநறுஞ்சிவகங்கைநீர்தோய்ந்தான்.

கோட்டுமாமலைகள்குங்குமக்களபக்குவிமுலையாகவேபடைத்த
மோட்டுநீருடுக்கைப்பூதலமடந்தையகட்டினின்முகிழ்த்தவனுளிற்
பாட்டறுச்சுரும்பர்த்தொடாலையங்கூந்தற்பார்ப்பதிதோழிதொட்டருளுந்
தோட்டதாமரையின்மங்கைதீர்த்தச்சுவைப்புனல்கரிசறத்துளைந்தான்.

வரிவளையுகுத்தமணிவடந்துயலுமுரோணிதன்வனமுலைதிளைத்து
விரிகதிர்க்கிரணவிதுவுயிர்த்தெடுத்தமேதகைக்கடவுள்வாரத்திற்
பெரியதிண்கரைகொன்றழுங்குவார்தரங்கம்பிணைந்துலாமிந்திரதீர்த்த
மெரியசைந்தனையமலர்குலாஞ்சங்கதீர்த்தநீரிடத்துமாட்டயர்ந்தான்.

துடியிடைக்கருங்கட்டுவரிதழ்ச்செவ்வாய்த்தோகையர்மணிமுலைத்தடத்துப்
படிதருந்துறக்கப்பண்ணவர்க்கறிவுபயிற்றுறுங்குரவன்வாரத்திற்
கடிகமழ்கமலக்காடலர்காயாரோகணக்கதிர்மணிக்கயத்திற்
செடியுடற்பிறவிதுமித்தருள்சூலதீர்த்தநீர்த்தடத்தினுங்குளித்தான்.

இருடிரண்டனையவெறுழுடற்பணைத்தோளிளமதிநிகர்பிறழெயிற்று
மருடிரண்டனையமனத்துவாளவுணர்மந்திரக்கடவுணன்னாளிற்
றெருடிரண்டனையதேர்ந்தமெய்யடியார்தேனெனவமிழ்தெனப்பழிச்சு
மருடிரண்டனையதீஞ்சுவைப்பஞ்சதீர்த்தநீரன்பினுற்றுளைந்தான்.

ம்கத்தினையடுக்கின்மணித்திரையுததிமருங்குடுத்தகன்றநானிலத்தின்
மிகத்தழைவளங்கண்முழுவதுஞ்சிதைக்கும்வெந்திறற்சநிக்குரிநாளி
னகத்திடைநினைக்கிற்கண்ணுறிற்றீண்டினுடுறிற்றோத்திரம்புரியிற்
பகைத்தமும்மலமும்பாழ்படச்சினக்குந்தீர்த்தராசத்தினிற்படிந்தா. ௱.

இன்னணமேழுநாளினுமுறையாலிரும்புனற்றடங்களிற்படிந்து
கன்னிமாவடியின்மூலத்தெழுந்தருளுங்கம்பனார்சேவடிப்போது
மன்னுபேரன்பின்வணங்கினனெடுநாள்வதிவுழிமனைவிதன்னோடு
மன்னவன்றனக்குப்புவிமிசைவாழ்நாளுலப்புறமிறுதிவந்தடுப்ப.

தேற்றிளம்பிறையுந்தெள்ளுந்தீம்புனலுங்கேழ்த்தபொன்னிதழ்யுமரவு
நாற்றுசெஞ்சடைமேலேற்றியபெருமானம்மையோடுஞ்செழுந்தருளிப்
போற்றுமவ்விருவர்செவியினுஞ்சிவவென்றுயர்மனுப்புகறலுமன்னோர்
நீற்றுவல்வினையராகியானந்தநிருமலமுத்தியையடைந்தார்.

கலிவிருத்தம்.

விற்பிறங்கியவேணியினார்முனங்
கற்பவாதியில்லவையகங்காழறச்
சொற்பிறங்கியசூலத்தகழ்ந்ததோர்
பொற்பிறங்கியபூநதியுண்டரோ. கஉக

நம்பியுன்னுநர்நாம்படுபாவநோய்
கம்பமுற்றுக்கழன்றிடச்செய்தலால்
வம்புலாவுமவ்வார்புனற்பூநதி
கம்பையென்றொருகாரணப்பேர்பெறும். கஉஉ

தேன்றதும்பியசெந்தளிர்மாவடித்
தோன்றுமைம்முகச்சுந்தரர்க்கல்லது
கான்றதைந்தவக்கம்பையின்மேன்மைதா
னுன்றவர்க்குமளப்பரிதாகுமே. கஉ௩

கச்சிமாநகரேயன்றுகம்பனார்
வைச்சதீம்புனல்வார்நதிக்கம்பையா
லச்சமுய்க்குமரும்பவநோய்தப
முச்சகங்களுமொய்யணிவாய்ந்தவே. கஉ௪

தாமரைத்தடங்கண்ணனுந்தாதளாம்
பூமகிழ்ந்தமர்பூவையுமாதியோர்
காமர்நீராருகாற்படிபேற்றினாற்
றேமறத்தப்பதங்களிற்றுன்னினார். கஉரு

ஓதநீர்முழுதுண்டபெருந்தவ
னாதிமாதவர்யாவருமாட்டயர்ந்
தேதம்வீழ்த்தபெருந்தகவெய்தினார்
தீதிலாதவச்செய்தவத்தாருளும். கஉசா

வேறு.

காசிபர்கவுதமர்கவுசிகர்பரத்து
வாசரருந்தமிழ்மாதவரென்னு
மாசிலரைவருமைந்துமுகத்தினு
மீசரிடத்திற்செவியறிவுற்றார். கஉஎ

மன்றறதும்புமணிப்புனரேய்ந்தொளிர்
கொன்றைபுனைந்தபிரானடிகும்பிட்
டன்றியடற்கெழுகூற்றுவனச்சுற
வென்றனனுன்மிருகண்டுவின்மைந்தன். ௧௨௮

சீதமளாவியதீம்புனலாடிமெய்
நாதரையேத்துநயந்துசுவேத
கேதுவெனும்பெயரானுமுருக்கிளர்
மேதியையூர்விறலான்றனைவென்றான். ௧௨௯

வேறு.

விரிபூமெல்லணைவேதனூரண
னெரிவேலிந்திரனுதிவிண்ணவர்
மருவார்கொன்றைமலைந்தவேணியா
ரருளானன்றியணைந்துமுற்றுபு. ௧௩0

நிரையான்மேகமுறங்குநீண்முடி
வரையால்வேலைகடைந்தவைகலிற்
றிரைமேல்வந்துசினந்துதீவிடம்
விரையாவாவிவிளிப்பமுன்னலும். ௧௩௧

கண்டார்நெஞ்சுகலங்கிமாழ்கினர்
விண்டார்செய்புமுயற்சிவேதனை
கொண்டாருய்திகுறித்திலாரஞர்
தண்டாராருயிர்சாம்புமவ்வுழி. ௧௩௨

ஊனோடாவியொறுக்குமிவ்விடர்
தானீர்நீவுவிர்தாவில்கச்சியிற்
போனீராயிடினென்றுபொள்ளென
வானூடோர்மொழிவந்தெழுந்ததால். ௧௩௩

கேட்டார்நெஞ்சுகிளர்க்குமோகைய
ரோட்டோடேகினருற்றுநண்ணினர்
சூட்டார்சென்னியதோகைதோடுகொண்
டாட்டார்பூம்பொழிலார்ந்தகாஞ்சியின். ௧௩௪

பிணிநோய்பேய்கள்பெயர்ப்பவார்த்தெனத்
தணியாதோசைதழங்குகம்பையின்
மணிநீராடினர்மாவடித்தலைப்
பணிவாழ்வேணியர்பாதமேத்தினர். ௧௩௫

தாழாதோங்கியெழுந்துதாவிமண்
பாழாகீறுபடுப்பமுற்றிய
காழார்நஞ்சுகளைற்றுவெந்துயர்
போழாவாழ்க்கைபொருந்தியுய்ந்தனர். ௧௩௬

வேறு.

வ தமிலறத்துறையெவையும்பாத்தருள்
வேதமாகமங்கலைவிதங்கண்மற்றவும்
போதமேலானவர்வழியிற்பூதல
மீதெலாம்பரப்பியநந்திமேலவன். ௧௩௭

ஆயுளோரெட்டுறுமளவின்மற்றிவற்
கேயவாழ்நாளினியிறக்குமேயெனத்
தாயொடுதந்தையுந்தளர்ந்துகட்புனல்
பாயநின்றழுங்கியபரிவுநோக்கினான். கஙஅ

இருமுதுகுரவர்களினைந்துநெஞ்சகங்
கரையநின்றாற்றலாற்கண்ணில்கூற்றுவன்
சுரியெரிக்குஞ்சியன்சுழலுங்கண்ணனாய்
வெருவரவருந்திறம்விலக்கலாகுமோ. கஙகூ

வெந்துளம்புழுங்கிவிம்மாந்துமிக்கழுஞ்
சிந்தைவெங்கவற்சியைச்சிதைமினீயிர்பூம்
பைந்துணர்க்கடுக்கையம்பகவற்போற்றியா
னந்தமில்வாழ்க்கைபெற்றமைவல்காண்பிரால். கசO

கரந்தையஞ்சடைமுடிக்கடவுளாரெதிர்
சிரந்தனைவணக்கியுட்டிளைக்குமன்பொடு
மிரந்திடிலாயுளுங்கதியும்யாவையு
மரந்தைதீர்த்தொய்யெனவருள்வதுண்மையே. கசக

சுடர்மதிப்பிளவொளிர்சடிலத்தோன்றலா
ரடியிணைப்பூசனையாற்றியுய்ந்திட
விடைகொடுத்தருளியரென்றுமென்பத
முடியுறவணங்கினனருளின்முன்னினான். கசஉ

பங்கயவாவியும்பணிவிராவிய
பொங்கருமலர்ப்புதுமணங்கள்விம்மிய
மங்கலசிவபுரவரைப்பிற்போந்தவ
னங்குளவளமெலாமன்பினோக்கினான். கசங

கரையறுகாதலிற்கரைகொன்றார்த்திடுந்
திரைகுலாங்கம்பைநீர்த்தீர்த்தந்தோய்ந்தெழீஇ
வரையொருசிலையெனவாங்குங்கம்பனார்
புரையறுசேவடிப்போதுபோற்றினான். கசச

நித்தலுங்கம்பைநீர்தோய்ந்துநீறணிந்
தத்தனார்கண்மணியாரப்பூண்டுபூங்
கொத்தவிழ்மாவடிக்குழகர்பூசனை
பத்தியின்விதிப்படிபயின்றுவைகுநாள். கசரு

பெருகியவுழுவலாற்பெட்டுச்செய்திடுந்
திருமலிபூசனைமகிழ்ந்துதெய்வத
மருமலர்மாவடிமுளைத்தவள்ளலார்
முருகவிழ்குழலொடுமுன்னர்த்தோன்றினார். கசசா

அஞ்சலைநீயெனவருளியேறமறதிர்
வெஞ்சமமறலியைவிலக்கிமற்றவற்
கெஞ்சலில்கருணையாலிகலினார்க்கெலா
நஞ்சுறழ்படைக்கொருமுதன்மைநல்குவான். கசஎ

அருங்கணநாதர்விண்ணவர்களாதியோ
ரொருங்கிவண்வருகெனவுன்னுமுன்னவர்
பெருங்கடல்வீளங்கெனப்பிறங்குகாஞ்சியின்
மருங்குறமுற்றினார்மனைவிமாரொடும். ௧௪௮

ஏவியவியவருமேகித்தேங்கமழ்
பூவியல்கற்பகத்திழையும்போக்கறு
மாவினில்வரும்பொருளைந்துமற்றவுங்
காவினரவ்வழிக்கடுகிமீண்டபின். ௧௪௯

விரைகமழ்மாவடிமுளைத்தவேதிய
ருரைகெழுநந்தியெம்பிரானையொள்ளிய
கரகநீர்விதியுளியாட்டிக்காமருந்
திருமலிமுதன்மையிற்றிருந்தவைத்தனர். ௧௫௦

மருத்தெனும்விண்ணவனுயிர்த்தமாணிழைப்
பெருத்ததோட்சுயசையென்றுரைக்கும்பெண்டகைத்
திருத்தகுமணிநகைக்கருங்கட்செல்வியை
யருத்திசெய்மன்றனீராற்றினல்கியே. ௧௫௧

வரியளியிமிழ்மதமுகத்துவள்ளல்செவ்
வெரியிவர்கூரயிலேந்தலென்னுமவ்
வருண்மலிமைந்தரோடொருவனும்படி
யுரியதம்மகன்மையுமுதவினாரரோ. ௧௫௨

கண்ணன்வெண்டாமரைக்கடவுளேமுதல்
விண்ணவர்கணங்கணநாதர்வெவ்வினை
மண்ணியமுனிவரர்மற்றுளோரெலா
மண்ணலாரருளினாலடியிற்றாழ்ந்தனர். ௧௫௩

கொங்கொளிமணித்திரைகொழிக்குங்கம்பைய
ணங்கினீராடியிவ்வரியபேறுறு
நந்தியங்கடவுளுநம்பனாரடி
சிந்தையினிருவிமெய்திளைத்துவாழ்ந்தனன். ௧௫௪

வளநிதிவேண்டியும்வாழ்க்கைவேண்டியுங்
களைகணாயுலகெலாங்காக்கவேண்டியு
மளமருபிறவியையறுக்கவேண்டியு
மளவிலாப்புனலாடியுய்ந்தவர். ௧௫௫

இத்தகுகம்பையுமிட்டசித்தியுந்
தத்துவெண்டிரைப்புனற்சறுவதீர்த்தமுந்
தொத்தலர்மாநிழற்சூழல்வைகிய
வுத்தமன்விழிகண்மூன்றென்னவோங்குமால். ௧௫௬

மற்றுமங்குள்ளனவரம்பிறீர்த்தங்கள்
பற்றமைசெய்நதிபாவியாதிய
வற்றநீத்தருள்வனவவற்றின்மேன்மையை
யிற்றெனயாவரேயெண்ணுநீர்மையார். ௧௫௭

ஆடுநர் தீவினையனுக்கிப்பேரின்ப
வீடருடீர்த்தநீர் விசேடம்விண்டனம்
பாடமைதிருநகர்படைத்தபன்னிரு
பீடுறுபெரும்பெயர்ப்பெருமைபேசுவாம். ௧௫௮

தீர்த்தவிசேடப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௨௨௪.

பன்னிருநாமப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அணிகெழுமலையுண்மேலாமவிரொளிமேருவென்ன
மணியொளிர்சூட்டராவுள்வாசுகிப்பாந்தளென்னத்
துணிபுனனதியுட்பாவந்துரக்கும்வான்கங்கையென்னத்
தணிவறுசுவையுள்வானிற்றலைப்படுமமிழ்தமென்ன ௧

இருளறுமொளிகடம்முள்ளிலங்குசெம்பரிதியென்ன
மருமலர்க்கூந்தலாருண்மால்வரைப்பிராட்டியென்ன
வருள்சிவனடியார்தம்முளச்சுதக்கடவுளென்னப்
பெருகியமனிதர்தம்முட்பிறங்கியமறையோரென்ன. ௨

விடலருந்தவங்கடம்முள்விழையுமாயாமமென்ன
வடர்புகழறங்கடம்முளாருயிர்செகாமையென்ன
நடலைதீர்கல்விதம்முண்ஞானநூற்கல்வியென்னச்
சுடரழல்வேள்விதம்முட்சூழ்பரிமேதமென்ன. ௩

பொருந்துறவேட்டவற்றுட்போக்கரும்வெறுக்கையென்ன
வருந்தைதீர்தானந்தம்முளபயநற்றானமென்னத்
திருந்துமந்திரத்துட்காயத்திரியெனுமனுவேயென்ன
வரந்தருநோன்புதம்முள்வளர்சிவநிசியேயென்ன. ௪

துன்னியமிருகந்தம்முட்டூயவான்றேனுவென்ன
மன்னியமதிகடம்முண்மார்கழித்திங்களென்ன
நன்னர்நெஞ்சுவப்பநல்குந்தானமேற்பவருணன்ற
பொன்னவிர்சடையார்க்கன்புபூண்டசீரடியாரென்ன. ௫

திரைகடல்வரைப்பின்முக்கட்செல்வனுரினிதுவைகும்
புரைதபுநகர்கட்கெல்லாமேம்படுபொற்பிற்றாமாற்
றரைமிசைப்பொதும்பரூற்றுந்தண்ணறுத்தெருக்கடோறும்
விரைசெலனதிகளென்னவிராய்த்தவழ்காஞ்சிமூதூர். ௬

காயெரிமழுமானேந்துங்கடவுளார்க்கரங்கமாகி
மாயிருஞாலம்போற்றவயங்குமக்கச்சிமூதூர்க்
காயிரநாமமெய்துமூழிதோறவற்றுண்மேலாம்
பாயசீர்நிலைபெற்றோங்கும்பன்னிருபெயர்கண்மாதோ. ௭

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உருக்காஞ்சிமுப்புவனசாரங்காமபீடமுயர்தபோமயமும்மூர்த்திவாச
மிருக்காலுந்துண்டீரபுரம்வாழ்வெய்துமிலயசித்துப்பிரமபுரமிருண்டநெஞ்சிற்
றிருக்கீரும்விண்டுபுரமருளானந்தசிவபுரமேசகலசித்திகரமேயுள்ளப்
பருக்காழைத்தபுங்கன்னிகாப்பென்றோதப்பட்டனபன்னிருதிருப்பேராகுமாலோ.

முழங்குமறையாகமநால்வடிவமாகிமூலமுதன்முழுவதுஞ்செங்கனகமாகிச்
செழுங்கனிபூத்தளிர்கனவமணிகளாகிச்சேர்ந்தவர்க்குநாற்பயனுமளிப்பதாகி
வழங்கிரவிமண்டலத்தின்காறுமோங்கவளர்ந்துநிழம்பிரியாதவண்மைத்தாய [மால்.
தழங்குபுகழ்த்திருக்காஞ்சிநிலைபெறெய்துந்தன்மையினாற்காஞ்சியெனும்பெயரிற்று

கலிவிருத்தம்.

பண்ணுறுதமெல்லிசைபயிற்றுறும்
வண்ணவண்டினம்வந்துமுற்றுறத்
தண்ணுறுவுகுந்தமணியச்செழுங்
கண்ணகன்றபூங்கமலவாழ்க்கையான். ௧0

ஆதிநாளையிலகிலலோகமு
மேதமில்படைப்பெய்தவார்குழன்
மாதொர்பாகனார்வனசமென்கழற்
போதுநெஞ்சிரீஇப்போதனோற்றனன். ௧௧

அலகில்காலமற்றருந்தவஞ்செய
நிலவும்வானதிநீருநாகமு
மிலகுசெஞ்சடையிறைவனார்தவங்
குல்வுவேதன்முன்குறுகியோதுவார். ௧௨

பாட்டளிக்குலம்பயின்றுசுற்றுமென்
றேட்டலர்த்தலைத்தோன்றுமந்தணன்
வெட்டதோர்ந்தனவேதகும்படைப்
பீட்டமிங்குனக்கெய்துறுதுகாண். ௧௩

மற்றைவைப்பினில்வருந்திப்பல்பகற்
பெற்றிடும்பலதருமப்பேறெலாஞ்
சற்றிருந்தொருதருமமாற்றுறின்
முற்றுமந்தருவேதிமுன்னியே. ௧௪

அன்னசூழலினன்பர்போற்றிட
மன்னுமந்தமைவழாதுபூசைசெய்
தின்னநீர்படைப்பெய்துகென்றொரு
கன்னிபாகனார்கரந்துபோதலும். ௧௫

வள்ளலாரருள்வழங்கப்பெற்றன
மெள்ளரும்படைப்பின்றுமுற்றின
நள்ளுமுத்தியுநண்ணிணுமென
வுள்ளமீக்கொளுமுவகையாழியான். ௧௬

வெருவிவாளைகண்மேக்கெழுந்துவிண்
ணுருவவெண்டிரையுந்திதோய்தரு
பெருகுநீர்த்தடம்பிறங்குமாங்கணாந்
தருள்வழிச்சிவபூசையாற்றியே. ௧௭

கருணைகூர்தருங்கம்பநாயக
ரருள்கிடைத்துலகனைத்துமாக்கிடும்
பெருவலித்திறம்பெற்றுநீடினான்
மருமலர்த்தலைவாழ்க்கையாளனே. ௧௮

ஆசில்கவ்வெனுமயனஞ்சித்திடு
மாசில்சீர்மையினனுமாநகர்
காசிலாப்புகழ்க்காஞ்சியாயதாம்
பேசுகாரணம்பிறவுமுள்ளவே. ௧௯

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கற்பமுடிவின்முச்சகத்தின்சாரமுழுதுங்கசிந்துருகி
யற்புமுதிர்விற்றொழுதெழுவார்க்கருளானந்தப்பெருவாழ்வு
பொற்பவுதவும்பெருமாட்டிபொலம்பூட்காமக்கண்ணிமகிழ்
சிற்பந்திகழ்பீடத்தினெதிர்வித்தாயடங்கிச்செறிந்ததுவே. ௨0

மற்றைக்கற்பத்ததினின்றுஞ்சிறிதுவாங்கிவண்டினங்கண்
முற்றமதுநுண்டுளிதுவற்றிமுருகுநாறியிதழ்துறுமிப்
பொற்றமலர்ப்பூஞ்சேக்கையினன்புவனம்படைத்தகாரணத்தா
லற்றமறுஞ்சீர்முப்புவனசாரமெனும்பேரணிந்ததுவே. ௨௧

கொச்சகக்கலிப்பா.

முன்னையோர்கற்பத்தின்முழங்குமறைநூற்கேள்வி
துன்னியநற்குலந்தழைப்பத்தோன்றினன்செழுங்கலையிற்
றன்னிகர்வேறில்லாதான்றவத்தினுக்கோரணுனன்
மன்னியசீர்மாவிரதனெனும்பெயராரொருமறையோன். ௨௨

முறுகுபெரும்பசிக்கனலைமூட்டிமுறைபிறழ்விக்கும்
வறுமையெனுங்கொடுங்கொலையவன்மீனற்கோட்பட்டா
னறுதியிலாத்துயிர்க்கடலினழுந்தினன்செல்வமெனு
முறுகரைசேர்புணைகாண்பானுன்னியுளந்துணிந்தெழுந்தான். ௨௩

மங்குன்மதிதவழ்ந்தேறுமணிமாடவரங்குதொறும்
பங்கயக்கண்மடமாதர்பயின்றுடுஞ்சிலம்பேபாதை
பொங்குமுகிலினமுழங்கும்பொருவிலொலிதனக்கெதிருங்
கங்கைநதிபுறஞ்சூழ்ந்தகாசிநகர்சென்றணைந்தான். ௨௪

முருகுவிரிமலர்க்குவையுமொய்யொளியமணிக்குவையும்
பெருகியவெள்வளைத்திரளும்பிறங்கியவோதிமத்திரளுந்
திருமலிபல்சனக்குழுவுஞ்செறிவொழியாக்கங்கைநதி
யுருகெழுநீர்படிந்தாடியோங்குமிருந்தவம்புரிந்தான். ௨௫

பட்டினிவிட்டுடல்வாடிப்பலநாளுந்தவமுயல
மட்டவிழுமிதழிநறுமலர்மாலைத்திரள்வளைத்துக்
கட்டுசடைப்பெருமானார்வீற்றிருக்குங்காசிநக
ரட்டொளிமெல்லிதழ்த்துவர்வாயணங்கெதிர்நின்றருள்செய்யும்.

என்பெழுந்தயாக்கையினோடிங்கிருந்துதவமுஞற்று
மன்புடையாய்விழைந்ததெவனறைதியாலெனலோடும்
பொன்பிறங்குசுணங்கலர்ந்தபூண்முலைச்சிற்றிடையன்ன
யின்பமுறுநாற்பயனுமெனக்கருளாயென்றிரந்தான். ௨௭

ஈங்கடைந்தோருயற்கழிவின்முத்தியினெய்துவதன்றி
யோங்கியநாற்பயனுமொருங்குறுவதிலையென்றருள
வீங்குபுகழ்நாற்பயனுமுடங்களித்தென்மெலிவகற்றும்
பாங்குபெறுதலத்துறுவலென்றனனைப்பதித்தணந்தான். ௨௮

கதுவியபேரன்பினொடுஞ்சென்றணைந்துகதிர்க்கற்றை
விதுவணிந்தமணிமாடமேனிலையின்மடமாதர்
புதுவதணிந்தாட்டயரும்பொற்புவிளங்கியவீதி
மதுரைமுதலைந்தலத்துமன்னியருந்தவமுயன்றான். ௨௯

அவ்வவமாநகர்த்தெய்வமெதிர்தோன்றியருட்காசித்
தெய்வதம்போலுரைத்திடலுந்திகைத்தவுளத்தினனாகி
யெவ்வமறுநாற்பயனுமொருங்கீயுந்தலமொன்று
கௌவைநெடுங்கடல்வரைப்பினில்லைகொலோவெனக்கவன்றான்.

ஆற்றுமருந்தவமுயற்சியொழிந்தகத்தைவளைந்துருக்கி
நீற்றுமழற்றுயரோடுநெறிச்செல்வானெதிர்தோன்று
மூற்றிருக்கும்பசுந்தேறலொழுக்கிளந்தளிர்துவன்றி
நாற்றமிகுஞ்சண்பகப்பூஞ்சோலையினைநண்ணினான். ௩௧

குயிலினத்தான்மொழிமிழற்றிக்குளிர்காலால்வியராற்றி
மயிலினத்தானடமாடிமலர்நிழலான்மெய்வருடிக்
கயலனையவிழிமடவார்போலநறுங்காவகமுஞ்
செயல்புரியவாங்கொருசார்திருந்தவிருந்தயர்வுயிர்த்தான். ௩௨

வழிச்சென்றவயர்வனைத்துமலர்ப்பொதும்பர்க்குளிர்நிழலா
னொழித்துறையுமேல்வையின்முன்னுஞற்றியமெய்த்தவப்பேற்றாற்
கொழித்தெழுந்தோர்மொழிவானிற்கோதறுபற்பலவளமுஞ்
செழித்ததிருக்காஞ்சியினைச்சேறியெனச்செவிமடுத்தான். ௩௩

ஆராதபெருங்காலகத்தரும்பமுகத்துவிழி
நீராரச்சென்னிமிசைநெடுங்கரங்கள்குவிந்தேறப்
பாராரத்திசைநோக்கிப்பணிந்துபருவரனீங்கிப்
பேராதவுவகையுளம்பிணைந்தெழுந்துசென்றணைந்தான். ௩௪

கருப்புவனமிடைகழனிபுடையுடுத்துக்கடிகுலவுந்
திருப்புவனசாரத்தைச்சென்றணைந்துபெருந்தவத்தோ
னருப்புவனசங்கவற்றுமலர்முலைபாலமர்ந்தசிலைப்
பொருப்புவனமலர்க்கரத்தார்தளிகடொறும்போற்றிசைத்தான்.

விடங்கலுழுங்கூரிலைவேல்விழியுமையாளொளிர்தரள
வடங்குலவுமுலைச்சுவடும்வளைத்தழும்புமணிந்தருளு
மடங்கலரூர்செற்றபிரானருள்போற்பன்மலரு
முடங்கலருங்கம்பைநதியுருகெழநீராடினான். ௩௬

தேந்திவலைதுளித்துமலர்செறிந்துநறுங்கனிதுவன்று
மாந்தருவினடிமுளைத்தவள்ளலார்திருப்பதமு
மேந்துமுலைத்திருக்காமக்கண்ணியிருசேவடிமென்
பூந்தளிருமுப்பொழுதும்போற்றிசைத்துவைகினான். ௩௭

சின்னாள்சென்றிடுமளவிற்றிருக்காஞ்சிநகர்த்தெய்வ
முன்னாகிநாற்பயனுமொருங்களிப்பவுளமுருக்கு
மின்னாதபரிவனைத்துமிரித்தொருங்குநாற்பயனும்
பொன்னாடர்நறுமொறுப்பப்போதநுகர்ந்தின்புற்றான். ௩௮

இவ்வாறுகாமுற்றனாற்பயனுமொருங்கீந்த
வவ்வாய்மையாற்காமபீடமெனவலங்கியதாற்
செவ்வாய்மைக்காசிமுதற்றிருத்தகுமூவிருநகரு
மொவ்வாதமேன்மையுதாயோங்குபுகழ்த்திருக்காஞ்சி. ௩௯

கலிவிருத்தம்.

வண்டாயிரமேவியுழக்கிவளைந்து
தண்டாதொடுதேறறளிர்ப்பநுகர்ந்து
பண்டாழிசைபாடமுறுக்குவிரிந்த
வெண்டாமரைநாண்மலர்வட்டணையும்பன். ௪0

போழ்பான்மதிவேணிபுனைந்தவர்பொற்ப
வாழ்பாடளிமாவளர்கின்றதளிக்குக்
கீழ்பாலிமையோரிறையன்புகிளர்ப்ப
வாழ்பாறுயர்பூசைபுரிந்தநகர்ப்பால். ௪௧

வாடாமலர்மாலைமுடிக்கணிவானோர்
கோடாநெறிமாதவர்மற்றவர்கூடக்
காடார்சடையார்கழனெக்குளநாடி
யீடார்பரிமேதமியற்றுதலானன். ௪௨

ஓராருயிரீருடலொப்பவிணங்குஞ்
சீரார்தனைநீவியுருற்றுதிறம்பொன்
வாரார்முலைவாணுதன்மைத்தநெடுங்க
ணேரார்கலைவாணியுமெய்த்துவெகுண்டு. ௪௩

உரியாளவளாயுடனுற்றிடுகாயத்
திரிமாதொடுதேனினமொய்த்திசைபாடும்
விரிபூவணைவேதியனச்சுறமேவி
யெரிவேள்வியைமாயவிறுப்பதுதேரா. ௪௪

எழிலுந்திருவும்பெருவீடுமிறைஞ்சி
வழிநின்றவர்தங்களினுளும்வழங்குஞ்
செழுநுண்பிலவம்பிகைசேவடியன்பிற்
றொழுதங்கருள்கொண்டனள்போதறனைந்து. ௪௫

விண்ணத்தமர்வானவர்வீறுசழங்க
மண்ணிற்பொலிமானுடர்சாலமலங்கப்
பண்ணைக்குரன்மாமலராதிகள்பம்பி
யெண்ணற்கருநீர்வடிவாகியெழுந்தாள். ௪௬

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருமணியிமைக்குங்கோட்டுச்சிலம்புகள்பெயர்த்துவீசி
யிருநிலமகழ்ந்துமோதியெண்டிசைக்களிறுமுட்கப்
பெருகொலியெழுப்பிப்பொன்னும்பிரசமென்மலருஞ்சந்து
மருவிவல்விரைந்துவாணிவரநதிகுறுகலோடும். ௪௭

குருக்கிளர்மாழைமாடங்குழீமியகாஞ்சிமூதூ
ரிருக்கைகொண்டவரெல்லோருமெழிற்பரிமேதமாற்று
முருக்கிளர்வேள்விச்சாலையுறைந்தவரோடுநோக்கிப்
பொருக்கெனவச்சம்பூத்துப்பொருமியவுளத்தரானார். ௪௮

சுரிகுழற்காளிதன்னாற்றேற்றமுன்னிரியல்போன
விரிகடலழிப்பமீட்டுமேவியதொன்றேமுன்போற்
புரிமணிக்கம்பைகம்பரேவலாற்போந்ததொன்றே
வருபுனல்வெள்ளமென்னமலங்குவரங்கோர்சாரார் ௪௯

இல்லிடைப்புகுவார்மீட்டுமெரிமணிவீதிசெல்வார்
கல்லணிமாடமேடைகதழ்ந்தனரிவர்ந்துபார்ப்பா
ரல்லசெய்வெள்ளநீத்தமண்மையினிறுத்ததென்னா
வொல்லையினிழிவாருய்தியோர்ப்பரான்மற்றோர்சாரார். ௫0

கன்றொடுபசுக்கடாம்புகண்பரிநீர்த்துக்கொண்டு
பொன்றிரண்மணிகள்வெளவிப்பொள்ளெனவிரியல்போகித்
தொன்றுதொட்டிருந்துவாழுஞ்சுடர்மணிமனையுமற்று
மின்றுமுற்றழியுமேயென்றினைவரான்மற்றோர்சாரார். ௫௧

மலையெனத்திரைகள்வீசிவையகமூன்றுமுட்கத்
தலைவருவெள்ளந்தன்னைத்தடங்கணாற்காணுந்தோறு
மலைசிறைக்கலுழன்கண்டவணன்மிடற்றரவுபோல
வுலையுநெஞ்சினர்களாகியுணங்குவர்மற்றோர்சாரார். ௫௨

உறுசுவைகொழிப்பவட்டவுணவினையிடையினீத்து
முறுகியகாதல்பொங்கமுயங்குறுகலவியின்பச்
செறிவினையிடையினீத்துந்திகைத்துடல்பதைத்துவாடி
யிறுமுயிராளர்போலவிருப்பரான்மற்றோர்சாரார். ௫௩

சேலனநெடியகண்ணீர்செங்கரநெரித்துப்பல்கா
லாலிலைவயிறுநோவப்பிசைவதினாவதென்னே
பாலகன்றன்னையேந்திவெளிக்கொளீர்பதியைவிட்டுச்
சாலவுமுய்தற்கென்றுசாற்றுவர்மற்றோர்சாரார். ௫௪

அகிலமும்படைக்கவல்லவலரணைக்கிழவனீங்குத்
தகலுறுவேள்வியாற்றுந்தன்மையினிருக்குமாற்றா
லுகலுறவெழுந்தவெள்ளமோங்குமிந்நகரினுள்ளே
புகலுறாதொதுக்குமென்றுபுகலுவர்மற்றோர்சாரார். ௫௫

அன்னதுகேட்டிலீரோவம்புயக்கடவுண்மாட்டே
துன்னியசீற்றங்கொண்டுதுணைமுலைக்கலைமானன்றே
நன்னதிவடிவுதாங்கிநண்ணுதலுற்றாளந்தோ
வென்னினிப்புகலுமாறென்றேங்குவர்மற்றோர்சாரார். ௫௬

குங்குமக்களபந்தோய்ந்தகுவிமுலைக்கிடைதள்ளாடு
மங்கைவெண்கமலத்தோட்டுவாணிதன்கொழுநன்மீது
பொங்கியசீற்றங்கொண்டுபோந்ததுமழகிதென்று
செங்கரமறித்துச்சாலத்திகைப்பரான்மற்றோர்சாரார். ௫௭

குலவுமோர்மனையைநீத்துமாற்றவள்கூடவைக
வலைவறுவேள்வியாற்றுமயன்றவறுடையனல்லாற்
கலைமகடவற்றாளென்றுகழறுதற்கிடனின்றென்னா
வுலைவுறுநெஞ்சின்வெம்பியுரைப்பரான்மற்றோர்சாரார். ௫௮

வாள்விரிகனகமோலிமறையவன்கயவன்போல
வேள்வியொன்றியற்றப்புக்குமேதகுகாஞ்சியெல்லாந்
தாள்வினைதவிர்ந்துநைந்துதளர்ந்தழிகிற்பமாணு
மூள்வினைபுரிந்தானென்றுமொழிவரான்மற்றோர்சாரார். ௫௯

கடையுகவெள்ளம்வென்றகாஞ்சிமற்றெவர்களானு
மிடையினிலழிக்கலாமேயிங்குறுமிடறும்வேலை
விடமிடறணிந்தபெம்மான்விலக்குவனையழின்றென்
றடைவுறுதேற்றந்தன்னாலறைவரான்மற்றோர்சாரார். ௬0

செய்திடுந்தொழிலுமந்தச்செய்தொழிறன்னைநாடி
வெய்துவந்தடையுமூறும்வேறுவேறாய்ந்துபாரா
தைதொருவேள்வியாற்றலாயினனினைந்தானென்று
வைதுஞ்சேக்கையானைவெறுப்பரான்மற்றோர்சாரார். ௬௧

இன்னணநகர்சோகாக்குமேல்வையினளிகண்மூசித்
துன்னியதாதுமாந்துந்தோட்டலர்க்கமலத்தோன்ற
லென்னினிச்செய்யலாவதென்றுளமிரங்கியாய்ந்து
கன்னியந்துளவினன்றன்கழலிணைவணங்கிச்சொல்வான். ௬௨

முரிதிரைக்கடல்சூழ்வையமுழுவதுங்காக்குநீயே
விரிபுனனித்தநீத்தென்மேதகுவேள்விகாத்திட்
டுரியசீர்ப்பயனைநல்கென்றுள்ளமுமுகமுஞ்சாம்பும்
பரிவொடுநின்றுபல்காற்பழிச்சினனுரைத்தல்செய்தான். ௬௩

முள்ளரைப்பசியதண்டான்முருகுகொப்புளிக்குந்தேற
லள்ளிதழ்க்கமலவாழ்க்கையணங்குவீற்றிருக்குமார்ப
னள்ளலர்க்கச்சம்பூக்குநகைசிறிதரும்பிமேவொன்
றுள்ளலைநீத்தியானேயொழிப்பலென்றதற்குநேர்ந்தான். ௬௪

உட்டுளையெயிறுதோறுமுருகெழுகாரிவாரு
நெட்டரவணையினேடுமொய்யெனநேரேபோந்து
மட்டலர்கமலச்செல்விமணிமுலைக்களிறுபாயப்
பட்டலர்துளவத்தண்டார்ப்பசுமுகில்படுத்ததன்றே. ௬௫

வெள்ளியஞ்சிலம்புமேலோர்விரூப்பெருநீலக்குன்றம்
வெள்ளிடையடைத்துநீண்டுவிலங்குறக்கிடந்தாலென்னக்
கள்ளலர்துளவமார்பன்காமருசே[illegible]ன்மேலாற்
பள்ளிகொண்டிருக்குந்தன்மைபடர்நதிவாணிகண்டாள். ௬௬

கண்டகண்ணெருப்புத்துள்ளக்கனன்றுபேரண்டமெல்லாம்
விண்டிடத்தெழித்தோர்பாங்கர்விலங்கிமேற்சேறலோடும்
வண்டுளர்கமலைவைகுமார்பினன்மீட்டுமீட்டு
மிண்டினனென்றடுத்துமாற்றுமெலிவினைமலரோன்கண்டான். ௬௭

அழிபுனனெடியோன்றட்பவகலுமென்றுன்னியுன்னிக்
கழிமகிழ்பூத்தவுள்ளக்கருத்தெலாம்வெறியனாகி
விழியிணைகண்ணீர்வாரவெம்பிமிக்கழுங்கித்துன்பச்
சுழிபெருங்கடலுண்மூழ்கித்தொலைவரும்வெருட்சிகொண்டான்.

பலநினைந்தாவதென்னே பாற்கடல்கடைந்தஞான்று
குலவுபல்லுயிருமஞ்சக்கொதித்தெழுங்காளமேந்தி
யுலகெலாமுய்யவுண்டவோங்கியகருணையாள
னிலவியதிருவேகம்பநிமலனுண்டெனவெழுந்தான். ௬௯

உடைநனிசழங்கித்தட்பவுத்தராசங்கஞ்சோரச்
சுடர்மணிவடமுநூலுந்துயலுறஇமார்பிற்பின்ன
முடிபடுசிகைதள்ளாடிமுகந்தொறுமுகப்பவோடிக்
கொடிமுகிலுரிஞ்சுமாடக்கோயிலுட்சென்றுபுக்கான். ௭௦

அடியவர்க்கெய்ப்பின்வைப்பாயமர்ந்தருளமலத்தேவை
யிடரினுக்கெதிரேதோன்றியினிதருள்கருணைவாழ்வை
மடலவிழ்கடுக்கைவேய்ந்தமாவடிக்குழகன்றன்னைப்
படர்வினையிடும்பைமுற்றும்பாற்றுவானேரேகண்டான். ௭௧

மறந்திடுந்துயரன்பொங்கிவார்புனற்கண்ணன்வேதஞ்
சிறந்திடுநாவனுச்சிகூம்புசெங்கையனாகி
நிறந்தரையொன்றவீழ்ந்துநெடிதுளந்திளைத்துநின்று
விறந்தபூஞ்சடிலக்கற்றைவேந்தினையிரக்கலுற்றான். ௭௨

வரம்பினிற்கடவாவேலைவையகமழிப்பவந்த
விரும்புனல்சடிலத்தேற்றாயிமையவர்வரைப்பினோடும்
பெரும்புவியஞ்சப்போந்தபிரளயமுழுதுமோப்பி
யரந்தைதீர்த்தருளிக்காஞ்சியணிநகர்புரந்தாயன்றே. ௭௩

அன்றுபோலிரங்கியின்றுமடியனேனுற்றும்வெள்ளி
பொன்றவார்த்தெழுந்துபொங்கிப்பொருதிரைதிசையிற்போக்கிக்
கன்றியெவ்வுயிருமஞ்சிக்கலங்குறக்கதழ்ந்துமுற்று
மன்றலங்கூந்தல்வாணிவார்நதிதடுக்கவென்றான் ௭௪

இரந்தவர்வறியராகாதீண்டியவிழைவுமுற்றப்
புரந்தருள்கருணைவள்ளல்புதுநிலாவணிந்தபெம்மான்
பரந்தவெண்ணிலவுகாலப்பணிநகைவறிதுகாட்டிச்
சுரந்துமட்டொழுகுஞ்சஞ்சத்தோன்றலுக்கருளிச்செய்யும். ௭௫

விளரியாழ்மிழற்றிப்பாடிவிழுப்பொறிச்சிறகர்த்தும்பி
யுளருமென்றோட்டுக்கஞ்சப்பொகுட்டணையும்பர்மேலாய்
வளர்பிறைநுதலாள்காமக்கண்ணியைவழிபாடாற்றித்
தளர்வறுதவங்கள்செய்துதன்னருள்கோடியென்றான். ௭௬

உணங்கியவுள்ளம்பொங்குமுவகையிற்றழைப்பமாற்றாக்
கணங்குறுத்தருளுஞ்சூலத்தங்கையெம்பெருமான்பாதம்
வணங்கினன்விடைகொண்டேகிமறைமுடிவின்னுங்காணக்
குணங்களைக்கடந்தஞானக்குமரியைச்சரணஞ்சார்ந்து. ௭௭

உடைதிரைசுருட்டுந்தெண்ணீரொலிகெழுதெய்வக்கம்பை
யடைகரைமருங்குஞ்செய்யவழலவிர்ந்தனையசெங்கேழ்
மிடைதளிரொருமாநீழலிடத்தும்வெம்பவநோயெல்லாம்
விடைகொளும்பஞ்சதீர்த்தவிரிபுனற்கரையின்கண்ணும். ௭௮

வெம்பியகாமக்காட்டையோரமப்பறித்துவிடே
நம்பியசனகராதிநற்றவமுனிவரோடு
மம்பிகைபாதநெஞ்சத்தழுத்திமெய்யன்புகீடிக்
கம்பமற்றிருந்துமாதோகரிசறநோற்றிட்டானே. ௭௯

எழுதியவோவமென்னவிருந்திருந்தவத்தின்மூண்ட
செழுவியதிறத்தைநோக்கித்திருவுளமகிழ்ந்துகண்ணி
னொழுகியகருணைபாயவொளிர்நகைவதனம்பூப்ப
முழுவதும்பயந்தநங்கைமுன்னெழுந்தருளலோடும். ௮௰

எழுந்தனன்கரங்களுச்சியேற்றினன்றரணிமீது
விழுந்தனன்கவலைமுற்றும்விட்டனனின்பவெள்ளத்
தழுந்தினனாடிப்பாடியார்த்தனன்கண்கடோறும்
பொழிந்தனன்றாநீர்வெள்ளம்போர்த்தனன்புளகமேனி. ௮௧

அலங்கலங்குழலுமன்பர்க்கருள்பொழிவிழியும்வில்லிட்
டிலங்கியமுகமுமேற்போர்க்கீத்தருள்கரமுமும்மை
மலங்கெடவருளுந்தாளும்வடிவெலாநோக்கிநோக்கிப்
புலங்களிசிறப்பப்பல்காற்போற்றிநின்றிரக்கலுற்றான். ௮௨

வைத்தவேறடற்றுண்மூழ்கமலைந்திடுநெடியவாட்கட்
கத்திகைமாலையோதிக்கருணையங்கடலேயிந்நாள்
முத்தணிந்தெழுந்துவீங்குமுகிழ்முலைக்கலைமானிங்குப்
பைத்தநீர்நதியாய்ப்போதும்படர்ச்சியைத்தவிர்த்தல்வேண்டும்.

ஒருகணந்தாழ்க்கிலம்மாவொலிகெழுகடலிற்றோன்றும்
கருவிடநுகர்ந்தகண்டர்கழலிணைகருதியாற்றும்
திருமலிவேள்வியோடுந்திண்ணியமதில்சூழ்காஞ்சிப்
பெருநகரழிக்கும்வல்லைபேணியெற்காக்கவென்றான். ௮௪

இறுநுசுப்பிரங்கிவாடவெழுந்துவெண்டரளம்பூண்டு
நறுவிரைக்களபந்தோய்ந்தநகிற்றுணைச்சுவடுமாவின்
முறுகியகாதல்பொங்கமுளைத்தவர்க்கணிந்தநங்கை
குறுநகைமுகிழ்த்துநோக்கிக்குளிர்மொழியருளிச்செய்யும். ௮௫

அஞ்சலையுலகமீன்றவலரணைக்கிழவகேண்மோ
நஞ்செனவெகுண்டுசீறிநன்னதியாகிப்போதும்
வஞ்சிநுண்மருங்குலாளைமகிழ்விநீயாற்றுவேள்வி
யெஞ்சலின்றினிதுமுற்றுமேகுதிவிரைவினென்றாள். ௮௬

அருடலைக்கொண்டுதாழ்ந்தங்ககன்றுவலவிரைந்துபோந்து
மருடலைக்கொண்டுசென்றவாணியையன்மிநல்ல
பொருடலைக்கொண்டசொல்லான்மகிழ்வித்துப்பொருந்தக்கொண்டு
தெருடலைக்கொண்டவேள்விசீர்மையின்முடித்திட்டானே. ௮௭

பிறைநுதல்வாணிநீத்துப்பெருக்கினைத்தவிர்ப்பச்செய்யு
நறைமலர்ப்பொகுட்டுமேலானற்றவம்வளர்ந்தவாற்று
விறையினிலிடும்பையோப்புந்தபோமயமென்னுநாம
மறைபுனற்பழனக்காஞ்சியணிநகரணிந்ததன்றே. ௮௮

கலிவிருத்தம்.

அற்பகவெயிலுமிழ்விர்நவமணிகுயில்
விற்படுமுடியினர்விண்ணவர்முனிவருங்
கற்படுசிறையரிகடவுளரிறைவனு
முற்படுமொருதினங்குழுமினர்பொழிவார். ௮௯

வெள்ளியபெருவொளிகிரிகயிலையைமுதற்
பள்ளியினமர்வுறும்பண்ணவர்மூவரு
மெள்ளருந்திரிசனயோருழியெங்களுக்
கொள்ளிதினருளவுமுற்றதுவென்று. ௯௦

வரியளியினமுரன்மதுவுமிழ்நறுமலர்
விரியணைமிசையுறைவேதியனிருசழு
லுரியதம்மகமலருறநினைந்தனைவரு
மரிறபுதவநனியாற்றுதலுற்றார். ௯௧

எண்ணறுநாளிவரின்னணமுயறலுந்
தண்ணியநறுமணத்தாதவிழ்தாமரை
வண்ணமென்மலரணைவானவன்முன்னுற
வெண்ணிறவேற்றனமேல்கொடுவந்தான். ௯௨

செழுமறைவேதியனெதிருறச்சேறலும்
விழுமியதவநவிலனைவரும்வெய்தெனக்
கழுமமினெஞ்சகங்களிவரத்தெளிதரு
முழுமறையோதினர்முன்னுறத்தொழுதார். ௯௩

எந்துநும்மனமுயல்வெனவினவியமறை
யந்தணன்முகமலரலர்தரமொழிதர
வெந்தைநின்னொடுமரியானையுமோரிடைச்
சுந்தரப்பதமலர்தொழமுயல்கின்றாம். ௯௪

அத்தகுமுறுபயன்முற்றுறவாம்வகை
யெத்திறமருளுதியென்றலுமலரவன்
கொத்துறுமவர்களுமுடன்வரக்கொடுபுகுந்
துத்தியவரவணையப்பனைச்சேர்ந்தான். ௯௫

வேறு.

கொடியிடைப்பணைமுலைக்கோலமாமக
ளடியிணைவருடநெட்டரவப்பள்ளியிற்
கடியவிழ்தாமரைக்கண்வளர்ந்திடு
நெடியவன்பதமலர்நிலத்திற்றாழ்ந்தனன். ௯௬

நெட்டராவணையினின்றெழுந்துநெஞ்சகம்
பெட்டசீர்விழைவொடும்பெரிதுவந்துநீ
சட்டவானவரொடுஞ்சார்ந்ததென்னெனு
மட்டலர்ந்துளவினன்மகிழ்ச்சொல்லுவான். ௯௭

என்னையுநினையுமற்றேறுயர்த்தநம்
மன்னையுமொருவயிற்காணும்வாஞ்சையின்
முன்னியவிவரொடுமுற்றயானுமிங்
கன்னதன்பொருட்டுவந்தடைந்ததென்றனன். ௯௮

திவளொளிக்கவுத்துவந்திளைக்குமார்பினு
னுவலைகயனுயினனுவணைப்புள்ளிவர்ந்
தவரொடுமெவ்வயினசன்றுஞ்சென்றனன்
கவரொளிக்கற்றையங்கயிலைவெற்பினே. ௯௯

தேத்துளிததும்பியதெய்வக்கொன்றையு
மாத்தியுங்கங்கையுமளவளாவிய
தூத்திர சடையரைத்தொழுதற்கவ்வயி
னேத்தருங்கோயிலுள்வாயிலெய்தினன். ௧௦௦

நவ்விபோல்விழியெழினயனமாதிடம்
வெளவியபுராணர்தம்வாய்தல்காத்திடு
மெளவியமகன்றநெஞ்சண்ணனந்திதான்
செவ்வியின்ருழிகனச்செப்பமீண்டனன் ௧௦௧

இளமதியயர்வுறவெற்றுத்தெண்டிரை
வளநதிவேணியார்வனசமென்கழ
றளர்வறக்காணுவான்றவிர்ந்துமற்றவ
ணளவறுபெருந்தவமாற்றலுற்றனன். ௧௦௨

கனைகுரல்வண்டினங்களுலிக்கூட்டுறும்
வனைபுகழ்த்தாமரைவள்ளலாதியோ
ரனைவரும்வேறுவேறங்கண்வைகுபு
தனிநிகரருந்தவஞ்சாலவாற்றினர். ௧௦௩

கொம்பொருபாகரைக்குறித்துநெஞ்சினை
யைம்பொறிவழிச்செலாதடக்கிநோற்றுழி
வம்புவிழ்மதசலமூறிவார்ந்திழி
தும்பிமாமுகத்தவன்றோன்றினனரோ. ௧௦௪

ஆயிரம்பரிதியொன்றாகித்தோன்றியாங்
கேயபேரொளிவிடுமுருவினெந்தையை
மாயிருங்களிகொளநோக்கிவலலையிற்
றூயதாட்டுணைமலர்தொழுதுபோற்றினர். ௧௦௫

மங்கையோர்பாகரைக்காணும்வாஞ்சையிற்
பொங்கியவருந்தவம்பூண்டுவைகினே
மங்கவர்முதலையாநின்னையன்றி
லிங்கியாந்தொழப்பாவென்னிதினெய்தினம். ௧௦௬

தந்தையுமையும்வேறன்மைசாற்றுவா
ரெந்தைநின்றரிசனமேறுயர்த்திடு
நுந்தைதன்றரிசனநுதலின்வேறிலை
யந்தணவெனத்துதியறைகன்மேயினர் ௧௦௭

விழுத்தவுமுடையவரைமெய்யருட்கட
லழுத்திடுமொருமருப்பண்ணற்குஞ்சரம்
வழுத்தியதுதிக்குளமகிழ்ந்துமாறிலா,
முழுத்தபேரருளினன்மொழியுமென்பவே. ௧௦௮

அருந்திறற்சூற்படையகி நாயகர்
கருந்தடங்கண்ணியுந்தாமுங்காஞ்சியிற்
றிருந்தியகம்பைநீர்க்கரையிற்றேனினம்
விருந்துணுமாவடிமேவிவைகினார் க0கூ

அத்தகுத பயநகரையண்மிடி
மெய்த்தவமாற்றிநீர்விழைந்தயாவையுங்
கைத்தலக்கனியெனக்கூடுங்காண்மினென்
றுத்தமக்களபமங்கொளித்துப்போந்ததே. கக0

வழங்கியவருடலைக்கொண்டுவார்கழ
றழங்கியதிருவடிதாழ்ந்தெழுந்துபோய்ப்
பழங்கனிந்துகும்பொழிற்பாங்கர்வண்டின
முழங்குறுகாஞ்சிமாநகரமுற்றினார். ககக

செஃறவழ்தொறுஞ்செறிதிமிரஞ்சீப்பநற்
கஃறிவளொளிவிடுமாடக்காஞ்சியிற்
பஃறளிதொறுந்தொறும்படர்ந்துநாதனார்
விஃறவழ்சிலம்படிவிழைந்துபோற்றினார். ககஉ

கறங்கிமுத்தெறிந்துவன்கரைகொன்றார்த்தெழு
மறங்கிளர்ந்தடைதிரைவார்ந்துலாவிய
வறங்கிளர்பயனெலாமருளுங்கம்பைநீர்
பிறங்குபேரன்புளம்பெருகமூழ்கினார். ககங

மழைத்திரளகடுகீண்டெழுந்துவார்ந்துபோய்க்
குழைத்தபூஞ்சினையெலாங்குரங்கக்காய்படுந்
தழைத்தவோர்மாவடிதன்னிற்றோன்றிய
வுழைத்தடங்கையினார்திருமுனுற்றனர். ககச

நோக்கியமலர்விழிபெரிதுநுண்டுளி
வாக்கமென்மலர்க்கரங்கூம்பமாறிலாத்
தேக்கியவின்புளந்திளைப்பயாவருங்
காக்குநாயகரிருகழலிற்றாழ்ந்தனர். ககரு

ஏலவார்குழலிவீற்றிருக்கும்பாகரைக்
கோலவார்சடையரைக்கும்பிட்டஞ்சுரும்
பாலவார்மதுவுமிழம்புயத்தவன்
சாலமாமறைகளாற்சரண்பழிச்சினான். ககசு

சீரியமறைத்துதிக்கிரங்கித்தேனினங்
காரளிமுழக்கறாக்காமர்மாவடிப்
பூரணர்தாமரைப்பொகுட்டுமேவிய
வாரணன்காணவங்கருளித்தோன்றியே. ககஎ

சிறையளிதேனினஞ்செற்றித்தாதளைஇ
நறைநுகர்ந்தெதிரெடுத்தென்னநல்லிசை
முறைமுறைபயில்வுறுமுண்டகத்தினோய
நிறைவரங்கோடிநீயெனநிகழ்த்தினர். ககஅ

கிளர்ந்திடுமுவகையுங்கெழுமிமீமிசை
வளர்ந்திடுபத்தியுமனங்கொளாதெழத்
தளர்ந்திடுமொழியினன்றாழ்ந்துவண்டின
முளர்ந்துணுமதுமலரும்பனேதுவான். கக௯

பிள்ளைவெண்மதியமும்பிரசக்கொன்றையும்
வள்ளெயிற்றரவமுமிலைந்தவார்சடை
யள்ளிலைச்சூற்படையமலநாயக
வெள்ளருநினதருள்கிடைப்பவிவ்வழி. கஉ0

பெருகியவானவரோடுபெட்டுநின்
றிருமுனர்ப்பரிமகஞ்செய்வன்மற்றவண்
வருவதுவேண்டுமென்றிரப்பவார்கட
லிருள்விடமயின்றவரிசைந்திட்டாரரோ. கஉக

கீற்றிளம்பிறையவிர்கேழ்த்தசெஞ்சடை
நீற்றணிதிகழ்ந்தமெய்நிமலரேற்றெதிர்
கூற்றுயிர்குடித்ததாள்குறித்துநூல்வழி
யாற்றினன்பரிமுகமயனுமென்பவே. கஉஉ

முறுகியமணப்புகைப்படலமொய்த்துவா
னுறுமலர்க்கற்பகநனைகள்வாட்டுறு
மறைநெறிவேள்வியின்வயிங்குசெஞ்சடைப்
பிறையணிகூத்தனார்பிறங்கித்தோன்றினார். கஉ௩

விம்மிதந்தலைக்கொளவிழிகணீருக
விம்மெனுமுன்னெழுந்திறைஞ்சிவாழ்ந்தன
ரம்மலர்ப்பொகுட்டின்மேலயனுமார்பிடைச்
செம்மலர்த்திருவமர்செல்வத்தோன்றலும். கஉச

மற்றைவானவர்களுமறுவிலாத்தவ
முற்றுமாதவர்களுமொருங்குழுவர்தம்
பொற்றதாமரையடிப்போதுதாழ்ந்தெழுந்
தற்றமில்விழைவவனாரமுற்றினார். கஉ௫

அன்பருக்கருள்புரிந்தமலநாயகர்
பொன்பொதியிளமுலைப்பூவைதன்னொடு
மின்பழுங்கனிந்துதேனிறைக்குமாவடி
முன்புபோல்வைகினார்முகிழ்த்தகாதலால். கஉ௬

பாற்றரும்பவத்தொடர்பாறவல்வினை
நிற்றிடுமழுப்படைநிமலநாயகர்
போற்றரும்பதமலர்போற்றியன்பினு
லாற்றருவேள்விசெய்தயனிருந்தனன். கஉ௭

பாவியவுத்தரவேதிப்பாங்கரிற்
பூவலர்துளவினான்பொற்பவைகினான்
றூவிலப்பரிமகச்சாலைவேதிதான்
மேவருமத்திவெற்பென்னவோங்குமே. கஉ௮

இருவருநாடொறுவிறைவரோமேற்
றிருவருமின்னணம்வதியுமேதுவான்
மருமலிகாஞ்சிமும்மூர்த்திவாசமென்
றொருபெயர்படைத்ததாலுலகுபோற்றவே. ௧௨௯

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

துள்ளிவீழ்தருமாலைவெள்ளருவி துளைத்தநெட்டறைப்பெருங்குழியிடத்துப், புள்ளுறுதமென்சினைப்பொழிலுகுத்த போதுசாலவும்போர்ந்தகாரணத்தாற், பள்ளமீதெனவறிந்திடாதியலும் பனைக்கைவேழம்வீழ்த்துலம்பிழுன்னரக்கன், றெள்ளுறுத்தெடுத்திசையெழுப்புஞ் செய்கைகாட்டுமக்கயிலைமால்வரையின். ௧௩௦

தேய்ந்தவெண்மதிக்குழவிதான்வளர்ந்து செழிப்பமுன்னிமந்தாகினிநறுநீர், தோய்ந்துதுன்னியசெஞ்சடைவனத்துச் சூட்டராவினந்தழல்விடங்கொழித்துக், காய்ந்துவன்படம்விரிக்குஞ்வெங்கிழலிற் கதுவிவைகலுமருந்தவமுயலு, மாய்ந்தமெல்லிதழ்த்தொடரியகடுக்கை யலங்கல்சூழ்ந்தெழிலசும்பியமுடியார். ௧௩௧

மாண்டவின்னிசைச்சுரும்பும்புமுறு மணங்குலாவுசெம்மட்டுவார்ந்தொழுக, வீண்டுமெல்லிதழ்மலர்த்தொடைசெருகு மிருட்சுருங்குழலிறைவிதன்னோடும், காண்டகுங்கதிர்க்குடைமிசைநிழற்றக் கவின்றசாமரையிருபுறமிரட்டப், பூண்டகாதலிற்பொலந்தவிசிவர்ந்து பொற்பமுன்னொருநாளினிதிருந்தார். ௧௩௨

அண்டம்யாவையும்படைத்தளித்தழிக்கு மாற்றல்வல்லசீர்நந்திவேதண்டன், மண்டுமாதவப்பிருங்கிதுண்டீரன் மற்றுமல்கியபெருங்கணநாதர், கொண்டல்வெள்ளெனக்கறுத்துவெண்புணரி கொதித்தெழுந்தவல்விடநுகர்ந்திருண்ட, கண்டர்சேவடிக்கமலநாண்மலரைக் கசிந்துபோற்றிநின்றன்பினிற்றிளைத்தார். ௧௩௩

அரிபரந்திருண்டகன்றுநெட்டிலைவே லட்பலைத்துநீண்டண்டஞ்செவிக்குழையைச், சரியமோதுமைவிழிச்சியைமுதலாஞ் சத்திமாதர்களெண்ணிலார்குழுமிக், கரியகண்டர்தம்மருங்குவீற்றிருக்கும் காமர்வாண்முகமலர்ப்பசுங்கொடிதன், பரிபுரச்செழுஞ்சீறடிக்கமலம் பணிந்துபோற்றிநின்றின்புமீக்கிளைத்தார். ௧௩௪

போற்றியின்னணநின்றிடுமேல்வைபோக்கருந்தவம்வல்லதுண்டீர
னாற்றுமுன்னைவல்வினைப்பயன்றொடரவறிவுவேறுபாடாதவனுருப்ப
மாற்றுபூஞ்சினைமலர்ப்பொழிற்றெய்வமாலதிப்பெயர்மாதராள்சனகக்
கோற்றொழிப்பசும்பணைபுரைநெடுந்தோட்கோதைமீதுதன்மனஞ்செலவிடுத்தான்.

வணங்குநுண்ணிடைவருத்திமேலெழுந்து மகர்த்தபூண்முலைமாலதித்திருப்பே, ரணங்குமாயிடைப்புகுமுகம்புரிந்தே யார்வமீக்கொளக்கட்கடைவிடுத்தா, ளிணங்குமாரனுந்தன்வலிகாட்டி யிடையினெய்துழியெழுந்தமெய்யுணர்வா, லுணங்கரும்புகழாளன்மற்றவள்பா லுற்றநெஞ்சினையொய்யெனமீட்டான். ௧௩௬

என்னைசெய்தனனன்றுநன்றிதுகாநீட்டுமேன்மையுந்தவங்களுமிறப்ப
வன்னமென்னடைப்பிராட்டியினோடுமமருமண்ணலார்திருமுனிவ்வாறு
கொன்னுதீவினையிட்டியவஞ்சக்கொடியனேற்கினியுய்வகையாதென்
றுன்னியுன்னிநெக்குருகிவெய்துயிராவுளமெலாம்பதைபதைத்துமிக்கழிவான்.

உடங்குதன்னுடனின்றபோன்பினும்பர்நாயகர்சேவடிபரசு
மடங்கடிந்தமெய்யடியரைநோக்கிமதியினனுறுந்தன்னையேபழிக்கும்
விடங்கொதித்தெனவந்ததீவினையைவெருவுபோவருகவற்சியிற்றனையும்
படங்கவின்றவாளரவணிந்தவரைப்பரசியுய்துமென்றுளாந்துணிந்தெழுந்தான்.

அன்னையேநிகர்குருமனைக்கிழத்தியலர்முலைத்தடந்தோய்ந்துசெம்மாக்கு
மின்னுபூஞ்சதிர்த்திங்களுக்கரங்கும்வித்தகாவிரிநீர்கடலெழுந்து
முன்னுதீவிடந்திருமிடற்றடக்கிமுறைதிறம்பியவானவர்க்கெல்லா
நன்னர்வான்பதமளித்தருள்கருணைநாதவென்னையுங்காப்பதுன்கடனே.

என்றுபல்வகைத்துதியெடுத்தியம்பியின்றஞ்சிநின்றிருஞ்சாஞ்சிரங்குவியத், துன்றுமென்பெலாநெக்குநெக்குடையத்துணைக்கணீர்மழைத்தாரையிற்பொழியக், கன்றுமுள்ளகஞ்சரைபுரண்டெழுந்தகாதன்மெய்யருட்டிறத்தினிற்றிளைத்தான், குன்றவில்லியார்திருவுளமிரங்கிக்குளிர்ந்தவாணகைமுகத்தராயருள்வார். ௧௪௰

இன்னலுற்றுமிக்கஞ்சலைகேட்டியிலங்குவேற்படையரசர்தங்குலத்துத்
துன்னுபூங்குழன்மாலதியொடுநீதோன்றியொன்னலர்வணங்குதுண்டீர
மன்னனாகிமற்றிவண்முலைப்போகமணந்துகாஞ்சியின்வதிந்தரசியற்றிப்
பின்னர்நம்மருளாலிவணெய்தப்பெறுவையாலெனத்திருவருள்புரிந்தார்.

அருளும்வாய்மொழிகேட்டலுநடுங்கியண்ணலார்மருங்கருட்பணியுரிமை, மருவிவாழ்தரும்பேறும்வந்தடுத்தமண்ணின்மானுடப்பிறவியுநோக்கித், தெருளுறுமுளங்கலங்கியென்னினிமேற் செய்வதென்றுசோகாந்துநாயகனார், சருணையேபுரந்தருளுமென்றெண்ணிக்கசிந்துதாழ்ந்தனன் புறவிடைகொண்டான். ௧௪௨

அல்லழுத்தியதெனவிருண்டொழுகு மஞ்சிலோதிமென்மலர்முகநெடுங்கட், கல்லழுத்தியகுதம்பைநான்றெருத்திற்கதிர்க்குஞ்செஞ்செவிமாதொடெண்டிசையுஞ், சொல்லழுத்திநாற்பயன்களுமெவர்க்குஞ்சுரக்குங்காஞ்சியம்பெரும்பெயர்த்தலத்து, மல்லழுத்தியமணிவரைத் தடந்தோண்மதுகைமன்னர்தங்குலத்துவந்துதித்தான். ௧௪௩

குழவிவெண்மதிபோன்மெனவளர்ந்துகோதிலாதபல் கலைளும்பயின்று, மழலைமென்மொழிமாலதிமாதைமணந்துகாஞ்சியைக்காவல் பூண்டிகலி, யழலுமன்னவரனைவருப்பனிப்பவடுநெடும்படைவிதிர்த்தரட்டடக்கி, நிழல்செய்வெண்மதிக்குடைமிசைகவிப்ப நீதிவாய்மையாலரசுசெய்திருந்தான். ௧௪௪

சுணங்குபூத்தெழுந்தொளிவடந்தழுவித்தொய்யின்மேற் பரித்தமுதமுள்பொதிந்து, வணங்குநுண்ணிடைக்கொடியினைச்சினந்துமதர்த்தபூண்முலைமாலதிப்பெயரி, னணங்குமெல்லிதழ்க்குமுதவாய்த்தேறலாரமாந்தியின்பப்பெருங்கடலி, னிணங்கிவாழ்ந்துபின்னிறையவரருளாலிலங்குவெள்ளியம்பொருப்பினைச்சேர்ந்தான், ௧௪௫

எற்றுதெண்டிரைவேலைசூழ்ஞாலமேத்துந்தாளிணைபரித்திகல்கடந்து
முற்றுசீர்த்தியன்வயங்குதுண்டீரன்முழுத்தகேள்வியனாண்டகாரணத்தாற்
கற்றைவார்சடைத்தெய்வநாயகரேகம்பநாயகர்காக்குநாயகர்வாழ்
பொற்றமாநகர்க்காஞ்சிதுண்டீரபுரமெனும்பெயர்பூண்டதுமாதோ.

தொடைவாய்ந்தபசுந்துளவன்முதலா
முடிவானவர்யாருமுடிந்தொழியுங்
கடைநாளுறுகாலையிலெங்குமிசைப்
படராழியெழுந்துபரந்ததுவே. கசஎ

மாலாரணன்மற்றுளவானவருஞ்
சாலாவினைமாட்டியகாபதருங்
கோலாகலமாகிவருங்குரைநீ
ராலாகலநோக்கியயர்ந்தனரே. கசஅ

அந்தோவினியென்செயலாவதெனச்
சிந்தாகுலமுற்றனர்திக்குவிராய்
முந்தார்பெருநீர்க்கடன்மூழ்குமுனை
நந்தாதபயக்கடனண்ணினரால். சகூ

கழுமக்கருமக்கடுவன்பிறவி
யெழுமைக்கடனின்றுமெடுத்தருளாஞ்
செழுமைக்கரைசேரவிடுத்தருளும்
விழுமக்குளிர்காஞ்சியைமேயினரே. கருo

கம்பாநதியின்கரைமீதுநறை
வம்பாரிணர்மாவின்வதிந்தருளுங்
கொம்போர்புடையாருள்செஞ்சரணை
வம்போருகமன்பொடிறைஞ்சினரே. கருக

புரமூன்றுமொருங்குபொடித்தருளும்
பரமாவுலகங்கள்பதைப்பவெழு
முரவார்கடலோப்பியுயக்கொளுவாய்
வரதாவெனவன்பின்வழுத்திடலும். கருஉ

மொழியுந்துதிகேட்டருண்முக்கணனு
ரழியுந்துயரோப்பதிரோன்றருளாம்
குழிவந்தவர்நெஞ்சகுளிர்ப்பவமிழ்
திழியுஞ்சுவைமென்மொழியிக்கருளி கருஙு

செழுவண்டுமுரன்றிளைப்பாதுப்
பொழியுங்கொடைமேன்கற்பூத்தருமுன்
மழையுண்விழியாள்[illegible]னை
யெழுமேவலையடக்கொண்டேவினரே. கருச

அயில்கண்டனகூர்விழியம்மடியின்
மயில்கண்டனசாயலமடந்தைவிடம்
பயில்கண்டர்பதந்தொழுதாழிபனி
வெயில்கண்டெனவாடமுன்மேவினளே. கருரு

முன்னுற்றமுருக்கமுயன்றருளும்
வன்னித்திரள்சால்படைமங்கையினைக்
கன்னிக்கடல்கண்டுகலங்கியவ
டன்னைத்தொழுதுய்ந்துதணிந்ததுவே. கருசா

இலயப்புனல்வெள்ளமெழாததணிந்
துலையப்புரியத்தமியின்னடருளா
லலையப்பணிவாரிதிருப்பினமேரூ
வலயத்தவர்போற்றவிருந்தனரே. ௧௫௭

வெருவிப்பருவுந்தயிமேறுமெரவருங்
கருணைச்செயல்கண்டுவியந்தனரோ
வொருவித்தனிமாவடியும்பர்பிரா
னிருபொற்பதமேத்தினரிறைஞ்சினரால். ௧௫௮

எற்றித்திரைபாய்விடயப்புனலை
வெற்றிக்கிரிபாட்டியில்வைத்தலாற்
றெற்றுப்பொழில்சூழ்நகர்தானிலய
சித்துப்பெயர்வாய்ந்துசிறந்ததுவே. ௧௫௯

கலித்துறை.

பண்டுழாவியபாட்டிசைபயிற்றுங்குரல்
வண்டுபாய்ந்துபாய்ந்துழக்குமென்மலர்ப்பொகுட்டோனும்
விண்டுமேத்துவர்துவற்றமேதருமணங்கமழ்ந்த
தண்டுழாய்த்தொடையலவருந்தடம்புயத்தவனும். ௧௬0

பண்டையேயொர்தினம்பரவைநீர்ப்பெருக்கிடைத்தம்முட்
கண்டியாரையாரென்றிருவருமொருவனைக்கடாவி
மிண்டியான்முதல்யான்முதலென்றனர்வெருண்டு
மண்டுபோரிடைமூண்டனர்யாதிராமயங்க. ௧௬௧

முழங்கவார்த்தெழுந்திருவருமுறைமுறைபடைகள்
வழங்குகாப்பவைவுயிர்க்கும்வெல்வினைப்பவத்தொடக்கி
னழுந்துறுநருளெண்ணலாறப்புதவடிவா
யொழுங்குகொண்டபல்லண்டமுமுறநிமிர்ந்தனரால். ௧௬௨

முதிர்செழுஞ்சுடர்ச்சோதியாய்முனைத்திடையெழுந்த
வெதிராருந்திருவடிவிடையிகலினர்வழங்குங்
கதிர்படைக்கலமுழுவதுமெய்த்தனசரப்ப
வதிரும்வெஞ்சமர்தணந்தனரற்புதமுகிழ்த்தார். ௧௬௩

அண்டகோளகைமுழுவதுமகிமாளியசும்பக்
கொண்டபோழ்வடிவினையடிமுடிகுறுகிக்
கண்டுமீளுதுமெனக்கலாய்முரணினர்கடுகி
மண்டுகாதலிற்றுருவுவான்புகுந்தனர்யாதோ. ௧௬௪

மருப்புவாய்ந்தவல்லெறுழியாய்மாதிரக்கயமும்
பொருப்புமேனவுமதிர்வுறப்புவிமுழுதகழ்ந்து
திருப்பொன்மார்பினன்றேடினன்றிருவடிகாணான்
விருப்புமாய்ந்தனன்வெள்கினன்றளர்வொடுமீண்டான். ௧௬௫

மின்னொளாவியவிரிசிறைப்பவளம்வீழ்துவர்வா
யன்னவாகிவிண்ணிவந்தெழுமம்புயப்புலவன்
கன்னிபாகனார்கதிர்முடிகண்ணுறக்கடுப்பின்
முன்னிநேடினன்காண்கிலன்முயற்சியுந்தளர்ந்தான். ௧௬௬

வன்னவொண்சிறைமுரிந்துடன்முழுவதும்வருந்தி
நன்னர்நெஞ்சகத்தெழுந்ததோருக்கமுநலிந்தா
னன்னமாயவனடியிணைகாண்பனேயினியா
னென்னசெய்வலென்றுழந்துழந்திடர்ப்படுமெல்லை. ௧௬௭

துதிசெய்வார்மனக்கோயில்கொண்டருளியதூயோர்
நதிநிலாந்திருமுடியினின்றிழிந்துமுன்னணுகும்
பொதிநுண்டாதுறைத்தலர்ந்துசெந்தேன்பொழிந்திலகும்
புதியநாட்பொலந்தாமரையம்போதினைக்கண்டான். ௧௬௮

முண்டகத்தினைக்கடாயினன்முடிவில்பல்லுகத்தா
னண்டர்கோன்முடிநின்றிழிந்தனைவதுகேட்டான்
கொண்டவோகையனிவன்றிருமுடியினைக்குறுகிக்
கண்டிளாவென்றோர்பொய்க்கரிபோக்கெனக்கரைந்தான். ௧௬௯

இரந்திரந்துகைந்தேங்கியாருயிரெலாந்தளர
வரந்தையுற்றதுநோக்கியற்றெனவிசைந்த
சுரந்தநுண்டுளித்தேன்கொழிதோட்டலரோடும்
பரந்தவெண்கடற்பாயலான்மருங்குறப்படர்ந்தான். ௧௭௦

கள்ளறுதசெந்தாமரைப்புதுமலர்கடுக்கும்
வள்ளலார்திருச்சேவடிகாணவல்லாத
புள்ளவாவியதுளவணிபுயத்தகேளென்று
வுள்ளமீக்கொளுங்களிப்பினாலுரைத்தன்மேயினனால். ௧௭௧

அரவம்பூண்டுபொன்னம்பலத்தருணடங்குயிற்றுங்
குரவனார்தமதினங்கதிர்க்கூன்மதிக்குழவி
பரவுநீண்முடிகண்டனனென்றனன்பரவி
வருவதோர்ந்தெவருரைக்குநர்மம்மர்கோட்பட்டார். ௧௭௨

போழும்போவெனுங்கண்ணியோர்புடையினர்முடியைக்
கேழும்போருகன்கண்டனனெனக்கிளர்ந்தெழுந்து
சூழும்போதியிற்கண்டுயிறுளவணிந்தவன்முன்
றாழும்போதுயோர்பொய்க்கரிசாற்றியதம்மா. ௧௭௩

கோட்டமுற்றுரைகிளத்தலுங்குரைபுனல்பொதிந்த
நீட்டுவேணியார்தோன்றிமுன்னெருப்பெழச்சினவி
யோட்டைநெஞ்சினைப்பொய்க்கரியுரைத்தனைமலர்நீ
யீட்டுபூசனைக்காகலையெமக்கெனவிகந்தார். ௧௭௪

மறைகளோதியுமறைப்பொருடெள்ளியுமனத்துக்
கறையையோம்பலைபொய்யுரைகரைந்தனைமுகடி
நிறையுமாருயிர்படைக்குநின்பதமுநீள்வாழ்வு
மிறையினீங்குதியென...ன்றனையுமிகந்தார். ௧௭௫

கள்ளலங்கியகடிமலர்ப்பொகுட்டணைப்புலவ
னள்ளிவார்கையினழிமதக்குஞ்சரமயின்ற
வெள்ளிலங்கனிவீழ்தரப்பதமிழந்திழிப்புண்
டுள்ளமிக்குடைந்தலக்கணீருவரியிற்படிந்தான். ௧௭௬

சட்டவான்பதந்தனையிழந்தியாவருமிழிக்கப்
பட்டுளேனினியென்செயற்பாலதென்றெண்ணிக்
கட்டவெந்துயர்களைதருங்காஞ்சிமாநகரைப்
பெட்டவேட்கையினெய்தினான்றன்பதம்பெறுவான் ௧௭௭

ஒட்டலார்புரமுருத்தவனேகம்பந்தொழுது
சிட்டர்போற்றுறுங்கச்சபாலயத்தினைச்சேர்ந்து
வட்டவாய்ச்செழுங்கமலமுங்குமுதமுமலரு
மிட்டசித்திவெண்டிரைப்புனலினிதுதோய்ந்தனனால். ௧௭௮

பற்றுவெந்துயர்நரகிடைப்படுத்தும்வல்வினையை
முற்றுநீற்றிடுங்கச்சபாலயத்தமர்முதல்வர்
பொற்றதாமரைத்தாளிணைபோற்றினன்பழிச்சி
யற்றவைம்பொறியொடுமுயன்றருந்தவம்புரிந்தான். ௧௭௯

காலமெண்ணிலவருந்தவமாற்றுறுங்காலை
யாலமுண்டவர்திருவுளமிரங்கியங்கெதிர்நின்
றேலவின்னருள்புரிதரப்பேற்றிளமதியக்
கோலவேணியார்திருமுன்புகுலாவிவாழ்ந்தனனே. ௧௮௦

நாறுதாமரைச்சேக்கையான்றன்பதநாடி
யேறுயர்த்தவரருள்கிடைத்திருந்தகாரணத்தாற்
பேறுதந்தருள்பிரமமாபுரமெனுநாம
மீறுகண்டிடாக்காஞ்சிமாநகர்மெய்தியதே. ௧௮௧

கலிவிருத்தம்.

மற்றோர்காலத்துவார்மதுத்தாமரைப்
பொற்றபூம்பொகுட்டண்ணலம்புங்கவன்
முற்றுமாக்குமுதற்றொழில்பல்குதற்
குற்றசூழ்ச்சியெவனெனவுன்னினான். ௧௮௨

வம்புநாறுமணிக்கலுழிக்கடக்
கம்பமால்வெண்கதக்களிறூர்தரு
மம்பொன்மோலிவலாரியையாதியா
மும்பராரவர்தம்மொடுசாவியே. ௧௮௩

ஒற்றையாழியந்தேரவனுள்ளுறப்
பற்றியீர்க்கும்பசுஞ்சினைப்பூம்பொழில்
சுற்றுமல்குந்தபோமயத்தொன்னக
ரற்றமில்லதோரன்பொடுமேகினான். ௧௮௪

பரக்குநீர்நதிக்கம்பைபடிந்துபோந்
தரக்குவார்தளிர்க்கொக்கடிவைகிய
கரக்குன்றீருரிக்கண்ணுதலாற்பதஞ்
சுரக்குமோகைதுளும்புறப்போற்றினான். ௧௮௫

கொங்குலாம்பொழிற்புண்ணியகோடிமு
னங்கண்வைகியருமறையாற்றினாற்
புங்கவானவர்புங்கவர்சூழ்தரத்
துங்கவாம்பரிவேள்விதொடங்கினான். ௧௮௬

விடுத்தகொய்யுளைவெய்யமாயாவியென்
றெடுத்தியம்புமவுணனிறையின்வந்
தடுத்துவௌவியலையெறிசுத்தநீர்
மடுத்தவேலைகரந்தவண்வைகலும். ௧௮௭

கலனைவாம்பரிகாண்கிலனெய்யெனப்
புலனழிந்தனன்புந்திதிகைத்தன
னுலையுநெஞ்சமுருகினன்மாலடித்
தலைவர்சேவடிதஞ்சமென்றண்மினான். ௧௮௮

ஊற்றுகட்புனல்வார்ந்தொளிருந்திரு
நீற்றுமெய்யிடை வண்டணிலாவுறப்
போற்றிநின்றபொற்றாமரையண்ணன்முன்
னேற்றின்மேலவர்தோன்றியியம்புவார். ௧௮௯

முச்சகங்கண்முகிழ்க்குமுளரியோ
யெச்சகங்களுந்தத்தமியல்பிறல்
வைச்சநம்மொருபாதிவடிவமா
மெச்சனீர்ந்துளவத்தொடைமாயவன். ௧௯௰

கன்னியந்துளவக்கடிமார்பினன்
மன்னுமைங்கதிவாம்பரியைக்கொணர்ந்
துன்னவாவைநிரப்புவனாங்குவன்
றன்னைவேண்டுகெனவருடந்தபின். ௧௯௧

அரவப்பள்ளியினானையழைத்தவன்
பரவக்கண்ணருடந்தயன்பாய்பரிக்
கரவைக்கண்டுகொணர்ந்துகடிமகப்
புரவைக்கொள்கெனப்பூமகள்கேள்வனும். ௧௯௨

வணங்கிமீண்டுமலர்த்தவிசோன்றினே
யுணங்கல்வெம்பரியொய்யெனமீட்டிவ
ணிணங்குநின்மகங்காப்பலென்றேற்றவ
ரணங்கமாவினைத்தேடுவானாயினான். ௧௯௩

எங்குநேடினன்காண்கிலனேகுழிப்
பொங்குசுத்தப்புனற்கடலுள்ளுறத்
தங்கிவைகியதன்மையறிந்தன
னங்கண்வெய்தெனவண்மினனென்பவே. ௧௯௪

ஏற்றெதிர்ந்தவவுணனையின்னுயிர்
பாற்றினான்பரிபற்றினன்வேலைமேற்
றோற்றினான்மலர்த்தோன்றறுயர்க்கடன்
மாற்றினான்பரிமாவைவழங்கினான். ௧௯௫

தண்ணறுமலராளிசதமக
னெண்ணில்வானவர்யாவருநோக்கியே
யுண்ணிலாவியவோகையின்மாயனைப்
பண்ணினாலிசைபாடிப்பழிச்சினார். ௧௯௬

படர்துவர்க்கொடிப்பாற்கடலன்றெழுந்
துடலுநஞ்சமுதுண்டருள்காரணர்
தொடலைமென்குழற்றோகையுடன்மகிழ்ந்
தடலராவணையாற்கருள்செய்வரால். ௧௯௭

கருடவூர்திக்கருமுகில்வண்ணகேள்
குருதிவாற்படைத்தானவற்கொன்றொரீஇ
யுருவவாம்பரிபற்றியுதவினா
மருளுமேவலினின்றனையாதலால். ௧௯௮

நாற்றக்கஞ்சநறும்பொகுட்டண்ணறு
ஞற்றப்புக்கமகத்தவிப்பாகநீ
யேற்றிட்டுத்தரவேதிகிருத்தியென்
றூற்றத்தேமொழியோதியருளினார். ௧௯௯

தயங்குசெஞ்சடையாரருளாங்கியங்
கியங்கவேள்வியினின்னவிப்பாகமேற்
றுயங்குசிற்றிடைப்பெண்டிருமாதொடும்
வயங்குமுத்தரவேதிவதிந்தனன். ௨௦௦

ஆங்கணன்னணங்கம்பரருளினாற்
பூங்கள்தார்துளவப்புயல்வைகலா
லோங்குவிண்டுபுரமெனவோர்பெயர்
தீங்குதீர்திருக்காஞ்சிபுனைந்ததே. ௨௦௧

மல்லல்வைகுண்டவான்பதம்வேட்டரி
யல்லலூர்ந்தகளத்தரையன்வழிப்
புல்லுமன்பொடுபூசித்தலானுமச்
செல்வமாப்பெயர்பெற்றதச்சீர்நகர். ௨௦௨

கலிநிலைத்துறை.

மருளுமைவகைமலப்பெருந்தொடக்கினைக்கடந்து
தெருளுமானந்தச்சுடர்ப்பிழம்பாய்வினைத்தீமை
யொருவினாகவிளக்கதாயிருசுடருயிர்வான்
பெருகுகாலழல்புனனிலமாயபேரொளிதான். ௨௦௩

மலக்கணத்தினாற்சிமிழ்ப்புண்டுமயங்குமாருயிரை
யலக்கணீந்தெடுத்தாளமிக்கலர்ந்தபேரருளா
னலக்குமாமறைமாவடிநறுநிழற்பொலிந்து
விலக்கரும்புகழேகம்பமெனப்பெயர்போலி. ௨௦௪

தூயவைந்தொழிலுயிர்க்கெலாமியற்றிநின்றுறுத்த
பாயமேகலைவழிபடப்பரிந்துவீற்றிருக்கு
மாயசீர்மையாலகிலமும்புகழ்திருக்காஞ்சி
மேயதாற்சிவபுரமெனுமேதகுநாமம். ௨௦௫

வேறு.

கறங்குதிரைப்பெருங்கடலிற்கதிர்பரப்பிமுளைத்துலகி
லறங்களெலாந்தழைத்தோங்கவெழுங்குமழற்கதிர்மரபின்
மறங்குலவும்பகைவெருவவாள்விதிர்க்குந்திறல்வேந்தன்
பிறங்கியசூரியச்சோதியெனத்திகழும்பெயருடையான், ௨௦௬

மழலைமென்குதலைச்செவ்வாய்த்தளர்நடைமகப்பேறின்றிக்
கழிதுயர்நாளுங்கூர்ந்துகதியிடைத்தப்பாதுய்க்கும்
விழைதருமகப்பேறில்லாவாழ்வுமேதக்கதேயென்
றழல்படுமெழுகுபோலவகமெலாமுருகிநைந்தான். ௨0௭

ஆரணநாடியின்னுமளவிடற்கரியமுக்கட்
பூரணரினிதுவைகும்பொற்பினதாகித்தன்றன்
சீரணிகுலத்துக்கெல்லாந்திருத்தகுமுதன்மைத்தாய
வேரணிபரிதித்தெய்வத்திருங்கழல்போற்றலுற்றான். ௨0௮

பண்டருசுரும்புமூசிப்பாடமொட்டவிழ்ந்துவாசத்
தண்டுளித்தேறல்வார்ந்துததைந்தசெங்குவளைப்போதான்
மிண்டியபொறிகள்செற்றுமேதகவழிபாடாற்றி
மண்டியகிரணப்புத்தேண்மந்திரங்கணித்தல்செய்தான். ௨0௯

மங்கருங்காதன்மல்கவின்னணம்வழிபாடாற்றித்
திங்களீராறுசெல்லச்செறியிருட்படலம்வாரி
நுங்குசெங்கிரணக்கற்றைநொறிலுளைமான்றேர்ப்புத்தேள்
பொங்கியகருணைதன்னாற்புதல்வர்ப்பேறளித்திட்டானே. ௨௧0

தேவியரிருவர்தம்முட்டிருவளர்யசோவதிப்பேர்ப்
பாவைதன்வயிற்றுநீண்டபணிக்கடலுடுக்கைவையத்
தேவரும்புகழத்தக்கவிராச்சியவர்த்தனப்பேர்
மேவருங்காளைவந்துவிழுத்தகத்தோன்றினானே. ௨௧௧

பொருதிரைப்புணரிவையம்புகழ்சுதரிசனப்பேரான்
குருமணிக்கடகமுன்கைக்குவிமுலைப்பருமவல்குற்
கருநெறிக்கூந்தற்செவ்வாய்க்கலாவதியென்னுநாம
மருவியமாதர்நல்லாள்வயிற்றில்வந்துதயமானான். ௧௧௨

தத்தொளித்தரங்கவேலைத்தாரணிமுழுதுமூடி
மைத்தவல்லிருள்சீத்தோங்குமிளங்கதிர்மதியம்போல
நித்தலும்வளர்ந்துமைந்தரிருவருநிகரிலாத
புத்தெழிற்பெருக்கம்வாய்ந்துபுகர்தபவிளங்கினாரே. ௨௧௩

தளர்நடைப்பருவந்தீர்ந்துதபனியமாடத்தாடி
வளமலிவீதியெய்திமகாரிளத்தோடுமாடிக்
குளநதிமலர்ப்பூஞ்சோலைகுன்றினும்விளையாட்டாடி
யிளமழவேறுபோல்வாரின்னணஞ்செல்லுநாளில். ௨௧௪

மருவியவிளமைக்கேற்றமடமையயாமபாசமைந்த்
திருவருந்தம்முண்மாறுண்டெரியுகச்சினந்துவல்லே
யொருவனையொருவன்றாக்கியுலப்பருநிதியந்துஞ்சுங்
குருமணிமாடக்கொற்றக்கோயிலுட்சென்றாராக. ௨௧௫

கருநெறிச்சுரிமென்கூந்தற்கலாவதிமாதுநோக்கி
யொருவரும்பொறாமைபொங்கவுளத்தெழும்வெகுட்சிதுள்ள
விருநெடுங்கயற்கண்சேப்பவிராசவர்த்தனனைச்சால
வெருவுறப்பகைஞர்போன்றுவெய்தெனச்சீறினாளே. ௨௧௬

மாற்றலர்தடந்தோட்கொற்றவலியெலாமிமைக்குமுன்னர்க்
காற்றுகெட்டிலேவேற்றங்கைகதிர்விடுகனகக்குன்றந்
தோற்றிடவிறுமாந்தோங்கித்தொய்யின்மேற்பரித்தகொங்கைக்
கோற்றொடிவேற்றுத்தாய்க்கடன்படுங்கூறிப்பினின்றான். ௨௧௭

இழைதவழ்ந்தொளிருந்தொய்யிலேந்திளங்கொங்கைநல்லா
ளழலெனச்சிவந்தவாறுமகற்றுடன்பட்டாளாகி
முழவுறழ்குவவுத்தோளானுண்முனிந்திருந்தவாறு
மழவிளமடங்கலன்னான்மதித்தனன்கவற்சிகொண்டான். ௨௧௮

பொருமியுள்ளழுங்கிவேவப்பூம்புனல்விழிகள்காலத்
திருநுதல்வியர்வுகாட்டச்சிறடிநடைதள்ளாட
வுருவெழில்வேறுகாட்டவொளிர்முகங்குவிந்துவாட
கருணையிற்பெரியநற்றாய்தன்புடைகடிதுபோந்தான். ௨௧௯

இருவருங்கலாய்த்தேமந்தவேத்துவானினக்குமாற்றா
ளொருகெழச்சினந்தகொள்கைதாதற்குடன்பட்டான்மன்ற
மருவியிங்கிருக்ககில்லேன்மறுதுநீயருளினேகிப்
பெருகியவரங்கள்பெற்றுப்பின்னிவண்வருவலென்றான். ௨௨௦

கேட்டலுமிரங்கிநொந்துகெழுமுபோரார்வங்கூரக்
கோட்டமினற்றாய்வல்லேகொங்கையினணைத்துப்புல்லி
வாட்டடங்கண்ணீராட்டிமங்கலம்பகன்றுகூறி
வேட்டவாறெய்துகென்றுவிடைதரப்பெற்றுமீண்டான். ௨௨௧

தந்தையுந்தாயும்வைகுந்தன்னுடைநகரநீத்துக்
கந்தரந்தவழுந்தோறுங்கணநிரைச்சினையான்மோதும்
பந்தியினுயர்ந்தசோலைப்பாரியாத்திரமென்றோதுஞ்
சுந்தரவரைப்பிற்றீர்க்கதவன்றனைத்துன்னிக்கண்டான். ௨௨௨

முன்னைநற்றவத்தின்பேற்றான்முழுத்தபேரறிவுசான்ற
வின்னமெய்க்குரவன்றன்னையெய்துறப்பெற்றேனென்று
கொன்னவிலுவகைபொங்கக்குதுகுதுத்தன்புநீடிப்
பொன்னடிப்போதுதாழ்ந்துபோற்றெடுத்தெதிரேநின்றான். ௨௨௩

பூண்டமெய்க்காதல்பொங்கப்புளகங்கண்மெய்யிற்போர்ப்ப
மாண்டசீர்வழிபாடாற்றுமன்னவகுமரன்றன்னைக்
காண்டகுவிழுந்தைசெயெல்லாம்பரிசறவுணர்ந்துமேன்மை
யீண்டியகுரவன்றீர்க்கதவனன்பானோக்கினானே. ௨௨௪

ஆங்கவன்வரவுமுற்றுமருட்கணாலறிந்துபின்னர்
வீங்கியகருணைப்பார்வைவிழுத்தகப்பெரிதுநல்கி
யோங்கியமகிழ்ச்சிகூரவுடலெலாந்தைவந்திட்டுத்
தாய்குநின்கவற்சியெல்லாந்தணமதியென்றுகூறி. ௨௨௫

பூதலத்தவரும்விண்ணிற்புலவரும்வியக்கத்தக்க
மேதகுசித்தியெட்டும்விளங்குகநினக்குச்சிங்க
வாதனத்தினிதுவைகியவனிகாத்தருளுநுந்தை
நீதியினடவுஞ்செய்கோலரசுநிற்சேர்கவென்றான். ௨௨௬

தவழ்மழையுமிழ்ந்ததெண்ணீர் தடையின்றிப்புவியில்வீழ்ந்தாங்
கவமறநோற்றுவல்லவாரியனருளேலோடுங்
கவிழ்மதக்களிநல்யானைக்காவலன்மைந்தன்முன்னே
இவருறுசித்தியெட்டுந்தோன்றிமற்றிதனைக்கூறும். ௨௨௭

கவனவெங்கலினமாவுங்கமழ்மதக்களுழித்தோலுங்
குவிதலைத்தேருமற்றுங்கோயின்முன்னெங்குஞ்சூழத்
தவளவொள்ளொளிகான்மாலைத்தனிக்குடைநிழற்றச்சிங்க
வவிர்மணித்தவிசின்மன்னியரசுசெய்திருக்கும்போது. ௨௨௮

தருக்கினாலறக்கினீதிதவறுறுதுயிர்கட்கெல்லாம்
வெருக்கொளவிடுக்கணென்றும்விளைத்திடாதிருப்பாயாகி
லொருக்குநின்மாட்டுநீங்காதிருத்துமல்லாயினுன்னைப்
பொருக்கெனவிடுத்துநீப்பேமறிகெனப்புகன்றமாதோ. ௨௨௯

நீயிரிங்குரைத்தவாறேநெறியிடைப்பணையேனாகி
மாயிருஞாலமோம்பிவைகுவேனென்றுநேர்ந்து
பாயமெய்ச்சித்தியெல்லாம்பரிவொடுந்தழுவிக்கொண்டு
தூயவாரியன்பொற்பாதந்தொழுதனன்விடைகொண்டேகி. ௨௩௦

காரெனமுழங்குந்தானைக்கடுங்களிற்றரசன்மைந்தன்
பாரியாத்திரத்தினீங்கிப்படர்நெறிவிரைந்துநீந்தி
வேரியுமலருந்தாதும்விரைகமழ்பொதும்பர்சூழ்ந்து
சீரிதினோங்குந்தங்கள்செழும்பதிமருங்குசார்ந்தான். ௨௩௧

மாதவன்றன்னையண்மிமருவருஞ்சித்திபெற்று
மேதகவணையுமைந்தன்விழுத்தகுவரவுகேட்டுக்
காதலுங்களிப்பும்பொங்கக்கதிர்மணிநெடுவேற்றந்தை
யாதரித்தெதிர்கொண்டெய்தியணைத்துடன்கொண்டுபுக்கான்.

கோயிலினணைந்துசிங்கக்குருமணித்தவிசிலேற்றிப்
பாய்பரியரசர்போற்றப்பரவைநீருலகங்காக்கு
மேயசீரரசுநல்கிவெற்புறழ்தடந்தோள்வைத்த
மாயிரும்புவியின்பாரமகன்புயத்தேற்றினானே. ௨௩௩

கரிசறுகுரவன்றந்தகாமருவரத்தின்பேற்றாற்
ப்ரசுறுசித்தியோடும்படர்புகழ்த்தந்தைநல்கு
மரசுகைக்கொண்டுமன்னரருங்கறையளப்பவீறித்
துரிசறுமனுநூலாற்றிற்றொடுக்கடலுலகுகாத்தான். ௨௩௪

எண்ணருஞ்சித்தியெட்டுமினிதுறவெய்துபேற்றா
னண்ணுறும்பகையொன்றின்றிநலத்தகுமேன்மைவாய்ந்து
கண்ணுதலடியிற்றாழுங்கருத்தினர்தம்பாற்சேரும்
புண்ணியமென்னநாளும்பொருவறுசெல்வங்கூர்ந்தான். ௨௩௫

தணிப்பருஞ்செல்வநோக்கித்தருக்கினன்செருக்குமிக்கான்
கணிப்பருஞ்சித்தியெட்டுங்கழறியவுறுதிவிட்டான்
மணிப்பெருவேலைசூழ்ந்தவையகத்தியாவரம்மா
வணிப்பெருஞ்செல்வமெய்தினதற்படுமெம்மரெய்தார். ௨௩௬

மேவருமறனிற்றப்பிவிழுப்பெருங்கவற்சிசான்ற
பாவமும்பழியுமாற்றிப்பல்லுயிர்க்கலக்கணைத்துத்
தேவரைமுனிவர்தம்மைச்சிந்தையிற்கலக்கங்காட்டி
யோவியநீதிச்சாகாடுருகெழவுகைத்தலோடும். ௨௩௭

விளங்குமெண்சித்திநோக்கிவிதியிலாயுயிர்களெல்லாந்
துளங்குறக்கொடுங்கோலோச்சித்துயரிடைப்படுத்தாயெங்கள்
வளங்கெழுமொழியையிந்நாண்மறந்தனைசேறும்யாமென்
றுளங்கொளவெறுத்துக்கூறியொய்யெனவிடுத்துப்போன ௨௩௮

ஆலையிற்படுத்தவேழத்தருஞ்சுவைச்சாறுபோலக்
கோலவண்சித்திமுற்றுநீங்கலுங்குறுகும்வேனில்
வேலையின்முன்னர்ப்போதுமெல்லிலையுகுத்துவீழ்த்த
சோலையின்வெறியனாகித்துயர்ப்பெருங்கடலிற்றாழ்ந்தான். ௨௩௯

என்னினிச்செய்யுமாறென்றிரங்கிமாழாந்துதேர்ந்து
முன்னமக்கருளிச்செய்தமுனிவனையின்னும்வேண்டின்
மன்னுமெண்சித்திமீட்டும்வருமெனத்துணிந்துவல்லே
தன்னகர்வரைப்பினின்றுஞ்சார்ந்தனன்குரவன்றன்பால். ௨௪௰

தொழுதெழுந்தாடிப்பாடிச்சொல்லுவானெறியினின்றும்
வழுவினேன்மொழிந்தமாற்றமறந்தனேனுதலானே
செழுவியசித்தியெட்டுந்தீர்ந்தனசிறியேன்செய்த
பிழைபொறுத்தருளவேண்டும்பெரியவவென்றுநின்றான். ௨௪௧

அருளுறுகுரவன்கேளாவஞ்செவிபுதைத்துத்தீவி
லுருகியசெம்புபெய்தாங்குரைசெவியேற்றுகின்றாய்
திருவிலிமுகடியென்னைசெய்தனையறிவிலாயென்
றிருசெவிமுழுதுங்கைப்பவாயுறையியம்பிச்சொல்வான். ௨௪௨

மருவலர்க்கிடியேறன்னாய்வையகமிறும்பூதெய்த
வொருவியசித்திமீட்டுமுற்றிடவிழைந்தாயாகி
லருவெனவுருவமென்னவருவுருவென்னநின்ற
கருணையெம்பெருமான்வைகுங்காஞ்சியாநகரமெய்தி. ௨௪௩

மறைநெறியொழுக்கமோம்பிவதிந்திருந்தீர்த்தமாடிக்
கறைகெழுபிறவிவேலைகடத்திடுங்காமக்கண்ணி
யிறைவிபொற்பாதம்போற்றியிறைஞ்சுதிசித்தியெல்லா
நிறைதரப்பெறுவாயென்றுநிகழ்த்தினன்விடைதந்தானே. ௨௪௪

புறவியைக்கொண்டுதாழ்ந்துபொருக்கெனநெறிக்கொண்டேகி
நிறைமலிமணியிற்செய்தநீள்கொடிமாடந்தோறு
நறைவிரிகூந்தனல்லார்நாடகம்பயிற்றலோவா
வறமலிகாஞ்சிமூதூரகநகர்கண்ணுவுற்றானே. ௨௪௫

கம்பைநீர்தோய்ந்தேகம்பர்கழலிணைப்போதுபோற்றி
யும்பருமாடலோவாவோங்குலகாணித்தீர்த்தப்
பைம்புனல்படிந்துகாமக்கண்ணிதன்பாதந்தாழ்ந்து
செம்பொருட்டுதிகளாரச்செய்தனன்செல்லுங்காலை ௨௪௬

முப்புரம்பொடித்தமுக்கண்முதல்வரையிறுகப்புல்லிச்
செப்பனமுலையான்மார்பிற்றிருவுடையாளம்வைத்த
துப்புறழ்தொண்டைச்செவ்வாய்ச்சுடர்வடிநெடுவேலுண்கண்
மைப்படுகுழலாள்சாலத்திருவுளமகிழ்ச்சிகூர்ந்து. ௨௪௭

இளமரக்காவுவாங்கியோர்குடியிருக்குங்காஞ்சி
வளநகர்த்தெய்வந்தன்னைவழங்கெனவழங்கலோடும்
பளகறுத்தருளுங்காஞ்சிப்பதிப்பெருந்தெய்வமுன்னின்
றளிமுரலலங்கலாற்குச்சித்திகளருளிற்றன்றே. ௨௪௮

தலைவருசித்தியெட்டும்பண்டுபோற்சார்தலோடு
மிலைமுதலுத்துச்சாலவிலம்படும்பாதும்பர்மீட்டு
ஞாலரொடுதெளிருந்தாதுந்துவன்றுடுவளமிக்காங்குத்
தொலைவருமாக்கம்வாய்ந்துதோன்றினரசர்கோமான். ௨௪௯

காதரமிரிக்குங்காமக்கண்ணிதனருளால்வேந்தன்
றீதறுசித்தியெட்டுந்திருத்தகப்பெற்றவாற்றான்
மேதகுசருவசித்திகரமெனவிளங்குநாம
மாதர்வண்மதில்சூழ்காஞ்சிமாநகர்பூண்டதன்றே. ௨௫௦

பூவலர்தனிமாமூலப்புதுவிறற்புராணரோடு
நாவியங்கூந்தற்காமக்கண்ணியைநாளும்போற்றி
யாவயினின்னும்பல்லோரணைவருஞ்சித்தியெல்லா
மேவரப்பெறுதலாலும்விளங்கியதனையநாமம். ௨௫௧

கலிவிருத்தம்.

முள்ளரைச்செழுமுண்டகத்தோன்சிரங்
கிள்ளுங்கூருகிர்க்கோற்கிளர்செங்கையெம்
வள்ளலாரொருகற்பத்துவானளாம்
வெள்ளியங்கிரிமீமிசைவைகுழி. ௨௫௨

வாளைவென்றமதர்த்துக்குடங்கையி
னீளும்வேல்விழிமித்திலவெண்ணகைத்
தாளமென்முலைப்பார்ப்பதித்தையலைக்
காளியென்றுகரைந்துவிளித்தனர். ௨௫௩

அருணைநாயகிகாளியென்றோதிய
வுரைசெவித்துளையேறலுமொய்யெனப்
பொருமியுள்ளம்புழுங்கித்தவம்புரிந்
தருளினவ்வுருத்தனைநீக்கினள். ௨௫௪

கோங்கைவென்றகுவிமுலையாள்வயி
னீங்கிவேறுறுநீலுருவாயிடை
யோங்கியாயிரங்கால்கரமொண்முகந்
தாங்கியச்சுறத்தையவென்றுயதே. ௨௫௫

அன்னகன்னியடுக்கற்குலவரை
மன்னனின்றருண்மாதுநல்லாளிரு
பொன்னஞ்சீறடிபோற்றியெழுந்துநின்
றென்னைசெய்பணியென்றனக்கென்றலும். ௨௫௬

விமலநாயகிநோக்கிவியந்துநீ
சமரினேற்றுத்தறுகணவுணர்தங்
குமரியாவிகுடித்துச்சகமிசை
யமலுமின்னன்முழுதுமகற்றியே. ௨௫௭

தொழுதகுந்திருத்துர்க்கையென்றோபெயர்
தழுவிவையகந்தாண்மலரேத்திட
வழுவில்காஞ்சிவளம்பதிகாவல்கொண்
டழிவிலந்நகர்வைகென்றருளினாள். ௨௫௮

அருளும்வண்ணமவுணரையாவியுண
டிருளுமென்மலர்ச்சோலைகளீண்டிய
தெருளுலாந்திருக்காஞ்சியைக்காவல்பூண்
டொருமையன்பிலுறைந்தனள்கன்னியே. ௨௫௯

அன்னைகாளிமவாக்கையிற்றோன்றிய
கன்னிகாத்தருள்காரணத்தாற்றிருக்
கன்னிகாப்பெனுநாமங்கைக்கொண்டதா
லன்னமாமகன்றுறைக்காஞ்சியே. ௨௬0

பன்னுமாநகர்பன்னிருபேர்பெறுந்
தன்மைகூறினஞ்சாற்றுமப்பேர்செவி
துன்னலால்வினைசுட்டொருவேதிய
னன்னர்வான்பதநண்ணியதோதுவாம். ௨௬௧

வேறு.

தரையகம்புகழ்செழுங்கல்விசான்றவன்
கரையறுமுழுவதுங்கண்டநாவினன்
புரைதபுகௌசிகமரபிற்பூத்தவ
னுரைதகுமேதையேயந்தணாளனே ௨௬௨

செழுக்குலமரபின்வந்துயிர்த்தசீர்த்தியும்
வழுக்கறுகலையெலாம்வல்லவாண்மையு
மொழுக்குறுமேன்மையுமுன்னியுன்னிமிக்
கழுக்குறுமனத்தனாய்த்தருக்கினனரோ. ௨௬௩

பெரியவர்தம்மையும்பேணுகின்றில
னுரியவர்தம்மையுமோம்புகின்றிலன்
விரிகலைபயின்றவர்க்காணின்வேழமே
லரியெனமீச்செலுமறனில்சிந்தையான். ௨௬௪

அல்லதையாமெனவறைந்துநாட்டியு
மில்லதென்றுள்ளதையெடுத்துத்தள்ளியும்
வல்லவர்தம்மையுமருட்டிவாதினால்
வெல்லுநரில்லெனமேம்பட்டோங்கினான். ௨௬௫

இன்னணம்வெற்றிகொண்டியங்குநாளையிற்
பன்னுபல்கலைகளும்பயின்றநாவினர்
துன்னியகேள்வியர்தூயவந்தணர்
மன்னவைக்களத்திடைவந்துமுற்றினார். ௨௬௬

வரும்பெரியவர்தமைவாதின்வென்றழித்
தரும்பியமடமையிற்றருக்கியங்கணோர்
துரும்பெனவிகழ்ந்துநெஞ்சுளையச்சொல்லியே
யிரும்புகழ்படத்தனையுயர்த்தியம்பலும். ௨௬௭

இருபுருவங்களுநெற்றியேறமென்
மருமலர்க்கண்ணிணைவயங்கிச்சேப்பமிக்
குருவவாரதரமுந்துடிப்பவூங்குவர்
வெருவராதவன்றனைவெகுண்டுசொல்லுவார். ௨௬௮

நூலுணர்பெரியவர்நொடிகலாங்கனி
மாலுறுபித்தரிவ்வாறுசெப்புவா
ரோலுமாறுரைக்கலாவிழுதைநீதுயர்
சாலும்வல்லரக்கனுய்த்தளர்கவென்றனர். ௨௬௯

வடுவறுநாவினர்கொதித்துவல்லையி
லிடுமொழிச்சாபந்தன்செவியினேறலும்
வெடிபடுமுருமொலிகேட்டுவேதனை
படுமரவெனவுளம்பதறிநைந்துபின் ௨௭௦

தீர்திறம்வேண்டுதுமென்றுசென்றவர்
வார்தருகழலிடைவணங்கிநாயினேன்
கார்தருமனத்தினுற்கழறினேனிவ
ணீர்தருசாபநீத்தருளுகென்றனன். ௨௭௧

தளர்ந்துநொந்தடியிணைதாழ்ந்துவேண்டலும்
வளர்ந்தெழுங்கருணையாற்காஞ்சிவைப்பினைக்
கிளந்திடும்பன்னிருபெயருங்கேட்கினன்
றுளைந்தருஞ்சாபமென்றுரைத்துப்போயினார் ௨௭௨

ஆவயின்வெருக்கொளுமரக்கனுகிநீர்
வாவியிற்சோலையின்மன்றினெங்கணு
மேவரிதாகிவெள்ளிடைதிரிந்தழிந்
தோவறுகறங்கெனவுழலுமேல்வையின். ௨௭௩

செந்தழறண்ணெனச்செகுக்குஞ்சாபமுன்
வந்தநாட்டீர்வவர்வகுத்துரைப்புழி
யெந்தவாழ்வுந்தருங்காஞ்சியென்றொரு
மந்திரஞ்செவியுறுமல்லற்பேற்றினால். ௨௭௪

இசையெனுநாடகமகளையீண்டிய
திசையெலாநடஞ்செயவிடுத்துத்தேசுசால்
வசையறுகாஞ்சியின்மருங்குகாணினோர்
பசைநிழலாலினைப்பற்றிவைகினான். ௨௭௫

முழங்கிசைச்சுருப்பினமுரலுந்தேமலர்ப்
பழங்கனிந்துகுமரப்பசியகானிடை
வழங்குநர்தமைநெறிமறுத்துநெஞ்சகஞ்
சுழங்குறப்பழங்கணிற்றாழ்த்துச்செல்லுநாள். ௨௭௬

வேறு.

கருமச்சிறைமுற்றுமறுத்தருள்காட்டிடும்
பெருமைச்செறிகாஞ்சியான்கழல்பேணினான்
அருமைச்செழும்மாமறையாய்ந்தறிகேள்வியான்
றருமச்சுருதிப்பெயர்தாங்குமொர்வேதியன். உஎஎ

நடக்கும்பொழுதுங்கமழ்சேக்கைநலத்தகக்
கிடக்கும்பொழுதும்பலகாலுங்கிளர்ந்தற
மெடுக்குந்திருக்காஞ்சியினீராறுநாமமு
மடக்கும்பொறிநெஞ்சினமுழ்த்திவிளம்புவான். உஎஅ

அன்னொருநாள்வளரவ்வனமெய்திஞெ
ஞென்னொரெனவாதவன்வெப்பமுடற்றலு
மின்னுமையுழக்குமரக்சனிருக்குமம்
மன்னலமாத்தடிநீழலில்வைகினான். உஎகூ

தண்ணுங்குளிர்நீழலின்வெம்மைதணந்துயர்
கண்ணன்கடிமாமலர்நான்முகன்காண்கிலா
வண்ணன்கழல்சிந்தையில்வைத்துவளம்பதி
யெண்ணுந்திருநாமமிராறுமியம்பினான். உஅ0

கண்டுங்கனியுங்கமழ்தேனும்விராயென
மண்டுஞ்சுவைநாமமிராறுமரத்தின்மேல்
கொண்டங்கமுலர்ந்துகுழைந்தவரக்கன்றன்
மீண்டுந்துயர்விள்ளவகஞ்செவிமேயவே. உஅக

பெயர்சென்றுசெவித்துளையிற்பெரிதேறலு
மயர்முற்றுமகன்றுமுதுக்குறைவாய்ந்தனன்
றுயருற்றவரக்கவுருத்தொகுசாபவெவ்
வயர்வைத்தணிவித்துவகைக்கடலாடினான். உஅஉ

கணித்தோதியகாஞ்சியினாமநன்மந்திர
பிணித்தாவயின்முன்னுறவிட்டருள்பெற்றிபோன்
மணித்தாழ்விழுதூன்றியவால்வயினின்றிழிந்
தணித்தாகநடந்தருளான்றனையண்மினான். உஅங

தொழுதார்வினைதூளிபடுத்தருடியசீர்
முழுநான்மறைமுற்றியநாவினனீர்ங்கழ
லழுதார்வமொடாரவணங்கியெழுந்தனன்
பழூதோவியமெய்ப்புகழ்கொண்டுபழிச்சினான். உஅச

குழியும்விழியும்பிறழ்கூரெயிறுங்குலைந்
திழிபுன்மயிருங்கரியோர்முகமுந்தசை
யழியும்வடிவும்மெதிர்கண்டவரஞ்சமுன்
வழிபாடுசெய்வானைமருட்கையினோக்கியே. உஅரு

வெருவுந்திறலாக்கையைமேதகுவந்தனை
புரியுந்தனியன்பினையார்புகலாயெனத்
திரியுந்திரியிஞ்சிகடந்தருள்சேவக
ரருளான்றியிலாமறையாளன்வினாயினான். உஅசு

நந்தாதபெரும்புகழானவிலென்றலுஞ்
சிந்தாகுலமுற்றுமிரித்தடிசேர்ந்தவ
னுய்ந்தேனடியேனெனவோகையுளத்தெழ
வெந்தாயிதுகேளெனவங்கணிசைக்குமே. ௨௮௭

பீடார்தருவேதசன்மாவெனும்பேரினேன்
கோடாதவுளத்தவர்தங்குழுவிற்புகா
வாடாதெதிர்வாதினிகழ்ந்திறுமாத்தலின்
வீடாதவரக்கவுருத்தனையேயினேன். ௨௮௮

அவ்வாறுவருந்துயரத்தனையுங்கணத்
திவ்வாறுபுகுந்தெழிலார்திருக்காஞ்சியின்
செவ்வாய்மையிரும்பெயர்செப்பியொழித்தனை
யுவ்வாறடியேன்செயலென்றுரையாடினன். ௨௮௯

கருமேனியனின்னகரைந்தமைகேட்டலும்
பெருகோகைநெடுங்கடலிற்பெரிதாடினன்
முருகார்பொழில்விண்டுபுரப்பெயர்மொய்யரு
டருமாறுநினைந்துதழைத்தனனுள்ளமே. ௨௯0

இருவோர்களுமிங்ஙனமின்புறுபோலவையிற்
றருவீந்தபொலந்தொடைமோலியர்தாம்பலர்
திருவான்றவிமானமொடுஞ்செறிவுற்றனர்
மருவார்ந்தவனத்திடைவந்தனர்முற்றினர். ௨௯௧

விழுநீர்மையன்வேதசன்மாவெனும்வேதிய
னொழியாதவிடும்பையரக்கவுருத்தனைக்
கழியாமிகுகாமர்பிணைந்துகதிர்த்திடுஞ்
செழுமேனியின்வானவனுய்த்திகழ்வுற்றனன். ௨௯௨

பெடையோடுமணிக்குயில்பின்னியிணங்குறு
மடல்வாயவிழ்பூம்பொழில்வாங்கியகாஞ்சியி
னெடுநாமமிராறுநிகழ்த்தியவேதிய
னடிநீண்முடிசூடினனங்கருள்பெற்றனன். ௨௯௩

அரமங்கையர்சாமரைபாங்கரசைத்திடச்
சுரர்தத்தநலங்கெழுசெய்கைதொடங்கிட
விரியுங்கிரணத்தவிமானமிவர்ந்தெழீஇப்
பரவும்புலவோர்பதிசென்றுபுகுந்தரோ. ௨௯௪

வள்ளத்தைநிகர்த்தமணிக்குருமாமுலைக்
கள்ளக்கருங்கட்கடவுண்மடவாரொளி
துள்ளுற்றவிதழ்ப்பவளச்சுவைவார்மது
வள்ளிப்பருகிப்பெருவாழ்வினமர்ந்தனன். ௨௯௫

மலகுமபவநூறிமெய்வாழ்வுவழங்குமிவ்
வல்குமபெயர்பீழையறுத்திமையார்பதி
நல்குந்திறமற்புதமேகொனயந்தினி
யொல்கும்புயலூர்திகணித்ததுரைக்குவாம் ௨௯௬

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தண்ணந்தரளக்குடைநிழற்றத்தயங்குமணிச்சாமரையிரட்டச்
சுண்ணந்ததைந்தமலர்க்கூந்தற்றோகையனையார்கடங்குயிற்ற
வண்ணந்தழைத்தவிசைவீணைவல்லோரமிழ்தமெனப்பாட
விண்ணந்தளிர்ப்பவரியணைமேன்மேவியரசுசெய்திறலோன். ௨௯௭

அன்னம்பொருவுமகலியைமெல்லமிழ்தார்சாயற்பெண்ணரசின்
பொன்னம்பிதிரிற்சுணங்கலர்ந்துபூரித்தெழுந்தமுலைக்களிறும்
வன்னம்பிதிருமணிப்பருமம்வயங்குநிதம்பத்தடந்தேரும்
கொன்னம்பழுத்தவிழிப்படையுஞ்சம்ரம்புரியக்கோட்பட்டான். ௨௯௮

குவளைக்கருங்கட்டுணைசேப்பக்கொழிக்கும்பசுந்தெள்ளமிழ்தொழுக்கும்
பவளக்கடிகையிதழ்விளர்ப்பப்பணைத்துத்துணைத்துச்சுணங்கலர்ந்த
தவளத்தரளமுலைஞெமுங்கத்தடவுநிதம்பக்கடல்பொங்கக்
கவளக்களிறும்பிடியுமெனவற்றநோக்கிக்கலந்தனரால். ௨௯௯

நீலநிறைந்தமழைத்தடங்கட்சுரமாமகளிர்நெடுங்கழுத்துக்
கோலநிறைந்துதழைத்தோங்கக்குழைவெண்கடலிற்கொதித்தெழுந்த
வாலநிறைந்ததிருமிடற்றாரடித்தாமரையிற்கருத்திருத்துஞ்
சீலநிறைந்தகௌதமனாரனையகளவைத்தெரிந்தருளி. ௩00

இரும்புகுழைக்குங்கற்பின்வலியெளிதிற்குழைத்தாய்நெடியபசுங்
கரும்புகுழைக்குமதன்கணைக்குக்கலங்கும்புலையாயோனிதனை
விரும்பிமுறையிற்பிறழ்ந்தனையான்மிளிருநினதுமெய்முழுது
மரும்பும்பலயோனிகடமுவியலக்கணுறுவாயெனச்சபித்தார். ௩0௧

செல்லறபமுக்குறும்பெறிந்துதெருளானந்தக்கடற்குளிக்கு
மல்லற்றவத்துக்கௌதமனார்வகுத்தசாபந்தொடக்குதலு
மல்லற்கடற்கோர்விருந்தாகியைஞ்ஞூற்றிரட்டியோனியுடற்
புல்லிப்பருவந்துயிர்சாம்பிப்பொலிவுமாழ்கியறிவழிந்தான். ௩0௨

தூண்டாவிளக்கினெழில்கொழிக்குஞ்சுரமாமகளிர்கடைவிற்றப்
பூண்டாங்கிளமென்முலைச்சசிதன்புடைவீற்றிருப்பப்புத்தேளி
ரீண்டாவேவற்பணிகேட்பவெறுழ்மான்றவிசினரசிருப்பு
வேண்டானுணுத்தலைக்கொண்டான்மெலிந்தான்மேருவரைய்டைந்தான்.

ஆண்டுவளமொய்த்தெழில்பரப்பியலங்கியொருநூற்றேசனைக
ணீண்டுகுளிர்ந்துவெண்டரங்கநிரையிற்றவழுந்தடம்பொய்கை
பூண்டவிசைமென்சுருப்பினங்கள்பொழிதேன்மடுத்துத்தாதருந்து
மாண்டகனகச்செழுக்கமலமணிமொட்டகத்திற்கரந்திருந்தான். ௩0௪

புங்கமறையோன்மனைமுலையைப்புணர்ந்தவிழைவுதணியாதக்
கொங்கைநிகர்வதிதுவென்றுகுறித்துக்கலந்துவாழ்வான்போற்
பொங்குநறுந்தாமரைமுகிழ்க்கட்பொள்ளென்றொளித்தங்கவணிருப்பத்
துங்கநெடுவானவர்காணார்துண்ணென்றயிர்ப்புற்றுளந்திகைத்தார். ௩0௫

வரியுங்கழற்காலரசின்றிப்புல்லென்றழுங்கும்வானாடர்
சுரிசங்கலறிவயிறுளைந்துதோற்றும்புதுநித்திலமுறுவற்
புரிமென்கூந்தற்சசியோடும்பொருக்கென்றேகிவினையனைத்து
மிரியுந்தவத்தான்மேம்பட்டவெறுழ்சால்குரவன்றனைக்கண்டார். ௩0௬

கடிக்கற்பகமென்மலர்மாரிகமழச்சொரிந்துகழலிணைதம்
முடிக்கட்புனைந்துபணிந்தெழுந்துமுறையிற்பழிச்சியிடும்பையெலா
மிடிக்குங்கருணையருட்குருவேயிறைவாவெறுழ்த்தோள்வலனுயிரைக்
குடிக்கும்படையான்றனைக்காணேம்யாங்கணுளனேகூறென்றார். ௩௦௭

தேவகுரவனதுகேளாச்செங்கேழ்ச்சலடிப்புறைமோலி
மூவர்முதல்வரடிபோற்றியறிவினுடிமுதுவிசும்பு
காவலரசன்முனிமனையைக்காமுற்றிழுக்கியவுருழக்கும்
பாவகாரியாய்க்கரந்துபாயிலுந்திறந்தேர்ந்துரைசெய்வான். ௩௦௮

ஒலிவிலுகுக்குந்தரளமணியொலியல்வயங்குந்தடம்புயத்தீர்
வலியினுயர்ந்தவிற்றைமுனிவன்மனையைவிழைந்துகொடுஞ்சாப
நலியப்பலயோனியனாகிநகைகான்மேருவரைத்தடத்து
மெலியகமலமுகிழ்கரந்தான்மேவிக்கொணர்துமெனவெழுந்து. ௩௦௯

விடுக்குங்கிரணமணிமோலிவிண்ணோர்தனதுபுடைவரப்போ
யடுத்துவிடுப்பநளினமுகையகத்துக்கரந்தபுருகூதன்
றொடுத்தசமழ்ப்புள்ளகமலைப்பத்துனைவின்வெளிக்கொண்டன்பினொடு
மடுத்தகருணைக்குரவனிருமலர்த்தாள்பணிந்துவேண்டினன். ௩௧௦

வந்துபணிந்தநாகநகர்மகவான்றனைக்கொண்டருட்குரவன்
கந்தமலிந்தமலர்த்திரளுங்கதிருமணியும்பொலங்குவையு
முந்திநெடுங்கோட்டகத்தொதுக்கியொலிந்தசினைக்கோழரையகிலுஞ்
சந்தும்பெயர்க்கும்பிரயாகைத்தடநீர்த்திருத்தமருங்கணைந்தான். ௩௧௧

அரக்குவிரிந்தநெடுஞ்சலடித்தடிகளடிகளுறநினைந்திப்
பரக்கும்புனலால்விதியாற்றுற்படியென்றுரைத்தானுரைத்தாற்குச்
சுரக்குமதுநுண்டுளிதுவற்றுஞ்சுடர்ப்பூந்தருக்கற்பகநாடு
புரக்குந்தடவுப்புயத்தானுமவ்வாறங்கட்புனல்படிந்தான். ௩௧௨

சுலவுந்தரங்கமெடுத்தெறியுஞ்சுடர்வெண்பணிலம்வயல்கடொறுங்
கலவும்பெருநீர்த்தடநதியிற்களிப்புற்றுடிக்கரையெழலு
நிலவுங்கொடியபெரும்பாவந்தணந்தான்வடிவினிகழ்குறிகள்
பலவுந்தணவாத்திறநோக்கிப்பொன்னேனிதனைப்பணித்தருள்வான்.

கண்டார்நகைக்கநினதுடம்பிற்களுலும்யோனிதணப்பதற்கு
மண்டார்கலிசூழ்நிலவரைப்பின்மருந்துவேறொன்றிலைபால
முண்டார்வதியுங்காஞ்சிநகருறும்பேர்கணிக்கற்பாலையெனக்
கொண்டாங்கவனுக்கிராறுதிருப்பெயருஞ்செவியிற்கூறினனால். ௩௧௪

அருளிற்புகுத்துந்திருக்காஞ்சிப்பெயராறிரண்டுங்கணித்தோதித்
தெருளுய்த்தருளுமேகம்பநாதர்செழுந்தாளகத்திருவி
மருளிற்றணந்தபெரும்பேற்றான்மாறுயோனியாயிரமு
முருவத்தடங்கணெனப்பொலியக்கண்டானுவகைக்கடற்றிளைத்தான்.

இணங்குகாஞ்சிநகர்மேன்மையெண்ணுந்தொறும்பேரற்புதனாய்
வணங்கியிமையோராயிரங்கண்மகவானென்றுபோற்றிசைப்பச்
சுணங்குபூத்தமணிமுலையார்பழிச்சத்துறக்கநாடெய்தி
யணங்குமடங்கற்றவிசேறியரசுபுரிந்துவாழ்ந்தனனால். ௩௧௬

ஊற்றுமதநீரசும்புமுகத்தொளிர்கோட்டயிராவதப்பாகன்
சாற்றியலகிட்டெய்தரும்பேறெய்துந்திறஞ்சாற்றினமிப்பாற்
கூற்றநடுங்கவேற்றெதிர்ந்துகுறுகாவரசர்மிடன்முழுதுங்
காற்றுமயில்வேலொருவேந்தன்கணித்துவரம்பெற்றதுமுரைப்பாம்.

வேறு.

தவளமருப்பினவொழுகுபணைக்கையதறுகண்முகத்தநெடுங்
கவளமதக்களிறுற்றுமுழக்கொலிகருமுகிலஞ்சவெழுஞ்
சுவணபுரத்திடைமிகுபுகழ்துற்றதனஞ்சயனென்றொருவ
னுவணமுயர்த்தவனிகர்மிடல்பெற்றுளனொளிறுமணிக்கழலான். ௩௧௮

இகன்மறமன்னர்கண்முழுதுமுடைந்தனரிளகுவனம்புகுதத்
திகழெரிசிந்துபல்படைகள்சொரிந்தவர்தேயமொருங்குதழீஇ
யகனிலமின்புறமகவினையாதியறங்கள்வளர்த்தறநூற்
றொருகுமுறைமுற்றுறவுலகுபுரந்தருடொழிறலைநின்றிடுநாள். ௩௧௯

தீதுறுபண்டையுழுற்றியவூழ்வினைசென்றுதொடக்குதலிற்
கோதிலமைச்சருரைக்குநலங்கள்கொளாதுபகற்பொழுது
சூதுவினைக்கண்முயன்றுகழித்திருடன்னுமிராப்பொழுதுங்
காதன்மடந்தையர்காமருதோணலமுண்டுகழித்தனனே. ௩௨௦

மல்லலொருங்குதபும்படையாகியசூதினும்வாளொளிகான்
முல்லையரும்புநிகர்க்குநகைக்கருமொய்குழன்மாதரினு
மொல்லுமனத்தினனாதலின்வேலையுடுத்தநெடும்புவியிற்
செல்லுறுகாவலுறங்குநர்கைப்பொருள்செத்தொழிவுற்றதரோ. ௩௨௧

அரசுரிமைத்தொழிலிகவுபெறத்தனியடல்வலிகுதினிலும்
விரைசெறிகுங்குமமுலையினரினபினும்வீழ்வகைகண்டுபகைப்
புரசைமதக்கரியரசர்கள்வென்றிகொள்பொழுதிதோமெனவே
யுரைசெயுமுன்னெதிர்படைகொடுமுற்றினரொலிகடல்சூழ்ந்தெனவே.

கவனவயப்பரியுந்தினர்தேர்கள்கடாவினர்வார்மழையிற்
றவழ்மதவும்பலுகைத்தனர்வீரர்கடங்களையேயினர்கூற்
றிவர்நுதிவாளிதொடுத்தனராழியெறிந்தனர்வெங்கனலி
யவிர்முனைநாந்தகமோச்சினரார்த்தனராடமர்செய்தனரே. ௩௨௩

மாற்றலர்வந்துவளைந்தமர்செய்யமறங்கனியச்சினவிக்
கூற்றெனவார்த்துமலிந்தகணாதுகொடும்படைதன்னொடுமே
ரேற்றுநெடும்பிணமெங்குநெருங்கவெறிந்தமராடல்புரிந்
தாற்றலனாகியுடைந்துவிடுத்தனனவ்வயினீங்கினனே. ௩௨௪

வேறு.

கோற்றொடிமனைவிதன்னையரதனகூடமென்னு
மாற்றல்சாலரணக்காப்பின்வைத்துநல்லமைச்சன்றன்னைப்
போற்றுகென்றிருவிட்புந்திவிழைந்தவைபெறுவான்பொற்பின்
மாற்றருமதுகைவேந்தன்வடதிசைநோக்கிச்செல்வான். ௩௨௫

புரிமுறுக்குடைந்துசெந்தேன்பொழிசெழுங்கமலமேறி
வரிவளையலறியீன்றமணிக்குவைநிலவுகால
வரிவையர்செவ்வாயென்னவாம்பன்மொட்டவிழுமோடை
செறிதருபழனஞ்சூழ்ந்தநெடுநகர்பலகொட்புற்றான். ௩௨௬

தவவளரேனல்காவற்றடங்கருங்குவளைக்கண்ணார்
கவணையினோச்சுகின்றகதிர்மணிக்குலங்கள்வானின்
றவிரொளிமீன்களுக்காங்கலங்கிவீழ்சாரற்குன்றத்
துவலையகுரம்பைச்சீறூரொண்பதிபலகொட்புற்றான். ௩௨௭

ஏந்திளமுலைநலாரினிளவனநடைகள்கற்கும்
பூந்துணர்நாகச்சோலைப்புறமெலாமதலையீட்டந்
தாந்திரைவிலங்கியுய்த்துத்தரும்பெருவளங்களோங்கு
நீந்துறைநெய்தல்வேலிச்செழும்பதிபலகொட்புற்றான். ௩௨௮

ஆய்களிற்றினங்கணீர்வேட்டலமரலெய்திப்பாங்கர்த்
தோய்கயநேடித்தத்தந்துணையொடுமேறுகியோடுங்
காய்கடமியங்குவோரைக்கலங்களுருறுத்துவெளவி
மாய்தரும்பசிதீர்மாக்கள்வாழ்பதிபலகொட்புற்றான். ௩௨௯

அவரையுந்துவரங்காடுமேரில்படுவரகுமற்று
மிவர்வளம்பெருக்கமான்களிணங்குதமினத்தோடாடிக்
கவிழ்சினைக்குருந்தினீழற்கண்படைகொள்ளும்பாடி
தவமலிநெடியகானத்தனிநகர்பலகொட்புற்றான். ௩௩௦

நெடிபடுகானிலங்கோர்நெடுவதிபடருமேல்வைக்
கொடிபடுநகரமாதிக்கொருவளங்கவர்ந்துதன்பான்
முடிவருங்கவற்சிவைத்தபகைஞர்போன்மொய்த்தவெம்மை
மடிவரும்பகலோனுச்சிவந்தனனுலகல்லாப்ப. ௩௩௧

கலிநிலைத்துறை.

பில்குபேரொளிக்கதிர்க்கையாற்பிறங்குசெங்கதிரோன்
புல்குசீர்மணக்கலவியாற்பொள்வழிந்தனபோன்
மல்குவாரிதழ்வாடினவயின்வயிற்கதிர்க்கும்
பல்குவாண்மணிநித்திலப்பழனமென்கமலம். ௩௩௨

இரவினீங்குதன்செயலையோரேழைதோட்புணரக்
கரவினீங்கியதெனக்கனன்றுறங்கியகமலம்
மருமலர்ப்பதந்தைவந்துமணப்பவன்மானப்
பரிதிவானவன்கதிர்க்கையாற்பனிப்புனல்சுவற்றும். ௩௩௩

நெறியியங்குநர்தமக்குநீர்வேட்கையைத்தணப்பச்
செறிபுன்ற்றடந்தெளிந்தனபோற்செழுந்தடத்துப்
பிறிவரும்பசும்பாசியும்பிரிந்துநீரகத்து
ளறிவுகூர்பொழுதாணவமெனவடங்கியதே. ௩௩௪

மேற்பிறங்கியபாதிநீர்வெம்மையுந்தன்கீழ்ப்
பாற்பரந்திடுபாதிநீர்பனியுமாந்தடங்க
ளாற்பழங்கவிக்கவுணியர்நலக்கவோர்புறத்தி
னேற்பநீறணிபாண்டியனுடலமேய்த்தனவே. ௩௩௫

அள்ளலாங்கதிர்ச்சூட்டினையஞ்சிமீனுதி
யுள்ளுலாய்க்கரந்துறையநன்றேம்புநீர்நிலைகள்
கொள்ளையாட்டயர்கொடியகோலரசனைக்காணிற்
றெள்ளியோர்வளமொளித்துவாழ்செயறெரித்தனவே. ௩௩௬

மடமையோப்புகிலார்சிலரிழிஞர்வாலறிவங்
குடையர்போற்றமைத்தோற்றிமாணாக்கரையுலைத்தாங்
கடருநீர்நசைமான்களையறலெனமருட்டி
யிடரினேய்த்தனவிடந்தொறும்பரந்துவெண்டேர்கள். ௩௩௭

குளிர்தபுஞ்சுடருச்சியிற்குறுகுமப்பதத்திற்
றெளியும்வெண்பளிக்கறைக்குலந்தன்னிடைச்சேர்ந்த
வொளிரும்வன்னம்பற்றாதசீருருத்திடும்வெயிலாற்
றளர்வுகொண்டெனூக்கமுற்றொழிந்தது தகையும். ௩௩௮

சுடர்ந்துதன்வயிற்றோன்றழல்சுற்றெலாங்கதுவக்
கிடந்தவாதவன்மணிச்சிலைகிளர்வெயிற்பிழம்புக்
குடைந்துமற்றிதினுயங்கலிற்சாதனன்றென்னப்
படர்ந்தசெங்கழற்குளித்திடும்பரிசுதேற்றினவே. ௩௩௯

முருகுநாறுபொன்னிதழியார்முண்டகப்பதத்தி
னொருவுமாருயிர்பருவத்தின்மீளவுற்றிடல்போற்
பரிதிவானவனுச்சமாம்பதத்துமென்மலர்ப்பூந்
தருவினீங்கியநிழலெலாந்தருவடியடைந்த. ௩௪0

வயங்குவெங்கதிருச்சமாம்பொழுதுநீள்வழியி
னியங்குமாந்தர்போன்மரத்தடியெய்தியங்கிருந்து
தயங்குசெங்கதிர்சாய்தலுந்தணத்தலானிழலு
முயங்குவெப்பினுக்குடைந்துளந்தளர்ந்ததொத்ததுவே. ௩௪௧

கொழிக்கும்வெம்மைகூருச்சியிலடியிடைக்குறுகிச்
செழிக்குமேனையபொழுதுசேணகற்சிசெய்நீழ
லழிக்குநோய்படும்பொழுதடுத்தண்மியத்துயர்நோ
யொழிக்குமெல்வையினீங்குதம்மொக்கலேபோன்ற. ௩௪௨

அழற்கொழுந்துகாலவிரொளிப்பரிதியங்கடவுள்
கிழக்குவந்தெழக்குடாதுபோய்க்கிடந்துமேற்றிசையின்
வழிக்கொண்டேகுழிற்குணாதுசெல்வார்நிழற்கணங்க
ளுழக்கும்வெப்புடைச்சுடரொடும்பகைத்தவொத்தனவால். ௩௪௩

நிலவுபற்பலபொருளுடனீழலும்விகாரங்
குலவலாலுயிர்போன்றனகுளிர்புனனீழ
லலைவிலாமையெஞ்ஞான்றுமோரமைதியற்றிடலா
னிலையசூற்படையிறைவரேநிகர்த்ததுமாதோ. ௩௪௪

உரியதன்மனைக்கிழத்தியாமொள்ளிதழ்க்கமல
மிரியவென்றிகொண்முகமலரேய்ந்துளாரென்ன
விரிகதிர்ச்சுடருற்றலும்வெதும்பியச்சூட்டைப்
பரியுநீள்குடைமீமிசைப்பற்றினர்பதிகர். ௩௪௫

பொங்குபேரொளிக்கதிரவன்பொறிவெயிற்றழன்மற்
றங்கண்மாநிலத்துயிரெலாமைதுறத்துயிற்றி
யங்கிகாரியந்துயிலெனவறையுமாகமநூற்
றுங்கவான்பொருள்புலப்படத்தோற்றியதன்றே. ௩௪௬

தன்னையுள்பொதிந்தோம்புகெட்டுடல்வெயிற்றழலா
லின்னலெய்துவதொழிப்பமேற்போர்த்தமையிழைய
மன்னுமாக்கையின் மணிப்புனன்மாந்தர்யாவருக்குந்
துன்னுவேர்வையாயெங்கணுந்தோன்றிவார்த்ததுவே. ௩௪௭

இரவிகான்றவெந்தழற்பிழம்பிணர்த்தகற்பகத்தின்
குரவநாறியவுலகினுங்குலாவுமேலங்கண்
விரவிவாழ்தருவில்லுகுமணிப்பசுமோலிச்
சுரர்கள்யாவரும்வெயரிலாரெனச்சொலப்படாரே. ௩௪௮

வெயில்பரப்பியவெப்பொடுவிரவிழ்மென்காற்றுக்
குயினுழைந்தெழுமாடமுங்குளிர்ந்தகாவணமும்
பயின்மரப்பனிப்பொதும்பரும்பாய்ந்தழறறியதாற்
சயவெரித்துணையென்பதுபுதுக்கினுற்றகைய. ௩௪௯

தரையும்வெம்பினதண்ணருவடைகிழிந்தொழுகும்
வரையும்வெம்பினமல்கியமணலொடுபுணரித்
திரையும்வெம்பினதீங்குளிர்பயிற்றுபூஞ்சோலை
நிரையும்வெம்பினநெருப்பெனவுடற்றியவெயிலால். ௩௫0

கள்ளிபாகனுர்கங்கைநீர்சடையிலேற்றதுவும்
பொன்னனள்ளாவியமார்பினுன் புணரிவீழ்ந்ததுவு
மன்னஞூர்பவனீர்ம்புனலலரின்மேயதுவு
மின்னநண்பகலின்னலுக்குடைந்தமைபோலும். ௩௫௧

இனையவாறுநண்பகற்பொழுதிறுத்தலுமரசன்
றனையவோர்குளிர்மரத்தடிச்சூழலைத்துன்னி
நினைவிறைப்பலவெண்ணிநெஞ்சுளைந்தனனிருந்தா
னனையவெல்லையிற்சாய்ந்தனனவிர்கதிர்ச்சுடரோன். ௩௫௨

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேய்தருபணைத்தோண்மாதர்வீங்கிளமுலைகள்கீழாச்
சாய்தொறுமிளைஞர்க்கார்வத்தழற்பிழம்பாறுமாபோற்
காய்தருபரிதிமேலைக்கடல்விழத்தாழுந்தோறும்
பாய்தருகிரணக்கற்றைப்படாவெயிலாறிற்றன்றே. ௩௫௩

தேங்கமழ்கமலச்செவ்விச்செழும்பொகுட்டுளவளாவி
யோங்கியதொழுதியன்னமுயர்மரச்சேக்கைநோக்கி
நீங்கினபரிதிவட்டநீங்குறுமாற்றுற்றம்மைத்
தாங்கியகமலங்கூம்புந்தன்மைதேர்ந்தொழிந்தான்மான. ௩௫௪

முள்ளரைககமலநங்கைமுகிழ்முலைவருடிமெல்லென்
வள்ளிதழ்த்தேறன்மாந்திமணியுருக்கலந்தவாற்று
வள்ளொளிநறுந்தாதென்னுங்குங்குமவளறுதோய்ந்த
தெள்ளொளிபோலுமென்னத்தினகரன்மேனிசேந்தான். ௩௫௫

மேற்றிசைவரைப்பின்மூடும்தெவ்விருட்செறிவுஞ்சீதந்
தோற்றுவெம்பனியுந்தோலாவவுணருந்தொலையவெம்போ
ராற்றுவான்வடிவிற்செங்கேழரணம்வீசியதும்போலு
நாற்றிசைபரசுங்கஞ்சநாயகன்சேர்ந்தவண்ணம். ௩௫௬

வந்தெதிரவுணர்தங்கண்மணிநிறத்திட்டுவாங்கும்
கொந்தொளிக்குருதிதோய்ந்தகூர்நுதியீட்டிபோலுங்
கந்தமிக்கரும்புங்கஞ்சக்கடிமலர்மணந்தகேள்வன்
சிந்தியகிரணக்கற்றைசெந்நிறம்படைத்ததோற்றம். ௯௫௭

வளர்மலைக்கொங்கைதோய்ந்துவாவிவாய்நறுநீர்மாந்திக்
களிவரமணந்தகேண்மைக்கதிரவன்றணத்தல்காணூஉ
வளமாலுற்றுத்தென்றிக்கணங்குமெய்ப்பசலைபூத்தாங்
கொளிநிறமழுங்கிப்பொற்கென்றொளிர்வெயில்பரந்ததன்றே.

சுடர்வெயில்புவியினீங்கிச்சூளிகைமாடம்பற்றி
மடலவிழ்சோலைவாவிமலைகளினெறிக்குங்காட்சி
கடனுறுதன்னைநல்குங்கனைகதிர்ச்செல்வன்யாண்டுப்
படர்தருகின்றானென்றுபார்ப்பமேலிவர்ந்ததொக்கும். ௯௫௯

துணிகதிர்க்கற்றைதுற்ற சுடரவன்விசும்பினீங்கி
மணிவெயிலெறிக்குமேலைமுகட்டினில்வயங்குந்தோற்ற
மணிமதன்போர்செய்கா[illegible]மண்மலிஞெலிமிக்கார்ப்பக்
குணில்பொருமுரசந்தீயிற்காய்த்திடுங்கொள்கைபோலும். ௯௬௦

அன்மருள்பரவைமுந்நீரார்கலிக்கரியபாந்தண்
மென்மெலவிழுங்கப்பட்டுவிரிகதிர்ப்பிழம்புகாலும்
பொன்மலிகொடிஞ்சித்திண்டேர்ப்போக்கரும்பரிதிப்புத்தேள்
பன்மணிக்கரங்கள்கூப்பிப்பைப்பையமறைந்துபுக்கான். ௯௬௧

இவ்வண்ணம்பகலோன்சாய்ந்தவெல்லையிலெழுந்துவேந்தன்
றெவ்வர்கண்மூட்டிவிட்டகவலைத்தீசிந்தைவாட்ட
வௌவியமனத்தவானவாளியும்புலியுமெண்கு
நவ்வியுமல்லான்மாந்தர்நடப்பருநெறிச்செல்வேலை. ௯௬௨

வரைநிகர்தடந்தோட்காதன்மவுணனைத்தணந்துவைகு
நிரைவளைத்தொடிக்கையார்க்குநெருப்புமாய்மணந்தார்க்கெல்லாம்
விரைகமழமுதுமாகிமேவியதுயிர்களெல்லாந்
தரைமிசையிடங்கணுடிச்சார்தருமருள்கூர்மாலை. ௯௬௩

தற்பகையாயதண்ணீர்தனக்கெலாமரசனாகி
நிற்பவனிவனுமென்னுநினைவினாற்பொருதுவெல்வான்
விற்படுதழல்களெல்லாமேற்றிசைத்தலைவன்மீது
முற்படவிறுத்தாலென்னமுகிழ்த்ததுசெக்கர்வானம். ௯௬௪

பொத்திமேற்றிசையின்மல்கும்புகரிருளிரிக்கப்போத்து
முத்தமன்றெனுதிக்கினேங்குவெந்திமிரம்பின்னர்
மொய்த்துவந்தடராவண்ணமுனிதரவழியிற்காவல்
வைத்ததன்னொளியேபோன்றும்வாய்ந்ததுசெக்கர்வானம். ௯௬௫

புட்டில்வார்விரலின்வீக்கிப்போகுயர்கருப்புவில்லு
வட்டமாவளையவாங்கிமாரவேடணந்தார்தம்மேல்
விட்டிடக்கூர்செய்தாங்குமற்றவன்விசிகமாய
மட்டவிழ்தோட்டுக்கஞ்சமலரெலாங்குவிந்தமன்னே. ௯௬௬

வினைவயிற்றணந்தகேள்வர்விலாழியம்பரித்தேரூர்ந்து
மனைவயிற்புகுதலோடுமெகிழ்ச்சிகூர்மடநலார்தந்
தனைநிகரமிழ்தமூறுந்தாளவெண்முறுவற்கஞ்சி
நனையுகவுடைந்தாலென்னமலர்ந்தனநறியமுல்லை. ௩௬௭

மோட்டிளமுலையினார்க்குமூரியங்களிறனார்க்குஞ்
சேட்டிருங்கலவிப்பூசல்செய்விப்பான்கருப்புவார்விற்
கோட்டுவேள்படையெழுச்சியார்ப்பெனகுளிர்ப்பூஞ்சோலை
யீட்டுபுன்குடம்பைதோறுமிரட்டினதுழனிபுட்கள். ௩௬௮

தோமறுபரிதிவட்டந்தொடுகடல்குளித்தமாலை
வீமலிதொடையன்மார்பர்ப்பிரிந்தமெல்லியலார்தங்கள்
காமருவதனஞ்சாலக்கூம்பிவான்கவிகளெல்லாந்
தாமரையென்றுகூறுந்தனிப்பொருள்விளக்கிற்றம்மா. ௩௬௯

கடலிடைக்குளிப்பான்போன்றுகரந்துபல்லுருவுகொண்டு
வடவரையனையதோளார்மலர்முகத்தெழிலைவௌவப்
படவொளிப்பரிதிப்புத்தேள்பயில்வதுபோலச்சீர்த்துத்
தடநெடுமனைகடோறுந்ததைந்தனவிளக்கினீட்டம். ௩௭௦

அனையபுன்மாலைக்காலத்தியல்புளியாற்றுமந்தி
வினைதபுகடன்கண்முற்றிமேவருநடவைநீந்து
நனைமலரளங்கற்றேலானன்னிமித்தங்கள்காணூஉ
வினையவைபயப்பதென்னேயீண்டெனச்செல்லும்போது. ௩௭௧

ஒற்றையந்திகிரித்தேரோனவுணர்நாட்டுருத்துமூட்டப்
பற்றியசெக்கர்வானப்படரெரிப்பிழம்புகான்ற
கற்றையம்படலைக்கூட்டக்கருப்புகைமண்டிவிம்மி
முற்றியதிறனேயென்னமொய்த்ததுதிமிரவீக்கம். ௩௭௨

கொண்கரைக்களவிற்சேர்வோர்கொழுநரைப்பிழைத்துச்செல்வோர்
கண்கழல்வளையாய்க்கூகைகள்ளுநர்முதலோர்க்கெல்லா
மெண்கழியுவகைகாட்டியேனையோர்க்கிடுக்கண்காட்டி
வண்கழலரசனேவவல்லிருளிறுத்ததன்றால். ௩௭௩

விழிப்பினுமிமைத்தற்கண்ணும்வேறுபாடின்றித்துன்னுங்
கிழிப்பருங்கொடியகங்குற்கருகிருட்போதுசெல்ல
லழித்தடிபெயர்க்கலாற்றாநுண்மையான்வலிந்துபோகி
வழித்தடந்தப்பியாரும்வழங்கருங்கடத்திற்புக்கான். ௩௭௪

துன்னருவனத்துச்செல்வான்றொடர்ந்தெரிவளைக்கப்பட்டுப்
பன்னிருபடப்பாம்பொன்றுபதைபதைத்தழுங்கக்கண்டா
னன்னதற்கிரங்கிவல்லேமந்தரவலியாலந்த
வன்னியின்வெப்பமாற்றிவாளராவுய்யச்செய்தான். ௩௭௫

உய்வித்தவேந்துதன்னையுரகவேந்தினிதுநோக்கி
கவ்வைக்கோர்புணையாய்த்தோன்றுங்களைகணேயெயிறுதோறு
மைவைத்தநஞ்சுகாலுவலியினேன்றனையுமுய்யச்
செய்வித்தவுதவிக்கென்னேசெய்தக்கதென்றுகூறும். ௩௭௬

கலிவிருத்தம்.

எவ்வுயிராயினுமிடுக்கட்பட்டுழி
யவ்வுயிர்காப்பதேயறமென்றோர்ந்தனை
செவ்வியவென்றுநன்முகமன்செப்புபு
கௌவைநோய்களையுமாறிதுவுஞ்சொல்லுமே. ௲எஎ

வரையிரண்டெனத்திரண்மணிப்பொற்றோளினாய்
குரையெறுழ்த்தழலினிற்கோட்பட்டேய்ந்தயான்
றரையகம்புகழ்தருசங்கசூடனென்
றுரைதகுபெயரினேனுயர்ந்தகேள்வியேய் ௲எஅ

அரந்தைநோய்முழுவதுமனுக்கிமேதகு
வரந்தருகாஞ்சிவண்பில்த்துவாய்தலி
லுரந்தகுகாவல்கொண்டுலகுபாம்பென
விருந்தமாபதுமன்மற்றெனக்குத்தோழனே. ௲எகூ

ஆங்கவன்செவியுறிவுறுப்பவாழிபோ
லேங்குநீர்க்காஞ்சியினிரர்றுநாமமும்
பாங்குறக்கணித்தெறுழ்ப்பறவைக்கோப்பகை
நீங்கியெங்கணுந்திரியாற்றனீடினேன். ௲அ0

இற்றைநாளீங்கொருபிலத்தினேந்திய
முற்றிலாமுகிழ்முலைநாககன்னிதன்
பொற்றதோட்புணர்ச்சியாற்புந்திசாம்பியப்
பற்றுடைப்பெயர்களைக்கணித்தல்பாற்றினேன். ௲அக

பாற்றியவறன்கடைதொடக்கப்பாயெரிக்
கூற்றின்வாய்க்கவன்றனேன்குழையுமேல்லையிற்
போற்றுமப்பெயர்களைப்புந்தியெண்ணலான்
மாற்றினேனத்துயர்நின்னின்மன்னனே. ௲அஉ

சித்திகள்வேண்டினுஞ்செல்லநிர்பர
முத்தியேவேண்டினுமூசுவண்டுலாந்
தொத்தலர்த்தாரினாய்துணையநல்குமா
லத்தகுகாஞ்சியின்பெயரிராறுமே. ௲அங

மும்மையினிகழ்பவுமுறையிற்றோர்ந்துள
செம்மையேனுதலிற்செம்மணின்னுள
விம்மனேயெய்த்தனன்வெருவலின்னினி
யம்மனுப்பெயர்செவியறிவுறுப்பலே. ௲அச

மேதகுபத்தியின்விழைந்தந்நாமங்க
ளோதுழிநான்கெனுமுருபுகூட்டிப்பு
பேதமில்சத்தியமாதியாப்பிணித்
தீதுதீர்நமோந்தமாச்செய்துசெப்புக. ௲அரு

முள்ளரைக்காம்பிவர்முளரியுற்பலங்
கள்ளலைத்தொழுகுசெங்குமுதங்காஞ்சன
வள்ளிதழ்ச்சண்பகமறுகுவாலரி
யெள்ளுநெய்பாறயிர்தேனின்பாளிதம். ௲அசு

கொளத்தகுமேனவுங்கொண்டுநூன்முறை
யளப்பருஞ்சித்தியின்பொருட்டங்காகுதி
விளைத்திடும்பத்திநுக்கொன்றுமேவர
வளப்படுமெய்ப்பெயர்மனுக்களபன்றியே. ௩௮௭

திருத்தகுகாஞ்சியந்தேத்தலாலொரு
வரைப்பினுஞ்செய்பயன்வல்லைமுற்றுறு
குருப்பொலிமணிமுடிக்கொற்றவேந்தவம்
மருப்பொழிற்கச்சியிற்கணித்துவைகுதி. ௩௮௮

முன்னியவிழைவெலாமுற்றுமாலெனப்
பன்னிருபெயரும்பன்னிரண்டுவாயினு
மன்னவன்செஞ்செவியுளாத்துவாளராத்
தன்னுடைப்பிலத்தினைச்சார்ந்ததென்பவே. ௩௮௯

ஆங்குவேன்மணிப்புயத்தரசனுள்ளகத்
தோங்கியவுவகையானுடலுஞ்சாலவும்
வீங்கினன்றுயரெலாம்விளியநீத்தொரு
பாங்கரினிருந்தயர்வுயிர்க்கும்பாணியின். ௩௯௦

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தெள்ளுசாசகாஞ்சிநாமஞ்செவியறிவுறுத்தப்பட்ட
கள்ளவிழ்மலர்ப்பூந்தொங்கற்காவலன்முகத்திற்றுள்ளு
மள்ளொளிவனப்புவெள்ளவவையெனத்தோன்றியாங்கு
வெள்ளொளிக்கதிர்ப்பூந்திங்களெழுந்ததுவிசும்புசீர்ப்ப. ௩௯௧

கோட்டுமாநேமிக்குன்றங்குருமணிகுயின்றவாழிச்
சூட்டெனநவெட்டோன்றுஞ்சுடர்மதிகுழிசியென்னப்
பூட்டியவார்களாயப்பொழிநிலாத்திங்கள்கான்ற
சேட்டொளிக்கிரணக்கூட்டந்திசைதொறும்பரந்தவம்மா. ௩௯௨

மையிருட்போர்வைநீக்கிவார்கதிர்க்கரத்தாற்றிங்கள்
பையமென்புணரியல்குற்பன்முறைநீவிக்குன்றச்
செய்யபொன்முலைதைவந்துதிளைத்தலாறுணியாங்கு
வையகமடந்தைசாலவிளர்த்தனணிலாவின்மாதோ. ௩௯௩

களித்ததன்வேழமூர்ந்துகணைபொழிகருப்புவில்வே
ளிளைத்தல்கண்டதனைவைகற்கிணங்குபாசறைக்கணேய்த்துத்
தளைத்ததுபோலுமெங்குந்தணந்துகார்த்திமிரவீக்க
மளித்திரண்முரலுஞ்சோலையகங்குடிகொண்டதோற்றம். ௩௯௪

தேந்துணர்க்கற்பத்தண்டார்த்தேவர்கள்பலகால்ண்மிக்
காந்துதண்கலைவெண்டிங்கட்கடவுண்மாட்டள்ளிக்கொண்டு
போந்தொறுஞ்சிந்தாநின்றபுதுச்சுதைப்புள்ளிபோன்ற
வாய்ந்தொளிவிசும்பிற்பூத்துவயங்கியவுடுவின்கூட்டம். ௩௯௫

சீரியமதியைநோக்கித்தேவர்போலமிழ்தம்யாமு
மாரியவாக்குகென்னுநீரரமகளிரெல்லா
மேரியல்பவளச்செவ்வாய்திறந்தனரென்னப்பொங்கும்
வேரியங்குமுதக்குப்பைவிரிந்தநீர்நிலைகடோறும். ௩௯௬

தடுத்துவிண்ணவரள்ளாமைத்தள்ளியவவுணராய்ந்தங்
கடுத்துமற்றெமக்குஞ்சாலவாரமிழ்தருளநின்பாற்
றொடுற்றவன்புடையார்க்கின்னேசொல்லெனவிரந்தான்மான
மடுத்தலையாம்பரேறும்வண்டுபாய்ந்திசைத்ததாலோ. ௫௯௭

மலையெனத்திரண்டதோளும்வார்கிழித்தெழுந்தண்ணுந்த
முலைகளுமிறுகமாந்தர்முயங்குமாறெய்யுமாரன்
சிலைபடுநாணினோதைதெழித்துமிக்கெழுந்ததேபோ
லிலைபடுபொதும்பரெங்குமெழுந்ததுசுரும்பரார்ப்பு. ௫௯௮

செந்தழல்சான்றுவேட்டசெல்வனைப்பிழைத்தமாதர்,
பைந்துகின்மெய்யிற்போர்த்துப்பன்மரப்பத்திநீழ
ணந்தெழின்மாடநீழற்பற்றினர்நடந்தார்வீழ்ந்த
மைந்தனைக்கலவிப்போரான்வணக்கியவயின்கடோறும் ௫௯௯

கறைகெழுவிசும்பிற்றிங்கட்கலையமிழ்தினிதுமாந்து
நிறைமணிமோலித்தேவர்நிரந்தரமழுக்காறெய்த
மறுவறுவதனத்திங்கள்வாக்குதெள்ளமிழ்தமுண்டா
ரிறுநுசுப்பந்நலாருமிளைஞருந்தம்முட்கூடி. ௬௦௦

இத்தகுவனப்புமல்கவிடையிராவிறுத்தலோடு
மத்தகுகானம்வைகுமடல்கெழுதனிவேற்காளை,
மைத்தபூஞ்சோலைக்காஞ்சிவளநகர்நோக்கிவல்லே
மொய்த்தெழுமகிழ்ச்சிபொங்கமுன்னினனதர்கடேர்ந்து. ௬௦௧

காவதஞ்சிலசெல்காலைக்கனியிதழ்ப்பவளசெவ்வா
யாவியங்கூந்தன்மாதரழுங்கியுள்வெதும்பிச்சேரிப்
பாவையர்நுகர்ச்சிமுற்றிப்படர்தருங்கணவர்மாட்டு
மேவியதுனியின்வைகும்விடியல்வைகறைவந்தன்றே. ௬௦௨

கலிவிருத்தம்.

சரியையாதியபுரிதருமமைந்தர்க
ளெரிசடைக்கடவுளைத்தொழுதின்பார்ந்தன
ருருவிலிக்குடைந்தமைந்தர்களுமூடிய
வரிமதர்மழைக்கணார்ப்பணிந்தின்பார்ந்தனர். ௬௦௩

ஆற்றல்வேண்டுநரெலாமரனையன்பிறைப்
போற்றியிம்மனுப்புகல்கென்னல்போன்றமுன்
சாற்றியமந்திரந்தனைக்கார்க்குரீஇ
வீற்றுவீற்றுவிருந்துணர்த்தன்மேயின. ௬௦௪

பரவைவையகமடிப்படுப்பவெய்யவன்
வரவறிந்துள்ளகங்கவன்றுமம்மர்நோய்
விரவலாற்சழுங்கியதென்னமென்மெல
விரவுசெய்கதிரொளிமழுங்கிற்றென்பவே. ௬௦௫

காதலர்க்கடுத்ததுகாதன்மாதர்க்கும்
போதவுற்றிடுமெனல்புதுக்கினலெனச்
சீதவெண்மதியொளிதேய்ந்துவீதொறு
மாதர்வில்லுடுக்களுமழுங்கித்தோய்ந்தன. ௬௦௬

தணிவருங்காரிருள்சாலவாய்மடுத்
துணவுளத்ததுநிறைந்தொளியைவீத்தென
மணிநிறைமாளிகைவயின்றொறேற்றிய
வணிநிறைவிளக்கெலாம்விளக்கமற்றன. ௪௦௭

எய்துமுனூருயிரிகப்புறுவகை
யைதுபோய்த்தாமரையணங்கையாற்றெனு
வெய்யவன்விடுப்பமுன்மேவினாலெனச்
செய்யசீரருணன்முன்றிகழத்தோன்றினான். ௪௦௮

இனையதோர்வைகறைப்பாணியெய்தலுந்
துனைவுகொண்டாறுசெஃறோன்றல்செய்திடும்
வினையெலாமேதகுவிழைவினாற்றினான்
மனைநிகர்காலையுஞ்சார்ந்ததென்பவே. ௪௦௯

வடதிசைப்படர்ந்தருள்வர்க்கின்மன்னரங்
கிடனுண்டப்பொய்கையினிழிந்தையாற்றுநீர்த்
தடமிசையெழுந்தமைதகையமேற்றிசைக்
கடல்விழுசுடர்குணகடலிற்பூத்ததே. ௪௧௦

வாக்கினுக்கரையனையாற்றுவாவிநீர்
மேக்கெழக்கண்டமெய்யன்பர்போன்மெனப்
பூக்கமலத்தொகைபொலிந்தவாம்பல்க
ளுக்குணப்பரமதத்தவரிற்றேம்பின. ௪௧௧

ஆறுசென்றுயங்கினையயர்வுயிர்த்தரு
ளீறிலாயுண்டிதுவென்றுபானுமுன்
வேறுவேறந்தணர்விருந்துசெய்வபோற்
கூறுமந்திரத்துநீர்குடங்கையேந்தினார். ௪௧௨

மண்ணெலாமலர்ப்பொழின்மணஞ்சுலாவின
விண்ணெலாம்வேள்வியின்புகைவிராவின
கண்ணெலாங்கண்ணுதல்கழலிலேறின
வெண்ணெலாமவனடியிணையிற்றாழ்ந்தன. ௪௧௩

ஏடுசூழ்தாமரையீர்ந்தடந்தொறுந்
தோடுசூழ்சிறையனத்தொழுதிசென்றன
பாடுசூழவற்றெழில்பார்ப்பபோன்மனைப்
பீடுசூழன்னமுங்குடையப்போந்தன. ௪௧௪

இன்னபல்வளஞ்செறிகாலையெல்லையின்
மன்னவனெழுந்துபன்மலையுங்கானமுங்
கன்னலங்கழனியுங்கடந்துசார்ந்தனன்
றுன்னியமலர்ப்பொழிற்காஞ்சித்தொன்னகர். ௪௧௫

கருத்தொகைதுமித்தருள்காமக்கோட்டத்தை
யருத்தியினண்மியாங்காற்றப்போற்றுப்பு
மருத்தபூங்குழலுமைமாதையுள்ளகத்
திருத்தினன்கணித்தனனிராறுநாமமும். ௪௧௬

இறைவிதன்னேவலாலிணர்த்தபூம்பொழி
னறைகமழ்காஞ்சிமாநகரத்தெய்வத
நிறையெறுழாக்கநீடாயுளேனவும்
பெறுகெனவருளலும்பெற்றுநீங்குபு. ௪௧௭

பொற்றதன்னாட்டிடைப்புகுந்துபேரொடு
முற்றியபகைஞரைமுருக்கியெங்கணும்
வெற்றியந்திகிரிசென்றுருளவீற்றிருந்
தற்றமிலரசுசெய்தவனிகாத்தனன் ௪௧௮

விண்ணவர்வியத்தகும்விண்டுமாபுரத்
தண்ணலந்திருப்பெயரலகிட்டின்னண
மெண்ணியவெண்ணியாங்கெய்தினோரின்னு
மெண்ணிலரவற்றுடைப்பெருமையென்சொல்கேன். ௪௧௯

கன்னிகாப்பணிந்தவப்பெயருட்காஞ்சியென்
றென்னருமேதகவியம்புநற்பெயர்
தன்னையோர்வேதியன்கேட்டுத்தாவொரீஇ
யுன்னரும்பே[illegible]பெற்றதுவுமோதுவாம். ௪௨௦

கொச்சகப்பா

அலங்கன்மணிப்புனற்றடஞ்சூழயோத்திநகர்வாழ்க்கையினு
னலங்கதுவும்பலகலையுநான்மறையுமுழுதுணர்ந்தா
னிலங்குபுகழ்த்தனியொழுங்கினெச்சன்மாவெனுமறையோன்
மலங்குதுயர்க்கடலழுந்துநல்குரவால்வறுந்தினன். ௪௨௧

கரந்தறியாவிழுத்தகையோர்கண்ணுற்றுவிதியாற்று
னிரந்துகடும்பொடும்பசிதீர்ந்தின்னுயிரோம்பினன்வருநாட்
சுரந்தபெர்ருள்வேட்கையினாற்சுலாயெங்குமாறின்றிப்
பரந்தபொருளீட்டியுந்தன்பாழார்வந்தணிந்திலனாய். ௪௨௨

காண்டகுசீர்வளம்படைத்தகாசிநகர்சென்றெய்தி
யாண்டிருந்துபலவருடமலைசுருட்டிமணிகொழித்து
வேண்டுவரந்தருகங்கைவிரைப்புனலாடுநர்மாட்டு
மாண்டகுபஃறானங்கள்வைகறுறும்விழைந்தேற்றும். ௪௨௩

பரிதியைவெங்கொலையரவம்பற்றுதினத்தாற்றுநர்த
மிருளிரிக்குமாதானமேற்றுநிதிமல்குதலாற்
பெருகியதன்பொருளார்வம்பெரிதுமமைந்தோங்கியதன்
றிருநகரஞ்செல்பாக்குத்திரண்டியோடவணீங்கி. ௪௨௪

பலநகரமிடைகடந்தோர்பழுவமடுத்திறந்திடுங்கா
னிலவியவாழ்நாளுலப்பநிலமிசைவீழ்ந்துடல்விடுத்துக்
குலவுபஃறானங்களேற்றகொடும்பாவத்தா
லலகிறுயர்க்காகரமாயரக்கவுருச்சிமிழ்ப்புண்டான். ௪௨௫

வருந்திநனியீட்டியுமவ்வான்பொருளாற்பயன்யாதும்
பொருந்தினனலனிறந்தபொழுதுமொருகதியிலான்
றிருந்தியவிக்கதைகேட்டுஞ்சிலரன்னேமுறைதிரும்பிப்
பெருந்தரையிற்றவப்பொருள்கள்பெருக்குவாரென்னினைந்தோ.

உருக்கியுயிர்நனிகவற்றுமுண்புனல்வேட்கையஞ்சால
வெருக்கொள்பசித்தழற்பிணியும்விராயுடறத்துயர்வசமாய்
வெருப்புறழ்வெஞ்சுரத்தொருசார்நிற்குமொருதடம்போதித்
தருத்தனைச்சேர்ந்தவ்வரக்கன்றளர்ந்திளைக்கவதியுநாள். ௪௨௭

கலிநிலைத்துறை

சுரும்புதூவழிமிழற்றமென்மலர்மதுத்துளிக்கு
மரும்புவாய்ந்தபூம்பொதும்பரின்புறமெலாமடுத்துக்
கரும்புஞ்செந்நெலுங்கதலியும்பூகமுங்காட்டும்
பெரும்புனற்பணைமதுரையிற்பேணுவாழ்க்கையினன். ௪௨௮

நாட்டமூன்றுடைகம்பனார்நளினமெல்லடிக்கே
கோட்டுசென்னியன்குறும்புசெய்மலப்பகைமுழுதும்
வாட்டுபீமசன்மாவெனுமறையவன்மைந்தன்
சேட்டிருப்புகழ்ச்சோமசன்மாவெனுந்திலதன். ௪௨௯

புரங்கடந்தவர்பூணிளவனமுலையோடுந்
தரங்கவார்புனற்கம்பையின்றடங்கரையமரு
மரங்கமாளிகைக்காஞ்சிமாநகர்த்தலையமலு
மிரங்குவெண்டிரைத்தீர்த்தங்களாடவெண்ணினனால். ௪௩0

கடங்கவிழ்க்கும்வாரணமுகக்கடவுளையிதழ்க
ளுடங்கவிழ்க்குமென்கடம்பணியொருவனைவேள்விச்
சடங்கவிழ்க்கவோர்வீரனைத்தந்தருளரவம்
படங்கவிக்கும்வார்சடையரையுமையொடும்பணிந்தான். ௪௩௧

கற்புமேதகுமனைவியுங்காமர்மைந்தர்களும்
பொற்பவோதுமாணாக்கரும்போக்கில்சுற்றமுமாம்
பற்பலாரொடுங்கியதிபூண்டப்பதிநீங்கி
யற்புமாமனங்களிகொளவாறுசென்றனனே. ௪௩௨

செல்லும்வைகலுளொருதினஞ்செல்லலிற்றளையும்
வல்லரக்கன்வைகழற்கடம்வழங்கிடுமெல்வை
வில்லொழுக்கியவெய்யவன்வெங்கதிருடற்ற
வல்லலுற்றனனவ்வரசடியிணைச்சார்ந்தான். ௪௩௩

நெருங்குபல்வளப்பெருக்கமுநிலையுதவிலவாய்ச்
சுருங்குங்காலையும்விருந்தினைப்புறந்தருந்துகடீர்
பெருங்குணத்தரினரசுகானீழல்பெட்டிறைகொண்
டொருங்குவந்ததன்சுற்றமோடயர்வுயிர்த்தனனே. ௪௩௪

வருத்தநீங்கியங்கிருப்புழிமணித்திரைகொழிக்கு
முருத்தபூந்தடமருங்குகால்வளைத்தகாஞ்சியைச்சென்
றருத்தியோடுமேகம்பர்தமடியிணைதொழுது
திருத்தகுஞ்சிலர்மறையவர்மீண்டனர்சென்றார். ௪௩௫

அடுப்பவண்மியவந்தணர்தம்மைநேர்நோக்கிக்
கெடுத்தவைம்பொறிச்சோமசன்மாகிளர்ந்தெழுந்து
மடுத்தகாதலின்வரவெதிர்கொண்டுபூந்தவிசு
கொடுத்துமேவிரீஇயளவளாய்க்குழைந்தகங்களித்து. ௪௩௬

எங்கிருந்திவட்போந்தனிரெங்கணேகுதிரென்
றங்கண்வேதியர்தங்களைவினவினனவருங்
கொங்கிணர்ப்பொழிற்காஞ்சியைக்குறுகினம்போற்றித்
தங்குமெம்பதிபோதுவான்சார்ந்தனமென்றார். ௪௩௭

அளறுபாய்மதக்கலுழிநீராறுபாய்முகத்துக்
களிறுவாரிதிமடுத்தெழுங்கருமுகில்சமழ்ப்பப்
பிளிறுமோதைசூழ்காஞ்சியம்பெரும்பதியின்னு
மொளிறுநெஞ்சினீரெவ்வளவிற்றெனவுரைத்தான். ௪௩௮

அளவையிற்றெனமொழிந்தவரகறலுமாங்கு
வளமைபெற்றசீர்க்காஞ்சியென்றவர்முனம்வகுத்த
கிளவிபோய்ச்செவிநுழைதலுங்கெழுமுவல்லரக்க
விளிவிலாக்கையைவிடுத்தனனரசின்மேலிருந்தான். ௪௩௯

மற்றுரைத்தவக்காஞ்சியின்கேள்வியால்வாசந்
துற்றகற்பகத்தோட்டலர்த்தொடையன்மார்பலையக்
கற்றையங்கதிரொளியுடன்முழுவதுங்கஞலப்
பொற்றவானவனாயினன்புவியெலாம்வியப்ப. ௪௪௦

நிழலின்வைகியசோமசன்மாவைநேர்குறுகிக்
கழலிற்றாய்ந்திருகட்பனியுகக்கரைந்தியம்பு
மொழிதள்ளாடவின்றுதிபலமுழக்கியுள்ளகத்துக்
கழிபெருங்களியெழக்கரமுகிழ்த்தெதிர்நின்றான். ௪௪௧

யாரைநீயெனவினவியவிருபிறப்பாள
னோருமாறுதன்செய்திகளுவந்தெடுத்துரைப்பான்
சீருலாமறைக்குலத்தினென்காசியிற்சிவணி
யாரவான்பொருளறம்பிழைத்தீட்டிமீண்டிறந்தேன். ௪௪௨

இறந்தவிக்கடத்தெரியெனப்பெருந்துயரலைப்ப
வுறந்தசாகைநெட்டரசினையுறைந்திருந்தனன்மற்
றறந்தழைத்தநின்வரவினாலமரனாய்ப்பொலிந்தேன்
சிறந்தவேதியவிதற்கெவனேதுசெப்பென்றான். ௪௪௩

செப்புமென்மொழியமிழ்தெனச்செவித்துளைநிறைப்ப
வொப்பில்சோமசன்மாவெனுமுத்தமன்மகிழ்ந்து
துப்புநேர்சடையாரருள்வாரியிற்றுளைந்தங்
கெய்ப்புநீவியபண்ணவனின்புறக்கிளப்பான். ௪௪௪

சுருட்டுவெண்டிரைத்தொகுதிகள்சுடர்வளைக்குலங்கொண்
டுருட்டிவார்கரையொதுக்குநீர்க்கங்கைசூழ்காசிப்
பொருட்குவைகியபொருவறுபுண்ணியப்பேற்றா
லிருட்டனுக்குநற்காஞ்சியென்றிரும்பெயர்கேட்டாய். ௪௪௫

அனையகேள்வியாலரும்பயன்பெற்றனையென்னா
நனைமலர்ப்பொழிலணிந்தலைப்புரிசைசூழ்காஞ்சி;
புனைபெரும்புகழ்புகழ்ந்திடுமேல்வைவானின்றுங்
கனைகதிர்ப்பொலங்கடவுளர்விமானம்வந்தன்றே. ௪௪௬

விம்முவால்வளைதெழித்தெழவிமானமேல்கொண்டு
கொம்மைவார்முலையரம்பையர்குழீஇமுறைபழிச்ச
மும்மைவையகமுழுவதுமுகமலர்மலர
விம்மென்முன்புபோயெய்தினனிமையவருலகம். ௪௪௭

அனைத்துநோக்கியற்புதத்தனயகங்களிதுளும்பும்
வினைத்தொடக்கறுஞ்சோமசன்மாவெனுமிக்கோன்
றனைத்தொடர்ந்தபல்சனத்தொடுமெர்வயிற்றணந்து
கனைத்துவண்டிமிர்சோலைசூழ்காசியையடைந்தான். ௪௪௮

சங்குமிப்பியுந்தண்டுறைதொறுமணிகொழிக்குங்
கங்கைவார்நதிதோய்ந்துசெய்கடனெலாமுடித்து
துங்கவேற்படைத்தோன்றலைச்சூர்தபவுயிர்த்த
பங்கநீத்தருள்விச்சுவநாதனைப்பணிந்தான். ௪௪௯

அங்கணீங்கிவந்தண்மினனன்னமுங்குருகும்
பங்கயத்தடம்போதெலாம்பள்ளிகொண்டுறங்குங்
கொங்குவிம்மியகுளிர்புனலிலஞ்சிகளுடுத்த
மங்குல்வான்றொடுமாளிகைக்காஞ்சிமாநகரம். ௪௫0

விழியுமுள்ளமும்வேசையர்போற்றிசைகொள்ளுங்
கழிபெருஞ்சிறப்பணிநகர்க்கவினெதிர்நோக்கிப்
பொழியுமன்பினன்போந்தனன்புகர்துமித்தின்ப
வழியினுய்த்திடுஞ்சாறுவதீர்த்தத்தின்மருங்கு ௪௫௧

ஆங்குநான்முறைமயிர்வினையாற்றிவார்தரங்கம்
வீங்குவெள்ளநீர்த்தீர்த்தமேவரப்படிந்தாடி
யோங்குபிண்ட * மீடாதியசெய்கடனுஞற்றித்
தேங்குலாவியதெய்வதவேகம்பஞ்சேர்ந்தான். ௪௫௨

மட்டுவார்ந்திழிமலர்ப்பசுவுமாவடிமுளைத்த
வட்டமூர்த்தியாரணிமலர்ச்சேவடிதாழ்ந்து
பெட்டகாதலினென்பெலாம்பெரிதுநெக்குருகி
முட்டுமானந்தவெள்ளத்தின்முழுகியொன்றானன் ௪௫௩

மற்றுமுள்ளபன்மணிநறுந்தீர்த்தநீராடிப்
பற்றுகாதலினாலயம்பலவுஞ்சென்றிறைஞ்சி
யற்றுந்தீரடியாரொடுமளவளாய்வதிந்து
சுற்றமோடுமெய்வீட்டினைத்துன்னினனன்றே. ௪௫௪

உன்னுவார்வினையோசனைக்கப்புறத்தொதுக்கு
மன்னுசீர்ப்பெயர்முகத்தினுற்காஞ்சிமாநகரந்
துன்னுமேன்மையிற்சிறிதெடுத்துரைத்தனந்துகட
ரன்னமாநகர்மூர்த்தியின்பெருமைமற்றறைவாம். ௪௫௫

பன்னிருநாமப்படல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௬௪௪

* ஈடு - இடுதல்.

இருபத்தெண்டளிப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மருமலர்ப்பசும்பொதும்பரிற்பண்பயில்வரியளிமூரன்றூடும்
பொருவிகந்தசீர்க்காஞ்சிநீடெல்லையுளாகமபுராணங்கள்
சுருதிநாலெடுத்தியம்பிடப்பட்டனதொழுபவர்தமக்கெல்லா
மிருமைவாழ்வருள்கடவுளரிருக்கைகளெண்ணிறந்தனவோங்கும். க

செப்பரும்புகழ்பூண்டமற்றவற்றினுட்சினகரமுளவான
முப்பதிற்றுமூன்றிரட்டியபத்துநூறெனப்படுமுறைசான்ற
வப்பெருந்தகுதளிகளுட்பனிவரையணங்குபூண்முலைதோய்ந்த
துப்புவார்சடையண்ணலார்தளிகளெட்டிரட்டியாயிரஞ்சூழல். உ

காமக்கோட்டத்தினிருந்தறம்புரிந்தருள்காமநோக்குடைமென்பூந்
தாமப்பூங்குழலம்பிகைக்குரியநற்சத்திகளமர்கின்ற
வேமக்கோயில்களீந்தறுமாயிரமெரிதவழ்சுடராழி
நாமத்திண்படைநாயகனிருக்கைமுந்நான்குபத்தறழ்நூறே. ௩

உலகெலாந்தருநான்முகற்கொருபதினுயிரத்தெழுநூறு
விலகுமுக்குடைவானவற்கொன்பதினுயிரத்தெழுநூற்
றலைமைசால்புகழ்ப்புத்தனுக்கெட்டுறழாயிரஞ்சகம்போற்றக்
குலவுகொற்றவைவயிரவன்சாத்தனுக்கொவ்வோராயிரங்கோயில். ௪

வயங்குநெட்டிலைவேற்படைப்பண்ணவன்வாணிலாப்பிறைக்கோட்டா
லுயங்கவெம்பகைமுடித்தருளைங்கரத்தொருமுதலுயர்வானத்
தியங்குசெங்கதிரிருக்கைகள்வேறுவேறைந்துநூறெனச்சொல்வர்
தயங்குமேதகையனந்தன்வாழ்மந்திரஞ்சாற்றிலொன்றேழுநூறே. ௫

வேறு.

ஆரிருளறுக்குமின்னவறுபத்தாறாயிரத்த
சீரியதளிகளுள்ளுந்திருவிழாச்சிறப்பின்மல்கு
மேரியல்வரைப்புநாலாயிரத்துநானூற்றுநாற்பத்
தீரொருநான்குமன்னுமென்மனுர்புலவர்மன்னே. ௬

அவற்றுணூற்றெட்டுமேலாமவற்றினுங்காமற்காய்ந்த
சிவச்சுடர்க்கினியவைப்பினிருபதுசிறந்துமன்னு
முவப்புறவமிழ்தம்விண்ணோர்க்கூட்டியதிருமால்வைப்பி
னவைத்தொகையிரியநூறுநாலிரண்டதிகமாமால். ௭

கருணைகூர்திருவேகம்பங்கச்சபாலயங்காரோணம்
பரவுமேற்றளியோடிந்திராலயம்பணாதரீசங்
தருவுடுத்துயர்மணீசநான்முகசங்கரஞ்சீர்
விரவியசுரகரீசமேதகுபாசிராமம். ௮

உருத்திரனகர்மாகா.........ரகமோத்தூர்மாற்பேறு
விரித்தசீர்னேசபேசம்வேதநூபுரமயானங்
கருத்தபுகடம்பைமன்னும்வீராட்டகாசமென்னத்
தெரித்திடுமிவைநாலைந்துஞ்சிவபிரான்றளிகளாமால் ௯

நடைமலையோங்கல்வெஃகாநகைநிலாத்துண்டமேன்மை
யடைநிராகாரமட்டபுசஞ்சகாளாங்கந்தீமை
யிடையுமூரகமேர்தங்கும்பாடகமிவையோரெட்டுங்
குடையெனப்பறம்புதாங்குங்குரிசிலுக்கினியதானம். ௧௦

இருபதுமெட்டுமாயவிவற்றினுந்திருவேகம்பம்
பருவரலிரிக்குங்கச்சபாலயந்திருக்காரோணம்
பொருவருமூன்றுமேலாய்ப்பொலிவுறுமிவற்றினுள்ளுந்
திருவளர்கம்பமேன்மையிற்றெனத்தெரிக்கொணாதால். ௧௧

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுடர்மணியிமைக்குஞ்சூட்டராமுடியிற்சுமையெனக்கிடந்தபூதலத்தி
னெடுவெயிறகழ்ந்துபாதலங்காறுநிரந்துமேற்பொங்கிவெண்மணிகள்
படுதிரைக்கரத்தாற்கரைமிசையெறியும்பகீரதியொருபுறத்துடுத்து
விடமகல்காசித்திருநகர்வரைப்பின்விச்சுவநாயகனெனவும். ௧௨

குடவளைக்குலங்கள்வயிறுளைந்தலறிக்குரூஉமணிதுறைதொறுமுயிர்க்குந்
தடநதித்தீர்த்தமருங்குடுத்தோங்கித்தனைப்பரும்பிறவிநோய்மருந்தாய்க்
கடவுளர்முனிவர்சித்தர்சாரணருங்களுலினர்நித்தலும்போற்றப்
படுமதில்வளைந்தசெழும்பிரயாகைப்பதிவயின்மகேச்சுரனெனவும். ௧௩

மூண்டபேரன்பின்விதியுளிப்படிந்துமுழுகுநர்தங்களுக்கன்றித்
தீண்டிடப்பெற்றோர்நோக்கினார்கேட்டார்செப்பினார்பருகினார்தமக்கு
மீண்டியசெல்லலறக்கடைதுமித்திட்டிமையவர்குழாமழுக்கறுப்பக்
காண்டகுசிறப்புமேதகவளிக்குங்கங்கையிற்பிதாமுகனெனவும். ௧௪

நீட்டுசெஞ்சடையர்வெண்பொடிதிமிர்ந்தநிலாத்தவழ்மேனியர்மலங்க
ளோட்டுகண்டிகையராஞ்செழுத்துரைக்குநாவினரொழுக்கருமுனிவர்
கோட்டியகருப்புச்சிலையவன்றொடுக்குங்கொழுமலர்க்கடுங்கணைமதுகை
வாட்டினர்வதியுநைமிசவரைப்பிற்றேவதேவப்பிரானெனவும். ௧௫

தொக்கமென்றோட்டுக்கடிமலர்க்கற்பச்சோலைகள்புடைதழீஇயுயர்ந்த
நக்கபூணிமையார்வாழிடம்வெள்ளிநாடெனத்தனியுருமாற
வுக்கமவெண்மணிகள்வயின்றொறுங்குவவியுமிழ்கதிர்க்கற்றைவிண்ணிவக்கு
மிக்கசீர்வேராற்கான்பொலிவஞ்சந்தனில்விமலேச்சுரனெனவும். ௧௬

மடலவிழ்நறும்பூஞ்சினைமிசைச்சேவன்மாங்குயில்பயிலவுமணையா
துடல்பெரும்புலவிதணிவருந்திறத்தாலவயினயன்மரத்தொதுங்கும்
பெடையினைத்தொடர்ந்துபுலவியினீக்கிச்சிறகராற்பின்னியின்பாருங்
கடிமலர்ப்பொதும்பர்க்காடுசூழ்தருப்புட்கரத்தினின்மாகந்தனெனவும்.

கொள்ளிவண்டினங்களிவர்ந்துகூட்டுண்ணக் கொழுமடல்கிழிந்து
தேனொழுக்கும், வெள்ளைவண்டோட்டுக் கமலமீப்பயின்று மேதகுவா
ணிகொலன்னத், தெள்ளொளிவிரிக்குஞ் சிறையனங்குலவுந் தெளிபுன
ற்றடத்துவெண்டரங்க, மள்ளிமுத்திறைக்கு மணிப்பிரமாசனத்திற்சசிபூ
டணனெனவும். ௧௮

வரைநடந்தனையநடைமதக்களிறும்வாரிதியலையெழுந்தனைய
புரையறுகலினவாம்பரித்திரளும்பொலஞ்சுடர்த்தேர்களுங்கடவி
புரையுயர்கள்குழுமிபெரியெனச்சினவியடுபடைவழங்குமெய்த்தோர்
திரையெழப்பொருதபெருந்திறற்குருக்கேத்திரத்தினிற்றாணுவேயெனவும்,

வட்டவெண்பாறைநடுப்புறத்தெய்திமதமலைசேவகங்கொள்ள
வுட்டலைப்பொதிந்தகறையுடைமதியென்றும்பரினிராகுவந்தண்மித்
தொட்டுமீண்டகலுஞ்சாரலங்குடுமிச்சுடர்விரிமணிவரையடுத்த
மட்டவிழ்பொழில்சூழ்மகேந்திரவரைப்பின்மாவிரதப்பிரானெனவும்.

மணிமருணிறத்துத்தும்பியுந்தேனும்வெண்சிறைஞிமிறுமொய்த்திமிரப்
பிணிமலரவிழ்த்துப்பிரசம்வார்ந்திழியும்பெருஞ்சினைமீமிசையிவர்ந்து
துணிசதிர்த்தடித்துத்திசைதொறுமிமைப்பத்தோன்றுமைமழைமுகினெருக்கி
யணிமயிலகவும்பொதும்பர்சூழட்டகாசத்தின்மாதேவனெனவும். ௨௧

மடமயிலனையார்துடுமெனப்பாய்ந்துவார்புனல்குடைந்தனராட
வெடியெழுவாளைவிசும்பிடைத்தாவிவிண்ணவர்கற்பகப்பொதும்பர்ச்
சுடர்மணியிழைகள்புவியவர்கவர்த்துதைந்துதைந்துகுத்துடன்வீழுந்
தடநெடுந்தடஞ்சூழ்சங்குகன்னத்திற்சாற்றுமாதேசனெனவும். ௨௨

கட்டளைப்பரியும்பருமவெங்களிறுங்கதிர்மணித்தேர்களுநெரிய
முட்டியபகைஞர்முடித்தலைதிருகுமொய்ப்பொறிதுவன்றிவெண்கிரண
வட்டவான்மதியும்பரிதியுமுரிஞ்சிமணியுருத்தேய்ந்துதேய்ந்தொழியத்
தட்டறவெழுந்தபுரிசையுச்சயினிதன்னின்மாகாளனேயெனவும். ௨௩

குழவிவெண்மதியும்பொருதிறற்சிலையும்புறங்கொடுத்திரியும்வாணுதலார்
பழலைமென்கிளவிமருதமர்கிள்ளைமருட்டியவிளிமொழிபயிற்றி
முழவுகளியம்பவொத்தியதாளமுறைபிறழாவகைநடிக்கும்
விழவறுவளத்தவீதிசூழ்தருகோகன்னத்தின்மாபலனெனவும். ௨௪

அருத்தியின்வணங்குமுழுவலன்புடையார்க்கறக்கடையெரிக்குவைதுற்ற
மருத்தியினனுக்கித்திருவருள்சுரந்துபடர்ந்தனபடர்ந்தவாறுதவி
மருத்தபொன்னலங்கலிந்திரன்முதலோர்வழிபடுமிறைமையுய்த்தருளு
முருத்திரகோடிநகரின்மாகாயவுத்தமச்சிவபிரானெனவும். ௨௫

கொங்கொளிமணிகள்வரன்றிவாரருவிக்குவட்டினத்திவர்ந்துவானெடிய
மந்திகண்மறலியெதிரெதிருகளமருங்கிருந்துலாவியகல்லாப்
பைந்தலைப்பார்ப்புமெழுந்துதாய்ப்பிழைத்துப்படரருவிடரினுக்கமுங்குஞ்
சந்தனங்கமழுஞ்சாரன்மாகூடந்தன்னிடையதோர்க்கடனெனவும். ௨௬

அகினறுந்தூமமடுத்துநெய்த்தொழுகியம்பொன்வாய்மகரமின்கொளுத்தித்
தகரமும்புதுப்பூந்தொங்கலுநாறித்தடங்கடல்குடித்துவானெழுந்த
முகிலெனக்கறுத்தவணர்நெடுங்கூந்தன்முதல்வியைமகளெனவுயிர்த்த
புகழ்வளரிமையமடுத்தகேதாரப்பொருப்பிலீசானனேயெனவும். ௨௭

முடங்கியவறுகான்மூசுவண்டரற்றமுண்டகமாம்பலொண்குவளை
யுடங்குமேய்ந்துழக்கிப்படர்மருப்பெருமையுலாத்தரவெரீஇயெழுவாளை
குடம்புரைசெருத்தன்முட்டலுஞ்சுரந்துகுவிமுலைசுரந்தபாலாறு
மிடம்படுதடத்தசருவமாநகரின்மத்திமகேசனேயெனவும். ௨௮

பாம்பினைக்கவற்றிப்பைத்தெழுந்தரங்கப்பாவையினகன்றபேரல்குற்
காம்புறழ்பணைத்தோட்கன்னியரோச்சுங்கதிர்மணிக்கந்துகம்வருத்தத்
தேம்படுபொதும்பர்ச்சிறைக்கிளிபூவைசெந்நெலுங்கன்னலும்பிலைந்த
பூம்பணைசேக்குந்தலேச்சுரமென்னும்புரத்தின்மாலிங்கமேயெனவும்,

ஒற்றையஞ்சகட்டுப்பொலங்கதிர்க்கொடிஞ்சியொளிர்மணிக்கூவிரத்தடந்தேர்க்
கற்றைவெங்கிரணப்பரிதிவானவற்குக்கனவாமெனறிப்படருயங்கன்
முற்றுநன்கொழியக்காலெறிவன்போன்மொய்த்தெழுந்தாடுநீள்கொடிகள்
செற்றியமதில்சூழருடதவரைப்பினருடவர்த்தனச்சிவனெனவும். ௯௦

மங்குல்வானளப்பவெழுந்தெனவொழுகிவார்ந்தநெட்டிலைப்பசுமடற்பூந்
தெங்கின்முப்புடைக்காய்சிந்துவகமுகிற்செறிமணிப்பாளைகடுமித்துத்
துங்கமெல்லடையகதலிகள்சாடித்துடும்மெனவிழுந்தடந்தோறுஞ்
சங்கினமிரியும்வயிரவமென்னுந்தலத்தினில்வயிரவனெனவும். ௯௧

மாங்குயிற்குலங்கள்வார்தளிர்கோதிமகிழ்ந்துகூக்குரல்பயில்பொதும்பர்ப்
பூங்கிளிகிடையினோதுநான்மறைநுண்பொருளுணர்ந்தடுத்தபூவையினைத்
தேங்கிசைமொழியாற்றெளித்திடுஞ்சிறப்புத்தினைத்துலகங்களோரேழும்
வீங்கியபுகழ்சேருருத்திராலயத்தினுருத்திரமேதகையெனவும். ௯௨

களிமதக்கரடக்கவுட்டுணைப்பணைக்கைக்கதுப்புடைத்திரள்மருப்பொருத்தல்
வெளிறபமுருக்கியெழுதலுஞ்சனங்கூள்வீதியினியங்கன்மின்னுக்
குளிறுவாமுரசிற்சாற்றிடுமுழக்கநிந்தலுங்குலாவுறுசிறப்பி
னொளிதவழ்சுவணபுரத்திடைச்சகத்திராக்கவுத்தமப்பிரானெனவும்.

வடிகணைதுரந்துவேலினைச்சீறிமதர்த்துமைதோய்ந்தடல்பயின்று
நெடியசெஞ்செவியிற்புகுந்துலாய்மீளுநீண்டவாட்டடங்கண்மங்கையர்க
ளடிமலர்க்கமலத்தூட்டினருகுத்தவலத்தகம்வழுக்குபொன்வீதிக்
கடிநகரிடபவரைப்பிடையிடபத்துவசமுக்கட்பிரானெனவும். ௯௪

மாறடுசீற்றத்தேழுயர்வேழமணிக்கவுண் முதலியமூன்று
மூறியமதமுநாடகங்குயிற்றுமொளிநகைமடந்தையர்சூட்டுத் [ச்
தேறலொணமதுவுமழையெனப்பொழிவதிரண்டுசென்றுறெனவொழுகி
சாறயர்வீதிதொறுங்கமழ்தேவதாருவிற்றேவனேயெனவும். ௯௫

பெருவரைக்குலங்கள் பெயர்ந்தெனத்திரையும் பிறங்கொலித்திரை
யுடன்விண்ணத, துருவிபாவடுக்கற்களிறெனக்கராங்க ளுருகெழப்பிணை
ந்துலாய்த்திரியுங், குருமணிக்கிடங்கு புடையுடுத்தெதிர்ந்தோர் குடுமி
னைக்கொண்டொளிபரப்புங், கருவியபுரிசை யோங்கியமருவாங் நலத்தி
னிற்சண்டேசனெனவும். ௯௬

அண்டர்நாடளப்பவெழுந்தெனநிவந்தவாடகப்படசும்பொன்மேனிலைக
டண்டளிர்த்தலமுமாலையும்பொரியுந்தமனியச்சுண்ணமுமணியு
மண்டியதூபதீபமுநிரைநீர்மங்கலகரகமுந்தாங்கிக்
கண்டவர்வியப்பப்பெருங்கவின்கொழிக்குங்கனகலத்துக்கிரனெனவும்.

கொடுங்கனிவாழைநெட்டிளந்தாற்றுக்கொழுமிடறொடியமுத்தலைக்கு
நெடுங்கயத்தெழுந்துமுட்டியவாளைநீர்சுருங்கிரும்பணைவிழுந்து
படுங்களிச்சுரும்பரோலமிட்டரற்றப்பனிமலர்முதலொடுஞ்சாய்த்து
நடுங்கஞருழக்கும்பத்திரகன்னநன்னகர்தனிற்சிவனெனவும். ௯௮

சுருள்விரிமலர்ப்பைந்துணர்ப்பொழில்வருக்கைதூங்குமுட்புறக்கனியிழிந்திட்
டுருகெழுதடவுச்சுளைகள்சூன்முறுத்தங்கூடியமத்தியபருத்திப்
பெருகியகளிம்புத்தலைவரக்கடுவன்பிணைந்தபேரன்பினுற்றழுவு
மருவுசீர்க்காளாஞ்சனமெனுந்தலத்தின்மகிழ்நீலகண்டனேயெனவும்.

மாடகமுறுக்கித்திவவுயாழெழூப்புமதுரவின்னிசையுமின்மணிப்பொற்
பாடகத்தளிர்மெல்லடிநலார்மிழற்றும்பண்கனியிசையுமற்றவர்க
ளாடகவிற்றுநூபுரத்திசையுநயத்தகநித்தலுங்கூஉநலு
மாடகவீதிச்சிகண்டநகரினழர்விமலேசமேயனவும். ௪0

விலகிவில்லுமிழுங்கதிமணிவரன்றியியன் ...... துவ படிணந்தகர்த்துக்
குலவியமிருககுலமிரிந்தோடக்குரைத்துமென்சினைப்பசுங்கோட்டுப்
பலவுநெட்டிலையகதலியுமகிலும்வேரறப்பறித்துவீழருவி
சலசலமுழங்குஞ்சங்கநல்வரையிற்சத்தநாதப்பிரானெனவும். ௪௧

கோற்றொடித்தளிர்க்கைக்கழங்குமம்மனையுங்குருமணிப்பந்தும்பைங்கழங்கி
னேற்றியதாளவூசலுமாடியிளமுலைமடந்தையர்பாட [ஞ்
லூற்றெழுபசுந்தேனுறைக்கும்வார்பொதும்பருறைகிளிகேட்டிசைபயிலு
சாற்றருவளஞ்சேர்ச்சோமமாநகரந்தனிற்புராசாதனனெனவும். ௪௨

அள்ளொளித்தாளக்குவைபெயர்த்தழுங்கியலைதவழ்தெள்ளுநீர்ப்பரப்பிற்
றுள்ளிமேலெழுந்துசிறுகயல்கவர்ந்துதோலடித்தூச்சிறைத்துவர்வாய்
வெள்ளையோதிமங்கள்பார்ப்பினையருத்திவிரிமலர்ப்பொகுட்டிலுட்சேக்கும்
புள்ளவாமிலஞ்சிபுடைவளைபுரச்சந்திரத்திடைச்சங்கரனெனவும். ௪௩

இரங்குதேன்றுமிறுதேறல்வாய்மடுத்தூன்றிவார்மலர்த்தாதுதோய்ந்தாடு
மரங்கண்மேற்படர்ந்துகவிழ்சினைத்தூற்ந்தவார்பசுங்கொடிந்திரள்பிணைத்துக்
குரங்குகளிவர்வுற்றூசலாட்டலருங்கொழுமடற்கடைதுழ்ந்துமுருகுக்
கரங்கமாய்ப்பொலிந்தமேதகுமரிச்சந்திரவரைப்பிடையரனெனவும்.

ஊறுநீர்மிகுத்துச்செறுந்தொறுங்கலிங்கிழுழியோட்டந்துநீள்கழனி
நாறுகள்வளர்த்துப்பசும்பயிர்விளைத்துநாகிளங்கதலிகளோம்பித்
தாறுபாய்கமுகுந்தாழையுந்தளிர்ப்பத்தலையணிசெய்துசென்றுலாவு
மேறுசீர்படைத்துவிளங்குகாமீரவிருக்கையில்விசயனேயெனவும். ௪௫

தேனினமுரல்வதிவவியாழாகத்திங்குயில்கூவுவமுழவாக்
கானிமிர்பசியபூஞ்சினைக்கிளிகள்காண்பவராகமாமயில்கண்
மானனவிழியாரெனநடங்குயிற்றும்வார்பொழிலுடுத்துவிண்ணகரந்
தானமர்வளஞ்சேர்கோடிதர்மாவிற்றகைபெறுகோடீசனெனவும். ௪௬

தவளவெண்மருப்புக்குஞ்சரக்குழுவுந்தாவுமான்குலமும்பைங்கிளியு
மிவர்தினைக்குரல்கள்கவர்வனபெயர்ப்பவிதணிவர்ந்தருப்பினமுலையார்
கவலையினேச்சுமவிர்மணிபலவுங்கதிருமெனவிசும்பொளிருந்
தவலரும்பிரமகிரியெனும்வரைப்பிற்றனித்திரியம்பகனெனவும். ௪௭

பொன்னுநன்மணியுமறுவையுமேனைப்பொருள்களுங்குவவிநான்முறையா
னன்னர்நெஞ்சுவப்பத்தானமீத்தொழுக்குநறும்புனல்வீதியாறொழுகிக்
கன்னலுஞ்செந்நெற்கானமுங்கமுகுங்கதலியும்படணைவளர்க்கு
மின்னலம்பிறவிக்கிழுங்ககழ்திரிசந்தியிற்றிரியம்பகனெனவும். ௪௮

ஒலிதழவ்கதிர்க்கும்வேள்வியினெழுந்தவுறுபுகைப்படலையினொழுக்கா
லிலகொளிபரப்புமிழைகளுந்தளிருமிளநறுக்கொப்புளித்துமிழு
மலர்களுங்கருகமாகநாட்டமலுமவளஞ்சினைக்கற்பகப்பொதும்பர்
பொலிவுறுங்கிருதுபுரத்தினில்விண்ணும்புகழ்திரியம்பகனெனவும். ௪௯

மணிபலவிமைக்குமடுக்கலங்குவடுசிந்தவால்வெடிக்கும்வன்மடங்க
றணிவருஞ்சீற்றங்கட்கடைதுளிப்பக்கதழ்ந்துதாய்த்தடக்கைமால்யானைத்
திணிபடுருவவுமத்தகங்கிழித்துத்திவளொளிநித்திலஞ்சிதர்க்கும்
பிணிவரவறியாத்திருப்பருப்பதத்தின்மல்லிகார்ச்சுனப்பிரமானெனவும்.

பரிதிவானவனைவெண்ணிலாமதியைப்படர்தருங்கொண்டலங்குழாத்தைக்
குருதிவாயுமிழப்படைத்தசைந்தாடுங்கொடிநிரைநிவந்தபொன்மாடப்
பருமணிக்குலங்கள்பாயிருள்பருகிப்பகலெனவிரவெலாங்கதிர்க்குந்
தெருள்வளர்சித்தவடமெனும்பதியிற்சித்தநாதப்பிரானெனவும். ௫௧

வாக்குதெள்ளமுதோதீஞ்சுவைக்கரும்போவடித்ததெண்டேறலோவென்ன
வாக்கியமதுரப்பாடலோடாடுமெந்நலாரவிநயத்திறத்தை
நோக்குதோறிடைந்தவிசும்பரமாதர்பொறுமையாளுந்தனருறங்காத்
தேக்குசீர்வீதித்திரிபுராந்தகத்திற்றிரிபுராந்தகப்பிரானெனவும். ௫௨

புன்புலைக்குலத்தோருலகமரொழுக்கம்புறந்தராவிழுதையரேனு
மன்பினராகியொருபொழுதடுத்துப்போற்றுவராயிடினவர்க்கும்
வன்பழமலங்கண்முழுவதுந்துமித்துமாலயற்கறிவருமுத்தி
யின்பருளிராசபுகேந்திரவரைப்பினிலங்குமார்க்கண்டேசனெனவும். ௫௩

தாதவிழ்மலருஞ்செழுங்கனித்திரளுஞ்சலசலவெனப்புனலுகமென்
போதவிழ்ந்தன்னக்குருகினமோம்பிப்பொழிகதிர்நித்திலங்கொழிக்குஞ்
சீதளநறுநீர்நிலையினின்றெழுந்தசேலினம்பசும்பொழிற்சினைகண்
மோதுகாளேசத்திருநகர்வரைப்பின்முத்திநாதப்பிரானெனவும். ௫௪

காதளவோடிமணிக்குழையிடறிக்கருவரிசெவ்வரிபடர்ந்து
போதெனப்பொலிந்ததிருமுகத்துழலும்பொருகயற்கண்ணினுலிளைஞர்
மாதர்மெல்லுயிரையுண்டுமீட்டுமிழாமடநலார்வண்டலாட்டயரும்
வீதுதைபொதும்பர்ப்பட்டசவரைப்பின்வீரபத்திரப்பிரானெனவும்.

இலம்பகமிலைந்தநறுங்குழன்மடவாராங்குதோறீண்டினர்நடிக்குஞ்
சிலம்பொலியெழலுங்கடன்மடுத்தெழுந்தசெல்லினமுழக்கமென்றுவந்து
குலம்படுதோகையயிலினமெழுந்துகுழாங்குழாமாய்நடங்குயிற்று
மலம்புதேம்பொழில்சூலம்புரவரைப்பினருட்பிரமேசனேயெனவும்.

விழைதருமிளங்காறண்மையுமணமும்விரவிவந்துலாவுமாபடுத்த
புழைவழிநுழைந்துபானிலாமதியம்பூவணைக்கலவிசெய்துறங்கு
மழைமதர்த்தடங்கண்மங்கையர்வதனவனப்பெலாங்கவர்ந்துகொண்டிறப்பத்
தழைமணிமாடமோங்ககிலேசத்தலத்தினிற்சருவனேயெனவும். ௫௭

உரைதடுமாறவென்புநெக்குருகவுடலெலாமென்மயிர்பொடிப்ப
விருவிழியுறைப்பவுள்ளகங்குளிர்ப்பவிணைக்கரஞ்சிரமிசைமுகிழ்ப்பப்
பெருகியவன்பிற்பணிந்தெழுந்தேத்தும்பீடுயரடியவர்க்கெல்லா
வரமுமுய்த்தருளுநக்கமேசத்தின்வயங்குசீர்நிவிர்த்தனேயெனவும்.

கோங்குறழ்முலையார்புறந்தனர்தணப்பக்கொம்மெனவாடவர்பற்றி
வாங்கியபருமவடங்கள்கண்பரிந்துசொரிந்தபன்மணிக்குலஞெமிர்ந்து
பாங்கெலாமிரவியொளிதபவிமைக்கும்பருவரைமாளிகைவிசும்பி
னோங்கியசெப்பிரேசத்துத்திரிசூலாங்கவும்பர்கள்பிரானெனவும். ௫௯

கொடுங்கதிர்ச்சாலிகுறைக்குநர்பின்றைத்ததும்பியதண்ணுமைவெருவி
நெடுஞ்சிறகாலகிமிர்தலைநாரைபீலியிற்பிளிறிநீள்கோட்டுத்
தடஞ்சினைப்பொதும்பர்க்குடம்பையிற்சேக்குந்தண்பணையுடையுடுத்தகன்ற
விடம்படுவளத்தவெழிற்கரவீரத்தினிதமாகபாலியேயெனவும். ௯0

விடுசுடரிமைக்குமணிபலகுயின்றுவில்லுகும்பொலங்கதிர்மோலிக்
கடவுளர்குழாங்கள்கடிகமழ்வானக்கற்பகக்கொழுந்துணர்ச்செழுந்தேன்
மடலவிழ்மலர்கடூய்த்தொழுதிறைஞ்சிவந்தனைபுரிந்தருள்வாய்ந்து
கொடுமலமிரிக்குமேமலிங்கத்திற்குடிகொளுங்காளனேயெனவும். ௯௧

முருந்துறழ்முறுவற்றொண்டையங்கனிவாய்முகிழிளமுலைமயிற்சாயற்
றிருந்தியவன்னநடைமடமாதர்சீறடியூட்டுசெம்பஞ்சி
பொருந்தியசுவட்டுக்கோலஞ்சித்திரித்தாற்போன்மெனதொளிர்மனைதோறும்
விருந்தயர்சிறப்புமிக்கமாகேசநகர்வயிற்றீர்த்தனேயெனவும். ௯௨

நவிறருமமைநூலரிறபவோதிநலப்பொருடெளிந்தவந்தணர்செ
யவிபடுவேள்விக்கைந்துமீத்தருளுவானினம்படர்தொறுஞ்செருத்தற்
குவிமுலைசுரந்துபொழிநறுந்தீம்பால்குரைநதியெனத்தெருவொழுகுஞ்
சவிமணிமாடக்கராகளநகரந்தன்னிடைநகுலனேயெனவும். ௯௩

வெள்ளைநோக்களிக்கும்பிள்ளைமைப்பருவமிளிர்நகைமழலைமென்கிளவி
யொள்ளிழைமடவாரழுதழுதிரங்கவொளிர்மணிச்சிற்றின்மேற்கடவுந்
துள்ளுமான்சிறுதேர்மகாரினந்தம்முட்டொடாக்கமருடற்றுதனோக்கி
நள்ளலர்பனிக்குந்திமலமரேசநகர்வயிற்குமாரனேயெனவும். ௯௪

கருமுசுக்கலையெயுதிரெதிருகளக்கவிழ்சினைமலங்கிமிக்குகுத்த
பெருகுதீஞ்சுவையுமாங்கனிவருக்கைப்பெருங்கனிவாழைமென்கனிக
ளிருவிலாப்புடையும்வீங்கவாய்மடுத்தூண்டிளங்கருமேதிகண்படுக்குந்
தருநிரைப்பொதும்பர்மொய்த்தெழுஞ்சத்தாதியெனுந்தலத்திமனெனவும். ௯௫

பொங்கொளித்தரளம்புறங்கொடுத்திரியப்பொழிகதிர்வாணகைத்துவர்வாய்
மங்கையர்குடைந்துதுளைதலாலவர்தமலர்க்குழன்மான்மதச்சாந்துங்
கொங்கைபங்குவட்டுக்குங்குமக்களியுங்குலாவியோசனைபலகமழும்
பங்கயவாவியுடுத்ததேவிகைப்பொற்பதிவயினுமாபதியெனவும். ௯௬

தீட்டுமோவியர்தங்கருத்தினுக்கடங்காச்சிற்றிடைப்பணைமுலைமடவார்
கூட்டரக்கணிந்தசீறடிப்பதுமங்குராற்றலைவண்டினம்பொங்கச்
சூட்டினரிரப்பப்புலவிதீர்ந்தணையிற்றுணைவரைப்பின்னிவேள்பகைமை
வாட்டுமாளிகைமிக்கோங்கியவெழினேவாளத்திற்பசுபதியெனவும். ௯௭

அறநெறிதிறம்பாதரும்பொருட்பனுவலாரணமுள்ளவாதெளிந்து
முறுகியகழுமமூட்டுமுக்குறும்பின்முதறுமித்திடைதெரியாத
பிறவிவேரறுக்குமுழுவலன்புடையார்பேணியெஞ்ஞான்றுமேத்தெடுக்குந்
தறையகம்புகழுமருட்சலலிங்கந்தனிற்சலப்பிரியனேயெனவும். ௯௮

துடிமருண்மருங்குற்பரந்தபேரல்குற்றுணைமுலைத்தூநகைமடவா
ரிடிமருளியங்களியம்பநாடகங்களியற்றவார்கூந்தலின்வீழ்ந்த
வடிமலருகுத்ததேறலுந்தாதும்வயின்வயின்கிடந்தொளிர்வீதிக்
கடிமணங்கமழுங்கன்னிகாரத்திற்கனுத்தியக்கப்பிரானெனவும். ௯௯

வளர்சினைக்கொழும்பூங்கற்பகப்பொதும்பர்மணித்தழைபுழைக்கையின்வாங்கி
யளறுபட்டொழுகுமதக்கவுட்செறிந்தவளிக்குலமோச்சிவாய்மடுத்துக்
களகளமுழங்குங்குஞ்சரத்தொழுதிமுழைதொறுங்கண்படைகொள்ளும்
பளகறுமயிலைத்திருப்பருப்பதத்திற்பதமருள்கணாதிபனெனவும். ௭௰

அழுந்துபட்டழுங்குமழுவநீர்ப்புணரியலங்கொளிநித்திலக்குவையும்
கொழுந்துகொள்பவளக்கொடிகளும்வளையுங்கோட்சுறாக்குப்பையும்வரன்றி
யெழுந்தெழுந்தடங்குந்தடந்திரைக்கரத்தாலெறிந்தமருடற்றுநீள்புரிசைச்
செழுந்தனியிலங்கைத்திருத்தலவரைப்பிற்சம்புகேசச்சிவனெனவும்.

உரவுநீர்நாலையெல்லையினடங்கவூறியவூற்றுநீர்முழுதுஞ்
சுருசுருவெனவாய்மடுத்தபூந்தமரர்துன்றியவுலகெலாங்கருக
விரவிமேனிமிர்ந்தகனற்கொழுந்தழற்றவிரியொளிதிசைதிசைகனற்றும்
பெருகியவடவாமுகத்தினிற்கருணைபிறங்கியவனலனேயெனவும். ௭௨

அலந்தலந்தருள்வேட்டிரந்துநின்றேத்துமன்பருமளியிமிர்ந்தூது
மலர்ந்தபூந்தொடையெருத்தணிந்திறைஞ்சுமாந்தரும்வழுத்துபுதீஞ்சொற்
கலந்தபாத்தொடலைகுயிற்றிநன்கணியுங்கவிகளுங்குழாங்கொடுபோற்றப்
பொலிந்தபூதேசத்தலத்திடைவரங்கள்பொழிபற்பபூடனேயெனவும். ௭௩

பிணைந்தபைந்துளவநறுந்தொடைமார்பன்பின்மொழிந்தேவல்கேட்டுவப்ப
வணைந்தவர்தமக்குத்தண்ணருள்கொழித்துப்பிறவிதோறுங்கவரீட்டுந்
தணந்துறுவினைவேரகழ்ந்துபேரின்பச்சலதியினழுத்தும்வான்கருணை
மணந்தகோடீசவயங்கொளித்தலத்துமன்னியசிரேட்டனேயெனவும்.

அஞ்சிறையமிழ்தத்தீஞ்சுவைப்பாடலறுபதநீலமொட்டவிழ்க்கும்
பைஞ்சுனைகுடைந்துமரவுரியுடுத்துப்பளிக்குவெண்ணீறுமெய்திமிர்ந்து
துஞ்சலுமுயிர்ப்புங்கடந்தபேரின்பத்துறைபடிமுனிவரர்வாழ்க்கை
யெஞ்சுறுப்புட்பகிரிநெடுவரைப்பிலிந்திரநாதனேயெனவும். ௭௫

திண்ணியவண்டமுகட்டினுக்கிவருந்திருத்தகுமால்பெனநிவந்த
வெண்ணிலாவரையுமுரஞ்சொலிதழங்கியீண்டியகண்டிரந்துக்குங்
தண்ணியதாளக்குவையொளிகளுற்றத்தவளமால்வரையெனத்தயங்கும்
புண்ணியம்பொலிந்தகந்தமாதனநற்பொருப்பினிற்பூர்ப்புவனெனவும்.

கொங்கொளிமணியுந்தமனியத்திரளுங்கோழரைச்சந்தனக்குறடுங்
கந்தமிக்குயிர்க்குங்காழகிற்றுணியுங்கையரிக்கொண்டுவீழருவி
மைந்துடைத்திசைவெண்கரிகளுநடுக்குமண்டுபேரோதையினெருகு
மந்தரநிவந்தவேமகூடத்தினமர்விரூபாக்கனேயெனவும். ௭௭

அட்டொளிப்பவளப்பரவைநீர்ப்புணரிபகடுகீண்டெழுங்கனற்சுடரும்
வட்டவெண்மதியுந்தாரகைக்கணமும்வானெறிவந்துதன்னடியின்
முட்டமேக்கெழுந்துவயகமூன்றுமுனிதுயர்ப்படுத்திறுமாக்கு
மட்டுமிழ்சோலைமருங்குகால்வளைந்தவிந்தத்தின்வாராகனெனவும். ௭௮

சுண்ணமுமலருந்துறைதொறுமொதுங்கத்துடுபெனப்பாய்ந்துநீராடி
விண்ணவர்சிகரமாளிகைக்கிறக்கும்விளங்கிழைமாதரார்பின்னைத்
தண்ணறுங்கயத்திலோதிமவர்தந்தாட்சிலம்பொலிகவர்ந்தேகுங்
கண்ணகன்சவுராட்டிரக்கவினகரிற்சோமநாதப்பிரானெனவும். ௭௯

வேளையாட்பழிக்கும்பேரெழிலுருவமெல்லியன்மாதரார்தொடுத்த
பாளைவாய்கமுகினெடுமடற்பசும்பொனூசலைப்பட்டநின்றெழுந்த
வாளைமீனுதைந்துபரிந்துகீழ்வீழ்க்கும்வார்பொழில்படர்ந்துவானகத்துத்
தேளைமீப்பரிக்குஞ்சிறப்புவாய்சித்தர்காப்பிற்சித்தேசனெனவும். ௬௦

கறங்குவெண்டிரைகள்பிணைந்துராய்த்தவழுங்கருங்கடன்மருங்குடுத்தகன்ற
வறங்குலாம்புவியினிருட்பகையொதுக்கியலங்கொளிக்கற்றைகால்பரப்ப
நிறங்கிளர்பரிதிவட்டமுமமிழ்தநிலாமதிக்கடவுளுமுடிவும்
பிறங்குமாகாயப்பெருநிலவரைப்பிற்றுராகாலிங்கமேயெனவும். ௬௧

பப்பிதழ்க்கமலப்பொகுட்டுள்வீற்றிருந்துபார்முதலுலகெல்லாந்தோற்றுந்
துப்பமர்கடவுடொடுகடற்பாயற்றுழாய்த்தொடைச்செம்மலேமுதலாஞ்
செப்பருந்திறலார்க்கல்லதுபிறராற்செலப்படாதாகியெஞ்ஞான்று
மொப்பருவளத்தானேங்குபாதாளத்தாடகேசப்பரனெனவும். ௬௨

தண்டுளிநறுந்தேன்வெள்ளநீர்படிந்துதமனியந்தகர்த்தெனமிளிரு
நுண்டுகட்கலவைதிமிர்ந்துமெல்லிதழுணுகர்ந்துதம்பேட்டொடுங்களித்துக்
கண்டெனமதுரவின்னிசைமிழற்றிக்கடிமலர்ச்சேக்கைகடோறும்
வண்டுகண்படுக்கும்வளம்பொழிற்றீர்க்காராமத்துப்பீமேசனெனவும்.

கருமலப்பகைஞன்வியங்கொளுமாட்டுக்கடுவினைத்தூதர்களலைப்ப
வெருவியுள்ளுடைந்துசெடியுடனிகளவிழுத்தொட்க்குழந்துசோகாந்து
குருமலர்ப்படையான்கொளுத்துவெங்காமத்தழற்குளியாதசீரடியார்
மருவியேத்தெடுக்குநிரந்தரவரைப்பின்மன்னியசீதளனெனவும். ௬௪

மேகம்வந்துறங்கும்விரிதலைப்பாளைவிரைகுலாய்நித்திலமுகுக்கும்
பூகமென்பொதும்பர்ச்சூழலின்மறையிற்புல்லியவிளிமொழிமடவார்
பாகடுசெருக்கிற்களிறனூர்வரவுபார்த்தொருசிறைத்தனிநிற்கு
மாகர்போற்றிசைக்குஞ்சாகளவரைப்பின்வளர்யபர்த்தீசனேயெனவும்.

காந்துபொன்றகர்த்தபராகமேற்சிதர்ந்தகாட்சியிற்றிதலைபூத்தலர்ந்த
வேந்திளமுலையார்கந்துகம்புடைக்குமேர்குலாமாட்டினைநோக்கிப்
பூந்துணர்ப்பொதும்பர்மந்தியுநரந்தப்புதுக்கனிப்பந்தடித்தாடுந்
தேந்தவழிடபவரைப்பெருந்தலத்திற்றிருசியேசப்பிரானெனவும். ௬௬

குணைபுனற்றரங்கங்குரூஉமணிகொழித்துக்குளிர்மலரலைக்குநீளிலஞ்சிக்
கரையகங்கவின்றவிணர்ப்பசுங்காஞ்சிக்கடிமலர்கருங்குயில்குடையத்
தரையுகுநிலச்செழுந்துகளுளர்காறகர்ப்பமீப்பொங்கியெண்டிசையும்
விரைகமழ்ந்தொளிருஞ்சுசீந்திரவரைப்பின்விசுவசாக்கியப்பிரானெனவும்.

அஞ்சனவரைகடலைத்தெனக்கூடத்தருந்தொடர்த்தொட்கியவேகக்
குஞ்சரமுழக்குக்கெதிரொலிர்மறலிக்கொடிநிரைமாடமேற்றவழு
மஞ்சினமுழக்குமணிநெடுவீதியின்வயின்மகரிமுழாவுரப்பப்
பஞ்சின்மெல்லடியார்நாடகங்குயிற்றும்படிகையிற்பரமேசனெனவும்.

நறவுகொப்புளிக்குந்தாளதாமரையினறிதழ்கிழிதரவுகளு
மிறவுகொப்புளிக்குந்தீர்த்தநீராடியிலங்குவெண்ணீறுமெய்தோய்ந்து
துறவுகொப்புளிக்குமனங்கொளாவன்பிற்றுன்னியேத்தெடுக்குமாதவத்தோ
ருறவுகொப்புளிக்குமொண்மைசால்கருவாச்சிரமத்திற்கருவேசனெனவும்.

துண்டவான்மதியிற்சுடர்ந்தவாணுதலார்துவன்றினர்கொழுநனைச்சோலை
வண்டலாட்டயர்ந்தவயின்வயினவர்தமணிமுலைச்சாந்தமுந்தொடியுங்
கொண்டனேர்கூந்தற்றொடலையுங்கிடந்துகுறுகியவிளைஞரைத்தணத்தல்
கண்டிடாவியப்பிற்கவி ... சிகண்டிதனிற்சி ... கரனெனவும். ௬௰

சங்கினமுயிர்த்தநித்திலம்வரன்றித்தமணியங்கொழித்துவார்ந்தொழுகிக் [ம்
கொங்கலர்ப்பொதும்பர்ச்சுண்ணமுந்தளிருங்குலாய்த்துறைதொறுமெழில்கஞற்று
பொங்குவெண்டரங்கமுகலியாறடிக்கட்போர்ப்பநீண்முடிக்கண்வான்செழுநீர்க்
கங்கைபோர்த்தொளிர்தென் கயிலைமால்வரையிற்காளத்திநாதனேயெனவும். ௬௧

குளிர்புனற்சீவிப்பசும்பயிர்க்கிளைத்தகொழுங்கலைகட்பவந்தணையு
மிளிநறுங்கிளவியுழ்த்தியர்வாக்குமிளநருத்தேறல்வாய்மடுத்த
களமர்களவரோடளவளாய்ப்பொதும்பர்க்கடிநிழற்பயின்றுபண்பயிறறும்
வளவயலுடுத்துவயங்குபாசூரின்வாசிலிங்கப்பிரானெனவும். ௬௨

உடுவணிகுடுமிப்பெருவரைக்கரிகளொலிகெழுநறும்புனற்பழன
நெடுவயற்கருப்பங்காடமூத்தருந்திநிறைமலர்ப்பூந்தடமுழக்கித்
தொடுகடன்முகந்துகருமுகிறவழுந்தூறுடைக்கானகத்துறங்கும்
வடுவறுதவத்தோர்வழுத்துசீராலங்காட்டினில்வடேச்சுரனெனவும்.

காந்தளஞ்சிலம்பிற்சரிக்குமால்யானைக்கதிர்மணிக்கோடுகொண்டெறிந்து
தேந்துணர்த்தருக்கண்மலர்மணிகனகத்திரள்சுழித்துந்திவார்கரைக
டாந்திரைக்குலத்தாலிடித்திரைத்தொழுகுந்தடம்புனற்பாலியின்மருங்கு
வாய்ந்தசீர்விரிஞ்சைமாநகர்வரைப்பின்மார்க்கசகாயனேயெனவும். ௬௪

நறுந்தழையுடுக்கைநிதம்பமால்யானைநகைமருப்பீர்ந்தகோற்றொடிக்கை
மறந்தழைபடைக்கட்கொடிச்சியரிளமைமகளிர்களுணங்குவாலறைக்க
ணிறந்தழைதினைகள்கொறிப்பமுன்றாவிநெடுஞ்சிறைமஞ்ஞைபைங்கிளிகள்
புறந்தருநீர்மைபிறங்கியபூர்வாசலத்தின்மாசம்புவேயெனவும். ௬௫

முடையயில்கயவாய்க்கூருகிர்த்தடந்தாண்மொய்யெறுழ்க்கொடுவரிப்புலியு
மடைந்திறந்தொழுகுங்கலுழிமும்மதத்துமணிமருப்பொருத்தலுமறலி
யிடைதராதுடற்றுஞாட்பிடைக்கிடந்தவெரிமணிதசர்ந்தநுண்பொடிபோய்த்
தடையவிண்மதிர்க்குந்திருக்கழுக்குன்றிற்சந்திரசேகரனெனவும். ௬௬

மோழலங்கருமாக்குழுவுமொய்க்கிடையாமுழுவுமாத்திரள்களுமெதிர்ந்து
கேழலர்ப்பொதும்பர்ச்சினந்தமருடற்றக்கிளர்ந்தபேரோதையைவெரீஇயச்
குழலினுறங்குந்திருகுகோட்டிரலைத்தொழுதிமிக்கிரியல்போயொளிக்கு
மேழலங்குலகமிறைஞ்சஞமலையினத்திகிரீசனேயெனவும். ௬௭

சூழித்தோற்குலமுங்கலினவார்ம்பரியுந்தூண்டிவந்தரையர்கணிரிய
மூழித்தேந்தொடையுங்கனகமுமணியுமுழுவதுமணிந்துவானளக்கு
மாழித்தேருருளுமகன்மணிவீதியகமெலாமலங்குவெண்ணீற்றுப்
பூழித்தோளடியார்போற்றுமாரூரிற்புற்றினந்தீசனேயெனவும். ௬௮

அள்ளிதழ்க்கமலம்பூத்தரக்கெறிந்தவகவிதழ்க்குமுதம்வாய்நெகிழ்ந்து
வள்ளைகள்படர்ந்துகயலினம்பிறழ்ந்துவாளைமீன்றாவிமுத்தலங்கித்
தெள்ளிசைச்சுரும்பருளர்ந்துநோக்குநர்தஞ்சிந்தையைக்கவர்ந்துகொள்கயங்க
ணள்ளுஞ்வெண்காட்டுநகர்வயிற்பத்திப்பிரியநற்பெருந்தகையெனவும்.

கொங்கொளிர்த்தரளக்குருஉமணியிமைக்குங்கொழுதிரைக்க ள்முகட்டொளிருஞ்
செந்துவர்க்கொடிகள்வேட்டவரெள்திற்கவர்தரச்சேணிவந்தோங்கும்
கந்தமாதனத்துக்கவிழ்சினைக்கோட்டுக்காழகிற்றருத்தொறும்பருஞ்
சுந்தரம்பொலிந்தசேதுவிலிராமேச்சுரத்தனிச்செம்மலேயெனவும். ௧௦௦

அழிபுனற்புணரிகுறையவாய்மடுத்துண்டார்த்தொளிவிறப்பமின்கான்று
பொழிமழைத்துளியும்புரிமுரசுக்குடைந்தபூஞ்சினைமலர்த்திரளுகுக்கும்
கழிமதத்துளியும்வேற்றுமைதெரியாக்காவுவிண்ணிவந்துபல்வளனும்
தழுவியவழுவூரெனுந்திருப்பதியிற்சம்புநாதப்பிரானெனவும். ௧௦௧

ஏதமல்கிருண்முற்றிரித்துவீட்டிருத்துமிருவினையொப்புவாய்பருவ
மேதகவடுத்தமாதவத்திறத்தோர்விரைமலர்க்கருங்குழற்செவ்வாய்ப்
போதனநெடுங்கண்மனைவிபொன்னிலமும்பொருக்கொவகத்தினிற்றுறச்
சாதலினிறைஞ்சும்வியாக்கிரவனத்திற்கருணைசெய்பர்க்கனேயெனவும்.

தேம்புநுண்மருங்குற்சிதாரிநெடுங்கட்டிதலைவெம்முலைமடமாத
ரோம்பியகலவிப்பூசலிற்கோலைவழியாளிவடங்கண்பரிந்துக்க
தோம்பரிந்துயர்ந்தபல்வகைமணியுஞ்சுடர்ந்துவானுடுவெனமருளப்
பூம்பசுங்கிரணமாடமோங்காதிபுரிவயிற்சிவபிரானெனவும். ௧௦௩

சங்கினமுழங்கும்பொய்கையம்புனலிற்றாளிர்க்கையிற்சங்கினமுழங்கப்
பொங்கரிவிழியாராடலுமெழுந்தபூந்திரையாங்கவருகுத்த
குங்குமச்சேறுமான்மதச்சாந்துங்குப்பையாய்த்துகள்படுந்துறைகண்
மங்கலம்பொலியக்கழூஉந்திருப்பவளவனத்திற்சோமனேயெனவும். ௧௦௪

இளவனத்தொழுதியிறவுதேர்ந்தருந்துமீர்ம்புனற்செழும்பணைதோறுங்
களமர்கள்விளைக்கும்பசும்பயிர்க்கிளைத்தகடிமலர்க்கொழுங்களைமுழுது
முளர்சுரும்போதியுழத்தியர்களைந்தங்கோச்சியகுப்பைநீண்மலையின்
வளர்திருமல்லநகர்வயிற்சோமபூடணவள்ளலேயெனவும். ௧௦௫

மாழைவாண்முகத்துமடநலார்தகரமணிக்குழன்மடுக்கும்வார்புகையும்
பூழைவாய்திறப்பமிக்கெழுங்கமழூட்டுபொன்மாளிகைப்புகையுங்
காழிலூணமைக்குமட்டில்வாய்ப்புகையுங்கஞலிவிண்ணிவந்துமாமேருச்
சூழும்வாள்கரக்கும்யூதிகாத்துவாரப்பதிவயிற்றார்ச்சடியெனவும். ௧௦௬

ஆலைபாய்களமர்திரட்டியதிரளையள்ளிவாய்மடுத்துறுங்கடுவன்
சோலைவாய்ச்சிலதரிருலழித்தமைத்ததூக்குடத்தேறலும்பருகி
மாலைவாய்மாடமேனிலத்திவர்ந்துமந்தியையிறுகுறத்தழுவி
யேலவான்கலவியின்பமீக்கிளைக்குமதுரையிற்சுபகனேயெனவும். ௧௦௭

த்தாளதாமரையின்வயிறுளைந்தலறிச்சங்கனங்கருவுயிர்த்தடத்து
வாளைபாய்ந்தெழுந்துபன்முறையலைப்பமலங்கிவானின்றுமண்ணுக்க
கோளெலாம்பொய்தன்மடந்தையருகுத்தகுருஉச்சுடர்மணியொடும்விரவி
நாளுமேர்பிறங்குங்காவுசூழ்நாகீச்சரத்துநாகேச்சரனெனவும். ௧௦௮

நெருப்பவிர்ந்தனையநெட்டிதழ்க்காந்தணிரைநிரைமலர்ந்ததாழ்வரையி
னுருப்பொலிந்தெழுந்தபசும்பொழிற்றருவிஞெண்மலர்மடைதிறந்தொழுகு
மருப்பெருந்தேறன்மணிபலவரன்றிவயங்குவீழருவியோடிழியுந்
திருப்பொலிகுவட்டுத்திருச்சிராப்பள்ளிவரைப்பினிற்சிலேசனேயெனவும். ௧௦௯

உடைதிரைகறங்குமோதையின்வெருவியும்பரினெழுந்தசெட்டுடன்மீன்
கடவுளர்படிமந்தாகினிவிழுந்துகங்கைநீர்த்திரையினும்பயந்து
வெடியெழுந்தண்டமுகட்டினைப்பொதிர்த்துமேக்குறவுருவியப்புறத்து
நெடுவனத்துகளுந்தடம்பமெயூரகிருத்தத்தில்வாகீசனெனவும். ௧௧௦

பெருகுவெங்கராடக்கடம்பொழியொருத்தல்பிளிறியபேரொலியவியக்
குருமணிச்சிகரமாளிகைதோறுங்குரைத்தெழுங்கடிவினைத்திறத்துத்
திருமலிமுரசத்திரளுமிழோதைதிரைகடற்சும்மையோடிகலு
மருமணவீதியொழுகுசித்திதியின்வளர்கத்தீசனேயெனவும். ௧௧௧

கோற்றொடிக்கறங்கமேகலையலம்பக்குழற்கருவண்டினமொலிப்பக்
காற்றலைச்சிலம்புசிலம்பவேர்பொடிப்பக்கன்னியர்சிவிறியினிறைமு
வேற்றனர்தம்முண்மறலிமிக்கொழுக்குமீர்ம்பனிக்குங்குமச்சேறு
மாற்றருவீதிமணங்கமழ்சத்திவனத்தினிற்சுபவுவேயெனவும். ௧௧௨

தூம்புபட்டுகெந்துபலவரைதழுவிச்சுடர்மணித்திரணரன்றுகுக்குங்
காம்பினங்குழையக்கவிழ்கடாங்கமழுங்கையினல்வாங்குபுவிடுத்தங்
காம்பலாட்டயருமருவியங்குவட்டினவிர்மணித்தோகைமாமயில்க
டாம்பயின்றுடறணந்துருக்காரிசயிலத்துவாலீசனெனவும். ௧௧௩

மந்திகளுகளுஞ்சந்தனப்பொழிலின்மாதவர்தேர்தொறுங்கேட்டுக்
கொந்தலர்ச்சினையிற்பைங்கிளிகிளக்குங்குளிர்மொழிச்செந்தமிழ்முழுது
மந்தரர்பயின்றுவழங்கலாலமரருலகமுஞ்செந்தமிழ்நாடாய்ச்
சுந்தரம்பொலியுந்தூமணிப்பொதியவரையிற்சீபத்திரனெனவும். ௧௧௪

சேடுவாயரவச்செழுமணிவரன்றித்தேங்கிருட்பொதும்பரினகத்துத்
தோடுசூழ்விளக்கினுறுத்திமென்மலருஞ்சுண்ணமுந்துதைந்துவார்ந்தொழுகி
யாடும்வாளரிக்கணங்கலார்கூந்தலணிந்துலாங்குகநதிக்கரையிற்
பீடுவாய்திருவோத்தூர்வயினத்தியாபகேசப்பிரானெனவும். ௧௧௫

கயின்மணிக்குழையுங்கதிர்த்தபொற்றோடுங்காம்புறழ்தோளினுன்றலைந்து
வெயிலுமிழ்ந்திலங்கும்வார்செவிமடவார்மிழற்றுதீங்கிளவிகடேர்ந்த
புயலுகள்பொதும்பர்ப்புதுமலர்ச்சாகைப்பூவைகள்கிள்ளையைப்பயிற்று
முயர்மகாப்பிரபைநகர்வயிற்செகலாபப்பெயருத்தமனெனவும். ௧௧௬

பலியினுலழற்றும்பசிப்பிணியிரவும்படரொளிமன்றுகாட்சியினு
ணலியவேழுழுக்குமாணவவிரவுநகைமணிமாளிகைப்பொருப்பா
லொலியிருட்பிழம்புதூங்குகாரிரவுமோம்பிமெய்யருண்மயமாகி
யிலகுறும்புண்டரீகமாபுரத்திலேமசபாபதியெனவும். ௧௧௭

கடலெனமுழங்குமுரிதிரைப்பணிப்பூங்கயமெடுத்தோர்ச்சும்வால்வளையின்
சுடர்மணித்தொகையும்பகடுபோக்கியநெற்றூற்றலின்வேறுபட்டொதுங்கி
யடர்தருசெந்நென்முத்தமும்வயின்றேறவிரொளிவிண்ணகங்காறும்
படர்பரமேசமங்கலவரைப்பிற்பஞ்சநதீசனேயெனவும். ௧௧௮

பொறிவரிச்சுரும்பர்புரிமுறுக்குடைத்துப்புதுநறும்பருகியாடயருந்
துறுமலர்ப்பொதும்பர்சுடர்வெயிறுமியப்பொதுளிலாற்றாங்குபேரிருளைப்
பறைதரவொதுக்கிப்பாயொளிகதிர்க்கும்பன்மணிமாளிகையுடைத்தா
யிறைமைபெற்றோங்குங்கச்சியேகம்பத்தேகம்பநாதனேயெனவும். ௧௧௯

சிறந்தெடுத்துணாக்குமினைய நூற்றிருநாற்றலத்துளுஞ்சிறந்ததாம்பாவ
மறந்தபழுருக்கிமுத்திவீடெளிதின்வழங்குசீர்க்காஞ்சிமாநகர
நிறந்தழைமதியமலேத்தவரவ்வத்தலங்களினிகழ்தரப்பரித்த
வறந்தழைபெயருளதிகமாயோங்குமேகம்பநாதனென்றருட்பேர். கஉ0

எண்ணியதெதுமற்றஃதலால்வேறொன்றெய்துறுதெழில்வளரோனைப்
புண்ணியதலத்துவதிந்தருள்புனிதமூர்த்தியைப்போற்றுவார்தமக்குக்
கண்ணியதலத்துநால்வகைப்பொருளுங்கணத்தின்வந்தெய்துறுங்காஞ்சி
யண்ணலந்தலத்துமுளைத்தவேகம்பநாதனையன்பினைத்துநர்க்கு. கஉக

வைத்தவேற்றடக்கைவள்ளல்வார்கம்பைமணிப்புனைதிக்கரைமருங்கு
பத்திவாய்ந்திறைஞ்சியேகம்பநர்தப்பவனிடைக்குருமொழிகேட்டுத்
தத்துநீர்வரைப்பின்மேதகுங்காஞ்சித்தனிநகர்காவல்பூண்டின்ப
முத்தியீந்தருளுங்குமரகோட்டத்தின்முகிழ்த்தபேரருளின்வீற்றிருந்தான். கஉஉ

இளநறுந்தளிர்கடுவென்றிமட்டுகுக்குமிணர்ப்பசுமாவடியமர்ந்த
வளவிடற்கரியார்பெருமையையொருவர்க்களவிடலாகுமேயிமைக்கு
மொளிமணிகுயின்றசிகரமாளிகைசூளோங்கியகச்சபாலயத்துச்
களைகணுயருளுங்கச்சபாலயர்தமேன்மையைக்கட்டுரைக்கிடுவாம். கஉங

கலிவிருத்தம்.

பின்னுதிரைவார்ந்தொலிபிறங்குபுனல்வெள்ளம்
பன்னகமெருக்கிதழிபாசறுகுதிங்க
ளன்னவெவையுங்கலவியாரழகுதோற்றி
மின்னுகமிலைத்தமுடிவேணியவர்மேனாள். கஉச

புலத்துயர்சிறப்பருண்மறைப்பனுவல்பூத்த
நலத்தகுமனக்கொடியினானுமெறாழ்நாகக்
குலத்தையறமோதுமுவணக்கொடியினானும்
வலத்தினுமிடத்தினும்வரக்கருணைசெய்தார். கஉரு

வெந்தபொடிபூசிமிளிருந்தமதுமெய்யின்
வந்தவிருதேவருண்மலர்த்தவிசினானுக்
கந்தமில்படைப்புமரவத்துயிலினாற்கு
மைந்துடையகாவலும்வழங்கினர்மறைந்தார். கஉசா

தேக்கமலவட்டவணைசேக்குமறையாள
னாக்குதல்புரிந்துமொளிதுன்றுமுலகங்க
ளாக்கும்விரகெய்திலனிதாவதெவனென்னு
மாக்கவலையுற்றனன்மதித்திதுதுணிந்தான். கஉஎ

வஞ்சிபுரையுஞ்சிறுமருங்குமளர்வெய்த
விஞ்சியெழுபூண்முலைவெளம்புயமினாளோ
டிஞ்சியுமலர்ப்பொழிலுமெங்கணுமிவர்ந்து
மஞ்சிதவழ்காஞ்சிவளமாநகாணைந்தான். கஉஅ

காலையுநடுப்பகலுங்காய்பரிதிமாய்ந்த
மாலையுமிறைஞ்சுநர்வழுத்துதுதியோதை
வேலையொலிமிக்கவியவிம்மியெழுகச்ச
பாலயநுழைந்துபடர்பேருவகைபூத்தான். கஉகூ

தத்துதிரைவீசுதரளந்திவளுமிட்ட
சித்திநறுநீர்முறைதிளைத்தினிதுதோய்ந்து
பத்தியினழற்கையரனாரடிபணிந்து
மெய்த்தவமுயற்சியின்வியத்தகவிருந்தான். ௧௱0

மாசறுதவம்பலபுரிந்துவழியாற்செய்
பூசனையுவந்துபுரமூன்றுமொருபோதிற்
றேசவிருமூரள்கொடுசிந்தியருள்பாவ
நாசருமைமாதொடுநலக்கவெதிர்போந்து. ௧௱௧

ஆடக்கருமகிழ்ச்சியினெழுந்தடிவணங்கி
நடிக்குமலர்மெல்லணைநரைக்குடுமியானைக்
கடைக்கண்மலர்பொங்குகருணைக்கடலழுத்திப்
படைக்குமெறுழும்பிரமநன்பதமுநல்கி. ௧௱௨

மையலிரியக்கிளரும்வாணகையரும்ப
நையுமிடைநங்கைமுகநாண்மலரைநோக்கி
வெய்யபடைநோக்கிவிரைநீரினபிடேகஞ்
செய்திவணைமேதகவிருத்துமெனச்செப்பி. ௧௱௩

சங்கினமுழங்கவிசையாழ்தலைமயங்கக்
கொங்கலர்பொழிந்தமரர்கூடிமகிழ்தூங்க
மங்கலவிழுக்கலசவாசநறுநீரா
லங்கவன்முடித்தலையினாட்டியருள்செய்து. ௧௱௪

ஏசில்புவிக்கும்பரினெண்கோடிசிவலோக
வாசினகருக்கடியிற்கோடியறுநான்கி
யோசனையிற்சத்தியவுலோகமியைவித்துப்
பேசருவளத்தொடுபிறங்கவண்வைத்தார். ௧௱௫

இன்னணமலர்க்கடவுள்பூசனையியற்றி
மன்னுபதமெய்தலின்வயங்குபிரமேச
னன்னர்பிரமாபுரமெனப்பெயர்நடந்த
மின்னுசடையார்க்கும்வியன்காஞ்சிநகருக்கும். ௧௱௬

கலிநிலைத்துறை.

மணமல்கியகற்பகமாலைமணந்ததிண்டோட்
டிணிமல்குபடைக்குலிசத்திறன்மன்னனோர்நாட்
கணமல்கியவிண்ணவர்கைதொழுதேத்தவொண்கே
ழணிமல்கயிராவதமூர்ந்துலாப்போதலுற்றான் ௧௱௭

அவ்வேலையருந்தவமாற்றியரட்டுயிர்க்கும்
வெவ்வாய்மலவாளரவைத்தபவீட்டுமேலோன்
செவ்வாய்மைமிகுந்துருவாசனலர்ந்தசீர்த்தி
யெவ்வாயுநிரம்புமருந்தவனங்கணுற்றான். ௧௱௮

மறுவாய்ந்தமனத்தினனாகிமதித்திலாத
விறுமாப்பினைநோக்கியெழுந்துவெகுட்சித்துளத
தெறுதீத்திரள்சிந்துமலர்க்கணனாகிவல்லே
யுறுசாபமுறுத்தினனொய்யெனநீங்கினனால். ௧௱௯

நிறைவாய்மொழியந்தணனிட்டருள்சாபநீரா
லிறைவாய்ந்தவனீடுறுசெல்வமெலாமுலந்து
குறைவாய்ந்துநல்கூர்ந்துளைந்துகுழைந்துசால
பிறைவேய்ந்தபிரானடிபோற்றுபுபெட்டிருந்தான். கசo

காலன்றபமென்கழலாலுதைகண்டுவேலை
யாலங்களம்வைத்தமரர்க்கருள்செய்தபெம்மான்
கோலந்தழைமங்கையொர்கூறுகுலாவநின்றச்
சீலந்தழையிந்திரன்முன்னிதுசெப்புகிற்கும். கசக

துன்னுதவர்நெஞ்சுதுயக்குறுகொற்றவெள்வேன்
மன்னுமறுவற்றவருந்தவவாய்மைபூண்ட
கொன்னூர்துருவாசனங்கூற்றினோர்கூறுகண்டா
யன்னானிடுசாபமற்றொன்றினகன்றிடாதால். கசஉ

வேறு.

விண்ணத்துயர்மந்தரவெற்பெனுமத்துநீஇத்
தண்ணித்திலவேலைகடைந்தமிழ்தந்தனைநோண்
டெண்ணத்தெறுசாபமுலக்குமவ்வொள்ளமிழ்துங்
கண்ணற்கலதியாவரினுங்கடையப்படாதால். கசங

நம்மானையிருகணைநாரணனைக்கொடுபோய்
விம்மோதையினார்கலிவெள்ளமிழ்தங்கடையென்
றெம்மானருள்செய்தலுமேத்தியிறைஞ்சியேகி
யம்மாலையனைந்தவனுற்றதறைந்துநின்றான். கசச

வல்லானுயிரட்டதிறற்படைமன்னன்வந்து
சொலும்வாய்மொழிகேட்டலுமோகைதுளும்பிவல்லே
கலவாருளமஞ்சுகதிர்த்திகிரிப்படையான்
சிலைதாங்குமுபாயமென்னென்றுசிந்தித்தறிந்தான். கசரு

மோட்டாமையுருக்கொடுகாஞ்சியின்முன்னிவண்டின்
பாட்டார்மலரிட்டசித்திப்பசுநீர்படிந்து
சேட்டாரணவாகமநூன்முறைதேவதேவன்
றாட்டாமரைதாழ்ந்தெறும்பெற்றமுதங்கடைந்தான். கசசு

திருமால்கமடத்துருவாய்ச்செயிர்தீர்ந்தவன்பிற்
பெருமானடிபோற்றுமச்சூழல்பிணிக்கும்வெந்நோ
யொருவாவருளுய்த்தருள்கச்சபேசப்பெயர்பெற்
றிருமாநிலமேத்தவிலங்கியதென்றுமாதோ. கசஎ

எக்காமமுநன்கருளிட்டசித்தித்தடாக
மெய்க்காமருந்தீர்த்தமுமேதகுபூசையாற்று
மக்கூர்மவராத்துயிலான்படிந்தாடுநீராற்
பொய்க்காழ்தபுகூர்மகுண்டப்பெயர்பூண்டதன்றே. கசஅ

கலிவிருத்தம்.

குருதியம்பிழம்பிற்குளித்தாலெனப்
பெருகுசேயொளிபில்குசெழுங்கதி
ருருவவேழ்பரியொண்மணித்தேர்ச்செழும்
பரிதிவானவனுக்குப்படர்ந்தனன். கசகூ

அலவன்பேட்டெனம்புயச்சேக்கைமேற்
குலவிக்கண்படைகொள்ளுந்தொறுந்துயி
லுலேயரித்திலவொண்மணிவெண்டிரை
யலேசெயிட்டசித்திப்புனலாடினுன். கரு0

ஆலமுண்டவடிகளடிகளைச்
சீலமல்குதிறத்தினருச்சியா
வாலுமன்பினனுயிரமாண்டவட்
சாலுமெய்த்தவமாற்றித்தவிர்ந்தனன். கருக

அன்பருக்குமறைந்தருள்வள்ளலார்
பொன்பிறங்குபுணர்முலேமாதுட
னன்புசெய்யுமவன்முன்னணேந்தரு
ளின்புபொங்கவரம்பலவீகுவார். கருஉ

தோடுகொண்டசுரர்க்குழிமைத்துமிக்
காடவரட்கனலங்கியிருட்பகை
சாடுகின்றதம்மெய்யொளிதன்னிலோர்
கோடிகூற்றொருகூறுகொடுத்தனர். கருங

ஏர்த்தகாலம்பகுப்பதற்கேதுவாய்ச்
சேர்த்ததேவர்க்குமுன்னவனுய்த்திருச்
சார்த்தும்வேதவடிவாய்த்தமக்குமோர்
மூர்த்தியாம்வரமும்முகந்தீத்தனர். கருச

தந்தபல்வரத்தோடுதண்டாவகை
யந்தில்வாழவும்பெற்றவட்டன்னடி
வந்திப்பார்க்குவரந்தானளிப்பவு
மெந்தையாரருளாலெய்தினனரோ. கருரு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருள்கால்சீத்துச்செக்கரொளியெறிக்குங்கிரணச்செழும்பரிதி
பொருள்கால்யாத்தநான்முறையாலிவ்வாறிறைஞ்சிப்போற்றுதலான்
மருள்காலனுக்கிக்கதியருளுமார்த்தாண்டேசத்திருப்பெயருந்
தெருள்காலுளத்தோர்க்கள்ளுறுந்தேவரிறைவரினிதணிந்தார். கருசா

தூங்குதடக்கையொருகோட்டுத்துணைத்தாள்வேழப்பெருமானுங்
கோங்குநிகர்த்தமுலேபாகர்கொழுந்தாட்கமலம்பூசித்துப்
பாங்கிலவுணப்படைசவுட்டிப்பரவுவார்க்குவரமருளி
யாங்கமகிழ்வாலேஞ்சந்திப்பிள்ளேயெனவங்கினிதமர்ந்தான். கருஎ

செவ்வாய்மழலேத்தேன்றுளிக்குந்தேவியொருபாலிட்கொண்ட
கைவாரணத்தினுரியாரைக்கழற்றுட்கமலம்போற்றிசைத்து
மைவானனேயகருமேனிவயங்கச்சிலம்புகலகலப்ப
வெவ்வாய்ளுமலிப்பரியூருமிறையுமங்கண்வீற்றிருந்தான். கருஅ

தவளமுறுவற்கவுரியுருத்தன்னிலுயிர்த்தகன்னியுமைக்
குவளேக்களத்தார்தமைப்போற்றிக்கொடுந்தானவரைச்சினந்திறுத்துத்
துவள்சிற்றிடைப்பூண்முலேக்காமக்கண்ணிதுணைத்தாடினமிறைஞ்சித்
திவளுமணிக்கிடங்தொளிரத்தெய்வவரைப்பினினிதமர்ந்தாள். கருகூ

க்ருணைகொழித்துப்பிணிதுரக்குங்கச்சபேசப்பெருமானார்
பெருமைசிறிதிங்கெடுத்துரைத்தாமுழுதும்பேசவல்லுநரார்
பருவமுகில்கள்கிடந்துறங்கும்பனிப்பூம்பொழில்சூழ்காரோணத்
தருளானந்தப்பெருவாழ்வின்பெருமையுரைத்தெம்பவமறுப்பாம். கசு0

வேறு.

மன்னுயிர்த்தொகுதியாவுமறுகிமாழாந்துசாம்ப
முன்னொருகற்பத்தந்தமுன்னலுமதனையஞ்சிப்
பொன்னவிர்மருமத்தானும்புரைமறைப்பனுவலானு
மென்னினியுய்யுமாறென்றெண்ணினர்துணிவுகண்டார். கசுக

கழைசுழிகளிநல்யானைக்களகளமுழக்குநீல
மழைமுகின்முழக்குந்தம்முண்மாறுகொண்டுலம்புஞ்சோலை
யிழைவளர்முலைமினார்களீண்டினர்நாளும்பொய்தல்
விழைதகுங்காமபீடவியனகர்துனைந்துசார்ந்தார். கசுஉ

கூவிளமரத்தின்மாட்டுங்கோழுரைப்பலாசின்பாங்குந்
திவியசங்கதீர்த்தங்குண்டிகாதீர்த்தந்தொட்டு
மூவர்கண்முதல்வன்றன்னைமுறையுளிவழிபாடாற்றித்
தாவறுதவங்களேற்றுத்தனைப்புருவென்புசெய்தார். கசுஙு

பூசனைக்கிரங்கிமுக்கட்பூரணரெதிரேதோன்றி
யாசுநீரஞ்சல்வேண்டாவம்மினென்றவரைக்கையால்
வாசமிக்குயிர்த்தகொன்றைமலர்ச்செழுந்தொடலைபூண்ட
பூசறுமணித்தோனன்னபுயங்களினேற்றிக்கொண்டார். கசுச

இலவிதழுமையாள்பாகரியக்கியவாணையாற்றுன்
மலைபலசிதறுமாறும்வாரிதிபுரளுமாறு
முலகுமுற்றழியுமாறுமுயிர்த்தொகையொடுங்குமாறும்
விலகிவில்லுமிழும்பூணார்நோக்கிவிம்மிதத்தரானார். கசுரு

செயிர்படுகடைநாளெல்லைதீர்தலுஞ்செறிந்தவெண்ணி
லுயிர்களுக்குயிராயோங்கியுலகெலாமருளிற்றுங்கி
மயர்துமித்தின்பநல்கும்வள்ளலாார்தோளினின்று
மயர்வொழிந்தினிதுவைகுமவர்தமையிறக்கிவிட்டார். கசுசு

மறுவலுமுலகமெல்லாமன்னுதற்பொருட்டன்னோர்க்குக்
கறைதபுபடைப்புக்காப்புத்தொழின்மையுங்கருணைசெய்தா
ரிறைவரிவ்வாறுதோளிலேற்றலாலனையவைப்புப்
பிறவிநோயனுக்குங்காயாரோகணப்பெயர்பூண்டன்றே. கசுஎ

கழுதுகண்படுக்குநீலக்காரிருளிரவினுடுந்
தொழுதகையெம்பிரானார்தூமணியுருவந்தீண்டும்
பழுதிலார்க்கனையபேற்றுற்பவந்தருமல்நோய்நீங்கி
முழுதுமொர்வடிவாய்த்தோன்றிமூதுலகலைத்ததம்மா. கசுஅ

மறந்தனதானமுற்றுமபங்கினதவங்களீட்ட
மிறந்தனவிரக்கநீர்மையிழந்தனமறையினீதி
பிறந்தனகொடுமையாவும்பிறங்கினபாவக்குப்பை
விறந்தனவல்லலெல்லாம்வெருவினவுயிர்கண்மாதோ. கசுகூ

ஒழுக்கமிவ்வாறுசாலவுணங்கலுநோக்கிவல்லை
கழுக்கடைபடையார்நெற்றிக்கண்ணினவ்வடிவைநீற்றி
விழுக்குருநீற்றைச்செய்யமேனியிற்றிமிர்ந்துகொண்டா
ரழுக்கறுத்துலகமெல்லாமருட்பெருங்கடலின்மூழ்க. ௧௭௦

பஞ்சியின்மிதிக்குங்காலும்பனிக்குநூபுரமென்பாத
வஞ்சிநுண்ணிடையார்காமமயக்கறுமுனிவரெல்லாம்
பஞ்சமுத்திரையினோடுமெத்தகுப்பளிக்குப்பூதி
விஞ்சமெய்யணிந்துவையம்வியக்குமாவிரதரானார். ௧௭௧

காளகமிடற்றுமுக்கட்கதிர்மதிவேணிநாதர்
வாளுமிழனையபூதிமணியுருவயங்கப்பூசிக்
கோளறுயோகபீடத்திருந்தருள்கோலவைப்புக்
காணுநற்பெயர்மற்றம்மமாவனமாகுமன்றே. ௧௭௨

பின்பராக்கிடக்கைமாயன்பேரறிவுடையனாகி
யன்புமீக்கிளைப்பவில்லத்தடியிலாயிரமாண்டாரா
வின்பமேவடிவாய்த்தோன்றுமிலிங்கத்திற்பூசையாற்றி
யென்புநெக்குருகமுன்னின்றேத்தினன்மறைநூல்கொண்டு.

நினைப்பதேவாயிலாகநெஞ்சகங்கோயில்கொள்ளு
மனைத்துமாய்நிறைந்தசோதியமலனார்திருமான்முன்னர்க்
கனைத்துவண்டுளர்ந்துமூசிக்கமழ்நறுந்தேறன்மாந்துஞ்
சுனைக்கருநீலவாட்கட்டோகையோடினிதுதோன்றி. ௧௭௪

திருவருட்பார்வைநல்கிச்செயிர்தபவுலகமூன்றுங்
கருணையிற்புரக்குங்காவற்கருந்தொழிலளித்துவார்ந்து
பொருதிரைசுருட்டும்வேலைப்புணரிநீர்ப்பரப்பிற்றோன்று
மருமலர்க்கமலமாதைச்சத்தியாமணப்பநல்கி. ௧௭௫

சத்தியவுலகிற்கெட்டுக்கோடியோசனையின்மேலா
லத்தனார்சிவலோகத்துக்கவையிரட்டியின்கீழாகத்
தொத்தொளிமணிகள்பம்பிச்சுடரும்வைகுண்டலோக
மொய்த்தசீர்முகிழ்ப்பவாக்கிமுழுமணித்தவிசினேற்றி. ௧௭௬

விரைகுலாங்கங்கைநீரான்மேதகவபிடேகித்துப்
புரைகுலாமதிகாரங்கள்போதவுய்த்தருளிச்சூழ்ந்த
நிரைகுலாந்தேவரெல்லாநிரந்தடிவணங்கச்செய்துந்
டிரைகுலாந்தெய்வமாயைதன்னையுமுதவினாரால். ௧௭௭

மாதர்வாள்விழியிற்கோட்டும்வண்டுளத்துளவத்தண்டார்
மாதவன்றொழுதிவ்வாறுவளங்கதிபெற்றுவாழ்ந்தான்
மாதுளங்கனிகடேர்ந்துமந்திகளுகளுஞ்சோலை
மாதர்வண்காஞ்சிவிண்டுபுரமெனும்வழக்கிற்றாமால். ௧௭௮

அன்னவன்பூசையாற்றுமருட்சிவக்குறிக்குநாம
மன்னுசார்ங்கீசனென்னவையகமூன்றுமோது
மின்னதாலிறைவர்காயாரோகணப்பெருமையிப்பான்
மின்னுமேற்றளியின்வைகும்விமலர்தம்பெருமைவிள்வாம். ௧௭௯

கலிநிலைத்துறை.

நிலவுவாணகைமடந்தையர்நித்தலும்பொதும்பர்க்
கலவமாமயிலுடங்கண்டுகண்களிக்கு
மலகிலாதசீர்க்கன்னிகாப்பணிநகர்வரைப்பி
னிலையவேற்படைக்கடவுளாரிருக்கையின்மேனாள். ௧௮௦

பொற்றதாமரைக்கிழவனும்புலோமசைமடந்தை
முற்றிலாவிளமுகிழ்முலைதிளைக்குமன்னவனுங்
கற்றைவார்சடைமுனிவருங்கடவுளர்பலரு
மற்றுளோர்களும்வந்தொருவேள்வியாற்றினரால். ௧௮௧

விரைக்குந்தீம்புகைவின்னெலாம்பரவவாகுதிக
ணிரைக்கும்வேள்விசெய்சாலையினிரந்தவர்பலவு
முரைக்கும்வார்த்தையிலொருமுதன்மாயவனென்றும்
பரைக்குநாயகனேயென்றும்பன்னினர்கலாய்த்தார். ௧௮௨

கணங்கொடார்த்துவட்காமரனெக்கதுக்கலாம்விளைத்துப்
பிணங்குபெற்றிமைநோக்கியப்பிணக்கினைத்தவிர்ப்பத்
துணங்கையாடிவன்பேய்க்கணந்துவன்றவெஞ்சூர்மே
னிணங்கொள்வேற்படைவிடுத்தவன்கருணையினிகழ்த்தும்.

பெருகுமாமறைப்பொருளெலாம்பிழைதபவுணர்ந்தும்
திருகுநெஞ்சினர்போற்கலாம்விளைக்கும்புன்றிறத்தீர்
பொருதலீரிதுகேண்மினம்பொருவருந்தலைவன்
மருவலார்புரமனலினுக்கூட்டியவள்ளல். ௧௮௪

அறிவனாகிமற்றறிந்திடப்படுபவனாகிச்
செறியுமண்டகோடிகளெலாஞ்செறிபவனாகிப்
பிறிவிலாதவைந்தொழிலையும்பேதுறுதேவர்க்கு
நெறியினாற்றுறுநிருமலனாகுமவ்வீசன். ௧௮௫

ஈசன்மாட்டிளமகவெனப்பிறப்பவனிணர்ப்பூங்
காசைபோனிறமேனியானரன்கடைக்கணிப்பத்
தேசுலாவுமைந்தொழிலினுளொருதொழில்செலுத்தி
மாசுதீர்ந்தவனானந்தவடிவினின்மறைவான். ௧௮௬

ஆதலாலரனரியெனுமவர்க்குவேற்றுமையின்
றோதுமாறுநீர்காணவுமுக்குவலென்று
தீதிலாதமால்வருகெனச்சிந்தையிற்படர்ந்தான்
காதன்மீக்கொளவாங்கவன்கதழ்ந்துமுன்னணைந்தான். ௧௮௭

பித்தர்போலிவர்பிதற்றியதிஃதுமற்றிதுயான்
வித்தகம்பெறநொடிந்ததென்றுள்ளவாவிளம்பி
மைத்தமேனியாய்மழைக்களத்திறைவனைமனத்திற்
பத்தியாற்படர்ந்தாங்கவனாகெனப்பணித்தான். ௧௮௮

நன்றுநாயகவெனவுளநலக்கவானந்தத்
தோன்றிவேறறக்கலந்துமேன்முகமுறவிருந்து
மன்றுளார்திருவருளினான்மான்மழுமுதலாம்
வென்றபேரொளிச்சிவவடிவெய்திமேதக்கான். ௧௮௯

கண்டயாவரும்விம்மிதக்களிப்புமீக்கிளைப்ப
மண்டிவீழ்விழிவார்புனற்குளித்தனர்மம்மர்
கொண்டசிந்தையைத்தணந்தனர்குரூஉமதிமிலைத்த
வண்டநாயகர்தலைமையேதலைமையென்றறிந்தார். ௧௬௦

அட்டரூபமுந்திருவுருவாகவாழ்ந்தருளு
மட்டுவார்குழன்மலைமகள்கொழுநரம்மாலை
விட்டிடாததந்திருவுருவாகவீற்றிருந்தார்
கட்டுமாமலமுயிர்க்கெலாங்களைந்தருகருத்தான். ௧௬௧

கூற்றைவென்றவரின்னணமமர்ந்தகொள்கையினா
லேற்றமாய்த்திருமேற்றளியெனப்பெயர்போய
தாற்றல்சாலயில்வேற்படையண்ணலார்சிவமாய்த்
தோற்றிமாயவனிருந்தவத்துகளிலாத்தானம். ௧௬௨

இறைவன்மாலெனுமதத்தினெறுழ்மனவிரும்பு
மறியுமாறுமிக்கமாவிடுமத்திகையாகு
மறவனூர்திருமேற்றளியரும்புகழிதுவா
னெறிகொளிந்திராலயத்துமாநிமலர்சீருரைப்பாம். ௧௬௩

தரளமாலிகைதூக்கியதனிக்குடைநிழற்ற
வரவவல்குலாரிருபுறங்கவரிகாலசைப்ப
விரவுபன்மணித்தவிசின்வீற்றிருந்துவிண்ணாடு
புரவுபூண்டதோட்பொலங்கதிர்த்தாரினான்மேனாள். ௧௬௪

மல்லலோங்கியவிந்திரபதம்பெறமதித்துச்
செல்லறுதுகண்படுக்குமென்சினைப்பொழிற்றளிர்த்த
பல்லவங்கள்வாய்க்கொழுதுகோகிலங்கள்பண்பயிலுஞ்
சொல்லருங்கவின்காஞ்சியைத்துனைந்துசென்றடைந்தான். ௧௬௫

உழுந்துமாத்திரைநீர்முகந்துண்ணினும்பவநோய்
விழுந்துசேணிடையிரிதரமெய்ப்பயன்விளைக்கு
மழுந்துபட்டகம்பாநதியாடியேகம்பக்
கொழுந்துவெண்மதிமிலைச்சியகோனடிபணிந்தான். ௧௬௬

நெட்டராப்பயிலுலகமுநெடுங்கணிற்காணக்
குட்டவாவியொன்றகழ்ந்துமற்றதனிடைக்கொழுந்தேன்
மட்டுவார்ந்துவண்டினங்குலாமாழையங்கமல
வட்டவாய்மலர்மலர்தரநிருமித்தான்மன்னோ. ௧௬௭

ஆண்டையாயாரமதத்தடத்திருமபுனலானு
மாண்டபேரொளித்தமனியவனசத்தினானு
நீண்டசெஞ்சடைநிமலரைப்பூசனையாற்றி
யீண்டுமாமறைத்துதிபலவன்பினேத்தெடுத்தான் ௧௬௮

போற்றுமன்பினுக்கிரங்கிமின்பொதிந்தசெஞ்சடைமேற்
கீற்றிளம்பிறைமிலைச்சியகேழ்கிளர்புனித
நீற்றுமேனியார்நிரைவளைமுன்கைமென்சாயற்
கூற்றம்வென்றகட்குமரியோடெதிரெழுந்தருளி. ௧௬௯

கருணைநோக்களித்தொளிர்முடிக்கடவுளர்க்கிறையாத்
திருநிலாமமராவதிவயிற்செழுங்கமலத்
தொருவனுஞ்சசியுடனபிடேகநீராட்டிக்
குருநிலாமுடிசூட்டினர் வரங்களுங்கொடுத்து. உ00

அன்னன்மால்களிற்றிந்திரற்கரசினையளித்து
வண்ணமாலிகைச்சடைமுடிவள்ளலார்மகிழு
மெண்ணில்சீர்வளரத்தலிந்திராலயமென்
றுண்ணிலாவுபேரன்பினருரைத்திடப்படுமால். உ0க

கருத்திரப்பினையருளுமக்காமர்பூந்தலத்தி
னுருத்திரப்பெயர்வள்ளலாரொளிர்சரண்மீட்டிர்
விருத்திரப்பெயரானுயிர்விளித்தமாசறவத்
தருத்திழிப்பதிவலாரிபூசனைபுரிந்தனனால். உ0உ

கந்தவார்பொழில்சூழ்ந்து தண்ணெனக்குளிர்கருற்று
மிந்திராலயத்திறைவர்தம்பெருமையீதிப்பாற்
பந்தநீத்தருள்பணுத்தரேச்சுரப்பதியமர்ந்த
வந்தமாதியிலாதவர்பெருமைமற்றறைவாம். உ0௩

வேறு.

த்தெழுந்தார்க்கும்படர்திரைப்பாற்கடற்பாயல்கெழீஇ
துலும்வாட்கண்படுக்குநெறியுடற்பாப்பணையான்
றதொளிகாலுந்திநாண்மலர்த்தாமரைமேன்முகிழ்த்துக்
கொத்துறுவையமெலாந்தருங்குண்டிகைக்கையவனே. உ0ச

எத்திசைவாழ்நரும்விம்மிதம்பூப்பவெழில்பரப்புஞ்
சத்தியலோகவரைப்பினத்தாணிதனிற்கிரண
மொய்த்தவிராதனமேற்சனகாதிமுனிவரெலாம்
பத்தியிற்சூழ்தரவீற்றிருந்தான்பலர்போற்றுறவே. உ0௫

ஆங்கவன்மேவருசேவைசெய்வானங்கடுத்தணுகித்
தூங்குகைநாற்பெருங்கோட்டயிராவதந்தூண்டிறையும்
வீங்கியசீர்ப்புலவோர்முதலோரும்விழுந்திறைஞ்சி
யோங்கியபேரருள்பெற்றொருபாங்கரிருந்தனரே. உ0௬

பாற்றருந்துப்புடைக்காலிறையோனும்படர்ந்துதன்ற
னூற்றலினுயதருக்குடனம்புயத்தான்மலர்த்தாள்
போற்றியன்னானருளேவலினாற்பொலந்தாரலங்க
லேற்றியதோட்புலவோரொடுமங்கணிருந்தனனே. உ0எ

தருக்கியமாண்பின்மைநோக்கியிவனித்தருக்கையின்னே
முருக்குவல்யானெனமுன்னியம்போருகமுன்னவனம்
மருக்கிளர்தார்வளிவேந்தனைவாண்முகம்பார்த்துனது
திருக்கிளராற்றலொன்றேமிக்கதாமென்றுசெப்பினனே உ0அ.

குய்யமவைத்தோதியநான்முகத்தான்மனக்கோளறியான்
வையகம்போற்றுமதுகையினுன்மகிழ்கூர்ந்திறைவா
மெய்யுரையாடினையாலெனதாற்றலைமேம்படுத்தற்
கையமின்றேயெனத்தானுந்தனாற்றல்கொண்டாடினனே. உ0௯

தற்புகழ்கேட்டுளத்தீண்டும்பொருமைதலைவராலும்
விற்படுமாமணிற்சூட்டழற்காரிவெண்கூரெயிற்றுப்
பொற்பிதிர்போர்பொறிப்பேழ்வாய்ப்புணர்க்கவைநாவிரிபை
யெற்படுவாருடற்சேடன்முறுவலித்தெள்ளினனே. உகo

எள்ளியவாறுநன்றேயெனுழ்யாதுமிலாய்க்கெனவே
வெள்ளொளிகாலுடற்சேடனைக்காலிறையோன்வெகுளத்
தள்ளருமாண்வலிச்சேடனுஞ்சாலத்தழன்றுருப்ப
நள்ளலர்போலிருவோர்க்கும்வெம்போர்நனிமூண்டதுவே. உகக

மூண்டவெம்போர்த்தனியாமையினுங்கவர்முண்டகத்தி
னுண்டைகைசேவடிதாழ்ந்தடியேமெறுழாற்றலினுண்
மாண்டதுதேர்ந்துரைவாணிதன்கேள்வவெனப்பழிச்சி
வேண்டலுநான்முகனூரதன்மேல்விழிபோக்கினனே. உகஉ

ஏரியருதுகுடைந்துசெந்தேனுண்டெறிந்திருந்து
காரளிமூசுவண்டாமரைத்தோன்றல்கருத்தறிந்து
சீரியபூதிதிமிர்ந்தொளிகாலுந்திருவுருவி
னூரதமாமுனிமற்றவர்க்கீதுநவின்றிடுமே. உகங

ஏற்றிருவீருமினியிகலாதிர்பொன்மேருவரை
தோற்றியவாயிரங்கோடுஞ்சுடர்ப்படத்தாற்பொதிக
வாற்றலஞ்சேடனவற்றைப்பெயர்க்கவடல்வளியிச்
சாற்றியவாற்றிற்றெரித்தும்வலியெனச்சாற்றினனே. உகச

மற்றிதுபுரிதுமென்னுமனத்தெழுங்காதலீர்ப்பப்
பொற்றபலடுக்கல்சூழ்ந்தபொன்னெடுங்கிரியையண்மிச்
செற்றியசிகரமெல்லாஞ்சிக்கெனப்பொதிந்தான்சேடன்
கற்றையங்கதிர்கால்சூட்டுக்கணமணிப்பணங்கடம்மால். உகரு

இறுகுறப்பொதிந்துபற்றியெறுழொடுகிடக்குஞ்சேடன்
பொறிநெருமிர்படங்கணீக்கப்பொள்ளெனவெழுந்துவீங்கி
நெறுநெறுநெறுவென்றண்டநெரிதரவோடியாடி
யுறுவலிமுழுதுங்காட்டியுடன்றனன்வாயுதேவன். உகசு

ஒருபகலளவிற்பன்னூற்றனவென்னப்பல்காற்
பரிதியங்கடவுண்மேருப்பருவரைசூழமந்தப்
பெருவரைதாமுஞ்சூழப்பெட்டனபோன்றுவேலைக்
குருமணிநீருஞ்சுற்றுங்குரைவளிகொட்குநீரால். உகஎ

எழுந்தனவ்ளைகள்விண்ணத்திழிந்தனதாருமண்ணி
னழிந்தனவுலகமோட்டையாயினவண்டமாண்மை
கழிந்ததிக்கயங்கடிக்கிற்கதுவினதுய்யிற்கொண்மூ
வொழிந்தனமகிழ்ச்சியார்க்குமுற்றனதுயரமெல்லாம். உகஅ

எறுழ்வலிப்பவனப்புத்தேட்கின்றுணையுரகிப்போருக்
குறுவபோலுலவைத்தோன்றலுடன்கெழீஇப்பிறங்கற்கோடும்
மறவையும்விலங்குநீண்டபராரைமாமரமுமற்று
மறிதருஞ்சுழலுமோடுமேலையும்பின்வாங்கிநீங்கும். உகசு

மேக்கெழும்புழுதித்தூளான்விழுத்துகின்மாசேறுண்ண
நோக்கமிக்கிமைத்தல்சாலமெய்யொளிநொய்துசாம்பத்
தாக்கியபவனவேகந்தனிற்றிருக்கண்ணிவாடப்
பூக்குலமாந்தரொத்தாங்கொருவரும்புலவரம்மா. ௨௨௦

இவ்வகையுடன்றுஞ்சடனைத்துமெய்துளும்பாளுகிச்
செவ்வனங்கிடப்பநோக்கிச்சிந்தனையழுங்கிமாழாந்
தெவ்வெவவுயிரினின்றுமியங்குயிர்ப்பனைத்தும்வாங்கற்
கௌவியமனத்தினெண்ணியுடல்வளிமுயறலோடும். ௨௨௧

அரும்பியமுறுவனல்லாராடகப்பசும்பொற்கொங்கைக்
குரும்பைகாலுழக்கவிள்ளுங்கொழுமலர்க்கற்பத்தண்டார்ப்
பெரும்புயக்குவட்டுவிண்ணோர்பெரிதுளம்வெருவிவீழ
நரம்புளர்முனிவன்றன்னைநயந்தனரிரத்தல்செய்தார். ௨௨௨

எவ்வமெய்தாதிர்நீவிரெனச்சுரர்தம்மைத்தேற்றி
யௌவியமனுக்கிநோற்றவருந்தவமுனிவன்வல்லே
செவ்வியமணிகால்யாத்ததிவ்வியாழுறையைநீவிப்
பௌவவாயமுதமென்னப்படுநரம்புளர்ந்தான்மன்னோ. ௨௨௩

இன்னிசைசெவிகடோறுமிவர்தலுமரவச்செம்மல்
பன்னருமகிழ்ச்சிபொங்கப்பரவசப்பட்டுத்தன்றன்
சென்னியொன்றசையாநிற்பச்செவ்விகண்டுலைவைத்தோன்ற
லங்கெடுந்தலைக்கீழ்க்கோட்டையைத்தளப்பறித்துவீழ்த்தான்.

உலவையங்குரிசிறன்பாலுற்றதுவெற்றியென்றாக்
கலகலமுழங்கியாருங்கையெறிந்தசதியாடப்
பலமணிசுடருஞ்சூட்டுப்பல்பொறிச்சேடனம்மா
வலர்மனத்தெழுச்சிசாம்பச்சமழ்ப்பெனும்புணரியாழ்ந்தான்.

பரிபவப்பட்டவாற்றாற்பாற்றருமதுகைகுன்றி
யிருநிலந்தாங்கவல்லாதெய்த்தனனதனைநோக்கி
வரியளிமுரலும்வாடாவலர்த்துழாய்ப்படலைமாலை
முருகுகொப்புளிக்குமார்பின்முகின்மணிவண்ணன்சொல்லும்

கடவுளர்முனிவன்குய்யக்கருத்தினன்மதிவீணை
தடவலுமிசைக்கோட்பட்டுத்தனித்தலைதுளக்கியிவ்வ
மிடருழந்துயங்கிச்சான்றவெறுழ்வலிமுழுதுந்தேய்ந்தாய
சுடர்மணிச்சூட்டுத்தோன்றுமிருல்வலிபெறுமாகேட்டி. ௨௨௭

மணிகிடந்திமைக்கும்வீதிவயின்வயின்மகளிர்நீத்த
வணிகிடந்திமைக்குங்காஞ்சித்திருநகரண்மியன்பர்
பணிகிடந்திமைக்கும்பாதப்பரமனார்பூசையாற்றிப்
பிணிகிடந்திமைக்குமுள்ளப்பேதுறலோம்பலென்றான். ௨௨௮

கடலமிழ்தருத்தியாங்குக்காஞ்சியென்றுரைத்தலோடுங்
கெடலருங்கவற்சிநீங்கிக்கேழ்கிளர்சேடன்றன்னைச்
சுடர்மணியணையாக்கொண்டுதுணைவிழிவளராநிற்கு
மடல்கெழுதிகிரிப்புத்தேளடிபணிந்தாறுசென்றான். ௨௨௯

கொழித்தெழுமுழவினோதைகுளிறுகார்முழக்கந்தோற்றச்
செழித்தபொன்னரங்கதேறித்தேமொழிமடவார்மின்னை
பழித்தநுண்ணுசிம்புவாடப்பரிபுரஞ்சிலம்பவாடும்
விழித்துணைக்கடங்காகாமர்வியனகர்க்காஞ்சிபுக்கான். ௨௯௦

அருவுருவகன்றசோதியமலனைவிதிவழாமை
பெருகியபூசையாற்றிப்பிறங்கொளிக்கவிகையாகக்
குருமணிபடங்கடம்மாற்குளிரமேற்கவித்துநாளுந்
திருவளர்பாதப்போதிற்சிந்தனையொருக்கினின்றான். ௨௯௧

அன்பினுக்கெளியனாகுமண்ணலாரெதிரேதோன்றித்
துன்பினித்தீர்தியென்றுதொன்னிலந்தாங்கவல்ல
வன்புதந்தருளப்பெற்றுவணங்கினன்விடைகொண்டேகி
யின்புமீக்கிளைப்பமுன்புபோலிருநிலம்பரித்துவாழ்ந்தான். ௨௯௨

முடித்திடுமதுகைவல்லமுதன்மையாப்பெற்றானோ
முடித்திடும்பொருளுமந்தமுடிபொருண்முடியுங்காலை
யிடைத்தொகுந்துயருமாகுமின்பமுந்தூக்கிப்பாரா
தெடுத்திடின்முடியாவேதனெண்ணமுற்றுதவாற்றால். ௨௯௩

பற்றியவன்புநீடப்பணிபணங்கவித்தவாலந்
நற்றலம்பணாதரேசமெனத்திருநாமம்பூணும்
அற்றமின்மணீசனைப்பினமர்ந்தருள்கொழித்துப்பாச
முற்றும்விட்டிரியநல்குமுதல்வர்தம்பெருமைவிள்வாம். ௨௯௪

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம.

மாதவமுதிர்ந்தகாசிபமுனிவன்மனைவியர்பலருளுஞ்சிறந்த
மேதகுமடவாரதிதியேதிதியேவினதைகத்துருவெனநால்வ
ரோதியவிவருளதிதிதன்புதல்வரும்பர்களும்பர்நாட்டுறைவார்
தீதறுதிதிதன்மைந்தர்களவுணர்சீர்வளர்பாதலத்துறைவார். ௨௯௫

பத்தினிவினதைமக்களுளருணன்பரிதியந்தேர்கடாம்பாகன்
றுத்திவாளரவப்பெரும்பகைக்கலுழன்றுழாய்த்தொடைமாயவனூர்தி
கத்துருவுயிர்த்தபணிகளுளனந்தன்காசினிபரிப்பவனுகை
வித்திறனோக்கித்தானுமோராற்றலெய்துவான்வாசுகியென்பான். ௨௯௬

வயிறுளைந்துயிர்த்துக்குவிமுலைத்தீம்பால்வாய்மடுத்தினனருள்புரிந்த
கயிரவங்கவற்றுஞ்செந்துவர்க்கனிவாய்க்கத்துருமலரடிவணங்கி
யயர்வறுத்தருளுமவள்வியங்கொளப்பெற்றவ்வயினகன்றுமாதவத்தா
னுயரியசீர்த்தித்தந்தைதன்பாதமெய்யெனப்பணிந்துநின்றிரந்தான்.

அயிரரித்தறல்வீர்த்தொலிபுனலொழுகுமரும்புகழ்ப்பாலிநீணதியால்
வயல்வளஞ்சிறக்குங்காஞ்சிமாநகரின்மதிக்கொழுந்தொளிர்பொலஞ்சடிலக்
குயின்மொழிபாகர்குரைகழன்மலர்ந்தாள்கோதுகுபத்தியின்வணங்கிச்
செயிர்தபுவரங்கள்பெறுதெனுமுனிவன்றிருத்தகுவிடையும்பெற்றெழுந்தான். ௨௯௮

நறுமணங்கமழுங்காழகிற்றுணியுநாறுபூஞ்சந்தனக்குறடும்
வெறிகமழ்நானக்கொடிகளுமலரும்வெயிலுமிழ்பலவகைமணியு
முறுபுனற்பரப்பினுந்திவந்திடந்தோன்றுதுக்குசேயாறொருபுறத்துச்
செறுவளம்விளைத்துத்தெழிக்குந்துண்டீரத்திருநகர்விரைந்துசென்றணைந்தான்.

மிடல்கெழுபகைஞர்புரிசைமூன்றிறுப்பவிலகிவில்லுமிழ்நகைமுகிழ்த்த
சடைமுடிக்கூத்தர்தாட்டுணைக்கமலந்தணப்புறுக்காதன்மீக்கிளைப்பப்
படுசுடரிமைக்கும்பணமணிவாங்கிப்பணிவொடுமருச்சனையாற்றி
யடுபுலக்குறும்புதுமித்தருந்தவஞ்செய்தவ்வுழியிருப்பவக்காலை. உசO

பொலங்குவட்டடுக்கன்மந்தரமெறிந்துபொருதிரைவேலையம்புணரி
கலங்கவான்மருந்துகடைந்தனரெடுப்பக்கருதிவந்திமையவர்பலரு
மிலங்குநூபுரப்பொற்பதமலர்பரசியிறைஞ்சியிவ்வாசுகிதன்னை
யலங்கலஞ்சூழ்சடையாய்நாணைமெடுக்கிங்கருளெனவிரந்தனராக.

நாடகநவிற்றுநம்பனுரருளிச்செல்கெனவிடுத்தலுநகைகா
லாடசுப்பசும்பொன்வரன்றிவார்ந்தொழுகுமவிர்மணிப்பூந்திரைதவழ்ந்து
கோடகங்கழுவுங்குளிரகடல்கலக்கிக்கொழுஞ்சுவைப்புத்தமிழ்தெடுத்துப்
பீடகப்பெறுகும்வானவர்க்களித்துப்பிணிந்தபேரன்பினுன்மீண்டு.

தண்டளிர்ச்செயலைப்புதுநிறங்கவற்றுந்தமனியமேனிவாணகைபார்
வண்டலாட்டயருமலர்ப்பொழிலுடுத்தவளங்குளமத்தகுவரைப்பி
னண்டவாணருச்குந்தலைவனையுயிர்தோறமர்ந்தருள்கருணையங்கடலைப்
பண்டுபோன்முயலூற்றுவிதியுளிவழாதுபரிவொடுபூசனைபுரிந்தான். உசங

பொற்பிதிர்சிதர்ந்திட்டெனமிளிர்சுலைப்புணர்முலையுமையொருபாக
ரற்பினுக்கிரங்கியெதிரெழுந்தருளிநாவிரண்டரவிற்குமிறையா
கற்பதமளித்துப்புதுமலர்க்கடுக்கைநறுந்தொடைநிலைஞமார்பகத்து
விற்பயிலணியாவணிந்திடும்பேறும்பெற்றனன்வியனிலம்வியப்ப. உசச

மணமலிகளபக்குவிமுலைச்சுவட்டுமார்பினுர்தமைப்பணிவேந்தன்
பணமணிவாங்கிபருச்சனையாற்றிப்பணிதலான்மணிச்சரப்பெயர்பெற்
றிணர்மலர்ப்பொதும்பர்சூழ்ந்தவந்நாமிலங்குமற்றுடுத்தமாதவத்தோர்
கணியராய்வாங்களருளுநான்முகசங்காரத்தமாமலர்சீரறைவாம். உசரு

கலிவிருத்தம்.

பண்டொருகற்பத்துப்பதுமச்சேக்கைவா
ழண்டனைத்தவத்தினுலண்மிகல்வரங்
கொண்டவர்தவலருங்கோனையாற்றலர்
மிண்டியதறுகணேமிடைந்தசிந்தையார். உசசு

அத்தகுதானவரமரர்துன்றிய
தொத்தலர்கற்பசச்சூழலாதியா
வெத்திருவுலகமுமினையக்கொட்புறீஇ
நித்தலுமூறுகணிகழ்த்திச்செல்லுவார். உசஎ

கௌவைநீர்நதித்திரைகரைந்துவீசிய
வெவ்வெலாத்திசையினுமிலகுநித்திலங்
கொவ்வைவாய்மகளிர்சள்குவவிக்கோவைசெய்
செவ்விவாய்காஞ்சியந்தேத்துச்சென்றனர். உசஅ

கன்னிகாப்பமர்பெருங்கடவுளாதியோ
ரன்னதானவர்வரவறிந்தங்குள்வெரீஇ
வன்னவார்தளிர்மறைமாவின்வள்ளலார்
முன்னர்வீழ்ந்தெழுந்தனர்முறையிட்டாரரோ. உசகூ

பூணிலாம்வனமுலைபொருதமெய்குழை
வேணியார்திருவுளக்கருணைமீச்செலக்
கோணிலாமதிபுரைகோலவார்நுதல்
வாணிலாநகையுமைவதனநோக்கினார். ௨௫0

கள்ளலைத்தொழுதுபூங்காமர்தீந்தொடை
புள்ளலைத்திமிர்புயற்கூந்தற்பார்ப்பதி
யள்ளிலைத்தனிப்படையணங்குகன்னியைத்
துள்ளலுற்றுடல்விழத்துணிமினென்றேவினாள். ௨௫௧

வெய்யவெள்வாளுறைகழித்துவீங்குதோ
ளைப்பேற்றமரியவரட்டராருயி
ரொய்யெனவிறுத்தொருசோடிதீர்த்தங்கொட்
டெய்துமக்குளங்கரையினிதுவாழ்ந்தனள். ௨௫௨

மற்றொருகற்பத்தின்மலரின்மேலவ
னற்றமின்றுலகெலாம்படைக்குமார்வத்தாற்
கொற்றவியகழ்ந்தவக்கோடிதீர்த்தத்தின்
பொற்றவன்கோட்டருந்தவங்கள்போற்றினான். ௨௫௩

உகங்களினூறுவந்துறுதகன்னிகாப்
பகங்குடிகொண்டவேகம்பத்தண்ணலார்
சகங்களையுயிர்த்தவனோடுஞ்சார்ந்தவன்
முகங்களுன்கினுமறைமுகிழ்ப்பநல்கினார். ௨௫௪

மருவிரிதன்முகமலரிற்றோன்றிய
வருமறைவழியுலகனைத்துமாக்கினன்
பொருவறுமப்பதிபூணுமாலரு
டருசதுரானனசங்கரப்பெயர். ௨௫௫

தனிச்சதுரானனசங்கரத்துவாழ்
பனிச்சிறுமதிகுடிப்பகவர்சீரிது
வினிச்சுரகரத்தமர்ந்திருண்டவாணவத்
துனிச்சிறைதபும்பிரான்பெருமைசொல்லுவாம். ௨௫௬

தாருணனெனும்பெயரவுணன்றன்விழிப்
பார்வையிற்பட்டவரெவரும்பாற்றருஞ்
சூருறுசுரங்கெழீஇத்துயரமேவார்வரை
மாரணன்மாட்டருந்தவத்திற்பெற்றுளான். ௨௫௭

அச்சுரலோசனவவுணன்றன்னிரு
வெச்செனும்விழியினால்வெகுண்டுநோக்குபு
கச்சமிலுயிரெலாங்கவலவேலைவாய்
நச்சுறழ்சுரத்திடைநலித்துச்செல்லுநாள். ௨௫௮

பற்றலார்புரம்பொடிபடுத்தசேவகர்
கற்றைவார்குழலொடுகளிக்குங்காஞ்சிசீர்
பெற்றுவான்றருமமாய்ப்பிறங்குபெற்றிமை
யொற்றர்போயுரைத்தலுமாங்குப்போந்தனன். ௨௫௯

கொலைமுகக்கூற்றெனக்கோளையாருயி
ரலைசெயுமவன்வரவறிந்தம்மாநகர்
நிலையுமாலயன்முதலலவருநெஞ்சுளைந்
திலையசூற்படையுடையிறைஞ்சிவேண்டினர். உசுO

வெருவலிரெனவவர்விதிர்ப்புநீத்தருட்
பரமர்தம்மடியிணைபடர்ந்துமாதவம்
புரிநர்வாகனனெனும்புண்ணிய
வரையனைநோக்கியித்தருளிச்செய்வரால். உசுக

இயக்கர்தமதிபமற்றிங்கெம்முள்ளகம்
வியக்குநின்றவப்பயன்விரைவினல்குதும்
கயக்கமுற்றுயிர்தபவீண்டுகண்ணுறும்
பயக்கொடுந்தானவற்பதைப்பக்கோறியால். உசுஉ

அன்னதானவன்விதிக்கப்பட்டாயெனின்
வன்னிவாய்ப்புழுவெனமறுகிச்சாம்புவை
யின்னதாலவன்றிறமிறுக்குஞ்சூழ்ச்சியு
நன்னர்நெஞ்சமைவரநவிற்றக்கேண்மதி. உசுங

கொண்டலங்கூந்தலுங்குவட்டுக்கொங்கையு
மொண்டளிர்மேனியுமொளிருமூரலுங்
கண்டவரேங்குறுங்காமர்மேதகு
சண்டிகையெனுமடத்தையலைக்காட்டுபு. உசுச

இத்திருமாதினைமணஞ்செய்தீகுவம்
னைத்தலம்பற்றெனக்கரைதிநேர்ந்தவன்
றத்தெரிவிழிகுளிர்தழைப்பநோக்குவ
னத்தகுசெவ்வியினுவியாங்குதி. உசுரு

எனவருள்வழங்கலுமிறைஞ்சியெம்பிரான்
றனதருட்சூழ்ச்சியிற்சார்ந்துபூஞ்சிகைக்
கனல்கொடுத்தருளியசதிர்த்தவாளினு
லனல்விழியவுணனையாவியுண்டனன். உசுசு

மின்சுடர்மதிமுடிவிமலர்மன்னற்குக்
கொன்சுடர்தவப்பயன்கொடுத்தளித்தனர்
வென்சுடரத்தகுசூழன்மேயதா
னன்சுரலோசனநாசனப்பெயர். உசுஎ

விரைப்பொழில்சூழ்ந்தொளிவிளங்குமத்தகு
வரப்பிடையமலனாவணங்கிப்பாங்கரிற்
குரைப்பசுங்குண்டநீர்க்குளிப்பின்வெஞ்சுரப்
பணைப்பெருந்துயரெலாமெளிதிற்போக்குவார் உசுஅ

துன்னியவினைதபுஞ்சுரகரீசத்துப்
பின்னல்வார்சடையர்தம்பெருமைசொற்றன
மன்னியவேனைவைப்பிடத்தும்வள்ளலார்
நன்னயந்தருளியகதைநடாத்துவாய். உசுகூ

பரசிராமேச்சரப்பதியின்மேதகு
பரசிராமப்பெயர்ப்பனவன்பூசித்துப்
பரசுமாரன்பிணுக்கழற்கைப்பண்ணவர்
பரசுவேலரசர்வேர்பறிப்பநல்கினார். உ௭0

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒருமலர்க்காவுள்வைகியுந்தியங்கமலம்பூத்தோன்
பெருநிலம்படைக்குமாற்றல்பெட்டுநோன்புஞற்றலோடு
முருகுகொப்புளிக்குங்கொன்றைமுதல்வனார்தமதுபாதித்
திருவுருப்பெண்மையாகத்திகழ்ந்தவனெதிரேதோன்றி. உ௭௧

மூவனைத்தலைப்பெயெண்மருருத்திரர்முதலோராக
மேவருமுருத்திரப்பேர்விண்ணவர்பலரையீன்று
தாவருமதிகாரங்கடனித்தனிநல்கிக்கஞ்சப்
பூவருங்குரிசிற்காக்கும்புரைத்தொழிலருளிச்செய்தார். உ௭௨

வருத்துவெம்பிறவிச்செல்லன்மூநிக்குமுளரியல்போக்கு
முருத்திரர்தம்மைமுக்கணும்பன்றுயிர்த்தவாற்றாற்
றிருத்தகுமனையசூழற்றேவருமெடுத்துக்கூறிக்
கருத்தெறுமுருத்திரன்காவெனும்பெயர்கதுவிற்றன்றே. உ௭௩

கடல்புரைதிறுகட்சேனையிடமறக்கருலமுற்றிப்
படர்சமமுழக்குமாற்றற்பகைஞர்க்கும்பற்றவாண்ணு
வடர்பொறிமதில்சூழ்புட்பபுரத்திருந்தரசுசெய்யுஞ்
சுடர்மணிக்கழலான்சீர்த்திதொகுந்திடவிரதனென்பான். உ௭௪

காட்டகத்தமன்றமானின்குறும்பெலாங்காற்றவோர்நாள்
வேட்டைசென்றுழியெல்லைவெரீஇயொருகலைமான்றப்பி
யோட்டெடுத்திரியப்பின்னர்த்தொடர்ந்தனன்றேடியெய்த்து
வாட்டுநீர்நசைமீப்பொங்கவாய்புலர்ந்தவசனாகி. உ௭௫

உழையனைவிளித்துவல்லேயொண்புனல்கொணர்தியென்று
விழைவொடுமேவவன்றன்வெய்துபோய்த்துருவியோர்பாற்
கழியவேற்றுமைப்பட்டுள்ளகயத்துநீர்தீதுநோக்கா
னழிநசைக்கெய்திற்றென்னுமார்வத்தாற்போதந்தீந்தான். உ௭௬

செங்கிறக்குருதிதோய்ந்துதீப்பொறிசிதறும்வெள்வேன்
மன்னனுந்தீதுநோக்கான்வாங்கிவாய்மடுத்துச்சென்றா
னன்னதேயேதுவாகப்பிணியுழந்தாக்கையெல்லாந்
துன்னியதேசுசாம்பியிருந்தையிற்றேன்றிற்றம்மா. உ௭௭

சந்தமென்மலர்ப்பூந்தொங்கற்சத்தியசீலனென்னு
மந்திரிகுறித்துநோக்கிமருத்துவர்தம்மைக்கொண்டு
வெந்திறன்மருந்துசெய்தும்விழுப்பிணிமூலங்காணா
னைந்தபுண்மனத்தனாகிநுவலருங்கவலைகூர்ந்தான். உ௭௮

மற்றவன்மளிமேலால்வாள்விழிபடுக்குமெல்லை
முற்றிழையொருமானன்மிமுகமலர்வாடிச்சொல்லும்
வெற்றிவேலமைச்சகேண்மோவினைகமழலங்கன்மோலிக்
கொற்றவனரசசத்தியானெனமனத்துக்கோடி. உ௭௯

கைவளர்வேடுசெல்லுமற்றைநாட்கலுழற்கஞ்சிப்
பைவளர்கொடுமாநாகம்பகுபெருவாயிற்கான்ற
மைவளர்நஞ்சுவீழ்ந்துதிரிந்தவார்கயத்துநீரை
மொய்வளர்திணிதோண்மன்னன்முகந்துவந்தளிப்பவுண்டான்.

மோட்டுநீருலகவைப்பின்மொய்யிருளிரியல்போக
நீட்டுபூங்கிரணச்செங்கேழ்நெடுந்தகையருளித்தந்த
சேட்டுமாமணியைமோலித்திருவிற்கால்சென்னிக்கைதாச்
சூட்டினனதனாற்றன்பிற்றொடக்குண்டான்விளிதலின்றி. ௨௮௧

மருந்தினாகவெந்தமந்திரவலியானாக
திருந்தியமணியானாகசெல்லன்மிக்குழக்குமிந்தப்
பெருந்தழல்விடந்தீராதுபெருகுசீர்க்கச்சிமூதூர்ப்
பொருந்தியமாகாளேசர்பூசனைப்பயத்தானன்றி. ௨௮௨

எனவுரைத்தணங்குநீங்கவின்றுயிலெழுந்துகண்ட
கனவினையரசன்மாட்டுக்கட்டுரைத்தலுமற்றன்னோன்
றனதுநாடகன்றுவல்லேசார்ந்தனன்காமற்காய்ந்த
முனிவனாரினிதுவைகுமும்மூர்த்திவாசப்பேரூர் ௨௮௩

செம்பொனிற்குயின்றமாடத்திருநகர்வனப்புநோக்கிக்
கம்பைநீர்படிந்துகம்பர்கழலடிபணிந்துபோந்து
வம்புலாமலர்தூயும்பர்வழிபடுமாகாளேசத்
தெம்பிரான்பாதபூசைநாடொறுமியற்றிப்போற்ற. ௨௮௪

திங்கள்ங்கண்ணிவேய்ந்தார்திருவுளமிரங்கித்தோன்றிக்
கொங்கிணர்க்கடுக்கைத்தொங்கற்குரூஉச்சடைமடுவிற்றத்துங்
கங்கையைக்கரத்தாலள்ளியுடலெலாநனைத்துக்காளப்
பொங்கியவேகமுற்றுந்தணித்துயிர்புரத்தல்செய்தார். ௨௮௫

ஓங்கெழிலெறிந்துமேனிபண்டுபோலொளிரவோகை
வீங்கியவுளத்தனாகிமிளிர்நகையுமையாள்பாகர்
தேங்கமழ்மலர்த்தாள்போற்றித்திருவருள்பெற்றுவேந்த
னீங்கருந்தனதுசீர்த்திநெடுநகர்சென்றுவாழ்ந்தான். ௨௮௬

கலிவிருத்தம்.

பச்சிளங்கொடிமாதொருபால்வளர்
நச்சராவணிநம்பர்நவிற்றிய
பொச்சமின்மறைபோற்றுகுலத்தினா
னெச்சசன்மனெனுமொருபூசுரன். ௨௮௭

மாண்டகலவியிலாதவழுக்கினா
னண்டமீஇப்பலநாட்டினுங்கொட்புறூஉப்
பூண்டமுற்றவப்போக்கரும்பேற்றினா
லீண்டகும்பொதியத்தினையெய்தினான். ௨௮௮

வெந்தநீற்றொளிமெய்த்தவர்சூழ்தர
வந்தில்வைகுமகத்தியமாதவன்
சுந்தரப்பதந்துன்னியிறைஞ்சுபு
சிந்தையன்புதிளைத்திரந்தானரோ. ௨௮௯

வல்வினை தெறுமா தவனோக்கிநற்
கல்விவேண்டினை கல்விதனக்குநீ
நல்வினைமுன்னை விற்றிலையாதலாற்
செல்வயான்றரச் செல்வதொன்றன்றுகாண். ௨௬௦

காக்குநாயகர் காத்தருள் கச்சியின்
மாக்குலாய்ப் பொழில் சூழ்ந்தவர் ஆகத்துப்
போக்கின் ஞானதா னேசனைப் போற்றிடிற்
றேக்குசீர்க் கலைதேர்வை யென்றேயினான். ௨௬௧

வணங்கியவ்வருள் பெற்றுவழிக்கொளா
வணங்கனார் பயிலாடலும் பாடலு
மிணங்கு வீதியிடந்தொறுழும்பாரார்
கணங்கள் சூழ்தருகாஞ்சியையண்மினான். ௨௬௨

பொன்னசும்பு பொருதிரைக்கம்பையி
னன்னர் நீர்படிந்தாடி நறுஞ்சினை
மன்னுமாவடிவள்ளலை வந்தியாத்
துன்னினான் முனிசொற்றவச் சூழலை. ௨௬௩

அங்கண்வைகியவங்கணர் தாண்மலர்
பொங்குகாதலிற் பூசனையாற்றினான்
றுங்கவான் கலையாவுந் துரிசறத்
திங்கள்போல வளர்ந்து செழுத்தனன். ௨௬௪

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தனித்தனி முதன்மைபேசிச் சமர்புரிநாப்பட்டோன்றுங்
கனற்பொறுநுதலார் சென்னிகழலிணை காணச்சென்று
பணித்தனர் மீண்டனான்றுயன்றியினுருவு சொண்டோ
னனைத்தரிறுமிப்பான் பூசையாற்றியதனையவைப்பு. ௨௬௫

வேறு.

காதன்மாதினைநாவகத்திருவியகடவுளை முதலானோர்க்
காதிமாமறையோதுவித்தோதுவித்திடு முறையருள் செய்து
மாதொர்பாகனார் பெருக்கிய கருணையின் வதிந்தனரச் சூழ
நீதுதீர்த்திருந்தீர்த்தமாய்ப் பொலிந்தசேயாறுசூழ் திருவோத்தூர்.

பொதியவிழ்ந்த நெட்டிதழ்மலர்ப்புதுமதுப் பொழிநறுஞ்சினையேறிக்
குதிகொள்வானரம் வருக்கையின் கொழுஞ்சுளைமந்திவாய்க் கொடுத்தோம்பு
தகைமணப்பொழினிவந்து விண்ணணிழற்றுயதனிநகர்க் காம்பீலி
வதியும் விண்டுசென் மாவெனப் பெயரியமறையவன்றருமைந்தன். ௨௬௭

விளையும்பீட்கருவுமிழ்ந்தநாண் முதலிருவிழியிலான் பதினாறாண்
டளவுமூமையாவிருந்தவுன் மென்மெலவண்மியத் திருவோத்தூர்ப்
பிளவு வெண்மதிவேணியார்த் தொழுதறுதிங்கண்மா தவம்பேணி
யிளிவருந்திறன் மூகைமை நீத்தெலாவேதமும் பணிதோதி. ௨௬௮

புரிவளைக்குலம்வயிறுளைந்திடந் தொறும்பூசலிட்டரிதீனு
மெரிமணிககுலைநிலாத்தவழ் கம்பையினிருங்கரைத் தலைவைகிக்
கரியகண்டனை நினைந்தனன் மூன்றுநாட்கழறுதவமாற்றி
யுரியதன்னிருகண்களும்படலநீத் தொளிபெறும்பயன் பெற்றான். ௨௬௯

ஆத்திவெண்மதிமிலைச்சியபொலஞ்சடையழகனைவழிபட்டு
மூத்தவன்பிறன்விழியிடந்தருஞ்சிடமுண்டகத்தெதிராசச்
சாத்திவன்றுகிர்த்தடஞ்சிறைமயறுழ்வலித்திடவுவாப்படருந்தூர்தி
தீத்தரும்பியசக்கரம்பெற்றனனுதருமாற்பேறால். கூ00

பொழிகதிர்ப்பொலங்கிம்புரிக்கோடொருபுறத்தொளிர்முகச்செம்மல்
கழிதிறற்கயாசுரனுயிர்குடித்தவன்மத்தகக்கவின்முத்தா
லழிவில்பூசைசெய்தனையும்போர்வையாவண்ணலார்க்களித்திட்டா
னெழில்விளக்குமத்திருவனாப்பனேகதங்காவதன்மனைவிள்வார். கூ0க

மருத்தபூங்குழன்மலைமகளோடரிமதர்விழிகளிகூர
வருத்தமாமறைச்சிலம்பணிந்திருணடம்புரிதரப்பவரூனாய்
பொருத்தகாதலிற்றிசைமுகன்பூசனைபுரிந்தவையகந்தோற்ற
விரித்தவேதநூற்பெருமையைத்தலையமேதநூபுரமாமால். கூ0௨

புண்டரீகநாண்மலர்த்தலைப்புக்கவன்புரைதபுரைம்வாய்ந்த
பண்டனுருபிரம்சகுத்தவன்விடுப்பபைகோப்பாற்றனங்கணர்செந்தீ
யண்டகோளகையிற்றுடலிலாங்கிலாருயாரவியாடி
மண்டுவேள்விமெய்யான்றுமாற்றூருதலையானமென்றுமகேத்தும். கூ0௩

விடப்பணுகரத்தொங்கலுங்கடுக்கையும்விரிகதிர்மதிக்கோடு
மடப்பமாலையுந்தவன்றியமேனிபாரப்பரத்திஙளிதாடு
நடப்பதாம்பயநாண்மலர்ப்பூசனைநனைநதியமுறல்மேற்கைக்
கடப்பமாலையானியற்றினைத்தலைப்பிடம்பையமென்றுயாரயோங்கும்.

ஈட்டமாகியவுலகெலாம்பொடிபடவிரவியினிடைமாடு
நீட்டுமெசஞ்சடைநிமலனைகசொரங்கனைகொடியான்முதலானோர்
பாட்டளிப்பனிமலர்சேர்ப்பல்வரம்பெற்றனரச்சுழல்
வீட்டினுய்க்கும்வீராட்டகாசப்பெயர்மேவியதலமாகோ. கூ0௫

கருதலார்புரந்தழலுணச்சிற்பகுமிடந்திறைமலனுங்
திருநிலாவியவிருபதுதளிகளுஞ்சசப்புரைகனிச்செந்தேன்
முருகுநாறியமுண்டகமலரணைமயாய்த்தமுறனைமார்பி
னிருவிவாழ்தருந்துளவினுன்னைகுடிகளனைடளிகளுமுறைப்பாமால்.

கலிவிருத்தம்.

இந்திரவமரனேடிலங்குவேற்படைக்
கந்தனுலடிபடுங்கடவுள்வாரணை
நொந்துளிவாறபரநுதலிக்காஞ்சியின்
வந்துமாயவனடிவந்திசெய்தலும். கூ0எ

மாமணியொளிவிடுமார்பிற்றுமரைப்
பூமகள்குடிகொளும்பூவைவண்ணன்முன்
மேவரத்தோன்றுவிண்ணகரங்காவல்செய்
காவலன்கரிக்கிதுகரைதன்மேயினன். கூ0அ

சலசலபொழிமதத்தறுகட்குஞ்சர
மலைமருவிம்மனேயகறயின்றுதொட்
டிலகொளிக்குலசவேலிறைவன்மாட்சிசால்
வலியினிற்பெரியவனுகுவானரோ. கூ0கூ

ஆதலாலவற்கினித்தோல்வியண்முரு
மேதகவவனையேவிழைந்துதாங்கென
வோதிவேலிறையையுமும்பர்வேந்தையுங்
காதலார்கேண்மையிற்கலப்பித்தானரோ. ௯௧0

உம்பலுமன்னதற்கிசைந்தொர்கூற்றினால்
வம்பவிழ்துழாய்த்தொடைமாலையூர்தியாய்
நம்பியக்காஞ்சியிற்றங்கிநண்ணிய
தம்பயிலவ்வரையத்தியோங்கலே. ௯௧௧

அன்னமூர்புலவன்மிக்கழுங்கமுற்றிய
வென்னிதிவிலக்கநஞ்சுண்டவித்தகன்
றன்னருளாலரிசயனங்கொண்டதா
னன்னர்வெஃகாவெனநவிற்றுமாநகர். ௯௧௨

கடல்விடமுடற்றிமெய்கதுவும்வெப்புநோய்
முடிமதியமிழ்தினான்முனிந்தநாதரை
நெடியவன்றொழுதெதிர்நின்றுவாழ்த்தரு
மிடமதுசந்திரகண்டமென்பதே. ௯௧௩

தோட்டலர்த்தாமரைச்சுடர்பொற்கோயிலாள்
கோட்டமிலாதிகழ்குறிப்பிற்றோன்றுமா
சேட்டொளிக்கவுத்துவந்திளைக்குமார்பினா
னீட்டொளிமணியுருத்தன்னையேத்தினாள். ௯௧௪

திருமகள்குறிப்பினையறிந்துசெங்கண்மா
லிருணிறமேனியோடெய்தியிச்சேயிதழ்
மருமலர்த்தாமரைகுற்றுவார்சடை
நிருமலன்பூசனைநிகழ்த்திநாடொறும். ௯௧௫

ஈண்டியவிருடபவெறிக்கும்பேரொளி
மாண்டசெம்மணித்துவர்வண்ணனாகியங்
கீண்டமால்வைகியவிலயமன்பர்க்கு
வேண்டியதருளும்வீராசனத்தளி. ௯௧௬

வயமலியரையரைவணக்கும்போர்த்திறத்
துயர்புருவன்மனென்றுரைக்குமன்னவ
னியம்வலேனமலிமற்றெவையுஞ்சூழ்வரச்
சயமலிவேட்டையின்முயன்றுசார்குவான் ௯௧௭

மாதவநிரம்பியமரீசிமாமுனி
மேதகுமாச்சிரமத்தின்மேவியங்
கேதமொன்றின்றியின்புற்றுவைகிய
தீதருவிலங்கெலாமலைத்தல்செய்தனன். ௯௧௮

உடலெலாம்விதிர்ப்பநெட்டுயிர்ப்புவீங்கமிக்
கிடருழந்தங்கவையிரியநோக்கிய
நடலைதீர்முனிவரனலியச்சாபமொன்
றடலரிக்குருளைநீயாகென்றிட்டனன். ௯௧௯

வெருவியுள்ளழுங்கியவ்வேந்தன்வெய்தென
விருமலர்ச்சேவடியிறைஞ்சியென்பிழை
பொருவருதவத்திறோய்பொறுத்தல்வேண்டுமென்
றருள்வரவிரத்தலுமறவன்கூறுவான். கஉ0

ஏற்றபோர்ப்பார்த்திவரொருமூமானமுங்
காற்றுவேற்பலைப்புயக்காவன்மன்னவ
போற்றுவீராசனவரைப்பிற்போந்திடி
ஞற்றல்சால்சாபம்விட்டகலுமென்றனன். கஉக

அற்றைஞான்றேயரிக்குருளேயாகிமுன்
பற்றியவுணர்வெலாம்பாறிச்செந்தழன்
முற்றியதெனப்பசிமுருக்கநொந்துபால்
பெற்றுறுதெங்கணும்பெயர்ந்துசுற்றுபு. கஉஉ

அண்ணலந்துணைபெறுநாணிரேடரிப்
பெண்ணெதிர்நோக்கியுட்பெருகுகாதலா
லுண்ணியமுலையுதவவுண்டெடறும்
நண்ணிவார்கடற்கரைசரிக்குநாளினில். கஉங

மல்லல்வீராசனவரைப்பின்மாயவ
னெல்லுமிழ்சேவடியிறைஞ்சும்பத்திமை
வல்லவனொருவன்வந்தெய்தக்காண்டலுங்
கொல்லியவெழுந்ததக்குருளேச்சிங்கமே. கஉச

விதிர்த்திலனுகிவீராசனத்தனை
மதித்தருந்துதிபலவழுத்திநின்றனன்
றுதித்தமையிருசெவித்துளேசென்றேறலுங்
கதித்தெழுஞ்சிங்கறற்கருத்துமேவுபு. கஉரு

அன்பனேயடிபணிந்திறைஞ்சிமேல்கொடு
துன்பில்வீராசனச்சூழல்லெய்தியங்
கின்புறமாயனேவழிபட்டேட்டிய
தன்பெருஞ்சாபநோய்தவிர்ந்துவாழ்ந்தனன். கஉசா

அன்னணமடங்கலாயிருந்தவாற்றினூற்
பன்னுசிங்கோதரபவனென்றோர்பெயர்
மன்னினனப்புருவன்மவனென்பவ
னெங்கிலத்தவர்களுமெடுத்தியம்பவே. கஉஎ

புத்தமிழ்தெடுத்துணைப்புலவர்தம்மொடும்
பைத்தபாம்பிமிழ்கொளீஇப்பாரமந்தர
மத்தினூற்கடைந்தநாள்வார்ந்தபாற்கடன்
மொய்த்தெழுதிரைமிசைமுகிழ்த்தபூமகள். கஉஅ

எதிர்நயப்பார்வையீத்தருளவீர்ந்துழாய்க்
கதிர்மணிமோலியான்காதனேக்களித்
ததிரிடைக்கொடியுடையவளேமன்றலின்
விதிமுறைபுணர்ந்தின்பமேவமுன்னினன். கஉகூ

ஆங்கவடன்னெடுமைமார்சூழ்வர
வீங்கியபெரும்புகழ்விண்டுமோபுரத்
தோங்கியவேகம்பத்துற்றுக்கம்பனூர்
பூங்கழல்பணிந்தருள்போதப்பெற்றனன். ௧௧0

கனைதிராற்றினெநெடுங்கங்கையேமுதன்
மனைவியார்பலரொடும்வந்துநான்முறை
புனைபுகழ்க்கடலிறைபுனிதப்பொற்பினிற்
றனைநிகர்திருமகடன்னையீத்திட. ௧௧௧

ஓரீருநாற்புறமொளிரவைகுபு
நீருடனேற்றவணிகழ்த்துநல்வினை
சீரிதின்முடித்தனன்சிறந்தவவ்விடம்
பாரெலாம்புகழட்டபுயமெனப்படும். ௧௧௨

அற்றைநாட்காஞ்சியினரசசெய்பவ
னொற்றையங்கவிகையானுயர்ந்தசீர்த்தியான்
வெற்றிகொளரசரைவெற்றிகொண்டுசீர்
பற்றுதண்டாயினனென்னும்பார்த்திபன் ௧௧௩

திருமறுமார்பனங்கியற்றுஞ்சீர்மணக்
குருமணிப்பந்தரிற்கோணையாற்றினு
விருதிசைத்தலைவருமேனைத்தேவரு
மருவியகுழாத்திடைவந்துவைகினான். ௧௧௪

வழுக்கியஞ்சிறையளிமருங்குவீழ்தர
விழுக்கள்வார்கற்பகமிளிர்பொன்மாலையா
ரழுக்கறுநெஞ்சினரோக்கவவ்வயி
னொழுக்கறத்தென்றிசையும்பனோதுவான். ௧௧௫

மேவருகொற்றவவெய்யவேற்படைக்
காவலரவைக்களத்தலருகாமரு
தேவர்தமவைக்களஞ்சிவணமேலோர்முறை
யூவதன்றெனவெதிரரசன்சொல்லுவான். ௧௧௬

கழியநான்முறைதெரிகடவுளீர்நும
தழிவுறுதுறக்கநாட்டலதெவ்வூழியு
மொழிவிலாதோங்குமிக்காஞ்சியூர்வயி
னிழிவுயர்வெனும்பகுப்பில்லையில்லையே. ௧௧௭

வண்ணமாறைத்தனிமாவின்மூலவா
ழண்ணலார்திருவருளாணையாலிந்த
வொண்ணகர்க்காஞ்சியின்சாருமொப்பவ
ரெண்ணம்வேறிலையெனவெடுத்தியம்பினான். ௧௧௮

இணர்விரிகடுக்கையராணையென்றலு
முணர்வின்மேம்படுசுரருரையொன்றுலர்
மணமுடிகாறும்மைகுற்றுத்தத்தம
தணவரும்பதியினையண்மினாரரோ. ௧௧௯

பின்புகண்டாயினன்பெரிதுமந்தகன்
வன்புறமொழிந்தசொன்மனத்தையீர்தலுந்
துன்புன்மாதவந்தொடங்கியன்றுகொ
லின்புறுதிசைக்கிழவரிறைவராயினார். ௩௪௦

மண்டியவருந்தவழ்வழாமலாற்றியிங்
கெண்டிசையிறைமையுமெய்துவாமென
வண்டர்களழுக்கறுத்தவலங்கூர்தரத்
திண்டிறற்பெருந்தவமுறையிற்செய்தனன். ௩௪௧

மன்றல்செய்தருளியவரைப்பின்மாதவ
னன்றுமுன்னெதிரெழுந்தருளிநல்கலும்
வென்றிகொளெண்டிசையிறையுமேதக
வொன்றியவுலகமுமூழிற்காத்தனன். ௩௪௨

கலியுகத்தொருகாழறுவேதியன்
குலவுமாய்ச்சியரின்னலங்கூட்டுணு
முலகமுண்டவொளிமணிவண்ணனுக்
கலகிலாதமெய்யன்பினனாயினான். ௩௪௩

கண்ணன்முன்பெவருங்களிப்பச்செயு
மெண்ணிலாவிளையாட்டுமெஞ்சாவகை
யுண்ணினைந்துதியானித்துலகினி
னண்ணிச்செய்வினைநாளுமிகந்தனன். ௩௪௪

அன்னதன்மையறிந்தவன்ஞாதிய
ரென்னைநீபழுதாந்தொழிலேற்றனை
நன்னர்மானயனத்தெதிராடின்மெய்
யென்னலாமிஃதென்றுகிளந்தனர். ௩௪௫

நன்றவ்வாறுநடத்துவல்காண்மினோ
வென்றுவல்விரைந்தோர்தருமோருழிச்
சென்றுவைகித்திருமறுமார்பனை
யொன்றுமன்பினுகந்துதியானித்தான். ௩௪௬

வெற்பெடுத்துவிழுநிரையோம்பிய
மற்பிறங்குதோண்மாயவனுங்கவ
னற்பகத்துமழவடிவாயுலாய்ப்
பொற்பவாடல்புரிந்தனனென்பவே. ௩௪௭

நோக்கிநோக்கிநுவலருவிம்மிதந்
தேக்கியெம்பெருமானெமர்செப்பிய
வாக்கின்வண்ணமருள்வழங்காயெனக்
காக்குநாயகனுங்கட்டுரைக்குமால். ௩௪௮

கண்ணசன்மனெனும்பெயர்க்காளைநீ
நண்ணியிந்தக்கலிதனினாளையே
யண்ணன்மால்பிறப்பானென்றவர்க்கெல்லாந்
தண்ணன்மென்மொழிசாற்றெனவேயினான். ௩௪௯

அருளிச்செய்ததறைந்தனனன்றுபோ
யிருள்புலர்ந்திடுங்காலையெல்லோர்களு
மருவுமோகையராய்மணிக்கம்பையி
னுருவவார்கரையுற்றுமிடைந்தனர். ௩௫0

அஞ்சனக்களிறட்டவன்றோன்றியங்
கெஞ்சுறாதுமுன்னுடனெல்லாஞ்செய
விஞ்சுமன்பினராய்மிடைந்தாரெலாங்
கஞ்சநேரடிகைதொழுதுய்ந்தனர். ௩௫௧

பத்திசெய்தபனவனிரத்தலுங்
கைத்தலத்துக்கமழ்புதுவெண்ணெயோ
டத்தனவ்வுழிவைகினனத்தனி
யெத்திறத்தருமேத்துகாளாங்கமே. ௩௫௨

உவரிசூழுலகத்தவர்தாழ்ந்துதங்
கவலைதீருமக்காளாங்கமென்பது
துவர்நெடுஞ்சடையாரடித்தொண்டுசெய்
பவளவண்ணன்பொற்கோயிலின்பாலதே. ௩௫௩

வேறு.

ஊக்கிப்தொழிற்பயனென்மனந்தமா
வாக்குதல்குறித்துத்தனரியன்சொலும்
போக்கில்சீர்மொழிவழிப்போந்துபேரிசை
தேக்கியதிருமலிகாஞ்சித்தேத்தரோ. ௩௫௪

மாதர்வண்வேள்விசெய்மாவலிப்பெயர்
மேதகையளித்தமண்விழைந்தளந்தரி
காதலின்வைகுமக்காமருந்தனி
த்தீதறுத்தருடிரிவிக்கிரமமே. ௩௫௫

தமர்கொலைப்படுதலிற்சமர்செய்யேனென
வமரியதனஞ்சயனவிர்பொற்பாடகக்
கமழ்மலரடித்துணைகமலக்கையினா
லிமிழுறப்பற்றிவீழ்ந்தரற்றியேங்கலும். ௩௫௬

குருவெனவாய்ந்தவன்குழைதராதமர்
புரியநாலொன்றுசெய்துரைத்துப்புந்தியிற்
றெருள்கொளீஇமாயவன்சிவனுமத்தனி
பெருமைசேர்பாடகப்பெயரினோங்குமால். ௩௫௭

மாதவனுலிருவரைப்புமோதினு
மோதுநாலெழுதளிகளினென்றுயினுங்
காதலின்வணங்கியக்காஞ்சிவாழ்பவர்க்
கீதுகொல்பயனெனயாரளப்பவர். ௩௫௮

எத்தலவரைப்பினுமீட்டுதீவினை
மைத்தவார்கடலெனவளர்ந்ததாயினு
மத்தகுகாஞ்சியையணிமைகுறிற்
றொத்தழற்பஞ்சியிற்றுனையவீயுமே. ௩௫௯

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கோலநிறைந்தவிமையவரைக்கொம்புதழூஉவக்குழைந்தருளு
மாலநுகர்ந்தார்வளர்காஞ்சியகத்துப்புரியுமறன்கடைகள்
சீலமலிந்தபிறதலத்துச்சிதையாகாஞ்சிநகர்வயினே
காலவரையின்முழுதழுங்குமிதற்கோர்காதைகட்டுரைப்பாம். ௧௬௦

சுருங்காப்பெருமைமறைத்துறைபோய்ச்சுழலும்பிறவிக்கடலுழந்தும்
பெருங்காதரமுற்றிரித்தொதுக்கிப்பிணைபிணையதடநெடுங்க
ணிருங்கோமளமென்கொடியொருபாற்படர்ந்தவிறைவர்நடக்குயிற்றும்
கரங்காப்பொலிக்துகவின்றளும்பமலமெஞ்சகத்துக்கவுதமனார். ௧௬௧

மணிநூல்யாத்தகதிர்மோலிவானோரிருக்கைமுதலாகத்
திணிகாலுலகவளநோக்கிச்செல்நாட்டேதுமாதிரம்போ
யணிகாலுருவினெதிர்கொண்டங்கடல்வேலியமனணிகாட்டப்
பிணிகாலுழந்துநரகழுந்தும்பீடில்பதகர்தமைக்கண்டார். ௧௬௨

கொச்சகக்கலிப்பா.

வடவைத்தழல்குளிரச்செறிபூழ்வெங்கனல்சொரியச்
சுடர்குஞ்சியினூறுதூதர்கடுணைவார்கழல்பிடியாக்
குடர்செந்தடிநிணமென்புகள்குருதித்துளிசிதறப்,
படலைச்சிலைமிசையெற்றமெய்பதறிச்சிலர்கரைவார். ௧௬௩

கண்டாருளம்வெருவுங்கனலுமிழ்கண்ணிணைசுழல
மண்டோதையினுருமுக்குரன்மருளப்பலகழறித்
திண்டோளசைமுசலங்கொடுசெந்நீர்புடையொழுகத்
தண்டாவிறலினர்சென்னிதகர்ப்பச்சிலர்தளர்வார். ௧௬௪

இருண்கண்டனவுடலும்பிறையெயிறுந்துடியிதழுஞ்
சுரிகுஞ்சியுமுடையாரெதிர்தோன்றிக்கொடுவாளா
லரியுந்தொறுமெறியுந்தொறுமரியுந்தசைதீற்றி
நரியுந்தொறுநோலாதுளநையச்சிலர்குழைவார். ௧௬௫

சூலங்கதைபாசங்கொடுதுன்னும்யமதூத
ராலங்கலுழ்வாளிட்டருமிடறிற்றிடமிதியாக்
காலுந்தழல்வேலாலிருகண்சூன்றுலையெரிவா
யேலுங்கொடிறேந்திந்தசையீர்ப்பச்சிலரினைவார். ௧௬௬

வயிரத்திழையூசித்திரணிரைவித்தமைமான
வியைவுற்றபலெயிறும்புதையிளகுந்தசைபிதிரச்
சலமுற்றியசெந்நாய்பலகவ்வித்தவவுதற
வுயிர்மிக்கலமரநெஞ்சகழுளையச்சிலரழுவார். ௧௬௭

உலைவாயிடுபாளம்பகுவாயுய்த்தலுநோலா
தலமேறுதையின்வெருவிப்புடையகலப்பறைவுற்றுட்
பலவூசிகள்கடிதுள்ளடிபாயப்படியொத்தி
நிலமேற்பலதாணட்டெனநின்றேசிலர்துயர்வார். ௧௬௮

குந்தத்திரள்சூலத்திரள்கொலைவேற்றிரள்செந்நீர்
சிந்துங்கணைவாளித்திரள்சினவாட்டிரள்சுரிகை
நந்துந்தழலீட்டித்திரணடுநீணிலம்வீழா
நொந்தச்சுகுதசைகூளிகணுகரச்சிலர்கவரவார். ௧௬௯

வறலீர்ம்புனணுக்குப்புடைபெயராவகைமல்குந்
தெறுநீர்நசைவாட்டச்செழுநறுமாமலர்பூத்த
வெறிநீர்நிலையுண்ணாப்புகவதன்வீழ்புனல்சியா
யுறவேதனைமிக்குத்துயருடலச்சிலர்கலுழ்வார். ௬௭0

பைந்தாமமலங்கிப்பனிநீர்மென்றுளிதூவி
யைந்திபோசனைகமழுங்குளிர்பந்தர்ப்புடையணுகிச்
செந்தீயெனவவைவெய்துமெறச்சாம்புமுளத்தான்
வெந்தாவெவென்செய்கோவெனவெருவிச்சிலர்மெலிவார். ௬௭௧

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இன்னபன்னரகத்துன்பமெய்துபாதகரைக்கண்ட
மன்னியதவத்தானப்பாற்செல்லுழுற்மற்றோர்பாங்கர்த்
துன்னியபதகர்பல்லோர்சொல்லருங்கொடுமைசான்ற
வெந்நரகுழப்பக்கண்கள்வெதும்புறநோக்கிமாதோ. ௬௭௨

ஈங்கிவர்யாரையென்னவியமனைவினவுதலோடு
மாங்கவனெனக்குமுன்னிங்கரசுசெய்தவர்நாளுள்ள
தீங்கினரிவரையென்றுசெப்புதற்கொண்ணுமென்ன
வோங்கியமுனிவன்காலனுடன்வரவயனையண்மி. ௬௭௩

கடவியன்னவனுமவ்வாறுரைத்துடன்கலந்துபோத
வடலவிர்திகிரிமாலையடுத்தனன்வினவிமாலும்
படர்தரவவர்போற்கூறிப்பாயொளிவிரிக்குங்கோட்டுத்
தடவரைக்கயிலையோங்கல்சார்ந்தனன்றெருமுழுதுபுக்கு. ௬௭௪

மங்கையோர்பாகமாகவாலுளைப்பிறழ்பற்பேழ்வாய்ச்
சிங்கவேற்றணையின்மேலாற்சிவணியதுணர்ப்பூங்கொன்றைத்
தொங்கலாரப்பாதப்போதுசுருதிகள்புகன்றுபோற்றிப்
பொங்கியகாதனீடக்கடாவலும்புனிதர்நோக்கி. ௬௭௫

அருந்தவத்தலைவகேண்மோவன்னவெந்நரகத்தாழ்வார்
திருந்தியவறங்கணீடுந்தெய்வதக்காஞ்சிவைப்பி
னிருந்துமுன்பாவமீட்டியிறந்தவரவர்கள்செய்த
கருந்துயர்ப்பாவபேதங்கரைதுமென்றருளிச்செய்வார். ௬௭௬

உருகவெந்தொளிறுன்செப்புப்பாவையையறுப்புத்தீய
விருகையிற்றழுவியங்கணிடும்பையுளழுந்துகின்றோர்
பெருகியவனப்புநோக்கிப்பிறர்மனைபெட்டுளோரு
மருவியகணவர்த்தப்பிமனவழியொழுகினோரும். ௬௭௭

குருதிகொப்புளித்துப்பாயக்கூரிருப்பாணிகாய்த்தி
யிருவிழிசெய்யவாயினமுழுத்தவங்கினைந்துநிற்பார்
மருள்வளர்விழைவாலேதின்மனையவர்ப்பார்த்துளோரும்
பருவரப்பிறர்ப்பாலுள்ளபழியெடுத்தியம்பினோரும். ௬௭௮

இருப்புநெட்டூசிதன்னுலிணைக்கரம்பொதிர்த்துச்செம்பு
நெருப்பிடையுருக்கிவாக்கநெடுந்துயருழக்குந்தீயோர்
கருப்புவிற்கணையேறுண்டகாதலான்முத்தமூர
லருப்பிளங்குவவுக்கொங்கையயன்மனைபரிசித்தோர்கள். ௬௭௯

காலசூத்திரப்பேர்வாய்ந்தகடுநரகுழக்கின்றார்கண்
மாலினாற்குரவனில்லாள்வனமுலைதினைத்துளோர்கள்
கோலவார்கரத்தைவாளாற்குறைத்தடவுயங்குகின்றா
ரேலவார்குழலாளில்லத்திருப்பவேற்றவரைத்தோய்ந்தோர். ௩௮0

கறைமடுத்துலக்கையோச்சித்துவைப்பவுள்கலங்கினைவா
ரறிவுமுற்றிருக்குந்தேறனொடித்தறந்திறம்பினோர்க
ளூறுதுயர்க்குருதிச்சேற்றின்முழுகிநெஞ்சுளைதலுற்றார்
நெறிபிழைத்தரியன்மாந்திநெடுங்களிதிளைத்துளோர்கள். ௩௮௧

விடுப்பருங்காளசூடவெந்நரகொறுக்குந்தீயோ
ரடுப்பிறழ்ந்துரைத்துளோருநஞ்சமிட்டுயிர்மாய்த்தோரும்
கடப்பருவஞ்சநாளுங்கையிகந்திழைத்துளோருங்
கெடுப்பருந்தீயகோள்கள்கிளந்திருநிதிபெற்றோரும். ௩௮௨

கூடசன்மலிப்பேர்வாய்ந்தகொடுநரகுய்த்துத்தூதர்
நீடுமத்திகைகளோச்சிநெரிதரப்புடைக்கநோவா
ராடமைத்தோளினாரையருந்துணைவரைநல்லானைப்
பீடறுமனத்தாரசிப்பேதுறலுறுத்தினார்கள். ௩௮௩

சுடர்ந்தெரிவடந்தைத்தீயுந்துண்ணெனவலறிச்சாம்பி
யிடைந்திடுங்கொடுமைசான்றவிரவுரவத்துத்தோய்ந்தோ
ரடைந்தவர்க்குறுகணுற்றுமாட்டருங்குதலைத்தீஞ்சொ
ணடந்துழல்சகங்கைமென்றாணன்மகக்கொலைசெய்தோரும். ௩௮௪

செறியிருணாகினூழ்ந்தசிதடர்கடறுகண்வாய்ந்து
மறையவர்ச்செகுத்துளோர்கண்மாற்பருங்கோணைச்செல்ல
னிறையசிபத்திரப்பேர்நிகழ்நரகழுந்துமூர்க்க
ரிறுதிநால்வருணத்தோர்க்குமிழைத்தபுன்புலைமையாளர். ௩௮௫

வாளினாலுடலம்போழ்ந்துவடுவறப்பொருத்திமீட்டு
மீளமையம்மியிட்டுநெறுநெறுநெறுவென்றென்பு
தூளுறக்குருதிபொங்கிச்சோர்தரவரைக்கப்பட்டோர்
பிளினைமறமீக்கொண்டுபேதுசெய்திட்டநீரார். ௩௮௬

நெருப்பெனவுடற்றுமிச்சினெடுநரகுழந்துநின்றோர்
மருப்புனற்கிணற்றினூற்றின்வாவியினுமிழ்ந்துளோர்கள்
கருப்புநெட்டாலைவாயிற்கரைந்துடலொழுகநின்றோர்
விருப்பொடுசுவைகளாறும்விற்றுழன்மறைவலாளர். ௩௮௭

காற்றலைப்பிணித்துநாற்றிக்கடுங்கனன்மடுப்பப்பொங்கி
யூற்றிருந்தூனீர்பாயவுருகிமெய்வெதும்புகின்றோ
ரேற்றமார்சுருதிவாய்மையிகந்திரும்பொருள்வேட்டெண்ணெய்
கூற்றுறழ்நஞ்சுபஞ்சிவிலையினாற்கொடுத்தபார்ப்பார். ௩௮௮

வெருவருங்கும்பிபாகவெந்நரகுழந்துமாய்வோ
ரொருவருந்தேவர்க்கல்விருந்தினையூட்டாதுண்டோர்
பருவரும்வறியசூவன்மறிந்துகநூக்கப்பட்டோ
ரிருவிலங்கொடுங்கோலோச்சியிறைமைபூண்டாண்டவேந்தா.

வேதனையுழப்பவாளால்வெகுண்டுவாரகடுகீண்டு
சோதிவெந்தழலிற்காய்த்திச்சுடசுடவிருப்புமுள்ளும்
பேதுறக்கிளைக்கும்வல்வாய்ப்புழுக்களும்பெய்யப்பட்டோ
ரேதிலார்பொருள்கள்வெளவியின்புறுங்கொடியநீரார். ௧௯௦

மாசையங்கமலமென்னவயங்கிவார்குடங்கைதன்னைத்
தூசிஞற்பொதிந்துநெய்யிற்றோய்த்தெரிசொளுத்தப்பட்டோர்
காசறுநிதியமெல்லாங்கல்லிமண்புதைத்துப்பேணி
யாசையினமையாராகியையமேற்றுழிதந்தோர்கள். ௧௯௧

ஓதரும்பனிப்புச்சான்றவதோமுகாரகினுற்றார்
வேதியர்தவத்தின்மூத்தோர்விழுத்தகுதேவர்சூழல்
போதலர்பனிப்பூந்தீர்த்தம்பொருப்பிவைதமக்குநேரே
நீதியினிகழ்ந்துதாள்கணீட்டியதறுகணாளர். ௧௯௨

சீற்றமிக்கரும்பவாங்கிச்செய்யநாவரியப்பட்டோ
ரேற்றவர்க்கொருவனன்பினீவதுவிலக்கினோர்கள்
ளாற்றருஞ்செல்லற்செந்தீயளற்றின்வீழ்ந்தழுங்கினோர்கள்
போற்றுமனைசடோறும்பொங்கெரிகொளுத்தினோர்கள். ௧௯௩

அணரியிற்சுருடரிற்பூண்டுமுடக்கினையழுத்தித்தூக்கி
யிணரெரிமடுப்பக்கீழாவிரங்கிமெய்பதையாநின்றோர்
நிணமலிதொழுதிப்புள்ளுநீரில்வாழுயிருங்கொன்று
தணவருங்காதல்கூருநுகர்ந்தருட்டன்மைநீத்தோர். ௧௯௪

இலங்கொளிக்கொடுவாள்பற்றியீர்ந்துதந்தசைகள்வாங்கி
யலங்குசெந்தீயிற்காயுமகலிடைவறுத்துவாரிப்
புலிங்கழும்புகையுநாசியுயிர்ப்பவாய்புகுத்தப்பட்டோர்
விலங்குகள்கொன்றுதின்றுவீணுடல்வீக்கினோர்கள். ௧௯௫

அருந்துயருழப்பநாவுமங்கையுந்துளைத்துக்கோத்த
விருந்தொடரிருப்புக்கட்டியுமிழ்கொளீஇநாற்றப்பட்டோர்
சுரந்தசெவ்வத்தராகிவாழுநாட்டுன்னியல்லாந்
திரந்தவர்க்கிலையென்றோருமின்பொருளுதவாதோரும். ௧௯௬

நெடியதம்முடலங்கீழ்ந்திட்டேந்துநெய்த்தோருஞ்செந்தீச்
சுட்டர்தவழ்ந்தெரியுநெய்யுந்துரிசறவுருகுஞ்செம்புங்
குடியெனவூட்டியோச்சக்குழைகின்றுரிரந்துளோர்க்குக்
கடியநீர்நசையயாற்றக்கமழ்புனலுதவகில்லார். ௧௯௭

மருமலர்க்கமலம்போலும்வாண்முகங்குடைந்துசெப்பி
னுருகியவிதனைவாக்கியொறுக்கும்வன்கிருமியட்டிப்
பருவரலுறுத்தப்பட்டுப்பதைபதைத்தழுங்காநின்றோ
ரிருமுதுகுரவர்தம்மைவெகுண்டிடுமிழுதையோர்கள். ௧௯௮

அரவியவிருப்புமுள்ளிட்டழுத்திவெந்தழலிற்காயு
மரவடியிவர்வித்தொல்லைவழங்குதிரொனமுட்கோலால்
வெரினெலும்பொடியவொற்றமெலிகின்றார்பெரியோர்முன்னர்ப்
புரிமாவடிகளாதிமேல்கொடுபுகுந்தநீரார். ௧௯௯

எரிதவழ்ந்தெரியுமெண்ணெயிடைமடுத்தெடுத்துப்பின்ன
ரரில்படுசிறகர்வல்வாயடல்கெழுபறவைக்கூட்ட
நரிமுதல்பிடுங்குங்கோரநரகின்வாய்ப்படுப்பப்பட்டோர்
தெரிவிலாவெறியராகிப்பாதகமைந்துஞ்செய்தோர். ௩௦௦

வெள்ளெயிறழுந்தப்பற்றிப்பாந்தளின்விழுங்கப்பட்டோர்
தொள்ளைநெஞ்சுடையராகியெளியரைத்துளக்கங்கண்டோ
ரொள்ளியவுருவமெல்லாமீக்கணைமொறுக்கப்பட்டோர்
தெள்ளுநோன்பிடையேவிட்டதிக்குணச்சிதடரம்மா. ௩௦௧

அண்டநீண்முகடுரிஞ்சவெய்தெழுங்கொடுந்தழலைடுப்பதைக்கின்றோர்
கொண்டல்சூழும்பொதும்பரின்மரீஇயதோச்சுழைத்துமேவிவிலியிலுய்த்தோர்
மண்டுசீர்மதாலயத்திட்டிகைமாயவுலயத்திட்டோர்
வண்டுபாடும்படப்பையின்மலர்பறித்தணிந்துமாதரைத்தோய்ந்தோர்.

துறகன்மீதிலிட்டாண்குறிகுணில்கொடுதுவைத்துறத்தெறுமூசி
நிறைமுட்டைத்தறிசிரம்பரிதிர்த்தெழக்குதத்தறையநெஞ்சழிகின்றோர்
பிறையுரிஞ்செயில்புடையுடுத்தோங்கும்பீடுடைத்திருக்கோயி
லிறைகொண்டுதெளிந்தனவனத்தினுமிரண்டியக்கமுமீத்தோர். ௩௦௨

செக்கின்வாயிலிட்டரைத்தழற்கும்பியிற்றெறக்கவுன்றழுவோர்க
டக்கவாலயந்தீர்த்தநந்தனவனந்தனிமடமனைவோது
மிக்கசீர்வளர்பங்களினடியில்கண்மிசைதலுங்கருங்கூந்தன்
மைக்கண்வாணுதன்மடந்தையரிளமுலைமணத்தலும்புரிந்தோர்கள். ௩௦௪

வார்த்தகாரிருப்பாணிகளுசியின்மடுத்துவன்னியிற்றோய்த்த
கூர்த்தவான்றறிசிரம்புடைத்தெரியுநெய்யொழுக்கலுங்குறைகிற்பார்
சீர்த்தநந்தனவனத்தலர்தேமலர்த்திரள்பறித்தனர்மோந்து
கார்த்தகுஞ்சியின்மிலைச்சியவறிவிலாக்காமுகமனத்தோரே. ௩௦௫

பிரிவருங்கொடுந்தூதர்கைக்கயிற்றுறும்பிண்டமாப்பிணிப்புண்டு
முரலும்வண்சிறைத்தும்பிகள்குடையநோய்முதிர்ந்துமூர்ச்சனையுற்றோர்
குரவன்மெய்ப்பணிமெய்மதருட்பணியடியவர்குலப்பணியாதி
புரியவன்னவைகண்டழுக்கற்றுளம்புகர்படுசிறியோரே. ௩௦௬

ஒழுகிநாவொருகாவதநீளமற்றுதனைவெங்கொலைத்தூதர்
கொழுவணிந்ததிண்கலப்பையாலுழுதுழுதுழக்கியகுருஉப்புண்ணிற்
புழுவுஞ்சோரியுஞ்சியுமீத்தொகுதியும்பொங்கநொந்தயர்கின்றோர்
விழுமநல்கும்வேதாகமந்தமையிழித்துரைத்தவல்வினையோரே. ௩௦௭

வைத்தவச்சிரவூசநாமுழுவதுநிறுத்துவாருடல்வேவத்
தொத்தழற்சிகையுருக்கியவுலோகநீர்தோய்த்தெடுத்தடப்பட்டோர்
பத்திவாய்ந்தநம்பாதபூசனைத்தொழில்பரித்தலிசெந்தழலோம்பன்
மெய்த்தகாதலினதிதியர்பூசனைவிளைத்தலின்றுணவுண்டோர். ௩௦௮

ஓடுநீரெனவுருக்கியவங்கமுச்சியில்டப்பருவந்தோர்
பீடுசான்றநங்கோயிலிற்றியின்றுதம்பித்தையொன்றனையுக்கோர்
நீடுபூந்தழற்சலாகைகளுசியினேற்றநெஞ்சலமந்தோர்
பாடுசார்ந்தநந்தீர்த்தத்தினழுக்குநீரொழுக்கினைப்படவிழ்த்தோர். ௩௦௯

சுரிகைகொண்டுசெந்நாவினைத்துணித்திடத்துன்பவாரிதியாழ்ந்தோர்
வரியளிக்கணமுரன்றெழுநந்தனவனத்துவாய்ப்புனறாழ்த்தோ
ரெரிமடுத்தசெம்புருக்குவாய்பகுந்தெடுத்தெந்த்துவார்த்தடப்பட்டோர்
குரவனில்வயிற்கண்படைகொண்டுதம்பலமுமிழ்கொடியோர்கள். ௪௧௦

சென்னிகீழுறநட்டொறுத்தலுந்தெருமந்துடற்றுளைதோறு
மன்னிநீள்புழுக்கிளைப்பமென்றசைகொடியருந்துணமறுகுற்றோர்
துன்னுந்தீவினைப்புறமதத்திருந்தமைத்துவளிலெம்மடியாரை
நன்னர்நீறுகண்மணிகளைநமையுணர்குரவனைப்பழித்தோர்கள். ௪௧௧

வெடித்தழலைகடெறித்தெழவுருகியவெண்ணிணம்வழிந்தோடத்
துடித்துமெய்யெலாநீறவெந்தழற்கொடுந்தொன்னரகிடைத்தோய்ந்தோர்
கெடுத்தவைம்பொறிக்குரவனிட்டிகைசில்கெடுத்தவரடியாரில்
லடுத்துமென்றுகில்கண்மணிகவர்ந்தவரென்னுமப்பழியோரே. ௪௧௨

வேறுவேறுறப்பனைத்தும்வெள்வாளினால்வெருக்கொளவரிந்தந்தக்
கூறுமீளவுமுருவுசெய்தங்கியிற்குழைக்கமிக்கினைகின்றோர்
மாறுகாஞ்சனம்வலிதினுய்த்தளித்துநம்படப்பையின்வளர்வாழைத்
தாறுபாய்கனிகவர்ந்துயர்வேதியர்தங்களைநுகர்வித்தோர். ௪௧௩

கறைமடுத்திடித்தெடுத்துநெய்த்தோருகக்கையினாற்பிண்டித்து
நிறையின்வங்கமேர்டடைத்துவாய்மூடிவெந்நெருப்பிடக்கொதிக்கின்றோர்
முறைதெரிந்ததங்கடும்பெமங்களித்தநீர்முதிர்செழும்பழனத்தைப்
பெறவிழைந்துபல்கான்முயன்றரசராலும்மையும்பேதுற்றோர். ௪௧௪

வார்ந்தவாளரம்பிறழ்பவிற்றடிகுடர்மருங்குழைந்துகப்பூட்டி
யீர்ந்துசெங்கனற்கொதிக்குநெய்யிடக்குளித்தெழுந்தெழுந்தழிகின்றோர்
சார்ந்தவேதியர்க்கன்பினாற்பசுத்திரட்டானமுய்த்திடுமெல்லை
யார்ந்ததம்பசுநிரையயிற்சேர்ந்தநம்மானையுமுடங்கீந்தோர். ௪௧௫

நெடியவச்சிரமதலையைப்பற்றிநீள்கனற்கொழுந்தடமாய்வோர்
கொடியணிந்தெயின்மருங்குடுத்தோங்குநங்கோயிலினடஞ்செய்யுந்
துடியிடைப்பணைத்தோளியர்தமைநலந்துய்ப்பவிற்செறித்திட்டு
விடுதல்செய்கலாதரசராலும்மையும்வேதனைக்கடலாழ்ந்தோர். ௪௧௬

வாயிலொன்பதுமுருக்கியதமனியம்வாக்கிவன்னியினிட்டுக்
காயுமைந்நுதிக்கருவிகடசைநிறுத்திருத்துறக்கரைகின்றோர்
தூயமாழையினரிறபப்புரிந்தநந்தூமலர்த்தொடைத்தோளி
னேயுமுப்புரிநூல்கவர்ந்தித்தவர்புனைந்தவரிவர்மாதோ. ௪௧௭

ஒறுக்கும்வெவ்வழனெய்யின்வீழ்த்தழுந்தவாப்புறப்பனைத்தினுங்கோத்திட்
டிறுக்கிநாசிகண்காதினிற்சலாகைகளேற்றநொந்துயிர்ப்பில்லா
ரிறப்பமெய்வருந்தியபொழுதெம்முடைச்சினகரத்தெலுமிச்ச
நிறப்பழஞ்சுடர்விளக்குநெய்கவர்ந்துதோய்த்தொத்திநன்னெறிநீத்தோர்

காதநான்குறக்கண்கணுவளர்ந்துபோய்க்கழுகுநாய்நரிவௌவ
வாதகாதெனவுயங்கியசீத்தையாராலயத்தெனைப்போற்றப்
போதுமெல்லைவமெய்வளியெழீஇயொருசுடர்பொன்றவன்னதுகாணு
ரோதுமவ்விளக்கவிந்தமைகண்டுரையாதவரிவர்மன்னோ. ௪௧௯

என்றுபின்னுமங்கினையவர்தமையெலாமிவரிவரெனக்கூறி
மன்றவிங்கிவராற்றினின்றேறவுமதிக்கினியிர்கள்வல்லே
சென்றுமற்றிவர்தமைக்குறித்தத்திருக்காஞ்சிமாநகர்வைப்பி
னென்றுமன்பினம்பூசனையுஞற்றுமினென்றனருமைபாகர். ௪௨௦

அருளும்வாய்மொழிகேட்டலுமுவகையினிருந்தவன்முதலானோர்
கருணைநாயகன்றிருவடிபணிந்தனர்விடைகொடுகடிதெய்தி
முருகுநாறியகாஞ்சியினேகம்பமுதல்வனைவழிபட்டுப்
பெருகுதீர்த்தமாயொழுகியகம்பையின்பெருமணிக்கரைப்பாங்கர். ௪௨௧

தேவநாதனென்றோங்கியபெயரிஞ்சிவக்குறிநிறீஇப்போற்றப்
பாவகாரியரனைவரும்பருவருகும்பியின்படர்நோய்தீர்ந்
தோவில்காஞ்சியினுற்பவித்தேகம்பத்தும்பனையுறப்போற்றி
நாவலோர்புகழ்கயிலையிற்சிவகணநாதராய்ப்பயில்வுற்றார். ௪௨௨

மற்றொர்காலையினத்தகுகௌதமமாதவன்கயிலாய
முற்றுநாதரைத்தொழுபவன்மற்றிவர்நுரைக்குவானகைகாட்டிப்
பற்றலார்புரம்பொடித்தவகாஞ்சியிற்பயிற்றுதீவினையர்று
முற்றுமோதினைபுண்ணியப்பயனையுமொழிகெனவருள்செய்வார். ௪௨௩

தடுத்தவைம்பொறியுறுவனேகேண்மதிசார்ந்துநீரெமக்கன்பிற்
றொடுத்தபூசனைப்பேற்றினுற்கும்பியிற்றுயருழந்தவர்யாரு
மடுத்துநம்வயினிதோகணநாதராயமன்றனர்காணென்று
மடுத்தகாதலின்மொழிந்துமற்றைத்திறப்பயன்களும்வகுத்திட்டார்.

வேறு.

இன்னபல்பெருமைசான்றவெழில்குலாய்காஞ்சிதன்னை
முன்னொருகற்பத்தும்பருலகில்வாய்முறைதேர்தச்சன்
கன்னியோர்பாகத்தண்ணல்கருணையினேவப்பெற்றுத்
தன்னுறுதொழின்மைமுற்றத்தனிநகராக்கப்புக்கு. ௪௨௫

வேறு.

கிழக்குவாய்த்தறனின்மாயாபுரங்கேழ்கிளரும்பொன்னகரை
யிழிக்குந்தெனுதுவாய்தலிடையிராசராசபுரமேல்பாற்
செழிக்கும்வாய்த்தறனில்வளங்கள்செறிமார்த்தாண்டபுரம்பவநோ
யழிக்கும்வடாதிவாய்தலரிகண்டபுரமும்வகுத்தமைத்து. ௪௨௬

நாலாயிரத்தைத்தலைப்பெயுநாற்பதினுயிரவாய்தல்களியக்கி
நூலாலொழுக்கிக்கவின்கொழிக்குநூறாயிரவீதிகள்போக்கி
மேலாய்விளங்குநாற்சாதிமுதலாங்குடிவெவ்வேறிருவிச்
சாலாவினைதீர்சிவபுரப்பேர்தழங்கநெடுவணகர்செய்தான். ௪௨௭

அங்கணரியேற்றனையின்மலையணங்கோடினிதுவீற்றிருந்து
செங்கணரிநாண்மலர்க்கடவுடேவர்முதலோர்பணிகேட்பத்
திங்கண்மிலைத்தபொலஞ்சடிலத்தேவநாதர்தனிவேந்தாய்ப்
பொங்குகருணையூற்றெடுப்பப்புவனமுழுதும்புரந்திருந்தார். ௪௨௮

உலகமுழுதுந்தலையளிசெய்தோம்பும்பதத்தினயன்செழுந்தாண்
மலர்கள்பணிந்துவேண்டுதலுமல்லன்மிகும்பங்குனிச்சாறு
குலவரு! வியுத்திரத்திற்குன்றத்துயிர்த்தபெண்ணமுதை
யலகிலுயிருய்க்களிதூங்கமன்றல்வினையாற்றினர்வாழ்ந்தார். ௪௨௯

கலிநிலைத்துறை.

பின்னரொவ்வொருகாலத்துப்பிஞ்ஞகனருளா
லன்னமூர்பவனரிமகவாணிவர்தாமு
மின்னலோப்புமக்காஞ்சியையிறைமைபூண்டளித்தார்
...ன்னரெண்ணிலர்முறைப்படியாண்டவர்மாதோ. ௪௯0

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முருகவேளைங்கைப்புத்தேண்மொய்கதிரிமயமீன்ற
திருநுதலிவர்களல்லாற்றேங்கமழ்தனிமாமூலத்
தொருவனுர்முகிழ்ந்துவைகுமுலப்பருங்காஞ்சிமூதூர்ப்
பெருமையைமுழுதும்யாரேயுரைத்திடப்பெற்றிவல்லார். ௪௯௧

கலிவிருத்தம்.

வாழிநான்மறைவாழியசைவநூல்
வாழிமன்னவர்செங்கோன்மனுநெறி
வாழிநீண்முகில்வையகம்யாவையும்
வாழிவாழிவளநகர்க்காஞ்சியே. ௪௯௨

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அஃறிணையுமுயர்திணையுமெனப்பகுத்தவுயிர்கடொறுமவையேயாகிச்
சிஃறொழிலுஞ்செய்யாதுசெய்துவினைத்திறனருத்திச்சிறியேனெஞ்சக்
கஃறனையுங்கரைத்துருக்கித்தடுத்தாண்டகச்சிமேயகம்பமேய
பஃறலையபாப்பரசினங்கதத்தான்குஞ்சிதத்தாள்பரசிவாழ்வாம். ௪௯௩

இருபத்தெண்டளிப்படலம்முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௧௧0.

இரண்டாங்காண்டம்முற்றியது.

ஆகக்காண்டமிரண்டுக்குத் திருவிருத்தம் - ௪௮௫௧.

காஞ்சிப்புராணம்முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவர்திருவடிவாழ்க.

கச்சியப்பமுனிவர்திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90
22746